ஒன்றிய–மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழு



அறிக்கை

பகுதி–I

2026

தமிழ்நாடு அரசு

ஒன்றிய–மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழு

அறிக்கை

பகுதி–I

2026

தமிழ்நாடு அரசு

வெளியீடு:
தமிழ்நாடு அரசு

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் (*வாயிலாக*)
ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
68, கல்லூரிச் சாலை, சென்னை – 600 006

அச்சிட்டோர்: ராசி கிராபிக்ஸ் பிரைவேட் லிமிடெட்,
40, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை – 600 014

பக்க வடிவமைப்பு: பிரான்வதி டிஜிட்டில் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்,
பழைய பெருங்களத்தூர், சென்னை – 600 063

முதல் பதிப்பு (இந்தியா): பிப்ரவரி 2026
காப்புரிமை © 2026 தமிழ்நாடு அரசு
ISBN: 978-81-998655-0-1

முக்கிய அறிவிப்பு

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இருப்பினும், பொதுமக்களிடம் பரவலாகக் கொண்டு செல்லும் நோக்கத்திற்காக, இவ்வறிக்கையின் மூலத்திற்கு உரிய மேற்கோள் வழங்கப்பட்டு, இதில் எவ்வித மாற்றங்கள், சுருக்கங்கள், அல்லது தழுவல்கள் செய்யாமல், இவ்வறிக்கை முழுமையாகவோ அல்லது தனித்தனியான அத்தியாயங்கள், பிரிவுகள், அல்லது அவற்றின் பகுதிகளாகவோ தமிழில் மறுபிரசுரம் அல்லது வெளியீடு செய்யப்படலாம். **இந்த அனுமதியானது இவ்வறிக்கையின் தமிழ்ப் பதிப்பிற்கு மட்டுமே பொருந்தும்.** இந்த நிபந்தனைகளுக்கு முரணான எந்தவொரு பயன்பாடும் அனுமதியற்றதாகக் கருதப்பட்டு, சட்டத்தின்படி உரிய சட்ட நடவடிக்கைக்கு உட்படக்கூடும்.

Important Notice

All rights reserved. However, this report may be reproduced or published in Tamil, either in full or in the form of individual chapters, sections, or parts thereof, for the purpose of wider public dissemination provided that the source is duly acknowledged and that no changes, abridgements, or adaptations of any kind are made. **This permission applies only to the Tamil edition of the report.** Any use contrary to these conditions shall be treated as unauthorised and may attract appropriate legal action in accordance with law.

பொறுப்புதுறப்பு

இந்த வெளியீட்டில் உள்ள விவரங்களின் துல்லியத்தையும் முழுமைத்தன்மையையும் உறுதிசெய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும், பிழைகள், விடுபடல்கள் அல்லது முரண்பாடுகள் ஏதேனும் இருப்பின், அவை கவனக்குறைவால் நேர்ந்திருக்கலாம். அத்தகையவற்றை வெளியீட்டாளரின் கவனத்திற்கு கொண்டு வருமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்; அவை அடுத்தடுத்த பதிப்புகளில் சரிசெய்யப்படும். இந்த வெளியீட்டின் உள்ளடக்கத்தைப் பயன்படுத்துவதாலோ அல்லது அதனைச் சார்ந்திருப்பதாலோ ஏற்படும் இழப்புகள், சேதங்கள் அல்லது சட்டரீதியான விளைவுகளுக்கு வெளியீட்டாளரோ அல்லது இக்குழுவோ எவ்விதப் பொறுப்பும் ஏற்காது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

நாள்: 5–2–2026

அணிந்துரை

1935–ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டத்தின் அம்சங்களைப் பெருமளவு உள்வாங்கி இயற்றப்பட்ட இந்திய அரசியலமைப்பானது, புதுதில்லியில் அதிக அதிகாரங்களைக் குவித்து, மாநிலங்களுக்குக் குறைந்த அதிகாரங்களை மட்டுமே அளித்திடும் ஒரு சட்டமன்ற மற்றும் நிருவாக அமைப்பை உருவாக்கியது. இவ்வாறு மாநிலங்களைப் பலவீனமாக்குவதன் மூலம் ஒன்றியம் வலுவடையும் என்று நம்புவது ஒரு ஆபத்தான மாயை. ஒரு நாட்டின் கால்கள் கட்டப்பட்டிருந்தால், அது முன்னேற்றப் பாதையில் பயணிக்க இயலாது. இவ்வகையில், ஒன்றிய அரசும், மாநிலங்களும் போட்டியாளர்கள் அல்ல; இருவரும் பொதுவான ஒரு அமைப்பின் பங்குதாரர்களே. எனவே, ஒத்ததன்மையை நற்பண்பாகவும், பன்முகத்தன்மையை இடையூறாகவும் கருதும் சித்தாந்த அடிப்படையில், பரந்த, பன்முகத்தன்மை வாய்ந்த, ஆழமான மக்களாட்சியைக் கொண்ட இந்திய நாட்டினை நிர்வகிப்பது பொருத்தமற்றது. மாநிலங்களின் உண்மையான அடிப்படை சுயாட்சி, புத்தாக்கம், முனைப்பான போட்டித்திறன் ஆகியவைதான் நாட்டின் வலிமைக்கான உண்மையான அடிப்படையேயன்றி, ஒன்றியத்தில் அதிகாரத்தைக் குவிப்பது அல்ல.

எனினும், தேச ஒற்றுமை, ஒரேமாதிரியான தரநிலைகள், மாநிலங்களால் இயலாது என்ற அனுமானம், நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் என்ற பல வகைகளில் ஒன்றிய அதிகாரக் குவிப்பு நியாயப்படுத்தப்பட்டு, பல்லாண்டுகளாகத் தொடர்கிறது. பல்வேறு அரசமைப்புச் சட்டத்திருத்தங்கள், பொதுப்பட்டியலில் உள்ள இனங்களின் மீது ஒன்றிய அரசால் இயற்றப்படும் சட்டங்கள், நிபந்தனைகளுடன் கூடிய நிதிக்குழு ஒதுக்கீடுகள், அனைத்து மாநிலங்களுக்கும் ஒரேமாதிரியான நெறிமுறைகளோடு உள்ள ஒன்றிய அரசுத் திட்டங்கள் ஆகியவற்றின் மூலமாக ஒன்றிய அரசிடம் அதிகாரங்கள் மேலும் குவிக்கப்பட்டு வருகின்றன. டெல்லியில் உள்ள பெரிய அமைச்சகங்களும், மாநிலங்கள் மேற்கொள்ளும் பணிகளையே மேற்கொண்டு, திட்டங்களை நுண்மேலாண்மை செய்து, மேற்பார்வையிட்டு, மாநிலங்களின் முன்னுரிமைகளை தாம் வழிநடத்திட முயற்சிக்கின்றன. மேலும், பொதுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள இனங்களில் இயற்றப்படும் ஒன்றிய துணைச்சட்டங்கள் மூலம், மாநில அரசின் சட்டங்களை மீறிடவும் ஒன்றிய அரசு முயற்சி செய்கிறது.

இவை மட்டுமன்றி, அடுத்தடுத்த அரசியல் நிகழ்வுகளும் இத்தகைய அதிகாரக் குவிப்பை வலிமைப்படுத்தியே வருகின்றன. ஒன்றிய அரசிலும், மாநில அரசுகளிலும் ஒரே தேசியக் கட்சியின் நீண்டகால ஆதிக்கமும், ஒன்றியத் தலைமையால் நியமிக்கப்பட்டு, அங்கிருந்து வரும் கட்டளைகளின்படி மாநில முதலமைச்சர்கள் செயல்படும் முறையும் இணைந்து, ஒற்றையாட்சிப் போக்கினை மேலும் வேரூன்றச் செய்துள்ளன. இதற்கு மாறாக, ஒன்றியத்தில் கூட்டணி அரசுகள் அமையப் பெறுவதும், மாநிலங்களில், மாநிலக் கட்சிகளின் எழுச்சியும் கூட்டாட்சி சமநிலையை மேம்படுத்த முனைந்தன.

மாநிலங்களுக்கு பல்வேறு பலன்களை ஒன்றிய அதிகாரக் குவிப்பு அளிக்கும் என்ற உறுதி நிறைவேறியிருந்தால் கூட, இதனை நியாயப்படுத்திட இயன்றிருக்கும். ஆனால், மாநிலங்களுக்கு அதிகாரம் நன்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கூட்டாட்சி நாடுகளுடனோ, உலகெங்கிலும் உள்ள கூட்டாட்சி நாடுகளின் சராசரிகளுடனோ அல்லது இந்தியா தானே வகுத்துக் கொண்ட நோக்கங்களின் அடிப்படையிலோ, என எவ்வகையில் ஒப்பீடு செய்து பார்த்தாலும், எந்தவொரு நியாயமான அளவுகோலால் நமது சாதனைகளை மதிப்பிட்டாலும், அவை மெச்சத்தக்கவையாக இல்லை என்பதே உண்மை. மாறாக, மக்கள் எளிதில் அணுகுதல், சேவைத்தரம், சமத்துவம், உலகளாவிய போட்டித்தன்மை போன்றவற்றை உயர்த்துவதில் ஒன்றிய அதிகாரக் குவிப்பு தோல்வியை மட்டுமே கண்டுள்ளது. இவற்றை எட்டிட உதவாமல், சிக்கலான சட்டவிதிமுறைகள், இன்றியமையாப் பணிகளுக்கும் தொடர்ந்து குறைவான நிதியளிப்பு, உள்ளூர் தேவைகளின்படி இல்லாத முன்னுரிமைகள், சமூகப் பரிவும், பொறுப்புணர்வும் செல்லரித்துப் போகும் நிலை, மாநில சுயாட்சியைத் திட்டமிட்டுச் சிதைத்தல் ஆகியவற்றை மட்டுமே இக்குவிப்பு சாதித்துள்ளது.

தமிழ்நாடு இந்தப் பிரச்சினைகளையெல்லாம் முன்னரே உணர்ந்திருந்தது. இவ்வகையில், 1967–ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் அன்றைய முதலமைச்சரும், நமது அன்புத் தலைவருமான டாக்டர் **சி.என். அண்ணாதுரை** அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> "இந்தியாவின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் கட்டிக் காக்கும் அளவிற்கு ஒன்றியம் வலுவாக இருக்கவேண்டும் என்பதே என் விருப்பம். இந்த நாட்டின் பாதுகாப்புக்கு ஒன்றிய அரசு முழுப்பொறுப்பேற்றிட தேவையான அனைத்து அதிகாரங்களும் ஒன்றியத்திற்கு இருக்கவேண்டும். ஆனால், பாகிஸ்தானியர்களிடமிருந்தோ, சீனர்களிடமிருந்தோ இந்தியாவைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக, மருத்துவத் துறையினை ஒன்றிய அரசு வைத்திருக்க வேண்டும் என்ற கூற்று அடிப்படையற்றது. எந்த வகையில் அது இந்திய இறையாண்மையினை வலுப்படுத்துகிறது? அங்கே ஒரு கல்வித்துறையினைக் கொண்டிருக்க வேண்டுமா? எந்த வகையில் அது இராணுவ வீரர்களின் போர்த்திறனை மேம்படுத்துகிறது?"

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்ற முழக்கத்துடன் இக்கண்ணோட்டத்தினை முன்னெடுத்துச் சென்று, ஒன்றிய–மாநில உறவுகள் குறித்து ஆராய்வதற்காக மாண்புமிகு நீதியரசர் பி.வி.ராஜமன்னார் அவர்களின் தலைமையில் ஒரு குழுவினை 1969–ஆம் ஆண்டு அமைத்தார். 1971–ஆம் ஆண்டில் இக்குழு அளித்த அறிக்கையானது, இந்தியாவின் கூட்டாட்சி குறித்த கருத்துப் பரிமாற்றங்களில் ஒரு மைல்கல் ஆகும். மாண்புமிகு நீதியரசர் பி.வி. ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தி, உண்மையான கூட்டாட்சி அமைப்பினை ஏற்படுத்திடும் வகையில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்திட ஒன்றிய அரசை வலியுறுத்தி, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தைத் தமிழ்நாடு சட்டமன்றம் 1974–ஆம் ஆண்டில் நிறைவேற்றியது. அதனையடுத்து, ஒன்றிய அரசானது, சர்க்காரியா ஆணையத்தையும் (1983–1988), பின்பு பூஞ்சி ஆணையத்தையும் (2007–2010) ஒன்றிய–மாநில உறவுகள் குறித்து ஆராய நியமித்தது. இவ்விரு ஆணையங்களும் குறிப்பிடத்தக்க

அறிக்கைகளை அளித்தபோதும், நமது அரசியல் கட்டமைப்பின் சமமின்மையைச் சரிசெய்திடும் அளவிற்கோ, உண்மையான கூட்டாட்சி அமைப்பினை ஏற்படுத்தும் வகையிலோ அவற்றின் பரிந்துரைகள் இல்லை.

இப்பின்னணியில், நமது குடியரசின் அரசமைப்புச் சட்டத்தின் உயிர்ப்பினைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய தருணத்தில் நாம் இன்று நிற்கிறோம். நாம் இதுவரை பயணித்த பாதையை மீளாய்வு செய்து, உண்மையான கூட்டாட்சித் தத்துவம் வலுப்பெறும் வகையில் நமது எதிர்காலத்தை வடிவமைக்க வேண்டிய நேரம் இது. இத்தகைய நோக்கத்துடன், தமிழ்நாடு அரசானது ஒன்றிய–மாநில உறவுகள் குறித்து ஆராய்ந்திட ஓர் உயர்நிலைக் குழுவை அமைத்தது. இக்குழுவின் தலைவராக மாண்புமிகு உச்சநீதிமன்ற மேனாள் நீதியரசர் திருமிகு. குரியன் ஜோசப் அவர்களும், ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலரும், இந்தியக் கடல்சார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமாகிய திருமிகு.கே. அசோக்வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களும், தமிழ்நாடு திட்டக் குழுவின் முன்னாள் துணைத்தலைவர் முனைவர் மு. நாகநாதன் அவர்களும் உறுப்பினர்களாவர். இது அரசியலுக்கும், சார்பு நிலைகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு பெருமுயற்சி ஆகும்.

முறையான ஆலோசனைகள், வல்லுநர்களின் கருத்துகள், கூட்டாட்சி குறித்த ஒரு தேசியக் கருத்தரங்கம், விரிவான வினாத்தொகுப்புகள் ஆகியவற்றின் வழியாக, இந்தியாவில் படிப்படியாக ஊடுருவியுள்ள அதிகாரக் குவிப்பு குறித்தும், கூட்டாட்சி சமநிலையை மீட்டெடுக்கத் தேவையான சீர்திருத்தங்கள் குறித்தும் இக்குழு ஆராய்ந்துள்ளது. அறிக்கையின் முதற்பகுதியானது, ஆளுநரின் பங்கு, மொழிக்கொள்கை, தொகுதி மறுசீரமைப்பு, தேர்தல்கள், கல்வி, சுகாதாரம், ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் உள்ளிட்ட இன்றைய காலத்தின் முதன்மையான பத்து பிரச்சினைகள் குறித்து எடுத்துரைக்கிறது. அரசமைப்பு நிர்ணய சபையின் விவாதங்கள், கூட்டாட்சிகளின் ஒப்பீட்டு ஆய்வுகள், முந்தைய ஆணையங்களின் அறிக்கைகள், நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் சமகால ஆய்வுகளின் அடிப்படையில் இந்தப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. துணை அமைப்புக் கொள்கை, மக்களாட்சிப் பொறுப்புணர்வு, அரசமைப்புச் சட்ட ஒழுங்குமுறை ஆகியவற்றோடு, முதிர்ச்சி பெற்ற கூட்டாட்சி நாடுகளின் சிறந்த நடைமுறைகளையும் உள்ளடக்கி இதன் பரிந்துரைகள் அளிக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டவல்லுநர்கள், நிருவாகிகள், அறிஞர்கள், பொதுமக்கள் ஆகிய அனைவரின் கவனத்தையும், இந்த அறிக்கையின் முதற்பகுதி ஈர்க்கும் என்ற நம்பிக்கையோடு இதனை அளிக்கிறேன். அறிவார்ந்த விவாதங்களை ஏற்படுத்தி, ஒன்றிய–மாநில உறவுகளில் சமநிலையை மீட்டெடுத்து, மாநிலங்கள் வலுவாக இருந்தால்தான் ஒன்றிய அரசு வலுவாக இருக்கும் என்ற அடிப்படையிலான அரசமைப்புச் சூழ்நிலையினை இந்த அறிக்கை உருவாக்கிட இயன்றால், இக்குழு அமைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறும். கூட்டாட்சித் தத்துவம் என்பது மாநிலங்களுக்கு வழங்கப்படும் சலுகை அல்ல; நாட்டிற்கான பாதுகாப்பு அரண். அது ஒற்றுமைக்கான தடையல்ல; அதற்கான உத்தரவாதம். வசதிக்காக உருவாக்கப்பட்ட ஏற்பாடு அல்ல; அரசமைப்புச் சட்ட மாண்பிற்கான கொள்கை. இது எழுத்திலும், நடைமுறையிலும் உண்மையாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதே நமது குறிக்கோள்.

(மு.க. ஸ்டாலின்)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஒன்றிய–மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழு



தலைவர்
நீதியரசர் திரு. குரியன் ஜோசப்
முன்னாள் நீதிபதி,
இந்திய உச்சநீதிமன்றம்



உறுப்பினர்
திரு. கே. அசோக் வர்தன் ஷெட்டி,
இ.ஆ.ப. (பணி நிறைவு),
முன்னாள் துணைவேந்தர்,
இந்திய கடல்சார் பல்கலைக் கழகம்,
சென்னை



உறுப்பினர்
முனைவர் மு. நாகநாதன்
முன்னாள் துணைத் தலைவர்,
தமிழ்நாடு மாநில திட்டக் குழு

அலுவலகம்

செயலாளர் மற்றும் ஆராய்ச்சி அலுவலர்
முனைவர் ஆர். சீனுவாசன்

தமிழ் மொழிபெயர்ப்பாளர்
திரு. க. காமராசன்

ஆராய்ச்சி அலுவலர்கள்

திரு. தேவ் கார்த்திக் சுரானா
திரு. அருணாப் ராஜன்
செல்வி. திவ்யா மா.பா.
திரு. இரா. வாஞ்சிநாதன்
திரு. சந்திரசேகர் வி பிள்ளை

இணை ஆராய்ச்சியாளர்கள்

முனைவர் மாளவிகா பிரசாத்
திரு. அபிஷேக் ஜெபராஜ்
திரு. முகுந்த் பி. உன்னி

குழு அலுவலர்கள் &
செயலக அலுவலகப் பணியாளர்கள்

திரு. கு. இராமமூர்த்தி
திரு. இரா. முரளி
திரு. ந. செந்தில்குமார்
திருமதி ச.அ. விஜயா
திருமதி ச.த. செல்வி
திரு. ஆ.சே. புருஷோத்தமன்
திருமதி ஏ. வெண்ணிலா
திரு. மு. பன்னீர்செல்வம்
திரு. கா. மோகன்
திரு. ந. தங்கராஜ

ஒன்றிய–மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழு, தனது அறிக்கையின் பகுதி – I–ஐ தமிழ்நாடு அரசுக்கு அளிக்கிறது.

நீதியரசர் குரியன் ஜோசப்

தலைவர்

திரு. கே. அசோக் வர்தன் ஷெட்டி,
இ.ஆ.ப. (பணி நிறைவு)

உறுப்பினர்

முனைவர் மு. நாகநாதன்

உறுப்பினர்

இடம்: சென்னை

தேதி: பிப்ரவர் 16, 2026

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முன்னுரை

கூட்டாட்சி என்பது சில நேரங்களில் வல்லுநர்களுக்கு மட்டுமேயான ஒரு பொருண்மை போலப் பேசப்படுகிறது. அது பட்டியல்கள், கொள்கைகள், அதிகார வரம்புகள், நிறுவனங்கள் ஆகியவை குறித்த ஓர் ஏற்பாடு போலக் கருதப்படுகின்றது. இது கருத்தரங்கு அறைகளில் விவாதிக்கப்படுகிற, அறிக்கைகளில் ஆராயப்படுகிற அல்லது நீதிமன்ற அறைகளில் விவாதம் செய்யப்படுகிற, குடிமக்களுக்குத் தொடர்பின்றித் தொலைவில் இருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால், உண்மையில், கூட்டாட்சி என்பது ஒரு வெறும் கருத்துப்பொருள் அல்ல. இது அன்றாட வாழ்வியல் உணரவுகளோடு கலந்தது. ஒரு குழந்தை பள்ளியில் கற்றுக்கொள்ளும் மொழியில், ஒருவர் அவசரக் காலத்தில் மருத்துவமனைக்குச் செல்லும் நிலையில், பொதுச்சேவைகளின் தரத்தில் அவை சென்றுசேரும் விதத்தில், சாலைகள் அமைப்பதில் மக்கள் நலத்திட்டங்களை வழங்குவதில் மாநிலம் விதிக்கக்கூடிய வரிகளில், தேர்தல்களை நடத்துவதில், வேறுபாடுகள் எழும்போது ஒரு மாநிலம் ஒன்றியத்துடன் பேசும் விதத்தில் எனப் பல்வேறு சூழ்நிலைகளில் இது உணரப்படுகிறது. கூட்டாட்சி பலவீனமடையும்போது, இந்த நடப்பு நிலைமைகளில் ஒரே இரவில் நிலைகுலைந்து விடாது. இந்த நடப்பு நிலைமைகள், முதலில் கவனிக்கப்படாத அளவிற்கு சிறிய மாற்றங்கள் ஏற்படுகின்றன; பின்னர், ஒட்டுமொத்த விளைவுகளும் தெரியும்வகையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரை, கூட்டாட்சி ஒருபோதும் கடன் வாங்கப்பட்ட ஒரு கோட்பாடாகவோ அல்லது ஒரு கருத்தியியல் சலுகையாகவோ இருந்ததில்லை. அது ஓர் இன்றியமையாத தேவையும் இருந்தது. வேறெந்த அரசமைப்பும் இத்தகைய மொழி, பண்பாடு, வட்டார, பொருளாதார மற்றும் சமூகப் பன்முகத்தன்மை கொண்ட ஒரு நாகரிகத்தை நிர்வகிக்க முடியாது. இருப்பினும், இந்திய அரசமைப்புச் சட்டம் வெளிப்படையான ஒற்றையாட்சிக் கூறுகளைக் கொண்டுள்ளது. இதற்கு காரணமாக, நாடு உருவானபோது நிலவிய பின்வரும் நிலைமைகள்: பிரிவினைத் துயரங்கள், 14 மாகாண அரசுகளையும் 552 சுதேச அரசுகளையும் ஒன்றிணைக்கும் பெரும்பணி, நாடு சிதறுண்டு

குழப்பம் விளையும் என்கிற கவலை முதலானவை. இதுவே நாடு உருவானபோது இருந்த நிலைமை ஆகும். அதனைத் தொடர்ந்த சில பத்தாண்டுகளில், நீண்டகால ஒரு கட்சி ஆதிக்கம், மையப்படுத்தப்பட்ட முடிவுகள் எடுப்பதை ஊக்குவித்த அரசியல் பண்பாடு, மாநிலங்களின் மீது திணிக்கப்பட்ட தலைமைத்துவம் ஆகியவற்றால் இந்தப் போக்குகள் மேலும் வலுப்பெற்றன. மொழிவாரியாக சீரமைக்கப்பட்ட மாநிலங்கள், முதிர்ச்சியடைந்த அரசியல் கட்சிகள், ஆழமாக வேரூன்றிய மக்களாட்சி நடைமுறைகள் ஆகியவற்றுடன் கூடிய இன்றைய இந்தியா 1950–ஆம் ஆண்டில் இருந்திருந்தால், அரசமைப்புச் சட்டம் வேறுவிதமாக வடிவமைக்கப்பட்டிருக்கலாம்.

எழுபத்து ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியபோது நிலவிய அச்சங்கள், இப்போது இந்தியாவின் நடப்பு நிலைமைகளை வரையறுப்பது இல்லை. இருப்பினும், அரசமைப்புச் சட்ட நடைமுறை தொடர்கிறது; முக்கிய அம்சங்கள் 1940களின் பிற்பகுதியில் உருவாக்கப்பட்ட அனுமானங்களின் அடிப்படையில் தொடர்ந்து செயல்படுகிறது. ஒரு காலத்தில் தேவையென காக்கப்பட்ட மையப்படுத்துதலானது தற்போது ஒரு வழக்கமாக நீடிக்கிறது. அது கவனமாகப் புதுப்பிக்கப்படும் அரசமைப்புத் தேர்வாக இல்லாமல் மரபுவழி பெறப்பட்ட ஒரு அனிச்சைச் செயலாக உள்ளது. தனது அணிந்துரையில் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், அரசமைப்புச் சட்டம் மாநிலங்களுக்கு ஒதுக்கிய துறைகளில், பல ஆண்டுகளாக, ஒன்றிய அரசு ஆழமான மற்றும் நீடித்த ஊடுருவல்களை எவ்வாறு செய்திருக்கிறது என்பதை விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த நிகழ்வுகள் அறிக்கையின் பல்வேறு இயல்களில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இந்த மாற்றமானது ஒரே ஒரு வியக்கத்தக்க முயற்சியின் மூலம் நடக்கவில்லை. மாறாக, ஒவ்வொரு அடியாக, ஒவ்வொரு பிரச்சினையாக, ஒவ்வொரு நிறுவனமாக ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட கூட்டாட்சிச் சிதைவை ஏற்படுத்திக்கொண்டே இருக்கிறது.

எஸ்.ஆர். பொம்மை எதிர் இந்திய ஒன்றியம் (*S.R. Bommai v. Union of India,* 1994) வழக்கில், கூட்டாட்சி என்பது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பின் ஒரு பகுதி எனத் திட்டவட்டமாக அறிவித்தபோதிலும் இந்த விலகல் தொடர்கிறது. நீதியரசர் B.P.ஜீவன் ரெட்டி பின்வருமாறு கூறினார்: "நமது அரசமைப்புச் சட்டத்தின்கீழ் மாநிலங்களைவிட ஒன்றியத்துக்கு அதிகளவு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதால், மாநிலங்கள் ஒன்றியத்தின் வெறும் துணை அமைப்புகள் என்று அர்த்தமல்ல. தங்களுக்கு ஒதுக்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் மாநிலங்கள் உச்ச அதிகாரம் பெற்றவை. குறிப்பாக,

மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் குறைக்கும் விளைவை ஏற்படுத்தும் அல்லது அத்தகைய விளைவை ஏற்படுத்த முனையும் ஒரு அணுகுமுறையினை நீதிமன்றங்கள் பின்பற்றக்கூடாது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உள்ள கூட்டாட்சி என்பது நிர்வாக வசதிக்கான ஓர் ஏற்பாடு அல்ல; மாறாக, அது ஒரு கொள்கை சார்ந்தது – நமது சொந்த வரலாற்று நடைமுறையின் விளைவு, கள நிலவரங்களை அங்கீகரிப்பதன் வெளிப்பாடு ஆகும்."

இருப்பினும், ஒன்றிய அரசின் தொடர்ச்சியான நடவடிக்கைகள் மூலமாகவும், டாக்டர் பிரதீப் ஜெயின் எதிர் இந்திய ஒன்றியம் (*Dr. Pradeep Jain v. Union of India,* 1984), பிரகாஷ் சிங் எதிர் இந்திய ஒன்றியம் (*Prakash Singh v. Union of India,* 2006) போன்ற பிற குறிப்பிடத்தக்க நீதித்துறைத் தீர்ப்புகள் மூலமாகவும் மாநில சுயாட்சி சிதைக்கப்படுவது தொடர்கிறது. புகழ்பெற்ற எழுத்தாளர் பிரதாப் பானு மேத்தா, இந்தியாவில் உள்ள கூட்டாட்சியை, 'ஆலிஸ் இன் வொன்டர்லேண்ட்' கதையில் வரும் நகைத்துக்கொண்டே மறைந்துபோகும் செஷயர் என்கிற மாயப் பூனையைப் போல, 'காணாமல் போகும்' பண்பு கொண்டது என்று குறிப்பிட்டுள்ளார். வருந்தத்தக்க வகையில், இந்த வர்ணனை நாளுக்குநாள் மிகவும் பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

இந்தச் சூழ்நிலையின் பின்னணியில்தான் தமிழ்நாடு அரசு ஒன்றிய–மாநில உறவுகள் குறித்து ஆராய இந்த உயர்மட்டக் குழுவை ஏப்ரல் 2025–இல் உருவாக்கியது (பின்னிணைப்பு I–ஐப் பார்க்கவும்). இது இந்நாட்டில் மேற்கொள்ளப்படும் இத்தகைய நான்காவது முயற்சி ஆகும். தமிழ்நாடு ராஜமன்னார் குழுவினை (Rajamannar Committee, 1967–71) அமைத்ததன் வழியாக முன்னோடியாக இருந்தது. இக்குழு, மாநில சுயாட்சியினை மீட்டெடுக்கவும், அரசமைப்புச் சட்டத் திருத்தங்களில் மாநிலங்களின் இசைவினைக் கட்டாயமாக்கவும் கணிசமான அளவில் அரசமைப்புச் சட்டச் சீர்திருத்தங்களை வலியுறுத்தியது. தேசிய அளவில் சர்க்காரியா ஆணையம் (Sarkaria Commission, 1983–88) மற்றும் பூஞ்சி ஆணையம் (Punchhi Commission, 2007–10) ஆகியவை ஒன்றிய–மாநில உறவுகள் குறித்து ஆராய்ந்து பல மதிப்புமிக்க பரிந்துரைகளை வழங்கின. ஆனால், கூட்டாட்சி சமநிலையை மறுசீரமைப்பு செய்வதற்கான திருத்தங்களை, இவ்விரு ஆணையங்களும் முன்மொழியாமல் விட்டுவிட்டன. அந்தப் ஆணையங்களின் ஆராய்வுகளுக்குப் பிறகு, நீண்டகாலம் கடந்துவிட்டது. இதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகள் ஒரு புதிய, விரிவான ஆய்வைத் தவிர்க்க இயலாததாக ஆக்கியுள்ளன.

இந்த அறிக்கையின் பகுதி I–இல் வரும் தொடக்க இயல், பதினொரு அடிப்படை வாதங்களை வளர்த்தெடுத்துள்ளது. அவற்றில், ஏழு

வாதங்கள் அதிகாரப் பரவலாக்கத்தையும் மாநில சுயாட்சியையும் ஆதரித்து வலிமைப்படுத்தியுள்ளன; மற்ற நான்கு வாதங்கள், இவை குறித்து உள்ள பிழையான கருத்துகளைத் தவிடுபொடியாக்கியுள்ளன. இதன் வழியாக விரிவான அதிகாரப் பரவலாக்கத்திற்கும் மேம்பட்ட மாநில சுயாட்சிக்குமான அரசமைப்புச் சட்ட நோக்கிலான கொள்கைவாதத்தைத் தெளிவாக முன்வைக்கிறது. மீதமுள்ள அத்தியாயங்களில் ஆராயப்படும் சிக்கல்கள், அரசமைப்புச் சட்ட அளவிலும், நிறுவனங்களின் நடைமுறையிலும், துறைகள் நிர்வாகத்திலும் கூட்டாட்சிச் சமநிலையின்மையின் நீடித்த, தொல்லை அளிக்கும் அமைப்பு முறையினை வெளிப்படுத்துகின்றன.

இந்தியாவின் அரசமைப்புச் சட்டத் திருத்த நடைமுறை, இந்த சமநிலையின்மையின் மையத்தில் உள்ளது. ஒரு கூட்டாட்சி அரசமைப்புச் சட்ட வழக்கத்திற்கு மாறாக, இந்திய அரசமைப்புச் சட்டத் திருத்த நடைமுறை நெகிழ்வாக உள்ளது. 76 ஆண்டுகளில் 106 முறை திருத்தப்பட்டுள்ளது. பல விதிகள் நாடாளுமன்றத்தால், இப்போதுள்ள வாக்களிக்கும் உறுப்பினர்களின் எளிய பெரும்பான்மையால் திருத்தப்படலாம்; இன்னும் பலவற்றை நாடாளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மையால் மட்டுமே திருத்தலாம். மாநில சட்டமன்றங்களின் பின்னேற்பு தேவைப்படும் இடங்களில் கூட, கூட்டாட்சி முக்கியத்துவம் வாய்ந்த ஏற்பாடுகளின் குறுகிய தொகுப்பிற்கு மட்டுமே பொருந்தும்; அதுவும் ஒப்பீட்டளவில் குறைந்த அளவிலான வரம்புக்கு உட்பட்டது. பொதுவாக்கெடுப்புக்கு உட்பட்டதாக எந்த ஏற்பாடும் இல்லை. இந்த வடிவமைப்பு பரந்த அடிப்படையிலான கூட்டாட்சி முறையின் ஒருமித்த கருத்து இல்லாமல் அல்லது பொது விவாதம் இல்லாமல் கூட்டாட்சி சமநிலையில் பெரும் மாற்றங்களைச் செயல்படுத்துகிறது.

இரண்டாவது சிக்கல், இந்தியாவின் வட்டார மறுசீரமைப்பிற்கான கட்டமைப்பில் உள்ளது; இது 2020களின் கூட்டாட்சி முதிர்ச்சியை விட, 1940களின் அச்சங்களையே தொடர்ந்து வெளிப்படுத்துகிறது. சாதாரண சட்டத்தின் மூலம் மாநிலங்களை ஒருதலைப்பட்சமாக மாற்றவோ, பிரிக்கவோ, சுருக்கவோ அல்லது தரம் குறைக்கவோ நாடாளுமன்றத்தால் முடியும் – இந்த அதிகாரம், கூட்டாட்சி தத்துவம் அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பின் ஒருபகுதி என்ற முன்வைப்புடன் பொருந்தாமல் உள்ளது.

தேசிய ஒற்றுமைக்கு மொழி ஒருமுகத்தன்மை தேவை என்பது தவறான கருத்து. இதனை அடிப்படையாகக் கொண்டுள்ள மொழி குறித்த அரசமைப்புச் சட்ட ஏற்பாடுகளே மிகமிக விரைவாகத் திருத்தம் செய்யப்பட வேண்டியவை. ஒப்பீட்டு அளவிலான பன்னாட்டு

அனுபவம் இந்திய அனுபவத்திற்கு மாறான நிலையை சுட்டிக்காட்டுகிறது: மொழிப் பன்முகத்தன்மை அரசமைப்புச் சட்ட அளவில் பாதுகாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும்போது கூட்டாட்சி நாடுகள் செழித்து வளரும். ஓர் ஆதிக்க மொழி திணிக்கப்படும்போது கூட்டாட்சி நாடுகள் தளர்வுறும். இந்தியாவின் மொழி பன்முகத்தன்மை நிர்வகிக்கப்பட வேண்டிய ஒரு சிக்கல் அல்ல; மாறாக, போற்றி வளர்க்க வேண்டிய ஒரு நாகரிக சொத்து.

ஒன்றிய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையிலான நடுநிலை அரசமைப்புச் சட்ட இணைப்பாகக் கருதப்படும் ஆளுநர் பதவி, அதன் நோக்கத்திலிருந்து அதிக அளவில் விலகிச் சென்றுள்ளது. ஆளுநரின் ஒவ்வொரு அத்துமீறலும் – அரசாங்கத்தை அமைப்பது அல்லது கவிழ்ப்பது, சட்டமன்றத்தைக் கூட்ட மறுப்பது, ஒப்புதலை நிறுத்தி வைப்பது அல்லது காலவரையின்றி தாமதப்படுத்துவது, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை பகிரங்கமாக விமர்சிப்பது அல்லது ராஜ்பவனை ஒன்றியத்தில் ஆளும் கட்சியின் பாகுபாடு காட்டும் தலைமைநிலையமாக மாற்றுவது முதலானவை – இந்த அமைப்பின் மீதான நம்பிக்கையை சிதைக்கிறது.

2026க்குப் பிந்தைய தொகுதி மறுவரையறைப் பணி ஆழ்ந்த பதட்டத்தை உருவாக்கி வருகிறது. மாநிலங்களில் மொத்த கருவுறுதல் விகிதங்கள் இன்னும் பெருமளவில் வேறுபடுவதால், மக்களவை தொகுதி ஒதுக்கீட்டில் மாநிலங்களுக்கு இடையேயான முடக்கத்தை நீக்குவது, தேசிய மக்கள்தொகை இலக்குகளை வெற்றிகரமாக செயல்படுத்திய மாநிலங்களுக்கு தண்டனை அளிக்கும் அதே வேளையில், அதைச் செய்யாதவர்களுக்கு வெகுமதிகளை வழங்கும் அபாயத்தையும் ஏற்படுத்துகிறது. இதன் வழியாகக் கூட்டாட்சி முறையின் சமநிலையைச் சீர்குலைக்கப்படுகிறது. 1976 முதல் நடப்பில் உள்ள முடக்கத்திற்கான அடிப்படையான நியாயம், இப்போதும் முழுமையாக செல்லுபடி ஆகும்.

மாநிலங்கள் தங்கள் சொந்த சட்டமன்றத் தேர்தல்களை, மாநில தேர்தல் ஆணையங்கள் வழியாக நடத்தும் முதிர்ச்சியடைந்த கூட்டாட்சி நாடுகளைப் போலன்றி, இந்தியா இந்தச் செயல்பாட்டை முழுவதுமாக இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்கிறது. இந்த சமநிலையின்மையை "ஒரு நாடு, ஒரு தேர்தல்" திட்டம் மேலும் அதிகப்படுத்துகிறது. இது சட்டமன்றப் பொறுப்புணர்வை, கடும் கட்டுப்பாடு நிறைந்த தேர்தல் அட்டவணைக்குக் கீழ்ப்படுத்துகிறது. மக்களாட்சி முறையின் தேர்வை விட நிர்வாக வசதிக்கு முன்னுரிமை அளிக்கிறது. அதே நேரத்தில், செயலிழந்த கட்சித்தாவல் தடுப்பு முறை,

மக்கள் தீர்ப்பைத் தொடர்ந்து சிதைத்து வருகிறது. இது விரைவாகச் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும்.

இந்தியாவின் அசல் அரசமைப்புச் சட்ட வடிவமைப்பு (1950–1976), கல்வியை முதன்மையாக மாநிலப் பொறுப்பாகக் கருதி, வரையறுக்கப்பட்ட அளவில் ஒன்றிய ஒருங்கிணைப்புக்கு உட்படுத்தியது. இது முதிர்ந்த கூட்டாட்சி நாடுகளின் நடைமுறையுடன் வலுவாகவும் அதிமாகவும் ஒத்துபோகின்றது. நாற்பத்து இரண்டாவது அரசமைப்புத் திருத்தத்தால் தொடங்கப்பட்ட, இந்த வடிவமைப்பிலிருந்து விலகல் – ஒன்றியப் பட்டியலில் உள்ள 66வது இனத்திற்கான விரிவான நீதித்துறை விளக்கங்களால் வலுப்படுத்தப்பட்டது, பல்கலைக்கழக மானியக் குழு போன்ற அமைப்புகளின் ஒழுங்குமுறை மீறலால் மேலும் வலு சேர்க்கப்பட்டது. மேலும் மாநிலப் பல்கலைக்கழகங்களின் வேந்தராக ஆளுநரின் சட்ட முறையான பங்கை அரசியல்மயமாக்குவதன் வழியாக மோசமடைந்தது. தகுதிநிலைகளை வளர்க்காமலோ அல்லது மாநிலங்களுக்கு இடையேயான ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்காமலோ மாநில சுயாட்சியையும் பல்கலைக்கழக சுயாட்சியையும் சீராகச் சிதைத்துவிட்டது.

பொது சுகாதாரம், அரசமைப்புச் சட்ட அளவில் மாநிலப் பட்டியலில் இருந்தாலும், அதுவும் இதே போன்ற ஒரு பாதையையே பின்பற்றியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, குறிப்பாக அண்மைய ஆண்டுகளில், ஒன்றியம் தனது ஆதிக்கத்தை ஒன்றியக் கட்டுப்பாட்டில் உள்ள தேசிய மருத்துவ ஆணையம், தேசிய நுழைவுத் தேர்வுகள், கடுமையாகவும் நுணுக்கமாகவும் கட்டுப்படுத்தப்படும் ஒன்றிய நிதிஅளிப்புத் திட்டங்கள், நிதி சார்ந்த நிபந்தனைகள், சுகாதாரத் திட்டங்களுக்கு ஒரே மாதிரியான இந்திப் பெயரைப் பயன்படுத்துவதன் வழியாகப் பண்பாட்டு ஒற்றைப்படைதன்மையை உருவாக்குதல் வரையிலும் விரிவுபடுத்தியுள்ளது. இந்த மையப்படுத்தல் இந்தியாவின் சுகாதார அமைப்பின் பலவீனங்களைச் சரிசெய்யவில்லை; மாறாக, அதுவே அந்த நோயின் ஒருபகுதியாக மாறிவிட்டது.

சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) அறிமுகப்படுத்தப்பட்டு எட்டு ஆண்டுகளுக்கும் மேலாகியும், அது இன்னும் முழுமையடையாத ஒரு செயல்முறையாகவே உள்ளது. அதற்குப் பதிலாக உறுதியளிக்கப்பட்ட வருவாய் வளர்ச்சியும் நிலைத்தன்மையும் பெறாமலேயே மாநிலங்கள் தங்களின் நிதிச் சுயாட்சியை விட்டுக்கொடுத்துவிட்டன என்ற கருத்து பரவலாக உருவாகிவருகிறது. ஒன்றியம் தீர்க்கமான தடுப்பதிகாரம் உள்ள சரக்கு மற்றும் சேவை வரி அவை, நடைமுறையில் ஒன்றிய நிதி அமைச்சகத்தின் நீட்சியாகச் செயல்படுகின்றது. ஆகவே, மோதல்களைத்

தீர்க்க எந்தவொரு சுதந்திரமான தீர்வு வழிமுறையும் இல்லாததாலும், கூட்டுறவு கூட்டாட்சி முறையின் உணர்வு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை, இந்தச் சிக்கல்களை அடிப்படைக் கொள்கைகளிலிருந்து அணுகி ஆராய்கிறது. இது அரசமைப்புச் சட்ட அவையின் விவாதங்களை மறுபரிசீலனை செய்கிறது, ஒன்றிய–மாநில உறவுகளின் அரசமைப்புச் சட்ட, அரசியல் பரிணாம வளர்ச்சியைக் கண்டறிந்து, முந்தைய ஆணையங்களின் பணிகளை ஆராய்கிறது. முதிர்ந்த கூட்டாட்சி நாடுகளின் அனுபவத்தைக் கவனத்தில் கொண்டுள்ளது. ஆகஸ்ட் 23, 2025 அன்று நடைபெற்ற ஒன்றிய–மாநில உறவுகள் குறித்த தேசியக் கருத்தரங்கு, பல்வேறு துறைகளையும் வட்டாரங்களையும் சேர்ந்த வல்லுநர்களின் விரிவான பதில்கள் உட்பட விரிவான ஆலோசனையால் இக்குழுவின் பணி வளப்படுத்தப்பட்டுள்ளது. பரிந்துரைகளின் சுருக்கம் பின் இணைப்பு III–இல் வழங்கப்பட்டுள்ளது.

1991–ஆம் ஆண்டின் பொருளாதார சீர்திருத்தங்களோடு ஒப்பிடத்தக்க அளவுக்கு, கட்டமைப்பு அளவிலான மறுசீரமைப்பு, இப்போது இந்தியக் கூட்டாட்சிக்கு தேவைப்படுகின்றது என்று இக்குழு உறுதியாகக் கருதுகிறது. மாநிலங்களை நம்பும், துணை அமைப்புக் கொள்கையை மதிக்கும், உள்ளூராட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கும், பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்ளும் கூட்டாட்சி நாடே இறையாண்மையை நலிவடையச் செய்யாது; மக்களாட்சி முறை வலுப்படுத்துகிறது. அத்தகைய அமைப்பில் ஒற்றுமை கட்டளையிடுவதன் வழியாக அல்ல, இணக்கத்தாலும்; கட்டாயப்படுத்தப்பட்ட ஒருமுகத்தன்மையால் அல்ல, உரையாடல் வழியாக ஏற்றுக்கொள்ளும் தன்மையாலும்; அதிகாரக் குவிப்பால் அல்ல, கொள்கை அளவிலான பரவலாக்கத்தாலும் நிலைநிறுத்தப்படுகிறது. இதன் நோக்கம் ஒன்றியத்தை மதிப்பிழக்கச் செய்வது அல்ல; மாறாக அதை சரியான நிலையில் போற்றி வளர்ப்பது ஆகும். க. சந்தானம் அரசமைப்புச் சட்ட அவையில் எச்சரித்தபடி, ஒன்றியத்தின் வலிமை பணிகளைக் குவிப்பதில் இல்லை, மாறாக தேசிய நிலையோடு தொடர்பில்லாத பொறுப்புகளை மறுக்கும் ஒழுக்கத்தில் உள்ளது. எல்லாவற்றையும் செய்ய முயற்சிக்கும் அரசாங்கம் இறுதியில் எதையும் சிறப்பாகச் செய்யாது.

இந்தப் பெரும் பொறுப்பினை எங்களிடம் ஒப்படைத்தமைக்காகவும் முழுமையான மற்றும் உறுதியான ஆதரவை வழங்கியமைக்காகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இக்குழு மனமார்ந்த நன்றியினைப் பதிவு செய்கிறது. இக்குழுவால் முன்வைக்கப்பட்ட ஒவ்வொரு வேண்டுகோளும் முழுமையாகவும் உரிய கவனத்துடனும் நிறைவேற்றித் தரப்பட்டன.

இக்குழுவானது, திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., தலைமைச் செயலாளர்; திரு. த. உதயச்சந்திரன். இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் (நிதித் துறை); மருத்துவர் பு.உமாநாத், இ.ஆ.ப., மாண்புமிகு முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர்–I; மற்றும் தமிழ்நாடு அரசின் இதர அலுவலர்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கும் உதவிக்கும் தனது பாராட்டுகளைப் பதிவு செய்கிறது. குழுவின் ஒருங்கிணைப்பு அலுவலரான திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் (பொதுத் துறை) அவர்களின் உறுதியான ஆதரவும் நிர்வாகத் திறனும் குழுவின் பணிகளுக்கு ஒரு பக்கபலமாக இருந்தமைக்காக இக்குழு சிறப்புப் பாராட்டுகளைப் பதிவு செய்கிறது. மேலும், இக்குழுவின் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் மற்றும் பின்னிணைப்பு II–இல் பட்டியலிடப்பட்டுள்ளவர்களுக்கும், அவர்களது முழுமனதுடனான ஒத்துழைப்பு மற்றும் ஆதரவுக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

நீதியரசர் குரியன் ஜோசப்

திரு கே. அசோக் வர்தன் ஷெட்டி,
இ.ஆ.ப, (பணி நிறைவு)

பேராசிரியர் மு. நாகநாதன்

உள்ளடக்கம்

இயல் 1	அதிகாரப் பரவலாக்கத்திற்கும் மாநில சுயாட்சிக்குமான வாதம்	1
இயல் 2	அரசமைப்புச் சட்டத் திருத்தம்	78
இயல் 3	மாநிலங்களின் ஆட்சிநில ஒருமைப்பாடு	119
இயல் 4	மொழி	152
இயல் 5	ஆளுநர்	195
இயல் 6	தொகுதி மறுவரையறை	239
இயல் 7	தேர்தல்கள்	290
இயல் 8	கல்வி	335
இயல் 9	சுகாதாரம்	390
இயல் 10	சரக்கு மற்றும் சேவை வரி	453
பின்னிணைப்பு I	ஆய்வு வரையறைகள்	529
பின்னிணைப்பு II	பங்களித்த வல்லுநர்கள்	530
பின்னிணைப்பு III	பரிந்துரைகளின் சுருக்கம்	533

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இயல் 1

அதிகாரப் பரவலாக்கத்திற்கும் மாநில சுயாட்சிக்குமான வாதம்

"இந்த நாட்டிற்கு ஒரு வலுவான அரசாங்கம் அமைவதில் எனக்கும் ஆர்வமுண்டு; ஆனால் மையத்தின் வலிமை குறித்த எனது கருத்து சற்று மாறுபட்டது... மாகாண மக்களின் நல்வாழ்வுக்கான தொடக்கநிலைப் பொறுப்பு, மாகாண அரசாங்கங்களிடமே இருக்க வேண்டும். மிகத் தெளிவான அகில இந்திய விவகாரங்களில் மட்டுமே மைய அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும்; செயல்பட வேண்டும். எனவே, மையத்தின் வலிமை என்பது அகில இந்தியப் பொருண்மைகளில் போதுமான அதிகாரங்களைப் பெற்றிருப்பதில் மட்டுமல்ல; அகில இந்தியத் தன்மை இல்லாத, உண்மையில் மாகாண வரம்பிற்குள் இருக்க வேண்டிய துறைகளுக்கான பொறுப்பிலிருந்து விடுபட்டு இருப்பதிலும்தான் அடங்கியுள்ளது. அதிகாரங்களின் இந்த நேர்மறை, எதிர்மறை வரன்முறைகளில்தான் உண்மையான கூட்டாட்சி அமைப்பு நிலைபெறுகிறது. [ஒன்றிய அதிகாரங்கள்] குழுவின் அறிக்கையில் வரையறுக்கப்பட்டுள்ள கூட்டாட்சி அதிகாரங்கள் தவறான திசையில் செல்கிறது என கருதுகிறேன். மைய அரசுக்குத் தேவையில்லாத அனைத்து வகையான அதிகாரங்களையும் அந்த அறிக்கை மையத்தின் மீது சுமத்த முயல்கிறது... மையத்திற்கு அனைத்து வகையான அதிகாரங்களையும் சேர்ப்பதன் வழியாக மட்டுமே, அதனை வலிமையாக்க முடியும் என்ற தீராத வேட்கை நிலவுகிறது."

– க. சந்தானம்,
அரசமைப்புச் சட்ட அவை விவாதங்கள் (1947)[1]

---

[1] *Constituent Assembly Debates*, vol 5 (6th reprint, Lok Sabha Secretariat 2014) 54, August 20, 1947.

I. அறிமுகம்

ஆட்சி குறித்த ஒவ்வொரு சீரிய விவாதமும், அதன் அடிப்படையில், தத்துவம் குறித்த விவாதமே. ஆட்சிக் கொள்கை என்பது ஒருபோதும் நடுநிலையானது அன்று; செயல் வடிவம்பெறும் தத்துவம் ஆகும். கூட்டாட்சி முறையின் வடிவமைப்பு, சமூக நீதி, மதச்சார்பின்மை, மொழி, வரிவிதிப்பு, நிறுவன அதிகாரம் ஆகியவை சார்ந்த தெரிவுகள் அனைத்தும் அதிகாரம், பன்முகத்தன்மை, சமத்துவம், மாநிலத்தின் முறையான பங்கு குறித்த ஆழ்ந்த உடன்பாடுகளின் வெளிப்பாடே. அதிகாரம் ஒன்றியத்தில் குவிக்கப்பட வேண்டுமா அல்லது மாநிலங்களுக்கிடையே பொருள்மிக்க வகையில் பரவலாக்கப்பட வேண்டுமா என்கிற நீடித்து ஒலிக்கும் இந்தியக் கேள்வி, நிர்வாக வசதி சார்ந்தது அன்று. இது, பரந்து விரிந்த, பன்முகத்தன்மை கொண்ட மக்களாட்சி அமைப்பு, அதிகாரத்தை எவ்வாறு ஒழுங்கமைக்க வேண்டும் என்பது குறித்த கருத்து மோதல்களுக்கு இடையிலான போராட்டம் ஆகும்.

தொடக்கத்திலேயே, ஓர் அடிப்படைக் கருத்தை முழுமையாகத் தெளிவுப்படுத்திவிட வேண்டும். இந்தியாவின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் விவாதத்திற்கு அப்பாற்பட்டவை. அவை அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பின் (Basic Structure) ஒருபகுதி என்று உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது. இந்தியா என்கிற கருத்துருவம் இன்று உறுதியான நாகரிக, சமூக, அரசியல் அடித்தளங்களின் மீது நிலைபெற்றுள்ளது. எனவே, அதிகாரப் பரவலாக்கம், மாநில சுயாட்சி ஆகியவற்றுக்கான வாதுரை பிராந்தியவாதத்தை ஆதரிப்பதோ, ஒன்றியத்தின் அதிகாரத்தை நலிவடையச் செய்யும் முயற்சியோ அன்று. இது தேச வலிமைப்படுத்தலுக்கான வாதம் ஆகும். மிதமிஞ்சிய அதிகாரக் குவிப்பு (Excessive Centralisation), எவ்வளவு திறன்மிக்கதாக இருப்பினும், ஒரே ஓர் அதிகாரமையத்தில் அதிக சுமைகளை ஏற்றுவதன் வழியாக நிலைத்தன்மையை அல்ல, நொறுங்கிப் போகும் தன்மையை உருவாக்குகிறது. இந்தியாவைப் போன்ற பரந்த பன்முகத்தன்மை கொண்ட துணைக்கண்ட மக்களாட்சி முறையில் இந்த ஆபத்து மென்மேலும் அதிகரிக்கிறது.

எவ்வாறாயினும், மாநில சுயாட்சிக்கான ஒரு சீரிய ஆதரவு நிலைப்பாட்டை வெறும் கூற்றுகள் அல்லது உணர்ச்சிகளின் அடிப்படையில் கட்டமைக்க முடியாது. அதிகாரக் குவிப்பு, அதிகாரப் பரவலாக்கம் ஆகிய இரண்டையும் உந்தித் தள்ளும் கவலைகளைக் குறித்து அக்கறைகொள்ள வேண்டும் என்று அறிவு சார்ந்த நேர்மை

கோருகிறது. அதிகாரக் குவிப்பு, அதிகாரப் பரவலாக்கம் ஆகிய இரண்டும் குறைக்க முயலும் அபாயங்கள், அவற்றை நியாயப்படுத்தும் கோட்பாடுகள், அவற்றை மெய்ப்பிப்பதாகத் தோன்றும் வரலாற்று அனுபவங்கள், அவற்றைச் சுற்றி வளர்ந்துள்ள பரவலான கட்டுக்கதைகள், பிழையான வாதங்கள் ஆகியவற்றை நோக்க வேண்டும். இந்தக் கவலைகளுக்கு முகம்கொடுக்காமல் அதிகாரப் பரவலாக்கத்தை ஆதரிப்பது என்பது, அறிவு வழியில் இணங்காமல், வெற்று வலியுறுத்தல் வழி இணங்குவதாகிவிடும்.

எனவே, இந்த இயலின் நோக்கம் ஆய்வின் வழியாக இணங்கவைப்பதே ஆகும். மையப்படுத்துதல், அதிகாரப் பரவலாக்கம் ஆகிய இரண்டிற்கும் அடிப்படையாக உள்ள தத்துவக் கருத்துகள், அனுபவக் கூற்றுக்கள், நிலைத்திருக்கும் தவறான வாதங்கள் ஆகியவற்றை இந்த இயல் ஆராய்கிறது. காகிதத்தில் எந்த ஏற்பாடு நேர்த்தியாகத் தோன்றுகிறது என்று கேட்காமல், எது அரசமைப்புச் சட்டக் கொள்கைக்கும், வரலாற்று அனுபவத்திற்கும், ஆழ்ந்த பன்முகத்தன்மை கொண்ட சமூகத்தை ஆள்வதில் உள்ள நடைமுறைத் தேவைகளுக்கும் உண்மையாகப் பொருந்துகிறது என ஆராய்கிறது. பொருளாதாரம், மேலாண்மை, பொது நிர்வாகம், அரசமைப்புச் சட்டம், வரலாறு, சமூகவியல், அமைப்புக் கோட்பாடு ஆகியவை வழங்கும் கருத்துதெளிவுகளைப் பயன்படுத்தி, இந்த இயல் பின்வரும் அடிப்படைக் கருத்தை முன்வைக்கிறது: தேசிய ஒற்றுமையில் ஆழப் பதிந்த, அதேவேளையில் தேச உறுப்பு (Sub–national) சுயாட்சியை மதிக்கும், கவனமாக வடிவமைக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்க முறை, மிதமிஞ்சிய அதிகாரக் குவிப்பு கொண்ட அரசை விட, ஒருங்கிணைப்பு, பொறுப்புடைமை ஆகியவற்றிற்கு மிகவும் நீடித்த அடித்தளத்தை வழங்குகிறது.

II. தன்னுரிமை சார்ந்த வாதம்: பிரிக்கப்பட்ட அதிகாரம் ஏன் சுதந்திரத்தைப் பாதுகாக்கிறது

ஃபெடரலிஸ்ட் (Federalist) எண் 51–இல் (1788) ஜேம்ஸ் மாடிசன் (James Madison) அரசமைப்புச் சட்ட வடிவமைப்பு குறித்து எப்போதும் நிலவும் சிக்கலை, நினைவில்கொள்ளத்தக்க பத்தியில் பின்வருமாறு வரைந்து காட்டினார்:

> *"மனிதர்கள் தேவதைகளாக இருந்தால், எந்த அரசாங்கமும் தேவைப்பட்டிருக்காது. தேவதைகள் மனிதர்களை ஆள்வதாக*

இருந்தால், அரசாங்கத்தின் மீது வெளிப்புறக் கட்டுப்பாடுகளோ, உட்புறக் கட்டுப்பாடுகளோ தேவைப்பட்டிருக்காது. மனிதர்கள் மேல் ஆட்சி செலுத்த, மனிதர்களால் நிர்வகிக்கப்படும் அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதில், மிகப்பெரிய சிக்கல் உள்ளது. அது, ஆளப்படுபவர்களைக் கட்டுப்படுத்த, முதலில் அரசாங்கத்திற்குத் திறனளிக்க வேண்டும்; அடுத்ததாக, அரசாங்கம் தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்க வேண்டும்."[2]

அதிகாரப் பரவலாக்கம் குறித்த தன்னுரிமை வாதம் (Liberty Argument) இந்தக் கருத்து தெளிவிலிருந்து தொடங்குகிறது. அதிகாரம் தவறு செய்யக்கூடிய மனித முகவர்களால் பயன்படுத்தப்படுவதால், அதிகார துஷ்பிரயோகத்தைத் தடுக்கும் கட்டமைப்புகளை விட, நல்லொழுக்க நோக்கங்களை, குறைவாகவே தன்னுரிமை – சுதந்திரம் சார்ந்துள்ளது.

நவீன அரசமைப்புச் சட்டவியலின் பின்வரும் ஓர் எளிய அடிப்படைக் கொள்கையிலிருந்து தொடங்குகிறது: இறையாண்மை மக்களிடமே உள்ளது. அரசமைப்புச் சட்டம் என்பது மக்களை ஆளும் நிறுவனங்களுக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரத்தை ஒப்படைக்கும் உடன்படிக்கை ஆவணம். எனவே, கொடுங்கோன்மை என்பது ஆட்சியாளர்களின் கொடூரத்திலிருந்து மட்டுமல்ல, ஒப்படைக்கப்பட்ட இந்த அதிகாரம் ஒரே கையில் கட்டமைப்பு அளவில் குவிக்கப்படுவதிலிருந்தும் எழுகிறது. *சட்டங்களின் உயிர்ச்சாரம் (The Spirit of the Laws – 1748)* என்ற நூலில் மாண்டெஸ்கியூ (Montesquieu) உற்று அறிந்தபடி, "அதிகாரம் படைத்த ஒவ்வொரு மனிதனும் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தவும், தனது அதிகாரம் செல்லும் வரை கொண்டுசெலுத்தவும் முனைகிறான்" என்பதை அனுபவம் காட்டுகிறது. இதற்கான தீர்வாக, "அதிகாரமே அதிகாரத்திற்குத் தடையாக இருக்க வேண்டும்" என்கிற வடிவமைப்பில் உள்ளது என அவர் முடிவு உரைத்தார்.[3] எனவே, ஆபத்து தனிநபர் சார்ந்தது என்பதைவிட, அமைப்பைச் சார்ந்தது. இதற்கான தீர்வு ஒழுக்கம் பேணுவதில் அல்ல, நிறுவன வடிவமைப்பில் உள்ளது.

எனவே, அரசமைப்புச் சட்ட மக்களாட்சி முறைகள் இரண்டு அச்சுகளில் அதிகாரத்தைப் பிரிக்கின்றன. சட்டம் இயற்றுதல், செயல்படுத்துதல், நீதி வழங்குதல் ஆகியவை ஒன்றிணைவதைத்

---

[2] James Madison, 'Federalist No. 51' in Michael A. Genovese (ed), *The Federalist Papers* (Palgrave Macmillan 2009), 120. Also attributed to Alexander Hamilton.

[3] Montesquieu, *The Spirit of Laws* (Thomas Nugent tr, Batoche Books 2001).

தடுத்து, சட்டமன்றம், நிர்வாகம், நீதித்துறை ஆகியவற்றுக்கு இடையிலான அதிகாரப் பிரிப்பைக் கிடைமட்ட அச்சு (horizontal axis) செய்கிறது. செங்குத்து அச்சு (vertical axis) – கூட்டாட்சி முறை – ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையில் அதிகாரத்தைப் பிரிக்கிறது; முதிர்ந்த அமைப்புகளில், உள்ளாட்சி அரசாங்கங்கள் வரை அதிகாரம் பிரிக்கப்படுகின்றது. இவ்வாறு அதிகாரம் ஒருமுறை அல்ல, இரண்டு முறை பிரிக்கப்படுகிறது. இதனை மாடிசன் சுதந்திரத்திற்கான – மக்கள் தன்னுரிமைகளுக்கான "இரட்டைப் பாதுகாப்பு" (double security) என்று விவரித்தார்: "வெவ்வேறு அரசாங்கங்கள் ஒன்றுக்கொன்று கட்டுப்படுத்தும், அதே நேரத்தில் ஒவ்வொன்றும் தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொள்ளும்."[4] மையம் ஒடுக்குமுறையாக மாறினால், மாநிலங்கள் (Sub–national governments) ஒழுங்கமைக்கப்பட்ட தடுக்கும் ஆற்றல்களாகச் செயல்படுகின்றன; இதற்கு மறுதலையாகவும் நடக்கும்.

தேசிய அதிகாரத்தின் ஆதரவாளராகக் கருதப்படும் அலெக்சாண்டர் ஹாமில்டன் (Alexander Hamilton) கூட, அரசாங்கங்களுக்கு இடையிலான போட்டியில்தான் தன்னுரிமை தங்கியுள்ளது என்பதை விளக்கினார். *ஃபெடரலிஸ்டு (Federalist) எண் 28–இல்* (1787), "அதிகாரம் எப்போதுமே அதிகாரத்தின் போட்டியாளராக இருப்பதால், மாநில அரசாங்கங்களின் ஆக்கிரமிப்புகளைத் தடுக்கப் பொது அரசாங்கம் (general government) எல்லா நேரங்களிலும் தயாராக இருக்கும்; மாநில அரசாங்கங்களும் பொது அரசாங்கத்தை நோக்கி அதே மனப்பான்மையைக் கொண்டிருக்கும்" என்று நோக்கினார்.[5] குடிமக்கள் "தங்களை ஏதேனும் ஒரு தராசு தட்டில் இட்டு" சமநிலையின் இறுதிப் பாதுகாப்பைத் தக்கவைத்துக் கொள்கிறார்கள் என்று அவர் மேலும் கூறினார். இந்தக் கருத்தாக்கத்தில், தன்னுரிமை ஆட்சியாளர்களின் கருணை மீது அல்ல, எந்த அதிகாரமும் எதிர்க்கும் ஆற்றல் இல்லாது போய்விடாமல், போட்டி நிறுவனங்களின் பன்முகக் கட்டமைப்பின் மீது தங்கியுள்ளது.

அலெக்சிஸ் டி டோக்வில் (Alexis de Tocqueville), வழக்கமான அமைப்புக் கட்டுப்பாடுகள் என்பதிலிருந்து குடிமைத் திறன் என்பதின் பக்கம் கவனத்தைச் செலுத்துவதன் வழியாக இந்த வாதத்தை மேலும்

---

[4] James Madison, 'Federalist No. 51' in Michael A. Genovese (ed), *The Federalist Papers* (Palgrave Macmillan 2009), 121. Also attributed to Alexander Hamilton.

[5] Federalist Papers: Primary Documents in American History' (*Library of Congress* August 13, 2019) accessed February 3, 2026.

ஆழப்படுத்தினார். *அமெரிக்காவில் மக்களாட்சி (Democracy in America,* 1835–40) என்ற நூலில் அவர் பின்வருமாறு எழுதியுள்ளார்:

> *"அறிவியலுக்குத் தொடக்கநிலைப் பள்ளிகள் எப்படியோ, தன்னுரிமைக்கு நகரக் கூட்டங்கள் (Town–meetings) அப்படிப்பட்டவை; அவை தன்னுரிமையை மக்களின் கைக்கெட்டும் தூரத்தில் கொண்டுவருகின்றன; அதை எவ்வாறு பயன்படுத்துவது, எவ்வாறு அனுபவிப்பது என்பதை மனிதர்களுக்குக் கற்பிக்கின்றன. ஒரு தேசம் சுதந்திரமான அரசாங்க அமைப்பை நிறுவலாம்; ஆனால் நகராட்சி நிறுவனங்களின் ஆன்மா இல்லாமல், அதனால் தன்னுரிமையின் ஆன்மாவைப் பெற முடியாது."*[6]

உள்ளாட்சி அமைப்பில் அதிகாரத்தின் நேரடி ஆதாரமாக மக்கள் இருக்கிறார்கள் என்றும், வேறு எந்த நிலையையும் விட நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துகிறார்கள் என்றும் டோக்வில் கருதினார். அதிகாரத்தை குடிமக்களுக்கு நெருக்கமாக நிலைநிறுத்துவதன் மூலம், அதிகாரப் பரவலாக்கம் பங்கேற்பையும் பொறுப்புணர்வுப் பழக்கங்களையும் வளர்க்கிறது; இவை இல்லாமல் குடியரசுக் கோட்பாட்டின் சுதந்திரம் நீடித்திருக்க முடியாது.

இருபதாம் நூற்றாண்டு வரலாறு கடுமையான உறுதிப்படுத்தலை வழங்கியது. நாஜி ஜெர்மனி, சோவியத் யூனியன் போன்ற மிகவும் மையப்படுத்தப்பட்ட ஆட்சிகள் கடும் அடுக்குமுறை ஆட்சிகளாக வீழ்ச்சியடைந்தன; இதற்குக் காரணம், அவை ஒழுங்கமைக்கப்பட்ட எதிர்ப்பைத் தெரிவிக்கும் திறன் கொண்ட, அரசமைப்புச் சட்ட அளவில் வேரூன்றிய தேச உறுப்பு அதிகார மையங்களைக் (sub–national power centres) கொண்டிருக்கவில்லை. போருக்குப் பிந்தைய ஜெர்மனி இதிலிருந்து நேரடிப் பாடத்தைக் கற்றுக்கொண்டது. அடிப்படைச் சட்டம் (*grundgesetz* – 1949) வலுவான கூட்டாட்சி ஒழுங்கை உருவாக்கியது: *மாநிலங்கள்* (*Länder*) குறிப்பிடத்தக்க நிர்வாக, சட்டமன்ற அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொண்டன; *பண்டஸ்ராட்* (*bundesrat*) அவைகளுக்குத் தேசியச் சட்டம் இயற்றலின் மீது நேரடித் தடுப்பதிகாரத்தை வழங்கியது. ஜெர்மானியக் கூட்டாட்சி என்பது வெறும் நிர்வாக ஏற்பாடு மட்டுமல்ல; அது மைய ஆதிக்கத்திற்கு எதிரான அரசமைப்புச் சட்டப் பாதுகாப்புக் கட்டமைப்பும் ஆகும்.

---

[6] Alexis de Tocqueville, *Democracy in America,* vol 1 (Henry Reeve trs, *Project Gutenberg*) accessed February 3, 2026.

பிற கூட்டாட்சி நாடுகளும் இதேபோன்ற அரண்களை நிறுவனமயமாக்கியுள்ளன. அமெரிக்காவில், மாநிலத் தலைமை வழக்குரைஞர்கள் (State Attorneys General) கருத்துநிலை எல்லைகளைக் கடந்து கூட்டாட்சி அரசாங்கத்தின் மீது வழக்கமாக வழக்குத் தொடுக்கிறார்கள் – பழமைவாத மாநிலங்கள் தாராளவாத நிர்வாகங்களைக் கட்டுப்படுத்துகின்றன; இதற்கு மாறாகவும் நடக்கிறது. அறிஞர் ஜெசிகா புல்மேன்–போசன் இந்த நிகழ்வை கட்சி *சார்ந்த கூட்டாட்சி* (*Partisan Federalism*) என்று விவரிக்கிறார்.[7] இது செயல்பாடு முடக்கம் (*Dysfunction*) என்பதற்குப் பதிலாக, குடியரசுக் கோட்பாட்டில், சிறப்பம்சமாகக் கருதப்படுகிறது. அரசமைப்புச் சட்டம் பல "*மோதலுக்கான முனையங்களை*" (Nodes of Contestation) பேணுவதை உறுதிசெய்கிறது; வாஷிங்டனில் அதிகாரத்தில் இல்லாத கட்சி, மாநிலங்களின் நிறுவன இயந்திரத்தைப் பயன்படுத்திக் கூட்டாட்சி அரசாங்கத்தைக் கட்டுப்படுத்த அதிகாரம் அளிக்கிறது.

இந்தத் தர்க்கத்திற்கு நோபல் பரிசு பெற்ற எலினோர் ஆஸ்ட்ரோமின்[8] படைப்பு அனுபவ நோக்கிலான சான்றை வழங்குகின்றது. பல்மைய ஆளுகை (polycentric governance) குறித்த அவரது ஆய்வுகள், பல சுதந்திரமான முடிவெடுக்கும் மையங்களைக் கொண்ட அமைப்புகள், ஒற்றை மைய (monocentric) ஏற்பாடுகளை விடவும், கொடுங்கோன்மைக்கு எதிராக மிகவும் வலுவான பாதுகாப்பை வழங்குகின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றன. அதிகாரத்தை ஒன்றையொன்று தழுவிய அதிகார வரம்புகளுக்குள் (overlapping jurisdictions) பரப்புவதன் வழியாக, அதிகாரம் தொடர்ந்து பல முனையங்களில் கண்காணிக்கப்படுவதையும், திருத்தப்படக்கூடியதாக இருப்பதையும் பல்மைய அமைப்புகள் உறுதி செய்கின்றன.

இந்திய அரசமைப்புச் சட்டம் இந்த நோக்கில் ஒரு சிக்கலான இடத்தைப் பெறுகின்றது. அதிகாரத்தைப் பிரிப்பதன் வழியாகத் தன்னுரிமையைப் பாதுகாக்கும் தர்க்கத்தை அரசமைப்புச் சட்டச் சிற்பிகள் ஏற்றுக்கொண்டனர்; ஆனாலும் அவர்கள் பிரிவினையின்போது, தேசப் பலவீனத்தின் நிழலில் செயல்பட்டனர். ஒருபுறம், *எஸ்.ஆர். பொம்மை எதிர் இந்திய ஒன்றியம்* (*S.R. Bommai v. Union of India,* 1994)[9] வழக்கில் உச்சநீதிமன்றக் கோட்பாட்டு விளக்கங்கள், கூட்டாட்சி

---

[7] Jessica Bulman–Pozen, 'Partisan Federalism' (2014) 127 Harvard Law Review 1077.

[8] Elinor Ostrom, 'Beyond Markets and States: Polycentric Governance of Complex Economic Systems' (2010) 100 American Economic Review 641, 647.

[9] (1994) 3 SCC 1.

தத்துவம் என்பது அடிப்படைக் கட்டமைப்பின் (Basic Structure) ஒருபகுதி என்பதை உறுதிப்படுத்துகின்றன; இதன்வழியாக மாநிலங்களுக்குச் சுதந்திரமான அரசமைப்புச் சட்ட அளவிலான இருப்பை வழங்குகின்றன. மறுபுறம், அரசமைப்புச் சட்ட உரை, படிநிலை அதிகாரப் பரவலாக்கத்தின் பண்பான கட்டமைப்பு அளவிலான ஒற்றையாட்சிச் சார்பை (Unitary Bias) வெளிப்படுத்துகிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 3 (மாநிலங்களின் இசைவு இன்றி நாடாளுமன்றம் அவற்றின் எல்லைகளை மாற்ற அனுமதிப்பது), பிரிவு 250 (நெருக்கடிநிலைகளின் போது ஒன்றியத்தின் சட்டம் இயற்றும் திறன்), பிரிவு 257 (மாநில நிர்வாக நடவடிக்கையின் மீது ஒன்றியத்தின் கட்டுப்பாடு), பிரிவு 365 (ஒன்றியத்தின் வழிகாட்டுதல்களுக்கு இணங்காததற்காகக் குடியரசுத் தலைவர் ஆட்சியைத் திணித்தல்), நெருக்கடி நிலை ஏற்பாடுகள் (அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 352–360) ஆகியவை கூட்டாகப் படிநிலையான அதிகார மையப்படுத்தலின் கூறுகளை வெளிப்படுத்துகின்றன; நடைமுறையில் 'இரட்டைப் பாதுகாப்பை' (double security) நலிவடையச் செய்கின்றன. எனவே, அரசமைப்புச் சட்டத்தைச் சீர்திருத்தும் பணி, மாநிலங்களின் இருப்பை *அனுமதிக்கும்* ஒன்றியம் என்பதிலிருந்து, உண்மையான ஆட்சிப் பகிர்வு பாணியில் மாநிலங்களுடன் *கூட்டாளியாக* இருக்கும் கூட்டாட்சி நாடு என்னும் சமநிலைக்கு மாறுவதே, இந்தப் பதற்றத்தைத் தீர்ப்பது ஆகும்.

உள்ளூர் ஆளுகையிலும் இதேபோன்ற இருமைநிலை காணப்படுகிறது. உள்ளூர் நிறுவனங்களைப் புறக்கணிப்பதால் ஏற்படும் குடிமையியல் இழப்புகள் குறித்துத் டோக்வில் எச்சரித்திருந்தாலும், அசல் அரசமைப்புச் சட்டம் உள்ளூர் ஆளுகையை விளிம்புகளுக்குத் தள்ளியது. ஊராட்சிகளை அமைக்குமாறு அரசை வலியுறுத்த நீதிமன்றம் செல்ல முடியாத நெறிப்படுத்தும் கோட்பாடு (அரசமைப்புச் சட்டப் பிரிவு 40), மாநிலப் பட்டியலில் இனம் 5–இல் "உள்ளாட்சி அமைப்பு" சேர்க்கப்பட்டது என்பவற்றைத் தாண்டி, அசல் அரசமைப்புச் சட்டம் ஆட்சியின் மூன்றாம் அடுக்கிற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய தகுதிநிலையை வழங்கவில்லை. *எழுபத்து மூன்றாவது, எழுபத்து நான்காவது அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள்* (1992) ஊராட்சிகளையும் நகராட்சிகளையும் அரசமைப்புச் சட்டக் கட்டமைப்பில் முறையாக உள்ளடக்குவதன் வழியாக இந்தக் குறைபாட்டைச் சரிசெய்ய முயன்றன. எவ்வாறாயினும், நடைமுறையில், இந்த அமைப்புகள் பெரும்பாலும் சுய–அரசாங்கத்தின் உண்மையான நிறுவனங்களாகச் செயல்படுவதை விட, மாநில, ஒன்றியத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான நிர்வாக முகமைகளாகவே செயல்பட்டுள்ளன. அவற்றின் மக்களாட்சி வாக்குறுதியை நிறைவேற்ற, பல்மையக்

கட்டமைப்பிற்குள் பல 'போட்டியிடும் முனையங்களாக' செயல்பட அவற்றுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்; அதன் வழியாகத் தன்னுரிமைக்கான மிகவும் வலுவான, பல அடுக்கு பாதுகாப்பை வழங்க வேண்டும்.

தத்துவ முடிவு தெளிவானது. அதிகாரப் பரவலாக்கம் என்பது பன்முகத்தன்மைக்கான வெறும் சலுகையோ, நிர்வாகச் செயல்திறனுக்கான கருவியோ அன்று; அது தன்னுரிமையின் கட்டமைப்பு அளவிலான உறுதிப்பாடு. அதிகாரத்தைப் பல, அரசமைப்புச் சட்டப் பாதுகாப்புப் பெற்ற மையங்களில் பகிர்வதன் வழியாக, கூட்டாட்சி ஒழுங்கு இறையாண்மையை – அதன் உண்மையான உரிமையாளரான மக்களிடம் – கோட்பாட்டில் மட்டுமல்ல, சுய–அரசாங்கத்தின் அன்றாட நடைமுறையிலும்கூட நிலைநிறுத்துகிறது.

III. உத்திசார் கவனம் குறித்த வாதம்: மிதமிஞ்சிய அதிகாரக் குவிப்பு ஆளுகையை ஏன் நலிவடையச் செய்கிறது

அரசமைப்புச் சட்ட அவை விவாதங்களில், *ஒன்றியத்தின் வலிமை அதன் அதிகாரப் பரப்பைச் சார்ந்துள்ளது* என்ற கவர்ச்சியான அனுமானம் வலுவாகக் காணப்பட்டது. ஒரு வலுவான தேசத்திற்கு, முடிந்தவரை பல சட்டமன்ற, நிர்வாக, நிதித் துறைகளுக்குக் கட்டளையிடும் விரிவான ஒன்றியம் தேவை என்று நம்பப்பட்டது. இந்த மேலோங்கிய உள்ளுணர்விற்கு எதிராக, க. சந்தானம் தீர்க்கதரிசனமான ஓர் எச்சரிக்கையை விடுத்தார். *1935–ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின்* மாகாணப் பட்டியலிலிருந்து ஒன்றிய, பொதுப்பட்டியல்களுக்குப் பொருண்மைகளை கண்மூடித்தனமாக மாற்றுவதை அவர் விமர்சித்தார். "நாடோடி வாழ்க்கை" (*vagrancy*) போன்ற பொருண்மைகள் ஏன் அகில இந்திய அக்கறையாக இருக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பினார். இன்னும் அடிப்படையாக, "பொருளாதாரத் திட்டமிடலை" பொதுப்பட்டியலில் வைப்பது, விவசாயம் போன்ற மாகாணத் துறைகளிலும் மையம் ஊடுருவவும், மாநிலங்கள் தங்கள் சொந்த வழியில் திட்டமிடுவதைத் தடுக்கவும் வழிவகுக்கும் என்று எச்சரித்தார்.

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, 1970–இல் புதுதில்லியில் நடைபெற்ற *ஒன்றிய–மாநில உறவுகள் குறித்த தேசிய மாநாட்டில்*, சந்தானம் இந்த விமர்சனத்தைக் கூர்மைப்படுத்தினார். பரந்த மக்கள்

தொகைக்கு ஆற்ற வேண்டிய பல கடமைகளை ஏற்கும் மையம் "குணப்படுத்த முடியாத அளவுக்கு நலிவடைகிறது" என்று எச்சரித்தார். உண்மையான வலிமை, கவனக்குவிப்பில் இருந்தே வருகிறது என்று அவர் வாதிட்டார்:

> *"அத்தியாவசியமான அகில இந்திய விவகாரங்களில் மட்டும் கவனம் செலுத்துவதன் வழியாகவும்... மீதமுள்ள துறையில் மாநிலங்களுக்கு முழுமையான சுயாட்சியை வழங்குவதன் வழியாகவும் மட்டுமே... மைய அரசாங்கம் உண்மையில் வலுவாக இருக்க முடியும்."*[10]

ஒரு வலுவான ஒன்றியம் என்பது எல்லாவற்றையும் செய்வதன்று; *எதைச் செய்யக்கூடாது* என்பதைத் தெரிந்திருப்பதே ஆகும் என்று சந்தானம் அரசியல் உள்ளுணர்வோடு வெளிப்படுத்தியதை, பொருளாதாரம், மேலாண்மைக் கோட்பாடு ஆகியவற்றின் மூலக் கருத்துருவாக்கங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

ரிக்கார்டோவின் நோக்கு: ஒப்பீட்டு அளவிலான அனுகூலம்

19–ஆம் நூற்றாண்டுப் பொருளாதார வல்லுநர் டேவிட் ரிக்கார்டோவின் "ஒப்பீட்டு அளவிலான அனுகூலம் குறித்த கோட்பாடு" (Principle of Comparative Advantage), ஒரு நிறுவனம் தனக்குக் குறைந்தபட்ச வாய்ப்பிழப்புச் செலவு (opportunity cost) உள்ள செயல்பாடுகளில் நிபுணத்துவம் பெற வேண்டும் என்று கூறுகிறது; தனக்கு *அதிகபட்ச* முழுமையான செயல்திறன் (absolute efficiency) உள்ள இடத்தில் அல்ல. ஒரு தலைமை நிர்வாக அதிகாரி தனது நேர்முக உதவியாளரை விடச் சிறந்த தட்டச்சராக இருந்தாலும், அவர் தட்டச்சு செய்வதில் நேரத்தைச் செலவிடுவது பகுத்தறிவற்றது; ஏனெனில், அவ்வாறு செலவிடும் ஒவ்வொரு மணி நேரமும், அந்த அதிகாரி மட்டுமே செய்யக்கூடிய மூலோபாயத் திட்டமிடலில் இழந்த நேரம் ஆகும்.

இதே தர்க்கம் கூட்டாட்சி ஆளுகைக்கு இன்னும் அதிக வலிமையுடன் பொருந்துகிறது. வாதத்திற்காக, ஒன்றிய அரசாங்கம் தனது பரந்த வளங்கள், சிறந்த வல்லுநர்கள், உயர்தர அதிகார வர்க்கம் ஆகியோருடன், மாநிலங்களை விடச் சிறந்த பள்ளிப் பாடத்திட்டத்தை வடிவமைக்க முடியும் என்றோ, பொது சுகாதாரத்தைச் சிறப்பாக நிர்வகிக்க முடியும் என்றோ வைத்துக்கொள்வோம்; மாநிலங்கள் செய்யும் ஒவ்வொரு

---

[10] Apurv Kumar Mishra, 'Enumeration of Legislative Powers in India' (2023) Economic Advisory Council EAC–PM/WP/12/2023, accessed February 7, 2026.

பணியிலும் ஒன்றியம் சிறந்து விளங்குவதாகவே வைத்துக்கொண்டாலும், அந்த "முழுமையான அனுகூலம்" மையக் கட்டுப்பாட்டை நியாயப்படுத்தாது. தீர்மானிக்கும் காரணி ஒப்பீட்டுத் திறன் அன்று; வாய்ப்பிழப்புச் செலவே ஆகும்.

மாநில அதிகாரங்களை ஒன்றியம் நுண்மேலாண்மை செய்வதற்கான வாய்ப்பிழப்புச் செலவு என்பது, அதன் சொந்த இறையாண்மைப் பொறுப்புகளைப் புறக்கணிப்பது ஆகும். வெளிநாட்டுப் பாதுகாப்பு, நாணயம், பேரினப் பொருளாதார நிலைத்தன்மை, வெளிநாட்டு உறவு, வர்த்தகப் பேச்சுவார்த்தைகள், முன்னணி அறிவியல் துறைகள், எரிசக்திப் பாதுகாப்பு, நீண்டகாலத் தொலைநோக்கு மூலோபாயத் திட்டமிடல் போன்ற அகில இந்திய விவகாரங்களை நிர்வகிப்பதில் ஒன்றியத்திற்கு ஒப்பீட்டு அளவிலான அனுகூலம் – சொல்லப்போனால், முற்றுரிமை (*monopoly*) – உள்ளது. ஒன்றியம் கிராமப்புறத் தூய்மைப்பணித் திட்டத்தின் (ஒரு உள்ளூர் பணி) நுணுக்கங்களை விவாதிப்பதற்கோ; பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களை நடத்துவதற்கோ (முதிர்ந்த கூட்டாட்சிகளில் மாநிலப் பணி) செலவிடும் நேரமும் பணமும், பாதுகாப்பு நவீனமயமாக்கல், இணையப் பாதுகாப்பு, குறைக்கடத்தி உத்தி (*semiconductor strategy*), செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கணினி, செயற்கை உயிரியல், மேம்பட்ட ரோபாட்டிக்ஸ் போன்ற அதிநவீனத் துறைகள் குறித்து விவாதிப்பதில் இழந்த நேரமும் பணமும் ஆகும்.

ஒப்பீட்டு அளவிலான அனுகூலத்தைப் புறக்கணிப்பதன் வழியாக, ஒன்றியம் தனது பிரம்மாண்டமான ஆற்றலை மற்றவர்களால் செய்யக்கூடிய பணிகளில் சிதறடிக்கிறது; இதனால், தான் மட்டுமே தீர்க்கக்கூடிய அடிப்படையான சவால்களைச் சமாளிக்கப் போதுமான திறன் இல்லாமல் போகிறது. இதன் விளைவாக ஒன்றியம் வலுபெறுவது இல்லை; கவனத்தைச் சிதற விடுகின்றது.

மைக்கேல் போர்ட்டர்: உத்தி என்பது "எதைச் செய்யக்கூடாது" என்கிற ஒழுக்கம்

"உத்தி என்றால் என்ன?" என்ற தனது மூலக்கட்டுரையில், செயல்பாட்டுத் திறன் என்பது உத்தி அல்ல என்று மைக்கேல் போர்ட்டர் வாதிட்டார். உண்மையான உத்திக்கு, மறுக்கும் ஒழுக்கம் தேவை என்று குறிப்பிட்டு. அவர் பின்வருமாறு எழுதினார்:

> *"உத்தியின் சாராம்சம் எதைச் செய்யக்கூடாது என்பதைத் தேர்ந்தெடுப்பது ஆகும்... உத்திக்கு வணிகப் பரிமாற்றங்கள் இன்றியமையாதவை. அவை தெரிவுக்கான தேவையை*

உருவாக்குகின்றன; ஒரு நிறுவனம் வழங்குவதை வேண்டுமென்றே வரம்புக்கு உட்படுத்துகின்றன."[11]

ஐகேஇஏ (IKEA), சவுத்வெஸ்ட் ஏர்லைன்ஸ், நியூட்ரோஜினா, வான்கார்ட் குழுமம் ஆகியவற்றின் உதாரணங்களை மேற்கோள் காட்டி, இந்த நிறுவனங்கள் அனைவருக்கும் எல்லாமுமாகவும் இருக்க முயற்சிக்காமல், தங்கள் குறிப்பிட்ட மதிப்பு முன்மொழிவுக்குப் பொருந்தாத நடவடிக்கைகளை இரக்கமின்றி வெட்டிவிடுவதன் வழியாக வெற்றிபெற்றன என்பதைப் போர்ட்டர் எடுத்துக்காட்டினார். தங்கள் வரம்பைக் கட்டுப்படுத்துவதன் வழியாக, அவை தங்கள் திறனை ஆழப்படுத்தின.

குறிப்பிடத்தக்க வகையில், க. சந்தானம் அரை நூற்றாண்டுக்கு முன்னரே அரசமைப்புச் சட்ட அவையில் இந்த மேலாண்மை அறிவுத் தெளிவை எதிர்பார்த்துக் கூறினார்: *"அதிகாரங்களின் இந்த நேர்மறை, எதிர்மறை வரன்முறைகளில்தான் உண்மையான கூட்டாட்சி அமைப்பு நிலைபெறுகிறது."* மாநிலக் களங்களில் ஒன்றியம் நுழைவதற்கு எதிரான தடை – அதாவது "எதிர்மறை வரன்முறை" (*negative delimitation*) – பலவீனம் அல்ல, மாறாகக் கூட்டாட்சி வலிமையின் ஊற்றுக் கண்ணே அதுதான்.

இப்போது, ஒன்றியம் இந்த மூலோபாயக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ள மறுக்கிறது. விண்வெளி ஆய்வு முதல் கிராமத்துக் குளங்கள் வரை ஒவ்வொரு துறையிலும் மாற்றத்தின் முதன்மை முகவராக இருக்க விரும்புகிறது. மாநிலப் பட்டியலில் உள்ள ஏறக்குறைய ஒவ்வொரு பொருண்மையிலும் பெரிய ஒன்றிய அமைச்சகங்கள் உள்ளன; இது மாநிலப் பணிகளை நகலெடுக்கும் "நிழல் அதிகார முறையை" (*shadow bureaucracy*) உருவாக்குகிறது. நிதி ஆணைய மானியங்களுடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகள், பெருகிவரும் ஒன்றிய நிதிஅளிப்புத் திட்டங்கள் (Centrally Sponsored Schemes), கடுமையான வழிகாட்டுதல்கள், ஒவ்வொரு பணிக்கும் ஒப்புதல் பெறுதல் ஆகியவற்றின் வழியாக, வரையறுக்கப்படாத நிதியை ஒதுக்குவதற்கோ அல்லது விருப்பத் திட்டங்களின் பட்டியலை வழங்குவதற்கோ பதிலாக, மாநிலங்களின் முன்னுரிமைகளைத் தானே தீர்மானிக்கிறது.

மூலோபாய ஒழுக்கமின்மை மாநில முன்னெடுப்பைச் சிதைப்பதுடன், ஓர் ஆபத்தான *தார்மீகத் தீங்கையும்* (*moral hazard*) உருவாக்குகிறது.

---

[11] Michael E Porter, 'What is Strategy?' (*Harvard Business Review* November–December 1996) accessed February 3, 2026.

மாநில அதிகாரங்களுக்கான பொறுப்பை ஒன்றியம் ஏற்றுக்கொள்ளும்போது, மாநில அரசாங்கங்கள் பொறுப்புடைமையைத் தவிர்க்க முடியும்; நிதிப்பற்றாக்குறை அல்லது தாமதமான அனுமதிகளுக்காகப் புதுதில்லியைக் குறை கூறலாம். இதன் விளைவாக, ஒன்றியம் கவனச் சிதறலுடனும், மாநிலங்கள் சார்புநிலையிலும், குடிமக்கள் தெளிவான பொறுப்புடைமை வரம்பு இல்லாமலும் இருக்கும் ஆட்சிக் குறைபாடு ஏற்படுகிறது.

பிரஹலாத், ஹேமல்: மையத் திறன்களில் கவனம் செலுத்துதல்

எதிர்காலத்திற்காகப் போட்டியிடுதல் (Competing for the Future – 1994*)* என்ற நூலில், சி.கே. பிரஹலாத், கேரி ஹேமல் ஆகியோர், பெரிய நிறுவனங்கள் தங்கள் மையமான வலிமைகளிலிருந்து விலகி, தங்களுக்கு ஆழ்ந்த நிபுணத்துவம் இல்லாத வெளிப்பகுதிகளில் வளங்களைத் திசைதிருப்பும்போது மதிப்பை அழிக்கும் "பல துறைகளில் கவனம் சிதறும் பெருங்குழமச் சிக்கல்" (Conglomerate Trap) குறித்து எச்சரித்தனர். தொடர்பில்லாத பணிகளில் தங்கள் கவனத்தைச் சிதறடிக்கும் அமைப்புகள், எல்லாவற்றிலும் சுமாராகவும், எதிலுமே சிறந்ததாக இல்லாமலும் ஆகிவிடுகின்றன. நிறுவனங்கள் தங்கள் *மையத் திறன்களை* (*core competencies*) – தங்கள் மூலோபாய அடையாளத்தை வரையறுக்கும் திறன்களின் சிறிய தொகுப்பை – கடுமையாகப் பாதுகாத்துக் கொள்வதன் வழியாகவும், தங்களுக்கு ஒப்பீட்டு அளவிலான அனுகூலம் இல்லாத நடவடிக்கைகளிலிருந்து வெளியேறுவதன் வழியாகவும் செழித்து வளர்கின்றன.

இன்றைய இந்திய ஒன்றியம் ஓர் ஊதிப்பெருக்கிய பெருங்குழுமம் (Bloated Conglomerate) போலக் காணப்படுகிறது. அதன் மையத் திறன் – முற்றுரிமை – அருவமான சிந்தனை, தொலைநோக்கு, மூலோபாய ஒருங்கிணைப்பு தேவைப்படும் உயர்நிலை அகில இந்தியப் பணிகளில் உள்ளது. இதற்கு மாறாக, உள்ளூர் பொதுப் பணிகளை (நீர், தூய்மைப்பணி, சுகாதாரம்) வழங்குவதற்கு நுணுக்கமான உள்ளூர் அறிவு, செயல்பாட்டு வேகம், சமூக ஈடுபாடு ஆகிய திறன்கள் தேவை; இத்திறன்கள் ஒன்றியத்திடம் இல்லை. அது இத்துறைகளில் நுழையும்போது, மதிப்பைச் சேர்ப்பதில்லை; மதிப்பிழந்து போகிறது. கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தை ஆய்வு செய்வதில் ஒன்றியத் தலைமை செலவிடும் ஒவ்வொரு மணிநேரமும், குவாண்டம் கணினியைப் பற்றி விவாதிப்பதில் இழந்த மணிநேரம் ஆகும். தேசத்தின் மிக உயர்ந்த நிர்வாகக் கவனத்தின் இந்தத் தவறான ஒதுக்கீடு வெறும் செயல்திறன் இன்மை மட்டுமல்ல; அது ஒரு மூலோபாயப் பிழை.

கிரைகுனாஸ், உர்விக்: "கட்டுப்பாட்டு வரம்பு" சிக்கல்

ஒன்றியத்தின் வரம்புமீறல் அதனை ஏன் "குணப்படுத்த முடியாத அளவுக்கு நலிவடையச் செய்யும்" என்பதைச் செவ்வியல் மேலாண்மைக் கோட்பாடு விளக்குகிறது. வி.ஏ. கிரைகுனாஸால்[12] முறைப்படுத்தப்பட்டு, லிண்டால் உர்விக்[13] என்பவரால் வளர்த்தெடுக்கப்பட்ட *கட்டுப்பாட்டு வரம்பு* (*span of control*) கொள்கை, ஒரு நிர்வாகி திறம்பட மேற்பார்வையிடக்கூடிய துணை அதிகாரிகளின் அல்லது சிக்கலான நடவடிக்கைகளின் எண்ணிக்கைக்குக் கடினமான வரம்பு உள்ளது என்று கூறுகிறது. துணை அதிகாரிகளின் எண்ணிக்கை எண்கணித அளவில் அதிகரிக்கும் போது, நிர்வாகச் சிக்கல் அடுக்கடுக்காக அதிகரிக்கிறது என்று கிரைகுனாஸ் காட்டினார். ஐந்தாவது துணை அதிகாரியைச் சேர்ப்பது எண்ணிக்கையை 20 விழுக்காடு மட்டுமே அதிகரிக்கிறது; ஆனால் உறவுமுறைச் சிக்கலை ஏறக்குறைய 100 விழுக்காடு பெருக்குகிறது. கட்டுப்பாட்டு வரம்பு மீறப்படும்போது, ஆளுகை தகவல் சுமை, இடையூறு, முடிவு முடக்கம் ஆகியவற்றில் வீழ்கிறது.

நவீன இந்திய ஒன்றியம் 140 கோடி மக்களை மையப்படுத்தப்பட்ட முடிவெடுக்கும் சிறு புனல் வழியாக ஆள முயற்சிக்கிறது. பொதுப்பட்டியலை விரிவுபடுத்துவதன் வழியாகவும், மாநிலப் பட்டியல் அதிகாரங்களில் ஒன்றிய நிதிஅளிப்புத் திட்டங்களைப் பெருக்குவதன் வழியாகவும், ஒன்றியம் தனது கட்டுப்பாட்டு வரம்பைத் தானாக முன்வந்து அறிவாற்றல் எல்லைகளுக்கு அப்பால் விரிவுபடுத்தியுள்ளது. "ஒரே நாடு, ஒரே கொள்கை" என்ற முறையில், ஒரு நகராட்சியின் தூய்மைப்பணித் திட்ட நெருக்கடியும், எல்லைப் பாதுகாப்பு நெருக்கடியுடன் கவனம் பெறுவதற்காகப் போட்டியிடுகிறது. ஒன்றியம் ஒரு 'தளர்ந்துபோன இராட்சதனாக' (*flabby giant*) மாறியுள்ளது – திறமையின்மையால் அல்ல, சுமையால் மந்தமாகிறது. ஒரு துணைக்கண்டப் பொருளாதாரத்தால் உருவாக்கப்படும் 'தரவுகளின் வெடிப்பை' (*explosion of fact*) செயலாக்க, அது கட்டமைப்பு அளவில் இயலாததாக உள்ளது.

சந்தானத்தின் நுண்ணறிவு இன்றும் தீர்க்கமானது: வலிமை என்பது பணிகளைக் குவித்துக்கொள்வதில் இருந்து எழுவதில்லை; மாறாகத் தேசிய அளவில் வராத பொறுப்புகளை மறுக்கும் ஒழுக்கத்திலிருந்து

---

[12] VA Graicunas, 'Relationship in Organization' (1933) 7 Bulletin of International Management Institute 39.

[13] LF Urwick, 'V.A. Graicunas and the Span of Control' (1974) 17 The Academy of Management Journal 349.

எழுகிறது. ஒரு துணைக்கண்டத்தின் ஒவ்வொரு விவரத்தையும் ஆள முயற்சிக்கும் ஒன்றியம், அதன் ஆற்றலைச் சிதறடித்து, அதன் சொந்தச் செயல்திறனைச் சிதைத்துக்கொள்கிறது. எல்லாவற்றையும் செய்ய முயற்சிக்கும் ஒரு அரசாங்கம், இறுதியில் எதையும் சரியாகச் செய்வதில்லை.

IV. மக்களாட்சி முறை சார்ந்த வாதம்: துணை அமைப்புக் கொள்கை ஏன் பொறுப்புடைமையை வலுப்படுத்துகிறது

துணை அமைப்புக் கொள்கை (*principle of subsidiarity*) என்பது உண்மையான கூட்டாட்சி நாட்டின் மக்களாட்சி மையக் கரு ஆகும். இது எளிமையான, ஆனால் கண்டிப்பான ஒரு முன்மொழிவின் மீது அமைந்துள்ளது: அரசாங்கப் பணிகளைச் செயல்திறனுடன் செய்யக்கூடிய மிகவும் அடிநிலையில் உள்ள அமைப்பே செய்ய வேண்டும்; தவிர்க்க முடியாத போது மட்டுமே, மேல்நோக்கி மாற்றப்பட வேண்டும். எனவே, நியாயப்படுத்துவதற்கான சுமை அதிகாரப் பரவலாக்கத்தில் இல்லை; அதிகாரக் குவிப்பில்தான் உள்ளது.

துணை அமைப்புக் கொள்கை தேச–அரசின் வழக்கமான மேலிருந்து கீழான கற்பனையைத் தலைகீழாக மாற்றுகிறது. அதிகாரம், இறையாண்மை கொண்ட தலைநகரிலிருந்து துணை அலகுகளுக்குக் கீழே பாய்வதில்லை; அது குடிமக்களிடமிருந்து சமூகத்திற்கு, மாநிலத்திற்கு, வரையறுக்கப்பட்ட நேர்வுகளில் மட்டுமே ஒன்றியத்திற்கு மேலே செல்கிறது. இந்தக் கருத்தாக்கத்தில், "மையம்" என்பது ஓர் அருவமான வடிவம்; ஆனால் "சமூகம்" என்பது வாழ்வியல் எதார்த்தம். எனவே, அதிகார மையப்படுத்தல் என்பது இயல்பான நிலை அல்ல; அது கடுமையான நியாயப்படுத்தல் தேவைப்படும் விதிவிலக்கு.

பல்வேறு துறைகளின் ஒருமித்த கருத்து

துணை அமைப்புக் கொள்கை சமூகவியல் தத்துவத்துடன் தொடர்புடையது என்றாலும், அதன் வலுவான நவீன அடித்தளங்கள் பொருளாதாரம், மேலாண்மை, ஆளுகை ஆய்வு ஆகிய துறைகளில் உள்ளன. இத்துறைகள் அனைத்தும் ஒருமித்த கருத்தை முன்வைக்கின்றன: *அதிகாரம் என்பது அறிவு, விளைவுகள், பொறுப்புடைமை ஆகியவற்றிற்கு மிக நெருக்கமாக இருக்கும்போது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.*

பொருளாதார வாதம்: வாலஸ் ஓட்ஸ் (*wallace oates*) தனது நிதிசார் கூட்டாட்சி (*Fiscal Federalism,* 1972) நூலில் அமைத்த "அதிகாரப் பரவலாக்கத் தேற்றம்" (*Decentralisation Theorem*) என்னும் பகுதி மிகத் தெளிவானது. சமூக நிலைமைகள், முன்னுரிமைகள் பரவலாக மாறுபடும் பெரிய சமூகங்களில், பல்வேறு வட்டார விருப்பங்களுக்கு ஏற்பக் கொள்கைகளை வடிவமைக்க மைய அரசாங்கம், கட்டமைப்பு நோக்கில் தகுதியற்றது என்று ஓட்ஸ் காட்டினார். ஒரே மாதிரியான தேசியத் தரநிலைகள் மழுங்கிய கருவிகளாகின்றன; அவை யாருக்கும் சிறப்பாகச் சேவை செய்வதில்லை. மாறாக, பரவலாக்கப்பட்ட வழங்கல் உள்ளூர்த் தேவைகளுடன் நெருக்கமாக ஒத்துப்போகிறது. மையப்படுத்தல் மூலம் கிடைக்கும் நிர்வாகச் செயல்திறன் என்று சொல்லப்படுவது, பன்மைச் சமூகங்களில் பொருளாதாரச் செயல்திறன் இன்மையாக மாறுகிறது.

இதற்கு சார்லஸ் டைபௌட்டின் (Charles Tiebout) மாதிரி[14] துணையாக உள்ளது. இது அதிகாரப் பரவலாக்கம் செயல்திறனை மட்டுமல்லாமல், பொறுப்புக்கூறலையும் ஏன் மேம்படுத்துகிறது என்பதை விளக்குகிறது. மாநிலங்களும் உள்ளாட்சி அரசாங்கங்களும் சேவைகள், வரிகளின் கலவைகளைத் தாமாக வடிவமைக்கச் சுதந்திரமாக இருக்கும்போது, குடிமக்கள் தங்களுக்கு விருப்பமான இடங்களுக்குச் செல்வதன் வழியாக உண்மையான தேர்வைப் பயன்படுத்தலாம். "கால்களால் வாக்களிக்கும்" (Voting with one's feet) இந்தத் திறன் அரசாங்கங்களை ஒழுங்குபடுத்துகிறது; எதிர்வினை ஆற்றுவதற்குச் சிறப்பு வழிவகையை வழங்குகிறது; சந்தை போன்ற வழிமுறையாகச் செயல்படுகிறது. ஒரே மாதிரியான மைய வழங்கல் இந்த வழிமுறையை முற்றிலுமாக அடைத்துவிடுகிறது. குடிமக்கள் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை இழக்கிறார்கள். மேலும் அரசாங்கங்கள் போட்டியிடுவதற்கும் மேம்படுத்துவதற்கும் உள்ள ஊக்கத்தை இழக்கின்றன.

நோபல் பரிசு பெற்ற ஃப்ரீட்ரிக் ஆகஸ்ட் வான் ஹயக் (F.A. Hayek), 1945–இல் தான் எழுதிய '*சமூகத்தில் அறிவின் பயன்பாடு*' (*The Use of Knowledge in Society*)[15] என்கிற கட்டுரையில் "அறிவுச் சிக்கல்" (Knowledge Problem) என்ற கருத்தை விளக்கினார். பயனுள்ள முடிவெடுத்தல் என்பது "குறிப்பிட்ட கால, இடச் சூழ்நிலைகள் குறித்த அறிவை" சார்ந்துள்ளது; இந்த அறிவு பரவலாகச் சிதறிக் கிடக்கிறது. இதனைச் சிதைவு இல்லாமல் மைய அதிகாரத்திற்கு முழுமையாகக்

---

[14] Charles M Tiebout, 'A Pure Theory of Local Expenditures' (1956) 64 The Journal of Political Economy 416.

[15] FA Hayek, 'The Use of Knowledge in Society' (1945) 35 The American Economic Review 519.

கொண்டுசெல்ல முடியாது. இது கட்டமைப்பு அளவிலான தகவல் பற்றாக்குறையை ஏற்படுத்துகிறது. அதிகாரம் உச்சியில் குவிக்கப்பட்டு, எடுக்கப்படும் முடிவுகள் தவிர்க்க முடியாமல் உள்ளூர் நிலைமைகளிலிருந்து விலகி, அருவமான நிலையிலேயே எடுக்கப்படுகின்றன. துணை அமைப்புக் கொள்கை ஹயக்கின் இந்தக் கருத்துப்பிழிவு மக்களாட்சி வடிவமைப்புடன் இணைக்கிறது: அதிகாரத்தை அறிவுடனும், பொறுப்பைச் சூழலுடனும் இணைக்கிறது.

மேலாண்மை வாதம்: சார்லஸ் ஹேண்டி, *முரண்பாடுகளின் காலம்* (*The Age of Paradox* – 1994) என்ற நூலில், பெரிய நிறுவனங்களுக்குத் துணை அமைப்புக் கொள்கையை – அவரால் "தலைகீழ் அதிகாரப் பகிர்வு" (reverse delegation) என்று விவரிக்கப்பட்டதை – வெளிப்படையாகப் பயன்படுத்தினார். பணிக்கு மிக நெருக்கமாக இருப்பவர்களிடமிருந்து முடிவெடுக்கும் அதிகாரத்தை அகற்றுவது ஊழியர்களை மனச்சோர்வடையச் செய்கிறது; நிறுவனச் செயல்பாட்டைத் தாமதப்படுத்துகிறது; பொறுப்புடைமையை நலிவடையச் செய்கிறது என்று ஹேண்டி வாதிட்டார். சிக்கலான நிறுவனங்களில் செயல்திறன், அவரால் "கூட்டாட்சி" (Federal) கட்டமைப்புகள் என்று அழைக்கப்பட்டவற்றையே சார்ந்துள்ளது: தலைமையகம் மூலோபாயம், மதிப்புகள், மூலதன ஒதுக்கீடு ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும்; அதேவேளையில், செயல்பாட்டு அலகுகள் செயல்படுத்தல், அன்றாட முடிவுகள் ஆகியவற்றின் மீது சுயாட்சியைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தத் தெளிவு பீட்டர் டிரக்கரின் முந்தைய படைப்புகளான 'மேலாண்மைப் பயிற்சி' (*The Practice of Management* – 1954), 'மேலாண்மை: பணிகள், பொறுப்புகள், நடைமுறைகள்' (*Management: Tasks, Responsibilities, Practices* – 1974) ஆகியவற்றுடன் நெருக்கமாக ஒத்துப்போகிறது. டிரக்கர் "துணை அமைப்புக் கொள்கை" என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை; ஆனால் "முடிவுகளைச் செயல்பாடு நடைபெறும் இடத்திற்கு விட்டுவிட வேண்டும்" என்றும், "அவற்றின் இயல்புக்கு இணங்கக்கூடிய மிகக் குறைந்த மட்டத்தில்" அவை எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். டிரக்கரைப் பொறுத்தவரை, அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு சலுகை அன்று; அது பொறுப்புடைமை, செயல்திறன் ஆகியவற்றிற்கான ஒரு நிபந்தனை; மிதமிஞ்சிய மையக் கட்டுப்பாடு, நிறுவனச் செயல்பாட்டைச் சீர்குலைத்தது.

ஆளுகை வாதம்: நோபல் பரிசு பெற்ற எலினோர் ஆஸ்ட்ரோம் (Elinor Ostrom), "பொதுவானவற்றை ஆள்வது" (*Governing the Commons* – 1990), தனது நோபல் உரையான '*சந்தைகளுக்கும் அரசுகளுக்கும் அப்பால்*' (*Beyond Markets and States* – 2009) ஆகியவற்றில் துணை அமைப்புக்

கொள்கைக்கு தீர்க்கமான அனுபவச் சான்றை வழங்கினார். பல்மைய அமைப்புகள் (*polycentric systems*) – சுயாட்சி கொண்ட முடிவெடுக்கும் பல மையங்கள் என்று வகைப்படுத்தப்படுபவை – ஒற்றை மைய, மையப்படுத்தப்பட்ட அதிகாரத்துவங்களை விடத் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதை ஆஸ்ட்ரோம் மெய்ப்பித்தார். நாடுகள் முழுவதும் மீன்வளம், காடுகள், பாசன அமைப்புகளை ஆய்வு செய்த அவர், உள்ளூர்ச் சமூகங்கள் பெரும்பாலும் சிக்கலான வளங்களைத் தொலைதூர அதிகாரிகளை விட நன்கு நிர்வகிக்கின்றன என்பதைக் காட்டினார்; ஏனெனில் விதிகளை உருவாக்குவதற்கும், இணக்கத்தைக் கண்காணிப்பதற்கும், சமூக நம்பிக்கையைப் பேணுவதற்கும் அவசியமான சூழல் சார்ந்த, காலம் சார்ந்த அறிவை அவர்கள் கொண்டுள்ளனர். மையப்படுத்தப்பட்ட முகமைகளிடம் இந்தப் பண்புக்கூறுகள் இல்லை; அவை மீண்டும் மீண்டும் தோல்வியடைகின்றன. ஆஸ்ட்ரோமின் முடிவுகள் தெளிவான ஆளுகை விதியை நிறுவுகின்றன: செயல்திறன் என்பது அறிவு இருக்கும் இடத்தைச் சார்ந்து உள்ளது.

பன்னாட்டு அளவுகோல்கள்

முதிர்ந்த கூட்டாட்சி நாடுகள் இந்தக் கீழிருந்து மேல்நோக்கிய தர்க்கத்தை நிறுவனமயமாக்கியுள்ளன.

அமெரிக்காவில் "துணை அமைப்புக் கொள்கை" என்ற சொல் பயன்படுத்தப்படாவிட்டாலும், இக்கோட்பாடு பத்தாவது சட்டத் திருத்தத்தில் பொதியப்பட்டுள்ளது; இது "அரசமைப்புச் சட்டத்தால் வழங்கப்படாத" அனைத்து அதிகாரங்களையும் மாநிலங்களுக்கோ, மக்களுக்கோ ஒதுக்குகிறது. நீதித்துறை விளக்கம், செலவழிக்கும் அதிகாரம் ஆகியவற்றின் வழியாகக் கூட்டாட்சி அதிகாரம் விரிவடைந்திருந்தாலும், அரசமைப்புச் சட்ட அனுமானம் மாநிலத் திறன் சார்ந்ததாகவே உள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், ஐரோப்பிய ஒன்றிய உடன்பாட்டின் (1992) அரசமைப்புச் சட்டப் பிரிவு 5(3)–இல் துணை அமைப்புக் கொள்கை என்பதை வெளிப்படையாகப் பொறித்துள்ளது; உறுப்பு நாடுகளால் நோக்கங்களைப் போதுமான அளவு அடைய முடியாதபோது மட்டுமே ஒன்றிய நடவடிக்கையை அனுமதிக்கிறது. துணை அமைப்புக் கொள்கை இங்கே மையப்படுத்தலுக்கு எதிரான சட்டத் தடையாகச் செயல்படுகிறது.

சுவிட்சர்லாந்து, இக்கோட்பாட்டின் மிகத் தெளிவான அரசமைப்புச் சட்ட வடிவத்தை வெளிப்படுத்துகிறது. இறையாண்மை மண்டலங்களில் (*Cantons*) உருவாகிறது; சுவிஸ் அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 5a, "அரசுப் பணிகளின் ஒதுக்கீட்டையும் செயல்திறனையும்" துணை

அமைப்புக் கொள்கை நிர்வகிக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறது. கூட்டமைப்பு (*Confederation*) தனக்கு வெளிப்படையாக வழங்கப்பட்ட அதிகாரங்களை மட்டுமே கொண்டுள்ளது.

இந்த அமைப்புகள் அனைத்திலும், ஒருங்கிணைக்கும் அனுமானம் ஒரே மாதிரியானது: *உள்ளூர்த் திறன் உள்ளது என்று ஊகிக்கப்படுகிறது; மையத் தலையீடு நியாயப்படுத்தப்பட வேண்டும்.*

இந்தியாவின் மாறுபட்ட போக்கு

இந்திய அரசமைப்புச் சட்டம் துணை அமைப்புக் கொள்கையிலிருந்து கூர்மையாக விலகுகிறது. ஏழாவது அட்டவணை (Seventh Schedule) *மையத் திறன் என்ற அனுமானத்தின் அடிப்படையில் செயல்படுகிறது;* ஒன்றியப் பட்டியல், பொதுப்பட்டியல் ஆகியவற்றின் அசாதாரணமான விரிவு, நுணுக்கம் ஆகியவற்றிலும், இனம் 97–இன் கீழ் ஒன்றியத்திற்கு எஞ்சிய அதிகாரங்களை (*Residuary Powers*) ஒதுக்கியதிலும் இது பிரதிபலிக்கிறது. மாநிலப் பட்டியல் ஒப்பீட்டளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பிரிவினை, சுதேச ஒருங்கிணைப்பு, தொடக்கக் காலப் பிரிவினைவாத அச்சங்கள் ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட இந்த வடிவமைப்பு, உள்ளூர் ஆட்சி குறித்துத் திட்டமிட்டே ஐயுறுகிறது. 1935–ஆம் ஆண்டு *இந்திய அரசாங்கச் சட்டத்தின்* கீழ் மாகாணப் பட்டியலில் இருந்த அதிகாரங்களை ஒன்றிய அல்லது பொதுப்பட்டியலுக்கு மாற்றுவதை க. சந்தானம் அரசமைப்புச் சட்ட அவையில் கடுமையாக எதிர்த்தார்.

பல ஒதுக்கீடுகள் 'தேசிய முக்கியத்துவம்' என்ற நம்பகமான கருத்தமைவுக்கு எதிராக உள்ளன. குறிப்பிட்ட பல்கலைக்கழகங்கள், அருங்காட்சியகங்கள், பண்பாட்டு நிறுவனங்கள் (இனங்கள் 62, 63), துறைமுகத் தனிமைப்படுத்தல் மருத்துவமனைகள் (இனம் 28) போன்ற செயல்பாட்டுப் பொருண்மைகளையும் ஒன்றியப் பட்டியல் உள்ளடக்கியது. பொதுப்பட்டியல் நாடோடி வாழ்க்கை (இனம் 15), அறக்கட்டளைகள் (இனம் 28) வரை நீள்கிறது – இவை ஆழ்ந்த உள்ளூர் உணர்திறன் தேவைப்படும் அதிகாரங்கள். இத்தகைய அதிகார ஒதுக்கீடுகள் ஒன்றியத்தின் திறனைத் தடை செய்கின்றன; அதே வேளையில் உள்ளூர் ஆட்சியின் மீது மாநிலங்களுக்கு உள்ள தனிப்பட்ட அதிகாரத்தை மறுக்கின்றன.

சம அதிகாரம் (*concurrency*) இருக்கும் இடத்தில் கூட, அரசமைப்புச் சட்டப் பிரிவு 254(1)–ஆல் துணை அமைப்புக் கொள்கை சிதைக்கப்படுகிறது. மோதல் ஏற்பட்டால் ஒன்றியச் சட்டம் மாநிலச் சட்டத்தை விட மேலோங்குகிறது; நாடாளுமன்றம் வழக்கமாக விரிவாகச் சட்டங்களை இயற்றுகிறது; இது மாநிலப் புதுமைக்கு இடமளிக்காது

[எ.கா., இனம் 17A (காடுகள்)]. இதனால் பொதுப்பட்டியல் நடைமுறையில் ஒன்றியப் பட்டியலின் நீட்சியாக மாறுகிறது. உண்மையான துணை அமைப்புக் கொள்கை என்பது, ஒன்றியம் குறைந்தபட்சத் தரநிலைகளை மட்டுமே நிர்ணயிக்க வேண்டும்; அதே வேளையில் மாநிலங்கள் அவற்றைத் தாண்டிச் செல்லவோ, மாற்றியமைக்கவோ அனுமதிக்க வேண்டும்; மாறாக, விரிவான தேசியக் குறியீடுகள் பன்முகத்தன்மையையும் பரிசோதனையையும் தட்டையாக்குகின்றன.

அரசமைப்புச் சட்ட அலகுகள் மீதான நம்பிக்கையின்மை துறைகள் முழுவதிலும் தெளிவாகத் தெரிகிறது.

- *தொழில்துறைக் கொள்கை:* தொழில்மயமாக்கல் அடிப்படையில் நிலம், தொழிலாளர் சந்தைகள், தளவாடங்கள், மின்சாரம், உள்ளூர்ச் சூழலியல் ஆகியவற்றைச் சார்ந்துள்ளது – இவை மையமான மாநிலப் பொறுப்புகள். துணை அமைப்புக் கொள்கை தொழில்துறைக் கொள்கையை மாநிலங்களிடம் விட்டுவைத்திருக்கும்; இது மாநிலங்களுக்கு இடையிலான போட்டி, தொழிற்பேட்டை அமைத்தல், வட்டாரச் சிறப்புத் திறன் மேம்பாடு ஆகியவற்றை ஊக்குவிக்கும். மாறாக, ஒன்றியப் பட்டியலின் இனம் 52 "பொது நலனுக்காக" எந்தவொரு தொழில்துறையின் மீதும் நாடாளுமன்றம் கட்டுப்பாட்டை ஏற்க அனுமதிக்கிறது. குடியரசின் தொடக்கக் கால ஆண்டுகளில், *தொழில்கள் (மேம்பாடும் ஒழுங்குமுறையும்) சட்டம்,* 1951 (*Industries (Development and Regulation) Act, 1951*) வழியாக, ஒன்றியம் கிட்டத்தட்ட அனைத்து முக்கியமான தொழில்களின் மீதும் கட்டுப்பாட்டை மையப்படுத்தியது.

- *துறைமுகங்கள்:* துறைமுகங்கள் இயல்பாகவே உள்ளூர் புவியியல் சொத்துக்கள்; அவற்றின் செயல்திறன் நகர உள்கட்டமைப்பு, தொழிலாளர் உறவுகள், உள்நாட்டு இணைப்பு, மாநில அளவிலான ஒருங்கிணைப்பு ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. ஹாம்பர்க் துறைமுகம் ஹாம்பர்க் நகர அரசால் நிர்வகிக்கப்படுகிறது. உலகின் பரபரப்பான துறைமுகங்களில் ஒன்றான ஷாங்காய் துறைமுகம், ஷாங்காய் நகராட்சி அரசாங்கம் பெரும்பான்மைப் பங்கை வைத்துள்ள நிறுவனத்தால் இயக்கப்படுகிறது. நியூயார்க், நியூ ஜெர்சி, லாஸ் ஏஞ்சல்ஸ் துறைமுகங்கள் உள்ளூர்/வட்டாரத் துறைமுக அதிகார வாரியங்களால் நடத்தப்படுகின்றன. ஆனால் இந்தியா ஒரு விலக்காக உள்ளது. பெரிய துறைமுகங்கள் (இப்போது 12) ஒன்றியப் பட்டியலில் (இனம் 27) வைக்கப்பட்டுள்ளன; அதே

நேரத்தில் சிறு துறைமுகங்கள் (200க்கும் மேற்பட்டவை, அவற்றில் பெரும்பாலானவை மீன்பிடித் துறைமுகங்கள்) பொதுப்பட்டியலில் (இனம் 31) வைக்கப்பட்டிருப்பதன் வழியாக மாநிலங்களுக்குத் தனிப்பட்ட கட்டுப்பாடு மறுக்கப்படுகிறது.

- *மீன்வளம்:* "மீன்வளம்" மாநிலப் பட்டியலில் (இனம் 21) உள்ளது. ஆனால் "வட்டாரக் கடல் எல்லைக்கு அப்பால் மீன்பிடித்தலும் மீன்வளமும்" ஒன்றியப் பட்டியலில் (இனம் 57) உள்ளது. கடலில் உள்ள இந்தச் செயற்கை எல்லைகளைப் பற்றி மீன்களுக்கோ, மீனவர்களுக்கோ தெரியாது!

- *மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம்:* இது மாநிலப் பட்டியலின் இனம் 41 ஆகும். இதன் தலைவர், பிற உறுப்பினர்கள் அரசமைப்புச் சட்டப் பிரிவு 316–இன் கீழ் மாநில ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்கள்; ஆனால் அவர்கள் அரசமைப்புச் சட்டப் பிரிவு 317(1)–இன் கீழ் குடியரசுத் தலைவரால் மட்டுமே பணியிலிருந்து நீக்கப்பட முடியும். இது "நியமிக்கும் அதிகாரியே நீக்கும் அதிகாரியாகவும் இருக்க வேண்டும்" என்ற அடிப்படை நிர்வாகச் சட்டக் கோட்பாட்டை மீறுகிறது; மாநிலப் பட்டியல் இனத்தில் ஒன்றியம் தடுப்பதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்கிறது.

குடிமக்களின் கண்ணோட்டம்

குடிமக்களின் பார்வையில், துணை அமைப்புக் கொள்கை இல்லாமை என்பது அன்றாட ஆளுகையின் தோல்வி ஆகும்.

உள்ளூர் சிக்கல்களுக்கு உள்ளூர் அறிவு தேவை. ஒரு கிராமத்துக்குளம் தூர்வாரப்பட வேண்டுமா அல்லது குப்பைகள் சேகரிக்கப்படவில்லையா என்பது குடிமகன் ஒருவனுக்குத் தெரியும். தொலைதூர ஒன்றிய அரசாங்கத்தால் இதை அறிய முடியாது. துணை அமைப்புக் கொள்கை, சிக்கலைத் தீர்க்கத் தேவையான "உள்ளூர் அறிவை" முடிவெடுப்பவர் கொண்டிருப்பதை உறுதி செய்கிறது.

ஒன்றியம் உள்ளூர் விளைவுகளுக்குப் பொறுப்பேற்கும்போது (எ.கா., ஒன்றிய நிதிஅளிப்புத் திட்டங்கள் வழியாகக் கிராமப்புறக் கழிப்பறைகள் கட்டுவது போன்றவை), பொறுப்புடைமை மங்கலாகிறது. உடைந்த உள்ளூர் வடிகாலுக்காகக் குடிமக்களால் பிரதமரைப் பதவி நீக்கம் செய்ய வாக்களிக்க முடியாது; ஆனால் அவர்கள் ஒரு வார்டு உறுப்பினரை வாக்களித்து நீக்க முடியும். துணை அமைப்புக் கொள்கை "பொறுப்புடைமையின் சங்கிலியை" தெளிவுபடுத்துகிறது.

'அமெரிக்காவில் மக்களாட்சி' என்ற நூலில் அலெக்சிஸ் டி டோக்வில்

குறிப்பிட்டது போல், நகராட்சி நிறுவனங்கள் சுதந்திரமான நாடுகளின் வலிமையை உருவாக்குகின்றன. துணை அமைப்புக் கொள்கை இல்லாமல், ஒரு தேசத்தில் சுதந்திரமான அரசாங்கம் இருக்கலாம்; ஆனால் அதில் சுதந்திரத்தின் ஆன்மா இருக்காது. "ஒரே நாடு, ஒரே ஆட்சி" என்ற ஒரே மாதிரியாக்கும் தூண்டுதலை எதிர்த்து, சமூகங்கள் மாறுபட்டிருப்பதற்கான சுதந்திரத்தைத் துணை அமைப்புக் கொள்கை மதிக்கிறது.

இந்தியாவுக்குத் துணை அமைப்புக் கொள்கையில் வேரூன்றிய அரசமைப்புச் சட்ட மறுமலர்ச்சி தேவை. அதிகாரத்தின் பிரமிட்டைத் தலைகீழாக மாற்றி, குடிமக்களை – இறுதி இறையாண்மை கொண்டவர்களை – அவர்கள் இருக்க வேண்டிய உச்சியில் வைப்பதன் வழியாக மட்டுமே இது சாத்தியம் ஆகும்.

V. மீள்திறன் சார்ந்த வாதம்: அழுத்தத்தின் போது மையப்படுத்தப்பட்ட அமைப்புகள் ஏன் தோல்வியடைகின்றன

மிதமிஞ்சிய அதிகாரக் குவிப்பிற்கு எதிரான மிக வலுவான வாதம் அரசியல் தத்துவத்திலிருந்து வரவில்லை; நவீன அமைப்பு முறைக் கோட்பாட்டிலிருந்து வருகிறது. மிகவும் மையப்படுத்தப்பட்ட ஒரு தேச–அரசு "ஒற்றை மையக் கட்டமைப்பை" பிரதிபலிக்கிறது. இது அனைத்து முனைகளும் ஒரே மையக் குவியத்துடன் இணைக்கப்படும் வலைப்பின்னல். இத்தகைய அமைப்புகள் நிலையான சூழலில் திறமையாக இருக்கலாம்; ஆனால் அவை ஒரு அபாயகரமான வடிவமைப்புப் பிழையைக் கொண்டுள்ளன: அவை "தோல்விக்கான ஒற்றை மைய" (**Single–point–of–failure**) அபாயத்தைக் கொண்டுள்ளன. பிழை, திறமையின்மை, ஊழல், வெளிப்புறத் தாக்குதல் அல்லது தகவல் சுமை ஆகியவற்றால் மையம் செயலிழந்தால், முழு அமைப்பும் வீழ்ந்துவிடும்.

இதற்கு மாறாக, கூட்டாட்சி அமைப்பு "பரவலாக்கப்பட்ட வலைப்பின்னலாக" (Distributed Network) செயல்படுகிறது. கட்டமைப்பிற்கு உள்ளாகவே அதிகாரம் பல முனைகளில் பரவலாக்கப்படுகிறது; தோல்விகள் உள்ளூர் அளவிலானவையாக ஆக்கப்படுகின்றன; மாற்று ஏற்பாடுகள் உருவாக்கப்படுகிறன. ஒற்றை மைய அமைப்பை முடக்கக்கூடிய அதிர்ச்சிகளை உறிஞ்சலாம்;

கட்டுப்படுத்தலாம்; சுற்றித் திருப்பலாம். எனவே, கூட்டாட்சி தத்துவம் வட்டார உணர்விற்கான சலுகை அன்று; அது தேசிய உயிர்வாழ்விற்கான கட்டமைப்புத் தேவை – எல்லா முட்டைகளையும் ஒரே கூடையில் வைக்கக்கூடாது என்ற பழைய பழமொழிக்கு இணையான அமைப்பு முறை.

பாரனின் மீன்வலையும் பரவலாக்கப்பட்ட வடிவமைப்பும்

இந்தக் கருத்தின் அறிவார்ந்த மரபுவழி பனிப்போரின் போது அணுசக்திப் பதற்றம் உச்சத்தில் இருந்தபோது தொடங்கியது. அமெரிக்காவின் கட்டளை, கட்டுப்பாட்டுத் தகவல் தொடர்பு அமைப்பு மிகவும் மையப்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, அமெரிக்கா கடுமையான பாதிப்பு ஏற்படும் சூழலை எதிர்கொண்டது. வாஷிங்டன் டி.சி.க்கு எதிராக தலைதுண்டிக்கும் தாக்குதல் (Decapitation Strike) நடத்தப்பட்டால், முழு அமைப்பும் பார்வையிழந்து முடங்கிவிடும்.

ரேண்ட் (RAND) கார்ப்பரேஷனின் பொறியாளரான பால் பாரன் (Paul Baran), அத்தகைய தாக்குதலிலிருந்து தப்பிக்கக்கூடிய தகவல் தொடர்பு வலைப்பின்னலை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டார். 1964–ஆம் ஆண்டு தனது முக்கிய ஆய்வுக் கட்டுரையான *பரவலாக்கப்பட்ட தகவல்தொடர்புகள் (On Distributed Communications)* என்பதில், பாரன் மையப்படுத்தப்பட்ட "ஒற்றை மைய வலைப்பின்னலை" நிராகரித்தார். அதற்குப் பதிலாக, அவர் ஒரு "பரவலாக்கப்பட்ட வலைப்பின்னலை" (Distributed Mesh) முன்மொழிந்தார். ஒவ்வொரு முனையும் பலவற்றுடன் இணைக்கப்பட்டிருக்கும், எந்த ஒரு முனையும் இன்றியமையாததாக இல்லாத மீன்வலை போன்ற அமைப்பு. ஒரு நகரம் அழிக்கப்பட்டால், தரவு மற்ற முனைகள் வழியாகச் சேதத்தைச் சுற்றிப் பயணிக்கும்.[16]

பரவலாக்கப்பட்ட அமைப்புகள் அதிக மீள்திறன் கொண்டவை என்ற பாரனின் நோக்கு, ARPANET(Advanced Research Projects Agency Network)–இன் அமைப்புநிலை வரைபடமாக மாறியது; இது இறுதியில் இணையமாக (Internet) உருவானது. இணையம் இன்று உயிர்வாழ்கிறது என்றால், அதற்குக் காரணம் இணையத்திற்கு ஒரு வலுவான மையம் இருப்பது அல்ல; இன்னும் துல்லியமாக அதற்கு மையம் எதுவும் இல்லை என்பதே காரணம். இது பகிரப்பட்ட நெறிமுறைகளால் நிர்வகிக்கப்படும் சுயாட்சி வலைப்பின்னல்களின் கூட்டமைப்பு.

---

[16] Paul Baran, 'On Distributed Communications' (*RAND* 1946) accessed February 7, 2026.

தொற்றுநோய்கள், இணைய அச்சுறுத்தல்கள், பொருளாதார அதிர்ச்சிகள் அல்லது சுற்றுச்சூழல் பேரழிவுகள் ஆகியவற்றுக்கு ஆளாகக்கூடிய இந்தியா போன்ற கண்டம் போன்ற அரசியல் அமைப்பு, இந்த நோக்கு வழியாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும்: 21–ஆம் நூற்றாண்டில் உயிர்வாழ்வதற்குப் பாரனின் மீன்வலை தேவை; 1964க்கு முந்தைய தொலைபேசி பரிமாற்ற ஒற்றை மையம் அன்று.

இறுக்கமாக இணைக்கப்பட்ட அமைப்புகளும் தொடர் தோல்வியும்

'இயல்பான விபத்துகள்' (Normal Accidents)[17] என்ற நூலில், சமூகவியலாளர் சார்லஸ் பெரோ (Charles Perrow), தாமதம், விருப்பம் அல்லது திருத்தம் ஆகியவற்றிற்குச் சிறிதளவு இடமில்லாமல் பகுதி அளவிலான கூறுகள் இறுக்கமாக இணைக்கப்பட்டுள்ள அமைப்புகளின் (tightly coupled systems) தோல்விகள் விலகிய போக்குகள் அல்ல; தவிர்க்க முடியாதவை என்று காட்டினார். சிறிய பிழைகளைத் தனிமைப்படுத்த முடியாது; அவை வேகமாகப் பரவி, தொடர் தோல்விகளை (Cascading failures) உருவாக்குகின்றன.

மையப்படுத்தப்பட்ட தேச–அரசு இந்தக் கட்டமைப்பைப் பிரதிபலிக்கிறது. அதிகாரம், வளங்கள், கொள்கை முடிவுகள் ஒரு புள்ளியில் குவிக்கப்படும்போது, ஒரு சிறிய இடையூறு கூட – தாமதமான நிதி வெளியீடு, குறைபாடுள்ள உத்தரவு அல்லது தரவுப் பிழை – அமைப்பு முழுவதும் வேகமாகப் பரவுகிறது. ஒரு வழக்கமான நிர்வாகத் தவறு, திட்டங்களை நிறுத்திவிடலாம்; வாழ்வாதாரங்களைச் சீர்குலைக்கலாம்; அல்லது பல வட்டாரங்களில் ஒரே நேரத்தில் அமைதியின்மையைத் தூண்டலாம். இவ்வாறு மிதமிஞ்சிய மையப்படுத்தல் தாங்கிகளை (buffers), உள்ளூர் மீள்திறனை நீக்குகிறது; மையத்தின் ஒவ்வொரு தோல்வியையும் தேசிய அபாயமாக மாற்றுகிறது.

அதிகாரப் பரவலாக்கம் இந்த இணைப்பைத் தளர்த்துகிறது. இது பிழைகளை வரையறுக்கப்பட்ட அதிகார வரம்புகளுக்குள் கட்டுப்படுத்துவதன் வழியாக ஒரு 'சுற்றுத் துண்டிப்பானாக' (circuit breaker) செயல்படுகிறது. ஒரு தேச உறுப்பு அலகு குறைபாடுள்ள கொள்கையைப் பின்பற்றினால், சேதம் அமைப்பு முழுவதும் இல்லாமல் உள்ளூர் அளவில் மட்டுமே இருக்கும். ஆபத்தைத் தனித்தனியாகப் பிரிக்கும் இந்த அமைப்பு பொறியியல், நிதி, ஆட்சி ஆகியவற்றில்

---

[17] Charles Perrow, *Normal Accidents: Living with High–Risk Technologies* (Princeton University Press, 1984; revised 1999)

மீள்திறன் கொண்ட அமைப்புகளை வரையறுக்கும் பண்புக்கூறு ஆகும். எளிமையாகச் சொன்னால்:

- இறுக்கமான இணைப்பு (மிதமிஞ்சிய அதிகாரக் குவிப்பு): உள்ளூர் தோல்விகள் தேசிய நெருக்கடிகளாகத் தீவிரமடைகின்றன.
- தளர்வான இணைப்பு (அதிகாரப் பரவலாக்கம்): தோல்விகள் உள்ளூர் அளவிலும் நிர்வகிக்கக்கூடியதாகவும் உள்ளன.

இராணுவக் கோட்பாடும் குடிசார் ஆளுகையும்

இந்த தர்க்கம் பிரஷ்ய இராணுவக் கோட்பாடான 'நோக்கக் கட்டளை' (Auftragstaktik – Mission Command) என்பதைப் பிரதிபலிக்கிறது. "போரின் மூடுபனி" (Fog of War) மைய நுண்மேலாண்மையைச் சாத்தியமற்றது ஆக்குகிறது என்ற உணர்தலிலிருந்து பிறந்த பிரஷ்ய இராணுவம், விரிவான உத்தரவுகளிலிருந்து "தளபதியின் நோக்கம்" (Commander's Intent) என்பதற்குப் பார்வையை மாற்றியது. பரந்த குறிக்கோளை அடைய உள்ளூர் நிலைமைகளின் அடிப்படையில் மேம்படுத்தவும், விருப்பத்தைப் பயன்படுத்தவும் இளைய அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இந்தக் கட்டமைப்பு "தோல்விக்கான ஒற்றை மைய" அபாயத்தை நீக்குகிறது. மூத்த கட்டளை துண்டிக்கப்பட்டாலும் அல்லது தவறாக இருந்தாலும், பரவலாக்கப்பட்ட அலகுகள் தொடர்ந்து போராடித் திறம்பட மாற்றியமைக்கின்றன; ஏனெனில் அவை உத்தரவை மட்டுமல்ல, நோக்கத்தையும் புரிந்துகொள்கின்றன. நவீன ஆயுதப்படைகளுக்கு இந்தக் கோட்பாடு தங்கத் தரநிலையாக உள்ளது.

குடிசார் ஆளுகை இதேபோன்ற சிக்கலான நிலப்பரப்பில் செயல்படுகிறது. ஒரு சண்டையில் ஒவ்வொரு படைப்பிரிவையும் ஒரு ஜெனரலால் இயக்க முடியாதது போலவே, வெள்ள மண்டலத்தில் உள்ள ஒரு மாவட்ட ஆட்சியரை புதுதில்லியில் உள்ள பிரதம மந்திரியால் நுண்மேலாண்மை செய்ய முடியாது. 'நோக்கக் கட்டளை' போலவே, அதிகாரப் பரவலாக்கம் – மையம் அதிகமாகச் சுமை ஏற்றப்படும்போதோ அல்லது கணநேரம் செயலிழக்கும்போதோ கூட – அமைப்பு செயல்படுவதை உறுதி செய்கிறது.

மீள்திறன் என்பதிலிருந்து நொறுங்கிப் போகாது மென்மேலும் வலுபெறுதல் என்னும் நிலைக்கு மாறுதல்

நாசிம் நிக்கோலஸ் தலேப் (Nassim Nicholas Taleb) இந்த வாதத்தை "நொறுங்கிப்போகாமை" (antifragility) என்ற தனது கருத்துருவின்

வழியாக மேலும் கூர்மைப்படுத்தினார்; இதைத் தனது *'நொறுங்கிப்போகாமை: ஒழுங்கின்மையிலிருந்து ஆதாயம் பெறுபவை' (Antifragile: Things That Gain from Disorder – 2012)*[18] என்ற நூலில் விளக்கினார். மீள்திறன் கொண்ட அமைப்புகள் அதிர்ச்சிகளைத் தாங்கிச் சமநிலைக்குத் திரும்புகின்றன; நொறுங்கா அமைப்புகள் மன அழுத்தம், நிலையற்ற தன்மை, ஒழுங்கின்மை காரணமாக மேம்படுகின்றன.

மையப்படுத்தப்பட்ட அமைப்புகள் இயல்பாகவே பலவீனமானவை (Fragile) என்று தலேப் வாதிடுகிறார்; ஏனெனில் அவை கட்டுப்பாடு, ஒரே தன்மையின் பெயரால் மாறுபாட்டை அடக்குகின்றன. சிறிய தோல்விகளை, உள்ளூர்ச் சோதனைகளை நீக்குவதன் வழியாக, அவை "மறைக்கப்பட்ட அபாயங்களைக்" (hidden risks) குவிக்கின்றன; அவை இறுதியில் மன அழுத்தம் பெரும்சுமை ஆகும்போது பேரழிவுத் தோல்விகளாக வெளிப்படுகின்றன. வெளிப்படையான நிலைத்தன்மை கட்டமைப்பு அளவிலான பாதிப்பு ஏற்படும் தன்மையை மறைக்கிறது.

இதற்கு மாறாக, கூட்டாட்சி அமைப்புகள் நொறுங்காமைக்கு அருகில் உள்ளன. அவை தேச உறுப்பு அலகுகளில் மாறுபாடுகளை அனுமதிக்கின்றன; தோல்வியை உள்ளூர் அளவிலானதாக ஆக்குகின்றன; மன அழுத்தத்தைக் கற்றலாக மாற்றுகின்றன. கொள்கைப் பிழைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன; வெற்றிகரமான புதுமைகள் பரவுகின்றன; அமைப்பு காலப்போக்கில் மாற்றியமைக்கப்படுகிறது. நொறுங்கா ஆளுகைக்குச் சுவிஸ் மண்டல (Cantonal) அமைப்பு போன்ற பரவலாக்கப்பட்ட அரசியல் அமைப்புகளைத் தலேப் அடிக்கடி மேற்கோள் காட்டினார்.

இந்தியாவிலிருந்து அனுபவச் சான்றுகள்

அதிகாரக் குவிப்பு எவ்வாறு அபாயத்தைக் குவிக்கிறது என்பதை இந்தியாவின் சொந்த அனுபவம் மீண்டும் மீண்டும் விளக்குகிறது.

- *எரிசக்தி வலைப்பின்னல்:* இறுக்கமாக இணைக்கப்பட்ட, மையப்படுத்தப்பட்ட மின்னிணைப்பின் பலவீனத்தை 2012 ஜூலை இருளில் முழ்கியது வெளிச்சமிட்டுக் காட்டியது. ஆக்ரா அருகே ஏற்பட்ட ஒரு தோல்வி வடக்கு, கிழக்கு, வடகிழக்கு மின்னிணைப்புகளில் பரவி, 70 கோடிக்கும் அதிகமான மக்களை இருளில் மூழ்கடித்தது. இரயில் சேவைகள் நின்றுபோயின; சுரங்கத் தொழிலாளர்கள் மாட்டிக்கொண்டனர்;

[18] Nissim Nicholas Taleb, *Antifragile: Things that Gain from Disorder* (Random House Inc 2012).

மருத்துவமனைகள் அவசரநிலை மின்சாரத்தில் இயங்கின. பரவலாக்கப்பட்ட எரிசக்தி அமைப்புகள் – நுண்ணினைப்புகள் (microgrids), முக்கிய வலையமைப்பிலிருந்து தங்களைத் 'தனிமைப்படுத்திக்கொள்ளும்' திறன் கொண்ட புதுப்பிக்கத்தக்க ஆதாரங்கள் – மாறுபட்ட மாதிரியை வழங்குகின்றன. அவை மையச் செயல்திறனில் சிறிய இழப்பீட்டைக் கொடுத்து, அமைப்புசார் மீள்திறனில் பெரிய இலாபத்தைப் பெறுகின்றன.

- *மையப்படுத்தப்பட்ட தேர்வுகள்:* 2018 முதல், தேசியத் தேர்வு முகமை (*National Testing Agency,* NTA) பல உயர்–அழுத்தத் தேர்வுகளை – NEET (UG)[19], JEE (Main)[20], CUET–UG[21], UGC–NET[22], CSIR–NET[23] – மையப்படுத்தியுள்ளது; இவை முன்பு தனித்தனி முகமைகளால் நடத்தப்பட்டன. 2024–இல், பல மாநிலங்களில் உறுதிப்படுத்தப்பட்ட வினாத்தாள் கசிவுகளால் NEET–UG தேர்வு நடத்துவது தோல்வியடைந்தது; மீறலைத் தொடர்ந்து UGC–NET தேர்வு இரத்து செய்யப்பட்டது; CUET முடிவுகள் தொடர்ச்சியான தாமதங்களைச் சந்தித்தன. *கல்விக்கான நாடாளுமன்ற நிலைக்குழு* (371வது அறிக்கை, 2025), தேசியத் தேர்வு முகமை நடத்திய பதினான்கு தேர்வுகளில் குறைந்தது ஐந்தில் கடுமையான குறைபாடுகள் இருந்தன என்று முடிவு செய்தது. பல பொறுப்புள்ள முகமைகளைக் கொண்ட பரவலாக்கப்பட்டத் தேர்வுச் சூழல், தோல்விகளைத் தேசிய அளவில் பெருக்குவதற்குப் பதிலாக உள்ளூர் அளவில் மட்டுப்படுத்தியிருக்கும்.
- *டிஜிட்டல் ஒற்றைக்கலாச்சாரம்:* சரக்கு மற்றும் சேவை வரி வலைப்பின்னல் (Goods and Services Tax Network, GSTN) ஒரு ஒற்றைப்படையான டிஜிட்டல் முதுகெலும்பின் அபாயங்களை எடுத்துக்காட்டுகிறது. போர்டல் செயலிழக்கும்போது – அது மீண்டும் மீண்டும் நிகழ்ந்துள்ளது – நாடு முழுவதும் சேவை நிலைகுலைந்து போய்விடுகிறது. உள்ளூர்த் தொழில்கள், வணிக முறைகளுக்கு ஏற்றவாறு பகுப்பாய்வுகள் அல்லது இடைமுகங்களை உருவாக்க மாநிலங்களால் முடிவதில்லை.

---

[19] National Eligibility cum–Entrance Test (Under–Graduate).

[20] Joint Entrance Examination.

[21] Common University Entrance Test.

[22] University Grant Commission–National Eligibility Test.

[23] Council of Scientific and Industrial Research–National Eligibility Test.

ஒரு பொதுவான தேசிய மையமும் (common national core), பரவலாக்கப்பட்ட மாநில அளவிலான முன்முனைகளும் (Front–ends) கொண்ட கூட்டாட்சி டிஜிட்டல் கட்டமைப்பு, தொழில்நுட்பத் தோல்விகளைக் கட்டுப்படுத்தும்; நடைமுறையாக்கத் திறனை மேம்படுத்தும்.

எனவே, "மீள்திறன் வாதம்" நம்மை மற்றொரு சிந்தனை முடிவுக்கு இட்டுச் செல்கிறது: *ஒரு வலுவான மையம் ஒரு பலவீனமான தேசத்தை தோற்றுவிக்கலாம்.* கண்ட அளவிலான, திகைப்பூட்டும் பன்முகத்தன்மை கொண்ட இந்தியா, "ஒற்றைமைய வலைப்பின்னலாக" நடத்தப்பட முடியாத அளவுக்குச் சிக்கலானது. அது "பரவலாக்கப்பட்ட வலைப்பின்னலாக" இருக்க வேண்டும் – நிதி, நிர்வாக, முடிவெடுக்கும் திறன் கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட முனைகளாக மாநிலங்கள் இருக்க வேண்டும். இந்த நோக்கில் கூட்டாட்சி என்பது ஒரு காப்பீட்டுக் கொள்கை. ஒரு முனை தோல்வியுற்றால், அமைப்பு வீழ்ந்துவிடாது என்பதையும்; ஒரு அதிகாரம் தடுமாறினால், மற்றவை தொடர்ந்து செயல்படும் என்பதையும் உறுதிசெய்கிறது.

VI. புத்தாக்கம் சார்ந்த வாதம்: அதிகாரப் பரவலாக்கம் ஏன் பரிசோதனை முயற்சிகளை ஊக்குவிக்கிறது

இந்தியா போன்ற பரந்துபட்ட, பன்முகத்தன்மை கொண்ட ஒரு கூட்டாட்சி நாட்டில், ஒவ்வொரு வட்டாரத்தின் சூழலியல், தொழிலாளர் சந்தை, மொழிச் சமூகம் அல்லது தொழிற்பேட்டைகளுக்கும் பொருந்தக்கூடிய துல்லியமான கொள்கைகளை, ஒன்றிய அரசால் மட்டுமே வகுத்துவிட முடியாது. "*ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளை*" (parallel experimentation) அனுமதிப்பதன் மூலம் கூட்டாட்சி தத்துவம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்கிறது: மாநிலங்களால் கொள்கைகளை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் பரிசோதித்துப் பார்க்கவும், தோல்விகள் ஏற்பட்டால் அப்பாதிப்பை அங்கேயே கட்டுப்படுத்தவும், வெற்றிகரமான மாதிரிகளை மற்ற மாநிலங்களுக்குக் கிடைமட்டமாகப் (horizontally) பரவலாக்கவும் அல்லது தேசிய அளவில் விரிவுபடுத்தவும் முடியும். இந்தியாவைப் பொறுத்தவரை, மாநிலங்களைப் "பரிசோதனைக் கூடங்களாகக்" கருதுவது என்பது வெறும் உவமை அல்ல; அது நிர்வாகத்தின் ஒரு கட்டமைப்பு ரீதியானத் தேவை.

பரவலாக்கப்பட்ட பரிசோதனை முயற்சிகளின் தர்க்கத்தை, அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி லூயிஸ் டி. பிராண்டைஸ் (Louis D. Brandeis), 'நியூ ஸ்டேட் ஐஸ் கோ. எதிர் லீப்மேன்' (New State Ice Co. v. Liebmann, 1932)[24] என்ற வழக்கில் வழங்கிய தனது புகழ்பெற்ற மாறுபட்ட தீர்ப்பில் (dissent) மிகத் தெளிவாக முன்வைத்துள்ளார். பிராண்டைஸ் இவ்வாறு குறிப்பிட்டார்: "கூட்டாட்சி அமைப்பின் சிறப்பம்சங்களில் ஒன்று என்னவென்றால், ஒரு துணிச்சலான மாநிலம் விரும்பினால், நாட்டின் பிற பகுதிகளுக்கு எவ்வித இடரும் இன்றி, ஒரு பரிசோதனைக் கூடத்தைப் போலச் செயல்பட்டு, புதுமையான சமூக மற்றும் பொருளாதாரப் பரிசோதனைகளை முயன்று பார்க்க முடியும்." இந்த முன்னெடுப்பு ஒரு நிறுவன ரீதியான படிப்பினையைத் தருகிறது: பரிசோதனையானது உள்ளூர் அளவில் இருக்கும்போது பாதுகாப்பானதாகவும், பல்வேறு அலகுகள் ஒரே நேரத்தில் வெவ்வேறு தீர்வுகளை முயன்று பார்க்கும்போது கற்றல் விரைவானதாகவும் அமைகிறது.

நவீன பொருளாதாரப் புவியியலும், மேலாண்மைக் கோட்பாடும் (management theory), இக்கருத்திற்கான செயல்பாட்டு ரீதியான அடித்தளங்களை வழங்குகின்றன.

1. பால் க்ரூக்மேன் மற்றும் புதிய பொருளாதாரப் புவியியல்

நோபல் பரிசு பெற்ற பால் குரூக்மேன் (Paul Krugman), 'புவியியல் மற்றும் வர்த்தகம்' (Geography and Trade, 1991)[25] என்ற நூலில், பொருளாதாரச் செயல்பாடு என்பது ரொட்டியின் மீது தடவப்பட்ட வெண்ணெயைப் போலச் சமமாகப் பரவியிருப்பதில்லை என்றும், மாறாக அது குறிப்பிட்ட தொகுப்புகளாகக் (clusters) குவிந்துள்ளது என்றும் விளக்கினார். ஒரு வட்டாரமானது, திறன்கள், நிறுவனங்கள் மற்றும் உள்கட்டமைப்பு போன்றதொரு அனுகூலத்தைப் பெற்றுவிட்டால், அதனால் 'அதிகரிக்கும் பலன்களும்' (increasing returns) இந்த 'வலைப்பின்னல்களால் ஏற்படும் விளைவுகளும்' (network effects) மேற்படி அதிகமான செயல்பாடுகளை அப்பகுதிக்கு ஈர்க்கின்றன. செழுமையான தொழிலாளர் சந்தைகள், பணியமர்த்தல் சார்ந்த இடர்களைக் குறைக்கின்றன; அருகில் இருப்பது பரிவர்த்தனைச் செலவுகளைக் குறைக்கின்றது; மறைமுக அறிவு (tacit knowledge) இயல்பாகவே கசிந்து பரவுகிறது. இவை அனைத்தும் ஒன்றிணைந்து, வளர்ச்சியைத் தானாகவே முன்னெடுக்கும் ஒரு சுய–வலுவூட்டல் சுழற்சியை (self–reinforcing cycle) உருவாக்குகின்றன. நாடு

---

[24] 285 U.S. 262 (1932).

[25] Paul Krugman, *Geography and Trade* (The MIT Press 1991).

முழுவதும் கட்டாயமான, ஒரே மாதிரியான தொழில்மயமாக்கலை ஏற்படுத்த வேண்டும் என்ற மையத் திட்டமிடுபவரின் கனவை இக்கோட்பாடு தகர்த்தெறிகிறது. தேசிய வளர்ச்சி என்பது உண்மையில் தனித்துவமான பல பிராந்திய வளர்ச்சிக் கதைகளின் கூட்டுத்தொகையே ஆகும் என்று இக்கோட்பாடு சுட்டிக்காட்டுகிறது. எனவே, ஒரே மாதிரியான தேசிய வார்ப்புருவைத் (flat national template) திணிப்பதற்குப் பதிலாக, ஒவ்வொரு வட்டாரமும் அதனதற்கே உரிய தொகுப்பு சார்ந்த வலிமைகளை (agglomeration strengths) முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள கொள்கைகள் அனுமதிக்க வேண்டும்.

2. மைக்கேல் போர்ட்டர் மற்றும் தொழில் தொகுப்புக் கோட்பாடு (Cluster Theory)

'*தி காம்பட்டிடிவ் அட்வான்டேஜ் ஆஃப் நேஷன்ஸ்*' *(The Competitive Advantage of Nations – 1990)*[26] என்ற தனது நூலில், சந்தையில் போட்டியிடும் அனுகூலம் (competitive advantage) என்பது நாடுகளிடம் இல்லை, அது வட்டாரங்களிடமே குடிகொண்டுள்ளது என்று மேலாண்மைத் தத்துவார்த்தவாதி மைக்கேல் போர்ட்டர் (Michael Porter) வாதிட்டார். சிலிக்கான் பள்ளத்தாக்கு அல்லது இத்தாலியத் தோல் தொழில் வட்டாரங்கள் – போன்றதொரு "தொகுப்பு" (cluster), போட்டியாளர்கள், வழங்குநர்கள் (suppliers), நிறுவனங்கள் மற்றும் உயர் எதிர்பார்ப்புகளைக் கொண்ட வாடிக்கையாளர்கள் ஆகியோர் அருகில் இருப்பதனால் வெற்றி பெறுகிறது. இவை இவ்வாறு அருகில் இருப்பதனால், புத்தாக்கத்திற்கான ஒரு 'உயர் அழுத்தக் களத்தை' உருவாக்குகிறது. போர்ட்டரைப் பொறுத்தவரை, தலைநகரத்திலிருந்து கொண்டு தொழில்களை நிர்வகிப்பது அரசின் வேலையல்ல; மாறாக, அந்தந்தத் தொழில் தொகுப்புகள் செழித்தோங்கத் தேவையான சிறப்பு உள்கட்டமைப்புகளையும், விதிமுறைகளையும் உருவாக்கிக் கொள்வதற்கு ஏற்ப உள்ளூர் அலகுகளை அதிகார வல்லமைமிக்கதாக ஆக்குவதே அரசின் பணியாகும்.

3. பிலிப் குக் மற்றும் வட்டாரப் புத்தாக்க அமைப்புகள் (Regional Innovation Systems)

பிலிப் குக், தனது '*ரீஜினல் இன்னோவேஷன் சிஸ்டம்ஸ்*' *(Regional Innovation Systems – 2004)*[27] நூலில், புத்தாக்கம் என்பது "நிறுவனக்

---

[26] Michael E Porter, 'The Competitive Advantage of Nations' (*Harvard Business Review* March–April 1990) accessed 8 February, 2026.

[27] Hans–Joachim Braczyk, Philip Cooke, and Martin Heidenreich (eds), *Regional Innovation Systems: The Role of Governance in a Globalized World* (Routledge 2004).

கட்டமைப்பில் பொதிந்துள்ளது" (institutionally embedded) என்று வாதிட்டு இக்கருத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றார். இது வெறும் நிறுவனங்கள் சார்ந்தது மட்டுமல்ல; உள்ளூர்ப் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், வங்கிகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பண்பாட்டு நெறிமுறைகள் ஆகியவற்றிற்கு இடையே நிகழும் நெருக்கமான இடைவினைகளைப் (dense interactions) பற்றியதாகும். ஜெர்மனியின் உற்பத்தித் துறை சார்ந்த ஒரு வட்டாரத்திற்குப் பொருந்தும் கொள்கை, கலிபோர்னியாவின் தொழில்நுட்ப வட்டாரத்திற்குப் பொருந்தாது. அறிவுப் பரிமாற்றங்கள், பல்வேறு பண்பாடுகளிலும் துறைகளிலும் வேறுபடுவதால், ஒரே மாதிரியான தேசிய வார்ப்புரு (single national template) எல்லா இடங்களிலும் பொருந்தாது. எனவே, மாநிலங்கள் தங்கள் சொந்தப் புத்தாக்கக் கட்டமைப்புகளை வடிவமைத்துக் கொள்ளும் தன்னாட்சியைக் கொண்டிருக்க வேண்டும்.

இந்தியாவின் வட்டார வளர்ச்சி அனுபவம்

இந்தியாவின் பொருளாதாரப் புவியியல் இக்கோட்பாடுகளை உறுதிப்படுத்துகிறது. அதன் மிக வலிமையான வளர்ச்சி மையங்கள் (growth hubs) பல மையப்படுத்தப்பட்ட திட்டமிடலுக்கு முன்பாகவோ, அல்லது அதைச் சாராமலோ – பெரும்பாலும் மாநில அளவிலான சூழலியல் கட்டமைப்பும், உள்ளூர் தொழில் முனைவும் ஒன்றோடொன்று ஊடாடியதன் விளைவாகவே உருவாயின.

- *கர்நாடகா (பெங்களூரு):* தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆழ்–தொழில்நுட்பத் (deep–tech) தொகுப்புகள், ஒன்றிய அரசின் தொழிற்சாலை அமைவிடத் தேர்வால் உருவானவை அல்ல; மாறாக, அவை தொழில் திரட்சி (agglomeration), பல்கலைக்கழகங்களின் பங்களிப்பு, சேவைகளின் ஆழம் மற்றும் மாநில அரசின் ஏற்பாடுகள் ஆகியவற்றால் உருவானவை.
- *தமிழ்நாடு:* மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரிபாகங்கள் (சென்னை–ஸ்ரீபெரும்புதூர்), ஜவுளி மற்றும் பின்னலாடை (கோயம்புத்தூர்–திருப்பூர்), பட்டாசு, தீப்பெட்டி மற்றும் அச்சுத் தொழில் (சிவகாசி), மரவள்ளிக்கிழங்கு மாவு மற்றும் ஜவ்வரிசி (சேலம்–நாமக்கல்) ஆகியவை, திறன் மேம்பாடு, மின்சாரம், சரக்குப் போக்குவரத்து மற்றும் சிறிய துறைமுகங்களில் மாநில அரசு மேற்கொண்ட முதலீடுகளைப் பிரதிபலிக்கின்றன. இந்த வட்டாரங்களுக்கே உரியத் தொழில்முனைவு வரலாறுகள் (regional entrepreneurial histories) இதற்கு மேலும் வலுசேர்த்தன.

- *தெலுங்கானா (ஹைதராபாத்):* மருந்துகள் மற்றும் உயிர் அறிவியல் துறைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சேவைகள் ஆகியவற்றுடன் இணைந்து, வட்டாரம் சார்ந்த ஏற்பாடுகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் நகர–வட்டாரச் சூழலியல் (city–region ecosystem) மூலம் வளர்ச்சி கண்டன.

- *மகாராஷ்டிரா (மும்பை–புனே):* நிதி மற்றும் மேம்பட்ட சேவைகள் (மும்பை) மற்றும் பொறியியல்/வாகனத் தொழில் (புனே) ஆகியவை, தொழில் திரட்சி, சந்தையின் பரந்துபட்ட தன்மை மற்றும் மாநில அளவிலான சூழலியல் ஆதரவு ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன.

- *குஜராத்:* துறைமுகம் சார்ந்த தொழில்மயமாக்கல், பெட்ரோ கெமிக்கல்கள் மற்றும் பெரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பூங்காக்கள் ஆகியவை, மாநிலம் சார்ந்த உள்கட்டமைப்பு மற்றும் விதிமுறைச் சலுகைகள், அம்மாநில புவியியல் அமைப்போடு ஊடாடியதன் விளைவாக உருவானவை.

- *கேரளா:* தனித்துவமான மனித மேம்பாடு மற்றும் பொதுச் சுகாதாரத் திறன்–வலுவான ஆரம்பச் சுகாதாரம், பரவலாக்கப்பட்டத் திட்டமிடல், உயர் கல்வி அறிவு–ஆகியவை, "தொகுப்புகள்" என்பவை வெறுமனே தொழில்துறை சார்ந்தவை மட்டுமல்ல, அவை சமூகத்துறைச் சூழலியலாகவும் (social–sector ecosystems) இருக்க முடியும் என்பதைக் காட்டுகின்றன.

இந்த விளைவுகள் அனைத்தும் வட்டாரம் சார்ந்தவை, வரலாற்றில் கடந்து வந்த பாதையைச் சார்ந்தவை (path–dependent) மற்றும் சூழலியல் சார்ந்தவை–தொகுப்பு–வளர்ச்சிக் கோட்பாடு எதை முன்கூட்டியே கணித்ததோ, அதுவே இங்கும் நிகழ்ந்துள்ளது.

சர்வதேசச் சான்றுகள்

மாநில அளவிலான (subnational) பரிசோதனைகள் என்பவை, உலகெங்கிலும் உள்ள முதிர்ந்த கூட்டாட்சி நாடுகளின் ஒரு வரையறுக்கும் பண்பாகும்; இந்நாடுகளில் மாநிலங்களே கொள்கை பரிணாமத்தின் முதன்மை இயக்குசக்திகளாகத் திகழ்கின்றன.

- *அமெரிக்கா:* வரலாற்று ரீதியாக, மாநிலங்கள் முக்கியக் கொள்கைப் புதுமைகளை முன்னோடியாகச் செயல்படுத்தியுள்ளன; அவை பின்னரே தேசிய அளவில் ஏற்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, வேலையின்மைக் காப்பீட்டுத் திட்டம் (விஸ்கான்சின்), சுற்றுச்சூழல் ஒழுங்குமுறை

(கலிபோர்னியா) மற்றும் சுகாதாரக் காப்பீட்டுச் சீர்திருத்தம் (மாசசூசெட்ஸ்) ஆகியவற்றைக் கூறலாம். தற்காலச் சோதனைகளான கஞ்சா சட்டபூர்வமாக்கல் அல்லது மருத்துவர் உதவியுடன் நிகழும் மரணம் (assisted dying – கொலராடோ மற்றும் ஓரிகான்) ஆகியவையும் இதில் அடங்கும். இக்கூட்டாட்சி அமைப்பு, தேசிய அளவில் இடர்பாடுகள் இன்றிப் பாடம் கற்றுக்கொள்ள அனுமதிக்கிறது.

- *கனடா:* கனடாவின் 'அனைவருக்குமான சுகாதாரத் திட்டம்', ஒரு தேசியத் திட்டமாக மாறுவதற்கு முன்பு, சஸ்காட்செவான் (Saskatchewan) மாகாணத்தில் ஒரு முன்முயற்சியாகவே தொடங்கப்பட்டது. அதேபோல, கியூபெக்கின் (Quebec) 'மானியம் வழங்கப்படும் குழந்தைப் பராமரிப்பு மாதிரி', தற்போது கூட்டாட்சி அளவிலான குடும்பக் கொள்கையை வடிவமைத்து வருகிறது.

- *ஜெர்மனி:* ஜெர்மானியக் கூட்டாட்சி முறை, அனேகமாக மிக வலிமையான பொருளாதாரச் சான்றை வழங்குகிறது. மெர்சிடிஸ் மற்றும் போர்ஷேவின் தாயகமான 'பேடன்–வூர்ட்டம்பர்க்' (Baden–Wurttemberg) மற்றும் பிஎம்டபிள்யூ மற்றும் சீமென்ஸின் தாயகமான 'பவேரியா' (Bavaria) போன்ற அதன் மாநிலங்கள் (*Länder*), உலக அளவில் போட்டியிடுகின்றன. தொழிற்பயிற்சி (vocational training) மற்றும் தொழில் நிதியைத் தங்கள் உள்ளூர்த் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைத்துக் கொள்வதன் மூலம் இவை சாத்தியமாகின்றன. கல்வி மற்றும் வட்டார வளர்ச்சி வங்கிகள் மீதான இம்மாநிலங்களின் கட்டுப்பாடு, மைய அரசியல் சுழற்சிகளிலிருந்து விலகிச் சுதந்திரமாக, நீடித்த போட்டித்தன்மையுடன் இருக்க உதவுகிறது.

- *பிரேசில்:* சமூகக் கொள்கைக்கான வலிமையான சான்றுகளைப் பிரேசில் வழங்குகிறது. 'போல்சா ஃபெமிலியா' (Bolsa Fam*i*lia – நிபந்தனைக்குட்பட்ட பணப் பரிமாற்றம்) திட்டம், பிரேசிலியா மற்றும் காம்பினாசில் (Campinas) மேற்கொள்ளப்பட்ட 'போல்சா எஸ்கோலா' (Bolsa Escola) போன்ற துணைத் தேசியப் பரிசோதனை முயற்சிகளிலிருந்து உருவானதே ஆகும். அதேபோல, சியாரா (Ceara) மாநிலத்தின் 'கற்றல் அடைவு சார்ந்த கல்வி' (results–based education – ICMS Educacional) நிதியளிப்பு முறை, பிரேசிலின் ஏழ்மையான மாநிலங்களில் ஒன்றின் கல்வித் தரத்தை மாற்றியமைத்ததுடன், தேசியக் கொள்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

சிதைவுறா ஒன்றியம்

இதன் நடைமுறை சீரானது: மாறுபாடுகள் கற்றலைச் சாத்தியமாக்குகின்றன; தன்னாட்சி வேகத்தை அளிக்கிறது; மற்றும் பரவல் என்பது விரிவாக்கத்தை சாத்தியமாக்குகிறது. இந்தியாவின் மிகவும் வெற்றிகரமான தேசியத் திட்டங்கள் இந்தப் பாதையையே பின்பற்றின. மதிய உணவுத் திட்டம் (தமிழ்நாடு), பொது சுகாதாரம் மற்றும் எழுத்தறிவு முயற்சிகள் (கேரளா), வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (மகாராஷ்டிரா), மற்றும் சிறு துறைமுகங்கள் மேம்பாட்டில் பொது–தனியார் கூட்டுநிறுவன மாதிரி (குஜராத்) ஆகிய அனைத்தும், தேசிய அளவில் விரிவுபடுத்தப்படுவதற்கு முன்பு மாநில அளவில் தோன்றியவையே. எனவே, அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு நடைமுறை சார்ந்த வளர்ச்சி உத்தியாகச் செயல்படுகிறது. உள்ளூர் அதிர்வுகளிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, உள்ளூர் வெற்றிகளைப் பெரிய அளவில் விரிவுபடுத்தும் ஒரு 'சிதைவுறா அமைப்பாக' இது இந்தியாவை மாற்றுகிறது.

இத்தனை வலுவான சான்றுகள் இருந்தபோதிலும், 1950 முதலே இந்தியாவின் நடைமுறை, "ஊடுருவும் மையப்படுத்தலை" (creeping centralisation) நோக்கி நகர்ந்துள்ளது. மிக இறுக்கமான தேசிய வார்ப்புருக்கள் (rigid national templates), நிபந்தனைக்குட்பட்ட மானியங்கள் மற்றும் திட்டங்களை நுண்ணிய அளவில் நிர்வகித்தல் ஆகியவற்றின் மூலம் சமீபகாலமாக இந்தப்போக்கு வேகமெடுத்துள்ளது. இது, புதிய கண்டுபிடிப்புகளுக்கு வித்திடும் உத்திகளின் பன்முகத்தன்மையைச் சிதைத்துவிடும் அபாயத்தைக் கொண்டுள்ளது. மாநிலங்கள் "கொள்கைப் பரிசோதனைக் கூடங்களாகத்" திறம்படச் செயல்பட வேண்டுமானால், அவை உண்மையான தன்னாட்சியைக் கொண்டிருக்க வேண்டும். ஒரே நேரத்தில் பல பரிசோதனைகளை மேற்கொள்ளும் ஒரு கூட்டாட்சி பலவீனமானது அல்ல; அது விவேகமானது.

VII. சமூகநீதி சார்ந்த வாதம்: சமூகச் சீர்திருத்தங்கள் ஏன் மாநிலங்களில் இருந்தே உருவாகின்றன

இந்தியாவில் அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிராக முன்வைக்கப்படும் வாதங்களில், சமூகநீதி சார்ந்த விமர்சனத்தைக் காட்டிலும் அதிக தார்மீக வலிமை கொண்ட வாதம் வேறொன்றுமில்லை. இந்தியாவின் சாதி,

பாலினம் மற்றும் சமூகப் புறக்கணிப்பு சார்ந்த ஆழமான படிநிலைகளில் வேரூன்றியுள்ள இந்த வாதம், 'உள்ளூர்ச் சமூகம் இயல்பாகவே ஒடுக்குமுறைத் தன்மை கொண்டது' என்றும், வலுவான தேசிய நிறுவனங்களால் மட்டுமே விளிம்புநிலை மக்களைப் பாதுகாக்க முடியும் என்றும் கருதுகிறது. இக்கருத்தின் மிகவும் ஆளுமை மிக்க வெளிப்பாடு, நவம்பர் 4,1948 அன்று அரசமைப்பு அவையில், அரசமைப்புச்சட்டத்தின் வரைவை அறிமுகம் செய்கையில், டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களால் முன்வைக்கப்பட்டது. கிராமக் குடியரசுகள் மீதான கற்பனாவாதப் பார்வையை நிராகரித்து, அம்பேத்கர் பின்வருமாறு கூறினார்:

> "கிராமம் என்பது உள்ளூர்வாதத்தின் சாக்கடை, அறியாமை, குறுகிய மனப்பான்மை மற்றும் வகுப்புவாதம் ஆகியவற்றின் இருப்பிடமே அன்றி வேறென்ன? அரசமைப்பு வரைவானது கிராமத்தைக் கைவிட்டுவிட்டு, தனிமனிதனைத் தனது அலகாக ஏற்றுக்கொண்டதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்."[28]

இதன் உட்கருத்து தெளிவாக இருந்தது: இந்தியாவின் உள்ளூர் அதிகாரக் கட்டமைப்புகள் ஆழமான படிநிலைகளைக் கொண்டிருந்தன. எனவே, குறுகிய வட்டாரப் பாரபட்சங்களிலிருந்து (parochial prejudice) விலகி நிற்கும், 'அறிவுசார்ந்த சீர்திருத்தச் சக்திகளாக' – நாடாளுமன்றம், உயர் நீதித்துறை மற்றும் அகில இந்தியப் பணிகள் போன்ற – தேசிய நிறுவனங்கள் அவசியமானவை என்று கருதப்பட்டது. எனினும், குடியரசு மலர்ந்து எழுபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தக் கருதுகோள் ஒரு கவனமான மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளது.

வரலாற்றுச் சான்றுகள்: ஒன்றியம் பின்தொடர்கிறதேயன்றி, முன்னோடியாகத் திகழவில்லை

மையப்படுத்தப்பட்ட அதிகாரமே சமூக நீதிக்கான வழி என்ற வாதம் நடைமுறையில் உண்மையானதாக இருந்திருக்குமேயானால், இந்தியாவின் மிகத் தீவிரமான சமத்துவச் சீர்திருத்தங்கள் ஒன்றிய அளவிலிருந்தே தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், வரலாற்றுப் பதிவுகள் இதற்கு நேர்மாறான உண்மையையே சுட்டிக்காட்டுகின்றன. இந்தியாவில் சமூக சீர்திருத்தங்கள், மீண்டும் மீண்டும் மாநில

---

[28] *Constituent Assembly Debates*, vol 7 (6th reprint, Lok Sabha Secretariat 2014) 39, November 4, 1948.

அளவிலான (sub-national) முன்னெடுப்புகளிலிருந்தே வெளிப்பட்டுள்ளன. ஒன்றியம், அவற்றை – பெரும்பாலும் காலதாமதமாகவே – பின்பற்றியுள்ளது.

சுதந்திரத்திற்கு வெகு காலத்திற்கு முன்பே, தன்னாட்சி அதிகாரம் கொண்ட சுதேச அரசுகளும் (Princely States), மாகாண அரசுகளும் முன்னோடியான இடஒதுக்கீடு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தின:

- *கோலாப்பூர்* (1902): சத்ரபதி ஷாகு மகாராஜாவின் ஆட்சியின் கீழ், கோலாப்பூர் சுதேச அரசு, அரசுப் பணியில் பார்ப்பனர் அல்லாதோர் மற்றும் பின்தங்கிய சமூகத்தினருக்கு இடஒதுக்கீட்டை அறிமுகப்படுத்தியது. உலக அளவில் இடஒதுக்கீட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகால நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்.

- *மைசூர்* (1918–1921): நீதிபதி லெஸ்லி மில்லர் குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து, மகாராஜா நான்காம் கிருஷ்ணராஜ உடையார் ஆட்சியின் கீழ், நிர்வாகத்தில் இடஒதுக்கீடு முறைப்படுத்தப்பட்டது. இது மேல்தட்டுச் சாதியினரின் ஆதிக்கத்தைத் தீர்க்கமாக உடைத்தெறிந்தது.

- *சென்னை மாகாணம்* (1921); 1927–ல் விரிவுபடுத்தப்பட்டது): நீதிக்கட்சியின் வகுப்புவாரி அரசாணைகள் (Communal Government Orders), பொதுச் சேவைகள் மற்றும் கல்வியில் பார்ப்பனர் அல்லாத சமூகத்தினருக்கு விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத்தை முறைப்படுத்தின.

- *திருவிதாங்கூர்* (1936): சித்திரை திருநாள் பலராம வர்மாவின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட ஆலய நுழைவுப் பிரகடனம், சாதி அடிப்படையிலான மதத் தீண்டாமையைத் தகர்த்தெறிந்தது. தேசிய அளவில் இது போன்ற நடவடிக்கை எடுக்கப்படுவதற்குப் பல பத்தாண்டுகளுக்கு முன்பே இது நிகழ்ந்தது.

இச்சீர்திருத்தங்கள் எதுவும் தொலைதூரத்திலிருந்த மைய அரசால் திணிக்கப்பட்டவை அல்ல. இவை வட்டார அரசியல் அணிதிரட்டல், உள்ளூர் சமூக இயக்கங்கள், மற்றும் வாழ்வியல் எதார்த்தங்களை எதிர்கொண்ட துணைத் தேசியத் தன்னாட்சி (sub-national autonomy) ஆகியவற்றிலிருந்து எழுந்தவை.

இதற்கு மாறாக, ஒன்றியம் பெரும்பாலும் பின்தங்கியே இருந்தது. அரசமைப்புச் சட்டப்பிரிவு 16(4) இருந்தபோதிலும், ஒன்றியப் பொதுப்

பணிகளில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான (OBC) இடஒதுக்கீடு, மண்டல் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து 1992–ல் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டது. அதேபோல, 1951–ல் சேர்க்கப்பட்ட அரசமைப்புச் சட்டப்பிரிவு 15(4) இருந்தபோதிலும், ஒன்றியக் கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடு 2007–ல் மட்டுமே சாத்தியமானது. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடு குறித்த காகா கலேல்கர் ஆணையத்தின் அறிக்கை (1955) கிடப்பில் போடப்பட்டது; மண்டல் ஆணையத்தின் அறிக்கை (1980) ஒரு பத்தாண்டு காலம் முடங்கிக் கிடந்தது. தேசிய அரசியலை, சமூக ரீதியாக முற்போக்கான மாநிலங்களிடமிருந்து வந்த தொடர் அழுத்தம், மாற்றியமைத்த போது மட்டுமே ஒன்றியம் செயல்படத் தொடங்கியது. இந்த வரலாற்றில், மாநிலங்கள் 'நீதியின் உந்துசக்திகளாக' விளங்கின; ஆனால் ஒன்றியம் பெரும்பாலும் 'தேக்கநிலையின் பாதுகாவலனாக' (custodian of inertia) இருந்தது.

அமெரிக்க ஒப்பீடும் – அதன் எல்லைகளும்

அதிகாரக் குவிப்பை (centralisation) ஆதரிப்பவர்கள், கூட்டாட்சி அதிகாரம் அடிமைமுறையை ஒழித்து, இன ஒதுக்கல் முறையைத் தகர்த்த அமெரிக்காவை அடிக்கடி மேற்கோள் காட்டுகின்றனர். இது ஒரு படிப்பினையாக இருந்தாலும், இந்த ஒப்புமையை மிகவும் கவனமாகப் பரிசீலிக்க வேண்டும்.

முதலாவதாக, அமெரிக்காவிலும் கூட, கூட்டாட்சி நிறுவனங்கள் இயல்பாகவே அறிவுசார்ந்தவையாக இருக்கவில்லை. அமெரிக்க உச்ச நீதிமன்றமே, *பேஸ் வி. அலபாமா* (*Pace v. Alabama – 1883*)[29] வழக்கில் இனப் பாகுபாட்டைச் சரியெனத் தீர்ப்பளித்தது; *பிளெஸ்ஸி வி. ஃபெர்குசன்* (*Plessy v. Ferguson – 1896*)[30] வழக்கில் இன ஒதுக்கல் முறைக்கு அரசமைப்புச் சட்ட அங்கீகாரம் (constitutionalised segregation) அளித்தது. கூட்டாட்சி அதிகாரத்தால், ஆழமாக வேரூன்றிய சமூக மனப்பான்மைகளை உடனடியாக வெல்ல முடியவில்லை.

இரண்டாவதாக, அமெரிக்காவில் இன ஒடுக்குமுறையானது வட்டார ரீதியாக, குறிப்பாகத் தென் மாநிலங்களில் பெரும்பாலும் குவிந்திருந்தது. ஆனால், அதற்கு வெகு காலத்திற்கு முன்பே பல வடக்கு மற்றும் மேற்கு மாநிலங்கள் சமத்துவத்தை நோக்கி நகர்ந்திருந்தன. 1860கள் /

---

[29] 106 U.S. 583 (1883).

[30] 163 U.S. 537 (1896).

1960களில் நிகழ்ந்த தீர்க்கமான சிவில் உரிமை வெற்றிகள், கூட்டாட்சி அதிகாரம் இயல்பாகவே விழிப்புணர்வு பெற்றிருந்ததால் நிகழவில்லை; மாறாக, முற்போக்கான மாநிலங்களும் கூட்டணிகளும் தேசிய அரசியலில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியதால், கூட்டாட்சி நிறுவனங்கள் செயல்படுவதைச் சாத்தியமாக்கியது. எனவே, கூட்டாட்சி அதிகாரம் என்பது சீர்திருத்தத்திற்கான ஒரு கருவியே தவிர, அது சீர்திருத்தத்தின் மூல ஊற்று அல்ல.

மூன்றாவதாக, இந்த ஒப்பீட்டை இந்தியாவுக்குப் பொருத்திப் பார்க்கும்போது அதன் வலிமை மேலும் குறைகிறது. அமெரிக்காவில், பாகுபாடு என்பது பெருமளவில் மாநிலச் சட்டங்களில் பொதிந்திருந்தது. ஆனால் இந்தியாவில், சாதி ஒடுக்குமுறை என்பது சட்டங்களில் இருப்பதை விட, மிகவும் நுண்ணிய உள்ளூர் அளவில் – அதாவது கிராமங்கள், அண்டை வீடுகள் மற்றும் அன்றாடச் சமூக நடைமுறைகளில் – ஊடுருவியுள்ளது. தொலைதூரத்திலிருக்கும் மைய அரசால், தனித்துச் செயல்பட்டு இத்தகைய ஆழமான படிநிலைகளைத் தகர்க்க முடியாது.

இறுதியாக, வரலாற்று ரீதியான பரவலைப் பார்க்கும்போது, சமூகச் சீர்திருத்தம் என்பது முன்னோடி வழிகாட்டியாகத் திகழும் அதிகார வரம்புகளிலிருந்து (pioneering jurisdictions) வெளிநோக்கிப் பரவுகிறதே தவிர, தலைநகரங்களிலிருந்து கீழ்நோக்கி இறங்குவதில்லை. தேசிய அளவில் அடிமை முறை ஒழிக்கப்படுவதற்கு முன்பே, வடக்கு மாநிலங்களில் அது தொடங்கப்பட்டது; சிவில் உரிமை நெறிமுறைகள் கூட்டாட்சிச் சட்டமாக்கப்படுவதற்கு முன்பே, உள்ளூர் அளவில் ஒருங்கிணைக்கப்பட்டன. மாற்றம் என்பது மையவிலக்கு விசை (centrifugally) போல விரிந்து பரவுவதே தவிர, மேலிருந்து கீழாகப் படிநிலைவாரியாக (hierarchically) பயணிப்பதில்லை.

புரவலர் மனப்பான்மை எதிர் செயலாற்றும் உரிமை (Patronage versus Agency)

மையப்படுத்தப்பட்ட அதிகார மாதிரியானது, ஒருவித "மீட்பர் மனப்பான்மையை" (saviour complex) சார்ந்துள்ளது. அதாவது, தந்தைவழிப் போக்கு கொண்ட ஓர் ஒன்றியம் (paternalist Union), பலவீனமானவர்களின் நலன்களைக் கருணையுடன் பாதுகாக்கும் என்ற எண்ணமே அது. இது, விளிம்புநிலை மக்களை அரசியல் ரீதியாகச் செயல்படும் ஆற்றல் கொண்டவர்களாகப் பார்க்காமல், பாதுகாப்பின் செயலற்ற பயனாளிகளாக மட்டுமே கற்பனை செய்கிறது. ஆனால், நிலையான சமத்துவத்திற்குத் தேவைப்படுவது பாதுகாப்பு வளையம் மட்டுமல்ல, செயலாற்றும் உரிமை ஆகும். அரசியல் கோட்பாட்டாளர் ஆன் பிலிப்ஸ், தனது 'தி பாலிடிக்ஸ்

ஆ்ன்ப் பிரசன்ஸ்' (1995) (Anne Phillips, The Politics of Presence) நூலில், மேல்தட்டு வர்க்கத்தினரால் விளிம்புநிலை மக்களின் நலன்கள் "பிரதிநிதித்துவம் செய்வதை" விட, முடிவெடுக்கும் அமைப்புகளில் அம்மக்கள் நேரடியாக இடம்பெற்றிருப்பதே சிறந்தது என்று வாதிடுகிறார். இந்த வகையில், பிரதிநிதித்துவம் என்பது கருணை காட்டுவதல்ல; அது அதிகாரத்தைச் செயல்படுத்துவதாகும்.

இந்தக் கண்ணோட்டம், *73 மற்றும் 74வது அரசமைப்புச்சட்ட திருத்தங்கள்* (1992) வாயிலாக அரசமைப்பு ரீதியாகச் செயல்பாட்டுக்கு வந்தது. இச்சட்டங்களே ஊராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பட்டியல் சாதியினர் (SC), பட்டியல் பழங்குடியினர் (ST) மற்றும் பெண்களுக்கு இடஒதுக்கீட்டைக் கட்டாயமாக்கின. ஒரு தலித் பெண் கிராம ஊராட்சிக்குத் தலைமை தாங்கும்போது, அதிகாரம் ஒரு தொலைதூர அதிகாரத்தின் ஊடாகச் செயல்படுத்தப்படுவதில்லை; அது நேரடியாகச் செலுத்தப்படுகிறது.

குறிப்பிடத்தக்க வகையில், 1992க்கு முன்பே பல மாநிலங்கள் உள்ளாட்சி அமைப்புகளில் இத்தகைய இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தியிருந்தன. இது மாநில அளவிலான தலைமையின் (sub–national leadership) சீரான போக்கை வலுப்படுத்துகிறது. அதிகாரப் பரவலாக்கம் பெரும்பாலும் சிக்கலானதாகவும், கருத்து வேறுபாடுகள் நிறைந்ததாகவும் இருக்கலாம். ஆனால், அது படிநிலைகளின் விளைவுகளைத் தொலைவிலிருந்து தணிப்பதற்குப் பதிலாக, அவற்றை வேரிலேயே தகர்க்கிறது.

சித்தாந்த ஆக்கிரமிப்பிற்கு எதிரான காப்பீடாகக் கூட்டாட்சி

ஒன்றிய அரசு எப்போதும் அறிவார்ந்ததாகவும், மதச்சார்பற்றதாகவும், தாராளவாதப் போக்குடையதாகவும் இருக்கும் என்ற அனுமானத்தின் மீதே மையப்படுத்தப்பட்ட அதிகாரத்திற்கான வாதம் கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆனால், வரலாறு இதற்கு எந்த உத்தரவாதத்தையும் அளிக்கவில்லை. அரசியல் பெரும்பான்மைகள் மாறக்கூடியவை; எந்த நிலையிலும் சித்தாந்த ரீதியான ஆக்கிரமிப்பு சாத்தியமே. அதிகாரம் ஓரிடத்தில் அதிகமாகக் குவிக்கப்பட்டு, ஒன்றிய அரசே ஒதுக்குமுறையைக் கையாளத் தொடங்கினால், விளிம்புநிலை மக்களுக்குப் புகலிடமே இல்லாமல் போய்விடும். ஜனநாயக அதிகாரம் கொண்ட பல்வேறு மையங்களை உறுதி செய்வதன் மூலம், கூட்டாட்சி தத்துவம் இந்த ஆபத்தைத் தணிக்கிறது. தேசிய அரசியல் சூழல் பகைமை பாராட்டுவதாக மாறினாலும்கூட, மாநில அரசுகள் நிறுவன ரீதியான பாதுகாப்பு அரண்களாகச் (institutional sanctuaries) செயல்பட்டு உரிமைகளைப் பாதுகாக்க முடியும்.

சட்ட அறிஞர் ஹெதர் கெர்கன், இந்த இயக்கவியலை "முடிவெடுப்பதன் வாயிலாக மாறுபடுதல்" (Dissenting by Deciding)[31] என்று விவரிக்கிறார். தேசிய அளவில் விளிம்புநிலைக்குத் தள்ளப்படும் குழுக்கள், மாநிலங்களுக்குள் ஆளும் பெரும்பான்மையாக மாறுவதற்குக் கூட்டாட்சி வழிவகை செய்கிறது என்று அவர் குறிப்பிடுகிறார். இது தனிமைவாதம் (isolationism) அல்ல; மாறாக, இது அதிகாரமளித்தலாகும். அதாவது, மாற்றுக் கருத்தை (dissent) ஆளுகைத் திறனாக மாற்றுவதாகும்.

அரசு அதிகாரத்தின் மீது எவ்வித ஏகபோகமும் இல்லை என்பதை உறுதி செய்வதன் மூலம், அதிகாரப் பரவலாக்கல் ஒரு முக்கியப் பணியைச் செய்கிறது: ஒரே ஒரு சித்தாந்தம் அதிகாரத்தைக் கைப்பற்றுவது, குடிமை உரிமைகளுக்கு முழுமையானதொரு தோல்வியாக மாறுவதைத் தடுக்கிறது; அத்துடன், மாற்று அரசியல் பார்வைகளுக்கான பரிசோதனைக் கூடங்களாக மாநிலங்கள் செயல்படுவதையும் சாத்தியமாக்குகிறது.

அம்பேத்கரை மறுவாசிப்பு செய்தல்: கிராமம் எதிர் மாநிலம் (Village versus State)

அம்பேத்கரின் விமர்சனத்தைச் சரியாகப் புரிந்து கொள்வோமேயானால், அது கிராமங்களை நோக்கியதேயன்றி, மாநிலங்களை நோக்கியதல்ல என்பது புலனாகும். ஓர் இந்திய மாநிலம் என்பது, பல ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் பெரிய பரப்பளவைக் கொண்டதொரு பரந்த அரசியல் அமைப்பாகும்; அது தனக்கெனச் சட்டமன்றங்கள், காவல்துறை, உயர் நீதிமன்றங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களைக் கொண்டுள்ளது. மாநிலங்கள், அரசமைப்புச்சட்ட ரீதியாக ஒரு இடைநிலையை வகிக்கின்றன: உள்ளூர் ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கும் அளவுக்குப் பெரியதாகவும், அதே வேளையில் சூழலுக்கேற்ற தீர்வுகளை வடிவமைக்கும் அளவுக்கு மக்களோடு நெருக்கமாகவும் அவை உள்ளன.

ஒன்றிய அரசின் ஒரே மாதிரியான தீர்வுகள், உள்ளூர் கள எதார்த்தங்கள் குறித்த புரிதல் (local knowledge) இல்லாத காரணத்தினால் பெரும்பாலும் தோல்வியடைகின்றன. சமூக நீதிக்கு இத்தகைய சூழல் சார்ந்த புரிதல் அவசியமானது; அதிகார வல்லமை பெற்ற மாநிலங்களால் மட்டுமே அதனை வழங்க முடியும். அம்பேத்கரின் சமத்துவக் கனவு மெய்யாக வேண்டுமெனில், நீதியை வழங்கும் புரவலர் மனப்பான்மை (paternalist) கொண்ட ஓர் ஒன்றியத்தால் அது சாத்தியமாகாது. ஒடுக்கப்பட்டோரின் காவலனாகத் திகழ்வதற்கு ஒவ்வொரு மாநிலமும்

---

[31] Heather Gerken, 'Dissenting by Deciding' (2005) 57 Stanford Law Review 1745.

போட்டியிடும், துடிப்பான மற்றும் தன்னாட்சி பெற்ற கூட்டாட்சி அமைப்பில்தான் அக்கனவின் வெற்றி அடங்கியிருக்கிறது.

VIII. நேர்மை சார்ந்த வாதம்: பரவலாக்கப்பட்ட அதிகாரம் ஏன் நேர்மையை ஊக்குவிக்கிறது

ஜூன் 12, 1823 அன்று, தாமஸ் ஜெஃபர்சன், நீதிபதி வில்லியம் ஜான்சனுக்கு எழுதிய கடிதத்தில், அதிகாரத்தை மையப்படுத்துவதால் ஏற்படும் கட்டமைப்பு ரீதியான ஆபத்துகள் குறித்து ஒரு தீர்க்கதரிசனமான எச்சரிக்கையை விடுத்தார். அவர் இவ்வாறு எழுதினார்:

> *"நமது வெளியுறவு விவகாரங்களைக் கூட்டரசும், நமது உள்நாட்டு விவகாரங்களை மாநில அரசுகளும் மிகச் சிறப்பாக நிர்வகிக்க முடியும் என்றும் நான் நம்புகிறேன். எனவே, இவ்விரு அரசுகளையும் வரம்பிற்குள் வைப்பதற்காக, அரசமைப்பால் நிறுவப்பட்ட அந்த ஆரோக்கியமான அதிகாரப்பகிர்வு தொடர்ந்து பேணப்படுவதையே நான் விரும்புகிறேன். அனைத்து அலுவலகங்களும் வாஷிங்டனுக்கு (தலைநகருக்கு) மாற்றப்படுவதை நான் ஒருபோதும் காண விரும்பவில்லை; அவ்வாறு மாற்றப்பட்டால், மக்களின் கண்களிலிருந்து மேலும் விலகிச் சென்று, சந்தையில் நடப்பதைப் போலவே, அங்குப் பதவிகள் மிக ரகசியமாக விலை பேசப்படக்கூடும்."*[32]

நவீன அரசியல் பொருளாதாரம் இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது. ஊழல் என்பது வெறும் தார்மீகத் தோல்வி அல்ல; அது ஒரு கட்டமைப்பு ரீதியான நிகழ்வாகும். அதிகாரம் ஒரே இடத்தில் குவிக்கப்படும்போதும், விருப்புரிமை (discretion) தனியுரிமையாக்கப்படும்போதும், தகவல் வெளிப்படைத்தன்மையற்று (opaque) இருக்கும்போதும், பொறுப்புடைமை (accountability) தொலைவில் இருக்கும்போதும் அது செழித்து வளர்கிறது. அதிகாரத்தைப் பரவலாக்குவது, இக்கட்டமைப்புச் சூழல்களை மாற்றியமைக்கிறது. அவ்வாறு செய்வதன் மூலம், வெறும் அறிவுரைகளோ அல்லது மையக் கண்காணிப்போ செய்வதை விட, இது ஊழலை மிகவும் திறம்படக் கட்டுப்படுத்துகிறது.

---

[32] Thomas Jefferson, 'Thomas Jefferson to William Johnson, June 12, 1823' (*National Archives*) accessed February 7, 2025.

குவிக்கப்பட்ட அதிகாரமும் குவிக்கப்பட்ட ஆதாயமும்

மான்சர் ஓல்சன் (Mancur Olson), தனது 'கூட்டுச் செயல்பாடு குறித்த தர்க்கம்: பொதுப் பண்டங்களும், குழுக்களின் கோட்பாடும்' (The Logic of Collective Action: Public Goods and the Theory of Groups – 1965) என்ற நூலில், அதிகாரக்குவிப்பு ஏன் ஊழலை எளிதாக்குகிறது என்பதை விளக்கியுள்ளார். சாதாரண வரி செலுத்துவோர் போன்ற 'பரவலாக்கப்பட்ட நலன்களை' (diffuse interests) விட, பெரிய நிறுவனங்கள், தொழில்துறைப் பெருங்குழுக்கள் மற்றும் வணிகக் கூட்டமைப்புகள் போன்ற 'குவிக்கப்பட்ட நலன்களே' (concentrated interests), அமைப்பு ரீதியாகத் தீர்மானகரமான மேலாண்மையை பெற்றுள்ளன என்பதை அவர் சுட்டிக்காட்டினார். எதிர்பார்க்கப்படும் ஆதாயங்கள் அதிகமாகவும், ஒருமுகப்படுத்தப்பட்டதாகவும் இருக்கும்போது, அதிக நலன் பெற விரும்புபவர்கள் அதில் அதிக முதலீடு செய்யத் தயாராக இருக்கிறார்கள்; இழப்புகள் சிறியதாகவும் பரவலாகவும் இருக்கும்போது, பொதுமக்கள் அதை எதிர்ப்பதில் குறைவான முதலீடே செய்கிறார்கள்.

அதிகாரக்குவிப்பு இந்தச் சமச்சீரற்றத் தன்மையை மேலும் பெரிதாக்குகிறது. ஒப்புதல்கள், சலுகைகள் அல்லது ஒழுங்குமுறை முடிவுகள் ஆகியவை, ஒரு தனி அமைச்சகத்தாலோ அல்லது ஒருங்கிணைப்பு முகமையாலோ கட்டுப்படுத்தப்பட்டால், 'தகாத ஆதாயம் தேடுதல்' (rent-seeking) மிகவும் எளிதாகிவிடுகிறது: ஒரே ஒரு அலுவலகத்தைச் சரிக்கட்டினால் போதும், அதன் பலன் நாடு முழுவதும் கிடைத்துவிடும். இதற்கு மாறாக, அதிகாரம் பல மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்போது, அதே நலன் சார்ந்த குழுக்கள் முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட பல தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியுள்ளது. இது பரிவர்த்தனைச் செலவுகளைக் கடுமையாக உயர்த்துகிறது. எனவே, அதிகாரப் பரவலாக்கம் என்பது தகாத ஆதாயம் தேடுதலின் மீதான ஒரு 'கட்டமைப்பு ரீதியான வரியாக' செயல்படுகிறது. இது அதிகாரத்தைச் சிதறடித்து, விருப்புரிமையைப் பரவலாக்கி, ஒட்டுமொத்த அமைப்பையும் கைப்பற்றுவதற்கான சாத்தியக்கூறைக் குறைக்கிறது.

கட்டுப்படுத்தும் கருவியாகப் போட்டி: சந்தையைக் காக்கும் கூட்டாட்சி

பாரி வைங்காஸ்ட் (Barry Weingast), தம்முடைய புகழ்பெற்ற 'அரசியல் நிறுவனங்களின் பொருளாதாரப் பங்கு: சந்தையைக் காக்கும் கூட்டாட்சி' (The Economic Role of Political Institutions: Market-Preserving Federalism – 1995) எனும் ஆய்வுக் கட்டுரையில் ஒரு முக்கிய வாதத்தை

முன்வைத்தார். அரசாங்கத்தின் 'கொள்ளையிடும் போக்கிற்கு' எதிரான மிகப்பெரிய தடுப்பு அரண், வெறும் வாக்குச்சீட்டுப் பெட்டி மட்டுமல்ல; அது 'அதிகார வரம்புகளுக்கிடையிலான போட்டி' என்பதே ஆகும்.[33] ஒரு அதிகாரப் பரவலாக்கப்பட்ட அமைப்பில், மாநிலங்கள் (துணை–தேசிய அலகுகள்) மூலதனம், திறமை மற்றும் வரி வருவாய் ஆகியவற்றிற்காகப் போட்டியிடுகின்றன. ஒரு மாநிலம் ஊழல் மிகுந்ததாகவோ அல்லது திறமையற்றதாகவோ மாறினால், நிறுவனங்களும் குடிமக்களும் அங்கிருந்து வெளியேறி வேறிடத்திற்குச் செல்லும் "வெளியேறும் வாய்ப்பை" பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்த அச்சுறுத்தல், மாநில ஆட்சியாளர்களின் மீது ஒரு "கடுமையான நிதிக் கட்டுப்பாட்டை" (hard budget constraint) திணித்து, அவர்களின் நடத்தையை ஒழுங்குபடுத்துகிறது. உள்நாட்டுப் போட்டி ஏதுமில்லாத, அதிகாரத்தின் மீது ஏகபோகத்தைக் கொண்டுள்ள ஒருமையப்படுத்தப்பட்ட அரசாங்கத்திடம் இத்தகைய கட்டுப்பாடு இருப்பதில்லை; எனவே, அது "தகாத ஆதாயம் தேடுதலுக்கும்", அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்துவதற்கும் ஆளாகும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.

அருகில் இருப்பதன் 'அறிதல்சார் அனுகூலம்'

அதிகாரப் பரவலாக்கம் கண்காணிப்பின் தன்மையையும் மாற்றியமைக்கிறது. ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பில், தொலைவு மற்றும் சிக்கலான நடைமுறைகளால் ஊழல் பாதுகாக்கப்படுகிறது. நூற்றுக்கணக்கான கிலோமீட்டர்களுக்கு அப்பால் எடுக்கப்படும் ஒரு பாதுகாப்புத் துறை ஒப்பந்தத்தையோ அல்லது தேசிய கொள்முதல் முடிவையோ ஒரு குடிமகனால் அர்த்தபூர்வமாகத் தணிக்கை செய்ய இயலாது.

அதிகாரப் பரவலாக்கம் இந்தச் சமச்சீரற்ற தன்மையை தலைகீழாக மாற்றுகிறது. குடிமக்கள் "அறிதல்சார் அனுகூலம்" என்று அழைக்கப்படக்கூடிய ஒன்றைப் பெறுகின்றனர்: அவர்களால் விளைவுகளை நேரடியாக உற்றுநோக்க இயலும். ஒரு சாலை அமைக்கப்பட்டதா, ஆசிரியர் பள்ளிக்கு வருகிறாரா, அல்லது ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறதா என்பதை அவர்கள் அறிவார்கள். இவ்வாறு ஆளுகை அருகில் இருப்பது, ஒரு குடிமகனை செயலற்ற குடி என்ற நிலையிலிருந்து செயலூக்கமுள்ள தணிக்கையாளர் (Active Auditor) என்ற நிலைக்கு மாற்றுகிறது. ஜெஃபர்சன் குறிப்பிட்டது போல,

---

[33] Barry Weingast, *The Economic Role of Political Institutions: Market–Preserving Federalism* (1995) 11 Journal of Law, Economics, & Organization 1.

"மக்களின் கண்களில்" படாமல் தப்பும்போதுதான் ஊழல் செழித்து வளர்கிறது. அதிகாரப் பரவலாக்கம் ஆளுகையை மீண்டும் குடிமக்களின் பார்வைப்புலத்திற்குள் கொண்டுவருகிறது.

வெளித்தோற்ற முரண்

அதிகாரப் பரவலாக்கம் என்பது வெறும் "ஊழலைப் பரவலாக்குவது" மட்டுமே என்றும், தேசிய அளவிலான செயல்பாட்டாளர்களை விட அதிகச் 'சுரண்டும் தன்மையுள்ள' (predatory) உள்ளூர் ஆதிக்க சக்திகளுக்கு அது அதிகாரமளிக்கிறது என்றும் தொடர்ந்து ஓர் எதிர்வாதம் முன்வைக்கப்படுகிறது. இவ்வாதமானது ஒரு 'வெளித்தோற்ற முரணின்' (visibility paradox) மீது கட்டமைக்கப்பட்டுள்ளது: அதாவது, கண்ணுக்குத் தெரியும் ஊழலை நாம் பெரும்பாலும் அதிகப்படியான ஊழலாகத் தவறாகக் கருதுகிறோம்.

1. *மெய்நிகர் சான்றுகள் (Empirical Evidence)*: ரேமண்ட் ஃபிஸ்மன் மற்றும் ராபர்ட்டா காட்டி (Raymond Fisman and Roberta Gatti) ஆகியோர் மேற்கொண்ட நாடுகளுக்கு இடையிலான ஆய்வுகள் ("பரவலாக்கம் மற்றும் ஊழல்: நாடுகளுக்கிடையேயான சான்றுகள்," பொதுப் பொருளாதார இதழ், 2002) (Decentralization and Corruption: Evidence across Countries," Journal of Public Economics, 2002), நிதிப் பரவலாக்கத்திற்கும் ஊழலுக்கும் இடையே ஒரு வலுவான "எதிர்மறை உறவு" (negative relationship) இருப்பத்தைக் கண்டறிந்தன. அதாவது, நிதிப் பரவலாக்கம் அதிகரிக்கும்போது ஊழல் குறைகிறது. மையக் கண்காணிப்பை விட உள்ளூர் கண்காணிப்பு உண்மையில் மிகவும் பயனுள்ளது என்று அவர்கள் வாதிட்டனர்.[34]

2. *தகாத ஆதாயங்களின் தன்மை* : பிரணாப் பர்தன் (Pranab Bardhan) மற்றும் திலீப் முகர்ஜி (Dilip Mookherjee) ஆகியோர் உள்ளூர் அளவிலான "சில்லறை முறையிலான கைப்பற்றுதலுக்கும்" (retail capture), தேசிய அளவிலான "பேரளவிலான கைப்பற்றுதலுக்கும்" (wholesale capture) இடையிலான வேறுபாட்டை விளக்குகின்றனர். உள்ளூர் அளவிலான கைப்பற்றுதல் இருக்கவே செய்கிறது என்றாலும், 'மையப்படுத்தப்பட்ட' அமைப்புகள் செல்வாக்கு மிக்க, ஒருங்கிணைந்த நலக் குழுக்களால் கைப்பற்றப்படும்

[34] Raymond Fisman and Roberta Gatti, 'Decentralization and Corruption: Evidence across Countries' 2002 83 Journal of Public Economics 325.

அபாயத்திற்கு எளிதில் ஆளாகின்றன – இவ்வகையான ஊழல் வடிவங்கள் பொருளாதார ரீதியாக மிக அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை என்பதோடு, அவற்றை மாற்றியமைப்பதும் கடினமானதாகும்.[35]

3. *கண்ணோட்டங்களும் அனுபவங்களும் (Perceptions v. Experience):* டேனியல் ட்ரைஸ்மேன் (Daniel Treisman) தனது 2007–ஆம் ஆண்டின் திறனாய்வில், பல்வேறு நாடுகளில் ஊழல் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஒரு பத்தாண்டுகால ஆராய்ச்சிகளைத் தொகுத்து வழங்குகிறார். (நிபுணர்கள் அல்லது வணிகர்களின் கணக்கெடுப்புகளைச் சார்ந்த) கருத்து அடிப்படையிலான குறியீடுகளை (perception–based indices) நம்பியிருக்கும் ஆய்வுகள், கூட்டாட்சி அல்லது அதிகாரப் பரவலாக்கப்பட்ட அமைப்புகளில் ஊழல் அதிகமாக இருப்பதாகக் காட்டுகின்றன என்பதை அவர் வெளிப்படுத்துகிறார். ஆனால், (உண்மையில் லஞ்சம் கொடுத்தது குறித்த கணக்கெடுப்புகள் போன்ற) அனுபவம் சார்ந்த அளவீடுகள் (experience–based measures), அத்தகைய தொடர்பினைக் குறைவாகவோ, நிலையற்றதாகவோ, அல்லது தொடர்பே இல்லாத வகையிலோ காட்டுகின்றன. அதிகாரப் பரவலாக்கப்பட்ட அமைப்புகளில் பெரும்பாலும் சுதந்திரமான ஊடகங்கள், வலுவான அரசியல் போட்டி, மற்றும் நெருக்கமான கண்காணிப்பு ஆகியவை நிலவுவதாக ட்ரைஸ்மேன் வாதிடுகிறார். எனவே, ஊழல் கண்களுக்குத் தெரிவதாகவும், அதிகம் புகாரளிக்கப்படுவதாகவும், எளிதில் மறைக்க முடியாததாகவும் உள்ளது. இதன் விளைவாக, 'பொறுப்புடைமை' (accountability) மேம்படும் அதே வேளையில், ஊழல் குறித்த 'கண்ணோட்டங்கள்' (perceptions) மோசமடையக்கூடும்.[36]

இந்தியாவின் ஆளுகை வடிவமைப்பிற்கு இது என்ன உணர்த்துகிறது

இந்தியாவின் மிகப்பெரிய தகாத ஆதாயத் தொகுப்புகள் (rent pools) வரலாற்று ரீதியாக எங்கு விருப்புரிமை மிகவும் 'குவிக்கப்பட்ட'

---

[35] Pranab Bardhan and Dilip Mookherjee, 'Capture and Governance at Local and National Levels' 2000 90 American Economic Review 135.

[36] Daniel Treisman, 'What Have We Learned about the Causes of Corruption from Ten Years of Cross–National Empirical Research?' (2007) 10 Annual Review of Political Science 211.

நிலையிலும், விளைவுகள் உள்ளூரிலேயே மிகக் குறைவாகக் காணக்கூடிய வகையிலும் இருந்தனவோ, அங்கேயே அமைந்துள்ளன: உயர்மதிப்புமிக்க ஒதுக்கீடுகள், மைய ஒப்புதல்கள், தேசியக் கொள்முதல், மற்றும் மிகப்பெரும் ஒற்றைத்தன்மை கொண்ட மின்னணுத் தளங்கள் (monolithic digital platforms) ஆகியவை இதில் அடங்கும். எனவே, அதிகாரப் பரவலாக்கத்திற்கான 'நேர்மை சார்ந்த வாதம்' மிகவும் நேரடியானது:

- 'தகாத ஆதாயங்களை' ஒரே தேசியத் தொகுப்பாக வைப்பதற்குப் பதிலாக, பல சிறிய தொகுப்புகளாகப் பிரித்தல்.
- ஒரேயொரு தொலைதூர அதிகாரத்தை நம்பியிருப்பதற்குப் பதிலாக, பொறுப்புடைமை கொண்ட பல மையங்களை உருவாக்குவதன் மூலம் கண்காணிப்பவர்களைப் பெருக்குதல்.
- குடிமக்கள் மேல்நோக்கி மனு அளிப்பதற்குப் பதிலாக, விளைவுகளை நேரடியாகத் தணிக்கை செய்யும் வகையில் 'பொறுப்புடைமைச் சங்கிலிகளைச்' (accountability chains) சுருக்குதல்.

உள்ளூர் அரசியல்வாதிகள் தேசிய அரசியல்வாதிளை விட அதிக அறம் சார்ந்தவர்கள் என்று இவ்வாதம் கருதவில்லை. மாறாக, அது அதற்கு நேர்மாறான ஒன்றைக் கருதுகிறது: அதாவது, அனைத்து அதிகாரமும் தவறாகப் பயன்படுத்தப்படக்கூடியவையே. நிறுவனங்கள் அந்தப் போக்கை 'பெரிதுபடுத்துகின்றனவா' அல்லது 'கட்டுப்படுத்துகின்றனவா' என்பதே கேள்வியாகும். பரவலாக்கப்பட்ட அதிகாரம் ஊழலை முற்றிலுமாக ஒழிப்பதில்லை; ஆனால் அது 'கைப்பற்றுதலைக்' கடினமாக்குகிறது, மறைப்பதை அதிகச் செலவுமிக்கதாக்குகிறது, மற்றும் திருத்தத்தை விரைவாக்குகிறது.

IX. திறனின்மை எனும் பிழையான வாதம்: ஒன்றியத்தின் அவநம்பிக்கை எவ்வாறு மாநிலங்களின் பலவீனத்தை உருவாக்குகிறது

இந்தியாவில் அதிகாரத்தை மையப்படுத்துவதற்கு மீண்டும் மீண்டும் கூறப்படும் ஒரு நியாயப்படுத்தல், திறனின்மை வாதம் (incapacity argument) ஆகும்: அதாவது, மாநில அரசுகளுக்குப் பெரிய பொறுப்புகளை

நிறைவேற்றுவதற்கான நிர்வாக அல்லது தொழில்நுட்பத் திறன் இல்லை என்றும், எனவே அவற்றிற்கு ஒன்றியத்தின் நெருக்கமான கண்காணிப்பு அல்லது மாநிலங்களுக்குப் பதிலாக ஒன்றியமே அப்பணியை ஏற்று நடத்துவதோ (substitution) தேவைப்படுகிறது என்பதுமே அந்த வாதமாகும். பெரும்பாலும் இது ஒரு நடைமுறை எதார்த்தவாதமாக முன்வைக்கப்பட்டாலும், இவ்வாதம் கருத்துருவாக்க ரீதியாகப் பிழையானது மற்றும் நிறுவன ரீதியாகத் தனது நோக்கத்தையே தோற்கடிப்பதாகும். திறன் எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதை இது தவறாகப் புரிந்துகொள்கிறது; பேரளவு செயல்பாட்டின் எதார்த்தங்களைப் (realities of scale) புறக்கணிக்கிறது; இறுதியாக, எதைச் சரிசெய்வதாகக் கூறுகிறதோ அதே பலவீனத்தை மீண்டும் உற்பத்தி செய்கிறது.

இந்திய மாநிலங்கள் என்பவை வெறும் சிறிய நிர்வாக அலகுகள் அல்ல. மக்கள் தொகை, பொருளாதாரப் பன்முகத்தன்மை மற்றும் ஆளுகைச் சிக்கல்கள் ஆகியவற்றில், பல மாநிலங்கள் உலகின் முக்கியத் தேச–அரசுகளுக்கே இணையாக உள்ளன. மகாராஷ்டிராவின் மக்கள் தொகை ஜப்பானுக்கு நிகரானது; தமிழ்நாட்டின் மக்கள் தொகை ஜெர்மனிக்கும், கர்நாடகாவின் மக்கள் தொகை பிரான்ஸிற்கும் இணையானது. உத்தரப் பிரதேசம் மட்டும் ஓர் இறையாண்மை கொண்ட தனி நாடாக இருந்திருந்தால், அது உலகின் ஐந்தாவது அதிக மக்கள் தொகை கொண்ட நாடாகத் திகழ்ந்திருக்கும். இவ்வளவு பிரம்மாண்டமான பரப்பளவை ஆளும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கு ––கல்வி, சுகாதாரம், வேளாண்மை, ஊரக வளர்ச்சி அல்லது நகர்ப்புற வளர்ச்சி ஆகியவற்றை நிர்வகிக்கும் திறன் இயல்பிலேயே இல்லை என்றும்; எனவே அவற்றுக்கு ஒன்றியத்தின் ஊடுருவும், சீரான ஒழுங்குமுறைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் மையத்தில் வடிவமைக்கப்பட்ட திட்டங்கள் தேவை என்றும் கூறுவது – ஜப்பானியர்கள் அல்லது ஐரோப்பியர்களை விட இந்தியர்கள் சுய ஆட்சித் திறன் குறைந்தவர்கள் என்று மறைமுகமாகச் சொல்வதற்கு ஒப்பாகும். இக்கருத்து தேசிய சுயமரியாதைக்கு முரணானது மட்டுமல்ல; எந்த ஒரு நாட்டுப்பற்றாளரும் சகித்துக்கொள்ள முடியாத ஓர் அவதூறும் ஆகும்.

இத்தகைய தந்தைவழிப் போக்கிற்கான (paternalism) தத்துவார்த்த ரீதியான மறுப்பு, இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தின் போதே தெளிவாக முன்வைக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் தங்களது ஏகாதிபத்திய ஆட்சியை, செயல்திறன் மற்றும் தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தினர். மகாத்மா காந்தி இந்தத் தர்க்கத்தை நிராகரித்தார்; நல்லாட்சி என்பது தன்னாட்சிக்கு ஈடாகாது என்று அவர் வலியுறுத்தினார்.

அவரது வாதம் முதன்மையாக நிர்வாகச் செயல்திறன் பற்றியதாக இருக்கவில்லை; மாறாக அது அரசியல் கண்ணியம், தார்மீக வளர்ச்சி மற்றும் பொறுப்பேற்பதன் மூலம் கற்றல் ஆகியவை பற்றியதாகவே இருந்தது. தொலைதூரத்திலிருந்து திணிக்கப்படும் நிர்வாகம், எவ்வளவுதான் தகுதியுடையதாக இருந்தாலும், தன்னாட்சியிலிருந்து விளையும் ஜனநாயக முதிர்ச்சிக்கு ஈடாகாது. இதே புரிதல் ஒன்றிய – மாநில உறவுகளுக்கும் பொருந்தும். விளைவுகளுக்கு அரசியல் பொறுப்பேற்கும் மாநிலங்களே கொள்கைகளை உருவாக்கி, உரிமை கோரி, செயல்படுத்த வேண்டும்; புது தில்லியில் வடிவமைக்கப்படும் தொழில்நுட்ப ரீதியாக வலுவான ஒரு கொள்கை இதற்கு மாற்றாக அமைய முடியாது. மாநிலங்களுக்கு இந்தச் சுயாட்சியை மறுப்பது என்பது, ஒரு காலனிய மனப்போக்கை நீடிக்கச் செய்வதாகும் – அம்மனப்போக்கு மாநிலங்களைப் பங்காளிகளாக (partners) நடத்தாமல் சார்ந்திருப்பவர்களாக (dependents) நடத்துகிறது.

திறன் உருவாக்கப்படுவது: வழங்கப்படுவதல்ல – செயல்வழிக் கற்றல்

நிறுவனத் திறன் எவ்வாறு உருவாகிறது என்பது குறித்த அடிப்படைப் புரிதல் இன்மையே, 'திறனின்மை' வாதத்தின் அடித்தளமாக உள்ளது. மையவாதிகள் (centralists), மாநிலங்கள் பலவீனமானவை என்றும், அதனால் ஒன்றியத்தின் தலையீடு தேவை என்றும் வாதிடுகின்றனர். ஆனால், இந்தத் தலையீடே மாநிலங்கள் பலம்பெறுவதைத் தடுக்கிறது; இது, சார்ந்திருக்கும் நிலையை மீண்டும் மீண்டும் உருவாக்கும் ஒரு சுழற்சியாக மாறிவிடுகிறது.

திறன் என்பது, தனிநபர் சார்ந்ததோ அல்லது நிறுவனம் சார்ந்ததோ, மரபுவழியாகக் கிடைக்கும் ஒரு கொடை அல்ல; அது பயிற்சியின் மூலமே கட்டமைக்கப்படுகிறது. பொறுப்புகளை வழங்கத் தன் பிள்ளைகளை நம்பாத பெற்றோர்கள், அவர்களைச் சார்ந்திருப்பவர்களாகவே ஆக்கிவிடுகிறார்கள். அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க மறுக்கும் தலைமையை உடைய நிறுவனங்கள், பலவீனமான, இடர்களை ஏற்கத் தயங்கும் (risk–averse) பணியாளர்களை உருவாக்குகின்றன. அரசுகளும் இதற்கு விதிவிலக்கல்ல. பொறுப்பு (responsibility), பொறுப்புடைமை (accountability) மற்றும் தவறுகள் செய்வதற்கும் – அவற்றைத் திருத்திக்கொள்வதற்குமான சுதந்திரம் ஆகியவற்றிலிருந்தே திறமை பிறக்கிறது.

இந்தக் கருத்துருவாக்கத்தை, நோபல் பரிசு பெற்ற கென்னத் ஜே. ஆரோ (Kenneth J. Arrow), 'தி எகனாமிக் இம்ப்ளிகேஷன்ஸ் ஆஃப்

லேர்னிங் பை டூயிங்' (The Economic Implications of Learning by Doing)[37] என்ற தனது ஆய்வில் வரையறுத்தார். உற்பத்தித்திறனும் ஆற்றலும் நிலையான பண்புகள் (static attributes) அல்ல; அவை திரண்ட அனுபவத்தின் (cumulative experience) விளைவுகள் என்று ஆரோ மெய்ப்பித்தார். கற்றல் என்பது செயல்பாட்டின் மூலமே நிகழ்கிறது; திறன் என்பது செய்வதன் மூலமே பெறப்படுகிறது. கூட்டாட்சித் தத்துவத்திற்கு இதைப் பொருத்தினால், ஆளுகைத் திறனை ஒன்றியத்தால் தானமாக வழங்க முடியாது என்பது தெளிவாகும். உண்மையான முடிவெடுக்கும் அதிகாரம், பரிசோதனை முயற்சிகள், பின்னூட்டம் மற்றும் பிழைத் திருத்தம் ஆகியவற்றின் மூலம் மாநிலங்களே அதனை உருவாக்கிக்கொள்ள வேண்டும். மையத்தில் வடிவமைக்கப்பட்ட திட்டங்களை வெறும் அமல்படுத்தும் முகவர்களாக (implementation agencies) மாநிலங்கள் சுருக்கப்படும்போது, இந்தக் கற்றல் வளையமானது (learning loop) துண்டிக்கப்படுகிறது. மாநிலங்களின் திட்டமிடல் நிபுணத்துவம், தொழில்நுட்ப வல்லுநர் அணி மற்றும் கொள்கைசார் புத்தாக்கத் திறன் ஆகியவை நலிவடைந்து, அவற்றிற்கு மாற்றாகப் புது தில்லியின் 'வழிகாட்டு நெறிமுறைகளுக்கு' இணங்கி நடக்கும் மற்றும் அவற்றைச் சார்ந்திருக்கும் ஒரு பண்பாடு அமைகிறது.

நிறுவனக் கோட்பாட்டிலிருந்து பாடங்கள்

நிறுவனக் கோட்பாடும் இம்முடிவிற்கு வலுசேர்க்கிறது. பெரிதும் மையப்படுத்தப்பட்ட 'ஒற்றை வடிவ அமைப்புகளாக' (unitary U-form entities) செயல்பட்டபோது, இருபதாம் நூற்றாண்டின் தொடக்ககாலத் தொழிற்துறை ஜாம்பவான்களான 'ஜெனரல் மோட்டார்ஸ்' (General Motors) மற்றும் 'டுபாண்ட்' (DuPont) ஆகியவை எவ்வாறு வீழ்ச்சியின் விளிம்புக்கே சென்றன என்பதை ஆல்பிரட் சான்ட்லர் (Alfred Chandler), தனது 'ஸ்ட்ராட்டஜி அண்ட் ஸ்ட்ரக்சர்' (Strategy and Structure – 1962) எனும் செவ்வியல் நூலில் விளக்கியுள்ளார். தலைமையகத்தில் இருந்த நிர்வாகிகள், செயல்பாட்டு விவரங்களில் (operational detail) மூழ்கிப்போயினர்; இதனால் உத்திசார்ந்த முடிவுகளை எடுப்பதில் தேக்கம் (strategic paralysis) ஏற்பட்டது. தலைமையகம் உத்திகள் மற்றும் மூலதன ஒதுக்கீட்டைக் கட்டுப்படுத்திக்கொண்டு, பிரிவுகளுக்குப் போதுமான செயல்பாட்டுத் தன்னாட்சியை வழங்கிய பல்-பிரிவு

---

[37] Kenneth J Arrow, 'The Economic Implications of Learning by Doing' (1962) 29 The Review of Economic Studies 155.

அமைப்பை (multidivisional / M–form structure) ஏற்றுக்கொண்ட பின்னரே இந்நிறுவனங்கள் தப்பிப்பிழைத்தன.

இதனைத் தொடர்ந்து ஆலிவர் வில்லியம்சன் (Oliver Williamson), தனது 'மார்க்கெட்ஸ் அண்ட் ஹையரார்கீஸ்' (Markets and Hierarchies – 1975) நூலில், இத்தர்க்கத்தை முறைப்படுத்தினார். வெற்றிகரமான 'எம்–வடிவ' (M–form) அமைப்புகளாக இருந்தாலும்கூட, தலைமையகம் அதன் பிரிவுகளின் தன்னுரிமையில் (divisional discretion) வரம்புமீறித் தலையிடும்போது, ஊக்கிகளும் (incentives) தகவல் ஓட்டமும் சிதைக்கப்பட்டு, அவை தோல்வியடைகின்றன என்று அவர் எச்சரித்தார்.

இந்தியக் கூட்டாட்சியுடனான இதன் ஒப்புமை வியக்கத்தக்கது. சான்ட்லரின் மொழியில் சொல்வதானால், ஒன்றியம் தொடர்ந்து ஒரு 'ஒற்றை வடிவ' (U–form) அமைப்பைப் போலவே செயல்படுகிறது; அது, மிகுந்த பன்முகத்தன்மை கொண்ட 28 மாநிலங்களின் செயல்பாட்டு விவரங்களை 'நுண் மேலாண்மை' செய்ய முயற்சிக்கிறது. இதன் விளைவு: மையத்தில் நெரிசலும், விளிம்புகளில் நலிவும் (atrophy) ஏற்படுகின்றன.

பீட்டர் டிரக்கர் (Peter Drucker), **'கான்செப்ட் ஆஃப் தி கார்ப்பரேஷன்'** (Concept of the Corporation – 1946) நூலில் இந்த ஆபத்தைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறார்:

> *"வலுவான மையத் தலைமைத்துவம் இல்லாவிட்டால் எந்த நிறுவனமும் ஒன்றிணைந்து இருக்க முடியாது; ஆனால் தானாகவே பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கும் வலுவான மற்றும் தன்னாட்சி பெற்ற உள்ளூர் தலைமைத்துவம் இல்லாவிட்டால், எந்த நிறுவனமும் முறையாகச் செயல்பட முடியாது... ஒவ்வொரு பெரிய அமைப்பிலும், முன்முயற்சிகளை ஊக்கப்படுத்தாமல், இணங்கிப்போவதை (conformity) மட்டுமே உயர்வாகக் கருதும் ஒரு இயற்கையான போக்கு உள்ளது."* [38]

அதிகப்படியான அதிகாரக் குவிப்பு, தன்முனைப்பை நசுக்கி, இணங்கி நடக்கும் போக்கை ஊக்குவிக்கிறது–இது, சிக்கலான ஆளுமை கோரும் பண்புகளுக்கு நேர் எதிரானது.

சீனா: ஓர் உலகளாவிய எதிர்–சான்று

சூ செங்காங் (Xu Chenggang) போன்ற அறிஞர்கள், சீனாவின் ஆளுகை மாதிரியை "வட்டார அளவில் பரவலாக்கப்பட்ட அதிகாரத்துவ ஆட்சி"

---

[38] Peter F Drucker, *Concept of the Corporation* (John Day Company New York 1946) 29, 33.

(Regionally Decentralized Authoritarianism – RDA)[39] என்று வகைப்படுத்தியுள்ளனர். அங்கு அரசியல் அதிகாரம் மையத்தில் இறுக்கமாகக் குவிக்கப்பட்டிருந்தாலும், பொருளாதார நிர்வாகம் குறிப்பிடத்தக்க அளவில் பரவலாக்கப்பட்டுள்ளது. மாகாண மற்றும் உள்ளாட்சி அரசுகள், நிலப் பயன்பாடு, தொழிற்துறைக் கொள்கை, முதலீட்டு வசதிகள் மற்றும் செயல்படுத்தல் ஆகியவற்றில் கணிசமான தன்னாட்சியைப் பயன்படுத்துகின்றன. இந்தப் பரவலாக்கம், குறிப்பாக 1978–ம் ஆண்டு சீர்திருத்தங்களுக்குப் பிறகு, ஆளுகை எல்லைகளுக்கு இடையிலான கடுமையான போட்டியை உருவாக்கியது; இது நிர்வாக, நிதி மற்றும் ஒழுங்குமுறைத் திறனை வளர்த்துக்கொள்ள அவர்களை நிர்பந்தித்தது. தேசத்தைப் பலவீனப்படுத்துவதற்குப் பதிலாக, பரிசோதனை முயற்சிகள் மற்றும் கற்றல் மூலம், பரவலாக்கப்பட்ட பொருளாதார ஆளுகை அதனை வலிமைப்படுத்தியது. சீனாவின் வளர்ச்சிக்கு, இக்கட்டமைப்பு மிக முக்கியக் காரணமாக அமைந்தது.

இந்த எடுத்துக்காட்டின் முக்கியத்துவம், சீன பாணி சர்வாதிகாரத்தை ஆதரிப்பதில் இல்லை; மாறாக, ஒரு செயல்பாட்டு முரண்பாட்டைச் சுட்டிக்காட்டுவதில்தான் உள்ளது. அரசியல் பன்முகத்தன்மையை ஆழமான சந்தேகத்துடன் பார்க்கும் ஓர் ஆட்சிமுறை, பொருளாதார அதிகாரத்தைப் பொறுத்தவரைத் தனது மாகாண அரசுகளை நம்பிப் பொறுப்பளித்தது. இதற்கு நேர்மாறாக, கூட்டாட்சித் தத்துவங்களின் அடிப்படையில் நிறுவப்பட்ட அரசமைப்புச் சட்டம் சார்ந்த மக்களாட்சி நாடான இந்தியா – தனது சொந்த மாநிலங்களிடம் இத்தகைய தன்னாட்சியை ஒப்படைக்க முடியாது என்ற அனுமானத்துடனேயே பெரும்பாலும் செயல்படுகிறது.

இதிலிருந்து கிடைக்கும் பாடம் தெளிவானது: திறன் என்பது, முன்கூட்டிய நம்பிக்கையின் அடிப்படையில் வெளிப்படுவதல்ல; அது பொறுப்பை வழங்குவதன் மூலமே உருவாக்கப்படுகிறது. மாநிலங்களிடம் உண்மையான அதிகாரங்கள், ஊக்கிகள் மற்றும் பொறுப்புடைமை ஒப்படைக்கப்படும்போது, அவற்றைப் பயன்படுத்துவதற்கான திறமையை வளர்த்துக்கொள்ள அவை நிர்பந்திக்கப்படுகின்றன. அத்தகைய நம்பிக்கையை வைக்க மறுக்கும் ஓர் ஒன்றியம், அதன் நோக்கத்திற்கு நேர்மாறான விளைவையே – அதாவது, அதிகப்படியான மையப்படுத்தலால் ஏற்படும் தேக்கத்தையே – அடையும் அபாயம்

---

[39] Chenggang Xu, 'The Fundamental Institutions of China's Reforms and Development' (2011) 49 Journal of Economic Literature 1076.

உள்ளது. பங்காளர்களைச் சார்ந்திருப்பவர்களாக மாற்றுவதன் மூலம், ஒன்றியம் மாநிலங்களை மட்டுமல்ல, குடியரசையும் சேர்த்தே பலவீனப்படுத்துகிறது.

X. 'கட்டுப்பாடு' எனும் பிழையான வாதம்: கட்டளையை விட ஒருங்கிணைப்பு ஏன் சிறப்பாகச் செயல்படுகிறது

சமூகநீதி குறித்த வாதமானது அதிகாரக் குவிப்பிற்குத் தார்மீகப் பாதுகாப்பை வழங்குகிறது என்றால், 'கட்டுப்பாடு' (Control) குறித்த வாதமானது அதற்கு மிகத் தொடர்ச்சியான தொழில்நுட்பரீதியான நியாயத்தை வழங்குகிறது. இவ்வாதம் நேரடியானது: ஓர் ஒன்றிணைந்த, சிக்கலான பொருளாதாரத்தின் உறுப்பு அலகுகள் (constituent units), தங்களுக்குள் தாங்களே பேச்சுவார்த்தை நடத்திக்கொள்ள விடப்பட்டால், அப்பொருளாதாரம் செயல்பட முடியாது. இருபத்தெட்டு மாநிலங்களும் தனித்தனியாக மின்சாரத்தை இழுத்துக்கொண்டால், ஒரு மின் தொகுப்பு (Power grid) எவ்வாறு நிலைத்தன்மையில் இருக்க முடியும்? மேல்மடை மாநிலங்கள் (Upstream States) அணைகளைக் கட்டினால் நதிகள் எவ்வாறு சமமாகப் பாய முடியும்? ஒவ்வொரு மாநிலமும் வெவ்வேறு வரிகளை விதித்தால் சந்தைகள் எவ்வாறு செயல்பட முடியும்?

இதற்கு அதிகாரக் குவிப்பு ஆதரவாளர்கள் அளிக்கும் பதில் 'படிநிலை அமைப்பு' என்பதாகும். குழப்பம், பொறுப்பின்றிப் பயன் துய்த்தல் (Free-riding) மற்றும் 'அண்டை அயலாரை வறியவராக்கும்' கொள்கைகளைத் தடுக்க, மேலிருந்து தீர்வுகளைத் திணிக்க அதிகாரம் படைத்த ஒரு கட்டளை அதிகார அமைப்பு – ஒரு லெவாயதன் (Leviathan) – அவசியமாகிறது. இந்த உலகப்பார்வையில், மாநிலங்கள் என்பவை உராய்வையும், குறுகிய மனப்பான்மையையும் (Parochialism) குறிக்கின்றன; ஒன்றியம் என்பது உறுதியான முடிவெடுக்கும் திறனையும், பகுத்தறிவார்ந்த செயல் ஓட்டத்தையும் குறிக்கிறது. ஆதிக்கம் செலுத்தும் ஒரு மையம் இல்லையெனில், இந்தியா நிர்வாகச் சீர்குலைவை நோக்கிச் சரிந்துவிடும் என்பதே இவ்வாதத்தின் சாராம்சம்.

இருப்பினும், இந்த அனுமானம் ஒரு "வகைப்பாட்டுப் பிழையை" அடிப்படையாகக் கொண்டது. இது ஒருங்கிணைப்பை (coordination) கட்டளையோடு (command) குழப்பிக் கொள்கிறது; அதாவது, நடத்தைகளை ஒருமுகப்படுத்துவது என்பது அடக்குமுறை சார்ந்த அதிகாரப்

படிநிலையால் மட்டுமே சாத்தியம் என்று இது கருதுகிறது. நவீன நிறுவனக் கோட்பாடு, ஒப்பீட்டுக் கூட்டாட்சி நடைமுறை மற்றும் இந்தியாவின் சொந்த அரசமைப்பு அனுபவம் ஆகியவை இதற்கு நேர்மாறானதை நிரூபிக்கின்றன: மையக் கட்டுப்பாட்டை விட, பேச்சுவார்த்தை மூலம் உருவாக்கப்பட்ட விதிகள், பகிரப்பட்ட தரநிலைகள் மற்றும் இருசாராார் நலன் ஆகியவற்றின் மூலமே நீடித்த ஒருங்கிணைப்பு பெரும்பாலும் அடையப்படுகிறது.

உலகளாவிய அரசாங்கம் இன்றி நிலவும் அனைத்துலக ஒழுங்கு

'ஒழுங்குமுறைக்கு ஒரு மையக் கட்டளை அதிகாரம் தேவை' எனும் வாதத்திற்கு மிக வலிமையான மறுப்பு, அனைத்துலக அமைப்பிலேயே உள்ளது. அங்கு உலகளாவிய இறையாண்மை கொண்ட அமைப்பு ஏதுமில்லை – வரி விதிக்கும் அல்லது கட்டாயப்படுத்தும் அதிகாரம் கொண்ட உலக அரசாங்கம் எதுவும் இல்லை. இருப்பினும், அனைத்துலக அரங்கு என்பது ஹாப்ஸ் (Hobbes) வர்ணித்ததைப் போன்ற 'அனைவரும் அனைவருக்கும் எதிரான போர்க்களம்' அல்ல. உடன்படிக்கைகள் (Treaties), மரபொழுங்குகள் (Conventions), நெறிமுறைகள் மற்றும் பன்னோக்கு நிறுவனங்கள் வாயிலாக, ஏறத்தாழ இருநூறு இறையாண்மை கொண்ட நாடுகள், நவீன வாழ்வின் மிகச் சிக்கலான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் திறம்பட ஒருங்கிணைந்து செயல்படுகின்றன.

'உலக விமானப் போக்குவரத்து அமைச்சகம்' என்று ஒன்று இல்லாமலேயே, பகிரப்பட்ட பாதுகாப்புத் தரநிலைகள் மூலம் வணிக ரீதியிலான விமானப் போக்குவரத்து எல்லைகளைக் கடந்து தடையின்றி இயங்குகிறது. சர்வதேச அமைப்புகள் மூலமாக நாடுகள் தாமாக முன்வந்து நெறிமுறைகளைப் பேச்சுவார்த்தை மூலம் வகுத்துக்கொள்வதால், தொலைத்தொடர்புத் துறை உலக அளவில் செயல்படுகிறது. கடல்சார் போக்குவரத்து, அஞ்சல் சேவைகள், மின் தொகுப்பு இணைப்புகள் மற்றும் உலக வர்த்தகம் ஆகிய அனைத்தும் மையக் கட்டளையைச் சார்ந்திருக்காமல், விதிசார் ஒருங்கிணைப்பையே (Rule–based coordination) நம்பியுள்ளன. பிணக்குகள் எழும்போதும், அவை ஒருதரப்பாகத் திணிக்கப்படாமல், தீர்ப்பாயங்கள் மற்றும் பேச்சுவார்த்தை மூலமான தீர்வுகள் வழியாகவே பெரும்பாலும் கையாளப்படுகின்றன.

கடுமையாக முரண்படும் நலன்களைக் கொண்ட ஏறத்தாழ 200 இறையாண்மை மிக்க நாடுகள், ஒரு 'உலக லெவாயதன்' (Global Leviathan) இல்லாமலேயே ஒருங்கிணைந்து செயல்பட முடியுமென்றால், பொதுவான அரசமைப்பு, குடியுரிமை மற்றும் நீதித்துறையால்

பிணைக்கப்பட்டுள்ள 28 இந்திய மாநிலங்களை நிர்வகிக்க – பல்கலைக்கழகங்கள், சுகாதாரம், உள்கட்டமைப்பு அல்லது வரிவிதிப்பு ஆகியவற்றைக் கையாள – கடுமையான கட்டுப்பாடுகளைத் திணிக்கும் ஓர் ஒன்றியம் தேவை என வாதிடுவது ஏற்கவியலாதது. இந்தியக் கூட்டாட்சி ஒருங்கிணைப்பு எதிர்கொள்வது, அதைவிடக் குறைவான சவால் நிறைந்த ஒன்றே.

இதிலிருந்து நாம் கற்கும் பாடம் மிகத் தெளிவானது: சமமானவர்களுக்கு இடையிலும், நெறிமுறை சார்ந்த ஒருங்கிணைப்பால் (Protocol–based coordination) ஒழுங்கை நிலைநிறுத்த முடியும்.

ஏன் படிநிலை அமைப்பு தேவையற்றது

நவீன நிறுவனப் பொருளியல், அதிகாரப் படிநிலை என்னும் கருத்தாக்கத்தை மேலும் வலுவிழக்கச் செய்கிறது.

முதலாவதாக, நோபல் பரிசு பெற்ற ரொனால்ட் கோஸ் (Ronald Coase), 'தி நேச்சர் ஆஃப் தி ஃபர்ம்' (1937) (The Nature of the Firm,1937)[40] மற்றும் 'தி ப்ராப்ளம் ஆஃப் சோஷியல் காஸ்ட்' (1960) (The Problem of Social Cost, 1960)[41] ஆகிய தனது ஆய்வுகளில், பரிவர்த்தனைச் செலவுகளைக் குறைத்து உரிமைகளைத் தெளிவாக வரையறுக்கும் நிறுவனங்கள் இருக்கும் பட்சத்தில், தனித்தியங்கும் தரப்புகளே பேச்சுவார்த்தைகள் மூலம் ஒருங்கிணைப்புச் சிக்கல்களையும் புறவிளைவுகளையும் தீர்த்துக் கொள்ள முடியும் என்று மெய்ப்பித்துள்ளார். நீர்ப் பகிர்வு, உள்கட்டமைப்புப் பயன்பாடு அல்லது சுற்றுச்சூழல் தாக்கங்கள் போன்ற சிக்கல்களுக்கு, ஒரு இறையாண்மைமிக்க கட்டளையிடுபவர் இயல்பாகவே தேவைப்படுவதில்லை; மாறாக, பேச்சுவார்த்தைக்கும் அமலாக்கத்திற்குமான நம்பகமான கட்டமைப்புகளே தேவைப்படுகின்றன. பேச்சுவார்த்தைக்கான அமைப்புகள் தோல்வியடையும்போது மட்டுமே, கட்டளையிடும் முறை அவசியமாகிறது.

இரண்டாவதாக, எலினோர் ஆஸ்ட்ரோம் (Elinor Ostrom), தனது 'கவர்னிங் தி காமன்ஸ்' (1990) (Governing the Commons,1990) நூலில், 'பொதுவளங்களின் சீரழிவு' என்பது தவிர்க்க முடியாத ஒன்று என்ற கருத்தைத் தீர்க்கமாக மறுத்தார். பாசன அமைப்புகள், காடுகள் மற்றும் மீன்வளம் எனப் பல்வேறு துறைகளிலும், மையப்படுத்தப்பட்ட அதிகாரத்துவக் கட்டுப்பாட்டை விட, சமூகங்கள் தாமாகவே உருவாக்கிய

---

[40] Ronald Coase, 'The Nature of the Firm' (1937) 4(16) Economica 386.

[41] Ronald Coase, 'The Problem of Social Cost' (1960) 3 Journal of Law and Economics 837.

விதிகள் சார்ந்த அமைப்புகள் சிறப்பாகச் செயல்படுவதை அவர் சுட்டிக்காட்டினார். இங்கு விதிகளுக்குக் கட்டுப்படுதல் என்பது வற்புறுத்தலினால் வருவதில்லை; மாறாக நியாயத்தன்மை, பங்கேற்பு மற்றும் விதிகளின் மீதான கூட்டு உரிமை உணர்வு ஆகியவற்றிலிருந்தே பிறக்கிறது.

இப்புரிதல்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரு மையக் கோட்பாட்டை நிறுவுகின்றன: ஒருங்கிணைப்புத் தோல்விகள் என்பவை நிறுவனத் தோல்விகளே, படிநிலை அமைப்பின் அவசியத்திற்கான சான்றுகள் அல்ல.

மைய ஒழுங்குமுறை ஏன் செயல்திறன் குன்றிப்போகிறது

ஒருங்கிணைப்பு என்பதே இலக்காகக் கொள்ளப்பட்டாலும், அதிகாரக் குவிப்பானது இயல்பாகவே 'ஒழுங்குமுறைக் கட்டளை' முறையையே நாடுகிறது. இப்போக்கு, மூன்று விதமான கட்டமைப்பு ரீதியான நோய்க்கூறுகளை உருவாக்குகிறது: விதிமுறைப் பெருக்கம் (Rule inflation), அறிவுசார் பற்றாக்குறை (Knowledge deficits) மற்றும் நெறிமுறைப் பிடிப்பு (Regulatory capture).

ஒழுங்குமுறை பெருக்கம் மற்றும் அதிகாரத்துவ ஊக்கிகள் (Regulatory inflation and bureaucratic incentives): ஒழுங்குமுறை அமைப்புகள் ஏன் தடையின்றி விரிவடைகின்றன என்பதைப் பொதுத் தேர்வு கோட்பாட்டு ஆய்வுகள் (Public–choice scholarship) விளக்குகின்றன. வில்லியம் நிஸ்கானென் (William Niskanen), தனது 'பீரோக்ரசி அண்ட் ரெப்ரசென்டேட்டிவ் கவர்ன்மென்ட்' (Bureaucracy and Representative Government, 1971) என்ற நூலில், அதிகாரத்துவ அமைப்புகள் நடுநிலையான பொது சேவகர்களாகச் செயல்படுவதில்லை; மாறாக, அவை வரவுசெலவுத் திட்டத்தையும் அதிகாரத்தையும் பெருக்கிக்கொள்ளும் அமைப்புகளாகவே செயல்படுகின்றன என்று வாதிட்டார். தனியார் நிறுவனங்களைப் போலன்றி, ஒழுங்குமுறை அமைப்புகள் சந்தைக் கட்டுப்பாட்டை எதிர்கொள்வதில்லை; இவற்றின் வெற்றியானது அதிகார எல்லை விரிவாக்கம், பணியாளர் எண்ணிக்கை மற்றும் உருவாக்கப்படும் விதிகளின் அளவு ஆகியவற்றைக் கொண்டே அளவிடப்படுகிறது. இங்கு ஒழுங்குமுறை என்பதே ஒரு முழுமையான இலக்காக மாறிவிடுகிறது.

இந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில், யூஜின் பார்டாக் (Eugene Bardach) மற்றும் ராபர்ட் ககன் (Robert Kagan) ஆகியோர் 'கோயிங் பை தி புக்' (Going by the Book: The Problem of Regulatory Unreasonableness, 1982) என்ற நூலில், "ஒழுங்குமுறை இறுக்கம்" (Regulatory Ratchet)

என்பதை விவரித்தனர்: விதிகளைச் சேர்ப்பது அரசியல் ரீதியாக எளிதானது, ஆனால் அவற்றை நீக்குவது நிறுவன ரீதியாகக் கடினமானது. ஏதேனும் ஓர் இடத்தில் தோல்வி ஏற்படும்போதெல்லாம், அதனைச் சரிசெய்வதாகக் கூறிக்கொண்டு மற்றொரு அடுக்கு விதிமுறைகள் உருவாக்கப்படுகின்றன; ஆனால் தேவையற்ற பழைய விதிகளைக் களைவதற்கு மிகக் குறைவான ஊக்கிகளே உள்ளன. இதன் விளைவாக, 'ஒழுங்குமுறைக் குவிப்பு' (regulatory accumulation) ஏற்படுகிறது – அதாவது, முன்னெச்சரிக்கை அல்லது பாதுகாப்பு என்ற பெயரில் நியாயப்படுத்தப்பட்டு, இணக்க நிபந்தனைகள் (compliance requirements) ஒரு பெரும் சுமையாகத் தொடர்ந்து பெருகிக்கொண்டே செல்கின்றன. இந்தியாவில் பல்கலைக்கழக மானியக் குழு (UGC)[42], அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் குழு (AICTE)[43] மற்றும் தேசிய மருத்துவ ஆணையம் (NMC)[44] ஆகியவை வெளியிடும், மென்மேலும் விரிவடைந்து செல்லும் ஒழுங்குமுறைத் தொகுப்புகள், 'இறுக்கிக்கொண்டே செல்லும் இந்தச் செயல்முறை' எவ்வாறு இயங்குகிறது என்பதற்குச் சிறந்த சான்றுகளாகும். இவை கட்டமைப்பு ரீதியான பலவீனங்களைச் சீர்செய்வதற்குப் பதிலாக, கட்டுப்பாடுகளைப் பன்மடங்கு பெருக்கி, நிறுவனங்கள் மீது சுமையை ஏற்றுகின்றனவே அன்றி, செயல்விளைவுகளை மேம்படுத்துவது அரிதாகவே உள்ளது.

அறிவுப் பற்றாக்குறையும் 'ஒரே மாதிரியான' அணுகுமுறையும்: மிகச் சிறந்த நோக்கத்துடனேயே செயல்பட்டாலும், ஓர் ஆழமான கட்டமைப்பு ரீதியான வரம்பை ஒழுங்குமுறைப்படுத்துவோர் எதிர்கொள்கின்றனர்: மையத்தில் இருந்துகொண்டு களநிலவரங்கள் அனைத்தையும் அறிவது என்பது இயலாத காரியம். ஃபிரெட்ரிக் ஹயக் (Friedrich Hayek), 'தி யூஸ் ஆஃப் நாலெட்ஜ் இன் சொசைட்டி' (The Use of Knowledge in Society, 1945) என்ற தனது ஆய்வில், சிக்கலான அமைப்புகளை நிர்வகிக்கத் தேவையான தகவல் என்பது சூழல் சார்ந்த அறிவு (contextual knowledge) – அதாவது "காலம் மற்றும் இடத்தின் குறிப்பிட்ட சூழ்நிலைகள்" சார்ந்தது – என்றும், அதனை மையத்தில் திரட்ட இயலாது என்றும் மெய்ப்பித்தார். எனவே, சீரான விதிகள் முற்றிலும் வேறுபட்ட கள நிலவரங்களை, ஏதோ அனைத்தும் ஒன்றுதான் என்பதுபோலவே கருதிச் செயல்படுகின்றன.

---

[42] University Grants Commission.

[43] All India Council for Technical Education.

[44] National Medical Commission.

இந்தக் கருத்தை ஜேம்ஸ் சி. ஸ்காட் (James C. Scott), 'சீயிங் லைக் எ ஸ்டேட்' (Seeing Like a State, 1998) என்ற நூலில் மிகத் தெளிவாக விளக்கினார். நில உரிமை, பயிர்கள், உற்பத்தி முறைகள் மற்றும் நிர்வாகப் பிரிவுகளைத் தரப்படுத்துவதன் மூலம், அரசுகள் சமூகத்தை தங்களுக்குப் புரியும் வகையில் எளிமைப்படுத்த முயல்கின்றன என்பதை ஸ்காட் சுட்டிக்காட்டினார். இத்தகைய சுருக்கங்கள், 'மெட்டிஸ்' (metis) எனப்படும் உள்ளூர் மக்களின் நடைமுறை ஞானத்தை அழித்துவிடுகின்றன. மக்கள் தங்கள் சிக்கலான சூழலைக் கையாள்வதற்குப் பயன்படுத்தும் முறைசாரா அறிவு இதுவாகும். இதனை அழிப்பதன் விளைவு, வெறும் செயல்திறனின்மை மட்டுமல்ல; மிகத் தீவிரமான சூழல்களில், அது முழுமையான தோல்வியாகவும் முடிகிறது.

ஒழுங்குமுறை அமைப்பைக் கைப்பற்றுதல் மற்றும் ஒருங்கிணைந்த நலன்கள்: அரசாங்க ஒழுங்குமுறையானது, ஒருங்கிணைந்த நலன்கள் கொண்ட குழுக்களால் எளிதில் கைப்பற்றப்படக்கூடிய அபாயத்தைக் கொண்டுள்ளது. ஜார்ஜ் ஸ்டிக்லர் (George Stigler), 'தி தியரி ஆஃப் எகனாமிக் ரெகுலேஷன்' (The Theory of Economic Regulation, 1971) என்ற நூலில், ஒழுங்குமுறை என்பது அரிதாகவே தொழில்துறையின் மீது திணிக்கப்படுகிறது; மாறாக, அது பெரும்பாலும் அத்தொழில்துறையினாலேயே விரும்பிப் பெறப்படுகிறது என்று வாதிட்டார். சந்தை நுழைவுத் தடைகள், மானியங்கள், தரநிலைகள் மற்றும் விலையைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஆகியவற்றை அரசே கட்டுப்படுத்துவதால், தங்களுக்குச் சாதகமாக ஒழுங்குமுறை அமைப்புகளின் மீது செல்வாக்குச் செலுத்த நிறுவனங்கள் முற்படுகின்றன. காலப்போக்கில், ஒழுங்குமுறைப்படுத்துவோர் தாங்கள் மேற்பார்வையிடும் அதே தொழில்துறையினரின் நலனோடு ஒன்றிப்போகின்றனர்; இதனால் விதிகளை அமல்படுத்துவது நீர்த்துப்போகிறது; அத்துறையில் ஏற்கனவே ஆதிக்கம் செலுத்தும் நிறுவனங்கள் பாதுகாக்கப்படுகின்றன; போட்டி கட்டுப்படுத்தப்படுகிறது.

நடுநிலைமை மீதான ஐயப்பாடு: ஒன்றியம் நல்லெண்ணத்துடன் செயல்பட்டாலும்கூட, அதுவும் ஓர் அரசியல் தரப்பாக இருக்கும்போது, அதன் நடுநிலைமை ஐயத்திற்குரியதாகிறது. நதிநீர், நிதிப் பகிர்வுகள், உள்கட்டமைப்பு அமைவிடம் அல்லது ஒழுங்குமுறை ஒப்புதல்கள் தொடர்பாக மாநிலங்களுக்கு இடையே எழும் பிணக்குகளில் – பிணக்கில் உள்ள ஒரு தரப்புடன் ஒன்றியமும் அரசியல் ரீதியாகச் சார்ந்திருக்கும் நிலையில் – ஒன்றியத்தின் தலையீடு தவிர்க்கமுடியாத வகையில் ஒரு கட்சிச் சார்புப் பார்வையுடனேயே அணுகப்படுகிறது.

வழிவகை செய்தல் அல்லது பின்னேற்பளித்தல் ஆகிய பணிகளுக்குள் மட்டும் ஒன்றியம் தன்னை சுருக்கிக்கொண்டு, மாநிலங்களுக்கு இடையே பேச்சுவார்த்தை மூலம் உருவாக்கப்படும் 'கிடைமட்ட ஏற்பாடுகள்' (Horizontal arrangements), அரசியல் சார்பு குறித்த ஐயங்களைக் குறைப்பதாலேயே அதிக ஏற்புடைமையை பெறுகின்றன. கூட்டாட்சி ஒருங்கிணைப்பில், அதிகாரத்திற்கு இணையான முக்கியத்துவத்தை நம்பகத்தன்மையும் கொண்டுள்ளது.

நடைமுறையில் 'மையக் கட்டளை' முறையின் தோல்வி

இந்தியாவின் சொந்த அனுபவமே, கட்டளை சார்ந்த ஒருங்கிணைப்பின் (command–centric coordination) பலவீனங்களை வெளிப்படுத்துகிறது.

- *பல்கலைக்கழக மானியக் குழு (UGC)*: ஒன்றியப் பட்டியலின் 66–வது இனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "தரநிலைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்ணயித்தல்" எனும் தனது அரசமைப்புச் சார்ந்த பங்கை மீறி வெகுதூரம் சென்றுவிட்ட பல்கலைக்கழக மானியக் குழு, பல்கலைக்கழகங்களின் மீது எங்கும் ஊடுருவிய 'நுண் மேலாண்மையை' திணித்துள்ளது. இதனால், சிறப்பான செயல்பாட்டிற்குத் தேவையான தன்னாட்சியைப் பல்கலைக்கழகங்கள் இழந்துள்ளன. இந்த அதிகப்படியான ஒழுங்குமுறை, இந்தியப் பல்கலைக்கழகங்களைப் புத்தாக்க மையங்களாக செயல்படவிடாமல், வெறும் தேர்வு மையக் கற்பித்தல் அமைப்புகளாகக் குறைத்துவிட்டது. இதன் விளைவுகள் அதிர்ச்சியளிக்கின்றன: 2026–ஆம் ஆண்டின் 'டைம்ஸ் உயர் கல்வித் தரவரிசையில்' (Times Higher Education Rankings) முதல் 200 இடங்களுக்குள் எந்த இந்திய நிறுவனமும் இல்லை; 2026–ஆம் ஆண்டின் 'கியூ.எஸ். உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையில்' (QS World University Rankings) மூன்று நிறுவனங்கள் மட்டுமே முதல் 200 இடங்களுக்குள் உள்ளன; 2025–ஆம் ஆண்டின் 'ஷாங்காய் தரவரிசையில்' (Shanghai Ranking) முதல் 500 இடங்களுக்குள் ஒன்று கூட இல்லை.
- *தேசிய மருத்துவ ஆணையம் (NMC)*: தொடர்ந்து விரிவடையும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பு இருந்தும், தேசிய மருத்துவ ஆணையமோ – அல்லது அதற்கு முந்தைய இந்திய மருத்துவக் கவுன்சிலோ – சிறந்த தரத்தை வழங்கவில்லை. 'QS உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை 2025' (உயிரியல் மற்றும்

மருத்துவம்)–ல் முதல் 200 இடங்களில் எந்த இந்தியப் பல்கலைக்கழகமும் இல்லை. நியூஸ்வீக்–ஸ்டாடிஸ்டா "உலகின் சிறந்த மருத்துவமனைகள் 2025" பட்டியலின் முதல் 250 இடங்களில் மூன்று இந்திய மருத்துவமனைகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. இதற்கிடையில், தகுதி வரம்புகள் அரித்துப்போயின: நீட் – இளநிலை (NEET–UG)[45] கட்–ஆஃப் மதிப்பெண்கள் 16–23 விழுக்காடு அளவிலேயே உள்ளன. சில சுழற்சிகளில், விலையுயர்ந்த தனியார் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழக இடங்கள் காலியாக இருப்பதைத் தடுப்பதற்காக, நீட் – முதுநிலை / நீட் – உயர்சிறப்பு (NEET–PG[46]/ NEET–SS[47]) கட்–ஆஃப் பூஜ்ஜியச் சதமானமாகக் (zero percentile) குறைக்கப்பட்டது. கடுமையான கட்டுப்பாடு இருந்தும் ஒழுங்குமுறை தோல்வியடைந்ததையே இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

- *நதிநீர்ப் பூசல்கள்*: அரசமைப்புச் சட்டப்பிரிவு 262–ன் கீழ், மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர்ப் பூசல்களுக்குத் தீர்வு காண்பதற்கு பல பத்தாண்டுகள் ஆகின்றன. இத்தீர்ப்புகள், உள்ளூர் மக்களின் மரபுசார் அறிவை (metis) மதிக்காத, மேலிருந்து திணிக்கப்பட்ட (top–down) முடிவுகளாகவே பார்க்கப்படுகின்றன; அரசியல் ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படாததால், இவை அடிக்கடி எதிர்க்கப்படுகின்றன.

- *சரக்கு மற்றும் சேவை வரி (GST) அனுபவம்*: சரக்கு மற்றும் சேவை வரி அவை (GST Council) என்பது கூட்டுறவுக் கூட்டாட்சியின் (cooperative federalism) வெற்றியாகப் பலராலும் புகழப்பட்டாலும், ஒன்றியத்தின் ஆதிக்கமே அங்கு மேலோங்கியுள்ளது. வலுவான மறுப்பதிகாரம் (veto power), நிகழ்ச்சி நிரல் மீதான கட்டுப்பாடு மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி இணையதள வலைப்பின்னல் (GST Network) மேலாண்மை ஆகியவற்றின் மூலம் ஒன்றியத்தின் கை ஓங்கியிருப்பது, ஒருங்கிணைப்பைத் தொடர்ந்து உராய்வாக மாற்றியுள்ளது. 2020 கோவிட் நெருக்கடியின்போது, "கடவுளின் செயல்" (Act of God) என்று காரணம் கூறி, சட்டரீதியாக வழங்கவேண்டிய

---

[45] National Eligibility cum–Entrance Test (Under–Graduate).

[46] National Eligibility cum–Entrance Test (Post–Graduate).

[47] National Eligibility cum–Entrance Test (Super–Speciality).

இழப்பீட்டுத் தொகையை ஒன்றியம் தாமதப்படுத்தியபோது, ஒருங்கிணைப்புக்குத் தேவையான நம்பிக்கையே தகர்க்கப்பட்டது.

ஒன்றியம் ஒரு தலைமை ஆசிரியராகச் செயல்படும்போது, மாநிலங்கள் அடங்காத மாணவர்களைப் போலவே செயல்படுகின்றன! கட்டளை, எதிர்ப்பையே வளர்க்கும்; ஒருங்கிணைப்புக்கு இசைவு அவசியம்.

மாற்று வழி: கிடைமட்ட ஒருங்கிணைப்பு (The Alternative: Horizontal Coordination)

அதிகாரப் பரவலாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட உண்மையான மாற்று வழி என்பது 'கூட்டுறவுக் கூட்டாட்சி' ஆகும். இதில் மாநிலங்களுக்கு இடையே நேரடியான கிடைமட்டத் தொடர்புகள் இருக்க வேண்டும். ஒன்றியம் ஒரு நடுநிலையான ஏற்பாட்டாளராக (facilitator) மட்டுமே இருக்க வேண்டுமே தவிர, தானே களத்தில் இறங்கி ஆடும் ஒரு மேலாளராகச் (player–manager) செயல்படக்கூடாது.

உலகளாவிய முன்னுதாரணங்கள்

- *அமெரிக்கா*: அமெரிக்க அரசமைப்புச் சட்டம், மாநிலங்கள் தங்களுக்குள் "ஒப்பந்தங்களை" (compacts) உருவாக்கிக்கொள்ள அனுமதிக்கிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு: நியூயார்க் மற்றும் நியூ ஜெர்சி துறைமுக ஆணையம். இது, ஒன்றிய அரசின் தலையீடு இன்றியே, இரண்டு மாநிலங்களால் கூட்டாக நிர்வகிக்கப்படும் ஒரு மிகப்பெரிய உள்கட்டமைப்பு அமைப்பாகும். இதேபோல, கொலராடோ நதிநீர் ஒப்பந்தம், ஏழு வடிநில மாநிலங்களுக்கு (basin states) இடையிலான நீர்ப் பகிர்வை நிர்வகிக்கிறது.
- *ஐரோப்பிய ஒன்றியம்* : ஐரோப்பிய ஒன்றியம், "திறந்த ஒருங்கிணைப்பு முறை" (Open Method of Coordination – OMC) என்பதைப் பயன்படுத்துகிறது. அங்கு சுகாதாரத் துறைக்கென தனியான "ஐரோப்பிய அரசாங்கம்" ஏதுமில்லை. மாறாக, உறுப்பு நாடுகள் பொதுவான அளவுகோல்களை ஒப்புக்கொள்கின்றன; சக நாடுகள் தரும் அழுத்தத்தின் வழியாக, தங்கள் கொள்கைகளை ஒருங்கே சீரமைத்துக் கொள்கின்றன.
- *ஆஸ்திரேலியா* : ஆஸ்திரேலியாவில் "தேசிய அமைச்சரவை" (National Cabinet) என்ற முறை உருவாக்கப்பட்டுள்ளது.

கோவிட்–19 போன்ற நெருக்கடிகளைக் கையாள்வதற்காக, பிரதமரும் மாநில முதலமைச்சர்களும் சமமானவர்களாக அமர்ந்து இங்கு விவாதித்து ஒருங்கிணைக்கின்றனர்.

இந்தியத் தீர்வுகள்

இந்திய அரசமைப்புச் சட்டம் இத்தகைய அணுகுமுறைக்கான அடித்தளங்களை ஏற்கெனவே வழங்கியுள்ளது. புத்துயிர் அளிக்கப்பட்ட 'மாநிலங்களுக்கிடையேயான மன்றம்' (Inter–State Council – அரசமைப்புச் சட்டப்பிரிவு 263), பேச்சுவார்த்தை மற்றும் உடன்பாடுகளுக்கான ஒரு நிரந்தர அவையாகச் செயல்பட முடியும். அரசியல் அமைச்சகங்களின் தலையீட்டிலிருந்து காக்கப்பட்ட சுயாதீனமான ஒழுங்குமுறை அமைப்புகள் – மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்புத் துறைகளில் உள்ளது போல – ஒருங்கிணைப்பை (coordination) வெறும் கட்டளை அதிகாரமாகச் (command) சிதைத்துவிடாமல், தொழில்நுட்பத் தரநிலைகளை நடைமுறைப்படுத்த முடியும். கூட்டத்தைக் கூட்டுதல், நடுவர் பணி ஆற்றுதல், மற்றும் பின்னேற்பளித்தல் ஆகியவையே ஒன்றியத்தின் பங்காக இருக்க வேண்டுமேயன்றி, மாநில அதிகாரத்தைப் பறித்துக்கொண்டு அவ்விடத்தை அது ஆக்கிரமிப்பதாக இருக்கக் கூடாது.

நடுவரே தவிர, அணித்தலைவர் அல்ல

'கட்டுப்பாடு' குறித்த வாதமானது, அடிப்படையில் கற்பனைத் திறனின் தோல்வியையே பிரதிபலிக்கிறது: அதாவது, ஒரு கட்டளை அதிகாரம் (commander) இல்லாமலேயே ஒழுங்கு நிலவ முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க இயலாத நிலையாகும். ஆனால், சிக்கலான அமைப்புகள், பரவலாக்கப்பட்ட நுண்ணறிவால் (distributed intelligence) செழிக்கின்றனவே அன்றி, மையப்படுத்தப்பட்ட 'நுண் மேலாண்மையால்' அல்ல. வலுவான ஓர் ஒன்றியம் இன்றியமையாதது – ஆனால் அது ஒரு நடுவராக இருக்க வேண்டுமே தவிர, அணித்தலைவராக அல்ல. விளையாட்டின் விதிகளை வகுத்தல், நியாயமான ஆட்டத்தை உறுதிசெய்தல், பிணக்குகளைத் தீர்த்தல் மற்றும் ஒத்துழைப்பிற்கு வழிவகை செய்தல் ஆகியவையே அதன் பணிகளாக இருக்க வேண்டும். ஒன்றியமே களமிறங்கி விளையாட முயலும்போது, அது செயல்பாட்டுத் திறனையும், ஏற்புடைமையையும் சேர்த்தே சிதைக்கிறது.

XI. 'சமன்படுத்தல்' எனும் பிழையான வாதம்: மையப்படுத்தல் எவ்வாறு 'சார்ந்திருக்கும் நிலையை' வளர்க்கிறது

மையப்படுத்தலுக்காக முன்வைக்கப்படும் மிகவும் ஈர்ப்புடைய வாதங்களில் ஒன்று, 'சம குடியுரிமை' என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. ஓர் அரசமைப்புச் சட்டம் சார்ந்த மக்களாட்சியில், அடிப்படை கண்ணியம் மற்றும் குறைந்தபட்ச வாழ்க்கை வாய்ப்புகள் ஆகியவை புவியியல் ரீதியாக மாறுபடுவதை அனுமதிக்க முடியாது. கொள்கையளவில், வரலாற்று ரீதியாகப் பின்தங்கிய ஒரு மாநிலத்தில் பிறக்கும் ஒரு குழந்தைக்கு–வளம் மிக்க ஒரு வட்டாரத்தில் பிறக்கும் குழந்தைக்குக் கிடைக்கும் அதே அடிப்படைத் தரங்களான சுகாதாரம், கல்வி, ஊட்டச்சத்து மற்றும் சட்டப் பாதுகாப்பு ஆகியவை கிடைப்பதற்கு உரிமையுண்டு. சமன்படுத்தும் வாதம் இந்த அடிப்படையிலிருந்தே எழுகிறது; மாநிலங்களுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும், ஒன்றியம் முழுவதிலும் உள்ள அரசமைப்புச்சட்ட உத்தரவாதங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கவும் தேசிய அதிகாரம் தேவை என்று அது கருதுகிறது.

இந்த நெறிமுறை சார்ந்த கோரிக்கையானது, ஒரு நடைமுறைக் கவலையாலும் வலுப்படுத்தப்படுகிறது. ஏழை வட்டாரங்களிடம் மனித மேம்பாட்டில் முதலீடு செய்வதற்குத் தேவையான நிதித்திறன் (fiscal capacity) பெரும்பாலும் இருப்பதில்லை. பகிரப்படும் வரிகள், சூத்திர அடிப்படையிலான பகிர்வுகள் (formula–based transfers) அல்லது சமன்படுத்தும் மானியங்கள் (equalisation grants) மூலம் மறுபகிர்வு செய்யப்படாவிட்டால், வட்டார ஏற்றத்தாழ்வுகள் திரள்விளைவு கொண்டதாகவும் மென்மேலும் அதிகரிக்கக்கூடியதாகவும் மாறக்கூடும். இதனாலேயே, முதிர்ச்சியடைந்த பெரும்பாலான கூட்டாட்சி நாடுகள், தேசிய ஒற்றுமையைப் பாதுகாக்க ஏதேனும் ஒரு வடிவத்திலான நிதிச் சமன்படுத்தும் (fiscal equalisation) முறையைக் கையாளுகின்றன.

ஆயினும், சமன்படுத்தலின் தார்மீக ஈர்ப்பு, நிறுவன வடிவமைப்பு (institutional design) தொடர்பான கேள்விகளுக்குத் தீர்வு அளிப்பதில்லை. மையப் பிரச்சினை என்னவென்றால், கொள்கை வடிவமைப்பு மற்றும் விநியோகத்தின் மீதான மையக் கட்டுப்பாடு – சமமான விளைவுகளை அடைவதற்கு அவசியமானதா அல்லது போதுமானதா என்பதே ஆகும். வளர்ச்சி ஏற்றத்தாழ்வுகள் என்பவை வெறும் நிதி சார்ந்தவை மட்டுமல்ல; அவை கட்டமைப்பு ரீதியானவை. மனித மூலதனம், சமூக நிறுவனங்கள்,

அரசியல் அணிதிரட்டல் மற்றும் நிர்வாகத் திறன் ஆகியவற்றில் உள்ள வேறுபாடுகளில் அவை வேரூன்றியுள்ளன. உள்ளூர் அமைப்புகளின் செயல்பாட்டிற்குப் (local agency) பதிலாக, முதன்மையாக மைய அரசின் சலுகைகள் (central patronage) மூலமாகச் சமத்துவம் முன்னெடுக்கப்படும்போது, அதன் விளைவு பெரும்பாலும் ஒரு "நிதிப் பகிர்வு ராஜ்ஜியம்" (Transfer Raj) ஆகவே அமைகிறது. இம்முறை, சார்ந்திருத்தல் மற்றும் இணங்கிப்போதலைத் தக்கவைக்கிறதே தவிர, உண்மையான ஒருங்கிணைப்பிற்குத் தேவையான ஆழமான நிறுவன மாற்றத்தைத் தடுத்துவிடுகிறது.

இந்தியச் சான்று: செயல்முனைப்பு எதிர் உதவி (Agency versus Aid)

மையப்படுத்தப்பட்ட கண்காணிப்புதான் சமச்சீரான வளர்ச்சியை உறுதிசெய்யும் என்ற நம்பிக்கைக்கு மிக வலுவான மறுப்பு, இந்திய மாநிலங்களின் ஒப்பீட்டுப் பொருளாதார வரலாற்றிலேயே உள்ளது. ஆ. கலையரசன் மற்றும் ம. விஜயபாஸ்கர் ஆகியோர் தமது *'தி திராவிடன் மாடல்: இன்டர்பிரெட்டிங் தி பொலிட்டிகல் எகானமி ஆஃப் தமிழ்நாடு'* (The Dravidian Model: Interpreting the Political Economy of Tamil Nadu – 2021) எனும் நூலில் ஆவணப்படுத்தியுள்ளபடி, 1960-களின் தொடக்கத்தில் பீகார் இந்தியாவின் மிக ஏழ்மையான மாநிலமாக இருந்தது. அதே வேளையில், சென்னை மாகாணமும் (தற்போதைய தமிழ்நாடு) ஒப்பீட்டளவில் ஏழ்மையானதாகவே இருந்ததுடன், வருமானம் மற்றும் பிற வளர்ச்சிக் குறியீடுகளில் மாநிலங்களின் வரிசையில் கீழ்ப்பாதியிலேயே இடம் பெற்றிருந்தது. மையவாதத் தர்க்கத்தின்படி பார்த்தால், பத்தாண்டுகளாகத் தொடர்ந்த சீரான திட்டமிடல், தேசியத் திட்டங்கள் மற்றும் நிதிப் பகிர்வுகள்–பீகாரின் நேர்வில் இவையே அதிகம்–ஆகியவை, இம்மாநிலங்களுக்கிடையே ஒருங்கிணைவை (convergence) ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

ஆனால், ஆறு பத்தாண்டுகளுக்குப் பிறகு, இவற்றுக்கு இடையிலான வேறுபாடு மிகத் தெளிவாக உள்ளது. தனிநபர் வருமானம், சுகாதாரத் தரநிலைகள், கல்வி மற்றும் மனித மேம்பாடு ஆகிய அனைத்திலும் பீகார் பட்டியலின் அடிப்பகுதியிலேயே அல்லது அதற்கு மிக அருகிலேயே இன்றும் உள்ளது. இதற்கு நேர்மாறாக, தமிழ்நாடு பெரும்பாலான குறியீடுகளில் – தனிநபர் வருமானம், சராசரி ஆயுட்காலம், சிசு மரண விகிதம் (infant mortality), கருவுறுதல் விகிதக் குறைவு (fertility decline), ஊட்டச்சத்து, பள்ளிக்கல்விச் சேர்க்கை, உயர்கல்விச் சேர்க்கை விகிதம் (GER), தொழில்துறைப் பன்முகத்தன்மை மற்றும் சமூக நகர்வு (social

mobility) ஆகியவற்றில் – தொடர்ந்து முதல் மூன்று அல்லது ஐந்து மாநிலங்களுக்குள் இடம்பெற்று வருகிறது.

தமிழ்நாடு ஒன்றியத்தின் வழிமுறைகளைச் சிறப்பாகப் பின்பற்றியது என்பதல்ல இதற்குக் காரணம். மாறாக, தமிழ்நாடு அந்த மைய வார்ப்புருவிலிருந்து (central template) விலகிச் சென்றதே காரணமாகும். துணைத் தேசிய (sub–national) அரசியல் எழுச்சியால் (திராவிட இயக்கம்) உந்தப்பட்டு, இம்மாநிலம் சமூகக் கட்டமைப்பிற்கு முன்னுரிமை அளித்தது–அனைவருக்கும் கிடைக்கக்கூடிய பொது சுகாதாரக் கட்டமைப்பை உருவாக்குதல், கல்வி மற்றும் அரசுப் பணிகளில் இட ஒதுக்கீட்டை விரிவுபடுத்துதல், மற்றும் சமூக நலத்திட்டங்களில் பெருமளவில் முதலீடு செய்தல் ஆகியவற்றை முன்னிறுத்தியது. இதற்கு நேர்மாறாகப் பீகார், ஒப்பிடக்கூடிய சமூக அல்லது நிறுவனச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளாமல், ஒன்றியத்தின் நிதிப் பகிர்வுகளை மட்டுமே நம்பி, 'சலுகைசார் அரசியலில்' (patronage politics) சிக்கிக்கொண்டது.

இப்பாடம் சந்தேகத்திற்கு இடமின்றித் தெளிவாக உள்ளது: உதவியைவிட (aid) 'செயல்முனைப்பே' (agency) முக்கியமானது. மனித மூலதனம் மற்றும் நிறுவனச் சீர்திருத்தங்களின் மீது கவனம் செலுத்திய, தனித்துவமானதொரு மாநிலத் தலைமையிலான வளர்ச்சி மாதிரியே தமிழ்நாட்டின் பயணப் பாதையை வடிவமைத்தது. 1960–களில் சீரான ஒரே மாதிரியான கொள்கைகளைத் திணிக்கும் ஒரு வலுவான ஒன்றியம் இருந்திருக்குமேயானால், அது பீகாரின் கட்டமைப்பு ரீதியான பற்றாக்குறைகளைச் சரிசெய்யாமலேயே, தமிழ்நாட்டின் புத்தாக்கங்களை அனேகமாக நசுக்கியிருக்கும்.

அனைத்துலக ஒப்புமை: நிறுவனங்கள் இன்றி வெறும் உதவி

இப்போக்கு இந்தியாவிற்கு மட்டுமே உரியதல்ல. நிறுவனச் செயல்திறன் இல்லாத நிலையில், நிதிப் பரிமாற்றங்கள் வளர்ச்சியை உருவாக்கத் தவறிவிடுவதை, மேம்பாட்டுப் பொருளியல் நீண்டகாலமாக ஆவணப்படுத்தி வருகிறது. மூலதனப் பற்றாக்குறையே வளர்ச்சிக்கான முதன்மையான தடை என்ற அனுமானத்தின் அடிப்படையில், பத்தாண்டுகளாக, அனைத்துலக நன்கொடையாளர்கள் ஏழை நாடுகளுக்குப் பெருமளவிலான வெளிநாட்டு உதவிகளைக் கொட்டித் தீர்த்தனர். ஆயினும், வில்லியம் ஈஸ்டர்லி (William Easterly)[48] மற்றும்

[48] William Easterly, *The White Man's Burden: Why the West's Efforts to Aid the Rest Have Done So Much Ill and So Little Good* (Penguin, 2006).

டம்பிசா மோயோ (Dambisa Moyo)[49] போன்ற விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளபடி, இப்பரிமாற்றங்கள் நிலையான வளர்ச்சியை உருவாக்கத் தவறியதுடன், ஊழல், தகாத ஆதாயம் தேடுதல் மற்றும் சார்ந்திருக்கும் நிலை ஆகியவற்றை வளர்ப்பதாகவே அமைந்தன.

மனித மூலதனம் (human capital), நிர்வாகத் திறன் அல்லது சமூகச் சீர்திருத்தம் ஆகியவற்றுக்குப் பணம் ஈடாகாது. முறையாகச் செயல்படும் நிறுவனங்கள் இல்லாத நிலையில், வழங்கப்படும் நிதியுதவிகள் ஓட்டையான பாத்திரத்தில் ஊற்றப்படும் நீரைப் போன்றே அமைகின்றன. தென்கொரியா அல்லது வியட்நாம் போன்ற வெற்றிபெற்ற நாடுகள், முடிவற்ற உதவிகளால் (perpetual aid) அவ்வாறு வெற்றிபெறவில்லை; மாறாக, கல்வி, சுகாதாரம், ஆளுமை மற்றும் அரசுத் திறன் ஆகியவற்றில் அவை முதலீடு செய்ததாலேயே வெற்றிபெற்றன. சீர்திருத்தத்தைத் தொடர்ந்தே வளர்ச்சி ஏற்பட்டது; மாறாக, வளர்ச்சிக்குப் பிறகு சீர்திருத்தம் நிகழவில்லை.

இந்தியாவின் சொந்தத் திட்டமிடல் வரலாறு இந்த எதார்த்தத்தையே பிரதிபலிக்கிறது. மையப்படுத்தலும் நிதிப் பரிமாற்றங்களும் மட்டுமே வாய்ப்புகளைச் சமன்படுத்த முடியும் என்றால், பல பத்தாண்டுகளாக மையத்தில் வடிவமைக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களும், ஒன்றிய நிதியுதவித் திட்டங்களும் (Centrally Sponsored Schemes – CSS), வட்டாரங்களுக்கு இடையேயான நீடித்திருக்கும் இடைவெளிகளை குறைத்திருக்க வேண்டும். ஆனால், அவை அவ்வாறு செய்யவில்லை. பல நேர்வுகளில், ஒரே மாதிரியான இத்திட்டங்கள் உள்ளூர் முன்முயற்சிகளை முடக்கிவிட்டன; உரிமையுணர்வு இல்லாத இணக்கத்தை (compliance without ownership) உருவாக்கின; நிர்வாகச் சார்ந்திருத்தலை ஆழமாக வேரூன்றச் செய்தன. நிறுவனத் திறன் எங்கே பலவீனமாக இருக்கிறதோ, அங்கே வழங்கப்படும் கூடுதல் நிதியானது, பெரும்பாலும் குறைந்துவரும் பலனை – அல்லது விபரீத பலனைக் கூட – ஏற்படுத்தும்.

உடைமை கோராத குறைந்தபட்ச வரம்புகள்: ஒரு சிறந்த வடிவமைப்பு

மேற்கூறிய வாதங்கள் எவையும், தேசிய அளவிலான குறைந்தபட்சத் தரங்களையோ அல்லது நிதிச் சமன்படுத்தலையோ கைவிட வேண்டும் என்பதைக் குறிக்கவில்லை. அதிகாரப் பரவலாக்கத்தை ஆதரிப்போரின்

---

[49] Dambisa Moyo, *Dead Aid: Why Aid Is Not Working and How There Is a Better Way for Africa* (Farrar, Straus and Giroux 2009).

விமர்சனம் மிகவும் குறிப்பானதும் துல்லியமானதுமாகும். குறைந்தபட்சத் வரம்புகளை (floors) நிர்ணயிப்பதற்கு, சேவை விநியோகப் பொறுப்பு ஒன்றியத்தின் வசமே இருக்க வேண்டிய அவசியமில்லை என்று அது வாதிடுகிறது. முதிர்ச்சியடைந்த கூட்டாட்சி நாடுகள், குறைந்தபட்ச விளைவுகளை உத்தரவாதம் செய்வதற்கும், சேவைகளை நிர்வகிப்பதற்கும் இடையிலான வேறுபாட்டை உணர்கின்றன. தேசிய அரசுகள் உரிமைகள், அளவுகோல்கள் மற்றும் நிபந்தனைகளை நிர்ணயிக்கின்றன; துணைத் தேசிய அரசுகள் தங்கள் சமூக, பொருளாதார மற்றும் நிர்வாகச் சூழலுக்கு ஏற்ற திட்டங்களை வடிவமைத்து வழங்குகின்றன. சட்டக் கட்டமைப்புகள், வெளிப்படைத்தன்மை மற்றும் ஊக்கிகள் மூலமாகவே சீரானத்தன்மை (uniformity) உறுதி செய்யப்படுகிறதே தவிர, கட்டளைகள் மற்றும் நுண்மேலாண்மை மூலம் அல்ல.

இந்த நிறுவன வடிவமைப்பு மூன்று நன்மைகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக, எந்தவொரு மாநிலமும் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்சத் வரம்புக்குக் (defined floor) கீழே செல்லாமல் இருப்பதை உறுதி செய்வதன் மூலம், சம குடியுரிமைக்கான தார்மீகக் கடப்பாட்டை இது பாதுகாக்கிறது. மேலும், கணிக்கக்கூடிய, சூத்திர அடிப்படையிலான சமன்படுத்தும் பகிர்வுகளையும், விளைவுகளின் வெளிப்படையான அளவீட்டையும் இது வழங்குகிறது. இரண்டாவதாக, நிர்ணயிக்கப்பட்ட அவ்வரம்புக்கு மேலே (above the floor) கொள்கை ரீதியான பன்முகத்தன்மையை இது அனுமதிக்கிறது. ஒரு மாநிலத்தில் பெண் கல்வி அறிவு, மற்றொரு மாநிலத்தில் தொடக்கக் கல்வி, மூன்றாவதில் உயர்கல்வியின் தரம் என – மாநிலங்கள் தங்களுக்குரிய தனித்துவமான இடையூறுகளைக் (bottlenecks) களைய இது வழிவகுக்கிறது. மூன்றாவதாக, இது பரிசோதனை முயற்சிகள், கற்றல் மற்றும் பரவல் (diffusion) ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. ஏற்கனவே குறிப்பிடப்பட்டவாறு, இந்தியாவின் மிகவும் வெற்றிகரமான பல தேசியத் திட்டங்கள் – பள்ளி மதிய உணவு, வேலைவாய்ப்பு உத்தரவாதம், ஆரம்பச் சுகாதார முயற்சிகள் ஆகியவை– மாநிலங்களின் சோதனைகளாகவே தொடங்கப்பட்டு, பின்னர் விரிவுபடுத்தப்பட்டன. இறுக்கமான, சீரான ஒரு மைய மாதிரி, இத்தகைய புத்தாக்கங்களைத் தாமதப்படுத்தியிருக்கலாம் அல்லது நசுக்கியிருக்கலாம்.

கட்டளையால் அல்ல, செயல்திறன் மூலமே சமத்துவம்

'ஒரே மாதிரியான விதிகள்' எப்போதும் 'ஒரே மாதிரியான முடிவுகளை' தருவதில்லை. தேசிய உத்தரவாதங்களுக்கு உட்பட்டுச் செயல்படும், அதிகாரம் பெற்ற மாநிலங்கள், வளங்களை மனித மேம்பாடாக மாற்றக்கூடிய நிறுவனங்களைக் கட்டமைக்கும்போது மட்டுமே உண்மையான சமத்துவம் உருவாகிறது. எனவே, சம குடியுரிமை (equal

citizenship) என்பதில் உண்மையான அர்ப்பணிப்பு கொண்ட ஒரு கூட்டாட்சி, வள மறுபகிர்வை, பரவலாக்கப்பட்ட செயல்திறன் கட்டமைப்போடு (decentralised capacity–building) இணைக்க வேண்டும். திணிக்கப்பட்ட 'ஒரே மாதிரியான தன்மையில்' தேசிய வலிமை அடங்கியிருக்கவில்லை; மாறாக, பன்முகத்தன்மை கொண்ட மாநிலங்கள், தங்களுக்கே உரிய பாதைகளில், பகிரப்பட்ட அரசமைப்பு இலக்குகளை நோக்கி முன்னேறுவதற்கு வழிவகை செய்வதிலேயே அது அடங்கியுள்ளது. அதிகாரக் குவிப்பு வேண்டுமானால் உள்ளீடுகளை சமமாக்கலாம்; ஆனால், பரவலாக்கப்பட்ட செயல்முனைப்பு மட்டுமே விளைவுகளை சமமாக்க முடியும்.

XII. ஒருமுகத்தன்மை எனும் பிழையான வாதம்: பன்முகத்தன்மை எவ்வாறு கூட்டாட்சி ஒற்றுமையை நிலைநிறுத்துகிறது

மையவாதச் சிந்தனையானது, ஒற்றுமைக்கு 'ஒரே மாதிரியான தன்மை' (uniformity) அவசியம் என்ற எளிமையான அனுமானத்தின் அடிப்படையிலேயே நீண்டகாலமாக இயங்கி வருகிறது. இக்கருத்துநிலையின்படி, ஒரு தேசம் பிழைத்திருக்க வேண்டுமானால், அது ஒரு மொழி, ஒரு கலாச்சாரம் மற்றும் ஒரே நிர்வாக வார்ப்புருவைக் (one administrative template) கொண்டிருக்க வேண்டும். இதில் பன்முகத்தன்மை என்பது ஒரு கட்டமைப்பு ரீதியான பலவீனமாகக் கருதப்படுகிறது – அது கரைக்கப்பட்டு, ஒற்றைத் தேசிய அச்சுக்குள் கொண்டுவரப்பட வேண்டிய ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

ஆனால், ஒப்பீட்டு வரலாறு இதற்கு நேர்மாறான திசையையே சுட்டிக்காட்டுகிறது. திணிக்கப்பட்ட ஓரியல்புத் தன்மை (forced homogeneity), பெரும்பாலும் பிணைப்பை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, சிதறுண்டு போதலுக்கான ஒரு வினையூக்கியாகவேசெயல்படுகிறது. மொழிரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவில், இந்தியைத் திணிக்க மேற்கொண்ட முயற்சி இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்; அது தேசத்தை இணைப்பதற்குப் பதிலாக, எதிர்ப்பைத் தூண்டியது; துணைத் தேசிய (sub–national) அடையாளங்களை இறுக்கமடையச் செய்தது; மேலும் அது பாதுகாக்க முயன்ற ஒற்றுமைக்கே அச்சுறுத்தலாக அமைந்தது.

கூட்டாட்சியானது, ஒற்றுமை குறித்த வேறுபட்டதொரு புரிதலின் மீதே கட்டமைக்கப்பட்டுள்ளது–அது வேற்றுமைகளை அழிப்பதற்குப்

பதிலாக, அவற்றை அரவணைத்துச் செல்கிறது. 'உருக்கி கலக்கும் கலம்' (Melting pot) என்ற உருவகத்தைவிட, வேறு சில உருவகங்கள் இதனை மிகத் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன: முதலாவதாக, 'காய்கறி கலவைக் கிண்ணம்' (Salad bowl): இவ்வுருவகம், கரைந்து போகாமல் இணைந்திருப்பதை வலியுறுத்துகிறது: ஒவ்வொரு பொருளும் (ingredient) ஒரு முழுமையான அமைப்பிற்குப் பங்களிக்கும் அதே வேளையில், தனது தனித்துவமான சுவையையும் தன்மையையும் தக்கவைத்துக் கொள்கிறது. இரண்டாவதாக, 'பாவுநூல் மற்றும் ஊடுநூல்' (Warp and Weft): இந்தியக் கூட்டாட்சிச் சிந்தனையில் நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படும் இவ்வுருவகம், இதே கருத்தை அரசமைப்புச்சட்ட ரீதியாக விளக்குகிறது. ஒன்றியம் என்பது 'பாவுநூலாக' –அதாவது கட்டமைப்பிற்கான சட்டகமாக–அமைகிறது; மாநிலங்கள் 'ஊடுநூலாக' –அதாவது வண்ணம், மாறுபாடு மற்றும் இழைநயமாக–அமைகின்றன. ஒற்றுமை என்பது நெய்யப்படுவதே அன்றி, வார்ப்பிக்கப்படுவதல்ல. 'பளிங்கு கேக்' (Marble cake): மூன்றாவதாக, மார்டன் க்ரோட்ஸின்ஸ் (Morton Grodzins – 1960)[50] முன்வைத்த இவ்வுருவகம், கூட்டாட்சி, மாநில மற்றும் உள்ளாட்சிப் பணிகள், துல்லியமான அடுக்குகளாக இல்லாமல், ஒன்றோடொன்று கலந்து இருப்பதைச் சித்தரிக்கிறது. இது நிர்வாகச் சீர்த்தன்மையைவிட, சமூக எதார்த்தத்தையே பிரதிபலிக்கிறது. இம்மூன்று உருவகங்களும் ஒரு மையப் புரிதலில் இணைகின்றன: 'ஓரியல்புத் தன்மை' என்பது ஒற்றுமைக்கான முன்நிபந்தனை அல்ல. திணிக்கப்பட்ட 'ஒரே மாதிரியான தன்மை', ஒரு மோசமான கலவையையோ, பொலிவற்ற துணியையோ அல்லது சுவையற்ற கேக்கையோதான் உருவாக்கும்.

ஒப்பீட்டு அனுபவமும் இம்முடிவிற்கே வலுசேர்க்கிறது. அரசமைப்புச்சட்ட வடிவமைப்பின் மூலம் பன்முகத்தன்மையை அரவணைத்துச் சென்ற நாடுகள்–கனடா, சுவிட்சர்லாந்து, பெல்ஜியம், தென்னாப்பிரிக்கா மற்றும் சிங்கப்பூர்–ஆழமான மொழி, கலாச்சார அல்லது இனப் பன்முகத்தன்மை இருந்தபோதிலும், நிலையான அரசியல் ஒழுங்கைத் தக்கவைத்துள்ளன. இதற்கு மாறாக, சோவியத் யூனியன் மற்றும் பாகிஸ்தான் போன்ற, திணிக்கப்பட்ட 'ஓரியல்புத் தன்மை' மூலம் ஒற்றுமையை நாடிய நாடுகள், பிணைப்பை எட்ட முடியாமல் போயின; பெரும்பாலும் அது குறுகிய காலமே நீடித்தது. 'ஒரே மாதிரியான தன்மை' மூலம் தேடப்படும் ஒற்றுமை அடிக்கடி

---

[50] Morton Grodzins, 'The Federal System' in President's Commission on National Goals (ed), *Goals for Americans* (1960) 265.

உடைந்துபோகிறது; ஆனால் அரவணைப்பின் (accommodation) மீது கட்டியெழுப்பப்படும் ஒற்றுமை அதிக நீடித்துழைக்கும் தன்மையைப் பெறுகிறது.

இந்தியா ஏன் ஒரு ஜேக்கபிய அல்லது போல்ஷிவிக் தருணத்தை உருவாக்கவில்லை

இந்தியாவின் சொந்த வரலாறு ஒரு வெளிப்படையான புதிரை முன்வைக்கிறது. பிரெஞ்சுப் புரட்சி (1789) மற்றும் ரஷ்யப் புரட்சி (1917) போன்ற செவ்வியல் 'மக்கள் புரட்சிகள்' (Classical 'people's revolutions'), வெறும் ஆட்சி மாற்றங்கள் மட்டுமல்ல; அவை முழுமையான புரட்சிகள் (total revolutions). ஒரு மையப்படுத்தப்பட்ட தேச அரசுக்கு (centralised nation–state) எதிராக, ஒற்றை, ஒருங்கிணைந்த 'மக்கள் திரள்' கிளர்ந்தெழுந்து, தீர்க்கமான ஒரு முறிவின் மூலம் சமூகத்தை மறுநிர்மாணம் செய்ய முயன்றன. அரசியல் மோதல்கள் இருமை மற்றும் இருமுனை கொண்டவையாக இருந்தன–மன்னராட்சிக்கு எதிராக 'மூன்றாம் எஸ்டேட்' (Third Estate), முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராகப் பாட்டாளி வர்க்கம். சமூகம் ஒரு ஒற்றை, ஆதிக்கம் செலுத்தும் பிளவுக்கோட்டின் வழியே பிளந்திருந்தது; இது முழுமையான அணிதிரட்டலை சாத்தியமாக்கியது. ஹான்னா அரெண்ட் (Hannah Arendt), தனது 'ஆன் ரெவல்யூஷன்' (On Revolution, 1963)[51] என்ற நூலில் உற்றுநோக்கியதைப் போல, இத்தகைய புரட்சிகள் மரபுவழியாக வந்த சமூக மற்றும் நிறுவன ஒழுங்கை அழிப்பதன் மூலம், "சுதந்திரத்தை ஒரு புதிய தொடக்கத்தின் மீது நிறுவ" முயன்றன.

இந்தியா இதற்கு ஒரு வியக்கத்தக்க முரணாக அமைகிறது. வெகுமக்கள் வறுமை, ஆழமான சமத்துவமின்மை, காலனிய ஆதிக்கம் மற்றும் மீண்டும் மீண்டும் நிகழும் அமைதியின்மை இருந்தபோதிலும் – இந்தியா ஒருபோதும் ஒரு ஜேக்கபிய (Jacobin) அல்லது போல்ஷிவிக் (Bolshevik) தருணத்தைச் சந்தித்ததில்லை. அதாவது, பிளவற்ற, ஒரே அணியான மக்கள் திரள் (single, monolithic people), உள்நாட்டுச் சமூக மற்றும் அரசியல் ஒழுங்கை வன்முறையாக மாற்றியமைக்க கிளர்ந்தெழுந்ததில்லை. 1857–ஆம் ஆண்டின் எழுச்சியும், மகாத்மா காந்தியின் தலைமையிலான விடுதலைப் போராட்டமும் இதற்கு மிக நெருக்கமாக வந்தன; ஆனால் அவை இரண்டுமே ஒரு வெளிப்புறக் காலனிய சக்திக்கு எதிராக இருந்தன; உள்நாட்டு அரசியல் அல்லது சமூக ஒழுங்கிற்கு எதிராக அல்ல. அப்படியிருந்தும் கூட, பங்கேற்பு

---

[51] Hannah Arendt, *On Revolution* (Viking Press New York 1963).

சீரற்றதாகவே இருந்தது; அது பரவலானதாக இருக்கவில்லை. சுதந்திரத்திற்குப் பிறகு, இந்தியா பல கிளர்ச்சிகள், நக்சலைட் இயக்கங்கள், கருத்தியல் ரீதியான அணிதிரட்டல்கள் மற்றும் வெகுஜனப் போராட்டங்களைக்கண்டுள்ளது. ஆனால் இவை துண்டு துண்டாகவும், உள்ளூர்மயமாக்கப்பட்டவையாகவுமே இருந்தன; ஒருபோதும் ஒரே நேரத்தில் நிகழும், அகில இந்திய அளவிலான பெருந்தீயாக (pan–Indian conflagration) மாறவில்லை. ஜெயப்பிரகாஷ் நாராயணன் 'முழுப் புரட்சி'க்கு விடுத்த அழைப்பு மற்றும் அவசரநிலைக் காலம் (1975–77) போன்ற கடுமையான நெருக்கடித் தருணங்கள் கூட, பரவலான எதிர்ப்பை உருவாக்கினவே தவிர, ஓர் அகில இந்திய எதிர்ப்பை உருவாக்கவில்லை. இறுதியில், ஜனநாயகம் மீட்கப்பட்டது வாக்குப்பெட்டி மூலமே தவிர, தடுப்பு அரண்கள் மூலம் அல்ல.

இந்த இன்மை என்பது வரலாற்றின் தற்செயல் நிகழ்வோ அல்லது இந்திய மக்களின் "பொறுமைக்கு" ஒரு சான்றோ அல்ல. இது ஒரு கட்டமைப்பு ரீதியான தவிர்க்க முடியாத தன்மையாகும். இதை, 'ஒன்றையொன்று ஊடறுக்கும் பிளவுகள்' (cross–cutting cleavages) என்ற சமூகவியல் கோட்பாடு விளக்குகிறது.

நிலைத்தன்மையின் இயக்கவியல்: "மக்கள் திரளின்" சிதறல்

'ஒன்றையொன்று ஊடறுக்கும் பிளவுகள்' என்ற கோட்பாடு, சீமோர் மார்ட்டின் லிப்செட் (Seymour Martin Lipset) மற்றும் ஸ்டெய்ன் ரோக்கன் (Stein Rokkan) ஆகியோரால் 'பார்ட்டி சிஸ்டம்ஸ் அண்ட் வோட்டர் அலைன்மெண்ட்ஸ்' (Party Systems and Voter Alignments, 1967) என்ற நூலில் மிகத் தெளிவாகவும் முறைப்படியாகவும் விளக்கப்பட்டது. அரசியல் மோதல் என்பது மிதவாதமானதாக (moderate), துருவப்படுத்தப்பட்டதாக (polarised), அல்லது புரட்சிகரமானதாக (revolutionary) மாறுவதைத் தீர்மானிப்பது–குறைகளின் தீவிரம் மட்டுமல்ல; மாறாக, சமூகப் பிளவுகளின் கட்டமைப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பதே ஆகும். இதுவே அவர்களின் மையக் கருத்தாகும்.

பிளவுகள் ஒன்றையொன்று வலுப்படுத்தும் இடங்களில் – அதாவது வர்க்கம் என்பது மதம், மொழி, வட்டாரம் மற்றும் சித்தாந்தத்துடன் ஒரே கோட்டில் இணையும்போது – சமூகம் இரண்டு எதிரெதிர் முகாம்களாகத் துருவப்படுத்தப்படுகிறது. அங்கு அரசியல் 'இருமைத் தன்மை' கொண்டதாக மாறுகிறது; மோதல் 'வாழ்வா–சாவா' பிரச்சினையாகிறது; புரட்சிகரமான அணிதிரட்டல் கட்டமைப்பு ரீதியாகச் சாத்தியமாகிறது. பிரெஞ்சு மற்றும் ரஷ்யப் புரட்சிகள் இரண்டிலும் நிலவிய சமூகவியல் சூழல் இதுவேயாகும்.

ஆயினும், பிளவுகள் ஒன்றையொன்று ஊடறுக்கும்போது (cross–cut), அடையாளங்கள் ஒன்றுசேர்வதற்குப் (aggregate) பதிலாகச் சிதறுகின்றன (fragment). தனிநபர்கள் ஒரே நேரத்தில் பல, ஒன்றன் மீது ஒன்று படிந்த (overlapping) குழுக்களில் அங்கம் வகிக்கின்றனர்; இக்குழுக்களில் எதுவுமே ஒட்டுமொத்த அரசியல் களத்திலும் ஆதிக்கம் செலுத்துவதில்லை. அரசியல் கூட்டணிகள் பிரச்சினைகளுக்கு ஏற்ப மாறுகின்றன; கூட்டணிகள் நிலையற்றவையாக இருக்கின்றன; குறைகள் அனைத்தும் குவிந்து ஓர் ஒற்றை தேசிய முறிவை உருவாக்கத் தவறுகின்றன.

இந்தியா இதற்கு ஒரு பாடப்புத்தக முன்னுதாரணமாகும். இங்கு வர்க்கம் சாதியை ஊடறுக்கிறது; சாதி மதத்தை ஊடறுக்கிறது; மதம் மொழியை ஊடறுக்கிறது; மொழி வட்டாரத்தை ஊடறுக்கிறது. கன்னட மொழி பேசும் ஓர் இந்து, வங்காள மொழி பேசும் ஓர் இந்துவுடன் மதத்தைப் பகிர்ந்துகொள்கிறார், ஆனால் மொழியைப் பகிர்வதில்லை; பஞ்சாபில் உள்ள ஒரு விவசாயி, தெலுங்கானாவில் உள்ள ஒரு விவசாயியுடன் தொழிலைப் பகிர்ந்து கொள்கிறார், ஆனால் சாதி, கலாச்சாரம் அல்லது அரசியல் முன்னுரிமைகளைப் பகிர்வதில்லை. ஓர் அச்சில் அரசியல் நண்பர்களாக இருப்பவர்கள், மற்றொரு அச்சில் இயல்பாகவே எதிரிகளாக மாறுகின்றனர்.

இந்தியாவுக்குப் பொருத்திப் பார்க்கும்போது, இக்கட்டமைப்பு நிலைத்தன்மையை உறுதி செய்யும் மூன்று வழிமுறைகளை வெளிப்படுத்துகிறது:

1. **ஒருங்கிணைப்புத் தோல்வி**
   புரட்சிக்கு, பகிரப்பட்ட குறியீடுகள், முழக்கங்கள் மற்றும் எதிரிகள் ஆகியவற்றின் கீழ் வெகுஜன ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது. பன்முகத்தன்மை கொண்ட சமூகங்களில், ஒரு குழுவை அணிதிரட்டும் முழக்கம், பெரும்பாலும் மற்றொரு குழுவை அந்நியப்படுத்துகிறது. வர்க்க அணிதிரட்டல் சாதியால் உடைகிறது; மொழி ரீதியான அணிதிரட்டல் வட்டாரத்தால் உடைகிறது; கருத்தியல் அணிதிரட்டல் மதத்தால் உடைகிறது. எனவே, நாடு தழுவிய ஒருங்கிணைப்பு என்பது கட்டமைப்பு ரீதியாகவே கடினமாகிறது.

2. **குறைகளின் வட்டாரமயமாக்கல்**
   அதிருப்தி தீவிரமாக வெடிக்கிறது, ஆனால் அது உள்ளூர் அளவிலேயே நிகழ்கிறது–தமிழ்நாட்டில் மொழி, பஞ்சாபில் விவசாயம், மத்திய இந்தியாவில் பழங்குடியினர் உரிமைகள் என. இக்குறைகள் நாடு முழுவதும் ஒரே சீராக எதிரொலிப்பதில்லை.

ஒன்றியம் பல நேர்வுகளில் சிறு தீயை எதிர்கொள்கிறது, ஆனால் அரிதாகவே அது ஒரு 'பெருந்தீயாக' மாறுகிறது.

3. **மாறும் கூட்டணிகள்**
அடையாளங்கள் ஒன்றன் மீது ஒன்று படிந்திருப்பதால், இன்றைய எதிரி, வேறொரு அச்சில் நாளைய நண்பராக மாறக்கூடும். இது முழுமையான அரசியல் அழிவிற்கான ஊக்கத்தைக் குறைக்கிறது; மேலும் பேச்சுவார்த்தை, அரவணைத்துச் செல்லுதல் (accommodation) மற்றும் இணைத்துக்கொள்ளுதல் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.

இதன் விளைவு அரசியல் முடக்கம் அல்ல, மாறாகக் கட்டுப்படுத்துதலே (containment) ஆகும்: மோதல் தொடர்ச்சியானது, பெரும்பாலும் தீவிரமானது, ஆனால் அரிதாகவே அது அமைப்பை முடிவுக்குக் கொண்டுவருவதாக அமைகிறது.

இந்தச் சமூகவியல் எதார்த்தத்தை ஜேம்ஸ் மேடிசன் (James Madison), தனது 'ஃபெடரலிஸ்ட் எண். 10' (Federalist No. 10) கட்டுரையில் முன்னரே கணித்திருந்தார். சமூகம் பல்வேறு நலன்கள், பிரிவுகள் மற்றும் குழுக்களாகப் பிளவுபட்டிருப்பதாலேயே, ஒரு விரிவான குடியரசில் தன்னுரிமை பாதுகாப்பாக இருக்கும் என்று அவர் வாதிட்டார்:

> "பிரிவினைவாதத் தலைவர்களின் செல்வாக்கு, அவர்களின் குறிப்பிட்ட மாநிலங்களுக்குள் ஒரு தீச்சுடரைப் பற்றவைக்கலாம்; ஆனால், மற்ற மாநிலங்களில் ஒரு பொதுவான பெருந்தீயைப் பரப்ப அவர்களால் முடியாது."[52]

இந்தியாவுக்கான பாடங்கள்

நாகரிகப் பரிமாணத்தில், மேடிசனின் இந்தக் கூற்றுக்கு இந்தியா ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. அதன் மொழி, சாதி, மதம் மற்றும் வட்டாரம் சார்ந்த பரந்த பன்முகத்தன்மையானது, எந்தவொரு தனிப் பிரிவும் ஒட்டுமொத்த "மக்களை" தாங்களே பிரதிநிதித்துவப்படுத்துவதாக உரிமை கோருவதை சாத்தியமற்றதாக்குகிறது. ஒரு மையவாதக் கண்ணோட்டத்தில் இது ஒழுங்கீனமாகவோ அல்லது பலவீனமாகவோ தோன்றலாம்; ஆனால் உண்மையில், இது பெரும்பான்மைவாத ஆதிக்கத்திற்கும், புரட்சிகரமான கைப்பற்றல்களுக்கும் எதிரான ஒரு

---

[52] James Madison, 'Federalist No. 10' in Michael A. Genovese (ed), *The Federalist Papers* (Palgrave Macmillan 2009), 54.

ஆழமான கட்டமைப்புப் பாதுகாப்பாகும். ஒரு வட்டாரத்தில் ஏற்படும் நெருக்கடி, முழு அமைப்பையும் இயந்திரத்தனமாகச் சீர்குலைத்துவிடுவதில்லை. ஒரு களத்தில் ஏற்படும் அரசியல் கருத்து வேறுபாடு, மற்றோர் இடத்தில் உள்ள உறவுகளால் சமன் செய்யப்படுகிறது. சொல்லப்போனால், இந்தியா என்பது தேவைக்கு அதிகமான பாதுகாப்புக் கட்டமைப்புகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இக்காரணங்களாலேயே, "ஒரே நாடு, ஒரே மொழி" மற்றும் "ஒரே நாடு ஒரே அமைப்பு" போன்ற முழக்கங்கள் மூலம் இந்தியாவை 'ஓரியல்புத் தன்மை' கொண்டதாக மாற்றும் முயற்சிகள் அடிப்படையில் தவறான புரிதலாகும். மொழி, சாதி, கலாச்சாரம் மற்றும் வட்டாரப் பிளவுகள் ஆழமாக வேரூன்றியிருக்கும் – அவை உணர்வுபூர்வமாகப் பாதுகாக்கப்படும் – துணைக் கண்ட அளவிலான ஒரு நாகரிகத்தில், இத்தகைய திட்டங்கள் தோல்வியடைவது மட்டுமல்ல; அவை விபரீத விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடும்.

இது சமூகப் பிளவுகளை நிரந்தரமாக்குவதற்கான வாதம் அல்ல; மாறாக, கட்டாய மொழித் திணிப்பு, கட்டாயச் சாதி மறுப்பு அல்லது மத மறுப்புத் திருமணங்கள், கட்டாய மத மாற்றங்கள் அல்லது அதுபோன்ற தலையீடுகள் மூலம், இந்தியாவின் பன்மைத்துவ அடையாளங்களைச் செயற்கையாகவோ அல்லது வலுக்கட்டாயமாகவோ அழிக்க முடியாது என்பதற்கான அங்கீகாரமே இது. சமூக ஒருங்கிணைப்பு என்பது நீடித்து நிலைக்க வேண்டுமானால், அது தன்னார்வமானதாகவும், இயல்பானதாகவும் இருக்க வேண்டும்; அது ஆணைகளால் திணிக்கப்படாமல், இசைவால் வடிவமைக்கப்பட வேண்டும். முறையாகப் புரிந்துகொண்டால், "வேற்றுமையில் ஒற்றுமை" (Unity in Diversity) என்பது வெறும் முழக்கம் அல்ல; அது ஓர் அரசமைப்புச்சட்டம் சார்ந்த உண்மை. இந்தியா ஒற்றுமையாகத் திகழ்வதற்குக் காரணம், அது பன்முகத்தன்மை கொண்டதாக இருப்பதே ஆகும்–மேலும், அதன் கூட்டாட்சிக் கட்டமைப்பு, எவ்வளவு குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும், அப்பன்முகத்தன்மையை மறுப்பதற்குப் பதிலாக, அதனுடன் இணங்கி வாழ்வதற்குக் கற்றுக்கொண்டதே அதற்குக் காரணமாகும்.

XIII. முடிவுரை

அதிகாரப் பரவலாக்கலும் (Decentralisation) மாநில சுயாட்சியும் (State autonomy) பகுத்தறிவுக் கொள்கைகளாகும்; இவை சுதந்திரமானதொரு அரசாங்கத்தின் இயல்பிலேயே வேரூன்றியுள்ளன. அரசமைப்புச் சட்டம்,

பொருளாதாரம், மேலாண்மை, பொது நிர்வாகம், வரலாறு, சமூகவியல் மற்றும் அமைப்புமுறைக் கோட்பாடு என, இக்கேள்வியை எதிர்கொண்ட ஒவ்வொரு தீவிரமான அறிவுத்துறையும் – வெவ்வேறான பாதைகளில் பயணித்தாலும் – இறுதியில் ஒரே முடிவையே சென்றடைகின்றன. அதிகப்படியான அதிகாரக் குவிப்பு, ஒன்றியத்தால் திறம்படச் செய்ய முடியாத பணிகளை அதன் மீது சுமத்துகிறது; மாநில நிறுவனங்களுக்குப் பொறுப்புகளையும், அனுபவம் தரும் பாடத்தையும் மறுப்பதன் மூலம் அவற்றின் வளர்ச்சியை முடக்குகிறது; ஆதாயங்களைக் குவிக்கிறது ; ஜனநாயகப் பொறுப்புடைமையை மங்கச் செய்கிறது; மேலும் சாதாரணக் கொள்கைத் தவறுகளைத் தேசளாவிய தோல்விகளாக மாற்றுகிறது. இதற்கு மாறாக, அதிகாரப் பரவலாக்கல் ஜனநாயகத்தின் இயல்பான இலக்கணத்தை மீட்டெடுக்கிறது. அது முடிவுக்கும் அதன் விளைவுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கிறது; பரிசோதனை முயற்சிகளையும் கற்றலையும் ஊக்குவிக்கிறது; விருப்புரிமை அதிகாரத்தின் (discretion) ஏகபோகங்களை உடைக்கிறது; இடர்களைப் பரவலாக்குகிறது; மேலும் இந்தியாவின் சமூகப் பன்முகத்தன்மையை ஒரு சுமையாகக் கருதுவதற்குப் பதிலாக, அதனை ஓர் அரசமைப்புச்சட்ட ரீதியான பலமாக மாற்றுகிறது. ஒரு நிர்வாகியின் கண்ணோட்டத்திற்குச் சீரற்றதாகத் தோன்றுவது, பெரும்பாலும் குடியரசுக்கு ஆரோக்கியமானதாகவே அமைகிறது. தனது மாநிலங்களை நம்பாத ஓர் அரசு, இறுதியில் தனது சொந்த மக்களிடமே நம்பிக்கை இன்மையைப் பிரகடனப்படுத்துகிறது.

இது வலுவற்ற ஒன்றியத்துக்கான கோரிக்கை அல்ல; அவ்வாறு தவறாகப் புரிந்துகொள்ளப்படவும் கூடாது. சொல்லப்போனால், இது அதற்கு நேர்மாறானது. உண்மையாகவே தேசியத்தன்மை வாய்ந்த பணிகளைச் செம்மையாகச் செய்து முடிப்பதில்தான் ஒன்றியத்தின் வலிமை உள்ளதேயன்றி, வேறிடத்தில் சிறப்பாகச் செயல்படுத்தக்கூடிய அதிகாரங்களை வரையறையின்றித் தன்னிடம் குவித்துக்கொள்வதில் அல்ல. அரசமைப்பு அவையில் க. சந்தானம் (K. Santhanam) எச்சரித்ததைப் போல, எல்லாவற்றையும் செய்ய முயலும் ஓர் ஒன்றியம், இறுதியில் எதையுமே சிறப்பாகச் செய்யாது – காலம் செல்லச் செல்ல, இந்த எச்சரிக்கையின் முக்கியத்துவம் ஆழமாகிக்கொண்டே வருகிறது.

இவ்வியலில் ஆய்வு செய்யப்பட்ட பதினொரு வாதங்களும்–அதிகாரப் பரவலாக்கலை ஆதரித்து முன்வைக்கப்பட்ட ஏழு வாதங்கள் மற்றும் அதிகாரக் குவிப்பைத் தக்கவைத்திருந்த நான்கு பிழையான வாதங்களைத் தகர்க்கும் வாதங்கள் – இணைந்து, இந்தியக் கூட்டாட்சி அமைப்பிற்குள் சமநிலையை மீட்டெடுப்பதற்கான, இணக்கமான மற்றும்

கொள்கைரீதியான அரசமைப்புச்சட்ட நியாயத்தை நிறுவுகின்றன. இவை வெறும் ஊகக் கோட்பாடுகள் அல்ல; மாறாக, அனுபவம் மற்றும் பகுத்தறிவிலிருந்து வடித்தெடுக்கப்பட்ட முடிவுகளாகும். அதிகாரப் பரவலாக்கல் என்பது ஒற்றுமைக்கு எதிரானது அல்ல, மாறாக அது ஒற்றுமைக்கு இன்றியமையாதது என்பதை இவை உணர்த்துகின்றன. அரசமைப்புச்சட்டத் திருத்தம், சட்டமியற்றல் மற்றும் கொள்கை வகுத்தல் ஆகியவற்றிற்கான வழிகாட்டு நெறிமுறைகளாக இவை கருதப்பட்டால், அதிகாரத்திற்கு இணையான பொறுப்புடைமையைக் கொண்ட ஒரு கூட்டாட்சி ஒழுங்கை உறுதிசெய்ய இவை உதவும். அதில் ஜனநாயகப் பொறுப்புடைமை வலுப்படுத்தப்படும்; மேலும் ஒன்றியமும் மாநிலங்களும் அதிகாரத்திற்கான போட்டியாளர்களாக (rivals) அல்லாமல், ஆளுமையில் பங்காளிகளாகச் (partners) செயல்படும்.

தமிழ்நாடு சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சான்று நூல்கள்

1. Peter F Drucker, *Concept of the Corporation* (John Day Company. New York 1946).
2. Alfred D Chandler, *Strategy and Structure: Chapters in the History of the Industrial Enterprise* (The MIT Press 1962).
3. Mancur Olson, *The Logic of Collective Action: Public Goods and the Theory of Groups* (Harvard Economic Studies 1965).
4. Seymour Martin Lipset and Stein Rokkan, *Party Systems and Voter Alignments* (Free Press 1967).
5. William Niskanen, *Bureaucracy and Representative Government* (Aldine–Atherton 1971).
6. Oliver E Williamson, *Markets and Hierarchies: Analysis and Antitrust Implications* (The Free Press 1975).
7. Eugene Bardach and Robert Kagan, *Going by the Book: The Problem of Regulatory Unreasonableness* (Temple University Press 1982).
8. Michael E Porter, *The Competitive Advantage of Nations* (New York Free Press 1990).
9. Elinor Ostrom, *Governing the Commons* (Cambridge University Press 1990).
10. Daniel Elazar, *Exploring Federalism* (University of Alabama Press 1991) 12, 34.
11. Charles Handy, *The Age of Paradox* (Harvard Business School Press 1994).
12. Gary Hamel and CK Prahalad, *Competing for the Future* (Harvard Business School Press 1994).
13. Anne Philips, *The Politics of Presence* (Oxford University Press 1995).
14. James C Scott, *Seeing Like a State* (Yale University Press 1998).
15. Philip Cooke, *Regional Innovation Systems: The Role of Governance in Globalized World* (Routledge 2004).
16. Wallace E Oates, *Fiscal Federalism* (Edward Elgar Publishing 2011).
17. A Kalaiyarasan and M Vijayabaskar, *The Dravidian Model: Interpreting the Political Economy of Tamil Nadu* (Cambridge University Press 2021).
18. David Ricardo, *The Principles of Political Economy and Taxation* (Atlantic Publishers & Distributors 2025).

19. Friedrich Hayek, 'The Use of Knowledge in Society' (1945) 35 The American Economic Review 519, 521.
20. George Stigler, 'The Theory of Economic Regulation' (1971) 2 The Bell Journal of Economics and Management Science 3.
21. Kaka Kalelkar, *First Backward Classes Commission Repor*t, vols. 1 and 2 (Government of India 1955).
22. BP Mandal, *Report of the Backward Classes Commission*, vols. 1 and 2 (Government of India 1980).
23. Michael E Porter, 'What is Strategy?' (*Harvard Business Review* November–December 1996) accessed February 3, 2026.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இயல் 2

அரசமைப்புச் சட்டத் திருத்தம்

"அரசாங்கம் என்பது ஓர் இயந்திரம் அல்ல, உயிருள்ள ஒன்று. அது பேரண்டக் கோட்பாட்டின் கீழ் வருவதில்லை, உயிரினக் கோட்பாட்டின் கீழ் வருகிறது... உயிரோட்டம் மிக்க அரசியல் அமைப்புச் சட்டங்கள் அமைப்பிலும் நடைமுறையிலும் டார்வினிய கோட்பாட்டின்படி இருக்க வேண்டும்."

– உட்ரோ வில்சன்,
புதிய சுதந்திரம் (1913)[1]

I. அறிமுகம்

1966–இல் வெளியான *இந்திய அரசமைப்புச் சட்டம்: நாட்டின் திருப்புமுனை* (*The Indian Constitution: Cornerstone of a Nation*, Granville Austin) என்ற தனது புகழ்பெற்ற நூலில் கிரான்வில் ஆஸ்டின் அரசமைப்புச் சட்டத் திருத்த நடைமுறையை "அரசமைப்பின் மிகவும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட அம்சங்களில் ஒன்று" என புகழ்ந்தார். ஆயினும், அக்காலத்திலேயே அரசமைப்புச் சட்டத் திருத்த நடைமுறை "மிகவும் நெகிழ்வாக உள்ளது" என்றும், ஏற்கனவே அப்போது நிறைவேற்றப்பட்ட 17 திருத்தங்கள் மூலம் அரசமைப்பின் 'புனிதத்தன்மை' அழிக்கப்பட்டுவிட்டது என்றும் எச்சரித்த விமர்சகர்களையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

[1] Woodrow Wilson, *The New Freedom* (Chapman and Hall 1913) 43–44.

காங்கிரஸ் கட்சி ஒன்றியத்திலும் கிட்டத்தட்ட அனைத்து மாநிலத்திலும் ஆட்சி செய்த போது, ஆஸ்டின் எழுதினார். அவரது மதிப்பீடு ஒப்பிட்டளவில் அரசியல் ஒருமைப்பாடும் அரசமைப்புச் சுயக்கட்டுப்பாடும் நிறைந்த காலகட்டத்தில் எழுதப்பட்டது. அதன் பின்னர் நிகழ்ந்தவற்றை அவர் கண்டிருந்தால் என்ன எழுதியிருப்பார் என்று கற்பனை செய்து மட்டுமே பார்க்க முடியும்: 75 ஆண்டுகளில் 106 அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள்; குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், பிரதமர், சபாநாயகர் ஆகியோரது தேர்தல் தகராறுகளை நீதித்துறை ஆய்வுக்கு அப்பாற்பட்டதாக்கி, அலகாபாத் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்த இந்திரா காந்தியின் தேர்தல் வெற்றியைப் பின்னோக்கிச் சென்று செல்லுபடியாக்கிய *முப்பத்து ஒன்பதாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (1975); ஒரேஅடியில் முகப்புரையை மாற்றி, 40 அரசமைப்புச் சட்டப் பிரிவுகளைத் (உறுப்புகளை/சரத்துகளைத்) திருத்தி, 14 அரசமைப்புச் சட்டப் பிரிவுகளைப் புதியதாகச் சேர்த்து, புதியதாக இரண்டு பகுதிகளைச் சேர்த்து, ஏழாவது அட்டவணையை மாற்றியமைத்த *நாற்பத்து இரண்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (1976).[2] இந்த இரண்டு திருத்தங்களும், எதேச்சதிகார அரசாங்கம் குடிமக்களின் சுதந்திரங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தவும், நீதித்துறையின் சுதந்திரத்தை நலிவடையச் செய்யவும், மாநில உரிமைகளை சிதைக்கவும், அரசமைப்பின் அடிப்படையையே தாக்கவும் நெகிழ்வான திருத்த நடைமுறையைப் பயன்படுத்த முடியும் என்பதை திகைப்பூட்டும் வகையில் தெளிவாகக் காட்டின.

உறுதியாக, *நாற்பத்து நான்காவது அரசமைப்புச் சட்டத் திருத்தமும்* (1978), விழிப்புடன் செயல்பட்ட உச்சநீதிமன்றமும் இறுதியில் இந்த வரம்பு மீறல்கள் சீர்குலைத்த அரசமைப்புச் சமநிலையின் சில பகுதிகளை மீட்டெடுத்தன. ஆனால், முக்கியமான படிப்பினை தெளிவாக உள்ளது: திருத்துவதற்கு மிகவும் எளிதான ஓர் அரசமைப்பு, தவறான கைகளில் கிடைக்கும்போது, மிகவும் எளிதாக வளைக்கப்பட்டு விடும். இத்தகைய வரம்பு மீறல்களை எதிர்த்துப் போராட நீதித்துறையின் துணிச்சலை மட்டுமே நம்பியிருப்பது கோட்பாட்டளவில் சரியானதல்ல, நடைமுறை அளவிலும் பாதுகாப்பானது அல்ல. திருத்த நடைமுறையிலேயே பொதிந்துள்ள கட்டமைப்புக் குறைபாடுகளிலிருந்து குடியரசை மீண்டும் மீண்டும் காப்பாற்ற நீதிமன்றங்களை மட்டுமே எதிர்பார்த்திருக்க முடியாது.

---

[2] MP Jain, *Indian Constitutional Law* (9th edn, LexisNexis 2025) 1899.

II. அரசமைப்பு அவையில் திருத்த ஏற்பாட்டின் படிமலர்ச்சி

அரசமைப்பு அவையில் திருத்தம் செய்யும் ஏற்பாடு – அரசமைப்புச் சட்டப் பிரிவு (உறுப்பு/சரத்து) 368 (முன்னர் வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 304) – உருவாக்கத்தின் வரலாறு, வலுவான கூட்டாட்சித் திருத்தமுறை என்ற ஆரம்ப இலக்கிலிருந்து, மிகவும் நெகிழ்வான, ஒன்றியத்தை மையமாகக் கொண்ட திருத்த நடைமுறையை நோக்கிச் சென்ற தவிர்க்க முடியாத மாற்றத்தை வெளிப்படுத்துகிறது. கண்டிப்பான மாநிலப் பின்னேற்பு அளிப்புத் தேவைகள், பொதுவாக்கெடுப்புகள், மாநிலம் தொடங்கி வைக்கும் திருத்தங்களுக்கான சாத்தியக்கூறு ஆகியவற்றைக் கொண்டிருந்த – அமெரிக்க, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலிய ஆகியவற்றின் அரசமைப்புச் சட்ட முன்மாதிரிகளால் ஈர்க்கப்பட்ட முன்மொழிவுகள் என தொடங்கியவை படிப்படியாக நீர்த்துப்போயின.

பிரிவினைக் குறித்த அச்சங்கள், பிடிவாதமுள்ள சுதேச அரசுகள் அவசியமான சீர்திருத்தங்களைத் தடுக்கக்கூடும் என்ற பயம், விரைவான சமூக–பொருளாதார மாற்றத்திற்கான உந்துதல், நிச்சயமற்ற காலத்தில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான கட்டாயம் ஆகிய காரணிகள் அனைத்தும் இறுதிக் சமரசத்தை வடிவமைத்தன. மொழிவழி மாநில மறுசீரமைப்பு எதிர்காலத்தில் நிகழவிருந்தது. மேலும் ஒன்றியம் அனைத்தையும் கையாள வேண்டிய தேவை தமக்கு உள்ளது என்று நம்பியது. பி.ஆர். அம்பேத்கர் கூறியதுபோல, இந்தியா எவ்வாறு "நெகிழ்வான கூட்டாட்சியாக (a flexible federation) ஆனது என்பதன் கதையாகவே, அடுத்துவரும்" அரசமைப்புச் சட்டப் பிரிவு 368 வடிவமைக்கப்பட்ட கதை உள்ளது.

தொடக்கக் கால முன்மொழிவுகள்

1946 டிசம்பரில், திருத்தங்களுக்கு நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களில் ஐந்தில் மூன்று பகுதியினரின் ஒப்புதல் வேண்டும்; அதனைத் தொடர்ந்து அனைத்து அரசமைப்புச் சட்டப் பிரிவு அலகுகளின் (பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள், சுதேச அரசுகள் ஆகிய இரண்டிலும்) மூன்றில் இரண்டு பங்கினரின் பின்னேற்பைப் பெற வேண்டும் என்று கே. டி. ஷா முன்மொழிந்தார். அடிப்படை உரிமைகளையும் சிறுபான்மைப் பாதுகாப்புகளையும் பாதிக்கும் திருத்தங்களுக்குப் பொதுவாக்கெடுப்புகள் நடத்தப்பட

வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

1947 மே மாதத்தில், திருத்தங்களுக்கு ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஒப்புதல் தேவை என்றும், அதனைத் தொடர்ந்து அரசமைப்புச் சட்டப் பிரிவுக் கட்டமைப்பு அலகுகளில் மூன்றில் இரண்டு பங்கினரின் பின்னேற்பைப் பெற வேண்டும் என்றும் அரசமைப்பு ஆலோசகர் பி.என். ராவ் பரிந்துரைத்தார்.

1947 ஜூலை மாதத்தில், ஒன்றிய அரசமைப்புக் குழு (Union Constitution Committee) மற்றொரு மாறுபட்ட திருத்தத்தை முன்மொழிந்தது. இது ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களில் எளிய பெரும்பான்மை என்பதுடன், கலந்துகொண்டு வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை என தமக்கு சாதகமானதாக மாற்றியது. முக்கியமான கூட்டாட்சி அடிப்படைகளுக்கு மட்டும், இந்திய மக்கள்தொகையில் எளிய பெரும்பான்மையைப் பிரதிநிதித்துவம் செய்யும் அலகுகள் [மாநிலங்கள்] பின்னேற்பு அளிக்க வேண்டும் என்றும் முன்மொழிந்தது.

வரைவு அரசமைப்பு

பிப்ரவரி 21, 1948 ஆம் தேதி, பொதுமக்கள் கருத்து அறிய பி.ஆர். அம்பேத்கர் தலைமையிலான *வரைவுக் குழு (Drafting Committee)* வெளியிட்ட அரசமைப்பு முதலாவது வரைவில், வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 304 திருத்த ஏற்பாடாக இருந்தது. இது மக்கள்தொகை அளவுகோலை முழுவதுமாகக் கைவிட்டு, வரையறுக்கப்பட்ட கூட்டாட்சி அதிகாரங்களுக்கு, பாதி மாகாணங்களினதும் மூன்றில் ஒரு பங்கு சுதேச அரசுகளினதும் பின்னேற்பு தேவை என்ற ஏற்பாட்டை வழங்கியது. குறிப்பிடத்தக்க வகையில், மாநிலச் சட்டமன்றங்களுக்கு ஆளுநரைத் தேர்ந்தெடுக்கும் முறை, மாநிலச் சட்டமன்றத்தில் உள்ள அவைகளின் எண்ணிக்கை ஆகிய இரண்டு அதிகாரப் பொருண்மைகளில் திருத்தங்களைத் தொடங்கி வைக்க அதிகாரம் அளித்தது. இதுவே இந்திய அரசமைப்பு வரலாற்றில் மாநிலம் திருத்தம் தொடங்கி வைத்தல் குறித்து வெளிப்படையாகக் கருத்தில்கொள்ளப்பட்ட ஒரே நிகழ்வு.

இறுதி விவாதம்

அதன்பிறகு பத்தொன்பது மாதங்களுக்கு இந்த விவகாரம் உறங்கியது. செப்டம்பர் 17, 1949 அன்று அரசமைப்பு அவை (Constituent Assembly) மற்ற பொருண்மைகளுடன் திருத்தப்பட்ட வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 304ஐ பரிசீலித்தபோது தூசித்தட்டி எடுக்கப்பட்டது. அந்த

ஏற்பாட்டை, பி.ஆர். அம்பேத்கர் மூன்று அடுக்கு திருத்த நடைமுறையாக விளக்கினார்:

- *முதலாவது*, பெரும்பாலான அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு நாடாளுமன்றத்தில் *சிறப்பு பெரும்பான்மை* தேவை: அதாவது, ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மையும், வருகைபுரிந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையும் தேவைப்படும்.
- *இரண்டாவது*, கூட்டாட்சிப் பண்பு சார்ந்த *குறுகிய அளவிலான ஏற்பாடுகளில் மேற்கொள்ளப்படும்* திருத்தங்களுக்கு, நாடாளுமன்றத்தின் மேற்கூறிய சிறப்புப் பெரும்பான்மையுடன் கூடுதலாக, *மாநிலச் சட்டமன்றங்களில் சரிபாதிக்குக் குறையாதவற்றின் பின்னேற்பும்* தேவைப்படும்.
- *மூன்றாவது, சிறிய அளவிலான இடைக்கால அல்லது நிர்வாகம் தொடர்பான அதிகாரங்கள்* தொடர்பான திருத்தங்கள், முறையான திருத்த உறுப்பின் வழிமுறைகளுக்குள் வராது. மாறாக, அத்தகைய திருத்தங்களைச் செய்ய நாடாளுமன்றத்தை அனுமதிக்கும் குறிப்பிட்ட அரசமைப்புச் சட்டப் பிரிவுகளின் கீழ், சாதாரண சட்டமியற்றல் மூலமாகவே – ஒவ்வொரு அவையிலும் வருகைபுரிந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மை வழியாகவே – அவை திருத்தம் செய்யப்படும்.

நெகிழ்வுத்தன்மையை ஆதரித்தவர்கள், சடுதியான அரசமைப்புமுறை மாற்றம் குறித்து அஞ்சியவர்கள் என விவாதம் இரண்டு பெரும் அணிகளை வெளிக்கொணர்ந்தது:

வருகை புரிந்து வாக்கு அளிப்பவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை என்னும் கூடுதல் தடை ஏதுமின்றி, ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடனேயே அரசமைப்பைத் திருத்த இயல வேண்டும் என்று பி.எஸ். தேஷ்முக் வாதிட்டார்.

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை, மாநிலங்களின் பின்னேற்பு ஆகிய இரண்டு தேவைகளையும் நீக்க வேண்டும் என்று பிரிஜேஷ்வர் பிரசாத் வாதாடினார். அதற்குப் பதிலாக, அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கான வழிமுறையாகத் 'தேசிய பொதுவாக்கெடுப்பு' முறை இருக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். இதனை, "மக்களின் இறையாண்மைக்கான தெளிவான அங்கீகாரம்" என்றும், "நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் ஒரு கட்சியின்

எதேச்சாதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வலிமையான ஆயுதம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாநிலங்களின் பின்னேற்பு கோரும் நடைமுறையில் காணப்பட்ட அதிகப்படியான நெகிழ்வற்ற தன்மையை எச்.வி. காமத் எதிர்த்தார். மேலும், போதுமான பொதுவிவாதத்தை உறுதிசெய்யும் வகையில், எந்தவொரு திருத்தமும் அறிமுகப்படுத்தப்படுவதற்கும் அது இறுதியாக நிறைவேற்றப்படுவதற்கும் இடையே கட்டாயமாக ஆறு மாத கால இடைவெளி இருக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தார்.

கட்சி ஒன்று ஆதிக்கத்தின் கீழ் இயற்றப்பட்ட அரசமைப்பு திருத்தம் செய்ய எளிதானதாக இருக்க வேண்டும் என்று மகாவீர் தியாகி வலியுறுத்தினார். ஆயினும் மாநிலப் பின்னேற்பு அளிப்பு குறித்து பி.ஆர். அம்பேத்கரின் திருத்த நடைமுறை "அறிவார்ந்த ஆலோசனை" என்று பாராட்டினார்.

ஆர்.கே. சித்வா, அம்பேத்கரின் வரைமுறையைத் தீவிரமாக ஆதரித்ததோடு, இன்னும் அதிகமான நெகிழ்வற்ற தன்மையைக் கோரினார்; எந்தவொரு பொறுப்பான அரசமைப்பும், சாதாரண பெரும்பான்மை மூலம் மாற்றங்களைச் செய்ய அனுமதிப்பதில்லை என்று வலியுறுத்தினார். அவசரமான அல்லது சந்தர்ப்பவாத மாற்றங்களிலிருந்து இந்த "மகத்தான அரசமைப்பை" பாதுகாப்பதற்கு, இத்தகைய விதிமுறைக் கடுமை இன்றியமையாதது என்று வாதிட்டார்.

பி.ஆர். அம்பேத்கர், "நாங்கள் பல அம்சங்களில் மாகாண சுயாட்சியை எடுத்துக்கொண்டு உள்ளோம்" என்று ஒப்புக்கொண்டாலும், "அரசமைப்பின் கூட்டாட்சிமுறை அடிப்படையில் மாற்றப்படவில்லை" என்றும், கூட்டாட்சிமுறை முக்கியத்துவம் வாய்ந்த ஏற்பாடுகளை "மாகாணங்கள் அல்லது மாநிலங்கள் ஒப்புதல் இல்லாமல் திருத்துவது... அரசமைப்பின் அடிப்படைகளை முற்றிலும் அழிப்பதற்குச் சமம்" என்றும் கூறினார். விவாதத்தின்போது ஜவஹர்லால் நேரு உள்ளிட்ட பிற மூத்த தலைவர்களின் மௌனம், நெகிழ்வான திருத்த நடைமுறையில் அவர்களுக்கு இருந்த மனநிறைவைக் காட்டியது.

பெரும்பாலான திருத்தங்களுக்குச் சிறப்பு நாடாளுமன்றப் பெரும்பான்மையும், கூட்டாட்சி முக்கியத்துவம் வாய்ந்த ஏற்பாடுகளுக்குச் சிறப்புப் பெரும்பான்மையுடன் மாநிலப் பின்னேற்பு அளிப்பும் என்கிற முறை மாற்றமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டு, இறுதியில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 368 உருபெற்றது. எதிர்பார்த்தபடி சாதாரண பெரும்பான்மைத் திருத்தங்கள் அரசமைப்புச் சட்டப் பிரிவு 368க்கு உட்படாமல், குறிப்பிட்ட அரசமைப்பு ஏற்பாடுகள் மூலம் செய்யப்படுகின்றன.

III. அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இன் 1950க்குப் பிந்தைய படிமலர்ச்சி

திருத்த ஏற்பாடு என்பது எந்தவொரு அரசமைப்பிற்கும் மிக முக்கியமான பகுதி, அதன் உயிர்நாடி. இந்திய அரசமைப்பின் ஒழுக்க வரலாற்றைக் காண விரும்பினால், அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இன் படிமலர்ச்சியைவிட வேறு எதுவும் தெளிவாக வெளிப்படுத்தாது. சீர்திருத்தம் செய்வதையும் தேசத்தைக் கட்டியெழுப்புவதையும் எளிதாக்க இயற்றப்பட்ட நெகிழ்வான முறை, அதிகாரத்தைக் குவிக்கவும் நிறுவனப் பாதுகாப்புகளைப் பலவீனப்படுத்தவும் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதையும் காட்டுகிறது. இந்தக் கதை வழக்கமான ஒன்றுதான். ஆயினும் மீண்டும் சுருக்கமாக சொல்லப்பட வேண்டியது அவசியம்.

ஆரம்பகால நீதித்துறை விளக்கம் (1951–67)

அரசமைப்பு நடைமுறைக்கு வந்த ஓர் ஆண்டிற்குள் முதல் சோதனையை எதிர்கொண்டது. *சங்கரி பிரசாத் எதிர் இந்திய ஒன்றியம்* (1951)[3] [*Shankari Prasad v. Union of India* (1951)] வழக்கில், *முதலாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம், 1951–ஐ* உச்சநீதிமன்றம் உறுதிசெய்தது. இதில், அரசமைப்புச் சட்டப் பிரிவு 13(2)–இல் உள்ள 'சட்டம்' என்ற சொல் சாதாரண சட்டத்தைக் மட்டுமே குறிக்கிறது என்று கருதியது. இதனால், அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இன் கீழ் வரும் அரசமைப்புச் சட்டத் திருத்தம் இது அல்ல என்று தீர்ப்பு அளித்தது. எனவே, அடிப்படை உரிமைகளை நீக்குவதற்கோ அல்லது சுருக்குவதற்கோ உள்ள சட்ட விலக்கை அரசமைப்புச் சட்டப் பிரிவு 13(2) பொருளாக இல்லை என்பதால், திருத்தம் செய்யும் அதிகாரம் கட்டுப்படுத்தப்படவில்லை.

இந்த விளக்கத்தை, *சஜ்ஜன் சிங் எதிர் இராஜஸ்தான் மாநிலம்* (1965)[4] *[Sajjan Singh v. State of Rajasthan* (1965)*]* வழக்கில் 3:2 பெரும்பான்மை மூலம் அளிக்கப்பட்ட தீர்ப்பு மீண்டும் உறுதி செய்தது. இத்தீர்ப்பு *பதினேழாவது திருத்தத்தை* (1964) உறுதி செய்ததோடு, அடிப்படை உரிமைகள் உட்பட அரசமைப்பின் எந்தப் பகுதியையும் திருத்த நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்று கூறியது. எவ்வாறாயினும், இவ்வழக்கில் நீதிபதிகள் முதோல்கர், இதயத்துல்லா

[3] AIR 1951 SC 458.

[4] AIR 1965 SC 845.

ஆகியோர் வழங்கிய தொலைநோக்கான மாற்றுத் தீர்ப்புகள், வரம்பற்ற திருத்தும் அதிகாரம் அரசமைப்பின் அடிப்படையை மாற்றியமைக்க முடியுமா என்று கேள்வி எழுப்பின.

அதன் பின்னர் *ஐ.சி. கோலக்நாத் எதிர் பஞ்சாப் மாநிலம்* (1967)[5] *[I.C. Golak Nath v. State of Punjab* (1967)] வழக்கு வந்தது. இதில் 6–5 என்கிற மிக சாதாரண பெரும்பான்மை வழங்கிய தீர்ப்பு மூலம், தனது போக்கை உச்சநீதிமன்றம் மாற்றிக் கொண்டது. இத்தீர்ப்பில், அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் அரசமைப்புச் சட்டப் பிரிவு 13(2)–இன் பொருளுக்குள் "சட்டம்" ஆகும், எனவே அடிப்படை உரிமைகளைச் சுருக்க முடியாது என்று தீர்ப்பளித்தது. நாடாளுமன்றம் அல்ல, அரசமைப்பே மேலானது என்று நீதிமன்றம் பிரகடனம் செய்தது. இதன் மூலம் அடிப்படை உரிமைகளை நாடாளுமன்றத் திருத்த அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டது ஆக்கியது. இந்தத் தீர்ப்பு நாடாளுமன்றத்திற்கும் உச்சநீதிமன்றத்திற்கும் இடையே தாமே இறுதியான அரசமைப்பு அதிகாரம் கொண்ட அமைப்பு என்கிற வரலாற்றுச் சிறப்புவாய்ந்த மோதலை உருவாக்கியது.

நாடாளுமன்றம் கொடுத்த பதிலடி (1971–76)

அம்மோதலுக்கு நாடாளுமன்றம் *இருபத்து நான்காவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்* (1971) மூலம் பதிலளித்தது. அது, அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இன் தலைப்பை வெறும் "திருத்தத்திற்கான நடைமுறை" என்பதிலிருந்து "அரசமைப்பைத் திருத்துவதற்கான நாடாளுமன்றத்தின் அதிகாரமும் அதற்கான நடைமுறையும்" எனத் திருத்தியது. மேலும், அரசமைப்பின் "எந்தவொரு ஏற்பாட்டையும் சேர்த்து, மாற்றி அல்லது நீக்கித் திருத்தம் செய்வதற்கு" நாடாளுமன்றத்திற்கு அரசமைப்பு அதிகாரத்தை உறுதிப்படுத்த, புதிய அரசமைப்புச் சட்டப் பிரிவு 368(1) என்கிற ஒன்றைச் சேர்த்தது. மூல அரசமைப்புச் சட்டப் பிரிவு 368, பிரிவு (2)ஆக மாற்றியமைக்கப்பட்டது. மேலும் எஞ்சிய எந்தவொரு விருப்புரிமை அதிகாரமும் அகற்றப்பட்டு, எந்தவொரு திருத்த சட்டவரைவுக்கும் குடியரசுத் தலைவர் "ஒப்புதலை அளிக்க வேண்டும்" என்று கட்டாயமாக்கப்பட்டது. நாடாளுமன்றம் அரசமைப்புச் சட்டப் பிரிவு 368(3)ஐயும் சேர்த்து, அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கு அரசமைப்புச் சட்டப் பிரிவு 13(2)–இன் பயன்பாட்டை வெளிப்படையாக விலக்கி, இந்த நிலையை மீண்டும் உறுதிப்படுத்த அதற்கு இணையான அரசமைப்புச் சட்டப் பிரிவு 13(4)ஐயும் அறிமுகப்படுத்தியது. இந்த மாற்றங்கள் மூலம், அரசமைப்பு மாற்றத்தின்

---

[5] AIR 1967 SC 1643.

இறுதிச் சிற்பியாக தனது அதிகாரத்தை நாடாளுமன்றம் மீண்டும் நிலைநாட்ட முயன்றது.

இந்த விவகாரம் இறுதியாக *கேசவானந்த பாரதி எதிர் கேரள மாநிலம்* (1973)[6] *[Kesavananda Bharati v. State of Kerala* (1973)*]* வழக்கில் தீர்க்கப்பட்டது. அரசமைப்பின் சாரமான அடிப்படையை, அதாவது அதன் "அடிப்படைக் கட்டமைப்பை" மாற்றவோ, சேதப்படுத்தவோ அல்லது அழிக்கவோ முடியாது என 7–6 என்ற குறுகிய வித்தியாசத்தில் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. "அடிப்படைக் கட்டமைப்பு" என்கிற சொற்றொடர் அரசமைப்பில் காணப்படவில்லை. இது நீதித்துறை கண்டுபிடித்தது ஆகும்.

அடிப்படைக் கட்டமைப்பு விளக்கம் என்பது அரசமைப்பின் தனிப்பட்ட அரசமைப்புச் சட்டப் பிரிவுகளிலிருந்து மட்டுமல்லாமல், ஒத்திசைவையும் அடையாளத்தையும் அளிக்கும் ஆழமான, கட்டமைப்புக் கொள்கைகளின் தொகுப்பிலிருந்தும் பெறப்படுகிறது என ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதனுள் அரசமைப்பின் முதன்மை, குடியரசும் ஜனநாயக அரசாங்க வடிவமும், கூட்டாட்சி, மதச்சார்பின்மை, அதிகாரப் பிரிப்பு, தேசத்தின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும், சமத்துவம், நீதித்துறையின் சுதந்திரம், நீதித்துறை மீளாய்வு அதிகாரம் ஆகியவை அடங்கும். இந்தக் கொள்கைகள் நாடாளுமன்றத்தின் திருத்தம் செய்யும் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டவை. ஏனெனில் அவற்றைத் திருத்துவது அரசமைப்பின் அடிப்படையை அழிப்பதற்குச் சமம்.

அவசரநிலையின் உச்சத்தில் இயற்றப்பட்ட *நாற்பத்து இரண்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்* (1976) மூலம், நாடாளுமன்றம் அனைத்து அரசமைப்புத் தடைகளுக்கும் அப்பால் தன்னை நிலைநிறுத்த முயன்றது. இது அரசமைப்புச் சட்டப் பிரிவு 368ல் பிரிவுகள் (4), (5)ஐ செருகியது. எந்தத் திருத்தத்தையும் "எந்தக் காரணம் கொண்டும் எந்த நீதிமன்றத்திலும் கேள்வி கேட்க முடியாது" என்றும், நாடாளுமன்றத்தின் அரசமைப்பு அதிகாரத்திற்கு "எந்த வரம்பும் இல்லை" என்றும் பிரகடனம் செய்தது.

திருத்த அதிகார வரம்புகளை மீண்டும் நிலைநாட்டல்

அவசரநிலைக்குப் பிறகு இயற்றப்பட்ட *நாற்பத்து நான்காவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (1978), *நாற்பத்து இரண்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்* பல சிதைவுகளைத் திரும்பப் பெற்றது. ஆனால் அரசமைப்புச் சட்டப் பிரிவு 368(4) மற்றும் (5)

[6] (1973) 4 SCC 225.

பிரிவுகள் திரும்பப் பெறப்படவில்லை. உச்சநீதிமன்றம் *மினர்வா மில்ஸ் எதிர் இந்திய ஒன்றியம்* (1980)[7] *[Minerva Mills v. Union of India* (1980)] வழக்கில் உறுதியான பதிலை அளித்தது. இவ்வழக்கின் தீர்ப்பில், பிரிவுகள் (4), (5) ஆகிய இரண்டும் "அடிப்படைக் கட்டமைப்புக்கு" எதிரானவை, குறிப்பாக நீதித்துறை மீளாய்வு, திருத்த அதிகார வரம்பு இயல்பு ஆகிய கொள்கைகளை மீறுவதாகக் கூறி இரத்து செய்தது. அவை அரசமைப்பில் உள்ளன. சட்ட அதிகாரம் எதுவுமில்லாமல், நாடாளுமன்றம் அரசமைப்பிற்கு மேலான அதிகாரத்தை நாடிய காலத்தின் மௌன நினைவூட்டல்களாக உள்ளன.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இன் இறுதி மாற்றம் *நூற்று ஒன்றாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (2016) மூலம் வந்தது. இது சரக்கு & சேவை வரியை (ஜிஎஸ்டியை) அறிமுகப்படுத்தி, அரசமைப்புச் சட்டப் பிரிவு 368(2)(a)ன் நிபந்தனைக்கு "*அல்லது அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A*" என்ற சொற்களைச் சேர்த்து விரிவுபடுத்தியது.

IV. கடந்தகால ஆணையங்களின் பார்வைகள்

ஒன்றிய–மாநில உறவுகள் குறித்த இந்தியாவின் மூன்று முக்கிய ஆணையங்களான தமிழ்நாடு அரசாங்கம் நியமனம் செய்த ராஜமன்னார் குழு (1969–71), இந்திய அரசாங்கம் நியமனம் செய்த சர்க்காரியா ஆணையம் (1983–88), பூஞ்சி ஆணையம் (2007–10) ஆகியவை அரசமைப்புச் சட்டப் பிரிவு 368 குறித்து மிகவும் மாறுபட்ட மதிப்பீடுகளை வழங்கியுள்ளன.

ராஜமன்னார் குழு (Rajamannar Committee)

அரசமைப்புச் சட்டப் பிரிவு 368(2)–இன் கீழ், மாநிலங்கள் மிகவும் சிலவகை அதிகாரங்கள் குறித்த திருத்த நடைமுறையில் மட்டுமே பங்கேற்கின்றன என்பதையும், அதற்குக் கூட பாதி அளவிலான மாநிலங்களின் ஒப்புதலே போதுமானது என்பதையும் இக்குழு கோடிட்டுக் காட்டியது. இதற்கிடையே, வெளிப்படையான முரண்பாடு தோன்றும் – மாநிலப் பின்னேற்பு தேவைப்பட்ட சட்டம் இயற்றுதல் போன்ற குறிப்பிடத்தக்க சில அதிகாரங்கள் தவிர, நிர்வாக உறவுகள், வருவாய் விநியோகம் (அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 268–279), ஆட்சி

[7] (1980) 3 SCC 625.

மொழி ஆகியவற்றைக் கையாளும் ஏற்பாடுகளை ஒருதலைப்பட்சமாகத் திருத்தும் அதிகாரத்தை நாடாளுமன்றம் எடுத்துக்கொண்டது. அதுவரை இயற்றப்பட்ட இருபத்து மூன்று திருத்தங்களில், பதினொன்றுக்கு மட்டுமே மாநிலப் பின்னேற்பு அளிப்பு தேவைப்பட்டது. எஞ்சிய பன்னிரண்டும் கூட்டாட்சிமுறை உறவுகளைப் பாதித்தாலும், அவற்றுக்கு மாநிலப் பின்னேற்பு அளிப்பைக் கோரவில்லை. *அனைத்து அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கும்* நான்கில் மூன்று பங்கு (அல்லது குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு பங்கு) மாநிலங்களின் ஒப்புதல், இந்தியாவின் மக்கள்தொகையிலும் நான்கில் மூன்று பங்கு (அல்லது குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு பங்கு) பிரதிநிதித்துவப்படுத்தும் மாநிலங்களின் ஒப்புதல் அவசியம் என்று இக்குழு பரிந்துரைத்தது.

சர்க்காரியா ஆணையம் (Sarkaria Commission)

இந்த ஆணையம் முற்றிலும் மாறுபாடான நோக்கு கொண்டிருந்தது. வரம்புகளை அதிகரிப்பது நடைமுறையை "தேவையற்ற விதத்தில் கண்டிப்பானதாக" மாற்றும் என்றும், அரசமைப்பு வளர்ச்சிப் போக்கை உச்சநீதிமன்றத்திடம் ஒப்படைத்துவிடுவது என்றும் அஞ்சியது. நெகிழ்வுத்தன்மைக்கும் கண்டிப்பான முறைக்கும் இடையில் "அறிவார்ந்த சமநிலையை" அரசமைப்புச் சிற்பிகள் ஏற்கனவே நிலைநாட்டிவிட்டனர் என்றும், முக்கியமான கூட்டாட்சி அதிகாரங்களில் பாதி மாநிலங்களின் பின்னேற்பை மட்டுமே கோரும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 368 போதுமான அளவுக்குப் பாதுகாப்பானதாக உள்ளது என்றும் இந்த ஆணையம் கருதியது.

பூஞ்சி ஆணையம் (Punchhi Commission)

இந்த ஆணையம் நடப்பு முறையை "வலுவான, உரிய கலந்தாய்வு தன்மை கொண்ட" முறை என்று கருதியது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 368 திருத்தப்பட்டதை எதிர்த்தது. ஆயினும், இந்த ஆணையம், நாடாளுமன்றம் கடும் கட்டுப்பாட்டுடன் செயல்பட வேண்டும் என்று எச்சரித்தது. மாநிலங்களவையை மாநிலங்களின் அதிகாரப்பூர்வமான அவையாக மாற்ற, மாநிலங்களுக்கு சமமான பிரதிநிதித்துவத்தை அளிக்கும் வகையில் மாநிலங்களவை சீர்திருத்தப்பட வேண்டும் என்று இந்த ஆணையம் பரிந்துரைத்தது.

அனைத்தையும் சேர்த்து பார்க்கும்போது, சர்க்காரியா – பூஞ்சி ஆணையங்கள் மரபுகளை அதிக அளவில் நம்பின. மேலும் அரசமைப்பு ஒழுக்கம் அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இன் தவறான பயன்பாட்டைக்

கட்டுப்படுத்தும் என்று கருதின. குறிப்பாக அவசரநிலையின்போது, அதிக அளவிலான திருத்தங்கள் எவ்வளவு எளிதாக மேற்கொள்ளப்பட்டன என்பதை அவை கவனிக்கத் தவறின. மேலும் கண்டிப்புத்தன்மை அல்ல, அதிகப்படியான நெகிழ்வுத்தன்மையே உண்மையான அச்சுறுத்தல் என்பதையும் அங்கீகரிக்கத் தவறின. கண்டிப்புத்தன்மை மூலம் நீதித்துறைப் பிடி இறுகும் என்று சர்க்காரியா ஆணையம் அஞ்சியது. ஆனால் நெகிழ்வுத்தன்மை அதையும்விட அதிகமாக நீதித்துறைப் பிடியை இறுகச் செய்தது என்ற உண்மையைக் கவனிக்கத் தவறிவிட்டது. ராஜமன்னார் குழு மட்டுமே திருத்த நடைமுறையில் பெரிய அளவில் சீர்திருத்தம் செய்வதற்கான தேவையைக் தெளிவாகக் கண்டது.

V. அரசமைப்புச் சட்டப் பிரிவு 368 குறித்த மறுபரிசீலனை

மரபுகளோ, நிறுவனக் கட்டுப்பாடு குறித்த சர்க்காரியா–பூஞ்சி ஆணையங்களின் பக்தி மிக்க வேண்டுகோள்களோ அரசமைப்பு வாசகத்தில் உள்ள இடைவெளிகளையும் தெளிவின்மைகளையும் சரிசெய்ய முடியாது என்கிற உண்மையை இந்தியாவின் 75 ஆண்டுகால அரசமைப்புப் பயணம் தெளிவாகக் காட்டுகிறது.

(எ.கா., அரசாங்கத்தை உருவாக்குவதில் ஆளுநர்களின் கட்சி சார்பான தலையீடுகள், அரசமைப்புச் சட்டப் பிரிவு 356–இன் கீழ் குடியரசுத் தலைவர் ஆட்சிக்கான கண்மூடித்தனமான பரிந்துரைகள், அரசமைப்புச் சட்டப் பிரிவு 200–இன் கீழ் மாநில சட்டவரைவுகளுக்கு ஏற்பிசைவு அளிப்பதில் நீண்ட தாமதங்கள் என) நிர்வாகத்திலும், (எ.கா., பத்தாவது அட்டவணையின் கீழ் தகுதி நீக்க நடவடிக்கைகளை சபாநாயகர்களுடைய நெறிப்படுத்தப்படாத அதிகாரங்கள், மாநிலங்களவையைத் தவிர்ப்பதற்காகப் பண சட்டவரைவு அல்லாதவற்றை பண சட்டவரைவுகள் என்று சான்றளித்தல்) நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் மரபுகள் அரசியல் அழுத்தம் காரணமாக மீண்டும் மீண்டும் வீழ்ச்சி அடைந்துள்ளன. சில சமயங்களில், உச்சநீதிமன்றம் தற்காலிகமான தீர்வுகளை வழங்கியுள்ளது. இது தெளிவான அரசமைப்பு முறைக்கு போதுமான மாற்று அல்ல. ஒன்றிய அரசாங்கம் உச்சநீதிமன்றத் தேர்வுக் குழுவின் பரிந்துரைகளைத் தேர்ந்தெடுத்து ஏற்றுக் கொள்வதன் மூலம் நீதித்துறை மரபுகளும் சிதைக்கப்படுகின்றன. இது நீதித்துறையின் சுதந்திரத்தையே நலிவடைய செய்கிறது.

இத்தகைய மரபுகளின் தொடர்ச்சியான வீழ்ச்சிகளைத் தெளிவான, திட்டமிட்ட அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் மூலம் மட்டுமே சரிசெய்ய முடியும். சீர்திருத்தம் 368வது உறுப்பிலேயே தொடங்க வேண்டும். ஏனெனில், ஒட்டுமொத்த அரசமைப்பு ஒழுங்கின் ஒத்திசைவும் ஒருமைப்பாடும் இறுதியில் திருத்த ஏற்பாட்டிலேயே தங்கியுள்ளன.

அரசமைப்புச் சட்ட வடிவமைப்புக் குறித்த ஒவ்வொரு தீவிர விவாதத்தின் மையத்திலும் கருத்துக்களின் மோதலே உள்ளது. அடிப்படை உரிமைகள், கூட்டாட்சி முறை அல்லது திருத்தும் அதிகாரம் பற்றி நாம் பேசினாலும், நாம் வெறும் பிரிவுகள், துணைப் பிரிவுகளின் மொழியை மட்டுமல்ல, அடிப்படைக் கொள்கைகளின் மோதலையும் எதிர்கொள்கிறோம். அடிப்படை உரிமைகள் துறையில், தனிநபர் சுதந்திரத்திற்கும் கூட்டு நலனுக்கும் இடையிலான நீடித்த பதற்றமே மையமான சிக்கல் ஆகும். கூட்டாட்சி முறையில், இது அதிகாரத்தை ஒருங்கிணைக்க முனையும் ஒன்றிய அரசின் இயல்புக்கும், தங்கள் அரசமைப்புச் சட்ட வெளியைப் பாதுகாக்க மாநிலங்களின் உறுதிக்கும் இடையிலான வடிவத்தை எடுக்கிறது. அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் சூழலில், இது தொடர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் இடையிலான நுட்பமான சமநிலையாக வெளிப்படுகிறது. அடிப்படை விழுமியங்களைப் பாதுகாக்கும் மாற்றத்திற்கு இடம்கொடுக்காத தன்மைக்கும், மாற்றம் இல்லாமல் எந்த அரசமைப்பும் நிலைத்திருக்க முடியாத தகவமைப்பிற்கும் இடையிலான சமநிலை அது.

ஓர் அரசமைப்பு என்பது ஒரு சாதாரண சட்ட ஆவணம் அல்ல; அது தேசத்தின் அரசியல் ஒழுங்கிற்கு வடிவம் கொடுக்கும் அடிப்படைச் சாசனம். எனவே, அதன் அடிப்படை அடையாளம் சீர்குலைந்துவிடாமல் இருக்க, எச்சரிக்கை, ஆழ்ந்த பரிசீலனை, நிதானம் ஆகியவற்றுடன் அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். அரசமைப்புத் தன்னைத்தானே அழித்துக்கொள்வதற்கு எதிரான பாதுகாப்பாக அடிப்படைக் கட்டமைப்புக் கோட்பாட்டை உச்சநீதிமன்றம் உருவாக்குவதற்கு, இந்த உள்ளுணர்வுதான் வழிவகுத்தது. ஆயினும், எந்தவோர் அரசமைப்பு ஒழுங்கும் நிலையாக இருக்க முடியாது. உயிருள்ள அரசமைப்பு, பரிணாம வளர்ச்சி அடையக்கூடியதாக இருக்க வேண்டும். வரலாற்றுப் புறக்கணிப்புகளைச் சரிசெய்வதற்கோ, சமூகப் பொருளாதார மாற்றங்களுக்கு எதிர்வினை ஆற்றுவதற்கோ அல்லது அதை உருவாக்கியவர்களால் முன்னறிய முடியாத நிறுவன யதார்த்தங்களுக்கு இடமளிப்பதற்கோ இந்த வளர்ச்சி தேவைப்படுகிறது. முதிர்ச்சியடைந்த கூட்டாட்சி நாடுகளின் ஒப்பீட்டு அனுபவம், இந்த நுட்பமான எல்லை அடிக்கடி அல்லது எளிதான மாற்றங்களால் அல்லாமல், தீவிரமான பரிசீலனை, பரந்த அளவிலான இசைவு, மிக

ஆழமான ஏற்புடைமை ஆகியவை அடிப்படையிலான திருத்த நடைமுறைகளால் சிறப்பாகப் பாதுகாக்கப்படும் என காட்டுகிறது.

பின்வரும் பரிந்துரைகள், கூட்டாட்சி சமநிலையை வலுப்படுத்தவும், மக்களாட்சி முறையின் ஏற்புடைமையை ஆழப்படுத்தவும், அர்த்தமுள்ள நிறுவனக் கட்டுப்பாட்டை உறுதி செய்யவும் வடிவமைக்கப்பட்ட, நவீனமயமாக்கப்பட்ட திருத்த முறையைக் கோடிட்டுக் காட்டவும் முயலுகின்றன.

1. சாதாரண பெரும்பான்மையால் திருத்தக்கூடிய ஏற்பாடுகளின் பட்டியலைச் சுருக்குதல்

பல அரசமைப்பு ஏற்பாடுகளை, அவைக்கு வருகைபுரிந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மை மூலம் இன்றும் நாடாளுமன்றம் திருத்த முடிகிறது. இம்முறை ஆரம்ப காலக் குடியரசின் மாறுநிலை, நிர்வாகநிலை தேவைகளை நிறைவு செய்வதற்காகவே உருவாக்கப்பட்டதாக இருக்கலாம். குறைந்தபட்சம் இத்தகைய இருபத்திரண்டு ஏற்பாடுகளை அடையாளம் கண்டு, "இன்னும் பலவற்றைச் சேர்க்க முடியும்" என்று கிரான்வில் ஆஸ்டின் குறிப்பிட்டுள்ளார். அவை இரண்டு முக்கியமான வகைகளின் கீழ் வருகின்றன: (1) "*அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இன் நோக்கங்களுக்கு உட்பட்டு இந்த அரசமைப்பின் திருத்தம் என்று கருதப்படும்... வகை அல்லாத சட்டம்*" என்று வெளிப்படையாகக் கூறும் அரசமைப்புச் சட்டப் பிரிவுகள், (2) "*நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம்*" அல்லது "*நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் வேறுவிதமாக வழங்கும் வரை*" போன்ற சொற்றொடர்களைக் கொண்டு குறிப்பிடப்படுகின்ற ஏற்பாடுகள். இதன் மூலம் நாடாளுமன்றம் சாதாரணமாகச் சட்டம் இயற்றும் போதும்கூட, திறம்பட அரசமைப்பை இயற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்துகிறது. (**இணைப்பு Iஇ காண்க**)

சாதாரண பெரும்பான்மை மூலம் திருத்தப்படக்கூடிய இந்த ஏற்பாடுகளில் சில மாநில அதிகாரங்களையும் கூட்டாட்சிமுறை சமநிலையையும்கூட பாதிக்கின்றன. அரசமைப்புச் சட்டப் பிரிவு 100(3)–இன் கீழ் உள்ள வருகையின் அளவு, "அவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பத்தில் ஒருபங்கு" மட்டுமே என்பதால், கோட்பாட்டளவில் சட்டவரைவு ஒன்று மக்களவையில் 55 நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலங்களவையில் 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையிலும் – அதில் மக்களவையில் 28 நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலங்களவையில் 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களிப்பதன் மூலமும் நிறைவேற்றப்படலாம்.

கூட்டாட்சிப் பண்பு சார்ந்த அரசமைப்பு ஏற்பாடுகளைச் சாரம்சத்தில் மாற்றியமைக்கும் ஏற்பாடுகளுக்கு மட்டுமல்ல, சாதாரண சட்டமியற்றலுக்குக் கூட இந்த வரம்பு ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்குக் குறைவானது ஆகும்.

பரிந்துரை 1

மிகச் சில ஏற்பாடுகள் மட்டுமே தொடர்ந்து, சாதாரண நாடாளுமன்றப் பெரும்பான்மை மூலம் இயற்றப்படும் சட்டம் வழியாகத் திருத்தப்படக்கூடியவையாக இருக்க வேண்டும், அவை:

1. அரசமைப்புச் சட்டப் பிரிவு 2: புதிய நிலப்பகுதியை ஒன்றியத்திற்குள் இணைத்தல்.
2. அரசமைப்புச் சட்டப் பிரிவு 11: குடியுரிமையை முறைப்படுத்தல்
3. அரசமைப்புச் சட்டப் பிரிவு 239, 239A, 239AA, 241 ஒன்றிய ஆட்சிநிலப்பகுதிகள் (யூனியன் பிரதேசங்கள்), டெல்லி தொடர்பானவை.
4. இரண்டாவது அட்டவணை: அரசமைப்புப் பதவி வகிப்பவர்களுக்கான ஊதியமும் படிகளும்.

மற்ற அனைத்து அரசமைப்பு ஏற்பாடுகளும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 368ன் படி மட்டுமே திருத்தப்பட வேண்டும்.

2. நாடாளுமன்றத்தில் சிறப்புப் பெரும்பான்மை வரம்பை உயர்த்துதல்

பெரும்பாலான அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கு இந்தியாவின் இப்போதைய நாடாளுமன்றச் சிறப்புப் பெரும்பான்மைத் தேவை என்பது (i) ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மை, (ii) அந்த அவையில் வருகைபுரிந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மை ஆகும்.

இப்போதைய கட்டமைப்பு, நடப்பு அரசாங்கம் ஒன்று, தனது நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி, அரசமைப்புச் சட்ட வடிவமைப்பில் நிரந்தர மாற்றங்களைச் செய்ய அனுமதிக்கிறது. ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மை என்ற தேவை, பார்ப்பதற்குக் கடுமையானதாகத் தோன்றினாலும், நடைமுறையில் ஆளும் தரப்பினரால் பெரும்பாலும் அடையக்கூடியதாகவே உள்ளது. ஏனெனில், அவர்கள் இயல்பாகவே மக்களவையில் பெரும்பான்மையைக் கொண்டிருப்பதுடன்,

மாநிலங்களவையிலும் தீர்க்கமானதாக இல்லாவிட்டாலும், கணிசமான செல்வாக்கைக் கொண்டிருக்கிறார்கள். இது "அவையில் கலந்துகொண்டு வாக்களிக்கும் உறுப்பினர்கள்" என்ற நிபந்தனையுடன் இணையும்போது, ஆதிக்கம் கொண்ட ஆட்சித் துறையினர் அனைத்து மக்களுடனும் அர்த்தமுள்ள வகையில் கலந்தாலோசிக்காமல், தேவையான சிறப்புப் பெரும்பான்மையைப் பெற வழிவகுக்கிறது.

"அவையில் கலந்துகொண்டு வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாதவர்கள்" என்ற கூறு, சூழ்ச்சியோடு வருகையின்மை, திட்டமிட்ட வெளிநடப்புகள், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெருமளவில் இடைநீக்கம் செய்தல் அல்லது வெளியேற்றுதல் போன்றவற்றுக்கு எளிதில் ஆளாகக்கூடியது. இது ஒரு கற்பனையான கவலை அல்ல. நெருக்கடி நிலைக் காலத்தின் அரசமைப்பு அனுபவம், கட்டுப்படுத்தப்பட்ட மக்களாட்சி முறையின் பங்கேற்பு நிலைகளின் கீழ் திருத்த அதிகாரம் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதை நிரூபிக்கிறது. இந்தியாவின் வரலாற்றிலேயே மிகவும் விரிவான திருத்தங்களில் ஒன்றான 1976–ஆம் ஆண்டின் நாற்பத்து இரண்டாவது அரசமைப்புச் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டபோது, ருமளவிலான எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்; இயல்பான நாடாளுமன்ற முறை விவாதமும் எதிர்ப்பும் திறம்பட ஒடுக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்வு, இப்போதைய அமைப்பு ஒருதலைப்பட்சமான, பெரும் மாற்றங்களுக்கு எவ்வளவு எளிதில் பாதிக்கப்படக்கூடியது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

மாறாக, பல கூட்டாட்சி நாடுகளில் நாடாளுமன்றத் திருத்த வரம்புகள் இந்தியாவின் முறையைவிட மிகவும் கடுமையானவை

- *ஜெர்மனி (அடிப்படைச் சட்டம், அரசமைப்புச் சட்டப் பிரிவு 79)*: ஒவ்வொரு அரசமைப்புச் சட்டத் திருத்தமும் பண்டஸ்டாக்கின் (நாடாளுமன்ற மக்கள் அவையின்) மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவையும், பண்டஸ்ராட்டின் (மாநிலங்கள் அவையின்) மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளையும் பெற வேண்டும்.
- *பிரேசில் (கூட்டாட்சி அரசமைப்பு, அரசமைப்புச் சட்டப் பிரிவு 60)*: அனைத்துத் திருத்தங்களுக்கும் தேசிய அவையின் ஒவ்வொரு அவையிலும் மொத்த உறுப்பினர்களில் ஐந்தில் மூன்று பங்கு பெரும்பான்மை தேவை. மேலும் இந்தத் சிறப்புப் பெரும்பான்மை ஒவ்வொரு அவையிலும் இரண்டு சுற்று வாக்கெடுப்புகளில் எட்டப்பட வேண்டும்.

- *பெல்ஜியம் (அரசமைப்பு, அரசமைப்புச் சட்டப் பிரிவு 195)*: நாடாளுமன்றம் முதலில் ஒவ்வொரு அவையிலும் அறுதிப் பெரும்பான்மை வாக்குகள் பெற்று, திருத்தப்பட வேண்டிய அரசமைப்பு ஏற்பாடுகளைக் குறிப்பிட்டு "திருத்தப் பிரகடனத்தை" ஏற்க வேண்டும். இந்தப் பிரகடனத் தீர்மானத்தை, அப்போதைய அவையில் உள்ள பெரும்பான்மை உறுப்பினர்கள் வாக்கு அளித்து, நிறைவேற்ற இயலாது. அது வெளியிடப்பட்டதும், நாடாளுமன்றம் *தானாகவே கலைக்கப்பட்டு*, புதிய தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம், பிரகடனத்தில் அடையாளம் காணப்பட்ட ஏற்பாடுகளை மட்டுமே திருத்த முடியும். இந்த நிலையில், ஒவ்வொரு அவையிலும், அதன் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களாவது வருகை தந்திருக்க வேண்டும். மேலும் அந்த அவையில் பதிவான வாக்குகளில் குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு இல்லாமல் எந்தத் திருத்தமும் ஏற்கப்படாது.
- *ஸ்பெயின் (அரசமைப்பு, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 167–168)*: அரசமைப்புச் சட்டப் பிரிவு 167–இன் கீழ் சாதாரண அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் சபை (Congress of Deputies), மாகாண பிரதிநிதிகள் (Senate) சபை ஆகிய இரு அவைகளிலும் ஐந்தில் மூன்று பங்கு உறுப்பினர்களின் பெரும்பான்மை தேவை. இரு அவைகளும் உடன்பாட்டிற்கு வர முடியாமல், மாகாண பிரதிநிதிகள் சபை அறுதிப் பெரும்பான்மையுடன் திருத்தத்திற்கு பின்னேற்பு அளித்திருந்தால், தனது உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் திருத்தத்தை பேரவை ஏற்கலாம். திருத்தம் நிறைவேற்றப்பட்ட பதினைந்து நாட்களுக்குள், இரு அவைகளிலும் உள்ள உறுப்பினர்களில் பத்தில் ஒருபங்கினர் கோரினால், பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

  அரசமைப்புச் சட்டப் பிரிவு 168–இன் கீழ் "முழுமையான மறுஆய்வு" அல்லது அடிப்படைப் பிரிவுகளின் பகுதி அளவு மறுஆய்வு முன்மொழியப்படும்போது: முதலில் ஒவ்வொரு அவையின் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும், அதைத் தொடர்ந்து நாடாளுமன்றம் தானாகவே கலைக்கப்பட்டு, புதிய தேர்தல்கள் நடைபெறும்; புதிய நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு

அவையிலும் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் மறுஒப்புதல் பெறப்பட வேண்டும்; இறுதியாக, கட்டாயத் தேசியப் பொதுவாக்கெடுப்பு மூலம் பின்னேற்பு பெறப்பட வேண்டும் என்பதே திருத்தக் கொள்கை.

இந்திய அரசமைப்பின் அரசமைப்புச் சட்டப் பிரிவு 61(4)–இன் கீழ் குடியரசுத் தலைவர் மீது பதவி நீக்க தீர்மானம் (Impeachment) கொண்டுவருவதற்கு ஒவ்வொரு அவையின் *மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில்* குறைந்தபட்சம் *மூன்றில் இரண்டு பங்கு* பெரும்பான்மை தேவை. தகுதியான காரணங்களின் அடிப்படையில், தனிநபர் ஒருவரை குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதைவிட, நாட்டின் அரசமைப்புச் சட்ட அமைப்பில் திருத்தம் செய்ய மிக எளிதாக இயலுகின்றது என்பது அப்பட்டமான முரண்பாடு ஆகும். எனவே, பரந்த அளவில் தேசிய ஒருமித்த கருத்தை உறுதி செய்யும் வகையில், நாடாளுமன்றத்தின் சிறப்புப் பெரும்பான்மையை, ஒவ்வொரு அவையின் *மொத்த உறுப்பினர் எண்ணிக்கையுடன்* இணைத்து, அந்த வரம்பை *மூன்றில் இரண்டு பங்காக* உயர்த்துவதன் மூலம் திருத்த நடைமுறையை, இந்தியா வலுப்படுத்த வேண்டும்.

பரிந்துரை 2

ஒவ்வொரு அரசமைப்புச் சட்டத் திருத்தச் சட்டமுன்வடிவும் நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத ஆதரவைப் பெற வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதன் மூலம், அரசமைப்புச் சட்டப் பிரிவு 368(2)–இன் கீழ் உள்ள சிறப்புப் பெரும்பான்மையை வலுப்படுத்த வேண்டும்.

3. மாநிலப் பின்னேற்பு அளிப்பு முறைகளை விரிவுபடுத்துதல்

அரசமைப்புச் சட்டப் பிரிவு 368(2)–இன் இப்போதைய நடைமுறை, மிகக் சிலதும் முழுமையற்றதுமான கூட்டாட்சி அதிகாரப் பொருண்மைகளின் தொகுப்பிற்கு மட்டுமே மாநிலப் பின்னேற்பு அளிப்பைக் கோருகிறது. இது தேசிய அளவிலான அவைகள் மூலம் அரசமைப்பை ஒருதலைப்பட்சமாகத் திருத்துவதைத் தடுக்கும் வகையில் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து போன்ற கூட்டாட்சி நாடுகளின் நடைமுறைகளுக்கு முற்றிலும் முரணாக உள்ளது. அந்நாடுகள் மாநிலப் பின்னேற்பு, கட்டாயப் பொதுவாக்கெடுப்புகள் அல்லது இவை இரண்டின் மூலமும் உண்மையான பலகட்ட இசைவு அளிப்பை உறுதி செய்கின்றன.

- *அமெரிக்கா (அரசமைப்பு, அரசமைப்புச் சட்டப் பிரிவு V)*: ஒவ்வொரு அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கும் நான்கில் மூன்று பங்கு மாநிலங்களின் பின்னேற்பு தேவை. இது மாநிலச் சட்டமன்றங்கள் மூலமாகவோ அல்லது (21வது திருத்தத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்ட) மாநில அரசமைப்பு மாநாடுகள் (State Conventions) மூலமாகவோ பெறப்பட வேண்டும். இது உலகின் வலிமையான மாநிலப் பின்னேற்பு (subnational ratification) அளிப்பு முறைகளில் ஒன்று ஆகும்.
- *கனடா (அரசமைப்புச் சட்டம், 1982, பகுதி V)*: பிரிவு 38 பெரும்பாலான ஏற்பாடுகளுக்கு *பொதுத் திருத்த நடைமுறையைப்* பரிந்துரைக்கிறது; திருத்தம் செய்வதற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன், அனைத்து மாகாணங்களின் மக்கள் தொகையில் 50 விழுக்காட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்றில் இரண்டு பங்கு (10–இல் குறைந்தது 7) மாகாணங்களின் பின்னேற்பு தேவை; இது நன்கு அறியப்பட்ட "7/50 விதி" ஆகும். பிரிவு 41 முடியாட்சி முறை, உச்சநீதிமன்றத்தின் அமைப்பு, ஆட்சி மொழிகள், திருத்தக் கொள்கை உள்ளிட்ட அடிப்படை விவகாரங்களுக்கு *ஒருமித்த பின்னேற்பு நடைமுறையைப்* பரிந்துரைக்கிறது. இதற்கு அனைத்து மாகாணங்களின் பின்னேற்பு அளிப்பும் தேவை.
- *ஆஸ்திரேலியா (காமன்வெல்த் அரசமைப்பு, பிரிவு 128)*: ஒவ்வொரு அரசமைப்புச் சட்டத் திருத்தமும் தேசியப் பொதுவாக்கெடுப்பில் பின்வரும் "இரட்டைப் பெரும்பான்மை" மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும்: (i) நாடு முழுவதும் வாக்களிக்கும் அனைத்து வாக்காளர்களில் பெரும்பான்மை, (ii) மாநிலங்களின் பெரும்பான்மை, அதாவது ஆறு மாநிலங்களில் குறைந்தது நான்கில் உள்ள வாக்காளர்களில் பெரும்பான்மையினர் ஆதரவாக வாக்களிக்க வேண்டும்.
- *சுவிட்சர்லாந்து (கூட்டாட்சி அரசமைப்பு, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 140 & 142)*: கூட்டாட்சி அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் மக்களிடமும், மண்டலங்களிடமும் (Cantons) வாக்கெடுப்புக்கு விடப்பட வேண்டும் (அரசமைப்புச் சட்டப் பிரிவு 140). *வாக்களிக்கும் வாக்காளர்களில் பெரும்பான்மை, மண்டலங்களில் பெரும்பான்மை* ஒப்புக்கொண்டால் மட்டுமே அவை அங்கீகரிக்கப்படும். இருபது மண்டலங்கள் ஒவ்வொன்றும் முழு வாக்கைப் பெற்றுள்ளன. ஆறு மண்டலங்கள் ஒவ்வொன்றும் அரை வாக்கைப் பெற்றுள்ளன.

அதன்படி, பெரும்பான்மைக்கு 23 மண்டல வாக்குகளில் 12 வாக்குகள் தேவைப்படுகின்றன.

இந்தியாவின் மொழிவழி மாநிலங்கள் இன்று ஜனநாயக அளவில் முதிர்ச்சியடைந்தவை; வட்டார அளவில் நிலையானவை. எனவே பெரும்பாலான அரசமைப்புச் சட்டத் திருத்தங்களிலிருந்து அவற்றை விலக்கி வைப்பது, இனியும் நியாயப்படுத்த முடியாது. *அனைத்து* அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கும் மாநிலப் பின்னேற்பு அளிப்பு முறையை விரிவுபடுத்த வேண்டும் என்று ராஜமன்னார் குழு பரிந்துரைத்திருந்தது. ஆகவே, ஒன்றியம்–மாநில உறவுகள், மக்களாட்சி நிறுவனங்கள், அடிப்படை உரிமைகள் ஆகியவற்றைப் பாதிக்கும் அனைத்துத் திருத்தங்களுக்கும் மாநிலப் பின்னேற்பைப் பெறுவது, மிகவும் சிறந்த அணுகுமுறை ஆகும். இது பரிந்துரை 1 (நாடாளுமன்றச் சட்டத்தால் திருத்தத்தக்கவை), பரிந்துரை 6 (குறிப்பிட்ட மாநிலத்திற்கான தனியான திருத்தங்கள்) ஆகியவற்றில் அடையாளம் காணப்பட்டவற்றை மட்டும் தவிர்த்து, பெரும்பாலான முக்கியமான ஏற்பாடுகளை உள்ளடக்கும். இது அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இன் வரம்புரையின் (நிபந்தனையின்) எல்லையை மிகவும் விரிவுபடுத்துவதால், வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகளை புதியததாகத் துல்லியமாக வரையறுத்து, அரசமைப்புச் சட்டப் பிரிவு 368(2)–இன் கீழ் அரசமைப்புத் திருத்தங்களுக்கான பொதுவான நடைமுறையாக மாநிலப் பின்னேற்பை உருவாக்குதல் என்கிற முற்றிலும் புதிய முறையை ஏற்படுத்துவதே சிறந்த அணுகுமுறையாகும். இத்தகைய சீர்திருத்தம், இந்தியாவை முதிர்ந்த கூட்டாட்சி நடைமுறை கொண்டதாகவும், பரந்த மக்கள் ஏற்பைப் பெற்ற அரசமைப்புச் சட்ட மாற்றத்தை நிகழ்த்தும் நாடாகவும் மாற்றும்.

பரிந்துரை 3

பரிந்துரை 1, பரிந்துரை 6 ஆகியவற்றில் முன்மொழியப்பட்ட வழிமுறைகள் மூலம் கையாளப்படும் சில வகைகளைத் தவிர்த்து, மற்ற அனைத்து அரசமைப்புத் திருத்தங்களும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 368(2)ஐ திருத்தி, அதன்கீழ் கொண்டுவர வேண்டும்:

(i) *நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத ஆதரவைப் பெற வேண்டும் (பரிந்துரை 2–இல் முன்மொழிந்தபடி);*

(ii) *மேம்படுத்தப்பட்ட இரட்டைப் பெரும்பான்மை விதியின்படி மாநிலச் சட்டமன்றங்களால் பின்னேற்பு அளிக்கப்பட வேண்டும் (பரிந்துரை 4–இல் முன்மொழிந்தபடி).*

வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகள், அரசமைப்புச் சட்டப் பிரிவு 368(2) உடன் இணைக்கப்படும் புதிய பிரிவில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

4. மாநிலப் பின்னேற்பு அளிப்புக்கான மேம்படுத்தப்பட்ட 'இரட்டைப் பெரும்பான்மை' விதியை அறிமுகம் செய்தல்

கூட்டாட்சிக் கட்டமைப்பைப் பாதிக்கும் சில திருத்தங்களுக்கு, "ஒட்டுமொத்த இந்திய மாநிலங்களில் பாதி எண்ணிக்கைக்கு குறையாத சட்டமன்றங்களின்" பின்னேற்பு அவசியம் எனக் கோரும் 368(2)வது அரசமைப்புச் சட்டப் பிரிவின் வரம்புரை, இந்தியாவில் நிலவும் தீவிரமான சமச்சீரற்ற மக்கள் தொகை நிலையுடன் பொருந்திப் போகவில்லை. ஒரு வாதத்திற்காக எடுத்துக்கொண்டோமானால், இன்றைக்குள்ள 28 மாநிலங்களில், மிகச்சிறிய 14 மாநிலங்களின் இசைவு மட்டுமே ஒட்டுமொத்த ஒன்றியத்திற்குமான அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்குப் பின்னேற்பு அளிக்கப் போதுமானதாக உள்ளது. ஆனாலும், 2011–ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்த 14 மிகச்சிறிய மாநிலங்கள் இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் வெறும் 11.8 விழுக்காட்டையே கொண்டுள்ளன. இந்திய மக்களில் பத்தில் ஒரு பங்கிற்கும் சற்று அதிகமானோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாநிலங்கள், மீதமுள்ள பத்தில் ஒன்பது பங்கினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாநிலங்களை மீறிச் செயல்பட அனுமதிப்பதென்பது, ஜனநாயக நெறிமுறைக்கும் கூட்டாட்சி அறத்திற்கும் முற்றிலும் முரணானதாகும்.

சட்ட மேலவைகள் உள்ள ஆறு மாநிலங்களைத் தற்போதைக்கு விடுத்துப் பார்த்தால், மாநிலச் சட்டப்பேரவைக்கான குறைந்த வருகை அளவு – பத்து உறுப்பினர்கள் அல்லது மொத்த உறுப்பினர்களில் பத்தில் ஒரு பங்கு, இவற்றில் எது அதிகமோ அதுவாக இருக்க வேண்டும் – என 189(3)வது அரசமைப்புச் சட்டப் பிரிவு நிர்ணயிக்கிறது. இச்சட்டப் பிரிவு, ஏற்கனவே உள்ள ஜனநாயகக் குறைபாட்டை மேலும் தீவிரமாக்குகிறது. வாதத்திற்காக எடுத்துக்கொண்ட கருதுகோளின்படி, அரசமைப்புச் சட்டத் திருத்தங்களைச் பின்னேற்பு செய்யக்கூடிய, கணக்கிடப்பட்ட பதினான்கு மிகச் சிறிய மாநிலங்களைப் பொறுத்தவரை, பன்னிரண்டு மாநிலங்களில் சட்டப்பேரவையை நடத்துவதற்கு வெறும் பத்தே உறுப்பினர்கள் போதும்; பதின்மூன்றாவது மாநிலமான பஞ்சாபில் பன்னிரண்டு உறுப்பினர்களும், பதினான்காவது மாநிலமான அசாமில் பதின்மூன்று உறுப்பினர்களும் மட்டுமே போதுமானவர்கள். எனவே, வெறும் ஏட்டளவில் பார்த்தால், கூட்டாட்சிக் கட்டமைப்பைப் பாதிக்கும் ஒரு அரசமைப்புச் சட்டத்திருத்தத்திற்கு, பன்னிரண்டு மாநிலங்களில்

வெறும் ஆறு சட்டமன்ற உறுப்பினர்களாலும், பதின்மூன்றாவது மற்றும் பதினான்காவது மாநிலங்களில் ஏழு உறுப்பினர்களாலும் பின்னேற்பு அளித்துவிட முடியும். இத்தகைய விளைவு, ஜனநாயக ரீதியாக எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும்.

அதே நேரத்தில், *மக்கள்தொகையை* மட்டுமே நம்பியிருப்பது வேறொரு மோசமான விளைவை ஏற்படுத்தும். 2011 மக்கள்தொகை கணக்கெடுப்புப் புள்ளிவிவரங்களைப் பயன்படுத்தினால் (பிரிப்பதற்கு முந்தைய ஆந்திரப் பிரதேசத்தை ஒரே மாநிலமாகக் கருதினால்), இந்தியாவின் அதிக மக்கள்தொகை கொண்ட ஐந்து மாநிலங்கள் மொத்த மக்கள்தொகையில் கிட்டத்தட்ட பாதியைக் கொண்டுள்ளன. அதே நேரத்தில் எட்டு மாநிலங்கள் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கைக் கொண்டுள்ளன. ஆந்திரப் பிரதேசப் பிரிப்புக்குப் பிறகு, இதில் மாற்றம் ஏதுமில்லாமல் உள்ளது[8]. பின்னேற்பு அளிப்பதற்கு மக்கள் தொகையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டால், ஒரு சில பெரிய மாநிலங்களே அரசமைப்பு மாற்றங்களை முழுமையாகக் கட்டுப்படுத்தும் சூழல் உருவாகி, சிறிய மாநிலங்களை முற்றிலும் முக்கியத்துவமற்ற நிலைக்குத் தள்ளவிடும்.

முன்னர் விவாதிக்கப்பட்டபடி, கனடா (அரசமைப்புச் சட்டம், 1982, சட்டப் பிரிவு 38), ஆஸ்திரேலியா (காமன்வெல்த் அரசமைப்பு, அரசமைப்புச் சட்டப் பிரிவு 128), சுவிட்சர்லாந்து (கூட்டாட்சி அரசமைப்பு, அரசமைப்புச் சட்டப் பிரிவு 140 & 142) போன்ற முதிர்ந்த கூட்டாட்சி நாடுகள் "இரட்டைப் பெரும்பான்மை விதிகளை" பின்பற்றுவதன் மூலம் இரண்டு விதமான குறைபாடுகளையும் தவிர்க்கின்றன: அரசமைப்பு மாற்றம் (i) உறுப்பு அமைப்புகளின் பெரும்பான்மை ஆதரவு, (ii) தேசிய மக்கள்தொகையில் பெரும்பான்மையினரின் பின்னேற்பு ஆகியவற்றைப் பெற வேண்டும். இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள், சிறிய அலகுகளின் கூட்டணியோ அல்லது ஒருசில மக்கள்தொகை கொண்ட அலகுகளோ ஒருதலைப்பட்சமாக அரசமைப்பு மாற்றத்தைத் திணிக்க முடியாது என்பதை உறுதிசெய்கின்றன. இச்செயல்முறை ஜனநாயக நம்பகத்தன்மையை நிலைநிறுத்துவதோடு, கூட்டாட்சி சமநிலையையும் பேணிக் காக்கிறது.

இந்தியாவின் மக்கள் தொகையில் நான்கில் மூன்று பங்கினரை (அல்லது குறைந்தது மூன்றில் இரண்டு பங்கினரை)

---

[8] 'Census 2011 Tables and Publications – Tamil Nadu: PCA SD: Primary census abstract (PCA) data, India & States/UTs – State and district level – 2011' (*Directorate of Census Operations Tamil Nadu*) accessed November 19, 2025.

பிரதிநிதித்துவப்படுத்துகிற, நான்கில் மூன்று பங்கு (அல்லது குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு) மாநிலங்களின் பின்னேற்பை அனைத்து அரசமைப்புச்,சட்டத் திருத்தங்களுக்கும் பெற வேண்டும் என்று ராஜமன்னார் குழு பரிந்துரைத்துள்ளது. சமகால இந்தியாவுக்குப் பொருத்தமான *இரட்டைப் பெரும்பான்மை* முறை என்பது, *தேசிய மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாததைப்* பிரதிநிதித்துவம் செய்யும், *மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத மாநிலங்களின்* (19 மாநிலங்கள்) பின்னேற்பாக இருக்க வேண்டும்.

சட்ட மேலவைகள் உள்ள ஆறு மாநிலங்களைத் தற்போதைக்கு விடுத்துப் பார்த்தால், ஒரு மாநிலச் சட்டப்பேரவை எத்தகைய வாக்களிப்பு உள்வரம்பின் அடிப்படையில் அரசமைப்புத் திருத்தத்திற்குப் பின்னேற்பு அளிக்க வேண்டும் என்பதே இதோடு தொடர்புடைய மற்றுமொரு கேள்வியாகும். வருகைபுரிந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மை மூலம் பின்னேற்பு அளிக்க அனுமதிக்கும் இப்போதைய விதி போதுமானதாக இல்லை என்பது வெளிப்படை. இதற்கு நேர்மாறாக, மூன்றில் இரண்டு பங்கு மாநிலங்கள், தங்கள் அவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் பின்னேற்பு அளிக்க வேண்டும் என்று கோருவது, நடைமுறைக்குச் சாத்தியமில்லாத கடுமையான நிபந்தனையாக இருக்கும். *ஒவ்வொரு மாநிலமும் அதன் அவையின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மை பலத்துடன்* பின்னேற்பு அளிக்க வேண்டும் என்பதே இதற்கான ஏற்புடைய வழியாக இருக்கும். இது நடைமுறையைச் சாத்தியமற்றதாக ஆக்காமல், அதே சமயம் அதன் சட்டபூர்வமான ஏற்புடைமையையும் உறுதி செய்யும்.

பரிந்துரை 4

அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கு மாநிலங்கள் பின்னேற்பு அளிப்பதில், வலுப்படுத்தப்பட்ட 'இரட்டைப் பெரும்பான்மை' விதியை அறிமுகப்படுத்தும் வகையில் 368வது அரசமைப்புச் சட்டப் பிரிவைத் திருத்த வேண்டும். இந்த ஏற்பாடு பின்வருவனவற்றைக் கோருகிறது:

(i) *மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத மாநிலச் சட்டமன்றங்களின் பின்னேற்பு;*

(ii) *பின்னேற்பு அளிக்கும் இம்மாநிலங்கள், கடைசியாக வெளியிடப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத மக்களை ஒட்டுமொத்தமாகப் பிரதிநிதித்துவப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.*

வாக்களிப்புகான உள்வரம்பு: ஒவ்வொரு மாநிலத்திலும், பின்னேற்பு அளிக்கப்பட்டதற்கு, அதன் சட்டப்பேரவையில் உள்ள மொத்த உறுப்பினர்களில் சாதாரணப் பெரும்பான்மை மூலமும், சட்ட மேலவை உள்ள நேர்வுகளில், அம்மேலவையின் மொத்த உறுப்பினர்களில் சாதாரணப் பெரும்பான்மை மூலமும் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

5. மாநிலங்கள் அரசமைப்புச் சட்டத் திருத்தத்தைத் தொடங்கிவைக்க வகைசெய்தல்

இந்தியா மாநிலங்களின் ஒன்றியமாக இருக்கும்போதிலும், மாநிலங்களால் அரசமைப்புச் சட்டத் திருத்தங்களைத் தாமாகவே முன்னெடுக்கவோ, அல்லது தங்கள் முன்மொழிவுகளை கையிலெடுக்குமாறு நாடாளுமன்றத்தை நிர்பந்திக்கவோ முடிவதில்லை. ஆனால், கூட்டாட்சி அமைப்பையே பாதிக்கும் திருத்தங்களாக இருந்தாலும்கூட, வெறும் பின்னேற்பு அளிக்கும் குறுகிய எல்லைக்குள்ளேயே மாநிலங்களின் பங்கேற்பு சுருக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், முதிர்ந்த கூட்டாட்சி நாடுகளில், அரசமைப்பு மாற்றம் என்பது கூட்டுமுயற்சி ஆகும். அது ஒன்றியத்தின் ஒருதலைப்பட்சமான தனிச்சிறப்புரிமை அல்ல. எடுத்துக்காட்டாக:–

- *அமெரிக்கா (அரசமைப்பு, சட்டப் பிரிவு V):* காங்கிரசு (அமெரிக்க நாடாளுமன்றம்) தானாக முன்வந்து செயல்படாத போதிலும்கூட, அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை முன்மொழிவதற்கான மாநாட்டைக் (Constitutional Convention) கூட்டுமாறு காங்கிரசைக் கட்டாயப்படுத்தும் அதிகாரத்தை, மூன்றில் இரண்டு பங்கு மாநிலச் சட்டமன்றங்களுக்கு இது வழங்குகிறது.
- *கனடா (அரசமைப்புச் சட்டம், 1982, பிரிவு 46)*: இது எந்தவொரு மாகாணச் சட்டமன்றமும் திருத்த முன்மொழிவைத் தொடங்க அனுமதிக்கிறது. அதைத் தொடர்ந்து கூட்டாட்சி நாடாளுமன்றம் உரிய திருத்த முறையின் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும்.
- *பிரேசில் (கூட்டாட்சி அரசமைப்பு, சட்டப் பிரிவு 60)*: பாதி எண்ணிக்கைக்கும் மேற்பட்ட மாநிலச் சட்டமன்றப் பேரவைகள் முன்னெடுக்கும்பட்சத்தில், அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கான முன்மொழிவுகளை இது அனுமதிக்கிறது.
- *சுவிட்சர்லாந்து (கூட்டாட்சி அரசமைப்பு, சட்டப் பிரிவுகள் 138 மற்றும் 139)*: குறைந்தது தகுதியுள்ள 1,00,000 வாக்காளர்கள் கையெழுத்துகளைச் சேகரித்து அளிப்பதன் மூலம், அரசமைப்பை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ

மாற்றுவதற்கான நடவடிக்கையைத் தொடங்க, முறையே, இந்த அரசமைப்பு ஏற்பாடுகள் அனுமதியளிக்கின்றன.

- *ஜெர்மனி (அடிப்படைச் சட்டம், சட்டப் பிரிவுகள் 76 மற்றும் 79)*: ஜெர்மானிய மாநிலங்கள் (*Länder*), நாடாளுமன்ற மாநிலங்களவை (Bundesrat) வாயிலாக, கூட்டாட்சிச் சட்டமியற்றும் நடைமுறையில் நேரடியாகப் பங்கேற்கின்றன. இம்மன்றம், தங்கள் மாநில அரசுகளின் கட்டாய வழிகாட்டுதல்களுக்குக் கட்டுப்பட்டு வாக்களிக்கும் பிரதிநிதிகளைக் கொண்டதாகும். ஒவ்வொரு அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கும், நாடாளுமன்ற மக்களவை (Bundestag) உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு மற்றும் நாடாளுமன்ற மாநிலங்களவை வாக்குகளில் மூன்றில் இரண்டு பங்கு என இரண்டின் ஒப்புதலும் அவசியமாகும் (அரசமைப்புச் சட்டப் பிரிவு 79(2)). இத்தகைய நிறுவனமயக் கட்டமைப்பின் மூலம், மாநிலங்கள் *சட்டங்களைக் கொண்டுவருவதற்கான உரிமையையும்* (அரசமைப்புச் சட்டப் பிரிவு 76–இன் படி), அரசமைப்புச் சட்டத் திருத்தங்களைத் தடுப்பதற்கான உறுதியான மறுப்பதிகாரத்தையும் கொண்டுள்ளன.

பரிந்துரை 5

368வது அரசமைப்புச் சட்டப் பிரிவில் (2A) எனும் புதிய உட்பிரிவைச் சேர்க்க வேண்டும். இதன்படி, அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கான ஒரு முன்மொழிவை மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத மாநிலச் சட்டமன்றங்கள் ஏற்றுக்கொள்ளும்பட்சத்திலும் – அம்மாநிலங்கள் ஒட்டுமொத்தமாக இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும்பட்சத்திலும் – அந்த முன்மொழிவை எடுத்துக்கொண்டு, பரிந்துரை 2–இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைக்கேற்ப அதற்கு பின்னேற்பு அளிப்பது குறித்து நாடாளுமன்றம் பரிசீலிக்க வேண்டும்.

6. மாநிலம் சார்ந்த திருத்த நடைமுறையை உருவாக்குதல்

குறிப்பிட்ட துணை தேசிய அலகுகளை பாதிக்கும் அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கு, நாடு தழுவிய பின்னேற்பைக் கோருவதற்குப் பதிலாக, சம்பந்தப்பட்ட அந்த அலகுகளின் இசைவை மட்டுமே பெற வேண்டும் என்பதைப் பல்வேறு முதிர்ந்த கூட்டாட்சி நாடுகள் அங்கீகரிக்கின்றன.

'விளைவுகளைச் சுமப்பவர்களே தீர்மானிக்கும் உரிமையைக் கொண்டிருக்க வேண்டும்' எனும் அடிப்படைக் கூட்டாட்சிக் கோட்பாட்டினை இது வலியுறுத்துகிறது.

கூட்டாட்சி நடைமுறைகளை ஒப்பீடு செய்வது, இதைத் தெளிவாக விளக்குகிறது:

- *கனடா (அரசமைப்புச் சட்டம், 1982, பிரிவு 43)*: ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களுக்கு மட்டும் பிரத்தியேகமாகப் பொருந்தும் திருத்தங்கள் (i) நாடாளுமன்றம், (ii) திருத்தத்தோடு தொடர்புடைய ஒவ்வொரு மாகாணத்தின் சட்டமன்றம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இதில் திருத்தத்திற்குத் தொடர்பில்லாத மாகாணங்களுக்கு எந்தப் பங்கும் இல்லை.
- *அமெரிக்கா (அரசமைப்பு, சட்டப் பிரிவு V)*: எந்தவொரு மாநிலத்தின் வெளிப்படையான ஒப்புதலும் இல்லாமல் செனட்டில் [அமெரிக்காவின் மாநிலங்கள் அவையில்] அம்மாநிலத்தின் சமப் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கக்கூடாது என்று குறிப்பிடுகிறது.
- *ஜெர்மனி (அடிப்படைச் சட்டம், அரசமைப்புச் சட்டப் பிரிவு 29)*: ஜெர்மனியில் உள்ள மாநிலங்களின் ஆட்சிநில மறுசீரமைப்பு, கூட்டாட்சிச் சட்டம் வழியாக, நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை ஆகிய இரண்டு அவைகளின் ஒப்புதலும் பெற்று, நடைமுறைப்படுத்தப்படுகிறது. வழக்கமான நடைமுறையில், இந்த கூட்டாட்சிச் சட்டம் தொடர்புடைய வட்டாரங்களில் நடத்தப்படும் கட்டாயமான பொதுவாக்கெடுப்புகள் மூலமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- *சுவிட்சர்லாந்து (கூட்டாட்சி அரசமைப்பு, அரசமைப்புச் சட்டப் பிரிவு 53)*: மாநிலங்களின் இருப்பையும் ஆட்சிநிலப் பகுதியையும் இக்கூட்டரசு பாதுகாக்கிறது. மாநிலங்களின் எண்ணிக்கையில் மாற்றம் செய்வதற்கு, சம்பந்தப்பட்ட வாக்காளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் இசைவும், அத்துடன் மக்கள் மற்றும் மாநிலங்களின் இரட்டைப் பெரும்பான்மையும் அவசியம். மாநிலங்களுக்கு இடையிலான எல்லை மாற்றங்களைப் பொறுத்தவரை, சம்பந்தப்பட்ட வாக்காளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் இசைவுடன், கூட்டாட்சிப் பேரவையின் ஒப்புதல் ஆணையும் பெறப்பட வேண்டும்.

இந்த அறிக்கையில் முன்மொழியப்பட்ட வலுப்படுத்தப்பட்ட திருத்த முறையின் அடிப்படையில், இந்தியாவிற்கும் மாநிலம் சார்ந்த அரசமைப்புச் சட்டத் திருத்த நடைமுறை தேவைப்படுகிறது; இது தொடர்புடைய மாநிலம் அல்லது மாநிலங்களை மட்டுமே ஈடுபடுத்துவதாகவும், தொடர்பில்லாத மாநிலங்களைப் பின்னேற்பு அளிப்பு நடைமுறையிலிருந்து விடுவிப்பதாகவும் இருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இன் கீழ் புதிய மாநிலங்களை உருவாக்குதல் அல்லது மாநிலப் பகுதிகள், எல்லைகள் அல்லது பெயர்களை மாற்றுதல் ஆகியவை இனி சாதாரண நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் சாத்தியமானவையாக இருக்கக்கூடாது (பார்க்க: பரிந்துரை 1). அதே நேரத்தில், இத்தகைய மாற்றங்கள் நேரடியாகத் தொடர்புடைய மாநிலம் அல்லது மாநிலங்களிடமிருந்து மட்டுமே பின்னேற்பு அளிப்பைக் கோர வேண்டும். முன்மொழியப்பட்ட மாற்றத்தில் பங்கு இல்லாத மாநிலங்களிடமிருந்து பின்னேற்பு தேவையில்லை. இத்தகைய நேர்வில், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மாநிலமும் பின்னேற்பு அளிப்பதற்கான வாக்களிப்பு உள்வரம்பு, பரிந்துரை 4–இல் அவையின் (அல்லது அவைகளின்) மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்குக் குறையாததாக இருக்க வேண்டும் என முன்மொழியப்பட்டுள்ளதைக் காட்டிலும் உயர்ந்ததாக இருக்க வேண்டும்.

பரிந்துரை 6

368வது அரசமைப்புச் சட்டப் பிரிவில் புதிய உட்பிரிவு (2B)ஐச் சேர்ப்பதன் மூலம், மாநிலங்களுக்கெனத் தனியானதொரு பின்னேற்பு நடைமுறையை உருவாக்க வேண்டும். இதன்படி, மாநிலங்களுக்கான குறிப்பிடப்பட்டுள்ள அரசமைப்புச் சட்ட உரிமைகள், ஆட்சிநிலப்பகுதி வரையறைகள் அல்லது சிறப்புப் பாதுகாப்புகள் ஆகியவற்றுடன் மட்டுமே தொடர்புடைய அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கு, பாதிக்கப்பட்ட மாநிலத்தின் சட்டமன்றம் அல்லது அந்தந்த நேர்வுகளுக்கேற்ப பாதிக்கப்பட்ட மாநிலங்களின் சட்டமன்றங்கள் மட்டுமே இசைவு தெரிவித்தால் போதுமானது. குறிப்பாக, பின்வரும் விஷயங்கள் தொடர்பான திருத்தங்களுக்கு, இந்தச் சிறப்புப் பின்னேற்பு முறை பொருந்த வேண்டும்:

- அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இன் கீழ் புதிய மாநிலங்களை உருவாக்குதல் மற்றும் தற்போதுள்ள மாநிலங்களின் நிலப்பரப்பு, எல்லைகள் அல்லது பெயர்களை மாற்றியமைத்தல்.

- சில மாநிலங்கள் தொடர்பான 'சிறப்பு வகைமுறைகள்' (Special Provisions) – அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 371 முதல் 371J வரை.
- முதலாவது மற்றும் ஆறாவது அட்டவணைகள்.

வாக்களிப்புக்கான உள்வரம்பு: ஒவ்வொரு மாநிலத்தின் பின்னேற்பும், அந்த மாநிலச் சட்டப்பேரவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் அங்கீகரிக்கப்பட வேண்டும்; சட்ட மேலவை உள்ள இடங்களில், அம்மேலவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையாலும் அந்தப் பின்னேற்பு அங்கீகரிக்கப்பட வேண்டும்.

7. அரசமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பினை திருத்த முடியாதவையாக வகைப்படுத்துதல்

ஜெர்மனியின் 1949 அடிப்படைச் சட்டத்தின் சட்டப் பிரிவு 79(3) *புகழ்பெற்ற மாற்ற இயலாத பிரிவு (Eternity Clause),* நவீன உலகின் மிக வலிமையான அரசமைப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஒன்றாகும். வைமர் குடியரசின் தோல்விகள், நாஜி சர்வாதிகாரத்தின் எழுச்சி ஆகியவை வடிவமைத்த இந்த அரசமைப்புச் சட்டப் பிரிவு, ஜெர்மன் அரசின் அடிப்படைத் தன்மையை மிகப்பெரிய ஜனநாயகப் பெரும்பான்மையால் கூட மாற்ற முடியாது என்பதை உறுதி செய்கிறது. இப்பிரிவு, மனித கண்ணியத்தின் மீற முடியாத தன்மை, மாற்ற முடியாத மனித உரிமைகளின் பாதுகாப்பு உள்ளிட்ட அரசமைப்புச் சட்டப் பிரிவு 1–இல் உள்ள கொள்கைகளைத் திருத்த முடியாதது ஆக்குகிறது. அதேபோல், இது அரசமைப்புச் சட்டப் பிரிவு 20–இன் பின்வரும் முக்கிய அம்சங்களைப் பாதுகாக்கிறது: குடியரசு, ஜனநாயகம், சமூகநலம், கூட்டாட்சி அரசு; மக்கள் இறையாண்மை; சட்டத்தின் ஆட்சி; அதிகாரப் பிரிப்பு என்பவை ஜெர்மனியின் அடையாளம். இது கூட்டாட்சி முறையை வலுப்படுத்துகிறது, மாநிலங்கள் அவையின் (Bundesrat) மூலம் கூட்டாட்சிச் சட்டத்தில் மாநிலங்களுக்கு (*Länder*) நிரந்தரப் பங்கை உத்தரவாதம் செய்கிறது.

வேறு பல அரசமைப்புகளும் இதேபோன்ற பாதுகாப்பு ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்டுள்ளன. பிரேசிலின் 1988 அரசமைப்பின் சட்டப் பிரிவு 60(4)–இல் உள்ள *கிளாவ்ஸுலாஸ் பேட்ரேயஸ்* (Clausulas Petreas) அல்லது "கல் பிரிவுகள்(Stone Clauses)", இராணுவ ஆட்சிக்குப் பிறகு சர்வாதிகாரத்திற்குத் திரும்புவதைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட திருத்த முடியாத ஏற்பாடுகள் ஆகும். பிரேசிலின் கூட்டாட்சி முறையை ஒழிப்பது, நேரடி காலமுறைத் தேர்தல்களைச் சீர்குலைப்பது, அதிகாரப்

பிரிப்பைப் பலவீனப்படுத்துவது அல்லது அடிப்படை உரிமைகளைக் குறைப்பது போன்ற திருத்த முன்மொழிவுகளை அவை தடை செய்கின்றன. இந்த வலுவான உத்தரவாதங்கள் பிரேசிலின் அடையாளத்தை ஜனநாயக, கூட்டாட்சி, உரிமைகள் சார்ந்த குடியரசாகப் பாதுகாக்கின்றன. அதன் அரசமைப்பு மையத்தை மிகவும் வலிமை வாய்ந்த அரசியல் பெரும்பான்மையின் கைகளுக்கு எட்டாதவாறு பாதுகாக்கின்றன.

இதற்கு மாறாக, இந்தியா அடிப்படைக் கட்டமைப்பு கோட்பாடு எனப்படும் நீதித்துறையின் கண்டுபிடிப்பையே நம்பியிருக்கிறது. இது அரசமைப்பு முறையைப் பாதுகாக்கும் அதே வேளையில், அரசமைப்பில் இடம்பெறாமல், உட்கிடையாகவே அமைந்திருக்கிறது. இது நாடாளுமன்றத்தின் எல்லை மீறல்களுக்கு முக்கியத் தடையாகச் செயல்பட்டாலும், அதன் அரசமைப்பில் இடம்பெறாமல் உள்ள அதிகாரப்பூர்வமற்ற தன்மை விவாதத்திற்கும் விளக்கப் பிழைகளுக்கும் இடமளிக்கிறது.

இந்திரா நேரு காந்தி எதிர் ராஜ் நாராயண் (1975)[9] *[Indira Nehru Gandhi v. Raj Narain* (1975)] வழக்கில், குறிப்பிட்ட அம்சம் அடிப்படைக் கட்டமைப்பின் பகுதியாக உள்ளதா என்பதை ஒவ்வொரு வழக்கின் அடிப்படையில்தான் தீர்மானிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. அடிப்படைக்கட்டமைப்பை அடையாளம் காண்பது படிப்படியான, பரிணாம வளர்ச்சியடையக்கூடிய நீதித்துறை நடைமுறை என்பதை வலியுறுத்தி, முழுமையான பட்டியலை வழங்க நீதிமன்றம் வெளிப்படையாக மறுத்துவிட்டது. பல்வேறு வழக்குகளில் வெவ்வேறு நீதிபதிகள், வெவ்வேறு கருத்தாக்கங்களை 'அடிப்படை அம்சங்கள்' என அங்கீகரித்துள்ளனர் என்பது வியப்பிற்குரியதல்ல.

கேசவானந்த பாரதி (1973) தீர்ப்பிற்குப் பிறகு இயற்றப்பட்ட 76 அரசமைப்பு சட்டத் திருத்தச் சட்டங்களில், வெறும் எட்டு திருத்தங்களை மட்டுமே உச்சநீதிமன்றம் 'அடிப்படைக் கட்டமைப்பு' கோட்பாட்டைப் பயன்படுத்தி, இரத்து செய்துள்ளது. அதிலும் ஏழு நேர்வுகளில் அத்திருத்தச் சட்டங்களின் குறிப்பிட்ட சில சட்டப் பிரிவுகள் மட்டுமே இரத்து செய்யப்பட்டன என்பதும் கவனிக்கத்தக்கது.[10] ஏறக்குறைய இத்திருத்தங்கள் அனைத்தும், நீதித்துறை மறுசீராய்வை நீர்த்துப்போகச் செய்யவோ அல்லது நீதித்துறையின் சுதந்திரத்தைக் குலைக்கவோ மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளாகவே இருந்தன. நீதிபதிகள்

---

[9] AIR 1975 SC 2299.

[10] Ashok Kini, 'Constitutional Amendments Struck down by Supreme Court: 7 Partially & 1 Wholly so Far' (LiveLaw July 24, 2021) accessed November 19, 2025.

நியமனத்திற்கான தேர்வுக்குழு முறைக்கு (Collegium System) மாற்றாகத் தேசிய நீதிபதிகள் நியமன ஆணையத்தை (National Judicial Appointments Commission) கொண்டுவர முயன்றது, 2015–ஆம் ஆண்டின் *தொன்னூற்று ஒன்பதாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்*. அது மட்டுமே இதுவரை முழுமையாகச் செல்லாததாக ஆக்கப்பட்ட ஒரே அரசமைப்புச் சட்டத் திருத்தமாகும். நீதித்துறையின் சுதந்திரத்தை மீறுவதாகக் கூறி, இத்திருத்தம் அரசமைப்புக்கு முரணானது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. மற்றபடி அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை இரத்து செய்ய நீதிமன்றம் தயக்கம் காட்டி வருகிறது.

அடிப்படைக் கட்டமைப்பு விளக்கம் என்பதே ஜெர்மன் அரசமைப்புச் சட்டத்திலிருந்து உத்வேகம் பெற்ற கருத்து. ஆகையால், ஜெர்மனியின் "*மாற்ற இயலாத பிரிவு*", பிரேசிலின் "*கல் பிரிவுகள்*" ஆகியவற்றைப் பின்பற்றி, இப்போது இந்தியாவின் முக்கியமான திருத்த முடியாத கொள்கைகளை முறையாக வகைப்படுத்துவது தேவையானதும் விரும்பத்தக்கதும் ஆகும். இக்கோட்பாடு ஓர் இன்றியமையாத பாதுகாப்பாகச் செயல்பட்டு வந்திருந்தாலும், இது சட்டரீதியாக எழுத்துப்பூர்வமாக தொகுக்கப்படாதது என்பதால், இதன் அடிப்படைக் கூறுகள் வரையறுக்கப்படாதவையாகவும், காலந்தோறும் மாறிவரும் நீதித்துறை விளக்கங்களைச் சார்ந்தவையாகவும் உள்ளன. இந்நிலை, நாடாளுமன்றத்திற்கு ஓர் உறுதியற்ற நிலையையும், மாநிலங்களுக்குக் கணிக்க இயலாத சூழலையும் உருவாக்கியுள்ளது. மேலும் ஒவ்வொரு வழக்கிலும் அரசமைப்பின் வரம்புகளைத் தனித்தனியாக வரையறுக்க வேண்டிய பெரும் சுமையையும் நீதித்துறையின் மீது ஏற்றுகிறது. இவற்றை எழுத்துப்பூர்வமாகப் பட்டியலிடுவது தெளிவை அளிப்பதோடு, முன்கூட்டியே கணிக்கும் தன்மையையும் மேம்படுத்தும். மேலும், நிலையற்ற பெரும்பான்மை அரசுகள், தாராளவாதமற்ற போக்குகள் மற்றும் நீதித்துறைத் தீர்ப்புகளில் ஏற்படக்கூடிய முரண்பாடுகள் ஆகியவற்றிலிருந்து அரசமைப்பின் அடிப்படை அடையாளத்தைப் பாதுகாக்கும் அரணாகவும் இது அமையும்.

பரிந்துரை 7

368வது அரசமைப்புச் சட்டப் பிரிவில் (2C) எனும் புதிய உட்பிரிவைச் சேர்க்க வேண்டும். அரசமைப்பின் உச்ச வல்லமை, நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு, மக்களாட்சி தத்துவம், குடியரசுத் தத்துவம், கூட்டாட்சித் தத்துவம், மதச்சார்பின்மை, அதிகாரங்களைப் பிரித்து வைத்தல், சட்டத்தின் ஆட்சி, நீதித்துறையின் சுதந்திரம், நீதித்துறை மறுசீராய்வு மற்றும் சுதந்திரமான, நியாயமான முறையிலான தேர்தல்கள் (இப்பட்டியல் முழுமையானதல்ல; எடுத்துக்காட்டு மட்டுமே) உள்ளிட்ட

அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சங்களில் எதனையும் சுருக்கும் வகையிலோ, நீக்கும் வகையிலோ அல்லது அழிக்கும் வகையிலோ எந்தவொரு அரசமைப்புச் சட்டத் திருத்தமும் அமையக்கூடாது என அந்த உட்பிரிவு குறிப்பிட வேண்டும்.

8. குறைந்தபட்ச விவாதக் கால அளவைக் கட்டாயமாக்குதல்

அரசமைப்புச் சட்டம் என்பது மிகுந்த நிதானத்துடனும், ஆழ்ந்த விவாதங்களுக்குப் பிறகும் திருத்தப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால், அமைதியற்ற, அவசரகதியில் சட்டங்கள் இயற்றபட்டுள்ளதை இந்தியாவின் வரலாறு பதிவு செய்துள்ளது. 1951–ஆம் ஆண்டு முதல் இயற்றப்பட்ட 106 அரசமைப்புச் சட்டத் திருத்தங்களில், பதினைந்து திருத்தங்கள் அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து பத்தே நாட்களில் (அல்லது அதற்கும் குறைவான காலத்தில்) குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவைப் பெற்றுள்ளன. பஞ்சாபில் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஓராண்டிற்கு நீட்டித்த *அறுபத்தியேழாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (1990), அறிமுகம் செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவையும் ஒரே நாளில் பெற்றது. இந்த இயலின் அறிமுகத்தில் குறிப்பிடப்பட்ட சர்ச்சைக்குரிய *முப்பத்து ஒன்பதாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (1975), நாடாளுமன்றத்தில் *அறிமுகப்படுத்தப்பட்டு*, ஒட்டுமொத்த மாநிலங்களில் பாதி மாநிலங்களின் பின்னேற்பைப் பெற்று, குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவையும் பெற்றது–இவையனைத்தும் மூன்றே நாட்களில் நடந்து முடிந்தன. பட்டியல் இனத்தவர், பட்டியல் பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லாத, பொருளாதார அளவில் நலிவடைந்த பிரிவினருக்கு (EWS) 10 விழுக்காடு இடஒதுக்கீட்டை அறிமுகப்படுத்திய *நூற்று மூன்றாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (2019) – மொத்த இடஒதுக்கீட்டின் மீது உச்சநீதிமன்றம் விதித்திருந்த நீண்டகால 50 விழுக்காடு உச்சவரம்பையும் கடந்து – வெறும் நான்கே நாட்களில் நிறைவேற்றப்பட்டது. இதேபோல, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை (OBC) அடையாளம் காணும் மாநிலங்களின் உரிமையை மீட்டெடுத்த *நூற்று ஐந்தாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (2021), மற்றும் சட்டமன்றங்களில் மகளிருக்கான இடஒதுக்கீட்டை அறிமுகப்படுத்திய *நூற்று ஆறாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (2023) ஆகியவை அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து ஒன்பது நாட்களுக்குள் குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவைப் பெற்றன.[11]

---

[11] Internal data analysis of the High–Level Committee.

சாதாரணச் சட்டங்களுக்கே இத்தகைய வேகமான நடைமுறை கேடு விளைவிக்கக்கூடியது; அப்படியிருக்க, அரசமைப்புச் சட்டத் திருத்தங்களைப் பொறுத்தவரை, இது முற்றிலும் பொருத்தமற்றதாகும்.

அலெக்சாண்டர் ஹாமில்டன் தொலைநோக்குப் பார்வையுடன் 'தி ஃபெடரலிஸ்ட் எண். 70' (*The Federalist No. 70*) எனும் கட்டுரையில் குறிப்பிட்டதைப் போல:

> "*சட்டமன்றத்தில் முடிவெடுப்பதில் காட்டப்படும் வேகம், நன்மையை விடத் தீமையையே அதிகம் விளைவிக்கும். அரசாங்கத்தின் அந்தத் துறையில் நிலவும் கருத்து வேறுபாடுகளும், கட்சிகளுக்கு இடையிலான உரசல்களும், சில நேரங்களில் நன்மை பயக்கும் திட்டங்களுக்குத் தடையாக அமையலாம்; இருப்பினும், அவை பெரும்பாலும் ஆழ்ந்த விவாதங்களுக்கும், முன்னெச்சரிக்கை உணர்வுக்கும் வித்திடுவதோடு, பெரும்பான்மையினரின் அதிகார வரம்புமீறல்களைக் கட்டுப்படுத்தவும் உதவுகின்றன.*"

நடைமுறை அளவிலான கட்டுப்பாடு அவசியம் என்பதை, ஒரு தொடக்ககால முன்னுதாரணம் சுட்டிக்காட்டுகிறது. 1954–ஆம் ஆண்டு அக்டோபரில், *மூன்றாவது அரசமைப்புச் சட்டத் திருத்த முன்வரைவு* நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, 368(2)வது அரசமைப்புச் சட்டப் பிரிவின் வரம்புரையின் கீழ் பின்னேற்புக்காக அனைத்து மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டது. ஆனாலும், மைசூர் சட்டமன்றம் கூடுவதற்குக் கூடக் காத்திருக்காமல், பாதி மாநிலச் சட்டமன்றங்கள் அந்த அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கு ஏற்கனவே பின்னேற்பு அளித்துவிட்டன என்ற காரணத்தின் அடிப்படையில், குடியரசுத் தலைவர் அதற்கு ஏற்பிசைவு அளித்துவிட்டார். இது அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானதல்ல என்றாலும், முன்மொழியப்பட்ட திருத்தத்தின் மீது விவாதிக்க *ஒவ்வொரு* மாநிலச் சட்டமன்றத்திற்கும் நியாயமான வாய்ப்பு வழங்கப்படும் வரை, குடியரசுத் தலைவர் தனது ஒப்புதலை நிறுத்தி வைத்திருப்பதே முறையானதாக இருந்திருக்கும்.[12]

அரசமைப்புச் சட்ட மாற்றம் மெதுவாக நடக்கவும், அவசர கதியிலோ அல்லது போதிய சிந்தனையின்றியோ மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களைத் தடுக்கவும், பிற கூட்டாட்சி நாடுகள் திட்டமிட்ட காலக் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளன.

---

[12] MP Jain, *Indian Constitutional Law* (9th edn, LexisNexis 2025) 1835–36.

- *ஆஸ்திரேலியா (காமன்வெல்த் அரசமைப்பு, பிரிவு 128)*: முன்மொழியப்பட்ட திருத்தம் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட பிறகு இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவோ, ஆறு மாதங்களுக்குப் பின்னதாகவோ பொதுவாக்கெடுப்புக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- *கனடா (அரசமைப்புச் சட்டம், 1982, பகுதி V – பிரிவு 39):* பின்னேற்பை அனைத்து மாகாணங்களும் வழங்காத வரை, நாடாளுமன்றம் தீர்மானத்தை ஏற்றுக்கொண்ட பிறகு ஒரு வருடத்திற்குப் பிரகடனம் எதுவும் வெளியிடப்படாது.
- *பெல்ஜியம் (அரசமைப்பு, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 195 & 196)*: குறிப்பிட்ட சில அரசமைப்புச் சட்டப் பிரிவுகளைத் திருத்துவதற்கான அறிவிப்பு வெளியானாலே, நாடாளுமன்றம் தானாகவே கலைந்துவிடும். அதன்பின் புதிய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். எந்தெந்த பிரிவுகள் திருத்தப்பட உள்ளதாக முன்னரே அறிவிக்கப்பட்டனவோ, அவற்றை மட்டுமே புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் நாடாளுமன்றத்தால் திருத்த முடியும்.
- *ஸ்பெயின் (அரசமைப்பு, முக்கிய திருத்தங்களுக்காக அரசமைப்புச் சட்டப் பிரிவு 168)*: முக்கியத் திருத்தங்களுக்கு, இப்பிரிவு இதே போன்றதொரு வழிமுறையைக் கையாளுகிறது: நாடாளுமன்றத்தைக் கலைத்தல் மற்றும் புதிய தேர்தல்கள்; புதிய நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் மீண்டும் ஒப்புதல் பெறுதல்; மற்றும் கட்டாயப் பொதுவாக்கெடுப்பு.

முன்னர் குறிப்பிட்டது போல, எச்.வி. காமத் அரசமைப்பு அவையில், அரசமைப்புச் சட்டத் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு முன்னர், அறிவார்ந்த பொதுவிவாதம் நடைபெறுவதற்கு அனுமதிக்கும் வகையில், அத்திருத்தம் இறுதியாக நிறைவேற்றப்படக் கூடாது என்று வலியுறுத்தினார். இந்தியாவுக்கு இப்போது அத்தகைய கருத்தும் வெளிப்படைத்தன்மையும் கொண்ட பாதுகாப்பு முறைகள் தேவைப்படுகின்றன.

பரிந்துரை 8

368வது அரசமைப்புச் சட்டபிரிவில் (2D) எனும் புதிய உட்பிரிவை சேர்ப்பதன் மூலம், நாடாளுமன்றத்தின் எந்தவொரு அவையோ அல்லது மாநிலச் சட்டமன்றமோ, ஒரு அரசமைப்புச் சட்டத் திருத்த வரைவை, அது அறிமுகப்படுத்தப்பட்ட அதே கூட்டத்தொடரில் இறுதி

வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்றும்; நடவடிக்கை எடுக்க வேண்டிய அனைத்துச் சட்டமன்றங்களும் தங்கள் ஆய்வை முன்னரே முடித்திருந்தாலன்றி, அரசமைப்புச் சட்டத்திருத்த வரைவுக்கு அது அறிமுகப்படுத்தப்பட்ட நாளிலிருந்து குறைந்தது ஓராண்டு காலம் முடியும் வரை குடியரசுத் தலைவர் ஏற்பிசைவு அளிக்கக் கூடாது என்றும் நிபந்தனை விதிக்க வேண்டும்.

9. கட்டாயமாகப் பொதுமக்கள் கருத்தறிதல்

'இந்திய மக்களாகிய நாம்... நமக்கு நாமே இந்த அரசமைப்பை வழங்கிக்கொள்கிறோம்' என்று முகவுரை பறைசாற்றுகிறது. ஆனால், மக்கள் உருவாக்கிக் கொண்டதாகக் கருதப்படும் இந்தச் சாசனத்தைத் திருத்துவதில், அவர்களுக்கு நேரடியான அல்லது ஆலோசனை ரீதியான எந்தவொரு முறைப்படியான பங்கும் இல்லை. இதில் முரண் என்னவென்றால், அரசமைப்பு அவை இதைவிட மிகச் சிறந்ததொரு ஜனநாயக முன்னுதாரணத்தை ஏற்படுத்தியிருந்தது. பி.ஆர். அம்பேத்கர் தலைமையிலான வரைவுக்குழு, அரசமைப்புச் சட்டத்தின் முதல் வரைவை 1948 பிப்ரவரி 21 அன்று விரிவான பொது ஆலோசனைக்காக வெளியிட்டது. குடிமக்கள், மாகாண அரசுகள், மத்திய அமைச்சகங்கள், நீதித்துறை மற்றும் அவை உறுப்பினர்களிடமிருந்து கருத்துகளையும் அது வரவேற்றது. இவ்வாறு பெறப்பட்ட விரிவான கருத்துகளின் அடிப்படையில் செம்மைப்படுத்தப்பட்ட, திருத்தப்பட்ட வரைவு, 1948 நவம்பர் 4 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

இன்றைக்கு, இதனோடு ஒப்பிடக்கூடிய நடைமுறை எதுவுமே இல்லை. அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் பெரும்பாலும் நாடாளுமன்றத்தில் அவசர அவசரமாக நிறைவேற்றப்படுகின்றன. சாதாரண சட்டவரைவுகளுக்கு பொருந்தும் – எப்போதாவது மட்டுமே பயன்படுத்தப்படும் – ஒன்றிய அரசின் 'சட்ட முன்வரைவு மீதான கலந்தாய்வுக் கொள்கை' கூட அரசமைப்புரீதியான மாற்றங்களுக்குப் பயன்படுத்தப்படுவதே இல்லை. வளர்ந்த ஜனநாயக நாடுகளில், முறையான பொது ஆலோசனை என்பது அரசமைப்பு மாற்றத்திற்கான இன்றியமையாத முன்நிபந்தனையாகக் கருதப்படுகிறது; இதற்கு நேர்மாறாக இந்தியாவின் நிலை உள்ளது. ஆஸ்திரேலியா மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் ஒவ்வொரு அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கும் பொதுவாக்கெடுப்பைக் கோருகின்றன; ஸ்பெயினில் முக்கிய அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்குப் பொதுவாக்கெடுப்பு கட்டாயமாகவும், சாதாரண திருத்தங்களுக்கு விருப்பத் தேர்வாகவும் உள்ளது.

அனைத்து அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கும், காலவரையறைக்கு உட்பட்ட கட்டாயப் பொது ஆலோசனையை நிறுவனமயமாக்குவதன் மூலம், ஒளிவுமறைவுத் தன்மையைக் குறைக்கவும், அவசரமாக சட்டமியற்றப்படுவதைத் தடுக்கவும், ஜனநாயக ஏற்புடைமையை கணிசமாக மேம்படுத்தவும் உதவும். இத்தகைய சீர்திருத்தம், திருத்த நடைமுறையை முகவுரையின் உள்ளார்ந்த தன்மைக்கும், அரசமைப்புச் சட்டத்தை வடிவமைத்தவர்களை வழிநடத்திய பங்கேற்புப் பண்பிற்கும் மிகவும் நெருக்கமாக கொண்டு செல்லும்.

பரிந்துரை 9

368வது அரசமைப்புச் சட்டப் பிரிவில் (2E) எனும் புதிய உட்பிரிவை சேர்க்க வேண்டும். இதன்மூலம், முன்மொழியப்பட்ட அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் வாசகம் – நாடாளுமன்றம் இயற்றும் சட்டம் நிர்ணயித்த முறைப்படி – மூன்று மாதங்களுக்குக் குறையாத காலத்திற்குப் பொதுமக்களின் ஆலோசனைக்காக வெளியிடப்பட்டிருந்தாலன்றி, அரசமைப்புச் சட்டத்தை திருத்துவதற்கான எந்தவொரு சட்ட வரைவையும் நாடாளுமன்றத்தின் எந்தவொரு அவையிலோ அல்லது மாநிலச் சட்டமன்றத்திலோ அறிமுகப்படுத்தக் கூடாது என்று நிபந்தனை விதிக்கப்படவேண்டும்.

10. மீளாய்வுப் பிரிவுகளையும் காலமுறை மறுஆய்வையும் அறிமுகப்படுத்துதல்

புதிய பரிசோதனை அல்லது இடைக்கால அரசமைப்பு ஏற்பாடுகள் – விதிவிலக்கான, மையப்படுத்தும் அல்லது அவசரநிலை அதிகாரங்களை வழங்கும் ஏற்பாடுகள் நிரந்தரத் குறைபாடுகளாக மாறுவதை மீளாய்வுப் பிரிவுகள் (Sunset clauses) தடுக்கின்றன. அவை காலமுறை மறுஆய்வைக் கட்டாயமாக்கி, அனுபவத்தின் அடிப்படையில் மறுவடிவமைப்பை அனுமதித்து, தற்காலிக ஏற்பாடுகள் நீண்டகாலக் கட்டமைப்பு ஏற்றத்தாழ்வுகளாக மாறாமல் இருப்பதை உறுதி செய்கின்றன.

அரசமைப்பில் இரண்டு மீளாய்வுப் பிரிவுகள் மட்டுமே உள்ளன. அரசமைப்புச் சட்டப் பிரிவு 334, மூலத்தில் மக்களவையிலும் மாநிலச் சட்டமன்றங்களிலும் பட்டியல் இனத்தவர்/பழங்குடியினர் இடஒதுக்கீடு, ஆங்கிலோ–இந்தியர் பிரதிநிதித்துவம் ஆகியவற்றை 1950 முதல் பத்து ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தி, புதுப்பித்தலுக்கு உட்படுத்தியது. ஆங்கிலோ–இந்தியர் பிரதிநிதித்துவம் 2020க்குப் பிறகு நீட்டிக்கப்படவில்லை. அதே வேளையில் பட்டியல் இன, பழங்குடி

இடஒதுக்கீடுகள் 2030 வரை தொடர்கின்றன. *நூற்று ஆறாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (2023) மூலம் சேர்க்கப்பட்ட அரசமைப்புச் சட்டப் பிரிவு 334A, மக்களவையிலும் மாநிலச் சட்டமன்றங்களிலும் பெண்களுக்குத் இந்த அரசமைப்புச் சட்டப் பிரிவு சேர்க்கப்பட்ட நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்கு இடஒதுக்கீடு வழங்குகிறது. இது காலக்கெடு கொண்டதாகவும் மீளாய்வு செய்யக்கூடியதாகவும் உள்ளது.

எழுபத்தைந்து ஆண்டுகால அரசமைப்பு நடைமுறை, பிற ஏற்பாடுகள் பல, குறிப்பாக ஒன்றிய–மாநில உறவுகளைப் பாதிக்கும் அல்லது விதிவிலக்கான அதிகாரங்களை வழங்குபவை, மீளாய்வுப் பிரிவுகள் மூலம் அரசமைப்பு அளவில் காலமுறை மறுபரிசீலனைக்கு உத்தரவாதம் அளிக்கின்றன என்பதைக் காட்டுகிறது. இவற்றில், அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 3–4 (புதிய மாநிலங்களை உருவாக்குதல் போன்றவை); அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 155–158, 163–164, 200–201 (ஆளுநரின் நியமனம், விருப்புரிமை, சட்டமுன்வடிவுகளுக்கு ஏற்பிசைவு அளிப்பு); அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A (ஜிஎஸ்டி கவுன்சில்); அரசமைப்புச் சட்டப் பிரிவு 356 (குடியரசுத் தலைவர் ஆட்சி); அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 354, 360 (அவசரநிலையோடு தொடர்புடைய நிதி, நிதியியல் கட்டுப்பாடுகள்); அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 372 முதல் 392 வரை (இடைக்கால ஏற்பாடுகள்); பத்தாவது அட்டவணை (கட்சித் தாவல் தடை) ஆகியவை மிகவும் முக்கியமானவை.

ஆய்வு செய்யப்பட்ட எட்டு கூட்டாட்சி அரசமைப்புகளில் எதுவும் ஒப்பிடக்கூடிய அளவில் மீளாய்வுப் பிரிவுகளை இணைக்கவில்லை. ஒருவேளை அந்த அதிகார வரம்புகளில் அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் மிகவும் கடினமாக இருப்பதால் இருக்கலாம். அதிகளவில் மாறும் தன்மையுடையதும், அடிக்கடி திருத்தங்களுக்கு உள்ளாவதுமான இந்திய அரசமைப்பிற்கு, இத்தகைய பாதுகாப்பு அரண்கள் வெறும் விரும்பத்தக்கவை மட்டுமல்ல; அவை இன்றியமையாதவையும் ஆகும்.

பரிந்துரை 10

368வது அரசமைப்புச் சட்டப் பிரிவில் (2F) எனும் புதிய உட்பிரிவைச் சேர்க்க வேண்டும். இதன்மூலம் 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்டாய மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய – புதிதாக இயற்றப்பட்ட அல்லது ஏற்கனவே உள்ள – அரசமைப்புச் சட்டப் பிரிவுகளை பட்டியலிடுவதோடு, அக்காலக்கட்டத்திற்குள் அவை மீண்டும் இயற்றப்படாவிட்டால் செயலிழந்துவிடும் என்ற நிபந்தனையும் விதிக்கப்படவேண்டும்.

VI. முடிவுரை

1950–இல் நெகிழ்வான திருத்த நடைமுறைக்கான அரசமைப்புச் சிற்பிகளின் விருப்பம் புரிந்துகொள்ளத்தக்கது. அப்போது பிரிவினையிலிருந்து மீண்டு, நூற்றுக்கணக்கான சுதேச அரசுகளை ஒருங்கிணைத்து, அரசமைப்பு முடக்கத்தைத் தவிர்க்க விரும்பிய இந்தியா, புதிதாகச் சுதந்திரம் பெற்ற, பலவீனமான ஒன்றியம். நிறுவனத்தை உருவாக்குவதற்கும் தேசிய ஒருங்கிணைப்பிற்கும் நெகிழ்வுத்தன்மை அவசியமானதாகத் தோன்றியது. ஆனால், அரசமைப்பு முறை, குடியரசு போலவே, படிமலர்ச்சி அடைய வேண்டும். தனது குழந்தைப் பருவத்தின் அச்சங்களுக்கு நிரந்தரமான கைதியாகத் தேசம் இருக்க முடியாது.

மொழிவழி அடையாளம், ஜனநாயகப் பிரதிநிதித்துவம், நிர்வாக முதிர்ச்சி ஆகிய வலுநிறைந்த மாநிலங்களைக் கொண்ட உறுதியான கூட்டாட்சிமுறை அரசியல் நிலவுகின்ற நம்பிக்கையான, நிலையான ஜனநாயகம் கொண்ட நாடு இக்கால இந்தியா ஆகும். அதிகப்படியான நெகிழ்வுத்தன்மை கொண்ட முந்தைய நியாயப்பாடும்கூட படிப்படியாக மறைந்துபோய் விட்டது. இனி பிரிவினை அபாயம் இல்லை. இப்போது மிதமிஞ்சிய அதிகாரக் குவிப்பும் அதிகாரம் குவித்துக் கொண்ட ஒன்றிய அரசாங்கமும் அபாயமாக மாறியுள்ளது. அவசரநிலைக் காலத் திருத்தங்களுடன் மிக அண்மையில், "ஒரு நாடு, ஒரே தேர்தல்" என்று முன்மொழியும் *நூற்று இருபத்து ஒன்பதாவது அரசமைப்புச் சட்டத் திருத்த சட்டவரைவு* (2024), ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கக்கூடிய குற்றத்திற்காகத் தொடர்ந்து 30 நாட்களுக்குக் கைது செய்யப்பட்ட பிரதமர், முதலமைச்சர் அல்லது அமைச்சரை நீக்குவதைக் கட்டாயமாக்கும் *நூற்று முப்பதாவது அரசமைப்புச் சட்டத் திருத்த சட்டவரைவு* (2025) ஆகியவை இதற்குச் சான்று ஆகும். அதிகப்படியான நெகிழ்வுத்தன்மை கொண்ட அரசமைப்பு மட்டுமே இத்தகைய நிலைத்தன்மையைக் குலைக்கும் முன்மொழிவுகளைச் செய்ய இடமளிக்கின்றது.

முதிர்ச்சியடைந்த கூட்டாட்சி அமைப்புகளின் அனுபவம் அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கான பல நிலையான கொள்கைகளை எடுத்துக்காட்டுகிறது. திருத்தும் அதிகாரம் ஒருபோதும் ஒரே நிறுவனத்திடம் இருக்கக்கூடாது; நீடித்த மாற்றத்திற்கு நாடாளுமன்றம், மாநிலச் சட்டமன்றங்கள், பொருத்தமான இடங்களில் மக்கள் என பல அடுக்கு பின்னேற்பு அளிப்பு தேவைப்படுகின்றது. கூட்டாட்சிமுறை சமநிலையைப் பாதிக்கும் திருத்தங்களில் முன்மொழிவுகளைத்

தொடங்கி வைக்கும் உரிமை உட்பட மாநிலங்கள் அர்த்தமுள்ள பங்கைக் கொண்டிருக்க வேண்டும். திருத்த வரம்புகள், (மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை என்கிற) அதிகப்பட்ச அளவு முறையுடன் மாநிலங்களும் மக்கள்தொகையும் அடங்கிய இரட்டைப் பெரும்பான்மை முறை மூலம் வலுப்படுத்தப்பட வேண்டும். அரசமைப்பு அடிப்படை வெளிப்படையாகப் பாதுகாக்கப்பட வேண்டும். வெளிப்படைத்தன்மை, பொதுமக்கள் கருத்து அறிதல், கலந்தாய்வுக்கான குறைந்த கால அளவு, குறிப்பிட்ட மாநிலம் சார்ந்த திருத்த நடைமுறைகள், மீளாய்வுப் பிரிவுகள் போன்ற கூடுதல் பாதுகாப்புகளும் அவசியம். இந்த நோக்கில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 368ஐ இந்தியா நவீனமயமாக்க வேண்டும். இத்தகைய திருத்த நடைமுறை ஒன்றியத்தை பலவீனப்படுத்தாது; இந்தியாவை முதிர்ச்சியடைந்த கூட்டாட்சி நாடாக மாற்றும்.

தமிழ்நாடு TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றம்
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

சாதாரண நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் திருத்தப்படக்கூடிய அரசமைப்பு ஏற்பாடுகள்

இந்த அரசமைப்பு ஏற்பாடுகள் பரவலாக இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன:

1. *"அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இன் நோக்கங்களுக்கு உட்பட்டு இந்த அரசமைப்பின் திருத்தம் என்று கருதப்படும்... வகை அல்லாத சட்டம்"* என்று வெளிப்படையாகக் கூறும் அரசமைப்புச் சட்டப் பிரிவுகள்:
   - *அரசமைப்புச் சட்டப் பிரிவு 4*: முதலாம், நான்காம் அட்டவணைகள்; துணை, தற்செயலான, தொடர்விளைவு அதிகாரப் பொருண்மைகளைத் திருத்துவதற்கு அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 2, 3ன் கீழ் உருவாக்கப்பட்ட சட்டங்கள்.
   - *அரசமைப்புச் சட்டப் பிரிவு 169*: மாநிலங்களில் சட்டமன்ற மேலவைகளை ஒழித்தல் அல்லது உருவாக்குதல்.
   - *அரசமைப்புச் சட்டப் பிரிவு 239A*: சில ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுக்காக (யூனியன் பிரதேசங்களுக்காக) சட்டமன்றங்கள் அல்லது அமைச்சரவை அல்லது இரண்டையும் உருவாக்கும் சட்டங்கள்.
   - *அரசமைப்புச் சட்டப் பிரிவு 239AA*: டெல்லி தொடர்பான சிறப்பு ஏற்பாடுகள்.
   - *அரசமைப்புச் சட்டப் பிரிவு 312*: அகில இந்தியப் பணிகள்.
   - *ஐந்தாவது அட்டவணையின் பத்தி 7(2)*: அட்டவணையின் திருத்தம்
   - *ஆறாவது அட்டவணையின் பத்தி 21(2)*: அட்டவணையின் திருத்தம்
2. *"நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம்"* அல்லது *"நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் வேறுவிதமாக வழங்கினால் ஒழிய"* என்று கூறும் ஏற்பாடுகள். இந்தச் சந்தர்ப்பங்களில், நாடாளுமன்றம் சட்டம் இயற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்தும் அதே வேளையில், அரசமைப்பை இயற்றும் அதிகாரத்தையும்

திறம்படப் பயன்படுத்துகிறது. பின்வருபவை எடுத்துக்காட்டு அளவிலான பட்டியல் ஆகும்:

- *அரசமைப்புச் சட்டப் பிரிவு 2*: புதிய மாநிலங்களை அனுமதித்தல் அல்லது நிறுவுதல்.
- *அரசமைப்புச் சட்டப் பிரிவு 3*: புதிய மாநிலங்களை உருவாக்குதல்; நிலவும் மாநிலங்களின் பகுதிகள், எல்லைகள் அல்லது பெயர்களை மாற்றுதல்.
- *அரசமைப்புச் சட்டப் பிரிவு 120*: நாடாளுமன்றத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய மொழி.
- *அரசமைப்புச் சட்டப் பிரிவு 239*: ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளின் (யூனியன் பிரதேசங்களின்) நிர்வாகம்.
- *அரசமைப்புச் சட்டப் பிரிவு 293*: மாநிலங்கள் கடன் வாங்குதல்.
- *அரசமைப்புச் சட்டப் பிரிவு 343*: ஒன்றியத்தின் ஆட்சி மொழி.
- *அரசமைப்புச் சட்டப் பிரிவு 348*: உச்சநீதிமன்றத்திலும் உயர் நீதிமன்றங்களிலும் சட்டங்களிலும் சட்டமுன்வடிவுகளிலும் பயன்படுத்தப்பட வேண்டிய மொழி.
- *இரண்டாவது அட்டவணை*: அரசமைப்பு பதவிகளை வகிப்பவர்களின் ஊதியங்கள், படிகள் போன்றவை தொடர்பான ஏற்பாடுகள்.

சான்று நூல்கள்

1. *Constituent Assembly Debates*, vol 7 (6th reprint, Lok Sabha Secretariat 2014) November 4, 1948; *Constituent Assembly Debates*, vol 9 (6th reprint, Lok Sabha Secretariat 2014) September 17, 1949.
2. Granville Austin, *The Indian Constitution: Cornerstone of a Nation* (Oxford University Press 1966) Chapter 11.
3. PV Rajamannar, A Lakshmanaswami Mudaliar, and P Chandra Reddy, *Report of the Centre–State Relations Inquiry Committee* (Government of Tamil Nadu 1971) Chapter 20 & Appendix X.
4. RS Sarkaria, B Sivaraman, and SR Sen, *Commission on Centre–State Relations*, part 1 (Ministry of Home Affairs 1988) Chapter 2, paras 2.41.01 – 2.41.11.
5. Madan Mohan Punchhi and others, *Commission on Centre–State Relations: Constitutional Governance and the Management of Centre–State Relations*, vol 2 (Government of India 2010) Chapter 3, paras 3.4.01 – 3.5.03.
6. The Constitution of the United States 1787, Article V.
7. The Belgian Constitution 1831, Article 195.
8. Commonwealth of Australia Constitution Act 1900, Section 128.
9. Basic Law for the Federal Republic of Germany 1949, Articles 1, 20, 29, 51, 76, 79.
10. The Spanish Constitution 1978, Articles 167, 168.
11. Canadian Constitution Act 1982, Sections 38, 39 41, 43, 46.
12. Constitution of the Federative Republic of Brazil 1988, Article 60.
13. Federal Constitution of the Swiss Confederation 1999, Articles 53, 138, 139, 140, 142.

இயல் 3

மாநிலங்களின் ஆட்சிநில ஒருமைப்பாடு

"தற்போதைய அலகுகளையோ, அவற்றின் ஆட்சிநிலப் பகுதிகளையோ, எல்லைகளையோ அல்லது பெயரையோ மாற்றியமைப்பது தொடர்பான எந்தவொரு முன்னெடுப்பும், அவற்றால் முதன்மையாகப் பாதிக்கப்படும் மக்களிடமிருந்தே தொடங்க வேண்டும்; அது மத்தியில் உள்ள ஆட்சி அல்லது அதிகாரத்திடமிருந்து வரக்கூடாது. மத்தியில் உள்ள ஆட்சியருக்கு உள்ளூர்ச் சூழல்கள் குறித்துத் தெளிவாகத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை; அல்லது அத்தகைய மாற்றத்தை ஏற்கவோ, ஏற்காமலிருக்கவோ அவர்களுக்கு வேறு கண்ணோட்டங்களோ, வேறு பரிசீலனைகளோ அல்லது பிற காரணங்களோ இருக்கக்கூடும்."

– கே.டி. ஷா,
அரசமைப்புச் சட்ட அவை விவாதங்கள் (1948)[1]

I. அறிமுகம்

உலகின் முக்கிய கூட்டாட்சி நாடுகளோடு ஒப்பிடுகையில், நெருடலுக்குரிய விவகாரமொன்றில் இந்தியா கிட்டத்தட்ட தனித்துவமாக இருக்கிறது. வளர்ச்சியடைந்த பிற கூட்டாட்சி நாடுகளில் அங்கமாக உள்ள மாநிலங்கள், மாகாணங்கள், *லேண்டர்கள் (Länder)*,

---

[1] *Constituent Assembly Debates*, vol 7 (6th reprint, Lok Sabha Secretariat 2014) 438, November 17, 1948.

கான்டான்கள் (Cantons), தன்னாட்சிச் சமூகங்கள் (Autonomous Communities) போன்ற அலகுகளின் ஆட்சிநில ஒருமைப்பாடு அரசமைப்புச் சட்ட அளவில் உறுதியாகப் பாதுகாக்கப்படுகிறது. அவற்றின் சொந்த இசைவின்றி – அல்லது பல நேரங்களில் பொதுவாக்கெடுப்பின் வாயிலாகப் பெறப்படும் மக்களின் நேரடி ஒப்புதல் மற்றும் கடுமையான அரசமைப்புச் சட்டத் திருத்த நடைமுறைகள் இன்றி – அவற்றின் எல்லைகளை மாற்றியமைக்கவோ, அழிக்கவோ அல்லது அவற்றின் தகுதிநிலையை தாழ்த்தவோ முடியாது.

இந்தியா இவ்விவகாரத்தில் தனித்து விளங்குகிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இன் கீழ், நாடாளுமன்றம் ஒரு சாதாரண சட்டத்தின் வழியாக மாநிலங்களை உருவாக்கலாம், இணைக்கலாம், பிரிக்கலாம், பெயர் மாற்றம் செய்யலாம். மேலும் மாநிலத்தின் பரப்பளவை அதிகரிக்கலாம் அல்லது குறைக்கலாம், அல்லது வேறு வகையில் மறுசீரமைக்கலாம். அதுமட்டுமின்றி, மாநிலத்தின் ஒருபகுதியை ஒன்றிய ஆட்சிப்பகுதியாக மாற்றியமைக்கவும் நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. இந்த நடைமுறையில் உள்ள ஒரேயொரு வழக்கமான விதிமுறை என்னவென்றால், குடியரசுத் தலைவர் அந்த சட்டவரைவை சம்பந்தப்பட்ட மாநிலச் சட்டமன்றத்திற்கு அனுப்பி அவர்களின் "கருத்துகளை" அறிய வேண்டும். ஆனால், அக்கருத்துகள் எவ்விதத்திலும் நாடாளுமன்றத்தின் முடிவுகளை கட்டுப்படுத்தாது. மேலும், அத்தகைய சட்டம் அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இன் கீழ் அரசமைப்புச் சட்டத் திருத்தமாகக் கருதப்படாது என்று அரசமைப்புச் சட்டப் பிரிவு 4 அறிவிக்கிறது.

நாட்டுப் பிரிவினையின் பின்னணியிலும், 1947–இல் சுதந்திரத்தின்போது சிக்கல்களைக் கடந்து 14 மாகாணங்களையும் 552 சுதேச அரசுகளையும் இணைத்து இந்தியாவை உருவாக்கிய வேளையிலும், இந்த சட்ட ஏற்பாடுகள் இயற்றப்பட்டன. ஜம்மு & காஷ்மீர் (2,18,779 ச.கி.மீ) முதல் மறுமுனையில் வேஜானோனெஸ் (0.75 ச.கி.மீ) வரை *பரப்பளவிலும்*, ஹைதராபாத் (163 லட்சம்) முதல் பில்பாரி (27)[2] வரை *மக்கள்தொகையிலும்* மிகப்பெரும் வகையில் சுதேச அரசுகள் வேறுபட்டிருந்தன. இப்படிப்பட்ட கடும் சமச்சீரற்றத் தன்மை நிலவிய அந்தச் சூழலில், மிகப்பெரிய அளவிலான மாகாண ஆட்சிநில மறுசீரமைப்பு தவிர்க்க முடியாத ஒன்றாக பார்க்கப்பட்டது. அதற்காக ஒன்றிய அரசுக்குப் பரந்த அதிகாரங்கள் தேவை என்றும் கருதப்பட்டது.

---

[2] *Memoranda on the Indian States* (Government of India Press 1940) 20, 342; *White Paper on Indian States* (Ministry of States, Government of India 1950) 17; AJ Christopher, *The British Empire at its Zenith* (CroomHelm 1988) 160.

1948–49 காலகட்டத்தில், மாநிலங்களை மொழிவாரியாக மறுசீரமைப்பது குறித்த விவகாரத்தை இரண்டு முக்கியக் குழுக்கள் ஆராய்ந்தன. 1948 ஜூன் மாதம் அரசமைப்புச் சட்ட அவையால் நியமிக்கப்பட்டு, நீதிபதி எஸ். கே. தார் தலைமையில் அமைந்த '*மொழிவாரி மாகாணங்கள் ஆணையம்*'[3] (*Linguistic Provinces Commission*), தனது அறிக்கையை 1948 டிசம்பரில் அளித்தது. மொழிவாரி மாநிலங்கள் வட்டாரவாதத்தை வளர்க்கும் என்றும், தேசிய ஒற்றுமைக்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும் அந்த ஆணையம் எச்சரித்தது. எனவே, மொழி அடிப்படையில் மாநிலங்களைப் பிரிப்பதற்கு எதிராக வலுவான ஆலோசனையை அது வழங்கியது. இந்தக் கருத்துக்கு எதிராக பரவலாக ஏற்பட்ட சீற்றத்தை கணக்கில்கொண்டு, இந்தச் சிக்கலை அரசியல் நோக்கில் மறுஆய்வு செய்ய *ஜேவிபி குழுவை*[4] (*ஜவஹர்லால் நேரு, வல்லபாய் படேல், பட்டாபி சீதாராமையா*) 1948 டிசம்பரில் அமைத்தது காங்கிரஸ் கட்சி. 1949 ஏப்ரலில் தனது அறிக்கையை அளித்த அக்குழு, தார் ஆணையத்தின் கருத்துகளை பெருமளவில் ஏற்றுக்கொண்டது. எனினும், ஒரு சிறிய விதிவிலக்கை அது அளித்தது. பொதுமக்களின் உணர்வு "வலுவானதாகவும் எழுச்சிமிக்கதாகவும்" இருந்து, பிற நடைமுறைச் சூழல்களும் சாதகமாக அமைந்தால், புதிய மொழிவாரி மாநிலம் அமைப்பது குறித்துப் பரிசீலிக்கலாம் என்று அக்குழு கூறியது.

இதன்பிறகு நடந்தவை அனைவரும் அறிந்ததே. பொட்டி ஸ்ரீராமுலு 58 நாள் சாகும்வரை உண்ணாநோன்பு இருந்து, 1952 டிசம்பர் 15 அன்று மரணமடைந்தார். இந்நிகழ்வு தனி தெலுங்கு மாநிலத்திற்கான பெருந்திரளான மக்கள் ஆதரவை ஒன்றுதிரட்டியது. மேலும் இது இந்தியா முழுவதும் மொழிவழி மாநிலக் கோரிக்கைகளைத் தூண்டியது. கடும் அழுத்தத்தின் பேரில், அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இன் கீழ், பழைய சென்னை மாகாணத்திலிருந்த தெலுங்கு பேசும் மாவட்டங்களைப் பிரித்து, 1953 அக்டோபர் 1 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஆந்திர மாநிலத்தை நாடாளுமன்றம் உருவாக்கியது. அதன்பின், ஒன்றிய அரசு 1953 டிசம்பரில் நீதிபதி பஸல் அலி தலைமையில் *மாநிலங்கள் மறுசீரமைப்பு ஆணையத்தை*[5] (States Reorganisation Commission) நியமித்தது.

---

[3] SK Dar, Panna Lall, and Jagatnarain Lal, *Report of the Linguistic Provinces Commission* (Central Secretariat Library, Government of India 1948).

[4] Jawaharlal Nehru, Pattabhi Sitaramayya and Sardar Vallabhbhai Patel, *Report of the Linguistic Provinces Committee* (Indian National Congress 1949).

[5] S Fazl Ali, HN Kunzru, and KM Panikkar, *Report of the States Reorganisation Commission* (Government of India 1955).

1955 செப்டம்பரில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்த அந்த ஆணையம், மாநிலங்களைப் பரந்த அளவில் மொழிவாரியாக மறுசீரமைக்கப் பரிந்துரைத்தது. அப்பரிந்துரைகள் *மாநில மறுசீரமைப்புச் சட்டம்,* 1956 *(States Reorganisation Act,* 1956) வழியாகச் செயல்படுத்தப்பட்டு, 1956 நவம்பர் 1 அன்று நடைமுறைக்கு வந்தன. இதைத் தொடர்ந்து வந்த பத்தாண்டுகளில் மேலும் பல மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. அரசமைப்புச் சட்டப்பிரிவு 2–இன் கீழ் சிக்கிம் ஒரு மாநிலமாக இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. சில ஒன்றிய ஆட்சிநிலப்பகுதிகள் மாநிலத் தகுதிநிலைக்கு மேம்படுத்தப்பட்டன. ஜம்மு & காஷ்மீர் அதன் மாநிலத் தகுதிநிலையை இழந்தது. இதன் விளைவாக, தற்போது இந்தியாவில் 28 மாநிலங்களும் 8 ஒன்றிய ஆட்சிநிலப்பகுதிகளும் உள்ளன. அரசமைப்புச் சட்டப்பிரிவுகள் 2 – 4 ஆகியவை வழங்கிய நெகிழ்வுத்தன்மையே, இத்தகைய பெருமளவிலான மறுசீரமைப்புகளை, ஒப்பீட்டளவில் எளிதாக, நாடாளுமன்றம் மேற்கொள்ள வழிவகுத்தது.

ஆனால் ஒரு காலத்தில் எது சரியாக இருந்ததோ, அது எல்லாக் காலத்திற்கும் சரியானதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. புதிதாகத் தோன்றிய ஒரு குடியரசுக்கு அன்று தேவைப்பட்ட இடைக்கால ஏற்பாடுகள், இன்று காலம் கடந்தவையாகிவிட்டன. மொழிவாரி மாநில மறுசீரமைப்பு முடிந்துவிட்டது. பழைய சுதேச அரசுகள் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டுவிட்டன. இந்தியா இப்போது ஒரு நிலையான மக்களாட்சி முறையை கொண்ட கூட்டாட்சி நாடாக திகழ்கிறது. ஆயினும்கூட, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 3 மற்றும் 4 ஆகியவை அதன் தன்மையில் சிறிதும் மாற்றமின்றி இன்றும் அப்படியே தொடர்கின்றன. இந்த நெகிழ்வுத்தன்மை எவ்வாறு அழிவுக்கருவியாக மாற்றப்படக்கூடும் என்பதற்கு, *ஜம்மு & காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம்,* 2019 *(Jammu and Kashmir Reorganisation Act,* 2019) ஒரு வலுவான எடுத்துக்காட்டாக திகழ்கிறது. குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் இருந்த ஒரு மாநிலத்தை இரண்டாகப் பிரித்ததோடு மட்டுமன்றி, அவற்றை இரண்டு ஒன்றிய ஆட்சிநிலப்பகுதிகளாக மாற்றி தகுதி குறைப்பு செய்ததன் வழியாக, இந்த அதிகாரங்கள் எவ்வளவு தூரம் நீளும் என்பதையும், தற்போதுள்ள நடைமுறைப் பாதுகாப்புகள் எவ்வளவு வலுவற்றவை என்பதையும் ஒன்றிய அரசு உணர்த்தியுள்ளது.

இந்தியா போன்ற வளர்ச்சியடைந்த ஆட்சி அமைப்பு முறையில், இந்தக் கவலையின் மையமாக இருப்பது ஆட்சிநில மறுசீரமைப்பு என்பதல்ல; மாறாக, அது மேற்கொள்ளப்படும் விதமே ஆகும். இந்த அரசமைப்புச் சட்ட குறைபாடானது மூன்று முக்கிய அம்சங்கள்

ஒன்றிணையும் இடத்திலிருந்து எழுகிறது: சாதாரண சட்டமியற்றும் நடைமுறையைப் பயன்படுத்துதல், பாதிக்கப்பட்ட மாநிலம் அல்லது அதன் மக்களின் 'கட்டுப்படுத்தும் இசைவு' இல்லாதிருத்தல், மற்றும் கூட்டாட்சி முறையில் ஏற்படும் மாற்றம் நிரந்தரமானதாக அமைதல். இவை அனைத்தும் ஒன்றிணைந்து, ஒரு முதிர்ச்சியடைந்த கூட்டாட்சிக்குத் தேவையான ஆழ்ந்த விவாதம், பங்கேற்பு அல்லது ஒருமித்த கருத்து ஆகியவை இல்லாமலேயே, மாநிலங்களின் அரசமைப்புச் சட்ட அளவிலான நிலையில் மீளமுடியாத மாற்றங்களை ஏற்படுத்த வழிவகுக்கின்றன.

II. பகுதி I-ன் (அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 1–4) பரிணாம வளர்ச்சி: அரசமைப்புச் சட்ட அவை முதல் இன்று வரை

இந்தப் பகுதியில் உள்ள அரசமைப்புச் சட்டப் பிரிவுகளின் வாசகம் கச்சிதமாகவும் எளிமையானதாகவும் தோற்றம் அளித்தாலும், அரசமைப்புச் சட்ட அவையிலும், 1950க்குப் பிந்தைய அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் வழியாகவும், இவை அடைந்த பரிணாம வளர்ச்சியானது, கூட்டாட்சி முறை கோட்பாடு, அரசியல் நடப்பு நிலைமைகள், தேசக் கட்டுமானத்திற்கான இன்றியமையாத தேவைகள், ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு சிக்கலான ஊடாட்டத்தை வெளிப்படுத்துகிறது.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 1 – ஒன்றியத்தின் பெயரும் ஆட்சிநிலப் பகுதியும்

வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 1 மீதான விவாதம் இரண்டு கட்டங்களாக நடந்தது. முதன்முதலில் 1948 நவம்பர் 15 அன்று, விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இந்த அரசமைப்புச் சட்டப் பிரிவு வெறுமனே "இந்தியா, மாநிலங்களைக் கொண்ட ஓர் ஒன்றியம் ஆகும்" என்று இருந்தது. இதில் தேசத்தின் பிரிக்க முடியாத தன்மையை வலியுறுத்துவதற்காக பி.ஆர். அம்பேத்கர் "ஒன்றியம்" என்ற சொல்லைப் பயன்படுத்தினார். கே.டி. ஷா, இந்தியாவை "மதச்சார்பற்ற, கூட்டாட்சி முறை, சோசலிச மாநிலங்களைக் கொண்ட ஒன்றியம்" என விவரிக்க வேண்டும் என்று திருத்தத்தைக் கொண்டுவந்தார். எச்.வி. காமத், 'மாநிலங்கள்' என்ற சொல்லுக்குப் பதிலாக 'பிரதேசங்கள்' என்று மாற்றப்

பரிந்துரைத்தார். அதேவேளையில், 'ஒன்றியம்' என்பதற்குப் பதிலாக 'கூட்டாட்சி' என்று மாற்ற வேண்டும் என மஹபூப் அலி பெய்க் முன்மொழிந்தார். மேற்கூறிய மூன்று திருத்தங்களும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

ஏறக்குறைய ஓர் ஆண்டு கழித்து, செப்டம்பர் 17, 1949 அன்று, "இந்தியா, அதாவது பாரதம், மாநிலங்களைக் கொண்ட ஓர் ஒன்றியம் ஆகும்" என்ற தொடரை பி.ஆர். அம்பேத்கர் அறிமுகப்படுத்தியபோது, தள்ளிவைக்கப்பட்ட விவாதம் மீண்டும் நடந்தது. அத்தொடரே, செப்டம்பர் 18, 1949 அன்று இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 2 – புதிய மாநிலங்களை இணைத்தல் அல்லது உருவாக்குதல்

நவம்பர் 17, 1948 அன்று, வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 2 அறிமுகப்படுத்தப்பட்டது. இரண்டாம், மூன்றாம் அரசமைப்புச் சட்டப் பிரிவுகள், ஒரே பொருள்பற்றியனவாக உள்ளதால், அவற்றை ஒன்றாக இணைக்க வேண்டும் என திருத்தம் ஒன்றை, நசிருதீன் அகமது கொண்டுவந்தார். அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதே நாளில், வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 2 திருத்தம் ஏதுமில்லாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 3 – புதிய மாநிலங்களை உருவாக்குதல் மற்றும் தற்போதுள்ள மாநிலங்களின் நிலப்பரப்புகள், எல்லைகள் அல்லது பெயர்களை மாற்றியமைத்தல்

அரசமைப்புச் சட்ட அவையில், ஏறக்குறைய ஓராண்டு இடைவெளியில், முற்றிலும் மாறுபட்ட அரசியல் பின்னணிகளில் நடைபெற்ற இரண்டு முக்கிய விவாதங்கள் வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இன் வடிவத்தைத் தீர்மானித்தன. முதலாவது சுற்று, சுதேச அரசுகளின் ஒருங்கிணைப்பு நடந்து கொண்டிருந்தபோது நடந்த விவாதம்; இரண்டாவது சுற்று, சுதேச அரசுகளின் இணைப்பு நிறைவடைந்த பிறகு நடந்த விவாதம்.

1. *முதலாவது சுற்று விவாதம் (நவம்பர் 17–18, 1948): கருத்தறிதலும் இசைவை உருவாக்குதலும்*

முன்னாள் பிரிட்டிஷ் மாகாணங்களைப் பொறுத்தவரை, அவற்றின் நிலப்பகுதியை, எல்லையை அல்லது பெயரை மாற்றுவதற்கு முன் சட்டமன்றத்தின் கருத்துகளை நாடாளுமன்றம் அறிந்தால் போதுமானது என்ற முறையை, வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 3,

அறிமுகப்படுத்தியது. அதேவேளையில், சுதேச அரசுகளைப் பொறுத்தவரை, அவற்றின் இசைவைப் பெறுவது கட்டாயமானதாக இருந்தது. இந்தச் சீரற்ற தன்மை தற்காலிகமானது, அதே வேளையில் தேவையான ஒரு சமரச ஏற்பாடு என்று பி.ஆர். அம்பேத்கர் வலியுறுத்தினார். மாகாணங்களின் அரசமைப்புச் சட்ட நிலை முழுமை பெற்றிருந்தன. இதற்கு மாறாக, சுதேச அரசுகள் இணைப்பு ஆவணங்கள், இணைப்பு ஒப்பந்தங்கள் (Instruments of Accession and Merger Agreements) ஆகியவற்றின் வழியாக ஒன்றியத்தில் இணைந்தன மற்றும் இணைப்பு நிறைவடையும் வரை, அவற்றின் ஒப்பந்த விதிமுறைகளுக்கு மதிப்பளிக்க வேண்டியிருந்தது.

ஆனால், மத்தியில் அதிகாரத்தைக் குவிக்கும் போக்கையும் இந்தச் சமமற்ற அணுகுமுறையையும் உறுப்பினர்கள் எதிர்த்தனர்.

சியாமனந்தன் சஹாயா, மக்களாட்சிமுறை அடிப்படையில் மாகாணங்கள், சுதேச அரசுகள் முதலான அனைத்து மாநிலங்களுக்கும் ஒரு சீரான இசைவு முறையைக் கோரினார்.

கே.டி. ஷா அனைத்து முன்மொழிவுகளும் மாநிலச் சட்டமன்றங்களிலிருந்து தொடங்க வேண்டும் என்றும், சில முன்மொழிவுகளுக்கு பொதுவாக்கெடுப்புகளை நடத்தவேண்டும் என்றும் கேட்டார். மாநில எல்லைகளைத் தன்னிச்சையாக மாற்ற ஒன்றியத்தை அனுமதிப்பது, கூட்டாட்சி முறைக்கு எதிரானது, மக்களாட்சி முறைக்கு எதிரானது என்று எச்சரிக்கை விடுத்தார்.

கே.சந்தானம், மாநிலத்தின் இசைவைக் கோருவது சென்னை போன்ற கலவையான மாகாணங்களில் "பெரும்பான்மையின் கொடுங்கோன்மையை" நிலைநிறுத்தும் என்று வாதிட்டார். தமிழர் பெரும்பான்மையாக உள்ள சென்னை மாகாண சட்டமன்றம் ஆந்திராவைப் பிரிப்பதற்கு ஒருபோதும் ஒப்புக்கொள்ளாது; எனவே, மாநிலத்திற்குள் மற்றொரு மாநிலத்தைக் கோரும் சிறுபான்மையினர், நியாயமான மாநில உரிமைக் கோரிக்கைகளை அடைய, ஒன்றிய அரசின் தலையீடு அவசியமான தேவை என்று எடுத்துரைத்தார்.

ஹிருதய நாத் குன்ஸ்ரூ, அரசாட்சி உரிமை சுதேச அரசுகளுக்குச் சிறப்பு மறுப்பதிகாரம் (veto) வழங்குவதை எதிர்த்து அரசமைப்புச் சட்டப் பிரிவுகளில் சுதேச அரசுகளுக்கும் மாகாணங்களும் குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை என்று குறிப்பிட்டார்.

ரோஹினி குமார் சவுத்ரி, சுதேச அரசுகளை இந்தியாவுடன் இணைத்துக் கொள்வதற்காக, அவற்றை நடத்தும் முறை குறித்து எச்சரிக்கை விடுத்தார். டல்ஹவுசி பிரபு செய்த காலனிய

ஆக்கிரமிப்புகளைப் போல எல்லைகளை மாற்றியமைக்கும் எந்தவொரு மைய அதிகாரத்திற்கும் எதிர்ப்பு தெரிவித்தார்.

ஷிபன் லால் சக்ஸேனா, மாகாணங்களுக்கும் சுதேச அரசுகளுக்கும் இடையே வேறுபாடு காட்டத் தேவையில்லை என்றார்.

தாக்குர் தாஸ் பார்கவா, எல்லை மாற்றங்களை நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றம் வழியாக மட்டுமே அல்லாது, பொதுவாக்கெடுப்புகள் வழியாக மக்களே முடிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இவ்வாறான விமர்சனங்கள் எழுந்தபோதிலும், மாகாணங்களிடம் கருத்தறிதல், முன்னாள் சுதேச அரசுகளிடம் இசைவு பெறுதல் என்கிற அம்பேத்கருடைய கலவையான முறையையே 1948ல் அரசமைப்புச் சட்ட அவை தக்கவைத்துக்கொண்டது.

2. இரண்டாம் சுற்று விவாதம் (அக்டோபர் 12–13, 1949): ஒருங்கிணைப்பு நிறைவு பெற்றது, சமமான முறை நிலைநிறுத்தப்பட்டது.

அக்டோபர் 12, 1949 அன்று, அரசமைப்புச் சட்ட அவையில் சர்தார் வல்லபாய் படேல் வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். சுதேச அரசுகளை இணைக்கும் பணி முழுமையடைந்துவிட்டது என்றும் "இந்தியா இப்போது இந்திய மக்களின் உண்மையானதொரு ஒன்றியம்"–ஆகத் திகழ்கிறது என்றும் அவர் கூறினார். இதனால், சுதேச அரசுகளை மாறுபட்ட வகையில் நடத்துவது குறித்த விவாதம் பயனற்றதாகிவிட்டது.

அதன்படி, அக்டோபர் 13, 1949 அன்று, அரசமைப்புச் சட்ட அவை வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 3ஐ மீண்டும் விவாதிக்கத் தொடங்கியது. வரைவுக் குழுவின் சார்பில் பேசிய டி.டி. கிருஷ்ணமாச்சாரி, முக்கியத் திருத்தத்தைக் கொண்டுவந்தார். இத்திருத்தம், முன்னாள் சுதேச அரசுகளிடம் இசைவு பெற வேண்டிய தேவையை நீக்கி, தொடர்புடைய மாநிலச் சட்டமன்றங்களின் கருத்துகளை, குடியரசுத் தலைவர் அறிந்துகொள்வது போதுமானது என்று இந்தப் பிரிவை ஒருசீரான விதியாக அமைத்தது. திருத்தப்பட்ட அரசமைப்புச் சட்டப் பிரிவு 3 முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 2க்கும் 3க்கும் செயல்வடிவம் கொடுத்த அரசமைப்புச் சட்டப் பிரிவு 4

நவம்பர் 18,1948 அன்று, அரசமைப்புச் சட்ட அவை வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 4ஐ ஆராய்ந்தது. மாநில எல்லைகளை மாற்ற அரசமைப்புச்

சட்டப் பிரிவுகள் 2, 3 ஆகியவற்றின் கீழ் நாடாளுமன்றம் அதிகாரம் பெற்றிருப்பதால், முதலாவது அட்டவணையையும், நான்காவது அட்டவணையையும் திருத்துவதற்கான அதிகாரத்தையும் நாடாளுமன்றம் பெற்றிருக்க வேண்டும். எனவே, அதே சட்டத்தில் "துணை விளைவு, இடைக்கால விளைவு, தொடர் விளைவு சார்ந்த ஏற்பாடுகளையும்" சேர்த்து, நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளித்து, அத்தகைய சட்டம் அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இன் கீழாக "இந்த அரசமைப்புச் சட்டத்தின் திருத்தமாகக் கருதப்படாது" என்று வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 4 தெளிவுபடுத்தியது.

இதுபற்றி பல உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர். ஷிபன் லால் சக்ஸேனா, மாநில எல்லைகளை மாற்றுவது "மிகவும் முக்கியமான விளைவுகளை" ஏற்படுத்தும் அதிகாரப்பொருண்மை என்றும், எல்லை மாற்றத்தை "சாதாரணப் பெரும்பான்மை" வழியாக செய்யக் கூடாது அல்லது சாதாரணச் சட்டமாகக் கருதப்படக்கூடாது என்றும் வாதிட்டார். மேலும், ஆட்சிநில மறுசீரமைப்பு என்பது அரசமைப்புச் சட்டத் திருத்த விதிகளின் வரம்பிற்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும் கூட, இந்த ஏற்பாடு அரசமைப்புச் சட்டத்தின் ஒரு நிரந்தரப் பகுதியாக இருந்துவிடக்கூடாது என்றும் அவர் கூறினார். இருந்தபோதிலும், வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 4 அறிமுகப்படுத்தப்பட்டவாறே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1950க்குப் பிறகு நடந்த மாற்றம் என்ன? மாற்றம் நடந்தது ஏன்?

1950–ஆம் ஆண்டு முதல், அரசமைப்புச் சட்ட பகுதி I அரிதாகவே திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஒவ்வொரு மாற்றமும் முக்கியமான கட்டமைப்பு விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 1: காலனிய வகைப்பாட்டிலிருந்து சீரான கூட்டாட்சிமுறை அமைப்புக்கு நடந்த மாற்றம்

1950–இன் அரசமைப்புச் சட்டப் பகுதி A மாநிலங்கள் (முன்னாளில் மாகாணங்களாக இருந்தவை), பகுதி B மாநிலங்கள் (முன்னாள் சுதேச அரசுகள் அல்லது அவற்றின் ஒன்றிணைப்புகள்), பகுதி C மற்றும் பகுதி D நிலப் பகுதிகள் (முன்னாள் மையத்திலிருந்து நிர்வகிக்கப்படும் பகுதிகள்) என்கிற வகையில், அரசமைப்புச் சட்ட அலகுகளின் காலனிய கால படிநிலையைப் பேணியது. *ஏழாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் (1956)* இந்த காலனிய வகைப்பாட்டை ஒழித்தது. இத்திருத்தம், மாநிலங்கள் மறுசீரமைப்பு ஆணையத்தின் பரிந்துரைகளைச் செயல்படுத்தி, அரசமைப்புச் சட்டப் பிரிவு ஒன்றையும் முதலாவது

அட்டவணையையும் திருத்தி, "மாநிலங்கள்", "ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகள் (யூனியன் பிரதேசங்கள்)" மட்டுமே அடங்கிய சீரான இரண்டு–அடுக்கு கூட்டாட்சி அமைப்பை நிறுவியது; அரசமைப்புச் சட்ட அடிப்படையில் அனைத்து மாநிலங்களையும் சமமானவையாக மாற்றியது.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 2: சிக்கிமை இணைத்தல்

அரசமைப்புச் சட்டப் பிரிவு 2 எந்த மாற்றமும் இல்லாமல் உள்ளது. ஆனால் சிக்கிமின் ஒருங்கிணைப்புக்கு தற்காலிக அரசமைப்புச் சட்ட புதுமை தேவைப்பட்டது. *35வது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (1974), அரசமைப்புச் சட்டப் பிரிவு 2Aஐ செருகி, இணைப்பிற்கான விதிமுறைகளை விவரிக்கும் பத்தாவது அட்டவணையைச் சேர்த்து, சிக்கிமிற்கு "இணை மாநிலம் (Associate State)" என்ற தகுதியை வழங்கியது. இந்த ஏற்பாடு, சிக்கிமின் நிலையை உள் தன்னாட்சி பெற்ற பாதுகாக்கப்பட்ட இந்தியப் பகுதி என்பதைக் குறித்தது. இந்த ஏற்பாடு குறுகிய காலமே இருந்தது. அரசியல் மாற்றம் ஏற்பட்டு பொதுவாக்கெடுப்புக்குப் பிறகு, *36வது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (1975) அரசமைப்புச் சட்டப் பிரிவு 2Aயையும் பத்தாவது அட்டவணையையும் நீக்கியது; அரசமைப்புச் சட்டப் பிரிவு 2ன் கீழ் சிக்கிமை முழுமையான மாநிலமாக இணைத்தது; முதலாவது அட்டவணையைத் திருத்தியது; சிக்கிமின் சிறப்புநிலையைப் பாதுகாக்க அரசமைப்புச் சட்டப் பிரிவு 371Fஐ செருகியது.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 3: மூல உரையில் மிக முக்கியமான திருத்தம்

ஐந்தாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் (1955), குடியரசுத் தலைவர் மறுசீரமைப்புச் சட்டவரைவைத் தொடர்புடைய மாநிலச் சட்டமன்றத்தின் "கருத்துகளை" அறிவதற்காக, அம்மன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்று கூறினாலும், அதற்கான கால வரம்பை விதிக்கவில்லை என்ற நடைமுறை இடைவெளியைச் சரிசெய்தது. இந்தத் திருத்தம், சட்டமன்றம் கருத்துகளை வெளிப்படுத்த, கால வரம்பைப் பரிந்துரைக்க, குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளித்தது. இதன் வழியாக சட்டமன்றக் கருத்து கட்டுப்படுத்தாததாக இருந்தபோதும், கருத்து தெரிவிக்காது இருப்பதன் வாயிலாக ஏற்படும் தாமதத்தைத் தடுத்தது.

18வது அரசமைப்புச் சட்டத் திருத்தம் (1966) அரசமைப்புச் சட்டப் பிரிவு 3, ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுக்கு (யூனியன்

பிரதேசங்களுக்கு) உள்ள பொருத்தப்பாடு குறித்து தெளிவுபடுத்தியது. அத்திருத்தம் இரண்டு விளக்கங்களைச் சேர்த்தது. அவற்றில் முதலாவது விளக்கம், இச்சட்டப்பிரிவின் வரம்புரையில் (proviso) குறிப்பிடப்பட்டுள்ள இடங்களைத் தவிர, மற்ற இடங்களில் 'மாநிலம்' என்ற சொல் ஒன்றிய ஆட்சிநிலப் பகுதியையும் உள்ளடக்கும் என வரையறுத்தது. இரண்டாவது விளக்கம், மாநிலம் – ஒன்றிய ஆட்சிநிலப் பகுதி ஆகிய இரண்டு பிரிவுகளிலிருந்தும் எடுக்கப்பட்ட நிலப் பகுதிகளை ஒன்றிணைப்பதன் வழியாகவே அல்லது பிரிப்பதன் வாயிலாகவே புதிய மாநிலங்கள் அல்லது ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளை உருவாக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உண்டு என்பதை உறுதிப்படுத்தியது. 1966–இல் பஞ்சாப் மாநில மறுசீரமைப்பு, ஹரியானா மாநில உருவாக்கம் மற்றும் சண்டிகர் ஒன்றிய ஆட்சிநிலப் பகுதியாக நிறுவப்படுவதற்கும் இந்தத் திருத்தமே அடித்தளமாக அமைந்தது.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 4: மூல உரை மாறாமல் உள்ளது, நீதித்துறை வரம்பிட்டு உள்ளது

அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 2 மற்றும் 3–இன் கீழ் இயற்றப்படும் சட்டங்கள், முதலாவதும் நான்காவதும் அட்டவணைகளுக்கான திருத்தங்கள் உள்ளிட்டு "துணை விளைவு, இடைக்கால விளைவு, தொடர் விளைவு சார்ந்த (supplemental, incidental and consequential)" ஏற்பாடுகளைச் சேர்க்க அனுமதிக்கிறது. அத்துடன் அத்தகைய சட்டங்கள் அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இன் கீழ் அரசமைப்புச் சட்டத் திருத்தமாகக் கருதப்படாது என்றும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 4 அறிவிக்கிறது. இந்த அரசமைப்புச் சட்டப் பிரிவு இதுவரை திருத்தப்பட்டதே இல்லை.

எவ்வாறாயினும், குடியரசுத் தலைவர் கருத்து கேட்பு *பேருபாரி ஒன்றியம்* (1960) [6] [*Berubari Union* (1960)] வழக்கில் உச்சநீதிமன்றம், அரசமைப்புச் சட்டப் பிரிவு 3 உள்நாட்டு மறுசீரமைப்புகளை மட்டுமே அனுமதிக்கிறது என்று தீர்ப்பளித்தது. வெளிநாட்டிற்கு ஆட்சிநிலப் பகுதியை விட்டுக் கொடுப்பது என்பது, அரசமைப்புச் சட்டப் பிரிவு 1–இன் கீழ் உள்ள "இந்தியாவின் ஆட்சிநிலப் பகுதி" எல்லையை மாற்றம் செய்கிறது. எனவே, இதனைச் செய்வதற்கு அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இன் கீழ் முறையான திருத்தம் தேவைப்படுகிறது. பின்னர், இதன் பொருட்டு நாடாளுமன்றம் *ஒன்பதாவது அரசமைப்புச்*

[6] AIR 1960 SC 845.

சட்டத் திருத்தம் (1960) இயற்றியது. இந்தத் தீர்ப்பு, உள்நாட்டு மறுசீரமைப்பை, வெளிப்புற எல்லை மாற்றத்திலிருந்து கூர்மையாக வேறுபடுத்திக் காட்டியது.

III. கூட்டாட்சி நடைமுறை குறித்த ஒப்பீடு: விதிவிலக்காக உள்ள இந்தியா

முக்கியமான கூட்டாட்சி நாடுகள் அனைத்திலும், அரசமைப்புச் சட்டத்தின் அங்கமாக உள்ள மாநிலங்களின் ஆட்சிநில ஒருமைப்பாடு, இந்தியாவில் இருப்பதைவிட மிகவும் பாதுகாப்பானதாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கா–அரசமைப்புச் சட்டப் பிரிவு IV, பிரிவு 3: காங்கிரசு புதிய மாநிலங்களை இணைக்கலாம். கூட்டாட்சி அமைப்பின் ஆட்சிநிலப் பகுதிகளுக்கான சட்டங்களை இயற்றலாம். ஆனால், சம்பந்தப்பட்ட மாநில சட்டமன்றங்கள் மற்றும் காங்கிரசு ஆகியவற்றின் இசைவு இல்லாமல், ஏற்கனவே உள்ள ஒரு மாநிலத்தின் அதிகார வரம்பிற்குள் ஒரு புதிய மாநிலத்தை உருவாக்கவே முடியாது. அதேபோல இரண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட மாநிலங்களையோ –அல்லது அவற்றின் பகுதிகளையோ– இணைத்து ஒரு புதிய மாநிலத்தை உருவாக்கவே முடியாது. ஒருமுறை கூட்டாட்சியில் இணைக்கப்பட்ட பிறகு, மாநில எல்லைகளை அதன் இசைவு இல்லாமல் மாற்ற முடியாது. மேலும் மாநிலத்தை அழிக்கவோ அல்லது ஒன்றிய ஆட்சிநிலப் பகுதியாகத் தரமிறக்கவோ எந்தவொரு வழிமுறையும் இல்லை.

கனடா–அரசமைப்புச் சட்டம், 1982, பிரிவு 43: ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களைப் பாதிக்கும் எல்லை மாற்றங்கள் பிரிவு 43–இன் கீழ் அரசமைப்புச் சட்டத் திருத்தம் வழியாக செய்யப்பட வேண்டும். இதற்கு நாடாளுமன்றத்தின், தொடர்புடைய ஒவ்வொரு மாகாணச் சட்டமன்றத்தின் தீர்மானங்கள் தேவை. மாகாணங்களை ஒழிக்கவோ அல்லது தரமிறக்கவோ முடியாது. மாகணங்களின் நிலையை, அரசமைப்புச் சட்டத் திருத்த நடைமுறை பாதுகாக்கின்றது.

ஆஸ்திரேலியா – காமன்வெல்த் அரசமைப்பு, பிரிவுகள் 121, 123, 124: காமன்வெல்த் நாடாளுமன்றம் புதிய மாநிலங்களை இணைக்கலாம் அல்லது நிறுவலாம். ஆனால் ஒரு மாநிலத்தின் எல்லைகளில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டுமானால், மாநில நாடாளுமன்றத்தில் ஒப்புதல், பொதுவாக்கெடுப்பில் அந்த மாநிலத்தின் வாக்காளர்களில் பெரும்பான்மை ஆகிய இரண்டின் ஒப்புதலையும் பெற்றிருக்க

வேண்டும். மாநிலத்தை நீக்கவோ அல்லது ஒன்றிய ஆட்சிநிலப் பகுதியாக மாற்றவோ அரசமைப்புச் சட்டம் எந்த அதிகாரத்தையும் வழங்கவில்லை.

ஜெர்மனி–அடிப்படைச் சட்டம், அரசமைப்புச் சட்டப் பிரிவு 29: மாநிலங்களின் (*Länder*) நிலப்பகுதி மறுசீரமைப்பு கூட்டாட்சிச் சட்டம் வழியாக செய்யப்படுகிறது. பொதுவான வழிமுறையாக, தொடர்புடைய பகுதிகளில் கட்டாயமான பொதுவாக்கெடுப்புகள் வழியாக நிலப்பகுதி மறுசீரமைப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையிலிருந்து ஒரு சிறிய விதிவிலக்கு உள்ளது. 50,000க்கும் குறைவான மக்கள்தொகையைக் கொண்ட பகுதிகளில் செய்யப்படும் சிறிய எல்லை மாற்றங்களுக்கு இவ்விதிவிலக்கு பொருந்தும். இத்தகைய மாற்றங்களை, சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான ஒப்பந்தத்தின் வழியாகவோ அல்லது நாடாளுமன்ற மாநிலங்களவையின் இசைவுடன் இயற்றப்படும் கூட்டாட்சி சட்டத்தின் வாயிலாகவோ மேற்கொள்ளலாம். அரசமைப்புச் சட்டப் பிரிவு 79(3)–இல் உள்ள "மாற்ற இயலாத பிரிவு (Eternity Clause)" ஜெர்மனியின் கூட்டாட்சித் தன்மையையும், சட்டம் இயற்றுவதில் லேண்டர்களின் பங்களிப்பையும் அரசமைப்புச் சட்ட அளவில் பாதுகாக்கிறது. எனவே கூட்டாட்சி, இந்த அரசமைப்புச் சட்ட அளவில் பரிந்துரைக்கப்பட்ட, மக்களாட்சி அடிப்படையிலான நடைமுறைகளுக்கு வெளியே மாநிலங்களைத் தன்னிச்சையாக அகற்றவோ அல்லது மறுவடிவமைக்கவோ முடியாது.

பிரேசில்–1988 அரசமைப்புச் சட்டம் – அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 18(3) மற்றும் 48(6): மாநிலங்களை உருவாக்குதல், இணைத்தல், ஒன்றிணைத்தல் அல்லது பிரித்தல் ஆகியவற்றுக்கு நேரடியாகத் தொடர்புடைய மக்களின் பொதுவாக்கெடுப்பு தேவையாக உள்ளது. அதைத் தொடர்ந்து, சம்மந்தப்பட்ட மாநிலச் சட்டமன்றங்களின் கருத்துகளை கேட்ட பின்னர், தேசிய காங்கிரசின் இணை சட்டமொன்று இயற்றப்பட வேண்டும். தொடர்புடைய மக்களின் இசைவு இன்றியமையாதது; அது இல்லாமல் கூட்டாட்சி அமைப்பால் மாநிலங்களைத் தன்னிச்சையாக மாற்றவோ அல்லது தரமிறக்கவோ முடியாது.

இந்தியாவின் அரசமைப்புச் சட்ட வடிவமைப்பில் இல்லாத ஒரு முக்கிய வேறுபாட்டை இந்த ஒப்பீட்டு ஆய்வு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது: பிற கூட்டாட்சி நாடுகளில், புதிய மாநிலங்களை உருவாக்கவோ அல்லது எல்லைகளில் சிறிய மாற்றங்களையோ செய்யலாம். ஆனால், ஏற்கனவே உள்ள ஒரு மாநிலத்திற்கு ஒருமுறை அரசமைப்புச் சட்ட தகுதிநிலை வழங்கப்பட்டுவிட்டால், அது மீறத்தகாததாகக் கருதப்படுகிறது. அத்தகைய

மாநிலத்தின் இசைவைப் பெறாமல் – மேலும் பெரும்பாலான நேரங்களில் அம்மாநில மக்களின் நேரடி ஏற்பிசைவையும் பெற்றாலன்றி – அதன் அரசமைப்புச் சட்ட தகுதிநிலையை மாற்ற இயலாது. ஒரு மாநிலத்தை, அதைவிடக் குறைந்த நிலைக்குத் தரம் குறைப்பது என்பது வேறெங்குமே காணப்படாத ஒன்றாகும்.

IV. கடந்த கால ஆணையங்களின் கருத்துகள்

ஒன்றிய–மாநில உறவுகளை ஆய்வு செய்த ராஜமன்னார் குழு (1969–71), சர்க்காரியா ஆணையம் (1983–88), பூஞ்சி ஆணையம் (2007–10) ஆகிய மூன்று முக்கியமான அமைப்புகள் அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 3, 4 குறித்து குறிப்பிடத்தக்க அளவில் வேறுபட்ட நிலைப்பாடுகளை எடுத்தன.

ராஜமன்னார் குழு (Rajamannar Committee)

இக்குழு 3வது, 4வது அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் மிகையான அதிகாரக் குவிப்பைக் கொண்டிருப்பவையாகவும், கூட்டாட்சி முறை கொள்கைகளுக்கு அடிப்படையில் முரணானவையாகவும் உள்ளதாக கருதியது. நாடாளுமன்றம் புதிய மாநிலங்களை உருவாக்குவதன் வழியாகவோ அல்லது ஏற்கனவே உள்ள மாநிலங்களின் எல்லைகளை மாற்றுவதன் வாயிலாகவோ நாட்டின் வரைபடத்தைத் தன்னிச்சையாக மாற்றியமைக்கும் அதிகாரம் கொண்டிருக்கக்கூடாது என்று வாதிட்டது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, கனடா, ஜெர்மனி மற்றும் தென் ஆப்பிரிக்கா போன்ற கூட்டாட்சி நாடுகளில் உள்ள ஒப்பீட்டு நடைமுறைகளைப் பயன்படுத்தி, அரசமைப்புச் சட்டப் பிரிவு 3ன் கீழ் எந்தவொரு சட்டவரைவிற்கும் பாதிக்கப்பட்ட மாநிலச் சட்டமன்றத்தின் இசைவைக் கட்டாயமாக்க வேண்டும் என்பதே இக்குழுவின் முதன்மைப் பரிந்துரை ஆகும்.

மாற்றுப் பாதுகாப்பு வழிமுறைகளாக, இக்குழு சுதந்திரமான நீதித்துறை தீர்ப்பாயத்தின் கட்டுப்படுத்தும் தீர்ப்பு அல்லது தொடர்புடைய பகுதியில் பொதுவாக்கெடுப்பு ஆகியவற்றைச் பரிந்துரைத்தது. மாநிலங்களைத் தன்னிச்சையாகத் தரமிறக்குதல் அல்லது பிரித்தல் ஆகியவற்றின் சாத்தியக்கூறுகளை முன்னறிந்து தொலைநோக்கோடு, இக்குழு பின்வருமாறு எச்சரித்தது:

"மொழிவழி மாநிலங்கள் ஒட்டுமொத்த நாட்டின் விருப்பார்வங்களை நிறைவு செய்வதற்காகவும், அரசின் உறுப்புகள் மக்களாட்சியின் பரந்த அடிப்படையில் செயல்பட வசதியளிப்பதற்காகவும் உருவாக்கப்பட்டன. [மாநில மறுசீரமைப்புச் சட்டம் 1956ன் கீழ்] தொடர்புடைய மக்களின் உணர்வுகளுக்கு ஏற்ப பல்வேறு மாநிலங்களின் எல்லைகள் இப்போது மீண்டும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதால், மையத்தின் தேவையற்ற தலையீட்டிலிருந்து பல்வேறு மாநிலங்களின் ஆட்சிநில ஒருமைப்பாட்டைக் காக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பது இயற்கையானது. கூட்டாட்சி முறையில் நம்பிக்கை இல்லாததும், நாடு முழுமைக்கும் ஒற்றையாட்சி அரசாங்கத்தை நிறுவுவதற்கும் உறுதிபூண்ட ஒரு கட்சி, மையத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றும் சூழ்நிலையைக் கருதிப் பார்ப்பது கடினமான ஒன்றல்ல. இது நடந்தால், அரசமைப்புச் சட்டத்தில் மாநிலங்களின் மொழிவழிப் பிரிவைத் தவிர்ப்பதிலிருந்தோ அல்லது எந்தவொரு குறிப்பிட்ட மாநிலத்தையும் தேர்ந்தெடுத்து அண்டை மாநிலத்தில் இணைப்பதிலிருந்தோ அல்லது அதை மையத்தால் நிர்வகிக்கப்படும் பகுதியாக மாற்றுவதிலிருந்தோ மையத்தைத் தடுப்பதற்கு எதுவும் இல்லை. இவை அனைத்தும் சாதாரண பெரும்பான்மை வழியாக நிறைவேற்றப்பட்ட சாதாரண நாடாளுமன்றச் சட்டம் வழியாகவே அடைய முடியலாம். அப்போது மாநிலம் கையறு நிலையில் இருக்கும்."

சர்க்காரியா ஆணையம் (Sarkaria Commission)

இந்த ஆணையம் 3வது, 4வது அரசமைப்புச் சட்டப் பிரிவுகளை, வேறுபாடுகளைக் கொண்ட பெரிய கூட்டாட்சி நாட்டில், நெகிழ்வுத்தன்மையின் கருவிகளாகவும், அரசமைப்புச் சட்டச் சிற்பிகள் உணர்வுபூர்வமாக தேர்ந்து இயற்றியவையாகக் கருதியது. இந்த ஏற்பாடுகள் ஆந்திராவின் (1953) இணக்கமான உருவாக்கம், 1956–ஆம் ஆண்டின் பெருமளவிலான மொழிவழி மறுசீரமைப்பு, அதனைத் தொடர்ந்த பல சட்டங்கள் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கு உதவியுள்ளன என்று குறிப்பிட்டது. இதன் விளைவாக, இந்த ஆணையம் கட்டாயமான மாநில இசைவுக்கான கோரிக்கைகள், அரசமைப்புச் சட்டப் பிரிவு 3ஐ நீக்குதல் அல்லது மொழிவழி எல்லைகளுக்கு இறுதித்தன்மை வழங்குதல் ஆகியவற்றை நிராகரித்தது. இசைவு அளிக்கும் முறை, மறுசீரமைப்பை "சாத்தியமற்றதாக

மாற்றாவிட்டாலும், மிகவும் கடினமானதாக மாற்றும்" என்று எச்சரித்தது. நாட்டின் பல பகுதியில் எல்லைச் சிக்கல்கள் தீர்க்கப்படவில்லை என்பதால், அரசமைப்புச் சட்ட நெகிழ்வுத்தன்மையைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று இந்த ஆணையம் குறிப்பிட்டது. அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 3, 4 மாற்றமின்றித் தக்கவைக்கப்பட வேண்டும் என்றும், மாநில மறுப்பு அதிகாரம் எதுவும் அறிமுகப்படுத்தப்படக் கூடாது என்றும், சர்ச்சைகள் இப்போதுள்ள வழிமுறைகள் வழியாக தொடர்ந்து தீர்க்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

இருப்பினும், அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 3 மற்றும் 4ஐ சர்க்காரியா ஆணையம் நியாயப்படுத்திய விதம், கூட்டாட்சித்துவ தன்னாட்சி குறித்த கொள்கைச் சார்ந்த சிந்தனையின் அடிப்படையில் அமையாமல், நிர்வாக வசதியை மட்டுமே வெளிப்படையான காரணமாகக் கொண்டிருந்தது என்பதை இங்கே வலியுறுத்திக் கூறுவது அவசியமாகும். இந்த ஆணையத்தின் வாதம், அரசமைப்புச் சட்ட அளவிலான நெருக்கடிமிகுந்த காலங்களிலும் செயல்படக்கூடிய உறுதியான பாதுகாப்பு வழிமுறைகளை உருவாக்குவதற்குப் பதிலாக, ஒன்றிய அரசு எப்போதும் நல்லெண்ணத்துடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ளும் என்ற நம்பிக்கையையே அடிப்படையாகக் கொண்டிருந்தது.

பூஞ்சி ஆணையம் (Punchhi Commission)

இந்த ஆணையம், இந்திய அரசமைப்புச் சட்டம், இந்தியாவை வலுவான கூட்டாட்சி ஒன்றியமாக உருவாக்கி இருப்பதாலும், அதிகாரம் பல்வேறு வகையில் ஒன்றிய இசைவுக்கு உட்பட்டதாக உள்ளது என்று குறிப்பிட்டது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இல் குறிப்பிட்டுள்ள கருத்தறியும் நடைமுறை, இந்த 'கட்டுப்பாடு மற்றும் சமநிலை' (checks–and–balances) வழிமுறைக்கு ஓர் எடுத்துக்காட்டு என்று கூறியது. மாநில அரசாங்கத்தின் பார்வைகளைப் புறக்கணிப்பது ஓரளவிற்குச் சாத்தியமில்லை என்றும் குறிப்பிட்டது.

V. பரிந்துரைகள்

கேசவானந்த பாரதி எதிர் கேரள மாநிலம் (1973)[7] *[Kesavananda Bharati v. State of Kerala* (1973)] வழக்கு முதற்கொண்டே, *கூட்டாட்சி முறை* அரசமைப்புச் சட்டத்தின் "அடிப்படைக் கட்டமைப்பு" என்பதன்

[7] (1973) 4 SCC 225.

ஒரு பகுதி என்பதை உச்சநீதிமன்றம் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. நாடாளுமன்றம் பெருமளவிலான அரசமைப்புச் சட்டத் திருத்த அதிகாரங்களை கொண்டிருந்தாலும், அது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையாக விளங்கும் நாட்டின் கூட்டாட்சிப் பண்பை அழிக்கும் அளவிற்கு அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்ய முடியாது. ஆயினும்கூட, நாடாளுமன்றம் சாதாரண சட்டம் வழியாக, மாநிலங்களைச் சிதைக்கவோ அல்லது அவற்றில் சிலவற்றை அல்லது கோட்பாட்டு அளவில் அனைத்தையுமே, அவற்றின் இசைவின்றி, தொடர்புடைய மக்களின் நேரடிப் பங்கேற்பு இல்லாமல் ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளாகத் தரமிறக்கவோ முடிந்தால், "மாநிலங்களின் ஒன்றியம்", "கூட்டாட்சி முறை" போன்ற சொற்றொடர்கள் வெற்றுச் சொற்றொடர்களாக மாறும் அபாயம் உள்ளது. மாநிலங்கள், ஒன்றியத்தின் கருணைக்குட்பட்ட, அதிகப்படியாக வளர்ந்த மாவட்டங்களைப் போலத் தோன்றத் தொடங்குகின்றன. இந்நிலை, அடிப்படைக் கட்டமைப்பின் முக்கிய அங்கமாக உள்ள கூட்டாட்சித் தத்துவத்தின் எந்தவொரு அர்த்தமுள்ள புரிதலுடனும் எவ்வகையிலும் இணங்கிப் போகாத ஒன்றாகும்.

அதே நேரத்தில், அரசமைப்புச் சட்ட அவையில் கே. சந்தானம் ஆகியோர் எழுப்பிய கவலைகள் உண்மையானவையாகவே உள்ளன. உறுதிப்பாடான இசைவு முறை வழியாக மாநிலங்களில் வேரூன்றியுள்ள பெரும்பான்மையினர், குறிப்பிட்ட வட்டாரங்களில் குவிந்துள்ள சிறுபான்மையினரின் நியாயமான விருப்பார்வங்களை நிரந்தரமாகத் தடுக்கக் கூடியதாக ஆகலாம். ஆந்திரா, தெலுங்கானா, ஜார்கண்ட், சத்தீஸ்கர், உத்தரகண்ட் ஆகிய மாநிலங்களுக்கான இயக்கங்களின் வரலாறுகள், மாநிலங்களுக்குள் உள்ள சிறுபான்மையினர் வசிக்கும் வட்டாரங்கள் மெய்யான குறைகளையும் தனித்துவமான அடையாளங்களையும் கொண்டிருக்க முடியும் என்பதையும், அவை, அரசமைப்புச் சட்ட ஏற்பையும், இடமளிப்பையும் பெறத் தகுதியானவை என்பதையும் நமக்கு நினைவூட்டுகின்றன.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், பின்வரும் சீர்திருத்தங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

1. அரசமைப்புச் சட்டப் பிரிவு 2, புதிய நிலப்பரப்புகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பதற்கும், அவ்வாறு இணைக்கப்பட்ட நிலப்பரப்புகளிலிருந்து உருவாக்கப்படும் மாநிலங்களுக்கும் மட்டுமே பொருந்தும் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

இப்போது, அரசமைப்புச் சட்டப் பிரிவு 2 நாடாளுமன்றத்திற்கு "புதிய மாநிலங்களை ஒன்றியத்தில் இணைக்கவோ அல்லது நிறுவவோ"

அதிகாரம் அளிக்கிறது. அதேசமயம், அரசமைப்புச் சட்டப் பிரிவு 3(a) நாடாளுமன்றத்திற்கு "புதிய மாநிலத்தை உருவாக்க" அதிகாரம் அளிக்கிறது. 1948 நவம்பர் மாதம் அரசமைப்புச் சட்ட அவையில் நசிருதீன் அகமது சுட்டிக்காட்டியவாறு, இவ்விரு அரசமைப்புச் சட்டப் பிரிவுகளும் தேவையற்ற வகையில் ஒன்றுடன் ஒன்று மேற்பொருந்தி போகிறது: அதாவது, இரண்டு சட்டப்பிரிவுகளுமே புதிய மாநிலங்களை இணைப்பது பற்றியதாகவேத் தோன்றுகின்றன. எனவே, இவ்விரண்டின் அதிகார வரம்புகளும் தெளிவாகவும், கோட்பாட்டு அளவிலும் தனித்தனியாகப் பிரிக்கப்பட வேண்டும்.

முறையான கூட்டாட்சி வடிவமைப்பின்படி:

- அரசமைப்புச் சட்டப் பிரிவு 2, ஒன்றியத்தில் புதிய பகுதியை இணைப்பது, அந்தப் புதிய பகுதிக்காக மாநிலம்/மாநிலங்கள் நிறுவுவதை மட்டுமே கையாள வேண்டும். இது அடிப்படையில் நாட்டின் வெளியுறவுநிலை பற்றிய கேள்வி ஆகும். இது வெளியுறவுக் கொள்கை, உடன்படிக்கை கடமைகள், (சிக்கிம் தொடர்பில் உள்ளதைப் போல) பாதுகாப்பு நோக்குநிலை ஒருங்கிணைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது. *இத்தகைய சூழல்களில், நாடாளுமன்றம் நெகிழ்வுத்தன்மையுடனும் விரைவாகவும் செயல்பட வேண்டியது அவசியம். எனவே, ஒரு சாதாரண நாடாளுமன்றச் சட்டமே இதற்கு மிகவும் விரும்பத்தக்கதாக இருக்கும்.*
- இந்திய ஒன்றியத்திற்குள் ஏற்கனவே உள்ள நிலப்பரப்பைக் கொண்டு புதிய மாநிலங்களை உருவாக்குவதற்கும், மாநிலங்களை மறுசீரமைப்பதற்கும் மட்டுமேயானதாக, அரசமைப்புச் சட்டப் பிரிவு 3 வரையறுக்கப்பட வேண்டும். இது இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்தின் மையமாகவும், மாநிலங்களின் ஆட்சிநில ஒருமைப்பாட்டிற்கு அடிப்படையாகவும் விளங்குவதால், இதற்கு மிகவும் வலிமையான அரசமைப்புப் பாதுகாப்பு வழிமுறைகள் அவசியமாகின்றன.

இம்முறை அமெரிக்கா போன்ற கூட்டாட்சி நாடுகளின் நடைமுறையுடன் ஒத்துப்போகும். அங்கு கூட்டாட்சியின் நிலப் பகுதியோடு புதிய மாநிலங்களை இணைக்க காங்கிரசின் சட்டம் மட்டுமே தேவைப்படுகிறது. ஆனால் ஏற்கனவே உள்ள மாநில எல்லைகளை மாற்றுவது தொடர்புடைய மாநிலங்களின் இசைவைப் பொறுத்தது. மேலும், ஆஸ்திரேலியா போன்ற கூட்டாட்சி நாடுகளும் புதிய

மாநிலங்களை இணைப்பதையும் ஏற்கனவே உள்ள மாநிலங்களின் உள்நாட்டு மறுசீரமைப்பையும் வேறுபடுத்துகின்றன.

பரிந்துரை 1

அரசமைப்புச் சட்டப் பிரிவு 2–இன் தலைப்பை "புதிய பகுதியை ஒன்றியத்தில் இணைத்தல்" என்றும், அதன் உரையை "நாடாளுமன்றம் சட்டத்தின் வழியாக புதிய பகுதியை ஒன்றியத்தில் இணைத்து, அத்தகைய பகுதிக்கு பொருத்தமானதாக நினைக்கும் அத்தகைய விதிமுறைகளின், நிபந்தனைகளின் பேரில் புதிய மாநிலத்தை அல்லது மாநிலங்களை நிறுவலாம்" என்றும் திருத்த வேண்டும்.

2. இந்தியாவில் மேற்கொள்ளப்படும் ஆட்சிநில மறுசீரமைப்பானது அரசமைப்புச் சட்டத் திருத்தம் வழியாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்

இப்போதைய அரசமைப்புச் சட்ட முறையின் கீழ், நாடாளுமன்றம் (i) அரசமைப்புச் சட்டப் பிரிவு 3(a)–இன் கீழ் ஒரு புதிய மாநிலத்தை உருவாக்குதல், (ii) அரசமைப்புச் சட்டப் பிரிவு 3(b)–(d)–இன் கீழ் நிலப்பகுதி, எல்லை மாற்றங்கள், (iii) அரசமைப்புச் சட்டப் பிரிவு3(e)–இன் கீழ் ஒரு மாநிலத்தின் பெயரை மாற்றுதல் ஆகியவற்றுக்கான சட்டங்களை வருகைபுரிந்து வாக்களித்த உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மை வழியாக இயற்றலாம். இது அரசமைப்புச் சட்டப் பிரிவு 100(3)–இன் கீழ் உள்ள குறைந்தபட்ச வருகை அளவுமுறைக்கு மட்டுமே உட்பட்டது. இது மாநிலங்களை உருவாக்கவோ, பிரிக்கவோ, இணைக்கவோ, அல்லது வேறுவிதமாக மறுவடிவமைக்கவோ கூடிய முடிவுகளுக்கு விதிவிலக்கான குறைந்த அளவு வரம்பு ஆகும். இந்த முடிவுகள் இந்தியக் கூட்டாட்சி அமைப்பின் மையத்தைத் தாக்கும் முடிவுகள் ஆகும்.

தற்போதைய நிலையில் உள்ள ஒரேயொரு நடைமுறைப் பாதுகாப்பு, அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இல் உள்ள வரம்புரை மட்டுமே ஆகும். இது, பாதிக்கப்பட்ட மாநிலச் சட்டமன்றம் "அதன் கருத்துகளைத் வெளிப்படுத்துவதற்காக" மட்டுமே குடியரசுத் தலைவர் அந்த சட்டவரைவை அங்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இந்தக் கருத்துகள் முற்றிலும் கட்டுப்படுத்தாதவை. மேலும் பதிலளிப்பதற்கான கால அளவென்பது முழுமையாகக் குடியரசுத் தலைவரின் விருப்பத்திற்கு உட்பட்டது. இந்த முறை கணிசமான அளவில் வலுப்படுத்தப்பட வேண்டும். இந்த அறிக்கையின் இயல் 2–இல் உள்ள பரிந்துரை 6–இன் வழியாக முன்மொழியப்பட்டவாறு,

அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இன் கீழ் ஆட்சிநில மறுசீரமைப்பு, வெறுமனே சாதாரண பெரும்பான்மை வழியாக நிறைவேற்றப்பட்ட சாதாரண சட்டமாக அல்லாமல், தொடர்புடைய மாநிலத்தின் இசைவு தேவைப்படும் *மாநிலத்திற்கான தனியான அரசமைப்புச் சட்டத் திருத்தமாக (State–specific constitutional amendment)* செயல்படுத்தப்பட வேண்டும்.

இதற்கு இணங்க, அரசமைப்புச் சட்டப் பிரிவு 4–இன் தலைப்பும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 4(1)–இன் உரையும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 3க்கான அனைத்து குறிப்புகளையும் நீக்கும்படி திருத்தப்பட வேண்டும். அதனால் அரசமைப்புச் சட்டப் பிரிவு 2–இன் கீழ் உள்ள சட்டங்கள் மட்டுமே, அரசமைப்புச் சட்டப் பிரிவு 4(2)–இன், கீழ் அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இன்படியான அரசமைப்புச் சட்டத் திருத்தங்களாகக் கருதப்படுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன. அரசமைப்புச் சட்டப் பிரிவு 4–இன் தலைப்பில் உள்ள 'அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 2 மற்றும் 3' என்பதற்குப் பதிலாக 'அரசமைப்புச் சட்டப் பிரிவு 2' என மாற்றியமைக்கப்பட வேண்டும். அதற்கேற்ப, அரசமைப்புச் சட்டப் பிரிவு 4(1)–இல் உள்ள 'அல்லது அரசமைப்புச் சட்டப் பிரிவு 3' எனும் சொற்றொடர் நீக்கப்பட வேண்டும்.

பரிந்துரை 2

அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இன் கீழ் ஆட்சிநில மறுசீரமைப்பு, இயல் 2ன் பரிந்துரை 6க்கு இணங்க, பாதிக்கப்பட்ட மாநிலங்களின் இசைவு தேவைப்படும் மாநிலத்திற்கான தனியான அரசமைப்புச் சட்டத் திருத்தமாக செயல்பட வேண்டும். அரசமைப்புச் சட்டப் பிரிவு 4ன் தலைப்பும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 4(1)–இன் வாசகமும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 3க்கான குறிப்புகளை நீக்குவதற்காகத் திருத்தப்பட வேண்டும். அரசமைப்புச் சட்டப் பிரிவு 2–இன் சட்டங்கள் மட்டுமே அரசமைப்புச் சட்டப் பிரிவு 4(2)–இன் கீழ் அரசமைப்புச் சட்டப் பிரிவு 368லிருந்து விலக்கு பெறுவதை உறுதிசெய்ய வேண்டும்.

3. அரசமைப்புச் சட்டப் பிரிவு 3(a)–இன் கீழ் புதிய மாநிலங்களை உருவாக்குவதற்கு விதிவிலக்கான வகையில் பொதுவாக்கெடுப்பு பாதுகாப்பு முறையுடன் மாநிலத்தின் இசைவு பெறுதலைக் கட்டாயமாக்குதல்

இப்போது இந்தியா, வலுவான ஆட்சிநில அடையாளங்களைக் கொண்டிருக்கின்ற கொண்டுள்ள மொழிவழி மாநிலங்களைக் கொண்ட

வளர்ச்சிப்பெற்ற கூட்டாட்சியாக விளங்குவதால், (இரண்டாக, மூன்றாகப் பிரித்து) புதிய மாநிலங்களை உருவாக்குவதற்கான புது முறை, பின்வரும் இரண்டு கூறுகளை கொண்டிருக்க வேண்டும்:

1. புதிய மாநிலங்களைப் பிரிப்பதற்கு முன்னர், ஏற்கனவே உள்ள மாநிலங்களின் *இசைவைக்* கோருவதன் வழியாக நடப்பில் உள்ள மாநிலங்களின் ஆட்சிநில ஒருமைப்பாடையும் கண்ணியத்தையும் பாதுகாத்தல்.
2. *ஏற்கனவே உள்ள மாநிலச் சட்டமன்றம் இசைவு அளிக்காத நிலையில்*, புதியதாக உருவாக விரும்பும் மாநிலச் சிறுபான்மையினர் தனி மாநிலத் தகுதியைக் கோருவதற்காக, கவனமாக வடிவமைக்கப்பட்ட ஒரு *பொதுமக்கள் வாக்கெடுப்பு* வழியாக முறையான மக்களாட்சி வழிமுறை வாய்ப்பை வழங்குதல்.

புதியமாநில உருவாக்கம் என்பது குறுகிய அளவிலான, செயற்கையான அல்லது தற்காலிகமான பெரும்பான்மையின் அடிப்படையில் இல்லாமல், பரந்த மற்றும் நீடித்த கருத்தொற்றுமையின் அடிப்படையில் மட்டுமே நிகழ்வதை இந்த இரட்டைப் பாதுகாப்பு ஏற்பாடுகள் உறுதி செய்கின்றன. அதே நேரத்தில், ஒரு மாநிலத்திற்குள் நிரந்தரமான பெரும்பான்மையினரின் ஆதிக்கம் உருவாகும் ஆபத்திற்கு எதிராகவும் இவை அரசமைப்புச் சட்ட அளவிலான தீர்வை வழங்குகின்றன. அதாவது, மாநில அளவில் ஆழமாக வேரூன்றிய பெரும்பான்மையினர், அம்மாநிலத்தின் தனித்துவமான சிறுபான்மையினர் கொண்டிருக்கும் நியாயமான எதிர்பார்ப்புகளையெல்லாம் காலவரையின்றி அடக்கி வைத்திருக்கும் ஆபத்தையும் இவை தடுக்கின்றன. துல்லியமாக இந்தக் கவலையின் காரணமாகவே, ஆட்சிநில மறுசீரமைப்பைத் தடுப்பதற்கான முழுமையான அதிகாரத்தை மாநிலங்களுக்கு வழங்கக்கூடாது என்று அரசமைப்பு அவை முடிவு செய்தது.

மேலும், இங்கு பரிந்துரைக்கப்படும் பொதுமக்கள் வாக்கெடுப்பு முறையென்பது, வழக்கமான அரசமைப்புச் சட்ட நடைமுறைகளில் மக்கள் வாக்கெடுப்பு சார்ந்த ஆட்சி முறையைப் புகுத்துவதற்காகக் கொண்டுவரப்படவில்லை என்பதை இங்கே குறிப்பிடுவது அவசியமாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள், ஒரு பகுதியில் தொடர்ந்து நிலவும் உறுதியான மற்றும் வலுவான கருத்தொற்றுமையை பிரதிபலிக்கத் தவறும்நிலையில் மட்டுமே விதிவிலக்காக பயன்படுத்தக்கூடிய, ஒரு அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பு அரணாகவே இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

பரிந்துரை 3

அரசமைப்புச் சட்டப் பிரிவு 3(a)–இன் கீழ் புதிய மாநிலத்தை உருவாக்குவதற்கு, அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இன் வரம்புரையை (நிபந்தனையை) பின்வருமாறு திருத்த வேண்டும்:

- *சட்டமன்ற இசைவுத் தேவை:* தொடர்புடைய மாநில(ங்களின்) சட்டமன்ற(ங்கள்) அவையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் (அல்லது இரண்டு அவை இருந்தால், ஒவ்வொரு அவையிலும்) பெரும்பான்மை வழியாக ஒப்புதல் அளித்தால்தான், குடியரசுத் தலைவர் அரசமைப்புச் சட்டத் திருத்தச் சட்டவரைவை (இயல் 2–இன் 6–ஆம் பரிந்துரையின்படி) அறிமுகப்படுத்தப் பரிந்துரைக்க வேண்டும்.
- *விதிவிலக்கான வகையில் பொதுமக்கள் வாக்கெடுப்பு பாதுகாப்பு முறை:* பரிந்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அத்தகைய இசைவு அளிக்கப்படாவிட்டால், மாற்றுச் செயல்முறையாக முன்மொழியப்பட்ட புதிய மாநிலப் பகுதியில் பொதுவாக்கெடுப்பு நடத்த குடியரசுத் தலைவர் கட்டளை இடலாம். பின்வரும் நிபந்தனைகளின் கீழ் மட்டுமே இந்த முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்:
    - அப்பகுதியின் மொத்த பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில், நான்கில் மூன்று பங்கிற்குக் குறையாதவர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்றிருக்க வேண்டும்; மற்றும்
    - அவ்வாறு பதிவான வாக்குகளில், மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாதவை மாநில உருவாக்கத்திற்கு ஆதரவாக அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

  இந்த ஒருங்கிணைந்த வரம்புகள், அந்தப் பகுதியில் உள்ள மொத்த பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களில் குறைந்தபட்சம் 50 விழுக்காடு பேர் ($^3/_4 \times {}^2/_3 = {}^1/_2$) இந்த முன்மொழிவுக்கு ஆதரவளிப்பதை உறுதிசெய்கின்றன. இந்த இரண்டு வரம்புகளையும் பொதுமக்கள் வாக்கெடுப்பு நிறைவேறும் நிலையில், மாநிலச் சட்டமன்றத்தின் இசைவு இல்லாமலேயே நாடாளுமன்றம் மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்.
- *இறுதியாக நாடாளுமன்ற ஒப்புதல் அளித்தல்:* எந்தவொரு சந்தர்ப்பத்திலும், நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்குக் குறையாமல்

நிறைவேற்றப்படும் அரசமைப்புச் சட்டத் திருத்த வரைவு வழியாக மட்டுமே இந்த மாற்றம் நடைமுறைக்கு வர வேண்டும்.

4. அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 3(b)–(d)–இன் கீழ் நிலப்பகுதி, எல்லை மாற்றங்களுக்கு மாநிலத்தின் கட்டாயமான இசைவு

அரசமைப்புச் சட்டப் பிரிவு 3(b) (மாநிலத்தின் பரப்பளவை அதிகரித்தல்), 3(c) (குறைத்தல்), 3(d) (எல்லைகளை மாற்றுதல்) ஆகியவற்றின் கீழ் உள்ள முன்மொழிவுகளுக்கு, இப்போதுள்ள மாநிலங்களின் ஆட்சிநில ஒருமைப்பாடுக்கு நடப்பு முறை வழங்குவதைவிட மிகவும் வலுவான பாதுகாப்பு வழிமுறைகள் தேவைப்படுகின்றன. அதன்படி, இத்தகைய அனைத்து மாற்றங்களும் சாதாரண சட்டத்தின் வழியாக எளிய நாடாளுமன்றப் பெரும்பான்மையால் நிறைவேற்றப்படாமல், (இயல் 2–இல் 6–ஆம் பரிந்துரையில் கூறப்பட்டுள்ளப்படி) குறிப்பிட்ட மாநிலத்திற்கு என தனியான அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் வழியாக மட்டுமே செய்யப்பட வேண்டும். முற்றிலும் புதிய மாநிலங்களை, (மாநிலச் சட்டமன்ற இசைவு கிடைக்கவில்லை எனில் பொதுவாக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு) தனித்து செல்ல விரும்பும் சிறுபான்மை வட்டாரங்களிலிருந்து உருவாக்குவது போலல்லாமல், சாதாரணப் நிலப்பகுதி, எல்லை மாற்றங்கள் தொடர்புடைய மாநிலங்களின் இசைவுடனும் உயர்நிலை மக்கள் மன்றங்களின் உடன்பாட்டுடனும் மட்டுமே நடக்க வேண்டும்.

பரிந்துரை 4

அரசமைப்புச் சட்டப்பிரிவு 3(b) முதல் (d) வரையிலான பிரிவுகளின் கீழ், தற்போதுள்ள மாநிலங்களின் பரப்பளவு மற்றும் எல்லைகளில் மாற்றங்களைச் செய்வதற்கு, அரசமைப்புச் சட்டப்பிரிவு 3–ன் வரம்புரையை பின்வருமாறு திருத்த வேண்டும்:

- பாதிக்கப்பட்ட மாநிலத்தின் (அல்லது மாநிலங்களின்) சட்டமன்றமானது, அவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் (ஈரவை உள்ள மாநிலங்களில், ஒவ்வொரு அவையிலும்) மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையுடன் அக்கோரிக்கைக்கு இசைவு அளித்திருந்தால் ஒழிய, எந்தவொரு அரசமைப்புச் சட்டத் திருத்த வரைவும் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படக் கூடாது.

- அத்தகைய எந்தவொரு மாற்றமும், நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் அதன் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில், மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும் ஓர் அரசமைப்புச் சட்டத் திருத்த வரைவின் வழியாக மட்டுமே நடைமுறைக்கு வர வேண்டும்.

5. அரசமைப்புச் சட்டப் பிரிவு 3(e)–இன் கீழ் மாநிலப் பெயரில் மாற்றம் செய்வது, அந்த மாநிலத்தால் மட்டுமே தொடங்கப்பட வேண்டும்

மாநிலத்தின் பெயரென்பது வெறும் நிர்வாக அடையாளம் அல்ல. மாநிலப் பெயர், மாநிலத்தின் மொழி, பண்பாட்டு, வரலாற்று அடையாளத்தை உள்ளடக்கியது. அது மாநில மக்களுடைய ஆழமான உணர்வோடு தொடர்புடைய முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. அத்தகைய மாற்றம் இயல்பாகவே மாநிலத்திலிருந்து தொடங்க வேண்டும், ஒன்றியத்தால் திணிக்கப்படக்கூடாது. தற்போதைய முறையின் கீழ், நாடாளுமன்றத்தால் ஒரு மாநிலத்தின் பெயரைத் தன்னிச்சையாக மாற்றியமைக்க முடியும். இதுகுறித்து, "அதன் கருத்துகளை வெளிப்படுத்தும்" மிக வலுவற்றதொரு உரிமை மட்டுமே மாநிலத்திற்கு உள்ளது. இந்நிலை, கூட்டாட்சித் தத்துவ முறைக்கு உகந்ததாகவும் இல்லை, மாநிலத்தின் அடையாளத்தை மதிப்பதாகவும் இல்லை.

ஆகவே, அரசமைப்புச் சட்டப் பிரிவு 3(e)–இன் கீழ் மாநிலத்தின் பெயரில் ஏதேனும் மாற்றம் செய்தால், சாதாரண நாடாளுமன்றச் சட்டத்தின் வழியாக சாதாரண பெரும்பான்மை வழியாக நிறைவேற்றப்படாமல், (இயல் 2–இன் 6–ஆம் பரிந்துரையின்படி) அம்மாநிலத்திற்கு என தனியான அரசமைப்புச் சட்டத் திருத்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். அதே நேரத்தில், அரசியல் சந்தர்ப்பவாதத்தின் காரணமாகவும், தேவையின்றி அடிக்கடி நிகழும் பெயர் மாற்றங்களையும் தடுக்க, நியாயமான கால இடைவெளி அவசியமானது. இருபத்தைந்து ஆண்டு இடைவெளி என்கிற தடை (ஏறக்குறைய ஒரு அரசியல் தலைமுறையின் காலம்) நிலைத்தன்மைக்கும் மக்களாட்சித் தெரிவுக்கும் இடையேயான சரியான சமநிலையை ஏற்படுத்துகிறது.

பரிந்துரை 5

அரசமைப்புச் சட்டப் பிரிவு 3(e)–இன் கீழ் ஒரு மாநிலத்தின் பெயரில் செய்யப்படும் மாற்றம் எதற்கும், அரசமைப்புச் சட்டப் பிரிவு

3–இன் வரம்புரையை (நிபந்தனையை) பின்வருமாறு திருத்த வேண்டும்:

- அத்தகைய மாற்றம், சம்பந்தப்பட்ட மாநிலச் சட்டமன்றத்தால் மட்டுமே முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கு, அந்தச் சட்டமன்றத்தின் (ஈரவை இருப்பின், ஒவ்வொரு அவையின்) மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்;
- முன்மொழியப்பட்ட 'மாநிலம் சார்ந்த திருத்த நடைமுறையின்' கீழ் (இயல் 2, பரிந்துரை 6ஐக் காண்க), நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் அதன் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும் ஓர் அரசமைப்புச் சட்டத் திருத்த வரைவின் வழியாக மட்டுமே இம்மாற்றம் நடைமுறைக்கு வர வேண்டும்; மற்றும்
- முந்தைய இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் மாநிலத்தின் பெயர் மாற்றப்பட்டிருந்தால், அத்தகைய மாற்றம் முன்மொழியப்படக்கூடாது.

6. குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது ஆட்சிநிலப்பகுதி மறுசீரமைப்பு செய்ய தடை விதித்தல்

புதிய மாநிலத்தை உருவாக்குதல் அல்லது ஒரு மாநிலத்தின் பரப்பளவு, எல்லை அல்லது பெயரை மாற்றியமைத்தல் தொடர்பான எந்தவொரு வரைவும், சம்பந்தப்பட்ட மாநிலச் சட்டமன்றத்தின் கருத்துகளை அறிவதற்காக அங்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்று அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இன் வரம்புரை நிபந்தனை விதிக்கிறது. ஆனால், ஒரு மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழிருந்து (அரசமைப்புச் சட்டப் பிரிவு 356), அதன் சட்டமன்றம் முடக்கப்பட்டோ அல்லது கலைக்கப்பட்டோ இருக்கும் சூழலில் இதுதொடர்பாக ஒரு சிக்கல் எழுகிறது.

மனோகர் லால் எதிர் இந்திய ஒன்றியம் (1970)[8] *[Manohar Lal v. Union of India* (1970)] வழக்கில், மாநிலச் சட்டமன்றத்தின் கருத்துகள் அறியப்படாத நிலையிலும், *பஞ்சாப் மறுசீரமைப்புச் சட்டம்,* 1966 *(Punjab*

[8] AIR 1970 Delhi 178.

Reorganisation Act, 1966) செல்லும் என்று டெல்லி உயர் நீதிமன்றம் உறுதி செய்தது. ஒரு மாநிலத்தில் அரசு நிர்வாகம் செயலிழந்து, குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும்போது, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 356(1)(b) மற்றும் (c)–இன் கீழ் குடியரசுத் தலைவர் பின்வருமாறு செயல்படலாம் என்று நீதிமன்றம் கூறியது. மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரங்களை நாடாளுமன்றமே பயன்படுத்தும் என்றும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இல் உள்ள வரம்புரை உட்பட அரசமைப்பின் எந்தவொரு பிரிவின் செயல்பாட்டையும் நிறுத்திவைக்கலாம் என்றும் குடியரசுத் தலைவர் அறிவிக்கலாம். இதன் விளைவாக, மாநிலச் சட்டமன்றத்துடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்ற நிபந்தனை செயலிழந்து போகிறது.

அரை நூற்றாண்டிற்குப் பிறகு, *குடியரசுத் தலைவர் கருத்துகேட்பு : சட்டப்பிரிவு 370* (2023)[9] வழக்கில், உச்ச நீதிமன்றம் அதே முடிவை வேறொரு பாதையின் வழியாக எட்டியது. அதாவது, அரசமைப்புச் சட்டப்பிரிவை 'நிறுத்திவைத்தல்' (suspension) என்பதற்குப் பதிலாக, நாடாளுமன்றத்தை மாநிலச் சட்டமன்றத்திற்கு 'மாற்றீடு செய்தல்' (substitution) என்ற அணுகுமுறையை அது கையாண்டது. *எஸ்.ஆர். பொம்மை எதிர் இந்திய ஒன்றியம்* (1994)[10] *[S.R. Bommai v. Union of India (1994)]* வழக்கின் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு, குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது, நாடாளுமன்றமே மாநிலச் சட்டமன்றத்தின் பொறுப்பை ஏற்கிறது என்று நீதிமன்றம் கூறியது. அதன் அடிப்படையில், லடாக் ஒன்றிய ஆட்சிநிலப்பகுதி உருவாக்கப்பட்டதை அது உறுதி செய்தது. ஏனெனில், அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இன் கீழ் தேவைப்படும் 'கருத்துகளை', மாநிலச் சட்டமன்றத்திற்குப் பதிலாக நாடாளுமன்றமே வெளிப்படுத்தியிருந்தது. எனினும், நாடாளுமன்றத்தால் ஒரு முழு மாநிலத்தையும் இல்லாமல் செய்து, அதனை ஒன்றிய ஆட்சிநிலப்பகுதியாக மாற்ற முடியுமா என்ற கேள்விக்குத் தீர்ப்பளிப்பதை நீதிமன்றம் தவிர்த்துவிட்டது; அக்கேள்வி விடையளிக்கப்படாமலே விடப்பட்டது.

இந்த முடிவுகளை ஒன்றுசேரப் பார்க்கும்போது, குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது ஒன்றியம் மாநிலத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தின் இசைவு இல்லாமலேயே அல்லது அம்மன்றம் இல்லாமலேயே சட்டப்படி மாநிலத்தை மறுசீரமைக்கலாம் என்று தெளிவாகின்றது. இந்திய அரசமைப்பு: அதிகாரத்தோடு ஓர் உரையாடல்

---

[9] 2023 INSC 1058.

[10] (1994) 3 SCC 1.

(*The Indian Constitution: A Conversation with Power,* 2025)[11] நூலில் கௌதம் பாட்டியா (Gautam Bhatia) கருதுவது போல, அரசமைப்புச் சட்டப் பிரிவு 356 "அவசரநிலை ஏற்பாடுகள்" அத்தியாயத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதற்குப் பின்வரும் ஒரு காரணம் உண்டு: பாதுகாக்கும், சீரமைக்கும் நோக்கம் மட்டுமே கொண்ட ஒன்றியத்தின் பொறுப்பு, மக்களாட்சி அரசாங்கம் மீண்டும் அமையும் வரை நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்பதே இதன் பொருள். இது இடைக்காலத்தில் ஒன்றியம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான தேவையான வரம்புகளைத் தெளிவாக விதிக்கிறது. பராமரிப்பாளர் ஒருவர் வீட்டைக் கவனித்துக் கொள்ளலாம். ஆனால் வீட்டில் உள்ள தளங்களை வேறொருவருக்கு விற்க முடியாது. இதனைப் போலவே, எதிர்காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் மாற்ற முடியாத, மீளப் பெற முடியாத முடிவுகளை ஒன்றியம் எடுக்கவே கூடாது.

இந்தக் காரணத்திற்காக, மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடக்கும்போது, அனைத்து வகையான ஆட்சிநில மறுசீரமைப்பிற்கும் முழுமையான தடை விதிப்பது தேவையானது. குறிப்பாக முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் இப்போது உள்ள முடிவு எடுப்பதில் கட்டுப்படுத்தும் தன்மையற்ற "கருத்தறியும்" முறையை, முடிவு எடுப்பதில் கட்டுப்படுத்தும் மாநில இசைவு முறையாக மாற்ற வேண்டும் (பரிந்துரைகள் 3, 4, 5). மாநில நிலப்பகுதி மறுசீரமைப்பு, மாநிலத்தில் மக்களாட்சி நிறுத்தி வைக்கப்படும்போது அல்லாமல், மாநிலத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சுதந்திரமாக ஆட்சி செய்யும்போது மட்டுமே நிகழ வேண்டும்.

பரிந்துரை 6

அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இன் வரம்புரையை (நிபந்தனையை) திருத்தி, அரசமைப்புச் சட்டப் பிரிவு 356–இல் எது இருந்தபோதிலும், எந்தவொரு மாநிலத்திலும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 356–இன் கீழ் ஒரு பிரகடனம் நடைமுறையில் இருக்கும்போதும், புதிய மாநிலத்தை உருவாக்குவதற்கோ அல்லது எந்தவொரு மாநிலத்தின் பகுதி, எல்லை அல்லது பெயரை மாற்றுவதற்கோ ஆன சட்டவரைவு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படக் கூடாது என்று கூறும் வகையில் மறுதலிப்புப் பிரிவைச் செருக வேண்டும்.

---

[11] Gautam Bhatia, *The Constitution of India: A Conversation with Power* (HarperCollins 2025) 26–32.

7. ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளைப் படிப்படியாக நீக்குதலும் ஜனநாயகக் குறைபாட்டைக் களைதலும்

ஒன்றியத்தால் நிர்வகிக்கப்படும் ஆட்சிநிலப் பகுதிகள், அரசமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட காலத்தில், முழு மாநிலத் தகுதிப் பெற இயலாத, சிறிய, நிதி அளவில் வலுவற்ற, அல்லது நாட்டின் பாதுகாப்பு நோக்கில் முக்கியத்துவம் கொண்ட விதிவிலக்கான பகுதிகள் என்றே முதலில் கருதப்பட்டன. *ஏழாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (1956) நேரடியான ஒன்றிய நிர்வாகம் தேவைப்படும் பகுதிகளுக்காக "ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகள்" (யூனியன் பிரதேசங்கள்) என்ற இப்போதைய ஆட்சிப்பகுதியை அறிமுகப்படுத்தியது. இந்த தகுதிநிலை பெரும்பாலும் இடைக்காலத் தன்மையுடையதாகவே இருந்தது. ஹிமாச்சலப் பிரதேசம் (1971), திரிபுரா (1972), மணிப்பூர் (1972), மிசோரம் (1987), அருணாச்சலப் பிரதேசம் (1987), கோவா (1987), போன்ற பல முன்னாள் ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகள் மக்கள்தொகை, நிறுவனம், நிர்வாகத் திறன்கள் ஆகியவற்றில் வளர்ந்து, காலப்போக்கில் முழு மாநிலங்களாக உருவெடுத்தன.

ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகள் உள்ளார்ந்த ஜனநாயகக் குறைபாட்டைக் கொண்டுள்ளன என்பது தெளிவாகத் தெரிகின்றது. அந்தமான் நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவு, தாத்ரா & நாகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ, சண்டிகர், லடாக் போன்ற சட்டமன்றம் இல்லாத பகுதிகளில் ஆளுகை முற்றிலும் ஒன்றியம் நியமனம் செய்யும் நிர்வாகியிடமே உள்ளது. மக்களுக்கு பொறுப்புக் கூறும் நிர்வாகம் இல்லை. நாட்டின் தலைநகர் பகுதியான டெல்லி, புதுச்சேரி அல்லது ஜம்மு காஷ்மீர் ஆகிய சட்டமன்றம் இருக்கும் ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளிலும், அம்மன்றத்தின் அதிகாரங்கள் கடுமையாக வரையறுக்கப்பட்டுள்ளன. மேலும் அப்பகுதி குடிமக்கள் தேர்ந்தெடுக்கும் அரசாங்கங்கள் எப்போதும் ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிற்கு அடிபணிந்தே நடக்கின்றன. பல ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகள் புது டெல்லியிலிருந்து புவியியல் அளவில் தொலைவாக இருப்பது, இந்த சிக்கலை மேலும் அதிகப்படுத்துகிறது.

முதலாவது நிர்வாகச் சீர்திருத்தங்கள் ஆணைஹ்யமும் (1966–70)[12] *[First Administrative Reforms Commission (1966–70)] இரண்டாவது நிர்வாகச் சீர்திருத்தங்கள் ஆணையமும்* (2005–09)[13] *[Second Administrative*

---

[12] K. Hanumanthaiya and others, *Administrative Reforms Commission: Report on Administration of Union Territories and NEFA* (Government of India 1969).

[13] Veerappa Moily and others, *Second Administrative Reforms Commission: 15th Report: State and District Administration* (Government of India 2009).

Reforms Commission (2005–09)] இந்த மக்களாட்சி முறையின் குறைபாட்டை வெளிப்படையாக ஒப்புக்கொண்டன. முதலாவது நிர்வாகச் சீர்திருத்தங்கள் ஆணையம் "முழு அளவிலான மக்களாட்சி அமைப்புக்கு" தொடர்ச்சியான கோரிக்கைகள் வந்துள்ளதைச் சுட்டிக்காட்டியதுடன், அதற்கான நடவடிக்கையாக அதிகாரப் பரவலாக்கத்தைப் பரிந்துரைத்தது. இரண்டாவது நிர்வாகச் சீர்திருத்தங்கள் ஆணையம், நிர்வாகம் "இயன்றவரை ஆளுகைக்கு உட்படுவோருக்கு நெருக்கமாக" இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி, ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுக்கு அதிக நிர்வாகத் தன்னாட்சிக்கு வழங்க பரிந்துரை செய்தது.

ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தை, ஜம்மு–காஷ்மீர், லடாக் ஆகிய ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளாக 2019–இல் மறுசீரமைப்பு செய்தது, இந்த அரசமைப்புச் சட்ட நெருக்கடியின் உச்சநிலை ஆகும். முதன்முறையாக, நீண்ட மக்களாட்சி வரலாற்றையும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தையும் கொண்ட மாநிலம், ஒரே இரவில் ஒன்றியத்தால் நிர்வகிக்கப்படும் இரண்டு ஆட்சிநிலப் பகுதிகளாகத் தரமிறக்கப்பட்டது.

இதற்கிடையில், லடாக் போன்ற ஆட்சிநிலப் பகுதிகளில் தொடர்ந்து மாநிலத் தகுதிக்கான கோரிக்கைகள் எழுவது, ஒன்றிய நிர்வாகம் அடிப்படை கூட்டாட்சிக் கொள்கையை எதிரொலிக்கிறது. ஒன்றிய நிர்வாகம், விதிவிலக்கான முறையில் தற்காலிகமாக அல்லது பாதுகாப்புத் தேவைக்காக அப்பகுதிகளில் அமையலாமே தவிர, சுயாட்சியை விரும்பும் மக்களின் குரலை ஏற்காமல், நிரந்தர ஆட்சியாக இருக்கக் கூடாது.

எனவே, பொறுப்பான கூட்டாட்சி முறை அமைப்பு இரண்டு கொள்கைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

முதலாவதாக, லடாக் பகுதி தொடர்பாக நடந்தது போல, ஒன்றியம் "பாதுகாப்பு அக்கறைகளை" சாதாரணமாகக் கூறிப் புதிய ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளை உருவாக்குவதைத் தவிர்க்க வேண்டும். இந்தியாவின் நீண்ட சர்வதேச எல்லைகள், மாநிலங்களிலிருந்து ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளைப் பிரித்தெடுப்பதற்கு வழக்கமான சாக்காக மாறக் கூடாது.

இரண்டாவதாக, ஏற்கனவே உள்ள ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளில் அரசமைப்புச் சட்ட முறையின் எதிர்காலம் குறித்து முடிவு செய்ய குறிப்பிட்ட கால இடைவெளியில் மக்களாட்சி முறை அடிப்படையில், அப்பகுதிகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். முறையான பொதுமக்கள் வாக்கெடுப்பு வழியாக, அப்பகுதி மக்கள் மாநிலமாக மாற விரும்புகிறார்களா, அண்டை

மாநிலத்துடன் இணைய விரும்புகிறார்களா, அல்லது இப்போதைய நிலையில் தொடர விரும்புகிறார்களா என்பதைத் தீர்மானிக்க வாய்ப்பு வழங்க வேண்டும்.

ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளின் சிறிய அளவு பரப்பு, முழு அளவிலான மாநிலத் தகுதிக்குத் தடையாக இருக்கக்கூடாது. ஏற்கனவே உள்ள கோவா, சிக்கிம், திரிபுரா போன்ற பல மாநிலங்கள், பல ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுடன் ஒப்பிடக்கூடிய பரப்பளவு அல்லது மக்கள்தொகையைக் கொண்டுள்ளன. உலக அளவிலும்கூட, மால்டா (Malta), லீக்டென்ஸ்டீன் (Liechtenstein), மானகோ (Monaco), அண்டோர்ரா (Andorra) போன்ற நாடுகள் அளவில் மிக சிறிய வகையாக இருந்தாலும்கூட அரசுரிமை உள்ள நாடுகளாக செயல்படுகின்றன. எனவே, போதிய நிறுவனக் கட்டமைப்புத்திறன், மக்களாட்சி விருப்பார்வங்கள் இருக்கும்போது, மாநிலத் தகுதியை மறுப்பதற்கான கொள்கை அளவிலான காரணமாக பரப்பளவு இருக்காது.

எவ்வாறாயினும், டெல்லி தனித்துவமான அரசமைப்புச் சட்ட நிலையில் உள்ளது. நாட்டின் தலைநகரம் என்ற வகையில், டெல்லியின் நிலை ஆளுகையின் சிக்கல்தன்மை, தேசியப் பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். வாஷிங்டன் டி.சி., (Washington, D.C.) ஒட்டாவா (Ottawa) அல்லது கான்பெர்ரா (Canberra) போன்ற நகரங்களில் உள்ளது போன்ற ஏற்பாடு இருக்க வேண்டும்.

பரிந்துரை 7

அரசமைப்புச் சட்டத்தில் சட்டப்பிரிவு 3A எனும் புதிய பிரிவை அறிமுகப்படுத்த வேண்டும். இது பின்வருவனவற்றைக் கட்டாயமாக்குகிறது:

1. புதிய ஒன்றிய ஆட்சிநிலப் பகுதி எதுவும் உருவாக்கப்படக் கூடாது. மேலும், (டெல்லி தேசியத் தலைநகரப் பகுதியை தவிர்த்து) தற்போதுள்ள ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகள் படிப்படியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.
2. (டெல்லி தவிர்த்து) ஒவ்வொரு ஒன்றிய ஆட்சிநிலப் பகுதியிலும் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை கட்டாயப் பொது வாக்கெடுப்புகள் நடத்தப்பட வேண்டும். இதில் இரண்டு விருப்பத் தேர்வுகள் வழங்கப்பட வேண்டும்:
   (அ) முழு மாநிலத் தகுதிநிலை; அல்லது
   (ஆ) அண்டை மாநிலத்துடன் இணைவது (இதற்கு, சம்மந்தப்பட்ட அண்டை மாநிலச் சட்டமன்றத்தின் இசைவு அவசியம்)

3. கீழ்க்காணும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே, இம்மாற்றம் அங்கீகரிக்கப்படும்:
   - பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் நான்கில் மூன்று பங்கிற்குக் குறையாதவர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்றிருக்க வேண்டும்; மற்றும்
   - பதிவான வாக்குகளில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாதவை, தேர்ந்தெடுக்கப்பட்ட விருப்பத் தேர்வுக்கு ஆதரவாக இருக்க வேண்டும்.
4. மேற்கண்ட இரு விருப்பத் தேர்வுகளுமே நிர்ணயிக்கப்பட்ட பெரும்பான்மையைப் பெறத் தவறினால், அடுத்த வாக்கெடுப்பு நடைபெறும் வரை அந்த ஆட்சிநிலப்பகுதி ஒன்றிய ஆட்சிநிலப் பகுதியாகவே தொடரும்.

மக்களாட்சி முறையிலான சுய ஆட்சி என்பது இயல்பான ஒன்றாக இருக்க வேண்டுமே தவிர, விதிவிலக்காக இருக்கக் கூடாது என்பதை இந்த நடைமுறை அங்கீகரிக்கிறது. மேலும், ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள், தங்களின் அரசமைப்புச் சட்ட அளவிலான மற்றும் மக்களாட்சி விருப்பார்வங்களை வடிவமைப்பதில், குறிப்பிட்ட கால இடைவெளியில் நேரடிப் பங்காற்றுவதற்கான உரிமையைப் பெற்றிருக்க வேண்டும் என்பதையும் இது உறுதி செய்கிறது.

VI. முடிவுரை

ஆட்சிநில மறுசீரமைப்பிற்கான இந்தியாவின் முறை, இன்னும் 2020களின் கூட்டாட்சி முறை முதிர்ச்சியைவிட 1940களின் பதற்றங்களையே பிரதிபலிக்கிறது. இன்று, மாநில எல்லைகள் மக்களாட்சிமுறையின் முதிர்ச்சியான அடையாளங்களைக் குறிக்கின்றன. ஆயினும்கூட, நாடாளுமன்றம் சாதாரண சட்டம் வழியாக மாநிலங்களை மாற்றியமைக்கவோ, பிரிக்கவோ, குறைக்கவோ அல்லது தரமிறக்கவோ கூடிய தன்னிச்சையான அதிகாரத்தைத் தொடர்ந்து வைத்துக் கொண்டுள்ளது. இந்த அதிகாரம், கூட்டாட்சி முறையே அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை என்கிற அரசமைப்புச் சட்ட வாக்குறுதியுடன் இணங்கிப் போகவில்லை. ஒரு வளர்ச்சிப்பெற்ற கூட்டாட்சி அமைப்பானது, சாதாரண நிர்வாக நெகிழ்வுத்தன்மைக்கும், அரசமைப்புச் சட்ட நிர்ணய அதிகாரத்திற்கும் இடையிலான வேறுபாட்டைத் தெளிவாக உணர்ந்திருக்க வேண்டும். முதலாவதாகக்

குறிப்பிடப்பட்ட நிர்வாக நெகிழ்வுத்தன்மைக்கு, நிர்வாகத் துறையின் அல்லது சட்டமன்றத்தின் விருப்புரிமை (Discretion) போதுமானதாக இருக்கலாம். ஆனால், இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட அரசமைப்புச் சட்ட அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு, மிகக் கடுமையான நடைமுறை ஒழுங்கு தேவையாகும். ஒரு மாநிலத்தின் அரசமைப்புத் தகுதிநிலை, அடையாளம் அல்லது கண்ணியத்தை மாற்றியமைக்கும் வகையிலான ஆட்சிநில மறுசீரமைப்பானது, ஐயத்திற்கு இடமின்றி அரசமைப்புச் சட்ட அதிகாரத்தின் வரம்பிற்குள் வருகிறது. எனவே, இதனைச் சாதாரண சட்டமியற்றலின் எளிதான வழிமுறைகள் வழியாக மேற்கொள்ளாமல், அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்குரிய கடுமையான நடைமுறைகளுக்கு உட்படுத்துவதே முறையானதாகும்.

இந்த இயலில் முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள், அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இன் கீழ் அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் ஒழுங்குமுறைக்குள் அனைத்து ஆட்சிநில மறுசீரமைப்பையும் வைக்க வேண்டும், பாதிக்கப்பட்ட மாநிலங்களின் இசைவு பெறப்பட வேண்டும் என்கிற தீர்க்கமான மாற்றத்தை வேண்டி நிற்கின்றன. அதேபோல, ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளில் உள்ள ஜனநாயகக் குறைபாட்டைக் குறிப்பிட்ட கால இடைவெளியிலான பொதுவாக்கெடுப்புகள் வழியாக நீக்க வேண்டும் என்பதும் மிக முக்கியமானது. இது, நேரடி ஒன்றிய ஆட்சி, நிரந்தரமான ஆட்சி முறையாக அல்லாமல், விதிவிலக்கானதாகவே இருக்க வேண்டும்.

ஒட்டுமொத்தமாக, மாநிலங்கள் நிர்வாக அலகுகள் அல்ல, அரசமைப்புச் சட்டத்தின் பங்காளிகள் என்கிற கொள்கையை வலுப்படுத்துகின்றன; வட்டார விருப்பார்வங்கள் ஒருசார்பு நிலையுடைய முடிவு எடுக்கும் முறையை அல்ல, முறையான மக்களாட்சி வழிமுறையையே கோருகின்றன; ஒன்றியத்தின் ஆட்சிநில அதிகாரம் வெளிப்படைத்தன்மையுடனும், கருத்தறிந்து நடக்கும் முறையுடனும், கட்டுப்பாட்டுடனும் செயல்படுத்தப்படும்போது மிகவும் வலுவாக இருக்கும். இந்தியாவின் ஒற்றுமையையும், இந்தியாவின் உறுப்பாக உள்ள மாநிலங்களின் கண்ணியத்தையும் பாதுகாக்கும் வழிமுறையாகவே இந்தியாவின் கூட்டாட்சி முறையின் ஒழுங்கு அமையப்பெற வேண்டும்.

சான்று நூல்கள்

1. *Constituent Assembly Debates*, vol 7 (6th reprint, Lok Sabha Secretariat 2014) November 15, 17, 18, 1948; *Constituent Assembly Debates*, vol 9 (6th reprint, Lok Sabha Secretariat 2014) September 17, 18, 1949; *Constituent Assembly Debates*, vol 10 (6th reprint, Lok Sabha Secretariat 2014) October 12, 13, 1949.
2. PV Rajamannar, A Lakshmanaswami Mudaliar, and P Chandra Reddy, *Report of the Centre–State Relations Inquiry Committee* (Government of Tamil Nadu 1971) Chapter 11 & Appendix VII.
3. RS Sarkaria, B Sivaraman, and SR Sen, *Commission on Centre–State Relations*, part 1 (Ministry of Home Affairs 1988) Chapter 2, paras 2.29.01 – 2.29.08.
4. Madan Mohan Punchhi and others, *Commission on Centre–State Relations: Evolution of Centre–State Relations in India*, vol 1 (Government of India 2010) para 4.2.02.
5. The Constitution of the United States 1787, Articles I(10), IV(3).
6. Commonwealth of Australia Constitution Act 1900, Section 121, 123, 124.
7. Basic Law for the Federal Republic of Germany 1949, Articles 29, 79.
8. Canadian Constitution Act 1982, Section 43.
9. Constitution of the Federative Republic of Brazil 1988, Articles 18(3), 48(6).

இயல் 4

மொழி

"இந்திய அரசமைப்பில் சட்டப் பிரிவு ஒன்றை இயற்றி, மொழி ஒன்றைத் திணித்தால், அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று எவராவது கூறினால், அவ்வாறு செய்ய முடியாது என்பதைத் தங்களுக்கு நான் கூறிக் கொள்கிறேன். வேற்றுமையில் ஒற்றுமை என்பதே இந்தியாவின் அடிப்படைக் கொள்கை; இது புரிந்துணர்வினாலும் இணக்கத்தினாலும் அடைய வேண்டும்; அதற்கான சரியான சூழலை உருவாக்க வேண்டும்."

– ஷியாமா பிரசாத் முகர்ஜி,
அரசமைப்புச் சட்ட அவை விவாதங்கள் (1949)[1]

I. அறிமுகம்

சுதந்திர இந்தியா – ஏறக்குறைய எந்தக் கேள்வியும் இல்லாமல் – தேசிய ஒற்றுமைக்கு ஒற்றை ஆதிக்க மொழி தேவை என்ற நம்பிக்கையை ஏற்றுக்கொண்டது. பல பழமையான மொழிகளும் ஆயிரக்கணக்கான தாய்மொழிகளும் நீண்ட காலமாகச் செழித்து வளர்ந்து, ஒவ்வொன்றும் அதற்கே உரிய இலக்கிய மரபு, பண்பாட்டு ஆழம், தனித்துவமான உலகக் கண்ணோட்டம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் நாகரிகத்திற்கு, ஒற்றைமொழி ஆதிக்கம் பொருத்தமற்றது. ஒவ்வொரு இந்திய மொழியும் *வட்டார மொழியே*. மக்கள்தொகையியல் அடிப்படையில், 2011 *மக்கள்தொகை* கணக்கெடுப்பின்படி இந்தி 43.6 விழுக்காடு மக்களால்

---

[1] *Constituent Assembly Debates*, vol 9 (6th reprint, Lok Sabha Secretariat 2014) 1391, September 13, 1949.

பேசப்படுகிறது என்று கூறப்படும் இந்தி உட்பட அனைத்துமே *சிறுபான்மை மொழிகளே*. ஆயினும், *'இந்திய அரசமைப்புச் சட்டம்: நாட்டின் திருப்புமுனை' (The Indian Constitution: Cornerstone of a Nation, Granville Austin)* என்ற நூலில் கிரான்வில் ஆஸ்டின் குறிப்பிட்டது போல, "இந்திக்கோ அல்லது இந்துஸ்தானிக்கோ அகில இந்தியத் தகுதிநிலை வழங்கப்படும் என்பதில் எந்த சந்தேகமும் இருந்ததில்லை." ஆங்கிலத்திற்குப் பதிலாக எவ்வளவு விரைவில் இந்தியைப் பயன்படுத்தத் தொடங்க வேண்டும்? இந்தி எந்த எழுத்து வரிவடிவத்தையும் எண்முறையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்? அதிக சமஸ்கிருதம் கலந்த இந்தியாக இருக்க வேண்டுமா அல்லது பிற மொழிகளிலிருந்து தாராளமாக எடுத்துக்கொள்ள வேண்டுமா? முக்கியமாக, அரசமைப்புச் சட்ட வரிசையில் பிற இந்திய மொழிகளுக்கும் ஆங்கிலத்திற்கும் என்ன இடம் கிடைக்கும்? என்பன பற்றியே உண்மையில் அரசமைப்புச் சட்ட அவையில் விவாதங்கள் நடந்தன.

அரசமைப்புச் சட்ட அவையின் அனைத்து விவாதங்களிலும், மொழிக் கேள்வியைப் போல வேறு எதுவும் கடும் உணர்வுக் கொந்தளிப்புகளையும் கூர்மையான பிளவுகளையும் தூண்டவில்லை. கிரான்வில் ஆஸ்டின் பதிவுசெய்துள்ளபடி, இந்தி ஆதரவு கடும்போக்காளர்கள் (சேத் கோவிந்த் தாஸ், ரவி ஷங்கர் சுக்லா, புருஷோத்தம் தாஸ் டாண்டன், கன்ஷ்யாம் சிங் குப்தா, ரகு வீரா போன்றோர்) இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிறகு ஆங்கிலப் பயன்பாடு பொருத்தமற்றது என்றும், எனவே இந்தியை தேசிய மொழியாக ஆக்கவேண்டும் என்றும் வாதிட்டனர். பன்மொழிச் சூழல் இந்திய ஒற்றுமைக்குப் பொருத்தமில்லாதது என்றும், இதனாலேயே தேசம் இந்தியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கருதினர். தேவநாகரி எழுத்து வரிவடிவத்தையும் எண்முறையையும், அதிக அளவில் சமஸ்கிருதம் கலந்த இந்தி மொழி வடிவத்தையும் ஏற்றுக்கொள்ள அவர்கள் வலியுறுத்தினர். ஆஸ்டினுடைய சொற்களில் கூறினால், அவர்கள் "ஒற்றைத் தன்மை நிலையை அடைய, நியாயமற்ற முயற்சியில், அரசமைப்புச் சட்ட அவையையும் நாட்டையும் பிளவுபடுத்தும் ஆபத்தைச் சந்திக்கத் தயாராக இருந்தனர்."

இந்தி ஆதரவு கடும்போக்காளர்களை எதிர்த்து, இந்தி ஆதரவு மிதவாதிகள், ஆங்கிலமும் அனைத்து வட்டார மொழிகளும் தமக்கு உரிய இடங்களில் இணைந்து இருக்க முடியும் என்று வாதிட்டனர். சர்வதேச எண்முறை இந்தியாவில் தோன்றிய ஒன்று என அரசமைப்புச் சட்ட அவைக்கு நினைவுபடுத்தி, "எண்முறை குறித்த சண்டை முட்டாள்தனமானது, பயனற்றது", என்று மறுத்து ஒதுக்கினர். இந்தி மொழி அனைத்து மொழிகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் (பிற மொழிகளிலிருந்து சொற்களை எடுத்துக்கொள்ள வேண்டும்);

சுமூகமான மாற்றத்திற்காக குறைந்தது 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலம் தொடர வேண்டும்; எண்முறை குறித்து "மொழிக் கொடுங்கோன்மை" இருக்கக்கூடாது என்று இந்தி பேசாத வட்டாரங்களின் பிரதிநிதிகள், தாம் இந்தியை ஏற்கும் நிபந்தனைகளைத் தெளிவாக்கினர். இந்தி பேசாத வட்டாரப் பிரதிநிதிகளின் எதிர்ப்புகள், மொழிப் பெருமை – பண்பாட்டுப் பெருமை என்ற வலுவான உணர்விலிருந்தும், நிர்வாக சமநீதிக்கான கோரிக்கையிலிருந்தும், வேலைவாய்ப்புகள் குறித்த கவலைகளிலிருந்தும், கல்வி சுயாட்சியைப் பேண வேண்டிய தேவையிலிருந்தும் உருவானவை.

லட்சுமி காந்த மைத்ரா இந்தி ஆதரவு கடும்போக்காளர்களைப் பின்வருமாறு எச்சரித்தார்: "இது ஒருவகையான வெறித்தனம் ஆகும்; இது மொழிவெறியை வளரவும் முன்னேறவும் அனுமதித்தால், இறுதியில் அவர்கள் கருதும் [இந்தியைப் பொதுமொழி ஆக்க வேண்டும் என்கிற] நோக்கத்தைத் தோற்கடிக்கும்." மேலும், டி.டி. கிருஷ்ணமாச்சாரி கூர்மையான எச்சரிக்கையைப் பின்வருமாறு விடுத்தார்: "ஐயா, தென்னிந்திய மக்களிடையே பிரிவினையை வேண்டுபவர்கள் ஏற்கனவே இருப்பதால், தெற்கின் சார்பாக ஓர் எச்சரிக்கையை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்... எனது மதிப்பிற்குரிய உத்தரப்பிரதேச நண்பர்கள் 'இந்தி ஏகாதிபத்தியம்' என்ற தங்கள் கருத்தை அதிகபட்ச அளவிற்கு வளர்ப்பதன் வழியாக எங்களுக்கு எந்த வகையிலும் உதவவில்லை."

இறுதியில் செப்டம்பர் 14, 1949 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழி ஏற்பாடுகள் – "முன்ஷி–ஐயங்கார் உடன்பாடு" என்று அறியப்படுபவை – ஆஸ்டினுடைய சொற்களில், "அரைகுறை மனதோடு செய்த சமரசம்" ஆகும். இந்த சமரசம் உடையக்கூடிய தருணத்தில் ஒற்றுமையைப் பாதுகாப்பதற்குப் போதுமானதாக இருந்தாலும், எதிர்கால பிளவுக்கான விதைகளை விதைக்கும் வகையில் இந்திக்கு அரசமைப்புச் சட்டச் சாய்வை உட்பொதித்தது. இப்போது முரண்நகையாக, செப்டம்பர் 14 அன்று *இந்தி தினம்* (*இந்தி திவாஸ்*) என கொண்டாடப்படுகிறது.

1950–இல் மொழி குறித்த ஒரு இக்கட்டான சமரசமாகத் தொடங்கியது, விரைவில் மீண்டும் மீண்டும் எழும் எதிர்ப்புப் போராட்டத்தின் சுழலாக மாறியது. மாநிலங்களை மொழிவழியில் மறுசீரமைப்பதில் ஒன்றியத்தின் தயக்கத்தை, 1950களில் மக்கள் கோரிக்கை முறியடித்தது. 1960களில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள், இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரை ஆங்கிலம் தொடரும் என்று உறுதிமொழியை அளிக்க ஒன்றியத்தை நிர்ப்பந்தித்தது. மும்மொழிக் கொள்கை இன்றுவரை சர்ச்சைக்குள்ளாகியே உள்ளது. அண்மைக் காலத்தில், ஒன்றியம் மைய அளவிலான திட்டங்கள், திட்டமிடல்கள், சட்டங்கள் ஆகியவற்றின்

பெயர்களை முதன்மையாக இந்தியில் இடும் போக்கு, பழைய பதற்றங்களை மீண்டும் உயிர்ப்பித்துள்ளது.

இதற்கு மாறாக, ஒருபுறம் பெரும்பான்மையாக சீனர்களையும் (74.5 விழுக்காடு), மறுபுறம் குறிப்பிடத்தக்க எண்ணிக்கை கொண்ட மலாய்காரர்களையும் (13.6 விழுக்காடு), தமிழர்களையும் (9 விழுக்காடு) உள்ளடக்கிய பிற மொழிச் சிறுபான்மையினரையும் கொண்ட பன்மொழி – பல இனங்களின் சமுதாயமாக விளங்கிய சிங்கப்பூர், காலனிய பின்னணி இருந்தபோதிலும், ஆங்கிலத்தை பொதுத் தொடர்பு மொழியாக ஏற்றுக்கொண்டது. லீ குவான் யூ (Lee Kuan Yew) தனது *'மூன்றாம் உலகிலிருந்து முதலாம் உலகிற்கு 2000' (From Third World to First 2000)* என்ற நினைவுக் குறிப்புகளில் குறிப்பிட்டது போல, "ஆங்கிலம் நமது அலுவல் மொழியாக இருப்பது, நமது வெவ்வேறு இனங்களுக்கு இடையே மோதல்கள் ஏற்படுவதைத் தடுத்துள்ளது. மேலும், வணிகம், பன்னாட்டு உறவு, அறிவியல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் பன்னாட்டு மொழியாக ஆங்கிலம் இருப்பதால், அது போட்டிப் போடும் திறனில் நமக்கு நன்மையையும் அளித்துள்ளது." குறிப்பாக சீனக் கல்வியாளர்கள், நாளிதழ்கள், பண்பாட்டு அமைப்புகள் ஆகியவற்றிடமிருந்து எழுந்த கடுமையான தொடக்க எதிர்ப்பு, பின்வரும் இருமொழிக் கல்விக் கொள்கையை பின்பற்றுவதன் வாயிலாக எதிர்த்தவர்களையும் ஏற்றுக்கொள்ளச் செய்தது. பொருளாதார முன்னேற்றத்திற்கும் உலகளாவிய போட்டித்திறனிற்கும் ஆங்கிலமும்; பண்பாட்டு அடையாளம் – மொழி தொடர்ச்சியைப் பேணுவதற்காக சீனம், மலாய், தமிழ் ஆகிய தாய்மொழிகளில் ஒன்றையும், கற்பிக்கும் இருமொழிப் பயிற்சியைக்கூட "நமது குழந்தைகளுக்குப் பெரும் சுமை" என்று லீ கருதினார். ஆனாலும் அதன் அவசியத்தைப் பின்வருமாறு வலியுறுத்தினார்: "நாம் நமது தாய்மொழிகளில் மட்டும் பயிற்சிபெற்று ஒருமொழித் திறன் உடையோராக மட்டும் இருந்திருந்தால், நம்மால் பிழைப்பு நடத்த முடிந்திருக்காது. ஆங்கிலத்தில் மட்டும் பயிற்சி பெற்ற ஒருமொழி பேசுபவர்களாக மாறியிருந்தால், அது பின்னடைவாக இருந்திருக்கும். நமது பண்பாட்டு அடையாளத்தை இழந்திருப்போம்..."

காலப்போக்கில், உணர்ச்சிபூர்வமான அணுகுமுறையை நடைமுறைப் பயன்பாடு இடமாற்றம் செய்தது. இருமொழிப் பயிற்சி சமூக நல்லிணக்கத்தை வளர்த்தது. மேலும் நிதி, தொழில்நுட்பம், புத்தாக்கம் ஆகியவற்றிற்கு உலகளாவிய மையமாக சிங்கப்பூர் வியத்தகு பொருளாதார வளர்ச்சி பெறுவதற்கு உந்துசக்தியாக ஆங்கிலம் அமைந்தது. இவ்வாறு, தேசிய ஒற்றுமை என்பது ஒற்றை ஆதிக்க மொழியைத் திணிப்பதன் வழியாக உருவாக்கப்படுவதில்லை. மாறாக,

நடைமுறைப் பயன்பாடு, சமநீதி, அனைவரையும் உள்ளடக்கும் தன்மை ஆகியவற்றை நிறுவனமயமாக்குவதன் வழியாகவே உருவாக்கப்படுகிறது என்பதை லீ மெய்ப்பித்தார்.

II. புள்ளிவிவர மாயை

குறிப்பாக, 43.6 விழுக்காடு இந்தியர்கள் இந்தி பேசுகிறார்கள் என்ற 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பு எண்ணிக்கை, இந்தியாவின் மொழிக் கொள்கையை மேலும் சிக்கலாக்குகின்றது. புகழ்பெற்ற மொழியியலாளர் ஜி.என். தேவி, *இந்தியா: ஒரு மொழிவழி நாகரிகம் (India: A Linguistic Civilisation, G. N. Devy)* என்ற தனது புத்தகத்தில் விளக்குவது போல, 53 தனி மொழிகளை வெறுமனே "இந்தியின் பேச்சுவழக்குகள்" என்று வகைப்படுத்துவதன் வழியாக இந்த மக்கள்தொகை எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் போஜ்புரி, ராஜஸ்தானி, சத்தீஸ்கரி, மகதி, ஹரியான்வி, கோர்தா, புண்டேலி, அவதி முதலான பிற மொழிகள் அடங்கும். இவை ஒவ்வொன்றும் அதற்கே உரிய இலக்கணம், சொற்களஞ்சியம், இலக்கிய மரபு ஆகியவற்றைக் கொண்டுள்ளன. மேலும் அவற்றில் பல, இந்தியைவிட பலநூற்றாண்டுகள் பழமையானவை. இந்தப் பழம்மையான மொழிகளை "இந்தியின் பேச்சுவழக்குகள்" என்று கருதுவது, லத்தீன் மொழியை "இத்தாலிய மொழியின் பேச்சுவழக்கு" என்று அழைப்பது போல நியாயமற்றது.

இந்த மொழிகளில் 26 மொழிகளைப் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்டோர் தாய்மொழியாகப் பேசுகின்றனர். பவாரி / போவாரி போன்ற சில மொழிகள் கொஞ்சங்கூட இந்தியுடன் ஒத்துப்போகாதவை. இந்தத் தவறான வகைப்பாடுகள் சரிசெய்யப்பட்டால், இந்தியாவின் மக்கள்தொகையில் உண்மையாக இந்தி பேசுவோர் எண்ணிக்கை சுமார் *25 விழுக்காட்டினர்* மட்டுமே ஆவர்.

இதுதொடர்பில், சிங்கப்பூருடன் உள்ள வேறுபாடு வியக்கத்தக்கது. லீ குவான் யூ, சிங்கப்பூரர்களில் 75 விழுக்காடு பேர் மாண்டரின் பேசினாலும், அதற்கு முன்னுரிமை அளிக்க மறுத்தார்; ஆனால் இந்தியா தனது மக்களில் கால் பகுதி மக்கள் மட்டுமே பேசும் மொழியான இந்தியை, *நடைமுறையில் (de facto)* அகில இந்திய மொழியாக உயர்த்த முயற்சி செய்துள்ளது.

2011 மக்கள்தொகை கணக்கெடுப்பும், அதன் நுண்தரவுகளின் பகுப்பாய்வும், இந்தியா வழமையாக வட்டாரத்திற்குள் நிலைத்து வாழும் சமுதாயமாகவே நீடிக்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறது. சுமார் 62 விழுக்காடு இந்தியர்கள் இடம்பெயராதவர்கள், தங்கள் கடைசி

வசிப்பிடத்தை விட்டு ஒருபோதும் செல்லாதவர்கள்; சுமார் 85 விழுக்காட்டினர் தங்கள் சொந்த மாவட்டத்திற்குள்ளும், 95 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் தங்கள் சொந்த மாநிலத்திற்குள்ளும் வசிக்கின்றனர்.[2] இதன் விளைவாக, கல்வி, வேலை, அரசியல், நிர்வாகம், பண்பாடு போன்ற துறைகளில் அன்றாட வாழ்க்கை பெரும்பாலும் வட்டார மொழிகளிலேயே நடக்கிறது.

மக்கள்தொகையில் 5 விழுக்காட்டிற்கும் குறைவானோர் இடம்பெயரும், மாநிலங்களுக்கு இடையேயான இடம்பெயர்வு தெளிவான, சமச்சீரற்ற முறையில் நிகழ்கிறது. மக்கள்தொகை கணக்கெடுப்புத் தரவும், *2016–17 பொருளாதார ஆய்வறிக்கையும்* உத்தரப் பிரதேசம், பீகார், ஜார்கண்ட், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற இந்தி பேசும் மாநிலங்களிலிருந்து வெளியேறும் தன்மையில் அமைந்த மிக உயர்ந்த இடம்பெயர்வு விகிதங்கள் உள்ளன என்று காட்டுகின்றன; இவ்வாறு வெளியேறுவோர் செல்லும் முக்கியமான பகுதிகள், பொருளாதார அளவில் நன்கு வளர்ந்த தெற்கு, மேற்கு, நாட்டின் தலைநகர்ப் பகுதியான டெல்லி ஆகியவையே என்றும் காட்டுகின்றன. இத்தகைய மக்கள்தொகை சார்ந்த பரவல் உண்மை, இந்தியை இந்தியாவின் "இயற்கை"யான பொதுத் தொடர்புமொழி *(lingua franca)* என முன்னிறுத்துவது, புள்ளிவிவர மெய்மையைவிட, குறுகிய அரசியல் ஆசையே காரணம் என்று உணர்த்துகின்றது.

பரிந்துரை 1

ஒன்றிய அரசாங்கம், போஜ்புரி, ராஜஸ்தானி, சத்தீஸ்கரி, மகதி, ஹரியான்வி, கோர்தா, புண்டேலி, அவதி முதலான பிற மொழிகள் உட்பட – 53 தனி மொழிகளை, "இந்தியின் பேச்சுவழக்குகள்" என்று தவறாக வகைப்படுத்துவதை நிறுத்தி, இந்தி பேசுபவர்களின் உண்மையான எண்ணிக்கையை முன்வைத்து, மக்கள்தொகை கணக்கெடுப்புக் குறைபாடுகளைச் சரிசெய்ய வேண்டும். மேலும், வழமையாக வட்டாரத்திற்குள் வேரூன்றி நிலைத்து வாழும் சமுதாயத்தில், இந்தியை "இயற்கை"யான *பொதுத் தொடர்புமொழி (lingua franca)* என்று முன்னிறுத்துவது மக்கள்தொகையியல் உண்மைக்கு முரணானது என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

---

[2] Supriyo De, 'Internal Migration in India Grows, but Inter-State Movements Remain Low' (*World Bank Blogs*, December 18, 2019) accessed December 24, 2025; 'D-Series: Migration Tables – Census 2011' (*Directorate of Census Operations Tamil Nadu*) accessed December 24, 2025.

III. இந்தியாவினுடைய மொழியியல் காட்சி

இந்தியாவில் எத்தனை மொழிகள் உள்ளன? இதற்குப் பதில், மொழியின் தனித்துவமான ஒலி அமைப்பு (ஒலியியல் – phonology), சொல் உருவாக்க முறைகள் (சொல்லியல் – morphology), தொடர் அமைப்பு (தொடரியல் – syntax), சொற்களஞ்சியம் (அகராதியியல் – lexicon), எழுத்து வரிவடிவம், ஒத்துப்போகும் தன்மை ஆகியவற்றைக் கொண்டு "மொழி" வரையறுக்கப்படுகிறதா அல்லது நிர்வாக வசதி கருதி மொழி வரையறுக்கப்படுகிறதா என்பதைப் பொறுத்தது.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு, ஜார்ஜ் ஆபிரகாம் கிரியர்சன் அவர்களுடைய புகழ்பெற்ற *Linguistic Survey of India*, 179 மொழிகளையும் 544 பேச்சுவழக்குகளையும்[3] பட்டியலிட்டது. இன்று, உலகளாவிய மதிப்புமிகு தரவுத்தளமான *எத்னோலாக் (Ethnologue),* இந்தியாவில் 424 பூர்வீக மொழிகளையும் 30 பூர்வீகமற்ற மொழிகளையும் உள்ளடக்கி 454 வழக்கத்தில் உள்ள மொழிகளைப் பட்டியலிடுகிறது. ஜி.என். தேவி வழிநடத்திய, சுதந்திரமான குடிமைச் சமூகத் திட்டமான *'இந்திய மக்கள் மொழியியல் ஆய்வு' (People's Linguistic Survey of India,* 2010–12), இந்தியாவில் 780 மொழிகளைக் கண்டறிந்துள்ளது.[4]

எவ்வாறாயினும், அதிகாரபூர்வமான கணக்கெடுப்புகள், இந்தியாவின் உண்மையான மொழியியல் பன்முகத்தன்மையை வேண்டுமென்றே குறைத்துக் காட்டுகின்றன போல தெரிகிறது. *இந்தியா: மொழிவழி நாகரிகம் (India: A Linguistic Civilisation)* என்ற நூலில் ஜி.என். தேவி விளக்குவது போல, 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பில், ஆரம்பத்தில் தாமாக முன்வந்து தெரிவித்த 19,569 தாய்மொழிகள் பதிவுசெய்யப்பட்டன. "சீராக்கம்" செய்த பிறகு, இந்த எண்ணிக்கை 1,369 தாய்மொழிகள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, எண்ணிக்கை குறைக்கப்பட்டது. ஆனால் 1971–ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ள கொள்கையின்படி, 10,000 அல்லது அதற்கும் மேல் பேசுபவர்களைக் கொண்ட மொழிகள் மட்டுமே தனியாகப் பட்டியலிடப்பட்டன. இதன் விளைவாக அதிகாரபூர்வமான பட்டியல் வெறும் 121 மொழிகளைக் கொண்டதாகச் சுருக்கப்பட்டது.

---

[3] George Abraham Grierson, *Linguistic Survey of India*, vol 1 (Central Publication Branch, Government of India 1927) 26.

[4] Soutik Biswas, 'The Man Who 'discovered' 780 Indian Languages' (*BBC* October 27, 2017) accessed December 4, 2025.

இந்த அதிகாரத்துவக் குறைப்பு, நூற்றுக்கணக்கான சிறுபான்மை/பூர்வீக மொழிகளைக் கண்ணுக்குத் தெரியாதவை ஆக்கிவிட்டது. அம்மொழிகள் ஆதிக்கமொழி வகைக்குள் சேர்க்கப்படுகின்றன அல்லது "மற்றவை" என்ற பகுதிக்குள் ஒதுக்கப்படுகின்றன. முன்பே குறிப்பிட்டது போல, 53 தனிமொழிகள் இப்போது இந்தி மொழிக்குடையின் கீழ் வைக்கப்பட்டுள்ளன; அவற்றைத் தனித்தனியே அங்கீகரித்தால், மொத்த எண்ணிக்கை, உடனடியாக, குறைந்தது 174 ஆக உயரும்.

வெறுமனே அடையாளத்திற்கு அப்பாலானதாக எட்டாவது அட்டவணை

அரசமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, இந்தியாவின் முக்கியமான மொழிகளுக்கு மதிப்பு அளிக்க எட்டாவது அட்டவணை சேர்க்கப்பட்டது. எவ்வாறாயினும், காலப்போக்கில், எட்டாவது அட்டவணை ஒத்திசைவான மொழி ஏற்பு வழங்கும் முறையாக இருப்பதைவிட, தெரிந்தெடுத்த வகையில் ஏற்பு அளிப்பதற்கான அரசியல் கருவியாக மாறியுள்ளது. இது இப்போது 22 மொழிகளைப் பட்டியலிடுகிறது:

- *இந்தோ–ஆரிய மொழிக்* குடும்பம் *(15):* அசாமி, வங்காளி, டோக்ரி, குஜராத்தி, இந்தி, காஷ்மீரி, கொங்கணி, மைதிலி, மராத்தி, நேபாளி, ஒடியா, பஞ்சாபி, சமஸ்கிருதம், சிந்தி, உருது.
- *திராவிட மொழிக்* குடும்பம் (4): கன்னடம், மலையாளம், தமிழ், தெலுங்கு.
- *ஆஸ்ட்ரோ–ஆசியடிக் மொழிக்* குடும்பம் (1): சந்தாலி.
- *திபெத்திய–பர்மிய மொழிக்* குடும்பம் (2): போடோ, மணிப்பூரி.

இந்தப் பட்டியல், தெற்கின் தொன்மையான செம்மொழிகளையும், மத்திய, கிழக்கு, வடகிழக்கு இந்தியாவின் வளமான பழங்குடி மொழிகளையும் மிகக் குறைவாக உள்ளடக்கியுள்ளது.

ஆங்கிலம் பரவலாகப் பயன்பாட்டில் இருந்தபோதிலும், நாகாலாந்து, அருணாச்சலப் பிரதேசம், மேகாலயா ஆகியவற்றின் ஒரே அலுவல் மொழி என்ற தகுதியும், பல மாநிலங்களில் கூடுதல் அலுவல் மொழி என்ற தகுதியும் கொண்டிருந்தபோதிலும், ஆங்கிமொழிக்கு அரசமைப்புச் சட்ட தகுதிநிலை, வேண்டுமென்றே மறுக்கப்பட்டுள்ளது. எவ்வாறானும், ஆங்கிலம் பேசுபவர்கள் பற்றிய மக்கள்தொகை கணக்கெடுப்பு தரவு முற்றிலும் நம்பகத்தன்மையற்றதாகவே உள்ளது. உதாரணமாக, 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு, மக்கள் தொகையில் 0.02 விழுக்காட்டினரால் மட்டுமே ஆங்கிலம் பேசப்படுவதாகப் பதிவு செய்கிறது. இது கல்வி, நிர்வாகம், வணிகம், ஊடகங்கள் ஆகிய

வெளிப்படையாகத் தெரிகின்றவற்றுடன் எந்த வகையிலும் தொடர்பும் இல்லாத நம்பமுடியாத எண்ணிக்கை. எனவே, எதிர்கால மக்கள்தொகை கணக்கெடுப்புகள் ஆங்கிலம் பேசுபவர்கள் பற்றிய தரவை, மற்ற முக்கிய மொழிகளுக்கும் பயன்படுத்தப்படும் அதே கடும் ஒழுங்குமுறையுடன் பெறுவது அவசியம். இதில் தேர்ச்சி, பயன்பாடு குறித்த மறுசீரமைக்கப்பட்ட, மிகவும் நுணுக்கமான கேள்வி எழுப்பப்பட வேண்டும். ஆங்கிலத்தின் பயன்பாட்டு பரவல், சமூக–மொழியியல் நிலைமை ஆகிய இரண்டையும் அறிந்துகொள்ள வேண்டும்.

எட்டாவது அட்டவணையில் உள்ள முரண்பாடுகள் தெளிவாகத் தெரிகின்றன. 25,000க்கும் குறைவானவர்கள் தாய்மொழியாகப் பேசும் சமஸ்கிருத மொழியின் தொன்மைக்காக அட்டவணையில் தகுதிநிலை அளிக்கப்படுகிறது. ஆனால் பௌத்த – ஜைன திருமுறை நூல்களின் தொல்சீர் செம்மொழிகளான பாளியும் பிராகிருதமும் அட்டவணையில் இடம்பெறவில்லை. சிந்தி (28 இலட்சம் பேசுபவர்கள்), டோக்ரி (26 இலட்சம்), கொங்கணி (23 இலட்சம்) ஆகிய மொழிகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் பிலி (104 இலட்சம்), கோண்டி (30 இலட்சம்), குருக்/ஓரான் (20 இலட்சம்) ஆகிய மொழிகள் சேர்க்கப்படவில்லை. மக்கள்தொகை எண்ணிக்கை வலிமை, இலக்கியச் செல்வம் அல்லது பண்பாட்டுப் பங்களிப்பு ஆகியவற்றைவிட அரசியல் செல்வாக்கே அட்டவணையில் சேர்க்கப்படுவதைத் தீர்மானிக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

இதற்குத் தீர்வு அளித்த நீதித்துறை முன்மாதிரியும் இல்லை. *கனையா லால் சேதியா எதிர் இந்திய ஒன்றியம்* (1997)[5] *[Kanhaiya Lal Sethia v. Union of India* (1997)] வழக்கில், ராஜஸ்தானி மொழி சேர்க்கப்படாத நிலையில், கொங்கணி, மணிப்பூரி, நேபாளி ஆகியவற்றை எட்டாவது அட்டவணையில் சேர்த்த *எழுபத்து ஒன்றாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை* (1992) எதிர்த்த வழக்கை உச்சநீதிமன்றம் விசாரித்தது. எட்டாவது அட்டவணையில் மொழியைச் சேர்த்து சட்டம் இயற்றும் அதிகாரம் ஒன்றியத்தின் தனிக் களம் என்றும், நீதித்துறை அதிகாரத்தின் மூலம் மொழியைச் சேர்க்கப் பணிக்க முடியாது என்றும் நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. ராஜஸ்தானி மொழியைச் சேர்க்கக் கோரிய இதேபோன்ற பொதுநல வழக்கை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்த, *ரிபுதமன் சிங் எதிர் இந்திய ஒன்றியம்* (2023)[6] *[Ripudaman Singh v. Union of India* (2023)] வழக்கிலும் இந்த முன்னுதாரணம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

அரசமைப்புச் சட்டப் பிரிவு (உறுப்பு / சரத்து) 344–இன் கீழ் நிறுவப்பட்ட *அலுவல் மொழி ஆணையத்தில்*, எட்டாவது

---

[5] (1997) 6 SCC 573.

[6] Writ Petition (Civil) No(s).387 / 2023, Supreme Court.

அட்டவணையில் உள்ள ஒவ்வொரு மொழியும் பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என்று கோரப்பட்டது. இதேபோல, எட்டாவது அட்டவணை மொழிகளை, அரசமைப்புச் சட்டப் பிரிவு 351, இந்தி மொழியை வளப்படுத்திக் கொள்ள வேண்டிய ஊற்றுமூலங்களாகக் கருதுகிறது. ஆனால் இந்த அடையாள அளவிலான ஏற்பை விட, இவற்றின் பங்கு மிக அதிகம். எட்டாவது அட்டவணையில் சேர்க்கப்படுவது, அரசின் ஆதரவு, நிறுவன ஆதரவு, ஊடக ஆதரவு, கல்வி வளங்கள் ஆகியவற்றுக்கான அணுகலைத் தீர்மானிக்கிறது. எட்டாவது அட்டவணையிலிருந்து விலக்கப்படுவது, ஒரு மொழியை நடைமுறையில் கண்ணுக்குத் தெரியாததாக ஆக்கிவிடுகிறது.

கல்வித் துறையில் ஏற்படுத்தும் விளைவு

இதன் விளைவுகள் கல்வித் துறையில் மிகவும் தெளிவாகத் தெரிகின்றன. குழந்தையின் தாய்மொழியில் தொடக்கக் கல்வியை வழங்க வேண்டும் என்ற கொள்கையைச் செயல்படுத்த அரசமைப்புச் சட்டப் பிரிவு 350A மாநிலங்களுக்குக் கட்டளையிடுகிறது. இது யுனெஸ்கோ (UNESCO) பிரகடனப்படுத்திய கொள்கை; தேசிய கல்விக் கொள்கை (NEP) 2020 அறிக்கையும் இதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. ஆயினும், நடைமுறையில் பெரும்பாலான பள்ளிகள் முக்கியமான மாநில மொழியை – ஏறக்குறைய எப்போதும் அட்டவணையில் இடம்பெற்றுள்ள மொழியை – அல்லது ஆங்கில மொழியைப் பயிற்றுமொழியாகப் பயன்படுத்துகின்றன. அட்டவணையில் சேர்க்கப்படாத மொழிகள் வகுப்பறைக்குள் அரிதாகவே நுழைகின்றன; அவற்றுக்கு ஆசிரியர்கள், பாடப்புத்தகங்கள், கற்பித்தல் ஆதரவு போன்றவை இல்லை. இதன் விளைவு வெறும் ஓரங்கட்டுதல் மட்டுமல்ல; அமைதியாக மொழி அழிவை நோக்கிச் செல்லும் போக்கும் ஆகும்.

மொழி குறித்த அவசரநிலை

கடந்த ஐம்பது ஆண்டுகளில் கிட்டத்தட்ட 250 மொழிகள் மறைந்துவிட்டன என்றும், அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்குள் 400க்கும் மேற்பட்ட மொழிகள் அழிந்துபோகும் அபாயத்தில் உள்ளன என்றும் *இந்திய மக்கள் மொழியியல் ஆய்வு (The People's Linguistic Survey of India)* கடும் எச்சரிக்கையை விடுக்கிறது.[7] ஒரு மொழி அழியும் போது, வெறும்

[7] Kumar Abishek, 'Lost for Words: India's Lesser–Known Languages Are Fading by Design' (*Business Standard* July 18, 2025) accessed December 4, 2025.

சொற்கள் மட்டும் அழிவதில்லை. மரபுத்தொடர்கள், தொன்மங்கள், செடிகொடிகள் குறித்த அறிவு, மருத்துவ மரபுகள், பண்பாட்டு நினைவு ஆகியவற்றை உட்கொண்டிருக்கும் உலகக் கண்ணோட்டமும் அழிந்து போகிறது. ஒவ்வொரு மொழியும் அழியும்போது, இந்தியாவின் நாகரிக ஆன்மாவின் ஒருபகுதியும் செத்துப்போய் விடுகிறது. உயிர்ச்சூழல் பன்முகத்தன்மை தேசியச் சொத்தாகக் கருதப்பட்டுப் பாதுகாப்புக்குத் தகுதி பெற்றால், அதேபோல இந்தியாவின் ஈடு இணையற்ற மொழிப் பன்முகத்தன்மையும், இந்திய நாகரிகத்தின் வாழும் ஆவணமாக இருப்பதால், பாதுகாப்புக்குத் தகுதியானது.

புகழ்பெற்ற பின்லாந்து மொழியியலாளர் டோவ் ஸ்குட்னாப்–கங்காஸ் (Finnish linguist Tove Skutnabb–Kangas) இந்த உண்மையை நன்கு பதிவுசெய்துள்ளார்:

> *"பல ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளதைப் போல... இன்றைய வகையான முறைசார்ந்த கல்விக்கு அம்மொழி மக்கள் அறிமுகமாகாதபோது – நூற்றாண்டுகள், ஆயிரமாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த மொழிகளை, பள்ளிகள் ஒருசில தலைமுறைகளில், கொல்ல முடியும். பள்ளிகள் வழங்கும் முறைசார்ந்த கல்வியின் பயிற்றுமொழித் தெரிவின் ஊடாக மொழி இன அழிப்பில் ஈடுபட முடியும் – அவை மொழி இன அழிப்பைச் செய்துவருகின்றன."*[8]

இந்தியாவிலும், மொழி அழிவு பெரும்பாலும் மனிதரால் உருவாக்கப்பட்டதே. அலுவல் மொழிகள், அட்டவணை மொழிகள், பயிற்றுமொழிகள் குறித்த அரசாங்கக் கொள்கைகள், சிறப்புரிமை பெற இயலாத மொழிகளின் மறைவை விரைவுபடுத்துகின்றன. விரைவான தலையீடு இல்லையெனில், இந்தியாவின் 780 மொழிகள் இந்த நூற்றாண்டின் இறுதிக்குளாகவே ஒருசில மொழிகளாகச் சுருங்கக்கூடும்.

பரிந்துரை 2

மெய்யாகவே மொழிவழி நாகரிகம் என்ற இந்தியாவின் அடையாளத்தை மீண்டும் உறுதிப்படுத்தவும், இந்தியாவின் மொழி மரபைப் பாதுகாக்கவும், எட்டாவது அட்டவணை மேலும் பல மொழிகளை உள்ளடக்கும் வகையிலானதாக மாற்றப்பட வேண்டும்.

---

[8] Tove Skutnabb–Kangas, 'The right to mother tongue medium education – the hot potato in human rights instruments' (Mercator International Symposium: Europe 2004: A new framework for all languages? February 27, 2004).

1. பத்து இலட்சத்திற்கும் அதிகமானோர் தாய்மொழியாகப் பேசும் அனைத்து மொழிகளையும் தாமாகவே சேர்க்க வேண்டும். இந்த அளவுகோலின்படி, பின்வரும் பத்து முக்கியமான மொழிகள் எட்டாவது அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டும்:
   - இந்தோ–ஆரியம்: பிலி, கண்டேஷி
   - திராவிடம்: கோண்டி, குருக்/ஓரான், துளு
   - ஆஸ்ட்ரோ–ஆசியடிக்: காசி, ஹோ, முண்டாரி
   - திபெத்திய–பர்மன்: காரோ, திரிபுரி
2. எட்டாவது அட்டவணையில், இந்தியாவின் பாதிக்கப்படும் பழங்குடி மொழிகளைச் சேர்ப்பதற்கான குறைந்த அளவு வரம்பை அமைக்க வேண்டும் – எடுத்துக்காட்டாக, தாய்மொழியாக ஒரு இலட்சம் பேர் பேசும் அனைத்து பழங்குடி மொழிகளையும் அட்டவணையில் சேர்க்க வேண்டும்.
3. 'இந்தியின் பேச்சுவழக்குகள்' என்று தவறாக வகைப்படுத்தப்பட்ட 26 முக்கியமான மொழிகளை அட்டவணையில் சேர்க்க வேண்டும். குறிப்பாகப் பத்து இலட்சத்திற்கும் அதிகமானோர் தாய்மொழியாகப் பேசும் போஜ்புரி, ராஜஸ்தானி, சத்தீஸ்கரி, மகதி, ஹரியான்வி, கோர்தா, புண்டேலி, அவதி முதலான மொழிகளை முழுமையான தனி மொழிகளாக ஏற்று, எட்டாவது அட்டவணையில் சேர்க்க வேண்டும்.
4. பாலியையும் பிராகிருதத்தையும் அட்டவணையில் சேர்க்க வேண்டும். சமஸ்கிருத மொழியோடு, பௌத்த ஜைன மரபுகளைத் தோற்றுவித்த செம்மொழிகளான பாலியும் பிராகிருதமும் மாபெரும் வரலாற்று, சமய முக்கியத்துவத்திற்காக ஏற்பு பெறத் தகுதியானவை.
5. ஆங்கிலத்தையும் அட்டவணையில் சேர்க்க வேண்டும். ஆங்கில மொழியின் பரவலான பயன்பாடு, அரசமைப்புச் சட்டம் இயற்றப்பட்டதில் பங்கு, பல மாநிலங்களில் அலுவல் மொழி என்ற தகுதி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்தியாவின் மொழி நடப்பு நிலைமையை ஏற்கும் வகையில் ஆங்கிலமும் எட்டாவது அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டும். ஆங்கிலம் பேசுபவர்கள் குறித்த தரவுகள் எதிர்கால மக்கள்தொகை கணக்கெடுப்புகளின் வழியாக முறையாகச் சேகரிக்கப்பட வேண்டும்.
6. அரசமைப்புச் சட்டப் பிரிவு 350A–இன் வழிகாட்டுதலை, பல மொழிகளைச் சேர்ந்த குழந்தைகளுக்குத் தாய்மொழியில் தொடக்கக் கல்வி வழங்குவதற்காக, சாத்தியமான வகையில் மெய்யாகவே நடைமுறைப்படுத்த வேண்டும்.

பரிந்துரை 3

ஒன்றியம் ஒற்றை மொழிக்குச் சிறப்புரிமை அளிப்பதிலிருந்து விலகி, இந்தியாவின் விரிந்த மொழி மரபைப் பாதுகாப்பதற்கும், சிறப்புரிமை பெற இயலாத சிறுபான்மை/பழங்குடி மொழிகளின் அமைதியான அழிவைத் தடுப்பதற்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இந்த நோக்கத்தின் பொருட்டு, அரசமைப்புச் சட்டப் பிரிவு 350B முற்றிலும் மாற்றி வரையப்பட வேண்டும்.

வரையறுக்கப்பட்ட அதிகார வரம்பைக் கொண்ட, நடைமுறையில் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்ட மொழிச் சிறுபான்மையினருக்கான சிறப்பு அதிகாரி என்கிற இப்போதைய பதவியை ஒழித்து, வலுவான *"தேசிய மொழிக் கழகம் (National Language Commission)"* ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இக்கழகத்திற்குப் பின்வரும் செயல்பாடுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்:

- அழியும் நிலையில் உள்ள மொழிகளைக் கண்டறிதல்,
- சொற்களஞ்சியங்கள், இலக்கணம், வாய்மொழி மரபுகளை முறையாக ஆவணப்படுத்துதல்,
- கற்பித்தல் வளங்களை உருவாக்குதல்,
- மொழிப் பாதுகாப்பிற்கும் மறுமலர்ச்சிக்குமான நீடித்த, அம்மொழி சமூகம் முன்னெடுக்கும் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குதல்.

IV. "ஒரே தேசம், ஒரே மொழி" என்கிற மாயை

சுதந்திர இந்திய வரலாற்றின் பெரும்பகுதி வேளையில், ஒன்றியம் நாட்டின் அசாதாரணமான மொழிப் பன்முகத்தன்மையை வலிமையாகக் கருதாமல், அச்சுறுத்தல் என தவறாகக் கருதியுள்ளது. பிரிவினை குறித்த அச்சங்களால் பீடிக்கப்பட்டு, தேசிய ஒற்றுமைக்கு மொழிவழி ஒருமைப்பாடு தேவை, குறிப்பாக, இந்தி வழியாக மொழி ஒருமைப்பாடு தேவை என்று வலுவாக நம்பியது. ஆயினும் வரலாற்றின் படிப்பினைகள் இதற்கு முற்றிலும் மாறான திசையையே உறுதியாகச் சுட்டிக்காட்டுகின்றன.

குடிமக்கள் அனைவரும் ஒரே மொழியைப் பேசுவதால் அல்ல, மாறாக குடிமக்கள் அனைவரும் தமது சொந்த மொழியைச் சுதந்திரமாகப் பேசுவதற்குச் சமமான உரிமை உள்ளது என்று உணர்வதால் மட்டுமே நாடுகளில் ஒற்றுமை பேணப்படுகின்றது. உண்மையான ஒற்றுமை, மொழிவழி ஒருமைப்பாட்டில் இருந்து அல்ல, மாறாக மொழிச்

சமத்துவத்தில் – அதாவது, தம் தாய்மொழி காரணமாக எந்தச் சமுதாயமும் இரண்டாம்தரக் குடிமக்களாக உணரக்கூடாது என்கிற உறுதிப்பாட்டில் இருந்தே தோன்றுகிறது.

மொழி என்பது பிரிவினைக் கோடாக மாறும் வேளை

"சோவியத் ஒன்றியத்தின் சிதறலில் மொழியின் பங்கு" (The Role of Language in the Dissolution of the Soviet Union, 1992, *David F. Marshall)* என்ற தனது முக்கியமான கட்டுரையில் டேவிட் எஃப். மார்ஷல், மொழித் திணிப்புக் கொள்கை மாபெரும் நாட்டையும்கூட எவ்வாறு சீர்குலைக்க முடியும் என்பதை எடுத்துக்காட்டுக்கிறார்.[9] உள்ளூர் மொழிகளை ஊக்குவிப்பதில் லெனின் காட்டிய ஆரம்ப கால கவனம், உண்மையான பன்மையையும் ரஷ்யர் அல்லாத தேசிய இனங்களிடையே நம்பிக்கையையும் வளர்த்தது. ஆனால் இப்போக்கு 1938–இல் திடீரென மாற்றப்பட்டது. ஸ்டாலின் ரஷ்ய மொழிக் கற்பித்தலைக் கட்டாயமாக்கி, பள்ளி அமைப்பு மூலம் ரஷ்ய மொழித் திணிப்பை நிறுவனமயமாக்கினார். ஒன்றுபடுத்தும் நோக்கம் கொண்டிருந்தது, அதற்குப் பதிலாக அந்நியப்படுவதை ஆழப்படுத்தியது. 1980களில், மொழி நீதி சோவியத் குடியரசுகள் முழுவதும் தேசியவாத இயக்கங்களுக்கான ஒன்றுதிரளும் முழக்கமாக மாறியது என்று மார்ஷல் வாதிடுகிறார். 1991–இல் சோவியத் ஒன்றியம் (USSR) சரிந்தபோது, மொழி புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளில் இறையாண்மையின் மைய அடையாளமாக வெளிப்பட்டது.

பாகிஸ்தானின் அனுபவமும், இவ்வாறு கடும் எச்சரிக்கையை வழங்குகிறது. சுதந்திரத்திற்குப் பின், பாகிஸ்தான் சிறுபான்மை உயரடுக்கு மொழியான உருதுவை, ஒரே தேசிய மொழியாகத் திணித்தது. இம்மொழித் திணிப்பு, கிழக்கு பாகிஸ்தானில் உள்ள வங்காளம் பேசும் பெரும்பான்மையினரை அந்நியப்படுத்தியது; வங்காள மொழி இயக்கத்தைத் தூண்டியது. இந்த இயக்கம் 1952–இல் டாக்காவில் நடந்த காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டில் உச்சத்தை எட்டியது. 1956–ஆம் ஆண்டின் அரசமைப்புச் சட்டம் தாமதமாக வங்காள மொழியை ஏற்ற போதிலும், சிதைவு சரிசெய்ய முடியாததாகிவிட்டது. பாகிஸ்தானின் பிளவுக்கு மொழி மட்டுமே காரணம் அல்ல. ஆனால் அதுவே கிழக்கு பாகிஸ்தான் பிரிந்துபோவதற்கும், 1971–இல் வங்காளதேசம் உருவாவதற்கும் உதவிய, பிரிவினைக்கான காரணங்களின் ஒன்றாக அமைந்தது.

---

[9] David F Marshall, 'The Role of Language in the Dissolution of the Soviet Union' (1992) 36 *Work Papers of the Summer Institute of Linguistics, University of North Dakota Session* 33.

பொதுமொழி, ஒற்றுமைக்கு உறுதி அளிப்பதில்லை; மெய்யாகவே மொழி ஒன்றைத் திணிப்பது, பிரிவினைக்கு இட்டுச் செல்லும் உறுதியான பாதை ஆகும் என்கிற படிப்பினை வெட்டவெளிச்சமாக உள்ளது.

இந்தியாவிலும் கருத்துத் தெளிவு ஏற்பட வேண்டிய தருணங்கள் தோன்றின. அரசமைப்புச் சட்ட அவையில், சில இந்தி ஆதரவு கடும்போக்காளர்கள், பிளவுக்கு இட்டுச்செல்லும் என்று அஞ்சி, எட்டாவது அட்டவணையில் முக்கியமான வட்டார மொழிகளைப் பட்டியல் இடுவதைக்கூட எதிர்த்தனர். மொழிவழி மாநிலங்கள் தேசிய ஒற்றுமைக்கு ஆபத்தை விளைவிக்கும் என்ற தவறான கருத்து, மொழிவழி மாநில மறுசீரமைப்பை ஆண்டுக்கணக்கில் தள்ளிப் போட்டது. ஆனாலும், மொழிவழி மாநில மறுசீரமைப்பு இறுதியாக 1956–இல் நிகழ்ந்தபோது, அச்சீரமைப்பு ஒன்றியத்தை வலிமை இழக்கச் செய்வதற்கு மாறாக, வலிமைப்படுத்தவே செய்தது. வரலாற்றாசிரியர் ஜான் கேய் எழுதிய *'நள்ளிரவின் சந்ததியினர்* 1956' *(Midnight's Descendants* 1956, *John Keay)* என்கிற நூலில் தெளிவுபடுத்தியது போல, பாகிஸ்தானின் கடும்போக்கிற்கு மாறாக, இந்தியா கைகொண்ட இந்த மொழிவழி நெகிழ்வுத்தன்மைதான் இந்திய ஒற்றுமையைப் பாதுகாக்க உதவியது.

உலக ஒப்பீடு தரும் படிப்பினைகள்

தேசிய ஒற்றுமைக்கு ஒரே மொழி அவசியம் என்கிற நம்பிக்கை, 19–ஆம் நூற்றாண்டு ஐரோப்பியக் கற்பிதம் ஆகும். முரண்நகையாக, அதனையே, காலனி நீக்கம் செய்யப்பட்ட இந்தியா ஏற்றுக்கொண்டது. பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி போன்ற தேச–அரசு நாடுகள், சிறு வட்டார மொழிகளை ஒடுக்குவதன் மூலம் மொழி ஒருமைப்பாட்டை அடைந்தன. ஒப்பீட்டளவில் ஒருபடித்தான சிறிய சமூகங்களுக்குப் பொருத்தமான அந்த முன்மாதிரி, இந்தியாவைப் போல பரந்த பன்மைத்துவம் நிறைந்த நாகரிகத்திற்கு முற்றிலும் பொருத்தமற்றது ஆகும். இங்கு மொழி ஒருமைப்பாட்டைத் திணிப்பது, ஒரு மழைக்காட்டைத் தட்டையாக்கி யூகலிப்டஸ் தோட்டமாக மாற்றுவது போன்றது ஆகும். இது ஒருவேளை ஒழுங்கானதாகத் தோன்றலாம். ஆனால் முற்றிலும் இயற்கைக்கு மாறானதும், தன்னைத்தானே அழித்துக் கொள்வதும் ஆகும்.

ஒருமைப்படுத்தல் அல்ல, அனைவருக்கும் இடமளித்து ஏற்றுக்கொள்வதே ஒற்றுமையைத் தக்கவைக்கிறது என்கிற முற்றிலும் மாறுபட்ட படிப்பினையை நவீன மக்களாட்சி நாடுகள் கற்பிக்கின்றன.

ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன், ரோமன்ஷ் ஆகிய நான்கு தேசிய மொழிகளுடன் *சுவிட்சர்லாந்து* செழித்து வளர்கிறது. சுவிஸ்

அரசமைப்பின் சட்டப் பிரிவு 4, அந்நான்கு மொழிகளுக்கு ஏற்பு அளித்துள்ளது. அதேவேளையில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 70, மண்டலத்திற்கும் மொழிச் சுயாட்சி (cantonal linguistic autonomy) வழங்கிப் பாதுகாப்பு அளிக்கிறது.

கனடா அரசமைப்புச் சட்ட இருமொழிக் கொள்கை மூலம் தனது கூட்டமைப்பைப் பாதுகாக்கிறது. 1982–ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 16, ஆங்கில மொழியையும் பிரெஞ்சு மொழியையும் அனைத்துக் கூட்டாட்சி நிறுவனங்களிலும் சமமான தகுதி பெற்ற ஆட்சி மொழிகளாக அறிவிக்கிறது. இதை *ஆட்சி மொழிகள் சட்டம்,* 1985 (*Official Languages Act,* 1985) உறுதிப்படுத்துகிறது.

தென்னாப்பிரிக்கா, இனவெறியைக் கைவிட்ட பிறகு, முற்போக்காக அனைவரையும் உள்ளடக்கும் கொள்கையை ஏற்றுக்கொண்டது: 1996 அரசமைப்பின் பிரிவு 6, பதினொரு ஆட்சி மொழிகளுக்கு ஏற்பு அளித்தது; 2023ல் தென்னாப்பிரிக்க சைகை மொழியைப் பன்னிரண்டாவது மொழியாக ஏற்பு அளித்தது.

பெல்ஜியத்தின் அரசமைப்பின் அரசமைப்புச் சட்டப் பிரிவு 4, நிறுவிய நிலப்பகுதி சார்ந்த முறையின் மூலம், எந்த ஒரு மொழிக் குழுவின் ஆதிக்கத்தையும் தடுத்து, டச்சு, பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளுக்கு இடையில் சமநிலையைப் பேணுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் செயல்பாடு குறித்த ஒப்பந்தத்தின் (Treatyon the Functioning of the European Union) அரசமைப்புச் சட்டப் பிரிவு 342–இன் கீழ் 27 நாடுகளுடன், 24 ஆட்சி மொழிகளுடன் *ஐரோப்பிய ஒன்றியம்* செயல்படுகிறது. பன்மொழிச் சூழல் தடையாக இருப்பதற்கு மாறாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்புடைமைக்கு அடிப்படையாக உள்ளது.

பன்முகத்தன்மை கொண்ட நாட்டில் நடுநிலையான இணைப்பு மொழி ஆங்கிலம்

இந்திய நாகரிகம், காலனிய ஆட்சியாளர்கள் அறிமுகப்படுத்திய – இந்தியாவைச் சாராத, உள்ளூர் தன்மை இல்லாத வேளாண்மை விளைப்பொருட்களை ஏற்றுக்கொண்டது.கடந்த ஐந்துநூற்றாண்டுகளில் போர்த்துகீசியர்கள், டச்சுக்காரர்கள் அல்லது ஆங்கிலேயர்கள் அறிமுகப்படுத்திய உருளைக்கிழங்கு, தக்காளி, மொச்சைப் பயறு, மிளகாய், மக்காச்சோளம், காலிஃபிளவர், பூசணிக்காய், குடமிளகாய், கொய்யா, பப்பாளி, அன்னாசி, சப்போட்டா, சீதாப்பழம் ஆகிய அனைத்தையும் முழுமையாக உள்வாங்கிக் கொண்டது. அதுபோல, கடந்த இரண்டரை நூற்றாண்டுகளில் ஆங்கிலத்தையும் உள்வாங்கிக் கொண்டுள்ளது. இந்திய ஆங்கிலம் இப்போது இந்திய

மரபுத்தொடர்களாலும், சிந்தனை முறைகளாலும், வெளிப்பாட்டு முறைகளாலும் செறிவூட்டப்பட்ட, உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகை ஆகும். ஆங்கிலம் "வெளிநாட்டு" மொழியா, இல்லையா என்பது கேள்வி அல்ல. அம்மொழி பயன் அளிப்பதாகவும், அனைவருக்கும் சமநீதியானதாகவும் இருக்கிறதா என்பதே கேள்வி. வரலாறும் நடைமுறை பயன்பாடும் அம்மொழி பயனுள்ளதும், சமநீதியானதும் என்று உறுதிப்படுத்துகின்றன.

சுதந்திரப் போராட்டத்தின் போது, ஆங்கிலம், மாகாணங்கள் முழுவதையும் ஒருங்கிணைக்க உதவியது. அரசமைப்புச் சட்ட அவையில், ஜவஹர்லால் நேரு ஆங்கிலத்தின் மதிப்பைப் பின்வருமாறு தெளிவாக எடுத்துரைத்தார்:

> *"ஆங்கிலம் இந்தியாவில் மிக முக்கியமான மொழியாகத் தொடர்ந்து இருக்க வேண்டும். பெருமளவிலான மக்கள் ஆங்கிலத்தை கற்கிறார்கள், ஒருவேளை கட்டாயத்தினால் கற்கலாம்... ஆங்கிலேயர்கள் இங்கே வந்தபோது இருந்ததைவிட ஆங்கிலம் இன்று உலகில் மிக முக்கியமானதாக இருக்கிறது. அது இன்று நமக்கு மிக நெருக்கமான பன்னாட்டு மொழியாக உள்ளது. நாம் அறிந்தவற்றை மறக்க முயற்சிப்பதோ அல்லது நாம் கற்றுக்கொண்டவற்றைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பதோ அறிவுடைமை ஆகாது."*

ஃபிராங்க் ஆண்டனி அரசமைப்புச் சட்ட அவையில், "ஆங்கில மொழி குறித்த நமது அணுகுமுறையில் ஆங்கிலேயர்களுக்கு எதிரான நமது வெறுப்பைக் கலக்க வேண்டாம்" என்று வலியுறுத்தினார். எல்.கே. மைத்ரா, "ஆங்கிலேயர் ஆட்சியின் போது நாம் அடைந்த எல்லா அவமானங்கள், துயரங்கள், துன்பங்கள் ஆகியவற்றைவிட, நாம் பெற்ற விலைமதிப்பற்ற ஒன்று" ஆங்கில மொழி என்று விவரித்தார்.

இந்தியை ஒரே ஆட்சி மொழியாக ஆக்குவது, ஒருசில மாநிலங்களுக்குச் சிறப்புரிமை வழங்குவதும், மற்ற மாநிலங்களுக்கு உரிமை மறுக்கப்படுவதும் ஆகும். இதற்கு மாறாக, அனைவருக்கும் சொந்தமானதாக உள்ள, ஆனால் எவருடைய மொழியாகவும் இல்லாத ஆங்கிலம் நடுநிலையான இணைப்பு மொழி ஆகும். அம்மொழிக்கு எந்தவொரு ஆதிக்க முத்திரையும் இல்லை. மேலும், உயர்கல்வி, அறிவியல், தொழில்நுட்பம், சட்டம், வணிகம், அயலுறவு ஆகியவற்றுக்கு இன்று ஆங்கிலம் தவிர்க்க முடியாத வகையில் இன்றியமையாதது. இந்த உலகளாவிய செயல்பாடுகளை, பண்பாட்டு அளவில் மதிப்புமிக்கதாக இருந்தாலும், இந்தி மொழி நிறைவேற்ற முடியாது.

அயர்லாந்து வழங்கும் படிப்பினை

மொழிச்சிக்கல் தொடர்பில், அயர்லாந்து பொருத்தமான படிப்பினையை வழங்குகிறது. அதன் 1937–ஆம் ஆண்டின் அரசமைப்புச் சட்டம் ஐரிஷ் மொழியை "முதலாம் தேசிய மொழி" என்றும், ஆங்கிலத்தை "இரண்டாவது ஆட்சி மொழி" என்றும் அறிவித்தது. ஆயினும், பத்தாண்டுகால அரசு ஆதரவு இருந்தபோதிலும், ஐரிஷ் மொழி நவீன நிர்வாகம், உயர்கல்வி, அறிவியல் அல்லது உலகளாவிய வணிகத்தின் நடைமுறைத் தேவைகளை நிறைவு செய்ய முடியவில்லை. ஆங்கிலம் அரசாங்கத்தின், தேசிய வாழ்க்கையின் உண்மையான மொழியாக மாறியது. ஐரிஷ் மொழி பெருமளவில் ஓர் அடையாளமாகவே நிலைத்திருக்கிறது. இது மொழிப் பெருமையை, மொழி நடைமுறைப் பயன்பாட்டுடன் சமநிலைப்படுத்த வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

பரிந்துரை 4

பழமையான, பரந்த, பன்முகமான நாகரிகத்தை ஒரே மொழி வழியாக பிணைக்க முடியும் என்கிற மாயையை இந்தியா கைவிட வேண்டும். இந்த மாயை இந்தியாவின் மேதமை நிலைக்குத் தகுதியற்றது ஆகும். எத்தனை பேர் பேசுகிறார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல், ஒவ்வொரு மொழிக்கும் சமநீதி வழங்கும், அனைத்து மொழியினரையும் உள்ளடக்கும் தன்மை வாய்ந்ததும், அனைத்து மொழிக்கும் மெய்யான மரியாதை வழங்கும் மொழிக் கொள்கையே நாட்டிற்கு உண்மையில் தேவைப்படுகின்றது.

V. மும்மொழிக் கொள்கை

பன்மொழித் திறன், தேசிய ஒருமைப்பாடு, வேலைவாய்ப்புகள் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக மும்மொழிக் கொள்கை 1968–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது தேசியக் கல்விக் கொள்கை (1968), நாடாளுமன்றத்தின் ஆட்சிமொழித் தீர்மானம் (1968) ஆகியவற்றிலிருந்து உருபெற்றது. அடுத்துவந்த, தேசியக் கல்விக் கொள்கை 2020 அறிக்கை உட்பட, ஒவ்வொரு கல்விக் கொள்கை அறிக்கையிலும் மும்மொழிக் கொள்ளை மீண்டும் வலியுறுத்தப்பட்ட போதிலும், இதற்கு அரசமைப்புச் சட்ட அல்லது சட்டமுறை அடிப்படை ஏதுமில்லை; நிர்வாக அளவிலான வழிகாட்டுதலாகவே உள்ளது. மும்மொழிக் கொள்கையைத் தமிழ்நாடு, கர்நாடகா, மேற்கு வங்காளம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள்

அண்மையில் மறுத்துவிட்டது என்பது, இந்த மொழிச்சிக்கல் இன்னும் தீர்க்கப்படவில்லை என்பதையும், பொது விவாதத்தில் தொடர்ந்து உயிர்ப்புடன் உள்ளது என்பதையும் வெளிப்படுத்துகிறது.

1968–ஆம் ஆண்டு முதல், மும்மொழிக் கொள்கை செயல்படுத்தப்பட்டிருந்தால், இருமொழிக் கொள்கையில் உறுதியாக நிலைத்து நிற்கும் தமிழ்நாட்டைத் தவிர, இந்தியா இன்று பன்மொழித் திறன் படைத்தோர் அதிகம் வாழும் நாடாக இருந்திருக்க வேண்டும். மாறாக, இந்தியர்களில் *7.1 விழுக்காடு* பேர் மட்டுமே மூன்று மொழிகளை அறிந்திருக்கிறார்கள். மேலும், உத்தரப் பிரதேசம் (1.3 விழுக்காடு), பீகார் (1.3 விழுக்காடு), ராஜஸ்தான் (1.5 விழுக்காடு), மத்தியப் பிரதேசம் (1.7 விழுக்காடு), சத்தீஸ்கர் (1.7 விழுக்காடு), உத்தரகண்ட் (1.9 விழுக்காடு)[10] என பெரிய இந்தி பேசும் மாநிலங்களில் இந்த எண்ணிக்கை *2 விழுக்காட்டிற்கும்* கீழே குறைவாக உள்ளது. இவ்வாறு, 2011–ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மும்மொழிக் கொள்கையின் குறைபாடுகளை வெளிப்படுத்தியுள்ளது.

இதுதொடர்பில், கல்வித் துறை குறித்த ஆய்வுகளும், இந்த வெறுமையுற்றநிலையையே வலியுறுத்துகின்றன. *தேசியசாதனைநிலை ஆய்வுகள் (2021) [National Achievement Survey (NAS) 2021],* 8–ஆம் வகுப்புக்கு வரும்போது, வட்டார மொழியிலோ அல்லது இந்தியிலோ 53 விழுக்காடு கேள்விகளுக்கு மட்டுமே சரியாகப் பதில் அளிக்கின்றனர். இது 2017–ஆம் ஆண்டிலிருந்து தோராயமாக ஐந்து புள்ளிகள் சரிவு ஆகும். இதன் பொருள், நடுநிலைப் பள்ளிப் பருவத்திற்குள், சராசரி குழந்தை, மற்ற அனைத்து கற்றல்களும் நடைபெறும் மொழிப் பாடத்திட்டத்திலேயே முழுமையற்ற தேர்ச்சியை மட்டுமே பெற்றிருக்கிறது என்பது ஆகும். ஆங்கிலப் புலமையும் இதேபோல் மோசமாக இருந்தது; 2021 தேசிய சாதனைநிலை ஆய்வில் 10–ஆம் வகுப்பு ஆங்கில மதிப்பெண்களின் சராசரி வெறுமனே 43 விழுக்காடாக இருந்தது.

பிரதம் என்கிற அமைப்பு வெளியிடும் *கல்விநிலை ஆண்டு அறிக்கை [Annual Status of Education Report (ASER), conducted by Pratham],* கிராமப்புற இந்தியாவில் முன்பு எடுத்துக்காடியதைவிட, மிக மோசமான நிலையைச் சுட்டிக்காட்டுகிறது. 2018–இல், எட்டாம் வகுப்பு மாணவர்களில் 27.2 விழுக்காடு, தங்கள் வட்டார மொழியிலோ அல்லது இந்தியிலோ இரண்டாம் வகுப்பு நிலையிலான பாடத்தைக்கூட படிக்க முடியவில்லை;

---

[10] Anjishnu Das, 'Amid Three–Language War, Data Shows Only One–Fourth Indians Are Multilingual' (*The Indian Express* March 2, 2025) accessed December 4, 2025.

இது 2022–இல் 30.4 விழுக்காடாக மோசமடைந்து உள்ளது. 2016–இல், எட்டாம் வகுப்பு மாணவர்களில் 54.7 விழுக்காட்டினர் அடிப்படை ஆங்கிலச் சொற்றொடர்களைப் படிக்க முடியவில்லை; 2022–இல் இந்த எண்ணிக்கை 53.3 விழுக்காடாக இருந்தது.

இவை புள்ளிவிவரச் சிதைவுகள் அல்ல, மாறாகக் கட்டமைப்பு அளவிலான குற்றச்சாட்டுகள் ஆகும். தொடர்ச்சியான ஆய்வுகள் மாணவர்களிடம் தாய்மொழியில் உறுதியான எழுத்தறிவோ அல்லது பயன்பாட்டு ஆங்கில அறிவோ இல்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது. இந்நிலையில், உயர்கல்வி, வேலைவாய்ப்பு, சமூக இயக்கம் ஆகியவற்றுக்குக் கடும் தடையை மாணவர்கள் எதிர்கொள்கின்றனர்.

மிக முக்கியமாக, தேசிய சாதனைநிலை ஆய்வுகளும், கல்விநிலை ஆண்டு அறிக்கைகளும் 'மூன்றாம் மொழி' திறனை வழக்கமாக மதிப்பிடுவதில்லை. இவ்வாறு செய்வது, மும்மொழிக் கொள்கையின் முழுமையான தோல்வியை வழக்கமாக மறைத்துவிடுகிறது.

மிக நீண்ட காலம் அரசாங்கம் முன்முயற்சிகள் எடுத்து, மிகவும் குறைந்த வெற்றி பெற்றவை மிகச் சிலவே. அவற்றில் ஒன்றான, மும்மொழிக் கொள்கையின் பொருத்தப்பாட்டை மறுபரிசீலனை செய்வதற்குப் பதிலாக, தேசிய கல்விக் கொள்கை 2020 அறிக்கை, மூன்றாம் மொழியைக் கட்டாயமாக்குவது, நடப்பு நிலைமையைப் புறக்கணித்து கருத்துநிலைத் திணிப்பை முக்கியமானதாகக் கருதுவதற்கான ஓர் எளிய எடுத்துக்காட்டு ஆகும். பல குழந்தைகள் முதலாவது, இரண்டாவது மொழியில்கூடச் சிரமப்படும்போது, மூன்றாவது மொழியைத் திணிப்பது ஏற்கத்தக்கதல்ல. மூன்று மொழிகளை மோசமாகக் கற்பிப்பதைவிட இரண்டு மொழிகளை நன்றாகக் கற்பிப்பதே தேசிய முன்னுரிமையாகத் திகழ வேண்டும்.

நான்கு மொழிச் சுமையைச் சுமக்கும் நலிந்தோர்

இந்தியாவில் உள்ள இலட்சக்கணக்கான பழங்குடி குழந்தைகளுக்கும் மொழிச் சிறுபான்மை குழந்தைகளுக்கும், மும்மொழிக் கொள்கை, கடுமை நிறைந்த நான்கு மொழிச் சுமையாக மாறியுள்ளது என்பது பெரும்பாலும் கவனிக்கப்படாமல் விடப்படுகிறது:

- *தாய்மொழி (முதலாவது மொழி):* (எ.கா: பிலி, கோண்டி, அல்லது துளு) – வகுப்பறைகளில் பெரும்பாலும் கற்பிக்கப்படுவதில்லை. படிப்படியாக மறக்கப்படுகிறது.
- *மாநில மொழி (இரண்டாவது மொழி):* (எ.கா: மராத்தி, ஒடியா, அல்லது தமிழ்) – பயிற்று மொழி, பெரும்பாலும் இக்குழந்தைகளுக்கு அயல் மொழியாகவே உள்ளது.

- *கட்டாயமாக்கப்பட்ட "தேசிய" மொழி (மூன்றாவது மொழி):* (இந்தி அல்லது சமஸ்கிருதம்) – கொள்கை அளவில் "ஒருமைக்காக" திணிக்கப்படுகிற மொழி, மூன்றாவதான எழுத்து முறையின் சுமையையும், இலக்கணச் சுமையையும் அதிகரிக்கிறது.
- *வாய்ப்புகளை வழங்கும் மொழி (நான்காவது மொழி):* (ஆங்கிலம்) – சமூக மேம்பாட்டிற்கு இன்றியமையாதது. ஆனால் பெரும்பாலும் மோசமாகக் கற்பிக்கப்படுகிறது.

பட்டியல் பழங்குடி இன மாணவர்களிடையே தேசியச் சராசரியைவிட அதிக அளவிலான இடைநிற்றல் விகிதத்திற்குப் பல காரணிகள் பங்களித்தாலும், நான்கு மொழிச் சுமை மிக குறிப்பிடத்தக்கதும், தவிர்க்கக்கூடியதுமான காரணம் ஆகும். 2023–24–ஆம் ஆண்டிற்கான கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் அமைப்பு (Unified District Information System for Education–UDISE+) தரவுகளின்படி, பழங்குடி இன மாணவர்களுக்கான மொத்த சேர்க்கைப் பதிவு விகிதம் (Gross Enrolment Ratio–GER) ஆரம்பப் பள்ளியில் 100 விழுக்காட்டிற்கு அருகில் இருந்தாலும், மேல்நிலைப் பள்ளிக்கு வரும்போது 48.7 விழுக்காடாகக் குறைகிறது. பெரும்பாலான இடைநிற்றல்கள் மேல்நிலைப் பள்ளிக்கு முன்பே நிகழ்கின்றன.

கற்றலின் *தரத்தைவிட*, மொழிகளின் *எண்ணிக்கைக்கு* முன்னுரிமை அளிப்பதால், மும்மொழிக் கொள்கை திறன் வளர்ச்சியைக் குறைத்துள்ளது. குழந்தைகள் மீது சுமையை அதிகரித்துள்ளது. ஏற்கனவே வலுகுறைந்த பள்ளி அமைப்புகளை மேலும் சிரமத்திற்கு உள்ளாக்கியுள்ளது. பின்லாந்து, சிங்கப்பூர் போன்ற உயரிய திறன் வாய்ந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில், நமது மொழிக் கொள்கை மிகவும் வேறுபட்டு உள்ளது. அவை வெறும் அடையாள அளவிலான மும்மொழிப் பயிற்சி வழங்குவதைவிட, உயர்தரமான இருமொழிப் பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன.

தெரிவு செய்தல் என்கிற பொய்மை

தேசிய கல்விக் கொள்கை 2020 (பத்தி 4.13), "எந்தவொரு மொழியும் எந்த மாநிலத்தின் மீதும் திணிக்கப்படாது" என்றும், மாணவர்கள் தேர்வு செய்யும் "மூன்று மொழிகளில் குறைந்தது இரண்டு மொழிகள் இந்தியாவைச் சேர்ந்தவையாக இருக்க வேண்டும்" என்கிற வகையில், எந்த மூன்று மொழிகளையும் தேர்ந்தெடுக்கலாம் என்றும் உறுதியளிக்கிறது. ஆனால், இந்த வாக்குறுதி ஒரு பொய்த்தோற்றம் ஆகும்.

தமிழ்நாடு போன்ற இந்தி பேசாத மாநிலத்தில் உள்ள வழக்கமான பள்ளியை எடுத்துக்கொள்வோம். இங்கு கணிசமான எண்ணிக்கை கொண்ட மாணவர்கள், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, சமஸ்கிருதம் ஆகிய ஐந்து வெவ்வேறு மூன்றாம் மொழிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். கொள்கை அளவில், பள்ளி இந்த ஐந்து மொழிகளையும் கற்பிக்க வேண்டும். நடைமுறை அளவில், மிகச் சில பள்ளிகள் மட்டுமே பல மொழிகளுக்கான ஆசிரியர்களை நியமிக்கவோ, பாடப்புத்தகங்களைப் பெறவோ அல்லது பல மொழிகளுக்கான வகுப்புகளை நடத்தவோ முடியும்.

இந்தி மட்டுமே, ஆசிரியர் நியமனம், பாடப் புத்தங்கள், நிறுவனக் கட்டமைப்பு சார்ந்த ஆதரவு ஆகிய தொடர்ச்சியான மையப்படுத்தப்பட்ட அளவில் ஒன்றிய ஆதரவைப் பெறுகிறது. பிற இந்திய மொழிகளுக்கு, அம்மொழி வழங்கும் மாநிலத்திற்கு வெளியே ஒப்பிடக்கூடிய ஆதரவு இல்லை. இதனால், தேர்வு செய்து கொள்ளும் சுதந்திரம், இந்தியை மட்டுமே தேர்வு செய்து கொள்வதாகக் சுருங்குகிறது. இங்கு நடைமுறைச் சிக்கல்கள் மறைமுகமாகத் திணிக்கும் வழிமுறையாக மாறி, அந்த "சுதந்திரம்" என்பது பொய்மை ஆகின்றது.

நிதி அளவில் தொடர்ந்து செயல்படுத்த இயலாத திட்டம்

மும்மொழிக் கொள்கையைச் செயல்படுத்துவது, அதீதமான செலவு மிக்கது. தமிழ்நாட்டிற்கு மட்டும், வழக்கமான முறையில் செலவு மதிப்பீடு செய்வது, சுமையின் அளவை விளக்கும். மாநிலத்தின் 8,074 அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் ஒவ்வொன்றிலும் மூன்றாம் மொழி ஆசிரியர் *ஒருவரை* மட்டும் நியமிக்க, ஆண்டுக்கு சுமார் ரூ.560 கோடி ஊதியச் செலவு ஏற்படும். பாடப்புத்தகங்கள், ஆசிரியர் பயிற்சி, பிற செலவுகள், உள்கட்டமைப்புச் செலவீனம் ஆகியவற்றைச் சேர்க்கும்போது, இந்தத் தொகை எளிதாக இரட்டிப்பு ஆகிறது. தேசிய பாடத்திட்ட முறை 2023 (National Curriculum Framework 2023) அறிக்கையில் உள்ளபடி, நடுநிலைப் பள்ளிகளுக்கும் (6–ஆம் வகுப்பு முதல்) இந்தக் கொள்கையை நீட்டித்தால், சுமை பல ஆயிரம் கோடிகளுக்கு உயரும். நாடு முழுவதும், கல்வி அளவில் எந்த பலனும் இல்லாமல், ஓராண்டில் ஏற்படும் செலவு பல்லாயிரக்கணக்கான கோடிகளைத் தொடும்.

நடைமுறைக்கு ஒவ்வாத பெரும் செலவு மட்டுமில்லாமல், இந்தச் செலவு மிகப்பெரும் வாய்ப்புகள் உருவாக்குவதையும் தடுக்கிறது. இதைப் புரிந்துகொள்ள, அந்தச் செலவின் ஒருபகுதியை வைத்துகூடக் கணிதம், அறிவியல் உள்ளிட்ட பிற முக்கியமான பாடங்களில் உள்ள ஆசிரியர்

பற்றாக்குறையை அகற்றலாம்; அரசுப் பள்ளிகள், குறிப்பாகக் கிராமப்புறப் பள்ளிகளுக்கு நவீன இணைய வசதி கட்டமைப்பை வழங்கலாம்; அல்லது பள்ளி மாணவர்களுக்கான தேசிய செயற்கை நுண்ணறிவு, மென்பொருள் நிரலாக்கத் திட்டக் கல்விக்கான நிதி வழங்கலாம். சீனா, எஸ்டோனியா, தென் கொரியா போன்ற நாடுகளின் பள்ளிகளில் ஏற்கனவே செயற்கை நுண்ணறிவைக் கற்பிக்கும் வேளையில், இந்தியா 20–ஆம் நூற்றாண்டிலும் மொழி அரசியலின் மிச்சசொச்சத்தில் அரிய வளங்களை வீணடிக்கும் அபாயத்தில் சிக்கிக் கொண்டுள்ளது.

மாணவர்களுக்கு முன்னுரிமை அளித்தல்

தேசிய கல்விக் கொள்கை 2020 அறிக்கை, மொழிக் கற்றலைப் பெருமளவில் பண்பாட்டு நாட்டம் குறித்ததாகக் கருதுகிறது; அவற்றின் நடைமுறை, பொருளாதார வாய்ப்பு மதிப்பு ஆகியவற்றைக் கவனிக்கத் தவறிவிட்டது. 25,000 பேருக்கும் குறைவானோர் பேசும், மிகக் குறைவான வேலைவாய்ப்புகளை மட்டுமே வழங்கும் சமஸ்கிருதத்திற்கு ஆங்கிலத்தைவிட அதிக முக்கியத்துவம் அளித்ததில், தேசிய கல்விக் கொள்கை 2020 அறிக்கையின் கருத்துநிலைச் சாய்வு வெளிப்படையாகத் தெரிகிறது. உலக அளவில், நாடுகள் உலகப் போட்டித்தன்மையை மேம்படுத்த ஆங்கிலக் கல்வியை வலுப்படுத்தும் வேளையில், தேசிய கல்விக் கொள்கை 2020 அறிக்கை, ஆங்கில மொழிக் கல்வியின் முக்கிய பங்கை ஏற்கவில்லை; அல்லது இந்தியாவில் ஆங்கிலத் திறனை மேம்படுத்த எந்தவொரு சீரிய செயல்திட்டத்தையும் வழங்கவில்லை.

ஆங்கிலத்திற்கு அப்பால், பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், மாண்டரின் போன்ற மொழிகள் இந்தி – சமஸ்கிருதத்தை விட உலக அளவில் அதிக வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன. தேசிய கல்விக் கொள்கை 2020 அறிக்கை, வெளிநாட்டு மொழி விருப்பங்களில் ஒன்றே ஒன்றாக (ஆங்கில மொழியை மட்டும்) கட்டுப்படுத்துவதன் மூலம், மூன்றாம் மொழியைக் கற்பதன் மூலம் சிறந்த வேலைவாய்ப்புகளைப் பெறுதல் என்கிற ஒரே உண்மையான பலனைச் சீர்குலைக்கின்றது.

மொழி என்பது கருத்துநிலையைத் திணிக்கும் வழிமுறையாக இல்லாமல், வாய்ப்புகளுக்கான பாலமாக இருக்க வேண்டும். அதாவது, வலுவான ஆங்கிலப் பயிற்சி, உலகளாவிய வேலைகளுடன் இணைக்கப்பட்ட வெளிநாட்டு மொழிக் கல்வி, சுகாதாரம், ஆளுகை, சுற்றுலா, கிராமப்புற வங்கிப் பணிகள் போன்ற பணிகளுக்கான இந்திய மொழிகளில் பயிற்சி அளித்தல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

விதிமுறையைவிட விளைவே சிறந்தது

ஒருவரின் தாய்மொழியிலும், ஆங்கிலத்திலும் அடிப்படை எழுத்தறிவு இன்றியமையாதது; பள்ளிக் கல்வி மூலம் தொடர்ந்து இம்மொழிகளைப் பயிற்றுவிக்க வேண்டும். ஆனால் மூன்றாம் மொழி கற்க இதே அளவிலான முதலீடு, முறையான கற்பித்தல் அல்லது தேர்ச்சித் திறன் தேவையில்லை. நிகழ்நேர மொழிபெயர்ப்புக் கருவிகள், தகவமைப்பு கற்றல் தளங்கள், செயற்கை நுண்ணறிவு கற்பித்தல் வழிகாட்டிகள் ஆகியவை உருமாற்றியுள்ள உலகில், மாணவர்களின் ஆர்வம், வாழ்க்கைச் சூழல், வாய்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில், தாமாக முன்வந்து கூடுதல் மொழிகளைக் கற்றுக்கொள்ள முடியும். இத்தகைய சூழ்நிலை சார்ந்த பன்மொழித் திறன் பெறல் செலவு குறைந்ததும், தனிப்பயனாக்கப்பட்டதும், நெகிழ்வானதும் ஆகும்.

மும்மொழிக் கொள்கை, 1960களின் கற்பித்தல் கொள்கை அனுமானங்களில் சிக்கித் தவிக்கிறது; 21–ஆம் நூற்றாண்டுத் தொழில்நுட்பத்தின் சாத்தியக்கூறுகளைக் கவனிக்கவில்லை.

மூன்றாம் மொழியைக் கற்பது குறித்து அறிதிறன் அறிவியல் கூறுவது என்ன?

மும்மொழிக் கொள்கையின் ஆதரவாளர்கள், மூன்றாம் மொழியைக் கற்பது அறிதிறன்களை மேம்படுத்துகிறது என்று பெரும்பாலும் வாதிடுகின்றனர். தேசிய கல்விக் கொள்கை 2020 அறிக்கை இந்த வாதத்தைச் சமகால உள மொழியியல் ஆராய்ச்சி அல்லது உலகளாவிய சிறந்த நடைமுறைகளை மேற்கோள் காட்டாமல் திரும்பத் திரும்பக் கூறுகிறது. ஆயினும், நவீன அறிதிறன் அறிவியல், குறிப்பாக *மூன்றாம் மொழி கற்றல் குறித்த கேம்பிரிட்ஜ் கையேடு (Cambridge Handbook of Third Language Acquisition, 2023)* நுணுக்கமானதும் எச்சரிக்கை மிகுந்ததுமான சித்திரத்தை வழங்குகிறது.

*இருமொழிப் பயிற்சி*யின் சாத்தியமான நன்மைகளை அறிதிறன் அறிவியல் ஒப்புக்கொள்கிறது. எல்லென் பியாலிஸ்டாக் (Ellen Bialystok) முதலானோரின் முக்கியமான படைப்பு, இரண்டு மொழிகளில் திறன் பெறுதல் கவனக் கட்டுப்பாடு, கவனச்சிதறலைத் தடுத்தல், பணி மாற்றுதல் போன்ற நிர்வாகத் திறன் செயல்பாடுகளை மேம்படுத்தலாம் என்று காட்டுகின்றது. இது பிற்காலத்தில் மறதி நோய் தொடங்குவதையும் தாமதப்படுத்தலாம். ஆனால் இந்த முடிவுகள் தாமாகவே மூன்றாம் மொழிப் பயிற்சிக்கு தானாகவே *பொருந்துவதில்லை*. கூடுதல் மொழியைக் கற்பதன் வழி நன்மைகளைப் பெறுவது *வரையறைக்கு உட்பட்ட* நிலைமைகள் தொடர்பிலானது. இந்த வரையறுக்கப்பட்ட

நிலைமைகள், இந்தியாவின் அதிகச் சுமை கொண்ட, குறைவான வளங்கள் கொண்ட பள்ளிக் கல்வி அமைப்பில் அரிதாகவே உள்ளன.

1. *வலுவில்லாத அடித்தளங்கள் மூன்றாம் மொழித் திறனைச் சீர்குலைக்கின்றன:* அதிக மொழிகள் வழியாக அதிக அறிதிறன் பலன்களைப் பெறமுடியும் என்கிற எளிய அனுமானத்தை *கேம்பிரிட்ஜ் கையேடு* மறுக்கிறது. அந்தப் பலன்களைப் பெறுவது, கற்பவரின் முதலாவது மொழியின், இரண்டாவது மொழியின் *நிலைத்தன்மையயும் ஆழத்தையும்* பொறுத்தது என்பதை வலியுறுத்துகிறது. மூன்றாவது மொழியைக் கற்பதற்குத் தேவையான மொழியுதவி அமைப்பை உருவாக்க, மூளைக்கு வலுவான அடித்தள மொழிகள் தேவை.
   இந்தியாவில், தேசிய சாதனைநிலை ஆய்வுகள், கல்விநிலை ஆண்டு அறிக்கை போன்றவை, அதிக எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு முதலாவது மொழி (வட்டார மொழி), இரண்டாவது மொழி (வழக்கமாக ஆங்கிலம்) ஆகிய இரண்டிலும் குறைபாடு உடைய திறன் அடிப்படை நிலவுவதைத் தொடர்ந்து காட்டுகின்றன. இத்தகைய மாணவர்களுக்கு, மூன்றாம் மொழியைக் கட்டாயமாகக் கற்பிப்பது அறிதிறன் மிகைச் சுமையை ஏற்படுத்துகிறது. இது மொழிகளுடைய இலக்கண, சொற்களஞ்சியக் குழப்பம், ஏற்கனவே பலவீனமான முதலாவது, இரண்டாவது மொழித் திறன்கள் மேலும் சிதைதல் போன்ற தீங்கான விளைவுகளுக்கு வழிவகுக்கிறது.

2. *மொழி வகைமை வேறுபாடுகள் முக்கியமானது*: "மொழி வகைமை முதன்மை மாதிரி" (Typological Primacy Model – Rothman et al.) என்கிற கோட்பாடு, புதிய மூன்றாம் மொழியைக் கற்க, அம்மொழிக்கு மிக ஒத்திருக்கும், ஏற்கனவே அறிந்துள்ள மொழியை 'வார்ப்புரு'வாக மூளை பயன்படுத்துகிறது என்று விளக்குகிறது. இதன்படி நோக்கினால், இந்தியாவில் இந்தியை மூன்றாம் மொழியாகக் கற்கும் போது, சமமற்ற கற்றல் சுமை ஏற்படுகிறது:
   - *எளிமையாகக் கற்றுக்கொள்ளக் கூடியவர்கள்*: இந்தோ–ஆரிய மொழிகளைப் பேசுபவர்களுக்கு (எ.கா: மராத்தி, பஞ்சாபி, வங்காளம்), இந்தி அவர்களின் முதலாவது மொழியுடன் சொற்களஞ்சியம், இலக்கணம், ஒலியியல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அளவில் மிக நெருக்கமானதாக உள்ளது. "வார்ப்புரு" மாதிரி ஒத்துப்போகிறது, அறிதிறன் சுமை குறைவாக உள்ளது.

- *எளிமையாகக் கற்றுக்கொள்ள இயலாதவர்கள்*: திராவிடம் (தமிழ்), ஆஸ்ட்ரோ–ஆசியாடிக் (சந்தாலி), அல்லது சீன–திபெத்திய (மிசோ) மொழிகளைப் பேசுபவர்களுக்கு, இந்தி அவர்களின் முதலாவது மொழிக்கு மொழி அளவில் மிகவும் தொடர்பற்ற நிலையில் உள்ளது. இதனால், மூளை, பயன்படுத்தக்கூடிய "வார்ப்புரு" மாதிரியைக் கண்டுபிடிக்க முடியாது. அதனால் அறிதிறன் சுமை மிக அதிகமாக உள்ளது.

3. *இரண்டாம் மொழியின் நிலை காரணி*: பார்டெல் (Bardel), ஃபால்க் (Falk) ஆகியோரின் கூற்றுப்படி, மூளை மொழிகளை *தாய்மொழி அமைப்பு (முதலாம் மொழி), அயல்மொழி அமைப்பு (இரண்டாவது, மூன்றாவது மொழி)* என ஒழுங்கமைக்கிறது. இந்தக் வகைப்பாட்டின் காரணமாக, ஒரு மூன்றாவது மொழியைக் கற்கும்போது இரண்டாவது மொழியை இயல்புநிலை "உதவி அமைப்பாக" கைகொள்கிறது. இந்தியாவில், இரண்டாம் மொழி (ஆங்கிலம்) பெரும்பாலும் மோசமாகக் கற்பிக்கப்படுவதால், அதன் பிழைகள் மூன்றாவது மொழிக்குள் பரவி, மூன்றாம் மொழிக் கற்றலை மேலும் மோசமாக்குகின்றன.

சுருக்கமாகக் கூறினால், முதலாவது மொழியில், இரண்டாவது மொழியில் பலவீனமாக இருக்கும்போது, மூன்றாவது மொழியை அறிமுகப்படுத்துவது உதவி செய்வதைவிட, அதிகமாகத் தீங்கு விளைவிக்கிறது. ஆயினும், தேசிய கல்விக் கொள்கை 2020 அறிக்கை, இந்த ஆராய்ச்சி முடிவுகளை அறிந்ததாகவோ அல்லது அக்கறை கொண்டதாகவோ தெரியவில்லை.

பரிந்துரை 5

தெளிவான நன்மைகள் அளிக்காத, அறிதிறன், நிதி, செயல்பாட்டு நிலைமைகள் குறித்த அறியாமை நிலவுகின்ற மும்மொழிக் கொள்கை வெளிப்படையான கொள்கை வகுப்பு தோல்வி என்பதை ஏற்று, இந்தியா வெறுமனே மும்மொழிப் பயிற்சி அளிப்பது என்பதிலிருந்து விலக வேண்டும். பொருளாதார வாய்ப்புக்கும் உலகளாவிய போட்டித்திறனுக்குமாக ஆங்கிலம், பண்பாட்டுப் பாதுகாப்புக்கும் பொருத்தமான உள்ளூர் ஆளுகைக்குமாக வட்டார மொழி / தாய்மொழி ஆகியவற்றில் சிறந்த திறன் பெறும் வகையில் இருமொழிப் பயிற்சி அளிப்பது என்பதை நோக்கிச் செல்ல வேண்டும். எந்தவொரு கூடுதல் மொழியும், மாணவர் விருப்பத்தாலும் வாழ்க்கைச் சூழலாலும் விளைந்த தன்னார்வத் தேர்வாக இருக்க வேண்டும்; நவீன இணையக் கருவிகள்

வழியாக நெகிழ்வாகக் கற்றுக்கொள்ள வேண்டும். மூன்றாம் மொழியைக் கல்விமுறையில் கடுமையான வழியில் கட்டாயமாகத் திணிக்கக் கூடாது.

VI. 1950–க்குப் பிந்தைய அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள்

மொழி குறித்த ஏற்பாடுகள் அரசமைப்புச் சட்ட அவையில் மிகக் கடுமையான விவாதங்களைத் தூண்டின என்பதையும், இந்திக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமையையும் இந்தியைப் பரப்ப ஒன்றியம் மேற்கொண்ட முயற்சிகளும் குறித்து தொடர்ந்து பதற்றங்கள் நிலவி வருகின்றன என்பதையும் கருத்தில் கொண்டால், 1950–க்குப் பிறகு இந்த ஏற்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மிக குறைவாக உள்ளன என்பது வியப்பை அளிக்கிறது.

1. பகுதி XVII: பாதுகாப்பு வழிமுறைகளை வலுப்படுத்துதல்

முக்கிய ஏற்பாடுகளான அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 343 முதல் 349 வரையிலும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 351–இலும், சிறிதுகூட மாற்றப்படாமல் உள்ளன. ஒன்றியத்தின் தேவைகளுக்காக ஆங்கிலம் காலவரையின்றித் தொடர்வது, அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் வழியாக அல்லாமல், 1963–ஆம் ஆண்டு *ஆட்சி மொழிகள் சட்டம்* மூலமே நடைமுறைப்படுத்தப்பட்டது; இந்தச் சட்டம் 1967–ஆம் ஆண்டு திருத்தத்தின் மூலம் மேலும் வலுப்படுத்தப்பட்டது. இதன் மூலம் இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரை ஆங்கிலம் பயன்பாட்டில் இருக்கும் என்று உறுதி செய்யப்பட்டது.

இந்த இயலின் பகுதி III–இல் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட இரண்டு முக்கியமான அரசமைப்புச் சட்டப் பிரிவுகள், *ஏழாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்* (1956) வழியாக சேர்க்கப்பட்டன:

- *அரசமைப்புச் சட்டப் பிரிவு 350A*: மொழிச் சிறுபான்மையின குழந்தைகளுக்குத் தொடக்க கல்வியைத் தாய்மொழி வழி கற்பிப்பதற்குப் போதுமான வசதிகளை வழங்க ஒவ்வொரு மாநிலமும், உள்ளாட்சி அமைப்பும் முயற்சி செய்ய வேண்டும் என்று கட்டளை இடுகிறது.
- *அரசமைப்புச் சட்டப் பிரிவு 350B*: மொழிச் சிறுபான்மையினருக்கான சிறப்பு அதிகாரி என்கிற பதவியை உருவாக்கியுள்ளது. இவர் மொழிச் சிறுபான்மையினருக்கான

பாதுகாப்பு வழிமுறைகளை ஆராய்ந்து, ஆண்டுதோறும் குடியரசுத் தலைவரிடம் அறிக்கை அளிக்கும் பணியை மேற்கொண்டுள்ளார்.

2. அரசமைப்புச் சட்டப் பிரிவு 394A: அரசமைப்புச் சட்டத்தின் அதிகாரபூர்வமான இந்தி மொழியாக்கம்

ஐம்பத்தெட்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் (1987), அரசமைப்புச் சட்டப் பிரிவு 394Aவைச் சேர்த்தது. இது அரசமைப்பின் அதிகாரபூர்வ இந்தி மொழியாக்கத்தை வெளியிடுவதற்கு குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளித்தது. இது இந்தி மொழியின் அரசமைப்புச் சட்டத் தகுதிநிலையை அடையாள நிலைமையிலும், ஆனால் வலுவான வகையிலும் உயர்த்திக் காட்டுகின்றது.

3. அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 120, 210: ஆங்கிலம் தொடர்தல்

அரசமைப்புச் சட்டப் பிரிவு 120(2), நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் நீட்டிக்கப்பட்டாவிட்டால், 15 ஆண்டுகளுக்குப் பிறகு நாடாளுமன்றத்தில் ஆங்கிலப் பயன்பாடு முடிவுக்கு வரும் என்று எதிர்நோக்கியது. நாடாளுமன்றம் 1963ஆம் ஆண்டு *ஆட்சி மொழிகள் சட்டம்* மூலம் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தியது. இதன் மூலம் நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்காக ஆங்கிலப் பயன்பாடு காலவரையின்றிப் பாதுகாக்கப்பட்டது.

இதேபோல், அரசமைப்புச் சட்டப் பிரிவு 210(2), மாநிலச் சட்டம் மூலம் ஆங்கிலப் பயன்பாட்டைத் தொடரப்படாவிட்டால், 15 ஆண்டுகளுக்குப் பிறகு மாநிலச் சட்டமன்றங்களில் ஆங்கிலம் நிறுத்தப்பட வேண்டும் என்று கூறுகிறது. 1965க்குப் பிறகு உருவாக்கப்பட்ட மாநிலங்களுக்கு, இந்த அரசமைப்புச் சட்டப் பிரிவு பொருத்தமற்று உள்ளது. அத்தகைய மாநிலங்களான இமாச்சலப் பிரதேசத்திற்கு (1971), மணிப்பூர், மேகாலயா, திரிபுரா (1972) ஆகியவற்றுக்கு 25 ஆண்டுகள்; மிசோரம், அருணாசலப் பிரதேசம், கோவா (1987) ஆகியவற்றுக்கு 40 ஆண்டுகள் என நாடாளுமன்றம் அரசமைப்புச் சட்டப் பிரிவு 210(2)ஐ திருத்தி, நீட்டிப்புகளை வழங்கியது.

4. அரசமைப்புச் சட்டப் பிரிவு 30: சிறுபான்மையினர் நிறுவனங்களைப் பாதுகாத்தல்

நாற்பத்து நான்காவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் (1978), அரசமைப்புச் சட்டப் பிரிவு 30(1A)ஐ சேர்த்தது. இது சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களைக் கட்டாயமாகக்

கையகப்படுத்தும்போது, அந்த நிறுவனத்தின் உரிமைகளைப் பாதுகாக்கப் போதுமான இழப்பீடு வழங்க வேண்டும் என்று உறுதி செய்கிறது.

5. எட்டாவது அட்டவணை: விரிவுபடுத்துதலும் இடமளித்தலும்

எட்டாவது அட்டவணை 1950–இல் 14 மொழிகளிலிருந்து, இன்று 22 மொழிகளாக விரிவடைந்து உள்ளது. இந்தச் சேர்த்தல்கள் பெரும்பாலும் இறுக்கமான மக்கள்தொகை அளவுகோல்களைக் காட்டிலும், அரசியல் ஏற்பையே காட்டுக்கின்றன.

- *இருபத்து ஒன்றாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் (1967): சிந்தி மொழியைச்* சேர்த்தது.
- *எழுபத்து ஒன்றாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் (1992): கொங்கணி, மணிப்புரி, நேபாளி* ஆகியவற்றைச் சேர்த்தது.
- *தொண்ணூற்று இரண்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் (2003): போடோ, டோக்ரி, மைதிலி, சந்தாலி* ஆகியவற்றைச் சேர்த்தது.
- *தொண்ணூற்று ஆறாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் (2011): ஒரியா என்பதை ஒடியா* என மாற்றியது.

VII. கடந்தகால ஆணையங்களின் பார்வைகள்

ராஜமன்னார் குழு (1969–71), சர்க்காரியா ஆணையம் (1983–88), பூஞ்சி ஆணையம் (2007–10) ஆகியவை மொழிச்சிக்கலை ஆழமாக ஆய்வு செய்தன.

ராஜமன்னார் குழு (Rajamannar Committee)

நாடு தழுவிய முடிவு எடுப்பதில் மாநிலங்களுக்கு அர்த்தமுள்ள பங்கு இல்லாத காலத்திலும், மாநிலங்களின் மொழிவழி மறுசீரமைப்பு வழியாக இந்தியக் கூட்டாட்சி அமைப்பை அடிப்படையான வகையில் மாற்றியமைப்பதற்கு முந்தைய காலத்திலும், மொழி குறித்த அரசமைப்புச் சட்ட ஏற்பாடுகள் இயற்றப்பட்டன என்று இக்குழு வலியுறுத்திக் கூறியது. மொழிவழி மாநிலங்கள் இப்போது அரசமைப்புச் சட்ட அளவிலான நடப்பு என்பதால், ஒன்றியத்தின் மொழிக் கொள்கை கண்டிப்பாக மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்று இக்குழு வாதிட்டது.

இந்தி மட்டுமே ஒன்றியத்தின் ஒரே ஆட்சி மொழியாக இருக்கப் பொருத்தமானது என்கிற எடுகோளை இக்குழு கேள்விக்கு உள்ளாக்கியது. கிரான்வில் ஆஸ்டினின் ஆய்வை மேற்கோள் காட்டி, நாடுதழுவிய பயன்பாட்டிற்குத் தேவையான அறிவியல், தொழில்நுட்ப, நிர்வாக, அரசியல் சொற்களஞ்சியம் இந்தி மொழியில் இல்லை என்றும், எந்த வகையிலும் தமிழ் அல்லது வங்காளம் போன்ற மொழிகளைவிட இந்தி மொழி "வளர்ச்சி அடைந்தது" அல்ல என்றும் குறிப்பிட்டது. கனடா, சுவிட்சர்லாந்து, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் மொழிப் பன்மைத்துவம் அரசமைப்புச் சட்ட அளவில் பாதுகாக்கப்பட்டுள்ளது போல, இந்தியாவைப் போன்ற பன்மொழி கூட்டாட்சி நாட்டில், எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் மொழிக் கொள்கையை ஏற்க வேண்டும் என்று இக்குழு வலியுறுத்தியது.

ஆங்கிலத்தின் உறுதிப்பாடற்ற நிலை குறித்து, இக்குழு அதிக அக்கறை கொண்டது. ஆங்கிலத்தின் தொடர்ச்சியான துணை ஆட்சி மொழிப் பயன்பாடு, சாதாரண நாடாளுமன்றப் பெரும்பான்மை வழியாக திருத்தப்படக்கூடிய சட்டமான, 1963–ஆம் ஆண்டு ஆட்சி மொழிகள் சட்டத்தின் அடிப்படையிலேயே முழுமையாக அமைந்திருந்தது. இது, ஒன்றியத்தின் மொழிச் சமநிலையை பாதுகாப்பற்ற ஆபத்தான நிலையில் உள்ளது என்று இக்குழு எச்சரித்தது. ஆங்கிலத்தைத் தொடராமல் இருக்க எந்தவொரு நடவடிக்கையும் ஆழமான தேசியப் பிளவைத் தூண்டும்.

இக்குழுவின் முக்கியமான பரிந்துரைகள் பின்வருமாறு:

- ஆங்கிலம் ஒன்றியத்தின் அலுவல் மொழியாகவும், ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையேயும், *மாநிலங்களுக்கு இடையேயும்* இணைப்பு மொழியாகவும் தொடர்ந்து நீடிக்க வேண்டும்.
- எந்தவொரு மாநிலத்திலும் உள்ள ஒன்றிய அரசாங்க அலுவலகங்கள், அந்த மாநிலத்தின் அலுவல் மொழியில் பொதுமக்களுடன் அலுவல் பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஒரு மாநிலத்தில் பணியமர்த்தப்படும் ஒன்றிய அரசுப் பணியாளர்கள் அந்த மாநிலத்தின் அலுவல் மொழியில் அறிமுகம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
- நாடாளுமன்ற உறுப்பினர்கள் எட்டாவது அட்டவணையில் உள்ள எந்த மொழியிலும் நாடாளுமன்றத்தில் உரையாற்ற முடிவதாக இருக்க வேண்டும்.
- தேசிய ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கு உச்சநீதிமன்றத்தின், உயர்நீதிமன்றங்களின் மொழியாக ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும்.

சர்க்காரியா ஆணையம் (Sarkaria Commission)

மொழி உணர்வுபூர்வமாகக் கையாளப்படும் விதத்தைப் பொறுத்து, ஒன்றிணைக்கவோ அல்லது பிளவுபடுத்தவோ முடியும் என்பதை இந்த ஆணையம் ஏற்றுக்கொண்டது. இந்தியாவில், மொழிச் சிக்கல் குறிப்பிடத்தக்க அளவு சர்ச்சையையும் கசப்பையும் உருவாக்கியுள்ளது என்று ஒப்புக்கொண்டது. ஆதிக்கக் குழுவின் மொழியைத் திணிக்கும் முயற்சிகள், பண்பாட்டு, பொருளாதார ஆதிக்கத் திணிப்பு என்று பரவலாகக் கருதப்படுகின்றது என இந்த ஆணையம் எச்சரித்தது. இந்தி பேசாத மாநிலங்களில் பொது அறிவிப்புகளை இந்தியில் மட்டுமே வெளியிடுவது போன்ற நடைமுறைகள் மனக் கசப்பை அதிகப்படுத்தியது என குறிப்பிட்டது.

அதிக அளவில் சமஸ்கிருதமயமாக்கப்பட்ட, *சுத்த இந்தியை* ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்டு, அனைத்து இந்திய மொழிகளிலிருந்தும் இந்துஸ்தானியிலிருந்தும் சொற்களஞ்சியத்தை உள்வாங்கிக் கொள்வதன் மூலம் இந்தி மொழி வளர்ச்சி அடைய வேண்டும் என்கிற அரசமைப்புச் சட்டப் பிரிவு 351–இன் ஆணையைப் புறக்கணித்தது, இந்த ஆணையத்தின் மிக முக்கியமான விமர்சனங்களில் ஒன்று. இந்த பண்டித இந்தி மொழி, இந்தி பேசாத பகுதிகளில் அவநம்பிக்கையையும் மனக்கசப்பையும் உருவாக்கியது.

இந்த ஆணையத்தின் முக்கியமான பரிந்துரைகள் பின்வருமாறு:

- மும்மொழிக் கொள்கையை நேர்மையுடன் செயல்படுத்தப்பட வேண்டும்.
- ஒன்றிய அலுவலகங்களில், அனைத்துப் பொதுமக்களுடன் தொடர்புகொள்ளும் பணிகளும் உள்ளூர் மொழியில் இருக்க வேண்டும். படிவங்களும் அறிவிப்புகளும் இருமொழிகளில் வெளியிடப்பட வேண்டும்.
- மொழிச் சிறுபான்மையினருக்கான ஆணையர் நிறுவனத்திற்குப் புத்துயிர் ஊட்டப்பட வேண்டும். பணியிடங்கள் நிரப்பப்பட்டு, நடத்தை விதிகள் நடைமுறைபடுத்தப்பட வேண்டும்.
- ஒன்றியம் இந்தியை மட்டும் அல்லாமல், அனைத்து அட்டவணை மொழிகளையும் ஊக்குவிக்க வேண்டும். மொழி குறித்த விசயங்களில் கட்டுப்பாட்டுடன் செயல்பட வேண்டும்.
- மொழி தொடர்பான பதற்றங்களைத் தணிக்க மாநிலங்கள் உறவு மன்றம், மண்டல மன்றங்கள் போன்ற மன்றங்களைப் பயன்படுத்த வேண்டும்.

பூஞ்சி ஆணையம் (Punchhi Commission)

சிறுபான்மை மொழிகளில் கல்விக்கான வாய்ப்பு பெயரளவிலானதாக இல்லாமல், உண்மையானதாக உறுதிப்படுத்த அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 29, 30ஐ வலுவாகச் செயல்படுத்துவதற்கும், பண்பாட்டு – சிறுபான்மை இன உரிமைகளை உறுதிப்படுத்துவதில் அதிக அளவில் அரசமைப்புச் சட்டத் தெளிவுக்கும், இந்த ஆணையம் முக்கியத்துவம் அளித்தது. அரசமைப்பின் செயல்பாட்டை மறுஆய்வு செய்வதற்கான முந்தைய தேசிய ஆணையம் (வெங்கடாசலையா ஆணையம்), அரசமைப்புச் சட்டப் பிரிவு 347–இல் உள்ள "மக்கள் தொகையின் கணிசமான விகிதம்" என்கிற சொற்றொடருக்குப் பதிலாக "மக்கள் தொகையில் பத்து விழுக்காட்டிற்கும் குறையாமல்" என்கிற சொற்களை மாற்றீடு செய்ய வேண்டும் என்று அளித்த பரிந்துரையை இந்த ஆணையம் ஆதரித்தது.

VIII. அரசமைப்பும் மொழிச்சிக்கலும்

பொதுவாக நிலவும் தவறான கருத்துக்கு மாறாக, அரசமைப்பு இந்தியை *தேசிய* மொழி என அறிவிக்கவில்லை. அதற்குப் பதிலாக, ஒன்றிய நிர்வாகம், மாநில நிர்வாகம், அரசாங்கங்களுக்கு இடையேயான தொடர்பு, உயர் நீதித்துறை, நாடாளுமன்றம், மாநிலச் சட்டமன்றங்கள், மொழிச் சிறுபான்மையினரின் உரிமைகள் போன்ற பல களங்களில், அரசமைப்பு முதன்மையாகப் பகுதி XVII (அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 343–351), வேறு சில அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் (29, 30, 120, 210) மூலம் மொழிப் பயன்பாட்டு முறையை வழங்கியுள்ளது. ஆயினும், மொழி சமநிலையையும் சமநீதியையும் மீட்டெடுக்கத் தேவையான அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் இயல்பாகவே புலப்படுகின்றன.

அ. ஒன்றியத்தின் ஆட்சி மொழி

அரசமைப்புச் சட்டப் பிரிவு 343(1), தேவநாகரி எழுத்தில் எழுதப்படும் இந்தியை ஒன்றியத்தின் ஆட்சி மொழி என அறிவிக்கிறது. மொழி அளவிலான பன்முகத்தன்மை கொண்ட, புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாட்டின் மொழி நிலைமைகளை ஏற்று, அரசமைப்புச் சட்டப் பிரிவு 343(2), ஆங்கிலம் முன்பு பயன்படுத்தப்பட்ட அனைத்து அலுவல் நோக்கங்களுக்காகவும் பதினைந்து ஆண்டுகள், அதாவது 1965 ஜனவரி 26 வரை தொடர்ந்து பயன்படுத்த அனுமதித்தது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 343(3), குறிப்பிட்ட நோக்கங்களுக்காக அந்தக் காலத்திற்குப்

பிறகும் ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன்படுத்தச் சட்டம் இயற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளித்தது.

ஆங்கிலப் பயன்பாட்டின் காலக்கெடு நெருங்கும்போது, பரவலான இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள், குறிப்பாகத் தமிழ்நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள், ஆங்கிலத்தை மாற்றுவது, ஒன்றியத்தை நிலைகுலையச் செய்யும் என்பதைத் தெளிவுபடுத்தின. நாடாளுமன்றம் அரசமைப்புச் சட்டப் பிரிவு 343(3)ஐ பயன்படுத்தி, 1963–ஆம் ஆண்டு *ஆட்சி மொழிகள் சட்டத்தை* இயற்றியது. இது பின்னர் 1967–ஆம் ஆண்டு திருத்தத்தின் மூலம் வலுப்படுத்தப்பட்டது. இந்தச் சட்டத்தின் பிரிவு 3, இந்திக்கு இணையாக ஆங்கிலத்தை ஒன்றியத்தின் அனைத்து அலுவல் நோக்கங்களுக்காகவும், அரசாங்கங்களுக்கு இடையேயான தொடர்புகளுக்காகவும், நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்காகவும் காலவரையின்றித் தொடர அனுமதித்தது. பிரிவு 3(5) குறிப்பிட்ட பாதுகாப்பைச் சேர்த்தது: (i) இந்தியை அலுவல் மொழியாக ஏற்றுக்கொள்ளாத *ஒவ்வொரு* மாநிலமும் (ii) நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஆங்கிலத்தை கைவிடுவதற்கான தீர்மானங்களை நிறைவேற்றும் வரை, ஆங்கிலப் பயன்பாடு நிறுத்தப்படக்கூடாது.

நடைமுறையில், இந்த நடவடிக்கைகள், ஆங்கில மொழிப் பயன்பாடு தற்காலிகமான நிர்வாக வசதி என்பதிலிருந்து, ஆங்கில மொழியை ஒன்றியத்தின் அரைகுறையான நிரந்தரத் துணை ஆட்சி மொழியாக மாற்றின. ஆயினும், இந்தப் பாதுகாப்பு முற்றிலும் சட்ட அளவிலானதோ, அரசமைப்புச் சட்ட அளவிலானதோ அல்ல. எனவே, இந்நிலை ஆபத்தானது ஆகும். முதலாவதாக, 1963–ஆம் ஆண்டு *ஆட்சி மொழிகள் சட்டம்* சாதாரண நாடாளுமன்றப் பெரும்பான்மை மூலம் திருத்தப்படலாம் அல்லது நீக்கம் செய்யப்படலாம். இரண்டாவதாக, பிரிவு 3(5)–இல் உள்ள பாதுகாப்பைக் கூடத் தவிர்க்க முடியும்: மாநிலம் அரசமைப்புச் சட்டப் பிரிவு 356–இன் கீழ் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் இருக்கும்போது, *அரசமைப்புச் சட்டப் பிரிவு 370 (2023)*[11] *குறித்த குடியரசுத் தலைவர் கருத்துக் கேட்பு வழக்கில்* உச்ச நீதிமன்றம் கூறியுள்ளபடி, நாடாளுமன்றம் மாநிலச் சட்டமன்றத்திற்குள் "நுழைந்து", மாநிலத்தின் சார்பாக ஆங்கிலத்தைக் கைவிடுவது குறித்த தீர்மானங்களை நிறைவேற்றலாம். இந்த ஆபத்து, எவ்வளவு தொலைவில் இருந்தாலும், அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பு அளிப்பைத் தேவையானதாக ஆக்குகின்றது.

---

[11] 2023 INSC 1058.

பரிந்துரை 6

அரசமைப்புச் சட்டப் பிரிவு 343ஐ பின்வருமாறு திருத்த வேண்டும்:

1. 1963–ஆம் ஆண்டு *ஆட்சி மொழிகள் சட்டம்* மீதான ஆங்கிலத்தின் சார்புநிலையை நீக்கி, சாதாரண நாடாளுமன்றப் பெரும்பான்மைகள், நிர்வாக நடவடிக்கைகளின் வரம்பிற்கு அப்பாற்பட்டு, ஆங்கிலத்தை ஒன்றியத்தின் நிரந்தரமான ஆட்சிமொழியாக அரசமைப்புச் சட்டத்தில் நிலைநிறுத்த வேண்டும்.
2. ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்மாதிரியில், அனைத்து எட்டாவது அட்டவணை மொழிகளையும் ஒன்றியத்தின் ஆட்சி மொழிகளாக அறிவிக்க வேண்டும். இதன் மூலம் இந்தியாவின் மொழிப் பன்மைத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். நவீன செயற்கை நுண்ணறிவுத் திறன் கொண்ட மொழிபெயர்ப்புக் கருவிகள், இவ்வாறு செய்வதை முற்றிலும் சாத்தியமாக்குகின்றன. நிர்வாக நடைமுறைக்காக, ஒன்றியத்தின் தகவல்தொடர்புகள் மாநிலங்களுக்கு ஆங்கிலத்திலும், பெறும் மாநிலத்தின் ஆட்சி மொழியிலும் மட்டுமே இருந்தால் போதுமானது. அனைத்து ஆட்சி மொழிகளையும் ஒவ்வொரு சூழலிலும் பயன்படுத்தத் தேவையில்லை.
3. புதிதாகச் சேர்க்கப்பட்ட எட்டாவது அட்டவணை மொழிகள், ஒன்றிய அளவில் முழுமையான ஆட்சி மொழித் தகுதியைப் பெறுவதற்கு முன், அவற்றின் வளர்ச்சிக்காக பதினைந்து ஆண்டுகால மாறும் காலத்தை வழங்க வேண்டும்.

ஆ. மாநில ஆட்சி மொழி

அரசமைப்புச் சட்டப் பிரிவு 345, மாநிலச் சட்டமன்றத்திற்கு, சட்டம் மூலம், "மாநிலத்தில் பயன்பாட்டில் உள்ள மொழிகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை *அல்லது இந்தியை*" மாநில ஆட்சி மொழிகளாகத் ஏற்றுக்கொள்ள அதிகாரம் அளிக்கிறது. அத்தகைய சட்டம் இயற்றப்படும் வரை, அரசமைப்பிற்கு முன் ஆங்கிலப் பயன்பாடு அலுவல் நோக்கங்களுக்காகத் தொடர்ந்து பயன்படுத்தப்படும்.

இந்தச் சொற்றொடரமைப்பு 1956–ஆம் ஆண்டின் மொழிவழி மறுசீரமைப்பிற்கு முந்தையது. மாநிலங்கள் மொழிவழி அடிப்படையில் மறுசீரமைக்கப்பட்ட பிறகு, ஆட்சி மொழிகள் இயல்பாகவே, உண்மையில் பயன்பாட்டில் இருந்த மொழிகளிலிருந்து உருவாயின. இந்தச் சூழலில், வேறு எந்த அட்டவணை மொழிக்கும் வழங்கப்படாத சிறப்புரிமையான

"அல்லது இந்தி" என்கிற வெளிப்படையான கூடுதல் சொற்றொடர், இந்தி பேசும் மாநிலங்களுக்குத் தேவையற்றது. மேலும், மாநிலத்தோடு தொடர்பு இல்லாத மொழியை ஏற்றுக்கொள்ள உதவும் இந்தி பேசாத மாநிலங்களுக்குப் பொருத்தம் இல்லாதது ஆகும்.

பரிந்துரை 7

அரசமைப்புச் சட்டப் பிரிவு 345ஐ திருத்தி, "அல்லது இந்தி" என்கிற சொற்களை நீக்கி, மாநிலங்கள், தங்கள் மாநிலத்தில் பயன்பாட்டில் உள்ள மொழிகளை மட்டுமே தங்கள் ஆட்சி மொழியாக (/களாக) ஏற்றுக்கொள்ளலாம் என்று தெளிவுபடுத்த வேண்டும்.

இ. அரசாங்கங்களுக்கு இடையே தொடர்புக்கான ஆட்சி மொழி

அரசமைப்புச் சட்டப் பிரிவு 346, "ஒன்றியத்தில் அலுவல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்த அதிகாரம் அளிக்கப்பட்ட" மொழி ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையிலான தொடர்புகளுக்காகவும், மாநிலங்களுக்கு இடையேயான தொடர்புகளுக்காகவும் பயன்படுத்தப்படும் என்று கூறுகிறது. இந்த அரசமைப்புச் சட்டப் பிரிவு, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் தங்களுக்குள் இந்தியைப் பயன்படுத்தப் பரஸ்பரம் ஒப்புக்கொள்ள அனுமதிக்கிறது.

"பயன்பாட்டிற்கான அதிகாரம்பெற்ற மொழி" குறித்த மெய்யான தெளிவு, அரசமைப்புச் சட்டப் பிரிவு 343ஐயும், மேலும் முக்கியமாக *1963–ஆம் ஆண்டு ஆட்சி மொழிகள் சட்டத்தின்* பிரிவு 3ஐயும் சார்ந்துள்ளது. இந்தச் சட்டத்தின் பிரிவு 3(1), ஒன்றியத்திற்கும் இந்தியை ஏற்றுக்கொள்ளாத எந்தவொரு மாநிலத்திற்கும் இடையேயான தொடர்புக்கு ஆங்கிலத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும், இந்தி பேசும் மாநிலங்கள் இந்தி பேசாத மாநிலங்களுடன் தொடர்புகொள்ளும்போது ஆங்கில மொழியாக்கம் கட்டாயமாக இணைக்கப்பட வேண்டும் என்றும் ஆணையிடுகிறது. இந்தி பேசாத மாநிலம், விரும்பினால், ஆங்கில மொழியாக்கம் இல்லாமல் இந்தியிலேயே தொடர்புகொள்ளலாம். முன்னரே குறிப்பிட்டது போல, பிரிவு 3(5)–இல் உள்ள பாதுகாப்பு சட்ட அளவிலானதே தவிர, அரசமைப்புச் சட்ட அளவிலானது அல்ல.

பரிந்துரை 8

அரசமைப்புச் சட்டப் பிரிவு 343–இன் கீழ் (பரிந்துரை 6ஐ பார்க்க) ஒன்றியத்தின் நிரந்தரமான ஆட்சி மொழியாக நிலைநிறுத்தப்பட்ட ஆங்கிலம், அரசமைப்புச் சட்டப் பிரிவு 346ஐ முழுமையாகத் திருத்தி

ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையிலான அனைத்து அலுவல் தொடர்புகளுக்கும், மாநிலங்களுக்கு இடையேயான தொடர்புகளுக்கும் நிரந்தரமான இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என்று உறுதிப்பாடு அளிக்க வேண்டும். கூடுதலாக, கடிதம் பெறும் மாநிலத்தின் ஆட்சி மொழி பொருத்தமான இடங்களில் துணை இணைப்பு மொழியாகப் பயன்படுத்தப்படலாம்.

ஈ. அரசமைப்புச் சட்டப் பிரிவு 347: மாநில மக்கள்தொகையின் ஒருபிரிவினரால் பேசப்படும் மொழிகளுக்கான சிறப்பு ஏற்பாடு

மாநிலத்தின் "கணிசமான விகிதத்தினர்" விரும்பினால், குறிப்பிட்ட மொழியை குறிப்பிட்ட நோக்கங்களுக்காக கூடுதல் ஆட்சி மொழியாக ஏற்க வேண்டும் என்று மாநிலத்திற்கு ஆணையிட குடியரசுத் தலைவருக்கு அரசமைப்புச் சட்டப் பிரிவு 347 அதிகாரம் அளிக்கிறது. இந்த ஏற்பாடு, 1956–ஆம் ஆண்டு மாநிலங்களின் மொழிவழி மறுசீரமைப்பிற்கு முன்பே உருவாக்கப்பட்டது. அப்போது மாநிலங்கள் பலவற்றில் பெரிய மொழிச் சிறுபான்மையினர் இருந்தனர். மறுசீரமைப்பிற்குப் பிந்தைய காலத்தில், இந்த அதிகாரம் தேவையற்றது, தவறாகப் பயன்படுத்தப்படக்கூடியது, இந்தி அல்லது வேறு எந்த மொழியையும் மாநிலத்தின் இசைவு இல்லாமல் திணிக்கும் மறைமுகமான அரசமைப்புச் சட்ட வழிமுறை ஆகும். குறிப்பாக, துணை ஆட்சி மொழிகளை ஏற்பது குறித்த முடிவு எடுக்கும் அதிகாரம், அரசமைப்புச் சட்டப் பிரிவு 345–இன் கீழ் ஒன்றியத்திடம் அல்லாமல், மாநிலச் சட்டமன்றத்திடமே இருக்க வேண்டும்.

பரிந்துரை 9

அரசமைப்புச் சட்டப் பிரிவு 347ஐ நீக்க வேண்டும். இது இப்போது காலப் பொருத்தமற்றது. மாநில சுயாட்சியை மீறுவதால், 1956க்குப் பிந்தைய மொழிவழி மாநிலங்களுக்குத் தேவையற்றது.

உ. உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றங்கள், சட்ட வரைவு ஆகியவற்றில் பயன்படுத்தப்பட வேண்டிய மொழி

நாடாளுமன்றம் சட்டம் மூலம் வேறுவிதமாக வழங்காவிட்டால், உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றங்கள், அனைத்துச் சட்டங்கள், சட்ட வரைவுகள், சட்ட இயற்றும் முறைகள் ஆகியவற்றுக்காக ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதை அரசமைப்புச் சட்டப் பிரிவு 348 கட்டாயமாக்குகிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 348(2)–இன் கீழ், ஆளுநர் – குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவுடன் உயர்நீதிமன்ற *நடவடிக்கைகளில்* இந்தி அல்லது மாநிலத்தின் ஆட்சி மொழியைப்

பயன்படுத்த அனுமதிக்கலாம். ஆனால் இது "தீர்ப்பு, ஆணை அல்லது உத்தரவு" ஆகியவற்றுக்குப் பொருந்தாது. அவை ஆங்கிலத்திலேயே வழங்கப்பட வேண்டும்.

1963–ஆம் ஆண்டு *ஆட்சி மொழிகள் சட்டத்தின்* பிரிவு 7, ஆளுநருக்கு, மீண்டும் குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவுடன், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகள், ஆணைகள், உத்தரவுகள் ஆகியவற்றையும் இந்தி அல்லது மாநிலத்தின் ஆட்சி மொழியில் வெளியிட அனுமதிக்கிறது. *இதற்கு அதிகாரப்பூர்வமான ஆங்கில மொழியாக்கம் தேவை.*

இன்றுவரை, ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார் ஆகிய இந்தி பேசும் நான்கு மாநிலங்கள் மட்டுமே தங்கள் உயர்நீதிமன்றங்களில் இந்தியைப் பயன்படுத்த ஏற்பைப் பெற்றுள்ளன. தமிழ்நாடு, கர்நாடகா, குஜராத், மேற்கு வங்காளம், சத்தீஸ்கர் ஆகிய இந்தி பேசாத மாநிலங்களின் கோரிக்கைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டுள்ளன. இது மொழி சமச்சீரற்ற தன்மையை உருவாக்குகிறது.

பரிந்துரை 10

சட்டத்தின் ஆட்சி, நீதியின் நியாயமான நிர்வாகம் ஆகியவற்றிற்கு, இந்த களங்களில் தேசிய ஒருமைப்பாடு, தெளிவு, துல்லியம் இன்றியமையாதவை என்பதை ஏற்று, உச்சநீதிமன்றம், அனைத்து உயர்நீதிமன்றங்கள், சட்ட வரைவின் அனைத்து நோக்கங்கள் முதலானவற்றுக்காக ஆங்கிலத்தை நிரந்தரமாக நிலைநிறுத்த அரசமைப்புச் சட்டப் பிரிவு 348(1)ஐ திருத்த வேண்டும்.

வழக்கு தொடுப்பவர்களுக்கும் பொதுமக்களுக்கும் புரிதலையும், அர்த்தமுள்ள வகையில் மொழி அணுகல் வாய்ப்பையும் உறுதிசெய்ய, அரசமைப்புச் சட்டப் பிரிவு 348(2)ஐ திருத்தி, ஒவ்வொரு மாநிலமும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 348(1)(a)–இல் என்ன கூறப்பட்டு இருந்தாலும், குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவு தேவையில்லாமல், உயர்நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக மாநில ஆட்சி மொழியைப் பயன்படுத்தவும், தீர்ப்புகள், ஆணைகள், உத்தரவுகள் ஆகியவற்றை மாநிலத்தின் ஆட்சி மொழியில் வெளியிடவும் அனுமதிக்க வேண்டும். இதற்குத் துணைக் கருவியாக அதிகாரப்பூர்வமான ஆங்கில மொழியாக்கம் இணைக்கப்பட வேண்டும்.

ஊ. விண்ணப்பங்களை அளிப்பதற்கான மொழி

ஒன்றியம் அல்லது மாநில அதிகார அமைப்புகளுக்கு "ஒன்றியத்திலோ அல்லது மாநிலத்திலோ, சூழ்நிலையைப் பொறுத்து, பயன்படுத்தப்படும் மொழிகளில் ஏதேனும் ஒன்றில்" விண்ணப்பங்களை அளிக்க

அனைவருக்கும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 350 உரிமை அளிக்கிறது. எனினும், *பதில் அளிக்க வேண்டிய மொழி* குறித்து, இந்த அரசமைப்புச் சட்டப் பிரிவு ஒன்றும் கூறவில்லை. இந்த விடுபடல் மீண்டும் மீண்டும் மோதலை உருவாக்கியுள்ளது. குறிப்பாக ஒன்றிய அலுவலர்கள் இந்தியில் மட்டுமே பதிலளிக்கும்போது, இந்தி பேசாத குடிமக்கள் உரிமை மறுக்கப்படுகிறது. நிகழ்நேர மொழிபெயர்ப்புக் கருவிகள் உள்ள இந்தக் காலத்தில், அத்தகைய சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது, நடைமுறைக்கு உகந்ததும், நீண்ட கால தாமதத்திற்குப் பிறகேனும் செய்யப்பட வேண்டியதும் ஆகும்.

பரிந்துரை 11

ஒவ்வொரு ஒன்றிய அரசாங்க அலுவலகமும் குடிமக்களில் ஒருவரின் விண்ணப்பத்திற்குப் பதிலளிக்கும்போது, (i) அந்த விண்ணப்பத்தின் மொழி; (ii) அந்த மாநிலத்தின் அலுவல் மொழி; அல்லது (iii) ஆங்கிலம் ஆகியவற்றில் எம்மொழி குடிமக்களுக்குத் தெளிவு, வசதி, சமநீதியை உறுதிப்படுத்துகிறதோ, அந்த மொழியில் மட்டுமே பதிலளிக்க வேண்டும் என்று விதிக்கும் வகையில், அரசமைப்புச் சட்டப் பிரிவு 350ஐ திருத்தம் செய்ய வேண்டும்.

எ. இந்தி மொழியைப் பரப்புதலும் வளர்த்தலும்

1. *அரசமைப்புச் சட்டப் பிரிவு 344 – ஆணையமும் நாடாளுமன்றக் குழுவும்*

அரசமைப்புச் சட்டப் பிரிவு 344 இந்தியாவின் ஆட்சி மொழிக் கொள்கைக்கு வழிகாட்டவும், 1965க்குள் இந்தியை ஒன்றியத்தின் ஒரே ஆட்சி மொழியாக மாற்றுவதைக் கண்காணிக்கவும் இரு அடுக்கு வழிமுறையை உருவாக்கியது. இந்தி, ஆங்கிலம் ஆகியவற்றின் பயன்பாட்டை மதிப்பாய்வு செய்யவும், இந்தியின் பயன்பாட்டை விரிவாக்கப் பரிந்துரைக்கவும், ஆங்கிலப் பயன்பாட்டைக் குறைக்கப் பரிந்துரைக்கவும், 1955–ஆம் ஆண்டிலும் 1960–ஆம் ஆண்டிலும் ஆட்சி மொழி ஆணையங்களை நியமிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளித்தது. இந்த ஆணையங்களின் அறிக்கைகளை, அரசமைப்புச் சட்டப் பிரிவு 344(4)ன் கீழ் 30 உறுப்பினர் கொண்ட நாடாளுமன்றக் குழு ஆய்வு செய்ய வேண்டும்.

பி.ஜி. கேர் (1955–56) தலைமையில் ஒரு குழு மட்டுமே அமைக்கப்பட்டது. *1963–ஆம் ஆண்டு ஆட்சி மொழிகள் சட்டம்* ஆங்கிலப் பயன்பாட்டைக் காலவரையின்றித் தொடர அனுமதித்த பிறகு, மும்மொழிக் கொள்கை சட்டமானது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 344(4)–

இன் கீழ் உள்ள குழுவைப் போன்றே, 1963–ஆம் ஆண்டுச் சட்டத்தின் பிரிவு 4, ஆட்சி மொழிக் குறித்த நாடாளுமன்றக் குழுவை (Parliamentary Committee on Official Language) உருவாக்கியது. 1976–இல் உருவாக்கப்பட்ட இக்குழு, இப்போது ஒன்றிய அலுவலகங்களில் இந்தி மொழியின் பயன்பாட்டு நடைமுறையைக் கண்காணிக்கும் நிரந்தர அமைப்பாகப் பணியாற்றுகிறது.

பரிந்துரை 12

"ஆட்சி மொழிக் குறித்த ஆணையம் மற்றும் நாடாளுமன்றக் குழு (Commission and Committee of Parliament on official language)" குறித்த அரசமைப்புச் சட்டப் பிரிவு 344 இப்போது தேவையற்றது என்பதால், அது அரசமைப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

2. அரசமைப்புச் சட்டப் பிரிவு 351 – இந்தியைப் பரப்புவதற்கான வழிகாட்டுதல்

அரசமைப்புச் சட்டப் பிரிவு 351, இந்தி பரவலை ஊக்குவிக்கவும், இந்தியப் பண்பாட்டுக் கலவையின் வெளிப்பாடாக இந்தி மொழியை வளர்க்கவும் ஒன்றியத்திற்குக் கட்டளை இடுகிறது. இந்த அரசமைப்புச் சட்டப் பிரிவு, இந்துஸ்தானியிலிருந்தும் எட்டாவது அட்டவணை மொழிகளிலிருந்தும் சொற்களஞ்சியத்தை உள்வாங்கிக் கொள்வதன் மூலம் இந்தியைச் செழுமைப்படுத்த வேண்டும் என்று கூறுகிறது. ஆயினும், அந்த அரசமைப்புச் சட்டப் பிரிவின் மிகவும் முக்கியமான பகுதி, இந்தியின் சொற்களஞ்சியம் *"முதன்மையாக சமஸ்கிருதத்திலிருந்தும், இரண்டாம்பட்சமாக மற்ற மொழிகளிலிருந்தும்"* பெறப்பட வேண்டும் என்று கூறுகிறது. இவ்வாறு இந்தியின் படிமலர்ச்சி அரசாங்கம் திட்டமிட்டு முன்னெடுக்கும் முன்னெடுப்பாக மாற்றப்பட்டது. இம்முறை உயிரோட்டமான பொதுத் தொடர்பு மொழிகள் வளரும் முறைக்கு முற்றிலும் மாறானது.

உதாரணமாக, இலத்தீன், பிரெஞ்சு, நோர்ஸ், அரபு, பாரசீகம், எண்ணற்ற இந்திய மொழிகள் ஆகியவற்றிலிருந்து, ஆங்கிலம், தடையின்றி உள்வாங்கிக் கொண்டதன் மூலம் உலக அளாவிய முக்கியத்துவத்தை அடைந்தது. மாறாக, உருது, பாரசீகம், ஆங்கிலம் முதலான மொழிச் சொற்களை விலக்கி, பண்டிதத்தனமாக சமஸ்கிருதச் சொற்களஞ்சியத்தையும் நடையையும் ஏற்று, இந்தி மொழி தூய்மையாக்கம் செய்யப்படுகின்றது. இதன் விளைவு, இந்தியை தாய்மொழியாகப் பேசுபவர்களுக்கும்கூட பழக்கமில்லாத கடுமை நிறைந்த, சமஸ்கிருதமயமாக்கப்பட்ட இந்தி ஆகும். ஜவஹர்லால் நேரு

1948ல் அரசமைப்பின் இந்தி மொழியாக்கத்தைப் பார்த்தபோது, அவருக்கு அதில் ஒரு சொல்கூடப் புரியவில்லை என்று ராஜேந்திர பிரசாத்துக்கு எழுதினார்.

சர்க்காரியா ஆணையம் இந்தச் சிக்கலை ஒப்புக்கொண்டது. ஆனால், அரசமைப்புச் சட்டப் பிரிவு 351–இன், சமஸ்கிருத மொழியிலிருந்து முதன்மையாகச் சொற்களஞ்சியத்தைப் பெற வேண்டும் என்கிற ஆணை, இந்தி மொழியின் இயற்கையான வளர்ச்சியைக் கட்டுப்படுத்தியுள்ளது, இந்தி ஒன்றிணைக்க விரும்பும் தேசம், இந்தி மொழியை அணுகுவதைக் கடினமாக்கியுள்ளது என்கிற மூல காரணத்தைக் காணத் தவறிவிட்டது.

பரிந்துரை 13

ஒன்றியம், இந்தியாவின் செழுமையான மொழிச் சூழல் பரப்பைச் சேர்ந்த அனைத்து வாழும் மொழிகளையும் – குறிப்பாக, ஆபத்தில் உள்ள அல்லது அழிவை எதிர்கொள்ளும் மொழிகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் சம அளவிலான பொறுப்பைக் கொண்டிருப்பதால், அரசமைப்புச் சட்டப் பிரிவு 351 இந்த பரந்த அரசமைப்புச் சட்டப் பார்வையைக் கொண்டிருக்கும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்தியை மட்டும் வளர்ப்பதற்கும் பரப்புவதற்கும் பதிலாக, இந்தியாவின் மொழி மரபின் அனைத்து மொழிகளையும் பாதுகாக்க, வளர்க்க, புத்துயிர் ஊட்ட தேசிய உறுதிப்பாட்டை இந்த ஏற்பாடு உறுதிப்படுத்த வேண்டும். அத்தகைய திருத்தம் அரசமைப்புச் சட்டப் பிரிவு 351ஐ இந்தியாவின் விலைமதிப்பற்ற பன்மொழி மரபுச்செல்வத்தைப் பாதுகாப்பதற்கான சாசனமாக உயர்த்தும். இது அரசமைப்பின் பன்மைத்துவ உணர்வுக்கும், அனைவரையும் உள்ளடக்கிய உணர்வுக்கும் முழுமையான ஒத்திசைவாக இருக்கும்.

ஏ. நாடாளுமன்றத்தின் மொழியும் மாநிலச் சட்டமன்றங்களின் மொழிகளும்

நாடாளுமன்ற நடவடிக்கைகள் இந்தி அல்லது ஆங்கிலத்தில் நடத்தப்பட வேண்டும் என்று அரசமைப்புச் சட்டப் பிரிவு 120 விதிக்கிறது. ஒரு உறுப்பினர், இவ்விரண்டு மொழிகளிலும் பேச முடியவில்லை என்றால், அவைத் தலைவரின் அனுமதியுடன் மட்டுமே தனது தாய்மொழியில் பேச முடியும். இதேபோல், அரசமைப்புச் சட்டப் பிரிவு 210 மாநிலச் சட்டமன்ற நடவடிக்கைகள் மாநிலத்தின் ஆட்சி மொழி(கள்) அல்லது இந்தி அல்லது ஆங்கிலத்தில் நடத்தப்பட வேண்டும் என்று கூறுகிறது. இங்கும், ஒரு உறுப்பினர் அவைத் தலைவரின் முன் அனுமதியுடன் மட்டுமே தாய்மொழியில் பேச இயலும்.

செயற்கை நுண்ணறிவு திறன் கொண்ட நிகழ்நேர மொழிபெயர்ப்புக் கருவிகள் உள்ள இந்தக் காலத்தில், இந்தக் கட்டுப்பாடுகள் காலப் பொருத்தமற்றவை; மக்களாட்சி முறைக்கு எதிரானவை. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குச் சிறப்பாகத் தெரிந்த மொழியில் பேச சுதந்திரம் இருக்க வேண்டும். இந்திய நாடாளுமன்றத்திலும் மாநிலச் சட்டமன்றங்களிலும் ஒலிக்கும் பன்மொழிக் குரல் ஓசைகளின் நயத்தில் பெருமை கொள்ள வேண்டும். ஒருமைப்பாட்டின் பெயரால் அக்குரல்களை அமைதியாக்கக் கூடாது.

பரிந்துரை 14

அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 120, 210ஐ திருத்தி, காலப் பொருத்தமற்ற "பேச அனுமதி" என்கிற விதியை நீக்கி, ஒவ்வொரு உறுப்பினருக்கும் நாடாளுமன்ற, மாநிலச் சட்டமன்ற நடவடிக்கைகளில் எந்தவொரு இந்திய மொழியையும் பயன்படுத்துவதற்கான கட்டுப்பாடு இல்லாத உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். அனைத்து மொழிகளையும் முழுமையாகப் புரிந்துகொள்ளவும், அர்த்தமுள்ள வகையில் மக்களாட்சிமுறை பங்கேற்பை உறுதிப்படுத்தவும் நிகழ்நேர மொழிபெயர்ப்புச் சேவைகளை கட்டாயமாக்க வேண்டும்.

IX. முடிவுரை

அரசமைப்பின் எந்தவொரு பகுதியைக் காட்டிலும், மொழிக் குறித்த ஏற்பாடுகளுக்கே விரைவான சீர்திருத்தம் தேவை. 1940களின் அரசியல் பதற்றங்களுக்கும் சமரசங்களுக்கும் இடையே இயற்றப்பட்ட இந்த ஏற்பாடுகள், மாநிலங்களின் மொழிவழி மறுசீரமைப்பிற்கு (1956) முந்தையவை ஆகும். மேலும், தேசிய ஒற்றுமைக்கு மொழிவழி ஒருமைப்பாடு அவசியம் என்ற தவறான கருத்து, அந்த ஏற்பாடுகளில் வேரூன்றி உள்ளது. பன்னாட்டு ஒப்பீடு தரும் அனுபவம் இதற்கு நேர்மாறானது. மொழிப் பன்முகத்தன்மை அரசமைப்புச் சட்ட அளவில் பாதுகாக்கப்படும்போது, கூட்டாட்சி நாடுகள் செழித்து வளர்கின்றன; ஆதிக்க மொழி ஒன்று திணிக்கப்படும்போது தடுமாறுகின்றன.

இந்த ஏற்பாடுகள், இந்தியாவின் மொழிச் செழுமையை வளர்க்க வேண்டிய நாகரிகச் செல்வமாக அல்லாமல், தீர்க்கப்பட வேண்டிய "சிக்கலாக" கருதிய மனநிலையைக் கொண்டுள்ளன. மேலும், வருங்காலத் தலைமுறைகளுக்காகப் பாதுகாக்கப்பட வேண்டிய, விலைமதிப்பற்ற மரபுச்செல்வமாக அல்லாமல், "சிக்கலாக" கருதின.

ஆயினும், இப்போதைய புறக்கணிப்பும் குறைபாடும் உள்ள மொழிக் கல்வித் கொள்கை முறை, ஒரு மொழிக்கு சலுகை அளிக்கின்றது. அதே வேளையில் நூற்றுக்கணக்கான பிற மொழிகளை ஆபத்தில் தள்ளியுள்ளன அல்லது அழித்துவிட்டன.

இந்தியாவின் மொழிக் குறித்த ஏற்பாடுகளின் அரசமைப்புச் சட்டச் சீர்திருத்தம், உண்மையான பன்மைத்துவ மாதிரிக்கான மாற்றத்தைக் கோருகிறது. இதற்கு எட்டாவது அட்டவணையை விரிவுபடுத்துதல், ஆபத்தில் உள்ள மொழிகளைப் பாதுகாத்தல், அனைத்து மொழிசார்ந்த குழுக்களுக்கும் சமமான மரியாதையை உறுதி செய்தல் ஆகியவை தேவை. நிகழ்நேர மொழிபெயர்ப்பையும் செயற்கை நுண்ணறிவுத் திறன் கொண்ட பன்மொழி ஆளுகையையும் கொண்டு, 1950ல் கற்பனை செய்ய முடியாத, அனைவரையும் உள்ளடக்கக் கூடிய மொழிக் கொள்கை முறையை இப்போது இந்தியா உருவாக்க முடியும்.

ஒன்றியத்தை வலிமை இழக்கச் செய்ய அல்ல, மாறாக, மரியாதையும் சமத்துவமும் என்கிற வலுவான, நீதியான அடித்தளங்களில் இந்திய ஒற்றுமையை மீட்டெடுப்பதற்காகவே, மொழிச்சிக்கல் குறித்து புதிய விவாதத்தைத் தொடங்க வேண்டிய நேரம் இது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சான்று நூல்கள்

1. *Constituent Assembly Debates*, vol 7 (6th reprint, Lok Sabha Secretariat 2014) November 5, 1948; *Constituent Assembly Debates*, vol 9 (6th reprint, Lok Sabha Secretariat 2014) November 12, 13, 14, 1948.
2. Granville Austin, *The Indian Constitution: Cornerstone of a Nation* (Oxford University Press 1966) Chapter 12.
3. PV Rajamannar, A Lakshmanaswami Mudaliar, and P Chandra Reddy, *Report of the Centre–State Relations Inquiry Committee* (Government of Tamil Nadu 1971) Chapter 13.
4. RS Sarkaria, B Sivaraman, and SR Sen, *Commission on Centre–State Relations*, part 1 (Ministry of Home Affairs 1988) Chapter 20, paras 20.1.01 – 2.1.38.
5. Madan Mohan Punchhi and others, *Commission on Centre–State Relations: Internal Security, Criminal Justice and Centre–State Cooperation*, vol 5 (Government of India 2010) para 2.5.02.
6. K Ashok Vardhan Shetty, 'The flawed push for a third language' (*The Hindu* March 28, 2025) accessed December 24, 2025; K Ashok Vardhan Shetty, 'NEP's three–language formula: Rhetoric vs reality' (*DT Next* April 14, 2025) accessed December 25, 2025; K Ashok Vardhan Shetty, 'One Nation, Many Tongues: India's Unfinished Language Debate' (*The Wire* October 18, 2025) accessed December 25, 2025.
7. The Belgian Constitution 1831, Article 4.
8. Canadian Constitution Act 1982, Section 16.
9. The Constitution of the Republic of South Africa 1996, Section 6.
10. Federal Constitution of the Swiss Confederation 1999, Articles 4, 70.
11. Consolidated Version of the Treaty on the Functioning of the European Union [2012] OJ C326/47, Article 342.

இயல் 5

ஆளுநர்

"வரைவுக் குழு இவ்வாறு கருதியது... ஆளுநருக்கு எந்தவிதமான பணிகளும் இருக்கக்கூடாது... 'தனது சொந்த விருப்புரிமையின்படியோ அல்லது தனிப்பட்ட முடிவின்படியோ செயல்படுத்த வேண்டிய எந்தவொரு பணிகளும் அவருக்கு இருக்கக்கூடாது.' புதிய அரசமைப்பின் கொள்கைகளின்படி, அவர் அனைத்து பொருண்மைகளிலும் அமைச்சரவையின் ஆலோசனையைப் பின்பற்றி நடக்க வேண்டும்... ஆளுநரின் அதிகாரங்கள் மிகவும் வரையறுக்கப்பட்டதாகவும், பெயரளவிலானதாகவும், அப்பதவி மிகவும் அலங்காரமானதாகவும் இருப்பதால், அப்பதவிக்குத் தேர்தலில் போட்டியிட மிகச் சிலரே முன்வருவார்கள் என்று நாங்கள் கருதினோம்."

– டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்,
அரசமைப்புச் சட்ட அவை விவாதங்கள் (1949)[1]

I. அறிமுகம்

ஆளுநர் பதவி அரசமைப்பு அவை உருவாக்கியது அல்ல; அது காலனிய மரபுவழியில் பெறப்பட்ட ஒன்று. *1935–ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின்* கீழ், பிரிட்டிஷ் ஆளுநர், தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை முடிவுகளை மாற்றவும், இயற்றிய சட்டங்களை நீக்கம் செய்யவும், நிர்வாகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டை எடுத்துக்கொள்ளவும் அனுமதித்த பரந்த அளவிலான விருப்புரிமை அதிகாரங்களையும் தனிப்பட்ட அளவில் முடிவு எடுக்கும் அதிகாரங்களையும் பெற்றிருந்தார். இந்தப்

[1] *Constituent Assembly Debates*, vol 8 (6th reprint, Lok Sabha Secretariat 2014), 467, 468, May 31, 1949.

பரந்த அளவிலான அதிகாரங்களை எதிர்த்துப் பல ஆண்டுகளாகத் தேசியத் தலைவர்கள் போராடினர். அத்தலைவர்களுக்கு, இறையாண்மையுள்ள மக்களாட்சி முறை இந்தியாவில், காலனி ஆதிக்கத்துடன் மிகவும் நெருக்கமாகத் தொடர்புடைய ஆளுநர் பதவியை ஏன் தொடர்ந்து பாதுகாக்க வேண்டும்? என்கிற சங்கடமான கேள்வி எழுந்தது.

சர்தார் வல்லபாய் படேல் தலைமையிலான மாகாண அரசமைப்புக் குழு (The Provincial Constitution Committee), ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநர் குறித்து சிந்தித்தது. ஆனால், 1949 வரை நடந்த அரசமைப்பு அவை விவாதங்களின் போது, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநர் பதவி, நிரந்தர மோதலுக்கு காரணமாகி, மாநிலத்தில் இரட்டை அதிகார மையத்திற்கு இட்டுச்செல்லும் என்கிற கவலைகள் அதிகரித்தன. பின்னோக்கிப் பார்க்கும்போது, (குடியரசுத் தலைவரைப் போலவே) மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநருக்கு தனியான அதிகாரம் இருக்காது என்பதால், இந்த அச்சங்கள் மிகைப்படுத்தப்பட்டவை என்று கருதலாம். இறுதியில், அரசமைப்புச் சிற்பிகள், ஒன்றியத்திற்கும் மாநிலத்திற்கும் இடையிலான இணைப்பாகவும் வரம்புக்குட்பட்ட, விருப்புரிமை அதிகாரங்களுடன் மட்டுமே கொண்ட ஆளுநர் பதவி, அரசியல் நடுநிலைமையுள்ள அரசமைப்புச் சட்ட முதன்மையர் எனக் கருதி, இதற்கு நியமன முறை பொருத்தமானது என தேர்வு செய்தனர்.

எவ்வாறாயினும், இந்த அடிப்படைக் கண்ணோட்டம் சீராகச் சிதைந்துபோய்விட்டது. குடியரசின் ஆரம்ப ஆண்டுகளிலிருந்தே – குறிப்பாக, 1967க்குப் பிறகு, வெவ்வேறு அரசியல் கட்சிகள் ஒன்றியத்தையும் பல மாநிலங்களையும் ஆட்சி செய்தபோது – அதிக அளவில் கட்சி சார்பு நலன் கருவியாக ஆளுநர் பதவி மாறியது. கட்சிகள் வேறுபாடின்றி, அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த ஒன்றிய அரசாங்கங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அமைச்சரவைகளை நீக்கவும், அரசாங்கங்கள் அமைப்பதில் சூழ்ச்சி செய்யவும், சட்டம் இயற்றுதலைத் தாமதப்படுத்தவும் அல்லது தடுக்கவும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் அன்றாட நிர்வாகத்தில் தலையிடவும் ஆளுநர்களைப் பயன்படுத்தி வருகின்றன. ஆனால், இவை ஆழமான அரசமைப்புச் சட்ட *வடிவமைப்புக் குறைபாட்டின்* வெளிப்பாடுகள் ஆகும். அரசமைப்புச் சட்ட உரையில் உள்ள அமைதிகள், தெளிவற்ற விருப்புரிமை அதிகாரங்கள், எழுதப்படாத மரபுகளில் தவறுதலாக அதிக நம்பிக்கை வைத்தல் ஆகியவை இந்தப் பதவியை மீண்டும் மீண்டும் தவறாகப் பயன்படுத்த வழிவகுக்கின்றன.

பல்லாண்டுகளாகச் சர்ச்சைகள் இருந்தபோதிலும், ஓரளவுக்கு அரசமைப்புச் சட்ட உரையைச் மாற்றியதைத் தவிர, ஆளுநர்

அதிகாரத்தின் மையக் கட்டமைப்பு மாற்றமின்றியே தொடர்கிறது. நடுநிலைமை, பொறுப்புடைமை, கட்டுப்பாடு ஆகியவற்றை வலியுறுத்தி, ஆளுநர் பதவியைச் சீர்திருத்தம் செய்வதற்கான சீரான சித்திரத்தை அரசியல் நடைமுறை, நீதித்துறை தீர்ப்புகள், வல்லுநர் ஆணையங்கள் ஆகியவை வழங்கியுள்ளன. ஆயினும், கூட்டாட்சி முறையின் சமநிலையைப் பாதுகாக்க வேண்டிய பதவியே, சமநிலையைக் குலைத்து வருகிறது என்னும் அரசமைப்புச் சட்ட முரண்பாடு தொடர்கிறது; முக்கியமான சீர்திருத்தம் எதுவும் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.

II. ஆளுநர் பதவி குறித்த அரசமைப்புச் சட்ட நோக்கு

ஆளுநரின் அதிகாரங்களும் கடமைகளும் அரசமைப்பின் அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் (உறுப்புகள்/சரத்துகள்) 153–168, 174–176, 200–201, 207, 213, 244, 244Aவுடன் இணைந்துள்ள ஐந்தாம், ஆறாம் அட்டவணைகள், 356, 361 ஆகியவற்றில் வகுக்கப்பட்டுள்ளன.

நிர்வாக அதிகாரம்

அரசமைப்புச் சட்டப் பிரிவு 154 மாநிலத்தின் நிர்வாக அதிகாரத்தை ஆளுநரிடம் ஒப்படைக்கிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 155, 156 குடியரசுத் தலைவர் ஐந்து ஆண்டு காலத்திற்கு ஆளுநரை நியமிப்பார். என்றாலும், ஆளுநர் "குடியரசுத் தலைவர் விரும்பும் காலம்வரை" பதவி வகிப்பார் என்று வகை செய்கிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 157, 158 தகுதி அளவுகோல்களையும் பதவிக்கான நிபந்தனைகளையும் வகுக்கின்றன. அதே வேளை, அரசமைப்புச் சட்டப் பிரிவு 161 குடியரசுத் தலைவரின் அதிகாரங்களுக்கு இணையான கருணை அளிக்கும் அதிகாரங்களை வழங்குகிறது.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 163–இன் கீழ், அரசமைப்புச் சட்டம் தெளிவாக விருப்புரிமையை வழங்கியுள்ள அதிகாரப் பொருண்மைகளைத் தவிர, மற்ற எல்லா பொருண்மைகளிலும் ஆளுநர் அமைச்சரவை வழங்கும் "உதவியின்படியும் ஆலோசனையின்படியும்" செயல்பட வேண்டும். எவ்வாறாயினும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 163(2) விருப்புரிமை எது என்பது குறித்த ஆளுநரின் முடிவே இறுதியானது என்றும், அதன் செல்லுபடியாகும் தன்மை கேள்விக்கு உள்ளாக்க முடியாது என்றும் கூறுகிறது. இந்த அரசமைப்புச் சட்டப் பிரிவு வாசகத்தின் நெகிழ்வுத் தன்மை, அரசமைப்புச் சிற்பிகள் எண்ணியதைவிட

பரந்த விருப்புரிமை அதிகாரத்தை ஆளுநர்கள் நிலைநிறுத்திக் கொள்வதற்கு வரலாற்று அளவில் உதவியுள்ளது.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 164 முதலமைச்சரையும், முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் மற்ற அமைச்சர்களையும் நியமிக்கவும், ஆளுநர் "விரும்பும்" வரை பதவி வகிக்கவும் ஆளுநருக்கு அதிகாரம் அளிக்கிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 164(2) அமைச்சரவை மாநிலச் சட்டமன்றத்திற்குக் கூட்டுப் பொறுப்பாக இருக்கும் என்று கூறுகிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 166, மாநில அரசாங்கத்தின் அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் ஆளுநரின் பெயரில் எடுக்கப்பட வேண்டும் என்று கட்டளையிடுகிறது. அதே வேளை, அரசமைப்புச் சட்டப் பிரிவு 167, முதலமைச்சர் அமைச்சரவையின் அனைத்து முடிவுகளையும் ஆளுநருக்குத் தெரிவிக்கவும்; ஆளுநர் மாநில நிர்வாகம், சட்டம் இயற்றுவதற்கான முன்மொழிவுகள் தொடர்பான எந்தவொரு தகவலையும் கோரும்போதும், எந்தவொரு அமைச்சரும் எடுத்த முடிவுகளை அமைச்சரவையின் முன் வைக்கக் கோரும்போதும் இவற்றைச் செய்யவும் அதிகாரம் அளிக்கிறது.

அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 244, 244A, ஐந்தாவது மற்றும் ஆறாவது அட்டவணைகளுடன் சேர்த்துப் பொருள் கொள்ளும்போது, பட்டியலிடப்பட்ட பகுதிகளுக்கும் பழங்குடியினர் பகுதிகளுக்கும் சிறப்பு அதிகாரங்களையும் பொறுப்புகளையும் ஆளுநருக்கு வழங்குகின்றன.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 356, மாநிலத்தில் அரசமைப்புச் சட்ட அமைப்பின் தோல்வியைப் பற்றிப் புகாரளிக்கவும், குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பரிந்துரைக்கவும் ஆளுநருக்கு அதிகாரம் அளிக்கிறது. இது அவரது நிர்வாகப் பணிகளில் மிகவும் சக்தி வாய்ந்த, சர்ச்சைக்குரிய பணி என்று கருதப்படுகிறது.

சட்டம் இயற்றுதல் தொடர்பான அதிகாரம்

அரசமைப்புச் சட்டப் பிரிவு 168–இன் கீழ் ஆளுநர் மாநிலச் சட்டமன்றத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளார். அரசமைப்புச் சட்டப் பிரிவு 174, சட்டமன்றத்தை கூட்டவும், அமர்வை முடித்து வைக்கவும், கலைக்கவும் அவருக்கு அதிகாரம் அளிக்கிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 175, ஆளுநர் மாநிலச் சட்டமன்றத்தின் அவையில் (அல்லது அவைகளில்) உரையாற்றவும், கருத்தறிய விரும்பும் செய்திகளை அனுப்பவும் அனுமதிக்கிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 176, ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்குப் பிறகான முதல் அமர்விலும், ஒவ்வொரு நாட்காட்டி ஆண்டின் முதல் அமர்விலும் ஆளுநரின் சிறப்பு உரையைக் கட்டாயமாக்குகிறது.

மிகவும் சர்ச்சைக்குரிய அதிகாரம், அரசமைப்புச் சட்டப் பிரிவு 200–இல் உள்ளது. இது ஆளுநருக்குச் சட்டவரைவுகளுக்கு ஒப்புதல் அளிக்கவோ, ஒப்புதலை நிறுத்தி வைக்கவும், மாநிலச் சட்டமன்றத்தின் மறுபரிசீலனைக்கு அனுப்பி வைக்கவும் அல்லது குடியரசுத் தலைவரின் கருத்தறிய அனுப்பி வைக்கவோ அனுமதிக்கிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 201, குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட சட்டவரைவுகள் குறித்த குடியரசுத் தலைவருக்கு உள்ள வாய்ப்புகள் குறித்து விவரிக்கின்றது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 207–இன் கீழ், நிதிச் சட்டவரைவுகளுக்கு ஆளுநரின் பரிந்துரை தேவை. அரசமைப்புச் சட்டப் பிரிவு 213 மாநிலச் சட்டமன்றம் நடைபெறாத போது அவசரச் சட்டங்களை அறிவிக்க ஆளுநருக்கு அதிகாரம் அளிக்கிறது.

விதிவிலக்கு உரிமை

அரசமைப்புச் சட்டப் பிரிவு 361, ஆளுநருக்கு அவரது பதவிக்காலத்தில் நீதித்துறை நடவடிக்கைகளிலிருந்து விதிவிலக்கு பெறும் உரிமையை வழங்குகிறது. இவ்வாறு, மாநிலச் சட்டமன்றத்திற்கு நேரடியாகப் பொறுப்பு கூற வேண்டிய அவசியம் இல்லாத நிலையொடு இணைந்திருப்பதோடு, அரசமைப்புச் சட்ட விதிமுறைகளிலிருந்து விலகினாலும், அதனால் ஏற்படும் விளைவுகளிலிருந்து பாதுகாக்கப்படும் பதவியாக ஆளுநர் பதவியை உருவாக்குகிறது.

சம்ஷேர் சிங் எதிர் பஞ்சாப் மாநிலம் (1974) [Shamsher Singh v. State of Punjab (1974)][2]

இந்தத் திருப்புமுனையான உச்சநீதிமன்றத் தீர்ப்பு, ஆளுநர் தங்களை நீக்கிய ஆணை செல்லாது என இரண்டு நீதித்துறை அலுவலர்கள் தொடுத்த வழக்கில் அளிக்கப்பட்டது. ஏனெனில், நியமன அதிகாரம் கொண்டுள்ள ஆளுநர் தன்னிச்சையாக முடிவு எடுக்க இயலாது; உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையின் பேரில் அமைச்சரவை எடுத்த முடிவுகளை மட்டுமே ஆளுநர் வெறுமனே உறுதிப்படுத்த முடியும் [என்று வாதிட்டனர்].

தன்னிச்சையாக முடிவு எடுக்கும் அதிகாரம் ஆளுநருக்கு உள்ளது என்பதை உச்சநீதிமன்றம் நிராகரித்தது. இந்தியா வெஸ்ட்மின்ஸ்டர் மக்களாட்சி முறையை (the Westminster system) பின்பற்றுகிறது என்றும், ஆளுநர் "பெயரளவிலான" தலைவர் என்றும், அவர் அரசமைப்புச் சட்டப் பிரிவு163(1)–இன் கீழ் அமைச்சரவை வழங்கும் உதவி ஆலோசனையின்

[2] (1974) 2 SCC 831.

பேரில் செயல்பட வேண்டும் என்றும் உறுதிப்படுத்தியது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 166(3), அன்றாட செயல்பாடுகள் குறித்த விதிகள் ஆகியவற்றின் கீழ் அமைச்சர்கள் (and the Rules of Business by Ministers) அல்லது முறைப்படியான அலுவலர்கள் எடுத்த முடிவுகளே அரசமைப்புச் சட்ட அளவில் ஆளுநரின் முடிவுகளாகக் கருதப்படுகின்றன என்றும்; ஆளுநரின் தனிப்பட்ட மனநிறைவும் ஒப்புதலும் தேவையற்றது என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

ஆளுநரின் தலைமையில் "இணை நிர்வாகம்" இருப்பதை அரசமைப்புச் சட்டம் எதிர்நோக்கவில்லை என்று நீதிமன்றம் வலியுறுத்தியது. துல்லியமாக வரையறுக்கப்பட்ட விதிவிலக்கான ஒருசில சூழ்நிலைகளைத் தவிர்த்து, அமைச்சரவையின் ஆலோசனை கட்டுப்படுத்தும் தன்மை கொண்டது. தொங்கு சட்டமன்றத்தில் முதலமைச்சரை நியமிப்பது, பெரும்பான்மையை இழந்த அரசாங்கத்தை பதவி நீக்கம் செய்வது அல்லது அரசமைப்புச் சட்டப் பிரிவு 200–இன் கீழ் சட்டவரைவுகளை நிறுத்தி வைப்பது போன்றவையே அந்த விதிவிலக்கான சூழ்நிலைகள் ஆகும். இவ்வாறு, *ஷம்ஷேர் சிங்* வழக்கில் (1974) அன்றாட நிர்வாகத்தில் ஆளுநருக்கு எந்தவொரு சுதந்திரமான அதிகாரமும் இல்லை என்பது நிலைநாட்டப்பட்டது.

III. ஆளுநர் பதவி குறித்த அரசமைப்பு அவையின் விவாதங்கள்

1949 ஜனவரி 6க்கும் 1949 அக்டோபர் 17க்கும் இடையில் நடைபெற்ற பல அமர்வுகளின் போது பெருமளவில் வெளிப்பட்ட இந்தப் பதவி குறித்த முக்கியமான விவாதங்களில், ஐயம் கொண்ட குழுவினர், ஆளுநர் பதவியைத் தவறாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அழுத்தமான கவலைகளை எழுப்பினர்.

பிஸ்வநாத் தாஸ், (வாதிடப்படுவது போல) ஆளுநருக்கு மிகக் குறைவான பணிகளே இருந்தால், பிறகு அவர் எதற்கு? என்று கேட்டார். மாறாக, இந்த அவை "ஆளுநர்களுக்குத் திட்டவட்டமான, முக்கியமான அதிகாரங்களை வழங்க" முன்மொழிகின்றது என்று கருதினார். பிரிட்டிஷ் ஆளுநர் தனது கட்சியை உடைக்க முயன்ற சொந்த அனுபவத்தை நினைவு கூர்ந்த அவர், "மக்களாட்சியும் சர்வாதிகாரமும் ஒன்றாகச் செயல்பட முடியாது. மாகாணங்களில், கால் முதல் கழுத்து வரை மக்களாட்சியையும், தலையில் சர்வாதிகாரத்தையும் வைக்கப்

போகிறீர்கள். இந்த இரண்டுமே தோல்வியடைய நேரிடும்; நீங்கள் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கப் போகிறீர்கள்" என்று எச்சரித்தார்.

ஷிப்பான் லால் சக்ஸேனா, ஆளுநர் "குடியரசுத் தலைவர் விரும்பும் வரை" பதவி வகிக்க அனுமதித்த வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 132 (இப்போது அரசமைப்புச் சட்டப் பிரிவு 156)ஐ எதிர்த்தார். இது ஆளுநரின் சுதந்திரத்தையும் கண்ணியத்தையும் சமரசம் செய்கிறது என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநரால் மட்டுமே பொதுமக்களின் மரியாதையைப் பெற முடியும் என்றும் வாதிட்டார். மேலும், வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 278 (இப்போது அரசமைப்புச் சட்டப் பிரிவு 356)ஐ முழு அரசமைப்புச் சட்டத்திலேயே "பிற்போக்குத்தனமான நடவடிக்கை" என்று கண்டித்தார்.

கே.டி. ஷா, உண்மையான நிர்வாக அதிகாரம் ஆளுநரிடம் அல்லாமல், "தொடர்புடைய மாநிலத்தின் அரசாங்கத்திடம்" இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆளுநரை "பருவகால பயணி" என்று விவரித்தார். அப்பதவிக்கு பரம்பரை மன்னரின் பதவிக்கு இருப்பது போன்ற நிரந்தரமோ அல்லது நிலைத்தன்மையோ இல்லை என்று கூறினார். வெளியாருக்குப் பெயரளவு தலைமையை வழங்குவதன் நோக்கம் குறித்து கேள்வி எழுப்பினார் (வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 146, இப்போது அரசமைப்புச் சட்டப் பிரிவு 166).

ஹிருதய நாத் குன்ஸ்ரு, ஆளுநர் மையத்தால் நியமிக்கப்பட்டால், சட்டவரைவுகளை அனுப்பி வைக்கவோ (வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 175, இப்போது அரசமைப்புச் சட்டப் பிரிவு 200) அல்லது அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்தவோ (வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 188, பின்னர் நீக்கப்பட்டது) அவருக்கு அதிகாரம் அளிக்கும் விதிகள் இருக்கக்கூடாது என்று வாதிட்டார். வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 277–A, 278 (இப்போது அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 355, 356), மாகாணங்களில் நல்லாட்சியை உறுதி செய்வதற்காக, தவறான நிர்வாகம், திறமையின்மை அல்லது ஊழல் போன்றவற்றைத் தடுப்பது என்கிற தெளிவற்ற காரணத்தின் அடிப்படையில் தலையிடுவதற்கு ஒன்றிய அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது குறித்து அவர் எச்சரிக்கை செய்தார்.

எச். வி. காமத், ஆளுநர் மையத்தால் நியமிக்கப்பட பேண்டும் என்றால், வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 143 (இப்போது அரசமைப்புச் சட்டப் பிரிவு 163)ன் கீழ் ஆளுநரின் விருப்புரிமை அதிகாரங்களைச் சேர்ப்பதை எதிர்த்தார். மேலும் இது "அரசமைப்புச் சட்ட அரசாங்கம் குறித்த கோட்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் முரணானது" என்று அவர் கூறினார். ஆளுநரின் விருப்புரிமை

அதிகாரத்தை நீக்குவதற்காக திருத்தம் ஒன்றை முன்மொழிந்தார். வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 278 (இப்போது அரசமைப்புச் சட்டப் பிரிவு 356)–இல் உள்ள "வேறுவகையில் (otherwise)" என்ற சொல்லைச் சேப்பதை, அவர் "தீங்கு அளிக்கக் கூடியது", "கொடியது" என்று அழைத்தார். இச்சொற்றொடர், ஆளுநரின் அறிக்கை இல்லாமல்கூட, தலையீடு செய்ய மையத்திற்கு அதிகாரம் அளிக்கிறது என்று அவர் அஞ்சினார். வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 277–A (இப்போது அரசமைப்புச் சட்டப் பிரிவு 355)–இல், "உள் குழப்பம்" என்பது மிகவும் தெளிவற்றது என்றும், தன்னிச்சையான தலையீட்டை நியாயப்படுத்தக் கூடும் என்றும் அவர் எச்சரித்தார்.

ரோகிணி குமார் சௌத்ரி, ஆளுநர்களுக்கு விருப்புரிமை அதிகாரங்களை வழங்குவதற்கு எதிராகக் கடும் எச்சரிக்கையை விடுத்தார். வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 143 (இப்போது அரசமைப்புச் சட்டப் பிரிவு 163)ஐ குறிப்பிட்ட அவர், பின்வரும் புகழ்பெற்ற எச்சரிக்கையை விடுத்தார்:

> *"எங்களின் இந்த அனுபவத்தைப் பொருட்படுத்தாமல், ஆளுநர்களுக்கு விருப்புரிமையைப் பயன்படுத்திச் செயல்படுவதற்கான அதிகாரங்களை வழங்கியே ஆகவேண்டும் என கேட்டால், நாம் அனைவரும் மறக்க விரும்பிய கடந்த காலத்திலேயே இன்னும் வாழ்கிறோம் என்று அஞ்சுகிறேன்.*
>
> *விருப்புரிமை பெற்ற நியமனம் செய்யப்படும் ஆளுநர் என்கிற தனிநபரின் விருப்பத்தால் ஆளப்படுவதை விட, மக்களின் விருப்பத்தால் ஆளப்படுவது நல்லது என்று நாங்கள் எப்போதும் நினைத்தோம். இந்த ஆளுநருக்குத் தன் விருப்பம் போல செயல்பட அதிகாரம் வழங்கப்பட்டால், அவர் விருப்பம் போல நடந்துகொள்வதைத் தடுக்க பூமியில் எந்த அதிகாரம் இருக்காது. அவர், உண்மையில், தவளைகள் வேண்டிப் பெற்ற நாரை அரசனைப் போலவே (veritable King Stork) இருக்க* முடியும்."

இந்த வலுவான எதிர்ப்புகள் இருந்தபோதிலும், அரசமைப்பு அவையில் பெரும்பான்மையினர் ஆளுநரின் நியமனக் கொள்கையையே உயர்த்திப் பிடித்தனர்.

டி.டி. கிருஷ்ணமாச்சாரி, இரண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமைகளுக்கிடையே தவிர்க்க முடியாத மோதலையும் முட்டுக்கட்டையையும் தவிர்ப்பதற்காக நியமனம் செய்வதையே முதன்மையாக ஆதரித்தார். வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 143 (இப்போது அரசமைப்புச் சட்டப் பிரிவு 163)–இல் உள்ள விருப்புரிமை

அதிகாரங்கள் பொதுவான உரிமம் அல்ல என்றும், பிந்தைய அரசமைப்புச் சட்டப் பிரிவுகளில் விவரிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட செயல்பாடுகளுக்கு மட்டுமே உள்ள விருப்புரிமை அதிகாரங்கள் வரம்புக்குட்பட்டவை என்றும் வலியுறுத்தினார். வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 175 (இப்போது அரசமைப்புச் சட்டப் பிரிவு 200)–இல், சட்டவரைவை மாநிலச் சட்டமன்றத்திற்குத் திருப்பி அனுப்பும் ஆளுநரின் அதிகாரம் தனிப்பட்ட இரத்து அதிகாரம் அல்ல என்றும், அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் தெளிவுபடுத்தினார்.

அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், கனடா முன்மாதிரியை (Canadian model) ஏற்று, தேர்தல்களின் செலவையும் பிளவுகளையும் காரணம் காட்டி, குடியரசுத் தலைவர் நியமனம் செய்வதை "மிகவும் புத்திசாலித்தனமான முறை" என்று வலியுறுத்தினார். ஆளுநரை உள்ளூர் அரசியலிலிருந்து விலக்கி, மையத்திற்கும் மாநிலத்திற்கும் இடையில் பாலமாகச் செயல்படும் "மதிநுட்பம் மிக்க ஆலோசகர்" என்று குறிப்பிட்டார்.

ஜவஹர்லால் நேரு நேரடித் தேர்தல்கள் "பிரிவினை எண்ணம் கொண்ட மாகாணப் போக்கை ஊக்குவிக்கும்" என்று எச்சரித்தார். மேலும், மாநிலத்திற்குப் பொருத்தமான, ஆனால் உள்ளூர் அரசியல் இயந்திரத்துடன் ஒத்திசையாத ஆளுநர்கள் வேண்டும் என்று வாதாடினார்.

பி. ஆர். அம்பேத்கர் வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 277A, 278 (இப்போது அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 355, 356)–இன் கீழ், மையத்தின் தலையீட்டு அதிகாரங்களை நியாயப்படுத்தினார். வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 278–இல் "அல்லது வேறுவகையில்" என்ற சொல்லைச் சேர்த்ததையும் நியாயப்படுத்திய அவர், ஆளுநரின் அறிக்கை மட்டுமே குடியரசுத் தலைவரைக் கட்டுப்படுத்தப்படக்கூடாது என்று விளக்கினார். எவ்வாறாயினும், ஆளுநருக்குத் தனியான அவசரநிலை அதிகாரங்களை வழங்கிய வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 188ஐ நீக்கும் திருத்தத்தை முன்மொழிந்தார்.

அம்பேத்கர் வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 175 (இப்போது அரசமைப்புச் சட்டப் பிரிவு 200)க்கு முக்கியமான திருத்தத்தை முன்மொழிந்து, அதன்படி, ஒரு சட்டவரைவு சட்டமன்றத்தால் மீண்டும் நிறைவேற்றப்பட்டு மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டால், "அதற்கு ஆளுநர் இசைவை நிறுத்தி வைக்கக்கூடாது" என்று வலியுறுத்தினார். எவ்வாறாயினும், அவர் முடிவு எடுப்பதற்கான காலக்கெடு வைக் குறிப்பிடவில்லை, இதனால் ஆளுநர்கள் சட்டவரைவைத் திருப்பி அனுப்பாமல் காலவரையின்றி இசைவை நிறுத்தி வைக்கும் புதுமையான "மறைமுக இரத்து அதிகார"த்திற்கு (pocket veto) இடமளித்துவிட்டார்.

IV. பல்லாண்டுக்கால தவறான பயன்பாட்டுப் போக்குகளும் நீதித்துறைத் தீர்வுகளின் வரம்புகளும்

ஆளுநர் பதவியின் அரசியல்மயமாக்கல், மாநில சுயாட்சியின் சிதைவு, எதிர்கால அரசமைப்புச் சட்ட நெருக்கடிகளின் அபாயம் ஆகியவை குறித்து அரசமைப்பு அவையில் சிறுபான்மையினர் விடுத்த எச்சரிக்கைகள், அதைத் தொடர்ந்த பல்லாண்டுக் காலமாகத் திகைக்க வைக்கும் துல்லியத்துடன் நடந்தேறி, அவை தீர்க்கதரிசனமானவை என நிரூபிக்கப்பட்டுள்ளன. பின்வரும் சம்பவங்கள் – முழுமையானவை அல்ல என்றாலும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை – இந்த அரசமைப்புச் சட்டச் சிதைவுகளின் பரிணாமத்தையும், அவற்றிற்கான நீதித்துறையின் சீரற்ற பதில்வினையையும் காட்டுகின்றன.

1. சென்னை (1952): விருப்புரிமையைத் தவறாகப் பயன்படுத்திய முதல் முக்கிய நிகழ்வு

1952 சென்னை மாநிலச் சட்டமன்றத் தேர்தலில், 152 இடங்களைப் பெற்று காங்கிரஸ் பெரும்பான்மை பெறவில்லை. தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணியான, டி. பிரகாசம் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 166 இடங்களுடன் தெளிவான பெரும்பான்மையைக் கொண்டிருந்தது. ஆயினும், ஆளுநர் ஸ்ரீ பிரகாசம், சி. இராஜகோபாலாச்சாரியாரை அரசாங்கத்தை அமைக்க அழைத்தார். இராஜகோபாலாச்சாரியார் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினராக இல்லாததால், முதலமைச்சராக ஆவதற்காக அவரைச் சட்டமன்ற மேலவைக்கு ஆளுநர் நியமனம் செய்தார். அதைத் தொடர்ந்து, கட்சி தாவல்கள் மூலம் காங்கிரஸ் பெரும்பான்மையைப் பெற்றது.

2. கேரளா (1959): பெரும்பான்மை அரசாங்கத்தை அரசியல் நோக்கத்திற்காக நீக்கிய முதல் நிகழ்வு

முன்னதாக பஞ்சாப் (1951), பெப்ஸு(PEPSU) (1953), ஆந்திரா (1954), திருவிதாங்கூர்–கொச்சி (1956) ஆகிய மாநிலங்களில் உறுதியற்ற கூட்டணிகள் காரணமாகக் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், 1959–இல் கேரள அரசாங்கத்தின் பதவிநீக்கம், தெளிவான பெரும்பான்மையைக் கொண்டிருந்த அமைச்சரவையை நீக்க, ஆளுநர் பதவியையும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 356ஐயும் தவறாகப் பயன்படுத்திய முதல் நிகழ்வாகும்.

1957–இல், கேரளாவில் முதலமைச்சர் இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் தலைமையில், உலகின் முதல் பொதுவுடைமைக் கட்சி அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டு, வரலாறு படைத்தது. ஆனால் 1959 வாக்கில், எதிர்க்கட்சிகளின் கூட்டணியும் சமூக–மத அமைப்புகளும், நிர்வாகத்தைப் முடக்குவதற்காக "விடுதலைப் போராட்டம்" என்கிற வெகுசனப் போராட்டத்தைத் தொடங்கின. ஆளுநர் பி. இராமகிருஷ்ண ராவ், நிர்வாகம் தோல்வியடைந்து விட்டதாகவும், அமைச்சரவை பொதுமக்களின் நம்பகத்தன்மையை இழந்துவிட்டதாகவும் குற்றம்சாட்டி அறிக்கையை அனுப்பினார். இந்த அறிக்கையின் அடிப்படையில் செயல்பட்ட ஒன்றியம், ஜூலை 1959–இல் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தியது. இந்த நிகழ்வு, அரசமைப்புச் சட்டச் சீர்குலைவைச் சரிசெய்வதற்காக அல்லாமல், பிடிக்காத மாநில அரசாங்கங்களுக்கு எதிராக அரசமைப்புச் சட்டப் பிரிவு 356, அரசியல் ஆயுதமாகத் தவறாகப் பயன்படுத்தப்படுவதை எடுத்துக்காட்டியது.

3. மேற்கு வங்காளம் (1967–68): ஆளுநர் "விருப்பத்தை" திரும்பப் பெற்றுக் கொண்டதன் மூலம் பதவி நீக்கம்

நவம்பர் 1967–இல், பி.சி. கோஷ் தலைமையிலான பிரிவு, அஜோய் முகர்ஜியின் ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கான ஆதரவை விலக்கிக் கொண்டது. ஆளுநர் தர்ம வீரா உடனடியாக நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தக் கோரினார். ஆனால் அதை டிசம்பர் 18 அன்று நடத்தவே அமைச்சரவை ஆலோசனை வழங்கியது. இந்த ஆலோசனையை நிராகரித்த தர்ம வீரா, தன்னிச்சையாகச் செயல்பட்டார். 1967 நவம்பர் 21 அன்று, அவர் அரசமைப்புச் சட்டப் பிரிவு 164(1)ஐ பயன்படுத்தித் தனது "விருப்பத்தை" திரும்பப் பெற்று, முகர்ஜி அமைச்சரவையைப் பதவி நீக்கம் செய்து, பி.சி. கோஷை முதலமைச்சராகப் பதவியேற்க வைத்தார். இது அரசமைப்புச் சட்டப் பிரிவு 356 மூலமான தலையீடு அல்ல, மாறாக ஆளுநர் செய்த பதவி நீக்கம் ஆகும். சபாநாயகர் பேஜோய் பானர்ஜி ஆளுநரின் முந்தைய பதவி நீக்கத்தை அரசமைப்புச் சட்டவிரோதமானது என்று அறிவித்து அவையை மீண்டும் மீண்டும் ஒத்திவைத்ததால், பி.சி. கோஷ் அரசாங்கத்தை நடத்தத் தவறிய பிறகு, குடியரசுத் தலைவர் ஆட்சி, 1968 பிப்ரவரி 20 அன்று வந்தது. இந்தச் சம்பவம், ஆளுநர் தனது அகநிலை மனநிறைவின் பேரில், புறநிலை நம்பிக்கை வாக்கெடுப்பு இல்லாமல், தனது "விருப்பத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வதன்" மூலம் மாநில அரசாங்கத்தைப் பதவி நீக்கம் செய்வதற்கான மோசமான முன்னுதாரணம் ஆனது.

4. பெருமளவிலான பதவி நீக்கங்கள்: ஆட்சி மாற்றத்தின் அரசியல் (1977–2014)

1977 முதல், மத்தியில் அரசாங்கங்கள் மாறியது. அரசியல் பழிவாங்கல்களின் சுழல் மீண்டும் மீண்டும் எழுந்தது. இப்பழிவாங்கல், அரசமைப்புச் சட்டப் பிரிவு 356–இன் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசாங்கங்களை அதிக அளவில் பதவி நீக்கம் செய்வதன் மூலமாகவோ அல்லது அரசமைப்புச் சட்டப் பிரிவு 156ன் கீழ் ஆளுநர்களை மொத்தமாக நீக்குவதன் மூலமாகவோ நடந்தேறியது.

1977: அதிகாரத்திற்கு வந்த பிறகு, ஜனதா கட்சி அரசாங்கம், மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் பெரும் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, "ஆட்சியில் தொடர தார்மீக ஆதரவை" இழந்துவிட்டன என்கிற அடிப்படையில், காங்கிரஸ் ஆளும் ஒன்பது மாநில அரசாங்கங்களைப் பதவி நீக்கம் செய்தது[3]. 15 ஆளுநர்களும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். *இராஜஸ்தான் மாநிலம் எதிர் ஒன்றிய அரசாங்கம்* (1977) *[State of Rajasthan v. Union of India* (1977)][4] வழக்கில், உச்சநீதிமன்றம் மிகவும் பணிந்துபோய், அரசமைப்புச் சட்டப் பிரிவு 356–இன் கீழ் குடியரசுத் தலைவரின் "மனநிறைவு" அகநிலை சார்ந்தது என்றும், நீதித்துறையின் ஆய்வுக்கு அப்பாற்பட்டது என்றும் தீர்ப்பு அளித்தது. இந்த முடிவின் பின்னணியில் உள்ள தகுதிப்பாட்டையோ அல்லது அரசியல் நோக்கங்களையோ ஆராய மறுத்தது, அரசமைப்புச் சட்டப் பிரிவு 356ஐ தவறாகப் பயன்படுத்துவதை நீதிமன்றம் தடுக்கத் தவறிய, மிகவும் மோசமாக சரணடைந்த நிகழ்வுகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

1980: காங்கிரஸ் மீண்டும் அதிகாரத்திற்கு வந்தபோது, பழிவாங்கலாக காங்கிரஸ் அல்லாத ஒன்பது அரசாங்கங்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டன. பிரபுதாஸ் பட்வாரி (தமிழ்நாடு, 1980), ரகுகுல் திலக் (இராஜஸ்தான், 1981) ஆகிய இரண்டு ஆளுநர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

1990: 1989 தேர்தல்களைத் தொடர்ந்து, வி.பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசாங்கம், முந்தைய காங்கிரஸ் ஆட்சியால் நியமிக்கப்பட்ட கிட்டத்தட்ட அனைத்து ஆளுநர்களும் பதவி விலகுமாறு கேட்டுக் கொண்டது.

2004: ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் (UPA–1), முந்தைய தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) ஆட்சியுடன் கொண்டிருந்த கருத்துநிலை தொடர்பு காரணமாக நான்கு ஆளுநர்களைப் பதவி நீக்கம் செய்தது.

---

[3] Granville Austin, *Working a Democratic Constitution: A History of the Indian Experience* (14th impression, OUP 2019) Chapter 20.

[4] (1977) 3 SCC 592.

பி.பி. சிங்கால் எதிர் ஒன்றிய அரசாங்கம் (2010) *[Singhal v. Union of India* (2010)][5] வழக்கில், அரசமைப்புச் சட்டப் பிரிவு 156(1)–இன் கீழ் உள்ள நீக்கங்கள், தன்னிச்சையாகவோ அல்லது தீய நோக்கம் கொண்டதாகவோ இருக்கக்கூடாது என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. திறமையின்மை, ஊழல் அல்லது முறைகேடு போன்ற செல்லுபடியாகும் காரணங்கள் தேவை என்று கூறியது. ஆனால், பதவி நீக்க உத்தரவில் குடியரசுத் தலைவர் காரணங்களைக் கூறத் தேவையில்லை என்றும்; பதவி நீக்கம் செய்யப்பட்ட ஆளுநர், முதலில் தனது பதவி நீக்கம் தன்னிச்சையானது என்று கருதினால், அதற்காக முதல்நோக்கில் *போதுமான ஆதாரத்தை* (a *prima facie*) வழங்க வேண்டும் என்றும்; மேலும் நீதித்துறை சீராய்வு, காரணங்கள் சரியானவையா என்பதைவிட, காரணங்கள் உள்ளனவா என்பதை மட்டுமே சரிபார்க்கும் வரம்புக்கு உட்பட்டது என்றும் நீதிமன்றம் கூறியது. இந்தக் கட்டுப்பாடுகள் பாதுகாப்பைக் கணிசமாகக் குறைத்தன.

2014: தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த உடனேயே, பத்து ஆளுநர்கள் பதவி விலகினர் அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வுகள், ஒன்றியத்தில் உள்ள ஆட்சியின் தேர்தல் வெற்றிகளின் அடிப்படையில் மட்டுமே நீக்கப்படக்கூடிய ஒன்றியத்தின் அரசியல் நியமனமாகவே ஆளுநரின் நிலை உள்ளதை உறுதிப்படுத்துகின்றன.

5. ஆந்திரப் பிரதேசம் (1984): என்.டி. ஆர். பதவி நீக்கம்

ஆகஸ்ட் 16, 1984 அன்று, ஆளுநர் தாகூர் ராம் லால், என்.டி. இராமாராவ் (NTR) பெரும்பான்மையை இழந்துவிட்டார் என்ற என். பாஸ்கர ராவ் தலைமையிலான கட்சி தாவல் பிரிவின் சரிபார்க்கப்படாத கோரிக்கையை ஏற்று, தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர் என்.டி.இராமாராவைக் காரணம் கூறாமல் பதவி நீக்கம் செய்தார். என்.டி.ஆருக்கு நம்பிக்கை வாக்கெடுப்பை மறுத்து, பாஸ்கர ராவைத் தனது பெரும்பான்மையை நிரூபிக்கக் கேட்காமலேயே ஆளுநர் பதவியேற்க வைத்தார். மக்கள் ஆணையைப் பறித்த இந்தச் செயல் தேசிய அளவில் சீற்றத்தைத் தூண்டியது. பின்னர் என்.டி.ஆர். 161 சட்டமன்ற உறுப்பினர்களைக் குடியரசுத் தலைவரிடம் அழைத்துச் சென்று, தனது பெரும்பான்மையை நிரூபித்தார். அழுத்தம் அதிகரித்ததால், ஒன்றியம் ஆளுநரைப் பதவி நீக்கம் செய்தது. என். டி. ஆர். 1984 செப்டம்பர் 16 அன்று மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார்.

---

[5] (2010) 6 SCC 331.

6. கர்நாடகா (1989): திருப்புமுனையான எஸ்.ஆர். பொம்மை தீர்ப்பு

19 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவை விலக்கிக் கொண்ட பிறகு, ஆளுநர் பி. வெங்கடசுப்பையா ஏப்ரல் மாதம், 1989–இல் முதலமைச்சர் எஸ்.ஆர். பொம்மைக்கு நம்பிக்கை வாக்கெடுப்பை மறுத்து, தனது சொந்த அகநிலை மதிப்பீட்டின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் ஆட்சிக்குப் பரிந்துரை செய்தார். இதுபற்றிய, *எஸ்.ஆர். பொம்மை எதிர் ஒன்றிய அரசாங்கம்* (1994) *[Rameshwar Prasad v. Union of India* (2006)][6] வழக்கில், அரசமைப்புச் சட்டப் பிரிவு 356ன் தவறான பயன்பாட்டை வெகுவாகக் குறைத்த, ஒன்பது நீதிபதிகள் கொண்ட அமர்வு, வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை அளித்தது. சட்டமன்றத்தைக் கலைக்கும் பிரகடனமாக இருந்தாலும்கூட, அதனை நாடாளுமன்றம் ஏற்கும் வரை கலைக்கக் கூடாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. நாடாளுமன்றம் இரண்டு மாதங்களுக்குள் அவ்வாறு செய்யத் தவறினால், அரசாங்கமும் சட்டமன்றமும் தாமாகவே மீண்டும் செயல்படும் என்று கூறியது. இது, பெரும்பான்மையைக் கடிதங்கள் வாயிலாகவோ, தனிப்பட்ட மதிப்பீடுகள் அல்லது அரசியல் நோக்கிலான அனுமானங்கள் மூலமாகவோ ஊகிக்காமல், சட்டமன்றத்தில் மட்டுமே நிரூபிக்கப்பட வேண்டும் என நம்பிக்கை வாக்கெடுப்பு குறித்த கொள்கையையும் உருவாக்கியது. *எஸ். ஆர். பொம்மை* வழக்கில், *இராஜஸ்தான் மாநிலம்* (1977) வழக்கின் மோசமான கீழ்ப்படிதலை நிராகரித்து, வலிமையான நீதித்துறை சீராய்வை மீட்டது. மேலும், நம்பிக்கை வாக்கெடுப்புக்குப் பயன்படுத்திய அனைத்து ஆவணங்களையும் ஒன்றியம் வெளியிட வேண்டும் என்றும், தீய நோக்கம் இல்லை என்பதையும் காட்ட வேண்டும் என்றும் கோரியது. மிக முக்கியமாக, இந்தத் தீர்ப்பு, கூட்டாட்சி முறை ஓர் அடிப்படை பண்பியல்பு என்று அறிவித்தது. இது மாநில அரசாங்கங்களின் அரசமைப்புச் சட்டக் கண்ணியத்தை உறுதிப்படுத்தியது.

7. பீகார் (2005): அரசாங்கம் அமைவதைத் தடுக்கக முயன்ற சட்டமன்றக் கலைப்பு

2005 பிப்ரவரியில் தொங்கு சட்டமன்றம் அமைந்த பிறகு, ஐக்கிய ஜனதா தளம் – பாரதிய ஜனதா கட்சி கூட்டணி அரசாங்கத்தை அமைக்கலாம் என்று மாறிவரும் கூட்டணிகள் மூலம் உணரப்பட்டது. இதை எதிர்பார்த்து, ஆளுநர் பூட்டா சிங், கட்டுப்பாடற்ற "குதிரை பேரம்" குறித்து குற்றம் சாட்டினார். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம்

[6] (1994) 3 SCC 1.

கூடுவதற்கு முன்பே, அதைக் கலைக்கப் பரிந்துரைத்தார். இந்த அறிக்கையின் பேரில் செயல்பட்ட ஒன்றியம், குடியரசுத் தலைவர் ஆட்சியை நடைமுறைப்படுத்தி, அவையைக் கலைத்தது.

இராமேஸ்வர் பிரசாத் எதிர் ஒன்றிய அரசாங்கம் (2006) *[Rameshwar Prasad v. Union of India* (2006)][7] வழக்கில், உச்சநீதிமன்றம் ஆளுநரின் அறிக்கையைத் தீய நோக்கம் கொண்டது, முழுமையான அளவில் சட்டவிரோதமானது, வழக்கத்திற்கு மாறானது என்று கண்டித்தது. இருப்பினும், பீகார் சட்டமன்றத்திற்குத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டு விட்டதால், கலைக்கப்பட்ட சட்டமன்றத்தை, நீதிமன்றம் மீட்டெடுக்கவில்லை. நீதித்துறையின் தாமதத்துடன், ஆளுநரின் தவறான பயன்பாடும் இணைந்து, எவ்வாறு மீளப்பெற முடியாத அரசியல் நிகழ்வுகளை உருவாக்க முடியும் (*fait accompli*) என்பதை இந்தச் சம்பவம் வெளிப்படுத்தியது.

8. அருணாச்சலப் பிரதேசம் (2016): விருப்புரிமை வரம்பு மீறல்

2015 நவம்பரில், நபம் துகி தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கம் 60 இடங்களில் 47 இடங்களைக் கொண்டிருந்தது. பாரதிய ஜனதா கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரித்த, காலிகோ புல் தலைமையிலான 21 காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களின் கிளர்ச்சி அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்றது. கட்சி சராத 2 சட்டமன்ற உறுப்பினர், பாஜகவின் 11 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டு 13 சட்டமன்ற உறுப்பினர்கள், அரசமைப்புச் சட்டப் பிரிவு 179(c)–இன் கீழ் சபாநாயகர் நபம் இரேபியாவை நீக்க அறிக்கை கொடுத்தனர். ஆளுநர் ஜே. பி. இராஜ்கோவா, அமைச்சரவையின் 2016 ஜனவரி 14 அன்று சட்டமன்றத்தைக் கூட்டும் ஆலோசனையைப் புறக்கணித்து, அரசமைப்புச் சட்டப் பிரிவு 174–இன் கீழ் அமர்வை 2015 டிசம்பர் 16 அன்று, முன்கூட்டியே கூட்டினார். மேலும், சபாநாயகரை நீக்குவதே அலுவலின் முதல் பொருளாக இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். சபாநாயகர் சட்டமன்ற வளாகத்தைப் பூட்டி வைக்க உத்தரவிட்டார். ஆளுநர் ஒப்புதல் அளித்த சமுதாயக் கூடத்தில் 33 அதிருப்தி சட்டமன்ற உறுப்பினர்கள் கூடி, சபாநாயகரைத் தகுதி நீக்கம் செய்ததாகக் கூறினர். மேலும் காலிகோ புல்லை ஆதரித்தனர்.

நபம் ரெபியா எதிர் துணை சபாநாயகர், அருணாசலப் பிரதேசம், சட்டமன்றப் பேரவை (2016) *[Nabam Rebia v. Deputy Speaker, Arunachal Pradesh Legislative Assembly* (2016)][8] வழக்கில், அரசமைப்பு அமர்வு

---

[7] (2006) 2 SCC 1.

[8] (2016) 8 SCC 1.

ஆளுநரின் நடவடிக்கைகளை இரத்து செய்தது. மேலும் துகி அரசாங்கத்தை மீட்டது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 174 விருப்புரிமை அதிகாரம் அல்ல என்று பின்வருமாறு தீர்ப்பளித்தது: பெரும்பான்மையை நிரூபிக்க அரசாங்கத்திற்குக்கட்டளையிடுவதைத்தவிர,ஆளுநர் அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் மட்டுமே சட்டமன்றத்தை கூட்டவோ அல்லது முன்கூட்டியே மாற்றவோ முடியும். மேலும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 164(1)ன் கீழ் ஆளுநரின் "விருப்பம்" அரசமைப்புச் சட்டப் பிரிவு 164(2)–இன் கீழ் கூட்டுப் பொறுப்பால் கட்டுப்படுத்தப்படுகிறது. அவையின் நம்பிக்கையை இன்னும் பெற்றுள்ள அமைச்சரவையைப் பதவி நீக்கம் செய்ய விருப்புரிமையைப் பயன்படுத்த முடியாது.

9. கர்நாடகா (2018): முற்போக்காகச் செயல்பட்ட உச்சநீதிமன்றம்

2018 மே மாதம் கர்நாடகா மாநிலச் சட்டமன்றத் தேர்தல் முடிவில் தொங்கு சட்டமன்றம் அமைந்த பிறகு, ஆளுநர் வஜுபாய் வாலா, பெரும்பான்மைக்குக் குறைவாக இருந்த ஒற்றை மிகப்பெரிய கட்சியான பாரதிய ஜனதா கட்சியை அரசாங்கத்தை அமைக்க அழைத்தார். பெரும்பான்மை இடங்களைக் கொண்டிருந்த தேர்தலுக்குப் பிந்தைய காங்கிரஸ் – மதசார்பற்ற ஜனதா தளம் கூட்டணியைப் புறக்கணித்தார். பின்னர், முதலமைச்சர் பி.எஸ். எடியூரப்பாவிற்குப் பெரும்பான்மையை நிரூபிக்க அசாதாரணமாக 15 நாட்கள் கால அவகாசத்தை வழங்கினார். *ஜி. பரமேஸ்வரா எதிர் ஒன்றிய அரசாங்கம்* (2018) *[G. Parameshwara v. Union of India* (2018)][9] வழக்கில், உச்சநீதிமன்றம் இரவோடு இரவாகத் தலையிட்டு, ஆளுநரால் நிர்ணயிக்கப்பட்ட கால அவகாசத்தைக் குறைத்து, மறுநாளே மாலை 4:00 மணிக்கு உடனடியாக நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது. ஆதரவைத் திரட்ட முடியாத எடியூரப்பா பதவி விலகினார். நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த கால அளவை மோசடியாகக் கையாள்வதன் மூலம் ஆளுநர்கள் எவ்வாறு விளைவுகளைத் தீர்மானிக்க முடியும் என்பதை இந்த வழக்கு வெளிப்படுத்தியது.

10. மகாராஷ்டிரா (2022): கட்டாயப்படுத்திய பதவி விலகலும் நீதித்துறை தாமதமும்

2022 ஜூன் மாதத்தில், மகா விகாஸ் அகாடி அரசாங்கத்திற்கு எதிராகச் சிவசேனாவின் ஒருதரப்பு கலகம் விளைவித்த போது, ஆளுநர் பகத் சிங்

---

[9] 2018 (7) SCALE 594.

கோஷ்யாரி முதலமைச்சர் உத்தவ் தாக்கரேவுக்குக் குறுகிய கால அறிவிப்பு மூலம் பெரும்பான்மையை நிரூபிக்க உத்தரவிட்டார். நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்பே, 2022 ஜூன் 29 அன்று தாக்கரே பதவி விலகினார். கிட்டத்தட்டப் பத்து மாதங்களுக்குப் பிறகு, *சுபாஷ் தேசாய் எதிர் முதன்மைச் செயலாளர், மகாராஷ்டிரா ஆளுநர் (மே 11,* 2023) *[Subhash Desai v. Principal Secretary, Governor of Maharashtra)]*[10] வழக்கில், ஆளுநரின் உத்தரவு அரசமைப்புச் சட்ட விரோதமானது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. அரசாங்கம் நம்பிக்கை இழந்துவிட்டது என்று ஆளுநர் கருத எந்தவிதமான புறநிலை ஆவணங்களும் இல்லை என்றும், உள் கட்சிக் கருத்து வேறுபாடு என்கிற நம்பிக்கை வாக்கெடுப்போடு தொடர்பில்லாத அடிப்படையை நம்பியிருந்தார் என்றும் தீர்ப்பு அளித்தது. ஆயினும், தாக்கரே தாமாகவே பதவி விலகி விட்டதால், நீதிமன்றத்தால் மகா விகாஸ் அகாடி அரசாங்கத்தை மீட்டெடுக்க முடியவில்லை. ஆளுநரின் வரம்பு மீறல், கட்டாயப்படுத்திய பதவி விலகல், நீதித்துறை தாமதம் ஆகியவை இணைந்து விரும்பிய அரசியல் விளைவை உருவாக்கின என்பதை இந்நிகழ்வு விளக்குகிறது.

11. மேற்கு வங்காளம் (2019–22): நடத்தை வரம்பு மீறல்

ஆளுநர் ஜகதீப் தன்கர், திரிணாமுல் காங்கிரஸ் அரசாங்கத்துடன் தொடர்ச்சியான பொதுவெளியில் மோதலில் ஈடுபட்டார். சமூக ஊடகங்களையும் பத்திரிகையாளர் சந்திப்புகளையும் பயன்படுத்தி கொள்கைகளையும் சட்டம்–ஒழுங்கையும் பற்றி விமர்சித்தார். மேலும் இராஜ்பவனுக்கு மூத்த அதிகாரிகளை வரவழைப்பதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்தைத் திரும்பத் திரும்பப் புறக்கணித்தார். இந்த மோதல், வலுவான எதிர்நடவடிக்கையைத் தூண்டியது. திரிணமுல் காங்கிரஸ் அரசாங்கம், ஆளுநர் அரசமைப்புச் சட்ட விதிமுறைகளை மீறிச் செயல்படுவதாகவும், எதிர்க்கட்சித் தலைவர் போலச் செயல்படுவதாகவும் குற்றம்சாட்டியது. 2022 ஜூன் மாதத்தில், மேற்கு வங்க சட்டமன்றம், மாநிலப் பல்கலைக்கழகங்களின் வேந்தர் பதவியிலிருந்து ஆளுநரை நீக்கி, அந்தப் பதவியை முதலமைச்சருக்கு மாற்ற முயன்று, மேற்கு வங்கப் பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தம்), 2022 சட்டவரைவை (West Bengal University Laws (Amendment) Bill, 2022) நிறைவேற்றியது.

---

[10] (2024) 2 SCC 719.

12. பஞ்சாப்பும் தெலுங்கானாவும் (2023): நடைமுறையை ஆயுதமாக்குதல்

2023ன் ஆரம்பத்தில், பஞ்சாப் மற்றும் தெலுங்கானா ஆளுநர்கள், நடைமுறை அதிகாரங்களைப் பயன்படுத்தி, அதாவது அரசமைப்புச் சட்டப் பிரிவு 174–இன் கீழ் சட்டமன்றத்தைக் கூட்டுதல், அரசமைப்புச் சட்டப் பிரிவு 207–இன் கீழ் நிதிநிலை அறிக்கையை அறிமுகப்படுத்துவதற்குப் பரிந்துரை அளித்தல் போன்றவற்றைப் பயன்படுத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் மையமான செயல்பாடான நிதிநிலை அறிக்கை நிறைவேற்றுவதைத் தடுத்தனர். இதன் மூலம் முக்கிய அரசமைப்புச் சட்ட முட்டுக்கட்டைகளைப் போட்டு, தொந்தரவு அளிக்கும் போக்கை மேற்கொண்டனர்.

பஞ்சாபில், ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் வரவுசெலவுத் திட்ட அமர்வைக் கூட்ட மறுத்தார். முந்தைய அமர்வின் செல்லுபடியாகும் தன்மை குறித்து கேள்வி எழுப்பினார். முதலமைச்சர் எழுதியதாகக் கூறப்படும் மரியாதைக் குறைவான கடிதங்களை காரணமாகக் காட்டினார். *பஞ்சாப் மாநிலம் எதிர் ஆளுநரின் முதன்மைச் செயலர் (2023) (State of Punjab v. Principal Secretary to the Governor of Punjab)*[11] வழக்கில், அரசமைப்புச் சட்டப் பிரிவு 174 விருப்புரிமை அற்றது என்றும், அமைச்சரவையின் உதவி ஆலோசனையின் பேரில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆளுநரின் நிலைப்பாடு, மக்களாட்சி முறைக்கு ஆபத்தை விளைவிப்பதாக உள்ளது என எச்சரித்தது. இந்தத் தீர்ப்பு, அவையைக் கூட்ட ஆளுநரைக் கட்டாயப்படுத்தியது.

தெலுங்கானாவில், ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன், அரசமைப்புச் சட்டப் பிரிவு 176–இன் கீழ் ஆளுநரின் உரை இல்லாததைக் காரணம் காட்டி, வரவுசெலவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தத் தேவையான அரசமைப்புச் சட்டப் பிரிவு 207 பரிந்துரையை நிறுத்தி வைத்தார். அமர்வைத் தொடர்ச்சியாகக் கருதிய மாநிலம், உரையைத் தவிர்த்துவிட்டது. பஞ்சாபைப் போலல்லாமல், தெளிவான நீதித்துறை தீர்ப்பு எதுவும் அளிக்கப்படவில்லை; உயர்நீதிமன்றம் சமரசம் செய்துவைத்த பின்னரே, முட்டுக்கட்டை நீங்கியது. ஆளுநரின் உரையை மாநிலம் ஒப்புக்கொண்டது. மேலும் ஆளுநர் வரவுசெலவுத் திட்டப் பரிந்துரையை அனுமதித்தார்.

---

[11] (2024) 1 SCC 407.

13. கேரளா (2022–23): செயல்படாது இருத்தல்

கேரளாவில், ஆளுநர் ஆரிப் முகமது கானுக்கும் இடதுசாரி ஜனநாயக முன்னணி அரசாங்கத்திற்கும் இடையே முக்கியமான சட்டங்கள் தொடர்பாக நீண்ட அரசமைப்புச் சட்ட மோதல் எழுந்தது. 2022–இல் நிறைவேற்றப்பட்ட, வேந்தர் பதவியிலிருந்து ஆளுநரை நீக்க முயன்ற பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தம்) சட்டவரைவுகள் (2022–the University Laws (Amendment) Bills), குறைதீர் அலுவலர் (Ombudsman) அதிகாரங்களைக் குறைத்த கேரள லோக் ஆயுக்தா (திருத்தம்) சட்டவரைவு (the Kerala Lok Ayukta (Amendment) Bill) ஆகியவை இவற்றில் அடங்கும். ஆளுநர் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக ஒப்புதலை நிறுத்தி வைத்தார். பொதுவில் பல்கலைக்கழகச் சுயாட்சிக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படுவதாகக் குற்றம் சாட்டினார். மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை மீண்டும் மீண்டும் விமர்சித்தார். 2022 அக்டோபரில், ஆளுநர் சமூக ஊடகங்களில், "தமது அலுவலகத்தின் கண்ணியத்தைக் குறைக்கும்" அமைச்சர்கள் பதவியில் தொடரும் தனது "விருப்பத்தை" விலக்கிக் கொள்ளும் அபாயத்தை எதிர்கொள்வார்கள் என்று எச்சரித்தார். இது அரசமைப்புச் சட்ட அளவில் பொறுத்துக்கொள்ள முடியாத அச்சுறுத்தல் ஆகும். ஏனெனில், *நபம் இரேபியா (2016) வழக்கின் தீர்ப்பு,* அரசமைப்புச் சட்டப் பிரிவு 164–இன் கீழ் ஆளுநரின் "விருப்பம்", சட்டமன்றத்தின் நம்பிக்கை பெற்ற முதலமைச்சரின் ஆலோசனையால் தீர்மானிக்கப்படுகிறது, அவரது தனிப்பட்ட கருத்து சார்ந்தது அல்ல என்று உறுதிப்படுத்தியது. இறுதியில் லோக் ஆயுக்தா திருத்தத்திற்கு, ஆளுநர் ஒப்புதல் அளித்தார். ஆனால் பல்கலைக்கழகத் திருத்தச் சட்டவரைவுகளுக்கு ஒப்புதல் அளிக்க மறுத்து, அதன் மூலம் முட்டுக்கட்டையை நீட்டித்தார்.

14. தமிழ்நாடு (2021–26): நீடித்த மோதல்

சுதந்திர இந்தியாவில் மாநில அரசாங்கத்திற்கும் ஆளுநருக்கும் இடையே நடந்த மிக நீண்ட மோதல்களில் ஒன்றைத் தமிழ்நாடு கண்டது. 2023 ஜனவரி 9 அன்று ஆளுநர் ஆர். என். ரவி, திராவிட முன்னேற்றக் கழக (DMK) அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட வழக்கமான உரையின் கணிசமான பகுதிகளை நீக்கியபோது, பதற்றம் வியத்தகு அளவில் அதிகரித்தது. இந்நீக்கத்தில் முக்கியத் தலைவர்கள், சமூக நீதி உறுதிப்பாடுகள், "திராவிட மாடல்" பற்றிய குறிப்புகள் அடங்கும். முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அசல் உரையைச் சட்டமன்றப் பதிவில் மீட்டெடுக்கும் தீர்மானத்தைக் கொண்டுவந்தபோது, ஆளுநர் வெளியேறினார். ஆளுநர் உரை என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட

அரசாங்கத்தின் கொள்கை உரையே அன்றி, ஆளுநரின் தனிப்பட்ட கருத்துக்களைக் கொண்ட உரை அல்ல என்கிற மையமான அரசமைப்புச் சட்ட மரபை ஆளுநரின் நடத்தை மீறிவிட்டது என பரவலாக விமர்சிக்கப்பட்டது. 2024, 2025, 2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதங்களில் ஆளுநர் தேசிய கீதம் சரியான நேரத்தில் இசைக்கப்படவில்லை என்று கூறி, உரையை முழுமையாக வழங்க மறுத்து, வெளிநடப்பு செய்தபோது, நிலைமைகள் மேலும் மோசமடைந்தன.

நீண்ட காலமாக ஏற்பிசைவு அளித்தலை நிறுத்தி வைத்தல்

2021க்கும் 2025 தொடக்க காலத்திற்கும் இடையில், ஆளுநர் ரவி மீண்டும் மீண்டும் முக்கியச் சட்டவரைவுகளுக்கு ஏற்பிசைவு அளிப்பதைத் தாமதப்படுத்தினார் அல்லது நிறுத்தி வைத்தார். இதில் *நீட் விலக்கு சட்டவரைவு* (*NEET Exemption Bill*), வேந்தர் பதவியிலிருந்து ஆளுநரின் பங்கைக் குறைக்க வடிவமைக்கப்பட்ட பல *மாநிலப் பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தம்)* குறித்த *சட்டவரைவுகள் (State University Laws (Amendment) Bills)* அடங்கும். 2021–இல் நிறைவேற்றப்பட்ட நீட் சட்டவரைவு மாதக்கணக்கில் கிடப்பில் இருந்தது. சட்டமன்றம் அதை மீண்டும் நிறைவேற்றியபிறகு, ஆளுநர் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகக் கிடப்பில் போட்டு வைத்திருந்து பிறகு, குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார். பல்கலைக்கழகச் சட்டவரைவுகளும் இதே கதியை அடைந்தன. இதன் விளைவாக மாநிலத்தின் சட்டமன்றச் செயல்திட்டம் முடங்கிப் போயின.

நீண்ட காலமாக செயல்படாது இருக்கும் நிலையை எதிர்கொண்ட தமிழ்நாடு, ஆளுநரின் நடத்தையை "மறைமுக இரத்து அதிகாரம்" என்று குற்றம்சாட்டி, உச்சநீதிமன்றத்தை அணுகியது. இதுதொடர்பான *தமிழ்நாடு மாநிலம் எதிர் தமிழ்நாடு ஆளுநர்* (ஏப்ரல் 8, 2025) *(State of Tamil Nadu v. Governor of Tamil Nadu)*[12] வழக்கில், அரசமைப்புச் சட்டப் பிரிவு 200 பற்றிய 1950 முதல் இதுவரை இல்லாத வகையில் நீதிமன்றம் மிக முக்கியமான தீர்ப்பை வழங்கியது.

ஏப்ரல் 2025 தீர்ப்பு: அரசமைப்பு அவையின் வடிவமைப்பை மறுஉறுதிப்படுத்துதல்

நீதிமன்றம் 1949 ஆகஸ்ட் 1 அன்று நடந்த அரசமைப்பு அவை விவாதங்களை பகுப்பாய்ந்து, விசாரணையைத் தொடங்கியது. வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 175 முதலில் ஆளுநருக்கு "தனது

[12] 2025 INSC 481.

விருப்புரிமையில்" சட்டவரைவைத் திருப்பி அனுப்ப அதிகாரம் அளித்தது. டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் வலியுறுத்தலின் பேரில், ஆளுநர் அரசமைப்புச் சட்ட முதன்மையராகச் செயல்படுவதை உறுதிசெய்ய, இந்தச் சொற்றொடர் நீக்கப்பட்டது. ஒரு சட்டவரைவைத் திருப்பி அனுப்பும் அதிகாரம், இரத்துசெய்யும் அதிகாரமாக அல்ல, மாறாக அமைச்சரவையை வரையறுக்கப்பட்ட அளவில் பாதுகாக்கும் நோக்கம் கொண்டது என்றும், சட்டமன்றம் சட்டவரைவை மீண்டும் நிறைவேற்றியவுடன், ஆளுநர் "ஒப்புதலை நிறுத்தி வைக்கக்கூடாது" என்றும் டி.டி. கிருஷ்ணமாச்சாரி விளக்கினார். இவ்வாறு, அரசமைப்புச் சிற்பிகள் அமெரிக்க பாணி இரத்துசெய்யும் அதிகாரத்தை வேண்டுமென்றே மறுத்து ஒதுக்கினர்.

இந்த வரலாற்றின் அடிப்படையில், அரசமைப்புச் சட்டப் பிரிவு 200 செயல்படாது இருப்பதன் மூலம் முடக்குதலை அனுமதிக்க முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதன் முக்கிய தீர்ப்புகள் பின்வருமாறு:

1. *மறைமுக இரத்து அதிகாரம் இல்லை:* "ஒப்புதலை நிறுத்தி வைத்தல்" என்பது காரணங்களுடன் கூடிய முடிவாக இருக்க வேண்டும் என்று கோருகிறது; ஆளுநர் வெறுமனே சட்டவரைவைக் கிடப்பில் போட முடியாது.
2. *மூன்று விருப்பங்கள் மட்டுமே உள்ளன:* ஒப்புதல் அளித்தல்; நிறுத்தி வைத்துத் திருப்பி அனுப்புதல்; அல்லது குடியரசுத் தலைவருக்காக அனுப்பி வைத்தல் – இவற்றைவிட வேறு எதுவும் இல்லை.
3. *மறுபரிசீலனைக்குப் பிறகு அனுப்பி வைக்க முடியாது:* திருப்பி அனுப்பப்பட்ட சட்டவரைவு மீண்டும் நிறைவேற்றப்பட்டவுடன், அதைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்க முடியாது.
4. *உதவியும் ஆலோசனையும் குறித்த விதி உறுதிப்படுத்தப்பட்டது: சம்ஷேர் சிங் (1974), நபம் இரேபியா (2016)* ஆகிய வழக்குத் தீர்ப்புகளின்படி, அரிதான, வெளிப்படையாக வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளைத் தவிர, ஆளுநர் அமைச்சரவை ஆலோசனையின் பேரில் செயல்படுகிறார் என்று நீதிமன்றம் வலியுறுத்தியது.
5. *சுட்டிக்காட்டிய காலக்கெடுக்கள்:* அரசமைப்புச் சட்டம் எதையும் வழங்கவில்லை என்றாலும், நீதித்துறை சீராய்வுக்கான அளவுகோல்களை நீதிமன்றம் அமைத்தது:
    - ஆளுநர் அமைச்சரவை ஆலோசனையைப் பின்பற்றும் போது சட்டவரைவுகளில் நடவடிக்கை எடுக்க ஒரு மாதம்,

- ஆலோசனைக்கு மாறாகச் செயல்படும் போது மூன்று மாதங்கள்,
- சட்டமன்றத்தால் மறுபரிசீலனை செய்யப்பட்ட பிறகு ஒரு மாதம்,
- குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட சட்டவரைவுகளில் குடியரசுத் தலைவரின் முடிவுகளுக்கு மூன்று மாதங்கள்.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 142ஐ பயன்படுத்தி, நீதிமன்றம் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள சில சட்டவரைவுகளை "ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் கருதப்படும்" என்று அறிவித்தது.

இந்த முடிவு, ஆளுநருடைய மறைமுக இரத்து அதிகாரத்தை இல்லாமல்செய்யவும்,அமைச்சரவைபொறுப்பின்அசல்வெஸ்ட்மின்ஸ்டர் முறையை மீட்டெடுக்கவும் தீர்க்கமான முயற்சியாகக் கருதப்பட்டது.

2025 நவம்பர் ஆலோசனைக் கருத்து: குறிப்பிடத்தக்க அளவில் நீர்த்துப்போக செய்தல்

குடியரசுத் தலைவர் அரசமைப்புச் சட்டப் பிரிவு 143–இன் கீழ் விளக்கக் குறிப்பைக் கோரினார். இது *சட்டவரைவுகளின் ஒப்புதல், நிறுத்தி வைத்தல் அல்லது ஒதுக்கி வைத்தல் குறித்த குடியரசுத் தலைவர் கருத்துக் கேட்பு (நவம்பர் 20, 2025) (In Re: Assent, Withholding or Reservation of Bills)*[13] என்கிற அரசமைப்பு அமர்வு கருத்து கூற வழிவகுத்தது.

அதன் முக்கியமான கருத்துகள் பின்வருமாறு:

1. *ஆளுநருக்கு வரையறுக்கப்பட்ட விருப்புரிமை உள்ளது:* ஒப்புதல் அளித்தல், நிறுத்தி வைத்தல், ஒதுக்கி வைத்தல் ஆகியவற்றிற்கு இடையே தேர்ந்தெடுப்பதில், அமைச்சரவை ஆலோசனையால் தமாகவே ஆளுநர் கட்டுப்படுத்தப்படுவதில்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
2. *காலக்கெடுக்கள் நிராகரிக்கப்பட்டன:* நீதிமன்றங்கள் கண்டிப்பான காலக்கெடுக்களைப் பரிந்துரைக்க முடியாது; அரசமைப்புச் சட்ட அளவில் தெளிவு இல்லாது இருக்கும் பகுதிகளை நீதித்துறை நிரப்ப முடியாது.
3. *வரையறுக்கப்பட்ட ஆணை:* நீதிமன்றங்கள் ஆளுநரை "உரிய காலத்திற்குள்" முடிவெடுக்கக் கட்டாயப்படுத்தலாம். ஆனால்,

---

[13] 2025 INSC 1333.

அனுப்பி வைக்கப்பட்ட சட்டவரைவுகள் குறித்து *குடியரசுத் தலைவருக்கு எந்த உத்தரவுகளையும்* பிறப்பிக்க முடியாது.

4. *ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் கருதப்படும் பொதுக் கோட்பாடு இல்லை:* ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் கருதப்படும் தன்மையைப் பரவலாகப் பயன்படுத்துவது அரசமைப்புச் சட்டப் பணிகளைக் நீதித்துறை அபகரிப்பது ஆகும் என்று நீதிமன்றம் அறிவித்தது.

இவ்வாறு, இந்தக் கருத்து குறிப்பு 2025 ஏப்ரல் சட்ட விளக்கத்தை நீர்த்துப்போகச் செய்தது. மேலும் "மறைமுக இரத்து அதிகாரம்" பிரச்சினையைத் தீர்க்காமல் விட்டுவிட்டது.

பருந்து பார்வை

முன்னர் வழங்கப்பட்ட 14 எடுத்துக்காட்டுகளிலிருந்து, ஆளுநர் பதவி தொடர்ந்து சிக்கலுக்கு உரியதாக உள்ளது என்பது தெளிவாகிறது. *எஸ். ஆர். பொம்மை* (1994) அரசமைப்புச் சட்டப் பிரிவு 356–இன் தவறான பயன்பாட்டைக் குறைத்தது. ஆனால் முடிவுக்குக் கொண்டுவரவில்லை. அரசாங்கங்களை அமைப்பதில் அல்லது கவிழ்ப்பதில் ஆளுநரின் விருப்புரிமையைத் தவறாகப் பயன்படுத்தும் பிரச்சினை நீடிக்கிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 361–ஆல் பாதுகாக்கப்பட்ட, சில சமயங்களில் நீதித்துறை தாமதம் வழியாக உதவிபெற்ற ஆளுநர்கள், *தொடர்ந்து மீளப் பெற இயலாத விளைவுகளை (faits accomplis)* உருவாக்கி வருகின்றனர். ஆளுநர்கள் காலவரையின்றிச் சட்டவரைவுகளை நிறுத்தி வைக்கிற அல்லது ஒதுக்கி வைக்கிற முறையின் மூலம் செயல்படாது இருத்தல் என்கிற புதிய, நுணுக்கமான நுட்பம் இப்போது வெளிப்பட்டுள்ளது. இது, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் சட்டம் இயற்றுதலையும் நிர்வாகத்தையும் தடுத்து முடக்குகிறது. இவற்றுடன், ஆளுநர்கள் பொதுவில் விமர்சிப்பதன் மூலம் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களைக் குறைகூறுவதன் மூலம் *நடத்தை வரம்பு மீறலும்* உள்ளது. இவை அனைத்தும் சேர்ந்து இந்தியாவின் அரசமைப்புச் சட்ட வடிவமைப்பை, குறிப்பாகக் கூட்டாட்சி முறையைச் சிதைக்கின்றன.

V. ஆளுநர் பதவி குறித்த மறுசிந்தனை

இந்தியாவினுடைய காலனிய கால ஆளுநர் முறை இனிமேலும் ஏற்கத்தக்கது அல்ல. நடுநிலைமை, பொறுப்புடைமை, கூட்டாட்சிப் பண்பு ஆகியவற்றில் வேரூன்றிய அரசமைப்புச் சட்டப் பதவியாக மட்டுமே செயல்பட, இந்தப் பதவி அடிப்படையான அளவில்

மறுபரிசீலனை செய்யப்பட்டு, அரசியல் நீக்கம் செய்யப்பட வேண்டும். இதற்குச் கட்டமைப்புச் சீர்திருத்தமும், அதே அளவிற்கு, இந்தியாவின் அரசியல் பண்பாட்டில் ஆழமான நெறிமுறை மாற்றமும் தேவை.

1. மாநிலம் வழிநடத்தும் ஆளுநர்கள் தேர்வுமுறை

அரசமைப்புச் சட்டப் பிரிவு 155–இன் கீழ், ஆளுநரைக் குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார். ஆனால், நடைமுறையில், ஒன்றிய அமைச்சரவையே நியமனம் செய்கிறது. ஒன்றியத்தையும் மாநிலத்தையும் வெவ்வேறு கட்சிகள் ஆளும்போது, அத்தகைய ஒருதலைப்பட்ச நியமனங்கள் மீண்டும் மீண்டும் மோதலை உருவாக்கியுள்ளன. எனவே, மெய்யாகவே கலந்தாய்வு மேற்கொண்டு நியமனம் செய்யும் வழிமுறை நீண்டகாலமாகத் தேவையாக உள்ளது.

அரசமைப்பு அவைத் விவாதங்களின் போது, வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 131, நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநர் அல்லது மாநிலச் சட்டமன்றம் தேர்ந்தெடுத்த நான்கு வேட்பாளர்களின் பட்டியலிலிருந்து குடியரசுத் தலைவர் நியமனம் செய்யும் ஆளுநர் என்கிற மாற்றான முறைகளை முன்வைத்தது. மாநிலப் பங்கேற்பு இல்லாமல் குடியரசுத் தலைவர் நியமனம் செய்தல் என்கிற மூன்றாவது முறையை பிரஜேஷ்வர் பிரசாத் அறிமுகம் செய்தார். இறுதியில் அதுவே ஏற்கப்பட்டது.

இதன் பின்வந்த ஆணையங்கள் இந்தச் சிக்கலை மறுபரிசீலனை செய்தன.

முதலாது நிர்வாகச் சீர்திருத்த ஆணையம் (1966–70), முதலமைச்சருடன் ஆலோசனை செய்து நியமனம் செய்யும் மரபை பரிந்துரை செய்தது.

ராஜமன்னார் குழு (1969–71), அத்தகைய ஆலோசனை கட்டாயமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

சர்க்காரியா ஆணையம் (1983–88), நியமனம் செய்வதற்கு முன்பு, ஒன்றியம் முதலமைச்சருக்குத் தெரிவிப்பது மட்டுமே நடக்கிறது – சில சமயங்களில் அதுவும் இல்லை – என்று கண்டறிந்தது. இந்த ஆணையம், வட்டாரநோக்கிலான தேர்வுகளுக்கு அஞ்சி, மாநிலத்தால் தயாரிக்கப்பட்ட பட்டியலை நிராகரிக்கும் அதே வேளையில், ஆலோசனை செய்வதை அரசமைப்புச் சட்ட அளவிலானதாக மாற்ற வலியுறுத்தியது.

உலகளவில், இந்தியாவின் மாதிரி மிகவும் வழக்கத்திற்கு மாறானது.

ஆஸ்திரேலியாவில், மாநில ஆளுநர்கள், பொதுநலவாய அரசாங்கத்தின் (Commonwealth government) ஆலோசனையின் பேரில் அல்ல, மாறாக மாநிலப் பிரதமரின் ஆலோசனையின் பேரில் முடிமன்னரால் நியமிக்கப்படுகிறார்கள். இம்முறை கூட்டாட்சித் தலையீட்டிலிருந்து பதவியைப் பாதுகாக்கிறது.

கனடாவில், மாகாணத்தின் லெப்டினன்ட் ஆளுநரைக் கூட்டாட்சி ஆலோசனையின் பேரில் ஆளுநர் ஜெனரல் நியமித்தாலும், அந்தப் பதவி நியமனம் கிட்டத்தட்ட முழுமையாக சடங்கு அளவிலானது. மாகாணப் பிரதமருடன் முறைசாராத ஆலோசனை தேவைப்படும் வலுவான மரபு உள்ளது.

ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளில், அரசமைப்புச் சட்டப் பிரிவு தேச அரசாங்கங்கள் மையத்தால் நியமிக்கப்பட்ட எந்த மேற்பார்வையாளரும் இல்லாமல் மக்களாட்சி முறையில் செயல்படுகின்றன.

அமெரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகளில், மாநிலங்களில் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநர்கள் உள்ளனர்.

ஆளுநர் நியமனங்கள் (gubernatorial appointments) மீது ஒன்றியம் முழுமையான கட்டுப்பாட்டைச் செலுத்தும் அமைப்பை இந்தியா தவிர்க்க வேண்டும். போட்டியிடும் அணிகளில் ஒன்றால் மட்டுமே நியமிக்கப்பட்ட நடுவர், நடுநிலையாக இருக்க முடியாது. அதே நேரத்தில், குறுகிய நோக்கைத் தவிர்க்க, ஆளுநர் சிறந்த முறையில் மாநிலத்திற்கு அயலவராக இருக்க வேண்டும்.

ஒன்றியத்தின் முறையான நியமன அதிகாரத்தில் சமரசம் செய்யாமல், மாநில நம்பிக்கையை உறுதிப்படுத்தும், சமச்சீரான மாதிரி என்பது, மாநிலம் மூன்று புகழ்பெற்ற அயலவர்களை (eminent outsiders) முன்மொழிய வேண்டும், அவர்களுக்கு மாநிலச் சட்டமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டும், அவர்களில் ஒருவரை குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பரிந்துரை 1

அரசமைப்புச் சட்டப் பிரிவு 155ஐ திருத்தி, மாநில அரசாங்கம் மாநிலத்திற்கு வெளியே இருந்து மூன்று புகழ்பெற்ற நபர்களைக் கொண்ட பட்டியலை முன்மொழிய வேண்டும். இதற்கு மாநிலச் சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் ஒப்புதலைப் பெறவேண்டும். இந்த மூன்று பேர்களில் ஒருவரை மாநில ஆளுநராக நியமிக்க, இந்தியக் குடியரசுத் தலைவர் அரசமைப்புச் சட்ட அளவில் கடமைப்பட்டவர்.

2. ஆளுநர்களின் பதவிக்காலம் குறித்த சீர்திருத்தம்

பொதுவாக ஐந்து ஆண்டு காலத்திற்கும் அடுத்த ஆளுநர் பதவி ஏற்கும் வரையும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 156–இன் கீழ், ஆளுநர் "குடியரசுத் தலைவர் விரும்பும்வரை" பதவி வகிக்கிறார். உண்மையில், இந்த "விருப்பம்" பிரதமரைத் தலைவராகக் கொண்ட ஒன்றிய

அமைச்சரவையின் விருப்பம் ஆகும். எனவே, ஆளுநரின் பதவிக்காலம் ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையிலான அரசியல் ஒத்திசைவைப் பொறுத்து பாதுகாப்பானது – அல்லது பாதுகாப்பற்றது. ஒன்றியமும் மாநிலமும் அரசியல் அளவில் எதிர்நிலையில் இருக்கும்போது, முன்கூட்டியே பதவி நீக்கம் செய்தல் அழுத்தம் கொடுக்கும் கருவியாக மாறும் தன்மையுடையது. இந்தப் பகுதியைச் சீர்திருத்தம் செய்வது நடுநிலைமை, கண்ணியம், அரசமைப்புச் சட்ட சமநிலை ஆகியவற்றை மீட்டெடுக்க அவசியமானது.

பேராசிரியர் அசோக் பங்கஜின் ஆய்வு, சிக்கலின் அளவை வெளிப்படுத்துகிறது. 1950க்கும் 2015க்கும் இடையில், 18 விழுக்காடு ஆளுநர்கள் மட்டுமே முழு ஐந்து ஆண்டு காலத்தை நிறைவு செய்தனர். பாதிக்கும் மேற்பட்டவர்கள் இரண்டு ஆண்டுகளைக்கூட நிறைவு செய்யத் தவறினர். 37 விழுக்காட்டினர் ஓர் ஆண்டிற்கும் குறைவாகவும், 15 விழுக்காட்டினர் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கும் பதவி வகித்தனர்.[14] *பி. பி. சிங்கால்* (2010) வழக்கில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு, பதவி நீக்கங்கள் குறித்து வரையறுக்கப்பட்ட நீதித்துறை சீராய்வை உறுதிப்படுத்தியிருந்தாலும், குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. பதவிநீக்கங்களும் இடமாற்றங்களும் ஒன்றியத்தின் தனித்த விருப்புரிமையின் பேரில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஒரு காலத்தில் நிலைநிறுத்த வேண்டிய மரபாக இருந்த, முதலமைச்சர்களுடன் ஆலோசனை செய்யும் நடைமுறை, 1967க்குப் பிறகு வீழ்ச்சி அடைந்துவிட்டது.

பல்லாண்டுகளாக, வல்லுநர் அமைப்புகள் ஆளுநரின் சுதந்திரம் பதவிக் காலத்தின் பாதுகாப்பைச் சார்ந்துள்ளது என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளன.

ராஜமன்னார் குழு, ஆளுநர் நிரூபிக்கப்பட்ட முறைகேடு அல்லது திறமையின்மைக்காக மட்டுமே நீக்கப்பட வேண்டும் என்றும், உச்சநீதிமன்றத்தின் விசாரணைக்குப் பின்னர் நீக்கப்பட வேண்டும் என்றும், அதன் பிறகு மீண்டும் நியமனம் செய்யப்படவோ அல்லது வேறு எந்த அரசுப் பதவியையும் வகிக்கவோ தகுதியற்றவராகக் கருதப்பட வேண்டும் என்றும் முன்மொழிந்தது.

சர்க்காரியா ஆணையம், 1986 வரை நியமிக்கப்பட்ட ஆளுநர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் ஐந்து ஆண்டுகளுக்கும் குறைவாகச் சேவை செய்துள்ளதாகவும், பலர் "அரசு ஊழியர்களைப் போல"

---

[14] Ashok Pankaj, 'Governor in Indian Federalism–II: Hiatus between Constitutional Intents and Practices' (2017) 63 Indian Journal of Public Administration 13.

மாநிலத்திலிருந்து மாநிலத்திற்கு மாற்றப்பட்டதாகவும் கண்டறிந்தது. அத்தகைய பாதுகாப்பின்மை, அழுத்தத்தைத் தாங்கும் ஆளுநரின் திறனையும், பாரபட்சமற்று முடிவு எடுக்கும் திறனையும் நலிவடையச் செய்கிறது என்று எச்சரித்தது. அரிய, கட்டாயமான காரணங்களுக்கு மட்டுமே பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று கட்டுப்படுத்தவும், ஆளுநருக்குத் தகவல் தெரிவிக்கவும், பதிலளிக்க வாய்ப்பு அளிக்கவும், நாடாளுமன்றத்தின் முன்னர் விளக்க அறிக்கையை முன்வைக்கவும் இந்த ஆணையம் பரிந்துரைத்தது.

பூஞ்சி ஆணையம் இந்தக் கவலைகளை மீண்டும் வெளிப்படுத்தியது. இந்த ஆணையம், விருப்பக் கோட்பாடு அடிப்படையிலான ஒரு தெளிவான பதவி நீக்கம் செய்யும் நடைமுறையை, குறிப்பாக, குடியரசுத் தலைவரின் பதவி நீக்கத்தைப் போலவே, மாநிலச் சட்டமன்றம் பதவி நீக்கத் தீர்மான நடைமுறை மூலம் ஆளுநர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.

ஆஸ்திரேலியாவில், மாநிலப் பிரதமரின் அறிவுரையின் பேரில் மட்டுமே, மாநில ஆளுநர்களை முடிமன்னர் நீக்குகிறார். கனடாவில், லெப்டினன்ட் ஆளுநர் கூட்டாட்சி அறிவுரையின் பேரில் ஆளுநர் ஜெனரலால் நியமிக்கப்பட்டாலும், 1879 முதல் வலுவாக உள்ள மரபுகள், அரசியல் கருத்து வேறுபாடுகளுக்காகப் பதவியில் இருப்பவர் நீக்கப்படுவதில்லை என்பதை உறுதி செய்கின்றன. இந்தியா மட்டுமே மையத்தால் நியமிக்கப்பட்ட ஆளுநரைத் தக்கவைத்துக் கொள்கிறது. அவர் விருப்பம்போல் நீக்கப்படலாம். காரணங்களை கூற வேண்டிய கடைமைப்பாடு இல்லை.

இந்தியா காலனிய கால விருப்பக் கொள்கையைக் கடந்துசெல்ல வேண்டும். ஒன்றிய ஆட்சியின் விருப்பத்தின் பேரில் நீக்கப்படுவதற்கு ஆளாகும்போது, ஆளுநர் நடுநிலையாகவோ, பாரபட்சமற்றவராகவோ, அல்லது அரசமைப்புச் சட்ட அளவிலோ செயல்பட முடியாது. பரிந்துரை 1–இன் படி, மாநிலச் சட்டமன்றமே ஆளுநர் நியமனத்திற்கான பெயர்களைப் பரிந்துரைப்பதால், நீக்கும் அதிகாரமும் மாநிலச் சட்டமன்றத்திடமே இருக்க வேண்டும். மேலும் குடியரசுத் தலைவர் பெயரளவில் மட்டுமே பதவிநீக்கம் செய்ய வேண்டும்.

பரிந்துரை 2

பின்வருவனவற்றைச் சேர்த்து, அரசமைப்புச் சட்டப் பிரிவு 156ஐ திருத்த வேண்டும்:

1. ஆளுநருக்கு தனித்த, நிலையான, புதுப்பிக்க முடியாத ஐந்து ஆண்டு பதவிக்காலம்; அதன் பிறகு குடியரசுத் தலைவர்

அல்லது துணை குடியரசுத் தலைவர் தவிர வேறு எந்த அரசமைப்புச் சட்டப் பதவியும் வகிக்க தகுதியில்லை.

2. அரசமைப்புச் சட்டப் பிரிவு 156(3) (அடுத்தவர் பதவி ஏற்கும் வரை தொடருதல் குறித்த) உட்பிரிவு நீக்கப்பட வேண்டும். பதவிக்காலம் முடிந்ததும், உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி, அடுத்தவர் பதவி ஏற்கும் வரை ஆளுநராகப் பணியாற்றுவார்.
3. மாநிலச் சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பேரில் மட்டுமே பதவி நீக்கம் செய்யப்படலாம்.
4. குடியரசுத் தலைவர் அத்தகைய தீர்மானத்தின் பேரில் பதினான்கு நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டவர்.

3. ஆளுநர் பதவியின் மேன்மையையும் நடுநிலைமையையும் உறுதிப்படுத்துதல்

அரசமைப்புச் சட்டப் பிரிவு 157 ஆளுநருக்கு, இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும், 35 வயதுக்கு மேல் இருக்க வேண்டும் என்கிற இரண்டு குறைந்தபட்ச தகுதிகளை மட்டுமே பரிந்துரைக்கிறது. காலப்போக்கில், இந்த அளவுக்கு மிகவும் குறைந்த தகுதிப்பாடு, அரசமைப்புச் சட்டத் தகுதியை விட, அரசியல் நலன் அடிப்படையில் நியமனங்களை செய்ய உதவியுள்ளது.

2015 வரை ஆளுநர்களுடைய பணிவிவரங்கள் குறித்த பேராசிரியர் அசோக் பங்கஜின் ஆய்வு, ஆளுநர்களில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கினர் அரசியல் பணி அல்லது குடிமைப் பணிகளிலிருந்து பெறப்பட்டவர்கள் என்பதைக் காட்டுகிறது. அதாவது, 52.3 விழுக்காடு அரசியல்வாதிகள், 25.6 விழுக்காடு குடிமைப் பணியாளர்கள். அரசியலாளர்களில், 12.9 விழுக்காடு முன்னாள் முதலமைச்சர்கள், 14.5 விழுக்காடு முன்னாள் அமைச்சர்கள், 19.4 விழுக்காடு முன்னாள் நாடாளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். முன்னாள் முதலமைச்சர்கள், அமைச்சர்கள், செயலூக்கம் மிக்க அரசியல்வாணர்கள் (active politicians) ஆகியோரின் நியமனம், கட்சி சாராத அரசமைப்புச் சட்ட நடுவர் என்கிற அரசமைப்புச் சிற்பிகளின் வடிவமைப்பை நேரடியாக நலிவடையச் செய்கிறது.

முதலாவது நிர்வாகச் சீர்திருத்த ஆணையம், ஆளுநர்கள் பெரும்பாலும் "தகுதிக்குத் தொடர்பில்லாத" காரணங்களுக்காக நியமிக்கப்படுகிறார்கள் என்றும், பெரும்பாலும் தோல்வியுற்ற அரசியல்வாதிகளுக்கான சன்மானப் பதவிகளாக இருப்பதாகவும் பொதுவான கவலையைப் பதிவு செய்தது. ஆளுநர்கள் நீண்ட பொது அனுபவம் கொண்டவர்களாக

இருக்க வேண்டும், கட்சி விசுவாசங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும், அவர்கள் மறுநியமனம் செய்யப்படக்கூடாது என்று வலியுறுத்தியது. நீதிபதிகளின் ஓய்வுக்குப் பின்பு உடனடியான நியமனங்களும் செய்யப்படக் கூடாது எனவும் எச்சரிக்கை விடுத்தது.

சர்க்காரியா ஆணையம், ஒன்றியத்தின் முகவர்களாகச் செயல்படும், "புறக்கணிக்கப்பட்டு, மனக் கசப்பு அடைந்த" அரசியல்வாதிகளை நியமனம் செய்வதைக் கூர்மையாக விமர்சனம் செய்தது. மேலும் ஆளுநர்கள் மீண்டும் தீவிர அரசியலுக்குத் திரும்புவது, ஆரோக்கியமற்ற நடைமுறை என்பதையும் குறிப்பிட்டது. ஆளுநர் மேன்மையுள்ளவராகவும், மாநிலத்திற்கு அயலானவர்களாகவும், மாநில அரசியலிலிருந்து விலகியவராகவும், அண்மைய அரசியல் ஈடுபாடு இல்லாதவராகவும் இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது.

அரசமைப்புச் சட்டப் பணி குறித்த ஆய்விற்கான தேசிய ஆணையம் (2002) *[National Commission to Review the Working of the Constitution* (2002)], பூஞ்சி ஆணையம் ஆகிய இரண்டும் இந்த கோட்பாடுகளை மீண்டும் உறுதிப்படுத்தின.

இந்தியாவின் நடப்பிற்கு மாறாக, ஆஸ்திரேலியாவிலும் கனடாவிலும், முறைப்படியான தகுதிப்பாடுகள் எவையும் இல்லாவிட்டாலும், அரசமைப்புச் சட்ட மரபுகள் மாநில ஆளுநர்கள், லெப்டினண்ட் ஆளுநர்கள் சிறந்த, கட்சி சாராத பொதுப் பிரமுகர்களாக இருப்பதை உறுதி செய்கின்றன.

இதன்படி, (பரிந்துரை 1–இன் கீழ் கருதப்பட்டது போல) மாநிலத்தால் பரிந்துரைக்கப்பட்ட வேட்பாளர்கள், குறைபாடற்ற நேர்மை கொண்ட, அண்மைய கட்சி அல்லது அரசாங்கப் பொறுப்பு வகிக்காத, மேன்மையான அயலவர்களாக இருக்க வேண்டும். இந்தப் பதவி, கட்சி விசுவாசிகளுக்கு அல்லது புதிதாக ஓய்வு பெற்ற நீதிபதிகளுக்குப் புகலிடமாக இருக்கக் கூடாது; அர்த்தமுள்ள வகையில் "இடைவெளிக் காலம்" அவசியம் இருக்க வேண்டும்.

பரிந்துரை 3

அரசமைப்புச் சட்டப் பிரிவு 157ஐ திருத்தி, இப்போதுள்ள தகுதிகளுடன் கூடுதலாக, ஆளுநர் அந்த மாநிலத்தைச் சாராதவராகவும், பொதுவாழ்வில் ஏற்கப்பட்ட ஏதேனும் ஒரு துறையில் புகழ்பெற்றவராகவும் இருக்க வேண்டும் என்றும், மேலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் எந்தவொரு அரசியல் கட்சியிலும் பதவி வகித்திருக்கவோ அல்லது நிர்வாகத் துறை, சட்டமன்றம் (தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லது நியமிக்கப்பட்டவர்) அல்லது நீதித்துறை ஆகியவற்றின் கீழ் எந்தப் பதவியையும் வகித்திருக்கவோ கூடாது என்றும் நிபந்தனை விதிக்கப்பட வேண்டும்.

4. ஆளுநர்களுக்கான வழிகாட்டுதல் ஆவணத்தை மீட்டமைத்தல்

ஆளுநரின் விருப்புரிமை அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் ஆளுநருக்கு வழிகாட்ட, அரசமைப்புச் சிற்பிகள் ஆரம்பத்தில் *வழிகாட்டுதல் ஆவணத்தை (Instrument of Instructions)* முன்மொழிந்தனர். இது 1935–ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் பிரிவு 53–இன் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டு, வரைவு அரசமைப்புச் சட்டத்தின் (1948) நான்காவது அட்டவணையில் சேர்க்கப்பட்டது. எவ்வாறாயினும், இது பின்வரும் இரண்டு ஊகங்களின் அடிப்படையில் 1949 அக்டோபரில் நீக்கப்பட்டது: முதலாவதாக, ஆளுநரின் விருப்புரிமை மிகக் குறைவாக இருக்கும். இரண்டாவதாக, அரசமைப்புச் சட்ட மரபுகள் ஆளுநரின் நடத்தையை இயல்பாகவே ஒழுங்குபடுத்தும். எழுபது ஆண்டுகால அரசமைப்புச் சட்ட நடைமுறை இந்த இரண்டு ஊகங்களும் மிகவும் தவறானவை என்பதைக் காட்டியுள்ளன.

ஆளுநரின் விருப்புரிமையை ஆட்சி செய்யும் தெளிவான, வகுக்கப்பட்ட முறைமை இல்லாததில் இருந்தே, ஆளுநர் பதவியைச் சுற்றி தொடர்ச்சியான சர்ச்சைகள் எழுகின்றன. ராஜமன்னார் குழு, சர்க்காரியா ஆணையம், அரசமைப்புச் சட்டப் பணி குறித்த ஆய்விற்கான தேசிய ஆணையம், பூஞ்சி ஆணையம் ஆகிய அடுத்தடுத்து அமைக்கப்பட்ட வல்லுநர் அமைப்புகள், ஆளுநர்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசாங்கங்களுக்கும் இடையிலான தொடர்ச்சியான மோதலுக்கு, முதன்மையான காரணமாக இந்தச் சட்ட அமைப்பு வெற்றிடத்தை அடையாளம் கண்டுள்ளன.

முற்றுப்பெறாத அரசமைப்புச் சட்ட வடிவமைப்பை நிறைவுபெற வைக்கவும், ஆளுநரின் விருப்புரிமையைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், தெளிவான, கட்டுப்படுத்தும், அரசமைப்புச் சட்ட அளவில் வலுவான விதிமுறை இப்போது அவசியமானது. விரிவான ஆட்சித்துறை விதிமுறைகளை பட்டியலிட அட்டவணைகளைப் பயன்படுத்தும் இந்தியப் நடைமுறைக்கு இணங்க (எ.கா., ஐந்தாவது, ஆறாவது, பத்தாவது அட்டவணைகள்), *ஆளுநர்களுக்கான வழிகாட்டுதல் ஆவணம்* என்ற தலைப்பில் புதியதாக *பதின்மூன்றாவது அட்டவணை* சேர்க்கப்பட வேண்டும் என்பது மிகப் பொருத்தமானது.

இந்த ஆவணம் பின்வரும் பொருண்மைகள் குறித்த விதிகளை வகுக்க வேண்டும்:

- அரசாங்கம் அமைத்தல், கட்டாய நம்பிக்கை வாக்கெடுப்புகள்;
- சட்டமன்றத்தைக் கூட்டுதல், ஒத்திவைத்தல், கலைத்தல்;
- அரசமைப்புச் சட்ட நடத்தை, அரசியல் நடுநிலைமைக்கான தரநிலைகள்;

- சட்டவரைவுகளுக்கு ஏற்பிசைவு அளித்தல், நிறுத்தி வைத்தல், ஒதுக்கி வைத்தல்;
- குடியரசுத் தலைவர் ஆட்சிக்கான பரிந்துரைகள்;
- ஆளுநரின் மற்ற அனைத்து விருப்புரிமை அதிகாரங்கள்.

உச்சநீதிமன்றம் முக்கியமான கொள்கைகளை வகுத்துள்ள போதிலும், அணுகல்தன்மை, தெளிவுத்தன்மை, நிலைத்தன்மை ஆகியவற்றுக்கான அரசமைப்புச் சட்ட விதிமுறையின் தொகுப்பு இன்றியமையாததாக உள்ளது.

பரிந்துரை 4

ஆளுநர்களுக்கான வழிகாட்டுதல் ஆவணம் என்கிற புதிய பதின்மூன்றாவது அட்டவணையை அரசமைப்புச் சட்டத்தில் இணைக்க வேண்டும். நடுநிலைமையை உறுதிப்படுத்தவும், தவறான பயன்பாட்டைத் தடுக்கவும், இந்தியாவின் கூட்டாட்சி முறையையும் அரசமைப்புச் சட்ட சமநிலையையும் வலுப்படுத்தவும் ஆளுநரின் விருப்புரிமையை ஆட்சி செய்யும் தெளிவான, கட்டுப்படுத்தும் கொள்கைகளை வகுத்தளிக்க வேண்டும்.

5. அரசாங்கம் அமைப்பதில் ஆளுநரின் விருப்புரிமையைச் சீர்திருத்தம் செய்தல்

அரசமைப்புச் சட்டப் பிரிவு 164–இன் கீழ், ஆளுநர் முதலமைச்சரை நியமிக்கிறார். முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில், அமைச்சரவையை நியமிக்கிறார். இவர்கள் ஆளுநருடைய விருப்பம் உள்ள வரை பதவி வகிப்பார்கள். கொள்கையளவில், கட்சியோ அல்லது தேர்தலுக்கு முந்தைய கூட்டணியோ மறுக்க முடியாத பெரும்பான்மையைக் கொண்டிருக்காதபோது மட்டுமே ஆளுநரின் விருப்புரிமை பயன்படுகின்ற அளவிற்கு மிகவும் குறுகியது. எவ்வாறாயினும், நடைமுறையில், தொங்கு சட்டமன்றங்கள் அமையும்போது, வழிகாட்டுதல் இல்லாத விருப்புரிமையை தவறாக பயன்படுத்தவும், தாமதம் செய்யவும், கட்சி சார்பு உணர்வோடு செயல்டவும் வழியமைக்கிறது என்பது பலமுறை வெளிப்பட்டுள்ளது.

முதலாவது நிர்வாகச் சீர்திருத்த ஆணையம் அமைச்சரவையின் பெரும்பான்மை குறித்து சந்தேகம் இருக்கும்போதெல்லாம், ஆளுநர் அகநிலை அளவில் மதிப்பீடுகளைச் செய்யாமல், சட்டமன்றத்தைக் கூட்டி, நம்பிக்கை வாக்கெடுப்பைக் கோர வேண்டும் என்று வலியுறுத்தியது.

ராஜமன்னார் குழு, ஆளுநரின் விருப்புரிமையை முதலமைச்சரை நியமித்தல், அமைச்சரவையைப் பதவி நீக்கம் செய்தல், சட்டமன்றத்தைக் கலைத்தல் ஆகிய மூன்று சூழ்நிலைகளுக்குள் மட்டுமே வரம்பிட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டது. கட்சி சார்பு தலையீட்டைத் தடுக்க, இந்த விருப்புரிமை அதிகாரங்களுக்கு வழிகாட்ட கட்டுப்படுத்தும் விதிமுறைகளை வகுக்கும் வழிகாட்டுதல் ஆவணத்தைப் பிறப்பிக்கக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப் பரிந்துரைத்தது.

சர்க்காரியா ஆணையம் மிகவும் விரிவான முறையை முன்வைத்தது. எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறாதபோது, ஆளுநர் பின்வரும் கண்டிப்பான முன்னுரிமை வரிசை முறையைப் பின்பற்ற வேண்டும்:

(i) ஒற்றை அரசியல் அலகாகக் கருதப்படும் பெரும்பான்மை கொண்ட தேர்தலுக்கு முந்தைய கூட்டணி;

(ii) உறுதியான ஆதரவுடன் உரிமை கோரும் ஒற்றை மிகப்பெரிய கட்சி;

(iii) அனைத்து கூட்டணி கட்சிகளும் அமைச்சரவையில் இணையும் தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணி;

(iv) வெளியிலிருந்து ஆதரவு வழங்கும் தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணி.

இந்த ஆணையம், பின்வரும் இரண்டு மையமான கொள்கைகளை வெளிப்படுத்தியது:

- ஆளுநர் பெரும்பான்மை ஆதரவைத் தாமாகவே மதிப்பிடக் கூடாது;
- பொதுவாக 30 நாட்களுக்குள், அனைத்துக் கட்சிகளின் உரிமை கோரல்களும் சட்டமன்ற அவையில் மட்டுமே சோதிக்கப்பட வேண்டும்.

அரசமைப்புச் சட்டப் பணி குறித்த ஆய்விற்கான தேசிய ஆணையம், இன்னும் வலுவான பின்வரும் பாதுகாப்பு வழிமுறையை முன்மொழிந்தது: தொங்கு சட்டமன்றத்தில், அமைச்சரவை நியமிக்கப்படுவதற்கு முன்பு, பதவி ஏற்புக்கு முந்தைய வாக்கெடுப்பு *(investiture vote)*, வருங்கால முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்க உறுப்பினர்களுக்கு உதவுகிறது. இது மிகவும் முக்கியமான கட்டத்தில் ஆளுநரின் விருப்புரிமையை நீக்கும்போது, வெளிப்படைத்தன்மையையும் மக்களாட்சி முறையின் ஏற்புத் தன்மையையும் உறுதி செய்கிறது.

பூஞ்சி ஆணையம், சர்க்காரியா ஆணையத்தின் முறையை மீண்டும் உறுதிப்படுத்தியது. மேலும் ஒற்றை மிகப்பெரிய கட்சியைவிட, அதிக இடங்களைப் பெறும் தேர்தலுக்கு முந்தைய கூட்டணிக்கு, ஆட்சி அமைக்கக் கோரும் முதல் உரிமை உள்ளது என்பதைத் தெளிவுபடுத்தியது.

ஆஸ்திரேலியா, கனடா போன்ற பிற வெஸ்ட்மின்ஸ்டர் கூட்டாட்சி நாடுகளில், ஆளுநர் அல்லது லெப்டினன்ட் ஆளுநர் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையின் நம்பிக்கையைத் தெளிவாகப் பெறும் தலைவரை மட்டுமே நியமிக்கிறார். கூட்டணி ஒப்பந்தங்கள் எழுதப்பட்டு பொதுவில் வெளியிடப்படுகின்றன. இது குழப்பத்தைத் தடுக்கிறது, சர்ச்சைகளை அரிதாக்குகிறது.

பரிந்துரை 5

பொதுத் தேர்தல்கள், அமைச்சரவையின் பதவி விலகல், அல்லது நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு பொருந்தக்கூடிய பின்வரும் கொள்கைகள் "ஆளுநர்களுக்கான வழிகாட்டுதல் ஆவணத்தில்" (பரிந்துரை 4ஐ பார்க்கவும்) இணைக்கப்பட வேண்டும்:

1. எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், ஆளுநர் அரசாங்கத்தை அமைப்பதற்கு ஒரு தலைவரை பின்வரும் கண்டிப்பான முன்னுரிமை வரிசை முறையில் மட்டுமே அழைக்க வேண்டும்:
   (அ) தெளிவான பெரும்பான்மை கொண்ட தேர்தலுக்கு முந்தைய கூட்டணி;
   (ஆ) உறுதியான ஆதரவுடன் கூடிய ஒற்றை மிகப்பெரிய கட்சி;
   (இ) அனைத்து கூட்டணிக் கட்சிகளும் அமைச்சரவையில் இணையும் தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணி;
   (ஈ) சிலர் வெளியிலிருந்து ஆதரவு அளிக்கும் தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணி.
2. ஆளுநர் பெரும்பான்மை ஆதரவை மதிப்பிடுவதற்குத் தனிப்பட்ட அளவிலான முடிவு, முறைசாராத தொடர்பு அல்லது தொடர்பற்ற ஆதாரங்களை நம்பியிருக்கக் கூடாது.
3. உரிமை கோரும் அனைத்துக் கட்சிகளும் சட்டமன்ற அவையில் மட்டுமே, பொதுவாக ஏழு நாட்களுக்குள்,

சோதிக்கப்பட வேண்டும். அரிதான நிகழ்வுகளில் மட்டுமே பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காகக் காலம் நீட்டிக்கப்படலாம்.

4. நம்பிக்கை வாக்கெடுப்பு அட்டவணையில் செயற்கையான தாமதம், ஒத்திவைப்பு, அல்லது மோசடி செய்தல் அனுமதிக்கப்படக் கூடாது.

6. சட்டமன்றத்தைக் கூட்டுதல், ஒத்திவைத்தல், கலைத்தல் ஆகியவை குறித்த ஆளுநரின் விருப்புரிமையைச் சீர்திருத்தம் செய்தல்

சட்டமன்றத்தைக் கூட்டுதல், ஒத்திவைத்தல், கலைத்தல் ஆகியவற்றுக்கான ஆளுநரின் அதிகாரங்கள் அரசமைப்புச் சட்டப் பிரிவு 174–இலிருந்து பெறப்படுகின்றன. மேலும், இந்த அதிகாரங்கள், மிகவும் வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளில் தவிர, அரசமைப்புச் சட்டப் பிரிவு 163–இன் கீழ் அமைச்சரவையின் உதவி ஆலோசனையின் பேரில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். ஏற்கனவே குறிப்பிட்டது போல, *நபம் இரேபியா* (2016) வழக்கில், அவையில் நடக்கும் வாக்கெடுப்பில், அரசாங்கம் தெளிவாகப் பெரும்பான்மையை இழந்தாலன்றி, ஆளுநர் அமைச்சரவை ஆலோசனையின்றி அவையைக் கூட்டவோ, அமர்வை முன்கூட்டியே மாற்றவோ, அல்லது அவையின் நிகழ்ச்சி நிரலை அமைக்கவோ முடியாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. *பஞ்சாப் மாநிலம்* (2023) வழக்கில், ஆளுநர் அமைச்சரவையின் ஆலோசனைக்குத் தெளிவாகக் கட்டுப்பட்டவர் என்று கூறி, நிதிநிலை அறிக்கை அமர்வைக் கூட்டுவதைத் ஆளுநர் தாமதப்படுத்தவோ அல்லது தடுக்கவோ முடியாது என்று நீதிமன்றம் மீண்டும் உறுதிப்படுத்தியது. *இராமேஸ்வர் பிரசாத்* (2006) வழக்கில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பீகார் சட்டமன்றம் கூடும் முன்பே, அதைக் கலைக்க ஆளுநரின் பரிந்துரை அரசமைப்புச் சட்டவிரோதமானது, தீய நோக்கம் கொண்டது என்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

எனவே, நீதித்துறை விளக்கம், அரசமைப்புச் சட்டப் பிரிவு 174ஐ பயன்படுத்துவதில் ஆளுநரின் தனிப்பட்ட விருப்புரிமையைத் தொடர்ந்து மறுத்து வந்துள்ளது.

பரிந்துரை 6

சட்டமன்றத்தைக் கூட்டுதல், ஒத்திவைத்தல், கலைத்தல் ஆகியவற்றை ஆட்சி செய்யும் பின்வரும் கொள்கைகள் "ஆளுநர்களுக்கான வழிகாட்டுதல் ஆவணத்தில்" (பரிந்துரை 4ஐ பார்க்கவும்) இணைக்கப்பட வேண்டும்:

1. அரசாங்கம் தெளிவாகப் பெரும்பான்மையை இழந்தாலன்றி, கூட்டுதலையும் ஒத்திவைத்தலையும் அமைச்சரவையின் உதவி ஆலோசனையின் பேரில் மட்டுமே செய்ய வேண்டும்.
2. நம்பிக்கையில்லா தீர்மானம் நிலுவையில் இருக்கும்போது அல்லது நம்பகமான புறநிலை அடிப்படையில் பெரும்பான்மை இழந்துவிட்டபோது மட்டுமே, ஆளுநர் *தாமாகவே (suo motu)* நம்பிக்கை வாக்கெடுப்புக்கு உத்தரவிடலாம்.
3. அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் மட்டுமே, கலைக்க உத்தரவிடப்பட வேண்டும். அமைச்சரவை பெரும்பான்மையை இழந்தால், ஆளுநர் முதலில் மாற்று அரசாங்கத்தை அமைப்பதற்கான அனைத்துச் சாத்தியமான வாய்ப்புகளையும் ஆராய வேண்டும். சட்டமன்ற நம்பிக்கையின் ஒரே உறுப்பாடாக இருக்கும் நம்பிக்கை வாக்கெடுப்பைத் தவிர்க்கவோ அல்லது முன்கூட்டியே தடுக்கவோ கலைத்தலை ஒருபோதும் பயன்படுத்தப்படக்கூடாது.

7. ஆளுநரின் நடத்தை, நடுநிலைமை, பொதுமக்கள் தொடர்பு ஆகியவை குறித்த விதிமுறைகளை வகுத்தல்

மேற்கு வங்காளம், தமிழ்நாடு, கேரளா ஆகிய இடங்களில், ஆளுநர்கள் பொதுவெளியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களை விமர்சித்தல், சமூக ஊடகங்கள் வழியாக மோதல்களில் ஈடுபடுதல், ஆளுநரின் உரையின் பகுதிகளை நீக்குதல், சட்டமன்றங்களிலிருந்து வெளியேறுதல், அல்லது அலுவலர்களை நேரடியாகச் சந்தித்தல் முதலானவை நடந்தேறிய, அண்மைய நிகழ்வுகள் அரசமைப்புச் சட்ட உறவுகளைப் பாதித்துள்ளன; நடுநிலைமை குறித்த எதிர்பார்ப்பை சிதைத்துள்ளன. எனவே, கண்ணியம், கட்டுப்பாடு, அரசமைப்புச் சட்டப் பண்பு ஒழுக்கம் ஆகியவற்றை மீட்டெடுக்க, ஆளுநரின் நடத்தையின் மீதான தெளிவான, கட்டுப்படுத்தும் விதிமுறைகள் அவசியமானவை.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசால் அரசமைப்புச் சட்டப் பிரிவு 176–இன் கீழ் தயாரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டமன்றத்தில் சிறப்பு உரையைப் படிக்க ஆளுநர்கள் மறுத்துவிட்டனர். பல வேளைகளில், அவர்கள் பத்திகளைத் தவிர்த்துவிட்டனர், தங்கள் சொந்தக் கருத்துக்களை இடையில் செருகியுள்ளனர் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட உரையிலிருந்து விலகிச் சென்றுள்ளனர். சிறப்பு உரை, அன்றைய தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் கொள்கையையும் திட்டத்தையும் முன்வைக்கும் உரை ஆகும். இது தேர்ந்தெடுக்கப்படாத ஆளுநரின் தனிப்பட்ட கருத்துக்கள், கருத்துநிலை சாய்வுகள் அல்லது அரசியல்

சூழ்ச்சிகள் ஆகியவற்றுக்கான தளம் அல்ல. தமிழ்நாட்டில், ஆளுநர் 2024, 2025, 2026–ஆம் ஆண்டுகளில் வழக்கமான உரையை வழங்க மறுத்து சட்டமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்தார். சமகால இந்தியாவில், பிரிவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 176 எந்த முக்கிய நோக்கத்திற்கும் உதவாது. இது ஒரு காலத்துக்கும் ஒவ்வாதது, அதன் செயல்பாடு முற்றிலும் சடங்குநிலையிலானது. பொறுப்பான அரசாங்கத்திற்கு உதவுவதற்குப் பதிலாக, இது ஒன்றிய–மாநில உறவுகளில் முக்கிய புள்ளியாகவும், அரசியல் சீர்குலைவுக்கான கருவியாகவும் மாறிவிட்டது. எனவே, இந்த அரசமைப்புச் சட்டப் பிரிவு முழுவதுமாக நீக்கப்பட வேண்டும்.

பரிந்துரை 7

பின்வரும் விதிமுறைகள் "ஆளுநர்களுக்கான வழிகாட்டுதல் ஆவணத்தில்" (பரிந்துரை 4ஐ பார்க்கவும்) இணைக்கப்பட வேண்டும்:

1. ஆளுநர், பதவியின் கண்ணியத்தை நிலைநாட்ட வேண்டும். மாநில அரசாங்கம், அதன் கொள்கைகள், அல்லது சட்டமன்றம் குறித்து பொதுத்தளத்தில் விமர்சனம் செய்வதிலிருந்து விலகி இருக்க வேண்டும்.
2. தனிப்பட்ட அளவிலான தொடர்பு: எந்தவொரு கருத்து வேறுபாடு அல்லது கவலையும் நிறுவப்பட்ட அரசமைப்புச் சட்ட வழிகள் மூலமாகக் கண்ணியமான முறையில் தெரிவிக்கப்பட வேண்டும். ஒரு போதும் செய்தி அறிக்கைகள், பொதுமேடைப் பேச்சுக்கள், அல்லது சமூக ஊடகக் கருத்துகள் வழியாகத் தெரிவிக்கப்படக் கூடாது.
3. அரசமைப்புச் சட்டப் பிரிவு 176 (ஆளுநரின் சிறப்புரை) நீக்கப்பட வேண்டும்.

8. சட்டவரைவுகளுக்கு ஏற்பிசைவு அளித்தல், நிறுத்திவைத்தல், ஒதுக்கிவைத்தல் ஆகியவற்றில் ஆளுநரின் விருப்புரிமையைச் சீர்திருத்தம் செய்தல்

அரசமைப்புச் சட்டப் பிரிவு 200–இன் கீழ், சட்டவரைவு ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்படும்போது, அவருக்கு மூன்று விருப்பங்கள் உள்ளன: (1) ஏற்பிசைவு அளித்தல்; (2) ஏற்பிசைவை நிறுத்தி வைத்தல் (இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் மறுபரிசீலனைக்கான செய்திக் குறிப்புடன் சட்டவரைவைத் திருப்பி அனுப்ப வேண்டும்); அல்லது (3) குடியரசுத் தலைவரின் கருத்தறிய சட்டவரைவை அனுப்பி வைத்தல். சட்டமன்றம், ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட சட்டவரைவை திருத்தங்களுடன் அல்லது திருத்தங்கள் இல்லாமல் மீண்டும் நிறைவேற்றினால், ஆளுநர்

ஏற்பிசைவு அளிக்கக் கடமைப்பட்டவர். அரசமைப்புச் சட்டப் பிரிவு 201–இன் கீழ், சட்டவரைவு ஒதுக்கி வைக்கப்பட்டால், குடியரசுத் தலைவர் ஏற்பிசைவு அளிக்கவோ அல்லது நிறுத்தி வைக்கவோ அல்லது மறுபரிசீலனைக்காகத் திருப்பி அனுப்பவோ செய்யலாம். மாநிலச் சட்டமன்றத்தின் மறுபரிசீலனைக்காகத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட, அத்தகைய சட்டவரைவை மாநிலச் சட்டமன்றம் ஆறு மாதங்களுக்குள் மீண்டும் நிறைவேற்றினால், அது மீண்டும் குடியரசுத் தலைவரிடம் அளிக்கப்பட வேண்டும்.

இந்த விதிகள் *1935–ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் (Government of India Act,* 1935) பிரிவு 75லிருந்து பெறப்பட்டவை. ஆனால், 1935–ஆம் அரசாங்கச் சட்டத்தில் இருந்த "தனது விருப்புரிமையில்" என்ற சொற்றொடர் அரசமைப்புச் சட்டப் பிரிவு 200லிருந்து வேண்டுமென்றே நீக்கப்பட்டது. பொறுப்புள்ள அரசாங்கத்தில், ஏற்பிசைவு குறித்த பொருண்மைகளில் ஆளுநர் தனியான விருப்புரிமையைப் பயன்படுத்துவதற்கு இடமிருக்கக் கூடாது என்று பி.ஆர். அம்பேத்கர் அரசமைப்பு அவைத் விவாதங்களின் போது தெளிவுபடுத்தினார். இந்தக் கொள்கை, விருப்புரிமை அதிகாரங்களை குறிப்பிடும் சொற்களை நீக்கி, முதலில் 1935–ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம், தழுவிய இந்திய *(தற்காலிக அரசியலமைப்பு) ஆணை, 1947 (India (Provisional Constitution) Order, 1947)* மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த ஆணை, 1947 ஆகஸ்ட் 15 முதல் 1950 ஜனவரி 26 வரை இந்தியாவின் தற்காலிக அரசியலமைப்பு முறையாகச் செயல்பட்டது. ஏற்பிசைவு அளிப்பதில், ஆளுநரின் பங்கு தனிப்பட்ட விருப்புரிமையுடன் அல்லாமல், அமைச்சரவை வழிநடத்த வேண்டும் என்கிற அரசமைப்புச் சட்ட நோக்கம் பிழையற்றது.

ஆணையப் பரிந்துரைகள்

சர்க்காரியா ஆணையம், அரசமைப்புச் சட்டப் பிரிவு 200–இன் கீழ் ஆளுநருக்குப் பொதுவான விருப்புரிமை அதிகாரம் இல்லை என்றும், வழக்கமாக அமைச்சரவையின் உதவி ஆலோசனையின் பேரில் செயல்பட்டே ஆகவேண்டும் என்றும் உறுதிப்படுத்தியது. வெளிப்படையான அரசமைப்புச் சட்டவிரோத அல்லது அரசமைப்புச் சட்டத்தால் குறிப்பாக ஒதுக்கி வைக்க வேண்டிய அரிய நிகழ்வுகளில் மட்டுமே ஒதுக்கி வைத்தல் நிகழ வேண்டும். மிக முக்கியமாக, குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவில் காலவரையற்ற தாமதங்கள் காரணமாகவே பெரும்பாலும் ஒன்றிய–மாநில மோதல் எழுகிறது என்பதை ஆணையம் அங்கீகரித்தது. எனவே, இந்த ஆணையம் பின்வருமாறு பரிந்துரைத்தது:

- குடியரசுத் தலைவருக்கு ஒதுக்கி வைக்கப்பட்ட சட்ட வரைவுகளை ஒன்றியம் முடிவு செய்ய நான்கு மாத கால வரம்பு;
- அரசமைப்புச் சட்டப் பிரிவு 201–ஆம் பகுதியின் கீழ் இரண்டு மாதங்களுக்குள் மாநில அரசாங்கத்திடமிருந்து விளக்கங்களைக் கோருதல்;
- மறுபரிசீலனை செய்யப்பட்ட சட்டவரைவுகள் குறித்து நான்கு மாதங்களுக்குள் இறுதி முடிவு எடுத்தல்.

மாநிலச் சட்டவரைவுகள் குறித்து நாடாளுமன்றமே முடிவு எடுக்க வேண்டும் என்ற கருத்தை சர்க்காரியா ஆணையம் ஏற்றுக் கொள்ளவில்லை. இது சிக்கலானதும் தேவையற்றதும் என்று கூறியது.

அரசமைப்புச் சட்டப் பணி குறித்த ஆய்விற்கான தேசிய ஆணையம், ஆளுநருக்கு ஆறு மாதங்கள், குடியரசுத் தலைவருக்கு மூன்று மாதங்கள் என கால வரம்புகளை முன்மொழிந்தது.

பூஞ்சி ஆணையம் தெளிவான காலக்கெடுவின் அவசியத்தை ஏற்றுக்கொண்டது. சட்டவரைவு குறித்து ஆளுநர் முடிவெடுக்க ஆறு மாத கால வரம்பைப் பரிந்துரைத்தது. சட்டவரைவு மீண்டும் நிறைவேற்றப்படும்போது, ஆளுநர் ஏற்பிசைவு அளித்தே ஆகவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டது.

ஒப்பீடு தரும் அனுபவம்

ஆஸ்திரேலியாவிலும் கனடாவிலும், இதேபோன்ற ஆளுநரின் அதிகாரங்கள் – அரசமைப்புச் சட்ட உரையில் இருந்தாலும் – மரபின் மூலம் செல்லாதவையாக மாறிவிட்டன. அமெரிக்காவில், அரசமைப்புச் சட்டப் பிரிவு I, பிரிவு 7 உலகின் நன்கு *அறியப்பட்ட ஏற்பிசைவு (deemed assent)* அளிப்பு முன்மாதிரியை வழங்குகிறது: காங்கிரஸ் அமர்வில் இருக்கும்போது, 10 நாட்களுக்குள் (ஞாயிற்றுக்கிழமைகளைத் தவிர்த்து) குடியரசுத் தலைவர் சட்டவரைவில் கையெழுத்திடவோ அல்லது இரத்து செய்யவோ தவறினால், சட்டவரைவு தானாகவே சட்டமாகிறது. கென்யாவின் அரசமைப்புச் சட்டத்தின் (2010) அரசமைப்புச் சட்டப் பிரிவு 115–இன் கீழ், குடியரசுத் தலைவர் 14 நாட்களுக்குள் எற்பிசைவு அளிக்கவோ அல்லது சட்டவரைவைத் திருப்பி அனுப்பவோ தவறினால், ஏற்பிசைவு அளிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. இந்தியாவிற்கு முன்மொழியப்பட்ட சீர்திருத்தத்திற்கான மிக நெருக்கமான சமகால முன்னுதாரணம் கென்ய மாதிரி (Kenyan model) ஆகும்.

நீதித்துறை வளர்ச்சிகள்

தமிழ்நாடு மாநிலம் எதிர் தமிழ்நாடு ஆளுநர் (ஏப்ரல் 2025) [State of Tamil Nadu v. Governor of Tamil Nadu (April 2025)], *சட்டவரைவுகள் குறித்த ஏற்பிசைவு அளித்தல், நிறுத்தி வைத்தல் அல்லது ஒதுக்கி வைத்தல் குறித்த குடியரசுத் தலைவர் கருத்து கேட்பு (நவம்பர் 2025)* என்ற அரசமைப்பு அமர்வு ஆலோசனைக் கருத்துரை (Constitution Bench Advisory Opinion) ஆகிய இரண்டு முக்கிய உச்சநீதிமன்றத் தீர்ப்புகளைக் ஏற்கனவே ஆராய்ந்தோம்.

இந்தக் குழு, மிகுந்த மரியாதையுடன், ஏப்ரல் 2025 தீர்ப்பு மிகவும் சரியான அரசமைப்புச் சட்ட நிலையைக் குறிக்கிறது என்று கருதுகிறது. ஆலோசனைக் கருத்துரை, வரையறுக்கப்பட்ட ஆணை ஆளுநருக்கு மட்டுமே பொருந்தும், அதுவும் ஒவ்வொரு வழக்கு அடிப்படையில் மட்டுமே, அதேசமயம் குடியரசுத் தலைவருக்கு (அதாவது, ஒன்றிய அமைச்சரவைக்கு) பொருந்தாது என்று தீர்ப்பு அளிப்பதன் மூலம், மாநிலங்களை மீண்டும் மீண்டும் வழக்குகளுக்குள் தள்ளுகிறது. இதனால் தாமதத்தை நிறுவனமயம் ஆக்குகிறது. மேலும், இந்தக் கருத்துரை, பின்வரும் கட்டமைப்பு அளவிலான ஆபத்தான சாத்தியக்கூறை உருவாக்குகிறது: கொள்கையளவில், ஆளுநர் ஒவ்வொரு மாநிலச் சட்டவரைவையும் ஒதுக்கி வைக்கலாம். மேலும் ஒன்றிய நிர்வாகம் காலவரையின்றி அவற்றின் மீது முடிவு எடுக்காது இருக்கலாம். இது மாநிலச் சட்டமன்றத்தை முடக்கிவிடுவது ஆகும். இது மாநில சுயாட்சியைப் பறித்து, அடிப்படை அம்சமாகக் கருதப்படும் கூட்டாட்சி முறையைக் கொண்ட அரசமைப்புச் சட்டத்தை வெறும் கானல்நீராக மாற்றிவிடும். மாறாக, ஏப்ரல் 2025 தீர்ப்பு ஊகிக்கக்கூடிய காலக்கெடுவை விதித்தது. ஆளுநரின் வரம்பு மீறலைக் கட்டுப்படுத்தியது. கூட்டாட்சி முறையின் சமநிலையைச் சிறப்பாகப் பாதுகாத்தது.

அரசமைப்புச் சட்ட அமைதியும் தாமாகவே ஏற்பிசைவு அளிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும்

கால வரம்புகள் குறித்த அரசமைப்புச் சட்டத்தின் அமைதி, "ஏற்பிசைவு அளிக்கப்பட்டதாகக் கருதப்படும் தன்மையை" தடுக்கிறது என்ற ஆலோசனைக் கருத்துரையின் வாதம் இரண்டு காரணங்களால் சரியானது அல்ல. முதலாவதாக, அரசமைப்புச் சட்ட அமைதி, வரம்பற்ற அதிகாரம் அல்லது வரம்பற்ற கால அளவை குறிக்க முடியாது. ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவர் காலவரம்பின்றிச் சட்டவரைவுகளின் மீது முடிவு எடுக்காமல் இருக்க முடிந்தால், மாநில நிர்வாகம் முடக்கப்படும்.

மக்களாட்சிமுறையின் ஆணையை நலிவடையச் செய்யக் கூடும். அரசமைப்புச் சட்ட அடிப்படையின் பகுதியாக உள்ள கூட்டாட்சி முறையை மீறுவது ஆகும். இது உரிய காலக்கெடுவையே குறிக்கின்றது. இரண்டாவதாக, நிறுவன அளவிலான தவறுகளைத் தடுக்க உச்சநீதிமன்றம் மீண்டும் மீண்டும் அரசமைப்புச் சட்ட மௌனங்களை நிரப்பியுள்ளது. நீதித்துறை தேர்வுக்குழு, கிரீமி–லேயர் கோட்பாடு, 50 விழுக்காடு இடஒதுக்கீடு உச்சவரம்பு (*103வது திருத்தத்திற்கு* (2019) முன்), கட்சி தாவல்களில் சபாநாயகர்களுக்கு காலவரையறை உத்தரவுகள் ஆகியவை நன்கு அறியப்பட்ட எடுத்துக்காட்டுகள் ஆகும். அரசமைப்புச் சட்ட இடைவெளிகள், அடிப்படை அமைப்பை அல்லது பொறுப்பான அரசாங்கத்தை அச்சுறுத்தும் போது, இடைவெளிகள் நீதித்துறை விளக்கத்தின் மூலம் *நிரப்பப்பட வேண்டும்.*

பரிந்துரை 8

1. **கட்டாய காலக்கெடுவும் தானாகவே ஏற்பிசைவு அளிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும்:** பரிந்துரைகள் 5 முதல் 7 வரை முன்மொழியப்பட்டவை பதின்மூன்றாவது அட்டவணை ("ஆளுநர்களுக்கான வழிகாட்டுதல் ஆவணம்") மூலம் செயல்படுத்தப்படலாம். அவை போன்று அல்லாமல், அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 200, 201 ஆகியவை சட்டவரைவுகளுக்கு ஏற்பிசைவு அளித்தல், நிறுத்தி வைத்தல், ஒதுக்கி வைத்தல் ஆகியவற்றிற்குக் கட்டாயமான காலக்கெடுவைப் பரிந்துரைக்கவும், குறிப்பிட்ட காலக்கெடு முடிந்தவுடன் ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் கருதப்படுதலை அறிமுகப்படுத்தவும் அவசியமாகத் திருத்தம் செய்யப்பட வேண்டும். துணை அமைப்பு கொள்கை விதிமுறைகள் பதின்மூன்றாவது அட்டவணையில் குறியிடப்படலாம். *தமிழ்நாடு மாநிலம் எதிர் தமிழ்நாடு ஆளுநர் (ஏப்ரல்* 2025) வழக்கில் உச்சநீதிமன்றம் வகுத்த காலக்கெடு இந்தச் சீர்திருத்தத்திற்குப் பொருத்தமான அரசமைப்புச் சட்ட முறையை வழங்குகிறது.

2. **மாநிலப் பட்டியல் சட்டவரைவுகளை ஒதுக்கிவைத்தல் கூடாது:** அரசமைப்புச் சட்டப் பிரிவு 200–இன் இரண்டாவது உட்பிரிவுக்கு உட்பட்டு (உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்களைப் பாதுகாத்தல்), ஆளுநர் மாநிலப் பட்டியலில் உள்ள இனம் தொடர்பான எந்தச் சட்டவரைவையும் குடியரசுத் தலைவரின் கருத்தறிய அனுப்பி வைக்கக் கூடாது. அவர் 15 நாட்களுக்குள் ஒப்புதல் அளிக்க வேண்டும் அல்லது செய்திக்குறிப்புடன் சட்டவரைவை மாநிலச் சட்டமன்றத்திற்குத் திருப்பி அனுப்ப வேண்டும். சட்டமன்றம்

சட்டவரைவை மீண்டும் நிறைவேற்றி, மீண்டும் சமர்ப்பித்த 15 நாட்களுக்குள் ஆளுநர் கட்டாயமாக ஏற்பிசைவு அளிக்க வேண்டும்.

3. **பொதுப் பட்டியல் சட்டவரைவுகள்:** பொதுப் பட்டியல் இனங்கள் குறித்த சட்டவரைவுகளுக்கும் இதே காலக்கெடு பொருந்தும். அரசமைப்புச் சட்டப் பிரிவு 254–இன் கீழ் ஏற்கனவே உள்ள ஒன்றியச் சட்டத்திற்கு முரண்பாடாக இருந்தாலன்றி, ஆளுநர் அத்தகைய சட்டவரைவுகளை நிறுத்தி வைக்கவோ அல்லது ஒதுக்கிவைக்கவோ கூடாது.

4. **சட்ட ஆலோசனையும் வெளிப்படைத்தன்மையும்:** குடியரசுத் தலைவரின் கருத்தறிய சட்டவரைவை அனுப்பி வைப்பதற்கு முன், ஆளுநர் முதலில் மாநிலத்தின் தலைமை வழக்கறிஞரிடம் அல்லது இந்தியத் தலைமை வழக்கறிஞரிடமிருந்து எழுத்துப்பூர்வ சட்ட ஆலோசனையைப் பெற வேண்டும். மேலும் சட்டவரைவைப் பெற்ற 60 நாட்களுக்குள் கருத்து உள்ளிட்ட காரணங்களை மாநில அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

5. **குடியரசுத் தலைவருக்கு இரத்துசெய்யும் அதிகாரம் இல்லை:** அரசமைப்புச் சட்டக் கொள்கையின்படி, ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவர் ஆகிய எந்தவொரு ஆட்சித்துறை அதிகாரமும், மாநிலச் சட்டமன்றத்தால் முறையாக நிறைவேற்றப்பட்ட சட்டவரைவுக்கு ஏற்பிசைவை நிறுத்தி வைக்கக்கூடாது. அத்தகைய ஆட்சித்துறையின் இரத்து செய்யும் அதிகாரம், அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை அமைப்பின் பின்வரும் இரண்டு கூறுகளை மீறுகிறது: நாடாளுமன்ற மக்களாட்சி முறை, நீதிமன்றம் செல்லாது என்று அறிவிக்கும்வரை, சட்டமன்ற விருப்பமே முதன்மைபெற வேண்டும் என்றும்; அதிகாரப் பிரிப்பு கோட்பாடு என்றும் கூறுகிறது. குறை இருந்தால், அரசமைப்புச் சட்டம் ஏற்கனவே சீராயும் மன்றங்களை ஏற்படுத்தியுள்ளது: நாடாளுமன்றம், அரசமைப்புச் சட்டப் பிரிவு 246(2)–இன் கீழ் பொதுப் பட்டியல் அதிகாரப் பொருண்மைகளில் சட்டம் இயற்றலாம். உயர்நீதிமன்றங்களும் உச்சநீதிமன்றமும் மட்டுமே அரசமைப்புச் சட்ட செல்லுபடியாகும் தன்மை குறித்த கேள்விகளை எழுப்ப முடியும். மெய்யாகவே, அரசமைப்புச் சட்ட அளவிலான ஐயம் எழும் வேளைகளில், குடியரசுத் தலைவர் 30 நாட்களுக்குள் நாடாளுமன்றத்திற்கு இந்தப் பொருண்மையை அனுப்பிவைக்க

வேண்டும்; நாடாளுமன்றம் அடுத்த அமர்விலேயே அனுப்பப்பட்ட பொருண்மை முடிவு எடுக்க வேண்டும். இந்த முடிவுக்குக் குடியரசுத் தலைவர் கட்டுப்பட்டவராதல் வேண்டும்.

9. அரசமைப்புச் சட்டப் பிரிவு 356–இன் கீழ் குடியரசுத் தலைவர் ஆட்சிக்குப் பரிந்துரைப்பதில் ஆளுநரின் பங்கைச் சீர்திருத்தம் செய்தல்

இந்தப் பொருண்மை "அவசரநிலைக் கால ஏற்பாடுகள்" என்ற பரந்த கட்டமைப்புக்குள் வருவதால், தவறான பயன்பாட்டைத் தடுக்க அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பு வழிமுறைகள், நீதித்துறை தரநிலைகள், முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் ஆகியவற்றை முழுமையாகக் கருத்தில் கொள்ளும் தனி இயலில் விரிவாக ஆராயப்படும்.

10. அரசமைப்புச் சட்டப்பணிகளோடு தொடர்பில்லாத ஆளுநரின் பொறுப்புகளை நீக்குதல்

இந்தச் சிக்கல் "கல்வி" என்ற விரிவான பொருண்மையின் ஒருபகுதியாக இருப்பதால், 8–ஆம் இயலில் விரிவாக ஆராயப்படும்.

VI. முடிவுரை

மிக முக்கியமாக, ஆளுநர் பதவியைச் சுற்றியுள்ள நெருக்கடி என்பது நம்பகத் தன்மை குறித்த நெருக்கடி ஆகும். ஆளுநரின் வரம்பு மீறலின் ஒவ்வொரு நிகழ்வும் – அரசாங்கம் அமைக்கும்போது அல்லது விலகும்போது மோசடிகளில் ஈடுபடுதல், சட்டமன்றத்தைக் கூட்ட மறுத்தல், ஏற்பிசைவை நிறுத்தி வைத்தல் அல்லது காலவரையின்றி தாமதப்படுத்துதல், பொதுவெளியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை விமர்சித்தல், அல்லது இராஜ் பவனை மையத்தில் ஆளும் கட்சியின் மற்றுமொரு கட்சி அலுவலமாக மாற்றுதல் முதலானவை மக்களாட்சி நிறுவனம் மீதான நம்பிக்கையைச் சிதைக்கிறது. நாளுக்கு நாள், ஆளுநர் கூட்டாட்சி முறையின் இணைப்புப் பாலமாகப் பார்க்கப்படுவது குறைந்து வருகின்றது; அதற்குப் பதிலாக, பிரிட்டிஷ் காலத்தில் சுதேச அரசுகளை ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் சார்பில் "கண்காணித்த முகவரை" போன்று, காலனிய ஆட்சியின் மிச்சமாக, அதன் நவீன வடிவமாகப் பார்க்கப்படுகின்றார்.

நம்பிக்கை இழப்பு, மிகவும் ஆழமானது. குறுகிய கால அரசியல் ஆதாயத்திற்காக ஆளுநர் பதவியைத் தவறாகப் பயன்படுத்துவது, மாநில ஆட்சித் திறனை நலிவடையச் செய்கிறது; மாநில மக்களாட்சி ஆணையை மதிப்பிழக்கச் செய்கிறது; சட்டமன்றப் புதுமைகளைத்

தடுக்கிறது; ஒன்றிய–மாநில உறவுகளை நலிவுறச் செய்கிறது; தேசிய வளர்ச்சியைக் குலைக்கிறது. பல்லாண்டுகளாக, இந்தக் குறைபாடுகள், இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பைச் சிதைத்துள்ளன; மாகாணங்கள் "பாதத்திலிருந்து கழுத்து வரை மக்களாட்சியையும், தலையில் தனிநபர் ஆட்சியையும்" கொண்டிருக்கும் என்ற அரசமைப்பு அவையில் பிஸ்வநாத் தாஸின் கணிப்பைக் கிட்டத்தட்ட உண்மை ஆக்கிவிட்டன.

எனவே, சீர்திருத்தம் இன்றியமையாதது. இந்தியாவின் அரசமைப்புச் சட்ட அனுபவம், மரபுகள் பற்றிய நம்பிக்கையும் கட்டுப்பாடு குறித்த வேண்டுதல்களும், அரசமைப்புச் சட்ட உரையின் தெளிவுக்கு மாற்றாக இருக்க முடியாது என்பதைக் காட்டுகிறது. மரபுகள் மீண்டும் மீண்டும் தோல்வியடையும்போது, அரசமைப்புச் சட்டத் திருத்தம் செய்வது மட்டுமே, சமநிலையை மீட்டெடுக்க முடியும். ஏற்பாடுகளின் மொழிக்கு அப்பால், ஆளுநர் பதவி குறித்த அரசமைப்புச் சட்டப் பிரிவுகளை விட, அரசமைப்புச் சட்டத்தின் வேறு எந்தப் பகுதியும் அதிக அவசர விரிவான சீர்திருத்தத்தைக் கோரவில்லை.

சீர்திருத்தம் பல முனைகளில் தொடர வேண்டும். ஆளுநர்களின் நியமனத்திலும் நீக்கத்திலும் மாநிலங்கள் தீர்க்கமான பங்கைக் கொண்டிருக்க வேண்டும். ஆளுநர்கள் உறுதியான, நிலையான பதவிக்காலத்தைப் பெற வேண்டும். இதற்கு அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 155, 156, 157 ஆகியவற்றுக்குத் திருத்தங்கள் தேவை. சட்டமன்ற முடக்கத்தைத் தடுக்க, ஏற்பிசைவுக்குக் கட்டாயமான காலக்கெடு அவசியமானது. இதற்கு அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 200, 201க்குத் திருத்தங்கள் தேவை. அரசாங்கம் அமைத்தல், சட்டமன்றங்களைக் கூட்டுதல், ஒத்திவைத்தல், ஆளுநரின் மற்ற அனைத்து விருப்புரிமை அதிகாரங்களையும் நிர்வகிக்கத் தெளிவான விதிமுறைகள் தேவை. இவை புதிய பதின்மூன்றாவது அட்டவணையில் "ஆளுநர்களுக்கான வழிகாட்டுதல் ஆவணம்" மூலம் தொகுத்து அளிக்கப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, கனடாவை, ஆஸ்திரேலியாவைப் போலவே, ஆளுநர் கண்டிப்பாக அரசமைப்புச் சட்டத் தலைவராகச் செயல்பட வேண்டும். ஒருபோதும் மாற்று அதிகார மையமாகச் செயல்படக்கூடாது.

அதே வேளையில், அரசியல் பண்பாட்டில் மாற்றம் ஏற்படுத்துவதும் முக்கியம். ஆளுநரை கட்சி நலன் கருவியாக அல்லாமல், தலையீடு செய்வதற்காக அல்லாமல், அரசமைப்புச் சிற்பிகள் கருதியது போல, நிலைத் தன்மையை வழங்கும் அரசமைப்புச் சட்டத்தின் நடுநிலைக் காவலராகக் கருதக்கூடிய தேசிய அரசியல் கருத்து ஒருமித்து எழ வேண்டும். குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர், இவர்கள் இருவரும் அரசமைப்பிலிருந்தே தங்கள் அதிகாரத்தைப் பெறுகின்றார்கள். அவர்கள் அரசமைப்பின் கீழ் உள்ள பாதுகாவலர்கள்; அரசமைப்பிற்கு மேலானவர்கள் அல்ல.

சான்று நூல்கள்

1. *Constituent Assembly Debates*, vol 8 (6th reprint, Lok Sabha Secretariat 2014) May 30, 31, 1949, June 1, 2, 14, 1949; *Constituent Assembly Debates*, vol 9 (6th reprint, Lok Sabha Secretariat 2014) July 30, 1949, August 1, 3, 4, 1949; *Constituent Assembly Debates*, vol 10 (6th reprint, Lok Sabha Secretariat 2014) October 14, 16, 17, 1949.
2. K. Hanumanthaiya and others, *Administrative Reforms Commission: Centre–State Relations* (Government of India 1969) Chapter 4.
3. PV Rajamannar, A Lakshmanaswami Mudaliar, and P Chandra Reddy, *Report of the Centre–State Relations Inquiry Committee* (Government of Tamil Nadu 1971) Chapter 8.
4. RS Sarkaria, B Sivaraman, and SR Sen, *Commission on Centre–State Relations Report*, part 1 (Ministry of Home Affairs 1988) Chapters 4, 5.
5. M.N. Venkatachaliah and others, *Report of the National Commission to Review the Working of the Constitution*, vol 1 (Government of India, 2002) Chapter 8, paras 8.14.1–8.14.8.
6. Madan Mohan Punchhi and others, *Commission on Centre–State Relations: Constitutional Governance and the Management of Centre–State Relations*, vol 2 (Government of India 2010) Chapter 4.
7. The Constitution of the United States 1787, Article I(7).
8. The Constitution of Kenya, 2010, Article 115.

இயல் 6

தொகுதி மறுவரையறை

"மக்கள்தொகை மிக அதிகமாக உள்ள இடத்திலும், மிகக் குறைவாக உள்ள இடத்திலும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான விகிதம் ஒரேமாதிரியாக இருக்கக்கூடாது என்பதே நான் சொல்ல விரும்பும் பொதுவான கருத்து... எண்கணிதக் கொள்கைகளின் அடிப்படையில் நமது அரசியல் கணக்கீடுகளை அமைப்பதைவிட ஏமாற்றம் அளிக்கக் கூடியது வேறொன்றும் இருக்க முடியாது."

– ஜேம்ஸ் மேடிசன்,
Federalist No. 55 (1788)[1]

I. அறிமுகம்

தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை வரையறுப்பதும், மறுவரையறை செய்வதும் ஒருபோதும் நடுநிலையான அல்லது வெறும் நுட்பம் சார்ந்த பணியாக இருந்ததில்லை. அரசமைப்புச் சட்டத்தைப் பின்பற்றும் மக்களாட்சி நாடுகளில், இது அரசியல் அதிகாரம், மக்களாட்சி முறையின் ஏற்புடைமை, ஆட்சி அமைப்பில் செல்வாக்கைப் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றுடன் பிரிக்க முடியாத வகையில் பிணைக்கப்பட்டுள்ளது. 1812–இலேயே, அன்றைய மாசசூசெட்ஸ் ஆளுநர் எல்பிரிட்ஜ் கெர்ரி (Elbridge Gerry, then Governor of Massachusetts), புராண விலங்கான 'சலமாண்டர்' (salamander) போன்ற வளைந்து நெளிந்து நீண்டு சென்ற

[1] James Madison, 'Federalist No. 55' in Michael A. Genovese (ed), *The Federalist Papers* (Palgrave Macmillan 2009) 136. Also attributed to Alexander Hamilton by some scholars.

ஒரு தொகுதியை உருவாக்கும் வகையில் தொகுதி மறுவரையறை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தபோது, அமெரிக்காவில் இந்த ஆபத்து வெளிப்படையாக அம்பலப்பட்டுப் போனது. அவருடைய அரசியல் எதிரிகளின் வாக்கு வலிமையை குறைப்பதற்காகச் செய்யப்பட்ட இந்தத் தகிடுதத்தம், அப்போதைய கேலிச்சித்திரம் ஒன்றின் மூலம் *'ஜெர்ரிமாண்டரிங்'* முறை எனப் பெயர்பெற்று வரலாற்றில் நிலைத்துவிட்டது. வேடிக்கை என்னவென்றால், எல்பிரிட்ஜ் கெர்ரி பின்னர் அமெரிக்காவின் ஐந்தாவது துணை அதிபராகப் பணியாற்றினாலும், அவரது பெயர் உயர்ந்த அரசமைப்புப் பதவி வகித்தவர் என்று நினைவுகூரப்படுவதைவிட, தேர்தல் புவியியலைத் தவறாகப் பயன்படுத்தியதற்கே அடையாளமாக மாறிப்போனது.

இந்திய அரசமைப்பு, மக்களவைக்கும் மாநிலச் சட்டமன்றங்களுக்கும் தொகுதி மறுவரையறையை, ஒவ்வொரு மக்கள்தொகை கணக்கெடுப்பிற்குப் பிறகும் காலமுறைப்படி மேற்கொள்ளப்பட வேண்டிய பணியாகக் கருதுகிறது. அதே வேளையில், இந்தச் செயல்முறையை அரசியல் மோசடிகளிலிருந்தும், கட்சிநலன் சார்ந்த 'ஜெர்ரிமாண்டரிங்' முறையிலிருந்தும் பாதுகாக்க முயல்கிறது.

மக்களவையைப் பொறுத்தவரை, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் (உறுப்புகள்/சரத்துகள்) 81, 82 ஆகியவை இரண்டு கட்டங்களைக் கொண்ட அரசமைப்புச் சட்டத் திட்டத்தை வகுத்துள்ளன. முதலாவது கட்டம், *மாநிலங்களுக்கு இடையேயான தொகுதி ஒதுக்கீடு*: மக்கள்தொகை மாற்றங்களின் அடிப்படையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்ட மொத்த மக்களவைத் தொகுதிகளை மாற்றியமைத்தல். 60 இலட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட மாநிலங்களுக்கான சிறப்புப் பாதுகாப்பிற்கு உட்பட்டு, ஒரு மாநிலத்தின் மக்கள்தொகைக்கும் அதன் தொகுதி எண்ணிக்கைக்கும் இடையிலான விகிதம் அனைத்து மாநிலங்களிலும் *இயன்றவரை ஒருசீராக இருப்பதை* உறுதிசெய்கிறது. இரண்டாவது கட்டம், *மாநிலத்திற்குள்ளான தொகுதிப் பிரிப்பு*: ஒவ்வொரு மாநிலத்தையும் தேர்தல் தொகுதிகளாகப் பிரித்தல். இதிலும், மாநிலத்திற்குள் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் மக்கள்தொகை, தொகுதி எண்ணிக்கை இடையிலான விகிதம் *இயன்றவரை ஒருசீராக இருப்பதை* உறுதி செய்ய வேண்டும்.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 170 இதே இரண்டு கட்ட நடைமுறையை மாநிலச் சட்டமன்றத் தொகுதி மறுவரையறைக்கும் பயன்படுத்துகிறது.

இப்போது, அரசமைப்புச் சட்டப் பிரிவு 81 மக்களவையின் அதிக அளவு உறுப்பினர் எண்ணிக்கையை 550 – இதில் மாநிலங்களுக்கு 530 தொகுதிகள், ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுக்கு (யூனியன் பிரதேசங்களுக்கு) 20 தொகுதிகள் என உறுதி செய்துள்ளது; இதில்

543 இடங்கள் இப்போது நிரப்பப்பட்டுள்ளன. அதற்கேற்ப, மாநிலச் சட்டமன்றங்கள் குறைந்த அளவாக 60, அதிக அளவாக 500 உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று அரசமைப்புச் சட்டப் பிரிவு 170 கூறுகிறது.

ஒன்றியப் பட்டியலின் 72வது இனத்துடன் இணைந்த அரசமைப்புச் சட்டப் பிரிவு 327, தொகுதி மறுவரையறை உள்ளிட்டு, நாடாளுமன்ற, மாநிலச் சட்டமன்றத் தேர்தல்கள் தொடர்பான அனைத்து விவகாரங்களிலும் சட்டம் இயற்ற நாடாளுமன்றத்திற்கு முழு அதிகாரம் அளிக்கிறது. மாநிலப் பட்டியலின் 37வது இனத்துடன் இணைந்த அரசமைப்புச் சட்டப் பிரிவு 328,நாடாளுமன்றச் சட்டத்திற்கு உட்பட்டு,மாநிலச் சட்டமன்றங்களுக்கு, அவற்றின் தேர்தல்களை முறைப்படுத்த, நிபந்தனைக்கு உட்பட்ட அதிகாரத்தை மட்டுமே வழங்குகிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 327 அல்லது 328–இன் கீழ் இயற்றப்பட்ட தொகுதி மறுவரையறை அல்லது தொகுதி ஒதுக்கீடு தொடர்பான எந்தவொரு சட்டத்தையும் நீதித்துறை ஆய்வுக்கு உட்படுத்த முடியாது என்று அரசமைப்புச் சட்டப் பிரிவு 329(a) இந்த சட்டக் கட்டமைப்பை நிறைவு செய்கிறது.

II. தொகுதி மறுவரையறை ஆணையம்

தொகுதி மறுவரையறைக்கு என நிலையான நிறுவன அமைப்பை, இந்திய அரசமைப்பு பரிந்துரைக்கவில்லை. மாறாக, குறிப்பிட்ட கால இடைவெளியில் தொகுதிகளைத் திருத்தி அமைக்கும் மாற்றங்களை "நாடாளுமன்றம் சட்டத்தின் மூலம் தீர்மானிக்கும் அதிகார அமைப்பு முறையின்படியும்" மேற்கொள்ள வேண்டும் என்று அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 82, 170 கூறுகின்றன. ஒவ்வொரு பத்தாண்டுக் கணக்கெடுப்பிற்குப் பிறகும், தொகுதி மறுவரையறைச் சட்டத்தை (Delimitation Act) இயற்றி, இப்பணியைச் சிறப்பாக மேற்கொள்ள உருவாக்கப்பட்ட தொகுதி மறுவரையறை ஆணையத்திடம் (Delimitation Commission) நாடாளுமன்றம் ஒப்படைக்கிறது.

வரலாற்று நோக்கில், 1952, 1962, 1972–ஆம் ஆண்டு தொகுதி மறுவரையறைச் சட்டங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்ட ஆணையங்களில், ஒன்றிய அரசாங்கம் பரிந்துரைக்கும் இருவர், அதாவது உச்சநீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற அல்லது பணியாற்றிக் கொண்டிருக்கும் நீதிபதி தலைவராகவும், உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி அல்லது நீதிபதி உறுப்பினராகவும்; இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் *பதவிவழி* (*ex officio*)

உறுப்பினராகவும் இருந்தனர். 2002–ஆம் ஆண்டு ஆணையத்தில் உச்சநீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி தலைவராகவும், தலைமைத் தேர்தல் ஆணையரால் பரிந்துரைக்கப்பட்ட தேர்தல் ஆணையர், தொடர்புடைய மாநிலத்தின் அல்லது ஒன்றிய ஆட்சிநிலப் பகுதியின் (உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தும்) மாநிலத் தேர்தல் ஆணையர் ஆகியோர் *பதவிவழி* உறுப்பினர்களாகவும் இருந்தனர். அனைத்து ஆணையங்களிலும், சபாநாயகர்களால் பரிந்துரைக்கப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருசிலர் *இணை உறுப்பினர்களாகச்* சேர்க்கப்பட்டனர்; ஆனால் அவர்களுக்கு முடிவு எடுப்பதில் வாக்குரிமை கிடையாது.

இந்தியமாதிரியின் வரையறுக்கப்பட்ட, அரசமைப்புச் சட்ட தனித்துவமான பண்புக்கூறு, இந்த ஆணையத்தின் ஆணைகளுக்கு வழங்கப்படும் விதிவிலக்கான இறுதித்தன்மை ஆகும். தொகுதி மறுவரையறைச் சட்டங்களின்படி, ஆணையத்தின் ஆணைகள் அரசிதழில் வெளியிடப்பட்டவுடன், சட்ட மதிப்பைப் பெற்றுவிடுகின்றன. இதற்கு நாடாளுமன்றம், மாநிலச் சட்டமன்றங்கள் அல்லது தொகுதி மறுவரையறை ஆணை நடைமுறைக்கு வரும் தேதியை மட்டும் முடிவு செய்யும் ஒன்றிய அமைச்சரவை ஆகியவற்றிடமிருந்து முன்அனுமதிகூடத் தேவையில்லை. இந்த ஆணைகள் நாடாளுமன்றம், சட்டமன்றங்கள் ஆகியவை முன் வைக்கப்பட்டாலும், அவற்றில் திருத்தம் செய்யவோ, அவற்றை இரத்து செய்யவோ அதிகாரம் இல்லை. நீதித்துறை தலையீட்டைத் தடுக்கும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 329(a)உடன் இணைத்துப் பார்க்கும்போது, இந்தச் சட்டக் கட்டமைப்பு தொகுதி மறுவரையறையை அரசமைப்பு "கறுப்புப் பெட்டிக்குள்" (Black Box) வைத்து, அதனை ஆட்சித்துறை, சட்டமன்ற, நீதித்துறை ஆய்வுகளிலிருந்து முற்றிலுமாகப் பாதுகாக்கிறது.

இவ்வாறு இந்தியாவின் அரசமைப்புச் சட்ட வடிவமைப்பு, தேர்ந்தெடுக்கப்படாத ஒரு அமைப்பிற்கு அசாதாரண அதிகாரத்தை வழங்கியபோதிலும், நமது நாட்டில் "ஜெர்ரிமாண்டரிங்" முறைகேட்டைத் தடுக்க வேண்டும் என்பதற்கான உணர்வுபூர்வமான முயற்சியை மேற்கொண்டுள்ளது.

III. இந்தியாவில் தொகுதி மறுவரையறையின் சுருக்கமான வரலாறு

மக்களின் பிரதிநிதித்துவச் சட்டம், 1950–இன் கீழ், இந்தியக் குடியரசுத் தலைவர் (இந்தியத் தேர்தல் ஆணையத்தின் மூலம் செயல்பட்டு) ஆரம்பநிலை தொகுதி மறுவரையறைப் பணியை மேற்கொண்டார்.

இந்தக் குடியரசுத் தலைவர் ஆணையின் மூலம் மறுவரையறை செய்யப்பட்ட தொகுதிகளின் அடிப்படையில் முதல் பொதுத் தேர்தல் (1951–52) நடத்தப்பட்டது.

முதல் தொகுதி மறுவரையறை ஆணையம் (1952), பகுதி A, B, C, D எனப் பிரிக்கப்பட்டிருந்த மாநிலங்களின் – ஆட்சிப் பகுதிகளின் தொடக்கக்கால அரசமைப்புச் சட்டக் கட்டமைப்பின் கீழ் செயல்பட்டது. அது மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கையை 494 ஆக அதிகரிக்கப் பரிந்துரை செய்தது.

மொழிவழியில் மாநில எல்லைகளை மறுவரையறை செய்த 1956–ஆம் ஆண்டின் மாநில மறுசீரமைப்புச் சட்டத்தால் (*States Reorganisation Act,* 1956), இந்த ஆரம்பகால நிறுவன அமைப்பு மறுவடிவமைக்கப்பட்டது. புதிய மாநிலவரைபடங்களுக்கு ஏற்ப, ஏற்கனவே இருந்த 494 தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களவைத் தொகுதிகளின் எல்லைகளைச் சரிசெய்வதற்காக, தேர்தல் ஆணையம் 1956–ஆம் ஆண்டின் *நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகள் வரையறை ஆணையை* (*Delimitation of Parliamentary and Assembly Constituencies Order*, 1956) வெளியிட்டது.

இதனைத் தொடர்ந்து, 1961–ஆம் ஆண்டு '*இரு உறுப்பினர் தொகுதி (ஒழிப்பு) சட்டம்*' (*Two–Member Constituencies (Abolition) Act,* 1961,) மூலம் முக்கியமான சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் பிரதிநிதித்துவம் பெறுவதற்காகத் தொடக்கத்தில் உருவாக்கப்பட்ட 'இரட்டை உறுப்பினர் தொகுதிகள்' ஒழிக்கப்பட்டு, அவை 'ஒற்றை உறுப்பினர் தொகுதிகளாக' மாற்றப்பட்டன. இதன் அடிப்படையிலும், 1961 மக்கள்தொகை கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டும், இரண்டாவது தொகுதி மறுவரையறை ஆணையம் (1963) மக்களவையின் எண்ணிக்கையை 522 தொகுதிகளாக அதிகரித்தது.

மூன்றாவது தொகுதி மறுவரையறை ஆணையம் (1973), 1971 கணக்கெடுப்பின் அடிப்படையில் மாநிலங்களுக்கு இடையேயான தொகுதி ஒதுக்கீட்டை மாற்றியமைத்து, மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 542ஆக உயர்த்தியது. பின்னர் 1975–இல் சிக்கிம் மாநிலமாக இணைக்கப்பட்டபோது, மொத்த தொகுதிகளின் எண்ணிக்கை 543ஆக உயர்ந்து, இன்றுவரை தொடர்கிறது.

1976 முடக்கம் : தீர்க்கமான மாற்றம்

மக்கள்தொகையுடன் இணைக்கப்பட்ட தொகுதி எண்ணிக்கை விரிவாக்கத்தின் வரலாற்று முறை *நாற்பத்து இரண்டாவது அரசமைப்புச் சட்ட திருத்தம்* (1976) வழியாக நிறுத்தப்பட்டது. இது 1971 மக்கள்தொகை கணக்கெடுப்பு நிலைகளில் மக்களவை, மாநில

சட்டமன்றத் தொகுதிகளின் மாநிலங்களுக்கு இடையேயான பங்கீட்டை 2000–ஆம் ஆண்டுக்குப் பிறகு நடத்தப்பட்ட முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு வரை முடக்கியது. அதன் நியாயப்பாடு முற்றிலும் சரியானது. மக்கள்தொகை புள்ளிவிவரங்களின் துல்லியமான கணித பயன்பாடு, மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தலை வெற்றிகரமாக செயல்படுத்திய மாநிலங்களுக்கு – குறிப்பாக தெற்கில் – தீங்கு விளைவிக்கும். இது தேசிய மக்கள்தொகை இலக்குகளை அடைவதற்கு எதிராக, கட்டமைப்பு அளவிலான ஊக்கமின்மையை உருவாக்கியது. பன்முகக் கூட்டமைப்பில், ஜனநாயக பிரதிநிதித்துவத்தை எண் விகிதாச்சாரத்தால் மட்டுமே தீர்மானிக்க முடியாது என்பதை முடக்கம் அங்கீகரித்தது. இது மக்கள்தொகை வளர்ச்சியின் மாறுபட்ட விகிதங்களிலிருந்து எழும் மக்கள்தொகை சமச்சீரற்ற தன்மைகளுக்கு இடமளிக்க வேண்டும்; தேசிய கொள்கையுடன் பொறுப்பான இணக்கத்தை ஏற்படுத்திய முயற்சிகளைத் தண்டிப்பதைத் தவிர்க்க வேண்டும். இந்த வழியில், முடக்கம் கூட்டாட்சி முறையின் சமநிலையைத் தொந்தரவு செய்வதற்குப் பதிலாக, அதைப் பாதுகாக்க உதவியது.

முடக்கத்தின் நீட்டிப்பு: 2001 முதல் 2026 வரை

புதிய ஆயிரமாம் ஆண்டின் தொடக்கத்தில், கூட்டாட்சி முறையின் சமநிலையைச் சிதைக்காமல், மீண்டும் மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதி ஒதுக்கீட்டிற்குத் திரும்பும் அளவுக்கு மாநிலங்களுக்கு இடையேயான மக்கள்தொகை வளர்ச்சி மாற்றங்களின் ஒத்திசைவு சீராகவில்லை. எனவே, நாடாளுமன்றம் *எண்பத்து நான்காவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை* (2001) இயற்றி, 1971 மக்கள்தொகை அளவிலான முடக்கத்தை மேலும் 25 ஆண்டுகளுக்கு, அதாவது 2026க்குப் பிறகு நடக்கும் முதல் கணக்கெடுப்பு வரை நீட்டித்தது. இந்த நீட்டிப்பு, மாநிலங்கள் மொத்த கருவுறுதல் விகிதத்தை 2.1 என்ற அளவில் எட்டுவதை ஊக்குவிக்க முயன்ற, 2000–ஆம் ஆண்டு *தேசிய மக்கள்தொகை அடிப்படையிலான கொள்கையைத்* தெளிவாகக் கொண்டிருந்தது.

எண்பத்து நான்காவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் (2001) முதலில் மாநிலத்திற்குள்ளான தொகுதி எல்லை மாற்றங்களுக்கு 1991 மக்கள்தொகை கணக்கெடுப்பைப் பரிந்துரைத்தாலும், பின்னர் *எண்பத்து ஏழாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (2003) மூலம், அண்மைக்கால மக்கள்தொகை மாற்றங்களைச் சிறப்பாகக் கணக்கில் கொள்ள, 2001 மக்கள்தொகை கணக்கெடுப்பாக மாற்றப்பட்டது. நான்காவது தொகுதி

மறுவரையறை ஆணையம் (2002), மாநிலங்களுக்கு இடையேயான தொகுதி எண்ணிக்கையை 1971 அளவிலேயே பேணிக் கொண்டு, மாநிலத்திற்குள்ளான தொகுதி எல்லைகளை மட்டும் மாற்றியமைக்கும் வரையறுக்கப்பட்ட பணியை மட்டுமே மேற்கொண்டது.

IV. முடக்கியதற்கான அடிப்படைக் காரணம் இன்றும் பொருந்துகிறது

1976 முடக்கம் தொடங்கி, மக்கள்தொகை மாற்றங்கள் இருந்தபோதிலும், மக்களவை தொகுதி ஒதுக்கீடு 1971 மக்கள் தொகை புள்ளிவிவரங்களுடனேயே பிணைக்கப்பட்டுள்ளது. இந்நிலையை, வட மாநிலங்கள் "ஒரு வாக்கு, ஒரு மதிப்பு" என்கிற மக்களாட்சி முறையின் கொள்கையைச் சிதைப்பதாக வாதிடுகின்றன. தென் மாநிலங்களோ, மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதி ஒதுக்கீடு, கல்வி, நலவாழ்வு, குடும்பக் கட்டுப்பாடு வழியாக மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துவதில் தாங்கள் அடைந்த வெற்றிக்குத் தண்டனை அளிப்பது ஆகும் என்றும், தேசியக் கொள்கைக்கு மாறாக மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தத் தவறிய மாநிலங்களுக்குப் பரிசு அளிப்பது ஆகும் என்றும் எதிர்வாதம் செய்கின்றன.

இந்த முடக்கம் 2026க்குப் பிறகும் நீட்டிக்கப்பட வேண்டுமா என்பதே முக்கியமான கேள்வி. இதை நீக்கினால், பல வட மாநிலங்களின் தொகுதி எண்ணிக்கை பெருமளவில் உயரும் என்பதும், தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் தேக்கமடையும் அல்லது கடுமையான வீழ்ச்சியைச் சந்திக்கும் என்பதும் உறுதி (**இணைப்பு I–ஐப் பார்க்கவும்**). இது கூட்டாட்சி முறையின் சமநிலையைப் பெருமளவில் மாற்றியமைத்துவிடும்.

மக்கள்தொகை வேறுபாடு: இரண்டு பாதைகளின் கதை

இந்த வேறுபாடு மிகவும் முக்கியமானது. 1971–இல் தமிழ்நாடும் இன்றைய பீகாரும் மக்கள்தொகையிலும் (சுமார் 4.1 – 4.2 கோடி), மக்களவைத் தொகுதி ஒதுக்கீடுகளிலும் (முறையே 39 மற்றும் 40) கிட்டத்தட்ட சமமாகவே இருந்தன. அரை நூற்றாண்டுக்குப் பிறகு, இவற்றின் மக்கள்தொகை வளர்ச்சிப் பாதைகள் முற்றிலும் வேறுபடுகின்றன. 2025–இல் தமிழ்நாட்டின் மக்கள்தொகை சுமார் 7.6 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்படும் நிலையில், பீகாரின் மக்கள்தொகை சுமார் 12.3

கோடியாக உயர்ந்துள்ளது.[2] இந்தத் திசைமாற்றம் முதன்மையாக மாறுபட்ட கருவுறுதல் விகித முறைகளால் இயக்கப்படுகிறது. *மாதிரிப் பதிவு முறை புள்ளிவிவர அறிக்கை, 2023 (Sample Registration System (SRS) Statistical Report, 2023)* (செப்டம்பர் 2025–இல் வெளியிடப்பட்டது) பீகாரின் மொத்த கருவுறுதல் விகிதத்தை 2.8 ஆகவும், தமிழ்நாட்டின் விகிதத்தை 1.3ஆகவும் குறிப்பிடுகிறது. மதிப்பிடப்பட்ட 2025 மக்கள் தொகை புள்ளிவிவரங்களைப் பயன்படுத்தினால், மக்களவையில் பீகாரின் எண்ணிக்கை 40லிருந்து 50ஆக உயரும். அதே நேரத்தில் தமிழ்நாட்டின் எண்ணிக்கை 39லிருந்து 29ஆகக் குறையும்.

இதேபோன்ற போக்கு, இராஜஸ்தானிலும் இப்போதைய ஆந்திரப் பிரதேசத்திலும் தெரிகிறது.1971–இல், இரண்டு மாநிலங்களும் ஒப்பிடத்தக்க மக்கள் தொகையையும், சமமான மக்களவைத் தொகுதி ஒதுக்கீட்டையும் (முறையே 25) கொண்டிருந்தன. 2023 மாதிரிப் பதிவுமுறை புள்ளிவிவர அறிக்கையின்படி, இராஜஸ்தானின் மொத்த கருவுறுதல் விகிதம் 2.3 ஆகவும், ஆந்திரப் பிரதேசத்தின் மொத்த கருவுறுதல் விகிதம் 1.5 ஆகவும் உள்ளது. இந்த குறிப்பிடத்தக்க மாறுபட்ட கருவுறுதல் விகித முறைகளின் காரணமாக, மதிப்பிடப்பட்ட 2025 மக்கள்தொகை புள்ளிவிவரங்கள் இராஜஸ்தானின் மக்களவைத் தொகுதி எண்ணிக்கையை 25லிருந்து 31ஆக உயர்த்தும். அதே வேளையில் ஆந்திரப் பிரதேசத்தின் எண்ணிக்கையை 25லிருந்து 20ஆகக் குறைக்கும்.

2023 மாதிரிப் பதிவுமுறை புள்ளிவிவர அறிக்கை, இந்தியாவின் சராசரி மொத்த கருவுறுதல் விகிதத்தை 1.9ஆகக் குறிப்பிடுகிறது. இது ஈடுசெய்யும் நிலையான 2.1க்குக் கீழே உள்ளது. இது ஊக்கமளிக்கும் வளர்ச்சி ஆகும். இருப்பினும், தேசிய சராசரி என்பது ஆழமான வட்டார வேறுபாடுகளை மறைக்கிறது. இந்தி இதயப்பகுதியின் மாநிலங்களான பீகார் (2.8), உத்தரப் பிரதேசம் (2.6), மத்தியப் பிரதேசம் (2.4), இராஜஸ்தான் (2.3), சத்தீஸ்கர் (2.2) ஆகியவற்றின் மொத்த கருவுறுதல் விகிதங்கள் ஈடுசெய்யும் நிலையான 2.1க்கு மேலேயும், தேசிய சராசரியை விட மிக அதிகமாகவும் தொடர்கின்றன. இதற்கு நேர்மாறாக, மிகக் குறைந்த மொத்த கருவுறுதல் விகிதங்கள் டெல்லி (1.2), தமிழ்நாடு, மேற்கு வங்கம் (இவை இரண்டும் 1.3), மகாராஷ்டிரா (1.4), கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, பஞ்சாப், ஜம்மு & காஷ்மீர் (இவை அனைத்தின் மொத்த கருவுறுதல் விகிதம் 1.5) ஆகியவற்றில் காணப்படுகின்றன.

---

[2] Vijdan Mohammad Kawoosa, 'North vs South: India's states are in a battle for fair representation in parliament. Here's why' (*Reuters* March 14, 2025) accessed December 22, 2025.

இதிலிருந்து இரண்டு கட்டமைப்புப் புள்ளிகள் பின்வருவன.

முதலாவதாக, நாடு தழுவிய அளவில் கருவுறுதல் விகிதம் குறைந்தாலும், இந்தி இதயப்பகுதி மாநிலங்களுக்கும் நாட்டின் பிற பகுதிகளுக்கும் இடையிலான வேறுபாடு விரிவடைந்து வருகிறது. இந்தத் திசைமாற்றம் அவர்களின் மொத்த கருவுறுதல் விகிதங்கள் இறுதியில் 2.1க்குக் கீழே விழுந்தாலும், மக்கள்தொகை அதிகமாக இருக்கும். ஏனெனில் பல மாநிலங்கள் ஏற்கனவே 1.5ஐ அருகில் வந்துவிட்டன. மக்கள்தொகை அமைப்பும், வயதுக் கட்டமைப்பு அசைவியக்கம் ஆகியவை இந்த மக்கள்தொகை தேக்கம் பல ஆண்டுகளுக்குத் தொடருவதை உறுதி செய்யும்.

இரண்டாவதாக, மக்கள்தொகை ஒருங்கிசைவு என்பது மெதுவான செயல்முறை. அதிக கருவுறுதல் கொண்ட மாநிலங்களின் கருவுறுதல் விகிதங்கள் ஒத்திசைய அல்லது குறைந்தபட்சம் தேசிய சராசரிக்கு அருகிலான குறுகிய வரம்பிற்குள் வர கணிசமான காலம் எடுக்கும். அதுவரை, மக்கள் தொகையை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட தொகுதி மறுவரையறைக்குத் திரும்புவது, தேசிய மக்கள் தொகை இலக்குகளை எட்டிய மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவ முறையில் தண்டனைகளை விதிப்பதாகவும், அவற்றை எட்டாத மாநிலங்களுக்கு நிலையான சாதகங்களை வழங்குவதாகவும் அமையும்.

தரவு நம்பகத்தன்மை, பதிவு இடைவெளிகள், கருவுறுதல் விகித மதிப்பீடுகள்

மற்றொரு நிர்வாகக் கவலை என்னவென்றால், மாநிலங்களுக்கு இடையே குடிமக்கள் பதிவில் நிலவும் சீரற்ற தன்மையாகும். *தேசிய குடும்ப சுகாதார ஆய்வு–5 The National Family Health Survey–5, (NFHS–5,* 2019–21) அறிக்கையின்படி, பிறப்புப் பதிவின் தேசிய சராசரி 89.1 விழுக்காடாக இருந்தாலும், ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளில் 74.9 விழுக்காடு பேர் மட்டுமே உண்மையில் பிறப்புச் சான்றிதழை வைத்துள்ளனர். கேரளாவிலும் தமிழ்நாட்டிலும் பதிவு முறையே 99 விழுக்காடாகவும், 98.3 விழுக்காடாகவும், சான்றிதழ் வைத்திருப்பது 89.9 விழுக்காடாகவும், 89.5 விழுக்காடாகவும் உள்ளது. இந்நிலை திறமையான, தானியங்கி முறையைக் குறிக்கிறது. இதற்கு நேர்மாறாக, பீகாரில் பதிவு 75.6 விழுக்காடாகவும், சான்றிதழ் வைத்திருப்பது 56.0 விழுக்காடாகவும் உள்ளது; உத்தரப் பிரதேசத்தில் முறையே 79.5 விழுக்காடாகவும், 59.8 விழுக்காடாகவும் உள்ளன. இந்த இடைவெளிகள் இந்தி இதயப்பகுதியின் சில பகுதிகளில் குழந்தை மக்கள்தொகையில் கணிசமான பங்கினர் நிர்வாக அளவில் "கண்ணுக்குப் புலனாகாதவர்களாக" இருப்பதைக் காட்டுகின்றன.

இத்தகைய இடைவெளிகள் இந்தியாவின் கருவுறுதல் மதிப்பீடுகளின் துல்லியம் குறித்தும், இந்தி இதயப்பகுதியின் சில பகுதிகளில் மொத்த கருவுறுதல் விகிதங்கள் குறைவாகக் காட்டப்படுகிறதா என்பது குறித்தும் நியாயமான கேள்விகளை எழுப்புகின்றன. கருவுறுதல் விகிதம் வேகமாகச் சரிகிறது என்ற பொதுவான போக்கு மறுக்க முடியாதது; ஆனால் அதன் துல்லியமான அளவு குறித்து எச்சரிக்கையான விளக்கம் தேவைப்படலாம். புள்ளிவிவர அறிக்கை 2023, தேசிய குடும்ப சுகாதார ஆய்வு–5 ஆகியவை முறையான ஆய்வுகள், பரவலாக மதிக்கப்படுபவை. ஆயினும் இவை இரண்டும் மாதிரிகள் அடிப்படையிலானவை. நிர்வாகத் திறன் ஒப்பீட்டளவில் பலவீனமாகவும், விடுபட்ட மக்கள் தொகை சமூக–பொருளாதார அளவில் ஒரு குழுவாக இருந்து, அதிக கருவுறுதல் விகிதத்தைக் கொண்டிருக்கவும் வாய்ப்புள்ள மாநிலங்களில், மாதிரி ஆய்வுகள் உண்மையான கருவுறுதல் விகிதத்தைக் குறைவாகக் காட்டக்கூடும்.

இந்தச் சூழலில், பத்தாண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கப்படும் மக்கள்தொகை கணக்கெடுப்பு, தனி முக்கியத்துவம் பெறுகிறது. முந்தைய ஆய்வுகளைப் போலல்லாமல், இது முழுமையான கணக்கெடுப்பை வழங்குகிறது. முழுமையான தரவுகளிலிருந்து வயதுக் கட்டமைப்பையும் கருவுறுதல் விகிதத்தையும் கணிக்க அனுமதிக்கிறது. முந்தைய ஆய்வுகளின் தரவுகள் மொத்த கருவுறுதல் விகிதங்களின் குறைவை மிகைப்படுத்திக் காட்டுகின்றனவா என்பதை மக்கள்தொகை கணக்கெடுப்பு மட்டுமே உறுதிப்படுத்த முடியும்.

1976–ஆம் ஆண்டின் தர்க்கம் இப்போதும் பொருந்தும்

இந்தச் சூழ்நிலையில், மக்கள்தொகை ஒத்திசைவு அடையப்படுவதற்கு முன்பே மக்கள்தொகையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தொகுதி மறுவரையறை செய்வது சமத்துவமற்றதாகவும் விவேகமற்றதாகவும் இருக்கும். 1976–ஆம் ஆண்டின் முடக்கத்தை நியாயப்படுத்திய அதே தர்க்கம் இப்போதும் பொருந்துகிறது: மக்கள்தொகை சமச்சீரற்ற தன்மைகளைக் கருத்தில் கொள்ளாமல் மக்கள் தொகை அடிப்படையிலான மறுபகிர்வு செய்வது கூட்டாட்சியின் சமநிலையைச் சிதைக்கும்; மக்கள்தொகை கட்டுப்படுத்தல் போக்கை சீர்குலைக்கும். தனித்துவமான மொழி அடையாளங்களின் மேல் கட்டமைக்கப்பட்ட ஒன்றியத்தில், மக்கள்தொகை அதிகம் கொண்ட இந்தி இதயப்பகுதியால் ஆதிக்கம் செலுத்தப்படும் நாடாளுமன்றம், பிற வட்டாரங்களை ஓரங்கட்டும் அபாயத்தையும் மொழிவழி மாநில

மறுசீரமைப்பு வழியாக உருவாக்கப்பட்ட சமநிலையைச் சீர்குலைக்கும் அபாயத்தையும் கொண்டுள்ளது. பிரதிநிதித்துவம் என்பது மொழிக் கொள்கை, நிதிப் பகிர்வு, அரசமைப்புச் சட்டத் திருத்தம் ஆகியவற்றின் மீதான பேரம் பேசும் சக்தியாக நேரடியாக மாறுகிறது. இந்தி பேசாத மாநிலங்கள் இந்த செல்வாக்கு அதிகாரங்களை விட்டுக்கொடுக்க முடியாது.

"ஒரு வாக்கு, ஒரு மதிப்பு" என்பது ஓர் அரசியல் முழக்கமே தவிர, அரசமைப்பின் கட்டளை அல்ல. அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 81, 170 ஆகியவை மக்கள் தொகை சமநிலையை "நடைமுறைக்குச் சாத்தியமான வகையில்" என்ற சொற்றொடருடன் வரையறுக்கின்றன. இது கூட்டாட்சி முறையின் நிலைமைகளுக்கு ஏற்பச் செயல்பட நாடாளுமன்றத்திற்கு விருப்புரிமையை வழங்குகிறது. இந்த நெகிழ்வுத்தன்மையை உச்சநீதிமன்றம் பலமுறை உறுதிப்படுத்தியுள்ளது. *ஆர்.சி. பௌடியல் எதிர் இந்திய ஒன்றியம்* (1993)[3] [*R.C. Poudyal v. Union of India* (1993)] வழக்கில், விகிதாச்சாரம் என்பது பரந்த நோக்கிலான கொள்கையே தவிர, அது கணித நோக்கு சட்டகமல்ல என்று நீதிமன்றம் கூறியதுடன், வரலாற்று நிலைத்தன்மையையும் கூட்டாட்சி முறையின் நிலைத்தன்மையையும் பாதுகாக்க விகிதாச்சார முறையிலிருந்து விலகிச் செல்வதை உறுதி செய்தது.

முரண்பாடு ஏதுமில்லை

அரசமைப்புச் சட்ட நோக்கின் பிற பகுதிகளில், கடுமையான மக்கள்தொகை விகிதாச்சார முறையிலிருந்து விலகிச் செல்வது பொறுத்துக்கொள்ளப்படுவதுடன், அது திட்டமிட்டே செய்யப்பட்டுள்ளது; இத்தகைய விலகல்களை இந்தக் குழு விமர்சனக் கண்ணோட்டத்துடன் ஆய்வு செய்துள்ளது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 368(2)-இன் வரம்புக்கூறு, சில அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கு மக்கள்தொகையைப் பொருட்படுத்தாமல் பாதிக்கும் குறையாத மாநிலங்களின் பின்னேற்பைக் கோருகிறது. இதில் மணிப்பூரின் பின்னேற்பும் உத்தரப் பிரதேசத்தின் பின்னேற்பும் சமமான மதிப்பையே கொண்டுள்ளன. இயல் 2-இல் (அரசமைப்புச் சட்டத் திருத்தம்), பரிந்துரை 4-இன் கீழ், இந்தக் குழு இதனை '*இரட்டைப் பெரும்பான்மை*' விதியின் மூலம் செம்மைப்படுத்த முன்மொழிந்து உள்ளது. அதாவது, தேசிய மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாத பங்கினைப் பிரதிநிதித்துவம் செய்யும், மூன்றில் இரண்டு பங்கிற்கு

---

[3] 1994 Supp (1) SCC 325.

குறையாத மாநிலங்களின் பின்னேற்பு தேவை என்பது ஆகும். அதேபோல், அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A, மக்கள் தொகை அல்லது பொருளாதார வலிமையைப் பொருட்படுத்தாமல், ஜிஎஸ்டி அவையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் சமமான வாக்கினை வழங்குகிறது; இது மகாராஷ்டிராவைத் திரிபுராவிற்கு இணையாகக் கருதுகிறது. இயல் 10–இல் "ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள்", பரிந்துரை 1–இன் கீழ் வழங்கப்பட்ட வாய்ப்பு ஆ–வில், மாநிலங்களின் கூட்டு வாக்குப் பங்கினை – மக்கள்தொகை, வருவாய் பங்களிப்பு அல்லது இவை இரண்டின் 50:50 கலவை மூலம் – சீரமைப்பதன் வழியாக இந்தச் சமத்துவ மாதிரியை மாற்றியமைக்க இந்தக் குழு பரிந்துரைத்து உள்ளது.

எனவே, தொகுதி மறுவரையறை சூழலில் மட்டும் கடுமையான மக்கள்தொகை விகிதாச்சார முறையிலிருந்து விலகிச் செல்லுமாறு வலியுறுத்துவதன் வழியாக இக்குழு முரண்படுகிறதா? இதற்கான பதில் '*இல்லை*' என்பது ஆகும்.

இங்குள்ள கேள்வி என்னவென்றால், உத்தரப் பிரதேசமும் மணிப்பூரும், அல்லது மகாராஷ்டிராவும் திரிபுராவும் மக்களவையில் சமமான இடங்களைக் கொண்டிருக்க வேண்டுமா என்பது அல்ல. அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலங்களுக்கு மக்களவையில் அதிகப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்; இந்தக் கொள்கை மறுக்க முடியாதது. சிக்கல் வேறு இடத்தில் உள்ளது. குடும்பக் கட்டுப்பாடு என்பது சீரான முறையில் வடிவமைக்கப்பட்டு, மையத்தால் விளம்பரப்படுத்தப்பட்ட தேசிய திட்டம் ஆகும். 1971–இல், பீகாரும் தமிழ்நாடும் (அதேபோல் இராஜஸ்தானும் ஆந்திரப் பிரதேசமும்) இணையான மக்கள்தொகையையும், மக்களவையில் ஒரே அளவிலான பிரதிநிதித்துவத்தையும் கொண்டிருந்தன. அதன்பிறகு, சில மாநிலங்கள் கல்வி, சுகாதாரம், பெண்கள் மேம்பாட்டில் முதலீடு செய்து கருவுறுதல் விகிதக் குறைப்பை அடைந்தன; மற்றவை அவ்வாறு செய்யவில்லை. இப்போது, மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துவதில் பொறுப்பற்ற போக்கிற்குக் கூடுதல் தொகுதிகளை ஒதுக்கீடு செய்து வெகுமதி அளிப்பதும், பொறுப்பாகச் செயல்பட்டு மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திய போக்கிற்குக் குறைந்த பிரதிநிதித்துவம் ஒதுக்கீடு செய்து தண்டிப்பதும் தேசியக் கொள்கையின் தர்க்கத்தைத் தலைகீழாக மாற்றிவிடும்; இது தவறான முறைக்கு ஊக்கம் அளிப்பதுடன், அரசியல் அதிகாரத்தின் சமமற்ற மறுபகிர்வுக்கும் வழிவகுக்கும். செயல்பாட்டு நோக்கில் சொன்னால், இது தனக்கு அளித்த பணிகளைச் செய்து முடித்த பணியாளரைப் பதவி இறக்கம் செய்வதற்கும், தனக்கு அளித்த பணிகளைச் செய்து முடிக்காத பணியாளருக்குக்கு பதவி உயர்வு அளிப்பதற்கும் சமமாகும்.

இவ்வாறு நோக்கினால், இக்குழுவின் அணுகுமுறை ஒத்திசைவான, நெறிமுறை அளவில் நியாயப்படுத்தக்கூடிய ஒன்று ஆகும். இது விகிதாச்சார முறையை நிராகரிக்கவில்லை; மாறாக, விகிதாச்சாரம் என்பது வரலாறு, முன்முயற்சிகள் அல்லது தேசியக் கொள்கை வடிவமைப்பைக் கருத்தில் கொள்ளாமல் பயன்படுத்தப்படும் கடுமையான கணிதச் சூத்திரமாக இருக்கக்கூடாது; அது சூழல் உணர்திறன் கொண்டதாகவும், நற்பயன்களை அளிப்பதாகவும், கூட்டாட்சி முறையில் நியாயமானதாகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இதுவே *நாற்பத்து இரண்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (1976) வழியாக அறிமுகப்படுத்தப்பட்டு, எண்பத்து *நான்காவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (2001) வழியாக நீட்டிக்கப்பட்ட தொகுதி மறுவரையறை முடக்கத்தின் பின்னணியில் இருந்த அடிப்படைத் தர்க்கம் ஆகும். அந்தத் தர்க்கம் இன்றும் சிதையாமல் உறுதியாக உள்ளது என்பதே இக்குழுவின் வாதம்.

V. 2026க்குப் பிந்தைய தொகுதி மறுவரையறைக்கான வாய்ப்புகள்

நம் முன்னால் நான்கு பெரும் வாய்ப்புகள் உள்ளன; ஒவ்வொன்றும் கூட்டாட்சி முறையின் சமநிலை, அரசியல் சமத்துவம், மக்களாட்சி முறைமையின் ஏற்புத்தன்மை ஆகியவற்றில் வெவ்வேறு அளவிலான தாக்கங்களைச் செலுத்தும். இவை அனைத்திற்கும் அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 81, 82, 170 ஆகியவற்றில் திருத்தங்கள் தேவைப்படும்; சிலவற்றிற்கு ஒன்றியப் பட்டியலின் இனம் 72, மாநிலப் பட்டியலின் இனம் 37 ஆகியவற்றிலும் திருத்தம்செய்ய வேண்டி வரும்.

வாய்ப்பு 1: மக்களவையை 848 தொகுதிகளாக விரிவாக்குதல்

இப்போதைய தொகுதிகளை எந்த மாநிலமும் இழக்காமல் இருக்க, புதுப்பிக்கப்பட்ட மக்கள்தொகை புள்ளிவிவரங்களின் அடிப்படையில் மக்களவையை 848 தொகுதிகளாக உயர்த்துவது குறித்து பரவலாகப் பேசப்படுகிறது. மேலோட்டமாகப் பார்த்தால், இது சமமானதாகத் தெரியலாம். ஆனால், நாடாளுமன்ற ஜனநாயகத்தில் அதிகாரம் என்பது முழு எண்களால் தீர்மானிக்கப்படுவதில்லை; மாறாக *ஒப்பீட்டு அளவினால் – அதாவது அவையின் மொத்த எண்ணிக்கையில் ஒரு மாநிலத்தின் விழுக்காட்டுப் பங்கினால்* – தீர்மானிக்கப்படுகிறது. அவை விரிவடையும் போது, வெறுமனே அதே எண்ணிக்கை தொகுதிகளைத்

"தக்கவைத்துக் கொள்ளும்" மாநிலங்களின் செல்வாக்கு, பெருமளவு நீர்த்துப் போகிறது.[4]

உதாரணமாக, மக்களவை 848 தொகுதிகளாக விரிவடையும் போது, கேரளா (20 தொகுதிகள்), இமாச்சலப்பிரதேசம் (4 தொகுதிகள்) போன்ற மாநிலங்கள் தங்கள் இடங்களின் எண்ணிக்கையைத் தக்க வைத்துக் கொள்ளலாம். ஆயினும் கேரளாவின் ஒப்பீட்டு அளவு 3.68 விழுக்காட்டிலிருந்து (20/543) 2.36 விழுக்காடாக (20/848) குறையும்; இமாச்சலப் பிரதேசத்தின் ஒப்பீட்டு அளவு 0.74 விழுக்காட்டிலிருந்து 0.47 விழுக்காடாக வீழ்ச்சியடையும். கூடுதல் இடங்களைப் பெறும் மாநிலங்கள்கூட, ஒப்பீட்டு அளவில் தங்களின் மதிப்பை இழக்கக் கூடும். தமிழ்நாட்டின் தொகுதிகள் 39லிருந்து 49ஆக உயர்ந்தாலும், அதன் ஒப்பீட்டு அளவு 7.18 விழுக்காட்டிலிருந்து 5.78 விழுக்காடாக வீழும். பஞ்சாபின் தொகுதிகள் 13லிருந்து 18ஆக உயர்ந்தாலும், அதன் ஒப்பீட்டு அளவு 2.39 விழுக்காட்டிலிருந்து 2.12 விழுக்காடாகக் குறையும்.

மாறாக, அதிக மக்கள்தொகை வளர்ச்சியுள்ள வட மாநிலங்கள் அவையில் பெரும் ஆதிக்கம் செலுத்தும். உத்தரப்பிரதேசம் 63 தொகுதிகளைக் கூடுதலாகப் பெற்று, அதன் ஒப்பீட்டு அளவை 14.73 விழுக்காட்டிலிருந்து 16.86 விழுக்காடாக உயர்த்திக் கொள்ளும். பீகார் 39 தொகுதிகளைப் பெற்று, அதன் ஒப்பீட்டு அளவு 7.37 விழுக்காட்டிலிருந்து 9.32 விழுக்காடாக உயரும்.

எனவே, வாய்ப்பு 1 மக்கள்தொகை கட்டுப்பாடு குறித்த தேசிய இலக்குகளைப் பின்பற்றிய மாநிலங்களைத் தண்டித்து, மக்கள்தொகை கட்டுப்படுத்தாத மாநிலங்களுக்குப் பரிசு அளிப்பதாக அமைகிறது.

ஒப்பீட்டு அளவை முடக்குதல்: இந்த வாய்ப்பின் இன்னும் நீதியான வடிவம் என்னவென்றால், ஒவ்வொரு மாநிலத்தின் இப்போதைய ஒப்பீட்டு அளவை (விழுக்காட்டுப் பங்கு) அப்படியே முடக்கி வைத்து, அந்த மாறாத விகிதாசாரத்தை விரிவடைந்த 848 தொகுதிகளுக்குப் பயன்படுத்துவது ஆகும். இதன் மூலம் வளர்ந்து வரும் மக்கள்தொகைக்கு ஏற்ப அவை விரிவடைந்தாலும், மாநிலங்களுக்கு இடையேயான அரசியல் சமநிலையும் மக்கள்தொகைக் கட்டுப்பாட்டிற்கான ஊக்கமும் சிதையாமல் இருக்கும் (**இணைப்பு IIஐ பார்க்கவும்**).

நிறுவனத் திறன்: எவ்வாறாயினும், மக்களவையை மிக அதிக அளவில் விரிவாக்குவதற்கு எதிராக, வலுவான நிறுவன அளவிலான வாதம் ஒன்று உள்ளது. ஏற்கனவே 550 உறுப்பினர்களைக் கொண்ட மக்களவை, உலகின் மிகப்பெரிய நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும்

---

[4] Milan Vaishnav and Jamie Hintson, 'India's Emerging Crisis of Representation' (*Carnegie Endowment for International Peace* March 14, 2019) accessed December 22, 2025.

கீழவைகளில் ஒன்று ஆகும். மிக அதிக உறுப்பினர்களைக் கொண்ட மக்கள் மன்றங்களில் விவாதத் தரம் குறையும் என்றும், குழு முறைமைகள் பலவீனப்படும் என்றும், சபையை வழிநடத்த கட்சி கொறடாக்களையும் ஆட்சித்துறைக் கட்டுப்பாட்டையும் மட்டும் அதிகம் சார்ந்திருக்கும் நிலை ஏற்படும் என்றும் அரசியல் கோட்பாடுகளும் உலகளாவிய ஒப்பீட்டு அனுபவங்களும் உணர்த்துக்கின்றன.

மக்கள்மன்றத் திறனைப் பாதுகாக்க அவையின் அளவைக் குறைப்பது அல்லது வரம்பிற்குள் வைப்பதே உலகளாவிய போக்காக உள்ளது:

- *அமெரிக்கா:* 1929–ஆம் ஆண்டு முதல் பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 435ஆக வரம்புபடுத்தப்பட்டுள்ளது. அதே நேரத்தில், மக்கள்தொகை கிட்டத்தட்ட மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.
- *இத்தாலி*: 2020–ஆம் ஆண்டில், நிர்வாகத்தைச் சீரமைக்கும் நோக்கில் இத்தாலி தனது பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 630லிருந்து 400ஆகக் குறைத்தது.
- *ஜப்பான்*: செயல்திறனை மேம்படுத்துவதற்காக, 465 இடங்களைக் கொண்ட பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான முன்மொழிவுகள் இப்போது பரிசீலனையில் உள்ளன.

800–900 உறுப்பினர்களைக் கொண்ட மக்களவை மிகவும் சிக்கலானதாகிவிடும். அது நாடாளுமன்றத்தை வெறும் சடங்கு அளவிலான அமைப்பாக மாற்றிவிடும் ஆபத்து உள்ளது; அங்கு ஆழமான விவாதங்கள் அதிகப்படியான குரல்களுக்கு இடையே காணாமல் போகும். ஜேம்ஸ் மேடிசன் *'பெடரலிஸ்ட் 55'* (1788)ல் குறிப்பிட்டது போல, "அறுபது அல்லது எழுபது பேரிடம் அதிகாரத்தை நம்பி ஒப்படைக்கலாம், ஆனால் அறுநூறு அல்லது எழுநூறு பேரிடம் முடியாது." அவர்

> *"எவ்வளவு பெரிய அவையாக இருந்தாலும், உணர்ச்சிகள் அறிவின் செங்கோலைப் பிடுங்கிக் கொள்ளும். ஏதென்ஸின் ஒவ்வொரு குடிமகனும் சாக்ரடீஸாக இருந்தாலும், ஏதென்ஸ் அவை கட்டுக்கடங்காத கூட்டமாகவே இருந்திருக்கும்"* என்று எச்சரித்தார்.

வாய்ப்பு 2. படிப்படியான விகிதாசார மாதிரி

பரந்த பன்முகத்தன்மை கொண்ட அரசியல் சமுதாயங்களுக்கு 'படிப்படியான விகிதாசார முறை (Degressive Proportionality Model)' என்பது

அரசமைப்புச் சட்ட அளவில் முதிர்ந்த தீர்வை வழங்குகிறது. இது "ஒரு வாக்கு, ஒரு மதிப்பு" என்ற கோட்பாட்டிலிருந்து உணர்வுநிலையோடு விலகி, *குடிமக்களின் சமத்துவம், கூட்டாட்சி அலகுகளின் (மாநிலங்களின்) சமத்துவம்* ஆகிய இரண்டுக்கும் இடையே சமநிலையை உருவாக்குகிறது.

இந்தக் கொள்கை, பின்வரும் நான்கு முக்கிய விதிகளின் கீழ் செயல்படுகிறது:

(i) ஒவ்வொரு மாநிலத்திற்கும் குறைந்தபட்ச இடங்கள் உறுதி செய்யப்படும்.

(ii) எந்தவொரு மாநிலத்திற்கும் அதிகபட்ச இடங்களின் வரம்பு நிர்ணயிக்கப்படும்.

(iii) சிறிய மாநிலங்களை விட பெரிய மாநிலங்கள் அதிக இடங்களைப் பெறும்.

(iv) *மக்கள் தொகை விகிதப்படிப் பார்த்தால்*, பெரிய மாநிலங்களைவிட சிறிய மாநிலங்கள் அதிகப் பிரதிநிதித்துவத்தைப் பெறும்.

இதன் ஒட்டுமொத்த விளைவு என்னவென்றால், மக்கள்தொகை காரணமாகக் குறிப்பிட்ட வட்டாரம் ஆதிக்கம் செலுத்தாமல், அனைத்துப் பகுதிகளுக்கும் அரசியல் பிரதிநிதித்துவம் கிடைப்பது ஆகும். சிறிய அலகுகளுக்கு அதிகாரம் அளிப்பதற்காகப் பெரிய அலகுகள் தங்களின் பிரதிநிதித்துவத்தைச் சற்றே குறைத்துக்கொள்வது என்பது உலகளாவிய கூட்டாட்சி முறைகளில் பொதுவான பாதுகாப்பு வழிமுறை ஏற்பாடு ஆகும்.

இதற்கு மிகச்சிறந்த உதாரணம் *ஐரோப்பிய நாடாளுமன்றம்*. இங்கு, 2007–ஆம் ஆண்டு *லிஸ்பன் உடன்படிக்கை (Treaty of Lisbon)* படிப்படியான விகிதாசார முறையைக் கட்டாயமாக்கியுள்ளது. அந்த நாடாளுமன்றத்தின் மொத்த இடங்கள் 750 ஆகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது; இதில் ஒவ்வொரு அரசமைப்புச் சட்டப் பிரிவு நாட்டிற்கும் குறைந்தபட்சம் 6 இடங்களும், அதிகபட்சம் 96 இடங்களும் வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக, 8.35 கோடி மக்கள்தொகை கொண்ட ஜெர்மனிக்கு 96 இடங்கள் (8.7 இலட்சம் குடிமக்களுக்கு ஒருவர்) வழங்கப்பட்டுள்ளன; அதே வேளையில் 60 இலட்சம் மக்கள்தொகை கொண்ட டென்மார்க்கிற்கு 15 இடங்களும் (4 இலட்சம் குடிமக்களுக்கு ஒருவர்), வெறும் 6 இலட்சம் மக்கள்தொகை கொண்ட மால்ட்டாவிற்கு 6 இடங்களும் (95,708 குடிமக்களுக்கு ஒருவர்)

வழங்கப்பட்டுள்ளன. அதாவது, சிறிய நாட்டின் வாக்காளர், பெரிய நாட்டின் வாக்காளரைவிட, பல மடங்கு அதிகச் செல்வாக்கைப் பெற்றுள்ளார். இத்தகைய உணர்வுநிலையிலான ஏற்றத்தாழ்வு, சிறிய நாடுகள் தங்களின் குரலை வலுவாகப் பதிவு செய்வதை உறுதிசெய்கிறது; இது இல்லையென்றால் அந்த ஐரோப்பிய ஒன்றியமே சிதறிவிடும்.

பிரேசில் நாட்டின் அரசமைப்புச் சட்டம், ஒவ்வொரு மாநிலத்திற்கும் குறைந்தபட்சம் 8 பிரதிநிதிகளை உறுதிசெய்கிறது; அதே சமயம் மிகப்பெரிய மாநிலமான சாவோ பாலோவிற்கு (Sao Paulo) அதிகபட்சமாக 70 இடங்கள் என வரம்பு விதித்துள்ளது. இதனால் அந்த மாநிலம் மக்கள்தொகை கணக்குப்படி தனக்குக் கிடைக்க வேண்டிய சுமார் 40 இடங்களை விட்டுக்கொடுக்க வேண்டியுள்ளது. மக்கள்தொகை அதிகம் கொண்ட தெற்குப் பகுதியின் அதிகாரத்தைக் குறைத்து, மக்கள்தொகை குறைவான வடக்குப் பகுதியின் குரலை உயர்த்துவதற்காகவே இந்த முறை வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை, வட்டார மக்கள்தொகை வேறுபாடுகளும் சமமற்ற வளர்ச்சியும் நிலவுவதால், இந்தப் 'படிப்படியான விகிதாசார முறை' மிகவும் பொருத்தமான ஒன்றாகும். எட்டு வடகிழக்கு மாநிலங்களும் கோவாவும் சேர்ந்து நாட்டின் மொத்த மாநிலங்களில் 32 விழுக்காடாக இருந்தாலும், மக்களவையில் அவற்றின் பங்கு வெறும் 4.97 விழுக்காடு மட்டுமே. ஆனால், இந்த அனைத்து மாநிலங்களின் மொத்த செல்வாக்கை விட, உத்தரப்பிரதேசம் மட்டும் 80 இடங்களுடன் (14.73 விழுக்காடு), சுமார் மூன்று மடங்கு அதிக அதிகாரத்தைக் கொண்டுள்ளது. இத்தகைய கடுமையான ஏற்றத்தாழ்வு, மக்கள்தொகையை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட நாடாளுமன்றப் பிரதிநிதித்துவ முறையில் உள்ள அடிப்படையான சமநிலையின்மையைக் காட்டுகிறது.

இத்தகைய அதிகாரக் குவிப்பு, நீண்டகாலமாகவே கூட்டாட்சி முறை சார்ந்த கவலைகளை எழுப்பியுள்ளது. நீதிபதி ஃபசல் அலி தலைமையிலான *மாநில மறுசீரமைப்பு ஆணையத்தின்* (1953) விவாதங்களின் போது, கே.எம். பணிக்கர், தனது மாற்றுக் கருத்துக் குறிப்பில், "அலகுகளின் சமத்துவம் என்ற கூட்டாட்சி முறையின் கொள்கையை மறுத்ததால் ஏற்பட்ட இப்போதைய சமமற்ற நிலை, உத்தரப்பிரதேசத்திற்கு வெளியே உள்ள அனைத்து மாநிலங்களிலும் அவநம்பிக்கை, அதிருப்தி உணர்வுகளை உருவாக்கியுள்ளது" என்று எச்சரித்தார். அப்போது 489 இடங்களில் 86 இடங்களை (சுமார் 18 விழுக்காடு) உத்தரப்பிரதேசம் கொண்டிருந்தது; இது தேசிய அரசியலில் அந்த மாநிலத்திற்கு, மேலாதிக்கச் செல்வாக்கை வழங்கும் என்று பணிக்கர் விவரித்தார். அவர் உத்தரப்பிரதேசத்தைப் பிரிப்பதைப் பரிந்துரைத்தாரே தவிர, முறையான வரம்பை விதிக்கவில்லை

என்றாலும், அவர் முன்வைத்த கூட்டாட்சி முறை கொள்கை இன்றும் கவனிக்கத்தக்கது.

இந்தியாவிற்கு ஏற்ற வகையில், இந்தப் 'படிப்படியான விகிதாசார' முறையை மாற்றியமைத்துப் பயன்படுத்தினால், மக்களவையின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டாலும், உத்தரப்பிரதேசத்தின் ஒப்பீட்டு அளவை 15 விழுக்காடாக (அதன் இப்போதைய 14.73 விழுக்காட்டிற்குச் சற்று கூடுதலாக) கட்டுப்படுத்த முடியும். அதே நேரத்தில், இப்போது ஒன்று அல்லது இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ள வடகிழக்கு மாநிலங்கள், கோவா போன்ற சிறிய மாநிலங்களுக்குத் தலா இரண்டு (அல்லது மூன்று இடங்கள்) என குறைந்த அளவு வரம்பை உறுதி செய்யலாம். மற்ற மாநிலங்களுக்கான இடங்கள், இந்த 'குறைந்த அளவு', உத்திரபிரதேசத்தின் 'அதிக அளவு' வரம்புகளுக்கு இடையே வெளிப்படையான, படிப்படியான விகிதாசார முறையின்படி ஒதுக்கப்படும். இது சில பெரிய மாநிலங்களின் மக்கள்தொகை ஆதிக்கத்தைத் தடுக்கும்; சிறிய மாநிலங்கள் அரசியல் அளவில் புறக்கணிக்கப்படுவதைத் தவிர்க்கும்; வடகிழக்கு மாநிலங்களின் குரலை வலுப்படுத்தும்; இந்தியாவின் பன்முகத்தன்மையைக் காப்பதன் வழியாகவும், மெய்யான கூட்டாட்சி நாடாக ஆக்குவதன் வழியாகவுமே தேசிய ஒருமைப்பாட்டை உறுதி செய்யும்.

வாய்ப்பு 3. விகிதாசார பிரதிநிதித்துவத்துடன் கூடிய கலப்பு முறை

மக்களவையை விரிவுபடுத்த நாடாளுமன்றம் அரசமைப்புச் சட்டப் பிரிவு 81–ஐத் திருத்தினால், கூடுதல் இடங்களுக்கு இப்போதைய "முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் (First–Past–the–Post–FPTP system)" என்னும் முறையையே மீண்டும் பயன்படுத்துவது மக்களாட்சி நோக்கில் தவறானதாக அமையும். இது ஒரு கட்சி பெறும் சாதாரண வாக்கு விகிதத்தைக்கூட, "உருபெருக்கம்" செய்து, அவையில் மிகப்பெரிய பெரும்பான்மையாக மாற்றிக் காட்டும்.

அரசமைப்பு அவையின் விவாதங்களின் போது, கல்வி அறிவு குறைவாக இருந்த வாக்காளர்களுக்கு மக்களவைத் தேர்தலில் விகிதாசார பிரதிநிதித்துவ முறை மிகவும் சிக்கலானதாக இருக்கும் என்று அரசமைப்புச் சிற்பிகள் கருதினர். எவ்வாறாயினும், வாக்காளர்கள் குறைவாகவும் விவரம் அறிந்தவர்களாகவும் உள்ள குடியரசுத் தலைவர் (அரசமைப்புச் சட்டப் பிரிவு 55), குடியரசுத் துணைத் தலைவர் (அரசமைப்புச் சட்டப் பிரிவு 66) ஆகியோருக்கான மறைமுகத் தேர்தல்களில், மாநிலங்களவை (அரசமைப்புச் சட்டப் பிரிவு 80) உறுப்பினர்களுக்கான தேர்தல்களில் 'ஒற்றை மாற்றத்தக்க வாக்கு [Single Transferable Vote (STV)]' எனும் விகிதாசார முறையை அரசமைப்பு ஏற்றுக்கொண்டது.

வரலாற்றுத் தரவுகளின்படி, இந்தியாவில் எந்தவொரு தனிக் கட்சியோ அல்லது தேர்தலுக்கு முந்தைய கூட்டணியோ பொதுத் தேர்தலில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றதில்லை; இருப்பினும் அவை மக்களவையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றுள்ளன. உதாரணமாக, 1984–இல் காங்கிரஸ் கட்சி 48 விழுக்காடு வாக்குகளை மட்டுமே பெற்று, 77 விழுக்காடு இடங்களைக் கைப்பற்றியது. முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறை, தோற்ற வேட்பாளர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளைக் கணக்கில் கொள்ளாமல், அவற்றை "வீணடிக்கிறது." வெறுமனே, முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறையின் கீழ் மக்களவையை விரிவுபடுத்துவது, இந்தச் சிதைவை மேலும் அதிகப்படுத்தும்; இது, ஆளும் தரப்பு, சிறுபான்மை வாக்குகளை வைத்துக்கொண்டு அரசமைப்புச் சட்டத்தையே மாற்றியமைக்கும் நிலையை உருவாக்கும்.

நிலைத்தன்மையைக் குலைக்காமல், இந்தச் சமநிலையின்மையைத் திருத்த, இந்தியா இனி கூடுதலாக உருவாக்கும் தொகுதிகளை, முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறையிலிருந்து விலகி, (ஜப்பான் அல்லது நேபாளத்தில் உள்ளது போன்ற) 'இணை அமைப்பு முறை' ஒன்றை ஏற்றுக்கொள்ளலாம்:

1. இப்போதைய 550 இடங்கள், தொகுதித் தொடர்பையும் நிலைத்தன்மையையும் காக்க, முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறையிலேயே தொடர வேண்டும்.
2. கூடுதல் இடங்கள் (எடுத்துக்காட்டாக 275 அல்லது 300), மாநிலங்களின் இப்போதைய ஒப்பீட்டு அளவின் அடிப்படையில் (கூட்டாட்சி முறையின் சமநிலையை முடக்கி வைத்து) ஒதுக்கப்பட வேண்டும். இந்த இடங்கள் *அந்தந்த மாநிலத்திற்குள்* அரசியல் கட்சிகள் பெற்ற வாக்கு விகிதத்தின் அடிப்படையில் (கட்சிப் பட்டியல் முறையில்) நிரப்ப வேண்டும். **(இணைப்பு IIIஐ பார்க்கவும்).**

வாக்காளர்கள், (முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறையில் போட்டியிடும்) வேட்பாளருக்கு ஒரு வாக்கு, (விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில்) கட்சிக்கு ஒரு வாக்கு என இரண்டு வாக்குகளை அளிப்பார்கள். இது இப்போதைய மின்னணு வாக்குப்பதிவு இயந்திர தொழில்நுட்பத்தில் முற்றிலும் இயலக் கூடியதே.

இந்தக் கலப்பு முறை மூன்று நோக்கங்களை நிறைவேற்றும்: முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறையின் குறைபாடுகளைச் சரிசெய்யும்; சிறிய கட்சிகள், குறிப்பிட்ட வட்டாரத்தைச்

சேர்ந்த அளவிலான நலன் கொண்டோர்கள் நாடாளுமன்றத்தில் நுழைய வழிவகுக்கும்; மேலும், (தேசிய அளவிலான வாக்குப் பங்கீட்டிற்குப் பதிலாக,) மாநில அளவிலான வாக்குப் பங்கீட்டின் அடிப்படையில் தொகுதிகளை ஒதுக்குவதன் மூலம் மாநிலக் கட்சிகளைப் பாதுகாக்கிறது.

வாய்ப்பு 4. 2126 வரை நீண்டகால முடக்கம்

அடுத்த நூறு ஆண்டுகளுக்கு, அதாவது 2126 வரை மாநிலங்களுக்கு இடையேயான தொகுதி ஒதுக்கீட்டை முடக்கி வைப்பதே மிகவும் அறிவார்ந்த, அரசமைப்புச் சட்ட அளவில் தெளிவான தீர்வு ஆகும். இந்த அணுகுமுறையின் கீழ், மக்களவையின் மொத்த எண்ணிக்கை 550 ஆகவும், மாநில வாரியான தொகுதிகள் 1971 கணக்கெடுப்பு நிலையிலும் தொடரும்.

இந்தக் காலக்கெடு அறிவியல் நோக்கிலான அடிப்படை உள்ளது. *ஐக்கிய நாடுகள் அவையின் உலக மக்கள்தொகை* முன்னறிவிப்புகள் 2024 *(UN World Populations Prospects,* 2024)–இன் படி, இந்தியாவின் மக்கள்தொகை 2060களின் முற்பகுதியில், அதாவது 2061–2062 காலகட்டத்தில், சுமார் 170 கோடியாக உச்சத்தைத் தொட்டு, பின்னர் படிப்படியாகக் குறையத் தொடங்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. *தி லான்செட் (The Lancet) இதழின் "2100 வரையிலான முன்னறிவிப்புகளுடன் 204 நாடுகளிலும் வட்டாரங்களிலும் உலகம் தழுவிய பிறப்புவிகித போக்கு,* 1950–2021" என்கிற ஆய்வு இதைவிட அதிக நம்பிக்கையுடன் உள்ளது. அந்த ஆய்வின்படி, இந்தியாவின் மொத்த கருவுறுதல் விகிதம் 2021–இல் 1.91லிருந்து 2050க்குள் 1.29 ஆகவும், 2100க்குள் மேலும் குறைந்து 1.04 ஆகவும் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்த முன்னறிவிப்புகள் ஓரளவு துல்லியமாக இருந்தாலும், அதிகப் கருவுறுதல் விகிதம் கொண்ட மாநிலங்களான உத்தரப்பிரதேசம், பீகார் போன்றவை தங்களின் மக்கள் தொகையை நிலைப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், 2126–ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே – இப்போது தென்னிந்தியாவின் சில பகுதிகளில் காணப்படுவது போன்ற – மக்கள்தொகைக் சுருக்க நிலைக்குள் (demographic contraction) நுழைந்துவிடும். ஆயினும், வெறும் மக்கள்தொகை குறைவு மட்டுமே சமத்துவமான தொகுதி மறுசீரமைப்பிற்குப் போதுமானது அல்ல. *மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதிப் பங்கீடு மீதான தடையை நீக்குவதற்கான சரியான காரணி மக்கள்தொகை ஒத்திசைவு என்பதாகவே இருக்க வேண்டும்; அதாவது மாநிலங்களின் மொத்த கருவுறுதல் விகிதம், தேசிய சராசரியின் குறுகிய வரம்புக்குள் (எடுத்துக்காட்டாக ±10 விழுக்காடு) இருக்க வேண்டும்.* அத்தகைய ஒத்திசைவு மட்டுமே, மக்கள்தொகை

அடிப்படையிலான தொகுதி ஒதுக்கீட்டிற்கு மீண்டும் திரும்புவது கூட்டாட்சி முறையின் சமநிலையைச் சிதைக்காமலும், மக்கள் தொகையை முன்கூட்டியே நிலைப்படுத்திய மாநிலங்களைத் தண்டிக்காமலும் இருப்பதை உறுதி செய்யும். இத்தகைய ஒத்திசைவு 2126க்கு முன்பே நிகழ்ந்தால், புதிய தொகுதி மறுசீரமைப்பை முன்னதாகவே மேற்கொள்ளலாம்; ஒருவேளை நிகழவில்லை எனில், தடையை நீட்டிப்பது குறித்த கேள்வியை அந்த நேரத்தில் மீளாய்வு செய்யலாம்.

மாநிலங்களுக்கு இடையேயான தொகுதிகளின் எண்ணிக்கை மாற்றமின்றி இருக்கும் அதே வேளையில், மாநிலங்களுக்கு உட்பட்ட தொகுதி மறுசீரமைப்பு (intra–State delimitation) தொடர வேண்டும். *84வது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (2001) ஏற்படுத்திய முன்னுதாரணத்தைப் பின்பற்றி, கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறங்களுக்கு மக்கள் இடம் பெயர்வதைக் கருத்தில் கொள்ளும் வகையில், மாநிலங்களுக்குள்ளே தொகுதி எல்லைகளைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் (எடுத்துக்காட்டாக 25 ஆண்டுகளுக்கு ஒருமுறை) மாற்றி அமைக்க வேண்டும். இது மக்களவையில் எந்தவொரு மாநிலத்தின் ஒப்பீட்டு அரசியல் மதிப்பை மாற்றாமல், சமமானப் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும்.

பரிந்துரை 1

அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 81, 82, 170 ஆகியவற்றில் கீழ்க்கண்டவாறு திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்:

1. மாநிலங்களுக்கு இடையேயான தொகுதி ஒதுக்கீட்டின் மீதான தடையை, 2126–ஆம் ஆண்டு வரையிலும் அல்லது அனைத்து மாநிலங்களின் மொத்த கருவுறுதல் விகிதம் தேசிய சராசரியின் குறுகிய வரம்புக்குள் (எடுத்துக்காட்டாக ±10 விழுக்காடு) ஒத்திசையும் வரையிலும், இதில் எது முன்பாக நடந்தேறுகின்றதோ அதுவரையிலும் நீட்டிக்க வேண்டும்;
2. 1971–ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, மக்களவையின் அதிக அளவு எண்ணிக்கையை 550 இடங்களாகவும், சட்டப்பேரவைகளின் எண்ணிக்கையை இப்போதைய அளவிலும் தக்கவைக்க வேண்டும்;
3. மாநிலங்களுக்கு இடையேயான தொகுதி ஒதுக்கீட்டை மாற்றாமல், நகரமயமாக்கலையும் உள்நாட்டு இடப்பெயர்ச்சியையும் கருத்தில் கொள்ளும் வகையில், மாநிலங்களுக்கு உட்பட்ட தொகுதி எல்லைகளைச் சரிசெய்ய குறிப்பிட்ட கால இடைவெளியிலான தொகுதி மறுசீரமைப்பைக் கட்டாயமாக்க வேண்டும்.

தேசிய மக்கள்தொகைக் குறிக்கோள்களை வெற்றிகரமாக முன்னெடுத்த மாநிலங்களுக்கு அரசியல் அளவில் தண்டனை வழங்கப்படுவதைத் தடுப்பதற்காக 1976–இல் விதிக்கப்பட்டத் தடையின் பின்னணியில் உள்ள தர்க்கம் இப்போதும் முழுமையாகச் செல்லுபடியாகும். முன்மொழியப்பட்டுள்ள இந்தக் கால அளவு, அதிகப் கருவுறுதல் விகிதம் கொண்ட மாநிலங்கள் தங்களின் மக்கள்தொகை சார்ந்த உருமாற்றத்தை (demographic transition) நிறைவு செய்து, தேசிய சராசரியுடன் ஒத்திசையப் போதுமான கால அவகாசத்தை வழங்குகிறது; இதன் மூலம் மக்கள்தொகை அடிப்படையிலான சமத்துவமான தொகுதி மறுசீரமைப்பிற்குத் தேவையான சூழல் மீண்டும் உருவாகும்.

VI. பொறுப்புடைமையை மீட்டெடுத்தல்: நாடாளுமன்றக் கண்காணிப்பும் நீதித்துறை சீராய்வும்

இந்தியாவின் இப்போதைய தொகுதி மறுவரையறை கட்டமைப்பின் மிகவும் தனித்த பண்புக்கூறு, அந்த ஆணையத்தின் ஆணைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அசாதாரணமான, வழக்கத்திற்கு மாறான இறுதித்தன்மை ஆகும். இந்தத் தனிச்சலுகை பின்வரும் சட்டமுறை, அரசமைப்புச் சட்டப் பிணைப்புகள் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது:

- *சட்டமுறை இறுதித்தன்மை*: 2002–ஆம் ஆண்டு *தொகுதி மறுவரையறைச் சட்டத்தின்* பிரிவு 10(2)–இன் படி, ஆணையத்தின் ஆணை அரசிதழில் வெளியிடப்பட்டால், அது முழுமையான சட்டம் ஆகிறது. முக்கியமாக, இந்த உத்தரவை "எந்த நீதிமன்றத்திலும் கேள்விக்கு உள்ளாக்க முடியாது" என்று இப்பிரிவு தடை விதிக்கிறது.
- *சட்டமன்றத்தின் இயலாமை*: பிரிவு 10(3)–இன் படி, ஆணைகள் நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் வைக்கப்பட வேண்டும் என்றாலும், அது வழக்கம் மட்டுமே. இந்த எளிய சமர்ப்பிப்பு நடைமுறை, தொகுதி மறுவரையறை ஆணையத்தின் ஆணைகளை நாடாளுமன்றம் மாற்றுவதைத் தன்னிச்சையாகத் தடுக்கிறது.
- *அரசமைப்புச் சட்டத் தடை*: தொகுதி மறுவரையறை அல்லது தொகுதி ஒதுக்கீடு தொடர்பான எந்தவொரு சட்டத்தின்

செல்லுபடியாகும் தன்மையையும் "எந்த நீதிமன்றத்திலும் கேள்விக்குள்ளாக்கக் கூடாது" என்று அரசமைப்பின் அரசமைப்புச் சட்டப் பிரிவு 329(a), சட்டமுறை இறுதித் தன்மையை வலியுறுத்துகிறது.

அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 82, 170 (அதிகாரத்தை வழங்குதல்), அரசமைப்புச் சட்டப் பிரிவு 329(a) (சீராய்வைத் தடுத்தல்), சட்டத்தின் பிரிவு 10 (மக்கள் மன்றக் கண்காணிப்பை மறுத்தல்) ஆகிய மூன்றின் இணைவு ஒரு தனித்த ஒழுங்கற்ற தன்மையை உருவாக்குகிறது. தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படாத, இப்போது உள்ள வெறும் பத்து விழுக்காடு வருகைபுரிந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் எளிய பெரும்பான்மையால் இயற்றப்பட்ட நாடாளுமன்றச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட, ஓர் ஆணையத்தின் இறுதி ஆணை, எவ்வித சட்டமன்றக் கண்காணிப்போ அல்லது நீதித்துறை சீராய்வோ இன்றி, குறைந்த அளவு ஆட்சித்துறை கட்டுப்பாட்டுடன், சட்டமாக மாறுகிறது.

நவீன அரசமைப்புச் சட்ட மக்களாட்சி முறையில், இத்தகைய கட்டமைப்பு ஏற்புடையது அல்ல. தொகுதி மறுவரையறை என்பது வழக்கமான நிர்வாகப் பணி அல்ல; அது மக்களாட்சி முறையின் வரைபடத்தை மாற்றியமைத்து, அதிகாரப் பகிர்வைத் தீர்மானிக்கும், அடிப்படையான அரசியல் செயல்பாடு ஆகும். இருப்பினும், புதிய எல்லைகள் தேர்தல் நிலைமைகளாக மாறுவதற்கு முன்னால், அவற்றில் உள்ள சட்டவிரோதத் தன்மை, தன்னிச்சையான போக்கு அல்லது அதிகார வரம்பு மீறல்கள் ஆகியவற்றைச் சரிசெய்ய இந்தியாவினுடைய கட்டமைப்பில் எந்த நிறுவன அமைப்பும் இல்லை.

விதிவிலக்குப் பாதுகாப்பும் அதனுடைய வரம்புகளும் குறித்த நீதித்துறை விளக்கம்

இந்த விதிவிலக்குப் பாதுகாப்பு குறித்த மரபார்ந்த விளக்கம், *மேக்ராஜ் கோத்தாரி எதிர் தொகுதி மறுவரையறை ஆணையம்* (1966)[5] *[Meghraj Kothari v. Delimitation Commission* (1966)] வழக்கில், வழங்கப்பட்டது. தொகுதி மறுவரையறை ஆணைகளை இறுதி முடிவாகக் கருதவில்லை என்றால், எந்தவொரு வாக்காளரும் "நீதிமன்றத்திற்கு நீதிமன்றம்" சென்று வழக்காடுவதன் மூலம் தேர்தல்களைக் கால வரையறையற்று, தாமதப்படுத்தலாம்; இது தேர்தல் கால அட்டவணையைப் முடக்கிவிடும் என்று நீதிமன்றம் கருதியது. அந்தக் கவலை இன்றும் பொருத்தமானதே.

---

[5] AIR 1967 SC 669.

ஆனால், அதிகார வரம்பு மீறல், கட்டாயமான நடைமுறையை மீறுதல் அல்லது வெளிப்படையான அரசமைப்புச் சட்ட மீறல் போன்ற புகார்களைக் கூட விசாரிக்க முடியாத நிலையை நியாயப்படுத்த முடியாது. 'இறுதித்தன்மை' என்பது மக்களாட்சிமுறை மற்றும் நடைமுறையின் தேவை; ஆனால் தண்டனையிலிருந்து தப்புதல் அல்ல.

அண்மைய தீர்ப்புகள் இந்தத் தீவிரத் தன்மையைச் சற்றுத் தளர்த்தி, தேர்தலுக்குப் பாதிப்பில்லாமல் சீராய்வு செய்ய வழிவகுத்துள்ளன:

- *இந்தியத் தேர்தல் ஆணையம் எதிர் அசோக் குமார்* (2000)[6] *[Election Commission of India v. Ashok Kumar* (2000)]: தேர்தல் நடவடிக்கைகளைத் தாமதப்படுத்துதல், தடை செய்தல், நீட்டித்தல் அல்லது முடக்குதல் போன்ற முயற்சிகளுக்கு எதிராக உச்சநீதிமன்றம், தன்னைத்தானே எச்சரித்துக்கொண்டது. கோரப்படும் நிவாரணம் தேர்தல் செயல்முறைக்கு உதவுவதாகவோ அல்லது செயல்முறையை நிறுத்தாமல் சட்டவிரோதத்தைச் சரிசெய்வதாகவோ இருந்தால், நீதிமன்றங்கள் தலையிடலாம் என்று தீர்ப்பு அளித்தது.
- *கோவா மாநிலம் எதிர் பௌசியா இம்தியாஸ் ஷேக்* (2021)[7] *[State of Goa v. Fouziya Imtiaz Shaikh* (2021)]: இந்த விளக்கத் தருக்க முறையை, நகராட்சித் தேர்தல்களுக்கு (அரசமைப்புச் சட்டப் பிரிவு 329(a) போன்றே அரசமைப்புச் சட்டப் பிரிவு 243ZG) பயன்படுத்தியது நீதிமன்றம். முறையான தேர்தல் அறிவிப்பு வெளியான பிறகே அரசமைப்புச் சட்டத் தடை பொருந்தும் என்று கூறியது. தொகுதி மறுவரையறை போன்ற ஆயத்தப் பணிகள், அறிவிப்புக்கு முன்பே சவாலுக்கு உட்படுத்தப்பட்டால், அவை நீதித்துறை ஆய்வுக்கு உட்பட்டவையே.
- *கிஷோர்சந்திர சங்கன்லால் ரத்தோட் எதிர் இந்திய ஒன்றியம்* (2024)[8] [*Kishorchandra Chhanganlal Rathod v. Union of India* (2024)]: உச்சநீதிமன்றம், அரசமைப்புச் சட்டப் பிரிவு 329 முழுமையான தண்டனையிலிருந்து தப்பிக்கும் உரிமம் அல்ல எனத் தெளிவுபடுத்தியது. தேர்தல் கால அட்டவணையைச் சீர்குலைக்காவிட்டால், வெளிப்படையான தன்னிச்சை அல்லது அரசமைப்புச் சட்ட விழுமியங்களுக்கு முரணான

---

[6] (2000) 8 SCC 216.
[7] (2021) 8 SCC 401.
[8] 2024 INSC 579.

நடவடிக்கைகளைச் சரிபார்க்க, வரையறுக்கப்பட்ட அளவிலான நீதித்துறை சீராய்வு நடப்பில் உள்ளது என உறுதிப்படுத்தியது.

இந்தச் சிறிய அளவில் "பொறுப்புடைமைச் சாளரம்" திறக்கப்பட்டிருந்தாலும், தேர்தல் அறிவிப்பு வெளியான பிறகு செயல்முறைக்குத் தடையாக இல்லாமல், அதற்கு முன் வெளிப்படையான சட்டவிரோதங்களுக்கு எதிராகச் சீராய்வு செய்ய அனுமதிக்க, அரசமைப்புச் சட்டப் பிரிவு 329(a)ஐ திருத்தம் செய்வது, அரசமைப்புச் சட்ட அறிவார்ந்த செயல் ஆகும். இல்லையெனில், அரசமைப்பின் அடிப்படைப் பண்புகளில் ஒன்றான, நீதித்துறையின் சீராய்வு என்பது பொருளற்றது ஆகிவிடும்.

உலக நடைமுறைகளை ஒப்பிட்டு நோக்குதல்

முதிர்ந்த ஜனநாயக நாடுகளில் தொகுதி மறுவரையறை என்பது வெளிப்படையானது, கேள்விக்கு உட்படுத்தக் கூடியது, சரிசெய்யக் கூடியது என்கிற கொள்கையே பின்பற்றப்படுகின்றது.

- *அமெரிக்கா*: பெரும்பாலான மாநிலங்களில், ஆளுநரின் ஒப்புதல் தேவைப்படும் சட்டமாகக் கொண்டு வரப்படுகிறது. முக்கியமாக, முழு செயல்முறையும் நீதித்துறை ஆய்வுக்கு உட்பட்டது. சட்ட அளவிலான ஆய்வில் வெற்றிபெறாதவரை எந்த வரைபடமும் இறுதியானது அல்ல.
- *கனடா:* கூட்டாட்சித் தொகுதிகள் "உரையாடல்" நடைமுறை வழியாகத் தனியான ஆணையங்களால் வரையறுக்கப்படுகின்றன. இந்த ஆணையங்களின் அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் அளிக்கப்பட்டு, அங்குள்ள உறுப்பினர்களின் ஆட்சேபனைகளையும் கருத்துகளையும் ஆணையம் ஆய்வு செய்யும். இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் ஆணையத்திடமே இருந்தாலும், உரிமைகள், சுதந்திரங்கள் குறித்த சாசனத்திற்கு இணக்கமாக எல்லைகள் உள்ளதா என சீராய்வு செய்யும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கு உண்டு.
- *ஜெர்மனியும் ஜப்பானும்*: தொகுதி மறுவரையறை என்பது முற்றிலும் சட்டம் இயற்றும் பணியே. தனியான ஆணையங்கள் வெறும் ஆலோசனை அமைப்புகளாகவே செயல்படுகின்றன; நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்ட பிறகே எல்லைகள் சட்டபூர்வமாகின்றன. இந்த அதிகாரம் மக்கள்தொகை விலகல் வரம்புகளுக்கு உட்பட்டது. இது நீதிமன்றங்களில் முழுமையான

அளவில் நியாயப்படுத்தப்பட வேண்டும் (ஜப்பானிய உச்சநீதிமன்றம் இத்தகைய தொகுதி வரையறை முறைகேடுகளை அடிக்கடி சீராய்வு செய்கிறது).

இந்தியாவுக்குத் தேவையான சீர்திருத்தம்

இந்தியாவினுடைய தெரிவு என்பது அரசியல் தலையீடு, நிறுவனச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு இடையேயானது அல்ல; மாறாகப் *பொறுப்பற்ற சுதந்திரம், பொறுப்புடைமையுடன் கூடிய சுதந்திரம்* ஆகியவற்றுக்கு இடையேயானது. நிலையான கட்டமைப்பு என்பது மக்களாட்சி முறையின் கண்காணிப்பையும் முடிவெடுக்கும் இறுதித் தன்மையையும் இணைக்க வேண்டும். இதைப் பின்வரும் மூன்று சீர்திருத்தங்களைக் கவனமாக நடைமுறைப்படுத்துவதன் வழியாக அடையலாம்:

1. *சட்டம் இயற்றும் அவை ஆராய்வு (கனடாவின் "உரையாடல் மாதிரி" (Dialogue Model):* தொகுதி மறுவரையறையின் வரைவு ஆணைகள் நாடாளுமன்றத்திற்கும் (மக்களவைக்கும்), மாநிலச் சட்டமன்றங்களும் (சட்டப் பேரவைக்கும்) முன் வைக்கப்பட வேண்டும் என்று அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 82, 170 திருத்தப்பட வேண்டும். இந்த ஆராய்வு, அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும் உள்ளடக்கிய குழுவின் மூலம் நடக்க வேண்டுமே தவிர, அவையில் நேரடி விவாதம் வழியாக நடக்கக்கூடாது. இக்குழுவின் ஆராய்வு, சட்ட ஏற்புடைமை, மக்கள்தொகை இணக்கம், சட்ட விதிகளுக்கு உட்படுதல் ஆகிய அளவில் மட்டுமே இருக்க வேண்டும். இந்தக் குழு ஆராய்வு, தொகுக்கும் ஆட்சேபனைகளை, தொகுதி மறுவரையறை ஆணையத்திற்கு அனுப்பும். ஆணையம் இந்த கருத்துகளைக் கணக்கில்கொண்டு, ஒவ்வொரு கருத்திற்கும் விளக்கம் அளிக்கும் "ஆட்சேபனைகள் குறித்த அறிக்கை" ஒன்றை வெளியிட வேண்டும். ஆணையம் பதிலளிக்கக் கடமைப்பட்டதே தவிர, அந்தக் கருத்துக்களுக்குக் *கட்டுப்பட்டது அல்ல*. இறுதி முடிவை ஆணையமே மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் ஆணையத்தின் சுதந்திரம் பாதுகாக்கப்படுகிறது.
2. *தானியங்கி இறுதித்தன்மை*: அரசியல் முட்டுக்கட்டைகளைத் தவிர்க்க, தொகுதி *மறுவரையறை குறித்த ஆணையத்தின் இறுதி ஆணைகள்* (ஆட்சேபனைகள் குறித்த அறிக்கையையும்

சேர்த்து) சட்டமன்ற அவைகளுக்குத் தகவலுக்காக மட்டுமே அனுப்பப்பட வேண்டும். இதற்கு அவைகளின் பின்னேற்பு தேவையில்லை. சட்டமுறை அளவில் குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பிறகு (எ.கா. 60 நாட்கள்), அரசிதழில் வெளியிடப்பட வேண்டும். இது சட்டமன்றங்களின் குரலுக்கு மதிப்பளிப்பதோடு, அவைகள் செயல்முறையைத் தடுக்கும் அதிகாரத்தைப் பெறுவதையும் தவிர்க்கிறது.

3. *குறிப்பிட்ட கட்டத்திலான நீதித்துறை மீளாய்வு*: *தேர்தல் அறிவிப்பிற்கு முன்னதாக*, அதிகார வரம்பு மீறல், நடைமுறை தவறுதல், தன்னிச்சையான போக்கு அல்லது அரசமைப்புச் சட்ட மீறல் ஆகிய குறிப்பிட்ட காரணங்களுக்காக மட்டும், *நீதித்துறை சீராய்வு* செய்ய அரசமைப்புச் சட்டப் பிரிவு 329(a) திருத்தம் செய்யப்பட வேண்டும். தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு, கால அட்டவணையைப் பாதுகாக்க நீதித்துறை தலையீட்டிற்கான இப்போதைய தடை தொடர வேண்டும். இது கிஷோர்சந்திர சங்கன்லால் ரத்தோட் (2024) தீர்ப்பின் கருத்துடன் ஒத்துப்போவதோடு, குழப்பமில்லாமல் பொறுப்புடைமையை உறுதி செய்யும்.

இந்த அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் வரும் வரை, நாடாளுமன்றம் இயற்றும் எந்தவொரு புதிய தொகுதி மறுவரையறைச் சட்டத்திலும், முதல் இரண்டு சீர்திருத்தங்கள் (சட்டம் இயற்றும் அவை ஆராய்வு, விளக்கமான பதில்கள்) சேர்க்கப்படுவதை மாநிலங்கள் வலியுறுத்த வேண்டும்.

பரிந்துரை 2

தொகுதி மறுவரையறை ஆணைகள் நாடாளுமன்ற, மாநிலச் சட்டமன்றங்களின் குறித்த காலத்திற்கு உள்ளான ஆராய்விற்குப் பிறகே நடைமுறைக்கு வர வேண்டும் என்றும், தேர்தல் அறிவிப்பிற்கு முன்னதாக அரசமைப்புச் சட்ட, அதிகார வரம்பு குறித்த காரணங்களுக்காக நீதித்துறையின் சீராய்வை அனுமதிக்க வேண்டும் என்றும் அரசமைப்பின் அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 82, 170, 329(a) ஆகியவற்றைத் திருத்த வேண்டும். அதே வேளையில், தேர்தல் செயல்முறை தொடங்கிய பிறகு, நீதிமன்றத் தலையீட்டிற்கான தடை தொடர வேண்டும். இத்தகைய திருத்தங்கள் செய்யப்படும் வரை, நாடாளுமன்றம் இயற்றும் எந்தவொரு தொகுதி மறுவரையறைச் சட்டமும் கட்டாயமான சட்டமன்ற ஆராய்விற்கு வழிவகை செய்ய வேண்டும்.

VII. நிறுவன அளவிலான சீர்திருத்தம்: மக்களவைக்கும் மாநிலச் சட்டமன்றங்களுக்கும் தனித்தனி தொகுதி மறுவரையறை ஆணையங்கள்

இப்போதுள்ள கட்டமைப்பின்படி, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 82, 170(3) ஆகியவற்றின் கீழ் நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் தொகுதி மறுவரையறைச் சட்டம் மூலம் அமைக்கப்படும் ஒரேயொரு ஆணையமே, மக்களவை, மாநிலச் சட்டமன்றங்கள் ஆகிய இரண்டிற்குமான தொகுதி மறுவரையறைப் பணியை மேற்கொள்கிறது. ஒரே கட்சி ஆதிக்கம் செலுத்திய காலத்தின் எச்சமான இந்த மையப்படுத்தப்பட்ட வடிவம், அதன் பயன்பாட்டை இழந்துவிட்டது. இது இப்போது ஜனநாயக ஏற்புடைமை, கூட்டாட்சி முறையின் சமநிலை, நிர்வாகத் திறன் ஆகியவற்றிற்குப் பெரும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகிறது.

இப்போதைய மாதிரியின் அமைப்பியல் குறைபாடுகள்

கடந்த காலங்களில் (1952, 1963, 1973, 2002) அமைக்கப்பட்ட தொகுதி மறுவரையறை ஆணையங்களின் கட்டமைப்பு, சில முக்கியமான குறைபாடுகளைக் கொண்டுள்ளது. நியமன அதிகாரங்கள் ஒன்றிய அளவிலேயே குவிந்துள்ளன; சபாநாயகர்களால் நியமிக்கப்படும் இணை உறுப்பினர்கள் (நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்) மாநிலத்தின் அனைத்து அரசியல் பிரிவினரையும் பிரதிநிதித்துவம் செய்வதில்லை; எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தச் செயல்முறையால் நேரடியாகப் பாதிக்கப்படக்கூடிய முக்கிய தரப்பினரான அரசியல் கட்சிகளுக்கு முடிவு எடுக்கும் அதிகாரம் வழங்கப்படுவதில்லை.

"அரசியல் தலையீட்டிலிருந்து" பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு, இப்போதைய வடிவமைப்பு உண்மையில் ஒன்றித்தில் ஆளும் கட்சிக்கே சாதகமாக உள்ளது. பயனுள்ள சட்டமன்ற அல்லது நீதித்துறை கண்காணிப்பு இல்லாததால், இந்தக் கட்டமைப்பு தவிர்க்க முடியாத அமைப்பு முறை அளவிலான பின்வரும் ஆபத்தை உருவாக்குகிறது: பொறுப்புடைமை இல்லாத, தோல்விக்கு வழிவகுக்கின்ற தனி அமைப்பு எடுக்கும் முடிவுகளே இறுதியானது, நீதித்துறை ஆய்வுக்கு அப்பாற்பட்டது, எவ்வித திருத்தங்களுக்கும் இடமற்றது. இது, தொகுதி மறுவரையறை செயல்முறையின் நடுநிலைமை, நம்பகத்தன்மை மீது பொதுமக்களுக்கு இருக்கும் நம்பிக்கையைச் சிதைக்கிறது.

சட்டமன்றத் தொகுதி மறுவரையறை ஏன் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்பட வேண்டும்?

மாநிலச் சட்டமன்றங்களுக்கான தொகுதி மறுவரையறை, மக்களவையிலிருந்து நிறுவன அளவில் பிரிக்கப்பட வேண்டும். இந்தியாவின் பன்முகத்தன்மை கொண்ட மாநிலங்களின் நுட்பமான மக்கள்தொகை, புவியியல், நிர்வாக நுணுக்கங்களைக் கையாள மையப்படுத்தப்பட்ட ஆணையம் அமைப்பியல் அளவில் பொருத்தமற்றது.

தொகுதி மறுவரையறை என்பது குடியிருப்புகளின் அமைப்பு, போக்குவரத்து வசதிகள், ஆறுகள் போன்ற நிலப்பரப்பு, சமூகப் பிணைப்புகள் குறித்த உள்ளூர் எதார்த்தங்கள் பற்றிய ஆழமான அறிவைக் கோருகிறது. இப்போது, இதற்கான அடிப்படைப் பணிகளை மாநில அதிகாரிகள் (மாவட்ட ஆட்சியர்கள்) செய்தாலும், இறுதி அதிகாரம் எங்கோ தொலைவில் உள்ள ஒரு தேசிய அமைப்பிடமே உள்ளது. இந்தத் தொடர்பு துண்டிப்பு, நிர்வாக அளவில் குழப்பமான, சமூக உணர்வற்ற, தேர்தல் அளவில் சர்ச்சைக்குரிய முடிவுகளுக்கே வழிவகுக்கும்.

மேலும், *73, 74வது அரசமைப்புச் சட்டத் திருத்தங்களைத்* (1992) தொடர்ந்து, தனியான மாநிலத் தேர்தல் ஆணையங்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கான (ஊராட்சிகள், நகராட்சிகள்) சிக்கலான தொகுதி மறுவரையறைப் பணிகளை வெற்றிகரமாக நடத்தி வருகின்றன. *நாடாளுமன்ற அல்லது சட்டமன்றத் தொகுதியை வரையறுப்பதைவிட, உள்ளாட்சிகளின் தொகுதிகளை வரையறுப்பது மிகவும் நுணுக்கமான, சிக்கலான பணியாகும்.* எனவே, சட்டமன்றத் தொகுதி மறுவரையறையை மாநில அளவிலான நிறுவனத்திடம் ஒப்படைப்பதும், ஒன்றிய தொகுதி மறுவரையறை ஆணையத்தின் அதிகாரத்தை மக்களவைத் தொகுதிகளோடு மட்டும் கட்டுப்படுத்துவதும் தர்க்க அளவிலான அடுத்த கட்ட நடவடிக்கை ஆகும்.

ஒப்பீடு அளிக்கும் உலக அனுபவங்கள்

இந்தியாவின் இப்போதைய ஏற்பாடு, உலகளாவிய கூட்டாட்சி நடைமுறைகளிலிருந்து மாறுபட்ட விதிவிலக்கு ஆகும்.

அமெரிக்கா: கூட்டாட்சி மட்டத்தில் தொகுதி மறுவரையறை ஆணையம் இல்லை. கூட்டாட்சி அவை (காங்கிரஸ்), மாநிலங்களின் அவைகள் சார்ந்த தொகுதி எல்லைகள் அந்தந்த மாநிலங்களாலேயே (சட்டமன்றங்கள் அல்லது தனியான ஆணையங்கள் மூலம்) வகுக்கப்படுகின்றன; இவை நீதித்துறை சீராய்வுக்கு உட்பட்டவை.

கனடா: தேர்தல் தொகுதி எல்லைகள் மீது மாகாணங்கள் சுயாட்சி அதிகாரம் கொண்டுள்ளன என்பதால், ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனித்தனியாக அமைக்கப்படும் தனி ஆணையங்கள் மூலம் நாடாளுமன்றத் தொகுதிகள் மறுவரையறை செய்யப்படுகின்றன.

ஆஸ்திரேலியா: காமன்வெல்த் மறுசீரமைப்பு, ஆஸ்திரேலிய தேர்தல் ஆணையத்தால் ஒருங்கிணைக்கப்படுகிறது; மாநில எல்லைகள் அந்தந்த மாநில ஆணையங்களால் சுதந்திரமாகத் தீர்மானிக்கப்படுகின்றன.

இங்கிலாந்து (ஐக்கிய முடியரசு): வட்டார நிபுணத்துவத்திற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து ஆகியவற்றுக்குத் தனித்தனி தொகுதி எல்லை ஆணையங்கள் உள்ளன.

அரசமைப்பு அவையில் நடந்த விவாதம்

தொடக்கக்கால வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 149(4), மாநிலச் சட்டமன்றங்களின் தொகுதிகளை மாற்றியமைக்கும் முறையை மாநிலங்களே தீர்மானிக்கலாம் எனப் பரிந்துரைத்தது. பின்னர் டி.டி. கிருஷ்ணமாச்சாரி கொண்டுவந்த திருத்தத்தின் மூலம், தொகுதி வரையறை தொடர்பான அரசியலமைப்புத் திட்டத்தின் சீரான தன்மையைப் பாதுகாப்பதற்காகவும், ஆட்சித்துறை வசதிக்காகவும், அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு மாற்றப்பட்டது. ஷிப்பான் லால் சக்சேனா இந்தத் திருத்தத்தை சீரான தன்மை என்ற கண்ணோட்டத்தில் வரவேற்றபோதிலும், மாநிலத்திற்குள் உள்ள தொகுதிகளை வரையறுப்பது தொடர்பாக மாநில அரசுகளுடன் கலந்தாலோசிக்கப்படாதது குறித்து கவலை தெரிவித்தார்.

அரசமைப்புச் சட்டத்தில் உறுதிப்படுத்தலுக்கான தேவை

இதனைச் சரிசெய்ய, அரசமைப்புச் சட்டப் பிரிவு 82–இன் அதிகார வரம்பை மக்களவைத் தொகுதிகளோடு சுருக்க வேண்டும்; அரசமைப்புச் சட்டப் பிரிவு 170–இன் கீழ் மாநிலச் சட்டமன்றத் தொகுதிகளைப் பிரிக்கும் அதிகாரத்தைத் தனியான மாநிலத் தொகுதி மறுவரையறை ஆணையங்களிடம் ஒப்படைக்க வேண்டும். மாநிலங்களின் அதிகாரத்தில் நாடாளுமன்றம் தலையிடுவதைத் தடுக்க, அரசமைப்புச் சட்டப் பிரிவு 327, ஒன்றியப் பட்டியலின் 72வது இனம் ஆகியவற்றின் மீது முறையான வரம்புகளை விதிக்க வேண்டும்; இதன் மூலம் மாநிலப் பட்டியலின் 37வது இனத்திற்கு உரிய அதிகாரத்தை மீண்டும் வழங்க வேண்டும்.

மேலும், இந்த அமைப்புகளின் கட்டமைப்பை அரசமைப்புச் சட்டத்தில் உறுதிப்படுத்த வேண்டும்:

1. *(மக்களவைக்காக) ஒன்றிய தொகுதி மறுவரையறை ஆணையம் (Union Delimitation Commission)*
   - *தலைவர்*: உச்சநீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி.
   - *உறுப்பினர்கள்*: ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர், இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் (பதவிவழி உறுப்பினர்).
   - *நியமனம்*: பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், இந்தியத் தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய தேர்வுக்குழுவின் பரிந்துரையின் பேரில் நீதித்துறை உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
   - *அரசியல் பிரதிநிதித்துவம்*: மக்களவையின் ஆறு பெரிய கட்சிகளிலிருந்து தலா ஒருவர் வீதம் ஆறு உறுப்பினர்கள் வாக்களிக்கும் உரிமையுடன் கூடிய முழுநேர உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும்.
2. *(சட்டமன்றங்களுக்காக) மாநிலத் தொகுதி மறுவரையறை ஆணையங்கள் (State Delimitation Commissions)*
   - *தலைவர்*: உச்சநீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி அல்லது உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி.
   - *உறுப்பினர்கள்*: ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர், மாநிலத் தேர்தல் ஆணையர் (பதவிவழி உறுப்பினர்).
   - *நியமனம்*: முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய தேர்வுக் குழுவின் பரிந்துரையின் பேரில் நீதித்துறை உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
   - *அரசியல் பிரதிநிதித்துவம்*: சட்டமன்றத்தில் உள்ள ஆறு பெரிய கட்சிகளில் ஒவ்வொன்றிலிருந்தும் முறையே ஒரு சட்டமன்ற உறுப்பினர், வாக்களிக்கும் உரிமையுடன் முழு உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள். சட்டமன்றத்தில் ஆறுக்கும் குறைவான கட்சிகள் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டிருந்தால், மிக மூத்த (பதவிக்காலத்தின் அடிப்படையில்) சுயேச்சை சட்டமன்ற உறுப்பினருக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்ட பிறகு, மீதமுள்ள இடங்கள் சட்டமன்றத்தில் உள்ள அவர்களின் எண்ணிக்கை வலுவிகிதாசாரத்தைக் கொண்டிருக்கும் கட்சிகளுக்கு

ஒதுக்கப்படும். ஒருங்கிணைப்பை உறுதி செய்ய, தலைமைத் தேர்தல் ஆணையர், அனைத்து மாநிலத் தேர்தல் ஆணையர்களையும் உள்ளடக்கிய *அனைத்திந்திய தொகுதி மறுவரையறை ஒருங்கிணைப்புக் குழு (All-India Delimitation Coordination Council)* ஒன்றை அமைக்கலாம்.

பரிந்துரை 3

ஒன்றிய, மாநிலத் தொகுதி மறுவரையறை ஆணையங்களைத் தனித்தனியாக அரசமைப்புச் சட்டத்தில் உறுதிப்படுத்த அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 82, 170, 327, ஏழாவது அட்டவணையின் ஒன்றியப் பட்டியலின் 72வது இனம், மாநிலப் பட்டியலின் 37வது இனம் ஆகியவற்றைத் திருத்த வேண்டும். மக்களவையின் தொகுதி மறுவரையறை அதிகாரத்தை ஒன்றிய ஆணையத்திடமும், மாநிலச் சட்டமன்றத் தொகுதி மறுவரையறை அதிகாரத்தை தனியான மாநில ஆணையங்களிடமும் வழங்க வேண்டும். இந்த ஆணையங்கள் பல கட்சிப் பிரதிநிதித்துவம், தேர்வுக்குழு அடிப்படையிலான நியமனங்களைக் கொண்டிருப்பதை அரசமைப்புச் சட்ட அளவில் உறுதி செய்ய வேண்டும்.

VIII. பட்டியல் இனத்தவருக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளின் சுழற்சிமுறை

மக்கள்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப "இயன்றவரையிலும்" மக்களவையிலும், மாநிலச் சட்டமன்றங்களிலும் பட்டியல் இனத்தவருக்கும் பழங்குடியினருக்கும் இடங்களை ஒதுக்க வேண்டும் என்று அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 330, 332 வலியுறுத்துகின்றன. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவின் மக்கள்தொகையில் பட்டியல் சாதியினர் 16.6 விழுக்காடாகவும், பழங்குடியினர் 8.6 விழுக்காடாகவும் இருந்தனர். 2011ல், அறிவிக்கப்பட்ட பட்டியல் சாதியினர் 1208 சமூகங்களாகவும், அறிவிக்கப்பட்ட பழங்குடியினர் 705 சமூகங்களாகவும் இருந்தனர். இந்த புள்ளிவிவரங்கள் இவ்விரு பிரிவுகளுக்குள்ளும் உள்ள ஆழமான உள் பன்முகத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றன.

உள்ளாட்சி அமைப்புகளில் இடஒதுக்கீடு செய்யப்பட்ட பதவிகளையும் இடங்களையும் சுழற்சி முறையில் மாற்றுவதை அரசமைப்பு (அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 243D, 243T) கட்டாயமானதாக்கும் அல்லது அனுமதிக்கும்

அதே வேளையில், நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகளில் இத்தகைய சுழற்சி முறை குறித்து அரசமைப்பு அமைதி காக்கிறது. வரலாற்று நோக்கில், பட்டியல் இனத்தவருக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகள் மாறாமல் நிலையாகவே உள்ளன; தொகுதி மறுவரையறையின் போது "அதிக மக்கள்தொகை கொண்ட பகுதிகளுக்கு" ஏற்பச் சிறிய அளவிலான மாற்றங்கள் மட்டுமே செய்யப்பட்டன.

இது எதிர்பாராத சில சிதைவுகளை உருவாக்கியுள்ளது. பட்டியல் இனச் சமூகங்கள் ஒரே மாதிரியானவை அல்ல; அவை மாநிலத்திற்குள் மாவட்டங்களுக்கு இடையே பெருமளவில் மாறுபடுகின்றன. ஒதுக்கப்பட்ட தொகுதிகளை நீண்ட காலத்திற்கு நிலையாக வைத்திருப்பது, பட்டியல் இனச் சமூகங்களின் ஒரு சிறிய பிரிவினருக்கு மட்டுமே பயனளிக்கிறது. அருகிலுள்ள தொகுதிகளில் வாழும் மற்ற பட்டியல் இனத்தவர், இதனால் போட்டியிட முடியாமல் புறக்கணிக்கப்படுகின்றனர். எனவே, பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை – பொதுவான தொகுதி மறுவரையறையிலிருந்து தனித்து – பட்டியல் இனத்தவர் மக்கள்தொகை ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு மேல் (எ.கா. 8 விழுக்காடு) உள்ள தொகுதிகளுக்குள் சுழற்சி முறையை அறிமுகப்படுத்துவது மிகவும் நீதியான அணுகுமுறை ஆகும்.

எவ்வாறாயினும், பழங்குடியினரின் நிலை, தனித்துவம் மிக்கது. பழங்குடியினர் பெரும்பாலும் குறிப்பிட்ட நிலப்பரப்பில் குவிந்து வாழ்பவர்கள்; மேலும் ஐந்தாவது, ஆறாவது அட்டவணைகளின் கீழ் அவர்களுக்குச் சிறப்புப் பாதுகாப்புகள் உள்ளன. அவர்களின் அரசியல் குரல் என்பது அவர்களின் குறிப்பிட்ட நில, பண்பாட்டுத் தொடர்ச்சியோடு பிணைக்கப்பட்டுள்ளது. அங்கு அடிக்கடி சுழற்சி முறையைக் கொண்டு வருவது, சமூகப் பிரதிநிதித்துவத்தைச் சிதைத்துவிடும். எனவே, பட்டியல் இனத்தவர் தொகுதிகளுக்கு சுழற்சி முறையையும், பழங்குடியினர் தொகுதிகளுக்குத் நிலப்பரப்புத் தொடர்ச்சியையும் பின்பற்றும் மாறுபட்ட அணுகுமுறை தேவைப்படுகிறது.

பரிந்துரை 4

ஒவ்வொரு மாநிலத்திற்குள்ளும் பட்டியல் இனத்தவருக்கு ஒதுக்கப்பட்ட மக்களவைத் தொகுதிகளையும், தகுந்த மாவட்டத் தொகுப்புகளுக்குள் பட்டியல் இனத்தவருக்கு ஒதுக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதிகளையும் பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் மாற்றியமைக்க அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 330, 332 ஆகியவற்றைத் திருத்த வேண்டும். இது ஒதுக்கப்பட்ட தொகுதிகள் காலப்போக்கில் அனைத்துப் பகுதிகளுக்கும் சமமாகப் பரவுவதை உறுதி செய்யும்; இதன் மூலம்

அனைத்துப் பிராந்தியங்களில் உள்ள பட்டியல் இனச் சமூகத்தினரும் போட்டியிடவும் பிரதிநிதித்துவம் செய்யப்படவும் வாய்ப்பு கிடைக்கும். அதே சமயம், பழங்குடியினருக்குத் தேவையான நிலப்பரப்பு நிலைத்தன்மையையும் இது பாதுகாக்கும்.

IX. மாநிலங்களவையில் மாநிலங்களுக்கான சமமான பிரதிநிதித்துவம்

இந்தியாவின் மாநிலங்களவை அரசமைப்புச் சட்ட அளவில் *மாநிலங்களின் அவை (Council of States)* என்று அழைக்கப்பட்டாலும், மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதி ஒதுக்கீடு, அதனை மற்றுமொரு மக்களவையாகவே மாற்றியுள்ளது. கூட்டாட்சி நாட்டில், ஈரவை முறை என்பது வெறும் அலங்காரம் அல்ல; அது, *குடிமக்கள்* எண்ணிக்கையின் அடிப்படையில் கீழவையிலும், மாநிலங்கள் சமத்துவ அடிப்படையில் மேலவையிலும் பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என்கிற இரண்டு தனித்துவமான கொள்கைகளுக்கு இடையில் சமநிலையைப் பேணும் *ஓர் அமைப்பு* ஆகும். மக்கள்தொகையே இரு அவைகளின் கட்டமைப்பையும் தீர்மானிக்கும் போது, கூட்டாட்சி முறை நீர்த்துப் போகிறது.

ஒப்பீடு அளிக்கும் சான்று

இந்தியாவின் இக்கட்டமைப்பு குறைபாடு உடையது என்பதை உலகளாவிய கூட்டாட்சி முறை அனுபவங்கள் தெளிவுபடுத்துகின்றன.

- *முழுமையான சமத்துவம்*: *அமெரிக்காவில்*, மக்கள்தொகையைப் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு மாநிலமும் இரண்டு செனட்டர்களைத் தேர்ந்தெடுக்கிறது. இக்கொள்கை மிகவும் முக்கியமானது என்பதால், அந்தந்த மாநிலத்தின் அனுமதியின்றி இம்மாற்றத்தைச் செய்ய முடியாதபடி அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அலாஸ்கா (Alaska), டெலாவேர் (Delaware), வடக்கு டகோட்டா (North Dakota), தெற்கு டகோட்டா (South Dakota), வெர்மான்ட் (Vermont), வயோமிங் (Wyoming) போன்ற மிகச் சிறிய மக்கள்தொகை கொண்ட மாநிலங்கள் பிரதிநிதிகள் அவையில் (House of Representatives) முறையே ஒரு பிரதிநிதியை மட்டுமே கொண்டிருந்தாலும், செனட் அவையில் (Senate) முறையே இரண்டு இடங்களைப்

பெற்றுள்ளன. *ஆஸ்திரேலியா* (மாநிலத்திற்கு 12 செனட்டர்கள்), *பிரேசில்* (மாநிலத்திற்கு 3 செனட்டர்கள்), *சுவிட்சர்லாந்து* (முழு மாநிலத்திற்கு 2 இடங்கள், பாதி அளவு மாநிலத்திற்கு ஒரு இடம்) ஆகியவையும் இதே கொள்கையைப் பின்பற்றுகின்றன. தனது செனட் சபையை "வட்டாரப் பிரதிநிதித்துவ அவை (House of territorial representation)" என்று *ஸ்பெயின்* வரையறுத்து, மக்கள்தொகையைப் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு மாகாணத்திற்கும் நான்கு செனட்டர்களை ஒதுக்கியுள்ளது.

- *பாதுகாக்கப்பட்ட ஏற்றத்தாழ்வு*: முழுமையான சமத்துவத்தை ஏற்காத கூட்டாட்சி நாடுகள்கூட, கடுமையான பாதுகாப்புகளைக் கொண்டுள்ளன. *ஜெர்மனியின்* பண்டஸ்ராட் (Bundesrat) அவையில் (3 முதல் 6 வரை) வெவ்வேறு அளவில் வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தாலும், பெரிய மாநிலங்களின் செல்வாக்கிற்கு உச்சவரம்பு விதித்துள்ளது. *கனடா*, மாகாணங்களை விட நான்கு வட்டாரப் பிரிவுகளுக்குச் சமமான இடங்களை (தலா 24) ஒதுக்குவதன் மூலம் வட்டாரச் சமநிலையை உறுதி செய்கிறது.

இந்த ஏற்பாடுகள், மக்கள்தொகை அடிப்படையிலான பிரதிநிதித்துவம் கீழவைக்கு மட்டுமே உரியது. மேலவை என்பது, தங்களின் குரல் மக்கள்தொகை எண்ணிக்கையால் நசுக்கப்படாது என்பதைச் சிறிய மாநிலங்களுக்கு உறுதிப்படுத்தவே உருவாக்கப்பட்டுள்ளது என்கிற பொதுவான கூட்டாட்சி முறையின் கருத்து மதிப்பீட்டைக் காட்டுகின்றன.

இந்தியாவின் ஒழுங்கின்மை

இது தொடர்பாக, இந்தியா குறிப்பிடத்தக்க விதிவிலக்காக உள்ளது. *நான்காவது அட்டவணையின்* மூலம் மாநிலங்களவை இடங்கள் மக்கள்தொகை விகிதாசாரத்திலேயே ஒதுக்கப்படுகின்றன. இதன் விளைவாக "இரட்டை வலுவூட்டல்" (Double reinforcement) ஏற்படுகிறது: முதல் ஐந்து மாநிலங்கள் மக்களவையில் 46 விழுக்காடு இடங்களையும், மாநிலங்களவையில் 41 விழுக்காடு இடங்களையும் பெற்றுள்ளன; முதல் பத்து மாநிலங்கள் முறையே 70 மற்றும் 63 விழுக்காடு இடங்களைக் கொண்டுள்ளன. மாநிலங்கள், மாநிலங்களாகச் சமத்துவத்தை அனுபவிக்கும் எந்தவொரு அவையும் இந்திய நாடாளுமன்றத்தில் இல்லை. இந்த அமைப்பியல் குறைபாடே அடுத்த தொகுதி மறுவரையறை குறித்த அச்சத்திற்குக் காரணம் ஆகும்: கூட்டாட்சி சமநிலையைச் சிதைக்காமல், மக்கள்தொகை மாற்றங்களை உள்வாங்கக்கூடிய நிறுவன அளவில் சம மதிப்பு முறை இந்தியாவிடம் இல்லை.

சம மதிப்பு முறை குறித்து வல்லுநர்களின் கருத்து

அரசமைப்பு அவையிலேயே இந்த ஆபத்து குறித்து விவாதிக்கப்பட்டது. மேலவை என்பது "மக்களவையின் மற்றொரு நகலாக" மாறிவிடக்கூடாது என்பதற்காக, மாநிலத்திற்கு (மூன்று இடங்களுக்கு அதிகமில்லாமல்) சமமான பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்று *லோக்நாத் மிஸ்ரா* வாதிட்டார். மேலவை "அலகுகளின் ஆட்சிநிலப் பகுதியை" (Territory of the Unit) பிரதிநிதித்துவப்படுத்த வேண்டுமே தவிர, "எளிமையாக, வெறும் மக்களை" அல்ல என்று கே.டி. *ஷா* எச்சரித்தார். குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் முறை பாரபட்சத்திற்கும் குறுகிய அரசியல் ஆதிக்கப் போக்கிற்கும் வழிவகுக்கும் என்பதால், அதை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்று *லட்சுமிநாராயண் சாஹு* வலியுறுத்தினார்.

அடுத்தடுத்து அமைக்கப்பட்ட ஆணையங்களும் இந்தத் தவறைச் சுட்டிக்காட்டியுள்ளன:

- *ராஜமன்னார் குழு (Rajamannar Committee)*: மக்கள்தொகை அடிப்படையிலான ஒதுக்கீடு சில மாநிலங்களின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துகிறது என்று முதன்முதலில் வாதிட்டு, சமமான பிரதிநிதித்துவத்தை வழங்கப் பரிந்துரைத்தது. மாநிலங்களுக்கு பன்னிரண்டு உறுப்பினர்களைக் குடியரசுத் தலைவர் நியமிக்கும் முறையை இரத்து செய்ய வேண்டும்.
- *சர்க்காரியா ஆணையம் (Sarkaria Commission)*: கூட்டாட்சிக் கவலைகளை ஏற்றுக்கொண்டாலும், அமைப்பியல் மாற்றங்களை நிராகரித்தது.
- *பூஞ்சி ஆணையம் (Punchhi Commission)*: மக்களவையின் பெரும்பான்மைப் போக்கைக் கட்டுப்படுத்த மாநிலங்களவையில் அனைத்து மாநிலங்களுக்கும் சமமான பிரதிநிதித்துவத்தை வழங்கப் பரிந்துரைத்தது; மேலும், 2003ல் வசிப்பிடத் தகுதி முறை நீக்கப்பட்டதை விமர்சித்தது.

முன்னோக்கிய பாதை

தொகுதி மறுவரையறை வரவிருக்கும் சூழலில், இனி அமைதியாக இருக்க முடியாது. *மாநிலங்களுக்குச் சமமான பிரதிநிதித்துவ* அடிப்படையில் மாநிலங்களவையை மறுசீரமைப்பது என்பது சிறிய மாநிலங்களுக்கு வழங்கப்படும் சலுகை அல்ல; அது ஒரு நிலையான, இணக்கமான ஒன்றியத்திற்குத் தேவையான அமைப்பு முறை அவசியமாகும்.

மேலும், மாநிலங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஓர் அவைக்கு நியமனங்கள் வழியாக அல்லாமல், தேர்தல்கள் வழியாக மட்டுமே தகுதி

பெற வேண்டும். நியமனம் செய்யப்படும் 12 உறுப்பினர்களின் இருப்பு, மாநிலங்களவையின் கூட்டாட்சிப் பண்பைச் சிதைப்பதோடு, ஆட்சித்துறையின் தலையீட்டிற்கும் வழிவகுக்கிறது. நிபுணத்துவ முறையிலான ஆலோசனை தேவைப்பட்டால், அதை ஆலோசனை வழங்கும் குழுக்கள் மூலம் பெறலாமே தவிர, வாக்குரிமை கொண்ட உறுப்பினர்கள் மூலம் அல்ல.

பரிந்துரை 5

நான்காவது அட்டவணையின் கீழ் மாநிலத்திற்கு ஒரு இடம் முதல் 31 இடங்கள் வரை நிலவும் இப்போதைய ஏற்றத்தாழ்வைக் கருத்தில் கொண்டு, நடுநிலை அளவாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் சமமாக ஆறு இடங்களை ஒதுக்குவது தர்க்கநோக்கிலான, சமநிலையான தீர்வு ஆகும். இதற்கேற்ப, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 80(1)(b), 80(2), நான்காவது அட்டவணை ஆகியவற்றைத் திருத்தி:

- இப்போதுள்ள ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஆறு இடங்களை ஒதுக்க வேண்டும்;
- புதிதாக உருவாக்கப்படும் எந்தவொரு மாநிலத்திற்கும் தானாகவே ஆறு இடங்கள் வழங்கப்பட வேண்டும்;
- ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுக்கு ஒட்டுமொத்தமாக ஆறு இடங்கள் ஒதுக்கப்பட்டு, அவை சட்டமன்றம் கொண்ட பகுதிகளுக்குள் ஒன்றிய அரசால் பகிரப்பட வேண்டும்.

கூடுதலாக, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 80(1)(a), 80(3) ஆகியவற்றை நீக்கி, 12 நியமன உறுப்பினர்கள் முறையை ஒழிப்பதன் மூலம், மாநிலங்களவையை முற்றிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களின் அவையாக மாற்ற வேண்டும்.

X. மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான வசிப்பிடத் தகுதியை மீட்டெடுத்தலும் ஒன்றிய ஆட்சிநிலப் பகுதி குறைப்பாடுகளை நீக்குதலும்

மாநிலங்களவையின் கூட்டாட்சிப் பண்பு என்பது தொகுதி ஒதுக்கீட்டில் மட்டும் இல்லை; அந்த அவை பிரதிநிதித்துவப்படுத்தும் மாநிலத்திற்கும், அதன் உறுப்பினருக்கும் இடையிலான *ஆழமான பிணைப்பில்தான்*

உள்ளது. இந்த அடிப்படைக் கொள்கை 2003–ஆம் ஆண்டு, 1951–ஆம் ஆண்டு *மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (Representation of the People Act,* 1951) பிரிவு 3ல் நாடாளுமன்றம் திருத்தத்தைக் கொண்டு வந்து, கடுமையாகச் சிதைத்துவிட்டது. அதன்படி, ஒரு வேட்பாளர் "தொடர்புடைய மாநிலம் அல்லது ஆட்சிநிலப் பகுதியில்" வாக்காளராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்பட்டு, "இந்தியாவில் எங்கேனும்" வாக்காளராக இருந்தால் போதும் என மாற்றப்பட்டது. இதன் மூலம் வசிப்பிடத் தகுதி என்பது முற்றிலுமாக அகற்றப்பட்டது. இது *மாநிலங்களின் அவை* (Council of States) என்ற மாநிலங்களவையின் அடிப்படைக் கருத்தையே கேள்விக்குறி ஆக்கியுள்ளது.

இதன் விளைவாக, மாநிலத்தின் சூழல்கள் குறித்து எவ்விதப் புரிதலும் இல்லாத வேட்பாளர்கள், தங்களுக்குச் சம்பந்தமே இல்லாத மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவது வாடிக்கையாகிவிட்டது. மாநிலங்களின் பிரதிநித்துவத்திற்கான தளமாக இருந்த மாநிலங்களவை, இன்று அரசியல் கட்சிகள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு இடமளிக்கும் புகலிடமாக மாறியுள்ளது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள், தாங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் மாநிலத்தின் சமூக, பண்பாட்டு, மொழி, பொருளாதார நலன்களைக் காட்டிலும், தங்களை நியமித்த தேசிய கட்சியின் தலைமைக்கே விசுவாசமாக இருக்கிறார்கள்.

நீதித்துறையின் மதிப்பீடும் அரசமைப்புச் சட்டச் செம்பொருளும்

குல்தீப் நாயர் எதிர் இந்திய ஒன்றியம் (2006)[9] வழக்கில், இந்தத் திருத்தத்தை உச்சநீதிமன்றம் உறுதி செய்தது. வசிப்பிடத் தகுதி/வாழிடத் தகுதி என்பது அரசமைப்புச் சட்டப் பிரிவு 84(c)–இன் கீழ் வெறும் சட்டப்பூர்வத் தகுதியே தவிர, அரசமைப்புச் சட்டப் பிரிவு 80(4)–இன் கீழ் அரசமைப்புச் சட்ட முன்நிபந்தனை அல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. மேலும், "வசிப்பிடத் தகுதியை கூட்டாட்சி முறையிலிருந்து விலக்கக்கக்கூடிய அம்சம் (incident of federalism)" என்றும் குறிப்பிட்டது. இந்த நீதித்துறை விளக்கம், சட்டப்படி செல்லுபடியானாலும், மாநிலப் பிரதிநிதித்துவத்தை மாநிலங்களவையின் பிரிக்க முடியாத அரசமைப்புப் பண்பாகப் பார்க்காமல், சாதாரண சட்டக் கூறாகக் கருதுகிறது.

பூஞ்சி ஆணையம் குறிப்பிட்டது போல, பிரதிநிதித்துவம் என்பது ஒருபகுதியோடு தொடர்பு கொண்டது. அந்தப் பகுதியின் சூழல்களோடு

---

[9] (2006) 7 SCC 1.

அறிமுகம் இருப்பதுடன் பிணைக்கப்பட்டது. எனவே, 1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 3ஐ அதன் பழைய வடிவத்திலேயே மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று அந்த ஆணையம் வலுவாகப் பரிந்துரைத்தது.

ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகள் குறைப்பாடு: அரசமைப்புச் சட்டப் பிரிவு 80(5)

ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுக்கும் இதே போன்ற நலிவுறும் தன்மை உள்ளது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 80(5)–இன்படி, இந்தப் பகுதிகளின் பிரதிநிதிகள் நாடாளுமன்றம் சட்டத்தால் தீர்மானிக்கும் முறையில் "*தெரிவுசெய்யப்பட*" வேண்டும். அரசமைப்புச் சட்டப் பிரிவு 80(4) மாநில சட்டமன்றங்கள் மூலம் தேர்தலை வலியுறுத்துகிறது; ஆனால், இந்த முறையிலிருந்து விலகி, அரசமைப்புச் சட்டப் பிரிவு 80(5)–இல் தேர்தல், நியமனம் செய்தல், அல்லது இவை இரண்டும் கலந்த முறை என எதை வேண்டுமானாலும் சட்டத்தின் மூலம் தீர்மானிக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றத்திடமே விட்டுவிட்டது.

இப்போது, *மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம்*, 1950–இன் பிரிவு 27A–இன் கீழ், தில்லி, புதுச்சேரி, ஜம்மு காஷ்மீர் போன்ற சட்டமன்றம் கொண்ட ஆட்சிநிலப் பகுதிகளில் மறைமுகத் தேர்தல் நடைமுறையில் உள்ளது (சட்டமன்றங்கள் இல்லாத ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுக்கு மக்களவையில் உறுப்பினர் இல்லை). இருப்பினும், அரசமைப்பில் "தெரிவுசெய்தல்" என்ற விரிவான சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதால், நாடாளுமன்றம் சாதாரணப் பெரும்பான்மை மூலம் சட்டத்தைத் திருத்தி, தேர்தலுக்குப் பதிலாக '*நியமன முறையை*' கொண்டு வர முடியும். வசிப்பிடத் தகுதி நீக்கப்பட்டுள்ள சூழலில், இத்தகைய திருத்தம் வந்தால், அந்த வட்டாரத்தைச் சாராத ஒருவரை, ஒன்றிய ஆட்சிநிலப் பகுதியின் பிரதிநிதியாக மையம் நியமனம் செய்யும் அபாயம் உள்ளது.

அரசமைப்புச் சட்டத்தில் உறுதிப்படுத்த வேண்டிய தேவை

இந்தக் காரணங்களுக்காக, மக்கள் *பிரதிநிதித்துவச் சட்டம்*, 1951–இன் பிரிவு 3ஐ அதன் அசல் சொற்றொடரான "*அந்த மாநிலம் அல்லது ஆட்சிநிலப் பகுதியில்*" என்பதை மீட்டெடுப்பது போதுமான பாதுகாப்பு அல்ல. இது எதிர்காலத்தில் சட்டஅளவில் திருத்தம் செய்யும் பாதிப்புக்கு ஆளாகும் வாய்ப்பு உள்ளது. மாநிலங்களவையின் கூட்டாட்சிப் பண்பை நிலையாகப் பாதுகாக்க, உறுப்பினர்களின் வசிப்பிடத் தகுதி, ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுக்கான தேர்தல் முறை ஆகிய இரண்டையும் அரசமைப்புச் சட்டமாக மாற்ற வேண்டும்.

பரிந்துரை 6

1. அரசமைப்புச் சட்டப் பிரிவு 80(4)ஐ பின்வருமாறு திருத்த வேண்டும்:
"மாநிலங்களவையில் ஒவ்வொரு மாநிலத்தின் பிரதிநிதிகளும் *அந்த மாநிலத்தின் குடியிருப்பாளராக இருக்க வேண்டும்.* அவர்கள் அந்த மாநிலச் சட்டமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் ஒற்றை மாற்றத்தக்க வாக்கு மூலம் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின்படி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்."

2. அரசமைப்புச் சட்டப் பிரிவு 80(5)ஐ பின்வருமாறு திருத்த வேண்டும்:
"நான்காம் அட்டவணையில் பட்டியலிடப்பட்ட *ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளின் பிரதிநிதிகள் அந்த ஆட்சிநிலப் பகுதியின் குடியிருப்பாளராக இருக்க வேண்டும்.* அரசமைப்புச் சட்டப் பிரிவு 80(4)ல் சொல்லப்பட்டுள்ள முறையிலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்."

XI. முடிவுரை

2026க்குப் பிந்தைய தொகுதி மறுவரையறை நடைமுறை, இந்தியாவில் ஆழமான கவலைகளைத் தோற்றுவித்துள்ளது. இதற்கு முக்கியமான அரசமைப்புச் சட்டக் காரணங்கள் உள்ளன.

முதலாவதாக, தொகுதி மறுவரையறை ஆணையத்தின் ஆணைகள் சட்ட மதிப்பு பெற்று பெரும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன; ஆனால் அத்தகைய ஆணைகள், ஆட்சித்துறை அல்லது சட்டமன்றக் கண்காணிப்பு இல்லாத, நீதித்துறை ஆய்வுக்கு உட்படாத, தேர்ந்தெடுக்கப்படாத அமைப்பு ஒன்றால் எடுக்கப்படுகின்றன. இது, கட்சி நலன் சார்ந்த மோசடிகளைத் தடுப்பதற்காக வடிவமைக்கப்பட்ட போதிலும், ஜனநாயகப் பொறுப்புடைமை குறித்த நியாயமான கவலைகளை எழுப்புகிறது.

இரண்டாவதாக, இந்திய மாநிலங்களுக்கு இடையே, பிறப்புவிகிதம் பெருமளவு மாறுபடுகிறது. இத்தகைய சூழலில் தொகுதிகளை முடக்கி வைத்துள்ள நிலையை நீக்கினால், அது கூட்டாட்சி சமநிலையைச் சிதைத்துவிடும். மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தாத மாநிலங்களுக்குப் பரிசு அளிப்பதாகவும், தேசிய இலக்குகளைச் சிறப்பாக அடைந்த மாநிலங்களைத் தண்டிப்பதாகவும் அமையும். ஒவ்வொரு பத்து ஆண்டுக்கு ஒருமுறை மக்கள்தொகை கணக்கெடுப்பிற்குப் பிறகும்

அமெரிக்கப் பிரதிநிதிகள் அவையில் இடங்கள் மறுபங்கீடு செய்யப்பட்டாலும், அமெரிக்க மாநிலங்கள் முழுவதும் மொத்த கருவுறுதல் விகிதங்கள் பரவலாக ஒத்திருப்பதால், இந்த மறுபங்கீடு கருவுறுதல் விகித வேறுபாடுகளை விட, மாநிலங்களுக்கு இடையேயான இடம்பெயர்வுகளால் உந்தப்பட்டு, மிகச் சிறிய மாற்றங்களை மட்டுமே ஏற்படுத்துகிறது. 2020 மக்கள்தொகை கணக்கெடுப்பிற்குப் பிறகு, அமெரிக்காவில் உள்ள 37 மாநிலங்களில் அவற்றின் பிரதிநிதித்துவத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை; ஒரு மாநிலம் இரண்டு இடங்களைப் பெற்றது. ஐந்து மாநிலங்கள் தலா ஒரு இடத்தைப் பெற்றன. மேலும் ஏழு மாநிலங்கள் தலா ஒரு இடத்தை இழந்தன. எனவே, இந்த செயல்முறை அரசியல் அளவில் நிலைத்தன்மையைக் குலைக்கவில்லை.

மூன்றாவதாக, இந்தியாவில் சமநிலைப்படுத்தும் கூட்டாட்சி அமைப்புகள் வலுவாக இல்லை. அமெரிக்காவில் செனட் சபையில் அனைத்து மாநிலங்களுக்கும், மக்கள்தொகையைப் பொருட்படுத்தாமல் மாநிலத்திற்கு இரண்டு இடங்கள் என்கிற சமமான பிரதிநிதித்துவம் இருப்பதால், மக்களவையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் அங்குச் சமன் செய்யப்படுகின்றன. ஆனால், இந்தியாவில் மாநிலங்களவை, நான்காவது அட்டவணை வழியாக மக்கள்தொகை அடிப்படையிலேயே இருப்பதால், மக்களவையின் மற்றுமொரு நகல் போன்றே உள்ளது. இந்தக் குறைபாடு, 2003-இல் வசிப்பிடத் தகுதி நீக்கப்பட்டதனுடன் இணைந்து, மாநிலத்திற்கும் அதன் பிரதிநிதி உறுப்பினர்களுக்கும் இடையிலான இயற்கைப் பிணைப்பை மேலும் நலிவடையச் செய்துள்ளது.

முதிர்ந்த கூட்டாட்சிகளிலிருந்து இந்தியாவைப் பிரிக்கும் பல பண்புக்கூறுகள், பிரிவினை குறித்த கவலைகள், 14 மாகாணங்களையும் 552 சுதேச அரசுகளையும் ஒருங்கிணைப்பது, ஆரம்பகால ஆண்டுகளில் நீடித்த ஒற்றைக் கட்சி ஆதிக்கம் ஆகிய இந்தியாவின் தொடக்கக் கால நிலைமைகளில் வேரூன்றியுள்ளன. இன்றைய மொழிவழி மாநிலங்கள், மெய்யான பல கட்சி அமைப்பு 1950-இல் இருந்திருந்தால், பிரதிநிதித்துவம், தொகுதி மறுவரையறை உட்பட இந்தியாவின் அரசமைப்புச் சட்டக் கட்டமைப்பு கிட்டத்தட்ட உறுதியாக மாறுபட்ட வழிகளில் வளர்ந்திருக்கும்.

இந்தக் கட்டுரையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் அனைத்தும் "*பொறுப்புடைமையுடன் கூடிய கூட்டாட்சி சமன்நிலை (accountable federal equilibrium)*" என்ற ஒரே கொள்கையின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன. மாநிலங்களுக்கு இடையேயான தொகுதி ஒதுக்கீட்டு முடக்கத்தை 2126 வரை நீட்டித்து, அதனை அரசமைப்புச் சட்டத் தீர்வாக அறிவிக்க வேண்டும். அதே சமயம், அரசியல்மயப்பாட்டைத் தவிர்த்து, தொகுதி மறுவரையறை செயல்முறை, நாடாளுமன்றக்

கண்காணிப்பு, ஆணையத்தின் விளக்கமான பதில்கள், வரையறுக்கப்பட்ட அளவிலான நீதித்துறை சீராய்வு ஆகியவற்றின் மூலம் ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும். கூட்டாட்சிச் சமநிலை மேலும், தனித்த ஒன்றிய, மாநில தொகுதி மறுவரையறை ஆணையங்கள், அரசமைப்பு சட்டத்தால் கட்டாயமாக்கும் அவற்றுக்கிடையிலான இணைப்பு, மெய்யான பல கட்சிப் பங்கேற்பு ஆகிய நிறுவன அளவிலான சீர்திருத்தத்தைக் கோருகின்றது.

கூடுதல் சீர்திருத்தங்களாக, வேரூன்றியுள்ள சமத்துவமின்மையைச் சரிசெய்வதற்காகப் பட்டியல் இனத்தவருக்கான தொகுதிச் சுழற்சி முறை, அதே வேளையில் பழங்குடியினருக்கான நிலப்பரப்புத் தொடர்ச்சி ஆகியவை அவசியம். மாநிலங்களவையில் அனைத்து மாநிலங்களுக்கும் சமமான பிரதிநிதித்துவம் என்கிற கோட்பாட்டின் அடிப்படையில் மறுகட்டமைப்பது, நியமன முறையை ஒழித்தல், வசிப்பிடத் தகுதியை மீண்டும் கொண்டு வருதல், ஒன்றிய ஆட்சிநிலப் பகுதியின் குறைபாடுகளை நீக்குதல் ஆகியவை இறுதியாக மெய்யான "மாநிலங்களின் அவையை" மீட்டெடுக்கும்.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது, இந்த சீர்திருத்தங்கள், மறுவரையறைச் செயல்முறையில் சமநிலை, கட்டுப்பாடு, நம்பிக்கை, அரசமைப்புச் சட்ட ஏற்புடைமை ஆகியவற்றை ஏற்படுத்தி, இந்தியாவின் கூட்டாட்சி முறையை வலுப்படுத்தும்.

இணைப்பு I

1971–ஆம் ஆண்டு 543 மக்களவை தொகுதிகள் பகிர்வுக்கும், 2025–ஆம் ஆண்டின் கணிக்கப்பட்ட மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதிகளுக்கும் இடையிலான ஒப்பீடு

வரிசை எண்	மாநிலம்/ஒன்றிய ஆட்சிநிலப் பகுதி	1971ல் இருந்த எம்பி தொகுதிகள்	2025 மக்கள்தொகையின் படி கிடைக்கும் தொகுதிகள்	உயர்வு (+) அல்லது குறைவு (–)
A: 2025–ஆம் ஆண்டின் கணிக்கப்பட்ட மக்கள்தொகை அடிப்படையில் அதிக தொகுதிகள் பெறும் மாநிலங்கள்				
1	உத்திரபிரதேசம்	80	92	12
2	பிகார்	40	50	10
3	ராஜஸ்தான்	25	31	6
4	மத்தியபிரதேசம்	29	34	5
5	குஜராத்	26	28	2
6	ஹரியாணா	10	12	2
7	மகாராஷ்டிரா	48	49	1
8	ஜார்கண்ட்	14	15	1
9	டெல்லி	7	8	1
	மொத்தம் – A	279	319	40
B: 2025–ஆம் ஆண்டின் கணிக்கப்பட்ட மக்கள்தொகை அடிப்படையில் தொகுதிகளை இழக்கும் மாநிலங்கள்				
1	தமிழ்நாடு	39	29	–10
2	கேரளா	20	14	–6
3	ஆந்திரபிரதேசம்	25	20	–5
4	மேற்கு வங்காளம்	42	38	–4
5	ஒடிசா	21	18	–3
6	கர்நாடகா	28	26	–2
7	தெலுங்கானா	17	15	–2
8	பஞ்சாப்	13	12	–1
9	உத்தரகாண்ட்	5	4	–1
10	இமாச்சலப்பிரதேசம்	4	3	–1
11	மணிப்பூர்	2	1	–1
12	மேகலாயா	2	1	–1
13	கோவா	2	1	–1
14	திரிபுரா	2	1	–1
15	அருணாச்சலப்பிரதேசம்	2	1	–1
	மொத்தம் – B	224	184	–40

வரிசை எண்	மாநிலம்/ஒன்றிய ஆட்சிநிலப் பகுதி	1971ல் இருந்த எம்பி தொகுதிகள்	2025 மக்கள்தொகையின் படி கிடைக்கும் தொகுதிகள்	உயர்வு (+) அல்லது குறைவு (−)
C: 2025−ஆம் ஆண்டின் கணிக்கப்பட்ட மக்கள்தொகை அடிப்படையில் தொகுதிகளைப் பெறவோ இழக்கவோ செய்யாத மாநிலங்கள்/ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகள்				
1	அசாம்	14	14	0
2	சட்டீஸ்கர்	11	11	0
3	ஜம்மு & காஷ்மீர்	5	5	0
4	தாத்ரா & நகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ	2	2	0
5	சண்டிகர்	1	1	0
6	அந்தமான் & நிக்கோபர் தீவுகள்	1	1	0
7	லடாக்	1	1	0
8	இலட்சத்தீவு	1	1	0
9	மிசோரம்	1	1	0
10	நாகாலந்து	1	1	0
11	புதுச்சேரி	1	1	0
12	சிக்கிம்	1	1	0
	மொத்தம் − C	40	40	0
ஒட்டுமொத்தம் (A + B + C)		543	543	0

ஆதாரம்: இந்தக் கணக்கீடுகள், ஆதார் நிறைவு அறிக்கை (UIDAI) மூலமாகப் பெறப்பட்ட 2025−ஆம் ஆண்டிற்கான மாநிலவாரியான உத்தேச மக்கள்தொகையின் அடிப்படையில் அமைந்துள்ளன: https://uidai.gov.in/images/AadhaarSaturationReport.pdf

இணைப்பு II

2025–ஆம் ஆண்டின் கணிக்கப்பட்ட மக்கள் தொகையின் அடிப்படையில் தொகுதிகளின் ஒதுக்கீடும் மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கையை 848ஆக உயர்த்துதலும்

வரிசை எண்	மாநிலம்/ ஒன்றிய ஆட்சிநிலப் பகுதி	1971ல் உள்ள மக்களவை தொகுதிகள்	1971ல் ஒப்பிட்டு அளவிலான மதிப்பு [Column (3) / 543 * 100]	2025ல் மக்களை தொகுதிகள் (கணிப்பு)	2025ல் ஒப்பிட்டு அளவிலான மதிப்பு [Column (5) / 848 * 100]	1971 மக்கள் தொகை கணக்கு எடுப்பின்படி ஒப்பீட்டு மதிப்பின் அடிப்படையில் தொகுதிகள் [848 * Column(4)]
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
A: தொகுதிகளின் விழுக்காடு அதிகரிக்கும் மாநிலங்கள்						
1	உத்திரபிரதேசம்	80	14.73	143	16.86	125
2	மகாராஷ்டிரா	48	8.84	76	8.96	75
3	பிகார்	40	7.37	79	9.32	62
4	மத்தியபிரதேசம்	29	5.34	52	6.13	45
5	குஜராத்	26	4.79	43	5.07	41
6	ராஜஸ்தான்	25	4.60	50	5.90	39
7	ஜார்கண்ட்	14	2.58	24	2.83	22
8	சட்டீஸ்கர்	11	2.03	19	2.24	17
9	ஹரியாணா	10	1.84	18	2.12	16
10	டெல்லி	7	1.29	12	1.42	11
11	ஜம்மு & கஷ்மீர்	5	0.92	10	1.18	8
12	லடாக்	1	0.18	2	0.24	2
	Total – A	296	54.51	528	62.26	462
B: தொகுதிகளின் விழுக்காடு குறையும் மாநிலங்கள்						
1	மேற்கு வங்காளம்	42	7.73	60	7.08	66
2	தமிழ்நாடு	39	7.18	49	5.78	61
3	கர்நாடகா	28	5.16	41	4.83	44
4	ஆந்திரபிரதேசம்	25	4.60	32	3.77	39
5	ஒடிசா	21	3.87	28	3.30	33
6	கேரளா	20	3.68	20	2.36	31
7	தெலுங்கானா	17	3.13	22	2.59	27
8	அசாம்	14	2.58	21	2.48	22
9	பஞ்சாப்	13	2.39	18	2.12	20

வரிசை எண்	மாநிலம்/ ஒன்றிய ஆட்சிநிலப் பகுதி	1971ல் உள்ள மக்களவை தொகுதிகள்	1971ல் ஒப்பிட்டு அளவிலான மதிப்பு [Column (3) / 543 * 100]	2025ல் மக்களை தொகுதிகள் (கணிப்பு)	2025ல் ஒப்பிட்டு அளவிலான மதிப்பு [Column (5) / 848 * 100]	1971 மக்கள் தொகை கணக்கு எடுப்பின்படி ஒப்பீட்டு மதிப்பின் அடிப்படையில் தொகுதிகள் [848 * Column(4)]
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
10	உத்திரகாண்ட்	5	0.92	7	0.83	8
11	இமாச்சலப் பிரதேசம்	4	0.74	4	0.47	6
12	அருணாச்சலப் பிரதேசம்	2	0.37	2	0.24	3
13	தாத்ரா & நகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ	2	0.37	1	0.12	3
14	கோவா	2	0.37	2	0.24	3
15	மணிப்பூர்	2	0.37	2	0.24	3
16	மேகாலயா	2	0.37	2	0.24	3
17	திரிபுரா	2	0.37	2	0.24	3
18	அந்தமான் & நிக்கோபர் தீவுகள்	1	0.18	1	0.12	2
19	சண்டிகர்	1	0.18	1	0.12	2
20	இலட்சதீவு	1	0.18	1	0.12	2
21	மிசோரம்	1	0.18	1	0.12	2
22	நாகாலந்து	1	0.18	1	0.12	2
23	புதுச்சேரி	1	0.18	1	0.12	2
24	சிக்கிம்	1	0.18	1	0.12	2
	மொத்தம் – B	247	45.49	320	37.74	386
	ஒட்டுமொத்தம் (A + B)	543	100	848	100	848

ஆதாரம்: இந்தக் கணக்கீடுகள், ஆதார் நிறைவு அறிக்கை (UIDAI) மூலமாகப் பெறப்பட்ட 2025–ஆம் ஆண்டிற்கான மாநில வாரியான உத்தேச மக்கள்தொகையின் அடிப்படையில் அமைந்துள்ளன: https://uidai.gov.in/images/AadhaarSaturationReport.pdf

இணைப்பு III

ஜப்பான் முறை "இணை கலவை தேர்தல் முறை" (இந்தியாவுக்குக் கையாளுதல்)

1. **அடிப்படைக் கருத்து**

   இந்த இணை கலவை முறை (Parallel Mixed System) என்பது பின்வரும் இரண்டு தேர்தல் முறைகளின் இணைப்பு ஆகும்:

   - ஒற்றை உறுப்பினர் தொகுதிகளில் நடக்கும் *முதலிடம் பெறுபவரே வெற்றியாளர்* என்னும் தேர்தல் முறை.
   - *கட்சிப் பட்டியலை அடிப்படையாகக் கொண்ட "விகிதாசார பிரதிநிதித்துவ"* தேர்தல் முறை.

   இவை இரண்டும் ஒருங்கே அக்கம்பக்கமாகச் செயல்படுகின்றன. இந்த முறை பிரதிநிதிகள் அவைக்கு ஜப்பான் பயன்படுத்துகிறது; இதையே இந்திய மக்களவைக்கும் பயன்படுத்த முடியும்.

2. **இந்த முறையின் கீழ் மக்களவை அமைப்பு**

   - மொத்த இடங்கள்: 825
   - முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறை இடங்கள்: 550
   - விகிதாசார முறை இடங்கள்: 275

   ஒவ்வொரு வாக்காளரும் இரண்டு வாக்குகளை அளிப்பார்கள்:

   1. வேட்பாளர் வாக்கு: தொகுதியில் போட்டியிடும் முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறைக்கு.
   2. கட்சி வாக்கு: மாநில அளவிலான விகிதாசாரப் பட்டியல் முறைக்கு.

3. **550 முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறையிலான தொகுதிகள் எவ்வாறு செயல்படும்?**

   இப்போதுள்ள முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறையில் எந்த மாற்றமும் இருக்காது.

   - இந்தியா 550 ஒற்றை உறுப்பினர் மக்களவைத் தொகுதிகளாகப் பிரிக்கப்படும்.
   - ஒவ்வொரு தொகுதியிலும்,
     - அதிக வாக்குகள் பெறும் வேட்பாளர் வெற்றி பெறுவார்.
     - மற்ற வாக்குகள் கணக்கில் கொள்ளப்படாது.

- இம்முறையானது,
  - வேட்பாளருக்கும் தொகுதிக்கும் இடையிலான இணைப்பைப் பாதுகாக்கிறது.
  - வழக்கமான தேர்தல் வழிமுறைகளை உறுதி செய்கிறது.
  - அரசாங்க நிலைத்தன்மையையும் உறுதி செய்கிறது.

4. 275 விகிதாசார முறை தொகுதிகள் எவ்வாறு செயல்படும்?

(அ) மாநிலங்களுக்கான ஒதுக்கீடு

- முதலில் இந்த இடங்கள் மாநிலங்களுக்கு இடையே பிரிக்கப்படும்.
- இது மாநிலங்களின் இப்போதைய முக்கியத்துவத்தைப் பாதுகாக்கும் வகையிலோ அல்லது (கூட்டாட்சி முறையின் சமநிலைக்காக) அரசமைப்புச் சட்ட அளவில் தொகுதி மறுவரையறை முடக்கக் கொள்கையின் அடிப்படையிலோ அமையும்.

(ஆ) மாநிலத்திற்குள் கட்சிப் பட்டியல்

- வாக்காளர்கள் தனியாக ஒரு கட்சிக்கு வாக்கு அளிக்கிறார்கள்
- ஒவ்வொரு மாநிலத்திலும் வாக்கு விகிதத்தின் அடிப்படையில் கட்சிகளுக்கு விகிதாச்சாரப்படி இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.
- ஒதுக்கீட்டிற்கு பின்வரும் முறையைப் பயன்படுத்தலாம்.
  - (ஜப்பானில் உள்ளதைப் போன்ற) 'டி–ஹாண்ட்' (D'Hondt) அல்லது
  - (சிறிய கட்சிகளுக்குச் சாதகமான) 'செயின்ட்–லாகு' (Sainte–Lague) முறை.

உதாரணம்: 40 நேரடித் தேர்தல் தொகுதிகளையும் 20 விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தொகுதிகளையும் கொண்ட ஒரு மாநிலத்தில், முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறையின் கீழ் கட்சிகள் A, B, C மற்றும் D முறையே 29, 10, 1 மற்றும் பூஜ்ஜிய இடங்களை வென்றன என்று வைத்துக்கொள்வோம்.

கட்சி	கட்சி வாக்கு %	முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறையில் தொகுதிகள்	விகிதாசார முறை தொகுதிகள்	மொத்த இடங்கள்
கட்சி A	45%	29	9	38
கட்சி B	35%	10	7	17
கட்சி C	15%	1	3	4
கட்சி D	5%	0	1	1

- முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறையில் ஒரு இடத்தில் கூட வெல்ல முடியாத ஒரு கட்சி கூட, கட்சி வாக்குகளைப் பெற்றிருந்தால் விகிதாசார முறையில் நாடாளுமன்றத்திற்குள் நுழைய முடியும்.
- விகிதாசாரப் பிரதிநிதித்துவ இடங்கள், முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறை காரணமாக ஏற்படும் சமநிலையற்ற விநியோகத்தைச் சரிசெய்கின்றன.

5. இந்தியாவுக்கு அரசமைப்புச் சட்ட அளவில் இந்தக் கலவை முறை ஏன் சிறந்தது

- இப்போதைய முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறையில் குறைந்த வாக்கு விழுக்காட்டுடன் ஒரு கட்சி அதிக தொகுதிகளைக் கைப்பற்றும் நிலை உள்ளது. விகிதாசார முறை வாக்கு விழுக்காட்டிற்கு *உரியப் பிரதிநிதித்துவத்தை* வழங்கும். "வாக்குகள் வீணாவதைக்" குறைக்கும்.
- தொகுதி பிரதிநிதித்துவத்தையும், வழக்கமான தேர்தல் முறையையும் பாதுகாக்கிறது. இந்தியாவின் இப்போதைய தேர்தல் முறையில் குறைந்த அளவு மாற்றங்களையே செய்கிறது.
- முக்கிய கட்சிகள், முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறை, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை ஆகிய இரண்டு நிலைகளாலும் தொடர்ந்து பயனடைகின்றன. கூட்டணிப் பிளவுபடுதல் கட்டுப்படுத்தப்படுகிறது.
- ஜப்பான், நேர்மையையும் ஆளுகைத் திறனையும் சமநிலைப்படுத்துவதற்காகவே இந்தக் கலவை முறையைத் தேர்ந்தெடுத்தது.

சுருக்கமாகச் சொன்னால், ஜப்பான் வழி கலவை முறை என்பது இந்தியாவின் இப்போதைய முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறையைச் சிதைக்காமல், வெறும் எண்ணிக்கை குறித்த விவகாரமாக அல்லாமல், வாக்குகளையும் கூட்டாட்சி முறையின் சமநிலையையும் பேணிக் காத்து மக்களாட்சி முறையை உறுதி செய்யும், கூடுதலாக விகிதாசார முறை என்னும் நீதியைச் சேர்க்கும் ஒரு வழியாகும். மக்களவை விரிவுபடுத்தப்பட்டால், கூடுதல் இடங்களை முதலிடம் பெறுபவரே வெற்றியாளர் என்னும் முறையில் நிரப்பாமல், இந்த விகிதாசார முறையில் நிரப்ப வேண்டும்.

சான்று நூல்கள்

1. *Constituent Assembly Debates*, vol 7 (6th reprint, Lok Sabha Secretariat 2014) January 3, 4, 6, 1949; *Constituent Assembly Debates*, vol 10 (6th reprint, Lok Sabha Secretariat 2014) October 1949.
2. PV Rajamannar, A Lakshmanaswami Mudaliar, and P Chandra Reddy, *Report of the Centre–State Relations Inquiry Committee* (Government of Tamil Nadu 1971) Chapter 12.
3. RS Sarkaria, B Sivaraman, and SR Sen, *Commission on Centre–State Relations*, part 1 (Ministry of Home Affairs 1988) Chapter 2, paras 2.26.22–2.26.25.
4. Madan Mohan Punchhi and others, *Commission on Centre–State Relations: Constitutional Governance and the Management of Centre–State Relations*, vol 2 (Government of India 2010) Chapter 7.
5. *National Family Health Survey (NFHS–5), 2019–21* (Ministry of Health and Family Welfare, Government of India 2022).
6. *Sample Registration System Statistical Report 2023* (Office of the Registrar General & Census Commissioner 2023) 85.
7. Natalia V Bhattacharjee and others, 'Global Fertility in 204 countries and territories, 1950–2021, with forecasts to 2100: a comprehensive demographic analysis for the Global Burden of Disease Study 2021' (2024) 403 Lancet 2057, 2069.
8. R Rangarajan, 'Understanding the delimitation exercise | Explained' (*The Hindu* February 7, 2024) accessed January 25, 2026.
9. *World Population Prospects 2024: Summary of Results* (United Nations 2024) 61.
10. The Constitution of the United States 1787, Article I(3).
11. Commonwealth of Australia Constitution Act 1900, Section 7.
12. Basic Law for the Federal Republic of Germany 1949, Article 51(2).
13. The Spanish Constitution 1978, Article 69(2).
14. Canadian Constitution Act 1867, Section 22.
15. Constitution of the Federative Republic of Brazil 1988, Article 46.
16. Federal Constitution of the Swiss Confederation 1999, Article 150.

இயல் 7

தேர்தல்கள்

"தேர்தல் இயந்திரம் குறைபாடுடையதாகவோ, திறமையற்றதாகவோ அல்லது யாருடைய நேர்மையின் மீது நம்பிக்கை வைக்க முடியாதோ, அத்தகைய நபர்களால் இயக்கப்பட்டால், மக்களாட்சி அதன் மூலத்திலேயே நஞ்சூட்டப்பட்டதாகிவிடும்."

– ஹிருதய நாத் குன்ஸ்ரு,
அரசமைப்புச் சட்ட அவை விவாதங்கள் (1949)[1]

I. அறிமுகம்

தேர்தல்கள் என்பவை நாடாளுமன்ற மக்களாட்சி முறையின் அடிப்படைச் செயல்பாடு ஆகும்; அவை மக்களின் விருப்பத்தைச் சட்டமன்ற அதிகாரமாக மாற்றுகின்றன. ஆயினும், இந்தச் செயல்முறையின் நம்பகத்தன்மை, தேர்தல் நடுவரின் அசைக்க முடியாத நடுநிலைமையைப் பொறுத்தே அமைகிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவு (உறுப்பு/சரத்து) 324–இன் கீழான இந்தியாவின் இப்போதைய அமைப்புநிலை, மூன்று கட்டமைப்பு அளவிலான பாதுகாப்புக் குறைபாடுகளைக் கொண்டுள்ளது.

முதலாவதாக, அப்போது இருந்த ஒன்றிய அரசாங்கமே நியமிக்கும் நிறுவனம் ஒன்று, அடுத்து வரும் அரசாங்கத்தின் இருப்பையும் ஆட்சியையும் தீர்மானிக்கும் போட்டிகளில், நடுநிலையான நடுவராகச் செயல்படும் என்று கருத முடியுமா? இரண்டாவதாக, முழுமையாக ஒன்றிய அளவிலான நடைமுறைகள் மூலம் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு, மாநிலத் தேர்தல்கள் மீது மிகையான செல்வாக்கைப்

[1] *Constituent Assembly Debates*, vol.8 (6th reprint, Lok Sabha Secretariat 2014), 923, June 16, 1949.

பெற்றிருக்காதா? இது, மாநில அரசாங்கங்களின் ஜனநாயக உருவாக்கத்தை வடிவமைப்பதில் – மறைமுகமாகவே இருந்தாலும் கணிசமான அளவில் – ஒன்றிய ஆட்சித்துறையின் தலையீட்டுக்கு வழிவகுக்காதா? மூன்றாவதாக, இது, ஒற்றை மத்திய அதிகார அமைப்பின் நடுநிலைமை, நம்பகத்தன்மை அல்லது நிர்வாகத் திறனில் ஏற்படும் எந்தவொரு சரிவும், ஒன்றிய – மாநில ஆகிய இருநிலைகளிலும், நாடு முழுவதிலும் தேர்தல்களை உடனடியாகப் பாதிக்கும் ஓர் ஒற்றை–புள்ளித் தோல்வியின் அபாயத்தைத் தோற்றுவிக்காதா?

இந்தக் கவலைகள் புதியவை அல்ல. இவை 1949 ஜூன் மாதம் அரசமைப்பு அவையிலேயே வெளிப்படுத்தப்பட்டன. வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 289 (இப்போது அரசமைப்புச் சட்டப் பிரிவு 324) மீதான விவாதங்களின் போது, பி.ஆர்.அம்பேத்கர், தேர்தல் ஆணையத்தின் சுதந்திரத்தை உறுதி செய்வது "இந்த அவைக்கு பெரும் தலைவலியைத் தரப்போகிறது" என்று வெளிப்படையாக ஒப்புக்கொண்டார். "தலைமைத் தேர்தல் ஆணையர் அல்லது பிற தேர்தல் ஆணையர் பதவிக்குத் தகுதியற்ற ஒருவரை நியமிப்பதைத் தடுப்பதற்கோ", அல்லது "முட்டாளையோ அல்லது நேர்மையற்றவரையோ அல்லது ஆட்சித் துறையின் பிடியில் உள்ளவரையோ தடுப்பதற்கு அரசமைப்பில் எந்த ஏற்பாடும் இல்லை" என்றும் அவர் ஒப்புக்கொண்டார்.

ஷிபன் லால் சக்சேனா வாதிடுகையில், "அடுத்த தேர்தலில் எப்படியாவது வெற்றிபெற விரும்பும் ஏதேனும் ஓர் ஆளுங்கட்சி, தனது கட்சியைச் சேர்ந்த ஒரு தீவிர விசுவாசியைத் தலைமைத் தேர்தல் ஆணையராக நியமிக்க வாய்ப்புள்ளது" என்றார். தேர்தல் ஆணையத்திற்கான நியமனங்கள், நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில், மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் உறுதி செய்யப்பட வேண்டும் என்று அவர் முன்மொழிந்தார்.

தேர்தல் செயல்முறையை மையப்படுத்துவதை பல உறுப்பினர்கள் எதிர்த்தனர். ஹிருதய நாத் குன்ஸ்ரு, "வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதும், தேர்தல்களை எந்தச் சிறுபான்மையினருக்கும் பாரபட்சமின்றி நியாயமாக நடத்துவதும் ஒன்றிய அரசின் கடமையாக இருப்பதை, வேறெந்தக் கூட்டாட்சி அரசமைப்பிலும் நான் காணவில்லை... மாகாண அரசுகளின் அரசியல் பாரபட்சங்கள் இருந்திருக்கக்கூடிய இடத்தில், இனி ஒன்றிய அரசாங்கத்தின் அரசியல் பாரபட்சங்கள் மேலோங்கிவிடும்... ஆபத்து இதில் இல்லையா?" என்று கேள்வி கேட்டார். குலதர் சாலிகா கூறுகையில், "நமது சொந்த மக்களையே நம்மால் நம்ப முடியவில்லை என்றால், நாம் சுதந்திரத்திற்கு தகுதியற்றவர்கள். ஐயா, மாகாணங்களுக்கு அநீதி இழைக்கப்பட இருக்கிறது, அவற்றைத் தேவையில்லாமல் சந்தேகத்துக்கு

உட்படுத்துகிறார்கள்..." என்றார். அன்னி மஸ்கரீன் குறிப்பிடுகையில், "இந்தப் பிரிவு ஏற்றுக்கொள்ளப்பட்டால், இனி மாகாணத் தேர்தல்கள் மையத்தின் நிரந்தரப் பாதுகாப்பின் கீழ் இருக்கும் என்று நாம் நம்ப வேண்டும். அதன் பொருள், மாகாண மக்களின் நேர்மை கேள்விக்கு உள்ளாக்கப்படுகிறது என்பதே ஆகும்" என்றார்.

இந்த எச்சரிக்கைகளையும் மீறி, அரசமைப்பு அவை வரைவு அரசமைப்புச் சட்டப் பிரிவு 289ஐ (இப்போது அரசமைப்புச் சட்டப் பிரிவு 324) ஒரு 'பாதுகாப்புப் பிரிவுடன்' [அரசமைப்புச் சட்டப் பிரிவு 324(2)] ஏற்றுக் கொண்டது. அதில், நியமனங்கள் "நாடாளுமன்றத்தால் இது தொடர்பாக இயற்றப்படும் எந்தவொரு சட்டத்தின் வகையங்களுக்கும் உட்பட்டது" என்று கூறப்பட்டது. 73 ஆண்டுகளுக்கும் மேலாக, நாடாளுமன்றம் அந்தச் சட்டத்தை இயற்றவே இல்லை. *அனூப் பரன்வால் எதிர் இந்திய ஒன்றியம்* (2023)[2] [*Anoop Baranwal v. Union of India* (2023)] வழக்கில், நாடாளுமன்றம் சட்டம் ஒன்றை இயற்றும் வரை பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், இந்தியத் தலைமை நீதிபதி ஆகியோரைக் கொண்ட தேர்வுக்குழுவை கட்டாயமாக்குவதன் மூலம் நடுநிலைமையைப் பாதுகாக்க உச்சநீதிமன்றம் முயன்றது. இருப்பினும், நாடாளுமன்றம் *தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் (நியமனம், சேவை நிபந்தனைகள், பதவிக்காலம்) சட்டம், 2023 [Chief Election Commissioner and other Election Commissioners (Appointment, Conditions of Service and Term of Office) Act,* 2023]–ஐ கொண்டுவந்தது. இது தலைமை நீதிபதிக்குப் பதிலாகப் பிரதமரால் பரிந்துரைக்கப்படும் ஒன்றிய அமைச்சர் ஒருவரைப் பதிலீடு செய்தது. இதன் விளைவாக, ஒன்றிய ஆட்சித்துறை தேர்வுக் குழுவில் 2–1 என்ற பெரும்பான்மையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. இது நடுநிலைமையைப் பாதுகாப்பதற்கான நீதித்துறையின் முயற்சியைத் திறம்படச் சிதைத்துவிட்டது.

II. மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களை மாநிலத் தேர்தல் ஆணையங்களே நடத்த வேண்டும்

இந்தியா இப்போது மிகவும் மையப்படுத்தப்பட்ட தேர்தல் முறையைப் பின்பற்றுகிறது. இம்முறையின் கீழ் இந்தியத் தேர்தல் ஆணையம் நாடாளுமன்றத்திற்கு மட்டுமல்லாமல், மாநிலச் சட்டமன்றங்களுக்கும்

[2] (2023) 6 SCC 161.

தேர்தல்களை நடத்துகிறது. *73வது, 74வது அரசமைப்புத் திருத்தங்கள் (1992),* ஒவ்வொரு மாநிலத்திலும் ஊராட்சித் தேர்தல்களையும் நகராட்சித் தேர்தல்களையும் நடத்த அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 243K, 243ZA ஆகியவற்றின் கீழ் மாநிலத் தேர்தல் ஆணையத்தை உருவாக்கியது. ஆயிரக்கணக்கான தொகுதிகளையும் மிகப்பெரும் நிர்வாகச் சிக்கல்களையும் கொண்ட உள்ளாட்சித் தேர்தல்களை மாநிலத் தேர்தல் ஆணையங்களே நடத்துகின்றன. அதே வேளையில், மிகவும் எளிமையான மாநிலச் சட்டமன்றத் தேர்தல்கள், இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படுகின்றன என்பது வியக்கத்தக்க முரண்பாடு ஆகும்.

மிகவும் பரவலாக்கப்பட்ட, அரசியல் அளவில் உணர்ச்சிகரமான தேர்தல்களை நடத்த மாநிலங்கள் தகுதியுடையவை என்றால், அவற்றின் சட்டமன்றங்களுக்கான தேர்தல்கள் மீதான கட்டுப்பாட்டை மாநிலங்களுக்கு வழங்க மறுப்பது அரசமைப்புச் சட்ட அளவில் முரணானது. அதிகாரப் பரவலாக்கம் ஒற்றை–புள்ளி நிறுவனத் தோல்வியின் அபாயத்தையும் குறைக்கிறது. ஒரு மாநிலத்தில் ஏற்படும் பிழைகள், பாரபட்சங்கள் அல்லது நிறுவன ரீதியான ஆக்கிரமிப்புகள் ஆகியவை அந்த மாநிலத்திற்குள்ளேயே நின்றுவிடும். அதே வேளையில் மற்ற இடங்களில் நடக்கும் தேர்தல்கள் நேர்மையைத் தக்க வைத்துக் கொள்ளும்.

ஒப்பீடு தரும் கூட்டாட்சி முறை அனுபவம்

முதன்மையான கூட்டாட்சி முறை மக்களாட்சி நாடுகளின் ஒப்பீட்டு ஆய்வு, இந்தியாவின் மையப்படுத்தப்பட்ட முறை ஒரு விதிவிலக்கு என்பதை வெளிப்படுத்துகிறது.

- கனடாவில், 'எலக்ஷன்ஸ் கனடா' (Elections Canada) கூட்டாட்சித் தேர்தல்களை நடத்துகிறது, அதே நேரத்தில், மாகாணத் தேர்தல்களை ஒன்டாரியோ தேர்தல் ஆணையம், க்யூபெக் தேர்தல் ஆணையம் (Elections Ontario, Elections Quebec) போன்ற முற்றிலும் சுதந்திரமான மாகாண அமைப்புகள், கூட்டாட்சி அமைப்பின் மேற்பார்வையின்றி, நடத்துகின்றன.
- ஆஸ்திரேலியாவில், ஆஸ்திரேலியத் தேர்தல் ஆணையம் கூட்டாட்சித் தேர்தல்களை நடத்துகிறது. செயல்திறத்திற்காகப் பொது வாக்காளர் பட்டியலைப் பகிர்ந்து கொண்டாலும், மாநிலத் தேர்தல்கள், மாநிலத் தேர்தல் ஆணையங்களால் மட்டுமே நடத்தப்படுகின்றன.

- அமெரிக்காவில், அதிபர் தேர்தல்கள் உட்பட அனைத்து தேர்தல்களும் தனித்தனி மாநில, உள்ளூர் அமைப்புகளே முழுமையாக நடத்துகின்றன; அங்கு தேசிய அளவில் தேர்தல் நடத்தும் இயந்திரம் எதுவும் இல்லை; ஃபெடரல் தேர்தல் ஆணையம், தேர்தல் நிதி ஒழுங்குமுறையோடு மட்டும் தன்னை மட்டுப்படுத்திக் கொள்கிறது.
- சுவிட்சர்லாந்தில், கன்டோன்கள் (Cantons) அனைத்து தேர்தல்களையும் நிர்வகிக்கின்றன. அதே நேரத்தில், கூட்டாட்சி ஆட்சியகம் (Federal Chancellery) தேர்தல் மேலாண்மையையும் தகவல் தொடர்பையும் ஒருங்கிணைத்து, இறுதித் தேர்தல் முடிவுகளைச் சேகரித்து, தொகுத்து வெளியிடுகிறது.

தேவையான அரசமைப்புத் திருத்தங்கள்

கூட்டாட்சி முறைக்கு மிகவும் பொருத்தமான, நிர்வாக அளவில் சீரான, நிறுவனம் அளவில் பாதுகாப்பான முறையில் தேர்தல் இயந்திரத்தை மறுசீரமைக்க, பின்வருமாறு அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும்:

(i) இந்தியத் தேர்தல் ஆணையமானது, மக்களவை, மாநிலங்களவை, குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவிகள், மற்றும் ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுக்கான தேர்தல்களை நடத்துவதுடன் மட்டுமே தன்னை வரையறுத்துக்கொள்ள வேண்டும்.

(ii) மாநிலத் தேர்தல் ஆணையமானது, மாநிலச் சட்டமன்றம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை நடத்த வேண்டும். மேலும், *அனைத்துத்* தேர்தல்களுக்குமான வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான கண்காணித்தல், வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்படுத்தும் பொறுப்பு மாநிலத் தேர்தல் ஆணையத்தையே சார வேண்டும்.

இந்த முன்மொழிவைச் செயல்படுத்துவதற்கு:

- *(ஒன்றியப் பட்டியல்) 72வது இனத்தில்* உள்ள, "மாநிலச் சட்டமன்றங்களுக்கு" எனும் சொற்களை நீக்குவதன் மூலம் அது திருத்தப்பட வேண்டும்;
- *(மாநிலப் பட்டியல்) 37வது இனத்தில்* உள்ள, "நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு" எனும் சொற்களை நீக்குவதன் மூலம் அது திருத்தப்பட வேண்டும்;

- "வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பதைக் கண்காணித்தல், வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்படுத்துதல்" மற்றும் "ஒவ்வொரு மாநிலச் சட்டமன்றத்திற்கும் தேர்தல்களை நடத்துதல்" ஆகிய பொறுப்புகளிலிருந்து இந்தியத் தேர்தல் ஆணையத்தை விடுவிக்கும் வகையில் அரசமைப்புச் *சட்டப் பிரிவு 324(1)* திருத்தப்பட வேண்டும்.
- *புதிய அரசமைப்புச் சட்டப் பிரிவு 324A* சேர்க்கப்பட வேண்டும். அது பின்வருமாறு அமைய வேண்டும்: *"மாநிலச் சட்டமன்றத்திற்கான வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதற்கும் தேர்தல்களை நடத்துவதற்குமான மேற்பார்வை, வழிகாட்டுதல், கட்டுப்பாடு ஆகியவை மாநிலத் தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும்."* மேலும், இதன் விளைவாக ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 243K, 243ZA மற்றும் 327 ஆகியவையும் திருத்தப்பட வேண்டும். இவ்வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பதில் எவ்விதமான கண்காணிப்பு அல்லது மேலாதிக்க அதிகாரமும் இன்றி, இந்தியத் தேர்தல் ஆணையம் ஒன்றியத் தேர்தல்களுக்கு இவற்றைப் பயன்படுத்திக்கொள்ளும்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தை மறுவரையறை செய்தல்

ஏற்கனவே குறிப்பிட்டபடி, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அதிகார வரம்பு – மக்களவை, மாநிலங்களவை, குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவிகள், மற்றும் ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகள் முதலான – ஒன்றிய தேர்தல்களுக்கு மட்டுமே என வரையறுக்கப்பட வேண்டும். இந்தக் குறிப்பிட்ட அதிகார வரம்பைக் கருத்தில் கொண்டு, ஒரு தலைமைத் தேர்தல் ஆணையர், இரண்டு தேர்தல் ஆணையர்கள் ஆகியோரைக் கொண்ட, மூன்று பேர் கொண்ட அமைப்பு போதுமானது; அரசமைப்புச் சட்டப் பிரிவு 324–இல் உள்ள மண்டல ஆணையர்கள் பற்றிய குறிப்புகள் நீக்கப்பட வேண்டும். ஆட்சித் துறையின் அழுத்தத்திற்கு எதிராக இந்தியத் தேர்தல் ஆணையத்தின் சுதந்திரம் பின்வரும் மூன்று கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் வழியாக வலுப்படுத்தப்பட வேண்டும்.

(i) *பதவிக்காலம் குறித்த பாதுகாப்பு:* இப்போது, அரசமைப்புச் சட்டப் பிரிவு 324(5)–இன் கீழ், தலைமைத் தேர்தல் ஆணையர் மட்டுமே உச்சநீதிமன்ற நீதிபதியைப் போல நாடாளுமன்ற பதவிநீக்கத் தீர்மானத்தின் வழியாக அல்லாமல், வேறுவகையில் பதவியிலிருந்து நீக்கப்பட முடியாது என்ற பாதுகாப்பைப்

பெற்றுள்ளார்; பிற தேர்தல் ஆணையர்களைத் தலைமைத் தேர்தல் ஆணையரின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவர் நீக்க முடியும். இந்நிலை அவர்களைப் பாதிப்புக்கு ஆளாகக் கூடிய நிலையில் ஆட்படுத்திவிடுகிறது. உச்சநீதிமன்ற நீதிபதிகளைப் போல நாடாளுமன்ற பதவிநீக்கத் தீர்மானத்தின் வழியாக மட்டுமே பதவி நீக்கம் செய்ய முடியும் என்கிற தலைமைத் தேர்தல் ஆணையருக்கு இருக்கும் அதே அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பை, பிற தேர்தல் ஆணையர்களுக்கும் நீட்டிக்கும் வகையில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 324(5) திருத்தப்பட வேண்டும்.

(ii) *நியமன நடைமுறை:* நியமன வழிமுறையானது சாதாரண சட்டத்தின் மூலம் நிர்வகிக்கப்படாமல், அரசமைப்பு ரீதியாகவே உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில், சாதாரண சட்டங்கள் நிலையற்ற நாடாளுமன்றப் பெரும்பான்மையால் எளிதாக மாற்றியமைக்கப்படக்கூடிய அபாயம் கொண்டவை. பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மக்களவையில் அடுத்த மிகப்பெரிய கட்சியின் தலைவர் ஆகியோரை உள்ளடக்கிய மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தேர்வுக் குழுவின் பரிந்துரையின் பேரில், குடியரசுத் தலைவரால் நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த மூன்றாவது உறுப்பினர், ஒரு குறிப்பிட்ட சூழலில், ஆளுங்கட்சிக்கு ஆதரவாளராகவோ, எதிர்ப்பாளராகவோ அல்லது நடுநிலை வகிப்பவராகவோ இருக்கலாம்; ஆனால் எந்தச் சூழலிலும், இத்தகைய அமைப்பானது பிரதிநிதித்துவ அடித்தளத்தை விரிவுபடுத்துவதோடு, ஜனநாயக நம்பகத்தன்மையையும் வலுப்படுத்துகிறது. ஒன்றிய அரசுத் தரப்பு *எப்போதும்* 2:1 என்ற விகிதத்தில் பெரும்பான்மையைக் கொண்டு, தான் நினைத்ததைச் சாதித்துக்கொள்கிறது. தற்போதைய ஏற்பாட்டில் கட்டமைப்பு ரீதியாகவே இருக்கும் இந்த பாரபட்சமான அணுகுமுறையையும் இது சரிசெய்கிறது. தேர்தல்களைக் குறித்த காலத்தில் நடத்துவதில் சம்மந்தப்பட்ட அனைத்துத் தரப்பினர்களுக்கும் ஒரு அத்தியாவசிய நலன் இருப்பதால், தேர்வுக் குழுவில் முட்டுக்கட்டை ஏற்படும் என்ற கவலைகள் மிகைப்படுத்தப்பட்டவை ஆகும். மிகவும் சமநிலையுடைய தேர்வுக் குழுவானது நியமனங்களை முடக்குவதற்காக வடிவமைக்கப்படவில்லை; மாறாக, *வெளிப்படையான கட்சி சார்புடைய வேட்பாளர்கள்* வடிகட்டப்பட்டு நீக்கப்படவும்,

நிறுவனத்தின் நம்பகத்தன்மை பாதுகாக்கப்படுவதற்காகவுமே உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு அரசமைப்பு மக்களாட்சியில், கருத்து மோதல் என்பது ஒரு நற்பண்பே தவிர, தீய பண்பல்ல; அரசியலில் அனைத்துத் தரப்பினராலும் மதிக்கப்படக்கூடிய நியமனங்களை உறுதி செய்வதற்குத் தரப்பட வேண்டிய அவசியமான விலையாகும்.

(iii) *சுயாட்சி:* உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றங்கள், தலைமைத் தணிக்கைக் கணக்காயர் (CAG), ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) ஆகியவற்றைப் போலவே, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் செலவினங்களுக்கும் இந்திய ஒருங்கிணைந்த நிதித் தொகுப்பிலிருந்து செலுத்தப்பட வேண்டும். இந்திய தேர்தல் ஆணையத்துக்கு தனியான சொந்த செயலகம் இருக்க வேண்டும். மேலும், தலைமைத் தேர்தல் ஆணையர், பிற தேர்தல் ஆணையர்கள் ஓய்வு பெற்ற பிறகு ஒன்றிய அல்லது மாநில அரசுகளின் கீழ் எந்தப் பதவியையும் வகிக்க அரசமைப்புச் சட்ட அளவில் தடை விதிக்க வேண்டும்.

மாநிலத் தேர்தல் ஆணையத்தை மறுவரையறை செய்தல்

ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, மாநிலச் சட்டமன்றத் தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தல்களை நடத்துவதற்கும், வாக்காளர் பட்டியல் தயாரிப்பை கண்காணிக்கவும், வழிநடத்தவும் மற்றும் கட்டுப்படுத்தவும் மாநில தேர்தல் ஆணையத்திற்கு, புதிய சட்டப்பிரிவு 324A, அதிகாரம் வழங்க வேண்டும். ஒவ்வொரு மாநிலத் தேர்தல் ஆணையமும், ஒரு தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்களைக் கொண்டிருக்க வேண்டும். அவர்களின் நியமனம் மற்றும் பதவி நீக்க முறைகள் குறித்து அரசமைப்புச் சட்டப் பிரிவு 324A–இல் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சட்டப்பேரவையின் அடுத்த மிகப்பெரிய கட்சியின் தலைவர் ஆகியோரைக் கொண்ட தேர்வுக் குழுவின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் இவர்களை நியமிக்க வேண்டும். இத்தகைய அமைப்பானது, இதில் சம்மந்தப்பட்ட தரப்பினரின் பங்கெடுப்பை விரிவுபடுத்துவதோடு, ஜனநாயக நம்பகத்தன்மையை மேம்படுத்துகிறது. மேலும் *வெளிப்படையான கட்சி சார்புள்ள* நியமனங்களுக்கான வாய்ப்பைக் குறைக்கிறது. ஒருவேளை, ஒரு சட்டமன்றத்தில் இரண்டு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மட்டுமே இருக்கும் விதிவிலக்கான சூழல் ஏற்பட்டால், மாநிலத்தில் *அங்கீகரிக்கப்பட்ட* அடுத்த மிகப்பெரிய கட்சியின் தலைவரையோ

அல்லது சுயேச்சை சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவரை குலுக்கல் முறையிலோ மூன்றாவது உறுப்பினராகத் தேர்வு செய்யலாம்.

நிரூபிக்கப்பட்ட தவறான நடத்தை அல்லது செயல்திறன் குறைபாடு ஆகிய காரணங்களின் அடிப்படையில், மாநில சட்டமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் மட்டுமே மாநிலத் தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும். இதன் மூலம், கடுமையான மற்றும் நிரூபிக்கத்தக்க குற்றச்சாட்டுகள் இருந்தால் மட்டுமே அவர்களைப் பதவியிலிருந்து நீக்க முடியும் என்பது உறுதி செய்யப்படும். மேலும், ஆணையத்தின் செலவினங்களை மாநிலத்தின் ஒருங்கிணைந்த தொகுப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளுதல், சுயாதீன செயலகத்தை உருவாக்குதல், மற்றும் ஓய்வுக்காலத்திற்குப் பிறகு ஒன்றிய அல்லது மாநில அரசுகளின் கீழ் வேறு எந்தப் பதவியையும் வகிப்பதை அரசமைப்பு ரீதியாகத் தடை செய்தல் ஆகியவற்றின் மூலம் நிறுவனச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். இத்தகைய பாதுகாப்பு அம்சங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து, மாநிலத் தேர்தல் ஆணையங்கள் கட்டமைப்பு ரீதியாகத் தன்னாட்சி பெற்றவையாக இருப்பதை மட்டுமின்றி, மக்களாலும் அவ்வாறே பார்க்கப்படுவதையும் உறுதி செய்கின்றன. இது கூட்டாட்சி முறை மக்களாட்சியில் தேர்தல் நம்பகத்தன்மைக்கான இன்றியமையாத நிபந்தனையாகும்.

மாநில மற்றும் ஒன்றியத் தேர்தல்களுக்கு ஒரே வாக்காளர் பட்டியலையே பயன்படுத்த வேண்டும் என்று அரசமைப்புச் சட்டப் பிரிவு 325 ஏற்கனவே வலியுறுத்துகிறது. இந்த ஒத்திசைவைப் பாதுகாக்க, மக்களவைத் தொகுதிகள் தொடர்ந்து குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கியதாகவே அமைய வேண்டும். வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் தேர்தல் தொடர்பான பிற விவகாரங்களை ஒருங்கிணைக்க, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தலைமைத் தேர்தல் ஆணையர் தலைமையில், அனைத்து மாநிலத் தலைமைத் தேர்தல் ஆணையர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட "தேசியத் தேர்தல் மன்றம் (National Electoral Council)" ஒன்று நிறுவப்பட வேண்டும்.

பரிந்துரை 1

கூட்டாட்சி முறையின் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப, இடர்களைப் பரவலாக்குவதற்கும், நிறுவனக் கட்டமைப்பின் உறுதித்தன்மையை வலுப்படுத்துவதற்கும், ஒன்றிய மற்றும் மாநிலத் தேர்தல் நிர்வாகங்களை இந்தியா பிரிக்க வேண்டும். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அதிகார

வரம்பானது, மக்களவை, மாநிலங்களவை, குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவிகள் மற்றும் ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுக்கான தேர்தல்களை நடத்துவதுடன் மட்டுமே வரையறுக்கப்பட வேண்டும். மாநிலச் சட்டமன்றங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை நடத்தும் பொறுப்பும்; அத்துடன் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல் மற்றும் பராமரித்தல் மீதான கண்காணிப்பு, வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரமும் சுதந்திரமான மாநிலத் தேர்தல் ஆணையங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இவ்வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பதில் எவ்விதமான மேற்பார்வை அல்லது மேலாதிக்க அதிகாரமும் இன்றி, இந்தியத் தேர்தல் ஆணையம் ஒன்றியத் தேர்தல்களுக்கு இவற்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இச்சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்த, ஏழாவது அட்டவணை மற்றும் அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 324, 327, 243K மற்றும் 243ZA ஆகியவை திருத்தப்பட வேண்டும்; மேலும், புதிய அரசமைப்புச் சட்டப் பிரிவு 324A சேர்க்கப்பட வேண்டும்.

III. ஒரே நாடு, ஒரே தேர்தல்?

1952க்கும் 1967க்கும் இடையில், மக்களவைக்கும் மாநிலச் சட்டமன்றங்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல்கள் நடத்துவது வழக்கமாக இருந்தது. இந்த ஒருங்கிணைப்பு இந்திய தேசிய காங்கிரஸின் அரசியல் மேலாதிக்கத்தின் விளைவாக ஏற்பட்டது. இது ஒன்றிய,மாநில அளவிலான ஏறக்குறைய அனைத்து அரசாங்கங்களையும் அவற்றின் முழுப் பதவிக்காலத்தையும் நிறைவுசெய்ய அனுமதித்தது.

இந்த நடைமுறை 1967க்குப் பிறகு சிதைந்தது. இது ஒரு கட்சி ஆதிக்கத்தின் முடிவைக் குறித்தது. பல மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத கட்சிகள், கூட்டணிகள் அரசாங்கங்களை அமைத்தன. 1970–இல் நான்காவது மக்களவை முன்கூட்டியே கலைக்கப்பட்டது. இதனால், மாநிலத் தேர்தல்கள் தேசியத் தேர்தல் சுழற்சியிலிருந்து துண்டிக்கப்பட்டன. அந்த காலத்திலும் அதற்குப் பிந்தைய ஆண்டுகளிலும், கட்சித் தாவல்கள், மாறும் அரசியல் கூட்டணிகள் அல்லது அரசமைப்புச் சட்டப் பிரிவு 356ன் மோசமான பயன்பாடு ஆகியவை காரணமாகப் பல மாநில அரசாங்கங்கள் வீழ்ந்தன; அதே நேரத்தில் பஞ்சாப், ஜம்மு–காஷ்மீர் போன்ற மாநிலங்களில் கிளர்ச்சிகள் காரணமாகத் தேர்தல்கள் தள்ளிப் போயின. அரசியல் உறுதியற்ற தன்மை மாநிலங்களோடு நின்றுவிடவில்லை. 1977, 1989, 1996, 1998 ஆகிய

ஆண்டுகளில் அமைக்கப்பட்ட ஒன்றிய அரசாங்கங்கள், ஐந்தாண்டுகளை நிறைவு செய்யத் தவறின.

இதன் விளைவாக, மக்களவைத் தேர்தல்களும் சட்டமன்றத் தேர்தல்களும் அதிக அளவில் வெவ்வேறு நேரங்களில் நடைபெற்றன. இது ஒரு பிறழ்வு அல்ல. மாறாக, பன்முகத்தன்மை கொண்ட காலக்கட்டத்தில் நாடாளுமன்ற ஜனநாயகம் செயல்பட்டதன் இயல்பான விளைவு ஆகும். "ஒரே நாடு, ஒரே தேர்தல்" என்பதற்கான இப்போதைய முன்மொழிவுகள், இந்தியாவின் கூட்டாட்சி முறை அரசியலின் இந்த இயற்கையான பரிணாமத்தைச் செயற்கையாக மாற்றியமைக்க முயல்கின்றன.

"ஒரே நாடு, ஒரே தேர்தல்" குறித்து கடந்த கால அமைப்புகளின் பார்வைகளும் பரிந்துரைகளும் (1983–2024)

கடந்த நாற்பது ஆண்டுகளாக, பல அமைப்புகள் ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்துள்ளன; இந்த விவாதம், அதன் விரும்பத்தக்க தன்மை என்பதிலிருந்து, அரசமைப்புரீதியான சாத்தியக்கூறுகளை நோக்கி படிமலர்ச்சி அடைந்துள்ளது.

(i) *இந்தியத் தேர்தல் ஆணையம்* (1983)*:* செலவுகளையும் நிர்வாகச் சுமையையும் குறைக்கவும், தேர்தல் கால அட்டவணைகளைச் சட்டப்பூர்வமாக ஒருங்கிணைக்கவும் இந்தியத் தேர்தல் ஆணையம் முதன்முதலில் முன்மொழிந்தது.

(ii) *சட்ட ஆணையம்* (1999): நீதிபதி பி.பி. ஜீவன் ரெட்டி தலைமையிலான சட்ட ஆணையத்தின் 170வது அறிக்கை, அடிக்கடி நடக்கும் தேர்தல்கள் நிர்வாகத்தைப் பாதிப்பதாக வாதிட்டதுடன், மீண்டும் ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்த பரிந்துரைத்தது. இதை அடைய, இந்த ஆணையம் இரண்டு நடைமுறை தீர்வுகளை முன்மொழிந்தது: முதலாவதாக, கால அட்டவணைகளை ஒன்றிணைக்க, சட்டமன்றப் பதவிக்காலங்களை ஆறு மாதங்கள் வரை நீட்டித்தல் அல்லது குறைத்தல்; அல்லது இரண்டாவதாக, தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்திவிட்டு, சட்டமன்றத்தின் அசல் பதவிக்காலம் முடியும் வரை முடிவுகளை நிறுத்தி வைப்பது. மேலும், ஆட்சித் துறை நிலைத்தன்மையை உறுதிப்படுத்த, அந்த அறிக்கை ஜெர்மன் பாணியிலான "ஆக்கபூர்வமான நம்பிக்கையில்லாத் தீர்மான (Constructive Vote of No Confidence)" முறையை வெளிப்படையாகப் பரிந்துரைத்தது. அதாவது, நம்பிக்கையில்லா

தீர்மானத்தையும், அடுத்து பதவி ஏற்பவரின் பெயரையும் ஒரே நேரத்தில் முன்மொழிந்தால் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டும் என்று முன்மொழிந்தது.

(iii) *அரசமைப்பின் செயல்பாட்டை ஆய்வு செய்வதற்கான தேசிய ஆணையம்* (2002): நீதிபதி எம்.என். வெங்கடாசலையா தலைமையிலான இந்த ஆணையம், அரசாங்க வீழ்ச்சியைத் தடுக்க "ஆக்கபூர்வமான நம்பிக்கையில்லா தீர்மானத்தை" ஆதரித்தது. ஆனால் நிலைத்தன்மைக்கு இறுதியில் நாடாளுமன்ற முறை ஒழுக்கம் தேவை என்று குறிப்பிட்டது.

(iv) *பணியாளர், பொதுமக்கள் குறைகள்தீர்ப்பு, சட்டம் மற்றும் நீதி தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழு* (2015): இ.எம். சுதர்சன நாச்சியப்பன் தலைமையில் அமைக்கப்பட்ட இந்தக் குழு, இடையூறுகளைக் குறைக்க நடைமுறை சார்ந்த 'இரண்டு–கட்ட தீர்வை' முன்மொழிந்தது (முதலாம் கட்டம்: மக்களவைத் தேர்தலோடு சில மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களையும் நடத்துவது; இரண்டாம் கட்டம்: மக்களவை பதவிக்காலத்தின் இடைப்பகுதியில் மீதமுள்ள மாநிலச் சட்டமன்றங்களுக்கான தேர்தல்களையும் நடத்துவது). ஆனால் அரசமைப்புத் திருத்தங்களும் கூட்டாட்சி முறை ஒருமித்த கருத்தும் அவசியம் என்பதை வலியுறுத்தியது. இதுவும் "ஆக்கபூர்வமான நம்பிக்கையில்லா தீர்மானம்" என்ற கருத்தை ஆதரித்தது.

(v) *நிதி ஆயோக் (NITI Aayog)* (2017): விவாதக் கட்டுரை ஒன்று, ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்துவதற்கு விரிவான அரசமைப்புச் சட்டத் திருத்தங்களும், சட்டமன்றப் பதவிக்காலங்களை ஒருமுறையேனும் குறைப்பது அல்லது நீட்டிப்பதும் அவசியம் என்பதை ஏற்றுக்கொண்டது.

(vi) *சட்ட ஆணையம்* (2018): நீதிபதி பி.எஸ். சவுகான் தலைமையிலான வரைவு அறிக்கை, ஒரே நேரத்தில் தேர்தல்களுக்கு அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 83, 85, 172, 174ல் திருத்தங்கள் தேவைப்படும் என்றும், குறைந்தது பாதி மாநிலங்களின் பின்னேற்பு, கண்டிப்பாகத் தேவையில்லை என்றாலும், கூடுதல் எச்சரிக்கை நடவடிக்கையாகப் பரிந்துரைத்தது. பதவிக்காலங்களைக் குறைப்பது ஜனநாயகக் கவலைகளை எழுப்புகிறது என்றும், நாடாளுமன்ற முறையின் பொறுப்புடைமை நலிவடையக் கூடாது என்றும் கருத்து தெரிவித்தது.

(vii) *ராம்நாத் கோவிந்த் குழு* (2023–24): முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையிலான உயர்நிலைக் குழு, ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்துவதற்கான ஒரு முழுமையான செயல்திட்டத்தை வழங்கியது. இது ஒரு அடிப்படை மாற்றத்தைக் குறிப்பதாக அமைந்தது. இது புதிய அரசமைப்புச் சட்ட ஏற்பாட்டின் மூலம் ஒற்றை ஒருங்கிணைந்த சுழற்சியைப் பரிந்துரைத்தது. மிக முக்கியமாக, இது "மீதமுள்ள பதவிக் காலத்திற்கான" தேர்தல் என்ற கருத்தை அறிமுகப்படுத்தியது. இதில் இடைக்காலத் தேர்தல், அசல் பதவிக்காலத்தின் எஞ்சிய காலத்திற்கு மட்டுமே மக்கள் ஆணையைப் பெறுகிறது. மக்களவை, மாநிலச் சட்டமன்றங்களுக்கான தேர்தல்களை ஒருங்கிணைக்க 50 விழுக்காடு மாநிலங்களின் பின்னேற்பு தேவையில்லை என்றும் வாதிட்டது. (எனினும் உள்ளாட்சித் தேர்தல்களை ஒருங்கிணைக்க வேண்டுமெனில் 50 விழுக்காடு மாநிலங்களின் பின்னேற்பு தேவைப்படும்)

அரசமைப்பு (நூற்று இருபத்து ஒன்பதாவது திருத்த) சட்டவரைவு, 2024

மக்களவைக்கும் அனைத்து மாநிலச் சட்டமன்றங்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல்களைக் கட்டாயமாக்குவதன் மூலம் இந்தியாவின் தேர்தல் கட்டமைப்பின் அடிப்படை மறுசீரமைப்பை இந்தச் சட்டவரைவு முன்மொழிகிறது. இந்தச் சட்டத்தின் மையமாக அரசமைப்புச் சட்டப் பிரிவு 82A சேர்க்கப்படவுள்ளது. இதன்கீழ் பொதுத் தேர்தலுக்குப் பிறகு மக்களவையின் முதல் அமர்வு நடைபெறும் தேதியை குடியரசுத் தலைவர் "நியமிக்கப்பட்ட தேதி" என அறிவிப்பார்.

நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து, அனைத்து மாநிலச் சட்டமன்றங்களின் பதவிக்காலமும் மக்களவையின் தேர்தல் சுழற்சிக்கு ஏற்ப குறைக்கப்படுகிறது. அந்தத் தேதிக்குப் பிறகு அமைக்கப்பட்ட எந்தவொரு சட்டமன்றத்தின் பதவிக்காலமும், அதன் சாதாரண ஐந்து ஆண்டு பதவிக்காலம் முடிவடையாவிட்டாலும், மக்களவையுடன் முடிவடையும் வகையில் குறைக்கப்படும். இம்முறையின் நோக்கம், நாடாளுமன்றத்திற்கும் மாநிலச் சட்டமன்றங்களுக்கும் அடுத்தடுத்த தேர்தல்கள் அனைத்தும் ஒன்றாக நடத்தப்படுவதை உறுதிசெய்வதே ஆகும்.

இந்த ஒருங்கிணைப்பை நிரந்தரமாகப் பேணுவதற்கு, இந்தச் சட்டவரைவு "மீதமுள்ள பதவிக் காலம்" என்ற கருத்தை

அறிமுகப்படுத்துகிறது. ஒரு அவை முன்கூட்டியே கலைக்கப்பட்டால், அதைத் தொடர்ந்து வரும் இடைக்காலத் தேர்தல், புதிய ஐந்து ஆண்டு பதவிக்காலத்தை வழங்காது. அதற்குப் பதிலாக, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம், அசல் பதவிக்காலத்தின் மீதமுள்ள காலத்திற்கு மட்டுமே செயல்படும்.

ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது சாத்தியமில்லை என்றால், மாநிலச் சட்டமன்றத் தேர்தலைத் தள்ளிவைக்கப் பரிந்துரைக்க இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு, இந்தச் சட்டவரைவு, அதிகாரம் அளிக்கிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில், தள்ளிவைப்பிற்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்றம் அடுத்த மக்களவையுடன் இணைந்த குறைக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே செயல்படும். இந்த முறையைச் செயல்படுத்த, அரசமைப்புச் சட்டப் பிரிவு 83, 172, 327 ஆகியவற்றை இந்தச் சட்டவரைவு திருத்துகிறது.

"ஒரே நாடு, ஒரே தேர்தல்" முன்மொழிவு, தேர்தல் செலவினங்களைக் குறைப்பதற்கும், பாதுகாப்புப் படைகளின் நீண்டகாலப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கும், தேர்தல் நடத்தை விதிகளால் ஏற்படும் ஆட்சிக்கான "தடைகளை" குறைப்பதற்கும், அரசியல் கட்சிகளை நிரந்தர தேர்தல் பிரச்சார பயன்முறையிலிருந்து விடுவிப்பதற்கும் நுட்ப அளவிலான சீர்திருத்தம் என்று முன்வைக்கப்படுகிறது. எவ்வாறாயினும், முக்கியமான அரசமைப்புச் சட்ட பண்புக்கூறான சட்டமன்றப் பதவிக்காலத்தை, சீரான தேர்தல் கால அட்டவணையின் நிர்வாக வசதிக்கு உட்படுத்துவதன் மூலம், வாக்காளர், சட்டமன்றம், ஆட்சித் துறை ஆகியவற்றுக்கு இடையிலான உறவுகளை அடிப்படையிலேயே மாற்றியமைக்கிறது. இது இந்தியாவின் நாடாளுமன்றக் கூட்டாட்சி முறையின் பண்பை விட்டுக்கொடுகின்றது என்பதால், அரசமைப்பின் இறுதி உரைகல்லான 'அடிப்படை கட்டமைப்புக் கோட்பாடு' நோக்கில் கடுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

நாடாளுமன்ற ஜனநாயகம்: நிலைத்தன்மையை விட பொறுப்புணர்வே முக்கியமானது

இந்தியா மிகுந்த விழிப்புணர்வுடன் நாடாளுமன்ற அரசாங்க முறையை ஏற்றுக்கொண்டது. அரசமைப்பு அவையில் பி.ஆர். அம்பேத்கர் தெளிவுபடுத்தியபடி, எந்தவொரு ஜனநாயக முறையும் நிலைத்தன்மை, பொறுப்புணர்வு ஆகிய இரண்டையும் சமமாக உறுதிசெய்ய முடியாது. அந்தத் தேர்வை எதிர்கொண்ட போது, இந்தியா நிலைத்தன்மையை விடப் பொறுப்புணர்வையே தேர்ந்தெடுத்தது; தடையற்ற பதவிக்காலத்தின்

வசதியை விட, ஆட்சித் துறை மீதான மக்கள் மன்றத்தின் தொடர்ச்சியான மேற்பார்வையையே தேர்ந்தெடுத்தது.

இந்தத் தேர்வு, இரண்டு துணை வழிமுறைகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது: கேள்விகள், விவாதங்கள், தீர்மானங்கள் மற்றும் நம்பிக்கை வாக்கெடுப்புகள் ஆகியவற்றின் மூலமாகச் சட்டமன்றத்திற்குப் பதிலளிக்கும் கடமை. தேர்தல்கள் மூலமாக வாக்காளர்களுக்குப் பதிலளிக்கும் கடமை. இவை இரண்டும் இணைந்து, ஆட்சித்துறை அதிகாரமானது சட்டமன்றத்தின் நம்பிக்கைக்கும், மக்களின் இசைவுக்கும் எப்போதும் கட்டுப்பட்டிருப்பதை உறுதி செய்கின்றன.

இந்த தர்க்கம், அரசமைப்பின் உரையில் பொதிந்துள்ளது. அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 75(3), 164(2) ஆகியவை கூட்டுப் பொறுப்புணர்வுக் கொள்கையை நிலைநிறுத்துகின்றன; அவையின் நம்பிக்கையைப் பெற்றுள்ள வரையில் மட்டுமே, ஆட்சித் துறை நீடிக்கிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 83(2), 172(1) ஆகியவை சட்டமன்றங்களுக்கு அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகள் பதவிக்காலத்தை மட்டுமே பரிந்துரைக்கின்றனவே தவிர, உத்தரவாதம் அளிக்கப்பட்ட பதவிக்காலத்தை அல்ல. சட்டமன்ற நம்பிக்கை சிதைந்து போகலாம் என்பதால், சட்டமன்றம் முன்கூட்டியே கலைக்கப்படலாம் என்பதை இந்த முறை ஏற்கிறது. முன்கூட்டியே கலைக்கப்படுவது என்பது ஒரு குறைபாடு அல்ல, மாறாக ஒரு ஜனநாயகச் சரிசெய்தல் ஆகும்.

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' முன்மொழிவு இந்தத் தர்க்கத்தைத் தலைகீழாக மாற்றுகிறது; முன்கூட்டியே கலைக்கப்படுவதை, மக்களாட்சி முறையின் தேவையாகக் கருதாமல் ஒரு நிர்வாக வசதிக்குறைவாகக் கருதுகிறது. நாடாளுமன்ற முறையில், நிலையான பதவிக்காலத்தை திணிப்பதன் மூலம், சட்டம் இயற்றும் மன்றத்தின் பதிலளிப்புத் தன்மையை விடப் பதவிக்கால நிலைத்தன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இது இந்தியாவை அரைகுறை குடியரசுத் தலைவர் ஆட்சி முறையை நோக்கித் தள்ளுகிறது.

"மீதமுள்ள பதவி காலத்திற்கான" தேர்தல்

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' முன்மொழிவின் மிகவும் கவலைக்குரிய கூறு, அது ஒரு புதிய தேர்தல் வகையை, அதாவது *(முழு) அவையின் மீதமுள்ள பதவி காலத்திற்காக நடத்தப்படும் இடைக்காலத் தேர்தல்* முறையை உருவாக்குவது ஆகும். அரசமைப்புச் சட்டக் கோட்பாட்டின்படி, ஒரு அவை கலைக்கப்படுவது என்பது மக்கள் ஆணையை முடிவுக்கு கொண்டுவருகிறது; மீண்டும் ஒரு புதிய அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கும்

முழுமையான இறையாண்மையை, வாக்காளர்களிடம் ஒப்படைக்கிறது. 'எஞ்சிய' அல்லது 'தொடரும்' மக்கள் ஆணை என்ற அங்கீகரிக்கப்பட்ட கருத்துரு ஏதும் இல்லை. முன்மொழியப்பட்டுள்ள அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 83(6), 172(5), புதிதாக அமைக்கப்பட்ட அவை முந்தைய அவையின் தொடர்ச்சி அல்ல என்று கூறினாலும், நடைமுறை விளைவு, இதற்கு நேர்மாறாக உள்ளது. தேர்தல் ஒருங்கிணைப்பிற்காக மட்டுமே காலாவதியான ஓர் ஆணையை செயற்கையாகத் தக்கவைப்பதன் மூலம், இந்த முன்மொழிவு, பின்வரும் மூன்று தீவிரமான அரசமைப்புச் சட்டப் பிறழ்வுகளை அறிமுகப்படுத்துகிறது.

(i) *வாக்குரிமையின் மதிப்பைக் குறைக்கிறது:* முழுப் பதவிக்காலத்திற்கு அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை, இந்த முறை, குடிமக்களுக்கு மறுக்கிறது; மேலும் வாக்களிக்கும் செயலை தற்காலிக ஏற்பாடாகச் சுருக்குகிறது. ஆட்சியின் இடைக்காலத்தில் நடைபெறும் தேர்தலில் வழங்கப்படும் ஆணை, இயல்பாகவே குறைக்கப்பட்ட காலத்தைக் கொண்டது என்று தெரியவரும்போது, வாக்காளர்கள் வாக்கு அளிப்பதில் ஈடுபாடு காட்டாமல் போகலாம்; இது பொதுமக்களிடையே சலிப்பை ஏற்படுத்தித் தேர்தல் பங்கேற்பைக் குறைக்கும்.

(ii) *பொறுப்புடைமை ஆட்சித் தரத்தையும் சிதைக்கிறது*: ஒன்றிய அளவிலோ அல்லது மாநில அளவிலோ, குறைக்கப்பட்ட காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் அரசாங்கத்திற்கு, நீண்டகாலக் கொள்கைகளை முன்னெடுப்பதற்கான உந்துதல் இருக்காது. அதன் இயல்பான எதிர்வினை என்பது, அரசியல் அளவில் தப்பிப்பிழைப்பதற்கே முன்னுரிமை அளிப்பதாக இருக்கும்; நீண்டகால நோக்கங்களைத் தள்ளிவைத்து கட்டமைப்புச் சீர்திருத்தங்களைத் தவிர்த்துவிட்டு குறுகிய கால இலாபநோக்கு செயல்பாடுகளில் ஈடுபடுவதாகவே அமையும். இது துணிச்சலான முடிவுகளை எடுப்பதைத் தடுத்து, முடிவெடுக்கும் வேகத்தைக் குறைத்து, கவர்ச்சிகரமான அரசியலையும், கொள்கைப் பின்னடைவையும் ஊக்குவிக்கும். இப்போதைய முறையின் கீழ், தேர்தல் நடத்தை விதிகள் நிர்வாகத்தை இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு மட்டுமே பாதிக்கின்றன; அப்போதும் கூட, அது புதிய அறிவிப்புகளை மட்டுமே தடுக்கிறது. அதே சமயம் வழக்கமான நிர்வாகம், நடப்பில் உள்ள திட்டங்கள் தொடர அனுமதிக்கிறது. இதற்கு நேர்மாறாக, குறைக்கப்பட்ட பதவிக்காலம் என்பது சில

மாதங்களுக்குப் பதிலாக, பல ஆண்டுகால முழுப் பதவிக்காலத்தின் ஆட்சியையே முடக்கிவிடும்.

(iii) *இது ஒரு ஆபத்தான "ஆட்சி வெற்றிடத்தை" உருவாக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது:* 1951–ஆம் ஆண்டு *மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (Representation of the People Act,* 1951) பிரிவு 151A, எஞ்சிய பதவிக்காலம் *ஓராண்டு அல்லது அதற்குக் குறைவாக* இருந்தாலொழிய, காலியாகும் இடங்களை ஆறு மாதங்களுக்குள் இடைத்தேர்தல் மூலம் நிரப்ப, இந்தியத் தேர்தல் ஆணையத்தை வலியுறுத்துகிறது. ஆயினும், இந்தத் திருத்தச் சட்டவரைவு, ஓர் இடைக்காலத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான "மீதமுள்ள காலத்தின்" குறைந்தபட்ச கால அளவைக் குறிப்பிடத் தவறிவிட்டது. தேர்தல் கால அட்டவணையை ஒருங்கிணைப்பதற்காக முழு அவைக்கான தேர்தலைத் தள்ளிப்போடுவது அரசமைப்புச் சிக்கலை உருவாக்கும்.

மாநில அளவில், இத்தகைய தள்ளிவைப்பு என்பது நீட்டிக்கப்பட்ட குடியரசுத் தலைவர் ஆட்சியைக் குறிக்கும். எவ்வாறாயினும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 356(5), இதனை ஓராண்டு என மிகக் கண்டிப்பாகக் கட்டுப்படுத்துகிறது; தேசிய அவசரநிலை நிலவும் போதும், தேர்தல்களை நடத்த முடியாது என்று தேர்தல் ஆணையம் சான்றளிக்கும் போதும் மட்டுமே, இதனை மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்க முடியும்.

ஒன்றிய அளவில், ஆட்சித் துறையை இடைநிறுத்தம் செய்ய முடியாத சூழலில், இதன் விளைவுகள் மிகவும் பேராபத்தானவை. மக்கள் மன்ற நம்பிக்கையை இழந்த காபந்து அரசாங்கம், தேர்தல் ஒருங்கிணைப்பிற்காகக் காத்திருந்து நீண்ட காலத்திற்கு ஆட்சி செய்ய நேரிடும். இது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நாடாளுமன்றம் கூட வேண்டும் என்று ஆணையிடும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 85ஐ மீறும் அபாயத்தைக் கொண்டுள்ளது. இது நிதி முடக்கத்தையும் ஏற்படுத்தக்கூடும்; ஏனெனில் காபந்து அரசாங்கத்திற்கு முழுமையான வரவு–செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்யவோ அல்லது நிதி ஒதுக்கீடு சட்டவரைவுகளைக் கொண்டுவரவோ அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 112 முதல் 117 வரை அதிகாரம் வழங்கவில்லை; அது சில மாதங்களுக்கான "முன்னளிப்பு மானியம்" (அரசமைப்புச் சட்டப் பிரிவு 116) என்பதற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நிதி நடவடிக்கைகளுக்காக அவசரச் சட்டங்களைப் (அரசமைப்புச் சட்டப் பிரிவு 123) பயன்படுத்துவது அரசமைப்புக்கு முரணானது; ஏனெனில் அவசரச் சட்டங்கள் "உடனடி நடவடிக்கைகளுக்காக" மட்டுமே. மேலும் அவை மக்கள் மன்றத்தின்

ஒப்புதலுக்கு உட்பட்டவை. ஆனால் இங்கு மக்கள் மன்றமே இல்லாத நிலை நிலவும்.

எனவே, ஒன்றிய அளவில், ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு, "மீதமுள்ள பதவிக்கால" நடைமுறையைப் பின்பற்றுவது என்பது சட்டரீதியாகச் சாத்தியமற்றதாகும். இது குறுகிய காலத்திற்கு இடைக்காலத் தேர்தல்களை நடத்த வேண்டிய சூழலையோ அல்லது அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 85, 112–117, 356 ஆகியவற்றில் பெரும் திருத்தங்களைச் செய்ய வேண்டிய கட்டாயத்தையோ ஏற்படுத்தும். இத்தகைய தீவிரமான மறுசீரமைப்பு அரசமைப்புச் சட்ட அடிப்படையையே அடையாளம் தெரியாத அளவிற்குச் சிதைத்துவிடும்; இது அடிப்படை கட்டமைப்புக் கோட்பாட்டைத் தெளிவாக மீறுவது ஆகும். எனவே, ஒரே நாடு ஒரே தேர்தல் முன்மொழிவு என்பது நோயை விட, மோசமான தீங்கு விளைவிக்கும் மருந்து ஆகும்.

கூட்டாட்சி முறையின் சமநிலையும் வாக்காளர் இறையாண்மையும்

உச்சநீதிமன்றத்தின் நீதிநெறிகள், குறிப்பாக *எஸ்.ஆர். பொம்மை எதிர் இந்திய ஒன்றியம்* (1994)[3] *[S.R. Bommai v. Union of India* (1994)] வழக்கில், மாநிலங்கள் மையத்தின் வெறும் நிர்வாக முகவர்கள் அல்ல. மாறாக, அவை சுதந்திரமான அரசமைப்பு இருப்பைக் கொண்டுள்ளன என்பதையும், கூட்டாட்சி என்பது அடிப்படைக் கட்டமைப்பின் ஒருபகுதி என்பதையும் நிறுவியுள்ளது. மாநிலங்களுக்கே உரிய தனித்துவமான மக்களாட்சி முறை ஓட்டங்கள், வெவ்வேறு தேர்தல் சுழற்சிகளை நியாயப்படுத்துகின்றன என்பதை கூட்டாட்சித் தத்துவம் அங்கீகரிக்கக் கோருகிறது.

'ஒரே நாடு ஒரே தேர்தல்' முன்மொழிவு இந்த தர்க்கத்தைச் சிதைக்கிறது. இந்தத் திட்டம் மாநில அரசுகளின் பதவிக்காலத்தை குறைத்துவிட அனுமதிக்கிறது – ஆனால் அது அரசு சட்டமன்றத்தின் நம்பிக்கையை இழந்ததாலோ அல்லது அரசமைப்பு ரீதியான நெருக்கடி ஏற்பட்டதாலோ அல்ல. வெறும் நிர்வாக வசதிக்காக – அதாவது தேசியத் தேர்தல் சுழற்சியுடன் ஒத்திசைவு ஏற்படுத்துவதற்காக மட்டுமே, மாநில அரசின் பதவிக்காலம் குறைக்கப்படுகிறது. உதாரணத்திற்கு, 2033–ஆம் ஆண்டில் ஒரு மாநிலம் தனது சட்டமன்றத்தைத் தேர்வு செய்கிறது என்று வைத்துக்கொள்வோம். 'ஒரே நாடு ஒரே தேர்தல்' முறையின் கீழ், அந்த ஆட்சி தனது முழுமையான ஐந்தாண்டு பதவிக்காலத்தை நிறைவு செய்யாது; தேசியத் தேர்தல் சுழற்சியுடன் இணைக்கப்பட வேண்டும்

[3] (1994) 3 SCC 1.

என்பதற்காக மட்டுமே 2034–ஆம் ஆண்டிலேயே அதன் பதவிக்காலம் முடிவுக்கு வந்துவிடும். ஐந்தாண்டுகளுக்கு நீடிக்க வேண்டும் என்ற நோக்கில் அளிக்கப்பட்ட மக்களாட்சித் தேர்வு, இவ்வாறு ஓராண்டாகக் குறைக்கப்பட்டுவிடும். இது, மாநிலத்திற்கே உரித்தான தேர்தல் சுழற்சியை, மையப்படுத்தப்பட்ட தேர்தல் கால அட்டவணைக்குக் கட்டுப்பட்டதாக மாற்றுகிறது. இதன் மூலம், மாநில அளவிலான பொறுப்புடைமை நீர்த்துப்போவதோடு, கூட்டாட்சிச் சமநிலையும் குலைக்கப்படுகிறது.

உண்மையில், நாடாளுமன்றம், மாநிலச் சட்டமன்றங்கள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றுக்கு அவ்வப்போது நடக்கும் வெவ்வேறு நேரத் தேர்தல்கள் மக்களாட்சி முறையின் பதிலளிப்புத் தன்மையை வலுப்படுத்துகின்றன. வெவ்வேறு கால சுழற்சியில் நடைபெறும் தேர்தல்கள் அரசாங்கங்களைப் பொதுமக்களின் கருத்திற்கு இணங்கச் செயல்பட வைக்கின்றன; மக்கள் விரோத நடவடிக்கைகள் எடுப்பதைத் தடுக்கின்றன; சரியான நேரத்தில் தவறுகளைத் திருத்திக் கொள்ளத் தூண்டுகின்றன. மாறாக, முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட தேர்தல்கள் அரசாங்கங்களைத் தங்களின் முழுப் பதவிக்காலத்திற்கும் தேர்தல் சோதனையிலிருந்து விடுவிக்கின்றன; இது மெத்தனப் போக்கை வளர்க்கும். "திரும்பப் பெறும் உரிமை" இல்லாத ஓர் அமைப்பில், மக்கள் பிரதிநிதிகளை வாக்காளர்களின் மாறிவரும் விருப்பங்களுக்கு ஏற்பப் பொறுப்புடனும், உணர்வுடனும் வைத்திருக்கத் தொடர்ச்சியான பின்னூட்டச் சங்கிலியாகச் செயல்படும் வெவ்வேறு கால நேரத் தேர்தல்களே சிறந்த மாற்று ஆகும்.

ஜேம்ஸ் மேடிசன், ஃபெடரலிஸ்ட் எண் 52–இல் (1788) *[James Madison captured this insight in Federalist No. 52* (1788)] இக்கருத்தை மிகச்சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்:

"*பொதுவாக ஒரு அரசாங்கம், மக்களோடு ஓர் ஒத்த நலனைக் கொண்டிருப்பது சுதந்திரத்திற்கு எவ்வளவுக்கு இன்றியமையாததோ, அதேபோல, நாம் இப்போது கருத்தில் கொண்டுள்ள இந்த அரசாங்க உறுப்பானது, மக்களைச் சார்ந்திருப்பதும், மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டிருப்பதும் அவசியம். இந்தச் சார்பையும், நல்லுறவையும் திறம்பட உறுதிசெய்யக்கூடிய ஒரே வழிமுறை தேர்தல்களை அடிக்கடி நடத்துவதின் மூலமாகவே என்பதில் ஐயமில்லை.*"[4]

ஒரே நாடு ஒரே தேர்தல் முன்மொழிவு கூட்டாட்சி முறையைச் சிதைக்கும் அபாயத்தைக் கொண்டிருப்பதால், அது அடிப்படை கட்டமைப்புக் கோட்பாட்டை மீறுகிறது.

---

[4] James Madison, 'Federalist No. 52' in Michael A. Genovese (ed), *The Federalist Papers* (Palgrave Macmillan 2009), 124. Also attributed to Alexander Hamilton.

தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள வரையறையற்ற தன்னிச்சை அதிகாரம்

முன்மொழியப்பட்டுள்ள அரசமைப்புச் சட்டப் பிரிவு 82A (5)–இன் கீழ், ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்த முடியாது என்று கருதினால், மாநிலச் சட்டமன்றத் தேர்தலைத் தள்ளிப்போடுமாறு குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரைக்க இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம், கால வரம்புகளோ, தெளிவான அளவுகோல்களோ அல்லது நாடாளுமன்ற மேற்பார்வையோ அற்றதாக உள்ளது. அரசமைப்பின் மிகக்கடுமையான அதிகாரமாகக் கருதப்படும் சட்டப்பிரிவு 356க்குக் கூட, பல்வேறு பாதுகாப்பு வரம்புகள் வகுக்கப்பட்டுள்ளன. அரசமைப்புச் சட்டப் பிரிவு 356(5)–இன் படி, குடியரசுத் தலைவர் ஆட்சி தொடர்பான பிரகடனத்திற்கு நாடாளுமன்ற பின்னேற்பைப் பெறுவது கட்டாயமாகும். அத்துடன், இது கடுமையான ஓராண்டு காலவரம்பிற்கு உட்பட்டது. தேசிய அவசரநிலை அமலில் இருந்து, தேர்தல் ஆணையமும் தேர்தலை நடத்தச் சாத்தியமில்லை என்று சான்றளித்தால் மட்டுமே, இக்காலவரம்பை மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்க முடியும். ஆனால் இதற்கு மாறாக, புதிதாக முன்மொழியப்பட்டுள்ள சட்டப்பிரிவு 82A(5)–இல் இத்தகைய பாதுகாப்பு அரண்கள் எதுவும் இல்லை. இது கால வரையறைகளோ அல்லது ஜனநாயகக் கட்டுப்பாடுகளோ இல்லாத, வழிகாட்டப்படாத தன்னிச்சையான அதிகாரத்தை வழங்குகிறது. இது ஒரு அரசமைப்பு நெருக்கடி உருவாவதற்கான வளமான தளத்தை உருவாக்குகிறது.

நிறுவனங்கள் அதிகாரத்திற்கு அடிபணியும் சாத்தியக்கூறுகளைக் கருத்தில் கொண்டால், மாநில அரசாங்கம் இடைக்காலத்தில் கவிழும் சூழலை எண்ணிப் பார்க்கவேண்டும். உடனடியாக நடக்கும் இடைக்காலத் தேர்தலில் தோல்வி அடைவோம் என்று அஞ்சும் ஒன்றியத்தில் ஆளும் கட்சி, அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தி, "நிர்வாகத் தடைகள்" அல்லது "பாதுகாப்பு காரணங்களை" காட்டி தேர்தலைத் தள்ளிப்போடுமாறு தேர்தல் ஆணையத்திற்கு அழுத்தம் கொடுக்கலாம். இது குடியரசுத் தலைவர் ஆட்சியை நீட்டிக்கச் செய்து, ஆளுநர் மூலமாக அந்த மாநிலத்தை ஒன்றியம், மறைமுகமாக ஆள வழிவகுக்கும். இறுதியில் தேர்தல்கள் நடத்தப்பட்டு, எதிர்க்கட்சி வெற்றி பெற்றால், அது மிகக் குறைந்த காலப் பதவிக்காலத்தையே பெறும். இவ்வாறு, இந்தத் திருத்தம், தனது கட்டுப்பாட்டை நீட்டிக்கவும், கூட்டாட்சி முறையில் தனது எதிர்ப்பாளர்களைப் பலவீனப்படுத்தவும் தேர்தல் கால முறையைக் கையாள ஒன்றியத்திற்குக் கட்டமைப்பு அளவில் ஊக்கத்தை அளிக்கிறது.

கேள்வி என்னவென்றால், இத்தகைய முறைகேடு நடக்குமா என்பதல்ல; மாறாக இந்தத் திருத்தம் அதை அரசமைப்புச் சட்ட அளவில் சாத்தியமாக்குகிறது என்பதே. அலெக்சாண்டர் ஹாமில்டன் *ஃபெடரலிஸ்ட் எண். 59* (Alexander Hamilton warned in *Federalist No. 59*)–இல் எச்சரித்தவாறு, "இத்தகைய புறக்கணிப்போ அல்லது விடுபடலோ நடக்க வாய்ப்பில்லை என்று கூறுவது பொருளற்றது. ஒரு விஷயம் அரசமைப்புச் சட்ட அளவில் சாத்தியம் என்பதே... அதற்கு மறுக்க முடியாத எதிர்ப்பு ஆகும்". *உச்சநீதிமன்ற பதிவுரு–வழக்கறிஞர் சங்கம் எதிர் இந்திய ஒன்றியம்* (2015)[5] *[Supreme Court Advocates–on–Record Association v. Union of India* (2015)] – தேசிய நீதிபதிகள் நியமன ஆணைய வழக்கில் – அரசமைப்புச் சட்டச் செல்லுபடியாகும் தன்மை என்பது நிறுவன வடிவமைப்பைப் பொறுத்ததே தவிர, அது நன்முறையில் பயன்படுத்தப்படும் என்ற உறுதிமொழிகளைப் பொறுத்ததல்ல என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. குறிப்பாக, தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் என்பது ஒரு "பரிசோதனை", அதற்குச் செயல்பட வாய்ப்பளிக்க வேண்டும் என்ற வாதத்தை உச்சநீதிமன்றம் நிராகரித்தது. திருத்தத்தின் மூலம் ஓர் அடிப்படைக் கூறைக் கட்டமைப்பு அளவில் சமரசம் செய்தாலோ அல்லது பாதிப்புக்கு உள்ளாக்கினாலோ, நடைமுறையில் அந்த அதிகாரம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதைக் கடந்து, அது அரசமைப்புக்கே முரணானது ஆகும்.

இந்திய அரசமைப்பு வரலாறு காட்டுவது என்னவென்றால், மிக முக்கியமான பகுதிகளில் உள்ள அமைதியும் தெளிவற்ற தன்மையும் வழக்கமாக மோசடிகள் செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. தேர்தல் ஒருங்கிணைப்பு என்ற பெயரில் ஒரு மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்படாத ஆட்சியை நீண்ட காலம் நீடிக்கச் செய்வதன் மூலம், ஒரே நாடு ஒரே தேர்தல் முறை, அடிப்படை கட்டமைப்பை மீறுகிறது.

செலவு குறித்த வாதம்

ஒரே நாடு ஒரே தேர்தல் முறையின் ஆதரவாளர்கள், செலவு சேமிப்பை முக்கியமான நியாயப்பாடாக அடிக்கடி குறிப்பிடுகின்றனர். ஆயினும், தேர்தல்களுக்கான நேரடி அரசுச் செலவினங்கள் நாட்டின் ஒட்டுமொத்தப் பொதுநிதி அளவில் மிகக் குறைவானவை; இது நாடாளுமன்ற முறையின் பொறுப்புடைமையையும் கூட்டாட்சி முறையின் சமநிலையையும் சமரசம் செய்யும் வகையிலான அரசமைப்பு மறுவடிவமைப்பை நியாயப்படுத்த முடியாது.

---

[5] 2015 INSC 787.

நாடாளுமன்ற நிலைக்குழு குறிப்பிட்ட அதிகாரப்பூர்வ மதிப்பீடுகளின்படி, மக்களவை தேர்தல்களுக்கும் மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களுக்குமான மொத்தச் செலவு தோராயமாக ரூ. 4,500 கோடி ஆகும். இது ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் (2015–16) வெறும் 0.25 விழுக்காடு; மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.03 விழுக்காடு மட்டுமே. அதேபோல், பிஆர்எஸ் லெஜிஸ்லேட்டிவ் ரிசர்ச் (PRS Legislative Research) குறிப்பிடுகையில், மக்களவைத் தேர்தல் செலவுகள் வரலாற்று நோக்கில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.02 விழுக்காடு முதல் 0.05 விழுக்காடு வரை மட்டுமே இருந்துள்ளன (1957–2014).[6] இந்த புள்ளிவிவரங்கள் எந்த வகையிலும் அதிகமான நிதி செலவீனத்தைக் குறிக்கவில்லை.

நடைமுறை அளவில், ஒரே நாடு ஒரே தேர்தல் முறை, சிக்கலுக்குத் தீர்வு காணுவதை விட, அதிக சிக்கல்களையே உருவாக்குகிறது. இப்போதைய முறையிலேயே, பொதுத் தேர்தல்கள் ஏறக்குறைய மூன்று மாதங்கள் நீடிக்கின்றன. 2024 மக்களவைத் தேர்தலுக்கு 82 நாட்கள் தேவைப்பட்டன. தேர்தல் ஆணையம் இப்போது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்(EVMs), விவிபேட் கருவிகள் (VVPAT), மத்திய ஆயுதக் காவல் படைகள் (CAPF) ஆகியவற்றை, ஒரு கட்டத்தில் தேர்தல் முடிந்த மாநிலங்களிலிருந்து அடுத்த கட்டங்களுக்குச் சுழற்சி முறையில் பயன்படுத்துவதன் மூலம் வளங்களைச் சீராகப் பயன்படுத்துகிறது. மக்களவை, 28 மாநிலங்கள், 8 ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகள் ஆகியவற்றுக்கு ஒரே நேரத்தில் தேர்தல்களை நடத்துவது, இத்தகைய சுழற்சியைத் தடுக்கும். இயந்திரங்களைப் பகிர்ந்து கொள்ள முடியாது என்பதால், தோராயமாக ரூ. 5,300 கோடி செலவில் மிக அதிக அளவில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் விவிபேட் கருவிகளை ஒரே நேரத்தில் கொள்முதல் செய்ய வேண்டியிருக்கும்.

மிக முக்கியமாக, பாதுகாப்புப் படைகளுக்கு ஒரே நேரத்தில் ஏற்படும் தேவை பெரும் முடக்கத்தை உருவாக்கும். படைகளைச் சுழற்சி முறையில் பயன்படுத்தும் வசதி இல்லாத நிலையில், பாதுகாப்பான வாக்குப்பதிவை உறுதிசெய்ய ஒரே வழி தேர்தல் கால அட்டவணையை கணிசமாக நீட்டிப்பதே ஆகும். இது தேர்தல் நடத்தை விதிகளை ஆறு மாதங்கள் அல்லது அதற்கு மேலாக நீட்டிக்கக்கூடும். தேர்தல் நடத்தை விதிகள் ஆட்சியை முடக்குகின்றன என்ற வாதம் உண்மையானால்,

---

[6] Saket Surya and Shirin Pajnoo 'Legislative Brief: The Constitution (129th Amendment) Bill, 2024 and The Union Territories Laws (Amendment) Bill, 2024 (Simultaneous Elections Bills)' (*PRS Legislative Research* June 5, 2025) accessed December 29, 2025.

ஒரே நாடு ஒரே தேர்தல் அந்த முடக்கத்தைத் தீவிரமாக்கி, வெறும் *தேர்தல் ஒருங்கிணைப்பிற்காக* நாட்டை அரை ஆண்டு காலம் நிர்வாகத் தேக்க நிலைக்கு ஆளாக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

மீதமுள்ள காலத்திற்கான இடைக்காலத் தேர்தல்களை கருத்தில் கொள்ளும்போது செலவுத் திறன் குறித்த தர்க்கம் முற்றிலும் சரிந்து விடுகிறது. மாநில அரசாங்கங்கள் எப்போதும் கவிழும், இடைக்காலத் தேர்தல்கள் எப்போதும் நடத்தப்படும். தேர்தல் நடத்தை விதிகளும் பாதுகாப்புப் படைப் பயன்பாடுகளும் எப்போதும் தொடரும். ஆனால் அவை மிகக் குறைந்த பதவிக்காலத்திற்காக மட்டுமே நடக்கும். அதே அளவு பணம், முயற்சியைச் செலவழித்து மிகக் குறைவான கால அளவு ஆட்சியை உருவாக்குவது, குறைந்த அளவிலான விளைவை கொண்ட அமைப்பை உருவாக்குகிறது. இது ஜனநாயகத்தின் செலவுகளை அதிகப்படுத்தி, மக்கள் ஆணையின் மதிப்பை மிகக் குறைக்கிறது.

ஒரே நாடு ஒரே தேர்தல் ஆதரவாளர்கள் கட்சிகளின் அதிகப்படியான செலவுகளை (2019 மக்களவைத் தேர்தலில் அதிகாரப்பூர்வமாக ரூ. 2,378 கோடி) சுட்டிக்காட்டினாலும், அதற்கான தீர்வு தேர்தல் நிதி அமலாக்கத்தைக் கடுமையாக்குவதில்தான் உள்ளதே தவிர, மக்கள் ஆணையைச் சுருக்குவதில் இல்லை. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு விழுக்காட்டில் மிகச் சிறிய பங்கினைச் சேமிப்பதற்காக அரசமைப்பைத் திருத்துவதும், கூட்டாட்சி முறையை நீர்த்துப்போகச் செய்வதும், பொறுப்புணர்வைக் குறைப்பதும் மதிப்புடையதா? தேர்தல்கள் என்பது குறைக்கப்பட வேண்டிய சுமையல்ல. மாறாக அதிகாரம் மக்களிடம் பதிலளிக்க கடமைப்பட்டிருப்பதை உறுதி செய்யும் சுய–ஆட்சியின் தொடர்ச்சியான விலை ஆகும்.

உலக நடைமுறையோடு ஒப்பீடு

தேர்தல்களைக் கட்டாயமாக ஒருங்கிணைக்கும் முறை, வளர்ந்த ஜனநாயகங்களுக்கு முற்றிலும் அந்நியமானது என்பதை உலகளாவிய அனுபவங்கள் நிரூபிக்கின்றன.

இங்கிலாந்தில் (UK), நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் முழுப் பதவிக்காலத்திற்கான புதிய தேர்தல்களே நடத்தப்படும். 2011–ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட *'நிர்ணயிக்கப்பட்ட பதவிக்காலம் நாடாளுமன்றச் சட்டம்' (Fixed–term Parliaments Act)* தோல்வியடைந்து. 2022–இல் அச்சட்டம் இரத்து செய்யப்பட்டது; வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரியில் நிர்வாகத்தின் பதவிக்காலம் நாடாளுமன்ற முறை நம்பிக்கையின் அடிப்படையிலானது. நாட்காட்டியின் அடிப்படையிலானது அல்ல என்பது இதன் மூலம் மீண்டும் உறுதி

செய்யப்பட்டது. மேலும், ஸ்காட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்தில் உள்ள பகிர்ந்தளிக்கப்பட்ட மக்கள் மன்றங்கள், தேசிய அரசியலால் உள்ளூர் பிரச்சினைகள் மறைக்கப்படாமல் இருக்க சுதந்திரமான தேர்தல் கால அட்டவணையில் செயல்படுகின்றன.

கனடாவில், கூட்டாட்சி மற்றும் மாகாணத் தேர்தல் சுழற்சிகள் வழக்கமாகவே மாறுபடுகின்றன; ஒரு மக்கள் மன்றம் முன்கூட்டியே கலைக்கப்பட்டால் முழுப் பதவிக்காலத்திற்கான ஆணையை வழங்கும் தேர்தல்களே நடத்தப்படும்; கூட்டாட்சி அரசாங்கம், மாகாணப் பதவிக்காலங்களைச் சுருக்க முடியாது.

ஆஸ்திரேலியாவில், மாநிலங்களுக்கு நிலையான நான்கு ஆண்டு பதவிக்காலம் உள்ளது. அதேசமயம் ஒன்றியப் பேரவைக்கு அதிகபட்சமாக மூன்று ஆண்டு பதவிக்காலம் உள்ளது; இது நிரந்தர ஒருங்கிணைப்பைத் துல்லியமான அளவில் சாத்தியமற்றதாக்குகிறது.

ஜெர்மனியை, ஒரே நாடு ஒரே தேர்தல் ஆதரவாளர்கள் தவறாக மேற்கோள் காட்டுகின்றனர். அதன் நிலைத்தன்மை "ஆக்கபூர்வமான நம்பிக்கையில்லா தீர்மானத்தில்" இருந்து வருகிறதே தவிர, ஒருங்கிணைப்பிலிருந்து அல்ல. மிக முக்கியமாக, மாநில (Lander) தேர்தல்கள் திட்டமிட்டே வெவ்வேறு நேரங்களில் நடத்தப்படுகின்றன. இது மேல்சபை (Bundesrat) மாறிவரும் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதையும், கூட்டாட்சி அரசாங்கத்திற்குத் துடிப்பான தடையாகச் செயல்படுவதையும் உறுதி செய்கிறது.

ராம் நாத் கோவிந்த் குழுவால் 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டத்திற்கு ஆதரவான எடுத்துக்காட்டாக சுட்டிக்காட்டப்பட்ட இந்தோனேஷியா, 2029–ஆம் ஆண்டு முதல் தேசிய மற்றும் உள்ளூர் தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்துவதைக் கைவிட முடிவு செய்துள்ளது. அக்குழுவால் ஒப்பிடப்பட்ட மற்றொரு நாடு தென்னாப்பிரிக்கா. இருப்பினும், இந்த ஆய்வில் கவனிக்கத் தவறிய முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்தோனேஷியா மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய இரு நாடுகளும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் செயல்படுகின்றன. இம்முறையில், சிறுபான்மையினர் மற்றும் பிராந்தியக் குரல்களுக்கான பாதுகாப்பு அம்சங்கள் இயல்பாகவே அமைந்துள்ளன. எனவே, அந்த ஜனநாயக நாடுகளில் தேர்தல்களை ஒருங்கிணைப்பதன் பின்னணியில் உள்ள நிறுவனமய தர்க்கமானது, அதிகாரத்தைப் பரவலாக்குதல், கூட்டணிகள் அமைப்பதை ஊக்குவித்தல் மற்றும் அதிகாரம் ஓரிடத்தில் குவிவதைத் தடுத்தல் ஆகியவற்றை உறுதி செய்யும் தேர்தல் வடிவங்களால் சமநிலைப்படுத்தப்படுகிறது. மாறாக, ஒப்பிடத்தக்க பாதுகாப்பு அம்சங்கள் ஏதுமில்லாத, 'அதிக வாக்குகள் பெற்றவரே வெற்றியாளர்'

எனும் பெரும்பான்மைவாத முறையை அடிப்படையாகக் கொண்ட இந்தியச் சூழலானது, இதிலிருந்து அடிப்படையிலேயே மாறுபட்டதாகும்.

அமெரிக்கா என்பது முற்றிலும் மாறுபட்ட ஒரு முறை. அது ஒரு குடியரசுத் தலைவர் ஆட்சி முறை. அங்கு ஆட்சித் துறையின் இருப்பு சட்டமன்றத்திலிருந்து, அரசமைப்புச் சட்ட அளவில் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரே நாடு ஒரே தேர்தல் முன்மொழிவு, அமெரிக்காவில் இம்முறையைச் சாத்தியமாக்கும் 'அதிகாரப் பிரிப்பு' என்ற முறையை விடுத்து, அதன் நிலையான பதவிக்காலம் என்ற பிடிவாதத்தை மட்டும் இறக்குமதி செய்ய முயல்கிறது.

பரிந்துரை 2

"மீதமுள்ள பதவிக்காலத்திற்கான" தேர்தல்களையும் குறைக்கப்பட்ட பதவிக்காலங்களையும் கட்டாயமாக்குவதன் மூலமும், சட்டமன்றத் தேர்தல்களைத் தள்ளிப்போடப் பரிந்துரைக்க இந்திய தேர்தல் ஆணையத்திற்கு வரையறையற்ற தன்னிச்சை அதிகாரத்தை வழங்குவதன் மூலமும், அரசமைப்பு *(நூற்று இருபத்து ஒன்பதாவது திருத்த) சட்டவரைவு,* 2024 வாக்குரிமையின் மதிப்பைக் குறைக்கிறது. நாடாளுமன்ற முறையின் பொறுப்புடைமையை நலிவடையச் செய்கிறது. கூட்டாட்சி சமநிலையைச் சிதைக்கிறது. ஆட்சியின் தரத்தைக் குறைக்கிறது. ஒன்றிய–மாநில அளவிலும் அரசமைப்புச் சட்ட முடக்கத்தின் அபாயத்தை ஏற்படுத்துகிறது. இம்முறையின் நன்மைகள் மிகைப்படுத்தப்பட்டவை. இம்முறையின் கட்டமைப்பு அளவிலான பாதிப்புகள் ஆழமானவை என்பதால், இந்த முன்மொழிவு அரசமைப்பின் அடிப்படையைச் சிதைத்து, அடிப்படை கட்டமைப்பை மீறுகிறது. எனவே இச்சட்டவரைவு திரும்பப் பெறப்பட வேண்டும்.

IV. கட்சித் தாவல் தடுப்புக் கட்டமைப்பு

தேர்தல்கள் மக்கள் ஆணையை உருவாக்கினாலும், திட்டமிட்ட கட்சித் தாவல்கள் – குறிப்பாக மாநிலச் சட்டமன்றங்களில் திட்டமிட்ட கட்சித் தாவல்கள் – மக்கள் ஆணையை அடிக்கடி கேலிக்கூத்தாக்கியுள்ளன. தூண்டுதல்கள், சூழ்ச்சிகள், திரைமறைவு வேலைகளுக்குப் பதிலாக, வாக்களிப்பு மையத்தில் வெளிப்படுத்தப்படும் வாக்காளர்களின் விருப்பத்தின் மூலமே அரசாங்கங்கள் உருவாக்கப்படவும் கலைக்கப்படவும் வேண்டும் என்பதை உறுதிப்படுத்தவே இந்தியாவின்

கட்சித் தாவல் தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டது. நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு, கவலைக்குரிய சிக்கல்கள் தோன்றியுள்ளன. முந்தைய காலத்தில் நடந்த தனிநபர் கட்சித் தாவல்கள் பெரும்பாலும் மறைந்துவிட்டன; அவற்றுக்குப் பதிலாக "மொத்தமான கட்சித் தாவல்களும்", சட்டக் குறைபாடுகளுக்குள் செயல்படும் நுணுக்கமான முறைகளும் உருவாகியுள்ளன.

ஒன்றியத்தில் ஆளும் கட்சியானது, மாநில அரசுகளைத் திட்டமிட்டு நிலைகுலைக்கும்போது, இப்பிரச்சினை ஒன்றிய–மாநில உறவு சார்ந்த ஒரு பரிமாணத்தைப் பெறுகிறது. ஒன்றிய அரசு தன்னிடமுள்ள வள ஆதிக்கத்தைப் பயன்படுத்தி, கட்சித் தாவல்களை ஊக்குவிப்பதோடு, ஒன்றிய அரசால் நியமிக்கப்படும் ஆளுநரின் உதவியுடன் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்துகிறது. குறிப்பாக, சட்டமன்ற நம்பிக்கை வாக்கெடுப்பு விவகாரங்களில் ஆளுநரின் பாரபட்சமான தலையீடுகள் மூலம் இது சாத்தியப்படுத்தப்படுகிறது. இவ்விதமாக, சட்டமன்ற அறநெறி சார்ந்ததாக இருந்த கட்சித் தாவல் விவகாரம், தற்போது மாநில மக்களின் ஆணையைச் சிதைப்பதற்கான ஒரு கட்டமைப்பு ரீதியான ஆயுதமாக உருமாறியுள்ளது. இது மாநிலங்களை நிர்வாக ரீதியாகப் பலவீனமான அலகுகளாக மாற்றுவதோடு, கூட்டாட்சிச் சமநிலையையும் வலுவிழக்கச் செய்கிறது.

இந்தியாவினுடைய கட்சித் தாவல் தடுப்பு முறையின் தோற்றம் 1967 பொதுத் தேர்தலுக்குப் பிந்தைய அரசியல் குழப்பங்களில் தொடங்கியது. காங்கிரஸ் கட்சி, தனது ஆதிக்கத்தை இழந்ததால், கூட்டணி அரசியல் முன்னெப்போதும் இல்லாத சட்டமன்ற உறுதியற்ற தன்மையை உருவாக்கியது. ஹரியானா சட்டமன்ற உறுப்பினர் கயா லால் பதினைந்து நாட்களுக்குள் மூன்று முறை கட்சி மாறியதையடுத்து, *"ஆயா ராம், கயா ராம்" (வந்தா ராம், போனா ராம்)* என்ற சொற்றொடர் உருவானது; இத்தொடர் சட்டமன்ற சந்தர்ப்பவாதம் குறித்த பொதுமக்களின் கோபத்தைக் காட்டுகிறது.

ஒய்.பி. சவான் குழு (1967–69)

கட்சித் தாவல்களின் அளவைக் கண்டு அதிர்ச்சியடைந்த ஒன்றிய அரசாங்கம், இந்தச் சிக்கலை ஆய்வு செய்ய ஒய்.பி. சவான் தலைமையில் குழு ஒன்றை அமைத்தது. அதன் பின்வரும் முடிவுகள் அதிர்ச்சியளிப்பவை: 1967 மார்ச் முதல் 1968 பிப்ரவரி வரை நாடு முழுவதும் குறைந்தது 438 கட்சித் தாவல்கள் நடந்தன. அரசாங்கங்கள் கவிழ்ந்த ஏழு மாநிலங்களில் இருந்த 210 கட்சித் தாவல்காரர்களில் 116 பேருக்கு உடனடியாக அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. இருந்தபோதிலும், இக்குழுவின் பரிந்துரைகள் மிகச் சாதாரணமானவையாகவே இருந்தன;

கட்சித் தாவல்காரர்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அமைச்சர் பதவியிலிருந்து மட்டுமே விலக்கி வைக்கப் பரிந்துரைத்ததே தவிர, சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலக்க பரிந்துரைக்கவில்லை. மேலும் ஒன்றிய, மாநில அளவிலான அமைச்சரவைகளின் அளவைக் குறைக்கவும் பரிந்துரைத்தது.

பத்தாவது அட்டவணை

நாடாளுமன்றம் இந்த நெருக்கடிக்கு *ஐம்பத்து இரண்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்* (1985) வழியாகப் பத்தாவது அட்டவணையைச் சேர்த்து, அரசமைப்புச் சட்ட அளவில் தீர்வுகாண முயன்றது. இத்திருத்தம், இந்தியாவில் தேர்தல் ஆணைகள் முதன்மையாகக் கட்சி சார்ந்தவை; கட்சித் தொடர்பு, சின்னம் மற்றும் திட்டங்களின் அடிப்படையிலேயே வாக்காளர்கள் வேட்பாளர்களை தேர்ந்தெடுக்கின்றனர் என்கிற முக்கியமான ஊகத்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே, கட்சித் தாவல் என்பது தனிப்பட்ட மனசாட்சியின் செயல்பாடாகக் கருதப்படாமல், வாக்காளர்களின் ஆணைக்கு இழைக்கப்பட்ட துரோகமாகக் கருதப்பட்டது. மக்கள் மன்ற உறுப்பினர்களின் சுதந்திரத்தை வலியுறுத்திய செவ்வியல் நாடாளுமன்ற முறை கொள்கையிலிருந்து, இது ஒரு விலகல் ஆகும்.

பத்தாவது அட்டவணை இந்தத் தத்துவத்தைச் செயல்படுத்தக்கூடிய விதிகளாக மாற்றியது. ஒரு மக்கள் மன்ற உறுப்பினர் தானாக முன்வந்து கட்சி உறுப்பினர் பதவியைத் துறந்தாலோ அல்லது முன் அனுமதியின்றி கட்சியின் கொறடா உத்தரவுக்கு எதிராக வாக்களித்தாலோ (அல்லது வாக்காளிப்பில் இருந்து விலகினாலோ) தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று பத்தி 2 பரிந்துரைத்தது. "தானாக முன்வந்து, தனது உறுப்பினர் பதவியைத் துறத்தல்" என்ற சொற்றொடர், முறையான பதவி விலகலைக் கடந்து மற்ற நடத்தைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவாக வடிவமைக்கப்பட்டது.

எவ்வாறாயினும், இந்த அட்டவணை சில முக்கியமான விதிவிலக்குகளை அறிமுகப்படுத்தியது. சட்டமன்றக் கட்சி ஒன்றின் குறைந்தது மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களை உள்ளடக்கிய "பிளவுக்கு" பத்தி 3 பாதுகாப்பு அளித்தது (இப்போது நீக்கப்பட்டது); அதே வேளை, குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு கொண்ட "இணைப்புக்கு" பத்தி 4 பாதுகாப்பு அளித்தது. இவை உண்மையான அரசியல் மாற்றங்களுக்கான பாதுகாப்பு முறைகளாகக் கருதப்பட்டாலும், பின்னாட்களில் திட்டமிடப்பட்ட மொத்தக் கட்சித் தாவல்களுக்கான முக்கிய வழிகளாகவும் மாறின.

நிறுவன அளவில், கட்சித் தாவல் விவகாரங்களைச் சட்டமன்றத்தின் உள்விவகாரமாகக் கருதி, தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை சபாநாயகர் அல்லது தலைவருக்குப் பத்தி 6 வழங்கியது. நீதித்துறை ஆய்வை முழுமையாகத் தவிர்க்கப் பத்தி 7 முயன்றது. இந்த விலக்கை, பின்னர் உச்சநீதிமன்றம் நீக்கியது.

இந்தத் திருத்தம், சட்டமன்ற உறுப்பினர்களைக் கட்சி ஒழுங்குக்குக் கீழ்ப்படுத்தியது; கருத்து வேறுபாட்டைத் தகுதி நீக்கத்தின் மூலம் தண்டிக்கத்தக்கதாக மாற்றியது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் விவாதச் சுதந்திரம் பறிக்கப்படுவதாகத் திறனாய்வாளர்கள் எச்சரித்த போதிலும், தனி உறுப்பினரின் சுதந்திரத்தைவிட அரசியல் நிலைத்தன்மையும் தேர்தல் ஆணை மீதான மதிப்பும் முக்கியம் என்று நாடாளுமன்றம் இந்த மாற்றத்தை ஏற்றுக்கொண்டது.

கட்சித் தாவல் தடுப்புச் சீர்திருத்த அமைப்புகள் (1990–02)

1990 முதல், உயர்நிலை அமைப்புகள் கட்சித் தாவல் தடுப்பு முறையில் மூன்று கட்டமைப்பு அளவிலான குறைபாடுகளைக் கண்டறிந்தன: சட்டப்பூர்வமாக்கப்பட்ட குழு கட்சித் தாவல், அரசியல் மயமாக்கப்பட்ட தீர்ப்பு முறை, அதிகப்படியான கொறடா உத்தரவுகள்.

தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்த தினேஷ் கோஸ்வாமி குழு (1990), *The Dinesh Goswami Committee on Electoral Reforms* (1990) தகுதி நீக்கம் என்பது தானாக முன்வந்து கட்சியிலிருந்து விலகுவது அல்லது ஆட்சியைத் தீர்மானிக்கும் – நம்பிக்கை தீர்மானம், நம்பிக்கையில்லா தீர்மானம், நிதிச் சட்டவரைவுகள் அல்லது குடியரசுத் தலைவர் உரை முதலான முக்கியமான தீர்மானங்களில் கொறடா உத்தரவை மீறுவது ஆகியவற்றிற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. மற்ற அனைத்து விவகாரங்களிலும் கருத்து வேறுபாடுகள் அனுமதிக்கப்பட வேண்டும். மேலும், தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தைச் சபாநாயகரிடமிருந்து குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநருக்கு மாற்றவும், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்படுத்தும் ஆலோசனைப்படி, அவர்கள் செயல்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

சட்ட ஆணையத்தின் 170வது அறிக்கை (1999) இன்னும் ஒருபடி மேலே சென்று, தனிநபர் கட்சித் தாவலுக்கும் குழு கட்சித் தாவல்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு, அறநெறிக்கு முரணானது என்று கண்டித்தது. அது பத்தி 3 ("பிளவு"), பத்தி 4 ("இணைப்பு") ஆகிய இரண்டையும் நீக்கப் பரிந்துரைத்தது; தனிநபரோ அல்லது குழுவோ யாராக இருந்தாலும் கட்சி மாறினால், பதவிவிலகி புதிய ஆணைக்காக மக்களைச் சந்திக்க வேண்டும் என்று கூறியது.

தொண்ணூற்று ஒன்றாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் (2003)

இந்தத் திருத்தம் கட்சித் தாவலைக் கட்டுப்படுத்த, பகுதி அளவிலான சில சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. இது மூன்றில் ஒரு பங்கு "பிளவுக்கு" பாதுகாப்பு அளித்த பத்தி 3ஐ நீக்கியது; அமைச்சரவையின் அளவை அவையின் மொத்த எண்ணிக்கையில் 15 விழுக்காடாகக் கட்டுப்படுத்தியது; மேலும் கட்சித் தாவல் செய்பவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படும் வரை அமைச்சர் பதவியையோ அல்லது ஊதியம் பெறும் அரசியல் பதவிகளையோ வகிக்கத் தடை விதிக்க அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 75(1B), 164(1B), 361B ஆகியவற்றைச் சேர்த்தது.

எவ்வாறாயினும், இது கட்டமைப்பு அளவிலான குறைபாடுகளைத் தீர்க்கத் தவறிவிட்டது. ஒரு சட்டமன்றக் கட்சியின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் ஆதரிக்கும் "இணைப்பை" பாதுகாக்கும் பத்தி 4ஐ தக்கவைத்துக் கொண்டது; இதன் மூலமாக, பெருந்திரளாக கட்சித் தாவுதலைச் சட்டப்பூர்வமாக்கியது. தீர்ப்பு வழங்கும் அதிகாரம் பத்தி 6ன் கீழ் கால வரம்புகள் ஏதுமின்றி சபாநாயகரிடமே நீடித்தது; இது அரசியல் சார்புள்ள காலதாமதத்திற்கும் தெரிவு செய்யப்பட்ட நடைமுறைப்படுதலுக்கும் வழிவகுத்தது. எதிர்பார்த்தபடியே, அரசியல் நடத்தைகள் மாறின: தனிநபர் கட்சித் தாவல்கள் குறைந்தன. ஆனால் மொத்தமான கட்சித் தாவல்களும் தந்திரமாகப் பதவி விலகலைப் பயன்படுத்தும் முறைகளும் அதிகரித்தன; இதன் மூலம் தேர்தல் பொறுப்புடைமை இன்றி, அரசாங்கங்கள் கவிழ்க்கப்படுவது தொடர்கிறது.

பத்தாவது அட்டவணை குறித்த உச்சநீதிமன்றத்தின் பார்வை

கிஹோட்டோ ஹோல்லோஹன் எதிர் சச்சில்லு (1992)[7] *[Kihoto Hollohan v. Zachillhu* (1992)] வழக்கில் ஓர் அடிப்படையான தீர்ப்பு அளிக்கப்பட்டது. அரசமைப்பு அமர்வு 3–2 என்ற பெரும்பான்மையில், பத்தாவது அட்டவணையின் செல்லுபடியாகும் தன்மையை உறுதி செய்தது; சட்டமன்ற உறுப்பினர்களின் பேச்சு சுதந்திரத்தையோ அல்லது அரசமைப்பின் அடிப்படை கட்டமைப்பையோ மீறுகிறது என்ற வாதங்களை நிராகரித்தது. அரசியல் கட்சிகள் நாடாளுமன்ற முறை ஜனநாயகத்தின் பிரிக்க முடியாத உறுப்பு என்று ஏற்ற நீதிமன்றம், கட்சித் தாவல் தடுப்பு விதிகள் அரசியல் உறுதியற்ற தன்மையைத் தடுப்பதற்கான அனுமதிக்கத்தக்க தீர்வு என கருதியது. எவ்வாறாயினும், அடிப்படைக் கட்டமைப்பின் தேவையாக விளங்கும் நீதிமன்ற சீராய்வு அதிகாரத்தைப் பறிக்கும் பத்தி 7ஐ நீதிமன்றம் நீக்கம் செய்தது. சபாநாயகர் நீதித்துறைத்

[7] 1992 Supp (2) SCC 651.

தீர்ப்பாயம் போலச் செயல்படுகிறார் என்றும்; வழக்கமாக சபாநாயகரின் இறுதி முடிவுக்குப் பின்னரே, *உள்நோக்கம்*, முறைகேடு அல்லது இயற்கை நீதி மீறல் ஆகிய அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட நீதிமன்ற ஆய்வுக்கு உட்படுத்த முடியும் என்றும் நீதிமன்றம் கூறியது. ஆனால், சிறுபான்மை நீதிபதிகளின் கருத்து, சபாநாயகருக்கு நடுநிலையான தீர்ப்பு வழங்கும் அதிகாரத்திற்கான சுதந்திரம் இல்லாததால், இந்த முழுத் திருத்தமும் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்பது ஆகும்.

இதனைத் தொடர்ந்து, நடைமுறை வழக்கங்கள் மூலம் கட்சித் தாவல் தகுதி நீக்கத்திலிருந்து தப்பிப்பதையும் உச்சநீதிமன்றம் கவனித்தது. *ரவி எஸ். நாயக் எதிர் இந்திய ஒன்றியம்* (1994)[8] *{Ravi S. Naik v. Union of India* (1994)] வழக்கில், பத்தி 2(1)(a)–இல் உள்ள "தானாக முன்வந்து தனது உறுப்பினர் பதவியைத் துறத்தல்" என்ற சொற்றொடர் வெறும் முறையான பதவி விலகலுடன் மட்டும் முடிந்துவிடாது என்றும், ஒருவரின் நடத்தையிலிருந்தும் அதைப் புரிந்துகொள்ளலாம் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. சட்டமன்ற உறுப்பினர்கள் முறையான கட்சி உறுப்பினராகவே ஒட்டிக்கொண்டு, அதே நேரத்தில் தங்களது கட்சிக்குப் பாதகமாகச் செயல்பட முடியாது.

இது ஜி. விஸ்வநாதன் எதிர் சபாநாயகர், தமிழ்நாடு சட்டமன்றம் (1996)[9] *[G. Viswanathan v. Speaker, Tamil Nadu Legislative Assembly* (1996)] வழக்கில் மேலும் வலுப்படுத்தப்பட்டது. அங்கு "பிணைப்பு இல்லாத" உறுப்பினர் என்ற கருத்தாக்கத்தை நீதிமன்றம் நிராகரித்தது. கட்சியிலிருந்து நீக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினரை வேட்பாளராக நிறுத்திய அந்தப் கட்சிக்குச் சொந்தமானவராகவே கருதப்படுவார் என்றும், நீக்கப்பட்ட பிறகு வேறொரு கட்சியில் சேருவது கட்சித் தாவலாகவே கருதப்படும் என்றும் தீர்ப்பு அளித்தது.

ராஜேந்திர சிங் ராணா எதிர் சுவாமி பிரசாத் மௌரியா (2007)[10] *[Rajendra Singh Rana v. Swami Prasad Maurya* (2007)] வழக்கில், கட்சித் தாவல் நடந்த அடுத்த கணமே தகுதி நீக்கம் நடைமுறைக்கு வந்துவிடுகிறது என்று உச்சநீதிமன்றம் கூறியது. இணைப்பிற்கான எண்ணிக்கையை எட்டுவதற்காக, ஆட்களைச் சேர்த்துக்கொண்டு, பின்னர் செய்யப்படும் கட்சித் தாவல்கள், ஆரம்பத்தில் நடந்த கட்சித் தாவல் குறித்த முடிவில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது. மேலும், தீர்ப்பு வழங்கச் சபாநாயகர் தவறுவது என்பது அதிகார வரம்பு மீறிய சட்டவிரோதச் செயல் என்றும், அத்தகைய சூழலில் நீதிமன்றம் தலையிடலாம் என்றும் கூறியது.

---

[8] 1994 Supp (2) SCC 641.

[9] (1996) 2 SCC 353.

[10] (2007) 4 SCC 270.

இதற்கிடையில், *சட்ட ஆணையத்தின் 255வது அறிக்கை* (2015), தீர்ப்பு வழங்குவதில் உள்ள அரசியல் சார்பு குறித்த பிரச்சினைக்கு மீண்டும் திரும்பியது. *கிஹோட்டோ ஹோல்லோஹன்* (1992) வழக்கின் சிறுபான்மை நீதிபதிகளின் கருத்தை ஏற்றுக்கொண்ட ஆணையம், தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்படுத்தும் ஆலோசனைப்படி செயல்படும், குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநருக்கு மாற்றப் பரிந்துரைத்தது.

நபம் ரபியா எதிர் துணை சபாநாயகர், அருணாச்சலப் பிரதேச சட்டமன்றம் (2016)[11] வழக்கில், சபாநாயகரைப் பதவியிலிருந்து நீக்கும் தீர்மானம் நிலுவையில் இருக்கும்போது, அவர் கட்சித் தாவல் விவகாரங்களில் தீர்ப்பு வழங்க முடியாது என்று அரசமைப்பு அமர்வு தீர்ப்பு அளித்தது. இது கட்சித் தாவல் செய்பவர்களுக்கு எதிர்பாராதக் கருவியாக அமைந்தது. அவர்கள் சபாநாயகர் மீது நீக்கத் தீர்மானத்தைக் கொண்டு வருவதன் மூலம், தகுதி நீக்க நடவடிக்கைகளை முடக்க முடிந்தது. இந்தப் பிரச்சினையை உணர்ந்த நீதிமன்றம், *சுபாஷ் தேசாய் எதிர் முதன்மைச் செயலாளர், மகாராஷ்டிர ஆளுநர்* (2023)[12] *[Subhash Desai v. Principal Secretary, Governor of Maharashtra* (2023)] வழக்கில், சபாநாயகருக்கு இத்தகைய முடக்கம் உண்மையில் பொருந்த வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க *நபம் ரபியா* வழக்குத் தீர்ப்பின் சரித்தன்மையை ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வுக்குப் பரிந்துரைத்தது; இவ்வழக்கு இன்னும் கிடப்பில் உள்ளது.

இறுதியாக, தீராத காலதாமதத்தைக் குறைக்க, *கெய்ஷம் மேகச்சந்திர சிங் எதிர் சபாநாயகர், மணிப்பூர் சட்டமன்றம்* (2020)[13] *[Keisham Meghachandra Singh v. Speaker, Manipur Legislative Assembly* (2020)] வழக்கில், தகுதி நீக்க மனுக்கள் மீது சபாநாயகர்கள் நியாயமான காலத்திற்குள், பொதுவாக *மூன்று மாதங்களுக்குள்* முடிவெடுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. எவ்வாறாயினும், இதனை நடைமுறைப்படுத்துவது கடினமாகவே உள்ளது. *சுபாஷ் தேசாய்* தீர்ப்பிற்குப் பிறகு (மே 11, 2023), மகாராஷ்டிர சட்டமன்றச் சபாநாயகர் இந்த காலக்கெடுவைப் பொருட்படுத்தாமல், எட்டு மாதங்கள் கழித்து ஜனவரி 10, 2024 அன்றுதான் தீர்ப்பு அளித்தார். இதுவும் உச்சநீதிமன்றத்தின் நேரடித் தலையீட்டிற்குப் பிறகே நடந்தது.

---

[11] (2016) 8 SCC 1.

[12] (2024) 2 SCC 719.

[13] 2020(2) SCALE 329.

கட்சித் தாவல் நடைமுறை: தப்பிக்கும் உத்தி முறைகள்

இந்தியாவின் கட்சித் தாவல் தடுப்புச் சட்ட அனுபவம் காட்டுவது என்னவென்றால், கட்சித் தாவல்கள் ஒழிக்கப்படவில்லை; மாறாக, அவை ஊகிக்கக்கூடிய பின்வரும் ஐந்து வகைகளில் நிறுவனமயமாக்கப்பட்டு உள்ளன.

1. **"இணைப்பு" விதிவிலக்கு மூலம் மொத்தமான கட்சித் தாவல்**
    - *அருணாச்சலப் பிரதேசம்* (2016): இது ஒரு முன்மாதிரியான நிகழ்வு. முதலமைச்சர் பெமா காண்டு, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களை மொத்தமாக 'பீப்பிள்ஸ் பார்ட்டி ஆஃப் அருணாச்சல்' (PPA) கட்சிக்கும், பின்னர் பாரதிய ஜனதா கட்சிக்கும் அழைத்துச் சென்றார். மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் இடம்பெயர்ந்ததால், அது செல்லுபடியாகும் என்கிற "இணைப்பு" விதியின்படி கூறப்பட்டு, தகுதி நீக்கம் தவிர்க்கப்பட்டது.
    - *கோவா* (2019 மற்றும் 2022): அடுத்தடுத்த சட்டமன்றங்களில், மூன்றில் இரண்டு பங்கு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் பாஜகவுடன் இணைந்தனர் (2019-இல் 15-இல் 10 பேர்; 2022-இல் 11-இல் 8 பேர்). காங்கிரஸ் முதன்மை எதிர்க்கட்சியாக இருந்தபோதிலும், இணைப்பு விதியைப் பயன்படுத்தி மக்கள் ஆணையை ஆளும் கட்சிக்குச் சாதகமானதாக மாற்றப்பட்டது.
    - *சிக்கிம்* (2019): 2019 சட்டமன்றத் தேர்தலில் பாஜக ஒரு இடத்தில் கூட வெற்றி பெறவில்லை. ஆயினும், சிக்கிம் ஜனநாயக முன்னணியின் (SDF) 13 சட்டமன்ற உறுப்பினர்களில் 10 பேரைக் கட்சி தாவச் செய்ததன் மூலம், அது முதன்மை எதிர்க்கட்சியாகவும் பின்னர் கூட்டணிக் கட்சியாகவும் மாறியது.
2. **திட்டமிடப்பட்ட பெருமளவிலான பதவி விலகல்கள்**
    - *கர்நாடகா* (2019)*:* கொறடா உத்தரவை மீறி தகுதி நீக்கத்தை எதிர்கொள்வதற்குப் பதிலாக, 17 சட்டமன்ற உறுப்பினர்கள் (காங்கிரஸ், மதசார்ப்பற்ற ஜனதா தளம் கட்சிகளின்) அவையின் பலத்தைக் குறைத்து அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக மொத்தமாக பதவி விலகினர். சபாநாயகர் பின்னர் அவர்களைத் தகுதி நீக்கம் செய்தாலும், *ஸ்ரீமந்த் பாலசாகேப் பாட்டீல் எதிர் சபாநாயகர், கர்நாடக சட்டமன்றம்*

(2019)[14] *[Shrimanth Balasaheb Patil v. Speaker, Karnataka Legislative Assembly* (2019)*]* வழக்கில் அவர்கள் மீண்டும் தேர்தலில் போட்டியிடலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. அவர்களில் பலர் அமைச்சர்களாகத் திரும்ப வந்து பதவியேற்றனர். இவ்வாறு, பதவி விலகல் என்பது பத்தாவது அட்டவணைக்கு முற்றிலும் வெளியே உள்ள அரசமைப்புச் சட்டப் பிரிவுகளிலிருந்து தப்பிக்கும் வழியாகும்.

- *மத்தியப் பிரதேசம்* (2020): கர்நாடக முறையைப் பின்பற்றி, 22 காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் மொத்தமாக பதவி விலகி அரசாங்கத்தைக் கவிழ்த்தனர். *சிவராஜ் சிங் சவுகான் எதிர் சபாநாயகர், மத்தியப் பிரதேச சட்டமன்றம்* (2020)[15] *[Shivraj Singh Chouhan v. Speaker, Madhya Pradesh Legislative Assembly* (2020)*]* வழக்கில், நிலுவையில் உள்ள தகுதி நீக்கம்/ பதவி விலகல் விவகாரங்களை விடப் பெரும்பான்மையைச் சோதிப்பதற்கே முன்னுரிமை அளித்து, உடனடி நம்பிக்கை வாக்கெடுப்பிற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

3. **சபாநாயகர் காலதாமதம் செய்தலும் கட்சிநலன் சார்ந்து அமைதி காத்தலும்**
   - *தெலங்கானா* (2014–23): இக்காலத்தில், 38 சட்டமன்ற உறுப்பினர்கள், 18 மேலவை உறுப்பினர்கள் (தெலுங்குதேசம், காங்கிரஸ்) எதிர்க்கட்சிகளிலிருந்து, ஆளும் பாரத ராஷ்டிர சமதி (பிஆர்எஸ்) கட்சிக்குத் தாவினர். ஒருவர்கூட தகுதி நீக்கம் செய்யப்படவில்லை. சிலருக்கு அமைச்சர் பதவியும் கிடைத்தது. ஆனால் 2019 ஜனவரியில் பிஆர்எஸ் கட்சியிலிருந்து காங்கிரஸ் கட்சிக்குத் தாவிய மூன்று பேர் சில நாட்களிலேயே தகுதி நீக்கம் செய்யப்பட்டனர்.
     சபாநாயகர் "பெரும் எண்ணிக்கையில்" கட்சித் தாவல்களுக்கு உதவினார். 2014 அக்டோபர் முதல் 2016 மார்ச் வரை, 15 தெலுங்கு தேசம் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களில், 12 பேர் அடுத்தடுத்து பிஆர்எஸ் கட்சியில் இணைந்தனர். அவர்கள் இறுதியில் மூன்றில் இரண்டு பங்கு எண்ணிக்கையை எட்டினாலும், தனித்தனியாகவே இணைந்தனர்; இது நுட்ப அளவில் "இணைப்பு" விதிவிலக்கிற்குப் பொருந்தாது. இருப்பினும், தெலுங்கு தேசம் கட்சியை பிஆர்எஸ் கட்சியுடன்

[14] (2020) 2 SCC 595.
[15] (2020) 17 SCC 1.

இணைக்கச் சபாநாயகர் அனுமதித்தார். இதே முறை 2019–இல் 18 காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களில் 12 பேர் இணைந்தபோதும் தொடர்ந்தது. இத்தகைய அடுத்தடுத்த கட்சித் தாவல்களுக்கு எதிரான விண்ணப்பங்கள் மீது தீர்ப்பு வழங்க மறுப்பதன் மூலம், திட்டமிட்ட வகையில் அமைதி காப்பதன் வாயிலாகச் சபாநாயகர் சட்டவிரோதக் கட்சித் தாவல்களை ஏற்று ஊக்குவித்தார்.

- *மணிப்பூர்* (2017): ஒரு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர், பாஜகவிற்குத் தாவி உடனடியாக அமைச்சர் ஆனார். சபாநாயகர் தகுதி நீக்க கோரிக்கையை மூன்று ஆண்டுகள் தாமதப்படுத்தினார். இறுதியில் *கெய்ஷம் மேகச்சந்திர* (2020) வழக்கில் உச்சநீதிமன்றம் தலையிட்டு, நான்கு வாரங்களுக்குள் முடிவெடுக்க உத்தரவிட்டதுடன், இத்தகைய கோரிக்கைகளைத் தீர்மானிக்க மூன்று மாதங்களே நியாயமான காலம் என்றும் அறிவித்தது.

4. **சபாநாயகர் நீக்கத் தீர்மானங்கள் மூலம் தீர்ப்பைத் தடுத்தல்**

- *அருணாச்சலப் பிரதேசம்* (2016) (மீண்டும்): ஏற்கனவே குறிப்பிட்டபடி, கட்சித் தாவல் செய்தவர்கள் சபாநாயகரை நீக்கும் தீர்மானத்தைக் கொண்டு வந்தனர்; இது பின்னர் *நபம் ரபியா* வழிமுறையாக உருவெடுத்தது. இது தகுதி நீக்க நடவடிக்கைகளை முழுமையாக முடக்கியது.
- *மகாராஷ்டிரா* (2022–23): சபாநாயகர் பதவி காலியாக இருந்தபோது, அதிருப்தி சட்டமன்ற உறுப்பினர்கள் உடனடியாகத் துணை சபாநாயகர் மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வந்து, அவர் தொடங்கிய தகுதி நீக்க நடவடிக்கைகளை வெற்றிகரமாகத் தடுத்தனர்.

5. **புதிய சட்டவிரோதமான தப்பிக்கும் உத்தி**

- *மகாராஷ்டிரா* (2022–23) (மீண்டும்): ஏக்நாத் ஷிண்டே பிரிவு (55 சிவசேனா சட்டமன்ற உறுப்பினர்களில் 40 பேர்) கலகம் செய்தனர். ஆனால் அவர்கள் வேறொரு கட்சியுடன் இணையவில்லை. மாறாக, சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை மட்டுமே வைத்துத் தங்களே "உண்மையான" சிவசேனா என்று உரிமை கோரினர். 2024 ஜனவரியில் சபாநாயகர் அவர்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பு அளித்தார். சபாநாயகரின் இந்தத் தர்க்கம் சட்ட அளவில் தவறானது. பத்தாவது அட்டவணை என்பது கட்சித் தாவல்

நடந்த அந்தத் தருணத்தில் ஒரு சட்டமன்ற உறுப்பினரின் கடந்த கால நடத்தைப் பற்றி மட்டுமே தீர்ப்பு அளிக்கிறது. சட்டமன்றப் பெரும்பான்மையை வைத்து ஒரு கட்சித் தாவலைப் பின்னோக்கிச் சென்று செல்லுபடியாக்க அனுமதிப்பதன் மூலம், *91வது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தில்* (2003) நீக்கப்பட்ட "பிளவு" என்கிற பாதுகாப்பைச் சபாநாயகர் சட்டவிரோதமாக அங்கீகரித்தார். உத்தவ் தாக்கரே பிரிவு ஜனவரி 18, 2024 அன்று உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்தது. 2024 நவம்பர் சட்டமன்றத் தேர்தலுக்கு முன், நீதிமன்றம் இதில் முடிவெடுக்கத் தவறியதால், இந்தக் கோரிக்கை மதிப்பை இழந்துவிட்டது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, இந்தியாவில் கட்சித் தாவல் என்பது திட்டமிட்டதாகவும், மீண்டும் மீண்டும் நடக்கக் கூடியதாகவும், இணைப்புகள், ராஜினாமாக்கள், சபாநாயகரின் அரசியல் சார்பு ஆகிய சட்டக் குறைபாடுகளைப் பயன்படுத்திக் கொள்வதாகவும் மாறியுள்ளது. இதனை மேலே கண்ட நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. தோல்வி என்பது நடைமுறையில் மட்டுமல்ல, அரசமைப்புச் சட்ட வடிவமைப்பிலேயே உள்ளது.

மேலே கண்டறியப்பட்ட தப்பிக்கும் உத்திகளின் அடிப்படையில், கட்சித் தாவல் தடுப்பு முறையைச் சிதைக்கும் முக்கியமான குறைபாடுகளையும் நிறுவன அளவிலான பலவீனங்களையும் களையப் பின்வரும் பரிந்துரைகள் முன்மொழியப்படுகின்றன.

பரிந்துரை 3: ஒரு வலுவான தடையை உருவாக்குதல்

கட்சித் தாவல் செய்பவர்களை அமைச்சர் பதவியோ அல்லது ஊதியம் பெறும் பதவியோ வகிக்கத் தடை செய்வது மட்டும் போதுமான தடையல்ல. இது "பணத்திற்காகத் தாவும் குதிரை பேரத்தைத்" தடுப்பதில்லை; அங்கு உறுப்பினர்கள் பணப் பலன் கருதி, பதவி விலகிவிட்டு, பணபலம் கொண்டோராக மாற நினைக்கிறார்கள். எனவே, கட்சித் தாவலின் விலையானது பதவியை இழப்பதோடு மட்டுமல்லாமல், ஒருவரின் அரசியல் வாழ்க்கையைத் தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டு வருவதாகவும் இருக்க வேண்டும்.

இதற்கேற்ப, பத்தாவது அட்டவணையின் பத்தி 2 திருத்தப்பட்டு, கட்சித் தாவலுக்காகத் தகுதி நீக்கம் செய்யப்படும் எவரும் ஆறு ஆண்டுகளுக்கு நாடாளுமன்றம், மாநிலச் சட்டமன்றங்கள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளுக்கான எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடத்

தகுதியற்றவர் என்று அறிவிக்கப்பட வேண்டும். இந்த *ஆறு ஆண்டுத் தடை* என்பது அரசியல் உரிமைகள் மீதான "நியாயமான கட்டுப்பாடு" ஆகும்; இது கட்சித் தாவலால் ஏற்படும் பாதிப்பிற்கு இணையானதும், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது பதவியை ஆதாயத்திற்காக விற்பதைத் தடுப்பதும் ஆகும்.

1951–ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 8A–வை இது பிரதிபலிக்கிறது. அந்தப் பிரிவு, தேர்தலில் ஊழல் முறைகேடு குற்றம் நிரூபிக்கப்பட்ட நபர்களுக்கு கட்டாய ஆறு ஆண்டுகள் தகுதி நீக்கத்தை விதிக்கிறது. மக்கள் ஆணையைச் சிதைக்கும் கட்சித் தாவலைத் தேர்தல் ஊழலுக்கு இணையாகக் கருதுவது, சட்ட அளவில் சரியானது.

ஸ்ரீமந்த் பாலசாகேப் பாட்டீல் (2019) வழக்கில், சபாநாயகர் வாழ்நாள் தடை விதித்ததை இரத்து செய்த உச்சநீதிமன்றம், இப்போதைய சட்டம் ஒருமுறை மட்டுமே தடை செய்கிறது என்றும், மீண்டும் போட்டியிடத் தடை விதிக்கவில்லை என்றும் கருதியது. தகுதி நீக்கம் செய்யப்பட்டவர் மீண்டும் போட்டியிட வேண்டுமா என்பது நாடாளுமன்றம் தீர்மானிக்க வேண்டிய கொள்கை முடிவு என்றும் நீதிமன்றம் கூறியது. இந்தத் திருத்தப் பரிந்துரை, அந்த நீதித்துறை கருத்துக்கு, நேரடிப் பதிலுரையாக அமைகிறது.

பரிந்துரை 4: கொறடா உத்தரவுகளைக் கட்டுப்படுத்துதல்

உட்கட்சி ஜனநாயகத்தை ஊக்குவிக்கவும், பிரதிநிதிகள் தங்களது தொகுதிகளுக்குப் பொறுப்புடன் இருப்பதை உறுதி செய்யவும், கொறடா உத்தரவுகள் அரசாங்கத்தின் நிலையைப் பாதிக்கும் நம்பிக்கைத் தீர்மானம், நம்பிக்கையில்லாத் தீர்மானம், நிதிச் சட்டவரைவுகள் முதலான முக்கியமான வாக்கெடுப்புகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட வேண்டும். பத்தி 2 திருத்தப்பட்டு, அரசாங்கத்தின் நிலைத்தன்மையைப் பாதுகாக்கும் அதே வேளையில், பொதுவான கொள்கைகள், சட்டங்கள் குறித்து கட்சிக்குள் ஆரோக்கியமான விவாதங்களை அனுமதிக்க வேண்டும்.

பரிந்துரை 5: இணைப்பு குறித்த விதிவிலக்கை நீக்குதல்

சட்டமன்றக் கட்சியின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் ஆதரிக்கும் "இணைப்பை" தகுதி நீக்கத்திலிருந்து பாதுகாக்கும் பத்தி 4 நீக்கப்பட வேண்டும். குழுவாகத் தாவுவது என்பதும் தனிநபர் தாவுவதைப் போலவே வாக்காளர்களின் ஆணைக்கு இழைக்கப்படும் துரோகமே ஆகும். இந்த விதிவிலக்கைத் தக்கவைப்பது மக்கள்

சம்மதமின்றித் தொகுதிகளை மொத்தமாக விற்பதைச் சட்டப்பூர்வமாக்குகிறது.

பரிந்துரை 6: பெருமளவிலான பதவி விலகல் என்னும் சட்டக் குறைபாட்டைக் களைதல்

கர்நாடகா (2019), மத்தியப் பிரதேசம் (2020) ஆகிவற்றில் காணப்பட்ட திட்டமிடப்பட்ட பெருமளவிலான பதவி விலகல்களைத் தடுக்க, அத்தகைய விலகல்களையும் "கட்சித் தாவல்கள்" என்றே அரசமைப்புச் சட்ட அளவில் வகைப்படுத்த வேண்டும்; அப்போதுதான் ஆறு ஆண்டுத் தடை (பரிந்துரை 3–ல் முன்மொழியப்பட்டுள்ளது) அவர்களுக்குப் பொருந்தும்.

பத்தாவது அட்டவணையின் பத்தி 2(1)(a)–இல் திருத்தம் செய்து, தானாக முன்வந்து கட்சி உறுப்பினர் பதவியைத் துறத்தல் என்பது குறித்து ஒரு *விளக்கம்* சேர்க்கப்பட வேண்டும். இது பதவி விலகல்கள் குறித்த அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 101(3)(b), 190(3)(b) ஆகியவற்றை விட மேலோங்கியதாக இருக்க வேண்டும். ஒரு பதவி விலகல் என்பது பத்தாவது அட்டவணையைத் தவிர்க்கவோ அல்லது அரசாங்கத்தை *மாற்றவோ, முன்கூட்டியே திட்டமிடப்பட்ட, அல்லது ஒத்துழைப்புடன் செய்ப்பட்ட செயல்* என்று விசாரணையில் கண்டறியப்பட்டால், அந்தப் பதவி விலகல் "தானாக முன்வந்து உறுப்பினர் பதவியைத் துறந்ததாகவே" கருதப்பட வேண்டும்.

இது ஒரு சட்டப் புனைவை உருவாக்குகிறது; இதன் மூலம், "சாதாரண பதவி விலகல்" என்ற போர்வையை விலக்கி, அதற்குப் பின்னால் உள்ள உண்மையை ஆராயும் அதிகாரம், தீர்ப்பு வழங்கும் அமைப்புக்குக் கிடைக்கிறது. ஒருவேளை அந்தப் பதவி விலகலுக்குப் பின்னால் திட்டமிடப்பட்ட உள்நோக்கம் இருப்பது நிரூபிக்கப்பட்டால், அது கட்சித் தாவலாகவே கருதப்படும். இது முறைப்படியான தகுதி நீக்கத்திற்கும், அதன் விளைவாக ஆறு ஆண்டுகாலத் தேர்தல் தடைக்கும் வழிவகுக்கும்.

பரிந்துரை 7: சுதந்திரமான மற்றும் கால வரம்பிற்குட்பட்ட தீர்ப்பு முறை

அரசியல் சார்புள்ள காலதாமதத்தைத் தவிர்க்கவும், நபம் ரபியா வழிமுறை போன்ற நடைமுறைகளை ஆயுதமாகப் பயன்படுத்தி, சபநாயகரை நீக்கும் தீர்மானம் கொண்டுவந்து, சபாநாயகரை முடக்குவதைத் தடுக்கவும், சபாநாயகரிடமிருந்து தீர்ப்பு வழங்கும் அதிகாரம் பறிக்கப்பட வேண்டும். கட்டமைப்பு அளவில், ஆளும் பெரும்பான்மையைச் சார்ந்துள்ள

சபாநாயகர், அந்தப் பெரும்பான்மையின் இருப்பைத் தீர்மானிக்கும் வழக்குகளில் நடுவராக இருப்பது பொருத்தமற்றது.

அதற்குப் பதிலாக, தீர்ப்பு வழங்கும் அதிகாரம் சுதந்திரமான நீதித்துறை அமைப்பிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். கட்சித் தாவல் புகார்கள் எப்போதாவது எழும் என்பதால் நிரந்தரத் தீர்ப்பாயம் தேவையில்லை. தேர்தல் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் ஏற்கனவே உயர்நீதிமன்றத்திடம் இருப்பதால் (*மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம்*, 1951 – பிரிவு 80A), பத்தாவது அட்டவணை வழக்குகளையும் உயர்நீதிமன்றமே விசாரிக்க வேண்டும். இதற்கான அதிகார வரம்பு, அந்தந்த மாநில உயர் நீதிமன்றத்திடமே இருக்க வேண்டும். பல மாநிலங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சித் தாவல் தொடர்பான வழக்குகள் எழும்போது, விரைவான தீர்வு மற்றும் சீரான நடைமுறையை முன்னிறுத்தி, தொடர்புடைய அனைத்து வழக்கு விசாரணைகளையும் உச்சநீதிமன்றம் ஒரே உயர்நீதிமன்றத்திற்கு மாற்றலாம்.

காலதாமதம் சட்டமன்றத்திலிருந்து நீதித்துறைக்கு மாறிவிடக் கூடாது. "தனித்தனியாகக் கட்சித் தாவும்" காலம் இப்போது "ஒட்டு மொத்தமாக கட்சித்தாவும்" காலமாக மாறிவிட்ட தருணத்தில், இதுவே அரசாங்கங்களை அமைப்பது, தொடர்வது, கவிழ்ப்பது ஆகியவற்றை தீர்மானிக்கின்றன. ஆகவே, இந்த வழக்குகளுக்கு அதிக அளவிலான நீதித்துறை முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். நியமிக்கப்பட்ட அமர்வு இந்த மனுக்களைத் நாள்தோறும் விசாரித்து, *60 நாட்களுக்குள்* இறுதித் தீர்ப்பை வழங்க வேண்டும்.

விசாரணை நிலுவையில் இருக்கும்போது, குற்றம் சாட்டப்பட்ட உறுப்பினர்கள் இடைக்கால இடைநீக்கம் செய்யப்பட வேண்டும். அவர்கள் வாக்களிக்கவும், நம்பிக்கை வாக்கெடுப்புகளில் பங்கேற்கவும் அல்லது அமைச்சர் பதவி வகிக்கவும் தடை விதிக்கப்பட வேண்டும். இது தீர்ப்பு வருவதற்கு முன் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதைத் தடுக்கின்றது. மேலும் தீர்ப்பளிக்கப்படும் வரை, சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சித் தாவல் மூலம் ஆதாயம் ஈட்ட முடியாது என்பதை உறுதி செய்கிறது.

மேலும், உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யலாம்; அங்கேயும் *60 நாட்களுக்குள்* வழக்கு முடிக்கப்பட வேண்டும். இந்தக் காலக்கெடுவைக் உறுதியாகக் கடைப்பிடிக்காவிட்டால், நீதிமன்றம் அளிக்கும் தீர்வு பயனற்றதாகிவிடும்.

இந்த வெளிப்படையான மற்றும் கட்டுப்படுத்தும் நீதித்துறை செயல்முறையை உட்பொதிய, பத்தாவது அட்டவணையின் பத்தி 6 திருத்தம் செய்யப்பட வேண்டும்.

பரிந்துரை 8: கட்சித் தாவலுக்கான தூண்டுதல்களைக் குற்றமாக்குதல்

சீதா சோரன் எதிர் இந்திய ஒன்றியம் (2024)[16] *[Sita Soren v. Union of India* (2024)] வழக்கில் உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியபடி, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 105 மற்றும் 194 கீழ் சட்டமன்றப் பதவி மூலம் சலுகை பெறுதல் இலஞ்சம் எனக் கருத முடியாது. எனவே, சட்டம் குறிப்பாக "அரசியல் குதிரை பேரத்தை" இலக்கு வைக்க வேண்டும். கட்சித் தாவலைத் தூண்டுவதற்காக வழங்கப்படும் பணம், ஒப்பந்தங்கள், அமைச்சர் பதவிகள் அல்லது இதர அரசியல் சலுகைகள் ஆகியவற்றைத் தனித்தனி குற்றவியல் குற்றங்களாக வரையறுக்க ஊழல் தடுப்புச் சட்டங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும்.

V. இதர சீர்திருத்தங்கள்

இவை நேரடியாக ஒன்றிய–மாநில உறவுகள் சார்ந்தவை அல்ல என்றாலும், கூட்டாட்சி உறவுகளின் அடிப்படையான மக்களாட்சி முறை அடித்தளத்தை வலுப்படுத்த இக்கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் அவசியம் ஆகும்.

பரிந்துரை 9: வாக்களிக்கும் உரிமையை அடிப்படை உரிமையாகவும் அடிப்படை கடமையாகவும் மாற்றுதல்

இறையாண்மை மக்களிடமே உள்ளது என்றும் தங்களுக்கு தாங்களே இந்த அரசமைப்பை மக்கள் வழங்கிக் கொண்டார்கள் என்றும் அரசமைப்பு முகப்புரை கூறுகிறது. ஆனால் 75 ஆண்டுகளுக்குப் பிறகும், அந்த இறையாண்மையின் முக்கியக் கருவியான 'வாக்களிக்கும் உரிமை' அரசமைப்பின் பகுதி IIIன் கீழ் ஒரு அடிப்படை உரிமையாக இல்லை. இதுபற்றி, அரசமைப்புச் சட்டப் பிரிவு 326, 1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 62 வரை காணப்படுகிறது. என்.பி. பொன்னுசாமி எதிர் தேர்தல் நடத்தும் அதிகாரி (1952)[17] *[N.P. Ponnuswami v. Returning Officer* (1952)] வழக்கில், வாக்களிக்கும் உரிமை என்பது "சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஒன்று" என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அடுத்ததாக ஜோதி பாசு எதிர் தேபி கோஷல் (1982)[18]

---

[16] (2024) 5 SCC 629.

[17] AIR 1952 SC 64.

[18] (1982) 1 SCC 691.

[Jyoti Basu v. Debi Ghosal (1982)] வழக்கில், தேர்ந்தெடுக்கும் உரிமையானது, "ஜனநாயகத்திற்கு அடிப்படையானதாக இருந்தாலும்", அது ஓர் அடிப்படை உரிமையோ அல்லது பொதுச் சட்ட உரிமையோ அல்ல. அது வெறும் சட்டரீதியான உரிமை மட்டுமே என்று நீதிமன்றம் கூறியது. மக்கள் சிவில் உரிமைக் கழகம் எதிர் இந்திய அரசு (2003)[19] *[People's Union for Civil Liberties (PUCL) v. Union of India* (2003)] வழக்கில், மூன்று நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு மூன்று மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்தது. ஒரு நீதிபதி வாக்குரிமையை 'அரசமைப்புச் சட்ட உரிமை' என்றும், மற்றொருவர் அது 'வெறும் சட்ட உரிமை' என்றும், மூன்றாமவர் அது 'அரசமைப்பு மற்றும் சட்ட உரிமை ஆகிய இரண்டுமே' என்றும் கருத்து தெரிவித்தனர். இறுதியாக, மக்கள் சிவில் உரிமைக் கழகம் எதிர் இந்திய அரசு (2013)[20] *[PUCL v. Union of India* (2013)] வழக்கில், "வாக்குரிமை என்பது அடிப்படை உரிமையோ அல்லது அரசமைப்புச் சட்ட உரிமையோ அல்ல என்பதில் எவ்வித முரண்பாடும் இல்லை; அது ஒரு சாதாரண சட்ட உரிமை" என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

தென்னாப்பிரிக்காவில், வாக்களிக்கும் உரிமை வெளிப்படையாக அடிப்படை உரிமை ஆகும்; அங்கு உரிமைகளின் சட்டத்தின் பிரிவு 19(3)(A)–இல் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. பிரேசிலில், வாக்களிக்கும் உரிமை அரசமைப்புச் சட்டப் பிரிவு 14–இல் நிலைநிறுத்தப்பட்டுள்ளது; மேலும் இந்த அரசமைப்புச் சட்டப் பிரிவு "உட்பொதிந்த விதி" (clausula pétrea) என பாதுகாக்கப்படுகிறது; இதன் பொருள் அது திருத்தப்படவோ மற்றப்படவோ முடியாது. மேலும், வாக்காளர் பதிவு, வாக்களித்தல் 18 முதல் 70 வயது வரை உள்ள அறிவுள்ள குடிமக்களுக்கான கட்டாயமான சமூக கடமை ஆகும்; அதனைச் செய்யவில்லையெனில், தண்டனைகள் உள்ளன.

அடிப்படை உரிமை என்பதிலிருந்து வாக்குரிமை விலக்கி வைக்கப்பட்டிருப்பதால், பிற குடிமை உரிமைகளுடன் ஒப்பிடுகையில், வாக்காளருக்கு நீதிமன்றம் மூலம் நிலைநாட்டப்படும் பாதுகாப்பு மட்டுப்படுத்தப்படுகிறது. எனவே, அரசமைப்புச் சட்டம் பகுதி IIIல், வெளிப்படையாக, *வாக்களிப்பது ஓர் அடிப்படை உரிமை* என்கிற ஏற்பாட்டைச் செருக திருத்தம் செய்யப்பட வேண்டும்; நியாயமான கட்டுப்பாடுகளுக்கு மட்டுமே உட்பட்டது. இதே போன்று, பகுதி IV–A *வாக்களிக்கும் அடிப்படைக் கடமையை* உள்ளடக்க திருத்தம் செய்யப்பட

---

[19] (2003) 4 SCC 399.

[20] (2013) 10 SCC 1.

வேண்டும்; செய்யவில்லையெனில், தண்டனைக்கு உரிய கடமையாக அல்ல, மாறாகச் சமூகப் பொறுப்பின் உறுதிப்பாடாகக் கருதப்பட வேண்டும்.

பரிந்துரை 10: மக்கள் மன்ற வயது வரம்புகளைச் சீரமைத்தல்

இப்போது, அரசமைப்புச் சட்டப் பிரிவு 84(b) பரிந்துரையின்படி மக்களவைக்கு 25 வயது, மாநிலங்களவைக்கு 30 வயது என்று வயது வரம்புகள் உள்ளன. முரண்பாடாக, ஒரு 25 வயது இளைஞர் பிரதமராக முடியும், ஆனால் மாநிலங்களவையில் அமர முடியாது. இந்தியாவில் உள்ளதைப் போன்றே, இரு அவைகளிலும், அமெரிக்காவிலும் ஜப்பானிலும் இதே வயது வரம்பு உள்ளது. ஆனால், ஆஸ்திரேலியா, ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, பெல்ஜியம் ஆகியவற்றில் இரு அவைகளுக்கும் 18 வயதே குறைந்த அளவு வரம்ப் ஆகும்.

இளைஞர் பிரதிநிதித்துவத்திற்கான இந்தத் தடையை நீக்க, மக்களவை, மாநிலங்களவை, மாநிலச் சட்டமன்றங்கள் ஆகிய அனைத்து அவைகளுக்கும் குறைந்தபட்ச வயது வரம்பை 25 ஆண்டுகளாகச் சீரமைக்க, அரசமைப்புச் சட்டப் பிரிவு 84(b) திருத்தம் செய்யப்பட வேண்டும். இதே நடைமுறையை மாநிலச் சட்டமன்றப் பேரவைகள் மற்றும் சட்டமேலவைகளுக்கும் விரிவுபடுத்தும் வகையில், அரசமைப்புச் சட்டப் பிரிவு 173(b) திருத்தப்பட வேண்டும்.

பரிந்துரை 11: விசாரணைக் கைதிகள் மற்றும் இறுதித் தீர்ப்பு வராத தண்டனை பெற்றவர்களின் வாக்குரிமை

1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 62(5), சிறையில் உள்ள எவரும் வாக்களிக்கத் தடை விதிக்கிறது. இதில் விசாரணைக் கைதிகளும் (குற்றமற்றவர் என்று கருதப்படுபவர்கள்), *தண்டனை பெற்றவர்களும்* அடங்குவர். எவ்வாறாயினும், விசாரணைக் கைதிகள் தேர்தலில் *போட்டியிடத்* தடை இல்லை. ஒருவர் போட்டியிட்டு வெற்றி பெற முடியும், ஆனால் அவரே தனக்கு வாக்களிக்க முடியாது. பிரிவு 62(5)–இன் விதிவிலக்கு, தடுப்புக் காவலில் உள்ள நபர்களை வாக்களிக்க வெளிப்படையாக *அனுமதிக்கிறது;* ஆனால் விசாரணையில் உள்ளவர்களுக்கு அதே உரிமையை மறுக்கிறது. இரு குழுவினரும் குற்றத்திற்காக குற்றவாளிகள் என தண்டிக்கப்படாதவர்கள். இந்த வேறுபட்ட அணுகுமுறை அரசமைப்புச் சட்டப் பிரிவு 14ஐ (சமத்துவ உரிமை) மீறுவது ஆகும்.

உலம் முழுவதும் நீதிமுறை சிறைக் கைதிகள் வாக்குரிமை அளிக்க மறுப்பதைப் பெருமளவில் நிராகரிக்கிறது. விசாரணையில் உள்ளவர்கள்

அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, பிரேசில், ஜெர்மனி, ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, பெல்ஜியம், ஜப்பான் ஆகிய நாடுகளில் வாக்களிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். குற்றவாளிகளாகத் தண்டிக்கப்பட்ட சிறைக் கைதிகளும் கனடா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா (தண்டனை மூன்று ஆண்டுகளுக்குக் குறைவாக இருந்தால்), ஜெர்மனி, ஸ்பெயின் (நீதிபதி தடை செய்யாவிட்டால்) ஆகிய நாடுகளில் வாக்களிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

1951–ஆம் ஆண்டு *மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்* பிரிவு 62(5), வெளிப்படையாக வாக்குரிமையைப் பின்வருவோருக்கு நீட்டிக்கத் திருத்தம் செய்யப்பட வேண்டும்:

(i) விசாரணைக் கைதிகளுக்கும், காவலில் உள்ளவர்களுக்கும் (குற்றமற்றவர் என்ற கருதுகோளை நிலைநாட்ட); மற்றும்

(ii) மேல்முறையீடு நிலுவையில் உள்ள, தண்டனை இன்னும் இறுதி செய்யப்படாதவர்களுக்கும் (எதிர்காலத்தில் தீர்ப்பு மாற்றப்படக்கூடும் என்பதால், மீட்க முடியாத உரிமை இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில்) வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும்.

VI. முடிவுரை

இந்தியத் தேர்தல் ஆணையத்திடம், தேர்தல் மேலாண்மை அதிகாரம் குவிக்கப்பட்டது, சுதந்திரத்திற்குப் பிந்தைய அசாதாரணமான சூழலால் உருவானது; அப்போது மாநில அலகுகளின் தகுதியும் நடுநிலைமையும் குறித்து ஐயப்பாடுகள் நிலவின. ஆனால் சமகால இந்தியாவில், அதிகப்படியான அதிகாரக் குவிப்பால் ஏற்படும் மக்களாட்சி முறையின் சிக்கல்கள், அதிகரக் குவிப்பால் ஏற்படும் நிர்வாக நன்மைகளை விடவும், ஆபத்துகள் அதிகமானவை. உலகளாவிய சிறந்த கூட்டாட்சி நடைமுறைகளுக்கு ஏற்ப, மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களை நடத்தும் பொறுப்பைச் சுதந்திரமான மாநிலத் தேர்தல் ஆணையங்களிடம் ஒப்படைக்க வேண்டும்; இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வரம்பை ஒன்றியத் தேர்தல்களுடன் மட்டும் மட்டுப்படுத்த வேண்டும். இத்தகைய அதிகாரப் பரவலாக்கல், ஒரே இடத்தில் நிகழும் நிறுவனத் தோல்விகளின் அபாயத்தைக் குறைப்பதோடு, ஜனநாயகத்தின் மீள்திறனை மேம்படுத்தும்.

தற்போது நிலவும் கூட்டாட்சி சமநிலையின்மையை 'ஒரே நாடு ஒரே தேர்தல்' முன்மொழிவு மேலும் தீவிரப்படுத்துகிறது. சட்டமன்றப்

பொறுப்புடைமையை இறுக்கமான கால அட்டவணைக்குக் கீழ்ப்படுத்துவதன் மூலம், இந்த முன்மொழிவு மக்களாட்சி முறையின் தேர்வை விட, நிர்வாக வசதிக்கே முன்னுரிமை அளிக்கிறது. "மீதமுள்ள பதவி காலத்திற்கான" தேர்தல்கள், குறைக்கப்பட்ட பதவிக் காலங்கள் ஆகிய இம்முறையின் முக்கிய அம்சங்கள், அரசமைப்புக் கோட்பாடுகளுக்குப் புதியவை; நாடாளுமன்ற ஆட்சி முறையின் தர்க்கத்தோடு பொருந்தாதவை. எந்தவொரு முதிர்ந்த மக்களாட்சியும், மக்கள் ஆணையை வழங்குவதற்கான வாக்காளர்களின் உரிமையை, ஒருங்கிணைக்கப்பட வேண்டிய வெறும் நிர்வாகக் காரணியாகக் கருதுவதில்லை.

அதே வேளையில், சீர்குலைந்துள்ள கட்சித் தாவல் தடுப்பு முறையாலும் வாக்காளர்களின் ஆணை சிதைக்கப்படுகிறது. அரசியல் சார்புள்ள தீர்ப்புகள், சட்டக் குறைபாடுகள் வழியாக மொத்தமான கட்சித் தாவல்களுக்குத் தொடர்ந்து அளிக்கப்படும் ஏற்பு ஆகியவற்றால் பத்தாவது அட்டவணை மதிப்பற்றதாகி விட்டது. இதில் அர்த்தமுள்ள மாற்றத்தைக் கொண்டுவரக் கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் அவசியம். அதாவது, 'இணைப்பு' விதிவிலக்கை ஒழித்தல், பதவி விலகல் அடிப்படையிலான தப்பிக்கும் உத்திகளைக் கட்சித் தாவலாகக் கருதும் ஏற்பாடுகள் வழியாகத் தடுத்தல், தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தைக் கடுமையான கால வரம்புகளுக்கு உட்பட்டு, சுதந்திரமான நீதித்துறை அமைப்புகளுக்கு மாற்றுதல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

ஒட்டுமொத்தமாக, தேர்தல் நிர்வாகத்தைப் பரவலாக்குவது, கட்டாயமான தேர்தல் ஒருங்கிணைப்பை நிராகரிப்பது, கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்தின் நேர்மையை மீட்டெடுப்பது ஆகிய சீர்திருத்தங்கள், இந்தியாவின் தேர்தல் முறையை அடிப்படை அரசமைப்புச் சட்டக் கொள்கைகளில் மீண்டும் நிலைநிறுத்த இன்றியமையாதவை.

சான்று நூல்கள்

1. *Constituent Assembly Debates*, vol 7 (6th reprint, Lok Sabha Secretariat 2014) November 4, 1948; *Constituent Assembly Debates*, vol 8 (6th reprint, Lok Sabha Secretariat 2014) May 18, 1949, June 15, 16, 1949.
2. YB Chavan and others, *Report of the Committee on Defections* (Ministry of Home Affairs, Government of India 1969).
3. RK Trivedi, *First Annual Report* (Election Commission of India 1983) Chapter 10.
4. Dinesh Goswami, *Committee on Electoral Reforms: Report of the Committee on Electoral Reforms* (Ministry of Law and Justice, Government of India 1990) Chapter 10.
5. BP Jeevan Reddy and others, *Law Commission of India: One Hundred Seventieth Report* (Ministry of Law, Government of India 1999).
6. M.N. Venkatachaliah and others, *Report of the National Commission to Review the Working of the Constitution*, vol 1 (Government of India, 2002) Chapter 4, paras 4.33.1–4.33.3.
7. Alexander Hamilton, 'Federalist No. 59' in Michael A. Genovese (ed), *The Federalist Papers* (Palgrave Macmillan 2009) 149.
8. AP Shah and others, *Law Commission of India: Two Hundred Fifty Fifth Report* (Ministry of Law, Government of India 2015).
9. EM Sudarsana Natchiappan and others, *Seventy–Ninth Report: Feasibility of Holding Simultaneous Elections to the House of People (Lok Sabha) and State Legislative Assemblies* (Department–Related Parliamentary Standing Committee on Personnel, Public Grievances, Law and Justice, Rajya Sabha 2015).
10. Bibek Debroy and Kishore Desai, 'Analysis of Simultaneous Elections: The "What", "Why" and "How"' (2017) NITI Aayog.
11. BS Chauhan and others, *Law Commission of India: Draft Report: Simultaneous Elections* (Ministry of Law, Government of India 2018).
12. Ram Nath Kovind and others, *Report on Simultaneous Elections in India* (High Level Committee 2024).
13. The Constitution of the United States 1787, Article I(4).
14. Canadian Constitution Act 1867, Sections 91, 92.

15. Commonwealth of Australia Constitution Act 1900, Sections 9, 10, 28, 31.
16. Basic Law for the Federal Republic of Germany 1949, Articles 30, 67, 70.
17. Constitution of the Federative Republic of Brazil 1988, Articles 14, 15(3), 60.
18. The Constitution of the Republic of South Africa 1996, Section 19(3)(a).
19. Federal Constitution of the Swiss Confederation 1999, Articles 149, 150(3).

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இயல் 8

கல்வி

"மற்றொரு கருத்து... கல்வி என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது, எனவே அதை மையத்திற்கு மாற்ற வேண்டும் என்று கூறப்படுகின்றது. இந்த வாதத்தை தர்க்க அளவில் இறுதி எல்லை வரை நீட்டித்தால், இப்போது மாகாணங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்துச் செயல்பாட்டுத் துறைகளையும் மையத்திற்கே மாற்ற வேண்டியிருக்கும்... இந்தத் துறை... நான் இப்போது குறிப்பிடப்போகும் மூன்றில் ஏதேனும் ஒன்றை நிறைவு செய்ய வேண்டும் என்று... எனக்குத் தோன்றுகிறது. முதலாவதாக, அது நாட்டின் பாதுகாப்புடன் நேரடியான உடனடித் தொடர்பைக் கொண்டிருக்க வேண்டும். இரண்டாவதாக, அது மைய அரசால் மட்டுமே சிறப்பாக நிர்வகிக்கப்படக் கூடிய தன்மையைக் கொண்டிருக்க வேண்டும்... மூன்றாவதாக, தேசிய நலன் கருதி ஒருமைப்பாட்டிற்கு இன்றியமையாத தேவையாக இருக்கும் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும்... ஏதேனும் துறையில் ஒருமுக தன்மை தேவையற்றதாக அமைந்து, அங்கு பன்முகக்கூறும் மாறுபாடும் நிலவ வேண்டும் என்றால், அது கல்வித் துறையாகத்தான் இருக்க முடியும்."

– வி.எஸ். சர்வத்தே,
அரசமைப்புச் சட்ட அவை விவாதங்கள் (1949)[1]

I. அறிமுகம்

இந்தியாவின் அரசமைப்புச் சட்டக் கட்டமைப்பில் கல்வி என்பது தனித்துவமான, உணர்வுப்பூர்வமான இடத்தைப் பெற்றுள்ளது. இது வரலாறு, பண்பாடு, மொழி, சமூகப் பொருளாதார முன்னேற்றம்,

---

[1] *Constituent Assembly Debates,* vol 9 (6th reprint, Lok Sabha Secretariat 2014) 789, August 31, 1949.

கூட்டாட்சி முறை, தேசக் கட்டுமானம் ஆகியவை சந்திக்கும் புள்ளியாக உள்ளது. கல்வி என்பது ஒரே நேரத்தில் ஒருவருக்கு உரிமையளிக்கும் கருவியாகவும், அதே நேரத்தில் சமனற்ற சமூக அமைப்பில் ஆதிக்கம் செலுத்தும் ஆயுதமாகவும் விளங்குகிறது. கல்வி குறித்த முடிவுகளே எந்த அறிவு மதிக்கப்பட வேண்டும், எந்தத் திறன்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும், யாருடைய வரலாறு நினைவுகூரப்பட வேண்டும், நாட்டின் குடிமை–பொருளாதார வாழ்வில் முழுமையாகப் பங்கேற்க யாருக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கின்றன. இந்தியா போன்ற பன்முகத்தன்மை கொண்ட சமுதாயத்தில், மொழிப் பன்முகத்தன்மை, பண்பாட்டுப் பன்முகத்தன்மை, வட்டாரத் தனித்துவங்கள் ஆகியவற்றைச் சிதைக்காமல், ஓரிடத்தில் மையப்படுத்தப்பட்ட வார்ப்புருவின் வழியாகக் கல்வியை நிர்வகிக்க முடியாது. எனவே, கல்வியில் அதிகாரப் பரவல் என்பது வெறும் நிர்வாக வசதி மட்டுமல்ல, அது மக்களாட்சி முறையின் தவிர்க்க இயலாத கூறு ஆகும்.

அரசமைப்புச் சட்டச் சிற்பிகள் இந்த உண்மையை உணர்ந்திருந்தனர். 1950–இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசமைப்புச் சட்ட வடிவமைப்பு, கல்வியை முதன்மையாக மாநிலங்களின் பொறுப்பில் விட்டுவைத்திருந்தது; அதே வேளையில், உயர்கல்வியில் ஒருங்கிணைப்பும் குறைந்தபட்ச கல்வித் தரங்களைப் பராமரிப்பதிலும் ஒன்றியத்திற்கு வரையறுக்கப்பட்ட, கவனமாகக் குறைக்கப்பட்ட பங்கினை வழங்கியது. இந்த ஏற்பாடு, அரசமைப்புச் சட்ட அவையின் விவாதங்கள், காலனிய அனுபவம், ஒப்பீட்டு கூட்டாட்சி முன்மாதிரிகள், கல்வித் துறையின் உயிர்ப்பு சுயாட்சியிலும் உள்ளூர் தேவைகளுக்குப் பதிலளிப்பதிலும்தான் தங்கியுள்ளது என்கிற தெளிவான புரிதல் ஆகியவற்றால் உருவானது.

இவ்வாறு, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, ஜெர்மனி போன்ற வளர்ந்த கூட்டாட்சி நாடுகள் இன்றும் பின்பற்றி வரும் அதே கூட்டாட்சி முறையின் சமநிலையுடன்தான் இந்தியாவும் 1950–இல் தனது பயணத்தைத் தொடங்கியது. இருப்பினும், காலப்போக்கில் இந்தச் சமநிலை படிப்படியாகச் சிதைக்கப்பட்டுள்ளது. சீரான தரநிலைகள், தேசிய ஒருமைப்பாடு, வட்டார ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், மாநிலங்களின் திறன் மீதான சொல்லப்படாத அவநம்பிக்கை ஆகியவற்றின் பெயரால் இந்த மையப்படுத்துதல் நியாயப்படுத்தப்பட்டது. நெருக்கடி நிலையின்போது இயற்றப்பட்ட *நாற்பத்து இரண்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (1976), விரிவான நீதித்துறை விளக்கங்கள், ஒழுங்குமுறை அமைப்புகளின் எல்லை மீறல்கள், உயர் அழுத்த தேசிய நுழைவுத் தேர்வுகள், நிதி சார்ந்த நிபந்தனைகள்

ஆகியவற்றின் வழியாகக் கல்வி மீதான அதிகாரம் படிப்படியாக ஒன்றியத்திற்கு இடம்பெயர்ந்துள்ளது. ஒருங்கிணைப்பு என உத்தேசிக்கப்பட்டது கட்டுப்பாடாகக் கடினப்பட்டுள்ளது; வழிகாட்டுதல் என்பது நுண்மேலாண்மைக்கு வழிவகுத்துள்ளது. அதிகாரம் ஒன்றிய அரசை நோக்கி நகர்ந்தாலும், கல்வியைக் கொடுக்கும் பொறுப்பு மாநிலத்திடமே தங்கியுள்ளது. மாணவர் சேர்க்கை, பாடத்திட்டம், நிறுவன அங்கீகாரம், ஆளுகை போன்ற முக்கிய கொள்கை வழிமுறைகள் மீதான கட்டுப்பாடு சுருங்கிவிட்ட நிலையிலும், கல்வி முடிவுகளுக்கு மாநிலங்களே அரசியல் அளவில் பொறுப்பேற்க வேண்டிய நிலையில் உள்ளன.

மையப்படுத்துதல், வாக்குறுதி அளித்த விளைவுகளை ஏற்படுத்தியிருந்தால், இவை அனைத்தையும் நியாயப்படுத்தியிருக்கலாம். அதிகாரப் பரவல் கொண்ட கூட்டாட்சி நாடுகள், உலகளாவிய கல்வி சராசரிகள் ஆகியவற்றோடு, இந்தியாவின் அறிவிக்கப்பட்ட இலக்குகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இதற்கான பின்னடைவுகள் தெளிவாக உள்ளன. ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னரும், இந்த மையப்படுத்தப்பட்ட மாதிரி முறை கல்விக்கான வாய்ப்பு, தரம், சமத்துவம், அல்லது உலகளாவிய போட்டித் திறன் ஆகியவற்றை வழங்குவதில் தோல்வியடைந்துள்ளது. மாறாக, அது உருவாக்கியவை கடும் ஒழுங்குமுறைகள், நாள்பட்ட நிதிப்பற்றாக்குறை, தவறான முன்னுரிமைகள், தெளிவற்ற பொறுப்புக்கூறல், நலிவடைந்த நிறுவனங்கள் மட்டுமே. இந்தத் துறைக்கு இப்போது தேவைப்படுவது என்னவென்றால், மையப்படுத்துதல் தவறு என்பதை நேர்மையாக ஒப்புக்கொள்வதும், அதைத் தொடர்ந்து அறிவுசார்ந்த தீர்க்கமான முறையில் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதும், 1976க்கு முந்தைய அரசமைப்பு முறைக்குத் திரும்புவதுமே ஆகும்.

II. கல்வி குறித்த அரசமைப்புச் சட்ட அவையின் விவாதங்கள்

பிரித்தானிய ஆட்சியின் இந்திய அரசாங்கச் சட்டம், 1935, இந்தியாவின் மொழிப் பண்பாட்டுப் பன்முகத்தன்மையை ஏற்று, "கல்வி" என்பதைத் தெளிவாக மாகாண உரிமையாகக் கருதியது. மாகாணச் சட்டம் இயற்றும் பட்டியலின் (பட்டியல் II) 17வது இனத்தின் கீழ், இச்சட்டம் மாகாணங்களுக்கு *"கல்வி"* மீது தனித்த அதிகாரத்தை வழங்கியது; அதே சமயம் கூட்டாட்சி சட்டம் இயற்றும் பட்டியலின் (பட்டியல் I) 13வது

இனம் மத்திய அரசின் கட்டுப்பாட்டை பனாரஸ் இந்து பல்கலைக்கழகம், அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம் ஆகியவற்றோடு மட்டும் வரையறுத்துக் கொண்டது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அன்றைய ஏற்பாடு, மாநிலக் கட்டுப்பாட்டில் கல்வி இருக்க வேண்டும் என்பதற்கு ஆதரவு அளிக்கும் வலுவான முன்னுதாரணத்தை வழங்கியது. அரசமைப்புச் சட்ட அவை கூடியபோது, வரைவு அரசமைப்புச் சட்டம் பெரும்பாலும் இந்த அமைப்பையே பிரதிபலிக்கும் வகையில் "பட்டியல் I–இன் 40வது இனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை தவிர பல்கலைக்கழகங்கள் உட்பட கல்வி"யை மாநிலப் பட்டியலில் (இனம் 18) வைத்தது. மேலும் ஒன்றியத்திற்கு பின்வரும் குறிப்பிட்ட அதிகார இனங்களை ஒதுக்கியது:

- வரைவு இனம் 40 (தற்போதைய இனம் 63): குறிப்பிட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் (பனாரஸ் இந்து பல்கலைக்கழகம், அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம், டெல்லி பல்கலைக்கழகம்). டெல்லி பல்கலைக்கழகம் "நாடாளுமன்றத்தால் சட்டத்தின் வழியாக தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் என அறிவிக்கப்படும் வேறு எந்த நிறுவனமும்" 1949 ஆகஸ்ட் 30 அன்று ஒரு திருத்தத்தின் வாயிலாகச் சேர்க்கப்பட்டன.
- வரைவு இனம் 40A (தற்போதைய இனம் 64): முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஒன்றியத்தின் நிதியுதவி பெற்று, நாடாளுமன்றச் சட்டத்தால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக அறிவிக்கப்படும் அறிவியல் அல்லது தொழில்நுட்ப நிறுவனங்கள். இது பின்னர் ஒரு திருத்தத்தின் வழியாக வரைவு அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டது.
- வரைவு இனம் 57 (தற்போதைய இனம் 65): ஆராய்ச்சி, தொழில்முறை, தொழில்நுட்பப் பயிற்சி அல்லது சிறப்பு ஆய்வுகளை மேம்படுத்துவதற்கான ஒன்றிய முகமைகள், நிறுவனங்கள்.

வரைவு இனம் 57A (தற்போதைய இனம் 66) என்பது பி.ஆர். அம்பேத்கர் அவர்களால் கொண்டுவரப்பட்ட புதிய இனம் ஆகும். இது "உயர்கல்வி அல்லது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள், ஆராய்ச்சிக்கான நிறுவனங்கள் ஆகியவற்றின் தரநிலைகளை ஒருங்கிணைத்தலும் பராமரித்தலும்" ஆகிய அதிகாரங்களை ஒன்றியத்திற்கு வழங்கியது. இது ஆகஸ்ட் 31, 1949–ஆம் தேதியில் கடும் விவாதத்தைத் தூண்டியது.

உறுப்பினர்களில் ஒரு குறிப்பிடத்தக்க பிரிவினர், இந்த அதிகாரம் மாநில உரிமைகளைப் பறித்துவிடும் என்று அஞ்சினர்.

மாகாணங்களிடம் நிதி வசதி இல்லாததால், கல்வியை ஒன்றியத்திற்கு மாற்ற வேண்டும் என்ற வாதத்தை வி.எஸ். சர்வத்தே மறுத்தார். மாநிலங்களிடம் நிதி இல்லை என்றால், நிதி ஆணையம் தலையிட்டு மானியங்களை வழங்க வேண்டும் என்று கூறினார். இதற்காக, "ஒருங்கிணைத்தலும் பராமரித்தலும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "நிதி உதவி அல்லது பிற வழிகளில் மேம்படுத்துதல்" என்று மாற்றுவதற்கான திருத்தத்தைக் கொண்டுவந்தார்.

நசிருதீன் அகமது குறிப்பிடுகையில், பி.ஆர். அம்பேத்கர் முன்மொழிந்த இனம் "மிகவும் தெளிவற்ற தன்மையைக் கொண்டது" என்றார். வி. எஸ். சர்வத்தேவின் திருத்தத்தை ஆதரித்துப் பேசிய அவர்: "நிதிதான் முக்கியமான கூறு. உண்மையில், முக்கியமான மாகாண அதிகார உரிமையாக இருக்கும் கல்வியில் ஒன்றியம் தலையிட வேண்டுமானால், அது நிதி உதவியின் வழியாக இருக்க வேண்டுமே தவிர, வெறும் *இலவச ஆலோசனைகள்* அல்லது விமர்சனங்கள், கருத்துக்கள் வழியாக இருக்கக் கூடாது. டாக்டர் அம்பேத்கர் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்... இது மாகாணங்களின் மீதான ஒன்றியத் தலையீட்டை நிதி உதவியாகக் குறைக்கும். அதுவே உண்மையில் விரும்பத்தக்க தலையீடாக இருக்கும்" என்றார்.

இலட்சுமிநாராயண் சாஹு இந்த இனத்தை எதிர்த்துப் பேசுகையில், "கல்வி மாநில உரிமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், பல்கலைக்கழகங்கள் இதன்தொடர்பாக அனைத்து அதிகாரங்களையும் கொண்டிருக்க வேண்டும். ஒன்றியத்திற்கு எந்த அதிகாரமும் இருக்கக்கூடாது என்பது எனது வாதம்... இந்தியாவில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் கல்கத்தா பல்கலைக்கழகமே மிக உயர்ந்த சுயாட்சியை அனுபவித்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போதும் அது மற்ற பல்கலைக்கழகங்களை விட சுதந்திரமாகச் செயல்படுகிறது. அது அனுபவிக்கும் சுதந்திரத்தின் காரணமாகவே, அதன் விளைச்சல்கள் (மாணவர்கள்) தேசத்திற்கு மிகவும் பயனுள்ளவர்களாக இருப்பதைக் காண்கிறோம். பல்கலைக்கழகங்களின் அதிகாரங்களைக் குறைக்க முயல்வதால் இந்தத் திருத்தத்தை எதிர்க்கிறேன்" என்றார்.

மாறாக, பசந்த குமார் தாஸ், சிப்பன் லால் சக்சேனா, பூல் சிங் உள்ளிட்ட பல உறுப்பினர்கள், முழுமையான அதிகாரப் பரவல் குழப்பத்திற்கும், சீரற்ற குறைந்த தரம் நிலவுவதற்கும் வழிவகுக்கும் என்று வாதிட்டனர்.

பி.ஆர். அம்பேத்கர் 57Aவது வரைவு இனத்தை ஆதரித்துப் பேசுகையில், தரநிலைகளில் ஒருமைத்தன்மையை உறுதிப்படுத்த, இந்த இனம் அவசியம் என்றார். வெவ்வேறு பல்கலைக்கழகங்கள் வெவ்வேறு தேர்ச்சித் தரங்களைக் கொண்டிருக்கும் என்றும், இது "முற்றிலும் குழப்பமான நிலையை" உருவாக்கும் என்றும், பட்டங்கள் "பொருளற்றதாக" மாறி "அகில இந்திய அளவிலோ அல்லது மாநிலத் தேவைகளுக்கோ" அங்கீகரிக்கப்பட முடியாமல் போகும் என்றும் குறிப்பிட்டார்.

தரநிலைகளை "பராமரித்தல்" (maintenance) என்பதற்குப் பதிலாக "நிர்ணயித்தல்" (determination) என்ற சொல்லைப் பயன்படுத்தி வரைவு இனம் 57A (தற்போதைய இனம் 66) நிறைவேற்றப்பட்டது.

செப்டம்பர் 2,1949 அன்று நடந்த விவாதம், கல்வி மாநிலப் பட்டியலில் நீடிக்க வேண்டுமா அல்லது பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டுமா என்பதை மேலும் ஆராய்ந்தது. வரைவுக் குழுவின் சார்பில் டி.டி. கிருஷ்ணமாச்சாரி வாதிடுகையில், உயர்கல்வி, தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி, அறிவியல் ஆராய்ச்சி ஆகிய துறைகளில் மாநிலங்களின் கல்வி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்குத் தேவையான அதிகாரம் அரசமைப்புச் சட்டத்திலேயே ஒன்றியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்று வாதிட்டார். பொதுப் பட்டியலுக்குக் கொண்டுவருவதற்கான அழுத்தத்தை நிராகரித்த அவர், உயர், தொழில்நுட்ப மற்றும் அறிவியல் கல்வியை ஒருங்கிணைக்கும் அதிகாரமே போதுமானது என்று கூறி, புகழ்பெற்ற இந்த வரிகளைக் குறிப்பிட்டார்:

> "*மைய அரசாங்கம் செல்வதற்கு எதுவரை பாதுகாப்பான எல்லையோ, அதுவரை சென்றுள்ளது; எந்தவொரு மைய அரசாங்கமும் அந்த வரம்பிற்கு அப்பால் செல்வது அறிவுடைய செயலாக இருக்காது.*"

நவம்பர் 26, 1949 அன்று அரசமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, மாநிலப் பட்டியலின் இனம் 11 இவ்வாறு அமைந்தது: "பட்டியல் I–இன் 63, 64, 65, 66 மற்றும் பட்டியல் III–இன் இனம் 25 ஆகிய இனங்களின் விதிகளுக்கு உட்பட்டு, பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட கல்வி." மேலும் மாநிலப் பட்டியலில் இனம் 32 இருந்தது: "பட்டியல் I–இல் குறிப்பிட்டுள்ளவை தவிர மற்ற கழகங்கள், பல்கலைக்கழகங்களின் *உருவாக்கம், ஒழுங்குமுறை, கலைப்பு;* பதிவு செய்யப்படாத வணிக, இலக்கிய, அறிவியல், சமய முதலான சங்கங்கள், அமைப்புகள்; கூட்டுறவு சங்கங்கள் ஆகியன இருத்தல் வேண்டும்." இதற்கு

இணையாக ஒன்றியப் பட்டியலில் இனம் 44 ஏற்படுத்தப்பட்டது: "*பல்கலைக்கழகங்கள் நீங்கலாக*, வணிக நோக்கம் கொண்டதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு மாநிலத்துடன் மட்டும் அடங்கிவிடாதபடி குறிக்கோள்களைக் கொண்ட கழகங்களின் *உருவாக்கம், ஒழுங்குமுறை, கலைப்பு*" ஆகியன ஒன்றியப் பட்டியலில் இருந்தன.

நாற்பத்து இரண்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் (1976) வழியாக இனம் 11 மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப் பட்டியலுக்கு இனம் 25ஆக மாற்றப்பட்டபோது, மாநிலப் பட்டியலின் இனம் 32, ஒன்றியப் பட்டியலின் இனம் 44 ஆகியவை மாற்றப்படாமல் விடப்பட்டன. இந்த இரண்டு இனங்களையும் இணைத்துப் பார்க்கும்போது, ஒரு பல்கலைக்கழகத்தை "தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம்" என்று அறிவிப்பதைத் தவிர, ஒன்றியம் தனக்கென புதிய பல்கலைக்கழகத்தை உருவாக்க முடியாது என்பதையும், பல்கலைக்கழகங்களை "ஒழுங்குபடுத்தும்" அதிகாரம் மாநிலங்களிடமே உள்ளது என்பதையும் உணர்த்துகிறது. இனம் 66ன் வரம்பு கல்வி மற்றும் ஆராய்ச்சித் தரநிலைகளுடன் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது; பல்கலைக்கழக ஆளுகையின் அனைத்து அம்சங்களிலும் ஒன்றிய அதிகாரிகள் ஊடுருவ அனுமதிக்கும் பொதுவான உரிமைப் பட்டயமாக, 66வது இனம் எப்போதும் கருதப்படவில்லை. நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்களின் *இந்திய அரசமைப்புச் சட்டம் நடைமுறையில்? (The Constitution of India is Not What It Is* (2022)) என்கிற நூலில் குறிப்பிட்டிருப்பது போல, இனம் 32, 44 ஆகியவற்றை இணைத்துப் பார்த்தால், பல்கலைக்கழகங்கள் தொடர்பான ஒழுங்குபடுத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்தின் அதிகார வரம்பிற்கு வெளியே இருப்பதையும், அது மாநிலங்களுக்கே உரிய தனித்துவமான அதிகார உரிமையாக இருப்பதையும் உணர்த்துகிறது.

III. கடந்தகாலக் குழுக்களின் கருத்துகள்

இந்தியக் கல்வி ஆளுகை, தேசியத் தரநிலைகளுக்கும் மாநிலச் சுயாட்சிக்கும் இடையே நிலவும் தொடர்ச்சியான முரண்பாடுகளைக் காட்டுக்கிறது. அடுத்தடுத்து வந்த குழுக்கள் மையப்படுத்துவதற்கும் அதிகாரப் பரவலுக்கும் இடையே ஊசலாடி, இந்த அரசமைப்புச் சட்டச் சமநிலையைத் தொடர்ச்சியாக மாற்றம் செய்து வந்துள்ளன.

இராதாகிருஷ்ணன் ஆணையம்
(The Radhakrishnan Commission (1948–49))

சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி ஆணையம், தரநிலைகளில் சீர்மையை உறுதிப்படுத்தவும் வட்டார ஏற்றத்தாழ்வுகளைத் தடுக்கவும் ஒன்றிய ஒருங்கிணைப்பு தேவைப்படும் முக்கியமான நாட்டின் சொத்துக்கள் என பல்கலைக்கழகங்களைக் கருதியது. அதன் விளைவாக, இந்த ஆணையம், பல்கலைக்கழகக் கல்வியைப் பொதுப் பட்டியலில் சேர்க்கப் பரிந்துரைத்தது. இதனைத் தொடக்கத்திலேயே, அரசமைப்புச் சட்ட அவை நிராகரித்து, மாநிலக் கட்டுப்பாட்டையே விரும்பியது. ஆயினும், 1976–இல் நாற்பத்து இரண்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் வழியாகக் கல்வி பொதுப் பட்டியலுக்கு மாற்றப்படுவதற்கு, இந்த ஆணையத்தின் வாதங்கள் அறிவார்ந்த அடிப்படையை அமைத்துக் கொடுத்தன.

கோத்தாரி ஆணையம் (The Kothari Commission (1964–66))

இந்த ஆணையம் இந்தியக் கல்விக்கான அதிகாரப் பரவல் கொண்ட பார்வையை முன்வைத்தது. கடுமையான ஒருமுகத்தன்மையைவிட "நெகிழ்விற்கும் முனைப்புடன் செயல்படுவதற்கும்" முன்னுரிமை அளித்தது. பிற்காலத்தில் வந்த மையப்படுத்துவதற்கான அழுத்தத்திற்கு, முற்றிலும் மாறாக, கல்வியைப் பொதுப் பட்டியலுக்கு மாற்றுவதை எதிர்த்து, கடுமையாக எச்சரித்தது; மிதமிஞ்சிய ஒன்றியக் கட்டுப்பாடு தவிர்க்கமுடியாமல் "கடும்கட்டுப்பாட்டிற்கும்", வட்டாரப்புத்தாக்கங்களைத் தடுப்பதற்கும் வழிவகுக்கும் என்று எச்சரித்தது. ஆணையம் பின்வரும் புகழ்பெற்ற இந்தச் சொற்றொடர்களைக் குறிப்பிட்டது:

> *"நமது நாடு போன்ற பரந்த பரப்பில், அரசமைப்புச் சட்டத்தில் கல்விக்கு வழங்கப்பட்டுள்ள இடமே மிகச் சிறந்தது என்று நாங்கள் கருதுகிறோம்; ஏனெனில் கட்டாயப்படுத்தாத, சுயமாகவே எழுகிற மையத் தலைமையைப் வழங்குகிறது. கல்வியைப் பொதுப் பட்டியலில் சேர்ப்பது தேவையற்ற மையப்படுத்துதலுக்கும் அதிக கட்டுப்பாட்டிற்கும் வழிவகுக்கும்... இப்போதைய அரசமைப்புச் சட்ட ஏற்பாட்டிற்குள்ளேயே கல்வியில் நடைமுறைச் சாத்தியமான மைய–மாநிலக் கூட்டாண்மையை உருவாக்க ஏராளமான வாய்ப்புகள் உள்ளன என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்..."*

இது, "கட்டாயப்படுத்தாத, சுயமாக" எழுகின்ற ஒன்றியத்தின் பங்கு என வரையறுத்தது; நாடாளுமன்ற மேலாதிக்கத்தை விட நிதி உதவி,

கொள்கை வழிகாட்டுதலில் கவனம் செலுத்தியது. 10+2+3 பள்ளி–கல்லூரி கற்றல் போன்ற விரிவான முறையில் கட்டமைப்புகளை ஒன்றியம் உருவாக்கும் அதே வேளையில், அவற்றை உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கும் சுயாட்சியை மாநிலங்கள் தக்கவைத்துக் கொள்ளும் கூட்டுறவு கூட்டாண்மை பற்றிய முன்னோக்கைக் கொண்டிருந்தது.

சுவரண் சிங் குழு (Swaran Singh Committee (1976))

நெருக்கடி நிலையின் போது அமைக்கப்பட்ட இக்குழு, கல்வியை மாநிலப் பட்டியலிலிருந்து (இனம் 11) பொதுப் பட்டியலுக்கு (இனம் 25) மாற்றுவதற்கான அதிகாரப்பூர்வ நியாயத்தை வழங்கியது:

> *"விரும்பிய சமூக–பொருளாதார மாற்றங்களை அடைவதில் நாட்டின் விரைவான முன்னேற்றத்திற்கு வேளாண்மையும் கல்வியும் முதன்மையான முக்கியத்துவம் வாய்ந்த பொருண்மைகள் ஆகும். இந்த இரு அதிகாரங்கள் தொடர்பாக அகில இந்தியக் கொள்கைகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை எவ்வளவு வலியுறுத்தினாலும் மிகையாகாது."*

இந்தப் பரிந்துரை, *நாற்பத்து இரண்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்* (1976) வழியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. சீரான தேசியக் கொள்கைகளை உறுதிப்படுத்துவதற்காக மாநிலங்களுடன் இணைந்து ஒன்றியமும் கல்வி குறித்து சட்டம் இயற்ற வழிவகை செய்தது. அதன் வழியாக கூட்டாட்சி முறையின் சமநிலையை அடிப்படையிலேயே மாற்றப்பட்டது.

சர்க்காரியா ஆணையம் (Sarkaria Commission (1983–88))

நாற்பத்து இரண்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் (1976) செய்த பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, சர்க்காரியா ஆணையம் மைய–மாநில உறவுகளை ஆய்வு செய்தது. கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு மாற்றுவதற்கு எதிராக வெளிப்படையாக அறிவுரை வழங்கியது. ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும் தரநிலைகளில் ஒருமைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் பொதுப் பட்டியல் அவசியம் என்று உறுதிப்படுத்தியது.

எவ்வாறாயினும், கல்வியின் சமூகப் பொறுப்பை உணர்ந்து, கடுமையான மைய மேலாதிக்கத்திற்கு எதிராக எச்சரித்தது. மாறாக, அரசமைப்புச் சட்டப் பிரிவு 263–இன் கீழ் உள்ள அரசாங்களுக்கு இடையிலான குழுவைப் பயன்படுத்தி, ஆலோசனைகள் மற்றும்

ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவன் வாயிலாக தேசியக் கொள்கை உருவாக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. ஒன்றிய அரசு விதிமுறைகளையும் தரநிலைகளையும் தீர்மானிக்க முடியும் என்றாலும், அவற்றைச் செயல்படுத்துவது மாநிலங்களிடமே இருக்க வேண்டும் என்று இந்த ஆணையம் வலியுறுத்தியது.

யஷ்பால் குழு (The Yash Pal Committee (2008–09))

உயர்கல்வியைப் புதுப்பித்து புத்துயிர் அளிப்பதற்கான ஆலோசனைக் குழு என்று அதிகாரப்பூர்வமாகப் பெயரிடப்பட்ட இக்குழு, மிதமிஞ்சிய ஒழுங்குமுறைகள், துண்டு துண்டான மேற்பார்வை, கல்விச் சுயாட்சியின் சிதைவு ஆகியவற்றால் இந்திய உயர்கல்வி பாதிக்கப்பட்டுள்ளது என கண்டறிந்தது. மிதமிஞ்சிய மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாடு பல்கலைக்கழகங்களை வெறும் விதிமுறைகளுக்குக் கீழ்ப்படியும் நிறுவனங்களாகக் குறைத்து, புத்தாக்கத்தையும் அறிவுச் சுதந்திரத்தையும் முடக்கியுள்ளதாக வாதிட்டது.

பல்கலைக்கழக மானியக் குழு (UGC), அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி அவை (AICTE) போன்ற ஒன்றையொன்று குறுக்கீடு செய்யும் பல ஒழுங்குமுறை அமைப்புகளுக்குப் பதிலாக, உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான தேசிய ஆணையம் (NCHER) என்ற ஒற்றை, சுதந்திரமான உயர்நிலை அமைப்பை உருவாக்க இக்குழு பரிந்துரைத்தது. ஒரு மென்மையான ஒழுங்குமுறை அமைப்பாகச் செயல்பட்டு, உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான தேசிய ஆணையம், அரசியல் குறுக்கீடுகளிலிருந்து விடுபட்டு கல்வித் தரநிலைகளில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும். தொழில்முறை சார்ந்த அமைப்புகளை (எ.கா. மருத்துவ அவையம் வழக்கறிஞர் அவையம்) கல்வி ஒழுங்குமுறையிலிருந்து விலக்கி, உரிமம் வழங்குவதோடு மட்டும் மட்டுப்படுத்தவும் இக்குழு முன்மொழிந்தது.

பாடத்திட்டம், சேர்க்கை, ஆளுகை ஆகியவற்றில் பல்கலைக்கழகச் சுயாட்சியை மீட்டெடுப்பதே இந்த ஆணையத்தின் முதன்மை கருத்தாக இருந்தது. "நிகர்நிலைப் பல்கலைக்கழகம்" என்ற பிரிவை ஒழிக்கவும் – தகுதியான நிறுவனங்களை முழுமையான பல்கலைக்கழகங்களாக மாற்றவும் மற்றவற்றை மூடவும் – பரிந்துரைத்ததுடன், இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் (IIT), இந்திய மேலாண்மைக் கழகங்கள் (IIM) போன்ற நிறுவனங்கள் பல்துறை மையங்களாக வளர ஊக்குவித்தது. இது பட்டதாரி பதிவு தேர்வு முறை (GRE–style) போன்ற தேசிய அளவிலான ஒரு தகுதித் தேர்வையும் முன்மொழிந்தது.

இந்த அறிக்கையின் மிகவும் பெரும்மாற்றங்களுக்கான பரிந்துரைகள், பகுதியளவு மட்டுமே செயல்படுத்தப்பட்டாலும், பிற்காலச்

சீர்திருத்தங்களுக்கு முக்கியமான அறிவுசார்ந்த வழிகாட்டி நெறிகளாக அமைந்தன.

பூஞ்சி ஆணையம் (The Punchhi Commission (2007–10))

இந்த ஆணையம், ஆளுநர்களுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையிலான மோதல்கள் பற்றி குறிப்பிட்டது; ஆளுநர்கள் பல்கலைக்கழக வேந்தர் போன்ற சட்டமுறைப் பதவிகளை வகிக்கக் கூடாது என்று வெளிப்படையாகப் பரிந்துரைத்தது. ஏனெனில், இத்தகைய பொறுப்புகள், அரசமைப்புச் சட்டப் பதவியைத் தவிர்க்கக்கூடிய சர்ச்சைகளும் பொது விமர்சனங்களும் எழக் காரணமாகின்றன.

IV. கல்வித் துறையில் கூட்டாட்சி நாடுகளின் அனுபவம் குறித்த ஒப்பீடு

வளர்ந்த கூட்டாட்சி நாடுகளை ஒப்பிட்டு ஆய்வு செய்யும் போது, கல்வித் துறையில் மையப்படுத்துதலை நோக்கிய இந்தியாவின் அண்மைக் கால நகர்வு விதிவிலக்கானது என்பது தெளிவாகிறது. அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா போன்ற கூட்டாட்சி நாடுகளில், முதன்மையான அதிகாரம் மாநிலங்களிடமோ அல்லது மாகாணங்களிடமோதான் உள்ளது; அங்கு கூட்டாட்சி அரசு ஆராய்ச்சி நிதியுதவி, சமத்துவம், ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் மட்டுமே வரையறுக்கப்பட்ட பங்கினை ஆற்றுகிறது.

அமெரிக்கா

பத்தாவது திருத்தத்தின்படி, கல்வி என்பது மாநிலங்களின் பொறுப்பு ஆகும். பொதுப் பள்ளிகளும் பல்கலைக்கழகங்களும் மாநிலங்களால் நிறுவப்பட்டு, நிதியளிக்கப்பட்டு, ஒழுங்குபடுத்தப்படுகின்றன. ஆளுநர்கள் வேந்தர்களாகப் பணியாற்றுவதில்லை; சேர்க்கை முறையிலோ அல்லது பாடத்திட்டத்திலோ கூட்டாட்சி அரசின் கட்டுப்பாடு எதுவுமில்லை. ஒன்றியத்தின் தலையீடு மறைமுகமானது; பள்ளிக் கல்விக்கான (K–12) நிதியில் வெறும் 8–10 விழுக்காட்டை மட்டுமே கூட்டாட்சி அரசு வழங்குகிறது. உயர்கல்வி நிலையில், அது பெரும்பாலும் மாணவர் உதவித்தொகை, ஆராய்ச்சி மானியங்கள், குடி உரிமை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றுடன் சுருக்கிக்கொள்கிறது. கூட்டாட்சி அரசு கல்வித் துறையைக் கலைக்க அல்லது சுருக்க அண்மைக் காலங்களில் எடுக்கப்படும் முயற்சிகள்,

மையக் கட்டுப்பாட்டின் மீதான அமெரிக்கர்களின் ஆழ்ந்த அவநம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றன.

கனடா

மிகவும் அதிகாரப் பரவல் செய்யப்பட்ட கல்வி முறைகளில் ஒன்றாக கனடா விளங்குகிறது. *1867–ஆம் ஆண்டின் அரசமைப்புச் சட்டத்தின்* 93வது பிரிவின் கீழ், கல்வி என்பது மாகாணங்களின் பிரத்யேக அதிகார வரம்பிற்கு உட்பட்டது. அங்கு கூட்டாட்சி அரசின் கல்வி அமைச்சகம் என்று ஒன்று கிடையாது. *கனடா கல்வி அமைச்சர்கள் குழு (Council of Ministers of Education, Canada* (CMEC)) வழியாக ஒருங்கிணைப்பு நடைபெறுகிறது; இதில் மாகாணங்களின் பங்கேற்பு விருப்பத்தின் அடிப்படையிலானது. இது எந்தவிதக் கட்டாய அதிகாரமும் இன்றி, தகுதிகளை ஒப்பிடுவதற்கும் இடப்பெயர்ப்பற்கும் வசதி செய்கிறது. மாகாணங்கள் ஏறத்தாழ 90 விழுக்காடு நிதியை வழங்குகின்றன. இதன் வழியாக நிதிப் பொறுப்பு என்பது கொள்கை அதிகாரத்துடன் ஒத்துப்போவதை உறுதி செய்கின்றன.

ஜெர்மனி

ஜெர்மனியின் அடிப்படைச் சட்டம் *மாநிலங்களின் பண்பாட்டு அரசுரிமை* (Kulturhoheit der *Länder*) எனும் கொள்கையை நிலைநிறுத்துகிறது. பள்ளிக் கல்விப் பாடத்திட்டம், பல்கலைக்கழக நிர்வாகம் உள்ளிட்ட கல்வித் துறை முதன்மையாக லேண்டர்களின் (*Länder*) பொறுப்பாகும். மாநிலக் கல்வி அமைச்சர்களின் *நிரந்தரக் குழுவான* (*Kultusministerkonferenz* – KMK), *பள்ளி இறுதிச் சான்றிதழ்* (Abitur) போன்ற தகுதிகளை மாநிலங்களுக்கு இடையே பரஸ்பரம் ஏற்பு அளிப்பதை உறுதி செய்கிறது. இந்த ஒத்திசைவு ஃபெடரலின் கட்டளையால் அல்லாமல், மாநிலங்களின் ஒருமித்த கருத்தின் அடிப்படையிலேயே அமைகிறது. ஃபெடரலின் சட்டம் இயற்றும் அதிகாரம் மிகக் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது; கூட்டாட்சி அரசின் தலையீடு என்பது ஆராய்ச்சி நிதியுதவி, நகராட்சி கல்வி உள்கட்டமைப்பில் முதலீடுகளுக்கான விருப்புரிமையின்படி அளிக்கப்படும் நிதி உதவியை வழங்குதல், சர்வதேச ஒத்துழைப்புடன் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா

பள்ளிகள், தொழிற்கல்வி ஆகியவற்றுக்கான பொறுப்பு மாநிலங்களிடமே உள்ளது. உயர்கல்வி நிறுவனங்களின் மொத்த வருவாயில் சுமார் 45 விழுக்காட்டை காமன்வெல்த் (மைய அரசாங்கம்) வழங்கினாலும்,

நிறுவன ஆளுகை என்பது அதிகாரப் பரவல் செய்யப்பட்டே உள்ளது. சேர்க்கை முறைகள், *ஆஸ்திரேலிய மூன்றாம் நிலை சேர்க்கை தரவரிசை [(Australian Tertiary Admission Rank* (ATAR)] வழியாக கையாளப்படுகின்றன; இது தேசிய அளவில் ஒப்பிடக்கூடிய தரவரிசை என்றாலும், மாநில அதிகார அமைப்புகளாலேயே உருவாக்கப்படுகிறது. ஆஸ்திரேலியா தேசியப் பாடத்திட்ட முறையை உருவாக்கியிருந்தாலும், அது கூட்டுறவு முறையில் வடிவமைக்கப்பட்டு, உள்ளூர்த் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கும் நெகிழ்வுத்தன்மையுடன் மாநிலங்களால் செயல்படுத்தப்படுகிறது.

பிற கூட்டாட்சி நாடுகள்

பிரேசிலில் நகராட்சிகள் தொடக்கக் கல்வியை நிர்வகிக்கின்றன. மாநிலங்கள் மேல்நிலைக் கல்வியைக் கண்காணிக்கின்றன. கூட்டாட்சி அரசாங்கம் நிதி மறுபகிர்வு வழிமுறைகள் (FUNDEB போன்றவை), பரந்த நெறிமுறைக் கட்டமைப்புகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. *சுவிட்சர்லாந்தில்* கல்வி மீதான முதன்மை அதிகாரம் காண்டன்களிடம் (மண்டலங்களிடம்) உள்ளது; கூட்டாட்சி அரசின் தலையீடு என்பது தொழிற்பயிற்சி ஒருங்கிணைப்பு, உயர் ஆராய்ச்சி ஆகியவற்றுடன் முடிந்துவிடுகிறது.

V. கல்வித் துறையில் மிதமிஞ்சிய மையப்படுத்தலும் அதிகப்படியான ஒழுங்குமுறைகளும்

கல்வித் துறையில் மாநிலச் சுயாட்சியை மீட்டெடுப்பதற்கான வலுவான *துணை அமைப்புக்* கோட்பாட்டில் (doctrine of subsidiarity) அடங்கியுள்ளது. அதாவது, முடிவுகள் எந்தத் கீழ்மட்ட நிர்வாக அமைப்பால் திறம்பட எடுக்கப்பட முடியுமோ, அந்த மட்டத்திலேயே எடுக்கப்பட வேண்டும் என்பதே அக்கொள்கை. அத்தகைய ஒரு துறைக்கு, கல்வி ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் அந்தந்த மொழி, பண்பாடு, உழைப்புச் சந்தை, சமூகச் சூழல் ஆகியவற்றில் வேரூன்றியவை. எனவே, அவற்றை இயக்குவதற்கும் அவற்றில் புத்தாக்கங்களைச் செய்வதற்கும் மாநிலங்களே மிகவும் பொருத்தமானவை. ஒன்றியத்தின் நியாயமான பங்கு என்பது மிகவும் குறுகியது: தேசிய முக்கியத்துவம் வாய்ந்த

நிறுவனங்களை நடத்துதல், உயர் ஆராய்ச்சிக்கு நிதியளித்தல், பரந்த அளவிலான குறைந்தபட்ச தரநிலைகளை வகுத்தல். அனைத்து முதிர்ச்சியடைந்த கூட்டாட்சி நாடுகளும் கல்வியை இப்படித்தான் ஒழுங்கமைக்கின்றன. இதுதான் இந்தியாவின் அசல் அரசமைப்புச் சட்ட வடிவமைப்பும் ஆகும். அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா ஆகியவற்றில் இன்றும் நீடித்து வரும் அதே கூட்டாட்சி கட்டமைப்பில்தான் இந்தியாவும் தொடங்கியது: மாநிலங்கள் செயல்படுத்துகின்றன; சோதனைகளை மேற்கொள்கின்றன; ஒன்றியம் ஒருங்கிணைக்கிறது.

நெருக்கடி நிலையின் போது, இந்தச் சமநிலை சரிந்தது. ஏற்கனவே குறிப்பிட்டது போல, 1976ம் ஆண்டின் *நாற்பத்து இரண்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* "கல்வி"யை மாநிலப் பட்டியலின் இனம் 11லிருந்து பொதுப் பட்டியலின் இனம் 25க்கு மாற்றியது; இதன் வழியாக ஒன்றியத்தின் சட்ட இயற்றும் மேலாதிக்கத்தை நிலைநாட்டியது. உயர்கல்வியை ஒருங்கிணைக்கும் வசதிக்காகப் பொதுப் பட்டியலில் சேர்ப்பதற்கு, ஓரளவுக்கு வாதங்களை முன்வைக்க முடிந்தாலும், இயல்பிலேயே உள்ளூர்த் தன்மை கொண்ட பள்ளிக் கல்விக்கும் இதை நீட்டித்தது நியாயமற்றது. எந்தவொரு முதிர்ந்த கூட்டாட்சி முறையிலும் கூட்டாட்சி அரசாங்கம் நேரடியாகப் பள்ளிகளை நடத்துவதோ அல்லது பள்ளி அளவிலான கல்விக் கொள்கைகளைத் தீர்மானிப்பதோ இல்லை. பள்ளிக் கல்வியைக் கூட நுண் மேலாண்மை செய்யும் இந்தியாவின் வளர்ந்து வரும் போக்கு – பெரும்பாலும் தேசிய ஒருமைப்பாட்டின் பெயரால் நியாயப்படுத்தப்பட்டாலும், நடைமுறையில் மொழி, பண்பாட்டு அளவிலான மையப்படுத்துதலாலேயே தூண்டப்படுகிறது – பன்முகத்தன்மை அவசியமாகத் தேவைப்படும் இடத்தில் ஒருமைத்தன்மையைத் திணிக்க முயல்கிறது. பள்ளி நிர்வாகம், ஒழுங்குமுறை சார்ந்த நுணுக்கங்களில் தனது கவனத்தைச் சிதறவிடுவதன் வழியாக, தான் மட்டுமே முன்னெடுக்கக்கூடிய முன்னுரிமைகளான – உயர் ஆராய்ச்சி, முன்னணி அறிவியல் துறைகள், உலகளாவிய போட்டித்தன்மை கொண்ட உயர்கல்வி ஆகியவற்றில் ஒன்றியம் தனது கவனத்தை இழந்துவிட்டது.

ஒன்றிய ஒழுங்குமுறை அமைப்புகளின் எல்லை மீறல்

உயர்கல்வியில் கூட, ஒன்றிய ஒழுங்குமுறை அமைப்புகள் தங்களின் அசல் அதிகார வரம்பிற்கு அப்பால் விரிவடைந்துள்ளன. 1956–ஆம் ஆண்டு மாநிலங்களவையில் பல்கலைக்கழக மானியக் குழு சட்டவரைவு குறித்த விவாதத்தின் போது, அப்போதைய துணை

அமைச்சர் கே.எல். ஸ்ரீமாலி, பல்கலைக்கழக மானியக் குழு, மானியங்களை வழங்கும், ஆலோசனைகளை வழங்குமே தவிர, பல்கலைக்கழகத்தின் அன்றாட நிர்வாகத்தில் அரசாங்கம் தலையிடாது என்று நாடாளுமன்றத்திற்கு உறுதியளித்தார். ஆயினும், உறுப்பினர் கிஷன் சந்த் (தீர்க்கதரிசனமாக), "ஒருங்கிணைத்தலும் தரநிலைகளை நிர்ணயித்தலும்" என்கிற போர்வையில், முன்மொழியப்பட்ட இந்தச் சட்டம் "பல்கலைக்கழகங்கள் பெற்றுள்ள மிகச்சிறிய சுயாட்சியையும் பறித்துவிடும்" என்று எச்சரித்தார். அந்த எச்சரிக்கை இப்போது உண்மையாகியுள்ளது.

இன்று, பல்கலைக்கழக மானியக் குழு, ஒரு ஆதரவளிக்கும் ஒருங்கிணைப்பு அமைப்பு என்னும் நிலையிலிருந்து ஒரு அதிகாரத்துவ மேலாதிக்க அமைப்பாக உருமாற்றம் அடைந்துள்ளது. பல்கலைக்கழகச் செயல்பாட்டின் ஒவ்வொரு கூறினையும் – சேர்க்கை, பாடத்திட்டக் கட்டமைப்புகள், நிறுவன அங்கீகாரம், தேர்வுகள், ஆசிரியர் நியமனம், அரசுப்பணி தொடர்பான விதிகள் ஆகியவற்றை – பல்கலைக்கழக மானியக் குழு இப்போது தீர்மானிக்கிறது. மேலிருந்து கீழாகத் திணிக்கப்படும் இந்த அணுகுமுறை மாநிலப் பல்கலைக்கழகங்களை வெற்றுக் கூடுகளாக மாற்றியுள்ளது. அவற்றை வெறும் பெயரளவிலான கல்லூரிகளாகக் குறைத்துள்ளது; அவர்களின் முன்னெடுப்புகளை முடக்கி, பல்கலைக்கழக அளவிலான புத்தாக்கங்களைத் தடுத்து, பலதரப்பட்ட நிறுவனங்களை ஒரே மாதிரியான, பொருந்தாத ஒழுங்குமுறை வார்ப்புருவிற்குள் திணிக்கிறது. எடுத்துக்காட்டாக, "இந்திய அறிவு முறை" என்கிற குடையின் கீழ் சரிபார்க்கப்படாத உள்ளடக்கங்களைச் சேர்ப்பதும், (கல்விப் புலமைத் தகுதிகள் இல்லாத பல நபர்களை) "ஆசிரியப் பணியில் வல்லுநர்களாக நியமனம் செய்தல்" போன்ற அண்மைக் கால உத்தரவுகள், அறிவியல்பூர்வமான தரத்தையும் கல்விவட்டத் தரநிலைகளையும் நீர்த்துப்போகச் செய்வது குறித்த தீவிரமான கவலைகளை எழுப்புகின்றன. மேலும், பல்கலைக்கழக மானியக் குழு, மாநிலப் பல்கலைக்கழகங்களுக்கு வளர்ச்சி நிதியை வழங்குவதைப் பெரும்பாலும் குறைத்துவிட்டது. இதன் வழியாக, பல்கலைக்கழக மானியக் குழு என்கிற பெயரில் உள்ள "மானியங்கள்" என்ற சொல்லே நீர்த்துப்போய்விட்டது.

மற்றொரு முக்கியமான மோதல் புள்ளி என்னவென்றால், மாநிலப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேடல் குழுக்களில் (Search Committees) ஒன்றியப் பிரதிநிதி ஒருவரை இடம்பெறச் செய்ய வேண்டும் என்று பல்கலைக்கழக மானியக் குழு பிடிவாதம் காட்டுவதாகும். இந்தியப் பல்கலைக்கழகங்களில், சிண்டிகேட்/

ஆட்சிக் குழுவே (Syndicate/Executive Council) அனைத்து ஆசிரியர், ஆசிரியர் அல்லாத பணியாளர்களை நியமிக்கிறது; துணைவேந்தர் மட்டுமே வெளியிலிருந்து நியமிக்கப்படுகிறார். அதாவது, மாநிலப் பல்கலைக்கழகங்களில் வேந்தராக இருக்கும் ஆளுநராலும், மத்தியப் பல்கலைக்கழகங்களில் 'விசிட்டராக' இருக்கும் இந்தியக் குடியரசுத் தலைவராலும் – பொதுவாகத் தேடல் குழுவால் பரிந்துரைக்கப்படும் மூன்று முதல் ஐந்து பெயர்களைக் கொண்ட பட்டியலிலிருந்து துணைவேந்தர் நியமிக்கப்படுகிறார். இந்த ஏற்பாடு உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கு முரணானது. அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா முதலான பல நாடுகளின் முன்னணி பல்கலைக்கழகங்களில், துணைவேந்தர் கூட (அல்லது அதற்கு இணையான பதவி) பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவாலேயே *உள்வாரியாக* நியமிக்கப்படுகிறார்; இது செனட் அல்லது கோர்ட் வழியாக முறைப்படி உறுதி செய்யப்படுகிறது. அந்த மாதிரியே உண்மையான பல்கலைக்கழகச் சுயாட்சியைக் குறிக்கிறது; இந்தியப் பல்கலைக்கழகங்கள் அந்தத் திசையில்தான் நகர வேண்டுமே தவிர, மாநிலச் செயல்முறைகளில் ஒன்றியப் பிரதிநிதியைச் சேர்ப்பதன் வழியாக அல்ல. பல்கலைக்கழக மானியக் குழு தனது நேரத்தையும் திறனையும் நிர்வாகத்தில் தலையீட்டு, பல்கலைக்கழங்களை நுண் மேலாண்மை செய்வதை விட, கல்வித் தரநிலைகளை உலகத் தரத்திற்கு உயர்த்துவதில் செலவிடுவதே சிறந்தது.

இந்த நுண் மேலாண்மை பண்பாடு அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி அவை (AICTE), தேசிய ஆசிரியர் கல்வி அவை (NCTE), தேசிய மருத்துவ ஆணையம்(NMC), தேசிய செவிலியர் மற்றும் பேறுகால மருத்துவப் பணியாளர்கள் ஆணையம்(NNMC), இந்திய சிகிச்சை முறைக்கான தேசிய ஆணையம்(NCISM) போன்ற பிற ஒழுங்குமுறை அமைப்புகளுக்கும் பரவியுள்ளது; இதுவும் அதே மோசமான விளைவுகளையே – மிதமிஞ்சிய மையப்படுத்துதல், நிறுவனச் சுயாட்சி இழப்பு, கல்வித் துடிப்பின் சீரான சிதைவு முதலானவற்றை ஏற்படுத்துகிறது.

சீனாவில் கடைபிடிக்கப்பட்டுவரும் *இரட்டை முதன்மை உயர்கல்வித் திட்டம் (Double First–Class Initiative)* போன்ற சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்வது குறித்து இந்தியா பரிசீலிக்கலாம். இது தரத்தை உயர்த்த ஒட்டுமொத்த ஒழுங்குமுறைக்கு பதிலாக, இலக்கு கருதிய சுயாட்சியைப் பயன்படுத்துகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட *முதல் தர பல்கலைக்கழகங்கள்* (ஒட்டுமொத்த நிறுவனம்), *முதல் தரப் பாடப்பிரிவுகள்* (சாதாரண பல்கலைக்கழகங்களுக்குள் இருக்கும் குறிப்பிட்ட பாடங்கள்) பாடத்திட்ட வடிவமைப்பிலும் சர்வதேச ஒத்துழைப்பிலும் மிகப் பெரிய சுதந்திரத்தைப் பெறுகின்றன; இவை

உயர்–விளைவு ஆராய்ச்சி, (வெளிநாட்டு அறிஞர்கள் உட்பட) திறமையாளர்களை ஈர்த்தல், சர்வதேச தரவரிசைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன. செயல்திறன் அடிப்படையில் இந்தப் பட்டியல் அவ்வப்போது புதுப்பிக்கப்படுகிறது.

சுயாட்சியைச் சிதைக்கும் நீதித்துறை விளக்கங்கள்

நிர்வாக அளவிலான எல்லை மீறல்கள், ஒன்றியப் பட்டியலின் இனம் 66க்கு உச்சநீதிமன்றம் அளித்த விரிவான விளக்கத்தால் மேலும் வலுவடைந்துள்ளன. தொடக்கத்தில் "ஒருங்கிணைத்தலும் தரநிலைகளை நிர்ணயித்தலும்" என்பதற்கு மட்டுமே என கூறப்பட்டது, "பல்கலைக்கழகங்கள்", "சேர்க்கைகள்" ஆகியவற்றின் மீதான மாநிலத்தின் அதிகாரத்தை விழுங்குவதற்கு நீதித்துறை அனுமதித்தது.

இதன் தொடக்கப் புள்ளி *குஜராத் பல்கலைக்கழகம், அகமதாபாத் எதிர் கிருஷ்ண ரங்கநாத் முதோல்கர் (Gujarat University, Ahmedabad v. Krishna Ranganath Mudholkar* (1962))[2] வழக்கு. பயிற்று மொழியைத் (இவ்வழக்கில் கல்லூரிகளில் குஜராத்தி) தீர்மானிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு இருந்தாலும், அது கல்வித் தரத்தைக் குறைக்கும் நிலையில் அவ்வாறு செய்ய முடியாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இனம் 66ல் உள்ள "ஒருங்கிணைப்பு" என்பதை விரிவாக விளக்கிய நீதிமன்றம், மாநிலச் சட்டம் ஒன்றிய அதிகாரத்தைப் பாதிக்கும் எனில், அது ஒன்றியச் சட்டத்திற்கே கட்டுப்பட வேண்டும் என்று கூறியது.

முனைவர் பிரீதி ஸ்ரீவஸ்தவா எதிர் மத்தியப் பிரதேச மாநிலம் (Dr. Preeti Srivastava v. State of Madhya Pradesh (1999))[3] வழக்கில், "சேர்க்கைகள்" என்பது "தரநிலைகளிலிருந்து" வேறுபட்டது என்ற மாநிலத்தின் வாதத்தை உச்சநீதிமன்றம் நிராகரித்தது. சேர்க்கப்படும் மாணவர்களின் தரம் ("உள்ளீடு") என்பது கல்வித் தரத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும் என்று கூறியது; இதன் வழியாக ஒன்றிய அமைப்புகள் நிர்ணயித்த தகுதிகளை விடக் குறைவாக மதிப்பெண்களை மாநிலங்கள் குறைப்பதைச் செல்லாததாக்கியதுடன், சேர்க்கை விதிகளையும் இனம் 66ன் கீழ் உள்ள "தரநிலைகளின்" ஒரு பகுதியாகக் கருதியது.

மாடர்ன் டென்டல் காலேஜ் எதிர் மத்தியப் பிரதேச மாநிலம் (Modern Dental College v. State of M.P. (2016))[4] வழக்கில், லாப வேட்டையைத் தடுத்து நியாயத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் சேர்க்கையையும்

---

[2] AIR 1963 SC 703.
[3] (1997) 7 SCC 120.
[4] (2016) 7 SCC 353.

கட்டணங்களையும் ஒழுங்குபடுத்தும் மாநிலச் சட்டத்தை உச்சநீதிமன்றம் உறுதி செய்தது. இனம் 66 குறுகிய அளவிலேயே விளக்கப்பட வேண்டும் என்றும், ஒன்றியத்தால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச தரநிலைகள் குறையாத வரை, சேர்க்கை மீதான மாநிலத்தின் அதிகாரத்தை முழுமையாகப் பறித்துவிடாது என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

வேலூர் கிறித்துவ மருத்துவக் கல்லூரி எதிர் இந்திய ஒன்றியம் (Christian Medical College, Vellore v. Union of India (2020))[5] வழக்கில், உச்சநீதிமன்றம் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வை (National Eligibility–cum–Entrance Test, NEET) உறுதி செய்தபோது கூட்டாட்சி முறையின் வெளி மேலும் சுருங்கியது. ஒரு சீரான தேசிய நுழைவுத் தேர்வு என்பது தகுதியை உறுதிப்படுத்துவதற்கான இனம் 66ன் கீழ் ஒரு செல்லுபடியாகும் "தரநிலை" என்று தீர்ப்பு அளித்தது; இது மாநில அளவிலான பல்வேறு சேர்க்கை முறைகளை அகற்றி, ஒன்றியக் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தியது.

தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்கம் எதிர் இந்திய ஒன்றியம் (Tamil Nadu Medical Officers Association v. Union of India (2020))[6] வழக்கில் ஒரு சிறிய சமநிலை மீண்டும் ஏற்பட்டது. ஒன்றியத் தரநிலைகள் என்பது குறைந்தபட்ச தகுதியை நிர்ணயிக்கும் வரை மட்டுமே செல்லுபடியாகும் என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. அந்தத் தகுதியை எட்டிய பிறகு, உள்ளூர் பொது சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய – அரசு மருத்துவர்களுக்கான இட ஒதுக்கீடு அல்லது முன்னுரிமைத் திட்டங்களை வடிவமைக்க – மாநிலங்களுக்குச் சட்டம் இயற்றும் அதிகாரம் உள்ளது என்பதை உறுதி செய்தது.

பரிந்துரை 1

எந்தவொரு நாடும் ஒழுங்குமுறைகள் வழியாக மட்டுமே கல்வியில் உயர்சிறப்பை எட்டியதில்லை. ஏதேனும் ஒரு துறைக்கு 1991–ஆம் ஆண்டைப் போன்ற மிதமிஞ்சிய ஒழுங்குமுறைகளிலிருந்து விடுபடும் சூழல் தேவைப்படுகிறது என்றால், அது கல்வித் துறைதான். கல்வித் தரம் என்பது சுயாட்சியைச் சார்ந்ததே தவிர, விதிகளுக்குப் பணியும் தன்மையைப் பெற்றதல்ல. மிதமிஞ்சிய ஒன்றிய ஒழுங்குமுறைகளைத் திரும்பப் பெறுவதே தரத்திற்கான முன்நிபந்தனை ஆகும். கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் இந்த தர்க்கம் மாநிலங்களுக்கும்

---

[5] (2020) 8 SCC 705.

[6] (2021) 6 SCC 568.

பொருந்தும். மெய்யான சுயாட்சி என்பது இறுதியில் பல்கலைக்கழகங்களிடமே இருக்க வேண்டும்; அந்தந்த நிலை அரசாங்கங்களின் ஆதிக்கப் பார்வையின்றிச் சோதனைகளை மேற்கொள்ளவும், தவறுகளைச் செய்யவும், அவற்றிலிருந்து கற்றுக்கொள்ளவும், தங்களை மாற்றியமைத்துக்கொள்ளவும் நிறுவனங்களுக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும். முதல் கட்டமாக, இந்தியாவின் முதல் 100 பல்கலைக்கழகங்கள், நிறுவனங்களை பல்கலைக்கழக மானியக் குழு உள்ளிட்ட இதர ஒழுங்குமுறை அமைப்புகளின் கண்காணிப்பிலிருந்து முற்றிலும் விடுவிக்க வேண்டும்; இது பத்தாண்டுகளுக்கு ஒருமுறை ஆய்வுக்கு உட்படுத்தப்படலாம். காலப்போக்கில் மேலும் பல நிறுவனங்கள் இதில் சேர்க்கப்படலாம். இந்த இலக்கை அடைய ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றுதலில் பொருத்தமான திருத்தங்கள் இயற்றப்பட வேண்டும்.

VI. பொதுப் பட்டியலில் கல்வி: தோல்வியடைந்த ஐம்பதாண்டு காலப் பரிசோதனை

அரசமைப்புச் சட்டப் பரிசோதனைகள் அவற்றின் நோக்கங்களைக் கொண்டு அல்ல, மாறாக அவற்றின் முடிவுகளைக் கொண்டே மதிப்பிடப்பட வேண்டும். *நாற்பத்து இரண்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்* (1976) வழியாக கல்வியை மாநிலப் பட்டியலிலிருந்து (பட்டியல் II, இனம் 11) பொதுப் பட்டியலுக்கு (பட்டியல் III, இனம் 25) மாற்றியது, அதிகப்படியான சீரான தரநிலைகளையும், தேசிய ஒருமைப்பாட்டையும், சிறப்பையும் வழங்கும் என்கிற வாக்குறுதியின் பெயரால், ஒன்றியக் கட்டுப்பாடு நியாயப்படுத்தப்பட்டது. ஜனநாயக விவாதங்கள் முடக்கப்பட்டிருந்த நெருக்கடி நிலையின் போது நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த மாற்றம், சீர்திருத்தம் என்கிற போர்வையில் வந்த மையப்படுத்தும் நோக்கத்தின் விளைவு ஆகும்.

இதற்கான தீர்ப்பை வழங்க ஐம்பது ஆண்டுகள் என்பது போதுமான காலம் ஆகும். இதற்கான சான்றுகள் மிகத் தெளிவாக உள்ளன: மையப்படுத்துதலில் வாக்குறுதி அளிக்கப்பட்ட கல்வி மாற்றத்தை வழங்கவில்லை. ஒவ்வொரு முக்கிய உலகளாவிய குறியீட்டிலும், அதிகாரப் பரவல் கொண்ட கூட்டாட்சி நாடுகளான அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, ஜெர்மனி ஆகியவற்றைவிட இந்தியக் கல்வி மிகவும்

பின்தங்கியுள்ளது. மேலும், வளரும் நாடுகளான சீனா, பிரேசில் ஆகியவற்றைக் காட்டிலும் இந்தியா பின்தங்கியுள்ளதுடன், பல முக்கிய கல்வி அளவீடுகளில் *உலகளாவிய சராசரியை விடக் கீழேயே உள்ளது.* இப்போது, ஒன்றியம் அளவுக்கு அதிகமாக அதிகாரத்தைக் குவித்துக்கொண்டதாலும், மாநிலங்கள் அதிகாரமிழந்து போனதாலும், இந்த அமைப்பு பக்கவாதத்தால் முடங்கிப் போயுள்ளது.

பள்ளிக் கல்வி

ஐக்கிய நாடுகள் அவை வளர்ச்சித் திட்டத்தின் மனித மேம்பாட்டு அறிக்கையின்படி (The UNDP Human Development Report (2025), 25 வயதும் அதற்கும் மேற்பட்ட இந்தியர்களின் சராசரி பள்ளிப் படிப்பு காலம் வெறும் 6.9 ஆண்டுகள் மட்டுமே. இது உலகளாவிய சராசரியான 8.8 ஆண்டுகளைவிடக் கணிசமாகக் குறைவு; மேலும் சீனா (8.0 ஆண்டுகள்), பிரேசில் (8.4 ஆண்டுகள்), தென்னாப்பிரிக்கா (11.6 ஆண்டுகள்) போன்ற வளரும் நாடுகளை விடவும் பின்தங்கியுள்ளது. இந்த இடைவெளியானது இந்தியாவின் மனித மூலதனத்தின் சராசரி தரத்தில் நேரடியான, மோசமான பாதிப்பை ஏற்படுத்துகிறது.

யுடிஐஎஸ்இ+ (UDISE+) தரவுகளின்படி, 2024–25–இல் தொடக்கக் கல்வியில் (வகுப்புகள் I–VIII) இந்தியாவின் மொத்த சேர்க்கை விகிதம் (GER) 90.6 விழுக்காடாக இருந்தது. இது கணிசமான அளவு என்றாலும், 1960லேயே எட்டவேண்டும் என கருதப்பட்டிருந்த, அனைவருக்கும் தொடக்கக் கல்வி (100 விழுக்காடு சேர்க்கை விகிதம்) என்கிற அரசமைப்புச் சட்ட இலக்கை இன்னும் எட்டவில்லை.

மொழிக் கல்வி குறித்த முடிவுகளும் இத்தகைய கொள்கை தோல்வியையே உணர்த்துகின்றன. 1968 முதல் முக்கியமான கொள்கை முடிவாக விளங்கும் "மும்மொழிக் கொள்கை" ஏற்றுக்கொள்ளப்பட்டு, நாற்பத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும், 2011–ஆம் ஆண்டின் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 7.1 விழுக்காடு இந்தியர்கள் மட்டுமே மூன்று மொழிகள் தெரிந்தவர்களாக இருந்தனர். உத்தரப்பிரதேசம், பீகார், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், உத்தராகண்ட் ஆகிய மாநிலங்களில் இந்த எண்ணிக்கை 2 விழுக்காட்டிற்கும் குறைவாகவே இருந்தது.[7] பன்முகத்தன்மை கொண்ட துணைக் கண்டத்தில், மேலிருந்து கீழாகத் திணிக்கப்படும் ஒற்றைப்படையான மொழிக் கொள்கைகள் பயனற்றவை என்பதற்கு இது ஒரு சான்று ஆகும்.

---

[7] Anjishnu Das, 'Amid Three–Language War, Data Shows Only One–Fourth Indians Are Multilingual' (*The Indian Express* March 2, 2025) accessed December 4, 2025.

"மொழி" குறித்த இயலில் குறிப்பிட்டுள்ளபடி, NAS, ASER போன்ற உள்நாட்டு ஆய்வுகள் இந்தியப் பள்ளிகளில் கற்றல் முடிவுகள் மிகவும் மோசமாக இருப்பதை வெளிப்படுத்துகின்றன. ஓஇசிடி (OECD) அமைப்பால் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 15 வயது மாணவர்களுக்கு நடத்தப்படும் கணிதம், வாசிப்பு, *அறிவியல் திறன்களுக்கான சர்வதேச மாணவர் மதிப்பீட்டு திட்டத்தில்* (the *Programme for International Student Assessment* (PISA)), இந்தியாவின் மோசமான நிலைகளும் இதையே காட்டுக்கின்றன. 2009ல், பங்கேற்ற 74 நாடுகளில் இந்தியா 73வது இடத்தைப் பிடித்தது; கிர்கிஸ்தானுக்கு முந்திய நிலையில் மட்டுமே இருந்தது. அதன்பிறகு, 2012 முதல் 2025 வரையிலான ஒவ்வொரு சுழற்சியிலும், சர்வதேச மாணவர் மதிப்பீட்டு திட்டத் தேர்வில் பங்கேற்காமல், இந்தியா விலகியுள்ளது. இதற்கு நேர்மாறாக, அதிகாரப் பரவல் கொண்ட கூட்டாட்சி நாடுகள் தொடர்ந்து சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்துகின்றன. 2022ம் ஆண்டின் சர்வதேச மாணவர் மதிப்பீட்டு திட்டத் தரவரிசையில் கணிதம், வாசிப்பு, அறிவியல் ஆகியவற்றில் முறையே, கனடா (9, 8, 8), ஆஸ்திரேலியா (17, 12, 10), அமெரிக்கா (34, 9, 16), ஜெர்மனி (25, 22, 22) ஆகியவை முக்கிய இடங்களைப் பிடித்துள்ளன. சிங்கப்பூர், ஜப்பான், தென்கொரியா, தைவான், எஸ்டோனியா போன்ற பல நாடுகள் மூன்று துறைகளிலும் முதல் பத்து இடங்களுக்குள் வந்துள்ளன.

உயர்கல்வி

அகில இந்திய உயர்கல்வி ஆய்வு (AISHE) 2021–22–இன் படி, இந்தியாவின் உயர்கல்வி மொத்த சேர்க்கை விகிதம் (GER) 28.4 விழுக்காடாக இருந்தது. இது யுனெஸ்கோ புள்ளியியல் நிறுவனத்தின் (UIS) தரவுப்படி, 2020–இல் இருந்த *உலகளாவிய சராசரியான* சுமார் 40 விழுக்காட்டு அளவைவிட பெருமளவில் குறைந்துள்ளது.

சீரான தேசியத் தரநிலைகள் வழியாக மாநிலங்களுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கே கல்வி பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது என்றால், அது படுதோல்வியடைந்துள்ளது. 2021–22–இல் மாநிலங்களுக்கு இடையிலான உயர்கல்வி சேர்க்கை விகிதம் தமிழ்நாட்டில் 47 விழுக்காடு என்கிற உச்சத்திலிருந்தும், அசாமில் 16.9 விழுக்காடு என்கிற கீழ்மட்டத்திலிருந்தும் வேறுபட்டு நிற்கிறது. எங்கெல்லாம் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதோ, அவை மாநிலங்களின் கொள்கைத் தெரிவுகள், சமூக நீதி இயக்கங்கள், நிர்வாகத் திறன் ஆகியவற்றால் உந்தப்பட்டவையே தவிர, ஒன்றிய அரசின் ஒழுங்குமுறை அமைப்புகளால் அல்ல என்பது தான் உண்மையாகும்.

மையப்படுத்துதலே உயர்சிறப்பை நோக்கிய பாதை என்றால், கடந்த ஐம்பது ஆண்டுகளில் இந்தியப் பல்கலைக்கழகங்கள் உலகத் தரவரிசையில் படிப்படியாக உயர்ந்திருக்க வேண்டும். மாறாக, நமது சிறந்த நிறுவனங்கள் கூட தரவரிசையில் பின்தங்கியுள்ளன.

- *டைம்ஸ் உயர்கல்வி தரவரிசை* 2026–*இல்* (*Times Higher Education Rankings* 2026), *முதல் 200 இடங்களுக்குள்* ஒரு இந்திய நிறுவனம் கூட இடம் பெறவில்லை. பெங்களூரு இந்திய அறிவியல் கழகம் (IISc) 201–250 இடத்திலும்; இந்தூர் இந்திய தொழில்நுட்பக் கழகம் 501–600 இடங்களுக்குள்; டெல்லி பல்கலைக்கழகம், அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகம் மற்றும் மணிப்பால் உயர்கல்வி அகாடமி ஆகியவை 601–800 இடங்களுக்குள்; சென்னை அண்ணா பல்கலைக்கழகம், பிட்ஸ் பிலானி (Birla Institute of Technology & Science, Pilani), தேசிய தொழில்நுட்ப நிறுவனம், திருச்சிராப்பள்ளி (National Institute of Technology, Tiruchirapalli) டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் (JNU) 801–1000 பிரிவிலும் உள்ளன. பல முன்னணி ஐஐடிக்கள் இதிலிருந்து முற்றிலும் விலகிக்கொண்டன. மாறாக, அமெரிக்காவின் 55 பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்கள் *முதல் 200 இடங்களுக்குள்* உள்ளன; ஜெர்மனி 18, ஆஸ்திரேலியா 10, கனடா 9, இங்கிலாந்து 26 மற்றும் சீனா 13 இடங்களைப் பிடித்துள்ளன.
- *QS உலகப் பல்கலைக்கழக தரவரிசை* 2026–ஆம் (*QS World University Rankings 2026*) இதையே கூறுகின்றது. இத்தரவரிசையில் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், டெல்லி (123), இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், பாம்பே (129), இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், சென்னை (180) ஆகிய மூன்று நிறுவனங்கள் மட்டுமே முதல் 200 இடங்களுக்குள் நுழைந்துள்ளன. பெங்களூரு இந்திய அறிவியல் கழகம் 219; சென்னை அண்ணா பல்கலைக்கழகம் 465; டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் 558; பிலானியில் உள்ள பிர்லா தொழில்நுட்ப அறிவியல் நிறுவனம் 668 என இடங்களைப் பிடித்துள்ளன. இத்தரவரிசையில் அமெரிக்காவின் 39 பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்கள் *முதல்* 200 இடங்களுக்குள் உள்ளன; ஜெர்மனி 9, ஆஸ்திரேலியா 13, கனடா 9, இங்கிலாந்து 28, சீனா 9 இடங்களைப் பிடித்துள்ளன.
- 2025 ஆம் ஆண்டுக்கான *ஷாங்காய் உலகப் பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் (Shanghai Ranking of World*

Universities 2025), இந்தியாவின் செயல்பாடு மேலும் மிகவும் மோசமாக உள்ளது. ஒரு இந்திய கல்வி நிறுவனம் கூட முதல் 500 *கல்வி நிறுவனங்களின் தரவரிசையில்* இடம்பிடிக்கவில்லை. இந்தியாவின் சில முன்னணி கல்வி நிறுவனங்களின் தரவரிசைகள் பின்வருமாறு: இந்திய அறிவியல் நிறுவனம், பெங்களூரு (501–600); இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், டெல்லி, கான்பூர், மற்றும் டெல்லி பல்கலைக்கழகம் (601–700); இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை (701–800); இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், பம்பாய், கரக்பூர், ரூர்க்கி, மற்றும் மணிப்பால் உயர்கல்வி அகாடமி (801–900). இந்தத் தரவரிசைகளில், *முதல் 200* இடங்களுக்குள் அமெரிக்கா 58 பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்களையும், ஜெர்மனி 11, ஆஸ்திரேலியா 8, கனடா 8, அதே சமயம் இங்கிலாந்து 18 மற்றும் சீனா 35 பல்கலைக்கழகங்களையும் கொண்டிருந்தன.

இந்த வருந்தத்தக்க விளைவு தற்செயலானது அல்ல. இது, நம்பிக்கைக்குப் பதிலாக நுண் மேலாண்மையையும், படைப்பாற்றலுக்குப் பதிலாகக் கட்டுப்பாட்டையும் புகுத்தும் ஒழுங்குமுறைத் தத்துவத்தின் கணிக்கக்கூடிய விளைவாகும். மத்திய ஒழுங்குமுறை அமைப்புகளான பல்கலைக்கழக மானியக் குழு (UGC), அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி அவை (AICTE), தேசிய மருத்துவ ஆணையம்(NMC) ஆகியவை, விதிமுறைகள், சுற்றறிக்கைகள் வழியாகச் சிறப்பை வரவழைக்க முடியும் என்று கருதுகின்றன. உண்மையில், இத்தகைய மேற்பார்வை, பல்கலைக்கழகத்தின் உயிர்நாடியான சுயாட்சியையும் புத்தாக்கத்தையும் நசுக்கிவிட்டது. ஒரே மாதிரியான விதிகள் ஒரே மாதிரியான மந்தநிலையை உருவாக்கியுள்ளன. மற்ற கூட்டாட்சி நாடுகள் அறிவார்ந்த பாதையைப் பின்பற்றியுள்ளன. அவை பரந்த இலக்குகளை நிர்ணயிக்கின்றன, குறைந்த அளவு தர நிலைகளை உறுதி செய்கின்றன. அதன் பிறகு பல்கலைக்கழகங்கள் தங்களை நிர்வகிக்க அனுமதிக்கின்றன. சுயாட்சியே அவற்றின் தனித்துவத்திற்கான உந்துசக்தியாக இருந்துள்ளது. வெளிநாடுகளில் சுயாட்சி, சிறப்பை உருவாக்கும்போதும், நம் நாட்டில் நுண் மேலாண்மை தேக்கநிலையை விளைவிக்கும்போதும், அது *செயலே விளைவை உருவாக்கும்* (*res ipsa loquitur*))' என்பதற்குச் சமம்: தரவரிசைகளே உண்மையை எடுத்துரைக்கின்றன.

ஆராய்ச்சியைப் புறக்கணித்தல் என்னும் இழப்பு

மையப்படுத்துதலால் ஏற்பட்ட மிக மோசமான பாதிப்பு என்னவென்றால், ஒன்றிய அரசாங்கத்தின் முன்னுரிமைகள் திசைமாறியது ஆகும். ஒன்றிய அரசாங்கம் நேரடியாக சுமார் 2,000 பள்ளிகளை நடத்துகிறது,

சிபிஎஸ்இ (CBSE) வழியாகச் சுமார் 32,000 தனியார்/நிதியுதவி பெறும் பள்ளிகளைக் கண்காணிக்கிறது; இவை தவிர 57 மத்தியப் பல்கலைக்கழகங்களையும், சுமார் 165 தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களையும் நடத்துகிறது.

மாநிலங்களால் சிறப்பாக மேலாண்மை செய்யப்பட வேண்டிய பணிகளான பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களை நடத்துவதிலும், தனியார் பள்ளிகளின் மாபெரும் வலைப்பின்னலைக் கண்காணிப்பதிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டதன் வழியாக, தான் மட்டுமே திறம்படச் செய்யக்கூடிய 'ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு' போன்ற துறைகளிலிருந்து தனது கவனத்தையும் வளங்களையும் ஒன்றியம் திசைதிருப்பியுள்ளது. தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெறும் 0.65 விழுக்காட்டை மட்டுமே ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக இந்தியா செலவிடுகிறது; இந்த அளவு கடந்த பத்து ஆண்டுகளாக மாறாமல் தேக்கமடைந்துள்ளது. இது அமெரிக்கா (3.59 விழுக்காடு), ஜெர்மனி (3.13 விழுக்காடு), ஆஸ்திரேலியா (1.86 விழுக்காடு), கனடா (1.70 விழுக்காடு) ஆகியவற்றை விட மிகக் குறைவு; இங்கிலாந்து 2.90 விழுக்காடும், சீனா 2.56 விழுக்காடும் செலவிடுகின்றன.[8]

வெற்றிகரமான கூட்டாட்சி நாடுகள், பின்வரும் தெளிவான அதிகாரப் பகிர்வைப் பின்பற்றுகின்றன: உயர் ஆராய்ச்சி, தேசிய ஆய்வகங்கள், முன்னணி அறிவியல், சர்வதேச ஒத்துழைப்பு ஆகியவற்றில் கூட்டாட்சி அரசு கவனம் செலுத்துகிறது; பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றை மாநிலங்கள் நடத்துகின்றன. இந்த அதிகாரப் பகிர்வை இந்தியா தலைகீழாக மாற்றியுள்ளது.

பொறுப்புகளை மறுசீரமைத்தல்

அதிகாரம், பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் கட்டமைப்பு அளவிலான ஒழுங்கின்மையே, பொதுப் பட்டியல் ஏற்பாட்டில் உள்ள ஆழமான குறைபாடு ஆகும். பெரும்பான்மையான பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றை மாநிலங்களே நடத்துகின்றன; ஆசிரியர்களைப் பணியமர்த்துகின்றன. உள்கட்டமைப்பிற்கு நிதியளிக்கின்றன. இவற்றின் விளைவுகளுக்குப் தேர்தல் காலத்தில் பொறுப்பேற்கின்றன. ஆயினும், தங்களுக்கு மிகக் குறைந்த செல்வாக்கே உள்ள ஒன்றிய ஒழுங்குமுறைகளின் (பல்கலைக்கழக மானியக் குழு (UGC), அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி அவை (AICTE) தேசிய

[8] 'Government Expenditure on Education, Total (% of GDP)' (*World Bank Group* 2025) accessed January 05, 2026.

மருத்துவ ஆணையம் (NMC), தேசிய ஆசிரியர் கல்வி அவை (NCTE) போன்றவை) மூச்சுத்திணற வைக்கும் அடுக்கின் கீழேயே அவை செயல்படுகின்றன. கற்றல் முடிவுகள் தேக்கமடையும் போதோ அல்லது பல்கலைக்கழகத் தரவரிசைகள் சரிந்து போகும் போதோ, பொறுப்புக்கூறல் மங்கலாகிவிடுகிறது. மோசமான அமலாக்கத்திற்காக ஒன்றியம் மாநிலங்களைக் குற்றம் சாட்டுகிறது; கடுமையான விதிகளுக்காக மாநிலங்கள் ஒன்றியத்தைக் குற்றம் சாட்டுகின்றன. இது அதிகாரங்கள் மையப்படுத்தப்பட்ட, ஆனால் பொறுப்பு ஏற்காத ஒரு முறையாகும்.

கல்வி மாநிலப் பட்டியலிலேயே இருந்திருந்தால், இந்த விளைவுகள் "இன்னும் மோசமாக இருந்திருக்கலாம்" என்கிற வாதம் தட்டிக்கழிப்பதும் நிரூபிக்க முடியாததும் ஆகும். அரசமைப்புச் சட்ட மதிப்பீடு என்பது ஊகங்களின் அடிப்படையில் இருக்க முடியாது; அதற்கு கண்கூடான அளவுகோல்கள் வேண்டும். அதிகாரப் பரவல் கொண்ட கூட்டாட்சி நாடுகளின் செயல்பாடுகள், உலகளாவிய சராசரிகள், கல்வியில் இந்தியா நிர்ணயித்த இலக்குகள் ஆகியவற்றுடன் இந்தியாவின் செயல்பாட்டை ஒப்பிடப்படும் போது, இதற்கான சான்றுகள் மிகத் தெளிவாக உள்ளன. மையப்படுத்தப்பட்ட மாதிரி சிறப்பையோ அல்லது சமத்துவத்தையோ வழங்கத் தவறிவிட்டது.

பரிந்துரை 2

ஐம்பது ஆண்டுகால இந்தப் பரிசோதனை தோல்வியடைந்துவிட்டதால், பொதுப் பட்டியலின் 25வது இனத்தையும், மாநிலப் பட்டியலின் 11வது இனத்தையும் திருத்தி, "பட்டியல் I–இன் 63, 64, 65, 66 ஆகிய இனங்களின் விதிகளுக்கு உட்பட்டு, தொழில்நுட்பக் கல்வி, மருத்துவக் கல்வி, பல்கலைக்கழகங்கள் உட்பட கல்வி"யைப் பொதுப் பட்டியலிலிருந்து மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும். இது 1950–1976 காலகட்டத்தின் வலுவான அரசமைப்புச் சட்ட வடிவத்திற்குத் திரும்புவது ஆகும். ஒன்றிய அரசாங்கம் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை நடத்துவதை நிறுத்திவிட்டு, அவற்றை அந்தந்த மாநிலங்களுக்கு மாற்ற வேண்டும். இந்தச் சீர்திருத்தம் பின்வருவனவற்றைச் செய்யும்:

- அதிகாரத்தைப் பொறுப்புடன் மீண்டும் இணைக்கும்;
- மாநிலங்கள் தங்களின் குறிப்பிட்ட மொழி, பொருளாதாரத் தேவைகளுக்கு ஏற்ப கொள்கைகளை வடிவமைக்க அனுமதிக்கும். இது அமெரிக்கா, ஜெர்மனியைப் போல "முதலிடத்தை நோக்கிய போட்டியை" ஊக்குவிக்கும்;

- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தவும், கல்வித் தரத்தை உயர்த்த நிதியுதவியை அதிகரிக்கவும் ஒன்றியத்திற்கு வழிவகை செய்யும்.

பரிந்துரை 3

உண்மையான மாநில சுயாட்சியையும் பல்கலைக்கழகச் சுயாட்சியையும் மீட்டெடுக்கவும், ஒன்றியப் பட்டியலின் இனம் 66க்கு உச்சநீதிமன்றம் அளித்த விரிவான விளக்கத்தால் ஏற்பட்ட மாநிலச் சட்டம் இயற்றும் அதிகாரச் சிதைவைத் தடுக்கவும், ஒரு அரசமைப்புச் சட்டத் திருத்தம் இன்றியமையாதது. "தரநிலைகளை ஒருங்கிணைத்தலும் நிர்ணயித்தலும்" என்கிற ஒன்றியத்தின் அதிகாரம் கல்வி சார்ந்த அளவுகோல்களுடன் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்; அது சேர்க்கையைக் கட்டுப்படுத்துவதற்கோ, விரிவான பாடத்திட்டங்களை வகுப்பதற்கோ, சேவை நிலைமைகளை ஒழுங்குபடுத்துவதற்கோ அல்லது பல்கலைக்கழகங்களின் உள் ஆளுகையில் தலையிடுவதற்கோ நீட்டிக்கப்படாது என்பதையும் சந்தேகத்திற்கு இடமின்றி உறுதிப்படுத்த வேண்டும். இது தேசிய ஒருமைப்பாட்டை நலிவடையச் செய்யவோ அல்லது கல்வித் தரத்தைச் சமரசம் செய்யவோ செய்யாது. மாறாக, இவ்விரண்டையும் வலுப்படுத்தும்.

VII. உயர் அழுத்த தேசிய நுழைவுத் தேர்வுகளைக் கைவிடுதல்

இளநிலை மற்றும் முதுநிலைப் பட்ட படிப்புகளுக்கான சேர்க்கைக்கு நடத்தப்படும் உயர் அழுத்த தேசிய நுழைவுத் தேர்வுகளின் அதிகரிப்புப் போல வேறெந்த வளர்ச்சியும், இக்காலக் கல்வி ஆளுகையில் நிலவும் மையப்படுத்தும் போக்கை, இவ்வளவு அப்பட்டமாக உணர்த்தவில்லை. இத்தகைய தேர்வுகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

முதல் வகை, அரசு மற்றும் தனியார், ஒன்றியம் மற்றும் மாநிலம் என அனைத்து நிறுவனங்கள் மீதும் ஒற்றைப்படையாகத் திணிக்கப்படும் சட்டப்பூர்வ கட்டாயத் தேசிய நுழைவுத் தேர்வுகள் ஆகும். இந்த முறையானது, மாநிலங்களால் நிறுவப்பட்டு, நிதியளிக்கப்பட்டு, நிர்வகிக்கப்படும் நிறுவனங்களின் சேர்க்கை தொடர்பாக மாநிலங்களுக்கு எந்த அதிகாரத்தையும் வழங்காமல், மாநிலக் கல்வி வாரியமதிப்பெண்களை

முழுமையாகப் புறக்கணிக்கிறது. தேசிய தகுதி நுழைவுத் தேர்வு என்னும் நீட் தேர்வு முறை – NEET–UG, NEET–PG, NEET–Super Specialities (SS) உள்ளடக்கிய அனைத்து தேர்வுகளும் – இந்த வகைக்குள் நேரடியாக வருகிறது. மருத்துவக் கல்வியில் மாணவர் சேர்க்கையை ஒழுங்குபடுத்தும் மாநில அதிகாரத்தை பறிப்பது கூட்டாட்சி முறையில், மாநிலக் கல்வி உரிமையில் தலையிடும் மோசமான போக்காகும்.

இரண்டாவது வகை, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள், ஒன்றிய நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு மட்டுமே கட்டாயமான தேசிய நுழைவுத் தேர்வுகளைக் கொண்டது; இதில் மாநிலங்கள் தங்கள் பல்கலைக்கழகங்களுக்கான சேர்க்கை முறைகளைத் தீர்மானிக்கும் சுயாட்சியைத் தக்கவைத்துக் கொள்கின்றன. கூட்டு நுழைவுத் தேர்வு (JEE), பல்கலைக்கழகப் பொது நுழைவுத் தேர்வு (CUET–UG), சட்டக் கல்வி சேர்க்கைக்கான பொது தேர்வு (CLAT) போன்ற தேர்வுகள் பொதுவாக இந்தக் கட்டமைப்பிற்குள் வருகின்றன.

இத்தேர்வு முறைகளின் எதிர்காலம்தான், ஆழ்ந்த கவலைக்குரியது. நீட் (NEET) மாதிரியைப் பொறியியல், கலை, அறிவியல், சட்டம் என அனைத்துத் துறைகளுக்கும் பொதுவான வார்ப்புருவாகக் கருதி, அதை மாநில நிறுவனங்களுக்கும் நீட்டிக்கும் வெளிப்படையான போக்கு ஒன்றிய அரசாங்கத்திடம் உள்ளது. ஒரே ஒரு தேசிய நுழைவுத் தேர்வுதான் தரம், தகுதி, உயரிய கல்வித் தரத்திற்கு இணையானது என்கிற தவறான அனுமானத்தின் அடிப்படையிலேயே இந்த விரிவாக்கம் முன்னெடுக்கப்படுகிறது.

மாநிலங்களுக்கு இடையே கல்வித் தரங்களும் மதிப்பீட்டு முறைகளும் பெரிதும் மாறுபடும் நாட்டில், ஒன்றிய நிறுவனங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட தேசிய நுழைவுத் தேர்வு என்பது புரிந்துகொள்ளத்தக்கது; இருப்பினும் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, ஜெர்மனி போன்ற கூட்டாட்சி முறைகளில் ஒன்றிய அரசாங்கம் தேசிய நுழைவுத் தேர்வுகளை நடத்துவதில்லை என்கிற மாற்று மாதிரிகள் உள்ளன. ஆனால், "தரப்படுத்துதல்" என்கிற பெயரில் மாநிலங்கள் நடத்தும் நிறுவனங்களுக்கும் "ஒரே நாடு, ஒரே தேர்வு" மாதிரியை நீட்டித்து, மாணவர் சேர்க்கையைத் தீர்மானிக்கும் மாநிலங்களின் அதிகாரத்தைப் பறிப்பது அரசமைப்புச் சட்ட அளவிலும், கற்பித்தல் முறையிலும், சமூக அளவிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

ஒப்பீட்டுப் பார்வையில் இந்தியா: இரண்டு முன்மாதிரிகள்

பல்கலைக்கழகச் சேர்க்கை தொடர்பான இரண்டு விரிவான அணுகுமுறைகளுக்கு இடையே தெளிவான வேறுபாடு இருப்பதை

உலகளாவிய அனுபவம் வெளிப்படுத்துகிறது. இப்போது இவற்றுக்கிடையிலான முச்சந்தியில் இந்தியா நிற்கிறது.

சீனா, தென்கொரியா போன்ற ஒற்றையாட்சி கிழக்கு ஆசிய நாடுகளில், பல்கலைக்கழகச் சேர்க்கை என்பது ஒன்றிய அரசாங்கத்தால் நடத்தப்படும் அல்லது கடுமையான கட்டுப்பாட்டில் உள்ள, ஒருவரின் வாழ்க்கையைத் தீர்மானிக்கக்கூடிய ஒற்றைத் தேசியத் தேர்வைச் சார்ந்தே உள்ளது. சீனாவின் *காவ்காவ்* (Gaokao) என்கிற தேசிய கல்லூரி நுழைவுத் தேர்வு, தென்கொரியாவின் *சுனியுங்* (Suneung) என்கிற கல்லூரி கல்வித் திறன் தேர்வு ஆகியவை ஒருமைத்தன்மைக்கும் நிர்வாக எளிமைக்கும் முன்னுரிமை அளிக்கின்றன. எவ்வாறாயினும், இது அதிதீவிர தேர்வு அழுத்தம், பிரம்மாண்டமான தனியார் பயிற்சி மையங்களின் பெருக்கம், பதின்பருவத்தினருக்குக் கடுமையான மனநலப் பாதிப்புகள் ஆகிய விலைகளைக் கோருகிறது. பெருமளவில் இந்த ஒற்றையாட்சி மாதிரியை நோக்கியே, இந்தியா செல்வதாகத் தோன்றுகிறது.

இதற்கு நேர்மாறாக, வளர்ந்தத கூட்டாட்சி நாடுகள், மையப்படுத்தப்பட்ட கட்டாயங்கள் இன்றி, தேசிய அளவிலான ஒப்பீட்டுத் தன்மையை அடைகின்றன. "தரநிலைகளுக்கு" (Standards) "தரப்படுத்தல்" (Standardisation) தேவையில்லை என்பதை அவை மெய்ப்பிக்கின்றன.

இதற்கு, மிகச்சிறந்த மாற்று வழியை *ஆஸ்திரேலியா* வழங்குகிறது. அங்கு கூட்டாட்சி அரசாங்கம் நுழைவுத் தேர்வுகளை நடத்துவதில்லை. மாறாக:

- *மதிப்பீடு முழுமையாக மாநிலங்களிடமே உள்ளது.* மாணவர்கள் அந்தந்த மாநிலங்களின் பாடத்திட்டங்களைப் பயின்று, தேர்வுகளை எழுதுகின்றனர். நியூ சவுத் வேல்ஸில் ‹Higher School Certificate›, விக்டோரியாவில் ‹Victorian Certificate of Education› போன்றவற்றைப் பெறுகின்றனர். இவை முழுமையாக மாநில அதிகார அமைப்புகளால் வடிவமைக்கப்பட்டு, நடத்தப்பட்டு, மதிப்பீடு செய்யப்படுகின்றன.
- *புள்ளியியல் முறையிலான சமன்படுத்துதல், ஒற்றைப்படைத் தேர்வுக்கு மாற்றாக அமைகிறது.* இந்த வெவ்வேறு மாநிலத் தேர்வுகளிலிருந்து பெறப்படும் மதிப்பெண்கள் தேசிய அளவில் ஒப்பிடக்கூடிய *விழுக்காட்டுத் தரவரிசை* (0.00–99.95) அல்லது *ஆஸ்திரேலிய மூன்றாம் நிலை சேர்க்கை தரவரிசை* (*ATAR*) ஆக மாற்றப்படுகின்றன. ஒரு 85.00 ATAR என்பது மாநிலம் எதுவாக இருந்தாலும் நாடு முழுவதும் ஒரே அளவிலான ஒப்பீட்டுச் சாதனையையே குறிக்கும்.

- *மையப்படுத்துதல் இன்றி, கல்வி மதிப்பெண் இடப்பெயர்வு.* ஆஸ்திரேலியா முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள் விண்ணப்பதாரர்களை நம்பகத் தன்மையுடன் ஒப்பிட முடியும். அதே சமயம் மாநிலங்கள் பாடத்திட்டம், மதிப்பீடு மீதான முழுமையான கட்டுப்பாட்டைத் தக்கவைத்துக் கொள்கின்றன.

கூட்டாட்சி அரசின் தலையீடு இல்லாமலேயே, *புள்ளியியல் ஒருங்கிணைப்பு* வழியாக மாணவர் இடப்பெயர்ந்து கல்வி பயில முடியும் என்பதை ஆஸ்திரேலியா நிரூபிக்கிறது. இந்தியாவும் இத்தகைய மாதிரியைப் பின்பற்றலாம் – உடனடியாக மாநிலங்களுக்கு இடையே இல்லாவிட்டாலும், மாநிலங்களுக்குள்ளாவது – பல்வேறு வாரியத் தேர்வுகளை ஒத்திசைத்து, உயர் அழுத்த ஒற்றைத் தேர்வு இல்லாமலேயே, நீதியான முறையை உறுதிப்படுத்த முடியும்.

பிற கூட்டாட்சி நாடுகள் வெவ்வேறு விதமான, அதே சமயம் அதிகாரப் பரவல் கொண்ட தீர்வுகளைப் பின்பற்றுகின்றன.

ஜெர்மனியில், அரசமைப்புச் சட்ட அளவில் கல்வி மாநிலங்களின் *Länder*) பொறுப்பு ஆகும். அங்கு கூட்டாட்சி அரசின் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு எதுவும் கிடையாது. மாறாக, *அபிதூர் (Abitur – பள்ளி இறுதிச் சான்றிதழ்)* உயர்கல்விக்கான முக்கிய நுழைவாயிலாகச் செயல்படுகிறது. மாநிலக் கல்வி அமைச்சர்களின் கூட்டுறவு மன்றமான (*Kultusministerkonferenz – KMK)* வழியாக ஒப்பீட்டுத் தன்மை உறுதி செய்யப்படுகிறது. இந்த ஒருமித்த கருத்து அடிப்படையிலான அமைப்பு, பவேரியாவில் வழங்கப்படும் *அபிதூர்* பெர்லினிலும் அங்கீகரிக்கப்படுவதை உறுதி செய்கிறது; இது கிடைமட்ட ஒத்துழைப்பு மூலமே நடக்கிறது. மேலிருந்து திணிக்கப்படுவதில்லை.

கனடாவில், கூட்டாட்சி அரசின் கல்வி அமைச்சகம் இல்லை, தேசிய நுழைவுத் தேர்வும் இல்லை. ஒருவேளை, இதுதான் மிகவும் அதிகாரப் பரவல் செய்யப்பட்ட முறையாக இருக்கும். கல்வி இடப்பெயர்வு என்பது முழுமையாக 'பரஸ்பர அங்கீகாரத்தை' சார்ந்தே உள்ளது. மாகாணத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றொரு மாகாணம் வழங்கும் சான்றிதழ்களை மாகாணங்களுக்கு இடையிலான நெறிமுறைகளின் அடிப்படையில் ஏற்றுக்கொள்கின்றன.

அமெரிக்கா சந்தை அடிப்படையிலான தரப்படுத்துதலில் செயல்படுகிறது. அங்கு கூட்டாட்சி அரசின் கட்டாயம் எதுவும் இல்லாததால், ஒப்பீட்டுத் தன்மையிலுள்ள இடைவெளியைத் தனியார் துறை (SAT/ACT) நிரப்புகிறது. இருப்பினும், இத்தேர்வுகள் அரசாங்கத்தின் நுழைவாயில் காவலர்கள் அல்ல, அவை வெறும் விருப்பத்திற்குரிய 'அளவுகோல்கள்' மட்டுமே; மேலும் சேர்க்கை என்பது கூட்டாட்சி

அரசின் முகமைகளால் அல்லாமல், அந்தந்தப் பல்கலைக்கழகங்களால் தீர்மானிக்கப்படும் முழுமையான செயல்முறை ஆகும்.

உயர் அழுத்த தேர்வுகளும் மாணவர்களின் மனநலமும்

இந்தியாவில், உயர் அழுத்த நுழைவுத் தேர்வுகளின் "வாழ்வா–சாவா" என்கிற அழுத்தம் நச்சுத்தன்மை வாய்ந்த பதட்டமான சூழலை வளர்த்தெடுத்துள்ளது. இது பொதுச் சுகாதாரச் சவாலாகவே மாறியுள்ளது.

NCERT மனோதர்ப்பன் ஆய்வு (2022) (*NCERT Manodarpan Survey* (2022), 81 விழுக்காடு மாணவர்கள் பதட்டத்தை எதிர்கொள்வதாகவும்; படிப்பு, தேர்வுகள், முடிவுகள் ஆகியவையே அதற்கான முதன்மைக் காரணங்கள் என்றும் கண்டறிந்துள்ளது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (2023), 13,892 மாணவர் தற்கொலைகளைப் பதிவு செய்துள்ளது; இது கடந்த பத்தாண்டுகளில் 65 விழுக்காடு அதிகரிப்பு ஆகும். இத்தகைய மரணங்கள் கோட்டா போன்ற உயர் அழுத்த அழுத்தம் நிறைந்த தனியார் பயிற்சி மையக் குவிவு மையங்களிலேயே அதிகம் நிகழ்கின்றன.

பி.எஸ். ஷெகாவத் உள்ளிட்டோர் 2023ல் *Journal of Family Medicine and Primary Care* என்கிற இதழில் வெளியிட்ட ஆய்வில், பயிற்சி மையங்களில் இருக்கும் மாணவர்களில் 44.45 விழுக்காட்டினர் கடும் கல்வித்துறை மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்; இது பயிற்சி மையங்களுக்குச் செல்லாத மாணவர்களிடம் வெறும் 3.3 விழுக்காடாகவே உள்ளது. மேலும், மருத்துவக் கனவுடன் இருப்பவர்களில் சுமார் 38 விழுக்காட்டினர், மனநலக் கோளாறு என்று வகைப்படுத்தக்கூடிய அளவிலான பதட்டத்தைக் கொண்டுள்ளனர்.

இந்த நோயியல், இந்தியாவிற்கு மட்டுமே உரியது அல்ல. சீனாவில், 65 விழுக்காடு *காவ்காவ்* மாணவர்கள் பதட்டத்தையும், 45 விழுக்காட்டினர் மனச்சோர்வையும் கொண்டுள்ளனர்.[9] இத்தகைய அதிக அழுத்தம் தரும் மாதிரிகளைப் பின்பற்றுவதன் வழியாக, மோசமான உளவியல் பாதிப்பை ஏற்படுத்தும் பாதையை, இந்தியா தேர்ந்தெடுத்துள்ளது. ஏழைகளுக்குச் சமூக முன்னேற்றத்திற்கான முதன்மை வழியாகக் கல்வியே உள்ளது. வாய்ப்புகளைச் சுருக்கிக்கொண்டே மன அழுத்தத்தைப் பெருக்கும் சேர்க்கை முறை என்பது சமத்துவத்தையும் மனித மாண்பையும் ஒருசேரச் சிதைப்பது ஆகும்.

---

[9] Yuning Fu, 'The Impact of Gaokao High–Stakes Testing on Student Mental Health in China: An Analysis of Stress Levels and Coping Mechanisms Among Senior High School Students' (2024) 3 Research and Advances in Education 23.

மேல்நிலைப் பள்ளிக் கல்வியின் சீர்குலைவு

தேசியக் கல்விக் கொள்கை 2020 அறிக்கை, மேல்நிலைப் பள்ளிக் கல்வி அமைதியாகச் சிதைந்து வருவதை ஒப்புக்கொண்டுள்ளது:

> *"இப்போதைய மேல்நிலைப் பள்ளித் தேர்வுகள், வாரியத் தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள் ஆகியவற்றின் தன்மையும் – அதன் விளைவாக இன்று பெருகியுள்ள பயிற்சி மையப் பண்பாடும் – குறிப்பாக மேல்நிலைப் பள்ளி அளவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன; உண்மையான கற்றலுக்கான பொன்னான நேரத்தை, மிதமிஞ்சிய தேர்வுப் பயிற்சியும் தயாரிப்பும் ஆக்கிரமித்துள்ளன."*

இதற்கு முற்றிலும் முரணாக, ஒன்றிய அரசு பின்பற்றும் கல்விக் கொள்கையால் உயர் அழுத்த தேசிய நுழைவுத் தேர்வுகளைப் பன்மடங்கு அதிகரித்துள்ளன; இது தேசியக் கல்விக் கொள்கை 2020 அறிக்கை, எச்சரித்த சீர்கேடுகளை மேலும் வேகப்படுத்தியுள்ளது.

வெற்றி என்பது கல்வி வாரியத் தேர்வுச் செயல்பாடுகளை விட, தரப்படுத்தப்பட்ட நுழைவுத் தேர்வுகளாலேயே தீர்மானிக்கப்படுகிறது என்ற நிலை உருவாகும்போது, வகுப்பறைகள் படிப்படியாகத் தங்கள் முக்கியத்துவத்தை இழக்கின்றன. தெரிவுசெய் வினா–விடை முறையை முதன்மையாகக் கொண்ட நுழைவுத் தேர்வுகள், ஆழமான வாசிப்பு, விமர்சனப் பகுப்பாய்வு அல்லது படைப்புச் சிந்தனை ஆகியவற்றை விட, வேகத்தையும் தவிர்ப்பு உத்திகளையும் மட்டுமே ஊக்குவிக்கின்றன. ஆசிரியர்களின் அதிகாரத்தையும் மன உறுதியையும் குலைக்கும் வகையில், வெற்றிக்கான நுழைவு வாயில்களாகப் பள்ளிகளுக்குப் பதிலாகப் பயிற்சி மையங்கள் உருவெடுத்துள்ளன. தேர்வுத் தயாரிப்பின் மீதான இந்த இடைவிடாத மோகம் கலை, விளையாட்டு, சமூக அறிவியல், படைப்பாற்றல் கற்றலை ஓரங்கட்டுவதோடு, சமூகமயமாக்கல், முழு ஆளுமை ஆகியவற்றின் வளர்ச்சியைச் சீர்குலைக்கிறது.

மாணவர்கள் முறையான வகுப்புகளுக்கும் கட்டாய வருகைப்பதிவிற்கும் வராமல் தவிர்க்க அனுமதிக்கும், பெயரளவில் மட்டும் சேர்க்கை பெற்றுப் பயிற்றுவிப்புப் பணிகளைப் பயிற்சி மையங்களுக்குக் குத்தகைக்கு விடும் "போலிப் பள்ளிகளின்" பெருக்கம், இந்த நோயின் நேரடி அறிகுறி ஆகும். 2024 நவம்பர் மாதத்தில் சிபிஎஸ்இ (CBSE) அத்தகைய 21 பள்ளிகளின் அங்கீகாரத்தை இரத்து செய்தது[10]. ஆனால், இது அறிகுறிக்கான

---

[10] The Hindu Bureau, 'CBSE disaffiliates 21 schools over 'dummy admissions'' (*The Hindu* November 7, 2024) accessed January 2, 2026.

சிகிச்சையே தவிர, நோய்க்கான மருந்து அல்ல. தேசிய நுழைவுத் தேர்வுகளால், பள்ளி வாரியத் தேர்வுகள் பொருளற்றதாக மாற்றப்பட்டுள்ள நிலையில் அதுவே நோயாக மாறிவிட்டது.

பயிற்சி மையப் பொருளாதாரம் சமத்துவமின்மையை நிலைநிறுத்துவதோடு, பொதுநல வாய்ப்புகளைத் தனியார்மயமாக்குகிறது. உயர்தரப் பயிற்சி என்பது அதிகக் கட்டணம் கொண்டது; பெருநகரங்களை மையமாகக் கொண்டது. பெரும்பான்மையாக விளங்கும் கிராமப்புற, சிறிய நகரப் பின்னணி கொண்ட மாணவர்கள், அரசுப் பள்ளிகள், தாய்மொழி வழிப் பயின்றவர்கள், மாநில வாரிய மாணவர்கள் ஆகியவர்களுக்கு, இந்த உயர் அழுத்த நுழைவுத் தேர்வுகள் பெரும் பின்னடைவை ஏற்படுத்துகின்றன. இதனை உணர்ந்துதான், சமத்துவமின்மையைக் குறைக்கவும், குழந்தைகள் மற்றும் பெற்றோரின் மன அழுத்தத்தைக் குறைக்கவும், சீனா 2021–இல் "இலாப நோக்குடன்" இயங்கும் பயிற்சி மையங்களுக்குத் தடை விதித்தது.[11]

தேசியத் தேர்வு முகமை: கட்டமைப்பு பலவீனமும் தோல்வியும்

2018ல் நிறுவப்பட்ட தேசியத் தேர்வு முகமை [National Testing Agency (NTA)], முன்னதாகப் பல்வேறு அமைப்புகளால் நடத்தப்பட்டு வந்த நீட் (NEET–UG), ஜேஇஇ (JEE–Main), சியுஇடி (CUET–UG), யுஜிசி–நெட் (NET), சிஎஸ்ஐஆர் (CSIR–NET) போன்ற பல உயர் அழுத்த தேர்வுகளை நடத்துகிறது.

வெறும் ஒரு சங்கமாக (Society) பதிவு செய்யப்பட்டுள்ள தேசியத் தேர்வு முகமைக்குச் சட்ட முறை மதிப்பு ஏதுமில்லை. இது பத்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவால் நிர்வகிக்கப்படுகிறது; இதில் ஒன்றிய நிறுவனங்களின் *பதவிவழிப்* பிரதிநிதிகளே ஆதிக்கம் செலுத்துகின்றனர்; *மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை*. கோடிக் கணக்கான மாணவர்களைப் பாதிக்கும் நாடு தழுவிய முடிவுகள், ஒரு சிறிய குழுவால் எடுக்கப்படுகின்றன; இதற்குத் தனிப்பட்ட மேற்பார்வையோ அல்லது நாடாளுமன்றத்திற்குச் சட்டப் பொறுப்புக்கூறலோ இல்லை.

தேசியத் தேர்வு முகமை பெரும்பாலும் பிற துறைப் பணியாளர்கள் (22), ஒப்பந்தப் பணியாளர்கள் (38), வெளிப்பணி ஊழியர்களை (138) நம்பியே உள்ளது. இரகசியமும் பொறுப்புணர்வும் மிக்க அகில இந்தியப் போட்டித் தேர்வுகளை நடத்துவதற்கு இத்தகைய அமைப்பு முற்றிலும்

---

[11] Graison Dangor, 'China Bans For–Profit Tutoring In Reforms Aimed At Boosting The Birth Rate' (*Forbes* July 24, 2021) accessed January 11, 2026.

பொருத்தமற்றது. வினாத்தாள் அச்சிடுதல், வசதி ஏற்பாடுகள், கணினி வழித் தேர்வு, தரவு கையாளுதல், கண்காணிப்பு போன்ற முக்கியமான பணிகள் ஒப்பந்ததாரர்களிடையே சிதறிக்கிடக்கின்றன; இது பாதுகாப்புக் குறைபாடுகளை அதிகரிப்பதோடு பொறுப்புணர்வையும் மங்கச் செய்கிறது.

ஒரே ஒரு ஒன்றிய அமைப்பிடம் அதிகாரத்தைக் குவிப்பதும், பலவீனமான நிறுவன வடிவமைப்பும், வலுவற்ற பொறுப்புக்கூறல் வழிமுறைகளும் இணைந்து 'ஒற்றைப் புள்ளித் தோல்வி' அபாயத்தை உருவாக்கியுள்ளன.

தேசியத் தேர்வு முகமையின் இந்தப் பலவீனம் 2024ல் அம்பலமானது. பல மாநிலங்களில் முதுநிலை நீட் (NEET–UG) தேர்வு வினாத்தாள் கசிந்தது உறுதி செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து, பாதுகாப்பு மீறல் காரணமாக யுஜிசி–நெட் (NET) தேர்வு இரத்து செய்யப்பட்டது; சியுஇடி (CUET) முடிவுகள் சரியான நேரத்தில் வெளியிடப்படாமல் மீண்டும் மீண்டும் தாமதமானது. *கல்விக்கான நாடாளுமன்ற நிலைக்குழு* (371வது அறிக்கை, 2025) (*Department–Related Parliamentary Standing Committee on Education*) தேசியத் தேர்வு முகமையின் செயல்பாடு "அதிக நம்பிக்கையைத் தரவில்லை" என்று முடிவெடுத்ததுடன், அது நடத்திய 14 தேர்வுகளில் குறைந்தது ஐந்தில் தீவிரக் குறைபாடுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டியது. கருப்புப் பட்டியலில் உள்ள நிறுவனங்களை ஈடுபடுத்தியது, தொடர் தாமதங்கள், பள்ளிக் கல்வியோடு ஒத்துப்போகாத பயிற்சி மையங்களைச் சார்ந்த இணை பாடத்திட்டம் உருவானது உள்ளிட்ட முறைசார்ந்த தோல்விகளைக் கோடிட்டுக் காட்டியது.

தேர்வுகள் எவ்விதப் பிழையுமின்றி நடத்தப்பட்டாலும் கூட, மாநில நிறுவனங்களின் இளநிலைப் பட்டப் படிப்பு சேர்க்கைக்கான உயர் அழுத்த தேசிய நுழைவுத் தேர்வுகள் அரசமைப்புச் சட்ட அளவில் விரும்பத்தகாதவை, கல்வியியல் நோக்கில் சரியானவையல்ல, சமூக நோக்கில் சமத்துவமற்றவை, மாணவர்களின் நலனுக்குக் கேடு விளைவிப்பவை. இப்போது செயலிழந்து நிற்கும் தேசியத் தேர்வு முகமையினால் இந்த அபாயங்கள் மேலும் பெருகியுள்ளன.

பரிந்துரை 4

மாநிலங்களால் நிறுவப்பட்டு, நிதியளிக்கப்பட்டு, நிர்வகிக்கப்படும் கல்வி நிறுவனங்களின் சேர்க்கை மீதான அதிகாரம் அந்தந்த மாநிலங்களிடமும், அவற்றின் பல்கலைக்கழகங்களிடமுமே இருக்க வேண்டும். நீட் தேர்வு முறையில் நடப்பது போல, "தரநிலைகளை" பராமரித்தல் என்கிற போர்வையில் இந்த உரிமையை ஒன்றிய அரசு பறிக்கக் கூடாது.

பரிந்துரை 5

'ஒற்றைப் புள்ளித் தோல்வி' எனும் முறைசார் அபாயத்தைக் குறைக்க, தேசியத் தேர்வு முகமை கலைக்கப்பட வேண்டும்; மேலும் நுழைவுத் தேர்வுகளை நடத்தும் பொறுப்பு 2018க்கு முன்னர் அவற்றை நிர்வகித்து வந்த பல்வேறு முகமைகளிடமே மீண்டும் ஒப்படைக்கப்பட வேண்டும்.

VIII. ஏன் பல்கலைக்கழக மானியக் குழுவின் விதிமுறைகள் மாநிலப் பல்கலைக்கழகச் சட்டங்களை மீற முடியாது

மாநிலப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை நியமிப்பதற்கான தேடல் குழுக்களில் பல்கலைக்கழக மானியக் குழு பிரதிநிதி ஒருவரை இடம்பெறச் செய்யும் *பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகள்* 2018–இன் விதி 7.3 தொடர்பான சர்ச்சை, ஆழமான அரசமைப்புச் சட்ட விளைவுகளைக் கொண்ட கேள்வியை எழுப்புகிறது. பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவர், துணைத் தலைவர் முதலான பத்து உறுப்பினர்களால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகள், மாநிலச் சட்டமன்றங்களால் இயற்றப்பட்டு, ஆளுநர்கள் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற *முழுமையான சட்டங்களான* மாநிலப் பல்கலைக்கழகச் சட்டங்களின் விதிகளை முந்த முடியுமா? இது ஒன்றிய–மாநில உறவுகள் தொடர்பான பெரும் சட்டக் கேள்வியின் ஒருபகுதி ஆகும்: "ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்ட *விதிகளோ* அல்லது அதன் சட்டப்பூர்வ அமைப்புகளால் உருவாக்கப்பட்ட *ஒழுங்குமுறைகளோ*, ஒரு *முழுமையான மாநிலச் சட்டத்தின் விதிகளை* மீற முடியுமா?"

இந்த மோதல் தமிழ்நாட்டை விட வேறெங்கும் இவ்வளவு தீவிரமாக இல்லை. இங்கு இருபது மாநிலப் பல்கலைக்கழகங்களில் பன்னிரண்டு பல்கலைக்கழகங்கள் துணைவேந்தர்கள் இன்றி உள்ளன; சில பல்கலைக்கழகங்களில் ஓராண்டுக்கும் மேலாகத் துணைவேந்தர்கள் இல்லாததால், பல்கலைக்கழக நிர்வாகம் முடங்கியுள்ளது. துணைவேந்தர் தேடல் குழுக்களின் கட்டமைப்பு தொடர்பாக ஆளுநருக்கும் மாநில அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையே, இந்த இக்கட்டான நிலைக்குக் காரணம். மாநிலப் பல்கலைக்கழகச் சட்டங்களின் கீழ் *பதவிவழி* வேந்தராக இருக்கும் ஆளுநர், விதி 7.3–இன்படி

பல்கலைக்கழக மானியக் குழு பிரதிநிதியைச் சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். ஆயினும், மாநில அரசாங்கம், தனது பல்கலைக்கழகச் சட்டங்களே முதன்மையானது என்று வாதிடுகிறது; பொதுவாக இச்சட்டங்கள் வேந்தர், சிண்டிகேட், செனட் ஆகியவற்றின் சார்பில் தலா ஒரு பிரதிநிதியை வழங்குகின்றன. பல்கலைக்கழக மானியக் குழுவின் தலையீட்டை, மாநில சுயாட்சி மீதான ஆக்கிரமிப்பாகவும், அரசமைப்புச் சட்ட அதிகாரப் பகிர்வை மீறும் செயலாகவும் மாநில அரசாங்கம் கருதுகிறது. கேரளாவிலும் பஞ்சாபிலும் இத்தகைய முட்டுக்கட்டைகள் நீடிப்பது, இந்தப் பிரச்சனை அகில இந்திய அளவிலான தாக்கங்களைக் கொண்டது என்பதை உணர்த்துகிறது.

பல்கலைக்கழக மானியக் குழு சட்டம், 1956 – சட்ட வடிவமைப்பு

ஒன்றியப் பட்டியலின் இனம் 66ன் கீழ், *பல்கலைக்கழக மானியக் குழு சட்டம்*, 1956ஐ, நாடாளுமன்றம் இயற்றியது; இது "உயர்கல்வி நிறுவனங்களில் தரநிலைகளை ஒருங்கிணைத்தலும் நிர்ணயித்தலும்" குறித்துச் சட்டம் இயற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கிறது. பிரிவு 12, பல்கலைக்கழகக் கல்வியை மேம்படுத்துவதற்கும் தரநிலைகளைப் பராமரிப்பதற்கும் நடவடிக்கைகளைப் *பரிந்துரைக்கப்* பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு அதிகாரம் அளிக்கிறது. இத்தகைய பரிந்துரைகளைப் பின்பற்றாததற்கு, மானியங்களை நிறுத்தி வைப்பது என்கிற *ஒரே சட்டப்பூர்வ விளைவைப்* பிரிவு 14 பரிந்துரைக்கிறது. பிரிவுகள் 25, 26, சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, அதாவது ஒருங்கிணைப்பதற்கும் தரநிலைகளுக்காக மட்டுமே விதிகளையும் துணைச் சட்டங்களையும் உருவாக்கும் அதிகாரத்தை வழங்குகின்றன. பிரிவு 28(1), பல்கலைக்கழக மானியக் குழு விதிகளும் துணைச் சட்டங்களும் நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டும் என்றும், நாடாளுமன்றம் அவற்றை மாற்றவோ அல்லது இரத்து செய்யவோ முடியும் என்றும் கூறுகிறது.

இங்கு முக்கியமானது, பல்கலைக்கழக மானியக் குழு சட்டம் எதைச் சொல்கிறது என்பது மட்டுமல்ல, அது *எதைச் சொல்லவில்லை* என்பதும்தான். துணைவேந்தர்கள் நியமனம், தேடல் குழுக்களின் அமைப்பு அல்லது பல்கலைக்கழகங்களின் உள் ஆளுகை அமைப்பு குறித்து இந்தச் சட்டம் முற்றிலும் அமைதி காக்கிறது. *"குறிப்பிட்ட விஷயங்களைத் தெளிவாகக் குறிப்பிடுவது, குறிப்பிடப்படாதவற்றைத் தவிர்ப்பதைக் குறிக்கும்"* (*expressio unius est exclusio alterius*) எனும் நன்கு நிறுவப்பட்ட சட்டக் கொள்கையைப் பயன்படுத்தினால், இந்த அமைதி

திட்டமிட்டதாகவே கருதப்பட வேண்டும். தரநிலைகள் குறித்து விரிவாகச் சட்டம் இயற்றிய நாடாளுமன்றம், பல்கலைக்கழக ஆளுகைப் பகுதிக்குள் நுழைவதைத் தன்னுணர்வோடு தவிர்த்துள்ளது; அதை பொதுப் பட்டியலின் இனம் 25, மாநிலப் பட்டியலின் இனம் 32 ஆகியவற்றின் கீழ் உள்ள மாநிலப் பல்கலைக்கழகச் சட்டங்களின் பொறுப்பிலேயே விட்டுள்ளது. இதன் விளைவாக, இப்பொருள் தொடர்பாக பல்கலைக்கழக மானியக் குழு சட்டத்திற்கும் மாநிலப் பல்கலைக்கழகச் சட்டங்களுக்கும் இடையே எந்தக் குறுக்கீடும் இல்லை, மோதலும் இல்லை. அரசமைப்புச் சட்டப் பிரிவு 246(1)–இன் கீழ், பல்கலைக்கழக மானியக் குழு சட்டம் மாநிலப் பல்கலைக்கழகச் சட்டங்களைவிட மேலோங்கும் என்ற கேள்வியே எழவில்லை.

முன்பே குறிப்பிட்டபடி, மாநிலப் பட்டியலின் 32வது இனம், ஒன்றியப் பட்டியலின் 44வது இனம் ஆகியவற்றைச் சேர்த்துப் படிக்கும்போது, தெளிவான அரசமைப்புச் சட்ட நோக்கம் வெளிப்படுகிறது: பல்கலைக்கழகங்களை 'ஒழுங்குபடுத்தும்' அதிகாரம் தனித்த வகையில் மாநிலங்களுக்கே உரியது. 32வது இனம், பல்கலைக்கழகங்களை 'நிறுவுதல், ஒழுங்குபடுத்துதல், கலைத்தல்' ஆகிய அதிகாரங்களை வெளிப்படையாக மாநிலங்களிடம் ஒப்படைக்கிறது. இதற்கு மாறாக, நிறுவனங்களை ஒழுங்குபடுத்த ஒன்றியத்திற்கு அதிகாரம் அளிக்கும் 44வது இனத்தில், 'ஆனால் பல்கலைக்கழகங்கள் இதில் அடங்காது' என்ற வெளிப்படையான விலக்கு உள்ளது.

இந்தச் சொற்களின் அடிப்படையிலான வரம்பு, 'தரநிலைகளை ஒருங்கிணைத்தலும் நிர்ணயம் செய்தலும்' என்பதற்கு மட்டுமே வரையறுக்கப்பட்ட 66வது இனம் (ஒன்றியப் பட்டியல்), பல்கலைக்கழக நிர்வாகத்தின் மீது ஒன்றியத்தின் பொதுவான கட்டுப்பாட்டிற்கு அதிகாரம் அளிக்கும் வகையில் நீட்டிக்கப்பட முடியாது என்பதை உறுதிப்படுத்துகிறது. கெடுவாய்ப்பாக, ஒன்றியத்தின் ஒழுங்குமுறை வரம்பு மீறல் சூழலில், இந்தத் துல்லியமான சொற்களின் அடிப்படையிலான விலக்கின் தாக்கங்கள் குறித்து உச்சநீதிமன்றம், இன்னும் குறிப்பாகத் தீர்ப்பு அளிக்கவில்லை. ஆயினும், அரசமைப்புச் சட்ட தர்க்கம் தெளிவாக உள்ளது: அரசமைப்புச் சட்டம் 44வது பிரிவின் கீழ் நாடாளுமன்றத்திற்கு அத்தகைய அதிகாரத்தை வெளிப்படையாக மறுக்கும்போது, பல்கலைக்கழக மானியக் குழுவும் பிற ஒன்றிய ஒழுங்குமுறை அமைப்புகளும் பல்கலைக்கழகங்களை 'ஒழுங்குபடுத்தும்' பொதுவான உரிமையைத் தன்னிச்சையாக எடுத்துக்கொள்ளவோ அல்லது அவற்றின் உள் நிர்வாகத்தில் தலையிடவோ முடியாது.

ஒழுங்குமுறை விதி 7.3ம் துணைநிலைச் சட்ட அதிகார வரம்புகளும்

நிர்வாகச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கையின்படி, வழங்கப்பட்ட அதிகாரத்தின் வழியாக உருவாக்கப்பட்ட துணைச் சட்டங்களைத் தோற்றுவித்த சட்டத்தின் 'வரம்பிற்குள்ளேயே' இருக்க வேண்டும். அவை சட்டமன்றக் கொள்கைக்குத் துணை செய்யலாமே தவிர, அதை முந்த முடியாது. பல்கலைக்கழக மானியக் குழு சட்டம் எதைச் செய்ய அதிகாரம் அளிக்கவில்லையோ, அதை பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகள் 2018–இன் விதி 7.3 துணைவேந்தர் தேடல் குழுவில் பல்கலைக்கழக மானியக் குழு பிரதிநிதியைக் கோருவதன் வழியாக எடுத்துக்கொள்ள முடியாது.

'ஆசிரியப் பணியாளர்களுக்கு' தகுதிகளை நிர்ணயிக்கத் தனக்கு அதிகாரம் அளிக்கும் சட்டத்தின் பிரிவு 26(1)(e)லிருந்து விதி 7.3க்கான அதிகாரத்தைப் பெறுவதாகப் பல்கலைக்கழக மானியக் குழு உரிமை கோருகிறது. ஆனால், துணைவேந்தர் என்பவர் "ஆசிரியப் பணியாளர்" அல்ல; மத்திய மற்றும் மாநிலப் பல்கலைக்கழகச் சட்டங்கள் அனைத்திலும், வேந்தர், பதிவாளர், தேர்வுக்கட்டுப்பாட்டு அதிகாரி, நிதி அலுவலர் ஆகியோருடன் சேர்ந்து துணைவேந்தரும் பல்கலைக்கழகத்தின் ஓர் 'அலுவலர்' என்றே வகைப்படுத்தப்பட்டுள்ளார். 'ஆசிரியப் பணியாளர்' என்ற சொல்லுக்குள் துணைவேந்தரையும் உள்ளடக்குவது மொழியையும் சட்டமன்ற நோக்கத்தையும் சிதைப்பது ஆகும். அதேபோல, "தரநிலைகளைப் பராமரித்தல், பல்கலைக்கழகங்களில் பணிகளை அல்லது வசதிகளை ஒருங்கிணைத்தல்" தொடர்பான பிரிவு 26(1)(g)ஐ துணைவேந்தர் நியமன முறைகளின் மீது அதிகாரம் செலுத்தப் பயன்படுத்த முடியாது. இவை இரண்டுமே இட்டுக்கட்டப்பட்ட வாதங்கள் ஆகும்; எனவே விதி 7.3 என்பது தொடக்கத்திலிருந்தே (*ab initio)* பல்கலைக்கழக மானியக் குழு சட்டத்திற்கு *அப்பாற்பட்டது* (காரணம், விதியை உருவாக்கிய நிறுவனத்தின் சட்ட வரம்பிற்கு அப்பாற்பட்டது) ஆகும்.

மேலும், பல்கலைக்கழக மானியக் குழு சட்டத்தின் பிரிவு 12(d), தரநிலைகளைப் பராமரிப்பது குறித்துப் பல்கலைக்கழகங்களுக்கு ஆலோசனை வழங்க மட்டுமே, பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு அதிகாரம் அளிக்கிறது. இந்த நிலைப்பாடு *டெல்லி பல்கலைக்கழகம் எதிர் ராஜ் சிங் (University of Delhi v. Raj Singh* (1994))[12] வழக்கில்

[12] (2022) 5 SCC 179.

உச்சநீதிமன்றத்தால் அதிகாரப்பூர்வமாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. விரிவுரையாளர்களுக்கான நெட் (NET) தேர்வைப் பரிந்துரைத்த பல்கலைக்கழக மானியக் குழு விதிகளின் 2வது பிரிவையும், அதைப் பின்பற்றாததற்கான விளைவைக் கூறும் 3வது பிரிவையும் விளக்கிய நீதிமன்றம்:

> *"விதிகளின் 2வது பிரிவின் வகையங்கள் பரிந்துரைக்கும் தன்மை கொண்டவை. விரிவுரையாளர்களாக அத்தகைய தகுதிகளைக் கொண்ட நபர்களை மட்டுமே பணியமர்த்துவதன் வழியாக இப்பிரிவை பல்கலைக்கழகம் பின்பற்ற முடியும்... குறிப்பிட்ட நேர்வுகளில், இந்தத் தகுதிகளில் தளர்வு பெற பல்கலைக்கழக மானியக் குழுவின் முன்அனுமதியைப் பெறவும் பல்கலைக்கழகத்திற்கு வாய்ப்புள்ளது. அதேசமயம், இந்த 2வது பிரிவின் விதிகளைப் பின்பற்றாமல் இருக்கவும் பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு; அவ்வாறான சூழலில், தகுந்த காரணத்திற்காகவே அதைப் பின்பற்றவில்லை என்று பல்கலைக்கழக மானியக் குழுவிடம் நிறைவுற விளக்கம் அளிக்கத் தவறினால், அந்தப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து பெறும் மானியத்தை இழக்க நேரிடும்."*

இதன் வழியாக, பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகளைப் பின்பற்றுவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை பல்கலைக்கழகங்களிடமே உள்ளது என்பதையும், அதைப் பின்பற்றாததற்கான ஒரே சட்டப்பூர்வ விளைவு சட்டத்தின் பிரிவு 14ன் கீழ் மானியங்களை இழக்கும் அபாயம் மட்டுமே என்பதையும் நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.

குறிப்பிடத்தக்க வகையில், முதல் 54 ஆண்டுகள் (1956–2010) துணைவேந்தர் நியமனங்களை ஒழுங்குபடுத்த பல்கலைக்கழக மானியக் குழு முயலவில்லை. விதி 7.3 முதன்முதலில் 2010ல் அறிமுகப்படுத்தப்பட்டது. 2013–இல் நீர்த்துப்போகச் செய்யப்பட்டது. பின்னர் 2018–இல் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. இது அத்தகைய தரநிலைகளின் அவசியத்தையே கேள்விக்கு உள்ளாக்குகிறது.

நாடாளுமன்ற அனுமதியின்றி, வெறும் துணைச் சட்டத்தின் வழியாகப் பல்கலைக்கழக மானியக் குழு, இன்று துணைவேந்தர் தேடல் குழுக்களைத் தீர்மானிக்க முடியும் என்றால், நாளை துணைவேந்தர் யாராக இருக்க வேண்டும், பயிற்று மொழி எதுவாக இருக்க வேண்டும் அல்லது உள் ஆளுகை அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்று

பல்கலைக்கழக மானியக் குழு கட்டளையிடுவதைத் தடுப்பது எது? இத்தகைய முன்னுதாரணம், மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒன்றிய ஒழுங்குமுறை அமைப்புகளுக்கு, நாடாளுமன்றமே முறையான சட்ட நடைமுறையின்றிப் பயன்படுத்த முடியாத அதிகாரங்களை வழங்குகிறது.

கொள்கை விளக்க முரண்பாடுகள்

"*முன்னுதாரணங்களைப் பின்பற்றுதல்*" (*Stare decisis*) எனும் கோட்பாடு நீதித்துறை ஒழுக்கத்தின் முக்கியமான அடிப்படை ஆகும்; இது சட்டத்தில் சீரான தன்மையையும் தொடர்ச்சியையும் உறுதிசெய்கிறது. *மத்திய தாவுதி போரா சமூகம் எதிர் மகாராஷ்டிர மாநிலம் (Central Board of Dawoodi Bohra Community v. State of Maharashtra* (2004))[13] வழக்கில், ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசமைப்பு அமர்வு, ஒரு அமர்வின் முடிவுகள் அதற்குக் குறைவான அல்லது சமமான எண்ணிக்கையிலான நீதிபதிகளைக் கொண்ட அனைத்து அமர்வுகளையும் கட்டுப்படுத்தும் என்றும்; அதே எண்ணிக்கையிலான அமர்வின் தீர்ப்பின் சரித்தன்மை குறித்து ஐயம் எழுந்தால், அது பெரிய அமர்விற்குப் பரிந்துரைக்கப்பட வேண்டும் என்றும் மீண்டும் உறுதிப்படுத்தியது. ஆயினும், பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகளுக்கும் மாநிலப் பல்கலைக்கழகச் சட்டங்களுக்கும் இடையிலான உறவு குறித்து இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வுகள் வழங்கிய முரண்பட்ட தீர்ப்புகள், கோட்பாட்டு அளவிலான குழப்பத்தை உருவாக்கியுள்ளன; இது மாநிலப் பல்கலைக்கழகங்களை நிச்சயமற்ற நிலையில் தவிக்கவிட்டுள்ளது. இப்பிரச்சனையைத் தீர்க்க இன்றுவரை பெரிய அமர்வு எதுவும் அமைக்கப்படவில்லை.

ஜெகதீஷ் பிரசாத் சர்மா எதிர் பீகார் மாநிலம் (Jagdish Prasad Sharma v. State of Bihar (2013))[14] வழக்கில், உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, ஓய்வு பெறும் வயதை 62லிருந்து 65ஆக உயர்த்தப் பரிந்துரைத்த பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகள், மாநில அரசால் நடத்தப்படும், நிதியளிக்கப்படும் கல்வி நிறுவனங்களுக்குக் கட்டாயமானவையா என்பதை ஆராய்ந்தது. நீதிமன்றம், ஒன்றியத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட ஒன்றியப் பட்டியலின் இனம் 66 (தரநிலைகளை ஒருங்கிணைத்தலும் நிர்ணயித்தலும்), பொதுப் பட்டியலின் இனம் 25 (கல்வி) ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாட்டைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியது. பல்கலைக்கழகக்

---

[13] (2005) 2 SCC 673.

[14] (2013) 8 SCC 633.

கல்வியை மேம்படுத்துவதற்கும் தரங்களைப் பராமரிப்பதற்கும் விதிமுறைகளை வகுக்க பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு அதிகாரம் இருந்தாலும், அத்தகைய துணைச் சட்டம், அரசமைப்புச் சட்டத்தின் 309வது பிரிவின் கீழ் தனது ஊழியர்களின் சேவை நிபந்தனைகள் குறித்து சட்டம் இயற்றும் மாநிலத்தின் முழுமையான அதிகாரத்தை மீற முடியாது என்று தீர்ப்பு அளித்தது. நீதிமன்றம் பின்வருமாறு கூறியது:

> *"ஒரு குறிப்பிட்ட மாநிலத்திற்குள் ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயதை உயர்த்துவது குறித்த இறுதி முடிவு, அந்த மாநிலத்தினுடையதே என்பதில் எந்த ஐயமும் இல்லை. சட்ட வலிமையுடைய விதிமுறைகளை உருவாக்க ஆணையத்திற்கு உள்ள உரிமை ஒப்புக்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், பொதுப் பட்டியலின் இனம் 25–இன் கீழ் கல்வி தொடர்பான விவகாரங்களில் சட்டம் இயற்ற மாநில அரசுகளுக்கும் உரிமை உண்டு. மாநிலச் சட்டம் நாடாளுமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் ஊடுருவாத வரை, அந்த மாநிலச் சட்டமே முன்னுரிமை பெறும். ஒருவேளை நாடாளுமன்றமே பொதுப் பட்டியலின் இனம் 25–இன் கீழ் ஒரு சட்டத்தை இயற்றியிருந்தால், அப்போது இவ்விரண்டு சட்டங்களும் சமமாகத் தகுதி பெறும். அத்தகைய சட்டம் இல்லாத நிலையில், துணைச் சட்ட இயற்றும் வழிவகைகள் வழியாக உருவாக்கப்பட்ட விதிமுறைகள், மாநில அரசின் முழுமையான சட்ட அதிகாரத்திற்குப் கீழ்படிந்தே இருக்க வேண்டும்."*

பி.ஜே. தர்மராஜ் எதிர் தென்னிந்தியத் திருச்சபை (P.J. Dharmaraj v. Church of South India (2024))[15] வழக்கில், தொழில்நுட்ப மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயதை 60லிருந்து 65ஆக உயர்த்தி, 2010–ஆம் ஆண்டில் அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி அவை, பல்கலைக்கழக மானியக் குழு அறிமுகப்படுத்திய திருத்தங்கள் தொடர்பாக சர்ச்சை எழுந்தது. மனுதாரர் மாநிலத் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட நிறுவனத்தின் இயக்குநராக இருந்தார். மாநில அரசு அத்தகைய கொள்கையைத் தெளிவாக ஏற்றுக்கொண்டால் ஒழிய, மாநிலத்தின் ஓய்வு வயதுக் கொள்கையே அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி அவை/பல்கலைக்கழக மானியக் குழு நெறிமுறைகளைவிட

---

[15] 2024(14) SCALE 793.

மேலோங்கும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. எனவே, இணைக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் மாநிலத்தின், அந்தப் பல்கலைக்கழகத்தின் ஓய்வு விதிகளையே பின்பற்ற வேண்டும். மேலும், அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி அவை /பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகள் கல்விப் பணிகளைச் செய்யும் "ஆசிரியர்களுக்கு" மட்டுமே பொருந்தும் என்றும்; இயக்குநர்கள் போன்ற நிர்வாகப் பணிகளைச் செய்பவர்களுக்கு அவை பொருந்தாது என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது (துணைவேந்தர்களும் அனைத்து மத்திய மற்றும் மாநிலப் பல்கலைக்கழகச் சட்டங்களின் கீழ் "அலுவலர்கள்" என்றே வகைப்படுத்தப்பட்டுள்ளனர், "ஆசிரியர்கள்" என்று அல்ல).

கம்பீர்தன் கே. காத்வி எதிர் குஜராத் மாநிலம் (Gambhirdan K. Gadhvi v. State of Gujarat (2022))[16] வழக்கில், ஒரு மாநிலப் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் நியமனமும் அடுத்த மறுநியமனமும் சவாலுக்கு உள்ளாக்கப்பட்டது. அந்த விண்ணப்பத்தாரருக்குத் துணைவேந்தருக்கான தகுதிகள் இல்லை என்றும், தேடல் குழு மாநிலப் பல்கலைக்கழகச் சட்டப்படி அமைக்கப்பட்டது என்றும், அதில் 2010 மற்றும் 2018ம் ஆண்டின் பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகளின்படி பல்கலைக்கழக மானியக் குழு பிரதிநிதி இல்லை என்றும் வாதிடப்பட்டது. அந்த நியமனத்தை ரத்து செய்த உச்சநீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பு அளித்தது:

> *"பல்கலைக்கழக மானியக் குழு சட்டம், 1956–இன் பிரிவு 26(1)(e), 26(1)(g) ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தியே பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகள் இயற்றப்படுகின்றன என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. பல்கலைக்கழக மானியக் குழு சட்டத்தின்படியே, அச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் ஒவ்வொரு விதியும் ஒழுங்குமுறையும் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் வைக்கப்பட வேண்டும். எனவே, ஒரு துணைச் சட்டம் என்ற வகையில், பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகள் அந்தச் சட்டத்தின் ஒரு அங்கமாகிவிடுகின்றன. மாநிலச் சட்டத்திற்கும் ஒன்றியச் சட்டத்திற்கும் இடையே முரண்பாடு ஏற்படும் நிலையில், அரசமைப்பின் சட்டப் பிரிவு 254ல் விளக்கப்பட்டுள்ள முரண்படும் நிலையிலான கோட்பாடு /*

[16] (2022) 5 SCC 179.

கொள்கை பயன்பாடு வழியாக மையச் சட்டமியற்றலே மேலோங்கும்; ஏனெனில் 'கல்வி' என்பது ஏழாவது அட்டவணையின் பொதுப் பட்டியலில் (பட்டியல் III) உள்ளது. எனவே, பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகளுக்கு முரணான எந்தவொரு துணைவேந்தர் நியமனமும் சட்ட விதிகளுக்கு எதிரானது எனக் கருதப்படும்."

இதே வாதங்களை முன்வைத்து, *பேராசிரியர் ஸ்ரீஜித் பி.எஸ். எதிர் முனைவர் ராஜஸ்ரீ எம்.எஸ். (Prof. Sreejith P.S. v. Dr. Rajasree M.S.* (2022))[17] வழக்கிலும் உச்சநீதிமன்றம் இதே போன்ற உத்தரவைப் பிறப்பித்தது.

கல்யாணி மதிவாணன் எதிர் கே.வி. ஜெயராஜ் (Kalyani Mathivanan v. K.V. Jeyaraj (2015))[18] வழக்கில், நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்படும் போது, பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகள் அந்தச் சட்டத்தின் ஒரு அங்கமாகிவிடுகின்றன என்கிற அதே வாதத்தை உச்சநீதிமன்றம் பயன்படுத்தியது. ஆனால், 2010-ஆம் ஆண்டின் குறிப்பிட்ட பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகள், மாநிலங்களுக்கு ஒரு "தெரிவை" வழங்கியிருந்ததால், மாநிலங்கள் அவற்றை முறையாக ஏற்கும் வரை அவை வெறும் 'வழிகாட்டுதல்கள்' மட்டுமே என்று கூறியது பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகள் நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்படும்போது சட்டத்தின் ஒரு பகுதியாக மாறும் என்ற அதே காரணம், *அண்ணாமலைப் பல்கலைக்கழகம் எதிர் செய்தி மற்றும் சுற்றுலாத் துறைச் செயலாளர் (Annamalai University v. Secretary, Information and Tourism* (2009))[19] வழக்கு சர்ச்சையிலும் பயன்படுத்தப்பட்டது.

கம்பீர்தன் கே. காத்வி (2022), *பேராசிரியர் ஸ்ரீஜித் பி.எஸ்.* (2022) ஆகிய வழக்குகளின் வாதங்கள் நான்கு அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முடியாதவை:

1. **முன்னுதாரணக் கொள்கையை மீறுதல் (Violation of Stare Decisis):** இந்த அமர்வுகள் *ராஜ் சிங்* (1994) வழக்கில் இணையான அமர்வின் பிணைக்கும் தீர்ப்பைக் கருத்தில் கொள்ளவோ அல்லது அதிலிருந்து வேறுபடுத்திக் காட்டவோ தவறிவிட்டன. அத்தீர்ப்பு பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகள் பரிந்துரைக்கத் தக்கவையே தவிரக் கட்டாயமானவை அல்ல

---

[17] (2023) 17 SCC 338

[18] (2015) 6 SCC 363.

[19] (2009) 4 SCC 590.

என்றும், அவற்றை மீறுவது பிரிவு 14–இன் கீழ் மானியங்களை இழப்பதற்கான காரணமாக மட்டுமே அமையும் என்றும் கூறியிருந்தது. அதேபோல, பட்டியல் III–இன் இனம் 25 கீழ் மாநிலப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் ஓய்வுப் பெறும் வயதைக் குறிப்பாக நிர்ணயிக்கும் மைய முழுமையான சட்டம் இல்லாத நிலையில், பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறை "மாநில அரசாங்கத்தின் முழுமையான அதிகார வரம்புக்கு உட்பட்டு இருக்க வேண்டும்" என்று இணையான அமர்வு வழங்கிய, *ஜெகதீஷ் பிரசாத் சர்மா* (2013) வழக்கின் தீர்ப்பையும், இவை புறக்கணித்தன. இந்த அமர்வுகள் *ராஜ் சிங்* (1994) வழக்கிலிருந்தும், *ஜகதீஷ் பிரசாத் ஷர்மா* (2013) வழக்கில் வகுக்கப்பட்ட சட்டத்திலிருந்தும் மாறுபட விரும்பியிருந்தால், அவர்கள் அவ்வாறு கூறி, அந்த வழக்கை பெரிய அமர்வுக்குப் பரிந்துரைத்திருக்க வேண்டும். இதற்கு மாறாகச் செயல்படுவது, முன்னுதாரணத்தைப் பின்பற்றும் கொள்கையை (Stare decisis) மீறுவது ஆகும்.

2. **அரசமைப்புச் சட்டப் பிரிவு 254 (சட்ட முரண்பாடு குறித்த) தவறாகப் பயன்பாடு:** அரசமைப்புச் சட்டப் பிரிவு 254(1)ன் கீழ் முரண்பாடு என்பது ஒன்றியம், மாநிலச் சட்டங்கள் ஆகிய இரண்டுமே பொதுப் பட்டியலில் உள்ள ஒரே சட்டம் இயற்றும் துறையைப் பகிரும்போது மட்டுமே ஏற்படுகிறது. ஆனால் இங்கு அந்த நிலை இல்லை. பல்கலைக்கழக மானியக் குழு சட்டம் என்பது ஒன்றியப் பட்டியலின் இனம் 66லிருந்து அதிகாரம் பெறுகிறது; மாநிலப் பல்கலைக்கழகச் சட்டங்கள் பொதுப் பட்டியலின் இனம் 25, மாநிலப் பட்டியலின் இனம் 32 ஆகியவற்றிலிருந்து அதிகாரம் பெறுகின்றன. ஒன்றிய, மாநிலச் சட்டங்கள் வெவ்வேறு பட்டியல்களிலிருந்து அதிகாரம் பெறும்போது, அரசமைப்புச் சட்டப் பிரிவு 254(1) பொருந்தாது; முன்னுரிமை குறித்த கேள்விகள் அரசமைப்புச் சட்டப் பிரிவு 246ஆல் நிர்வகிக்கப்படுகின்றன; இப்பிரிவு, அதிகாரப் பொருண்மையில் உண்மையான குறுக்கீடு இருந்தால் மட்டுமே ஒன்றியப் பட்டியல் சட்டத்திற்கு மேலாதிக்கத்தை வழங்குகிறது. இந்த வழக்கில், எதுவும் இல்லை. துணைவேந்தர் நியமனம், தேடல் குழுக்கள் குறித்து பல்கலைக்கழக மானியக் குழு சட்டம் முற்றிலும் அமைதியாக உள்ளது. எனவே, இரண்டு–நீதிபதிகள் கொண்ட அமர்வுகள் அரசமைப்புச் சட்டப் பிரிவு 254(1) கையாண்டு, சட்டம் இயற்றும் அதிகார வரம்பு தொடர்பான

கேள்வியை, முரண்பாடு தொடர்பான கேள்வியாகத் தவறாகக் கருதியுள்ளன.

மேற்கூறிய பகுப்பாய்வுக்குப் பாதகமின்றி, அரசமைப்புச் சட்டப் பிரிவு 254–இன் தலைப்பே "*நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கும் மாநிலங்களின் சட்டமன்றங்களால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கும்* இடையிலான முரண்பாடு", அதாவது முரண்பாட்டை நாடாளுமன்றத்தாலும் மாநில சட்டமன்றங்களாலும் இயற்றப்பட்ட முழுமையான சட்டங்களுக்கு இடையிலான முரண்பாடுகளுக்குள் கட்டுப்படுத்துகிறது என்பதை வலியுறுத்த வேண்டியது அவசியம். இது மத்திய துணைச் சட்டங்களுக்கும் மாநிலங்களின் முழுமையான சட்டங்களுக்கும் இடையிலான முரண்பாடுகளுக்குப் பொருந்தாது. இதற்கு மாறாகக் கருதுவது, இறையாண்மையை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்து பறித்து, எந்தவொரு வாக்காளர் குழுவிற்கும் பொறுப்பேற்காதவர்களிடம் ஒப்படைப்பது ஆகும்.

3. **"சட்டத்தோடு இணைந்து உள்ளது" என்கிற பொய்யான வாதம் (Fallacy of "Merger"):** இரண்டு–நீதிபதிகள் கொண்ட அமர்வுகள், பரந்த அளவிலான விளைவுகளைக் கொண்ட – பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகள், துணைநிலை சட்டம் இயற்றலாக இருப்பதால், பிரிவு 28(1) கீழ் நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்படும்போது "சட்டத்தின் ஒருபகுதியாக மாறுகின்றன" என்று வெறுமனே அப்பட்டமாக ஏற்றன. *எவ்வாறாயினும், இந்த கருத்துக்கு அரசமைப்புச் சட்டத்திலோ, பல்கலைக்கழக மானியக் குழு சட்டத்திலோ அல்லது பொதுப் பிரிவுகள் சட்டத்திலோ (General Clauses Act, 1897) எந்த சட்ட அடிப்படையும் இல்லை.*

உண்மையில், இதற்கு எதிரான நிலைப்பாட்டிற்குச் சாதகமாக வலுவான வாதத்தை முன்வைக்க முடியும். 1897–ஆம் ஆண்டு *பொதுப் பிரிவுகள் சட்டத்தின்* பிரிவு 24, இரத்து செய்யப்பட்ட ஒரு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளும் ஒழுங்குமுறைகளும், மீண்டும் இயற்றப்பட்ட சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய விதிகளால், அவை மாற்றி அமைக்கப்படும் வரை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்று கூறுகிறது. தாய்ச் சட்டத்தின் ஆயுள் காலத்திற்குப் பிறகும் துணைச் சட்டங்கள் நீடிப்பது, "இணைப்பு" என்ற கோட்பாட்டுடன் கருத்தாக்கத்தோடு முரண்படுகிறது.

இந்தக் கொள்கை, *தலைமைச் சுரங்க ஆய்வாளர் எதிர் கரண் சந்த் தாபர் (Chief Inspector of Mines v. Karam Chand Thapar* (1961))[20] வழக்கில் உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வால் திட்டவட்டமாக உறுதிப்படுத்தப்பட்டது. அந்த வழக்கில், 1923–ஆம் ஆண்டு *சுரங்கச் சட்டம்* இரத்து செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக 1952–ஆம் ஆண்டு *சுரங்கச் சட்டம்* கொண்டுவரப்பட்டது. ஆனால், புதிய ஒழுங்குமுறைகள் இன்னும் உருவாக்கப்படவில்லை. மேலும் 1926–ஆம் ஆண்டு ஒழுங்குமுறைகள் *பொதுப் பிரிவுகள் சட்டத்தின்* பிரிவு 24–இன் அடிப்படையில் தொடர்ந்து நடைமுறையில் இருந்தன. 1926–ஆம் ஆண்டு ஒழுங்குமுறைகளின் கீழ் தொடரப்பட்ட வழக்கு நடவடிக்கைகளை எதிர்த்து, நிர்வாகத்தைச் சார்ந்த மேல்முறையீட்டாளர், 1923–ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 31(4), அந்த ஒழுங்குமுறைகள் "இந்தச் சட்டத்தில் இயற்றப்பட்டதைப் போலவே" நடைமுறையில் இருக்கும் என்று கூறியதால், அவை "சட்டத்தின் ஒருபகுதியாக" மாறிவிட்டன என்றும், எனவே அந்தச் சட்டம் இரத்து செய்யப்பட்டபோது அவையும் காலாவதியாகிவிட்டன என்றும் வாதிட்டனர். இந்த வாதத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து, "இந்தச் சட்டத்தில் இயற்றப்பட்டதைப் போலவே" என்ற சொற்றொடர் விளக்கத்திற்காக சட்டப் புனைவை மட்டுமே உருவாக்குகிறது என்று தெளிவுபடுத்திய நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பு அளித்தது:

> *"உண்மையான நிலை என்னவென்றால், விதிகளும் ஒழுங்குமுறைகளும் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டது போன்ற அதே விளைவைக் கொண்டிருந்தாலும், அவை விதிகள், ஒழுங்குமுறைகள் என்ற தங்கள் தன்மையை இழப்பதில்லை. அவை சட்டத்திற்கு உட்பட்ட துணை விதிகளாகவே தொடர்கின்றன. மேலும் கட்டமைப்பு உட்பட சில நோக்கங்களுக்காக, அவை சட்டத்தில் உள்ளடக்கப்பட்டது போலக் கருதப்பட்டாலும், துணை விதி என்ற அவற்றின் உண்மையான தன்மை இழக்கப்படுவதில்லை."*

குறிப்பிடத்தக்க வகையில், பல்கலைக்கழக மானியக் குழு சட்டத்தில் இதுபோன்ற எந்தச் சொல்லும் இல்லை.

---

[20] AIR 1961 SC 838.

"இந்தச் சட்டத்தில் இயற்றப்பட்டதைப் போலவே" என்ற புனையும் ஒழுங்குமுறைகள்கூட இல்லாதபோது, பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகள் துணைச் சட்டமாகக்கூட ஆகமுடியாது. *வாதத்திற்காக* "இணைப்பு" என்பது மறைமுகமாக உள்ளது என கருதப்பட்டாலும், அதனால் எந்தப் பயனும் அளிக்காது. பல்கலைக்கழக மானியக் குழு சட்டத்தின் பிரிவு 12 பரிந்துரைக்கும் தன்மையுடையது; இணைப்பு, பரிந்துரைக்கும் கட்டமைப்பை கட்டாயமானதாக மாற்ற முடியாது. எனவே, "இணைப்பு" என்று கருதிய இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வின் தீர்ப்புகள், தவறான முன்மாதிரியின் அடிப்படையில் அமைந்துள்ளன. மேலும் அவை அரசியலமைப்பு *அமர்வின் பிணைப்பு அதிகாரத்தை கவனத்தில் கொள்ளாமல்* (per incuriam) வழங்கப்பட்டவை ஆகும்.

4. **முன்வைக்கும் நடைமுறை முழுமையான சட்டத் தகுதியை வழங்குவதில்லை:** இறுதியாக, விதி 7.3, *பல்கலைக்கழக மானியக் குழு சட்டம்*, 1956 வரம்பை மீறியது என்ற உண்மையையும், பாராளுமன்றத்தில் வெறுமனே முன்வைப்பது, இந்த அடிப்படை குறைபாட்டை சரிசெய்ய முடியாது என்ற உண்மையையும் தீர்ப்புகள் கருத்தில் கொள்ளத் தவறின.
நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட மூன்று நடைமுறைகள் உள்ளன. *எளிய முன்வைப்பு நடைமுறையின்* கீழ், துணைச் சட்டம் உடனடியாக நடைமுறைக்கு வருகிறது. இதில் தகவலுக்காக நாடாளுமன்றத்தில் வைக்கப்படுகிறது. *எதிர்மறைத் தீர்மான நடைமுறையின்* கீழ்– பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகளின் விஷயத்தில் இருப்பது போல–அதுவும் உடனடியாக நடைமுறைக்கு வருகிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நாடாளுமன்றத்தால் இரத்து செய்யப்படுவதற்கோ அல்லது திருத்தப்படுவதற்கோ உட்பட்டதாக இருக்கிறது. *நேர்மறைத் தீர்மான நடைமுறையின்* கீழ், அது முன்கூட்டிய நாடாளுமன்ற ஒப்புதல் பெற்ற பின்னரே நடைமுறைக்கு வருகிறது. இந்த எந்தவொரு வேளையிலும், அந்த ஆவணம் அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 107–111 (ஒன்றியச் சட்டங்களுக்கு) அல்லது அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 196–201 (மாநிலச் சட்டங்களுக்கு) ஆகியவற்றின் கீழ் உள்ள அரசமைப்புச் சட்டம் இயற்றும் செயல்முறைக்கு உட்படுவதில்லை. மேலும்

குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரின் ஒப்புதலையும் பெறுவதில்லை. எனவே, துணைச் சட்டத்தை முழுமையான சட்டத்திற்கு இணையாகக் கருத முடியாது.

மேலும், முன்வைப்பதை 'இணைப்பு' என்று கருதினால், துணைச் சட்டம் தாய்ச் சட்டத்துடன் இணைந்ததால், அது இப்போது சட்டத்தின் ஒரு பிரிக்க முடியாத பகுதியாகிவிட்டது என்ற அடிப்படையில், அதிகார *வரம்பை மீறிய* செயல்களுக்காக நீதித்துறை சீராய்விலிருந்து விலக்கு பெற்றுவிடும். இத்தகைய விளைவு கோட்பாட்டு நோக்கில் ஏற்றுக்கொள்ள முடியாதது. முன்வைப்பது என்பது சட்டம் இயற்றும் செயல்முறை அல்ல, மாறாக அது சட்டம் இயற்றும் மன்றத்தின் மேற்பார்வை முறை ஆகும்; அது துணைச் சட்டத்தை முழுமையான சட்டமாக மாற்ற முடியாது, மேலும் அது ஒப்புதலாகவோ அல்லது *அதிகார வரம்பை* மீறிய செயல்களுக்கான தீர்வாகவோ செயல்பட முடியாது.

இந்தக் கொள்கை, *கேரளா மாநில மின்சார வாரியம் எதிர் இந்தியன் அலுமினியம் நிறுவனம் (Kerala State Electricity Board v. Indian Aluminium Co.* (1975))[21] வழக்கில், ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசமைப்பு அமர்வால் அதிகாரப்பூர்வமாக நிலைநிறுத்தப்பட்டது. அந்த வழக்கில், நீதிமன்றத்தின் முன் இருந்த கேள்விகளில் ஒன்று, 1961–ஆம் ஆண்டு *கேரள அத்தியாவசியப் பொருட்கள் கட்டுப்பாடு (தற்காலிக அதிகாரங்கள்) சட்டத்திற்கு* (*Kerala Essential Articles Control (Temporary Powers) Act,* 1961) அப்பாற்பட்டதா என்பதுதான். *கேரளா மாநில மின்சார வழங்கல் கூடுதல் கட்டண ஆணை* (1968) *(Kerala State Electricity Supply Surcharge Order* (1968))– *ஒரு துணைச் சட்டம் – ஏற்கனவே நிலையான கட்டணங்களுக்கான* நீண்ட கால ஒப்பந்தங்கள் இருந்தபோதிலும், மொத்த நுகர்வோரிடமிருந்து கூடுதல் கட்டணங்களை வசூலிக்க மின்சார வாரியத்திற்கு கட்டளையிட்டது. கூடுதல் கட்டண ஆணையை உறுதிப்படுத்திய போதிலும், நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது:

> *"ஓர் ஆட்சித்துறை அதிகார அமைப்புக்குக் குறிப்பிட்ட வரம்புகளுக்குள் துணைச் சட்டங்களை இயற்றும் அதிகாரம் வழங்கப்பட்டால், அத்தகைய அதிகார அமைப்பால்*

[21] (1976) 1 SCC 466.

உருவாக்கப்பட்ட விதிகள், விதிகளை உருவாக்கும் அதிகாரத்தின் வரம்பிற்கு அப்பாற்பட்டதாக இருந்தால், அந்த விதிகள் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதால் மட்டுமே செல்லுபடியாகும் என்று கருதப்படக்கூடும் என்று நாங்கள் கருதவில்லை... அத்தகைய திருத்தம், மாற்றம் அல்லது ரத்து செய்யும் செயல்முறை சட்டம் இயற்றும் செயல்முறைக்கு சமமானதல்ல. குறிப்பாக, அதில் குடியரசுத் தலைவர் அல்லது மாநில ஆளுநரின் ஒப்புதல் இல்லை."

எனவே, "இணைப்புக் கோட்பாடு" கொள்கையின் அடிப்படையிலும் முன்னுதாரணத்தின் அடிப்படையிலும் வீழ்ந்துவிடுகிறது.

பரிந்துரை 6

துணைவேந்தர் நியமனங்கள் தொடர்பான இந்த அதிகாரத்துவப் போட்டிக்குப் பின்னால், ஆழமான அரசமைப்புச் சட்டப் போராட்டம் ஒளிந்துள்ளது. அது கூட்டாட்சிக்கும் அதிகரித்துச் செல்லும் மையப்படுத்துதலுக்கும் இடையிலான போராட்டம். மாநிலச் சட்டமன்றத்தின் முழுமையான அதிகாரத்திற்கும் ஒன்றியத் துணைச் சட்டங்களின் எல்லை மீறலுக்கும் இடையிலான போராட்டம். கல்விச் சுயாட்சிக்கும் அதிகாரத்துவக் கட்டுப்பாட்டிற்கும் இடையிலான போராட்டம். ஒன்றிய–மாநில உறவுகளில் இது ஏற்படுத்தும் ஆழமான தாக்கங்களையும், பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகளுக்கும் மாநிலப் பல்கலைக்கழகச் சட்டங்களுக்கும் இடையிலான மோதல் குறித்த உச்சநீதிமன்ற முரண்பட்ட தீர்ப்புகளையும் கருத்தில் கொண்டு, அரசமைப்பு அமர்வின் தெளிவான தீர்ப்பு இப்போது தேவைப்படுகிறது.

IX. ஏன் ஆளுநர் மாநிலப் பல்கலைக்கழகங்களின் வேந்தராக இருக்கக் கூடாது

மாநிலப் பல்கலைக்கழகங்களின் *பதவிவழி* வேந்தராக ஆளுநர் இருக்கும் முறை, அரசியல் தலையீட்டிற்கு எதிரான ஒரு சுதந்திரத்திற்குப் பிந்தைய பாதுகாப்பு ஏற்பாடு என்று அடிக்கடி தவறாகப்

புரிந்துகொள்ளப்படுகிறது. உண்மையில், இந்த அதிகாரம் இந்திய அரசமைப்பால் ஆளுநருக்கு வழங்கப்படவில்லை, மாறாக மாநிலப் பல்கலைக்கழகச் சட்டங்களாலேயே வழங்கப்பட்டுள்ளது. சுயாட்சியைக் காப்பதற்குப் பதிலாக, பல்கலைக்கழகங்கள் மீது ஆட்சித்துறை கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்காகவே வடிவமைக்கப்பட்ட இந்தப் பதவி, காலனிய மரபைச் சேர்ந்தது ஆகும்.

இந்த சட்ட மாதிரியின் தோற்றம் 1857–இல் தொடங்குகிறது; அப்போது பிரிட்டிஷார் கல்கத்தா, மும்பை, சென்னை ஆகிய நகரங்களில் முதல் மூன்று பல்கலைக்கழகங்களை நிறுவினர். நேரடி ஏகாதிபத்திய மேற்பார்வையைப் பேணுவதற்காக மாகாணங்களின் ஆளுநர்கள் *பதவிவழி* வேந்தர்களாக நியமிக்கப்பட்டனர். வேந்தர் என்ற முறையில், ஆளுநருக்குப் பின்வரும் பரந்த அளவிலான அதிகாரங்கள் வழங்கப்பட்டன: துணைவேந்தர்களை நியமித்தல், ஆளுகைக் குழுக்களுக்கு உறுப்பினர்களைப் பரிந்துரைத்தல், பல்கலைக்கழகச் சட்டங்களின் கீழ் துணைச் சட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல், பட்டமளிப்பு விழாக்களுக்குத் தலைமை தாங்குதல். கெடுவாய்ப்பாக, இந்த முறை மக்களாட்சி அல்லது கூட்டாட்சி முறையுடன் ஒத்துப்போகிறதா என்று மறுபரிசீலனை செய்யப்படாமலேயே, சுதந்திர இந்தியாவில் கிட்டத்தட்ட மாற்றமின்றி அப்படியே தொடர்ந்தது.

சுதந்திரத்திற்குப் பிறகு சுமார் இருபது ஆண்டுகளாக, இந்தக் கட்டமைப்புக் குறைபாடு பெரிய அளவில் கவனத்தை ஈர்க்கவில்லை. ஒன்றியத்திலும் கிட்டத்தட்ட அனைத்து மாநிலங்களிலும் ஒரே அரசியல் கட்சி ஆதிக்கம் செலுத்தியதால், ஆளுநர்கள் பெரும்பாலும் பெயரளவிலானவர்களாக இருந்தனர். 1967க்குப் பிறகு, பல மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் ஆட்சி அமைத்தபோது, ஆளுநர் பதவி அதிக அளவில் அரசியல்மயமாக்கப்பட்டதே திருப்புமுனையாக அமைந்தது. ஆளுநர்கள் பல்கலைக்கழக விவகாரங்களில் அதிகாரத்தைச் செலுத்தத் தொடங்கினர். இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளுடன் அடிக்கடி மோதல்களுக்கு வழிவகுத்தது. வேந்தரை மாற்றுவதற்காக மாநிலங்கள் பல்கலைக்கழகச் சட்டங்களைத் திருத்த மேற்கொண்ட சட்டம் இயற்றும் முயற்சிகளுக்கு தடைகள் வருகின்றன; ஆளுநர்கள் இத்தகைய திருத்தங்களுக்கு ஒப்புதல் அளிக்கத் தாமதப்படுத்தினர் அல்லது அவற்றை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தனர்.

ஆளுநரின் *இரட்டை அதிகார கட்டமைப்பால்* இந்தப் பிரச்சனை எழுகிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 163(1)–இன் படி, அரசமைப்புச் சட்டப் பணிபாடுகளைச் செய்யும் போது, ஆளுநர் அமைச்சரவையின்

உதவி ஆலோசனையின் அடிப்படையில் செயல்படக் கடமைப்பட்டவர். எவ்வாறாயினும், வேந்தராக – சட்டமுறைப்படியான பதவியில் – பணியாற்றும்போது, அமைச்சரவை ஆலோசனையைக் கோரினால் ஒழிய, ஆளுநர் தமக்குத் தன்னிச்சையான அதிகாரம் உள்ளது என சட்டம் தெளிவாக இருக்கின்றது என்று கோருகிறார். அரசமைப்புச் சட்டப் பணிகளுக்கும், சட்ட முறைப்படியான பணிகளுக்கும் இடையிலான இந்த வேறுபாட்டை உச்சநீதிமன்றம் அங்கீகரித்துள்ளது. நடைமுறையில், இது குறிப்பாக எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில், துணைவேந்தர்களை நியமித்தல், பல்கலைக்கழகக் குழுக்களுக்கு உறுப்பினர்களைப் பரிந்துரைத்தல், துணைச் சட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல் போன்ற முக்கியமான விஷயங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைப் புறக்கணிக்க ஆளுநர்களுக்கு வழிவகை செய்துள்ளது.

மத்தியப் பல்கலைக்கழகங்களின் 'விசிட்டராக' (Visitor) குடியரசுத் தலைவர் ஆற்றும் பங்கோடு இதனை ஒப்பிடுவது படிப்பினை அளிக்கக் கூடியது.குடியரசுத்தலைவரின்'விசிட்டர்'பணிகளும்சட்டப்பூர்வமானவை என்றாலும், அவை ஒன்றிய நிர்வாகக் கட்டமைப்பிற்குள்ளேயே பிணைக்கப்பட்டுள்ளன. துணைவேந்தர் நியமனங்கள், உறுப்பினர்கள் பரிந்துரை, (பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டும் துணைமை சட்ட வகையிலான) *'சட்ட விதிமுறைகளுக்கு'* ஒப்புதல் அளித்தல் தொடர்பான முடிவுகள் கல்வி அமைச்சகத்தின் மூலமாகவே செயல்படுத்தப்படுகின்றன. மத்தியப் பல்கலைக்கழகச் சட்டங்களின்படி, இத்தகைய 'சட்ட விதிமுறை'களோடு, 'ஆணைக் குறிப்புகள்' மற்றும் *'ஒழுங்குவிதிமுறைகள்'* என்று அழைக்கப்படுகின்ற துணைமை சட்ட வகைகளும், நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டும். குடியரசுத் தலைவர், விசிட்டராக தன்னிச்சையான இணை அதிகாரமாகச் செயல்படுவதில்லை. மாறாக, ஆளுநர்கள் பெரும்பாலும் வேந்தர்களாகத் தன்னிச்சையாகச் செயல்படுகின்றனர்; மாநில உயர்கல்வித் துறைகளை முழுமையாகப் புறக்கணிக்கின்றனர். மாநிலப் பல்கலைக்கழகச் சட்டங்களில் இத்தகைய துணைச் சட்டங்களைச் சட்டமன்றத்தின் முன் வைக்க வேண்டிய தேவை பொதுவாக இருப்பதில்லை; இது காலனிய ஆட்சிக்கால வடிவமைப்பால் ஏற்பட்ட பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் கடுமையான குறைபாடாகும்.

ஆளுநரை வேந்தராகத் தொடரச் செய்ததன் விளைவுகள் மிக மோசமாக உள்ளன. மாநில அரசுகள் பல்கலைக்கழகங்களுக்கு நிதியளிக்கின்றன, நிர்வகிக்கின்றன, மக்களாட்சி முறையில் பொறுப்பேற்கின்றன; இருப்பினும், ஆளுநர்கள் அதற்கு இணையான

பொறுப்பு ஏதுமின்றி, கணிசமான அளவில் அதிகாரம் செலுத்துகின்றனர். இந்த இரட்டை அதிகாரக் கட்டமைப்பு ஆளுநர்களுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே நீண்டகால முட்டுக்கட்டைகளுக்கும், துணைவேந்தர் நியமனங்கள் முடங்குவதற்கும், பல்கலைக்கழக நிர்வாகம் செயலிழப்பதற்கும், திட்டங்கள், பணியாளர் நியமனங்களிலும் பட்டங்கள் வழங்குவதிலும் தாமதத்திற்கும் வழிவகுத்துள்ளது. பல ஆளுநர்களுக்குக் கல்வித்துறை சார்ந்த நிபுணத்துவம் இல்லை என்பதோடு, வெளிப்படைத்தன்மையற்ற ஆலோசனைகளைப் பெற்று, கேள்விக்கு அப்பாற்பட்டு, முடிவுகளை எடுக்கின்றனர். பல்கலைக்கழகங்களை அரசியலிலிருந்து பிரிப்பதற்குப் பதிலாக, இந்தப் பதவி பெரும்பாலும் அவர்களை அரசியல் மோதல்களுக்குள் இழுத்துச் சென்றுள்ளது; ஆளுநர்கள் பல்கலைக்கழகச் சுயாட்சியையும் நலன்களையும் விட ஒன்றியத்தின் அரசியல் நலன்களையே முன்னெடுக்கின்றனர் என கருதப்படுகின்றது. இது கூட்டாட்சி முறை குறித்த கடும் கவலைகளை எழுப்புகிறது. மேலும் மாநிலப் பல்கலைக்கழகங்கள் தேர்ந்தெடுக்கப்படாத, பொறுப்புக்கூறாத ஓர் ஆளுநருக்கு அல்லாமல், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளுக்கே பொறுப்புடையதாக இருக்க வேண்டும் எனும் வாதத்தை வலுப்படுத்துகிறது.

பல ஆணையங்கள் இந்தக் குறைபாடுகளைக் கண்டறிந்துள்ளன. *ராஜமன்னார் குழு*, மாநிலப் பல்கலைக்கழகங்களின் வேந்தராக ஆளுநரின் சட்டப்பூர்வப் பணிகள் அமைச்சரவை ஆலோசனையின் பேரில் செய்யப்பட வேண்டும் என்று வாதிட்டது. ஆயினும் இந்தக் கருத்தை உச்சநீதிமன்றம் ஏற்கவில்லை. *சர்க்காரியா ஆணையம்*, ஆளுநர் மாநில அமைச்சரவையின் ஆலோசனைக்குக் கட்டுப்பட்டவர் அல்ல என்றாலும், அவ்வாறு செய்வது நலம் பயக்கும் என்று ஒப்புக்கொண்டது. ஏற்கனவே குறிப்பிட்டபடி, *பூஞ்சி ஆணையம்* ஆளுநர்களை வேந்தர் போன்ற சட்டப்பூர்வப் பொறுப்புகளிலிருந்து விடுவிக்க வேண்டும் என்றும், மாநிலங்கள் அதற்குப் பதிலாகப் புகழ்வாய்ந்த, அரசியல் சார்பற்றவர்களை நியமிக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

உலகளவில், குறிப்பாக இங்கிலாந்தில், வேந்தர்கள் என்பது முற்றிலும் மரியாதைக்குரிய பதவி மட்டுமே; அவர்கள் நிர்வாக அதிகாரம் ஏதுமின்றி நிறுவனத் தூதர்களாகச் செயல்படுகின்றனர். ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ், எடின்பர்க், கிளாஸ்கோ பல்கலைக்கழகங்களில், பல்கலைக்கழகக் குழுக்களும் முன்னாள் மாணவர்களுமே இத்தகைய வேந்தர்களைத் *தேர்ந்தெடுக்கின்றனர்*. இங்கிலாந்து (Birmingham, Leeds), கனடா (McGill, British Columbia), ஆஸ்திரேலியா (Melbourne, ANU) ஆகிய நாடுகளின் பல

பல்கலைக்கழகங்களில், நிர்வாகக் குழு அல்லது ஆளுநர்கள் குழு வெளிப்படையான தேர்வு முறைகள் வழியாக இத்தகைய வேந்தர்களை *நியமிக்கின்றன*.

இந்திய மாநிலங்களும் மாற்று மாதிரிகளைப் பரிசோதித்துள்ளன. 2000–ஆம் ஆண்டில் கர்நாடகா புதிய சட்டத்தின் வழியாக, துணைவேந்தர்களை நியமிப்பதற்கு மாநில அரசின் ஒப்புதல் கட்டாயம் என விதித்தது. 2023–ஆம் ஆண்டில் குஜராத், தனது மாநிலப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர் நியமனச் செயல்முறையிலிருந்து ஆளுநரை முழுமையாக நீக்குவதற்காகச் சட்டத்தை இயற்றியது. ஆயினும், அண்மைக் காலச் சட்டமன்ற முயற்சிகள் தடைகளைச் சந்தித்துள்ளன. தமிழ்நாடு (2022), மற்ற பணிகளுக்கு ஆளுநரை வேந்தராகத் தக்கவைத்துக்கொண்டு, துணைவேந்தரை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசிடம் வழங்க முயன்றது. மேற்கு வங்கம் (2022), பஞ்சாப் (2023) ஆகியவை ஆளுநருக்குப் பதிலாக முதலமைச்சரை வேந்தராக நியமிக்கப் பரிந்துரைத்தன. கேரளா (2022) மாநில அரசே வேந்தரை நியமிக்கும் சட்டமுன்வரைவை நிறைவேற்றியது. எவ்வாறாயினும், ஆளுநர்கள் இச்சட்டவரைவுகளைக் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு ஒதுக்கி வைத்த பிறகு, குடியரசுத் தலைவர் பஞ்சாப் சட்டவரைவுகளைத் திருப்பி அனுப்பினார்; மேற்கு வங்க, கேரளச் சட்டவரைவுகளுக்கு ஒப்புதலை நிறுத்தி வைத்தார்; தமிழ்நாட்டின் சட்டவரைவுகள் புதிய சட்டச் சிக்கல்களைச் சந்தித்துள்ளன.

அரசியல்வாதிகளைத் தவிர்த்து, புகழ்பெற்ற கல்வியாளர்கள் அல்லது பொதுவாழ்வில் ஆளுமைமிக்கவர்களை வேந்தர்களாக மாநில அரசே நியமிக்கும் முறை, அரசமைப்புச் சட்ட அளவில் சரியான தீர்வாக அமையும். இதுவே பூஞ்சி ஆணையத்தாலும் பரிந்துரைக்கப்பட்டது. காலனிய கட்டமைப்புகளை நீக்க முயலும் இத்தகைய சீர்திருத்தங்களை ஒன்றியம் தடுக்காமல் ஊக்குவிக்க வேண்டும்; இதுவே கல்வித் தரத்திற்கான உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் நிர்வாகத்தை ஒத்துப்போகச் செய்யும்.

பரிந்துரை 7

மாநிலப் பல்கலைக்கழகங்களின் வேந்தர் எனும் சட்டப்பூர்வப் பொறுப்பிலிருந்து ஆளுநர் விடுவிக்கப்பட வேண்டும். இந்தப் பதவி இப்போது பொறுப்பு ஏதுமின்றி அதிகாரத்தைச் செலுத்துவதோடு, தவிர்க்கக்கூடிய ஒன்றிய–மாநில மோதல்களை உருவாக்குகிறது. மாநிலங்களே இந்தப் பல்கலைக்கழகங்களை நிறுவி, நிதியளித்து,

நிர்வகித்து, மக்களாட்சி முறையில் பொறுப்பேற்பதால், புகழ்பெற்ற, சார்பற்ற ஒருவரை வேந்தராக நியமிக்கும் சுதந்திரம் மாநிலங்களுக்கு இருக்க வேண்டும். உண்மையான அரசமைப்புச் சட்டச் சிக்கல்கள் ஏதுமில்லாத போது, ஆளுநர்கள் இத்தகைய சீர்திருத்தங்களுக்கு ஒப்புதலை நிறுத்தி வைத்தோ அல்லது குடியரசுத் தலைவருக்கு அனுப்பியோ தடைகளை உருவாக்கக் கூடாது.

X. முடிவுரை

கல்வித் துறையில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக நீடித்து வரும் மையப்படுத்தும் போக்கும், ஒன்றிய அரசின் கட்டுப்பாடுகளை அதிகரிப்பதும், உயர் கல்வித் தரமும் சீரான தரநிலைகளும் கிடைக்கும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. கிட்டத்தட்ட அனைத்து உலகளாவிய குறியீடுகளிலும், அதிகாரப் பரவல் கொண்ட கூட்டாட்சி நாடுகளான அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, ஜெர்மனி ஆகியவற்றைவிட இந்தியா மிகவும் பின்தங்கியுள்ளது. இந்தியாவின் சராசரி பள்ளிப் படிப்பு காலம், உயர்கல்விச் சேர்க்கை விகிதம் ஆகியவை உலகளாவிய சராசரியை விடக் கீழேயே உள்ளன; பள்ளிக் கல்வி முறை தொடர் முடக்கத்தில் உள்ளது; இந்தியாவின் முன்னணி பல்கலைக்கழகங்கள் கூட சர்வதேச தரவரிசைகளில் ஓரங்கட்டப்பட்டுள்ளன. உயர் அழுத்த தேசிய நுழைவுத் தேர்வுகள் மேல்நிலைப் பள்ளிக் கல்வியை மேலும் சீர்குலைத்து, சமத்துவமின்மையை நிலைநிறுத்தி, மாணவர் நலனைச் சிதைத்து, அதிகப்படியான மையப்படுத்தப்பட்ட தேர்வு முறையினால் 'ஒற்றைப் புள்ளித் தோல்வி' அபாயங்களை உருவாக்கியுள்ளன. எனவே, மையப்படுத்துதல் மேம்பாட்டை உருவாக்கவில்லை. மாறாக ஒட்டுமொத்த அமைப்பையும் சராசரித் தரத்தை நோக்கியே தள்ளியுள்ளது.

ஒப்பீட்டும் அனுபவமும் அளிக்கும் சான்றுகள் தெளிவான திசையையே காட்டுகின்றன. கல்வியை முதன்மையாக மாநிலப் பொறுப்பாகக் கருதி, ஒன்றியத்தின் வரையறுக்கப்பட்ட ஒருங்கிணைப்பை மட்டும் கொண்டிருந்த இந்தியாவின் நெருக்கடி காலத்திற்கு முந்தைய அரசமைப்புச் சட்ட வடிவமைப்பு (1950–1976) சரியானதாக அமைந்தது; அது வளர்ந்த கூட்டாட்சி நாடுகளின் நடைமுறைகளுடன் ஒத்துப்போனது. இந்த வடிவமைப்பிலிருந்து விலகியதும், *நாற்பத்து இரண்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தில்* (1976) தொடங்கி, ஒன்றியப் பட்டியலின் இனம் 66க்கு அளிக்கப்பட்ட விரிவான

நீதித்துறை விளக்கங்கள், பல்கலைக்கழக மானியக் குழு போன்ற அமைப்புகளின் ஒழுங்குமுறை எல்லை மீறல்கள், மாநிலப் பல்கலைக்கழகங்களில் ஆளுநரின் வேந்தர் பொறுப்பு அரசியல்மயமாக்கப்பட்டது ஆகியவற்றால் நிலைமை மோசமடைந்தது. தரத்தில் முன்னேற்றமோ அல்லது மாநிலங்களுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வு குறைவோ ஏற்படாமல், மாநிலச் சுயாட்சியும் பல்கலைக்கழகச் சுயாட்சியும் படிப்படியாகச் சிதைந்து போனது. இதன் ஒட்டுமொத்த விளைவு என்பது பல ஒழுங்குமுறை அமைப்புகளால் ஏற்பட்ட சிக்கல், பொறுப்பு ஏற்பதில் குழப்பநிலை, நிறுவனங்களின் தேக்கம் ஆகியவை மட்டுமே.

இந்தியக் கல்விக்கு இப்போது தேவைப்படுவது, 1991–ஆம் ஆண்டின் புகழ்பெற்ற பொருளாதாரச் சீர்திருத்தங்களைப் போன்ற கட்டமைப்பு மறுசீரமைப்பு ஆகும்; இது 1976க்கு முன்னர் இருந்த அரசமைப்புச் சட்டச் சமநிலையை மீட்டெடுக்க வேண்டும். இதன் நோக்கம் ஒன்றியத்தின் பங்கைக் குறைப்பது அல்ல. மாறாக, அதைச் சரியான அளவில் வைப்பது ஆகும். பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் நேரடி நிர்வாகத்திலிருந்து ஒன்றியம் விலகிக்கொண்டு, தான் மட்டுமே திறம்படச் செய்யக்கூடிய பின்வரும் பணிகளில் கவனம் செலுத்த வேண்டும்: உயர் ஆராய்ச்சிக்கு நிதியளித்தல், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களுக்கு ஆதரவளித்தல், குறைந்தபட்ச கல்வி தரநிலைகளையும் ஆராய்ச்சி தரநிலைகளையும் ஒருங்கிணைத்தல். கல்வி மீண்டும் மாநிலப் பட்டியலுக்குத் திரும்ப வேண்டும்; இனம் 66 என்பது ஒருங்கிணைப்பு ஏற்பாடுதானே தவிர, பல்கலைக்கழக ஆளுகையின் ஒவ்வொரு அம்சத்திலும் ஒன்றிய ஒழுங்குமுறை அமைப்புகள் தலையிடுவதற்கான உரிமம் அல்ல என்பது அரசமைப்புச் சட்ட அளவில் தெளிவுபடுத்தப்பட வேண்டும்; மாநில நிறுவனங்களின் சேர்க்கைக்கான தேசிய நுழைவுத் தேர்வுகள் கைவிடப்பட வேண்டும்; மேலும் வேந்தர் பொறுப்பிலிருந்து ஆளுநரை விடுவிப்பதன் வழியாகப் பல்கலைக்கழக நிர்வாகம் அரசியலற்றதாக்கப்பட வேண்டும். கல்வித் துறையில் கூட்டாட்சியை மீட்டெடுப்பது என்பது வெறும் கடந்த கால ஏக்கமல்ல – அது அரசமைப்புச் சட்டத் தேவையாகும்.

சான்று நூல்கள்

1. *Constituent Assembly Debates*, vol 9 (6th reprint, Lok Sabha Secretariat 2014) August 30, 31, 1949, September 1, 2, 3, 1949.
2. DS Kothari and others, *Report of the Education Commission* (Government of India 1966).
3. PV Rajamannar, A Lakshmanaswami Mudaliar, and P Chandra Reddy, *Report of the Centre–State Relations Inquiry Committee* (Government of Tamil Nadu 1971) Chapter 8.
4. Swaran Singh and others, *Swaran Singh Committee Report* (Congress 1976).
5. S Radhakrishnan and others, *The Report of the University Education Commission*, vol 1 (2nd reprint, Ministry of Education and Culture 1983).
6. RS Sarkaria, B Sivaraman, and SR Sen, *Report of the Sarkaria Commission* (Ministry of Home Affairs 1988) Chapter 2, paras 2.17.12–2.17.14, 2.17.17, Chapter 4, paras 4.11.32–4.11.39.
7. Yash Pal and others, *The Committee to Advise on Renovation and Rejuvenation of Higher Education* (Government of India 2009).
8. Madan Mohan Punchhi and others, *Commission on Centre–State Relations: Constitutional Governance and the Management of Centre–State Relations*, vol 2 (Government of India 2010) Chapter 4, para 4.5.11.
9. Digvijaya Singh and others, *Three Hundred and Seventy–One Report: Review of Autonomous Bodies and Institutions – NTA, NAAC, Draft UGC Regulations, ICHR, ICPR, ICSSR, IIAS(Shimla) and Auroville Foundation under the Department of Higher Education* (Department–Related Parliamentary Standing Committee on Education, Women, Children, Youth and Sports, Rajya Sabha 2025).
10. K Ashok Vardhan Shetty, 'UGC regulations or State university laws?' (*The Hindu* January 21, 2025) accessed January 5, 2026; K Ashok Vardhan Shetty, 'Federalism on Trial: The Battle Over University Governance' (*DT Next* June 10, 2025) accessed January 5, 2026.
11. K Ashok Vardhan Shetty, 'Should Governors be Chancellors of State universities?' (*The Hindu* January 26, 2025) accessed January 5, 2026.
12. The Constitution of the United States 1787, Amendment X.
13. Canadian Constitution Act 1867, Section 93.

இயல் 9

சுகாதாரம்

"கடந்த 30 ஆண்டுகளில், மரபார்ந்த தேச அரசுகளும் பன்னாட்டு ஒத்துழைப்பு அமைப்புகளும் உருமாற்றம் அடைந்துள்ளன... அதிகாரம் தேச அரசாங்கங்களிடமிருந்து சர்வதேச அமைப்புகளுக்கும், அதே நேரத்தில் உள்ளூர், வட்டார அரசாங்கங்கள், அரசு சாரா நிறுவனங்கள் உள்ளிட்ட தேச உறுப்பு முனையங்களுக்கும் ஈர்க்கப்படுகிறது. இந்தப் புதிய, பெரும் குழப்பமான சிக்கல் தன்மை சவலாக உள்ளது. குறிப்பாக, செயலற்ற – பெரும்பாலும் எதிர்மறையான விளைவுகளைத் தரும் 'கட்டளையிட்டுக் கட்டுப்படுத்தும்' முறைக்கும், தீங்கு விளைவிக்கும் 'தலையிடாமை' அணுகுமுறைக்கும் இடையே நைந்துபோய் நிற்கும் சுகாதாரச் சேவை அதிகார அமைப்புகளுக்கு சவாலாக உள்ளது."

– உலக சுகாதார நிறுவனம்
The World Health Report (2008)[1]

I. அறிமுகம்

பொதுநலப் பணிகளிலேயே மிகவும் நெருக்கமானது சுகாதாரத் துறை. இது சட்டங்கள் வழியாகவோ, அருவமான கொள்கை வகுப்பு ஆவணங்கள் வழியாகவோ அல்லது தேசிய நுழைவுத் தேர்வுகள் வழியாகவோ உணரப்படுவது அல்ல; மாறாக மருத்துவ நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள், அவசரகால

[1] *The World Health Report 2008: Primary Health Care: Now More Than Ever* (World Health Organisation 2008) 108.

மருத்துவச் சேவை ஊர்திகள் (ஆம்புலன்ஸ்கள்) ஆகியவற்றின் வழியாக உணரப்படுகின்றது. மருத்துவரின் நோய் கண்டறிந்து சிகிச்சையளிக்கும் திறன் என்பது அவரது நுட்பத் திறனை மட்டும் சார்ந்தது அல்ல; உள்ளூர் பேச்சுவழக்குகளில் விவரிக்கப்படும் அறிகுறிகள், பண்பாட்டுக் குறிப்பீடுகள் வழியாக வெளிப்படுத்தப்படும் வலி, சமூக–பொருளாதாரச் சூழலால் உருப்பெறும் அச்சம் ஆகியவை குறித்து நோயாளி பகிர்ந்துகொள்வதை, மருத்துவர் புரிந்துகொள்வதைப் பொறுத்ததும் ஆகும். இத்தகைய நிகழ்வுகளில் தொடர்புகொள்வதில் ஏற்படும் தோல்விகள், நோய் கண்டறிதலில் ஏற்படும் பிழைகளைப் போலவே தீங்கு விளைவிக்கக் கூடியவை. இதனால்தான் உலகெங்கிலும் உள்ள சுகாதார அமைப்புகள், அவை யாருக்குச் சேவை செய்கின்றனவோ அந்த மக்களுக்கு மிக நெருக்கமான அதிகார அமைப்புகள் வழியாக ஆட்சி செய்யப்படும்போதும் நிர்வகிக்கப்படும்போதும் மிகவும் திறம்படச் செயல்படுகின்றன.

துணைஅமைப்புக் கொள்கையின் (principle of subsidiarity) மிகத் தெளிவான வெளிப்பாடு சுகாதாரத் துறை ஆகும். கேரளாவின் வெப்பமண்டல சதுப்பு நிலங்களின் நோய்ப் பரவல் தன்மைக்கும், இராஜஸ்தான் பாலைவனங்களின் அல்லது அசாமின் மலைப்பாங்கான நிலப்பகுதிகளின் நோய்ப் பரவல் தன்மைக்கும் இடையே பெரிய அளவில் ஒற்றுமை இல்லை. சுகாதார உள்கட்டமைப்பு என்பது புவியியல், மக்கள்தொகை அடர்த்தி, குடியிருப்பு முறைகள் ஆகியவற்றால் வடிவமைக்கப்படுகிறது; அதே வேளை, சுகாதார நிறுவனங்கள் மீதான நம்பிக்கை என்பது மொழி, பண்பாடு, உள்ளூர் சமூக உறவுகள் ஆகியவற்றால் உருபெறுகிறது. ஆகவே, சேவை வழங்கப்படும் இடத்தில் பொறுப்புக்கூறல் முறை இருப்பதுதான் மிகவும் அர்த்தமுள்ளதாக இருக்கும். ஒரு தொலைதூர ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள மருத்துவரே, அந்தச் சமூகத்திற்குப் பல வகைகளில் பதில் அளிக்கக் கடமைப்பட்டவர்; இவ்வாறு புது தில்லியில் இருக்கும் தொலைதூர அதிகாரி ஒருவர், இருக்க முடியாது.

இந்தியாவின் அரசமைப்புச் சட்ட வடிவமைப்பு தொடக்கத்தில் இந்தப் புரிதலையே கொண்டிருந்தது. அரசமைப்புச் சட்டச் சிற்பிகள், "பொதுச் சுகாதாரமும் தூய்மைப் பணியும்; மருத்துவமனைகளையும் மருந்தகங்களையும்" மாநிலப் பட்டியலில் (இனம் 6) தெளிவாக இடம்பெறச் செய்து, சுகாதார நிர்வாகத்தில் மாநிலங்களின் உரிமையை முதன்மைப்படுத்தினர். மருத்துவக் கல்வியும் அதேபோல் மாநிலங்களிடமே ஒப்படைக்கப்பட்டது. இது மருத்துவ வல்லுநர்களுக்கான பயிற்சிக்கும், உள்ளூர் மக்களின் சுகாதாரத் தேவைகளுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு இருப்பதை உறுதிசெய்தது. ஒன்றியத்திற்கு

வரையறுக்கப்பட்ட, ஆனால் முக்கியமான பங்கு ஒதுக்கப்பட்டது. ஒன்றியப் பட்டியல் 63 முதல் 66 வரை இனங்கள் வாயிலாக, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களை நிறுவலாம்; அகில இந்திய அளவிலான ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கலாம்; குறைந்த அளவு தரநிலைகளைப் பரிந்துரைக்கலாம். இந்த வடிவமைப்பு அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, ஜெர்மனி போன்ற வளர்ந்த கூட்டாட்சி நாடுகளில் இருப்பதைப் போன்றது.

இந்தச் சமநிலை *நாற்பத்து இரண்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தால்* (1976) குலைக்கப்பட்டது. இது மருத்துவக் கல்வி உள்ளிட்ட கல்வியைப் பொதுப் பட்டியலுக்கு (இனம் 25) மாற்றியது. அதனைத் தொடர்ந்து ஒன்றியப் பட்டியல் இனம் 66 குறித்து வழங்கப்பட்ட நீதித்துறை விளக்கங்கள், அதிகாரத்தின் தராசு முள்ளை ஒன்றியத்தின் பக்கம் மேலும் சாய்த்தன; இதன் வழியாக முன்னதாக மாநிலங்களின் அதிகாரத்தில் இருந்த துறைக்கான மாணவர் சேர்க்கை, பாடத்திட்டம், நிறுவன அங்கீகாரம் ஆகியவற்றின் மீது கட்டுப்பாட்டைச் செலுத்த ஒன்றியத்திற்கு அதிகாரம் கிடைத்தது. இவ்வாறு மருத்துவக் கல்வி மீதான மாநிலக் கட்டுப்பாடு நலிவடைதல், உச்சநீதிமன்றம் உருவாக்கிய அகில இந்திய ஒதுக்கீடு (All–India Quota – AIQ) வழியாக மேலும் தீவிரமடைந்தது. இது மாநிலத்தால் நிறுவப்பட்ட, மாநில நிதி பெறும் மருத்துவக் கல்லூரிகளில் ஒருபகுதி இடங்களை ஒன்றியமே நிரப்ப வழிவகை செய்தது. இதன் வழியாக, மருத்துவக் கல்விக்கும் உள்ளூர் சுகாதாரத்துக்கும் இடையிலான இன்றியமையாத தொடர்பு துண்டிக்கப்படுகிறது. இந்தத் தொடர்பு கிராமப்புற இந்தியாவிற்கு மிகமிக இன்றியமையாதது. கடந்த சில ஆண்டுகளாக, குறிப்பாக அண்மை ஆண்டுகளில், தேசிய நுழைவுத் தேர்வுகள், நெகிழ்வற்றதும் நுண்–மேலாண்மை செய்வதுமாகிய ஒன்றிய நிதிஅளிப்புத் திட்டங்கள் (Centrally Sponsored Schemes(CSS)), நிதி தொடர்பான நிபந்தனைகள், தொடர்ச்சியான நிதிப் பற்றாக்குறை, சுகாதாரத் திட்டங்களுக்கு இந்திப் பெயர்களைச் சூட்டுவதன் வழியாக நிகழும் பண்பாட்டு ஒருமுகப்படுத்தல் ஆகியவற்றுடன் ஒன்றியம் தனது ஒழுங்குமுறை ஆதிக்கத்தை விரிவுபடுத்தியுள்ளது.

அரசமைப்புச் சட்டத் திட்டத்தை முறையாக படிக்கும்போது இத்தகைய தலைகீழ் மாற்றத்திற்கு வழிவகுக்கவில்லை. ஒன்றியப் பட்டியலில் இனம் 66 (கல்வி மற்றும் ஆராய்ச்சியில் தரநிலைகள்) தவிர, இனம் 28 (துறைமுகத் தனிமைப்படுத்தல்), இனம் 81 (மாநிலங்களுக்கு இடையேயான தனிமைப்படுத்தல்) ஆகியவற்றின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட சுகாதாரம் தொடர்பான அதிகாரங்கள் மட்டுமே உள்ளன. பொதுப் பட்டியலில் இனம் 25 (மருத்துவக் கல்வி) தவிர, இனம் 26 (மருத்துவம்

முதலான இதர தொழில்கள்), இனம் 18 (உணவுப் பொருள்களிலும் பிற சரக்குகளிலும் கலப்படம்), இனம் 19 (மருந்துப் பொருள்களும் நச்சுப் பொருள்களும்), இனம் 29 (மாநிலங்களுக்கு இடையே நோய்கள் பரவுவதைத் தடுத்தல்), இனம் 20A (மக்கள்தொகைக் கட்டுப்பாடும் குடும்பக் கட்டுப்பாடும்), இனம் 30 (பிறப்பு, இறப்புப் பதிவு உள்ளிட்ட முக்கியமான புள்ளிவிவரங்கள்) ஆகியவற்றின் வழியாக அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக, இந்த ஏற்பாடுகள் அரசமைப்புச் சட்ட வடிவமைப்பை வெளிப்படுத்துகின்றன; சேவை வழங்குதல் என்பது உள்ளூர் அளவிலும், தரநிலைகள் என்பது தேசிய அளவிலும், ஒழுங்குமுறை என்பது பகிர்ந்துகொள்ளப்பட்ட நிலையிலும் இருக்க வேண்டும் என்பது அந்த அரசுச் சட்ட வடிவமைப்பு. ஆனால் இந்தச் சமநிலை, மையப்படுத்தும் அழுத்தங்களாலும் சுகாதாரத் துறையில் ஒன்றிய அதிகாரத்தின் தொடர்ச்சியான விரிவாக்கத்தாலும் அவ்வப்போது பெரும் பாதிப்புக்குள்ளாகிறது.

II. முந்தைய குழுக்களின் கருத்துக்கள்

சர்க்காரியா ஆணையம் (1983–88) *(Sarkaria Commission* (1983–88)), சுகாதாரத் துறையில் ஒன்றிய, மாநில அரசுகளுக்கிடையில் நிலவிய பதற்றத்தை எதிர்கொண்டது: சுகாதாரச் சேவையை வழங்குவதற்கு மாநிலங்களே பொறுப்பு. ஆனால் ஒன்றியம் தனது நிதித் திட்டங்கள், குறிப்பாக ஒன்றிய நிதிஅளிப்புத் திட்டங்கள் வழியாகக் கொள்கையில் ஆதிக்கம் செலுத்துகிறது. சர்க்காரியா ஆணையம், இத்தகைய திட்டங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும், மாநிலங்கள் தங்களுக்குரிய உள்ளூர் நோய் சுமைகளுக்கு ஏற்ப திட்டங்களை வடிவமைக்க நெகிழ்வுத்தன்மையை வழங்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

பூஞ்சி ஆணையம் (2007–10) *(Punchhi Commission* (2007–10) சுகாதாரத் துறை குறித்து குறிப்பிட்ட பரிந்துரைகள் எதையும் செய்யவில்லை. அரசமைப்புச் சட்ட இனங்களை மாற்ற முன்மொழியவில்லை. இதன் முக்கியத்துவம் நிறுவனம் சார்ந்தது. பன்னாட்டு ஒப்பந்தங்களைச் செயல்படுத்தும் போது (உதாரணமாக: உலக சுகாதார நிறுவன நெறிமுறைகள்), ஒன்றியம் வாக்குறுதி அளிக்கிறது. ஆனால் மாநிலங்களே அதைச் செயல்படுத்தும் சுமையை ஏற்கின்றன. இதனை பூஞ்சி ஆணையம் சுட்டிக்காட்டியது. எனவே, பகிர்ந்துகொண்ட பொதுப் பட்டியல் அதிகாரங்களில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த முறையான

ஆலோசனைக் கட்டமைப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் மாநிலங்களுக்கு இடையிலான மன்றத்தை வலுப்படுத்த வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது.

(இந்தியத் திட்டக் குழுவால் 2011–இல் நிறுவப்பட்ட) *உயர்நிலை வல்லுநர் குழு (High–Level Expert Group) தேசிய சுகாதாரத் துறை ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு அதிகார அமைப்பை (National Health Regulatory and Development Authority)* உருவாக்க முன்மொழிந்தது; இது தரநிலைகளை மையப்படுத்தவும், சேவை வழங்கலை மாநிலங்களிடமே வைத்திருக்கவும் பரிந்துரைத்தது.

பதினைந்தாவது நிதி ஆணையம் (2021) (Fifteen *Finance Commission* (2021)) பின்வரும் நிருவாக இணைப்பை முன்மொழிந்தது. அகில இந்திய மருத்துவ மற்றும் சுகாதாரப் பணி (All–India Medical and Health Service, AIMHS) என்ற பெயரில் ஒன்றியத்தையும் மாநிலங்களையும் உள்ளடக்கிய ஓர் ஒருங்கிணைந்த பணியாளர் அமைப்பை உருவாக்கப் பரிந்துரைத்தது.

சுகாதாரத் துறைக்கான உயர்நிலைக் குழு *(பதினைந்தாவது நிதி ஆணையத்தால்* 2018 இல் அமைக்கப்பட்டது), ஒரேதன்மை கொண்ட ஒழுங்குமுறையைச் செயல்படுத்த மாநிலப் பட்டியலின் இனம் 6–ஐ பொதுப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்று வெளிப்படையாகப் பரிந்துரைத்தது.[2] இந்தக் கருத்தை 15வது நிதி ஆணையத் தலைவர் என்.கே. சிங் வெளிப்படையாக ஆதரித்த போதிலும், ஆணையத்தின் இறுதி அறிக்கையில், இது ஒரு பரிந்துரையாக *ஏற்றுக் கொள்ளப்படவில்லை.*

சுகாதாரத் துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு (123வது அறிக்கை, நவம்பர் 2020), இப்போதுள்ள சுகாதாரத் துறையின் சட்டங்கள் காலாவதியானவை என்பதால், கோவிட்–19 பெருந்தொற்றை நிர்வகிக்க 2005–ஆம் ஆண்டு *பேரிடர் மேலாண்மைச் சட்டத்தையே* (*Disaster Management Act,* 2005) இந்தியா நம்ப வேண்டியிருந்தது என்று குறிப்பிட்டது.

இந்தப் பரிந்துரைகளை ஆய்வு செய்தால், சுகாதாரத் துறை உள்ளிட்டு, ஒவ்வொரு துறையிலும் உள்ள சிக்கல்களுக்கு அதிகார மையப்படுத்ததலும் ஒழுங்குமுறைப்படுத்தலுமே தீர்வுகளாகக் கருதும் போக்கு ஒன்றியத்திடம் தொடர்ந்து இருப்பதை வெளிப்படுத்துகிறது. சர்க்காரியா, பூஞ்சி போன்ற ஆணையங்கள் ஒருங்கிணைப்பு,

---

[2] 'Lok Sabha Unstarred Question No. 2628' (*Ministry of Health and Family Welfare* 2020).

நெகிழ்வுத்தன்மை, ஆலோசனை செய்தல் ஆகியவற்றை வலியுறுத்திய நிலையில், பிந்தைய அமைப்புகள் ஒழுங்குமுறையில் ஒரேதன்மை, தேசிய அதிகார வாரியங்கள், மையக் கட்டளையிடும் முறை ஆகியவற்றை நோக்கியே நகர்ந்துள்ளன.

III. சுகாதாரச் சேவை வழங்கலில் ஒன்றிய அரசின் அத்துமீறல்

பொது சுகாதாரத் துறை என்பது அரசமைப்புச் சட்டப்படி மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயினும், ஒன்றிய அரசின் நிதி செல்வாக்கு, ஒருமுகமான கொள்கை வகுப்பு மாதிரிகள், நிருவாக நுண் மேலாண்மை, நெருக்கடிநிலை அதிகாரங்கள், பண்பாட்டு மையப்படுத்தல் ஆகியவற்றின் வழியாக சுகாதாரக் கொள்கை வகுப்பின் மீதும், சேவைகளின் மீதும் தனது செல்வாக்கை ஒன்றிய படிப்படியாக விரிவுபடுத்தி வருகிறது.

1. நிதி செல்வாக்கு

பொது சுகாதாரத் துறைக்கான மொத்தச் செலவில் சுமார் ஐந்தில் ஒரு பங்கை மட்டுமே ஒன்றிய அரசு பங்களிக்கும் நிலையில், மாநிலங்களே செலவின் பெரும்பகுதியைத் தொடர்ந்து மேற்கொண்டு வரும் வேளையில், ஒன்றிய அரசு இன்று மாநில சுகாதாரக் கொள்கையின் மீது மிகையான செல்வாக்கைச் செலுத்துகிறது. பதினான்காவது நிதிக் குழுவிற்குப் பிறகு, சுகாதாரத் துறையில் உள்ள பெரும்பாலான ஒன்றிய நிதிஅளிப்புத் திட்டங்கள் 60:40 என்ற நிதிப் பங்கீட்டு முறைக்கு மாற்றப்பட்டதால், மாநிலங்களின் நிதிச் சுமை அதிகரித்துள்ளது. ஒன்றிய அரசு பொதுவாக *காணக் கூடிய மூலதனச் சொத்துக்களுக்கு* (visible capital assets) (கட்டிடங்கள், ஆம்புலன்ஸ்கள், கருவிகள்) மட்டுமே நிதி வழங்குகிறது. ஆனால் *தொடர் செலவுகள்* (ஊதியம், மருந்துகள், பயன்பாட்டு சேவைகள் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றின்) பெரும் சுமையை முழுமையாக மாநிலங்களிடமே விட்டுவிடுகிறது. இத்தகைய திட்டங்கள் மாநில நிதிநிலை அறிக்கைகளுக்கு நிலையான நிதிச் சுமைகளாக மாறுகின்றன. ஆனால் அத்திட்டத் தொடக்கங்களுக்கான அரசியல் நற்பெயரை ஒன்றிய அரசு எடுத்துக் கொள்கிறது.

அரசியல் அடையாளத்தை (political branding) திணிக்கவும் நிதி செல்வாக்கு பயன்படுத்தப்படுகிறது. 2023–24–இல் பஞ்சாப், மேற்கு வங்க மாநிலங்களுக்கு தேசிய சுகாதார இயக்க நிதியை ஒன்றிய அரசு

நிறுத்தியபோது இந்த மோதல் உச்சமடைந்தது. இந்த சர்ச்சை, நோய் தடுப்பு செயல்பாடு அல்லது சேவை வழங்கல் சார்ந்தது அல்ல. மாறாக, மருத்துவ நிலையங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட வண்ணங்களைப் பூசுவது (எ.கா: மேற்கு வங்காளம்), அவற்றின் பெயரை "ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்" என்று மாற்றுவது (எ.கா: பஞ்சாபின் *ஆம் ஆத்மி மையங்கள்*) உள்ளிட்ட கட்டாயப்படுத்தப்பட்ட அடையாளப்படுத்தும் விதிகளைப் பின்பற்றுவது சார்ந்தது ஆகும்.

2. "அனைவருக்கும் ஒரே மாதிரி" என்கிற தவறு

நோயியல் சார்ந்தும் மக்கள்தொகை சார்ந்தும் ஒரு கண்டத்தின் அளவிற்கு போன்ற பன்முகத்தன்மை கொண்ட நாட்டில், ஒன்றிய அரசின் கொள்கைகள் ஒரே ஒரு தேசிய வடிவமாதிரியைத் திணிக்கின்றன. கேரளா, தமிழ்நாடு போன்ற முன்னேறிய மாநிலங்கள் இரண்டாம் தலைமுறை சவால்களை – வயதான மக்கள்தொகை, தொற்றாத நோய்கள் முதலானவற்றை – எதிர்கொள்கின்றன; ஆனால் உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்கள் இன்னும் முதல் தலைமுறை சிக்கல்களான தொற்று நோய்கள், குழந்தை மரணம், தாய்மார்கள் மரணம், ஊட்டச்சத்துக் குறைபாடு போன்றவற்றோடு போராடுகின்றன. ஒன்றிய அரசின் நிதியளிப்புத் திட்டங்களின் வழிகாட்டுதல்கள் இந்தி பேசும் மாநிலங்களின் (Hindi heartland) மக்கள்தொகைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. இதனால் முன்னேறிய மாநிலங்கள் ஒன்றிய அரசின் நிதியைப் பெறுவதற்காக, பல ஆண்டுகளுக்கு முன்பே பெரும்பாலும் தாங்கள் தீர்த்துவிட்ட சிக்கல்களுக்கு (தாய்மார்கள் மரணத்தைக் குறைப்பது போன்றவற்றுக்கு) தங்கள் 40 விழுக்காடு பங்கினை ஒதுக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகின்றன. இது அவர்களின் உண்மையான தேவைகளிலிருந்து நிதி வளங்களைத் திசைதிருப்புகிறது; கொள்கை வகுப்பு புதுமை முயற்சிகளை முடக்குகிறது.

மிக முக்கியமாக, 1976–இல் "மக்கள்தொகைக் கட்டுப்பாடு" பொதுப் பட்டியல் அதிகாரமாக (இனம் 20A) மாறுவதற்கு முன்பே, மாநில முன்முயற்சிகள் வழியாகக் கல்வியிலும் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் திட்டங்களிலும் சமூகச் சீர்திருத்தங்களிலும் முதலீடுகள் செய்து, பல தென்னிந்திய மாநிலங்கள் கருவுறுதல் விகிதக் குறைப்பைச் சாதித்தன. ஐம்பது ஆண்டுகள் காலமாக, இந்தி பேசும் மாநிலங்களின் பகுதிகளில், இதுபோன்ற சாதனை நிகழ்த்தப்படவில்லை. இது மாநில முன்முயற்சிக்கான மாற்றாக மையப்படுத்தப்பட்ட சட்ட அதிகாரம் இருக்க முடியாது என்பதை வலியுறுத்துகிறது.

3. நிருவாக நுண்–மேலாண்மை

ஆயுஷ்மான் பாரத் கட்டமைப்பு ஒன்றிய நுண் மேலாண்மையின் ஆழத்தை விளக்குகிறது.

பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (Pradhan Mantri Jan Arogya Yojana) திட்டத்தின் கீழ், சிகிச்சை முறைகளுக்கான கட்டணங்கள் சுகாதாரப் பயன் தொகுப்புகள் (Health Benefit Packages, HBP) வழியாக தேசிய அளவில் ஓரே அளவில் நிர்ணயிக்கப்படுகின்றன. அண்மைய திருத்தங்கள் (HBP 2.2 முதற்கொண்டு), இருப்பிட அடிப்படையிலான சில வரையறுக்கப்பட்ட மாற்றங்களை (பொதுவாகப் பெருநகரங்களுக்கு 10–20 விழுக்காடு வரை) அனுமதித்த போதிலும், பெரிய நகரங்களில் உள்ள பெரும் தனியார் நிறுவன மருத்துவமனைகளுக்கும் கிராமப்புற மாவட்டங்களில் உள்ள மருத்துவ வசதிகளுக்கும் இடையே நிலவும் மிகப்பெரும் வேறுபாடுகளை (overhead disparities) ஈடுசெய்ய இந்தத் திட்டம் தவறிவிட்டது. இத்திட்டம், காலாவதியான, நம்பகத்தன்மையற்ற 2011–ஆம் ஆண்டு சமூக–பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு (Socio–Economic Caste Census, SECC) தரவுகளைப் பெரிதும் நம்பியுள்ளது. நடப்பில் உள்ள சுமார் 4,635 தனித்துவமான சமூகங்களுக்குப் பதிலாக, இக்கணக்கெடுப்பு 46 இலட்சம் "சாதிகள்" இருப்பதாகப் பதிவு செய்து அவப்பெயர் பெற்றது. இதனால், விடுபட்ட குடும்பங்களுக்காக மாநிலங்கள் தங்களின் சொந்த நிதியில் இணை காப்பீட்டுத் திட்டங்களை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. மேலும், காப்பீட்டு மாதிரியின் (insurance model) கீழ் செயல்படும் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தரநிலை ஒப்பந்தங்களின்படி, காப்பீட்டு கோரிக்கைகளின் விகிதம் 120 விழுக்காட்டைத் தாண்டினால், அதற்கு மேல் ஏற்படும் கூடுதல் செலவில் 50 விழுக்காட்டை மாநிலமே ஏற்க வேண்டும். இந்த நிபந்தனை, நிலையான கட்டணம் கொண்ட காப்பீட்டு மாதிரியை, பெருந்தொற்று போன்ற அதிகக் கோரிக்கைகள் எழும் காலங்களில் மாநிலங்களுக்கு முடிவில்லாத நிதிச் சுமையாக (open–ended fiscal liability) மாற்றிவிடுகிறது.

ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டம் (Ayushman Bharat Digital Mission), செயல்பாட்டுடன் இணைக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டு முறைகள் (performance–linked funding) வழியாக, ஒன்றியத் தளங்களில் இணையதள எண்ணுருவாக்குவதைக் கட்டாயமாக்குகிறது. எண்ணுரு மயமாக்கல் வரவேற்கத்தக்கது என்றாலும், இத்தகையக் கட்டாய இணக்க முறை சார்ந்த வடிவமைப்பு (compliance–driven design), பற்றாக்குறையாக உள்ள நிருவாக, நிதி ஆதாரங்களை நேரடியான நோயாளி பராமரிப்பிலிருந்து (frontline care) திசைதிருப்புகிறது; இது தகவல் தொழில்நுட்ப அமைப்புகள்,

தரவுப் பதிவேற்றம், அறிக்கை சமர்ப்பித்தல் போன்ற பணிகளுக்கே முன்னுரிமை அளிக்கிறது.

4. நெருக்கடிநிலைக் கால அதிகார ஆதிக்கம்

கோவிட்–19 பெருந்தொற்றின் போது, ஒன்றிய அரசின் அத்துமீறல் மிகவும் வெளிப்படையானது. 2005–ஆம் ஆண்டு *பேரிடர் மேலாண்மைச் சட்டத்தைப்* பயன்படுத்துவதன் வழியாக, "பொதுச் சுகாதாரம்", "பொது ஒழுங்கு" ஆகியவை மாநிலப் அதிகாரங்களாக இருக்கும் அரசமைப்புச் சட்ட ஒதுக்கீட்டை ஒன்றிய அரசு நடைமுறையில் புறக்கணித்தது. நீண்ட காலத்திற்கு, நோய்க் கட்டுப்பாட்டு மண்டலங்கள் (containment zones) முதல் வணிக நடவடிக்கைகள் வரை உள்ளூர் விவகாரங்களில் ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம் பிணைப்பு உத்தரவுகளைப் பிறப்பித்தது; இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசாங்கங்களை நிருவாக அடிநிலைப் பணியாளர்களாகக் குறைத்தது. நெருக்கடிக் காலங்களில் ஒருங்கிணைப்பு என்பது அவசியமானது என்றாலும், இந்தப் பெருந்தொற்று சுகாதார ஆட்சியில் நிருவாக முறையில் மையப்படுத்தலுக்கு முன்னுதாரணத்தை உருவாக்கியுள்ளது; இது வழக்கமான பொது சுகாதார நிருவாகத்திலும் கூட, நெருக்கடிநிலையில் தோன்றும் அதிகாரத்தை இயல்பான ஒன்றாக மாற்றப்படுவது குறித்த கவலைகளை எழுப்பியுள்ளது.

5. பொது சுகாதாரத் தொடர்பு முறைகளில் நிலவும் மொழித் தடைகள்

பொது சுகாதாரத் துறையில் தொடர்புகொள்ளும் திறன் என்பது தெளிவு, உடனடித்தன்மை, புரிந்துகொள்ளும் தன்மை ஆகியவற்றைப் பொறுத்தது. இருப்பினும், ஒன்றிய அரசு முன்னெடுக்கும் பல திட்டங்கள் – *பிரதான் மந்திரி சுரக்ஷித் மாத்ரித்வா அபியான் (Pradhan Mantri Surakshit Matritva Abhiyan), ஜனனி சிஷு சுரக்ஷா காரியக்ரம் (Janani Shishu Suraksha Karyakram), அல்லது ராஷ்டிரிய கிஷோர் ஸ்வஸ்திய காரியக்ரம் (Rashtriya Kishore Swasthya Karyakram)* என இந்தி–சமஸ்கிருதப் பெயர்களைக் கொண்டுள்ளன. இவை தென்னிந்தியா, வடகிழக்கு மாநிலங்கள், பழங்குடியினச் சமூகங்கள் உட்பட இந்தி பேசாத இந்தியாவின் பெரும்பகுதியினருக்கு பேச்சுவழக்கிலும், கருத்தை உணர்த்துவதிலும் புரியாதவையாக உள்ளன. புரிந்துகொள்ள முடியாத மொழியில் பெயரிடப்படும்போது, அந்தச் சேவையைப் பெறுவதில் வேண்டுமென்றே சிக்கல் ஏற்படுகின்றது. பயனாளி அடையாளம் காணவோ அல்லது கூறவோ முடியாத சேவையைப் பெற முடியாது. இத்தகைய மொழி

மையப்படுத்தல், சுகாதாரச் சேவையின் கடைசி மைல் வரை சென்றடையும் திறனை விட, பெயரளவு ஒருமுகப்பாட்டிற்கே முன்னுரிமை அளிக்கிறது.

6. மொழி குறித்த நிறுவன வழிகாட்டுதல்கள்

மையப்படுத்தும் உந்துதல் தேசிய மருத்துவ நிறுவனங்கள் வரை விரிவடைந்துள்ளது. ஆட்சி மொழி குறித்த நாடாளுமன்றக் குழுவின் *11வது தொகுதி அறிக்கை (11th Volume of the Report of the Committee of Parliament on Official Language (2022))*, மத்திய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ நிறுவனங்களில் (central technical and medical institutions) பயிற்று மொழியாக ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியைக் கொண்டுவர வேண்டும் என்று பரிந்துரை செய்தது.[3] புது தில்லி எய்ம்ஸ் (AIIMS) போன்ற நிறுவனங்களில் அண்மையில் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்கள், அதிகாரப்பூர்வ கடிதப் போக்குவரத்தில், நோயாளிகளுக்கான மருந்துச் சீட்டுகளில்கூட இந்தியைப் பயன்படுத்த ஊக்குவிக்கின்றன. இத்தகைய நடவடிக்கைகள், நடுநிலையான இணைப்பு மொழியாக ஆங்கிலத்தின் மீது இந்தியா நீண்ட காலமாக கொண்டிருக்கும் சார்புநிலையிலிருந்து விலகிச் செல்கின்றன. இந்தச் சார்புநிலை மாநிலங்களுக்கு மக்கள் நகர்வதற்கும் வேலைவாய்ப்பில் தகுதி அடிப்படையிலான ஆள்சேர்ப்புக்கும், உலகளாவிய அறிவியல் ஈடுபாட்டிற்கும் வழிவகுத்துள்ளது. அதற்குப் பதிலாக வேறு மொழியைக் கொண்டுவருவது, "அகில இந்திய" நிறுவனங்களை வட்டாரமயமாக்கி, தேசிய அளவில் சுகாதாரம் சார்ந்த தொழில் திறன்களை பிளவுபடுத்தும் அபாயத்தை ஏற்படுத்துகிறது.

7. ஆயுஷ் (AYUSH) படிநிலை

இந்திய மரபு மருத்துவத்தை ஊக்குவிப்பதாகக் கூறினாலும், சித்த மருத்துவம், யுனானி, சோவா–ரிக்பா போன்ற பிற உள்நாட்டு மருத்துவ முறைகளைவிட, ஒன்றிய அரசின்ன நிறுவன வடிவமைப்பு ஆயுர்வேதத்திற்கு முன்னுரிமை அளிக்கிறது. இந்தச் சமச்சீரற்ற நிலை, ஆராய்ச்சிக் கழகங்களுக்கான நிதிநிலை அறிக்கையில் அளிக்கப்படும் ஒதுக்கீடுகளில் தெளிவாகத் தெரிகிறது. இது "தேசிய" மரபுகள், "வட்டார" மரபுகள் ஆகியவற்றிற்கு ஒரு எதிர்நிலையை உருவாக்குகிறது. இது ஆராய்ச்சி முன்னுரிமைகளை மட்டும் திசைதிருப்பவில்லை. இது

---

[3] 'Parliamentary panel suggests Hindi, local languages as medium of instruction in technical, non–technical institutions' (*The Times of India* October 9, 2022) accessed January 27, 2026.

மருத்துவ பன்முகத்தன்மையைச் சிதைக்கிறது. கூட்டாட்சி நாட்டின் பன்முகத்தன்மைக்கு மாறாக, குறிப்பிட்ட வட்டாரங்களுடன் ஒருங்கிணைந்த, பண்பாட்டு அளவில் வேரூன்றிய மருத்துவ முறைகளை குறைத்து மதிப்பிடுகிறது.

பரிந்துரை 1

மாநில அதிகாரமான "சுகாதார" துறையில், ஒன்றிய நிதிஅளிப்புத் திட்டங்களை பின்வருமாறு சீரமைக்க வேண்டும்:

1. *80 விழுக்காடு உச்சவரம்பு*: ஒன்றிய அரசு தனது தலையீட்டை நியாயப்படுத்த, ஒரு திட்டத்தின் செலவில் குறைந்தது 80 விழுக்காட்டைத் தானே ஏற்க முன்வந்தால் மட்டுமே புதிய ஒன்றிய நிதிஅளிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

2. *வரையறுக்கப்படாத தொகுதி மானியங்கள்*: மற்ற அனைத்து உதவிகளுக்கும், ஒன்றிய அரசு வரையறுக்கப்படாத தொகுதி மானியங்களை (untied Block Grants) வழங்க வேண்டும்; இதன் வழியாக அந்தந்த மாநிலங்கள் தங்களின் உள்ளூர் நோய் சுமைகளைக் கருத்தில்கொண்டு திட்டங்களை வடிவமைக்க வழிவகை ஏற்படும்.

3. *திட்டங்களின் நெகிழ்வான "பட்டியல்"*: மாற்றாக, ஒரே மாதிரியான ஒரேதன்மை கொண்டுள்ள ஆணையைத் திணிப்பதற்குப் பதிலாக, பல்வேறு ஒன்றிய நிதிஅளிப்புத் திட்டங்களின் பட்டியலை ஒன்றிய அரசு வழங்க வேண்டும்; இதிலிருந்து மாநிலங்கள் தங்களின் வளர்ச்சி நிலைக்குப் பொருத்தமானத் திட்டங்களைத் தாங்களே தேர்ந்தெடுக்க அனுமதிக்க வேண்டும்.

பரிந்துரை 2

கூட்டுறவு கூட்டாட்சி முறையை நிலைநிறுத்தவும், சுகாதாரச் சேவைகள் மக்களைச் சென்றடைவதை உறுதி செய்யவும்:

1. மாநில அதிகார வரம்பிற்கு உட்பட்ட சுகாதாரத் துறையில் அத்துமீறித் தலையிடுவதை ஒன்றிய அரசு தவிர்க்க வேண்டும்.

2. மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில், ஒன்றிய அரசின் திட்டங்கள் இந்தி, ஆங்கிலம் ஆகியவற்றோடு அந்தந்த மாநில மொழிகளிலும் இணை–பெயர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. தேசிய மருத்துவ நிறுவனங்கள், நாடு தழுவிய பணியாளர் இடப்பெயர்வையும் உலகளாவிய போட்டித்தன்மையையும் பேண, கல்வி கற்பித்தல் முறைக்கும் நிருவாகத்திற்கும், ஆங்கிலத்தையே பொதுவான இணைப்பு மொழியாகத் தொடர்ந்து தக்கவைக்க வேண்டும்.

4. ஆயுஷ் அமைச்சகம் அனைத்து மருத்துவ முறைகளுக்கும் சமமான நிதி ஒதுக்கீட்டை உறுதிசெய்ய வேண்டும். ஆராய்ச்சி நிதி வழங்கலில் உள்ள வட்டார ஏற்றத்தாழ்வுகளைச் சரிசெய்ய வேண்டும்.

IV. புறக்கணிக்கப்பட்ட ஒன்றியக் கடமைகள்

பொருத்தமற்ற வகையில், அரசமைப்புச் சட்டப்படி மாநிலங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களில் ஒன்றிய அரசு தனது செல்வாக்கை விரிவுபடுத்தியுள்ளது. அதே வேளையில், தனக்கே உரிய தனித்த அல்லது முதன்மையான அதிகாரம் கொண்ட துறைகளில் ஒன்றிய அரசு தடுமாறி நிற்கின்றது. பின்வரும் எடுத்துக்காட்டுகள் இந்தச் சமச்சீரற்ற நிலையைத் தெள்ளத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

1. சர்வதேச தொற்றுநோய்க் காப்புத்தடை & துறைமுகச் சுகாதாரம் (ஒன்றியப் பட்டியல், இனம் 28) (International Quarantine & Port Health (Union List, Entry 28))

பன்னாட்டுப் பயணங்கள் வழியாகத் தொற்று நோய்கள் இந்தியாவிற்குள் நுழைவதைத் தடுக்கும் பொறுப்பு ஒன்றியத்திற்கு மட்டுமே உண்டு. கோவிட்–19 பெருந்தொற்றின் தொடக்க மாதங்களில் (ஜனவரி–மார்ச் 2020), விமான நிலையச் சோதனைகளும் காப்புத்தடை வழிமுறைகளும் (quarantine mechanisms) போதுமானதாக இல்லாததால், சர்வதேசப் பயணிகள் வழியாக வைரஸ் உள்ளே நுழைய அனுமதித்தது. ஆயினும், சமூகப் பரவல் தொடங்கியவுடன் அந்தத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான ஒட்டுமொத்த நிதி, நிருவாகச் சுமைகள், அதாவது ஊரடங்கு, மருத்துவமனைப் படுக்கைகள், ஆக்சிஜன் விநியோகம், தீவிர சிகிச்சைப் பிரிவு வசதிகள் மாநிலங்களின் மீதே விழுந்தன. இது ஒன்றிய அரசு அதிகாரத்திற்கும், மாநிலப் பொறுப்புக்கூறலுக்கும் இடையேயான இந்தச் சமச்சீரற்ற நிலையை அம்பலப்படுத்தியது.

2. மாநிலங்களுக்கு இடையேயான காப்புத்தடையும் பெருந்தொற்று ஒருங்கிணைப்பும் (ஒன்றியப் பட்டியல், இனம் 81) (Inter-State Quarantine and Pandemic Coordination (Union List, Entry 81))

மாநிலங்களுக்கு இடையேயான நோய் கட்டுப்பாட்டை நிர்வகிக்க அதிகாரம் கொண்டிருந்த போதிலும், கோவிட்-19 இரண்டாவது அலையின் போது (2021), ஒன்றிய அரசு தடுப்பூசி கொள்முதலை மாநிலங்களிடமே ஒப்படைத்தது; இதனால் மாநிலங்கள் உலகளாவிய சந்தைகளில் போட்டியிட வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டன. இந்திய உச்சநீதிமன்றம், *அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் (In Re: Distribution of Essential Supplies)*[4] தொடர்பான வழக்கில், இந்த ஏற்பாட்டை "தன்னிச்சையானதும் பகுத்தறிவற்றதும்" எனக் குறிப்பிட்டு, மீண்டும் மையப்படுத்தப்பட்ட கொள்முதல் முறைக்குத் திரும்பக் கட்டாயப்படுத்தியது.

3. அறிவியல் திறன் (ஒன்றியப் பட்டியல், இனம் 65/66) (Scientific Capacity (Union List, Entry 65/66))

சுகாதாரத்துறை ஆராய்ச்சி, மேம்பட்ட அறிவியல் ஆய்வகங்கள், தரநிலைகளை நிர்ணயித்தல் ஆகியவை முற்றிலும் ஒன்றிய அரசின் தனித்த அதிகார வரம்பிற்குள் வருகின்றன. ஆயினும், இந்தியா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.1 விழுக்காட்டிற்கும் குறைவாகவே சுகாதாரத்துறை ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் முதலீடு செய்கிறது. இது மற்ற கூட்டாட்சி நாடுகளை விட மிகவும் குறைவு. கோவிட்-19 பெருந்தொற்றின் தொடக்க மாதங்களில் வலுவான மரபணு வரிசைமுறையை (genomic sequencing) கண்டறியும் திறன் இல்லாததும், உருமாறிய வைரஸ்களைக் கண்காணிக்க 2020 டிசம்பரில் மட்டுமே உருவாக்கப்பட்ட 'இன்சாகாக்' *(INSACOG – Indian SARS-CoV-2 Genomics Consortium)* அமைப்பைத் தாமதமாக விரிவுபடுத்தியதும், ஒன்றிய அரசு பொறுப்பில் பல ஆண்டுகளாகச் செய்யப்பட்ட முதலீட்டுக் குறைபாட்டின் விளைவுகளே ஆகும்.

4. மருந்து ஒழுங்குமுறை & மருந்துப் பாதுகாப்பு (பொதுப் பட்டியல், இனம் 19) (Drug Regulation & Pharmaceutical Safety (Concurrent List, Entry 19))

மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (the Central Drugs Standard Control Organisation, CDSCO) வழியாக, மருந்துப் பாதுகாப்பு, ஏற்றுமதித்

---

[4] (2021) 7 SCC 772.

தரநிலைகள், மருத்துவத் தரம் ஆகியவற்றிற்கு ஒன்றியமே பொறுப்பு ஆகும். ஒழுங்குமுறைத் தோல்விகளால், குழந்தைகளுக்கான மாசுபட்ட இருமல் மருந்துகள் ஏற்றுமதி செய்யப்பட்டு, காம்பியா (Maiden Pharmaceuticals)), உஸ்பெகிஸ்தான் (Marion Biotech) ஆகிய நாடுகளில் குழந்தைகளின் மரணத்திற்கு வழிவகுத்தன. டைதிலீன் கிளைக்கால் (diethylene glycol) நச்சு கலந்திருப்பதை உலக சுகாதார நிறுவனத்தின் மருத்துவத் தயாரிப்பு எச்சரிக்கைகள் (எண் 6/2022 மற்றும் எண் 1/2023) உறுதிப்படுத்தின. சர்வதேச அளவில் கண்டனங்கள் எழுந்த பின்னரே உரிமங்கள் இரத்து செய்யப்பட்டன. இது முற்றிலும் ஒன்றிய அரசின் பொறுப்பிலுள்ள ஒரு துறையில், தடுப்பு நடவடிக்கைகளை விட, பாதிப்புக்கு பின் எடுக்கப்பட்ட (reactive) திருத்துகிற நிர்வாக ஒழுங்குமுறையையே காட்டுகிறது.

5. சுகாதாரத் துறை நிதி ஒதுக்கீட்டில் ஒன்றியத்தின் பின்வாங்கல்

பொது சுகாதாரச் செலவு என்பது மக்கள் உடல்நலன், பொருளாதார உற்பத்தித்திறன், சமூக சமத்துவத்தைத் தீர்மானிக்கும் ஓர் அடிப்படை காரணி ஆகும். மீண்டும் மீண்டும் கொள்கை அறிவிப்பு வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட போதிலும், இந்தியாவில் சுகாதாரத்திற்குப் பொதுச் செலவு தொடர்ந்து குறைவாகவே உள்ளது. அண்மைய தரவுகள், குறிப்பாக ஒன்றிய அரசின் சுகாதாரச் செலவுகள், அரசுகளுக்கிடையே நிதிப் பரிமாற்றங்களில் கவலையளிக்கும் நிதிப் போக்குகளை வெளிப்படுத்துகின்றன.[5]

தேசிய சுகாதாரக் கொள்கை (National Health Policy, NHP), 2017 அறிக்கை தெளிவான காலக்கெடுவுடன் கூடிய இலக்கை நிர்ணயித்தது: 2025க்குள் பொது சுகாதார மொத்த செலவை (ஒன்றிய அரசு + மாநிலங்கள்) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.5 விழுக்காடாக உயர்த்த வேண்டும்; அதில் ஒன்றிய அரசு 40 விழுக்காடு பங்களிக்க வேண்டும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 விழுக்காட்டிற்குச் சமம். இப்போது 2025–ஆம் ஆண்டு கடந்துவிட்ட போதிலும், இந்த இலக்கை எட்ட இன்னும் நீண்ட தூரம் உள்ளது. கடந்த பத்தாண்டுகளில் தனது சுகாதார நிதிநிலையை உயர்த்துவதில் ஒன்றிய அரசு தொடர்ந்து தோல்வியுற்றதே இதற்கு முதன்மையான காரணம். இப்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 0.29 விழுக்காடாக இருக்கும் ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை ஒதுக்கீடு, தேசிய சுகாதாரக் கொள்கை

---

[5] Indranil, 'Has health spending by the Centre increased?' (The Hindu January 30, 2026) accessed January 31, 2026.

அறிக்கையில், அதன் பங்காகக் கருதப்பட்ட இலக்கை எட்ட வேண்டுமானால் கூட, மூன்று மடங்குக்கும் மேலாக அதிகரிக்கப்பட வேண்டும்.

இந்திய ரிசர்வ் வங்கியின் தரவுகள், ஒன்றிய அரசிற்கும் மாநிலங்களுக்கு இடையேயான நிதியியல் நடைமுறையில் உள்ள தெளிவான வேறுபாட்டை வெளிப்படுத்துகின்றன. 2017–18 முதல், மாநிலங்கள், ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகள் சுகாதாரத்திற்கும் குடும்ப நலனுக்கும் செலவிடும் தொகை, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாச்சாரத்தில் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது; இது மாநில அளவிலான நிதிப் பொறுப்பை வெளிப்படுத்துகிறது. இதற்கு நேர்மாறாக, கோவிட்–19 பெருந்தொற்றின் போது ஒன்றிய அரசு தற்காலிகமாக சுகாதாரச் செலவை அதிகரித்த போதிலும், பெருந்தொற்றுக்குப் பிந்தைய காலத்தில், அதன் நிதி ஒதுக்கீடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையிலும் சரி, உண்மையான மதிப்பின் அடிப்படையிலும் சரி, சரிந்துள்ளன. 2020–21க்கும் 2025–26க்கும் இடையில், ஒன்றிய அரசின் சுகாதாரச் செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 0.37 விழுக்காட்டிலிருந்து 0.29 விழுக்காடாகக் குறைந்தது; மேலும் 2020–21க்கும் 2023–24க்கும் இடையில் உண்மையான மதிப்பில் சுமார் 22.5 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

இந்த பின்வாங்கல், குறிப்பாகத் தேசிய சுகாதார இயக்கத்தின் தரவுகளில் தெளிவாகத் தெரிகிறது. இதுவே மாநிலங்களுக்கான பொது சுகாதார நிதியின் முதுகெலும்பு ஆகும். ஒன்றிய அரசின் சுகாதாரச் செலவில் தேசிய சுகாதார இயக்கம், தொடர்புடைய திட்டங்கள் வழியாக மாநிலங்களுக்கு கொடுக்கப்படும் நிதியின் பங்கு 2014–15–இல் 75.9 விழுக்காடாக இருந்தது; இது 2024–25–இல் சுமார் 43 விழுக்காடாகக் கடுமையாகச் சரிந்துள்ளது. சேவை வழங்கும் பொறுப்பு மாநிலங்களிடம் இருக்கும்போதே, நிதி அதிகாரத்தை மையப்படுத்தும் போக்கை உணர்த்துகிறது. இதன் விளைவாக, ஒன்றிய அரசின் கொள்கைக் கட்டுப்பாட்டிற்கும் மாநிலங்களின் நிதிச் சுமைக்கும் இடையே வளர்ந்து வரும் முரண்பாடு, கூட்டுறவு கூட்டாட்சி முறையை நலிவடையச் செய்கிறது.

சுகாதார மற்றும் கல்வி மேல்வரி (Health and Education Cess, 2018–19) அறிமுகப்படுத்தப்பட்டதன் நோக்கம் இந்தத் துறைகளுக்கான செலவை அதிகரிப்பது ஆகும். 2023–24–இல், இம்மேல்வரி வழியாக சுமார் 71,180 கோடி ரூபாய் வசூலானது; அதில் ஏறத்தாழ 17,795 கோடி ரூபாய் சுகாதாரத் துறைக்கானது. ஆயினும், இந்த நிதி வரவு, ஒன்றிய அரசின் சுகாதாரத் துறைக்கான நிதிநிலை அறிக்கையில் அதற்கேற்ற உயர்வாக மாற்றப்படவில்லை; இது மேல்வரி வருவாய் சுகாதாரச் செலவினத்திற்கான

உண்மையான கூடுதல் நிதியாகச் செலவழிக்கப்படாமல், பெரும்பாலும் பொது நிதியிலேயே கரைந்துவிடுவதைக் காட்டுகிறது.

ஒட்டுமொத்த நிதித்தரவுகளும், சுகாதார அமைப்பு தொடர்ந்து நிதிப் பற்றாக்குறையிலேயே உள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றன. ஒன்றிய அரசின் குறைந்துவரும் நிதிப் பங்களிப்பை சரிகட்ட மாநிலங்கள் மட்டுமே தங்களால் இயன்றவரை ஓரளவுக்கு ஈடுகட்டுகின்றன. மாநிலங்களை ஒப்பிட்டு நோக்கும்போது, இந்தியாவின் முதலீட்டுப் பற்றாக்குறை இன்னும் அப்பட்டமாகத் தெரிகிறது: பூட்டான் அரசு சுகாதாரத் துறையில் தனிநபர் ஒருவருக்கு செலவில் இந்தியாவைவிட சுமார் 2.5 மடங்கு அதிகமாகச் செலவிடுகிறது. மேலும் இலங்கை சிறிய பொருளாதாரத்தைக் கொண்டிருந்த போதிலும், இந்தியாவைவிட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமாகச் செலவிடுகிறது.

V. கூட்டாட்சி முறைகளை ஒப்பிட்டு நோக்கும்போது கிடைக்கும் படிப்பினைகள்

வளர்ந்த கூட்டாட்சி நாடுகளில், சுகாதாரச் சேவை வழங்கலும் மருத்துவக் கல்வியும் பொதுவாக அரசாங்கத்தின் ஒரே நிலையிலேயே அமைகின்றன. மருத்துவமனைகளையும் சுகாதார அமைப்புகளையும் இயக்கும் அந்த அடுக்குநிலையே மருத்துவக் கல்வி, உரிமம் வழங்குதல், பணியாளர் நியமனம் ஆகியவற்றையும் நிர்வகிக்கிறது. இந்த இணக்கம், பயிற்சி அளிப்பு அந்தந்த வட்டார நோய் சுமைகளைக் கருத்தில்கொள்வதையும், மருத்துவப் பயிற்சிகள் சேவை வழங்கலை வலுப்படுத்துவதையும், அரசியல் பொறுப்புக்கூறல் நிருவாக அதிகாரத்துடன் ஒத்துப்போவதையும் உறுதிசெய்கிறது. தேச அரசாங்கங்கள் ஆராய்ச்சிகளுக்கு நிதி வழங்கலாம், காப்பீடுகளை ஒருங்கிணைக்கலாம், பரந்த தரநிலைகளை வகுக்கலாம். ஆனால் அவை மாநிலங்களின் மருத்துவ நிறுவனங்களில் சேர்க்கையையோ அல்லது மருத்துவக் கல்லூரிகளின் செயல்பாட்டு ஆளுகையையோ ஒருபோதும் கைப்பற்றுவதில்லை.

அமெரிக்கா

அமெரிக்காவில், சுகாதாரத் துறை என்பது பெருமளவில் மாநிலத்தின் அதிகாரம் (State police power) ஆகும். மாநில மருத்துவ வாரியங்கள் மருத்துவர்களுக்கு உரிமம் வழங்குகின்றன; மாநிலப் பல்கலைக்கழகங்கள், தனியார் பல்கலைக்கழகங்கள், இலாப நோக்கற்ற நிறுவனங்கள் ஆகியவை மருத்துவக் கல்லூரிகளை நடத்துகின்றன.

சில மாநிலங்கள், மாகானங்கள் (counties) சுகாதாரத் துறைகள், ஆய்வகங்கள், நோய்த்தொற்றுத் தடம் அறிதல், தடுப்பூசி முகாம்கள் ஆகியவற்றை இயக்குகின்றன. கூட்டாட்சி அரசு *மெடிகேர் (Medicare)* வழியாகப் இளநிலை மருத்துவக் கல்விக்கு (Graduate Medical Education) மானியம் வழங்குகிறது; தேசிய சுகாதார நிறுவனங்கள் (National Institutes of Health), நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் (Disease Control and Prevention) ஆகியவை வழியாக ஆராய்ச்சியையும் தேசிய கண்காணிப்பையும் ஒருங்கிணைக்கிறது; ஆனால் மருத்துவ மாணவர் சேர்க்கையைக் கட்டுப்படுத்துவதோ அல்லது மருத்துவக் கல்லூரிகளை நிர்வகிப்பதோ இல்லை.

கனடா

கனடாவும் இதே முறையை பின்பற்றுகிறது. மாகாணங்கள் (Provinces) மருத்துவமனைகளையும் மருத்துவக் கல்லூரி சேர்க்கை, மருத்துவப் பயிற்சிகள் உள்ளிட்ட கல்வியையும் கட்டுப்படுத்துகின்றன; மாகாணங்களின் தொழில்முறை அமைப்புகள் வழியாகத் தொழில்முறை உரிமம் வழங்குகின்றன. கூட்டாட்சி அரசு நிதிப் பரிமாற்றங்கள் வழியாக தேசிய தரவுநிலைகளையும், *கனடா சுகாதாரச் சட்டத்தின் (the Canada Health Act, 1984)* வழியாக தேசிய அளவுகோல்களையும் நிறுவுவதில் செல்வாக்கு செலுத்துகிறது; (பூர்வீகக் குடிகள் போன்ற சில) நேரடி சேவைகள் வழங்குவதை மேற்கொள்கிறது. ஆனால் மாகாண மருத்துவக் கல்லூரிகளை நடத்துவதோ அல்லது மாணவர் சேர்க்கையைத் தீர்மானிப்பதோ இல்லை. பணியாளர் திட்டமிடல், பயிற்சித் திறன் ஆகியவை மாகாண அளவில் பொறுப்புகளாக உள்ளன.

ஆஸ்திரேலியா

மாநிலங்களும் ஆட்சிநிலப் பகுதிகளும் (States and Territories) பொது மருத்துவமனைகளைச் சொந்தமாகக் கொண்டு இயக்குகின்றன; மேலும் தங்கள் பல்கலைக்கழகங்கள் வழியாக மருத்துவப் பயிற்சிகளை நிர்வகிக்கின்றன. பயிற்சி மருத்துவர்கள், கிராமப்புறப் பணி நியமனங்கள் உள்ளிட்ட பணியாளர் நியமனங்கள் ஆகியன பெரும்பாலும் மாநிலங்கள் அளவிலேயே உள்ளது. காமன்வெல்த் (கூட்டாட்சி அரசு) *மெடிகேர் (Medicare)*, முதியோர் பராமரிப்பு ஆகியவற்றிக்கு நிதி அளிக்கிறது. மேலும் முதுநிலைப் பயிற்சிக்கு மானியங்கள் வழங்குகிறது. ஆனால் மருத்துவக் கல்லூரிகளை நடத்துவதோ அல்லது மருத்துவமனை அமைப்புகளை நிர்வகிப்பதோ இல்லை. இதனால் செயல்பாட்டுக் கட்டுப்பாடும் அரசியல் பொறுப்புக்கூறலும் மாநில அளவிலேயே இணைந்துள்ளன.

ஜெர்மனி

ஜெர்மனி மருத்துவமனைகள், பல்கலைக்கழக மருத்துவப் புலங்கள், சுகாதார உள்கட்டமைப்பு ஆகியவை தொடர்பான பொறுப்பை *மாநிலங்களிடம்* (*Länder*) ஒப்படைத்துள்ளது. சட்டமுறையிலான சுகாதார காப்பீடு முதலான சில ஏற்பளிக்கும் கட்டமைப்புகளைக் கூட்டாட்சிச் சட்டம் ஒழுங்குபடுத்துகிறது. ஆனால் இளநிலை மருத்துவச் சேர்க்கையையோ அல்லது பாடத்திட்டத்தையோ கட்டுப்படுத்துவதில்லை. அதிகத் தேவை உள்ள படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை என்பது மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பந்தம் வழியாக உருவாக்கப்பட்ட நடுவண் பல்கலைக்கழக நிருவாக அறக்கட்டளை *(Stiftung fur Hochschulzulassung)* வழியாக நிர்வகிக்கப்படுகிறது. இந்த அறக்கட்டளை செங்குத்தான கூட்டாட்சி முறையில் அல்லாமல், கிடைமட்டக் கூட்டாட்சி முறையில் (horizontal federalism) மாநிலங்களுக்கு இடையேயான உடன்பாடு வழியாக உருவாக்கப்பட்டது. எனவே மாநிலங்கள் கல்வி, சேவை வழங்கல் ஆகிய இரண்டின் மீதும் கட்டுப்பாட்டைத் தக்கவைத்துக் கொண்டுள்ளன.

பிரேசில்

பிரேசில் ஒருங்கிணைந்த சுகாதார அமைப்பு (*Sistema Único de Saúde* – SUS) என்கிற முறைமை வழியாக, தொடக்கநிலை சுகாதாரப் பராமரிப்பை நகராட்சிகள் வழங்குவதையும்; வட்டார அளவிலான நிர்வாக அமைப்புகளை மாநிலங்கள் ஒருங்கிணைப்பதையும்; தரநிலைகள், தொழில்நுட்பம், ஆராய்ச்சி ஆகியவற்றுக்கான நிதியை ஒன்றியம் வழங்குவதையும் உறுதிசெய்து அதிகாரப் பரவலாக்கத்தை நிறுவனமயமாக்கியுள்ளது. ஒற்றை, செங்குத்தாக மையப்படுத்தப்பட்ட நுழைவாயில் முழு செயல்முறையையும் கட்டுப்படுத்தாமல், வெவ்வேறு நிலைகளில் கல்வி நிறுவனங்களையும் மாணவர் சேர்க்கை செயல்முறைகளையும் இயக்க அனுமதிப்பதன் வழியாக, உள்ளூர் சேவை முன்னுரிமைகளுக்கும் பயிற்சிக்கும் இடையிலான தொடர்பு பாதுகாக்கப்படுகிறது.

இந்தியாவினுடைய தலைகீழ் மாற்றம்

இந்த ஒப்பீட்டு முறைகளிலிருந்து மாறுபட்ட வழியில் இந்தியா விலகிச் செல்கிறது. பொறுப்புகளும் விளைவுகளும் குறித்த கட்டமைப்பு அளவிலான தலைகீழ் மாற்றத்தைக் (structural inversion) கண்டுகொண்டுள்ளது. சுகாதாரத் துறையில் அதிகார மையப்படுத்தல் – ஒருமுகமான தரநிலைகள், வட்டார ஏற்றத்தாழ்வுகளைச் சரிசெய்தல்

என்கிற பெயரில் நியாயப்படுத்தப்பட்டு, அதிகாரக் குவிப்பு நடைபெறுகிறது. இந்த அதிகாரக் குவிப்பு சிறந்த விளைவுகளைத் தந்திருந்தால் மட்டுமே ஏற்புடையதாக இருந்திருக்கும். ஆயினும், இதற்கு மாறாக வீழ்ச்சியடைந்து வருகின்றது என்பதை ஆதாரம் சுட்டிக்காட்டுகிறது. (VI–ஆம் பகுதியைக் காண்க).

பரிந்துரை 3

1. மருத்துவக் கல்வியை, பொது சுகாதாரச் சேவையை வழங்கும் அதே அதிகார அடுக்குடன் இணைத்துள்ள அனைத்து வளர்ந்த கூட்டாட்சி நாடுகளைப் போலவே, அரசமைப்புச் சட்டத்தின் பொதுப் பட்டியலில் உள்ள இனம் 25லிருந்து, "ஒன்றியப் பட்டியல் இனம் 63, 64, 65, 66 ஆகியவற்றுக்கு உட்பட்டு, தொழில்நுட்பக் கல்வி, மருத்துவக் கல்வி, பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட கல்வி" என்ற அதிகாரத்தை மீண்டும் மாநிலப் பட்டியலின் இனம் 11க்கு மாற்றும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்; இதன் வழியாக 1976க்கு முந்தைய நிலையை மீட்டெடுக்க வேண்டும்.

2. ஒன்றியப் பட்டியல் இனம் 66–இன் கீழ் ஒன்றிய அரசின் பங்கு, மாநிலங்கள் சுயாட்சியிலும் மாநிலப் பல்கலைக்கழகங்களின் நிருவாகச் சுயாட்சியிலும் அத்துமீறித் தலையிடாமல், பரந்த நோக்கிலான குறைந்த அளவு தரநிலைகளை நிர்ணயிப்பதற்கும் மேம்பட்ட ஆராய்ச்சிக்கு நிதி வழங்குவதற்கும் மட்டுமே கடும் கண்டிப்போடு மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

VI. உலகளாவிய அளவுகோல்கள்[6]

சுகாதாரத் துறையில் இந்தியாவின் மந்தமான செயல்பாட்டிற்குத் தீராத நிதிப் பற்றாக்குறையும் திறன் குறைபாடுகளுமே மூலக்காரணம் ஆகும்; இவற்றை எந்தவிதமான மையப்படுத்தலாலோ அல்லது ஒழுங்குமுறையாலோ தீர்க்க முடியாது. பின்வரும் முக்கியமான புள்ளிவிவரங்கள் இந்தச் சிக்கலை விளக்குகின்றன:

1. **மருத்துவர்–மக்கள்தொகை விகிதம்**: 1,000 பேருக்கு ஒரு மருத்துவர் இருக்க வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம்

[6] Data in this sub–section were gathered from a variety of sources listed in the References (Sl. No. 12).

பரிந்துரைக்கிறது. இந்தியா அதிகாரப்பூர்வமாக 1,000 பேருக்கு 1.2 மருத்துவர்கள் இருப்பதாகக் கூறுகிறது. ஆனால் இதில் ஆயுஷ் (ஆயுர்வேதம், யோகா, யுனானி, சித்தா, ஹோமியோபதி) மருத்துவர்களும் அடங்குவர். உலகளாவிய ஒப்பீட்டிற்கான அளவுகோலான எம்பிபிஎஸ் மருத்துவர்களை மட்டும் கணக்கிட்டால், இந்தியாவின் விகிதம் 1,000 பேருக்கு 0.7 – 0.9 மட்டுமே. கூட்டாட்சி நாடுகளும் பிரிக்ஸ் அமைப்பு நாடுகளும் (BRICS) மிகச் சிறப்பாகச் செயல்படுகின்றனர்: அமெரிக்கா (2.7), கனடா (2.9), ஆஸ்திரேலியா (4.2), ஜெர்மனி (4.6), பிரேசில் (2.5), சீனா (2.8).

2. **செவிலியர்–மக்கள்தொகை விகிதம்**: 1,000 பேருக்கு 3 செவிலியர்கள் (ஒவ்வொரு மருத்துவருக்கும் 3 செவிலியர்கள்) என்பது உலக சுகாதார நிறுவனத்தின் நெறிமுறை. இந்தியாவின் விகிதம் 2.1. மற்ற நாடுகளின் புள்ளிவிவரங்கள்: அமெரிக்கா (12.4), கனடா (11.6), ஆஸ்திரேலியா (13.5), ஜெர்மனி (12.1), பிரேசில் (5.8), சீனா (4.0).

3. **மருத்துவமனைப் படுக்கைகள்**: இந்தியாவில் சராசரியாக 1,000 பேருக்கு 1.6 படுக்கைகள் உள்ளன. ஆனால் அரசு மருத்துவமனைகளில் 0.5 மட்டுமே (31.3 விழுக்காடு). மற்ற நாடுகளின் 1,000 பேருக்கு மருத்துவமனைப் படுக்கைகளும் அதில் அரசின் பங்கும்: அமெரிக்கா (2.7, 21 விழுக்காடு), கனடா (2.5, 99 விழுக்காடு), ஆஸ்திரேலியா (3.8, 66 விழுக்காடு), ஜெர்மனி (7.5, 48 விழுக்காடு), பிரேசில் (2.5, 40 விழுக்காடு), சீனா (5.6, 72 விழுக்காடு).

4. **தீவிர சிகிச்சைப் பிரிவு (ICU) படுக்கைகள்**: படுக்கைகளின் எண்ணிக்கை மட்டுமே தவறாக வழிநடத்தலாம். 1,00,000 மக்கள்தொகைக்கு தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகளின் எண்ணிக்கை: இந்தியா (2.3), அமெரிக்கா (34.7), கனடா (12.5), ஆஸ்திரேலியா (8.2), ஜெர்மனி (29.2), பிரேசில் (25.0), சீனா (3.6).

5. **சுகாதாரத் துறைச் செலவுகள்**: இந்தியா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 3.8 விழுக்காட்டை மொத்த சுகாதாரச் செலவிற்காகவும் (பொதுத்துறை + தனியார்), 1.8–1.9 விழுக்காட்டை பொதுச் செலவிற்காகவும் (அரசு மட்டும்) செலவிடுகிறது. ஒப்பீட்டு புள்ளிவிவரங்கள்: அமெரிக்கா (16.5 விழுக்காடு, 9.0 விழுக்காடு), கனடா (11.2 விழுக்காடு, 7.9 விழுக்காடு), ஆஸ்திரேலியா (9.9 விழுக்காடு, 7.7 விழுக்காடு),

ஜெர்மனி (11.8 விழுக்காடு, 9.3 விழுக்காடு), பிரேசில் (9.1 விழுக்காடு, 4.3 விழுக்காடு), சீனா (5.4 விழுக்காடு, 3.4 விழுக்காடு).

6. **நேரடிச் செலவுகள் (Out–of–pocket Expenditure):** இது தனிநபர்கள் மருத்துவச் சேவைகளுக்காகத் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து நேரடியாகச் செய்யும் செலவைக் குறிக்கிறது; இது நடப்பு சுகாதாரச் செலவின் (current health expenditure) விழுக்காடாகக் கணக்கிடப்படுகிறது. ஒரு நாட்டில் சுகாதாரத்திற்கான அரசு வழங்கும் தனிநபர் செலவு (domestic government expenditure per capita) குறைவாக இருக்கும் இடமெல்லாம், மக்களின் சொந்தப் பணத்திலிருந்து செலவிடப்படும் இத்தகைய நேரடி மருத்துவச் செலவு அதிகமாக இருக்கும். உலகளாவிய சராசரி 17.3 விழுக்காடாக இருக்க, இந்தியாவின் புள்ளிவிவரம் மிக அதிகமாக 43.9 விழுக்காடாக உள்ளது. மற்ற நாடுகளின் விவரங்கள் பின்வருமாறு: அமெரிக்கா (10.9 விழுக்காடு), கனடா (15.3 விழுக்காடு), ஆஸ்திரேலியா (15.9 விழுக்காடு), ஜெர்மனி (10.7 விழுக்காடு), பிரேசில் (26.2 விழுக்காடு), சீனா (32.2 விழுக்காடு).

7. **தி லான்செட் சுகாதார அணுகல் மற்றும் தரக் குறியீடு (The Lancet Healthcare Access and Quality (HAQ) Index)** : இது உலகளாவிய நோய் சுமைகள் *2016* (*Global Burden of Disease* 2016) ஆய்வின் வழியாக தயாரிக்கப்பட்டது. நோயாளிகளுக்கு மிகவும் முக்கியமானதை பதிவு செய்கிறது: ஒருவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனால், அந்த சுகாதார அமைப்பு அவரைக் காப்பாற்றும் தரத்தைக் கொண்டுள்ளதா? இந்த "தவிர்க்கக்கூடிய இறப்பு" (amenable mortality) அளவீட்டில், உலகளவில் 195 நாடுகளில் இந்தியா 145வது இடத்தைப் பிடித்துள்ளது; அதே சமயம் அமெரிக்கா (29), கனடா (14), ஆஸ்திரேலியா (5), ஜெர்மனி (18), பிரேசில் (96), சீனா (48) போன்ற நாடுகள் மிக உயர்ந்த இடத்தில் உள்ளன. இந்தியா தனது அண்டை நாடுகளான இலங்கை (71), வங்காளதேசத்தை (133) விடவும் பின்தங்கியுள்ளது. இந்தியா "மருத்துவச் சுற்றுலா" (medical tourism)வுக்கான குறைந்த செலவிலான, உயர்தர மூன்றாம் நிலை சுகாதாரச் சேவையைப் பெருமையாகக் கொண்டிருக்கின்றது. ஆயினும், அடிப்படை ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை மருத்துவ சேவைகளின் தரம் தேசிய அளவிலான முடிவுகளைக் குறைக்கும் அளவிற்குப் பலவீனமாகவே உள்ளது.

8. **நிலைத்த மேம்பாட்டு வளர்ச்சி இலக்குகள் குறியீடு (Sustainable Development Goals (SDG) Index):** *நிலைத்த மேம்பாட்டு வளர்ச்சி அறிக்கை 2025*, ஐக்கிய நாடுகள் சபையின் 2030 இலக்குகளை நோக்கி (இலக்கு 3: "சிறந்த ஆரோக்கியமான நல்வாழ்வு") அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கண்காணிக்கிறது. 167 நாடுகளில் இந்தியா 99வது இடத்தில் உள்ளது. அதே சமயம் அமெரிக்கா (44), கனடா (25), ஆஸ்திரேலியா (36), ஜெர்மனி (4), பிரேசில் (54), சீனா (49) ஆகியவை இந்தியாவை விட வெகுதொலைவில் முன்னணியில் உள்ளன.

9. **கியூஎஸ் உலக பல்கலைக்கழக தரவரிசை 2025 (மருத்துவத் துறை) (QS World University Rankings 2025 (Subject–Medicine)):** இந்தத் தரவரிசையில் முதல் 200 இடங்களுக்குள் எந்த இந்தியப் பல்கலைக்கழகமும் இடம்பெறவில்லை. அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம், புது தில்லி (All India Institute of Medical Sciences, AIIMS), மணிப்பால் உயர்கல்வி கழகம், மணிப்பால், கர்நாடகா ஆகிய இரண்டு மருத்துவ நிறுவனங்கள் மட்டுமே உலகளாவிய சிறந்த 300 தரவரிசையில் – முறையே 226, 293வது இடங்களைப் பிடித்துள்ளன. டெல்லி பல்கலைக்கழகம் 362வது இடத்தைப் பிடித்துள்ள நிலையில், சண்டிகரில் உள்ள முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் 401–450 என்ற தரவரிசைப் பிரிவில் இடம்பெற்றுள்ளது. இதற்கு மாறாக, முதல் 200 தரவரிசைகளில் அமெரிக்காவில் 49 மருத்துவ நிறுவனங்களும், கனடாவில் 9, ஆஸ்திரேலியாவில் 9, ஜெர்மனியில் 13, பிரேசிலில் 2, சீனாவில் 11 மருத்துவ நிறுவனங்களும் இடம்பிடித்துள்ளன.

10. **நியூஸ்வீக் & ஸ்டாடிஸ்டா "உலகின் சிறந்த மருத்துவமனைகள் 2025" (Newsweek & Statista "World's Best Hospitals 2025"):** இந்தச் சர்வதேச தரவரிசை 30 நாடுகளில் உள்ள மூன்றாம் நிலை மருத்துவமனைகளை சக மருத்துவ நிபுணர்களின் பரிந்துரைகள் (மருத்துவர்கள் பிற மருத்துவர்களைத் தரவரிசைப்படுத்துதல்), நோயாளி அனுபவம், மருத்துவ முக்கியச் செயல்பாட்டு குறிகாட்டிகள் (Key Performance Indicators, KPIs) ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பிடுகிறது. உலகளாவிய முதல் 250 தரவரிசையில் மூன்று இந்திய மருத்துவமனைகள் மட்டுமே நுழைந்துள்ளன: எய்ம்ஸ் புது தில்லி (97), மேதாந்தா குருகிராம் (146), பிஜிஐஎம்ஐஆர் சண்டிகர் (228). வேலூர் கிறித்தவ மருத்துவக் கல்லூரி, சென்னை அப்போலோ போன்ற

மருத்துவமனைகள் கூட தரவரிசையில் முதல் 250 என்ற இடத்தை எட்டிப் பிடிக்கவில்லை. இது இந்தியாவின் சிறந்த மருத்துவமனைகளுக்கும் உலகின் மேல்தட்டு மருத்துவமனைகளுக்கும் இடையே உள்ள இடைவெளியை வெளிப்படுத்துகிறது.

பரிந்துரை 4

வெற்றிகரமான கூட்டாட்சி நாடுகள் நலிவடைந்த மாநிலங்களை ஈடுசெய்ய மையப்படுத்தல் செய்வதில்லை; அவை மாநிலங்களை வலுப்படுத்த முதலீடு செய்கின்றன.

1. மாநில சுகாதாரச் சேவை வழங்கல் அமைப்புகளுக்கு ஒன்றிய நிதியுதவியை அதிகரித்தல். கூட்டாட்சி நாடுகளை ஒப்பிட்டு நோக்கும்போது, மாநில அரசாங்கங்கள் சேவை வழங்குகிற வேளையில், தேச அரசாங்கம் நிதி அளிக்கிறது. அண்மை நாடுகளும் உலகளாவிய நெறிமுறைகளும் வழக்கமான தரப்படுத்தல் குறைபாடுகளை வெளிப்படுத்தி, நடப்புப் போக்கை சரிசெய்ய வழிகாட்டும்.
2. இந்தியாவின் நிதி பற்றாக்குறைகள் கடுமையாகவும், அரசமைப்புச் சட்ட அதிகாரம் ஏற்கனவே உள்ள இடங்களிலும், அதாவது ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, அறிவியல் ஆய்வகங்கள், மரபியல், கண்காணிப்பு, எல்லை சுகாதாரம் ஆகிய ஒன்றிய அரசின் களங்களில் அதிக முதலீடு செய்ய வேண்டும்.

VII. தேசிய மருத்துவ ஆணையம்: சீர்திருத்தம் என்ற போர்வையில் மையப்படுத்தல்

தேசிய மருத்துவ ஆணையச் சட்டம், 2019 (*National Medical Commission (NMC) Act,* 2019) இயற்றப்பட்டபோது, அது இந்திய மருத்துவக் கல்வியையும் தொழில்முறை நடைமுறைகளையும் நவீனப்படுத்தும் "வரலாற்றுச் சிறப்புமிக்க சீர்திருத்தம்" என்று கொண்டாடப்பட்டது. இதன் முக்கிய நோக்கம், இந்திய மருத்துவக் கழகம் (Medical Council of India, MCI) அமைப்பைக் கலைப்பது ஆகும். இந்திய மருத்துவக் கழகத்தின் நம்பகத்தன்மை, அதில் நிலவிய அதிகார மோதல்கள், வெளிப்படையற்ற ஆய்வு நடைமுறைகள், ஊழல்கள் ஆகியவை காரணமாகச் சிதைந்திருந்தது. இவை நாடாளுமன்ற நிலைக்குழுவின்

தொன்னூற்று இரண்டாவது அறிக்கையில் (2016) (Parliamentary Standing Committee's Ninety-second Report (2016)) விரிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. சிலர் இந்த அறிக்கையை விவாதத்திற்கு உள்ளாக்கினர்.

ஆயினும், தொழில்ஒழுங்குமுறை அமைப்பின் சீர்கேட்டைச் சரிசெய்ய முயன்றபோது, நாடாளுமன்றம் கூட்டாட்சி முறையின் சமநிலையின்மை என்கிற மற்றொரு பாதிப்பை அறிமுகப்படுத்தியது.

இந்திய மருத்துவக் கழகத்திற்கு (MCI) மாற்றாக புதிய அமைப்பைக் கொண்டு வந்ததன் வழியாக, நாடாளுமன்றம் குறைபாடுடைய, ஆனால் பங்கேற்புத் தன்மை கொண்ட ஒழுங்குமுறை அமைப்பிற்குப் பதிலாக, மிகக் கடுமையான மையப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப அதிகார வர்க்கத்தை (technocracy) அமர்த்தியுள்ளது; இது மருத்துவக் கல்வியில் ஒன்றிய–மாநில உறவுகளை அடிப்படையிலேயே மறுசீரமைத்துள்ளது. இதன் விளைவாக உருவான அமைப்பில், ஒழுங்குமுறை அதிகாரம் ஒன்றிய அளவிலேயே குவிக்கப்பட்டுள்ளது; அதே வேளையில் மருத்துவக் கல்லூரிகளையும் நல்வாழ்வு அமைப்புகளையும் நிதி அளித்து, பணியமர்த்தி, இயக்கி வரும் மாநிலங்கள் சாதாரணத் துணைப் பங்குதாரர்களாகக் குறைந்துவிட்டன.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித்துவ முறையிலிருந்து நியமிக்கப்பட்டக் கட்டுப்பாடு முறை வரை

1956–ஆம் ஆண்டு சட்டத்தால் நிர்வகிக்கப்பட்ட இந்திய மருத்துவக் கழகம், தொழில்முறைச் சுயாட்சி எனும் கொள்கையின்படி, மாநில மருத்துவக் கழகங்களுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் நேரடியான, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித்துவத்தை வழங்கியது. ஆனால் 2019–ஆம் ஆண்டு தேசிய மருத்துவ ஆணையச் சட்டம், "தேர்ந்தெடுக்கப்பட்ட" ஒழுங்குமுறை அமைப்பை "தேர்ந்தெடுக்கப்பட்டக் குழுவினரால் நியமிக்கப்படும்" அமைப்பாக மாற்றியுள்ளது. தேசிய மருத்துவ ஆணையம் என்பது ஒன்றிய அரசால் நியமிக்கப்படும் 33 உறுப்பினர்களைக் கொண்ட சிறு அமைப்பு ஆகும். தலைவர், (தன்னாட்சி வாரியங்களின் தலைவர்கள் உட்பட) பத்து அலுவல் வழி உறுப்பினர்கள், மூன்று நிபுணத்துவ உறுப்பினர்கள் ஒன்றியக் கட்டுப்பாட்டில் உள்ள செயல்முறை வழியாக நியமிக்கப்படுகிறார்கள். கூட்டாட்சி முறையின் பிரதிநிதித்துவத்தை வெளிப்படுத்துவதற்காக மீதமுள்ள இருபத்திரண்டு "பகுதி நேர" உறுப்பினர்கள், மாநிலங்களிலிருந்தும் மாநில மருத்துவக் கழகங்களிலிருந்தும் *சுழற்சி முறையில்* குலுக்கல் வழியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதே நேரத்தில், ஒன்றியம் தனது நிரந்தரமான, மாற்ற முடியாத வாக்குரிமையைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

கூட்டாட்சி முறையின் பார்வையில், தேசிய மருத்துவ ஆணையத்தின் மிகப்பெரிய பலவீனம் என்பது மாநிலப் பங்கேற்பை உரிய வகையில் கையாளுவதில்தான் உள்ளது. இந்திய மருத்துவக் கழகத்தில் இருந்த குறைகளுக்கு இடையிலும், மாநில மருத்துவக் கழகங்கள், பல்கலைக்கழகங்கள் வழியாக மாநிலங்கள் நிலையான தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருந்தன. அந்தப் பிரதிநிதித்துவம் சுகாதார முறையின் கூட்டாட்சி முறை அமைப்பிலிருந்து இயல்பாக உருவானது. மருத்துவப் பதிவேட்டைப் பராமரிக்கும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தேசிய ஒழுங்குமுறை அமைப்பில் தொடர்ச்சியான உரிமைக்குரலாக இருந்தது.

இதற்கு நேர்மாறாக, பகுதி நேர உறுப்பினர்களுக்கான சுழற்சி முறை பிரதிநிதித்துவம், எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் கணிசமான எண்ணிக்கையிலான மாநிலங்களுக்கு இந்த உச்ச அதிகார அமைப்பில் வாக்குரிமை இல்லாத நிலையை உறுதிசெய்கிறது. உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, கர்நாடகா அல்லது தெலுங்கானா போன்ற முக்கிய மருத்துவ மையங்கள் பல ஆண்டுகளாக முடிவெடுக்கும் அதிகாரத்திலிருந்து விலக்கி வைக்கப்படலாம்; அதே வேளையில் ஒப்பீட்டளவில் குறைந்த மருத்துவ உள்கட்டமைப்பைக் கொண்ட மாநிலங்களின் பிரதிநிதிகளால் ஒழுங்குமுறை அதிகாரம் செலுத்தப்படலாம். இதன் வழியாக மாநிலங்கள் ஆட்சி செலுத்துவதில் இணைப் பங்கேற்பாளர்களாக இருப்பதை மாற்றி, மத்திய ஒழுங்கமைப்பின்கீழ் அவ்வப்போது ஆலோசிக்கப்படும் அமைப்புகளாக மாற்றப்படுகின்றன.

இந்த ஏற்பாட்டின் பலவீனம் 2024–25 ஆட்சி நெருக்கடியின் போது அப்பட்டமாக வெளிப்பட்டது. குலுக்கல் முறையை நடத்துவதில் ஏற்பட்ட அதிகாரத்துவத் தாமதங்களால், தேசிய மருத்துவ ஆணையம் ஏழு மாதங்கள் எந்தவித மாநிலப் பிரதிநிதித்துவமும் இன்றிச் செயல்பட்டது; கிட்டத்தட்ட பத்து மாதங்களுக்கு கடுமையான பிரதிநிதித்துவக் குறைபாட்டுடனும் இயங்கியது. கூட்டாட்சி முறையில், மாநிலப் பங்கேற்பு என்பது நிலையான கட்டமைப்பாக இருக்க வேண்டுமே தவிர, அது ஒன்றிய அரசு நிர்வாகத்தின் திறமையைப் பொறுத்து அமையும் நிருவாக மாறியாக (administrative variable) இருக்கக்கூடாது.

வாக்குரிமை இல்லாத குரல்

ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையே ஒருங்கிணைப்பை எளிதாக்குவதற்காக அனைத்து மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தையும் ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளின் (யூனியன் பிரதேசங்களின்) பிரதிநிதித்துவத்தையும் கொண்ட *'மருத்துவ ஆலோசனைக் குழுவை'*

(Medical Advisory Council – MAC) தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் நிறுவியது. ஆனால், சட்டப் பிரிவுகள் 11–13 தெளிவுபடுத்துவது போல, அதன் பங்கு முற்றிலும் ஆலோசனைகளை வழங்குவது மட்டுமே. இக்குழு தனது கவலைகளைத் தெரிவிக்கலாம்; ஆனால் அந்தப் பரிந்துரைகளை ஏற்க வேண்டிய கட்டாயமோ அல்லது அவற்றை நிராகரிப்பதற்கானக் காரணத்தை விளக்க வேண்டியத் தேவையோ தேசிய மருத்துவ ஆணையத்திற்கு இல்லை. இவ்வாறு *குரல்* கொடுக்கும் அதிகாரத்தை (மருத்துவ ஆலோசனைக் குழு) *வாக்கு* செலுத்தும் அதிகாரத்திலிருந்து (தேசிய மருத்துவ ஆணையம்) பிரிப்பதன் வழியாக, இச்சட்டம் கூட்டுறவு கூட்டாட்சியின் இலக்கணத்தையே சிதைத்துவிட்டது. விளைவுகள் இல்லாத பங்கேற்பு என்பது பங்கேற்பே அல்ல; அது சடங்கு அளவிலான ஆலோசனையே ஆகும்.

தன்னாட்சி வாரியங்கள்

இச்சட்டம் ஒழுங்குமுறைப் பணிகளை *நான்கு தன்னாட்சி வாரியங்கள்* வழியாக மறுசீரமைக்கிறது:

1. *இளநிலை மருத்துவக் கல்வி வாரியம் (Under–Graduate Medical Education Board,* UGMEB*)* – இளநிலைப் பாடத்திட்டத்திற்கும் தரநிலைகளுக்கும் பொறுப்பானது;
2. *முதுநிலை மருத்துவக் கல்வி வாரியம்* (*Post–Graduate Medical Education Board,* PGMEB) – முதுநிலை மற்றும் உயர் சிறப்பு (சூப்பர் ஸ்பெஷாலிட்டி) கல்வியைக் கண்காணிப்பது;
3. *மருத்துவ மதிப்பீடு மற்றும் தரவரிசை வாரியம்* (*Medical Assessment and Rating Board,* MARB) – நிறுவனங்களுக்கு ஆய்வு செய்தல், ஏற்பு அளித்தல், அனுமதி வழங்குதல் அதிகாரங்களைக் கொண்டது;
4. *ஒழுக்கநெறி மற்றும் மருத்துவப் பதிவு வாரியம்* (*Ethics and Medical Registration Board,* EMRB) – தொழில்முறை நடத்தையை ஒழுங்குபடுத்துதலும் மருத்துவப் பதிவேடுகளைப் பராமரித்தலும்.

இந்த அதிகாரப் பகிர்வு நிருவாகத் திறனை மேம்படுத்துவதாகத் தோன்றினாலும், இறுதிப்பிடி மையப்படுத்தப்பட்டே உள்ளது; ஏனெனில் இந்த நான்கு வாரியங்களின் தலைவர்களும் உறுப்பினர்களும் ஒன்றிய அரசின் ஆதிக்கத்தில் உள்ள செயல்முறை வழியாகவே நியமிக்கப்படுகிறார்கள். எனவே, ஒழுங்குமுறை அதிகாரத்தின் அச்சாணி ஒன்றிய அரசிடமே உறுதியாக உள்ளது.

ஜூலை 2025, *'தி லான்செட்' (The Lancet)* இதழ், தேசிய மருத்துவ ஆணையத்தின் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஒழுக்கநெறி

சார்ந்த ஆட்சி குறித்துக் கடுமையான கவலைகளைத் தெரிவித்தது. இது நம்பகத்தன்மையை இழந்த தனது முன்னோடி அமைப்பின் (இந்திய மருத்துவக் கழகத்தின்) மற்றொரு பெயரே என்று குற்றம் சாட்டியது.[7] மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கியதில் கையூட்டு பெற்றதாகவும் குற்றவியல் சதி செய்ததாகவும் தேசிய மருத்துவ ஆணைய, ஒன்றிய சுகாதார அமைச்சக அதிகாரிகள் உட்பட 34 பேர் மீது மத்தியப் புலனாய்வு துறை (CBI) வழக்குப் பதிவு செய்துள்ளது. ஆய்வு அட்டவணைகள் கசிந்தது, முன்னரே முடிவு செய்யப்பட்ட மதிப்பீட்டாளர்கள், ஹவாலா பணப் பரிமாற்றம், "போலி ஆசிரியர்களைப்" (ghost faculty) பயன்படுத்துதல் போன்ற ஆழமாக வேரூன்றிய ஊழல் வலைப்பின்னலை புலனாய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.[8] இவை அனைத்தும் இந்திய மருத்துவக் கழகத்தைச் சீர்குலைத்த அதே நடைமுறைகளே ஆகும். மாநில அளவிலான சரிபார்ப்புகள் இன்றி, மிக முக்கியமான ஒழுங்குமுறை அதிகாரத்தை ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட சிறு குழுவிடம் குவித்து வைப்பது ஊழலை ஒழிக்காது; அது ஊழலை மையப்படுத்துகிறது என்பதை மட்டுமே இந்த உண்மைகள் காட்டுகின்றன. இலஞ்சத்தின் மையம் விளிம்பிலிருந்து உச்சத்திற்கு நகர்ந்துள்ளது; இது சீர்திருத்தம் எதை நோக்கமாகக் கொண்டதோ, அதற்கு முற்றிலும் நேர்மாறானது.

மையப்படுத்தப்பட்ட தேர்வுகள் வழியாக தரப்படுத்துதல்

தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் ஒரேதன்மையுள்ள தேசியத் தரநிலைகளைத் திணிக்கிறது; இது மாநிலங்களின் அதிகாரத்தை கணிசமாகக் குறைக்கிறது. இது குறிப்பாக தேர்வு முறைகள் வழியாக வெளிப்படுகிறது. இளநிலை, முதுநிலை, உயர் சிறப்பு மருத்துவக் கல்விக்கான சேர்க்கைகளுக்காக பொதுவான *தேசிய தகுதி நுழைவுத் தேர்வை* (நீட் – National Entrance–cum–Eligibility Test, NEET) இச்சட்டம் கட்டாயமாக்குகிறது (பிரிவு 14). மேலும், *தேசிய தகுதிறைவு தேர்வை* (நெக்ஸ்ட் – National Exit Test, NExT) ஒருங்கிணைந்த இறுதி ஆண்டுத் தேர்வாக முன்மொழிகிறது. இது ஒரே நேரத்தில் மருத்துவப் பயிற்சிக்கான உரிமத் தேர்வாகவும், வெளிநாட்டுப் பட்டதாரிகளுக்கானத் தகுதித் தேர்வாகவும், முதுநிலைக் கல்விக்கான நுழைவுத் தேர்வாகவும் செயல்படும் (பிரிவு 15). இந்த மையப்படுத்தலின் கூட்டாட்சி முறை சார்ந்த விளைவுகள் அடுத்தடுத்த பகுதிகளில் விரிவாக ஆராயப்படுகின்றன.

---

[7] Dinesh C Sharma, *Corruption Scandal Engulfs Indian Medical Education* (2025) 406 Lancet 220.

[8] FIR No RC2182025A0014, PS CBI/AC–III/New Delhi (June 30, 2025).

கொள்கை நிலையற்றதன்மையும் கருத்துநிலைத் தலையீடும்

தேசிய மருத்துவ ஆணையத்தின் செயல்பாடுகள் கொள்கை அளவில் நிலையற்ற தன்மையைக் (policy instability) கொண்டுள்ளன. பொதுவான மருந்துச் சீட்டுகள் (generic drug prescriptions), பாடத்திட்டத் திருத்தங்கள், மதிப்பீட்டுக் கட்டமைப்புகள் தொடர்பான வழிகாட்டுதல்கள் வெளியிடப்படுவதும், பின்னர் கடுமையான எதிர்ப்புகள் கிளம்பியவுடன் அவை மிக வேகமாகத் திரும்பப் பெறப்படுவதும் தொடர்கதையாக உள்ளது. நவீன மருத்துவத்திற்கும் இந்திய மரபு மருத்துவ முறைகளுக்கும் இடையிலான எல்லைகளை மழுங்கடிக்கும் முயற்சிகள் உள்ளிட்ட 'கருத்துநிலைத் தலையீடுகள்' (ideological interference) குறித்து மருத்துவச் சமூகம் கவலை தெரிவித்துள்ளது; இது அறிவியல் தரநிலைகளும் ஒழுங்குமுறை ஒருமுகப்பாடும் (regulatory coherence) குறித்த கேள்விகளை எழுப்புகிறது.

கூட்டாட்சி முறை இல்லாத தொழில்நுட்ப அதிகார வர்க்க முறை

தேசிய மருத்துவ ஆணையத்தின் ஆதரவாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை விட நியமிக்கப்பட்ட வல்லுநர்களே அதிகத் திறமையானவர்கள் என்று வாதிடுகின்றனர். இந்தத் தொழில்நுட்ப அதிகார வர்க்கத் தற்காப்புவாதம் (technocratic defence) அடிப்படைப் புள்ளியைத் தவறவிடுகிறது. மருத்துவக் கல்வி என்பது வெறும் ஒரு தொழில்நுட்பத் துறை மட்டுமல்ல; அது மொழி, நோயியல், சேவை வழங்கல், உள்ளூர் நோய் சுமைகள் ஆகியவை ஒன்றையொன்று சந்திக்கும் இடம் ஆகும். மாணவர் சேர்க்கைக் கொள்கைகள் மொழித் திறனைத் தீர்மானிக்கின்றன; பாடத்திட்டங்கள் கிராமப்புற மருத்துவர்களின் வருகையைப் பாதிக்கின்றன; முதுநிலை மருத்துவப் படிப்புகளின் வழித்தடங்கள் சிறப்பு மருத்துவத் திறன் பரவலை (specialty distribution) தீர்மானிக்கின்றன. இவைதாம் கூட்டாட்சி முறையின் சமச்சீரற்ற நிலைகள் முக்கியத்துவம் பெறும் பகுதிகளாகும். தேசிய மருத்துவ ஆணையம் ஒழுங்குமுறை நடைமுறையை அரசியலற்றதாக மாற்றவில்லை; அது அரசியல் அதிகாரத்தை ஒன்றிய அரசிற்கு இடம்பெயரச் செய்கிறது. அதே வேளையில், இனித் தங்கள் கட்டுப்பாட்டில் இல்லாத விளைவுகளுக்கு மாநிலங்கள் பொறுப்பேற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

பரிந்துரை 5

தேசிய மருத்துவ ஆணையத்தை கூட்டுறவு கூட்டாட்சி முறையின் கருத்தோடு இணங்கிப் போகச் செய்ய, 2019–ஆம் ஆண்டு தேசிய

மருத்துவ ஆணையச் சட்டத்தில் (*National Medical Commission Act*, 2019) கீழ்க்கண்ட இலக்கு நோக்கிய திருத்தங்கள் அவசியம்:

1. *நிலையான மாநிலப் பிரதிநிதித்துவம்:* இப்போதுள்ள சுழற்சி முறை ஒழிக்கப்பட வேண்டும். 28 மாநிலங்களுக்கும் சட்டமன்றங்களைக் கொண்ட மூன்று ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுக்கும் நிலையான பிரதிநிதித்துவத்தை வழங்கும் வகையில் தேசிய மருத்துவ ஆணையம் மறுசீரமைக்கப்பட வேண்டும்; இதன் வழியாக எந்த மாநிலமும் உரிமையற்றதாக ஆக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

2. *மருத்துவ ஆலோசனைக் குழுவிற்குப் பிணைப்பு அதிகாரங்கள்:* மருத்துவ ஆலோசனைக் குழு வெறும் ஆலோசனை வழங்கும் நிலையைக் கடந்து வலுப்படுத்தப்பட வேண்டும். மாநில உள்கட்டமைப்பு, மாணவர் சேர்க்கை, மனிதவளத் திட்டமிடல் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தும் பொருண்மைகளில் இக்குழுவின் பரிந்துரைகள் பொதுவாக தேசிய மருத்துவ ஆணையத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். ஏதேனும் ஒரு பரிந்துரையிலிருந்து விலக நேரிட்டால், அதற்கான காரணங்களையும் ஆணையத்தின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையும் பதிவு செய்ய வேண்டும்.

3. *மாநிலச் சுயாட்சி:* நான்கு தன்னாட்சி வாரியங்களும், குறிப்பாக மருத்துவ மதிப்பீடு மற்றும் தரவரிசை வாரியம், ஆய்வுகள், மதிப்பீடுகள் செய்ய மாநில அளவில் கிளைகளை நிறுவ வேண்டும். இது உள்ளூர் சூழலுக்கு ஏற்ற மதிப்பீடுகளைச் செய்ய வழிவகுக்கும், தாமதங்களைக் குறைக்கும், ஆதாயம் தேடலுக்கும் ஊழலுக்கும் வழிவகுக்கும் மையப்படுத்தப்பட்ட தடைகளைத் தவிர்க்க உதவும்.

VIII. பள்ளி வாரியத் தேர்வுகள் vs. ஒரே கட்ட நுழைவுத் தேர்வுகள்: தொலைநோக்குப் பார்வைக்கான சான்று

*கல்வி'*என்ற இயலில் விவாதிக்கப்பட்டதைப் போல, நீட் இளநிலை (NEET–UG), ஜே.இ.இ (JEE) மற்றும் பல்கலைக்கழக பொது நுழைவுத் தேர்வு (CUET) போன்ற அதிக நெருக்கடி நிறைந்த தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகள், மிக மோசமான இரண்டு விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

முதலாவதாக, இத்தேர்வுகள் பருவ வயது மாணவர்களிடத்தில் தீராத பதற்றத்தையும், மனநலம் சார்ந்த அழுத்தத்தையும் திணித்துள்ளன. இரண்டாவதாக, இவை மேல்நிலைப் பள்ளிக் கல்வியின் சாராம்சத்தையே சிதைத்துவிட்டன. ஆழ்ந்த வாசிப்பு, திறனாய்வு சிந்தனை, சமூகமயமாதல் மற்றும் முழுமையான ஆளுமைத் திறன் மேம்பாடு ஆகியவை பின்னுக்குத் தள்ளப்பட்டு, குறுகிய நோக்கம் கொண்ட தேர்வுத் தயாரிப்பு முறையே முன்னிலை பெற்றுள்ளது. புரிதல், தொடர்ச்சியான கற்றல் மற்றும் படைப்பாற்றலை விட, வேகத்திற்கும் தேர்வு உத்திகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் இந்த மதிப்பீட்டு முறையின் எதிர்பார்க்கப்பட்ட விளைவே, பயிற்சி மையங்களின் பெருக்கமும், "பெயரளவுப் பள்ளிகளின்" (Dummy schools) அதிகரிப்பும் ஆகும். தரமான பயிற்சி என்பது அதிகச் செலவை ஏற்படுத்துவதாகவும், பெருநகரங்களில்மட்டுமேகிடைப்பதாகவும் உள்ளது. இதனால், இந்த நடைமுறை சமத்துவமின்மையை ஆழமாக்குவதோடு, கட்டமைப்பு ரீதியாகவே கிராமப்புற, அரசுப் பள்ளி, தாய்மொழி வழி மற்றும் மாநிலப் பாடத்திட்ட மாணவர்களைக் பின்தங்கச் செய்கிறது. ஏற்கனவே அமைப்பு ரீதியாக பலவீனமாக உள்ள தேசியத் தேர்வு முகமையின் (National Testing Agency – NTA) தொடர் தோல்விகள் இந்த அபாயங்களை மேலும் அதிகரிக்கின்றன. இக்குளறுபடிகள், மையப்படுத்தப்பட்ட இந்த நுழைவுத் தேர்வு முறையையே கல்வி அமைப்பின் ஒரு ஒட்டுமொத்த இடர்பாடாக மாற்றியுள்ளன.

அனுமானத்திலிருந்து ஆதாரத்தை நோக்கி

நவீன காலகட்டத்தில் நீண்ட காலமாகவே, கல்வி அல்லது வேலைவாய்ப்பிற்காக சீரான முறைமை கொண்ட, சரியான விடையைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தேர்வுகளால் நுண்ணறிவை நம்பகமாக அளவிடவும், எதிர்கால வெற்றியை கணிக்கவும் முடியும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகக் கருதப்பட்டது. மாணவர்களின் ஒட்டுமொத்தத் திறனும் ஒப்பீட்டிற்கு ஏதுவான ஒரு தனி மதிப்பெண்ணாகச் சுருக்கப்பட்டது. கடும் நெருக்கடிக்கு மத்தியில் ஒருவர் வெளிப்படுத்தும் உச்சபட்ச செயல்திறனே, அவரது திறமைக்கான சான்றாகக் கருதப்பட்டது. மாநிலங்கள், ஒரு மாநிலத்திற்குட்பட்ட பள்ளி வாரியங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையே கல்வித் தரத்தில் பெரும் வேற்றுமைகள் நிறைந்த இந்நாட்டில், பொது நுழைவுத் தேர்வுகளே தகுதியைத் தீர்மானிக்கும் மிக நியாயமான வழியாகக் கருதப்பட்டன. எனினும், கூட்டாட்சி அமைப்பு கொண்ட பிற நாடுகள், கூட்டாட்சி அரசின் நிர்வாகத்திலான தேசியத் தேர்வுகளை நாடாமலேயே இத்தகைய வேற்றுமைகளைக் கையாளுகின்றன என்பதே உண்மையாகும்.

எனினும், கடந்த இருபது ஆண்டுகளாக, உயர் கல்வி, மருத்துவம், உளவியல் மற்றும் வேலைவாய்ப்புத் துறைகளில் இந்த அனுமானம் கடுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இதிலிருந்து கிடைத்துள்ள ஒருமித்த முடிவு மிகவும் வியக்கத்தக்கது: ஒரே ஒருமுறை எழுதப்படும் திறனறிவுத் தேர்வுகளைவிட, ஒருவரின் நீண்ட காலக் கல்விச் சாதனைகளும், அவரது தொடர்ச்சியான செயல்பாடுகளுமே, அவரது எதிர்கால வெற்றியைத் மிகத் துல்லியமாகக் கணிக்கின்றன.

உயர்கல்விச் சேர்க்கை: 'சராசரி தரப் புள்ளியே' (GPA) மிகச் சிறந்த அளவுகோல்

1. **வில்லியம் ஹிஸ் மற்றும் வலரி ஃபிராங்க்ஸ்**[9] **(William Hiss and Valerie Franks)**

   'டிஃபைனிங் பிராமிஸ்' (Defining Promise – 2014) என்ற மைல்கல் ஆய்வில், 33 அமெரிக்கக் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 1,23,000 மாணவர்களின் தரவுகளை இவ்வாய்வாளர்கள் பகுப்பாய்வு செய்தனர். ஆய்வில் கண்டறியப்பட்டவை:

   - கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் பெறும் ஒட்டுமொத்த சராசரி தரப் புள்ளியையும் (Cumulative GPA), அவர்கள் பட்டப்படிப்பை முடிக்கும் வீதங்களையும் மிகத் துல்லியமாக முன்கணிப்பது அவர்களின் உயர்நிலைப் பள்ளி சராசரி தரப் புள்ளியே (HSGPA) ஆகும்.
   - பள்ளிகளில் மாணவர்கள் பெற்ற சராசரி தரப் புள்ளிகளைக் கணக்கில் எடுத்துக்கொண்ட பிறகு, ஒரே சீரான முறையில் தரப்படுத்தப்பட்ட தேர்வு மதிப்பெண்கள் மாணவர்களின் எதிர்காலத் திறனைக் கணிப்பதில் மிகக்குறைந்த பங்கையே அளித்தன.
   - நுழைவுத் தேர்வு மதிப்பெண்கள் குறைவாக இருந்தாலும், பள்ளியில் அதிக சராசரி தரப் புள்ளிகள் பெற்ற மாணவர்கள் பொதுவாகக் கல்லூரியில் சிறப்பாகச் செயல்படுகின்றனர். மாறாக, பள்ளியில் குறைந்த சராசரி தரப் புள்ளிகள் பெற்ற மாணவர்கள், கல்லூரியிலும் குறைந்த சராசரி தரப் புள்ளிகளையே பெறுவதோடு, அவர்கள் பட்டப்படிப்பை முடிக்கும் வீதமும் குறைவாகவே உள்ளது.

---

[9] William C Hiss and Valerie W Franks 'Defining Promise: Optimal Standardized Testing Policies in American College and University Admissions' Lumina Foundation Working Paper No. 2/5/2014 accessed January 27, 2026.

- தேர்வு எழுதிய மாணவர்களுக்கும், தேர்வு கட்டாயமற்ற முறையில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கும் இடையிலான பட்டப்படிப்புத் தேர்ச்சி வீத வேறுபாடு வெறும் 0.6 விழுக்காடு மட்டுமே. தகுதியின் அடிப்படையில் மாணவர்களைத் தேர்வு செய்வதற்கு நுழைவுத் தேர்வுகள் இன்றியமையாதவை என்ற வாதத்தை இந்தத் தரவு வலுவிழக்கச் செய்கிறது.

2. **டபிள்யூ. ஜி. போவன், எம். எம். சிங்கோஸ் மற்றும் எம். எஸ். மெக்பியர்சன்[10] (W. G. Bowen, M. M. Chingos, and M. S. McPherson)**
'கிராசிங் தி ஃபினிஷ் லைன்' (Crossing the Finish Line 2009) என்ற தங்களின் ஆய்வில், 68 பொதுப் பல்கலைக்கழகங்களில் 1999–ஆம் ஆண்டில் சேர்ந்த மாணவர்களின் விவரங்களை இந்த ஆய்வாளர்கள் பகுப்பாய்வு செய்தனர். அதிக 'ஸ்கொலாஸ்டிக் ஆப்டிட்யூட் டெஸ்ட்' (எஸ்.ஏ.டி/SAT) மதிப்பெண்களைப் பெற்றிருந்தும் குறைவான பள்ளி சராசரி தரப் புள்ளிகளைக் (GPA) கொண்ட மாணவர்களை விட, மிதமான எஸ்.ஏ.டி மதிப்பெண்களைப் பெற்றிருந்தாலும் பள்ளியில் அதிக சராசரி தரப் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களே பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது. எஸ்.ஏ.டி தேர்வு முடிவுகள் என்பவை, மாணவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் மற்றும் பள்ளிக் கூடத்தின் கல்வி வளங்களில் உள்ள ஏற்றத்தாழ்வுகளையே பெரும்பாலும் பிரதிபலிக்கின்றன; ஆனால், சராசரி தரப் புள்ளிகள் (GPA) என்பவை விடாமுயற்சி, நிலைத்தன்மை மற்றும் உழைக்கும் பாங்கு ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. நீண்ட காலச் செயல்பாட்டிற்கு இவையே மிகவும் பொருத்தமான பண்புகளாகும் என்று ஆய்வாளர்கள் வாதிடுகின்றனர்.

3. **எலைன் ஆலன்ஸ்வொர்த் மற்றும் கல்லி கிளார்க்[11] (Elaine Allensworth and Kallie Clark)**
சிகாகோ அரசுப் பள்ளிகளில், 2006 முதல் 2009 வரையிலான கல்வி ஆண்டுகளில் தேர்ச்சி பெற்ற சுமார் 55,000 பட்டதாரிகளை

---

[10] William G Bowen, Matthew M Chingos, and Michael S McPherson, *Crossing the Finish Line* (Princeton University Press 2009).

[11] Elaine M. Allensworth and Kallie Clark, 'High School GPAs and ACT Scores as Predictors of College Completion: Examining Assumptions About Consistency Across High Schools' (2020) 49 Educational Researcher 198.

இவர்கள் ஆய்வு செய்தனர். நகர்ப்புறச் சூழலில், ஒரு மாணவர் கல்லூரியில் பட்டம் பெறுவாரா என்பதை முன்கூட்டியே கணிப்பதில், 'அமெரிக்கன் காலேஜ் டெஸ்டிங்' (ஏ.சி.டி/ACT) மதிப்பெண்களை விட, உயர்நிலைப் பள்ளி சராசரி தரப் புள்ளிகளே *ஐந்து மடங்குக்கும்* அதிகமான வலிமை கொண்டவை என்று இந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஆய்வு செய்யப்பட்ட அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும், சராசரி தரப் புள்ளிகளின் இந்தத் திறன் ஒரே சீராக இருந்ததையும் அவர்கள் கண்டறிந்தனர். மாறாக, ஏ.சி.டி மதிப்பெண்களுக்கும் கல்லூரிப் பட்டப்படிப்பை முடிப்பதற்கும் இடையிலான தொடர்பு பல பள்ளிகளில் பெருமளவு மாறுபட்டிருந்தது; அல்லது தொடர்பே இல்லாத நிலையே இருந்தது. சராசரி தரப் புள்ளிகள் என்பவை, "பல்வேறு வகையான வகுப்புகளில் ஒரு முழுப் பருவக்காலம் முழுவதும் எடுக்கப்படும் முயற்சி" உட்பட, பரந்த அளவிலான திறன்களை அளவிடுவதாக அவர்கள் கண்டறிந்தனர். ஆனால், ஒரே சீரான முறையில் தரப்படுத்தப்பட்ட தேர்வுகள் என்பவை மாணவர்களின் திறனை ஒரு குறிப்பிட்ட தருணத்தில் மட்டுமே சோதிக்கும் குறுகிய கால அளவீடாகும்.

4. **ஏஞ்சலா டக்வொர்த் மற்றும் மார்ட்டின் செலிக்மேன் (Angela Duckworth and Martin Seligman)**[12]

'கல்விச் செயல்பாட்டை கணிப்பதில் நுண்ணறிவு ஈவை விடச் சுய ஒழுக்கமே சிறந்தது' (Self–discipline outdoes IQ in predicting academic performance of adolescents 2005*)* என்ற ஆய்வில், 'நுண்ணறிவு ஈவை' (IQ) விடச் சுய ஒழுக்கமே கல்விச் செயல்பாட்டை மிக வலிமையாகக் கணிப்பதாக ஆசிரியர்கள் மெய்ப்பித்தனர். இறுதி மதிப்பெண்களில் ஏற்படும் மாறுபாடுகளை, நுண்ணறிவு ஈவைக் காட்டிலும் இரண்டு மடங்கிற்கும் அதிகமாகச் சுய ஒழுக்கமே தீர்மானித்தது. 'நுண்ணறிவு ஈவு' என்பது சீரான முறைமை கொண்ட தேர்வு மதிப்பெண்களுடன் தொடர்புடையது. ஆனால் பள்ளி மதிப்பெண்கள் என்பது சுயக் கட்டுப்பாடு, தயாரிப்பு, மன உந்துதல் கட்டுப்பாடு மற்றும் தொடர் முயற்சி ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன. உயர்கல்வியும் தொழில் வாழ்க்கையும் ஒரு நீண்ட ஓட்டப்பந்தயத்தைப் போன்றவையே தவிர, குறுகிய தூர

---

[12] Angela L Duckworth and Martin EP Seligman, 'Self–Discipline Outdoes IQ in Predicting Academic Performance of Adolescents' (2005) 16 Psychological Science 939.

ஓட்டங்கள் அல்ல. எனவே, தேர்வு மதிப்பெண்களை விட 'சராசரி தரப் புள்ளியே' நீண்ட கால விளைவுகளைச் சிறப்பாகக் கணிக்கிறது என்பதில் வியப்பில்லை.

5. **சால் கெய்சர் மற்றும் மரியா சாண்டெலிசஸ்[13] (Saul Geiser and Maria Santelices)**

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் (2007) 80,000–க்கும் மேற்பட்ட மாணவர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வு ஒரு முக்கிய உண்மையை வெளிப்படுத்தியது. எஸ்.ஏ.டி தேர்வு மதிப்பெண்கள், குடும்ப *வருமானம் மற்றும் பெற்றோரின் கல்வியறிவுடன் மிக நெருக்கமான தொடர்புடையவை* என்பதே அது. சமூகப் பொருளாதாரக் காரணிகளைச் சமன் செய்து பார்த்தபோது, எதிர்கால வெற்றியைக் கணிக்கும் எஸ்.ஏ.டி தேர்வின் திறன் வெகுவாகக் குறைந்தது. இதற்கு மாறாக, சமூகப் பொருளாதாரப் பின்னணியைச் சாராமலே, மாணவர் சேர்க்கைக்குப் பிந்தைய செயல்பாட்டைக் கணிப்பதில் மேல்நிலைப் பள்ளி 'சராசரி தரப் புள்ளி' தொடர்ந்து வலிமையாக இருந்தது. நெருக்கடியான சூழலிலும் பெறப்படும் அதிக 'சராசரி தரப் புள்ளி', ஒருவரின் மன உறுதியையும், சூழலுக்கு ஏற்ப தகவமைத்துக்கொள்ளும் திறனையும் காட்டுகிறது. உயர்கல்வி மற்றும் தொழில் வாழ்க்கை ஆகிய இரண்டிற்கும் இப்பண்புகள் மிகவும் அவசியமானவை. எனவே, 'சராசரி தரப் புள்ளி' என்பது எதிர்காலத்தை *மிகத் துல்லியமாக கணிக்கக்கூடியதாகவும், அதே நேரத்தில் சமூக நீதியை நிலைநாட்டக்கூடியதாகவும்* திகழ்கிறது.

6. **ஐ. சி. மெக்மனஸ் மற்றும் குழுவினர்[14] (I. C. McManus et al.)**

2013–14–ஆம் ஆண்டுகளில், 'யுகே கிளினிக்கல் ஆப்டிட்யூட் டெஸ்ட்' (UKCAT) குறித்து நடத்தப்பட்ட ஆய்வுகள், மருத்துவக் கல்வியிலும் முதுநிலைப் பயிற்சியிலும் ஒருவரின் வெற்றியை முன்கூட்டியே கணிப்பதில் இத்தேர்வின் நம்பகத்தன்மை மிகக்

---

[13] Saul Geiser and Maria Veronica Santelices, 'Validity of High–School Grades in Predicting Student Success Beyond the Freshman Year: High–School Record v. Standardized Tests as Indicators of Four–Year College Outcomes' Research and Occasional Paper Series CSHE.6.07 (2007).

[14] IC McManus and others, 'The UKCAT–12 study: educational attainment, aptitude test performance, demographic and socio–economic contextual factors as predictors of first year outcome in a cross–sectional collaborative study of 12 UK medical schools' (2013) 11 BMC Medicine 244.

குறைவாகவே உள்ளதை வெளிப்படுத்தின. மாறாக, 'ஏ–லெவல்ஸ்' (A–levels) மற்றும் 'ஜிசிஎஸ்இ' (GCSEs) போன்ற பாரம்பரியக் கல்வித் தகுதிகள், மருத்துவத் திறனை இன்னும் நம்பகமாக முன்கூட்டியே கணித்தன. மருத்துவம் என்பது வெறும் வேகமான சிந்தனைத் திறனை மட்டும் கோரும் துறை அல்ல; அது நீண்ட கால விடாமுயற்சியையும், ஆழ்ந்த தேர்ச்சியையும் கோரும் ஒரு துறை என்பதை இது பிரதிபலிக்கிறது.

உலகளாவியப் போக்குகள்: 'சீரான முறைமை கொண்ட' நுழைவுத் தேர்வுகளைக் கைவிடுதல்

மையப்படுத்தப்பட்ட தேர்வு முறையை இந்தியா மேலும் இறுக்கமாக்கி வரும் வேளையில், வளர்ந்த நாடுகள் அதிக நெருக்கடி தரும் நுழைவுத் தேர்வுகளைக் கைவிட்டு வருகின்றன. அதற்குப் பதிலாக, மாணவர்களின் தொடர்ச்சியான கல்விச் செயல்பாட்டை மதிப்பிடும் முறைக்கு மாறி வருகின்றன.

பிரான்ஸ்: வரலாற்று ரீதியாகப் பின்பற்றப்பட்டு வந்த, கடுமையான போட்டியைக் கொண்ட முதலாம் ஆண்டுத் தேர்வு முறையையும் (PACES), அதனுடன் தொடர்புடைய, மாணவர் சேர்க்கைக்கான *எண்ணிக்கை உச்சவரம்பையும்* (numerus clausus – fixed quotas) 2020–ஆம் ஆண்டில் பிரான்ஸ் ரத்து செய்தது. இம்முறைகள் மாணவர்களிடையே மன உளைச்சலையும், சமத்துவமின்மையையும் ஏற்படுத்தி, ஒரு "மனிதக் குளறுபடியை" (human mess) உருவாக்குவதாக விமர்சிக்கப்பட்டன. இதற்குப் பதிலாக, 'பாஸ்' (*Parcours Spécifique Accè Santé*– PASS) மற்றும் 'லாஸ்' (*Licence avec Accè Santé* – L.AS) ஆகிய இரண்டு வழித்தடங்களைக் கொண்ட ஒரு புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தச் சீர்திருத்தத்தின்படி, மருத்துவப் படிப்பிற்கான சேர்க்கை என்பது இனி ஒரே ஒரு தரவரிசைத் தேர்வால் தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக, அது பல்கலைக்கழகப் பாடத்திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மருத்துவம் மற்றும் மருத்துவம் அல்லாத பாடப்பிரிவுகளில் வெளிப்படுத்தும் தொடர்ச்சியான கல்விச் செயல்பாட்டின் வழியாகத் தங்கள் தகுதியை நிரூபிக்க இது வாய்ப்பளிக்கிறது.

இத்தாலி: இத்தாலியும் இதேபோல, தனது மையப்படுத்தப்பட்ட தேர்வு முறையைக் கைவிட்டுள்ளது. 2025–26 கல்வி ஆண்டிற்காக, இத்தாலிய மொழியில் பயிற்றுவிக்கப்படும் பாடப்பிரிவுகளுக்கான பாரம்பரிய மருத்துவ நுழைவுத் தேர்வை (TOLC–MED போன்றவை) ரத்து செய்ய இத்தாலிய

நாடாளுமன்றம் (Senate) ஒப்புதல் அளித்துள்ளது. இதற்குப் பதிலாக, அனைவருக்கும் திறந்த *"வடிகட்டும் பருவத் தேர்வு" (semestre filtro/filter semester)* முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையில், மாணவர்கள் நேரடியாக அடிப்படைப் பாடங்களில் (உயிரியல், இயற்பியல், வேதியியல்) சேரலாம்; அப்பருவத்தின் இறுதியில் தேர்வுகளை எழுதலாம். ஒரே கட்டமாக நடத்தப்படும் திறனறிவுத் தேர்வுக்குப் பதிலாக, இப்பாடங்களில் அவர்கள் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் தேசியத் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படும். இதுவே அவர்கள் மருத்துவப் படிப்பைத் தொடர முடியுமா என்பதைத் தீர்மானிக்கும்.

இந்தியாவிற்கான பாடங்கள்

இந்த ஆய்வுகள் அனைத்தும் ஒரு மையப் புள்ளியை நோக்கித் தெளிவாகக் குவிகின்றன. நுழைவுத் தேர்வுகள் என்பவை ஒரு குறிப்பிட்ட கணத்தில் வெளிப்படும் செயல்திறனை மட்டுமே அளவிடும் தன்மையுடையவை; சாதகமான சூழலில் நிகழ்த்தப்படும் ஒரு குறுகிய ஓட்டத்தைப் போல, அவை ஒருவரின் அப்போதைய உச்சபட்ச செயல்திறனை மட்டுமே கணக்கில் கொள்கின்றன. ஆனால், கல்விசார் பாதைகள் ஒருவரின் தொடர்ச்சியான திறனை அளவிடுகின்றன; அவை ஒரு நீண்ட தூர ஓட்டத்தைப் போன்றவை. உண்மையானத் திறமையைக் கண்டறிய விரும்பினால், கல்வி நிறுவனங்கள் இத்தகைய குறுகிய நேர மதிப்பீடுகளுக்கு முன்னுரிமை அளிப்பதை நிறுத்திவிட்டு, நீண்ட காலக் கல்விச் செயல்பாடுகளை மதிப்பீடு செய்யத் தொடங்க வேண்டும்.

எனினும், ஒன்றிய அரசோ அல்லது உச்ச நீதிமன்றமோ, பெருகி வரும் இந்தச் சான்றுகளைப் பொருளுள்ள வகையில் கவனத்தில் கொள்ளவில்லை. தேசிய நுழைவுத் தேர்வுகளே தகுதியை அளவிடும் இயல்பான நம்பகத்தன்மை கொண்டவை என்ற, ஆய்வுக்கு உட்படுத்தப்படாத ஒரு அனுமானத்தையே அவை தொடர்ந்து நம்பி வருகின்றன. தேவைப்பட்டால், இந்தியச் சூழலில் இதுகுறித்த 'நீண்ட காலத் தொடர் ஆய்வுகளை' ஒன்றிய அரசு மேற்கொள்ளலாம். எனினும், சர்வதேச அளவில் ஏற்கனவே மெய்ப்பிக்கப்பட்ட முடிவுகளிலிருந்து, இந்திய முடிவுகள் பெரிதும் மாறுபடும் என்று எதிர்பார்க்க எவ்வித அடிப்படைக் காரணமும் இல்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை, இது உணர்த்தும் செய்தி மிகத் தெளிவாக உள்ளது. நீட்–இளநிலை (NEET–UG) அல்லது பல்கலைக்கழக பொதுத் தேர்வு – இளநிலை (CUET–UG) போன்ற ஒரேயொரு வாய்ப்பில் வாழ்வை நிர்ணயிக்கும், கடும் நெருக்கடி நிறைந்த, சரியான விடையைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுகளை விட, 10 மற்றும் 12–ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் வெளிப்படுத்தப்படும் சீரான கல்வித் திறனே, ஒரு

மாணவரின் கல்விசார் தயார்நிலை மற்றும் ஆற்றலை அளவிடுவதற்கான மிகவும் நம்பகமான அளவுகோலாகும். எந்தவொரு தனித் தேர்வாலும் ஈடு செய்ய முடியாத வகையில், பொதுத் தேர்வுகள் மாணவர்களின் தொடர் கற்றல், ஒழுங்குமுறை மற்றும் பாடக்கருத்துக்களைப் புரிந்து கொள்ளும் திறன் ஆகியவற்றை நீண்ட கால அடிப்படையில் மதிப்பீடு செய்கின்றன. 11–ஆம் வகுப்பின் முடிவில் முறையான பொதுத் தேர்வு மதிப்பீட்டு முறையை அறிமுகப்படுத்துவது, அந்த ஆண்டை மாணவர்கள் ஒரு தேவையற்ற இடைவேளையாகக் கருதுவதைத் தடுக்கும். மேலும், உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியின் மூன்று ஆண்டுகளிலும் ஒரு விதமான ஒருங்கிணைப்பு, தொடர்ச்சி மற்றும் கல்விசார் தீவிரத்தன்மையை இது மீட்டெடுக்கும்.

தேசிய நுழைவுத் தேர்வுகளுக்கு நம்பகமான மாற்று வழிகள் ஏற்கனவே உள்ளன. ஆஸ்திரேலியாவில் பின்பற்றப்படும் *ஆஸ்திரேலியன் டெர்ஷியரி அட்மிஷன் ரேங்க் (Australian Tertiary Admission Rank* – ATAR) முறை, மாணவர்களைத் தனியாக ஒரு தேசியத் தேர்வுக்கு உட்படுத்தாமலேயே, மாநிலங்களுக்கு இடையிலான பள்ளி இறுதி மதிப்பெண்களைப் புள்ளியியல் ரீதியாகச் சமன் செய்து ஒப்பிட்டுப் பார்க்கிறது. இந்தியாவிலும் இதுபோன்ற புள்ளியியல் முறைகள் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ளன. அஸ்ஸாம் மொழிப்பாடம் முதல் விலங்கியல் பாடம் வரை 48 வெவ்வேறு விருப்பப் பாடங்களைக் கொண்ட குடிமைப் பணித் தேர்வுகளில், ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) மதிப்பெண்களைச் சமன் செய்கிறது. இதற்காக, 'புள்ளியியல் முறைப்படுத்தல்' மற்றும் 'நேரியல் மாற்றம்' போன்ற நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மிக உயர்ந்த அரசமைப்புப் பணிகளுக்கே இத்தகைய முறைகள் நம்பகமானவையாக இருக்கும்போது, இளங்கலை மாணவர் சேர்க்கைக்காக மாநிலங்கள் மற்றும் பள்ளி வாரியங்களின் மதிப்பெண்களைச் சமன் செய்வதற்கு, இதே போன்ற முறைகளைப் பயன்படுத்த முடியாததற்குக் கொள்கை ரீதியாக எவ்விதக் காரணமும் இல்லை.

பரிந்துரை 6

1. மாணவர் சேர்க்கை ஆய்வுகள், பொதுப் பல்கலைக்கழகத் தரவுகள், உளவியல் ஆய்வுகள், சமத்துவப் பகுப்பாய்வுகள், மருத்துவக் கல்வி எனப் பல்வேறு துறைகளிலும் சான்றுகள் ஒரே புள்ளியில் தெளிவாகக் குவிகின்றன. ஒரே ஒருமுறை எழுதப்படும் நுழைவுத் தேர்வுகளை விட, மேல்நிலைப் பள்ளி 'சராசரி தரப் புள்ளிகளே' (HSGPAs), கல்லூரி மற்றும் தொழில் வாழ்க்கையின் வெற்றியை மிகச் சிறப்பாகக் கணிக்கின்றன என்பதே அந்த உண்மையாகும். மாநில அளவிலான தேர்வுச்

சீர்திருத்தங்கள் மற்றும் 'புள்ளியியல் முறைப்படுத்தல்' வழியாக, இந்தியாவால் தகுதியை மிக நியாயமாகவும், துல்லியமாகவும் தீர்மானிக்க முடியும். இதன் வழியாக, அதிக நெருக்கடி மிகுந்த மையப்படுத்தப்பட்ட தேர்வுகளால் ஏற்படும் சமூக, உளவியல் மற்றும் கல்வி ரீதியான பாதிப்புகளைத் தவிர்க்க இயலும்.

2. மாநில அரசுகளால் நிறுவப்பட்டு, நிதியளிக்கப்பட்டு, நிர்வகிக்கப்படும் கல்வி நிறுவனங்களின் மாணவர் சேர்க்கைக்கு, நீட்– இளநிலை போன்ற தேசிய நுழைவுத் தேர்வுகளை ஒன்றிய அரசு கைவிட வேண்டும்.

3. ஒன்றிய அரசால் நடத்தப்படும் நிறுவனங்களுக்குக் கூட, அதிக நெருக்கடி மிகுந்த தேசியத் தேர்வுகளைத் தொடர்ந்து நம்பியிருப்பதை உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏனெனில், இத்தேர்வுகள் மாணவர் நலனுக்குத் தீங்கு விளைவிப்பதாகவும், மேல்நிலைக் கல்வியின் நோக்கத்தைச் சிதைப்பதாகவும் உள்ளன. மேலும், எதிர்கால வெற்றியை இத்தேர்வுகளால் கணிக்க முடியுமா என்ற 'முன்கணிப்பு நம்பகத்தன்மையும்' கேள்விக்குறியாகவே உள்ளது.

IX. நீட்: தகுதியைத் தீர்மானிக்கும் கடுமையான அல்லது நம்பகமான வடிகட்டி அல்ல

கடந்த பத்து ஆண்டுகாலமாக, சிதறிக் கிடந்த பல்வேறு நுழைவுத் தேர்வுகளை மாற்றுவதற்கும், மாணவர் சேர்க்கையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கும், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் கட்டாய நன்கொடையை (capitation fees) கட்டுப்படுத்துவதற்கும், மருத்துவக் கல்வியில் தகுதி அடிப்படையிலானத் தேர்வை மேம்படுத்துவதற்கும் கொண்டுவரப்பட்ட ஒரு மாபெரும் சீர்திருத்தமாக நீட் தேர்வு முன்னிறுத்தப்பட்டு வருகிறது. ஆனால், நீட் தேர்விற்கு எதிரான மிக வலுவான குற்றச்சாட்டு கோட்பாடுகளிலிருந்து வரவில்லை; மாறாக, அதன் நடைமுறைச் சான்றுகளிலிருந்தே கிடைத்துள்ளது.

2021 முதல் 2025 வரையிலான காலத்தில், கல்வித் தகுதியை அளவிடும் ஒரு கடுமையான அல்லது நம்பகமான வடிகட்டியாகச் செயல்படுவதில் நீட் தோல்வியடைந்துவிட்டது. மாறாக, வணிக ரீதியிலான அழுத்தங்களுக்குப் பணிந்து, தனது சொந்தத்

தரநிலைகளையே படிப்படியாக நீர்த்துப்போகச் செய்யும் ஒரு வருடாந்திர 'அதிகாரத்துவச் சடங்காக' அது மாறிவிட்டது. தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் உள்ள, அதிகக் கட்டணம் வசூலிக்கும் இடங்கள் காலியாக இருக்கக்கூடாது என்ற ஒரே நோக்கத்திற்காக, தகுதி வரம்புகள் தொடர்ந்து குறைக்கப்பட்டன. சில சமயங்களில் மிகக் குறைந்த அளவிற்கும், நீட் முதுநிலை (NEET–PG) மற்றும் நீட் உயர் சிறப்பு (NEET–SS) படிப்புகளுக்கான சில கலந்தாய்வுச் சுற்றுகளில் *பூஜ்ஜிய சதமானம் (zero percentile) அளவிற்கும்* கூட இவை குறைக்கப்பட்டன. இப்போக்கானது, கல்விசார் தரக்கட்டுப்பாட்டின் அடிப்படையில் இம்முறைமை அமையாமல், இடங்களை நிரப்ப வேண்டிய கட்டாயத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளதை வெளிப்படுத்துகிறது. இதனால், நீட் தேர்வு எதற்கென்று கொண்டுவரப்பட்டதோ, அந்த அடிப்படை நோக்கங்களே சிதைக்கப்படுகின்றன (பார்க்கவும் **இணைப்பு I**).

நடைமுறைச் சான்றுகளின் வீழ்ச்சி: தரநிலைகளிலிருந்து பூஜ்ஜியம் வரை

"உயர்ந்த தரநிலைகள்" என்ற வாய்ஜாலப் பேச்சுக்கும், மாணவர் சேர்க்கைக்கான தகுதி வரம்புகளின் நிதர்சனத்திற்கும் இடையே ஒரு மிகப்பெரிய இடைவெளி இருப்பதைத் தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

நீட்–இளநிலை NEET–UG (MBBS/BDS): இரட்டைத் தரநிலை

2021 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில், நீட்–இளநிலைத் தேர்வில் பொதுப் பிரிவு (General) மாணவர்களுக்கான தகுதி வரம்பானது, பெயரளவிற்கு 50–வது சதமானத்தில் (50th percentile) இருந்தது. ஆனால் நடைமுறையில், இது மொத்தமுள்ள 720 மதிப்பெண்களில் சுமார் 117 முதல் 162 மதிப்பெண்களை மட்டுமே குறிப்பதாக இருந்தது. இது தோராயமாக வெறும் *16 முதல் 23 விழுக்காடு* மட்டுமே ஆகும். இட ஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு (இதர பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தோர், பழங்குடியினர்), இத்தகுதி வரம்பு இன்னும் குறைவாக, 13 முதல் 18 விழுக்காட்டிற்கு இடையிலேயே இருந்தது. மிகக் குறைந்த மதிப்பெண் பெற்றவர்களை மட்டுமே வடிகட்டிவிட்டு, குறைந்த மதிப்பெண் பெற்ற ஒரு பெரும் கூட்டத்தைத் தகுதி பெற அனுமதிக்கும் ஒரு குறைந்தபட்ச வடிகட்டியாக மட்டுமே நீட் செயல்படுகிறது என்பதை இப்புள்ளிவிவரங்கள் வெளிப்படுத்துகின்றன.

ஆனால், ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு மருத்துவக் கல்லூரிகளில் நடைபெறும் மாணவர் சேர்க்கையோ முற்றிலும் மாறுபட்ட ஒரு

கதையைச் சொல்கிறது. அங்கு, குறைந்த கட்டணத்தில் கிடைக்கும் வரையறுக்கப்பட்ட இடங்களுக்கான போட்டி மிகக் கடுமையாக இருப்பதால், பொதுப் பிரிவு மாணவர்களுக்கான 'கட்–ஆஃப்' மதிப்பெண்கள் ஆண்டுதோறும் 720–க்கு 600 அல்லது 650–ஐத் தாண்டுகின்றன.

ஆய்வு நேர்வு (தமிழ்நாடு 2023): மாநில அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கான 'கட்–ஆஃப்' மதிப்பெண்கள் பின்வருமாறு இருந்தன: பொதுப் பிரிவு – 602 (83.6%), பிற்படுத்தப்பட்டோர் – 556 (77.2%), மிகவும் பிற்படுத்தப்பட்டோர் & சீர்மரபினர் – 530 (73.6%), பட்டியலினத்தோர் – 448 (62.2%) மற்றும் பட்டியல் பழங்குடியினர் – 355 (49.3%). இப்புள்ளிவிவரங்கள், அதே ஆண்டில் நீட் தேர்வில் தகுதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த குறைந்தபட்ச மதிப்பெண்களுடன் ஒப்பிடும்போது, மிகப்பெரிய முரண்பாட்டைக் காட்டுகின்றன: பொதுப் பிரிவு – 137 (19.0%) மற்றும் இதர பிற்படுத்தப்பட்டோர்/ பட்டியலினத்தோர்/ பட்டியல் பழங்குடியினர் – 107 (14.9%).

எனவே, நீட் தேர்வு ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு வேறுபட்ட தர்க்கங்களுடன் ஒரே நேரத்தில் செயல்படுகிறது:

- குறைந்த எண்ணிக்கையிலான அரசு இடங்களுக்காகப் போட்டியிடும் ஏழை மாணவர்களுக்கு, மிகக் கடுமையான தரவரிசைப் போட்டி.
- அதிகக் கட்டணம் கொண்ட தனியார் இடங்களை நிரப்புவதற்காக, மிக மிகக் குறைவான தகுதி வரம்பு.

எனவே, இத்தேர்வு தகுதியை அளவிடும் ஒரு சீரான அளவுகோலாகச் செயல்படுவதை நிறுத்திவிட்டது. மாறாக, இது ஏழைகளுக்குக் கெடுபிடியாகவும், பணக்காரர்களுக்குத் தாராளமாகவும் செயல்படும் ஒரு கருவியாக மாறியுள்ளது.

நீட்–முதுநிலை (NEET–PG – MD/MS): பூஜ்ஜிய சதமானம் எனும் கேலிக்கூத்து

நீட்–இளநிலைத் தேர்வு, தரநிலைகள் நீர்த்துப்போவது குறித்த கேள்விகளை எழுப்பியது என்றால், நீட்–முதுநிலைத் தேர்வு அந்தச் சந்தேகங்கள் அனைத்தையும் துடைத்தெறிந்து உண்மையை உறுதிப்படுத்துகிறது. 2021 முதல் 2025 வரையிலான தரவுகள் காட்டுவது என்னவென்றால், பொதுப் பிரிவு மாணவர்களுக்கான பெயரளவிலான அளவுகோல் 50–வது சதமானமாக இருந்தபோதிலும், நடைமுறையில் இது மொத்தமுள்ள 800 மதிப்பெண்களில் சுமார் 276

முதல் 302 மதிப்பெண்களை மட்டுமே குறிப்பதாக இருந்தது (தோராயமாக 34 – 38 விழுக்காடு). இதைவிடக் கொடுமை என்னவென்றால், தனியார் கல்லூரிகளும், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களும் தங்கள் இடங்கள் அனைத்தையும் நிரப்புவதற்கு உதவும் வகையில், தகுதிக்கான 'கட்–ஆஃப்' மதிப்பெண்கள் திரும்பத் திரும்பக் கடுமையாகக் குறைக்கப்பட்டுள்ளன. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில், இறுதி 'கட்–ஆஃப்' முறையே 35–வது மற்றும் 25–வது சதமானமாகக் குறைக்கப்பட்டது. 2023ஆம் ஆண்டில் இறுதி 'கட்–ஆஃப்' *பூஜ்ஜிய சதமானத்திற்கு* குறைக்கப்பட்டது. இதன் வழியாக, பூஜ்ஜிய மதிப்பெண் பெற்றவர்கள் (அல்லது பயன்படுத்தப்படும் முறைப்படுத்தல் தர்க்கத்தைப் பொறுத்து, பூஜ்ஜிய மதிப்பெண்ணுக்கு கீழே எதிர்மறை மதிப்பெண் பெற்றவர்கள் கூட) எம்டி/எம்எஸ் (MD/MS) படிப்புகளில் சேருவதற்குத் தகுதி பெற்றனர். 2024ஆம் ஆண்டில், இந்த வரம்பு பெயரளவிற்கு 5–வது சதமானமாக மட்டுமே இருந்தது. 2025–ஆம் ஆண்டில், (ஜனவரி 31, 2026 நிலவரப்படி) கட்–ஆஃப் வெறும் 7–வது சதமானமாக மட்டுமே இருந்தது. மேலும், இது இன்னும் குறைக்கப்படுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. தகுதித் தரநிலையை 50–வது சதமானத்திலிருந்து பூஜ்ஜியத்திற்குக் குறைத்துக்கொள்ளும் ஒரு தேர்வு, நிச்சயம் திறமையை மதிப்பிடுவதில்லை; அது வெறும் இடங்களை ஒதுக்கும் பணியை மட்டுமே செய்கிறது. ஆக, 'தகுதி' என்ற போர்வையில், தனியார் கல்லூரிகளிலும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலும் இடங்களை நிரப்புவதை நியாயப்படுத்தும் ஒரு வழிமுறையாகவே நீட்–முதுநிலைத் தேர்வு அம்பலப்பட்டுள்ளது. இங்கே, கல்வித் திறனை விடக் கட்டணம் செலுத்தும் திறனே தீர்மானிக்கும் தகுதியாக மாறியுள்ளது.

நீட்–உயர் சிறப்பு (NEET–SS): மீண்டும் அரங்கேறிய பூஜ்ஜிய சதமான கேலிக்கூத்து

இந்தச் சிதைவு, உயர் சிறப்பு (Super–specialty) மருத்துவப் படிப்புகளில் மிகவும் வெளிப்படையாகத் தெரிகிறது. மருத்துவக் கல்வியிலேயே மிகக் கடுமையான கல்வி வடிகட்டியாகத் தர்க்கரீதியாக இருக்க வேண்டிய நீட்–உயர் சிறப்புத் தேர்வின் இறுதி 'கட்–ஆஃப்', 2023 மற்றும் 2024 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான கலந்தாய்வு சுழற்சிகளிலும் *பூஜ்ஜிய சதமானத்திற்கு* குறைக்கப்பட்டது. 2022 மற்றும் 2021ஆம் ஆண்டுகளிலும், இந்த வரம்பு முறையே 20–வது மற்றும் 35–வது சதமானத்திற்குக் கடுமையாகக் குறைக்கப்பட்டது. 2025–ஆம் ஆண்டிற்கான 'கட்–ஆஃப்' இன்னும் நிலுவையில் உள்ளது;

ஆனால் கடந்தகாலப் போக்குகள், தரநிலைகள் மேலும் நீர்த்துப்போவதையே சுட்டிக்காட்டுகின்றன. உயர் சிறப்பு மருத்துவச் சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வில் எந்தவொரு குறைந்தபட்ச செயல்திறனும் தேவையில்லை என்ற நிலை வரும்போது, அத்தேர்வின் கல்விசார் அடிப்படைத் தர்க்கமே தகர்ந்துவிடுகிறது. எனவே, நீட்–உயர் சிறப்புத் தேர்வு என்பது மேன்மையின் அளவுகோலாக இல்லாமல், ஒரு நடைமுறைச் சம்பிரதாயமாக மாறிவிட்டது. இது கடுமையானது போன்ற தோற்றத்தைத் தக்கவைத்துக்கொண்டே, அமைதியாகத் தரத்தைக் கைவிடுகிறது.

நீட் தேர்வின் கட்டமைப்பு ரீதியான குறைபாடு: நுழைவுத் தேர்வா அல்லது தகுதித் தேர்வா?

நீட் தேர்வு, ஒரே நேரத்தில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு வேடங்களை அணிய முயற்சிக்கிறது. ஏழை மற்றும் நடுத்தர வர்க்க மாணவர்களுக்கு, நீட் ஒரு *ஈவிரக்கமற்ற நுழைவுத் தேர்வாகச்* செயல்படுகிறது. அரசு மருத்துவக் கல்லூரிகளில் சேருவது ஒன்றே அவர்களுக்கான செலவுக்குறைவான உயர்கல்வி பாதையாகும் வழியாகும். அதற்கு, பல ஆண்டுகள் செலவு செய்து, மீண்டும் மீண்டும் தேர்வு எழுதி, கடும் மன உளைச்சலுக்கு ஆளாகி, முழுமையான மதிப்பெண்களைப் பெற வேண்டியுள்ளது. இவர்களைப் பொறுத்தவரை, "தகுதி" என்பது பற்றாக்குறையால் உந்தப்பட்ட, விலக்கி வைக்கும் ஒரு தரவரிசையாகவே (exclusionary rank order) வரையறுக்கப்படுகிறது.

ஆனால், வசதி படைத்த மாணவர்களுக்கோ, நீட் வெறும் *ஒரு தளர்வான தகுதித் தேர்வாக* மட்டுமே செயல்படுகிறது. பணக்கார மாணவர்கள் தரவரிசைக்காகப் போட்டியிடத் தேவையில்லை; அவர்கள் வெறும் குறைந்தபட்சத் தகுதி வரம்பைத் தாண்டினால் போதும். சில நேரங்களில் இது நீட்–இளநிலையில் 16–23 விழுக்காடாகவும், நீட் முதுநிலை மற்றும் உயர் சிறப்பில் பூஜ்ஜியமாகவும் கூட இருக்கிறது. தகுதி பெற்றவுடன், கட்டணத்தைச் செலுத்தினால் அவர்களுக்கு இடம் கிடைத்துவிடும்.

இந்த இரட்டை ஆட்சிமுறையில், 550 மதிப்பெண்கள் பெற்ற ஒரு ஏழை (பொதுப் பிரிவு) மாணவருக்குப் போதுமான தரவரிசை இல்லாததால் எம்பிபிஎஸ் இடம் மறுக்கப்படலாம். அதே சமயம், வெறும் 150 மதிப்பெண்கள் பெற்ற ஒரு பணக்கார (பொதுப் பிரிவு) மாணவர், பணத்தைக் கொடுத்து இடத்தைப் பெற முடியும். ஏழைகள் தங்கள் அறிவுத்திறனை மெய்ப்பிக்க வேண்டும்; பணக்காரர்கள் வெறுமனே குறைந்தபட்ச தகுதி வரம்பை பெற்றால் போதும்.

இந்த இரட்டைத் தர்க்கம், 'தகுதி' என்பதை ஒரு கேலிக்கூத்தாக்குகிறது. கல்வித் தரத்தை உறுதி செய்வதற்கு நீட் அவசியம் என்றால், அதன் 'கட்–ஆஃப்' மதிப்பெண்ணைப் பூஜ்ஜியத்திற்குக் குறைக்கக் கூடாது. செயல்பாடு எப்படி இருந்தாலும் இடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்பதுதான் குறிக்கோள் என்றால், தரத்திற்கு இந்தத் தேர்வே அவசியமில்லை. இந்த இரண்டு நிலைகளையும் ஒரே நேரத்தில் தக்கவைக்க முயற்சிப்பதன் வழியாக, நீட் தனது சொந்த நியாயத்தையே தகர்க்கிறது. இது அர்த்தமுள்ள ஒரு வடிகட்டியாகவும் இல்லை; அல்லது பாதிப்பில்லாத ஒரு சம்பிரதாயமாகவும் இல்லை. மாறாக, இது சோர்வடையச் செய்யும், சமூக ரீதியாக அதிக விலை கொடுக்க வைக்கும் ஒரு தடையாகவும் மாறியுள்ளது.

இந்த முரண்பாட்டைச் சீர்செய்ய, 'நுழைவுத் தேர்வு' மற்றும் 'தகுதித் தேர்வு' ஆகிய செயல்பாடுகள் பிரிக்கப்பட வேண்டும். நீட் தேர்வு தக்கவைக்கப்பட்டால், அது கண்டிப்பாக ஒரு நுழைவுத் தேர்வாக மட்டுமே செயல்பட வேண்டும். நிரப்பப்படாத தனியார் அல்லது நிகர்நிலைப் பல்கலைக்கழக இடங்கள் தானாகவே அரசிடம் ஒப்படைக்கப்பட்டு, அரசுக் கட்டணத்தில் தகுதி மற்றும் இட ஒதுக்கீடு அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும். தனியார் மருத்துவக் கல்லூரி இடங்கள் நிரம்புவதை உறுதி செய்வதற்காக மட்டுமே தகுதி வரம்புகளைக் குறைவாக வைத்திருப்பது, தரப்படுத்துதல் என்னும் போர்வையில், நீட் தேர்வை முழுக்க முழுக்க வணிக நலன்களுக்குச் சேவையாற்றும் ஒரு கருவியாக மாற்றிவிடுகிறது.

ஏற்கனவே குறிப்பிட்டது போல, உண்மையான தகுதிதான் நோக்கம் என்றால், அதற்கு நீட் தகுதியற்றது. பள்ளிப் பொதுத் தேர்வுகளில் வெளிப்படும் தொடர்ச்சியான கல்விச் செயல்பாடே, மிகவும் நம்பகமான, சமத்துவமான மற்றும் ஆதாரம் சார்ந்த வடிகட்டியாகும். பள்ளிப் பொதுத் தேர்வில், உதாரணமாக, 75 விழுக்காட்டுத் தகுதி வரம்பு என்பது, தனியார் மருத்துவ நிறுவனங்களில் இடங்களை நிரப்புவதற்காக நீட் தற்போது வைத்துள்ள பெயரளவுத் தரத்தை விட மிக அதிகம்.

பரிந்துரை 7

தேசிய மருத்துவ ஆணையச் சட்டம், 2019–ஐத் திருத்தி, அதன் பிரிவு 14–ஐ நீக்க வேண்டும். இளநிலை (UG), முதுநிலை (PG) மற்றும் உயர் சிறப்பு (SS) ஆகிய அனைத்து நிலைகளிலும் நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும். கல்வி மற்றும் பொதுச் சுகாதாரம் சார்ந்த பொறுப்புகளுக்கு ஏற்ற வகையில், மாணவர் சேர்க்கை மற்றும் மதிப்பீட்டு உரிமைகளை மாநில அரசுகளிடமும், பல்கலைக்கழகங்களிடமும் மீட்டளிக்க வேண்டும்.

X. தனித்து நிற்கும் நீட் தேர்விற்கு எதிரான தமிழ்நாட்டின் போராட்டம்

இந்திய மாநிலங்களில், நீட் தேர்விற்கு எதிராகத் தொடர்ச்சியான கல்விசார், சட்டமன்ற மற்றும் அரசமைப்பு ரீதியிலான சவாலை முன்னெடுப்பதில் தமிழ்நாடு தனித்து நிற்கிறது. தமிழ்நாடு இத்தேர்வை வெறும் ஒரு தேவையற்ற தேர்வுச் "சீர்திருத்தமாக" மட்டும் பார்க்கவில்லை. மாறாக, இது அதிகாரத்தை மையப்படுத்தக்கூடிய ஒரு கருவியாகவே பார்க்கிறது. பள்ளிக் கல்வியை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடு, மொழி பன்முகத்தன்மை மற்றும் சமூக நீதி ஆகியவற்றில் வேரூன்றிய, இம்மாநிலத்தின் நீண்ட காலச் சமத்துவ மருத்துவச் சேர்க்கை மாதிரியை இது சிதைக்கிறது. மாநிலத்தின் இந்த எதிர்ப்பு, சட்டமன்ற நடவடிக்கை, தரவு அடிப்படையிலான ஆய்வு மற்றும் அரசமைப்புச் சட்ட நடைமுறை என மூன்று வெவ்வேறான தளங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற ரீதியிலான எதிர்ப்பு

மருத்துவக் கல்விச் சேர்க்கையின் மீதான தனது அதிகாரத்தை மீட்டெடுக்கத் தமிழ்நாடு தொடர்ந்து முயன்று வருகிறது. ஏனெனில், இத்துறை மொழி, கற்பித்தல் முறை, பள்ளிக் கல்வி மற்றும் சமூக நீதி ஆகியவற்றுடன் பின்னிப்பிணைந்துள்ள ஒன்றாகும்.

- *2017–ஆம் ஆண்டின் சட்டமுன்வடிவுகள்*: நீட் தேர்விலிருந்து விலக்கு கோரும் இரண்டு சட்டமுன்வடிவுகளைச் சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றியது. இவை இரண்டும் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக நிறுத்தி வைக்கப்பட்டன; அவை நிலுவையிலேயே உள்ளன.
- *7.5 விழுக்காட்டு கிடைமட்ட இட ஒதுக்கீடு (2020): நீதிபதி பி. கலையரசன் குழுவின்* பரிந்துரைகளின் அடிப்படையில், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவச் சேர்க்கையில் 7.5 விழுக்காட்டு 'கிடைமட்ட இட ஒதுக்கீட்டை' (Horizontal Reservation) தமிழ்நாடு அரசு வழங்கியது. நீட் தேர்வால் அரசுப்பள்ளி மாணவர்கள் வாய்ப்பு மறுக்கப்படும் சூழலை மழுங்கடிப்பதற்கான ஒரு வெளிப்படையான முயற்சியாக இது அமைந்தது.
- *நீட் விலக்குச் சட்டமுன்வடிவு (2021–2022): நீதிபதி ஏ.கே. ராஜன் குழுவின்* (2021) அறிக்கையைத் தொடர்ந்து, 2021 செப்டம்பர் 13, 2021 அன்று, '*தமிழ்நாடு இளநிலை மருத்துவப்*

படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, 2021'–ஐ சட்டமன்றம் நிறைவேற்றியது. 12–ஆம் வகுப்பு பொதுத் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர் சேர்க்கையை மீட்டெடுப்பதே இதன் நோக்கமாகும். 2022 பிப்ரவரி 1 அன்று ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட இச்சட்டமுன்வடிவு, 2022 பிப்ரவரி 8 அன்று மீண்டும் நிறைவேற்றப்பட்டு, அரசமைப்புச் சட்டப்பிரிவு 254(2)–இன் கீழ் பரிசீலனைக்காகக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டது. 2025 ஏப்ரல் 4 அன்று குடியரசுத் தலைவர் முர்மு இச்சட்டமுன்வடிவிற்கு ஏற்பிசைவு அளிக்க மறுத்ததைத் தொடர்ந்து, இந்த மறுப்பை எதிர்த்து 2025 நவம்பரில் தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தை நாடியது.

தரவு ரீதியிலான எதிர்ப்பு: நீதிபதி ஏ.கே. ராஜன் குழு

நீதிபதி ஏ.கே. ராஜன் குழு, தமிழ்நாட்டின் நிலைப்பாட்டிற்குத் தேவையான அறிவுசார் மற்றும் தரவு அடிப்படையிலான அடித்தளத்தை வழங்கியது. அதன் 2021–ஆம் ஆண்டு அறிக்கை, நீட் தேர்வு ஏற்படுத்தும் சமூக–பொருளாதாரத் தாக்கங்கள் குறித்த தரவு சார்ந்த குற்றச்சாட்டுகளை முன்வைத்தது. இத்தேர்வு தகுதியை வடிகட்டும் ஒரு கருவியாகச் செயல்படுவதை விட, ஒரு சமூக–பொருளாதாரத் தடையாகவே அதிகம் செயல்படுகிறது என்ற முடிவை அந்த அறிக்கை முன்வைத்தது. இதில் நான்கு முக்கியப் போக்குகள் குறிப்பாகச் சுட்டிக்காட்டப்பட்டன:

1. **பள்ளிக் கல்வி மற்றும் மொழி ரீதியான விலக்கல்**
   நீட்– இளநிலை தேர்வு வருவதற்கு முன்பாக, அரசு மருத்துவ இடங்களில் சராசரியாக 14.44 விழுக்காடு இருந்த தமிழ் வழி மாணவர்கள், நீட்– இளநிலை தேர்வு வந்த பின்னர் 1.67 விழுக்காடாகக் குறைந்தனர். அதே காலகட்டத்தில், ஆங்கில வழி மாணவர்களின் எண்ணிக்கை 56.02 விழுக்காட்டிலிருந்து 69.53 விழுக்காடாக உயர்ந்தது.

2. **பாடத்திட்டங்களுக்கு இடையில் நிலவும் பாரபட்சம்**
   நீட் தேர்வுக்கு முந்தைய காலத்தில், அரசு மருத்துவ இடங்களில் வெறும் 0.10 விழுக்காடு மட்டுமே இடம்பிடித்திருந்த சி.பி.எஸ்.இ (CBSE) மாணவர்கள், நீட் தேர்வுக்குப் பிந்தைய காலத்தில் 22.66 விழுக்காடாக உயர்ந்தனர். அதே வேளையில், இதே காலகட்டத்தில் மாநிலப் பாடத்திட்ட மாணவர்களின் பங்கு 70.11 விழுக்காட்டிலிருந்து 46.77 விழுக்காடாகச் சரிந்தது. சிபிஎஸ்இ பள்ளிகள் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலும், தனியாருக்குச்

சொந்தமானதாகவும், அதிக செலவை ஏற்படுத்தக்கூடியதாகவும் உள்ளன. எனவே, இந்த மாற்றம் புவியியல் ரீதியாகவும், வர்க்க ரீதியாகவும் ஒரு வடிகட்டியை உருவாக்குகிறது. பெரும்பான்மையான தமிழ்நாடு மாணவர்களுக்குக் கல்வி அளிக்கும் மாநிலப் பாடத்திட்டத்தைப் புறந்தள்ளிவிட்டு இது நிகழ்கிறது.

3. **கிராமப்புற மற்றும் முதல் தலைமுறை மாணவர்கள் சேர்க்கையில் சரிவு**

நீட் தேர்வுக்கு முந்தைய காலத்தில் சராசரியாக 61.45 விழுக்காடாக இருந்த கிராமப்புற மாணவர்களின் பிரதிநித்துவம், நீட் தேர்வுக்குப் பிந்தைய காலத்தில் 49.91 விழுக்காடாகக் குறைந்தது. அதேபோல, 2016–17–இல் 24.94 விழுக்காடாக இருந்த முதல் தலைமுறைப் பட்டதாரிகளின் எண்ணிக்கை, 2020–21–இல் 14.46 விழுக்காடாகச் சரிந்தது. கிராமப்புற மற்றும் நலிவடைந்த பிரிவு மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புகளை வரலாற்று ரீதியாக விரிவுபடுத்தியதோடு, மருத்துவத் துறைக்கான திறமையாளர் வரவை நகர்ப்புற மேல்தட்டுப் பகுதிகளையும் தாண்டி விரிவுபடுத்திய ஒரு கட்டமைப்பையே நீட் தேர்வு சிதைத்து வருகிறது என்னும் தமிழ்நாட்டின் வாதத்தை, இப்போக்குகள் உறுதிப்படுத்துகின்றன.

4. **பயிற்சி மையங்கள் மற்றும் மறுமுறைத் தேர்வு எழுதுவோரைச் சார்ந்த பொருளாதாரம்**

2019–20 ஆம் ஆண்டில், மருத்துவத்தில் சேர்ந்த மாணவர்களில் 99 விழுக்காடு பேர் தனியார் பயிற்சி மையங்களில் பயிற்சி பெற்றவர்களாவர். முந்தைய ஆண்டுகளில் தேர்ச்சி பெறாமல் மீண்டும் தேர்வு எழுதுவோரின் (Repeaters) மருத்துவச் சேர்க்கை விகிதம், 2016–17–இல் 12.47 விழுக்காட்டிலிருந்து, 2020–21–இல் 71.42 விழுக்காடாக வெகுவாக உயர்ந்துள்ளது. இத்தகைய மாணவர்கள் பெரும்பாலும், படிப்புக்கு இடையிலான இக்காலகட்டத்திற்குத் தேவையான செலவுகளையும், ரூ.2.5 லட்சம் முதல் ரூ.4.5 லட்சம் வரையிலான பயிற்சிக் கட்டணத்தையும் செலுத்தக்கூடிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். எனவே, நீட் தேர்வு என்பது ஒருவரின் அறிவுத் திறனைச் சோதிக்கும் களமாக இல்லாமல், அவரது பொருளாதாரத் தாக்குப்பிடிக்கும் திறனைச் சோதிக்கும் களமாக மாறியுள்ளது. இது மருத்துவக் கல்விக்கான வாய்ப்பை ஒரு சந்தை வணிகமாக மாற்றியுள்ளது.

தகுதி குறித்த மாயை

நீட் தேர்வை ஆதரிப்பவர்கள், இத்தேர்வு தரத்தையும், தகுதி அடிப்படையிலான முறையையும் (meritocracy) மேம்படுத்துவதாகக் கூறுகின்றனர். இருப்பினும், ராஜன் குழு பின்வருவனவற்றைக் கண்டறிந்தது:

- மருத்துவத்தில் சேர்ந்த மாணவர்களின் சராசரி மேல்நிலைப் பள்ளி மதிப்பெண்கள், நீட் தேர்விற்கு முந்தைய காலத்தில் 98.16 விழுக்காடாக இருந்தது. ஆனால், நீட் தேர்விற்குப் பிந்தைய காலத்தில் அது 89.05 விழுக்காடாகக் குறைந்தது.
- எம்.பி.பி.எஸ் தேர்ச்சி வீதங்கள், முதலாம் ஆண்டில் மிகச்சிறிய முன்னேற்றத்தைக் காட்டினாலும், இரண்டாம் ஆண்டில் சரிவைக் கண்டுள்ளன. எனவே, நீட் தேர்வு மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்துகிறது என்பதற்கு எவ்விதத் தெளிவான சான்றும் இல்லை.

வளர்ந்து வரும் 'பெயரளவுப் பள்ளி' கலாச்சாரத்தையும் இக்குழு சுட்டிக்காட்டியது. இதில், மாணவர்கள் 11 மற்றும் 12–ஆம் வகுப்புகளில் பள்ளிகளில் பெயரளவிற்கு மட்டுமே சேர்கின்றனர்; ஆனால் முழு நேரமும் நீட் தேர்வுக்காக மட்டுமே தயாராகின்றனர். பள்ளிக் கல்வி முறை இவ்வாறு சிதைக்கப்படுவதை, ஆகஸ்ட் 2024–இல் வெளியான ஊடகச் செய்திகள் வெளிச்சம் போட்டுக் காட்டின. கோரக்பூர் எய்ம்ஸ் (AIIMS) மருத்துவக் கல்லூரியில் பயின்ற 125 எம்பிபிஎஸ் மாணவர்களுள், 104 பேர் உள் மதிப்பீட்டுத் தேர்வுகளில் தோல்வியடைந்தனர். 'நீட் தேர்வில் வெற்றி பெறுவதற்கும்','மருத்துவம் படிப்பதற்கும்' இடையிலான இடைவெளியை இது அடிக்கோடிட்டுக் காட்டியது.[15]

ஆக, 'தகுதி' என்பதன் வரையறையை நீட் தேர்வு மாற்றியமைத்துள்ளது. அதாவது, 'தொடர்ச்சியான கல்விச் செயல்பாடு' என்பது மாறி, 'தேர்வு எழுதும் திறன்' என்பதே தகுதியாக மாறியுள்ளது. இது பள்ளிக் கல்வி, சமூக சமத்துவம் மற்றும் மருத்துவ மனிதவளம் ஆகியவற்றின் மீது குறிப்பிடத்தக்கத் தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக, தமிழ்நாட்டின் மாணவர் சேர்க்கை முறை – இடையில் ஒரு குறுகிய காலத்தைத் தவிர்த்து – ஒரேயொரு தேர்வை அடிப்படையாகக் கொள்ளாமல், பள்ளித் தேர்ச்சியையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இம்முறை, இந்தியாவிலேயே

---

[15] Barsha Misra, 'Shocking! 104 out of 125 MBBS students fail in AIIMS Gorakhpur Internal Exams' (*Medical Dialogues* August 5, 2025) accessed January 28, 2026.

மிகவும் பரவலான சமூக மற்றும் புவியியல் பின்புலம் கொண்ட மருத்துவ மனிதவளத்தை உருவாக்கியது. இந்தச் சாதனையை நீட் தேர்வு ஆபத்துக்குள்ளாக்குவதாகத் தமிழ்நாடு வாதிடுகிறது. ஏனெனில், இத்தேர்வு மாணவர்களின் இயல்புத்திறனுக்குப் (aptitude) பதிலாக அவர்களின் பொருளாதார வசதியை முன்னிறுத்துகிறது. மேலும், ஒரு கூட்டாட்சி அமைப்பில் மாநிலத்தின் மிக முக்கியப் பொறுப்புகளான கல்வி மற்றும் பொதுச் சுகாதாரம் ஆகியவற்றை நிர்வகிக்கும் மாநிலத்தின் திறனை இது கட்டுப்படுத்துகிறது.

XI. தேசிய மருத்துவப் படிப்பு நிறைவுத் தேர்வு: எதிரான வாதங்கள்

மருத்துவக் கல்வி ஒழுங்குமுறையை ஒன்றிய அரசு ஒருங்கிணைத்துத் தன்வசப்படுத்துதலின் இறுதிக்கட்ட நடவடிக்கையாகத் தேசிய மருத்துவப் படிப்பு நிறைவுத் தேர்வு (NExT/நெக்ஸ்ட்) அமைகிறது. தேசிய மருத்துவ ஆணையச் சட்டம், 2019-ன் சட்டப்பிரிவு 15-ஐ அடிப்படையாகக் கொண்டு, மூன்று சட்டரீதியான பணிகளைச் செய்யும் ஒரே இறுதித் தேர்வாக 'நெக்ஸ்ட்' கருதப்படுகிறது: (i) மருத்துவத் தொழில் செய்வதற்கான உரிமம், (ii) முதுநிலை மருத்துவப் படிப்புச் சேர்க்கைக்கான தகுதி, (iii) அயல்நாட்டு மருத்துவப் பட்டதாரிகளுக்கான தகுதித் தேர்வு. சட்டப்பிரிவு 15(1)-ன் படி, 'நெக்ஸ்ட்' தேர்வில் தேர்ச்சி பெறாமல் எவரும் மாநில அல்லது தேசிய மருத்துவப் பதிவேடுகளில் பதிவு செய்ய முடியாது. சட்டப்பிரிவு 15(5)-ன் படி, இது அடிப்படைச் சிறப்புப் படிப்புகளுக்கான – அதாவது எம்டி/எம்எஸ் (MD/MS) படிப்புகளுக்கான – தகுதித் தேர்வாக, தற்போதைய நீட்-முதுநிலைக்கு மாற்றாக அமைகிறது.

அமலாக்க நிலை

சட்டப்பிரிவு 15(3)-ன் படி, தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் நடைமுறைக்கு வந்த மூன்று ஆண்டுகளுக்குள் (அதாவது, 2023ஆம் ஆண்டுக்குள்) இதைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவர வழிவகை செய்யப்பட்டிருந்தாலும், இதன் அமலாக்கம் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டு வருகிறது. *தேசிய மருத்துவப் படிப்பு நிறைவுத் தேர்வு (NExT) விதிமுறைகள்*, 2023 (ஜூன் 2023), இதன் உத்தேசக் கட்டமைப்பை இறுதியாக விவரித்தது. ஆனால் மாணவர்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் மாநில அரசுகளிடமிருந்து எழுந்த பரவலான எதிர்ப்புகளைத்

தொடர்ந்து, தேசிய மருத்துவ ஆணையம் ஒரு பொது அறிவிப்பை (ஜூலை 13, 2023) வெளியிட்டது. அதில், "மறு உத்தரவு வரும் வரை" 'நெக்ஸ்ட்' ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதன் விளைவாக, நீட்–முதுநிலை மற்றும் எஃப்எம்ஜிஇ (FMGE) நடைமுறைகளே தொடர்ந்து செயல்பாட்டில் உள்ளன.

வடிவமைப்பு அம்சங்களும் ஊக்கத் திரிபுகளும்

நெக்ஸ்ட் விதிமுறைகள் இரண்டு கட்டக் கட்டமைப்பை ஏற்கின்றன:

- *நெக்ஸ்ட் படிநிலை 1* – ஒன்றிய அரசால் நிர்வகிக்கப்படும், கணினி சார்ந்த தேர்வு;
- *நெக்ஸ்ட் படிநிலை 2* – கல்லூரி அளவில் நடத்தப்படும் செய்முறை, மருத்துவம் மற்றும் திறன் சார்ந்த மதிப்பீடு.

மதிப்பெண் பங்கீட்டில் ஒரு மிக முக்கியமான குறைபாடு உள்ளது. "மருத்துவச் செயல்முறைத் திறனை" மேம்படுத்துவது பற்றிய வாய்ஜாலப் பேச்சு இருந்தபோதிலும், *விதிமுறை 2.3–ன் படி, படிநிலை 1 மட்டுமே முதுநிலை மருத்துவப் படிப்பிற்கான தேசியத் தரவரிசையைத் தீர்மானிக்கிறது; அதே வேளையில் படிநிலை 2 வெறும் தேர்ச்சி/தோல்வி தகுதியாக மட்டுமே செயல்படுகிறது.* இதன் இயல்பான விளைவு, மாணவர்களின் முன்னுரிமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகும்: மாணவர்கள் தங்கள் கவனத்தை, பயிற்சி மருத்துவம் சார்ந்த நோயாளிகள் கவனிப்பிலிருந்து விலக்கி, படிநிலை 1–க்கான பயிற்சி மைய வகுப்புகளுக்குத் திருப்பத் தொடங்குவார்கள். மருத்துவச் செயல்முறை அனுபவத்தை வலுப்படுத்துவதற்குப் பதிலாக, இந்தியாவின் "பயிற்சி மையக் கலாச்சாரத்தை" எம்பிபிஎஸ் இறுதி ஆண்டு வரை நீட்டிக்கும் அபாயத்தை 'நெக்ஸ்ட்' உருவாக்குகிறது. நோயாளிகளைக் கவனித்துப் பயிலும் முறையை நம்பியுள்ள மருத்துவத் துறைக்கு, இது ஓர் எதிர்மாறான விளைவாகும்.

நீட்–முதுநிலை (NEET–PG) முரண்பாடு

கல்வி மற்றும் தொழில்முறைத் தரத்தை உயர்த்துவதுதான் 'நெக்ஸ்ட்' தேர்விற்கான அதிகாரப்பூர்வ நியாயம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், அண்மைய கால ஒழுங்குமுறை நடவடிக்கைகளுடன் இது முரண்பட்டு நிற்கிறது. 2023–ஆம் ஆண்டில், குறிப்பாக அதிகக் கட்டணம் வசூலிக்கும் தனியார் கல்லூரிகளிலும், மருத்துவம் சாராத பிற துறைகளிலும் (non–clinical branches) உள்ள காலியிடங்களை நிரப்புவதற்காக, சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

நீட்–முதுநிலைத் தகுதி வரம்பை அனைத்துப் பிரிவினருக்கும் பூஜ்ஜிய சதமானமாகக் குறைத்தது. இது கொள்கை ரீதியாக ஒரு முரண்பாட்டை உருவாக்குகிறது: ஒரு பக்கம், திறமையை உறுதி செய்வதற்காகக் கடுமையான தேசிய அளவிலான உரிமத் தேர்வைக் கொண்டுவர வேண்டும் என்று ஒழுங்குமுறை ஆணையம் கூறுகிறது. ஆனால் மறுபக்கம், முதுநிலை மருத்துவப் பயிற்சிக்கான குறைந்தபட்சத் தேர்ச்சித் தரநிலைகளை அதே ஆணையம் தள்ளுபடி செய்கிறது. அடிப்படையிலுள்ள வணிக ரீதியிலான அழுத்தங்களுக்குத் தீர்வு காணாமல் 'நெக்ஸ்ட்' தேர்வைக் கொண்டுவருவது, தரத்தை சீர்திருத்துவதாக இல்லாமல், வெறும் தேர்வு முறையை மாற்றுவதாக மட்டுமே அமைந்துவிடும் அபாயம் உள்ளது.

பொறுப்புடைமை மற்றும் கூட்டாட்சித் தத்துவம்

இதிலுள்ள ஆழமான பலவீனம் அரசமைப்பு ரீதியிலானது. நீட் (நுழைவு) மற்றும் நெக்ஸ்ட் (வெளியேறுதல்/உரிமம்) ஆகியவற்றின் வழியாக, மருத்துவக் கல்வியின் ஒட்டுமொத்தப் பாதையையும் ஒன்றிய அரசு தனது மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது. ஆனால், அதற்கேற்றவாறு மருத்துவப் பயிற்சியின் தரம் அல்லது சுகாதாரச் சேவை வழங்கல் ஆகியவற்றிற்கான பொறுப்பை அது ஏற்கவில்லை; இப்பொறுப்புகள் தொடர்ந்து மாநிலங்களிடமே உள்ளன. பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரை, 'நெக்ஸ்ட்' தேர்வு கல்விசார் அரசுரிமையின் மீதான மற்றொரு தாக்குதலாகும். பல ஆண்டுகால உள் மதிப்பீட்டுத் தேர்வுகள், மருத்துவமனைப் பயிற்சிகள் மற்றும் பயிற்சி மருத்துவர் கால மதிப்பீடுகள் ஆகியவை, மையப்படுத்தப்பட்ட 'படிநிலை 1' மதிப்பெண்ணுக்கு முன்னால் மதிப்பிழந்து போகின்றன. பல்கலைக்கழகம் என்பது வெறும் கல்வியை வழங்கும் தளமாகவும், ஒன்றிய அரசே ஒரே மதிப்பீட்டாளராகவும் மாறுகிறது.

மருத்துவப் படிப்புக்கான நுழைவு, உரிமம் மற்றும் முதுநிலை உயர்கல்வி ஆகிய அனைத்தின் மீதான முழுக் கட்டுப்பாட்டையும், ஒரேயொரு தேசிய அதிகார மையத்திடம் எந்தவொரு பெரிய கூட்டாட்சி நாடும் ஒப்படைப்பதில்லை. அமெரிக்காவில், உரிமம் வழங்குவது முதன்மையாக மாநிலங்களின் அதிகாரத்தில் உள்ளது. கனடாவில், அது மாகாணங்களின் அதிகாரமாக உள்ளது. ஆஸ்திரேலியாவில், மாணவர் சேர்க்கையும் மதிப்பீடுகளும் பல்கலைக்கழகம் மற்றும் மாநிலங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஜெர்மனியில், கூட்டாட்சிச் சட்டம் கட்டமைப்புகளை மட்டுமே வகுக்கிறது; ஆனால் மாகாணங்களே (*Länder*) அதைச் செயல்படுத்திச் சான்றளிக்கின்றன. எனவே, நுழைவு மற்றும்

வெளியேறுதல் ஆகிய இரண்டையும் செங்குத்தாக மையப்படுத்துவதில் இந்தியா ஒரு தனித்த விதிவிலக்காக நிற்கிறது.

பரிந்துரை 8

தேசிய மருத்துவ ஆணையச் சட்டம், 2019–ஐத் திருத்தி, அதன் சட்டப்பிரிவு 15–ஐ நீக்கி, 'நெக்ஸ்ட்' தேர்வை ரத்து செய்ய வேண்டும். இத்தேர்வு பயிற்சி மையக் கலாச்சாரத்தை எம்பிபிஎஸ் இறுதி ஆண்டு வரை நீட்டிக்கிறது; மருத்துவச் செயல்முறைப் பயிற்சியைச் சிதைக்கிறது; தரநிலைகளைப் பலவீனப்படுத்துகிறது; உரிமம் வழங்குவதை மையப்படுத்துகிறது; மேலும் மருத்துவக் கல்வி மற்றும் பொதுச் சுகாதாரம் ஆகியவற்றின் கூட்டாட்சி வடிவமைப்புக்கு எதிராகச் செயல்படுகிறது.

XII. மருத்துவ மாணவர் சேர்க்கையில் அகில இந்திய ஒதுக்கீட்டை மறுபரிசீலனை செய்தல்

மாநில அரசின் நிதியில் செயல்படும் கல்லூரிகளிலிருந்து, 15 விழுக்காடு எம்.பி.பி.எஸ்/பி.டி.எஸ் இடங்களையும், 50 விழுக்காடு முதுநிலை இடங்களையும், 100 விழுக்காடு உயர் சிறப்புப் பிரிவு இடங்களையும் மத்தியத் தகுதித் தொகுப்பிற்கு வழங்கக் கட்டாயப்படுத்தும் 'அகில இந்திய இடஒதுக்கீடு' முறையானது, நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் அல்ல. மாறாக, இது அரசமைப்புச் சட்டப்பிரிவு 142–இன் கீழ் நீதித்துறையால் திணிக்கப்பட்ட ஒன்றாகும். மாநில அரசு மருத்துவக் கல்லூரிகளில் இளநிலை, முதுநிலை மற்றும் உயர் சிறப்புப் பிரிவு மாணவர் சேர்க்கையை நிர்வகிக்கும் ஒரு நிரந்தரமான, மையப்படுத்தப்பட்ட வழிமுறையாகவே இது உருவெடுத்துள்ளது. நீதியரசர் ஏ.கே. ராஜன் 2020–ஆம் ஆண்டு எழுதிய *பெனால்டி ஃபார் ப்ராக்ரஸ்?* (*Penalty for Progress?*) என்னும் தனி ஆய்வு நூல், நீதித்துறையால் உருவாக்கப்பட்ட இந்தக் கட்டமைப்பை அரசமைப்புச் சட்டரீதியாக மிகக் கடுமையாக விமர்சிக்கிறது. ஏழாவது அட்டவணை, கூட்டாட்சி அதிகாரம் மற்றும் வாழிடத் தகுதி சார்ந்த விதிகளுடன் (domicile provisions) இந்த முறைமை எந்த அளவிற்கு ஒத்திசைகிறது என்பதை இந்நூல் கேள்விக்குள்ளாக்குகிறது.

அகில இந்திய ஒதுக்கீட்டின் "ராபின் ஹுட்" தொடக்கம்

டாக்டர் பிரதீப் ஜெயின் எதிர் இந்திய ஒன்றியம் (1984)[16] *(Dr Pradeep Jain v. Union of India, 1984)* என்ற வழக்கிலிருந்தே இந்த அகில இந்திய இடஒதுக்கீடு (AIQ) முறை தோன்றியது. பல்வேறு மாநிலங்களுக்கு இடையே மருத்துவக் கட்டமைப்பு மற்றும் கல்வி வாய்ப்புகளில் நிலவிய மிகப்பெரிய ஏற்றத்தாழ்வுகளைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் மருத்துவக் கல்லூரிகளில், குறைந்தபட்சம் ஒரு குறிப்பிட்ட பகுதி இடங்களாவது இந்தியா முழுவதிலும் உள்ள மாணவர்களுக்காகத் திறந்து விடப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. வாழிடம் அடிப்படையில் (domicile–based) இடங்களை முழுவதுமாக ஒதுக்குவது அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று கூறி அதனை ரத்து செய்த நீதிமன்றம், இடஒதுக்கீடு இல்லாத "பொதுப் பிரிவு" இடங்களில் குறைந்தது 30 விழுக்காட்டையாவது தேசியத் தொகுப்பிற்கு விட்டுக்கொடுக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. இதுவே அகில இந்திய இடஒதுக்கீடு முறைக்கு அடித்தளமாக அமைந்தது.

இந்த வழிகாட்டுதலானது, *டாக்டர். தினேஷ் குமார்* தொடர்பான வழக்குத் தொடர்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. *டாக்டர். தினேஷ் குமார் (II) எதிர் மோதிலால் நேரு மருத்துவக் கல்லூரி* (1986)[17] *(Dr. Dinesh Kumar (II) v. Motilal Nehru Medical College,* 1986*)* வழக்கில், அரசு கல்லூரிகளில் உள்ள எம்பிபிஎஸ்/பிடிஎஸ் (MBBS/BDS) இடங்களில் 15 விழுக்காடு இந்த ஒதுக்கீடாக நிர்ணயிக்கப்பட்டது. முதுநிலைப் படிப்புகளுக்கு, 'பொதுப் பிரிவு' (open seats) இடங்களில் குறைந்தது 50 விழுக்காடு இடங்களாவது அகில இந்திய அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும் என்று *பிரதீப் ஜெயின்* தீர்ப்பு முதலில் கருதியது. ஆனால் தினேஷ் குமார் (II) வழக்கில், இது மொத்த முதுநிலை இடங்களில் 25 விழுக்காட்டிற்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்று மாற்றியமைக்கப்பட்டது. இருபதாண்டுகளுக்குப் பின்னர், *சவுரப் சவுத்ரி எதிர் இந்திய ஒன்றியம்* (2003)[18] *(Saurabh Chaudri v. Union of India,* 2003*)* வழக்கில் அமைந்த ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசமைப்புச் சட்ட அமர்வு, இதை 50 விழுக்காடாக உயர்த்தியது. உயர் சிறப்புப் படிப்புகளைப் பொறுத்தவரை, *பிரதீப் ஜெயின்* மற்றும் அதைத் தொடர்ந்து வந்த தீர்ப்புகளில், இருப்பிடம் சார்ந்த இட ஒதுக்கீடு முற்றிலுமாக இருக்கக்

---

[16] (1984) 3 SCC 654.

[17] (1986) 3 SCC 727.

[18] (2003) 11 SCC 146.

கூடாது என்றும், "தேசிய நலன்" கருதி மாணவர் சேர்க்கை முழுக்க முழுக்க அகில இந்தியத் தகுதியின் அடிப்படையிலேயே இருக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் வலியுறுத்தியது.

அகில இந்திய இடஒதுக்கீடு என்பது தனியார் சுயநிதிக் கல்லூரிகளில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. மாறாக, மாநில வரி செலுத்துவோரின் நிதியில், தங்களின் சொந்த பொது சுகாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்காகவே உருவாக்கப்பட்டு, நிர்வகிக்கப்படும் அரசு மற்றும் சில அரசு உதவி பெறும் கல்லூரிகளில் மட்டுமே இம்முறை செயல்படுத்தப்படுகிறது. இக்கல்லூரி இடங்களில் ஒரு குறிப்பிட்ட பங்கினை, இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் வரும் மாணவர்களைக் கொண்டு நிரப்ப வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது, நியாயத்தன்மை குறித்த அடிப்படைக் கேள்வியை எழுப்புகிறது. மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் செறிவான ஆரம்ப சுகாதாரக் கட்டமைப்பை உருவாக்குவதில் முதலீடு செய்துள்ள மாநிலங்கள் (எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் 38 மாநில அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன), அத்தகைய கட்டமைப்பை உருவாக்கத் தவறிய பிற மாநிலங்களின் தோல்வியை ஈடுகட்டுவதற்காக, தங்கள் கட்டமைப்பில் ஒரு பங்கை விட்டுக்கொடுக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகின்றன. இது எத்தகையது என்றால், ஒரு கிராமம் அரும்பாடுபட்டுத் தனக்கென ஒரு கிணற்றை வெட்டிய பிறகு, ஓர் உயர் அதிகார அமைப்பு வந்து, அதிலுள்ள நீரில் பாதியையோ அல்லது அதற்கு மேற்பட்ட அளவையோ, கிணறு வெட்டாத தொலைதூரக் கிராமங்களுக்குத் திருப்பி விடுவதைப் போன்றதாகும். ஒரு மாநிலம் இழைத்த தவறையோ அல்லது அதன் பொறுப்பின்மையையோ, மற்றொரு மாநிலம் சரிசெய்ய வேண்டும் என்று இந்திய அரசமைப்புச் சட்டத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. மருத்துவக் கட்டமைப்பில் பின்தங்கியுள்ள மாநிலங்களை அக்கட்டமைப்பை விரிவுபடுத்தும்படி உத்தரவிடுவதையோ, அல்லது அதற்கு உதவுமாறு ஒன்றிய அரசைப் பணிப்பதையோ விடுத்து, உச்ச நீதிமன்றம் ஒரு "ராபின் ஹுட்" (Robin Hood) பாணியிலான மறுவிநியோக முறையை உருவாக்கியுள்ளது. இம்முறை, வளர்ச்சியடைந்த மாநிலங்கள் தங்கள் இடங்களை ஒரு மத்தியத் தொகுப்பிற்குச் "சரணடையச்" செய்வதைக் கட்டாயமாக்குகிறது.

அமைப்புரீதியான விளைவுகள்

அகில இந்திய இடஒதுக்கீடு என்பது கண்கூடாகத் தெரியக்கூடிய பல மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. முதலாவதாக, இது உள்ளூர் மொழி பேசும் மருத்துவர்களின் இருப்பைக் குறைக்கிறது; குறிப்பாக,

இந்தி பேசாத மாநிலங்களில் இதன் தாக்கம் அதிகமாக உள்ளது. நோயைக் கண்டறிதல், மருத்துவப் பரிந்துரைகளைப் பின்பற்றுதல் மற்றும் தொடர் சிகிச்சை ஆகியவற்றிற்கு மொழி மற்றும் கலாச்சாரத்தைப் புரிந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும். ஆனால், இம்முறைமை கிராமப்புற மற்றும் ஆரம்ப சுகாதாரச் சேவைகளைப் பலவீனப்படுத்துகிறது.

இரண்டாவதாக, மருத்துவக் கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்கு மாநிலங்களுக்கு இருக்கும் ஆர்வத்தைக் குறைக்கும் ஒரு அமைப்புரீதியான தடையாக (structural disincentive) இது அமைகிறது. மாநிலங்களின் முதலீட்டில் உருவாக்கப்படும் கூடுதல் இடங்களில் ஒரு கணிசமான பகுதி – உயர் சிறப்புப் பிரிவைப் பொறுத்தவரை அனைத்து இடங்களும் – மத்தியத் தொகுப்பிற்குத் தாரைவார்க்கப்பட வேண்டும் என்ற நிலை உள்ளதால், அந்த முதலீட்டின் பயன் மாநிலத்திற்குச் சேராமல் தேசிய அளவில் சென்று சேர்கிறது. இதனால், புதிய மருத்துவக் கல்லூரிகள், முதுகலைத் துறைகள் மற்றும் உயர் சிறப்புப் பிரிவு மையங்கள் நிறுவுவதற்கான மாநிலங்களின் முனைப்பை இது மழுங்கடிக்கிறது.

மூன்றாவதாக, *பிரதீப் ஜெயின்* தீர்ப்பிற்கான அசல் அடிப்படைக் காரணமே – அதாவது, சில மாநிலங்களில் மருத்துவக் கட்டமைப்பு இல்லை என்ற நிலை – இப்போது பெருமளவில் மாறிவிட்டது. 1984–க்குப் பிறகு, வரலாற்றில் பின்தங்கியிருந்த பல மாநிலங்களிலும் ஏராளமான மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன. எனவே, நிரந்தரமான மற்றும் கட்டாயப்படுத்தும் தன்மையுடைய இந்த மறுவிநியோக முறைமை குறித்து, தற்போது புதிய கோணத்தில் மறுஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

காலதாமதமான மற்றும் சமச்சீரற்ற சமூக நீதி

அகில இந்தியத் தொகுப்பிற்குள் இடஒதுக்கீடானது மிகவும் தாமதமாகவும், சமச்சீரற்ற முறையிலுமே நடைமுறைப்படுத்தப்பட்டது.

- *பட்டியலினத்தோர்/பழங்குடியினர் (SC/ST) இடஒதுக்கீடு*: அகில இந்தியத் தொகுப்பின் இளநிலை மற்றும் முதுநிலை இடங்களில், பட்டியல் சாதி (15%) மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கான (7.5%) இடஒதுக்கீடு, *அபய் நாத் எதிர் டெல்லி பல்கலைக்கழகம்* (2009)[19] *(Abhay Nath v. University of Delhi,* 2009*)* வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த பிறகே அறிமுகப்படுத்தப்பட்டது.

---

[19] (2009) 17 SCC 705.

- *இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினர் (OBC) இடஒதுக்கீடு*: *மத்திய கல்வி நிலையங்கள் (மாணவர் சேர்க்கையில் இடஒதுக்கீடு) சட்டம்,* 2006 *(Central Educational Institutions (Reservation in Admission) Act,* 2006*)* அமலில் இருந்தபோதிலும், நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகு, 2020 ஜூலையில்[20] சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு மற்றும் 2021 ஜூலையில் ஒன்றிய அரசு வெளியிட்ட அறிவிக்கையைத் தொடர்ந்தே, 2021–22 கல்வியாண்டில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான (27 விழுக்காடு) இடஒதுக்கீடு அகில இந்தியத் தொகுப்பு இடங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இக்காலதாமதம் காரணமாக, கடந்த ஒரு பத்தாண்டில் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவு மாணவர்கள் சுமார் 10,000 இடங்களை இழக்க நேரிட்டது.
- *உயர் சிறப்புச் சேர்க்கைகளில்* இன்றும் இடஒதுக்கீடு பூஜ்ஜியமாகவே உள்ளது. இத்தகைய உயர் நிலையில் "தகுதி மட்டுமே கணக்கில் கொள்ளப்பட வேண்டும்" என்ற அடிப்படையில் இது நியாயப்படுத்தப்படுகிறது. ஆனால், அண்மைக் காலங்களில் இடங்கள் காலியாவதைத் தடுப்பதற்காக, நீட் – உயர் சிறப்பு (NEET–SS) கட்–ஆஃப் மதிப்பெண்கள் மீண்டும் மீண்டும் 'பூஜ்ஜியச் சதமானம்' (zero percentile) அளவுக்குக் குறைக்கப்பட்டதால், இந்த வாதம் கடுமையாக வலுவிழந்துவிட்டது. பூஜ்ஜியச் சதமானம் பெற்றவர்கள் கூடத் தகுதியானவர்களாகக் கருதப்படும்போது, 'தகுதி' என்ற பெயரில் இடஒதுக்கீட்டை மறுப்பதை நியாயப்படுத்தவே முடியாது.

அரசமைப்புச் சட்ட ரீதியான குறைபாடுகள்

அகில இந்திய இடஒதுக்கீட்டினால் (AIQ) ஏற்படும் கொள்கை ரீதியான விளைவுகளை ஒருவேளை ஏற்றுக்கொள்வதாக வைத்துக்கொண்டாலும், அதன் அரசமைப்புச் சட்ட ரீதியான அடிப்படை சந்தேகத்திற்குரியதாகவே உள்ளது.

1. **முன்தீர்ப்புப் பின்பற்றல் முறையை மீறுதல் (Violation of *Stare Decisis*)**
   டி.பி. ஜோஷி எதிர் மத்திய பாரத் மாநிலம் (1955)[21] *(D.P. Joshi v. State of Madhya Bharat,* 1955) வழக்கில், ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசமைப்புச் சட்ட அமர்வு, உயர்கல்வியில் மாநில

[20] (2020) 6 MLJ 1.
[21] AIR 1955 SC 334.

வாழிடம் அடிப்படையிலான (State domicile-based) முன்னுரிமைகள் செல்லுபடியாகும் என்பதை உறுதி செய்தது. மத்திய பாரத் மாநிலத்தில் *உண்மையான* குடியிருப்பாளர்களாக (bona fide residents) உள்ள மாணவர்களுக்கு அரசு மருத்துவக் கல்லூரியில் 'தலைவாரிக் கட்டணம்' (capitation fees) செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டதையும், அதே வேளையில் அம்மாநிலத்தைச் சாராதவர்கள் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டும் என்ற விதியையும் இவ்வழக்கு கேள்விக்குள்ளாக்கியது. மனுதாரர் இவ்விதியை அரசமைப்புச் சட்டப்பிரிவுகள் 14 மற்றும் 15-இன் கீழ் எதிர்த்தார். இது பிறப்பிடத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவதாகவும், வாழிட குடியிருப்பாளர்கள் மற்றும் வெளியாட்களுக்கு இடையே தன்னிச்சையான வகைப்படுத்தலை உருவாக்குவதாகவும் வாதிட்டார். இவ்விரு வாதங்களையும் நிராகரித்த நீதிமன்றம், *குடியுரிமை, வாழிடம் மற்றும் பிறப்பிடம்* ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டைத் தெளிவாக வரையறுத்தது. குடியுரிமை என்பது நாட்டின் மீதான அரசியல் பற்றைக் குறிக்கிறது; வாழிடம் என்பது ஒருவரின் நிலையான வீடு மற்றும் குடித்தகுதி (civil status) தொடர்பானது. பொதுப் பட்டியலில் மாநிலங்களுக்கெனத் தனிப்பட்ட சட்டங்கள் இருக்கக்கூடும் என்பதால், இந்தியாவில் மாநில வாழிடம் என்பது சட்டரீதியாக அங்கீகரிக்கப்படத்தக்கதே என்று நீதிமன்றம் கூறியது. மேலும், வாழிடம் என்பது பிறப்பிடத்திற்கு இணையானது அல்ல என்றும், எனவே வசிப்பிடம் சார்ந்த முன்னுரிமைகள் அரசமைப்புச் சட்டப்பிரிவு 15(1)-ஐ மீறவில்லை என்றும் தீர்ப்பளித்தது. அரசமைப்புச் சட்டப்பிரிவு 14-இன் கீழ், இந்த வகைப்படுத்தல் நியாயமானது என்றும், அது ஒரு சட்டபூர்வமான நோக்கத்துடன் – அதாவது, மாநிலம் தன் மக்களுக்கு ஆதரவளிப்பது மற்றும் உள்ளூரிலேயே பயிற்சி பெற்ற மருத்துவர்கள் கிடைப்பதை உறுதி செய்வது – தர்க்கரீதியாகத் தொடர்புடையது என்றும் உறுதி செய்யப்பட்டது.

ஆயினும், *பிரதீப் ஜெயின்* (1984) வழக்கை விசாரித்த மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, இந்தக் கட்டுப்படுத்தும் முன்தீர்ப்பிலிருந்து (binding precedent) விலகிச் சென்றது. இந்தியாவில் ஒரே ஒரு பிரிக்க முடியாத சட்ட அமைப்பு மட்டுமே உள்ளது என்றும், ஒரே ஒரு வாழிடம் மட்டுமே உள்ளது என்றும் அது கூறியது. வசிப்பிடத் தகுதி என்பது அரசமைப்புச்

சட்டப்பிரிவு 15(1)–ஆல் தடை *செய்யப்படவில்லை* என்பதை ஒப்புக்கொண்ட போதிலும், அகில இந்திய இடஒதுக்கீட்டை நியாயப்படுத்த நீதிமன்றம் அரசமைப்புச் சட்டப்பிரிவு 14–ஐ நாடியது *(இது டி.பி. ஜோஷி* தீர்ப்பிற்கு முற்றிலும் முரணானது). *பிரதீப் ஜெயின்* தீர்ப்பு, 'முன்தீர்ப்பு பின்பற்றல்' முறையை (*Stare Decisis* – அதாவது, ஒரு சிறிய அமர்வு பெரிய அமர்வின் தீர்ப்பை மாற்றியமைக்கக் கூடாது என்பது) மீறியது மட்டுமல்லாமல், மறைமுகமாக "வசிப்பிடம்" என்ற சொல்லை அரசமைப்புச் சட்டப்பிரிவு 15(1)–இல் புகுத்தியதன் வழியாக அரசமைப்புச் சட்டத்தையே "திருத்தம்" செய்தது போன்றதாகும்.

2. **கூட்டாட்சி அரசின் அதிகார மீறல்**

மாநில இடங்களை ஒரு மத்தியத் தொகுப்பிற்கு ஒப்படைக்கச் செய்வது, ஏழாவது அட்டவணையின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஒன்றியப் பட்டியலின் 66–ஆவது இனத்தின் கீழ் ஒன்றிய அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம், "கல்வித் தரத்தை ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்ணயம் செய்தல்" என்பதற்குள் மட்டுமே அடங்கும். ஆனால், மாநிலங்கள் தங்கள் இடங்களை ஒரு மத்தியத் தொகுப்பிற்கு மாற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது, "தர நிர்ணயம்" என்பதன் வரம்பை விரிவுபடுத்தி, *இடங்களைக் கையகப்படுத்துதல்* வரை கொண்டு செல்கிறது. மாநில வரி செலுத்துவோரின் பணத்தில் உருவாக்கப்பட்ட மாநிலக் கட்டமைப்பை, எவ்வித இழப்பீடும் இன்றி ஒன்றிய அரசு *தன்வசப்படுத்திக்கொள்ள* இது அனுமதிக்கிறது. அரசமைப்புச் சட்டத்தின் எந்தப் பகுதியும் இத்தகையதொரு பொருள் கொள்ளுதலுக்கு ஆதரவளிக்கவில்லை.

பரிந்துரை 9

நீதித்துறையால் உருவாக்கப்பட்ட தற்போதைய அகில இந்திய இடஒதுக்கீட்டு முறைக்கு மாற்றாக, புதியதொரு அகில இந்திய இடஒதுக்கீட்டு முறையை உருவாக்கும் வகையில், *தேசிய மருத்துவ ஆணையச் சட்டம்*, 2019–ல் திருத்தம் செய்ய வேண்டும். இப்புதிய முறையில், கட்டமைப்புப் பற்றாக்குறை உள்ளப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவும் நோக்கில், மாநிலங்கள் *தாமாக முன்வந்து*, தாங்கள் விரும்பும் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு இடங்களை வழங்க ஊக்குவிக்கப்பட வேண்டும். இதுவே, கட்டாயப்படுத்துதலுக்குப் பதிலாக, *கூட்டுறவுக் கூட்டாட்சி* தத்துவத்தை நிலைநாட்டும்.

XIII. முடிவுரை

இந்தியாவின் சுகாதாரத் துறையில் அர்த்தமுள்ள சீர்திருத்தம் என்பது, புது தில்லியே திட்டமிட்டு உத்தரவிட வேண்டும், மாநிலங்கள் அதைத் தலைமேற்கொண்டு செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணப்போக்கின் அடிப்படையில் அமையக்கூடாது. இருப்பினும், இக்கருதுகோளே ஒன்றிய அரசின் கொள்கைகளில் அதிகரித்து வருகிறது. திரட்டப்பட்ட சான்றுகள் வேறொரு காரணத்தைச் சுட்டிக்காட்டுகின்றன: இந்தியாவின் பொதுச் சுகாதாரக் குறைபாடுகள் மைய அதிகாரம் போதாததால் எழவில்லை; மாறாக, குறிப்பாக மாநில அளவில் கட்டமைப்பை மேம்படுத்துவதில் முறையான முதலீடு இல்லாததாலும், ஒன்றிய அரசு தனது அடிப்படைப் பொறுப்புகளைப் புறக்கணித்ததாலுமே எழுந்துள்ளன. நிதி ஒதுக்கீடு, மருத்துவ ஆராய்ச்சி, மருந்துப் பொருட்கள் ஒழுங்குமுறை, அறிவியல் கட்டமைப்பு, மற்றும் எல்லைகள் மற்றும் துறைமுகங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நோய்த் தடுப்புப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவை ஒன்றிய அரசின் இப்பொறுப்புகளில் அடங்கும்.

எனவே, அதிகாரக்குவிப்பு என்பது இந்தியாவின் சுகாதாரத் துறை பலவீனங்களுக்கு ஒரு மாற்றுமருந்து அல்ல; மாறாக, அதுவே நோயின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. சமீபத்திய நிறுவனக் கட்டமைப்புகள்– குறிப்பாகத் தேசிய மருத்துவ ஆணையம் (NMC), நீட் (NEET), மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள நெக்ஸ்ட் (NExT) தேர்வு ஆகியவை–மாநில அதிகாரத்தைத் தொடர்ந்து குறைத்து, மாநிலங்கள் உருவாக்கிப் பராமரிக்கும் நிறுவனங்களை புறக்கணிக்கும் ஒரு 'அமைப்புரீதியான சாய்வை' பிரதிபலிக்கின்றன. இச்செயல்முறையில், ஒருங்கிணைப்புக்குப் பதிலாகக் கட்டுப்பாடும், நெகிழ்வுத்தன்மைக்குப் பதிலாகத் திணிக்கப்பட்ட ஒற்றைத்தன்மையும், பொறுப்புடைமைக்குப் பதிலாக வெறும் நடைமுறை இணக்கமும் இடம்பிடித்துள்ளன. ஆனால், இதற்கேற்ற பலன்கள் சமத்துவத்திலோ அல்லது தரத்திலோ கிடைக்கவில்லை.

ஒரு நிலையான கட்டமைப்பு என்பது 'அதிகாரப் பரவல்' கோட்பாட்டில் (subsidiarity) வேரூன்றியதாக இருக்க வேண்டும். அதாவது, அதிகாரத்தைப் பொறுப்புடன் இணைக்க வேண்டும்; சேவைகள் எங்கு வழங்கப்படுகின்றனவோ, அதே மட்டத்தில் பொறுப்புடைமையை மீண்டும் நிலைநாட்ட வேண்டும். இந்தியாவின் சுகாதார அமைப்பை வலுப்படுத்த, ஒன்றிய முகமைகளைப் பெருக்குவதோ, அதிக நெருக்கடி மிகுந்த தேசியத் தேர்வு முறைகளோ அல்லது பொதுச் சுகாதாரத்தைப் பொதுப் பட்டியலுக்கு மாற்றுவதற்கான முன்மொழிவுகளோ தேவையில்லை; மாறாக, மாநிலக் கட்டமைப்பில் தொடர் முதலீடே தேவை. குறிப்பாக,

மருத்துவக் கல்வியானது மாநில அரசுகளிடமும் பல்கலைக்கழகங்களிடமும் திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும். ஏனெனில், மருத்துவர்களுக்கான பயிற்சியென்பது உள்ளூர் நோய் தன்மைகள், மொழிகள் மற்றும் சேவைச் சூழலிலிருந்து பிரிக்க முடியாததாகும். நிரந்தரமான மாநிலப் பிரதிநிதித்துவத்தின் வழியாக தேசிய மருத்துவ ஆணையம் ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும். ஒரே முயற்சியில் தகுதியை அளவிடும் தேசியத் தேர்வு முறை மீதான மோகம் முடிவுக்கு வர வேண்டும். நீட் மற்றும் நெக்ஸ்ட் தேர்வுகளை ரத்து செய்யும் வகையில் என்.எம்.சி சட்டத்தில் திருத்தம் செய்து, மாணவர் சேர்க்கை உரிமையை மாநில அரசுகளிடமும் பல்கலைக்கழகங்களிடமும் மீட்டளிக்க வேண்டும். அதேபோல, நீதித்துறையால் உருவாக்கப்பட்ட அகில இந்திய இடஒதுக்கீடு முறையானது, கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் அமைந்த, 'தன்னார்வ மாநிலங்களிடையேயான தொகுப்பு' (voluntary inter–State pool) முறைக்கு வழிவிட வேண்டும்.

தன் பங்கிற்கு, ஒன்றிய அரசு தன்னால் மட்டுமே செய்ய முடிந்தவற்றைச் செய்தாக வேண்டும். ஒன்றிய அரசின் சுகாதாரச் செலவுகளில் பெருமளவில் அதிகரிப்பு இல்லையெனில், அனைவருக்கும் நலவாழ்வு (Universal Health Coverage), குறைவான சொந்தச் செலவு (out–of–pocket expenditure) மற்றும் தாக்குப் பிடிக்கக்கூடிய பொதுக் கட்டமைப்பு ஆகிய நோக்கங்கள் வெறும் சொல் அலங்காரமாகவே எஞ்சிவிடும். செலவின் பெரும்பகுதியை ஏற்கத் தயாராக இல்லாதபட்சத்தில், ஒன்றிய அரசு நிதியுதவித் திட்டங்களை (Centrally Sponsored Schemes) கடுமையான விதிமுறைகள் வழியாகத் திணிக்கக் கூடாது; அவ்வாறில்லையெனில், வரையறுக்கப்படாத தொகுதி மானியங்கள் (untied block grants) வழியாகவோ அல்லது நெகிழ்வான திட்டத் தேர்வுகள் வாயிலாகவோ நிதியுதவி வழங்கப்பட வேண்டும். மக்கள் சேவையை எளிதில் அணுகுவதை உறுதிசெய்ய, பொதுச் சுகாதாரத் தகவல்தொடர்புகள் மாநில மொழிகளில் இயங்க வேண்டும்; அதே வேளையில், நகர்வுத்தன்மை மற்றும் உலகளாவிய தொடர்புகளுக்கான ஒரு நடுநிலையான பாலமாகத் தேசிய நிறுவனங்கள் ஆங்கிலத்தைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும்.

மனித உடலின் ஆரோக்கியம் அதன் உறுப்புகளின் ஆற்றலைச் சார்ந்திருப்பது போலவே, ஒன்றிய அரசின் ஆரோக்கியம் அதன் மாநிலங்களின் உயிர்ப்பைச் சார்ந்துள்ளது. பொதுச் சுகாதாரத் துறையை விட இதற்குச் சிறந்த சான்று வேறில்லை. ஒன்றிய அரசின் அதிகாரக் கட்டளைகளால் அல்ல, மாறாக, உண்மையான கூட்டுறவுக் கூட்டாட்சிக்குள் அதிகாரமளிக்கப்பட்ட மாநிலங்களின் வழியாக இந்தியாவின் சுகாதாரக் கட்டமைப்பு வலுப்பெறும்.

இணைப்பு I

1. நீட்–இளநிலை (NEET–UG – MBBS/BDS) இறுதித் தகுதி மதிப்பெண்கள் (*அதிகபட்ச மதிப்பெண்: 720*)

அவதானிப்பு: தகுதித் தரநிலையானது (Eligibility) 13% முதல் 23% வரை மட்டுமே உள்ளதால், தனியார் கல்லூரி இடங்களைப் பெறுவதற்கான தடையை இது மிகவும் எளிதாக்குகிறது.

ஆண்டு	பிரிவு	தகுதிச் சதமானம்	கட்–ஆஃப் மதிப்பெண் வரம்பு	உத்தேச கட்–ஆஃப் %
2025	பொது/பொருளாதாரரீதியாக பின்தங்கிய பிரிவினர்	50ஆவது	686 – 144	~20.0%
	இதர பிற்படுத்தப்பட்டோர்/ பட்டியலினத்தோர்/பட்டியல் பழங்குடியினர்	40ஆவது	143 – 113	~15.7%
2024	பொது/பொருளாதாரரீதியாக பின்தங்கிய பிரிவினர்	50ஆவது	720 – 162	~22.5%
	இதர பிற்படுத்தப்பட்டோர்/ பட்டியலினத்தோர்/பட்டியல் பழங்குடியினர்	40ஆவது	161 – 127	~17.6%
2023	பொது/பொருளாதாரரீதியாக பின்தங்கிய பிரிவினர்	50ஆவது	720 – 137	~19.0%
	இதர பிற்படுத்தப்பட்டோர்/ பட்டியலினத்தோர்/பட்டியல் பழங்குடியினர்	40ஆவது	136 – 107	~14.9%
2022	பொது/பொருளாதாரரீதியாக பின்தங்கிய பிரிவினர்	50ஆவது	715 – 117	~16.3%
	இதர பிற்படுத்தப்பட்டோர்/ பட்டியலினத்தோர்/பட்டியல் பழங்குடியினர்	40ஆவது	116 – 93	~12.9%
2021	பொது/பொருளாதாரரீதியாக பின்தங்கிய பிரிவினர்	50ஆவது	720 – 138	~19.2%
	இதர பிற்படுத்தப்பட்டோர்/ பட்டியலினத்தோர்/பட்டியல் பழங்குடியினர்	40ஆவது	137 – 108	~15.0%

ஆதாரம்: National Testing Agency Press Releases 2021–2025.

2. நீட்–முதுநிலை (NEET–PG – MD/MS) திருத்தப்பட்ட தகுதி மதிப்பெண்கள் (*அதிகபட்ச மதிப்பெண்: 800*)

அவதானிப்பு: 2023–ஆம் ஆண்டில் "பூஜ்ஜிய சதமானம்" (Zero Percentile) என்று குறைக்கப்பட்ட நடவடிக்கை, இத்தேர்வை ஒரு போட்டித் தேர்வாக இல்லாமலும், தகுதிக்கு அர்த்தமற்றதாகவும் ஆக்கிவிட்டது.

ஆண்டு	தொடக்க கட்–ஆஃப் (பொது)	இறுதித் திருத்தப்பட்ட கட்–ஆஃப்	நிலை
2025	50ஆவது சதமானம்	7–வது சதமானம்	43 சதமானப் புள்ளிகள் குறைக்கப்பட்டது
2024	50ஆவது சதமானம்	5–வது சதமானம்	45 சதமானப் புள்ளிகள் குறைக்கப்பட்டது
2023	50ஆவது சதமானம்	பூஜ்ஜிய சதமானம் (0)	அனைத்து விண்ணப்பதாரர்களும் தகுதி பெற்றனர்
2022	50ஆவது சதமானம்	25–வது சதமானம்	25 சதமானப் புள்ளிகள் குறைக்கப்பட்டது
2021	50ஆவது சதமானம்	35–வது சதமானம்	15 சதமானப் புள்ளிகள் குறைக்கப்பட்டது

ஆதாரம்: National Board of Examinations in Medical Sciences Notices 2022, 2023, 2025, and 2026.

3. நீட்–உயர் சிறப்புத் தேர்வு (NEET–SS) திருத்தப்பட்ட தகுதி மதிப்பெண்கள் (*அதிகபட்ச மதிப்பெண்: 600*)

அவதானிப்பு: 2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளில், இத்தேர்வு வெறும் ஒரு சம்பிரதாயமாக மட்டுமே செயல்பட்டது; தேர்வெழுதிய அனைத்து மாணவர்களுமே தகுதி பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டனர்.

ஆண்டு	தொடக்க கட்–ஆஃப்	இறுதித் திருத்தப்பட்ட கட்–ஆஃப்	நிலை
2024	50–வது சதமானம்	தேர்வெழுதிய அனைவரும்	காலியிடங்களுக்கான கடைசிச் சுற்று
2023	50–வது சதமானம்	தேர்வெழுதிய அனைவரும்	காலியிடங்களுக்கான சிறப்புச் சுற்று
2022	50–வது சதமானம்	20–வது சதமானம்	30 சதமானப் புள்ளிகள் குறைக்கப்பட்டது
2021	50–வது சதமானம்	35–வது சதமானம்	15 சதமானப் புள்ளிகள் குறைக்கப்பட்டது

ஆதாரம்: National Board of Examinations in Medical Sciences Notices 2022–2025.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

References

1. RS Sarkaria, B Sivaraman, and SR Sen, *Commission on Centre–State Relations*, part 1 (Ministry of Home Affairs 1988) Chapters 2, 10, 11.
2. Madan Mohan Punchhi and others, *Commission on Centre–State Relations: Constitutional Governance and the Management of Centre–State Relations*, vol 2 (Government of India 2010) Chapter 3, paras 3.7.01 – 3.7.29, Chapter 6, para 6.7.03.
3. K Srinath Reddy and others, *High Level Expert Group: Report on Universal Health Coverage for India* (Planning Commission of India 2011).
4. Satish Chandra Misra and others, *Ninety–Second Report: The Functioning of Medical Council of India (Ministry of Health and Family Welfare* (Department–Related Parliamentary Standing Committee on Committee on Health and Family Welfare, Rajya Sabha 2016).
5. NK Singh and others, *Finance Commission in Covid Times: Report for 2021–26*, vol 1 (Finance Commission 2020).
6. Ram Gopal Yadav and others, *One Hundred Twenty Third Report: The Outbreak of Pandemic Covid–19 and its Management* (Department–Related Parliamentary Standing Committee on Committee on Health and Family Welfare, Rajya Sabha 2020).
7. AK Rajan and others, *Report of the High–Level Committee to Study the Impact of NEET on Medical Admissions in Tamil Nadu* (Government of Tamil Nadu 2021).
8. Jeffrey D Sachs and others, *Sustainable Development Report 2025: Financing Sustainable Development to 2030 and Mid–Century* (Dublin University Press Dublin 2025).
9. 'Measuring performance on the Healthcare Access and Quality Index for 195 countries and territories and selected subnational locations: a systematic analysis from the Global Burden of Disease Study 2016' (2018) 391 Lancet 2236.
10. AK Rajan, *Monograph: Penalty for Progress* (Indian Universities Press 2020).
11. Canadian Constitution Act 1867, Sections 92, 93.
12. 'The Global Health Observatory' (*World health Organisation*) accessed January 25, 2026; 'World Bank Open Data' (*World Bank Group*) accessed January 25, 2026; 'Health at a Glance 2025: OECD Indicators' (*OECD* 2025) accessed January 25, 2026.

இயல் 10

சரக்கு மற்றும் சேவை வரி

"ஒவ்வொரு செயல்முறையிலும் சில சிக்கல்கள் இயல்பாகவே உள்ளன. ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் அந்தச் செயல்முறையை மேலும் எளிமைப்படுத்த முடியாது; இயல்பாகவே உள்ள அந்தச் சிக்கலை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மட்டுமே மாற்ற முடியும்."

– டெஸ்லருடைய சிக்கல் நிலைத்தன்மை விதி[1]

I. அறிமுகம்

மென்பொருள் வடிவமைப்பு முறையை கருத்தில்கொண்டு கூறப்பட்டிருந்தாலும், டெஸ்லரின் விதி நிறுவனத்திற்கும் ஒழுங்குமுறை அமைப்புகளுக்கும் அதே அளவில் பொருந்துகிறது. எந்தவொரு அமைப்பிலும், ஒரு குறிப்பிட்ட அளவிலான சிக்கல்தன்மை இயல்பாகவே உள்ளது. அதை அகற்றவோ அல்லது மறைக்கவோ முடியாது; அதை மறுபகிர்வு மட்டுமே செய்ய முடியும். உண்மையான வடிவமைப்பு குறித்த கேள்வி, சிக்கல்தன்மை இருக்கிறதா என்பது அல்ல. மாறாக அது எங்கு நிலை கொண்டுள்ளது, மேலும் அதைச் சுமக்க யார் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்பதுதான். அதாவது, அந்த அமைப்பா, பயனாளியா, குறிப்பிட்ட வகை பயனாளர்களா அல்லது பிற பங்குதாரர்களா என்பதுதான்.

சரக்கு மற்றும் சேவை வரிக்கு (Goods and Services Tax (GST)) இதைப் பயன்படுத்தும்போது, இந்த ஆய்வு வெறும் சொல்லாடல்களைக் கடந்து,

---

[1] Dan Saffer, *Designing for Interaction: Creating Innovative Applications and Devices* (2nd edition, 2010) 136.

அதன் பகிர்வு நடப்புநிலைமையை நோக்கி நகர வேண்டும். நிதிசார் கண்ணோட்டத்தில், எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வளர்ச்சியை வழங்கியுள்ளதா, மேலும் அது உற்பத்தி செய்யும் மாநிலங்களுக்கும் நுகரும் மாநிலங்களுக்கும் இடையிலான சமநிலையை எவ்வாறு மாற்றியுள்ளது? கூட்டாட்சி முறையின் கண்ணோட்டத்தில், அது கூட்டுத்தன்மையுள்ள நிதி ஏற்பாடுகளை வலுப்படுத்தியுள்ளதா, அல்லது மாநிலங்கள் முன்பு பயன்படுத்திய கொள்கை சார்ந்த இடைவெளியைக் குறைத்துள்ளதா? நிர்வாக நோக்கு நிலையிலிருந்து, சரக்கு மற்றும் சேவை வரி ஒன்றிய, மாநில வரித் துறைகளின் பணிச்சுமையைக் குறைத்துள்ளதா, அல்லது புதிய செயல்பாட்டுச் சுமைகளை அறிமுகப்படுத்தியுள்ளதா? பெரிய, நடுத்தர, சிறிய வரி செலுத்துவோர் அனைவருக்கும் இணங்குவது உண்மையாகவே எளிமையாகிவிட்டதா, அல்லது முக்கியமாக சில பிரிவினருக்கு மட்டுமே எளிமையாகி உள்ளதா? இந்தக் கேள்விகள், எளிமைப்படுத்துதல் குறித்த கற்பனையான கூற்றுகளிலிருந்து, அமைப்பின் சிக்கல் தன்மையை யார் சுமக்கிறார்கள் என்ற நடைமுறை மதிப்பீட்டிற்கு விவாதத்தை நகர்த்துகின்றன.

2017 ஜூலை 1 அன்று சரக்கு மற்றும் சேவை வரி நடைமுறைக்கு வந்தபோது, இது 1950–ஆம் ஆண்டில் அரசமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, இந்தியாவின் நிதி கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரும் மறுசீரமைப்பு எனப் போற்றப்பட்டது. பல ஆண்டுகளாக, இந்தியா பெருமளவில் மறைமுக வரிகளை விதித்ததனால், சிக்கல் நிறைந்த சூழல் நிலவியது. அரசமைப்புச் சட்டம் முதலில் வரி விதிக்கும் அதிகாரங்களைத் துல்லியமாகப் பிரித்து வைத்திருந்தது: உற்பத்தி (மைய ஆயத் தீர்வை), இறக்குமதி – ஏற்றுமதி (சுங்கத் தீர்வை), அதற்குப் பின் வேகமாக வளர்ந்து வரும் சேவைத் துறை (சேவை வரி) ஆகியவற்றின் மீது ஒன்றிய அரசு தனி அதிகாரத்தைக் கொண்டிருந்தது. மாறாக, மாநிலங்கள் சரக்கு விற்பனையின் (விற்பனை வரி/மதிப்பு கூடுதல் வரி) மீது தனி அதிகாரத்தைக் கொண்டிருந்தன; நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான வரி வீதங்களும் அடுக்குகளும் கொண்ட இந்த நடைமுறை, சிதறுண்ட சந்தையையே உருவாக்கியது. உற்பத்தி, விற்பனை, போக்குவரத்து என ஒவ்வொரு நிலையிலும் சரக்குகள் மீது வரிகள் 'ஒட்டிக்கொண்டன.' இதன் விளைவாக ஏற்பட்ட "வரி மேல் வரி" என்னும் தொடர் அடுக்கு விளைவு செலவுகளை அதிகரித்தது; பொருளாதாரத் திறனைவிட நிறுவனங்களின் செங்குத்து ஒருங்கிணைப்பிற்கு முக்கியத்துவம் அளித்தது; ஏற்றுமதிப் போட்டியை முடக்கியது.

ஆட்டத்தின் விதிகளை மாற்றுதல்

சரக்கு சேவை வரி முறையானது வடிவிலான "கூட்டுறவு நிதி கூட்டாட்சி முறைக்கு" மாறுவது என்பது, தடையற்ற தேசிய சந்தையை உருவாக்க பல்வேறு வரிகளை மிகப்பெரும் ஒருங்கிணைப்பிற்கு உட்படுத்துவதை உள்ளடக்கியது.

- *ஒன்றிய வரிகளின் தொகுப்பு:* மைய ஆயத் தீர்வை, மருத்துவ மற்றும் கழிப்பறைத் தயாரிப்புகள் மீதான ஆயத் தீர்வைகள், கூடுதல் ஆயத் தீர்வைகள் (சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள்), ஜவுளி மற்றும் ஜவுளிப் பொருட்கள் மீதான கூடுதல் ஆயத் தீர்வைகள், கூடுதல் சுங்கத் தீர்வைகள் (பொதுவாக ஈடுசெய்யும் தீர்வை – Countervailing Duty என அறியப்படுவது), சிறப்பு கூடுதல் சுங்கத் தீர்வை (Special Additional Duty of Customs, SAD), சேவை வரி, சரக்கு மற்றும் சேவைகளின் வழங்கல் தொடர்பான ஒன்றிய மேல்வரிகள், கூடுதல் கட்டணங்கள்.
- *மாநில வரிகளின் தொகுப்பு:* மாநில மதிப்புக் கூட்டு வரி, மத்திய விற்பனை வரி (CST), கொள்முதல் வரி, ஆடம்பர வரி, நுழைவு வரி (அனைத்து வடிவங்களும்), பொழுதுபோக்கு வரி (உள்ளாட்சி அமைப்புகள் விதிக்கும் வரிகள் தவிர), விளம்பரங்கள், பரிசுச் சீட்டுகள் (லாட்டரிகள்), பந்தயம், சூதாட்டம் முதலானவை மீதான வரிகள், சரக்கு மற்றும் சேவைகளின் வழங்கல் தொடர்பான மாநில மேல்வரிகள், கூடுதல் கட்டணங்கள்.

எவ்வாறாயினும், மாநில நிதிச் சுயாட்சியைக் காப்பதற்காக, வருவாய் ஈட்டித் தரும் மூன்று முக்கியமான துறைகள் சரக்கு சேவை வரிக்கு வெளியே வைக்கப்பட்டன. இது வரிச் சலுகையைத் திரும்பப் பெறும் சங்கிலியைத் துண்டித்து, சிதறுண்ட மதிப்புச் சங்கிலியை உருவாக்கியுள்ளது:

1. *மனித நுகர்வுக்கான மதுபானம்*: அரசமைப்புச் சட்ட அளவில் விலக்கப்பட்டுள்ளது [அரசமைப்புச் சட்டப் பிரிவு 366(12A)]; தீர்வை வரியையும் மதிப்புக் கூட்டு வரியையும் விதிக்க மாநிலங்களுக்கு முழு அதிகாரம் உள்ளது.
2. *பெட்ரோலியப் பொருட்கள்*: ஐந்து குறிப்பிட்ட தயாரிப்புகள் (பெட்ரோலிய கச்சா எண்ணெய், அதிவிரைவு டீசல், பெட்ரோல்,

இயற்கை எரிவாயு, வானூர்த்தி பெட்ரோல்) அரசமைப்புச் சட்ட அளவில் சரக்கு சேவை வரிக்குள் இருந்தாலும், இப்போது அவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

3. *மின்சாரம்*: மின்சாரம் மீதான வரிகள் மாநிலப் பட்டியலின் கீழ் (இனம் 53, பட்டியல் II) உள்ளன.

இவ்வாறாக, சரக்கு சேவை வரி முறை கூட்டாட்சி நிதி சமநிலையை, அடிப்படை மாற்றத்திற்கு உள்ளாக்கியது. இது சேவை வரி விதிப்பதில் ஒன்றியத்தின் ஏகபோகத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, முதல்முறையாக சேவைத் துறைக்கு வரி விதிக்கும் அதிகாரத்தை மாநிலங்களுக்கு வழங்கியது. மாறாக, சரக்கு விற்பனைக்கு வரி விதிப்பதில் மாநிலங்களுக்கு இருந்த தனியான அரசமைப்புச் சட்ட அதிகாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்தது.

இதில் மிக முக்கியமான மாற்றம் என்னவென்றால், "உற்பத்தி அடிப்படை" (Origin–based) வரிமுறையிலிருந்து "நுகர்வு அடிப்படை" (Destination–based) வரிமுறைக்கு மாறியதுதான். மாநிலங்களுக்கு இடையிலான விற்பனைக்கான பழைய மத்திய விற்பனை வரி (CST) முறையில், வரி வருவாய் உற்பத்தி செய்யும் மாநிலத்திற்கே (உதாரணமாக, மகாராஷ்டிரா அல்லது தமிழ்நாடு) கிடைத்தது. சரக்கு சேவை வரி முறையில், சரக்கு அல்லது சேவைகள் எங்கு நுகரப்படுகிறதோ அந்த மாநிலத்திற்கே வரி வருவாய் சேர்கிறது. விதிகளில் செய்யப்பட்ட இந்த அடிப்படை மாற்றம், வளர்ச்சி குறைந்த, அதிக நுகர்வு கொண்ட மாநிலங்களுக்குப் பயனளிக்கும் வகையிலும், கொள்கை நோக்கு அளவில் ஒன்றியம் முழுமைக்கும் நிதித் திறனை மறுபகிர்வு செய்யவும் உருவாக்கப்பட்டது.

அரசமைப்புச் சட்டத்தின் புதிய கட்டமைப்பு

இந்த மாற்றத்திற்கு *நூற்று ஒன்றாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம்* (2016) வழியாக அரசமைப்பின் கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டியிருந்தது.

- *அரசமைப்புச் சட்டப் பிரிவு 246A*: இது "தனித்த அதிகார வரம்புகளை" தகர்த்து, சரக்கு சேவை வரி குறித்து சட்டம் இயற்ற ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் "ஒரே நேரத்தில்" அதிகாரத்தை வழங்கியது.
- *அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A*: இது சரக்கு சேவை வரி அவையை நிறுவியது. இந்த அவை ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் வரி வீதங்களையும் கொள்கைகளையும்

பரிந்துரைக்கும் பணியை மேற்கொள்ளும் தனித்துவமான கூட்டாட்சி அமைப்பு ஆகும். இந்திய சரக்கு சேவை வரி முறையின் அடித்தளமே இந்த அவைதான். இதில் ஒன்றிய நிதி அமைச்சர் தலைவராகவும், வருவாய் அல்லது நிதித்துறைக்கான ஒன்றிய இணை அமைச்சர் உறுப்பினராகவும், ஒவ்வொரு மாநில அரசால் பரிந்துரைக்கப்படும் நிதி அல்லது வரித்துறை அமைச்சர் அல்லது வேறு ஏதேனும் ஒரு அமைச்சர் உறுப்பினராகவும் இருப்பார்கள். அரசமைப்புச் சட்டப் பிரிவு 366(26B)–இன் படி, அரசமைப்புச் சட்டப் பிரிவு 246A, 279A ஆகியவற்றைப் பொறுத்தவரை "மாநிலம்" என்பது "சட்டமன்றத்தைக் கொண்ட ஒன்றிய ஆட்சிநிலப் பகுதியையும் (யூனியன் பிரதேசத்தையும்)" உள்ளடக்கியது என்பதைத் தெளிவுப்படுத்துகிறது. எனவே, தலைவர், ஒன்றிய இணை அமைச்சர், 28 மாநிலங்களின் அமைச்சர்கள், சட்டமன்றங்களைக் கொண்ட 3 ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளின் (டெல்லி, புதுச்சேரி, ஜம்மு & காஷ்மீர்) அமைச்சர்கள் என சரக்கு சேவை வரி அவையின் மொத்த எண்ணிக்கை பலம் 33 ஆகும்.

அமைப்பு: இரட்டை சரக்கு சேவை வரியும் வரி வீதக் கட்டமைப்பும்

இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பைக் கருத்தில் கொண்டு, நாடு "இரட்டை சரக்கு சேவை வரி" மாதிரியை ஏற்றுக்கொண்டது. அதில் பின்வருவன அடங்கும்:

1. *மைய சரக்கு சேவை வரியும்(CGST) மாநில சரக்கு சேவை வரியும்(SGST)*: மாநிலங்களுக்கு இடையேயான வர்த்தகம், வழங்கல்கள் மீது ஒன்றியத்தாலும் மாநிலத்தாலும் ஒரே நேரத்தில் விதிக்கப்படுகிறது.

2. *ஒன்றிய ஆட்சிநில (யூனியன் பிரதேச) சரக்கு சேவை வரி(UTGST)*: சட்டமன்றம் இல்லாத ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளில் (உதாரணமாக: சண்டிகர், லடாக்) மாநில சரக்கு சேவை வரிக்கு பதிலாக ஒன்றியத்தால் விதிக்கப்படுகிறது.

3. *ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி(IGST)*: மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகம், வழங்கல்கள் மீது விதிக்கப்படுகிறது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 269A–இன் கீழ், ஒன்றியம் ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரியை விதித்து வசூலிக்கிறது.

இந்த வருவாய் பின்னர் பகிர்ந்தளிக்கப்படுகிறது: ஒன்றியம் தனது பங்கினை (மைய சரக்கு சேவை வரிக்கு சமமானது) வைத்துக்கொண்டு, மீதமுள்ள பங்கினை (மாநில சரக்கு சேவை வரிக்கு சமமானது) நுகர்வு செய்யும் மாநிலத்திற்கு மாற்றுகிறது.

தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்ரமணியன் தலைமையிலான குழு (2015), சரக்கு சேவை வரிக்கு முந்தைய வருவாய் சேகரிப்புடன் ஒத்துப்போவதற்குத் தேவையான ஒற்றை வீதமான வருவாய் நிலை வீதத்தை (*Revenue Neutral Rate* (RNR)) 15–15.5 விழுக்காடாகப் பரிந்துரைத்தது.[2] எவ்வாறாயினும், பணவீக்கம், இன்றியமையாப் பொருட்கள் மீதான வரி குறித்த கவலைகளால் சரக்கு சேவை வரி அவை ஒற்றை வீதத்தை நிராகரித்தது. அதற்குப் பதிலாக, 2017 ஜூலை 1 அன்று சரக்கு சேவை வரி தொடங்கப்பட்டபோது, 0 விழுக்காடு, 5 விழுக்காடு, 12 விழுக்காடு, 18 விழுக்காடு, 28 விழுக்காடு ஆகிய அடுக்குகளுடன் கூடிய பல அடுக்கு கட்டமைப்பு (Multi–Tier Structure) ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவை தவிர தங்கத்திற்கு 3 விழுக்காடு, பட்டை தீட்டப்படாத வைரங்களுக்கு 0.25 விழுக்காடு போன்ற சிறப்பு வீதங்களும், 'தீமை விளைவிக்கும்' பொருட்கள் மீது கூடுதல் மேல்வரிகளும் விதிக்கப்பட்டன.

வருவாய் பகிர்வில் ஒரு முக்கியமான மோதல் போக்கு உள்ளது. தொடக்ககாலக் கருத்தியல் கட்டமைப்புகள், குறிப்பாக சரக்கு சேவை வரி மீதான பணிக்குழு அறிக்கை (13வது நிதி ஆணையம், 2009) (*Report of the Task Force on GST (13th Finance Commission*, 2009)), இந்தியாவின் ஆழமான செங்குத்தான நிதி சமமின்மையைச் சீர்செய்ய, 12 விழுக்காடு கூட்டு வீதத்தில், தீங்கில்லாத அனைத்துப் பொருட்களுக்கும் ஒன்றியத்திற்கு 5 விழுக்காடு மைய சரக்கு சேவை வரி, மாநிலங்களுக்கு 7 விழுக்காடு மாநில சரக்கு சேவை வரி என திருத்தப்பட்ட சமச்சீரற்ற தன்மையை ஆதரித்தது. எவ்வாறாயினும், இறுதியில் நடைமுறைக்கு வந்த சரக்கு சேவை வரி முறை இந்த பொருளாதார தருக்க முறையிருந்து விலகி, இயந்திரத்தனமான 50:50 வருவாய் பகிர்வு முறையைத் (உதாரணமாக, 9 விழுக்காடு மைய சரக்கு சேவை வரி + 9 விழுக்காடு மாநில சரக்கு சேவை வரி) தேர்ந்தெடுத்தது. இந்த சமமானப் பகிர்வு என்பது அரசியல் மரபு சார்ந்ததே தவிர, அரசமைப்புச் சட்டத்தின் கட்டளை அல்ல என்பது குறிப்பிடத்தக்கது; அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A இத்தகைய சமச்சீர் தன்மையை வலியுறுத்தவில்லை. இந்தியாவின்

---

[2] Arvind Subramanian and others, *Report on the Revenue Neutral Rate and Structure of Rates for the Goods and Services Tax* (2015) 25.

நல்வாழ்வு, கல்வி, சட்டம் ஒழுங்கு ஆகியவற்றின் முதன்மைச் சுமையை ஏற்று, மொத்த அரசாங்கச் செலவினங்களில் 60 விழுக்காட்டிற்கும் மேலாக மாநிலங்களே சுமக்கும்போது, வரி வருவாயில் 50 விழுக்காட்டுப் பங்கு என்பது சமத்துவமற்றது என்று மாநிலங்கள் நியாயமாக வாதிடுகின்றன.

இந்த மாற்றத்தினால் ஏற்படும் இடர்களைக் குறைக்க, *சரக்கு சேவை வரி (மாநிலங்களுக்கு இழப்பீடு வழங்குதல்) சட்டம், 2017 (GST (Compensation to States) Act 2017)* சட்டபூர்வமான உறுதிப்பாட்டை வழங்கியது. 2015–16 அடிப்படை ஆண்டை விட 14 விழுக்காடு (Compound Annual Growth Rate – கூட்டு ஆண்டு வளர்ச்சி வீதம்) "பாதுகாக்கப்பட்ட வருவாய்" வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும் எந்தவொரு பற்றாக்குறைக்கும் ஐந்து ஆண்டுகளுக்கு (2017–2022) இழப்பீடு வழங்க ஒன்றியம் ஒப்புக்கொண்டது. இந்த வாக்குறுதி காரணமாகவே, மாநிலங்கள் தங்கள் சொந்த வரி வருவாயில் (OTR) 50 விழுக்காட்டிற்கும் அதிகமாகப் பங்களித்த சரக்குகள் மீதான தனித்த வரி உரிமைகளை விட்டுக்கொடுக்க ஒப்புக்கொண்டன.

14 விழுக்காடு வளர்ச்சி வீதத்திற்கு கீழ் ஏற்படும் வருவாய் பற்றாக்குறையிலிருந்து மாநிலங்களைப் பாதுகாத்த சட்ட உறுதிப்பாடு 2022 ஜூன் 30 அன்று முடிவுக்கு வந்தது. இது சந்தை ஏற்ற இறக்கங்களுக்கும், "நிதிச் சரிவு" அபாயத்திற்கும் மாநிலங்களை முழுமையாக ஆட்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், இழப்பீட்டு மேல்வரி (ஆடம்பர, தீமை விளைவிக்கும் பொருட்கள் மீதானது) வசூலிப்பது தொடர்கிறது. இந்த வருவாய் 2026 மார்ச் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த வருவாய் இனி மாநிலங்களுக்கு இழப்பீடாக வழங்கப்படாது; மாறாக, கோவிட்–19 பெருந்தொற்றின் போது மாநிலங்களுக்குக் கடனுதவி வழங்குவதற்காக ஒன்றிய அரசால் வாங்கப்பட்ட கடன் ரூ. 2.69 லட்சம் கோடியின் அசலையும் வட்டியையும் திருப்பிச் செலுத்த மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.[3]

செப்டம்பர் 2016–இல் சரக்கு சேவை வரி அவை அமைக்கப்பட்டவுடன், அது மைய சரக்கு சேவை வரி சட்டம் (CGST), ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகள் (யூனியன் பிரதேசங்கள் சரக்கு சேவை வரி சட்டம் (UTGST), ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி சட்டம் (IGST), மாநில சரக்கு சேவை வரி சட்டம் (SGST), சரக்கு சேவை வரி இழப்பீட்டுச் சட்டம் ஆகியவற்றை இயற்ற முன்மொழிந்ததுடன், அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A(4)(c)–இன் கீழ் மாதிரிச் சட்டங்களையும் பரிந்துரைத்தது. இந்த

---

[3] *Receipt Budget 2025–2026* (Ministry of Finance, Budget Division 2025) 70.

மாதிரிச் சட்டங்கள் நாடாளுமன்றத்தாலும், அனைத்து மாநிலச் சட்டமன்றங்களாலும் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இது நடைமுறையில் சரக்கு சேவை வரி அவையின் பரிந்துரைகளிலிருந்து விலகாமல் செயல்படத் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டதற்குச் சமம் ஆகும். இது சில கடுமையான அரசமைப்புச் சட்ட முறை, சட்ட முறை சார்ந்த சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது.

சரக்கு சேவை வரியின் முழுக் கட்டமைப்பு என்பது 2013–இல் நெகிழ்வுத்தன்மையை உறுதி செய்வதற்காக 51 விழுக்காடு தனியார் பங்குகளைக் கொண்ட இலாப நோக்கற்ற நிறுவனமாகத் தொடங்கப்பட்ட *சரக்கு சேவை வரி இணையதள வலைப்பின்னலை* (GSTN) நம்பியுள்ளது. இருப்பினும், தரவுகளை கையாளும் உரிமையையும் பாதுகாப்பு கவலைகளையும் கருத்தில் கொண்டு, இது 2022–இல் 100 விழுக்காடு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக (ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையே 50:50 பங்கீடு) மாற்றப்பட்டது. இது வரி செலுத்துவோர் பதிவு, வரித் தாக்கல், ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி தீர்வுக்கான சிக்கலான பணிகள் ஆகியவற்றை கையாளுவதற்கான எண்ணுரு (டிஜிட்டல்) தொழில்நுட்பத்தின் முதுகெலும்பாகச் செயல்படுகிறது. இருப்பினும், அதன் செயல்பாடு தொடர்ச்சியான தொழில்நுட்பக் கோளாறுகள், நிர்வாக வெளிப்படைத்தன்மையின்மை, விரிவான தரவுகளைப் பகிர்ந்து கொள்வதில் உள்ள தயக்கம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளது. இது மாநிலங்களின் மேற்பார்வையைத் திறம்பட முடக்கியுள்ளது. இந்த அமைப்புரீதியான பலவீனங்கள், குறிப்பாக கட்டுப்படுத்தப்படாத உள்ளீட்டு வரி வரவு (Input Tax Credit) முறைகேடுகள் வழியாக பெரிய அளவிலான வருவாய் இழப்பிற்கு வழிவகுத்தது மட்டுமல்லாமல், தீர்க்கப்படாத ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி நிதியத்தின் "கருந்துளையாக" அமைந்து, ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையிலான பதற்றத்தையும் அதிகரித்துள்ளது.

II. புள்ளிவிவர தரவுகள் அடிப்படையிலான தீர்ப்பு: முறிந்த "பெரும் பேரம்"

சரக்கு சேவை வரி முறை மீதான மிகக் கடுமையான விமர்சனம் தரவுகளின் அடிப்படையில் அமைந்தது: மாநிலங்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட வருவாய் வளர்ச்சியை வழங்குவதில் சரக்கு சேவை வரி முறை தோல்வி அடைந்துள்ளது.

நூற்று ஒன்றாவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் (2016) வருவாய் நிலைத்தன்மையை உருவாக்கும் என்கிற குறிப்பிடத்தக்க "பெரும் பேரம்" என்பதன் அடிப்படையிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதாவது, வருவாய் நிலைத்தன்மைக்கு ஈடாகவே, மிக உயர்ந்த நிதி ஈட்டும் கருவியான சரக்கு விற்பனைக்கு மீது வரி விதிக்கும் தங்களின் அரசமைப்புச் சட்ட அதிகாரத்தை விட்டுக்கொடுக்க மாநிலங்கள் ஒப்புக்கொண்டன. முதல் ஐந்து ஆண்டுகளுக்கு, ஆண்டுக்கு 14 விழுக்காடு வருவாய் வளர்ச்சிக்கான சட்ட உறுதிப்பாட்டை அளிப்பதன் வழியாக ஒன்றியம் இந்த ஒப்பந்தத்தை மேலும் கவர்ச்சிகரமாக மாற்றி ஏற்றுக்கொள்ளச் செய்தது. இந்த உறுதிப்பாடு என்பது வெறும் நிதி பாதுகாப்பு மட்டுமல்ல; இந்தச் சீர்திருத்தத்தைச் செயல்படுத்த செய்த ஓர் அரசியல் ஊக்கி ஆகும்.

எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, வருவாய் குறித்த கதை முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக உள்ளது. வருவாய் வளர்ச்சியை உருவாக்குவதற்குப் பதிலாக, சரக்கு சேவை வரி முறையானது, வரி ஈட்டும் திறனைக் குறைத்துள்ளது; மாநிலங்களின் நிதித் திறனைச் சிதைத்துள்ளது; ஒன்றியத்தின் நிதிப் பகிர்வைச் சார்ந்திருக்கும் புதிய வகை சார்பு நிலைகளை உருவாக்கியுள்ளது.

உள்நாட்டு மொத்த உற்பத்தியில் வரி வீதம் குறைதல்

பிஆர்எஸ் சட்ட ஆய்வு நிறுவனம் (PRS Legislative Research) (2025 அக்டோபரில்) நடத்திய விரிவான ஆய்வு, உள்நாட்டு மொத்த உற்பத்தியில் மறைமுக வரிகளின் பங்கைக் சரக்கு சேவை வரி குறைத்துள்ளதை உறுதிப்படுத்துகிறது. சரக்கு சேவை வரிக்கு முந்தைய நான்கு ஆண்டுகளில் (2015–16 உடன் முடிவடையும் காலம்), சரக்கு சேவை வரிக்குள் இணைக்கப்பட்ட மாநில வரிகளின் தொகுப்பு (மதிப்புக் கூட்டு வரி (VAT, CST போன்றவை) உள்நாட்டு மொத்த உற்பத்தியில் சராசரியாக *2.8 விழுக்காட்டை* உருவாக்கியது. சரக்கு சேவை வரிக்கு பிந்தைய காலத்தில், 2017–18க்கும் 2024–25க்கும் இடையில், மாநில சரக்கு சேவை வரி வசூல் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் சராசரியாக *2.6 விழுக்காடு* மட்டுமே இருந்தது. இது 2020–21 பெருந்தொற்று ஆண்டில் 2.3 விழுக்காடு என்ற குறைந்த அளவைத் தொட்டு, பின்னர் 2024–25–இல் 2.8 விழுக்காடாக மீண்டது; இது சரக்கு சேவை வரிக்கு முந்தைய நிலைக்குச் சமமானது மட்டுமே.

ஒன்றிய அரசு, மாநிலங்களின் மொத்த வசூலையும் உள்ளடக்கிப் பார்க்கும்போது, நிலைமை இன்னும் மோசமாகிறது. சரக்கு சேவை வரிக்குள் இணைக்கப்பட்ட வரிகளின் மொத்த வருவாய் 2015–16–இல்

உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 6.5 விழுக்காடாக இருந்தது. இது 2023–24–இல் 5.5 விழுக்காடாகக் குறைந்தது. உள்நாட்டு மொத்த உற்பத்தியில் கிட்டத்தட்ட ஒரு விழுக்காடுப் புள்ளி அளவுக்கு குறைந்துள்ள இந்த வீழ்ச்சி, நிதித் திறனில் ஏற்பட்டுள்ள கணிசமான பின்னடைவுச் சரிவைக் குறிக்கிறது. இந்தச் செயல்பாடு 15–வது நிதி ஆணையம் மதிப்பிட்ட *7 விழுக்காடு* வருவாய், மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதத்தை விடக் குறிப்பிடத்தக்க அளவில் குறைவாக உள்ளது. (**இணைப்பு I–ஐ** பார்க்கவும்).

அதிரடியான வரி வீதச் சீரமைப்புகளே சரக்கு மற்றும் சேவை வரியின் செயல்திறன் குறைப்பாட்டிற்கான முதன்மையான காரணம் ஆகும். 2017க்கும் 2019க்கும் இடையில், பணவீக்கக் கவலைகளினாலும் அரசியல் அழுத்தத்தினாலும், சரக்கு சேவை வரி அவை ஏராளமான பொருட்கள் மீதான வரி வீதங்களைக் குறைத்தது. இது அமைப்பின் சராசரி வரி வீதத்தை *14.4 விழுக்காட்டிலிருந்து 11.6 விழுக்காடாகக் குறைத்து*, வரித் தளத்தையே சுருக்கியது. சரக்கு சேவை வரிக்கு முந்தைய காலத்தில், ஒரு மாநிலத்தின் மக்கள் நலத் திட்டங்கள் சார்ந்த நிதி முடிவுகள் உள்ளூர் அளவிலானவையாக இருந்தன. ஆனால் சரக்கு சேவை வரியின் கீழ், பெரும்பாலும் ஒன்றிய அரசால் தன்னிச்சையாக அறிவிக்கப்பட்டு சரக்கு சேவை வரி அவையால் ஏற்றுக்கொள்ளப்படும் இத்தகைய முடிவுகள், அனைத்து மாநிலங்களின் கருவூலங்களையும் ஒரே நேரத்தில் காலி செய்துவிடுகின்றன. இதன் விளைவாக, வருவாய் இழப்பு பொதுவானதாகவும், அதே சமயம் நிதி சார்ந்த முடிவெடுக்கும் அதிகாரம் மையப்படுத்தப்பட்டும் உள்ளது.

பழைய முறையில், தமிழ்நாடு, மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா போன்ற உற்பத்தி மாநிலங்கள், மாநிலங்களுக்கு இடையிலான விற்பனை (மைய விற்பனை வரி) வழியாக கணிசமான வருவாயைப் பெற்றன. சரக்கு சேவை வரி முறையில், இந்த வருவாய் நுகர்வு மாநிலங்களுக்கு மாற்றப்பட்டது. இது வடிவமைப்பின் ஒரு கூறாக அறியப்பட்டாலும், இந்த மாற்றம், உற்பத்தி மாநிலங்களின் முக்கிய வருவாய் ஆதாரத்தைப் பறித்ததுடன், அதற்கு மாற்றாக எதுவும் வழங்கவில்லை. சில வடகிழக்கு மாநிலங்கள் வருவாய் உயர்வைப் பெற்றபோதிலும், பஞ்சாப், சத்தீஸ்கர், மத்தியப்பிரதேசம், ஒடிசா போன்ற மற்ற மாநிலங்கள், சரக்கு சேவை வரிக்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடும்போது வருவாயில் ஒப்பீட்டளவில் பெரும் சரிவைச் சந்தித்தன. இந்த வேறுபாடுகள் இருந்தபோதிலும், மாநிலங்களுக்கான சொந்த வரி வருவாயின் மிகப்பெரிய ஆதாரமாக மாநில சரக்கு சேவை வரி நீடிக்கிறது. இது 2025–26–ஆம் ஆண்டில் மாநிலத்தின் தனித்த வருவாயில் 44 விழுக்காடாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

"மொத்த வருவாயும் நிகர வருவாயும்" என்கிற மாயை

'சாதனை அளவிலான மொத்த வசூல்' எனப் புகழப்படும் அதிகாரப்பூர்வ செய்திகள் ஆழமான நடப்பு நிலைமையை மறைக்கின்றன. ஏற்றுமதியாளர்கள், உள்ளீடுகள் மீது ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரியைச் செலுத்திவிட்டு, பின்னர் அவற்றைத் திரும்பப் பெறுகிறார்கள். CEGIS மதிப்பீடுகளின்படி[4], ஆண்டுதோறும் மொத்த வசூலில் சுமார் 12 விழுக்காடு திரும்ப வழங்கப்படுகிறது. இந்த "திரும்ப வழங்குதல் இடைவெளி" காரணமாக, தலைப்புச் செய்திகளில் வரும் எண்கள் கருவூலத்திற்குக் கிடைக்கும் பணப்புழக்கத்தைக் கணிசமாக மிகைப்படுத்திக் காட்டுகின்றன. உதாரணமாக, 2022–23–இல் மொத்த வருவாய், உள்நாட்டு மொத்த உற்பத்தியில் *6.6 விழுக்காட்டை* எட்டிய நிலையில், திரும்ப வழங்கப்பட்ட பிறகு நிகர வருவாய் *5.9 விழுக்காடாகக்* குறைந்தது. 2023–24 நிலவரப்படி, அனைத்து மாநிலங்களின் நிகர வருவாயும், மாற்றத்தின் போது எதிர்பார்க்கப்பட்ட 14 விழுக்காடு வளர்ச்சிப் பாதையை விட 26.18 விழுக்காடு அளவில் குறைந்து காணப்பட்டது.

தரவு தெளிவின்மையும் முரண்பாடுகளும்

இந்த வருவாய் பற்றாக்குறையை மேலும் மோசமாக்குகுவது, நிலைத்த தரவுத் தெளிவின்மையும் சிதைவுகளுமே ஆகும். இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (CAG) சுட்டிக்காட்டியபடி, வருவாய் புள்ளிவிவரங்கள் சரக்கு சேவை வரி வலைபின்னல் (ஏற்றுக்கொண்ட அடிப்படை), வருவாய்த்துறை (பணமாகச் செலுத்தப்படுபவை), தலைமைக் கணக்குத் தணிக்கைத் துறை (ஒன்று முதல் மூன்று ஆண்டுகள் காலதாமதத்துடன் கூடிய தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள்) ஆகிய ஒன்றுக்கொன்று பொருந்தாத நிறுவன வழிகள் வழியாகக் கிடைக்கின்றன. இது சரிசெய்ய முடியாத முரண்பாடுகளுக்கு வழிவகுக்கிறது.[5]

இந்த முரண்பாடு *"தீர்க்கப்படாத"* ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி இருப்புகளில் மிகத் தெளிவாகத் தெரிகிறது. 2009–இல் பதிமூன்றாவது நிதி ஆணையப் பணிக் குழுவால் கற்பனை செய்யப்பட்ட தடையற்ற மென்பொருள் என்பதற்குப் பதிலாக, பெரும் நிதி முடங்கியுள்ளது. 2023 நவம்பர் மாதம் வரை "ஒன்றியத்தால் தக்கவைக்கப்பட்ட" ஒட்டுமொத்த ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி தொகை ரூ. 3,09,309 கோடி என்ற

---

[4] Varun Agarwal and others, 'GST Revenue Performance: Gainers and Losers after Seven Years' (2024) 59 Economic & Political Weekly 35, 37.

[5] Sacchidananda Mukherjee, 'Why Do GST Data Differ across Sources?' (2024) 59 Economic & Political Weekly 13.

பிரம்மாண்டமான அளவில் இருப்பதாக அரசாங்கத் தரவுகள் தெரிவிக்கின்றன.[6] இன்றும் கூட, ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி நிலுவைகளைத் துல்லியமான, நிகழ்நேர அடிப்படையில் தீர்வு செய்ய சரக்கு சேவை வரி வலைப்பின்னலால் இயலவில்லை; இது மாநிலங்களின் அரசமைப்புச் சட்ட உரிமையை பணப்புழக்கச் சூதாட்டமாக மாற்றியுள்ளது. மேலும், ஒரே மாதிரியான வரி வீதங்கள் இருந்தபோதிலும், மைய சரக்கு சேவை வரி வசூலை விட மாநில சரக்கு சேவை வரி வசூல் அடிக்கடி அதிகமாக இருக்கும் விசித்திரமான முரண்பாடு உள்ளது. இது தரவு சரிபார்ப்புக் கட்டுப்பாடுகள் இல்லாததால் ஏற்படுகிறது என்று தலைமைக் கணக்குத் தணிக்கைத் துறை கூறுகிறது. இது இணைய வலைப்பின்னல் அமைப்பில் சமரசம் செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துகிறது.

இழப்பீட்டு நெருக்கடியும் "நிதிச் சரிவும்"

கோவிட்–19 பெருந்தொற்று காலத்தில், பொருளாதார மந்தநிலை காரணமாக சரக்கு சேவை வரி வசூலில் பெரும் சரிவு ஏற்பட்டபோது, கூட்டாட்சி நிதி ஏற்பாட்டில் இருந்த குறைகள் வெளிப்பட்டன, இந்த நெருக்கடியை *"கடவுளின் செயல்"* என்று குறிப்பிட்ட ஒன்றிய அரசு, சட்டமுறையிலான 14 விழுக்காடு வருவாய் உறுதியை ஈடுசெய்வதற்கு சரக்கு சேவை வரி இழப்பீட்டு நிதியில் போதுமான இருப்பு இல்லை என்று குறிப்பிட்டது.

இந்தியாவின் நிதித் தொகுப்பிலிருந்து நிதியை வழங்குவதற்குப் பதிலாக, ஒன்றிய அரசு "தொடர் கடனுதவி" வழங்கும் வழிமுறையை அறிமுகப்படுத்தியது. இழப்பீட்டின் நிதி வழங்க, இழப்பீட்டுச் சட்டம் கட்டாயப்படுத்தவில்லை என்றும் ஒன்றிய அரசு வாதிட்டது. கடனுதவி ஏற்பாடு மாநிலங்களுக்காகப் பல முக்கியமான பாதுகாப்பு கூறுகளுடன் வடிவமைக்கப்பட்டது:

- *கடன் பெறும் அரசுரிமை:* ஒன்றிய அரசு (இந்திய அரசாங்கம்) சிறப்பு கடன் பெறும் உரிமையின் வழியாக நிதியைத் திரட்டியது.
- *நிதிப் பற்றாக்குறை நிலைத்தன்மை:* இந்தத் தொகைகள் இழப்பீட்டிற்குப் பதிலாக மாநிலங்களுக்குக் கடன்களாக வழங்கப்பட்டன. ஆனால் அவை மாநிலங்களின் *நிதிப் பற்றாக்குறை, மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு சார்ந்த கடன்* விகிதங்களின் கணக்கீட்டிலிருந்து வெளிப்படையாக *விலக்கப்பட்டன.*

---

[6] 'Lok Sabha Unstarred Question No. 2374' (*Ministry of Finance* 2023).

- *திருப்பிச் செலுத்தும் உறுதிப்பாடு:* அசலையும் வட்டித் தொகையையும் திருப்பிச் செலுத்தும் பொறுப்பு, மாநிலங்களின் சொந்த வரி வருவாயை நம்பியிருக்காமல், முதலில் ஐந்து ஆண்டு காலத்திற்கு அப்பால் நீட்டிக்கப்பட்ட (இப்போது 2026 மார்ச் வரை) சரக்கு சேவை வரி இழப்பீட்டுத் தீர்வை வசூலை மட்டுமே முழுமையாகச் சார்ந்துள்ளது.

இது மாநிலங்களின் நிதிநிலைக் கணக்குகளின் அடிப்படையில் அவர்களுக்குத் திருப்பிச் செலுத்தத் தேவையில்லாத மானியமாகச் செயல்பட்டாலும், இந்த நிகழ்வு நிறுவன அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருந்தது. இது, பல மாநிலங்களுக்கு, நிபந்தனையற்ற சட்ட உரிமையாக முதலில் கருதப்பட்ட இழப்பீட்டு வழிமுறை, அமைப்புசார்ந்த நெருக்கடி காலங்களில் கடன் ஏற்பாடாக மறுசீரமைக்கப்படலாம் என்பதை எடுத்துக்காட்டியது.

2022 ஜூன் மாதத்தில் இந்த உறுதி வழங்கல் முடிவடைந்து, "நிதிச் சரிவை" ஏற்படுத்தியது. இந்த பாதுகாப்பு வலை பறிக்கப்பட்ட நிலையில், மாநிலங்கள் கட்டமைப்பு அளவிலான தேக்கநிலையின் கடுமையான நிலைமையை எதிர்கொண்டன. இதன் தாக்கம் சமச்சீரற்றதாகவும் கடுமையானதாகவும் இருந்தது: பஞ்சாப் 49.6 விழுக்காடு வருவாய் பற்றாக்குறையைப் பதிவு செய்தது; அதைத் தொடர்ந்து உத்தரகாண்ட் (42.4 விழுக்காடு), கேரளா (36.5 விழுக்காடு) ஆகியவை உள்ளன.[7]

இறுதியாக, சரக்கு சேவை வரியின் வருவாய் செயல்பாடு காட்டுவது என்னவென்றால், மாநிலங்கள் தங்களின் அரசுரிமை மிக்க நிதி அதிகாரங்களை, குறைந்த பலன்களையும் அதிகப் பாதிப்புகளையும் கொண்ட ஆட்சி முறைக்காக விட்டுக்கொடுத்துள்ளன என்பதே.

III. கூட்டுறவுக் கூட்டாட்சி முறையை மீறும் வாக்களிக்கும் முறைகள்

சரக்கு சேவை வரி அவையானது, முதலில் கூட்டுறவுக் கூட்டாட்சி முறையின் கொள்கை அடித்தளமான 'ஒருமித்த கருத்து' என்பதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. *நூற்றுபதினைந்தாவது அரசமைப்புச் சட்டத்திருத்த வரைவு* (2011), "வருகை தந்த அனைத்து உறுப்பினர்களின்

[7] Shency Mathew and Anitha Kumari L, 'GST Implementation in India: Some Unresolved Issues' (*Gulati Institute of Finance and Taxation* 2025) 19.

ஒருமித்த கருத்தின்" வழியாக மட்டுமே செயல்படும் ஓர் அமைப்பைக் கருதிப் பார்த்தது. இந்த மாதிரியில், ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒன்றியத்திற்கும் 'இரத்துச் செய்யும் அதிகாரம்' இருந்தது. இது எந்தவொரு முடிவையும் சட்டமாக்குவதற்கு முன்பு முழுமையான உடன்பாட்டை தேவையாக்கியது.

எவ்வாறாயினும், முழுமையான ஒருமித்த கருத்து என்பது நடைமுறைக்குச் சாத்தியமற்றது என கருதப்பட்டதால், அதற்குப் பிந்தைய *நூற்று இருபத்து இரண்டாவது–வது அரசமைப்புச் சட்டத் திருத்த வரைவு* (2014) – இறுதியான அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A(9) – ஒருமித்த கருத்திற்குப்பதிலாக "வீதாச்சார வாக்களிப்பு" முறையை அறிமுகப்படுத்தியது. இந்த மாதிரியின் கீழ், சரக்கு சேவை வரி அவை எந்தவொரு முடிவையும் எடுக்க, *வருகை தந்து வாக்களிக்கும்* உறுப்பினர்களின் வீதாச்சார வாக்குகளில் நான்கில் மூன்று பங்கு (75 விழுக்காடு) பெரும்பான்மை தேவைப்படுகிறது. இதில் ஒன்றிய அரசின் வாக்கிற்கு மொத்த வாக்குகளில் மூன்றில் ஒரு பங்கு (33.33 விழுக்காடு) மதிப்பும், 28 மாநிலங்கள், சட்டமன்றங்களைக் கொண்ட 3 ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளின் (யூனியன் பிரதேசங்களின்) *வாக்குகளுக்கு மொத்தமாக* மூன்றில் இரண்டு பங்கு (66.67 விழுக்காடு) மதிப்பும் வழங்கப்பட்டுள்ளது. அவையின் கூட்டத்திற்கான குறைந்த அளவு வருகை, *மொத்த உறுப்பினர்களில்* 50 விழுக்காடாக (33–இல் 17 பேர்) நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2014–ஆம் ஆண்டு சட்டவரைவை *மாநிலங்களவைத் தேர்வுக் குழு* ஆய்வு செய்தபோது, அதிருப்தி தெரிவித்த உறுப்பினர்கள், 33.33 விழுக்காடு வாக்கு மதிப்பு, ஒன்றியத்திற்கு நிரந்தரமான 'இரத்துச் செய்யும் அதிகாரத்தை' திறம்பட வழங்குகிறது என்று வாதிட்டனர். ஏனெனில் ஒன்றியத்தின் ஒப்புதல் இல்லாமல் எந்தவொரு முடிவும் 75 விழுக்காடு எல்லையைத் தொட முடியாது. இந்த இரத்துச் செய்யும் அதிகாரத்தை நீக்கி, உண்மையான கூட்டாட்சி ஒத்துழைப்பை உறுதி செய்ய, வாக்கு மதிப்பை ஒன்றியத்திற்கு 25 விழுக்காடு என்றும் மாநிலங்களுக்கு 75 விழுக்காடு என்றும் மாற்றியமைக்க அவர்கள் பரிந்துரைத்தனர். மற்றொரு அதிருப்திக் குறிப்பு, அரசமைப்புச் சட்ட அளவில் சரக்கு சேவை வரி அவையின் தேவையையே கேள்விக்கு உள்ளாக்கியது; இப்போது உள்ள *மாநில நிதி அமைச்சர்களின் அதிகாரம் மிக்க குழு* போன்ற அமைப்பே போதுமானது என்று பரிந்துரைத்தது. இந்த எச்சரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு, இப்போதைய ஒருசார்பான அதிகாரப் பகிர்வு, சட்டம் ஆக்கப்பட்டது.[8]

---

[8] Bhupender Yadav and others, *Report of the Select Committee on the Constitution (One Hundred and Twenty–Second Amendment) Bill, 2014* (Rajya Sabha 2015).

வாக்களிக்கும் அதிகாரத்தில் உள்ள இந்த சமச்சீரற்ற தன்மை, ஒன்றியத்தின் ஆதிக்கம் எண்ணிக்கை அடிப்படையில் சாத்தியமாகக்கூடிய பல சூழல்களை உருவாக்குகிறது:

1. நடைமுறை அளவில் ஒன்றியத்தின் இரத்துச் செய்யும் அதிகாரம்

ஒரு முடிவுக்கு 75 விழுக்காடு வீதாச்சார வாக்குகள் தேவைப்படுவதால், 28 மாநிலங்களும் 3 ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளும் (யூனியன் பிரதேசங்களும்) ஒருமித்த கருத்தைக் கொண்டிருந்தாலும் – இது மிகவும் சாத்தியமற்றது – அவர்களால் 66.67 விழுக்காட்டை மட்டுமே திரட்ட முடியும். ஒன்றியம் தனது 33.33 விழுக்காடு வாக்குப் பங்கைக் கொண்டு, அனைத்து மாநிலங்களும் ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளும் விரும்பும் எந்தவொரு நடவடிக்கையையும் ஒருதலைப்பட்சமாகத் தடுக்க முடியும்.

2. 'சமமான' வாக்குகளின் சமத்துவமின்மை

மாநிலங்களின் மூன்றில் இரண்டு பங்கு வாக்கு, 31 வாக்களிக்கும் அலகுகளுக்கு இடையே சமமாகப் பிரிக்கப்படுகிறது. இது மாநிலத்தின் அளவு அல்லது பொருளாதாரப் பங்களிப்பைப் பொருட்படுத்தாமல், ஒவ்வொரு அலகுக்கும் சமமான வாக்கு மதிப்பினை வழங்குகிறது. இது புதுச்சேரி போன்ற சிறிய ஒன்றிய ஆட்சிநிலப் பகுதியும், மகாராஷ்டிரா போன்ற பொருளாதார மையமும் ஒரே அளவிலான குரலைக் கொண்டிருக்கும் தவறான சமநிலையை உருவாக்குகிறது. பல கொள்கை மாற்றங்கள் முதன்மையாக, பெரிய அளவிலான தொழில்துறையையும் நுகர்வோர் அளவையும் பாதிப்பதால், அத்தகைய சிக்கல்கள் முக்கியமற்றவையாக இருக்கும் சிறிய மாநிலங்களும் ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளும் பெரும்பாலும் எந்த எதிர்ப்பும் இன்றி ஒன்றிய அரசுடன் உடன்படுகின்றன. இதன் விளைவாக, வரித் தொடர்பான கொள்கைகளை உருவாக்கும் அரசு அமைப்புகளுக்கு, விளைவுகளைப் பற்றி போதிய புரிதல் இல்லாமையால் முக்கிய உற்பத்தி செய்யும் மாநிலங்களின் குரலை நீர்த்துப்போகச் செய்து, ஒருசார்பான ஒருமித்த கருத்தின் வழியாக மையப்படுத்தலை எளிதாக்குகிறது.

3. திணிக்கப்பட்ட கூட்டாட்சி முறை

இந்தியாவின் பல கட்சிச் சூழலில், ஒன்றியத்தில் ஆளும் கட்சி அல்லது கூட்டணி பெரும்பாலும் ஒரே நேரத்தில் கணிசமான எண்ணிக்கையிலான மாநிலங்களிலும் ஆட்சி செய்கிறது. இந்த அரசியல் ஒற்றுமை, சரக்கு

சேவை வரி அவையில் தேவையான 75 விழுக்காடு வாக்குகளை ஒன்றியம் எளிதாகத் திரட்ட அனுமதிக்கிறது. இது எதிர்க்கட்சிகளின் கருத்தை நசுக்க உதவுகிறது. இத்தகைய ஆதிக்கம், சரக்கு சேவை வரி அவையை ஒன்றிய ஆட்சித் துறையினரின் ஒருசார்பான முடிவுகளுக்கு, வெறுமனே அனுமதி வழங்கும் அமைப்பாக மாற்றுகிறது; எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களைத் தங்களால் எதிர்க்க முடியாத முடிவுகளுக்கு உடன்படக் கட்டாயப்படுத்துகிறது; அவை "கூட்டுறவுக் கூட்டாட்சி முறை" அமைப்பு என்பது மாயை என வெட்டவெளிச்சமாக்குகிறது.

4. குறைந்த வருகை அளவு (Quorum) என்னும் பொறி

அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A(7)–இன் படி, குறைந்த வருகை அளவு மொத்த உறுப்பினர்களில் 50 விழுக்காடாக (33–இல் 17 பேர்) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள், சரக்கு சேவை வரி அவையை முற்றிலுமாக முடக்க ஒரே வழி, குறைந்தது 17 மாநிலங்கள் ஒருங்கிணைந்து கூட்டத்தைப் புறக்கணிப்பது மட்டுமே.[9] இது கொள்கை அளவில் சாத்தியம் என்றாலும், நடைமுறையில் மிகவும் கடினமான, அரசியல் நோக்கில் சாத்தியமற்ற நடவடிக்கை ஆகும். *"வருகை தந்து வாக்களித்தல்"* என்ற விதியில் அதிநுட்பமான பலவீனம் உள்ளது. ஒன்றியத்தின் வாக்குப் பங்கு 33.33 விழுக்காடு என்பது அரசமைப்புச் சட்ட அளவில் நிலையானது என்றாலும், குறைந்த அளவிலான உறுப்பினர்களின் வருகை என்பது முடிவை எடுப்பதற்கான எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்கிறது. முழு உறுப்பினர்களும் இருக்கும்போது, ஒவ்வொரு மாநிலத்தின் வாக்கு மதிப்பும் 2.15 விழுக்காடு ஆகும் (66.67/31); பதிவான வாக்குகளில் 75 விழுக்காட்டுப் பெரும்பான்மையைப் பெற, ஒன்றியத்திற்கு 20 மாநிலங்களின் ஆதரவு தேவை. ஆனால், வருகை அளவு குறைவாக இருக்கும் சூழலில் (ஒன்றியம் + 15 மாநிலங்கள்), ஒவ்வொரு மாநிலத்தின் வாக்கு மதிப்பும் 4.44 விழுக்காடாக (66.67/15) உயர்கிறது, அப்போது ஒன்றியத்திற்கு 10 மாநிலங்களின் ஆதரவு இருந்தால் போதுமானது. சுருக்கமாகச் சொன்னால், இந்த விழுக்காடு ஒன்றியத்திற்குச் சாதகமாகவே அமைக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் வராமல் இருப்பது இயல்பான ஒன்று என்பதால், குறைவான மாநிலங்கள் பங்கேற்கும் போது, சிதறுண்ட அல்லது பகுதியளவு வராத எதிர்க்கட்சிகளின் மீது தனது நிபந்தனைகளைத் திணிப்பது ஒன்றியத்திற்கு எளிதாகிறது.

---

[9] Sanjay Bhattacherjee and Palash Sarkar, 'Voting in the Goods and Services Tax Council of India' (Indian Statistical Institute 2018).

பரிந்துரை 1

கூட்டாட்சிச் சமநிலையை மீட்டெடுப்பதற்கு, அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A–இன் உட்பிரிவுகள் (7), (9) ஆகியவற்றில் திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

வாய்ப்பு அ: குறைவெண் வரம்பையும் அளவையும் வாக்களிப்பு முறையையும் மாற்றுதல்

கூட்டத்தைப் புறக்கணித்தல் என்ற 'இறுதியான தேர்வை' வெறும் கொள்கை அளவிலான சாத்தியத்திலிருந்து, ஒன்றியத்தின் ஒருசார்பான போக்கிற்கு எதிரான நம்பகமான தடையாக மாற்ற, குறைந்த அளவு வருகை வரம்பு, அவையின் *மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்காக* (33–இல் 22 பேர்) உயர்த்தப்பட வேண்டும். இந்த மாற்றம், வெறும் 12 மாநிலங்கள் – அதாவது அரசியல் நோக்கில் சாத்தியமான ஒரு குழு – வராமல் போனாலே அவை நடவடிக்கைகளை நிறுத்துவதற்குப் போதுமானதாக இருக்கும் என்பதை உறுதி செய்கிறது. இத்தகைய வழிமுறை, முடிவுகளை எடுப்பதற்கு வெறும் வாக்கு வங்கி கணக்குகளை மட்டும் நம்பியிருக்காமல், உண்மையான ஒருமித்த கருத்தை நாடுவதற்கு ஒன்றியத்தைக் கட்டாயப்படுத்தும்.

மேலும், வாக்களிக்கும் முறை "பதிவான வாக்குகள்" என்பதிலிருந்து "மொத்த உறுப்பினர்கள்" என்பதற்கு மாற வேண்டும். இந்த மாதிரியின் கீழ், *உறுப்பினர்களின் வருகையைப் பொருட்படுத்தாமல், அவையின் மொத்த எண்ணிக்கையில்* ஒன்றியத்தின் வாக்கு 33.33 விழுக்காடு என்றும், மாநிலங்களின் கூட்டு வாக்கு, அவையின் மொத்த வாக்கில் 66.67 விழுக்காடு என்றும் நிலையான மதிப்பைக் கொண்டிருக்கும். இதன் விளைவாக, ஒவ்வொரு மாநிலத்தின் வாக்கும் 2.15 விழுக்காடு என்ற நிலையான மதிப்பைப் பெறும். ஒரு முடிவு எடுக்கப்படுவதற்கு *மொத்த வீதாச்சார வாக்குகளில் 75 விழுக்காட்டிற்குக்* குறையாமல் இருக்க வேண்டும் என்று கட்டாயமாக்குவதன் வழியாக, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான தடையரண் கணிசமாக உயர்த்தப்படுகிறது. இந்தச் சூழலில், அந்த வரம்பை எட்ட ஒன்றியத்திற்கு குறைந்தது 20 மாநிலங்களின் நேரடி ஆதரவு தேவைப்படும். இதற்கு, குறைந்தது 22 உறுப்பினர்கள் (2 ஒன்றியப் பிரதிநிதிகள் + 20 மாநிலங்கள்) வருகை தருவது அவசியமாகும் என்பதால், மூன்றில் இரண்டு பங்கு குறைந்த வருகை அளவு தேவையானது என்பது, ஒரு முடிவை நிறைவேற்றத் தேவையான குறைந்தபட்ச ஒருமித்த கருத்துடன் ஒத்துப்போகிறது. இது ஒருசார்பான முடிவுகள் எடுப்பதைக் கடினம் ஆக்குகிறது.

வாய்ப்பு ஆ: வீதாச்சாரச் சமநிலை – கூட்டாண்மை மாதிரி

மாறாக, இப்போதுள்ள குறைந்த வருகை அளவு முறையும் "அளிக்கப்பட்ட வாக்குகள்" முறையையுமே தொடர வேண்டுமானால், ஒன்றியத்தின் எண்ணிக்கை பலம் அளவிலான இரத்து செய்யும் அதிகாரத்தைப் பறிக்கும் வகையிலும், நிபந்தனைகளைத் திணிப்பதற்குப் பதிலாக, நட்பார்ந்த முறையை உருவாக்க அதைக் கட்டாயப்படுத்தும் வகையிலும் வாக்களிக்கும் முறை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

- சரக்கு சேவை வரி அவையின் மொத்த உறுப்பினர்களில் 50 விழுக்காடு குறைந்த வருகை அளவையும், அளிக்கப்பட்ட வீதாச்சார வாக்குகளில் 75 விழுக்காட்டுப் பெரும்பான்மையையும் அப்படியே தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.
- ஒன்றியத்தின் வாக்குப் பங்கை 33.33 விழுக்காட்டிலிருந்து *20 விழுக்காடாகக்* குறைக்க வேண்டும்; மேலும் மாநிலங்களின் கூட்டுப் பங்கை *80 விழுக்காடாக* உயர்த்த வேண்டும். ஒரு முடிவைத் தடுப்பதற்கான சிறுபான்மை வரம்பு 25 விழுக்காடு என்பதால், இந்த மாற்றம் ஒன்றியத்திற்கு இருக்கும் ஒருசார்பான இரத்து செய்யும் அதிகாரத்தைப் பறிக்கிறது.
- *"ஒரு மாநிலம், ஒரு வாக்கு"* என்ற குறைப்பாட்டை ஒழிக்க வேண்டும். அதற்குப் பதிலாக, மாநிலங்களின் வாக்களிக்கும் மதிப்பை *மக்கள் தொகை, வருவாய் பங்களிப்பு* (குறிப்பாக, கடந்த 3 ஆண்டுகளின் குறைந்தபட்ச ஆண்டு சரக்கு சேவை வரி வசூல்) அல்லது இவை இரண்டின் *50:50 கலவையின்* அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய வேண்டும். துல்லியமான தன்மையை உறுதி செய்ய, இந்த வாக்கு மதிப்பு முறை *ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மீண்டும் மாற்றியமைக்கப்பட* வேண்டும். இந்தச் சீர்திருத்தம் இப்போதுள்ள தவறான சமத்துவத்தைச் சரிசெய்து, பொருளாதார வலிமை கொண்ட, மக்கள் தொகை அதிகம் கொண்ட மாநிலங்கள் சிறிய ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுக்கு (யூனியன் பிரதேசங்களுக்கு) இணையாகக் கருதப்படுவதைத் தவிர்க்கும்; இதன் வழியாக வாக்களிக்கும் அதிகாரத்தை உண்மையான நிதிப் பங்களிப்புடன் ஒத்திசையச் செய்யும்.

வாய்ப்பு இ: 'ஓர் உறுப்பினர், ஒரு வாக்கு' முறை

சரக்கு சேவை வரி அவையின் கட்டமைப்பு, மகாராஷ்டிரா போன்ற பொருளாதார மையத்தை, திரிபுரா போன்ற சிறிய மாநிலத்திற்கு

இணையாகக் கருதும் மிகப்பெருமளவிலான சமத்துவமின்மையைத் தாங்கிக் கொள்ளுமானால், ஒன்றியம் மட்டும் உயர்வான மூன்றில் ஒருபங்கு வாக்குப் பங்கைக் கொண்டிருப்பதற்கு தருக்க அளவிலான எந்தவொரு நியாயமும் இல்லை. மாறாக, ஒன்றியம் மற்ற உறுப்பினர்களைப் போலவே சமமான மதிப்பைக் கொண்டிருக்க வேண்டும். இந்த முறையின் கீழ்:

- ஒன்றியத்திற்கு ஒரு வாக்கும், ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு வாக்கும் ஒதுக்கப்பட வேண்டும்.
- மொத்த உறுப்பினர்களில் 50 விழுக்காடு என்கிற குறைந்த வருகை அளவைத் தக்கவைக்க வேண்டும்.
- முடிவு எடுப்பதற்கான வரம்பை வருகை தந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்காகக் குறைக்க வேண்டும். வீதாச்சார வாக்களிப்பு முறை இல்லாத நிலையில், ஒரு சிறிய எதிர்ப்புக் குழுவால் முடிவெடுப்பதை முடக்க முடியாது என்பதை இந்த மாற்றம் உறுதி செய்கிறது.

இந்தச் சீர்திருத்தம் சரக்கு சேவை வரி அவையை முழுமையாக ஜனநாயகப்படுத்தும்; ஒன்றியத்தை மேலாதிக்கம் செலுத்தும் அமைப்பாக இல்லாமல், சமமானப் பங்காளியாகக் கருதும்.

வாய்ப்பு ஈ: "சிறுபான்மையினரின் பெரும்பான்மை" என்கிற பாதுகாப்பு

இந்த முன்மொழிவு வாய்ப்பு 'இ'–யைச் செம்மைப்படுத்துகிறது. இது பெரும் தனியார் நிறுவன ஆளுகையில் சிறுபான்மை பங்குதாரர்களைப் பெரும்பான்மை ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்கப் பயன்படுத்தப்படும் 'சிறுபான்மையினரின் பெரும்பான்மை' என்கிற விதியைப் போன்ற ஒரு வழிமுறையைக் கற்பனை செய்கிறது. சரக்கு சேவை வரி அவையின் சூழலில், ஒன்றிய அரசாங்கம் "முன்னெடுப்பாளர்" போலவும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் "சிறுபான்மை பங்குதாரர்கள்" போலவும் செயல்படுகின்றன. முன்னவர் தனது அப்பட்டமான பெரும்பான்மையைப் பயன்படுத்தி பின்னவரை நசுக்குவதைத் தடுக்க, "இரட்டைப் பெரும்பான்மை" தேவை முன்மொழியப்படுகிறது:

- ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் முறையே ஒரு வாக்கு ஒதுக்கப்பட வேண்டும்.
- மொத்த உறுப்பினர்களில் 50 விழுக்காடு குறைந்த வருகை அளவைத் தக்கவைக்க வேண்டும்.

- ஒரு முடிவு நிறைவேற (i) வருகை தந்து வாக்களிக்கும் மொத்த உறுப்பினர்களில் *மூன்றில் இரண்டு பங்கு* ஆதரவு, (ii) வருகை தந்து வாக்களிக்கும் "சார்பற்ற மாநிலங்களின்" (ஒன்றியத்தில் ஆட்சியில் இருக்கும் கட்சி அல்லது கூட்டணியால் ஆளப்படாத மாநிலங்கள்) எளிய பெரும்பான்மை ஒப்புதல் ஆகிய இரண்டும் தேவை.

இந்தச் சீர்திருத்தம், ஒன்றியம் தனது அரசியல் கூட்டணிகள் வழியாக மட்டுமே ஒருமித்த கருத்தை உருவாக்குவதைத் தடுக்கிறது. இது திணிக்கப்பட்ட கூட்டாட்சி முறைக்கு எதிரான, ஒரு உறுதியான தடையாகச் செயல்படும்; மேலும் சரக்கு சேவை வரி கொள்கை அரசியல் வேறுபாடுகளைக் கடந்து ஆதரவைப் பெறுவதை உறுதி செய்யும்.

IV. நல்ல, எளிமையான வரி (Good and Simple Tax)?

ஜூலை 1, 2017 அன்று தொடங்கப்பட்டதிலிருந்து, இந்தியாவின் சரக்கு சேவை வரி பயணம் படிப்படியான முன்னேற்றத்தால் அல்லாமல், திடீர் கொள்கை மாற்றங்களாலேயே வடிவமைக்கப்பட்டு உள்ளது. நூற்றுக்கணக்கான சிறிய நடைமுறை, வீத மாற்றங்கள் இருந்தாலும், இந்த எட்டு ஆண்டுகளில் குறைந்தது ஐந்து முறை கட்டமைப்பு அளவிலான மாற்றங்களைச் சந்தித்துள்ளது. இவை ஒவ்வொன்றும் திட்டமிடப்பட்ட சீர்திருத்தங்களை விட அரசியல் எதிர்ப்பு, நிதி நெருக்கடி அல்லது நிர்வாகக் குழப்பங்களாலேயே தூண்டப்பட்டன.

1. *நவம்பர் 10, 2017*: நடைமுறைப்படுத்தப்பட்ட நான்கே மாதங்களில், குவஹாத்தியில் நடந்த 23–வது சரக்கு சேவை வரி அவைக் கூட்டம் முதல் பெரிய பின்வாங்கலைக் குறித்தது. அசல் "வருவாய் நிலைத்தன்மை வீத" தருக்கம், பற்பசை, சோப்பு போன்ற இன்றியமையா நுகர்பொருட்கள் உட்பட 228 பொருட்களை மிக உயர்ந்த 28 விழுக்காடு அடுக்கில் வைத்திருந்தது; இவை ஆடம்பர கார்களுக்கும் புகையிலைக்கும் இணையாகக் கருதப்பட்டன. பொதுமக்களின் கடும் கோபத்தையும், குஜராத் தேர்தலையும் எதிர்கொண்ட நிலையில், ஒரே இரவில் 178 பொருட்களுக்கான வரி வீதங்களை 28 விழுக்காட்டிலிருந்து 18 விழுக்காடாக சரக்கு சேவை வரி

அவை குறைத்தது.[10] இந்த ஒட்டுமொத்த வகைமாற்றம், அசல் "வருவாய் நிலைத்தன்மை வீத" கணக்கீடு தவறானது என்பதை மறைமுகமாக ஒப்புக்கொண்டது ஆகும்.

2. *ஜூலை 21, 2018*: சுமார் எட்டு மாதங்களுக்குப் பிறகு, புது தில்லியில் நடந்த 28–வது கூட்டத்தில், "வீட்டுப் பயன்பாட்டு மின்சாரப் பொருட்கள்" இனி ஆடம்பரப் பொருட்கள் அல்ல, அவை நடுத்தர வர்க்கத்தினருக்கு அவசியமானவை என்பதை சரக்கு சேவை வரி அவை ஏற்றுக்கொண்டது. இதன் விளைவாக, குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், சிறிய திரைத் தொலைக்காட்சிகள் மீதான வரி வீதங்கள் 28 விழுக்காட்டிலிருந்து 18 விழுக்காடாகக் குறைக்கப்பட்டன.[11] அதே நேரத்தில், சானிட்டரி நாப்கின்களுக்கு (12 விழுக்காடு) முழு விலக்கு அளிக்கப்பட்டது. இந்தக் கூட்டம் 28 விழுக்காடு அடுக்கைத் "தீமை விளைவிக்கும்" பொருட்களுக்கும் வாகனங்களுக்கும் மட்டுமேயான ஒன்றாக மாற்றியது.

3. *மார்ச் 19, 2019:* ஒன்பது மாதங்களுக்குப் பிறகு நடந்த 34–வது கூட்டம், ரியல் எஸ்டேட் துறையை மீட்க, கட்டமைப்பு அளவிலான முரண்பாட்டை அறிமுகப்படுத்தியது. கட்டுமான நிறுவனங்கள் உள்ளீட்டு வரி வரவு [அதாவது, திரும்ப பெறும் வரிச் சலுகை] பலனை வீடு வாங்குபவர்களுக்கு வழங்காததால், குடியிருப்பு வீடுகளுக்கான "வரியும் வரவும்" என்ற சரக்கு சேவை வரியின் அடிப்படைக் கொள்கையை அவை கைவிட்டது. மலிவு விலை வீடுகளுக்கு 1 விழுக்காடு என்றும், மற்ற குடியிருப்புப் பகுதிகளுக்கு 5 விழுக்காடு என்றும் வரிகள் குறைக்கப்பட்டன. ஆனால் உள்ளீட்டு வரி வரவு பலன் *இன்றி* செய்யப்பட்டது. இது வீடுகள் மீதான சரக்கு சேவை வரியை சாதாரண விற்பனை வரியாக மாற்றியதுடன், மதிப்பு கூட்டப்பட்ட சங்கிலியைத் துண்டித்தது. எவ்வாறாயினும், வணிக நோக்கிலான ரியல் எஸ்டேட் துறை 12 விழுக்காடு வரியுடன் உள்ளீட்டு வரி வரவு பலனைப் பெறும் நிலையான முறையில் தொடர்ந்தது.[12]

---

[10] 'Minutes of 23rd GST Council Meeting held on November 10, 2017' (*GST Council* 2017).

[11] 'Minutes of the 28th GST Council Meeting held on July 21, 2018' (*GST Council* 2018).

[12] 'Minutes of the 34th GST Council Meeting held on March 19, 2019' (*GST Council* 2019).

4. *ஜூன் 28–29, 2022:* ஐந்தாண்டு இழப்பீட்டு உறுதி 2022 ஜூன் மாதத்தில் முடிவடைந்த நிலையில், சண்டிகரில் நடந்த 47–வது கூட்டம் *"வரி குறைப்பு காலத்தின்"* முடிவை உணர்த்தியது. நிதியைப் பெருக்க வேண்டிய கட்டாயத்தில், முன்பே பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களுக்கான வரி விலக்குகளை சரக்கு சேவை வரி அவை திரும்பப் பெற்றது. தயிர், லஸ்ஸி, பன்னீர், கோதுமை, அரிசி போன்ற இன்றியமையாப் பொருட்கள் – முன்பு வரி விலக்கு பெற்றவை – 5 விழுக்காடு வரி வலைக்குள் கொண்டு வரப்பட்டன.[13] இது "தலைகீழ் தீர்வை அமைப்பை" சரிசெய்வதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், வரி வீத மாற்றங்கள் ஒருமித்த கருத்தைவிட நிதி நெருக்கடியாலேயே இன்னும் தீர்மானிக்கப்படுகின்றன என்பதை வெளிப்படுத்தியது.

5. *2025 செப்டம்பர் 3*: மிகத் தீவிரமான சீரமைப்பிற்கான விளக்கக் கதை, சரக்கு சேவை வரி அவையில் அல்லாமல், செங்கோட்டையில் எழுதப்பட்டது. 2025 ஆகஸ்ட் 15 அன்று, பிரதமர் ஒருதலைப்பட்சமாக "அடுத்த தலைமுறை சரக்கு சேவை வரி சீர்திருத்தங்களை" அறிவித்தார்; இது அவையின் முன் ஒரு 'முடிந்துபோன முடிவாக' (*fait accompli*) வைக்கப்பட்டது.[14] இதன் விளைவாக, செப்டம்பர் 3, 2025 அன்று நடந்த 56–வது கூட்டத்தில், மூன்று அடுக்குக் கட்டமைப்பிற்கு (5, 18, 40 விழுக்காடு) மாறுவதற்கு முறையான விவாதங்கள் இன்றி, ஒப்புதல் அளிக்கப்பட்டது.[15] கூட்டம் முடிந்த சில நிமிடங்களிலேயே செய்தி ஊடகங்கள், சமூக ஊடகங்கள் வாயிலாக ஒன்றியம் அதிகாரப்பூர்வ அறிவிப்புகளை வெளியிட்டது. இந்த நிகழ்வு, சரக்கு சேவை வரி அவை கூட்டாட்சி முறையிலான உடன்பாட்டு மன்றம் என்பதிலிருந்து ஒன்றிய ஆட்சித் துறையின் பயனுள்ள துணை அமைப்பாக என மாறியதைக் குறித்தது.

---

[13] 'Minutes of the 47th Meeting of GST Council held on June 28, 29, 2022 (*GST Council* 2022).

[14] 'Major Announcements by Prime Minister Shri Narendra Modi During His I–Day Address' (*Press Information Bureau* August 15, 2025) accessed January 22, 2026.

[15] 'Recommendations of the 56th Meeting of the GST Council held at New Delhi, today' (*Press Information Bureau* September 3, 2025) accessed January 22, 2026.

பொருத்தமின்மைகளின் வகைப்பாடு

சரக்கு சேவை வரி அவையின் பெருமளவிலான மாற்றங்கள், அதன் நிலையற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றன என்றால், அதன் சிற்றளவிலான வகைப்பாடுகள் பொருத்தமற்ற தன்மையின் எல்லைக்கே சென்று, இணக்கச் செயல்பாடுகளைக் கனவாக மாற்றியிருந்தன. *2025 செப்டம்பர் சீர்திருத்தங்கள் (செப்டம்பர் 22, 2025 முதல் நடைமுறைக்கு வந்து) அவற்றில் பலவற்றைச் சரிசெய்யும் வரை.*

- 2025 செப்டம்பர் மாதத்துக்கு முன்பு, பொட்டலமிடப்படாத பாப்கார்னுக்கு 5 விழுக்காடும், பொட்டலமிடப்பட்ட பாப்கார்னுக்கு 12 விழுக்காடும், கேரமல் பாப்கார்னுக்கு 18 விழுக்காடும் வரி விதிக்கப்பட்டது; 2025 செப்டம்பர் மாதத்துக்குப் பிறகு, அனைத்துக்கும் ஒரே சீரான 5 விழுக்காடு வரி விகிதம் பொருந்தும்.

- முன்பு, சாதாரண ரொட்டி/சப்பாத்திக்கு 5 விழுக்காடும், முன்கூட்டியே தயாரித்த/பொட்டலமிடப்பட்ட பரோட்டாவுக்கு 18 விழுக்காடும் வரி விதிக்கப்பட்டது; இப்போது, ரொட்டி, பரோட்டா உட்பட அனைத்து இந்திய மரபு ரொட்டி வகைகளுக்கும் வரி வீதம் '0' (பூஜ்யம்) விழுக்காடாக உள்ளது.

- முன்பு, ஒரு சாதாரண பன்னுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது, வாணிக பிராண்டட் அல்லது பொட்டலமிடப்பட்ட பன்னுக்கு 5 விழுக்காடும்; ஜாமிற்கு 12 விழுக்காடும், ஆனால் உள்ளே ஜாம் கொண்ட பன்னுக்கு 18 விழுக்காடும் வரி விதிக்கப்பட்டது; இப்போது, அனைத்துக்கும் ஒரே சீரான 5 விழுக்காடு வரி வீதம் பொருந்தும்.

- முன்பு, ரூ.1,000 வரையிலான ஆடை மற்றும் காலணிகளுக்கு 5 விழுக்காடும், ரூ.1,000க்கு மேற்பட்டவற்றுக்கு 12 விழுக்காடும் வரி விதிக்கப்பட்டது; இப்போது, ரூ. 2,500 வரையிலான ஆடை மற்றும் காலணிகளுக்கு 5 விழுக்காடும்; ரூ. 2,500க்கு மேற்பட்டவற்றுக்கு 18 விழுக்காடும் வரி விதிக்கப்படுகிறது.

- முன்பு, ஒரே இருக்கைக்கு அலுவலகத்திற்கு 18 விழுக்காடும், மகிழுந்துக்கு (காருக்கு) 28 விழுக்காடும் வரி விதிக்கப்பட்டது; இப்போது, இரண்டுக்கும் 18 விழுக்காடு மட்டுமே.

பொட்டலமிடுதல், வடிவம், விலை நிலை அல்லது கற்பனையான தேவை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த இந்த நுணுக்கமான வரையறைகள், சீரான மதிப்புக்கூட்டு வரியின் தர்க்கத்தை

சிதைத்துவிட்டன. 2025 செப்டம்பர் சரக்கு சேவை வரி அவைக் கூட்டத்தில், இவை கணிசமாக சரிசெய்யப்பட்டிருந்தாலும், அவற்றின் நீண்ட கால இருப்பு வணிகங்களுக்கும் நுகர்வோருக்கும் பல ஆண்டுகளாகத் தவிர்க்கக்கூடிய சிரமங்களை ஏற்படுத்தியது. இனிவரும் காலங்களில், இதுபோன்ற தேவையற்ற வரி அடுக்குகளைத் தடுக்க, அவை "ஒரு பொருளுக்கு ஒரு வரி வீதம்" என்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

இந்த முடிவுகள் தவறானவை என்பது மட்டும் குற்றச்சாட்டல்ல. உண்மையில், பல திருத்தங்கள் நடைமுறை அளவில் அவசியமானவைதான். ஆனால் சரக்கு சேவை வரி அவை 'கட்டுப்பாடு இல்லாமல்' உள்ளது என்பதே முக்கியமான குற்றச்சாட்டு ஆகும். அனுபவபூர்வமான ஆதாரங்களின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கும் அல்லது நிலையான கொள்கைப் பாதையைப் பின்பற்றும் திறன் அதற்கு இல்லை. இந்தத் தற்காலிகத் தன்மை என்பது கட்டமைப்பிலேயே முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட ஒன்று ஆகும். ஏனெனில் இந்த அவை, தீவிரமான சட்டம் இயற்றும் மன்றமாகச் செயல்படாமல், எதிர்வினை ஆற்றும் நிர்வாக அமைப்பாகச் செயல்படுகிறது. இது பொருளாதாரத்தை அவ்வப்போது கொள்கை வகுப்பு அதிர்ச்சிகளுக்கு உள்ளாக்குகிறது; இது வணிக நம்பிக்கையையும் மாநில வருவாயையும் சீர்குலைக்கிறது.

பரிந்துரை 2

1. *"ஒரு தயாரிப்பு, ஒரு வீதம்"* தரநிலையை நடைமுறைப்படுத்தல்: உலக அளவிலான பொருள் வகைப்பாட்டு (HSN) குறியீடுகளின் அடிப்படையில் கண்டிப்பான "ஒரு தயாரிப்பு, ஒரு வீதம்" விதியை சரக்கு சேவை வரி அவை பின்பற்ற வேண்டும். இது பேக்கிங், வடிவம் அல்லது பயன்பாட்டு முறையின் அடிப்படையிலான வகைப்பாடுகளை ஒழிக்கும்; இதன் வழியாக சட்டப் போராட்டங்களைக் குறைத்து, வரிக் கொள்கையை வணிக நடப்பு நிலைமையுடன் ஒத்திசையச் செய்யும்.

2. *ஆண்டு வரி வீத அட்டவணை:* அனைத்து வரி வீத மாற்றங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு, ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே அறிவிக்கப்பட வேண்டும். இது அவ்வப்போது செய்யப்படும் இடையூறான மாற்றங்களை முடிவுக்குக் கொண்டுவந்து, சரக்கு சேவை வரிக்கு முந்தைய "நிதிநிலை அறிக்கை நாள்" கால ஒழுங்கை மீட்டெடுக்கும். இது

வணிகங்களுக்கு நீண்டகால விலை நிர்ணயம், ஒப்பந்தங்கள், திட்டமிடலுக்குத் தேவையான உறுதித்தன்மை ஆகியவற்றை வழங்கும்; அதே நேரத்தில் மாநிலங்கள் தங்களின் வருவாயைத் துல்லியமாக முன்கூட்டியே கணிக்கவும் அதிகாரமளிக்கும்.

3. *"இருவழி" தயாரிப்பு நெறிமுறை:* வெளிப்படைத்தன்மைக்கும் சந்தைச் சூதாட்டங்களுக்கும் இடையிலான முரண்பாட்டைத் தீர்க்க, இந்த ஆண்டு வீதத் தயாரிப்புக்கு இரண்டு வழிகளைப் பின்பற்ற வேண்டும்:

   - *வழி 1 – நடைமுறைச் சீர்திருத்தங்கள் (திறந்த கலந்தாய்வுகள்):* சரக்கு சேவை வரி விதிகளில் மாற்றங்கள் (உதாரணமாக, உள்ளீட்டு வரி வரவு அளவுகோல்கள், விலைப்பட்டியல், திரும்பப் பெறுதல்) டிசம்பர் மாதத்தில் *'வெள்ளை அறிக்கையாக'* வெளியிடப்பட வேண்டும்; இது ஏப்ரல் 1 நடைமுறைப்படுத்தலுக்கு முன்பு 90 நாள் கலந்தாய்வுக் காலத்தை அனுமதிக்கும். இது வரைவுப் பிழைகளை முன்கூட்டியே கண்டறிய உறுதி செய்யும்.

   - *வழி 2 – வரி வீதங்கள் (இரகசியமான வல்லுநர் ஆய்வு):* குறிப்பிட்ட வரி வீதங்களில் செய்யப்படும் மாற்றங்கள், பதுக்கல் அல்லது கையிருப்பைத் தவிர்ப்பதற்காக இரகசியமாக வைக்கப்பட வேண்டும். இருப்பினும், 'திடீர்' முடிவுகளைத் தடுக்க, நிரந்தரமான, தன்னாட்சி பெற்ற *வல்லுநர்கள் அடங்கிய வரி வீதச் சீரமைப்புக் குழு* மூடிய கதவுகளுக்குப் பின்னால் இந்த மாற்றங்களைத் தீவிரமாக ஆய்வு செய்ய வேண்டும். இறுதி வீதங்கள் மார்ச் 31 அன்று மட்டுமே அறிவிக்கப்பட்டு, உடனடியாக நடைமுறைக்கு வர வேண்டும்.

4. *கொள்கை வகுப்பை நோக்கியும் ஆளுகை மீதும் அவையின் கவனத்தை மாற்றுதல்:* வரி வீத மாற்றங்கள் நிலையான கால அட்டவணைக்குள் வரையறுக்கப்பட்டால், மீதமுள்ள ஒன்பது மாதங்களை முறையான சிக்கல்களைத் தீர்க்கப் பயன்படுத்தலாம்: சரக்கு சேவை வரி வலைப்பின்னலை வலுப்படுத்துதல்; வரி ஏய்ப்பு தடுப்பு உத்திகளை உருவாக்குதல்; இணக்கப் போக்குகளைக் கண்காணித்தல்; துறை சார்ந்த முரண்பாடுகளைக் களைதல்; விளக்கங்கள் அளித்தல் போன்ற பணிகளில் கவனம் செலுத்தலாம். *'சமாளிக்கும்'* வேலையிலிருந்து *'கட்டமைப்பை உருவாக்குதல்'* என்ற இந்த மாற்றம் சரக்கு சேவை வரியின் நீண்டகால நம்பகத்தன்மைக்கு மிகவும் அவசியமானது.

V. சரக்கு சேவை வரி அவையின் பரிந்துரைகள் ஏன் சட்டமன்றங்களைக் கட்டுப்படுத்தக் கூடாது

வரி விதிப்பு முறையின் அடிப்படை நெறிமுறை, அரசமைப்புச் சட்டப் பிரிவு 265-இல் மிகத் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச மக்களாட்சி நடைமுறைகளுடன் ஒத்திசைகிறது: "சட்டத்தின் அதிகார முறைப்படி அல்லாது வேறு எந்த வரியும் விதிக்கப்படவோ அல்லது வசூலிக்கப்படவோ கூடாது." அரசமைப்புச் சட்டச் சிற்பிகள் இந்த அதிகாரத்தைத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் மன்றங்களிடமே – அதாவது நாடாளுமன்றத்திடமும் மாநிலச் சட்டமன்றங்களிடமுமே – வழங்கினார்களே தவிர, நிர்வாக அமைப்புகளிடம் வழங்கவில்லை. வரி விதிப்பு என்பது இறையாண்மை கொண்ட சட்டம் இயற்றும் மன்றத்தின் பணியாக நீடிப்பதை உறுதி செய்கிறது; இது மக்கள் பிரதிநிதிகளின் நேரடி ஆய்வுக்கு உட்பட்டது ஆகும்.

எவ்வாறாயினும், இப்போதைய சரக்கு சேவை வரி செயல்பாட்டுக் கட்டமைப்பு இந்தக் கோட்பாட்டைத் தலைகீழாக மாற்றியுள்ளது. ஒன்றிய நிதி அமைச்சரையும் மாநில அமைச்சர்களையும் உள்ளடக்கிய கூட்டு நிர்வாக அமைப்பான சரக்கு சேவை வரி அவை, நாட்டின் நிதித் துறையின் தலைவிதியைத் தீர்மானிக்க அனுமதிக்கிறது. அவையின் வாக்களிக்கும் முறையில் ஒன்றியத்திற்கு மூன்றில் ஒருபங்கு மதிப்பும், நடைமுறை அளவிலான 'இரத்துச் செய்யும் அதிகாரமும்' வழங்கப்பட்டுள்ள நிலையில், இந்த ஏற்பாடு ஒன்றியக் கட்டுப்பாட்டில் உள்ள நிர்வாக அமைப்பு, தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலச் சட்டமன்றங்களின் விருப்புரிமையைக் கட்டுப்படுத்த அதிகாரம் அளிக்கிறது. இந்த அத்துமீறல், மக்கள் மன்றங்களின் மேலாதிக்கத்தையும் கூட்டாட்சி முறையின் சமநிலையையும் அடிப்படையான நோக்கில் சீர்குலைப்பதுடன், அரசமைப்பின் 'அடிப்படை கட்டமைப்பை' மீறும் அபாயத்தையும் ஏற்படுத்துகிறது.

அரசாட்சி உரிமை சிதைக்கப்படுவது, அளவிடக்கூடியதாகவும் கடுமையாகவும் உள்ளது. 2025-26-ஆம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த சொந்த வரி வருவாயில், சரக்கு சேவை வரி 44 விழுக்காடு கிடைக்கும் என மதிப்பிடப்படுகிறது.[16] இருப்பினும், இந்த மிகப்பெரும்

[16] Srushti Singh, 'State of State Finances 2025-2026' (*PRS Legislative Research* 2025) accessed January 21, 2026.

வருவாய் நீரோட்டத்தை நிர்வகிப்பதில் மாநிலச் சட்டமன்றங்களுக்கு எந்தவொரு அதிகாரமும் இல்லை. ஒரு மெய்யான வட்டார நெருக்கடிநிலையின் போது கூட, வரி வீதங்களை மாற்றவோ அல்லது விலக்கு அளிக்கவோ மாநிலங்களால் முடியாது; அதன் நிதி சார்ந்த முடிவுகள் அனைத்தும் சட்ட அளவிலும் நடைமுறை அளவிலும் சரக்கு சேவை வரி அவையின் முடிவுகளால் பிணைக்கப்பட்டுள்ளன. கோட்பாட்டளவில் நாடாளுமன்றமும் இதே போன்ற கட்டுப்பாட்டை எதிர்கொண்டாலும், அரசியல் நிலைமை மாறுபட்டது: ஒன்றிய நிர்வாகம் சரக்கு சேவை வரி அவைக்கும் நாடாளுமன்றத்திற்கும் இடையே தடையற்ற ஒத்திசைவை உறுதி செய்யும் நிலையில் உள்ளது. முன்னரே குறிப்பிட்டபடி, சரக்கு சேவை வரி அவை பெரும்பாலும் வெறுமனே அனுமதி வழங்கும் அமைப்பாகக் குறைக்கப்பட்டு, ஒன்றிய நிர்வாகத்தால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட முடிவுகளுக்கு அனுமதி வழங்குகிறது; அதே நேரத்தில் மாநிலச் சட்டமன்றங்கள் வெறும் பார்வையாளர்கள் நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

மோஹித் மினரல்ஸ் (2022)

முதல் ஐந்து ஆண்டுகளுக்கு, சரக்கு சேவை வரி அவை, பன்னாட்டு முறைப்படுத்துநர் போலச் செயல்பட்டது; அதன் முடிவுகள் கட்டுப்படுத்தும் கட்டளைகளாகக் கருதப்பட்டன. இந்த ஊகம், *இந்திய ஒன்றியம் எதிர் மோஹித் மினரல்ஸ் பிரைவேட் லிமிடெட் (Union of India v. Mohit Minerals Pvt. Ltd.* (2022))[17] வழக்கில், உச்சநீதிமன்றத்தால் தகர்க்கப்பட்டது. நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது:

> *"அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A மேலோங்கிய தனித்த பிரிவு அல்ல என்றாலும், அரசமைப்புச் சட்ட பிரிவு 246Aவுக்கும் பிரிவு 279A–வின் விதிகளுக்கும் உட்பட்டது என்றும் கூறப்படவில்லை.நாடாளுமன்றமும் மாநிலச் சட்டமன்றங்களும் சரக்கு சேவை வரி குறித்துச் சட்டம் இயற்ற ஒரே நேரத்திலான அதிகாரத்தைக் கொண்டுள்ளன. சரக்கு சேவை வரி தொடர்பான ஒன்றியச் சட்டங்களுக்கும் மாநிலச் சட்டங்களுக்கும் இடையிலான முரண்பாடுகளைத் தீர்க்க, அரசமைப்புச் சட்டப் பிரிவு 246A முரண்பாட்டுத் தீர்வு ஏற்பாட்டை முன்வைக்கவில்லை. சரக்கு சேவை வரி அவையின் 'பரிந்துரைகள்' என்பது ஒன்றியமும் மாநிலங்களும் ஈடுபடும்*

[17] (2022) 10 SCC 700.

கூட்டு விவாதத்தின் விளைவு ஆகும். அவை பரிந்துரைக்கும் இயல்புடையவையே. அவற்றுக்குக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இருப்பதாகக் கருதுவது, நிதி கூட்டாட்சி முறையைச் சீர்குலைக்கும்; ஏனெனில் ஒன்றியம், மாநிலங்கள் ஆகிய இரண்டுக்கும் சரக்கு சேவை வரி குறித்துச் சட்டம் இயற்ற சமமான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது."

உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு, சரக்கு சேவை வரி அவை வெறும் ஆலோசனை வழங்கும் அமைப்பு மட்டுமே என்று கூறியதன் வழியாக, அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A வை அடிப்படை கட்டமைப்பு மீறல் சவாலிலிருந்து நடைமுறை அளவில் காப்பாற்றியது.

நடைமுறைப் பொறி

எவ்வாறாயினும், இந்த அரசமைப்புச் சட்டக் கொள்கைக்கும் கள நிலைமைக்கும் இடையே ஆபத்தான இடைவெளி நீடிக்கிறது. தீர்ப்பை நடைமுறையில் பயனற்றதாக்கும் இரண்டு வலிமையான கட்டுப்பாடுகள் காரணமாக, சரக்கு சேவை வரி முறை இன்னும் சரக்கு சேவை வரி அவையை மக்கள் மன்றங்களுக்கு அப்பாற்பட்ட அமைப்பு போலவே கருதிச் செயல்படுகிறது.

1. *சட்டமுறையிலான கைவிலங்கு*: சரக்கு சேவை வரி அவையால் பரிந்துரைக்கப்பட்ட வரைவுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பல்வேறு சரக்கு சேவை வரி சட்டங்களின் சொற்றொடர்களே முதன்மையான தடையாக உள்ளன. அவை, அவையின் முடிவுகளைத் தாமாகவே இணைத்துக் கொள்கின்றன. முக்கியமாக, அவை விதி உருவாக்கும் அதிகாரத்தை "அவையின் பரிந்துரைகளின் பேரில்" மட்டுமே அரசாங்கத்திற்கு வழங்குகின்றன. உதாரணமாக, *பஞ்சாப் சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம்,* 2017 (*Punjab Goods and Services Tax Act,* 2017)–இன் பிரிவு 2(87), "பரிந்துரைக்கப்பட்டது" (prescribed) என்பதற்கு "அவையின் பரிந்துரைகளின் பேரில் இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளால் பரிந்துரைக்கப்பட்டது" என்று வரையறுக்கிறது.

   அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A(4), *மோஹித் மினரல்ஸ்* (2022) வழக்குத் தீர்ப்பு ஆகியவை மாநிலச் சட்டமன்றங்கள் விலகிச் செல்ல அனுமதித்தாலும், அவற்றின் சொந்தச் சட்டங்களே அவற்றைத் தடுக்கின்றன. ஒருமைப்பாட்டைப் பின்பற்றுவதற்காக "மாதிரி சரக்கு சேவை வரி சட்டத்தை"

ஏற்றுக் கொண்டதன் வழியாக, மாநிலங்கள் தற்செயலாகத் தங்கள் சுயாட்சியை விட்டுக்கொடுத்தன. இந்த நிபந்தனையை நீக்குவதற்காக இப்போது இச்சட்டங்களைத் திருத்தும் எந்தவொரு முயற்சியும் அரசியல் முட்டுக்கட்டையை எதிர்கொள்கிறது: அத்தகைய திருத்தங்கள் ஆளுநர்களால் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக நிறுத்தி வைக்கப்படலாம் – அந்த ஒப்புதலை ஒன்றியம் காலவரையறையின்றி நிறுத்தி வைக்கக்கூடும்.

2. *தொழில்நுட்பக் கைவிலங்கு (சரக்கு சேவை வரி வலைப்பின்னல்):* சட்ட உரையைத் தாண்டி, சரக்கு சேவை வரி வலைப்பின்னல் வலிமையான தொழில்நுட்பத் தடையாகச் செயல்படுகிறது. இந்த இணையதளம் மையப்படுத்தப்பட்டக் கட்டுப்பாட்டில் உள்ளது. சரக்கு சேவை வரி அவையால் அங்கீகரிக்கப்பட்ட வரி வீதங்களை மட்டுமே ஏற்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் யுகத்தில், வெவ்வேறு வரி வீதங்களுக்கு ஏற்ப அமைப்பை வடிவமைப்பது தொழில்நுட்ப அளவில் சாத்தியமே என்றாலும், இப்போதையகட்டமைப்பு நெகிழ்வுத்தன்மையற்றதாக உள்ளது. இதன் விளைவாக, மாநிலச் சட்டமன்றம் ஒன்று தனது அரசமைப்புச் சட்ட உரிமையைப் பயன்படுத்தி, மாறுபட்ட வரி வீதத்தைச் சட்டமாக்கினாலும், இணையதளம் தொடர்பான வரித் தாக்கல் படிவங்கள் நிராகரிக்கக்கூடும். தாக்கல் செய்ய முடியாத வரியைச் வசூலிக்கவும் முடியாது. இந்தச் சூழலில், நிர்வாக அளவிலான இறுக்கம் சட்ட நோக்கிலான இறையாண்மையை நடைமுறையில் முறியடிக்கிறது.

பரிந்துரை 3

மோஹித் மினரல்ஸ் (2022) தீர்ப்பிற்கும் நடைமுறை நிலைமைக்கும் இடையிலான இந்த இடைவெளியைக் குறைக்கவும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 265–இன் புனிதத்தை மீட்டெடுக்கவும், அவையின் முடிவுகள் கட்டுப்படுத்தாது என்ற தன்மை சட்டமாக்கப்பட வேண்டும்.

1. *அரசமைப்புச் சட்டத் திருத்தம்*: அவையின் முடிவுகள் ஆலோசனைக்குரியவை என்பதை வெளிப்படையாகக் கூறும் வகையில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A(4) திருத்தப்பட வேண்டும். முன்மொழியப்பட்ட உரை இவ்வாறு இருக்கலாம்: "*அரசமைப்புச் சட்டப் பிரிவு 246A–இன் கீழ் ஒன்றியத்தின், மாநிலங்களின் சட்டம் இயற்றும் அதிகாரங்களுக்கு உட்பட்டு,*

சரக்கு மற்றும் சேவை வரி அவையானது ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் பின்வருவன குறித்துப் பரிந்துரைகளை வழங்கும்..."

2. *சட்டத் திருத்தங்கள்*: மைய சரக்கு சேவை வரி, ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி, ஒன்றிய ஆட்சிநில சரக்கு சேவை வரி, மாநில சரக்கு சேவை வரி சட்டங்களில் தொடர்புடைய திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். விதிமுறைகள் உருவாக்கப்படுவது *"அவையின் பரிந்துரைகளின் பேரில்"* அமைய வேண்டும் என்ற நிபந்தனையைக் கொண்ட சொற்றொடர்கள் மாற்றப்பட வேண்டும். அவையின் ஆலோசனைகள் மதிப்பிற்குரியவை என்றாலும், இறுதி அதிகாரம் மக்கள் மன்றத்திடமே உள்ளது என்பதை அவை கருத்தில்கொள்ள வேண்டும். மேலும், மாநிலச் சட்டமன்றங்கள் மாநில சரக்கு சேவை வரி சட்டங்களில் மேற்கொள்ளும் இத்தகைய திருத்தங்களுக்கு ஆளுநர்களும் குடியரசுத் தலைவரும் ஒப்புதல் அளிக்க மறுக்கக் கூடாது; ஏனெனில் அவற்றைத் தடுப்பது *மோஹித் மினரல்ஸ்* (2022) வழக்கில் உச்சநீதிமன்றம் விளக்கிய அரசமைப்புச் சட்ட நிலையைச் சீர்குலைப்பது ஆகும். இது நீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கும் செயலுக்குச் சமம் ஆகும்.

3. *சரக்கு சேவை வரி இணையதள வலைப்பின்னலை தாராளமயமாக்கல்*: மென்பொருள் வரம்புகள், சட்டம் இயற்றும் மன்றங்களின் அரசுரிமையை முறியடிக்காதபடி, மாநிலங்களுக்குரிய வரி வீதங்களையும் மாறுபாடுகளையும் தொழில்நுட்ப அளவில் ஆதரிக்கும் வகையில் சரக்கு சேவை வரி இணையதள வலைப்பின்னல் கட்டமைப்பு மறுவடிவமைப்பு செய்யப்பட வேண்டும்.

VI. குறுகிய வரம்பிற்குள் மாநில சரக்கு சேவை வரி வீதங்களில் மாநில நெகிழ்வுத்தன்மையை அனுமதித்தல்

இந்தியாவின் சரக்கு சேவை வரி அமைப்புமுறை இப்போது இரண்டுவித நோக்குகளுக்கு இடையே ஓர் அடிப்படை முரண்பாட்டைக் கொண்டுள்ளது: ஒன்று, நிர்வாக எளிமையும் சந்தை ஒருமைப்பாட்டையும்

ஆதரிக்கும் *தொழில்நுட்ப வல்லுநர்களின் நோக்கு;* மற்றொன்று, மாநில சுயாட்சிக்கும் நிதிப் பொறுப்புடைமைக்கும் முன்னுரிமை அளிக்கும் கூட்டாட்சி முறையை ஆதரிப்போரின் நோக்கு. நாடு முழுவதும் சீரான வரி வீதங்களுக்கான பொருளாதார வாதங்கள் வலுவாக இருந்தாலும், முக்கியமான பின்வரும் கேள்வி எஞ்சியுள்ளது: செயல்திறனை நோக்கிய தேடல் என்பது *கூட்டாட்சி முறையையே* – அதாவது அரசமைப்புச் சட்டத்தின் மாற்ற முடியாத 'அடிப்படைக் கட்டமைப்பின்' ஒரு பகுதி என உச்சநீதிமன்றத்தால் போற்றப்பட்டக் கொள்கையை – இரத்து செய்யும் நிலைக்கு எடுத்துச்செல்ல வேண்டுமா?

தொழில்நுட்ப வல்லுநர்களின் கருத்து

பன்னாட்டு நிதியம் (IMF), தனியார் நிறுவனங்களால் பெரும்பாலும் ஆதரிக்கப்படும் இக்கருத்து நாட்டின் பொருளாதாரத்தை எந்த தலையீடும் இன்றி இயங்க வேண்டிய ஓர் இயந்திரமாக பார்க்கிறது. இந்த நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும்போது, 'ஒரே நாடு, ஒரே வரி' என்ற கடுமையான, ஒற்றைப்படையான வரி வீதமே 'வர்த்தகத் திசைமாற்றத்திற்கு' (நுகர்வோர் குறைந்த வரி உள்ள மாநிலங்களில் பொருட்கள் வாங்குவது), 'வருவாய் கசிவுக்கு' (நிறுவனங்கள் வரி ஏய்ப்பு செய்வது) எதிரான ஒரே பாதுகாப்பாகக் கருதப்படுகிறது. மாநிலங்கள் வரி வீதங்களை மாற்ற அனுமதிப்பது நிர்வாகச் சிக்கல்களை உருவாக்கும்; பல மாநிலங்களில் செயல்படும் நிறுவனங்களின் இணக்கச் செலவுகளை அதிகரிக்கும்; முதலீட்டு முடிவுகளைச் சிதைக்கும் என்று இவர்கள் வாதிடுகிறார்கள். அண்டை மாநிலங்களின் வர்த்தகத்தை ஈர்ப்பதற்காக மாநிலங்கள் போட்டி போட்டுக்கொண்டு வரிகளைக் குறைக்கும் "கீழ்நோக்கிய ஓட்டத்திற்கு" எதிராக ஒருமுகத் தன்மையே ஒரே பாதுகாப்பு என்பது இவர்களின் கருத்தாகும்.[18]

இந்தக் கருத்துகளில் நியாயம் இருந்தாலும், இந்தப் பார்வை பின்வரும் ஆபத்தான கற்பனையைக் கொண்டுள்ளது: இது நாட்டின் மக்களாட்சி கட்டமைப்பை, அதன் வரி அமைப்பின் செயல்திறனுக்குக் கீழே கொண்டுவருகிறது. நிர்வாக வசதிக்காக மாநில சுயாட்சியை நீர்த்துப்போகச் செய்யலாம் என்று கருதுகிறது.

கூட்டாட்சி முறை ஆதரவாளரின் கருத்து

நிதிச் சுயாட்சி இல்லாமல் அரசியல் பொறுப்புடைமை என்பது மாயையே என்று கூட்டாட்சி ஆதரவாளர்கள் கருதுகின்றனர். மாநிலங்களின்

---

[18] Liam Ebrill and others, *The Modern VAT* (International Monetary Fund 2001).

வருவாய் நீரோட்டத்தில் கிட்டத்தட்டப் பாதியான சரக்கு சேவை வரியின் வரி வீதங்களை நிர்ணயிக்கும் அதிகாரம் – அதாவது அவற்றின் முதன்மையான பெருநிலைப் பொருளாதாரக் கருவி – பறிக்கப்பட்டால், செங்குத்தான நிதி சமமின்மை ஆழமடைகிறது. இது மாநிலங்களை 'மேம்படுத்தப்பட்ட நகராட்சிகளாக' மாற்றுகிறது; பற்றாக்குறை மேலாண்மை முதல் பேரிடர் நிதி உதவி வரை அனைத்திற்கும் அவை ஒன்றியத்தையே சார்ந்திருக்க வேண்டியுள்ளது. இது மக்களாட்சி முறையையே சீர்குலைக்கும் 'சார்புநிலை பொறியை' உருவாக்குகிறது; தேவைப்படும்போது கூடுதல் வருவாயைத் திரட்டும் நெகிழ்வுத்தன்மை மாநில அரசிடம் இல்லை என்றால், பொதுச் சேவைகளுக்காக வாக்காளர்களால் அந்த அரசாங்கத்தை அர்த்தமுள்ள வகையில் பொறுப்பாக்க முடியாது.

சட்ட அளவில், இந்தப் பார்வை உறுதியான நிலையில் உள்ளது. *மோஹித் மினரல்ஸ்* (2022) வழக்கில் உச்சநீதிமன்றம் விளக்கியது போல, சரக்கு சேவை வரி அவையின் பரிந்துரைகள் ஆலோசனைக்குரியவை மட்டுமே. எனவே, அவை பரிந்துரைக்கும் வரி வீதங்களை அப்படியே ஏற்றுக்கொள்வது மாநிலங்களின் நிதி நலத்தைப் பாதிக்கும் என்றால், அவற்றை இயந்திரத்தனமாகப் பின்பற்ற வேண்டிய சட்ட முறையிலான கட்டாயம் மாநிலங்களுக்கு இல்லை.

ஒருமைப்பாடு குறித்த தவறான பொருளாதாரப் புரிதல்

நெகிழ்வான வரி வீதங்கள் சந்தையைச் சிதைத்துவிடும் என்ற அச்சம், பொருளாதாரக் கோட்பாடுகளாலும் உலகளாவிய சான்றுகளாலும் முறியடிக்கப்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்களின் பேய்க்கதை ஆகும். இரண்டு முக்கியமான காரணிகள் வரி வீத மாறுபாடுகளின் தாக்கத்தைக் குறைக்கின்றன. இதனால் முழுமையான ஒருமைப்பாடு தேவையற்றதாகிவிடுகிறது.

1. *நுகர்வு அடிப்படைக் கோட்பாடு (Destination Principle)*: சரக்கு சேவை வரி என்பது உற்பத்தியின் மீதான வரி அல்ல, நுகர்வின் மீதான வரி. வணிகங்களுக்கு (B2B), வரி வீதம் முக்கியமல்ல; ஏனெனில் உள்ளீட்டு வரி வரவின் தடையற்ற ஓட்டம், தயாரிப்புச் சங்கிலியில் வரி தேங்குவதைத் தவிர்க்கிறது. அதிக வரி ஈட்டும் ஒரு மாநிலத்தில் உள்ள தொழிற்சாலை குறைந்த வரி ஈட்டும் ஒரு மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்தால், உற்பத்தியாளர் உள்ளீட்டு வரிகளுக்கு முழு வரவு கோர முடியும். முதலீடும் வர்த்தக முடிவுகள் உள்கட்டமைப்பும், தளவாடங்கள், தொழிலாளர் செலவுகள் ஆகியவற்றால்

தீர்மானிக்கப்படுகின்றனவே தவிர, சரக்கு சேவை வரி வீதங்களில் உள்ள சிறிய வேறுபாடுகளால் அல்ல.

2. *புவியியல் பிரிவு (The Friction of Geography):* நுகர்வோரைப் பொறுத்தவரை (B2C), பரிவர்த்தனை செலவுகள் – எரிபொருள், நேரம், முயற்சி – ஒரு இயற்கைத் தடையை உருவாக்குகின்றன. ஒரு வீட்டு உபயோகப் பொருளில் 2 விழுக்காட்டை மிச்சப்படுத்துவதற்காக ஒரு நுகர்வோர் 100 கிலோமீட்டர் தூரம் வாகனத்தை ஓட்டிச் செல்ல வாய்ப்பில்லை. இந்த 'பிரிவு', அண்டை மாநிலங்கள் குறிப்பிடத்தக்க வர்த்தகத் திசைமாற்றத்தைத் தூண்டாமல் சிறிய வரி வீத வேறுபாடுகளைப் பராமரிக்க அனுமதிக்கிறது.

உலகளாவிய சான்றுகள்

பன்னாட்டு அனுபவம் இதை உறுதிப்படுத்துகிறது. உலகின் மிகவும் மேம்பட்ட பொதுச் சந்தையான ஐரோப்பிய ஒன்றியம், லக்சம்பர்க்கில் 17 விழுக்காடு முதல் ஹங்கேரியில் 27 விழுக்காடு வரையிலான மதிப்புக் கூட்டு வரி வீதங்களைக் கொண்டிருந்தாலும் செழித்து வளர்கிறது. "வர்த்தகப் போர்கள்" பற்றிய அச்சம் ஒரு மாயை என்பது நிரூபணமாகியுள்ளது; ஏனெனில் வரி வீதத்தின் ஒருமைப்பாட்டை விட உள்ளீட்டு வரி வரவு பொறிமுறையின் செயல்பாடே முக்கியமானது. எல்லைகளைக் கடந்து செல்லும் பொருட்கள் மீது வரி விதிக்காமல் இருப்பதை உறுதி செய்வதன் வழியாக, உள்ளீட்டு வரி வரவு பொறிமுறையானது நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தை உள்ளூர் வரி வீத மாறுபாடுகளிலிருந்து பாதுகாக்கிறது.

கனடா "பிக்கிபேக்" (Piggyback) முறையைப் பயன்படுத்துகிறது; அங்கு கூட்டாட்சி அரசு நிலையான 5 விழுக்காடு சரக்கு சேவை வரியை வசூலிக்கிறது. ஆனால் மாகாணங்கள் தங்கள் சொந்த வீதங்களை (0–10 விழுக்காடு) சேர்த்துக் கொள்கின்றன. 'கனடா வருவாய் முகமை' என்ற ஒற்றை நிர்வாக அமைப்பு இந்த மாறுபாடுகளை நிர்வகிக்கிறது; இது சட்டப்பூர்வமான ஒற்றைப்படைத் தன்மை இல்லாமலேயே நிர்வாக ஒத்திசைவு நிலவ முடியும் என்பதை மெய்ப்பிக்கிறது.

ஒத்திசைவாக்கம்: வரம்புகளுடன் கூடிய குறைந்த அளவு வீதங்கள்

இந்த முரண்பட்ட பார்வைகளுக்கு இடையே உள்ள சாத்தியமானத் தீர்வு *"வரம்புகளுடன் கூடிய குறைந்த அளவு வீதத்தை"* ஏற்றுக்கொள்வது ஆகும். இந்த மாதிரியின் கீழ், சரக்கு சேவை வரி அவை ஒரு குறைந்த அளவு மாறும் வீதத்தை நிர்ணயிக்கும்; அதே வேளையில் மாநிலங்கள்

தங்கள் மாநில சரக்கு சேவை வரி கூறுகளை குறிப்பிட்ட வரம்பிற்குள் – உதாரணமாக *±2 விழுக்காடு புள்ளிகள்* – மாற்றிக்கொள்ள 'அனுமதிக்கும்'. *மோஹித் மினரல்ஸ் தீர்ப்பிற்குப்* பிறகு, இந்த வரம்பைப் பின்பற்றுவது என்பது கடுமையான சட்டத் தடையால் அல்லாமல், சந்தை நிலைத்தன்மைக்கான கூட்டுப் பொருளாதார கருத்திலிருந்தே பிறக்கிறது.

இந்த அணுகுமுறை ஒன்றும் புரட்சிகரமானது அல்ல; யஷ்வந்த் சின்ஹா தலைமையிலான *நிதித் துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு* (2013), சரக்கு சேவை வரியின் "ஒத்திசைக்கப்பட்ட கட்டமைப்பு" என்பது கட்டுப்படுத்தும் கடமையாக இல்லாமல், வழிகாட்டும் கொள்கையாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. மாநில சுயாட்சியைப் பாதுகாக்க, முன்னரே தீர்மானிக்கப்பட்ட குறைந்த அளவு வீதத்திற்கு மேல் "குறுகிய வரம்பிற்குள்" சரக்கு சேவை வரி வீதங்களை அதிகரிக்க மாநிலங்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. இந்த அறிவார்ந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வது, பகிரப்பட்ட இறையாண்மை என்ற அரசமைப்புச் சட்ட வடிவமைப்பைப் போற்றும் செயல் ஆகும்.

இந்த முன்மொழிவு சட்ட அளவில் வலுவானது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A(4)(e), *"சரக்கு மற்றும் சேவை வரியின் அடிநிலை வீதங்களுடன் கூடிய வரம்புகள் உள்ளிட்ட வீதங்கள்"* குறித்துப் பரிந்துரைகளை வழங்க சரக்கு சேவை வரி அவைக்குத் தெளிவாக அதிகாரம் அளிக்கிறது. நெகிழ்வுத்தன்மையின் தேவையை அரசமைப்பை இயற்றியவர்கள் முன்னரே உணர்ந்திருந்தனர். இதைச் செயல்படுத்துவது மாநிலங்கள் அவையின் அனுமதி இன்றி, வரம்பிற்குள் வரி வீதங்களை மாற்ற அனுமதிக்கும், மாநில அதிகாரத்தை மீட்டெடுக்கும்.

மாறுபட்ட வரி வீதங்கள் சரக்கு சேவை வரி கட்டமைப்பிற்கு "மிகவும் சிக்கலானது" என்ற எந்தவொரு எதிர்ப்பும் தவறானது; ஏனெனில் அது ஏற்கனவே கையாளும் சிக்கல்கள் இதைவிடப் பெரியவை. தொழில்நுட்பத் திறன் ஏற்கனவே உள்ளது; அதைப் பயன்படுத்த மறுப்பது அரசியல் சாக்கே தவிர, தொழில்நுட்பக் கட்டுப்பாடு அல்ல.

பரிந்துரை 4

மாநில நிதி சுயாட்சி ஒருபோதும் தொழில்நுட்ப வல்லுநர்களின் செயல்திறனுக்குக் கீழ்ப்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்ய, மாநிலங்கள் நிலையான வீதத்திலிருந்து ±2 விழுக்காடு புள்ளிகள் என்ற வரையறுக்கப்பட்ட வரம்பிற்குள் மாநில சரக்கு சேவை வரி வீதங்களை மாற்றிக்கொள்ள சுதந்திரம் பெற்றிருக்க வேண்டும். இது குறித்த தகவலை சரக்கு சேவை வரி அவைக்குத் தெரிவிக்க வேண்டும். இந்த வழிமுறை ஒருங்கிணைந்த சந்தைக்கான தொழில்நுட்பத்

தேவையையும், பகிரப்பட்ட நிதி அரசுரிமைக்கான அரசமைப்புச் சட்ட ஆணையையும் வெற்றிகரமாக ஒத்திசைக்கிறது.

VII. சரக்கு சேவை வரி அவையின் தலைமைப் பொறுப்பை சுழற்சி முறையில் மாற்ற வேண்டும்

வரிவிதிப்பு அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதை அடிப்படையாகக் கொண்டு, சரக்கு சேவை வரி கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவத்தின் கலங்கரை விளக்கமாகப் போற்றப்பட்டது. ஆனால், 279A(2) எனும் அரசமைப்புச் சட்டப்பிரிவு, ஒன்றிய நிதியமைச்சரை நிரந்தரத் தலைவராக நியமிப்பதின் வழியாக இந்தச் சமத்துவத்தைக் குலைக்கிறது. அவையின் தலைவர் குறிப்பிடத்தக்க மறைமுக அதிகாரத்தைக் கையில் வைத்துள்ளார்: கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலைக் கட்டுப்படுத்துவது, நேரம் மற்றும் கால இடைவெளியைத் தீர்மானிப்பது மற்றும் விவாதங்களின் போக்கை வழிநடத்துவது என அனைத்தும் ஒன்றிய நிதி அமைச்சர் வசமே உள்ளது. இதனால் மாநிலங்கள் சம பங்காளிகளாக இல்லாமல், வெறும் 'பங்கேற்பாளர்கள்' என்ற நிலைக்குச் சுருக்கப்பட்டுள்ளனர்.

ஒன்றிய அரசு சரக்கு சேவை வரி அவையைக் கூட்டுவதற்கு அடிக்கடி தவறுவதிலிருந்தே, ஏகபோகமாக கொடுக்கப்பட்டிருக்கும் இந்தத் தலைமை அதிகாரம் ஏற்படுத்தும் ஆபத்தான விளைவுகளை அறியமுடிகிறது. 279A(8) எனும் அரசமைப்புச் சட்டப்பிரிவின் கீழ் வகுக்கப்பட்டுள்ள *சரக்கு மற்றும் சேவை வரி அவையின் நடைமுறை மற்றும் அலுவல் நடத்தை ஒழுங்குமுறைகள்*, 2016 (*Procedure and Conduct of Business Regulations of the Goods and Services Tax Council*, 2016) என்பதன் 'விதி 6', அவையானது காலாண்டுக்கு ஒருமுறை நிச்சயம் கூட்டப்பட வேண்டும் என்பதை கட்டாயமாக்குகிறது. இருப்பினும், ஒன்றிய அரசு தனக்கு ஆர்வம் இல்லாதபோதோ அல்லது வேறு பணிகளில் இருக்கும்போதோ, தன்னிச்சையாக அவையை நீண்ட காலத்திற்கு 'செயலற்ற நிலையில்' முடக்கி வைத்துள்ளது:

1. *257 நாட்கள்* (அக்டோபர் 8, 2023 – ஜூன் 21, 2024): சரக்கு சேவை வரி அவையின் வரலாற்றிலேயே மிக நீண்ட இடைவெளி இதுவாகும்.

2. *256 நாட்கள்* (டிசம்பர் 21, 2024 – செப்டம்பர் 3, 2025): ஆகஸ்ட் 15, 2025 அன்று பிரதமர் வெளியிட்ட அறிவிப்பின்

எதிரொலியாக, சரக்கு சேவை வரி அவையைக் கூட்ட வேண்டிய கட்டாயம் ஏற்படாதிருந்திருந்தால், இந்த இடைவெளியானது இன்னும் நீண்டிருக்கக்கூடும்.

3. *226 நாட்கள்* (அக்டோபர் 13, 2020 – மே 27, 2021): கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட மிக முக்கியமான இடைவெளி இது. இதனால் மாநிலங்களுக்குக் கிடைக்க வேண்டிய அவசர நிதி உதவிகள் தாமதப்படுத்தப்பட்டன.

4. *177 நாட்கள்* (ஜனவரி 1, 2022 – ஜூன் 27, 2022): செயல்படுத்துவதில் முக்கியமான சிக்கல்கள் இருந்தபோதிலும் ஆறு மாத காலம் அவைக்கூட்டம் நடைபெறவில்லை.

முக்கியமாக, இந்த இடைவெளிகளில் காணொளி வாயிலாகக்கூட கூட்டங்கள் நடத்தப்படவில்லை என்பது, ஒன்றிய அரசு சரக்கு சேவை வரி அவையை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. உண்மையான கூட்டுறவுக் கூட்டாட்சியை மீட்டெடுக்க, மாநிலங்கள் தலைமைப் பொறுப்பைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் சரக்கு சேவை வரி அவையின் கால அட்டவணை, ஒன்றிய அரசின் அரசியல் நிர்பந்தங்களிடம் பிணையக்கைதியாகச் சிக்கிக்கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்ய முடியும்.

ஐந்தாண்டு சுழற்சி முறை

இந்தச் சமச்சீரற்ற தன்மையைச் சரிசெய்ய, சரக்கு சேவை வரி அவையின் தலைமைப் பொறுப்பானது ஐந்தாண்டு சுழற்சி முறையின்படி ஆண்டுதோறும் மாற்றப்பட வேண்டும். இதன் வழியாக, இந்தியாவின் பல்வேறு புவியியல் வட்டாரங்களுக்கும் சமமான பங்களிப்பு கிடைப்பதை உறுதி செய்ய முடியும்:

ஆண்டு 1: ஒன்றிய நிதியமைச்சர்

ஆண்டு 2: வடக்கு மண்டலத்தைச் சேர்ந்த மாநில நிதியமைச்சர்

ஆண்டு 3: தெற்கு மண்டலத்தைச் சேர்ந்த மாநில நிதியமைச்சர்

ஆண்டு 4: கிழக்கு மண்டலத்தைச் சேர்ந்த மாநில நிதியமைச்சர்

ஆண்டு 5: மேற்கு மண்டலத்தைச் சேர்ந்த மாநில நிதியமைச்சர்

உயர்தரமான தலைமையை உறுதிசெய்யும் விதமாக, மாநிலத் தலைவரானவர் அந்த மண்டலத்தைச் சேர்ந்த நிதியமைச்சர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராகவோ, அல்லது அம்மண்டலத்திலேயே நீண்ட காலம் பதவியில் உள்ள நிதியமைச்சராகவோ இருக்க வேண்டும். நிதி ஆளுகையின் சிக்கல்களையும் வட்டார நலன்களையும் திறம்படக்

கையாள்வதற்குத் தேவையான நிபுணத்துவம் கொண்ட, அனுபவம் வாய்ந்த நிர்வாகி ஒருவரே அப்பதவியை வகிப்பதை இந்த இரட்டை வழி அணுகுமுறை உறுதி செய்கிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பெரிய நாடுகளின் மேலாதிக்கத்தைத் தடுப்பதற்காக, உறுப்பு நாடுகள் எவ்வளவு சிறியதாக இருந்தாலும், அவை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் அவையின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் நடைமுறை உள்ளது.[19] இந்தப் பரிந்துரை அந்த நடைமுறையை ஒத்ததாகும். மாநிலங்கள் நிகழ்ச்சி நிரலை உறுதிசெய்ய மற்றும் விவாதங்களுக்குத் தலைமை தாங்க அனுமதிப்பதன் வழியாக, சரக்கு சேவை வரி அவையானது வெறும் ஒன்றிய நிர்வாகத்தின் நீட்சியாக இல்லாமல், கூட்டுறவுக் கூட்டாட்சியின் வலிமையான அமைப்பாகச் செயல்படும்.

பரிந்துரை 5

சரக்கு சேவை வரி அவையின் தலைமைப் பொறுப்பை ஐந்தாண்டு சுழற்சி முறையின்படி ஆண்டுதோறும் மாற்றியமைக்க, 279A(2) எனும் அரசமைப்புச் சட்டப்பிரிவில் திருத்தம் செய்ய வேண்டும். இச்சுழற்சி ஒன்றிய நிதியமைச்சரில் தொடங்கி, வரிசைப்படி தொடர்ந்து நான்கு வட்டார மண்டலங்களிலிருந்தும் சக அமைச்சர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது மாநிலங்களின் மிக மூத்த நிதியமைச்சரைத் தலைவராகக் கொண்டிருக்க வேண்டும்.

VIII. சுயாட்சியுடைய சரக்கு சேவை வரி அவைச் செயலகத்தை உருவாக்க வேண்டும்

தற்போது சரக்கு சேவை வரி அவைச் செயலகம் என்பது ஒன்றிய நிதியமைச்சகத்தின் ஒரு நிர்வாக இணைப்பாகவே செயல்படுகிறது. புது டெல்லியில் இயங்கும் இது, வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஒன்றிய வருவாய்த்துறைச் செயலரே சரக்கு சேவை வரி அவையின் '*பதவி வழி*' (*ex-officio*) செயலராகவும் தலைமை தாங்குகிறார். இதன் அதிகாரிகள் பெரும்பாலும் ஒன்றிய மறைமுக

---

[19] Consolidated Version of the Treaty on European Union [2012] OJ C326/13, Article 16(9); *European Council Decision on the Exercise of the Presidency of the Council* [2009] OJ L315/50.

வரிகள் மற்றும் சுங்க வரி வாரியத்திலிருந்து (Central Board of Indirect Taxes and Customs (CBIC) மாற்றுப் பணியமர்த்தல் (deputation) வழியாக நியமிக்கப்படுகிறார்கள். இந்தக் கட்டமைப்பு மூன்று முக்கிய காரணங்களால் குறைபாடுடையதாக இருக்கிறது:

1. *பகுதி நேரத் தலைமை:* வருவாய்த் துறைச் செயலருக்கு ஏற்கெனவே ஒன்றியத்தின் நேரடி மற்றும் மறைமுக வரி விதிப்புக் கட்டமைப்பை நிர்வகிக்கும் மிகப்பெரிய பொறுப்பு உள்ளது. இதன் விளைவாக, கூட்டாட்சி அடிப்படையில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த அரசமைப்புச்சட்ட அமைப்பான சரக்கு சேவை வரி அவை, வெறும் ஒரு பகுதி நேரப் பொறுப்பாகத் தரம் தாழ்த்தப்படுகிறது. இதனால், சரக்கு சேவை வரி அவை திறம்படச் செயல்படுவதற்குத் தேவையான முழுமையான கவனமும், அர்ப்பணிப்புள்ள தலைமையும் அதற்கு மறுக்கப்படுகிறது.

2. *நிகழ்ச்சி நிரலில் ஒன்றியத்தின் முற்றுரிமை அதிகாரம்:* சரக்கு சேவை வரி அவைச் செயலகம் ஒன்றிய நிதியமைச்சகத்தின் நீட்சியாகச் செயல்படும்போது, நிகழ்ச்சி நிரலை அமைத்தல், விவாதக் குறிப்புகளுக்கான தரவுகள் மற்றும் விருப்பங்களைத் தொகுத்தல், கூட்டக்குறிப்புகளுக்கான வரைவுகளை தயாரித்தல் என அனைத்தையும் ஒன்றிய அரசே கட்டுப்படுத்துகிறது. எந்தவொரு பேச்சுவார்த்தையிலும், இந்த அதிகாரங்களை யார் கையில் வைத்துள்ளார்களோ, அவர்களே இறுதி முடிவுகளைத் தீர்மானிக்கிறார்கள். விவாதம் தொடங்குவதற்கு முன்பே, ஒன்றியத்தின் முற்றுரிமை அதிகாரம் எனும் தராசு ஒரு பக்கமாக சாய்த்துவிடுகிறது. இது மாநிலங்களை வெறும் எதிர்வினையாற்றும் நிலைக்கு தள்ளுகிறது. அதாவது, நடுநிலையான தரவுகளின் அடிப்படையில் தீர்வுகளை இணைந்து உருவாக்குவதற்கு பதிலாக, ஒன்றிய அதிகாரவர்க்கம் தயாரித்த முன்மொழிவுகளை விமர்சிக்கும் நிலைக்கு மாநிலங்கள் தள்ளப்படுகின்றன.

3. *திறன் பற்றாக்குறை:* சரக்கு சேவை வரியின் பெரிய அளவிலான பரிவர்த்தனைத் தரவுகளைக் கையாள்வதற்கும், வரி விகிதங்கள், விலக்குகள் மற்றும் அமலாக்கம் குறித்த முடிவுகளை எடுப்பதற்கும் உயர்தரமான, தரவு சார்ந்த தொழில்முறைப் பகுப்பாய்வு தேவைப்படுகிறது. ஆனால், தற்போதைய செயலகத்தில் பெரும்பாலும் மாற்றுப் பணியமர்த்தல் வழியாக நியமிக்கப்படும் பொது நிர்வாகப் பணி

அதிகாரிகளே உள்ளனர். இத்தகைய தாக்க மதிப்பீடுகளை மேற்கொள்ளும் திறன் படைத்த – வரிச் சட்டம், பொது நிதி, புள்ளியியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்ற – நடுநிலையான வல்லுநர்கள் அடங்கிய இதற்கெனவே அர்ப்பணிக்கப்பட்ட பிரிவு இங்கு இல்லை. இந்த இடைவெளியை நிரப்ப, துறைசார் நிபுணர்களை நேரடி நியமனம் (lateral entry) வழியாக செயலகப் பணியில் அமர்த்த வேண்டும். மேலும், தற்காலிக அதிகாரிகளால் வழங்க முடியாத நிறுவனத் தொடர்ச்சியை தக்கவைத்துக்கொள்ள, நிரந்தரமான தொழில்முறை வல்லுநர்கள் குழுவை உருவாக்க வேண்டும்.

தீர்வு

ஒரு சுயாட்சியுடைய செயலகம் என்பது மிக அவசியமான கட்டமைப்புத் தேவையாகும். இது நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும் நடைமுறையை அரசியல் தலையீடற்றதாக மாற்றும். மேலும், மாநிலங்களின் முன்மொழிவுகளுக்குச் சம முன்னுரிமை அளிக்கப்படுவதை இது உறுதி செய்யும். அதுமட்டுமின்றி, தரவுகளின் நடுநிலையான காப்பாளராகச் செயல்பட்டு,நேர்மையானநிதிசார் பேச்சுவார்த்தைகளுக்குத் தேவையான, சார்பற்ற சான்றுகள் அடிப்படையில் அமைந்த அடித்தளத்தை இது வழங்கும்.

பரிந்துரை 6

1. ஒன்றிய நிதியமைச்சகத்திலிருந்து நிர்வாகரீதியாகத் தன்னாட்சி பெற்ற, ஒரு சுயாட்சியுடைய நிரந்தரமான சரக்கு சேவை வரி அவைச் செயலகத்தை நிறுவ வேண்டும்.

2. ஒன்றிய வருவாய்த் துறைச் செயலரை அவையின் *பதவி வழி* செயலராக நியமிக்கும் நடைமுறையைக் கைவிட வேண்டும். அதற்குப் பதிலாக, இந்திய அரசின் செயலர் தகுதிநிலையில் உள்ள இந்திய ஆட்சிப்பணித்துறை/இந்திய வருவாய்த்துறை அதிகாரி அல்லது பொது நிதித்துறையில் உள்ள சிறந்த வல்லுநர் ஒருவரை பொதுச் செயலாளராகக் கொண்டு செயலகம் இயங்க வேண்டும். இந்த அதிகாரியை, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டுத் தேர்வுக் குழுவின் வழியாக, குறிப்பிட்ட காலத்திற்கு சரக்கு சேவை வரி அவையே நியமிக்க வேண்டும். இவர் சரக்கு சேவை வரி அவைக்கு மட்டுமே பதில் சொல்லக் கடமைப்பட்டவராக இருப்பார்.

3. இந்தச் செயலகமானது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளிலிருந்து சம விகிதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வல்லுநர்கள் மற்றும் அதிகாரிகளைக் கொண்டு கூட்டாக நிர்வகிக்கப்பட வேண்டும். இதில் தரவுப் பகுப்பாய்வு, சட்ட ஆராய்ச்சி, வருவாய் கணிப்பு மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருடனான கலந்தாலோசனை ஆகியவற்றுக்கெனத் தனியே அர்ப்பணிக்கப்பட்ட பிரிவுகள் இருக்க வேண்டும்.

4. கூட்டாக இணைந்து செயல்படும் உரிமையை வலிமைப்படுத்தும் வகையில், செயலகத்தின் செயல்பாட்டுச் செலவுகளை ஒன்றியமும் மாநிலங்களும் சமமாகப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

IX. சரக்கு சேவை வரிக் குழுக்களில் நிலவும் நடைமுறைசார் ஒளிவுமறைவு

சரக்கு சேவை வரி அவையானது மறைமுக வரி நிர்வாகத்தின் முகமாக வெளிப்பார்வைக்கு அறியப்பட்டாலும், அதன் ஆக்கப்பூர்வமான கொள்கை முடிவுகள் யாவும், அதிகாரிகளை உள்ளடக்கிய சிறப்பு நிபுணத்துவக் குழுக்களாலேயே உருவாக்கப்படுகின்றன. *வரிவிகித நிர்ணயக் குழு* (Fitment Committee), *சட்டக் குழு, சரக்கு சேவை வரி அமலாக்கக் குழு* (GST Implementation Committee) போன்றவை இதில் முக்கியமானவை; அவையின் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறும் ஒவ்வொரு அம்சத்தையும் செதுக்கும் முதன்மைச் சிற்பிகளாக இக்குழுக்களே விளங்குகின்றன. ஒரு முன்மொழிவு அவைக்கு வருவதற்கு முன்பாகவே, அதன் தொழில்நுட்பக் கட்டமைப்பும், அதிலுள்ள தெரிவுகளும் இறுதி வடிவம் பெற்றுவிடுகின்றன. இதன் வழியாக, நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்கும் தீர்க்கமான, அதே சமயம் வெளிப்படைத்தன்மையற்ற அதிகாரம் இக்குழுக்களின் வசமே உள்ளது.

'வரலாற்று ரீதியான' தற்காலிக ஏற்பாடுகளும் ஒன்றியத்தின் பிடியும்

இக்குழுக்களின் மரபுவழித் தோற்றம், மாநில நிதியமைச்சர்களின் அதிகாரமளிக்கப்பட்ட குழுவிலிருந்து தொடங்குகிறது. 3–வது சரக்கு சேவை வரி அவைக் கூட்டத்தின் (அக்டோபர் 2016)[20] குறிப்புகளின்படி,

[20] 'Minutes of the 3rd GST Council Meeting held on October 18 – 19, 2016' (*GST Council* 2016).

ஏற்கெனவே நடைமுறையிலிருந்த "அதிகாரிகள் குழுவை" (Committee of Officers), "தொழில்நுட்பக் குழுவாக" (Technical Committee) சரக்கு சேவை வரி அவை பெயர் மாற்றம் செய்தது. இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால், இக்குழுவிற்கான நியமனங்களை முறைப்படுத்த எந்தவிதமான அதிகாரப்பூர்வ விதிகளும் உருவாக்கப்படவில்லை; கூடுதல் மாநிலங்களும் அதிகாரிகளைப் பரிந்துரைக்கலாம் என அனுமதிப்பதோடு சரக்கு சேவை வரி அவை நிறுத்திக்கொண்டது.

மே 2017–இல் 14–வது சரக்கு சேவை வரி அவைக் கூட்டம் நடைபெற்றபோது, இக்கட்டமைப்பு விரிவடைந்து, சரக்கு சேவை வரி அமலாக்கக் குழு மற்றும் எட்டு இதர குழுக்களையும் உள்ளடக்கியதாக மாறியது.[21] இருப்பினும், இவ்வமைப்புகளை உருவாக்குவதற்கான நடைமுறையானது இதுநாள் வரை வரையறுக்கப்படாத ஒன்றாகவே உள்ளது. தற்போதைய நடைமுறையைப் பார்க்கும்போது, சரக்கு சேவை வரி அவையின் செயலர் (ஒன்றிய வருவாய்த் துறை செயலர்), ஒன்றிய நிதியமைச்சரின் ஒப்புதலோடு இக்குழுக்களை மாற்றி அமைக்கிறார் என்பது புலனாகிறது. இச்செயல்முறையில் பெரும்பாலும் குறிப்பிட்ட பதவிக்காலமோ அல்லது தேர்வு செய்வதற்கான தகுதிகளோ வரையறுக்கப்படுவதில்லை. இது, சரக்கு சேவை வரிச் செயலகம் என்பது ஒன்றியநிதியமைச்சகத்தின் ஒரு இணை அமைப்பாகவே செயல்படுகிறது என்ற விமர்சனத்தை மேலும் வலுப்படுத்துகிறது. குழு உறுப்பினர்களின் நியமனங்கள் பெயரளவில் சரக்கு சேவை வரி அவையினால் "பின்னேற்பு" செய்யப்பட்டாலும், பொதுவாக நூற்றுக்கணக்கான சுற்றறிக்கைகள் மற்றும் அறிவிக்கைகளுடன் சேர்த்து, இதுவும் ஒரு வழக்கமான நிகழ்ச்சி நிரல் பொருளாகவே இணைக்கப்படுகிறது. இதனால், இக்குழுக்களில் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் சமமாக உள்ளதா என்பது குறித்துத் தனித்தனியே விவாதிப்பது தடுக்கப்படுகிறது.

நிறுவனரீதியான தாக்கங்கள்

இந்தக் கட்டமைப்புரீதியான ஒளிவுமறைவு என்பது வெறுமனே ஒரு நடைமுறைத் தவறு மட்டுமல்ல. வரி விகிதங்களைச் சீரமைப்பது முதல் சட்ட விளக்கங்கள் அளிப்பது வரை, தேசியப் பொருளாதாரத்தின் மீது அதிகாரிகள் மட்டத்திலான இக்குழுக்கள் மிகப்பெரிய செல்வாக்கைச் செலுத்துகின்றன. குழுவின் அளவு, ஒன்றிய–மாநில உறுப்பினர்களின்

---

[21] 'Minutes of the 14th GST Council Meeting held on May 18 – 19, 2017' (*GST Council* 2017).

விகிதாச்சாரம், பதவிக்காலம் அல்லது சுழற்சி முறைக்கான விதிகள் என எவ்விதத் தொகுக்கப்பட்ட விதிகளும் இல்லாத நிலையில், இந்த அமைப்பு நிர்வாகரீதியான தற்காலிக முடிவுகளையே (executive ad hocism) சார்ந்துள்ளது. இது கூட்டாட்சித் தத்துவத்தைச் சிதைப்பதாக அமைகிறது; ஏனெனில், இத்திட்டத்தை இயக்கும் தொழில்நுட்ப நிபுணத்துவம் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதா அல்லது பல்வேறுபட்ட நிதிச் சூழல்களைக் கொண்ட மாநிலங்களின் குரல்கள் போதுமான அளவு ஒலிக்கின்றனவா என்பதை மாநிலங்களால் உறுதிசெய்ய முடிவதில்லை.

மேலும், "பொருத்தமின்மைகளின் வகைப்பாடு" (பிரிவு IV–ல் விவரிக்கப்பட்டுள்ளவை) என்று சொல்லத்தக்க நுண்ணிய வகைப்பாடுகளில் பலவும், வரிவிகித நிர்ணயக் குழுவிலிருந்தே தோன்றின. இக்குழுக்களில் உள்ள அதிகாரிகளுக்குப் பெரும்பாலும் நேரடிச் சந்தை அனுபவமோ, அதனால் ஏற்படும் 'பாதிப்புகளை எதிர்கொள்ளும் நேரடித் தொடர்போ இருப்பதில்லை'. அதே சமயம், இக்குழுக்களின் பரிந்துரைகளைச் சரக்கு சேவை வரி அவை பொதுவாக அப்படியே ஏற்றுக்கொள்கிறது. இதனால், பொருட்களின் வகைப்பாடுகள் மீது இக்குழுக்கள் குறிப்பிடத்தக்க ஆதிக்கத்தைச் செலுத்துகின்றன. இதனால், இந்த தொழில்நுட்ப விதிமுறைகளை வகுப்பவர்கள் கையில் அளவற்ற அதிகாரம் இருந்தாலும், அவர்களால் உருவாக்கப்படும் விதிகளினால் ஏற்படும் கடுமையான நடைமுறை இடர்பாடுகளுக்கு, அவர்கள் தனிப்பட்ட முறையிலோ அல்லது அரசியல்ரீதியாகவோ பொறுப்பேற்காததொரு முரண்பட்ட சூழல் நிலவுகிறது.

பரிந்துரை 7

நம்பிக்கையை மீட்டெடுக்கவும், கூட்டாட்சி சமத்துவத்தை உறுதிப்படுத்தவும், சரக்கு சேவை வரி அவை தற்காலிக நிர்வாக ஆணைகளிலிருந்து விலகி, குழுக்களை அமைப்பதற்கான ஒரு முறையான, தொகுக்கப்பட்ட விதிமுறைகளை உருவாக்க வேண்டும்:

- **தரப்படுத்தப்பட்ட கட்டமைப்பு:** ஒவ்வொரு குழுவும் அதிகபட்சம் 17 உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்; இதில் 15 மாநிலப் பிரதிநிதிகளும், 2 ஒன்றியப் பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டும். இது கூட்டாட்சிப் பங்கை எதிரொலிக்கும் விகிதாச்சாரத்தை உறுதி செய்யும். அனைத்துக் குழுக்களுக்கும் மூன்றாண்டுகள் என நிலையான பதவிக்காலம் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

- **தானியங்கித் தேர்வு முறை:** பொருளாதார எதார்த்தத்தின் அடிப்படையில் அமைப்பை நிலைநிறுத்த, கடந்த

மூன்றாண்டுகளில் *அதிக மாநிலச் சரக்கு சேவை வரி (SGST) வருவாயை ஈட்டிய முதல் ஐந்து மாநிலங்கள், தானாகவே* அனைத்துக் குழுக்களிலும் *உறுப்பினர்களாக* இடம்பெற வேண்டும்.

- **சுழற்சி முறைச் சமத்துவம்:** மீதமுள்ள பத்து இடங்கள், அவையினால் அங்கீகரிக்கப்பட்ட புறவயமான அளவுகோல்களின் அடிப்படையில், மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மற்ற மாநிலங்களுக்கிடையே சுழற்சி முறையில் வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் அனைத்துப் வட்டாரங்களும் தொழில்நுட்ப மையச்செயல்பாடுகளில் பங்காற்றுவது உறுதி செய்யப்படுவதோடு, சட்டமன்றம் கொண்ட ஓர் ஒன்றிய ஆட்சிநிலப்பகுதிக்கும் நிச்சயம் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்.
- **தொழில்நுட்ப ஆதரவு:** நிர்வாகத் தொடர்ச்சியைப் பேணுவதற்காக மட்டுமே, சரக்கு சேவை வரிச் செயலகத்தைச் சேர்ந்த அதிகபட்சம் மூன்று நிபுணர்கள், வாக்குரிமை இல்லாத இணை உறுப்பினர்களாகப் பணியாற்றலாம்.
- **வெளிப்படையான முடிவெடுத்தல்:** குழுவின் முடிவுகளுக்கு, வருகை தந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் நான்கில் மூன்று பங்கு பெரும்பான்மை ஆதரவு இருக்க வேண்டும். முக்கியமாக, இப்பெரும்பான்மையில் ஒன்றிய உறுப்பினர்கள் மற்றும் வருவாய் ஈட்டுவதில் முன்னணியில் உள்ள "முதல் ஐந்து" மாநில உறுப்பினர்களின் இசைவு கட்டாயம் இருக்க வேண்டும். இந்த ஏழு முக்கியப் பங்குதாரர்களில் எவரேனும் மாறுபட்ட கருத்து தெரிவித்தால், அக்கருத்து வேறுபாடும், ஆய்வு செய்யப்பட்ட அனைத்துக் கொள்கைத் தெரிவுகளும், இறுதி அரசியல் தீர்வை எட்டுவதற்காகச் சரக்கு சேவை வரி அவையின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட வேண்டும். ஒன்றிய அரசு அல்லது அதிக வருவாய் ஈட்டும் மாநிலங்களின் நலன்களைப் பெரிதும் பாதிக்கும் வகையிலான எந்தவொரு தொழில்நுட்ப முடிவும், திணிக்கப்படாமல் இருப்பதை முன்மொழியப்பட்டுள்ள இந்த வாக்குரிமை முறை உறுதி செய்கிறது. ஒன்றிய மற்றும் 'முதல் ஐந்து' மாநில உறுப்பினர்களின் இசைவைப் பெறுவதைக் கட்டாயமாக்குவதன் மூலம், இத்திட்டத்தின் விளைவுகளை "நேரடியாக எதிர்கொள்பவர்களுக்கு", இக்குழுவின் முடிவுகள் ஏற்படுத்தும் ஆழமான நிதித் தாக்கங்களை இக்குழு அங்கீகரிக்கிறது.

தொழில்நுட்ப ஆளுகையை வெளிப்படையான விதிகளில் நிலைநிறுத்துவதன் மூலம், வரி விதிப்பு முறையை "வகுப்பவர்கள்", சரக்கு சேவை வரி அவை கொண்டுள்ள அதே உயரிய நிறுவன ரீதியான அங்கீகாரத்துடன் செயல்படுவதை அவையால் உறுதி செய்யமுடியும்.

X. சரக்கு சேவை வரி இணையதள வலைப்பின்னல் அமைப்பை அதிகாரப் பரவலாக்கம் செய்தல்

இந்தியாவின் சரக்கு சேவை வரி முறைமையின் தொழில்நுட்ப முதுகெலும்பாக 'சரக்கு சேவை வரி இணையதள வலைப்பின்னல்' (GSTN) திகழ்கிறது. சட்டப்படி பார்த்தால், இது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு 50:50 என சமப் பங்குரிமை கொண்ட ஒரு அரசு நிறுவனம். ஆனால் செயல்பாட்டில், இது ஒரு மையப்படுத்தப்பட்ட ஒற்றை அமைப்பாகவும், நடைமுறையில் ஒன்றிய வருவாய்த் துறையின் ஒரு நீட்சியாகவுமே செயல்படுகிறது.

'மூடிய பெட்டி' கட்டமைப்பு குறைபாடு (The 'Closed Box' Syndrome)

இந்த மையப்படுத்தப்பட்ட தன்மை நிர்வாகக் கட்டமைப்பிலேயே ஆழமாக வேரூன்றியுள்ளது. சரக்கு சேவை வரி இணையதள வலைப்பின்னல் வாரியத்திற்கு ஒன்றிய வருவாய்த் துறைச் செயலரே தலைமை தாங்குகிறார்; அதன் தலைமைச் செயல் அதிகாரியும் மாறாமல் எப்போதும் ஒரு மூத்த ஒன்றிய (இந்திய வருவாய்த்துறை) அதிகாரியாகவே உள்ளார். இதற்கு மாறாக, மாநிலங்களின் நியமன உறுப்பினர்கள் பெரும்பாலும் தொலைதூரத் தலைநகரங்களில் பணிபுரிபவர்களாகவும், சுழற்சி முறையில் வருபவர்களாகவும் இருப்பதால், அவர்களால் அமைப்பைத் திறம்படக் கண்காணிக்க முடிவதில்லை. இதனால் ஒன்றியத்தின் 'நிரந்தர ஆட்சித்துறையே' தொழில்நுட்பச் செயல்திட்டத்தை கட்டுப்படுத்த வழிவகுக்கிறது. இதனால் மாநிலங்களின் மாறுபட்ட வரி இணக்க உண்மை நிலைமைகளை புரிந்துகொள்ளாத, ஒரு 'மூடிய பெட்டி' போன்ற கட்டமைப்பை இது உருவாக்குகிறது.

மாநிலங்களின் எல்லைக்குட்பட்ட வர்த்தகப் பரிவர்த்தனைகள் வழியாகவே சரக்கு சேவை வரி வருவாய் ஈட்டப்படுகிறது. எனவே, இந்தத் தரவுகளை முழுமையாகவும், நிகழ்நேரத்திலும் அணுகுவதற்கு

மாநில அரசுகளுக்கு முழு உரிமை உண்டு. இது வெறும் அமலாக்கத்திற்கு மட்டுமல்ல; ஆய்வு செய்தல், முன்கணிப்பு மற்றும் கொள்கை வடிவமைப்பு ஆகியவற்றிற்கும் தேவையானது. ஆனால், மாநிலங்களுக்கான தரவுகள் என்பன பெரும்பாலும் வடிகட்டப்பட்டும், தாமதப்படுத்தப்பட்டும் அல்லது வெறும் சுருக்கமான அறிக்கைகளாகவுமே வழங்கப்படுகின்றன. இது வரி அமலாக்கத்தைக் கடுமையாகப் பாதிக்கிறது.

இந்த ஒளிவுமறைவு கலாசாரம் அரசமைப்புச்சட்டத்தின்படி தணிக்கை செய்யும் *இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (CAG) அமைப்பு* வரை நீண்டுள்ளது. *2019–ஆம் ஆண்டின் 11வது சி.ஏ.ஜி அறிக்கை,* தரவுகளை அணுகுவதில் உள்ள சிக்கல்கள் மற்றும் சரக்கு சேவை வரி இணையதள வலைப்பின்னலின் கணினி தொழில்நுட்ப முறையில் இருக்க வேண்டிய தானியங்கிச் சரிபார்ப்பு முறைகள் இல்லாதது உள்ளிட்ட அடிப்படை குறைபாடுகளைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியது. அதனைத் தொடர்ந்து, *2022–ஆம் ஆண்டின் 5வது சி.ஏ.ஜி அறிக்கை* இன்னும் ஒருபடி மேலே சென்று, தரவுகளில் மிகக்கடுமையான முரண்பாடுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டி, இதனால், இந்தக் கணினி தொழில்நுட்பக் கட்டமைப்புவழங்கும்முடிவுகளின்நம்பகத்தன்மையைதணிக்கையாளரால் உறுதிப்படுத்த முடியவில்லை என்றது. சி.ஏ.ஜி–க்கு முழுமையான தரவுகளை வழங்க சரக்கு சேவை வரி இணையதள வலைப்பின்னல் காட்டும் தயக்கமும், மாநில அரசுகள் சந்திக்கும் தடைகளும், இந்த வரி விதிப்புக்கான தொழில்நுட்பக் கட்டமைப்பின் நேர்மைத்தன்மை குறித்து நியாயப்படுத்த முடியாத கேள்விகளை எழுப்புகின்றன.

இந்த மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாடு மூன்று ஆபத்தான பலவீனங்களை உருவாக்குகிறது:

1. *மொத்தமும் முடங்கும் அபாயம்* : அனைத்தும் ஒரே இணையதளத்தை நம்பியிருப்பதால், சரக்கு சேவை வரி இணையதள வலைப்பின்னல் முடங்கும்போது – எடுத்துக்காட்டாக, அக்டோபர் 20–22 2020 (விட்டுவிட்டு சுமார் 48 மணிநேரம் வரை), ஆகஸ்ட் 11, 2023 (≃ 6–8 மணி நேரம்) அல்லது ஜனவரி 10, 2025 (≃ 12–14 மணி நேரம்) ஆகிய நாட்களில் நடந்தது போல – நாடு முழுவதுமே வர்த்தக நடைமுறைகள் முடங்கி விடுகின்றன.

2. *புத்தாக்கம் முடக்கப்படுதல்* : 'அனைவருக்கும் ஒரே மாதிரியான' (one–size–fits–all) இடைமுகப்பு இருப்பதால், மாநிலங்கள் தங்கள் உள்ளூர் வரி இணக்கத் தேவைகளுக்கு ஏற்றவாறு தனித்தன்மைகொண்ட மென்பொருள் கூறுகளை வடிவமைக்க முடிவதில்லை.

3. *அமலாக்கத்தில் குருட்டுத்தன்மை*: வரி ஏய்ப்பு செய்யும் முறைகள் ஒவ்வொரு தொழில்துறைக்கும் மாறுபடக்கூடியவை. ஆனால், இங்கே உள்ள மையப்படுத்தப்பட்ட கணினி தொழில்நுட்ப கட்டமைப்பு எதற்கும் வளைந்துகொடுக்காத இறுக்கமான தன்மையைக் கொண்டுள்ளது. இதனால், மாநில அரசுகள் தங்கள் வட்டாரத் தொழில்களின் நுணுக்கங்களைக் கண்காணிப்பதற்குத் தேவையான தனித்துவமான மோசடித் தடுப்பு தொழில்நுட்பங்களை தாங்களே உருவாக்கிக்கொள்ள முடிவதில்லை. (எடுத்துக்காட்டு : ராஜஸ்தானில் கிரானைட் தொழிலும், குஜராத்தில் ஜவுளித் தொழிலும் வெவ்வேறு விதமான கண்காணிப்பு முறைகளைக் கோருபவை).

தீர்வு

மேற்கண்ட குறைபாடுகளைக் களைய, சரக்கு சேவை வரி இணையதள அமைப்பானது, தற்போதைய மையப்படுத்தப்பட்ட ஒற்றை அமைப்பிலிருந்து, ஒரு கூட்டாட்சி முறைக்கு மாற வேண்டும். இதற்கு, இந்தியாவில் பெரும் வெற்றி பெற்றுள்ள '*ஒருங்கிணைந்த கட்டண இடைமுகப்பை*' (Unified Payments Interface – UPI) முன்னுதாரணமாகக் கொள்ளலாம். UPI சூழலியலில், பின்தளக் கட்டமைப்பு (பரிவர்த்தனைத் தீர்வு) மட்டுமே மையப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால் முன்தளக் கட்டமைப்பு (Frontend) ஜனநாயகப்படுத்தப்பட்டுள்ளது. பீம், கூகுள் பே, அமேசான் பே, ஃபோன் பே (BHIM, Google Pay, Amazon Pay, PhonePe) மற்றும் இது போன்ற பல யுபிஐ செயலிகளில், எந்தச் செயலியின் இடைமுகப்பு தங்களுக்குச் சிறந்த சேவையை அளிக்கிறதோ, அதனையே ஒரு பயனர் தேர்ந்தெடுக்கிறார். இருப்பினும், இவை அனைத்தும் ஒரே அடிப்படை வலையமைப்பிலேயே பணப்பரிமாற்றங்களை நிகழ்த்துகின்றன.

சரக்கு சேவை வரி அமைப்பிற்கும் இதே போன்றதொரு கட்டமைப்பு தேவை. தேசியச் சந்தையின் ஒருமைப்பாட்டை உறுதி செய்ய, 'பின்தளக் கட்டமைப்பு' (முதன்மைப் பேரேடு, ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி கணக்குத் தீர்வு, மாநிலங்களுக்கிடையேயான ரசீதுகளை ஒப்பிட்டுச் சரிபார்த்தல்) ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டதாக இருக்க வேண்டும். ஆனால், 'முன்தளக் கட்டமைப்பு' (வரி செலுத்துவோருக்கான இடைமுகப்புகள், தரவுப் பலகைகள் மற்றும் பகுப்பாய்வுகள்) பரவலாக்கப்பட வேண்டும். மாநிலங்கள் தங்களுக்கெனச் சொந்தமான இணையதளங்களை – பீம் போன்ற செயலிகளை – வரிவிதிப்பிற்காக உருவாக்கிக்கொள்ள அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். இந்தத் தளங்கள் 'திறந்த நிலை ஏபிஐ' (Open Application Programming Interfaces) வழியாகத் தேசிய வலைப்பின்னலுடன் இணைக்கப்படும்.

இதன் நன்மைகள் வெளிப்படையானவை. ஒரு மாநிலத்தின் இணையதளம் முடங்கினால், நாட்டின் பிற பகுதிகள் பாதிக்கப்படாது. மூலப் பரிவர்த்தனைத் தரவுகளை மாநிலங்களால் நிகழ்நேரத்தில் அணுக முடிவதால், உள்ளீட்டு வரி வரவுத் தொடர்களைச் (Input tax credit chains) சுதந்திரமாகக் கண்காணிக்க முடியும். மேலும், மாநிலங்கள் பயனர்களுக்கு எளிமையான இடைமுகப்புகளை வடிவமைத்துப் பரிசோதிக்கவும், வரி இணக்கத்தை மேம்படுத்த – மின்சாரம் அல்லது சொத்துப் பதிவு போன்ற – குறிப்பிட்ட தரவுத் தொகுப்புகளை இத்துடன் ஒருங்கிணைக்கவும் முடியும்.

பரிந்துரை 8

சரக்கு சேவை வரி இணையதள வலைபின்னலானது, யுபிஐ கட்டமைப்பின் அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றி, ஒரு '*கூட்டாட்சி இணையதள எண்ணுரு கட்டமைப்பாக*' (Federated Digital Architecture) மாற வேண்டும். இக்கட்டமைப்பு, மாநிலங்கள் தங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட பரிவர்த்தனைகளின் மூலத் தரவுகளை முழுமையாகவும், நிகழ்நேரத்திலும் அணுகுவதை உறுதி செய்ய வேண்டும். மேலும், மாநிலங்கள் சுதந்திரமாக ஆய்வுகள் மற்றும் வரி அமலாக்கப் பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக, தங்கள் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பகுப்பாய்வு வசதிகளுடன் கூடிய சொந்த முன்தள இணையக் கட்டமைப்பை (front–end portals) உருவாக்கிக்கொள்ளவும் அது அதிகாரம் அளிக்க வேண்டும். அதே நேரத்தில், மாநிலங்களுக்கிடையேயான ரசீதுகளைப் பொருத்திப் பார்ப்பதற்கும், ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரிப் பங்கீட்டைத் தடையின்றித் தீர்வு செய்வதற்கும், ஒரு '*மையப்படுத்தப்பட்ட பின்தளத் தீர்வகத்தை*' (centralised back–end clearinghouse) இக்கட்டமைப்பு பராமரிக்க வேண்டும்.

XI. சரக்கு சேவை வரியின் உடைந்த தொழில்நுட்ப முதுகெலும்பு

இந்தியாவின் சரக்கு சேவை வரி என்பது வெறும் வரிச் சீர்திருத்தமாக மட்டுமல்ல, ஒரு தொழில்நுட்பப் புரட்சியாகவும் வார்க்கப்பட்டது. அதிகாரிகளின் தன்னிச்சையான அதிகாரத்தைக் கொண்ட "ஆய்வாளர் அதிகாரத்தை", தானியங்கி முறை வழியாக ஒழிப்பதாக இது உறுதியளித்தது. காகிதப் பயன்பாட்டிற்குப் பதிலாக டிஜிட்டல் தடங்களை

உருவாக்குவதன் வழியாகவும், 'வடிவமைப்பிலேயே உறுதிசெய்யப்பட்ட வரி இணக்கம்' (Compliance by design) என்ற முறையின் வழியாகவும் வரி ஏய்ப்பை சாத்தியமற்றதாக மாற்றுவதே இதன் நோக்கம். ஆனால், சரக்கு சேவை வரி வலைப்பின்னலை உருவாக்கி நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்ற *இன்ஃபோசிஸ்* நிறுவனம், இவ்வளவு சிக்கலான ஒரு வரிமுறைக்குத் தேவையான வலுவான டிஜிட்டல் கட்டமைப்பை வழங்கத் தவறியதால், இந்தக் கனவு செயல்பாட்டுரீதியாகத் தகர்ந்து போனது.

சரக்கு சேவை வரியின் இந்தத் தொழில்நுட்பத் தோல்விதான், ஒட்டுமொத்த வரி அமைப்பும் சரியாகச் செயல்படாமல் போனதற்கான ஆணிவேர். இது மிகப்பெரிய அளவிலான முறைகேடுகளை ஊக்குவிப்பதோடு, நேர்மையான வரி செலுத்துவோர் மீது வரி இணக்கச் சுமையை (Compliance burden) ஏற்றுகிறது; மேலும், ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான வருவாயை இழக்கச் செய்கிறது.

முதலில் தோன்றிய தொலைநோக்குத் திட்டம்

இந்தச் செயல்முறைத் தோல்வியின் தீவிரத்தைப் புரிந்துகொள்ள, சரக்கு சேவை வரி முறைக்காக முதலில் வகுக்கப்பட்ட மூலத் திட்டத்தை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும். இது ஒரு 'மூடிய சுழற்சி அமைப்பாக' (closed–loop system) வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த அமைப்பில், பொருட்களை வாங்குபவர் தனக்கான உள்ளீட்டு வரி வரவை (Input Tax Credit – ITC) பெறுவதில் காட்டும் முனைப்பே, பொருட்களை விற்றவர் வரியைச் செலுத்த வேண்டிய சட்டக் கடமையை நிறைவேற்றுவதை தானாகவே உறுதி செய்துவிடும். இந்த சுயக் கண்காணிப்பு முறை, தடையற்ற மூன்று கட்ட மாதச் சுழற்சியை நம்பியிருந்தது:

1. *சரக்கு சேவை வரி தாக்கல்–1 (விற்பனையாளரின் அறிவிப்பு)*: ஒவ்வொரு அடுத்த மாதமும் 11–ஆம் தேதிக்குள், விற்பனையாளர் தனது ரசீது வாரியான விற்பனை விவரங்களைப் பதிவேற்ற வேண்டியிருந்தது. இதுவே அவரது வரிப் பொறுப்பை உறுதி செய்வதோடு, ஒட்டுமொத்த அமைப்பிற்கான 'முழுமையான மூலத்தரவாகவும்' திகழ்ந்தது.

2. *சரக்கு சேவை வரி தாக்கல்–2 (வாங்குபவரின் உறுதிப்படுத்தல்)*: 15ஆம் தேதிக்குள், வாங்குபவர் தனக்கான வரைவு அறிக்கையை (சரக்கு சேவை வரி தாக்கல்–2A) பார்க்க முடியும். இது விற்பனையாளர் தாக்கல் செய்த சரக்கு சேவை வரி தாக்கல்–1 தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தானாகவே

உருவாக்கப்படும். வாங்குபவர், அதிலுள்ள பதிவுகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ அல்லது மாற்றவோ முடியும். சரக்குகள் பெறப்பட்டதையும், வரி செலுத்தப்பட்டதையும் உறுதி செய்யும் ஒரு 'இருதரப்பு உறுதிப்படுத்தல்' (Digital handshake) இதுவாகும். மிக முக்கியமாக, இந்த ஒப்புதலின் அடிப்படையில் மட்டுமே உள்ளீட்டு வரி வரவு (ITC) அனுமதிக்கப்படும்.

3. *சரக்கு சேவை வரி தாக்கல்–3 (தானியங்கி இறுதி அறிக்கை)*: 20–ஆம் தேதிக்குள், மனிதத் தலையீடு இல்லாமல் கணினி தொழில்நுட்ப அமைப்பே, நிகர வரிப் பொறுப்பை (செலுத்த வேண்டிய வரியிலிருந்து, உறுதி செய்யப்பட்ட உள்ளீட்டு வரி வரவைக் கழித்து) கணக்கிடும்.

இந்தக் கட்டமைப்பு மட்டும் சரியாகச் செயல்படுத்தப்பட்டிருந்தால், போலியான ரசீதுகளைக் கொண்டு வரிச்சலுகை கோருவது சாத்தியமற்றதாகியிருக்கும். அத்துடன் வரி வருவாய் எங்கு செல்கிறது என்பதை நிகழ்நேரத்தில் கண்காணிப்பதும் உறுதி செய்யப்பட்டிருக்கும்.

வீழ்ச்சியும் 'தற்காலிக ஒட்டுவேலை' முறையும்

ஜூலை 2017–இல், சரக்கு சேவை வரி திட்டம் உண்மைநிலையை எதிர்கொண்டவுடனேயே, அதன் தொலைநோக்குப் பார்வை சிதைந்து போனது. இரு முனைகளிலும் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட தரவுச் சரிபார்ப்புகளின் அளவையும் வேகத்தையும் தாங்க முடியாமல் கட்டமைப்பு திணறியதால், சரக்கு சேவை வரி இணையதள வலைப்பின்னல் பெரும் தொழில்நுட்ப முடக்கத்தைச் சந்தித்தது.

இதனையடுத்து செப்டம்பர் 2017–இல், வருவாய் முடங்கிப்போகும் நிலையை எதிர்கொண்ட சரக்கு சேவை வரி அவை, சரக்கு சேவை வரி தாக்கல்–2 மற்றும் சரக்கு சேவை வரி தாக்கல்–3 படிவங்களை நிறுத்திவைத்தது. கருவூலத்தின் இயக்கத்தைத் தக்கவைக்க, ஒரு அவசர காலத் தீர்வாக, சுய மதிப்பீட்டுச் சுருக்க அறிக்கையான சரக்கு சேவை வரி தாக்கல்–3Bஐ ஒரு இடைக்காலத் தடுப்பு நடவடிக்கையாக அறிமுகப்படுத்தியது. எட்டு ஆண்டுகளுக்கும் மேலாகியும், இந்த 'தற்காலிக' ஒட்டுவேலையே வரி அமைப்பின் நிரந்தர முதுகெலும்பாக இறுகிப்போனது. இதனால், தானியங்கிச் சரிபார்ப்பு என்பதே இல்லாத நிலை உருவாகிவிட்டது.

தொழில்நுட்பக் கட்டமைப்புத் தயாராக இல்லாதபோதே, முழுக்க முழுக்க இணையதள எண்ணுரு சார்ந்த சரக்கு சேவை வரி முறையை அறிமுகப்படுத்தியது ஒரு அடிப்படைத் தவறாகும். ஏறத்தாழ ஒரு

பத்தாண்டாக இதைச் சரிசெய்யத் தவறியது நெருக்கடியைப் பன்மடங்காக்கியுள்ளது. சரக்கு சேவை வரி தாக்கல்–3B முறைக்கு மாறியதன் வழியாக, 'வடிவமைப்பிலேயே உறுதிசெய்யப்பட்ட வரி இணக்கம்' என்ற மாதிரி அடியோடு தகர்க்கப்பட்டுவிட்டது:

- *தொடர்பு துண்டிப்பு*: வரிப் பொறுப்பும், வரி வரவும் சுய–அறிவிப்புக்கு உட்பட்டவையாக மாறின. விற்பனையாளர் சரக்கு சேவை வரி தாக்கல்–1–ல் தாக்கல் செய்ததற்கும், வாங்குபவர் சரக்கு சேவை வரி தாக்கல்–3B–ல் கோரும் உள்ளீட்டு வரி வரவுக்கும் (ITC) பொருத்தம் உள்ளதா என்பதை உறுதி செய்யும் நிகழ்நேரக் கணினி சரிபார்ப்பு முறை ஏதுமில்லை.
- *சட்ட ரீதியான நிச்சயமற்ற தன்மை*: சரக்கு சேவை வரி தாக்கல்–3B என்பதன் தற்காலிகத் தன்மையால் பல வழக்குகள் தொடரப்பட்டன. *இந்திய ஒன்றியம் எதிர் பார்தி ஏர்டெல் லிமிடெட்* (*Union of India v. Bharti Airtel Ltd* (2021))[22] வழக்கில், சரக்கு சேவை வரி தாக்கல்–2 மற்றும் சரக்கு சேவை வரி தாக்கல்–3 ஆகியவை நடைமுறைக்கு வராததை ஒரு 'கட்டமைப்புத் தோல்வி' என்று உச்ச நீதிமன்றமே ஒப்புக்கொண்டுள்ளது.
- *ஓட்டுவேலைத் தீர்வுகள்* : தானியங்கி முறையின் குறைபாட்டை ஈடுகட்ட, 'பார்வைக்கு மட்டும்' அனுமதிக்கப்படும் அறிக்கைகள் (சரக்கு சேவை வரி தாக்கல்–2A/2B) வழியாக, சரிபார்ப்புச் சுமையை முழுவதுமாக வரி செலுத்துவோர் தலையிலேயே அரசு சுமத்தியது.

இணைப்பு II–ஐ பார்க்கவும்.

மோசடிகளுக்குத் திறக்கப்பட்ட மதகுகள்

விற்பனையாளரும் வாங்குபவரும் மின்னணு முறையில் பரிவர்த்தனையை உறுதிசெய்யும் 'டிஜிட்டல் கைகுலுக்கல்' தொழில்நுட்பத்தைச் செயல்படுத்தத் தவறியது, சரக்கு சேவை வரி அமைப்பில் மிகப்பெரிய ஓட்டையை ஏற்படுத்தியது. இது, போலி ரசீது மோசடிகள் வெள்ளமெனப் பாய்வதற்கு மதகுகளைத் திறந்துவிட்டுவிட்டது.

- மோசடியாளர்கள், பெயரளவில் மட்டுமே இயங்கும் போலி நிறுவனங்களை (shell firms) உருவாக்குகிறார்கள்; எந்தப்

[22] (2022) 4 SCC 328.

பொருளையும் விற்காமலேயே சரக்கு சேவை வரி தாக்கல்–1 இல் போலி ரசீதுகளைப் பதிவேற்றுகிறார்கள்.

- இந்தப் போலி இரசீதுகளை உண்மையான வணிக நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன. தாங்கள் பொருட்களை வாங்கியதாகக் கணக்குக் காட்டி, சரக்கு சேவை வரி தாக்கல்–3B வழியாக உள்ளீட்டு வரி வரவை (ITC) கோருகின்றன. இதன் வழியாக, தாங்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய ரொக்க வரியைக் குறைத்துக் கொள்கின்றன.
- இந்தப் போலிப் பரிவர்த்தனைக்கான வரியை அரசுக்குச் செலுத்தும் முன்பே, அந்தப் போலி நிறுவனங்கள் மாயமாகிவிடுகின்றன. போலியாக உருவாக்கப்படும் 'வரி வரவு', அரசுக் கருவூலத்திற்கு நேரடி இழப்பாக மாறுகிறது.

சரக்கு சேவை வரி தாக்கல்–2 மற்றும் சரக்கு சேவை வரி தாக்கல்–3 ஆகிய நடைமுறைகள் மட்டும் செயல்பாட்டில் இருந்திருந்தால், இத்தகைய மோசடி சாத்தியமற்றதாகியிருக்கும்.

கடந்த சில ஆண்டுகளாக, பல்வேறு தணிக்கைகளும், ஆய்வறிக்கைகளும் இந்தச் சீர்கேட்டை அதிர்ச்சிகரமான ஆதாரங்களுடன் ஆவணப்படுத்தியுள்ளன:

சி.ஏ.ஜி அறிக்கை எண். 11 (2019): ரசீதுகளை ஒப்பிட்டுச் சரிபார்க்கும் முறை கைவிடப்பட்டதால், இக்கட்டமைப்பில் உள்ளீட்டு வரி வரவு வழியாக மிகுதியான மோசடிகள் ஏற்படும் என்று சி.ஏ.ஜி அப்போதே தெளிவாக எச்சரித்தது.

தொழில்மயமாகிப்போன மோசடி (2024): அகில இந்திய அளவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சிறப்பு நடவடிக்கையின் வழியாக, வெறும் ஏழே மாதங்களில் 29,000 க்கும் மேற்பட்ட போலி நிறுவனங்கள் கண்டறியப்பட்டன. இதன் வழியாகச் சுமார் ரூ. 44,000 கோடி வரி ஏய்ப்பு செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.[23]

சி.ஏ.ஜி கர்நாடகா அறிக்கை (2024): கர்நாடகாவில் மட்டும் 1,260.41 கோடி ரூபாய் வருவாய் இழப்பை சி.ஏ.ஜி கண்டறிந்துள்ளது. இதில் 1,143.58 கோடி ரூபாய், உள்ளீட்டு வரி வரவு (ITC) வழங்குவதில் ஏற்பட்ட குறைபாடுகளால் உருவானதாகும்.

---

[23] '29,273 bogus firms involved in suspected Input Tax Credit (ITC) evasion of Rs. 44,015 crore detected in a sustained drive against non–existent taxpayers by GST formations across the country since May 2023; 121 arrested' (*Press Information Bureau* January 7, 2024) accessed January 22, 2026.

சி.ஏ.ஜி அறிக்கை எண். 25 (2025): ஒரு சிறிய அளவிலான மாதிரித் தணிக்கை வழியாகவே, ரூ. 21,695 கோடி மதிப்பிலான விதிமீறல்களைச் சி.ஏ.ஜி கண்டறிந்தது. "முழுமையான தானியங்கி முறை இல்லாததே" இத்தகைய வருவாய்க் கசிவுக்குத் தொடர்ந்து காரணமாக அமைகிறது என்றும் அது மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கூட்டாட்சிக்கு ஏற்பட்ட பாதிப்பு

எட்டு ஆண்டுகளுக்கும் மேலாகியும், உறுதியளிக்கப்பட்ட சரக்கு சேவை வரி தாக்கல்–2/3 கட்டமைப்பை இன்ஃபோசிஸ் (Infosys) நிறுவனம் வழியாக முழுமையாகச் செயல்பாட்டிற்குக் கொண்டுவர ஒன்றிய அரசு தவறியதை, இனியும் ஒரு 'தொடக்க கால இடர்பாடு' என்று சொல்லிக்கொண்டிருக்க முடியாது. இது ஒரு முழுமையான கட்டமைப்புத் தோல்வி ஆகும். ஆனால், இதனால் ஏற்பட்ட ஆழமான பாதிப்பு நிறுவன ரீதியானது. மொத்த சரக்கு சேவை வரி வசூலில், 'ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி' (IGST) சுமார் *51 விழுக்காட்டுப்* பங்களிப்பை அளிக்கிறது.

நுகர்வு சார்ந்த வரி விதிப்பு முறையில் (destination–based tax system), உற்பத்தி செய்யும் மாநிலத்திலிருந்து நுகர்வு நடைபெறும் மாநிலத்திற்கு வரியை மாற்றுவதற்கு ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி ஒரு தடையற்ற பாலமாகச் செயல்பட வேண்டும். ஆனால், முதலில் செயல்பட்ட தொழில்நுட்பக் கட்டமைப்பின் சீர்குலைவு, இந்தப் பாலத்தை ஒரு "கறுப்புப் பெட்டியாக" மாற்றியுள்ளது. தற்போதைய சரக்கு சேவை வரி தாக்கல்–3B சுருக்க அறிக்கையில், "விநியோக இடம்" (Place of Supply) குறித்த துல்லியமான சரிபார்ப்பு முறை இல்லாததால், அந்த வருவாய் எந்த மாநிலத்தைச் சேர வேண்டும் என்பதை கணினி தொழில்நுட்ப அமைப்பால் பல நேரங்களில் கண்டறிய முடிவதில்லை.

இந்த அமைப்பு ரீதியான தோல்வியின் விளைவாக, "பகிர்ந்து அளிக்கப்படாத ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி" (Unsettled IGST) பெருமளவில் தேங்கியது. இது ஒரு 'நிதி 'வெற்றிடமாக' மாறி, 2017–18 நிதியாண்டில் 2,11,688 கோடி ரூபாய் என்ற பிரம்மாண்டமான உச்சத்தை அடைந்ததாக இந்திய தலைமை கணக்கு தணிக்கையாளரின் 2019–ஆம் ஆண்டின் 11–வது அறிக்கை ஆவணப்படுத்தியுள்ளது. பிற்காலங்களில் இத்தொகை குறைவாகக் காட்டப்பட்டாலும், அது பெரும்பாலும் ஒன்றிய அரசின் தற்காலிகத் தீர்வுகள் வழியாகவும், ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி சட்டம் 2017–இன் (IGST Act, 2017) பிரிவு 17(2)ல் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விக்குரிய பகிர்வு முறைகள்

வழியாகவுமே சாத்தியமானது.[24] ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி பகிர்வு முறையின் தர்க்கத்தைச் சோதிக்கவோ, தங்களுக்குச் சேர வேண்டிய வருவாயை உறுதிப்படுத்தவோ மாநிலங்களால் முடிவதில்லை. தங்களால் கட்டுப்படுத்தவோ அல்லது சரிபார்க்கவோ முடியாத ஒரு 'கறுப்புப் பெட்டி' போன்ற அமைப்பிலிருந்து வரும் நிலுவைத் தொகைக்காகக் காத்திருக்க வேண்டிய கட்டாயத்திற்கு மாநிலங்கள் தள்ளப்பட்டுள்ளன.

பரிந்துரை 9

ஜூன் 30, 2027 அன்றுடன் சரக்கு சேவை வரி நடைமுறைப்படுத்தப்பட்டு பத்து ஆண்டுகள் நிறைவடைய உள்ள நிலையில், தற்போதைய "நம்பிக்கை அடிப்படையிலான சுய மதிப்பீட்டு" மாதிரியிலிருந்து சரக்கு சேவை வரி முறையானது அடுத்த கட்டத்திற்கு நகர வேண்டும். தற்போதைய முறை பிழைகளுக்கும், ஒளிவுமறைவுத் தன்மைக்கும் இடமளிப்பதாக நிரூபணமாகியுள்ளது. எனவே, இந்த அமைப்பு தனது அசல் கட்டமைப்பான "வடிவமைப்பிலேயே உறுதிசெய்யப்பட்ட வரி இணக்கம்" (Compliance-by-design) முறைக்குத் திரும்ப வேண்டும்:

1. *சரக்கு சேவை வரி தாக்கல்-3B-ஐக் கைவிடுதல்*: தற்காலிகச் சுருக்க அறிக்கை முறை முழுமையாக நீக்கப்பட வேண்டும்.
2. *மூன்றடுக்குக் கட்டமைப்பை மீண்டும் நடைமுறைப்படுத்துதல்*: சரக்கு சேவை வரி தாக்கல்-1, சரக்கு சேவை வரி தாக்கல்-2 மற்றும் சரக்கு சேவை வரி தாக்கல்-3 ஆகிய வரிசைமுறையை முழுமையான செயல்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும்.

---

[24] Section 17(2) of IGST Act, 2017: ... Provided that where the place of such supply made by any taxable person cannot be determined separately, the said balance amount shall be apportioned to,

(a) each of the States; and

(b) Central Government in relation to Union territories,

in proportion to the total supplies made by such taxable person to each of such States or Union territories, as the case may be, in a financial year:

Provided further that where the taxable person making such supplies is not identifiable, the said balance amount shall be apportioned to all States and the Central Government in proportion to the amount collected as State tax or, as the case may be, Union territory tax, by the respective State or, as the case may be, by the Central Government during the immediately preceding financial year.

3. *அமைப்பிற்குள் கட்டுப்படுத்தப்பட்ட வரவு முறையை அமல்படுத்துதல்*: உள்ளீட்டு வரி வரவு (ITC) என்பது கணினி தொழில்நுட்ப அமைப்பிற்குள்ளேயே கட்டுப்படுத்தப்பட வேண்டும் – விற்பனையாளர் வரியைச் செலுத்தி, வாங்குபவர் அந்தப் பரிவர்த்தனையை உறுதி செய்த பிறகு மட்டுமே இந்த வரவு அனுமதிக்கப்பட வேண்டும்.

XII. நாடாளுமன்ற – சட்டமன்றக் கண்காணிப்பை வலுப்படுத்துதல்

இந்தியாவின் பாரம்பரிய நிதிக் கட்டமைப்பில், வரிவிதிப்பு என்பது சட்டமன்றங்களுக்கு மட்டுமே உரித்தான அதிகாரமாக இருந்தது. அது நாடாளுமன்றத்திலும், மாநில சட்டமன்றங்களிலும் விவாதிக்கப்பட்டு, பொதுவெளியில் விவாதிக்கப்பட்டு, இறுதியில் ஜனநாயகத்தின் அடிப்படையிலான ஒப்புதல் வழியாக சட்டப்பூர்வ அங்கீகாரத்தைப் பெற்றது. அரசின் அதிகாரங்களிலேயே மிகவும் சக்திவாய்ந்ததான வரிவிதிக்கும் அதிகாரம், 'யார் வரிச்சுமையைச் சுமத்துகிறார்களோ, அவர்களே அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள்' என்ற கோட்பாட்டிலிருந்து பிரிக்க முடியாததாக இருந்தது.

ஆனால், சரக்கு சேவை வரியின் வருகைக்குப் பிறகு, நடைமுறையில் சட்டமன்றங்களின் இந்த முக்கியப் பங்களிப்பு அடியோடு வெறுமையாக்கப்பட்டுவிட்டது. இன்று, வரி விகிதங்கள், விலக்குகள், வரம்புகள் மற்றும் இணக்க விதிகள் குறித்த மிகமுக்கியமான முடிவுகள் அனைத்தும், நிதியமைச்சர்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட ஆட்சித்துறை 'குழுவான' சரக்கு சேவை வரி அவையின் மூடிய அறைக்குள் தீர்மானிக்கப்படுகின்றன. முடிவுகள் எடுக்கப்பட்ட பிறகு, நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் அவை 'மாற்றமுடியாத, முடிவுற்ற செயலாகவே' (fait accompli) முன்வைப்படுகின்றன. இதனால், வெறும் செயலற்ற, பின்னேற்பு அளிக்கும் அமைப்புகளாக சட்டமன்றங்கள் சுருங்கிவிட்டன. சரக்கு சேவை வரி அவையில் ஏற்கெனவே முடிவு எடுக்கப்பட்டுவிட்டதாவும், எனவே ஒருமித்த தேசிய கருத்தை மீறாமல் அதை மாற்றியமைக்க முடியாது என்றும் உறுப்பினர்களிடம் சொல்லப்படுவதால், சட்டமன்ற விவாதங்கள் வெறும் பெயரளவிற்கே நடக்கின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற–சட்டமன்றங்கள் தங்கள் வரிவிதிப்பு அதிகாரத்தை ஆட்சித்துறை பிரிவிடம் தாரைவார்த்துக்

கொடுத்தது குறித்துப் பொதுவெளியில் போதுமான விவாதங்கள் நடக்கவில்லை. காலப்போக்கில், சரக்கு சேவை வரி அவையானது ஜனநாயகக் கட்டுப்பாடுகள் ஏதுமின்றிச் செயல்படும் *அரசுக்குள் ஓர் அரசு* (imperium in imperio) – எனப்படும் 'அரசுரிமை கொண்ட தனித்தீவு' போன்ற நிலையை அடைந்துவிட்டது. முறையான சட்டமன்ற ஆய்விற்கோ அல்லது சந்தை யதார்த்தங்களுக்கோ தொடர்பில்லாமல், முழுக்க முழுக்க 'அதிகாரவர்க்கத்தால் வழிநடத்தப்படும்' இந்த அவை, நிலையற்ற வரி விகிதங்கள், அபத்தமான நுண் வகைப்பாடுகள், உடைந்த தொழில்நுட்ப முதுகெலும்பு, தரவு ஒளிவுமறைவு மற்றும் "மாபெரும் இணக்க ஒப்பந்தத்தின்" (Grand Bargain) சிதைவு ஆகியவற்றுக்கே வழிவகுத்துள்ளது. இவை ஏதோ தற்செயலாக நடந்த தவறுகள் அல்ல; மாறாக, விளக்கம் அளிக்கும் கடமையிலிருந்து வரிவிதிக்கும் அதிகாரம் துண்டிக்கப்பட்ட ஒரு அமைப்பின் அறிகுறிகளாகும். ஏனெனில், 'ஏன்' என்று கேள்வி கேட்க இங்கே முறையான நாடாளுமன்ற–சட்டமன்றத் தளம் எதுவுமில்லை.

கண்காணிப்பில் உள்ள இடைவெளி

தற்போது, சரக்கு சேவை வரி மீதான நாடாளுமன்ற–சட்டமன்றக் கண்காணிப்பு என்பது சிதறுண்டு கிடக்கிறது. நிதிக்கான நாடாளுமன்ற நிலைக்குழு ஒன்றியத்தின் விவகாரங்களை மட்டுமே கவனிக்கிறது. அதேவேளையில், மாநிலப் பொதுக் கணக்குக் குழுக்கள் (State Public Accounts Committees) உள்ளூர் தணிக்கைகளை மட்டுமே ஆய்வு செய்கின்றன. சரக்கு சேவை வரியின் கூட்டாட்சித் தன்மையைப் பிரதிபலிக்கும் எந்தவொரு நிறுவனமும் தற்போது இல்லை – அதாவது, கூட்டாக நிர்வகிக்கப்படும் ஒரு வரியை ஆய்வு செய்வதற்கு, ஒன்றிய மற்றும் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைக்கும் தளம் ஏதுமில்லை. ஒன்றிய மற்றும் மாநில ஆட்சித்துறைகளின் முன்மாதிரியற்றதொரு பிணைப்பாக சரக்கு சேவை வரி அவையை உருவாக்க அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த முடியுமென்றால், அதற்கு ஈடானதொரு நாடாளுமன்ற–சட்டமன்ற புதிய கண்காணிப்பு முறை அதில் நிச்சயமாக இடம்பெற்றிருக்க வேண்டும்.

இந்த ஜனநாயகப் பற்றாக்குறையை ஈடு செய்ய, சரக்கு சேவை வரியின் செயல்பாடுகளையும் கொள்கைகளையும் மேற்பார்வையிட, *நாடாளுமன்றம் மற்றும் மாநிலச் சட்டமன்றங்களை உள்ளடக்கிய ஒரு கூட்டு நிலைக்குழு* நிறுவப்பட வேண்டும் (*Joint Standing Committee of Parliament and State Legislatures*). கனடா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற பிற கூட்டாட்சி நாடுகளில் உள்ள நாடாளுமன்ற அமைப்புகளை

முன்மாதிரியாகக் கொண்டு, இக்குழு ஒட்டுமொத்த சரக்கு சேவை வரி சூழலியலையும் கண்காணிக்கும் ஒரு கண்காணிப்பு அமைப்பாகச் செயல்படும். இக்குழுவின் அமைப்பு பின்வருமாறு:

- *நாடாளுமன்ற உறுப்பினர்கள் (MPs)*: மக்களவை மற்றும் மாநிலங்களவையிலிருந்து தலா மூன்று பேர் (ஆளும் கட்சி மற்றும் இரண்டு பெரிய எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில்).
- *சட்டமன்ற உறுப்பினர்கள் (MLAs)*: ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் இரண்டு பேர் (ஆளும் கட்சி மற்றும் பெரிய எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில்).

இத்தகைய ஒரு குழுவை அமைப்பது இந்தியாவின் நிதிக் கட்டமைப்பில் ஒரு முக்கியமான பரிணாம வளர்ச்சியாகவும், அவசியமான திருத்த நடவடிக்கையாகவும் அமையும். சட்டமன்றக் கண்காணிப்பை வலுப்படுத்துவது என்பது சரக்கு சேவை வரி அவையின் செயல்பாடுகளுக்குத் தடையை ஏற்படுத்துவது அல்ல; மாறாக, ஜனநாயகப் பொறுப்புடைமையை (democratic Accountability) விலையாகக் கொடுத்து, ஒருங்கிணைந்த தேசியச் சந்தையின் செயல்திறன் பெறப்படக்கூடாது என்பதை உறுதி செய்வதே இதன் நோக்கம் ஆகும்.

இந்தக் கூட்டு நிலைக்குழுவின் அதிகார வரம்பானது, தற்போதுள்ள நிதிக் குழுக்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும்:

1. *கட்டமைப்புரீதியான மறுசீராய்வு* : நடந்து முடிந்த தணிக்கைகளை மட்டுமே ஆராயும் பொதுக் கணக்குக் குழுக்களைப் போலன்றி, இக்குழுவானது வரி அமைப்பின் நிகழ்நேரச் செயல்பாடுகளை ஆய்வு செய்யும். வரி வருவாயின் வளர்ச்சிப் போக்குகள், வருவாய்ப் பற்றாக்குறைகள் மற்றும் வரி ஏய்ப்பைத் தடுக்கும் நடவடிக்கைகளின் செயல்திறன் ஆகியவற்றை இது கண்காணிக்கும்.
2. *நிர்வாக மற்றும் தொழில்நுட்பப் பொறுப்புடைமை*: தொழில்நுட்பத் தோல்விகள், மாநிலங்களுக்குத் தரவுகளை வழங்க மறுத்தல் அல்லது நிர்வாகத் தடங்கல்கள் ஆகியவை குறித்துப் பதிலளிக்க, சரக்கு சேவை வரி அவைச் செயலகம் மற்றும் சரக்கு சேவை வரி இணையதள வலைப்பின்னல் அதிகாரிகளை விசாரணைக்கு அழைக்கும் அதிகாரம் இக்குழுவிற்கு இருக்கும்.

3. *தாக்க மதிப்பீடு* : சரக்கு சேவை வரி அவையின் முடிவுகள் மாற்றியமைக்க முடியாத கொள்கைகளாக வேரூன்றுவதற்கு முன்பாகவே, அவற்றின் சமூக–பொருளாதாரத் தாக்கங்களை இக்குழு மதிப்பீடு செய்யும். குறிப்பாக, வரி விகித மாற்றங்கள் பணவீக்கத்தின் மீதும், சிறு, குறு, மற்றும் நடுத்தரத் தொழில்கள் மற்றும் சாமானியக் குடிமக்கள் மீதும் ஏற்படுத்தும் சுமைகளை இது முன்கூட்டியே ஆராயும்.

4. *கூட்டாட்சிப் பாலம்* : ஒன்றிய அரசின் ஆதிக்கம் மேலோங்கியுள்ள சரக்கு சேவை வரி அவையில், நடைமுறைச் சிக்கல்கள் குறித்துக் கூறப்படும் கருத்துகள் பெரும்பாலும் கண்டுகொள்ளப்படுவதில்லை. அத்தகைய குறைகளை எடுத்துரைக்க, மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இக்குழு ஒரு முறையான தளத்தை அமைத்துத் தரும்.

பரிந்துரை 10

புதிய அரசமைப்புச் சட்ட அறைகூவல்களுக்கு புதிய நிறுவனரீதியான தீர்வுகள் தேவைப்படுகின்றன. சரக்கு சேவை வரி மீதான நாடாளுமன்ற–சட்டமன்றக் கண்காணிப்பில் தற்போது நிலவும் பிளவுகளைச் சரிசெய்ய, 279A எனும் அரசமைப்புச் சட்டப் பிரிவில் (12) எனும் புதிய உட்பிரிவைச் சேர்க்க வேண்டும். இந்தத் திருத்தத்தின் வழியாக, நாடாளுமன்றம் மற்றும் மாநிலச் சட்டமன்றங்களின் உறுப்பினர்களைக் கொண்ட *சரக்கு மற்றும் சேவை வரி மீதான நாடாளுமன்றக் கூட்டுக் குழு (Joint Standing Committee on the Goods and Services Tax)* ஒன்றை உருவாக்குவது கட்டாயமாக்கப்பட வேண்டும். இந்தக் கூட்டுக் குழுவிற்கு, சரக்கு சேவை வரி கொள்கைகளின் செயல்பாட்டைக் கண்காணிக்கவும், சரக்கு சேவை வரி அவையின் முடிவுகளால் ஏற்படும் நிதி மற்றும் சமூக–பொருளாதாரத் தாக்கங்கள் குறித்து விரிவான மதிப்பீடு வழங்கவும் அதிகாரம் அளிக்கப்பட வேண்டும்.

XIII. சுதந்திரமான சரக்கு சேவை வரி பிணக்குத் தீர்வு ஆணையத்தின் அவசியம்

2016–ம் ஆண்டின் *நூற்று ஒன்றாவது அரசமைப்புச் சட்டத் திருத்தமானது*, சுதந்திரமானதொரு பிணக்குத் தீர்வு முறையை வழங்கத் தவறியதன் காரணமாக, ஆபத்தானதொரு நிறுவன வெற்றிடத்தை

உருவாக்கியுள்ளது. ஒவ்வொரு நிதி சார்ந்த கருத்துவேறுபாட்டிற்கும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 131–இன் கீழ் உச்ச நீதிமன்றத்தை மட்டுமே நாடுவது செயல்திறனற்றது. வரி நிர்வாகத்திற்குத் தேவைப்படும் விரைவான, நிபுணத்துவம் வாய்ந்த தீர்வுகளை வழங்குவதற்குப் பதிலாக, இது மெதுவான மற்றும் எதிரெதிர் தரப்பு வாதாடும் நீண்டநெடிய வழக்குகளுக்கே இட்டுச் செல்கிறது.

ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையே அல்லது மாநிலங்களுக்கு இடையே ஏற்படும் பிணக்குகளை விசாரித்துத் தீர்ப்பதற்கான ஒரு அமைப்பை சரக்கு சேவை வரி அவை உருவாக்க வேண்டும் என்பதை அரசமைப்புச் சட்டப்பிரிவு 279A(11) கட்டாயமாக்குகிறது. இருப்பினும், ஜூலை 01, 2017 அன்று சரக்கு சேவை வரி தொடங்கப்பட்டதிலிருந்து இச்சட்டப்பிரிவு நடைமுறைக்கு வராத, கேட்பாரற்ற மடலாகவே (Dead letter) முடங்கிக்கிடக்கிறது. இதற்குக் காரணம் பிணக்குகள் ஏதும் இல்லை என்பதல்ல; அத்தகைய ஆணையத்தை செயல்பாட்டிற்குக் கொண்டுவர ஒன்றிய அரசு விரும்பாததே இதற்குக் காரணம்.

கட்டமைப்பு ரீதியான குறைபாடுகள்

இந்தத் தோல்வி வெறும் நிர்வாக ரீதியானது மட்டுமல்ல. அரசமைப்புச் சட்டப்பிரிவு 279A(11) ஐந்து அடிப்படை விவகாரங்களை பொருத்தமட்டில் கட்டமைப்பு ரீதியாகவே குறைபாடுடையது:

1. *முரண்பட்ட நலன்கள்* : இது சரக்கு சேவை வரி அவையை கொள்கை வகுப்பாளராகவும், அதே சமயம் தனது சொந்தப் பரிந்துரைகளிலிருந்து எழும் பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் நீதிபதியாகவும் செயல்பட அதிகாரம் அளிக்கிறது. 'யாருமே தங்கள் சொந்த வழக்கில் நீதிபதியாக இருக்க முடியாது' எனும் இயற்கை நீதியின் அடிப்படைத் தத்துவத்தை இது மீறுகிறது.

2. *ஒன்றியத்தின் ஆதிக்கம்*: சரக்கு சேவை வரி அவையின் வாக்குரிமைப் பகிர்வு முறை ஒன்றியத்திற்குச் சாதகமாக உள்ளது. ஒன்றிய அரசே சர்ச்சையின் ஒரு தரப்பாக இருக்கும்போது, அந்த அமைப்பிற்குள்ளேயே உருவாக்கப்படும் எந்தவொரு உள்–தீர்வுப் பொறிமுறையும் உண்மையான சுதந்திரத் தன்மையுடன் இருக்க முடியாது.

3. *அரசமைப்புச் சட்டப் பொருத்தமின்மை*: சரக்கு சேவை வரி தொடர்பான சர்ச்சைகள் என்பவை, அந்தந்தச் சட்டமன்றங்கள் இயற்றிய சட்டங்களைச் செயல்படுத்தும் 'இறையாண்மை

கொண்ட முழுமையான அரசுகளுக்கு' இடையிலானவை. ஆனால் சரக்கு சேவை வரி அவையோ, வெறும் ஆட்சித் துறை அமைச்சர்களைக் கொண்ட அரசின் ஒரு 'சிறிய அங்கம்' மட்டுமே. இறையாண்மை கொண்ட அரசுகளுக்கு இடையிலான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான சட்டபூர்வ அங்கீகாரம் சரக்கு சேவை வரி அவைக்கு இல்லை. அத்தகைய அதிகார வரம்பு, அரசமைப்புச் சட்டப்பிரிவு 131–இன் கீழ் உச்ச நீதிமன்றத்திற்கு மட்டுமே உரித்தானது.

4. *மறுசீராய்வு எனும் கேலிக்கூத்து*: அரசமைப்புச் சட்டப்பிரிவு 279A(11)–இன் வாசகம், கூட்டாட்சிப் பிணக்குகளை விசாரிக்கும் 'முதன்மை அதிகார வரம்பை' உச்ச நீதிமன்றத்திடம் ஒப்படைக்கும் 131–ஆவது அரசமைப்புச் சட்டப்பிரிவை அப்படியே பிரதிபலிக்கிறது. வெளிப்படையாக, சரக்கு சேவை வரி அவையால் உருவாக்கப்படும் ஓர் நிர்வாக அமைப்பு, உச்ச நீதிமன்றத்திற்கு இணையானதாகவோ அல்லது நீதி மறுசீராய்வு அதிகாரத்தைச் செலுத்தக்கூடியதாகவோ இருக்க முடியாது என்பது தெளிவு. இடைக்கால நிதி உதவிகள் வழங்கவோ, கட்டுப்படுத்தும் உத்தரவுகளைப் பிறப்பிக்கவோ அல்லது பொருந்தாத சட்டங்களை நீக்கம் செய்யவோ அதிகாரமில்லாத அத்தகைய ஓர் அமைப்பு பயனற்றது – அது ஒரு 'அரசமைப்புச் சட்டக் கேலிக்கூத்தாகும்'.[25]

5. *மோஹித் மினரல்ஸ் தீர்ப்பின் தாக்கம்*: சரக்கு சேவை வரி அவையின் பரிந்துரைகள் வெறும் வற்புறுத்தும் தன்மை கொண்டவை மட்டுமே என்றும், அவற்றுடன் மாறுபடும் அரசமைப்பு உரிமை மாநிலங்களுக்கு உண்டு என்றும் உச்ச நீதிமன்றத்தின் 2022–ஆம் ஆண்டுத் தீர்ப்பு தெளிவுபடுத்தியது. ஆயினும், மாநிலங்கள் இந்த உரிமையைப் பயன்படுத்தும்போது ஏற்படும் மோதல்களைத் தீர்க்க எந்தவொரு நடுநிலையான மன்றமும் இல்லை. தற்போதைய அமைப்பு முழுவதுமாக அவைக்குள்ளேயே நடக்கும் அரசியல் பேரத்தையே நம்பியுள்ளது. இதில் ஒன்றியத்தின் மறுப்பதிகாரம் (veto), பல நேரங்களில் "கூட்டுறவு கூட்டாட்சியை", "நிர்பந்தக் கூட்டாட்சியாக" சுருக்கிவிடுகிறது.

---

[25] Jaison John, 'GST Dispute Resolution Mechanism: A Constitutional Farce?' (2017) 52 Economic and Political Weekly 15.

ஒரு வரலாற்றுத் தவறு

சரக்கு சேவை வரி தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு, ஒரு 'நடுநிலையான தீர்ப்பாயம்' தேவை என்பது 2011–ஆம் ஆண்டின் *115–வது அரசியலமைப்புத் திருத்த சட்டவரைவிலேயே* உணர்த்தப்பட்டிருந்தது. அந்தச் சட்டவரைவு, முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் ஒரு "சரக்கு சேவை வரி பிணக்குத் தீர்வு ஆணையத்தை" அமைப்பதற்கு வகைசெய்யும் வரைவு சட்டப்பிரிவு 279B–ஐ முன்மொழிந்தது. இயற்கை நீதி விதிகளின்படி, தனது சொந்த முடிவுகளிலிருந்து எழும் பிணக்குகளை சரக்கு சேவை வரி அவையே விசாரிக்க முடியாது என்பதை, அந்த நேரத்தில் ஒன்றிய நிதியமைச்சகமே ஒப்புக்கொண்டிருந்தது.[26]

இருப்பினும், இத்தகைய ஒரு 'மீயுயர் தீர்ப்பாயம்' (super–tribunal) அமைக்கப்பட்டால், அது சட்டமன்றங்களின் நிதிசார் தன்னாட்சியை நீர்த்துப்போகச் செய்துவிடும் என்று அஞ்சி, *நாடாளுமன்ற நிலைக்குழுவும்* (2013), மாநில நிதியமைச்சர்களும் இந்த ஆணையத்தை தீவிரமாக எதிர்த்தனர். "நிதியின் மீதான முழுக் கட்டுப்பாடு எப்போதும் சட்டமன்றங்களிடமே இருக்கும்" என்றும் அவற்றின் அதிகார உரிமை பாதிக்கப்படாது என்றும் தனது சட்டரீதியான பார்வையை எடுத்துரைத்து இந்தியத் தலைமை வழக்கறிஞர் உறுதியளித்திருந்தபோதிலும், இந்த எதிர்ப்பு தொடர்ந்தது.[27] இதன் விளைவாக, 2016–இல் நிறைவேற்றப்பட்ட இறுதி *வடிவமான நூற்று ஒன்றாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்திலிருந்து*, முன்னர் முன்மொழியப்பட்டிருந்த வரைவு அரசமைப்புச் சட்டப்பிரிவு 279B நீக்கப்பட்டது.

குறிப்பிடத்தக்க விடம் என்னவென்றால், இந்த நீக்கம் ஒருமனதாக நடக்கவில்லை. 2014–இல் அரசமைப்புச்சட்டத் திருத்த வரைவு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டபோது, *மாநிலங்களவைத் தேர்வுக் குழுவின்* சில உறுப்பினர்கள், சுதந்திரமான பிணக்குத் தீர்வு ஆணையம் தேவை என வலியுறுத்தித் தங்களின் மாறுபட்ட கருத்துகளைப் பதிவு செய்தனர். பிணக்குகளைத் தீர்க்கும் அதிகாரத்தை சரக்கு சேவை வரி அவையிடமே வழங்குவது, இயல்பானதொரு நலன் முரண்பாட்டை உருவாக்கும் என்று அவர்கள் எச்சரித்தனர்.[28] ஆனால், இந்த எச்சரிக்கைகள்

---

[26] Yashwant Sinha and others, *Standing Committee on Finance: Seventy Third Report: The Constitution (One Hundred Fifteenth Amendment) Bill, 2011* (Lok Sabha 2013) para 62.

[27] ibid para 64.

[28] Bhupender Yadav and others, *Report of the Select Committee on the Constitution (One Hundred and Twenty–Second Amendment) Bill, 2014* (Rajya Sabha 2015) paras 3.27, 62.1.

புறக்கணிப்பப்பட்டன. அரசமைப்புச் சட்டப்பிரிவு 279A(11)–இன் கீழ் பிணக்குத் தீர்வு அதிகாரம் மீண்டும் சரக்கு சேவை வரி அவையிடமே ஒப்படைக்கப்பட்டது. இது, அரசியல் ஆட்சித்துறையானது தனக்குத்தானே நீதிபதியாக அமரும் ஒரு முரண்பட்ட சூழலை உருவாக்கியுள்ளது. மேலும், "அவையின் பரிந்துரைகள் அல்லது அதன் செயலாக்கத்திலிருந்து எழும் எந்தவொரு பிணக்கும்..." என்று குறிப்பிடும் அரசமைப்புச் சட்டப்பிரிவு 279A(11)–இன் தற்போதைய வாசகம் முழுமையற்றது. ஏனெனில், சரக்கு சேவை வரி அவை செய்யத் தவறிய கடமைகளிலிருந்து எழும் 'விடுபடல் பிழைகள்' குறித்து இச்சட்டப்பிரிவு மௌனம் காக்கிறது.

ஒரு மோசமான வெளிப்பாடு

2020–ஆம் ஆண்டு சரக்கு சேவை வரி இழப்பீட்டு நெருக்கடியின்போது, ஒரு நடுநிலையான பிணக்குத் தீர்வு மன்றம் இல்லாத குறை அப்பட்டமாக வெளிச்சத்திற்கு வந்தது. முன்னரே குறிப்பிட்டது போல, கோவிட் பெருந்தொற்று வருவாயைச் சிதைத்தபோது, ஒன்றியம் தனது சட்டப்பூர்வக் கடமைகளுக்குத் தன்னிச்சையாகப் புதிய விளக்கம் அளித்தது. வருவாய் இழப்புகளை 'சரக்கு சேவை வரி அமலாக்கச் சிக்கல்களால்' ஏற்படும் இழப்பு (இதை ஈடு செய்வதாக அது ஒப்புக்கொண்டது) மற்றும் "கடவுளின் செயலால்" ஏற்படும் இழப்பு (இதற்குத் தான் பொறுப்பல்ல என்று அது கைவிரித்தது) என பிரித்துப் பார்த்தது.[29]

இழப்பீட்டுச் சட்டம் (Compensation Act) எந்தவித விலக்குமின்றி 14 விழுக்காடு வருவாய் வளர்ச்சியை உறுதி செய்துள்ளதாக மாநிலங்கள் வாதிட்டன. ஆயினும், அவை அதிகார வரம்பு சார்ந்த ஒரு *முட்டுச்சந்தில் (Jurisdictional cul–de–sac)* சிக்கிக்கொண்டன. பிணக்கின் எதிர் தரப்பான ஒன்றியத்திடமே மறுப்பதிகாரம் (Veto) இருந்ததால், மாநிலங்கள் சரக்கு சேவை வரி அவையை சார்ந்திருக்க முடியவில்லை. சட்டப் பிரச்சனையைத் தீர்த்து வைக்கச் சுதந்திரமான தீர்ப்பாயம் ஏதுமில்லை; உடனடி நிதி நெருக்கடியின்போது, அரசமைப்புச் சட்டப் பிரிவு 131–இன் கீழ் உச்ச நீதிமன்றத்தை அணுகுவது மிகவும் காலதாமதமாகும் என்று கருதப்பட்டது.

இதன் விளைவாக, இழப்பீட்டுச் சட்டத்தின் பொருள் குறித்த எந்தவொரு அதிகாரப்பூர்வமான தீர்ப்பும் பெறப்படவில்லை. இந்தப்

---

[29] 'Minutes of the 41st GST Council Meeting held on 27 August 2020' (*GST Council* 2020).

பிரச்சனை சட்டத்தால் அல்ல, அதிகார பலத்தால் தீர்க்கப்பட்டது. மாநிலங்கள் தாங்கள் முதலில் நிராகரித்த தீர்வான, ரிசர்வ் வங்கியின் வழியாக கடன் வாங்கும் அரசியல் சமரசத்திற்கு வேறு வழியின்றிப் பணிந்தன. நடுநிலையான நடுவர் ஒருவர் இல்லாதபோது, சட்டங்களை விட ஒன்றிய அரசின் அரசியல் ஆதிக்கமே மேலோங்கி நிற்கும் என்ற கசப்பான உண்மையை இந்நிகழ்வு தோலுரித்துக் காட்டியது.

பரிந்துரை 11

ஒரு சுதந்திரமான, சட்டப்பூர்வமான சரக்கு சேவை வரி *பிணக்குத் தீர்வு ஆணையத்தை* நிறுவும் வகையில், அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A(11)ல் திருத்தம் செய்ய வேண்டும். ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதியைத் தலைவராகக் கொண்ட, மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கிய இத்தீர்ப்பாயம், ஒரு சிறப்பு வாய்ந்த 'முதல் நிலை மன்றமாக' (First–instance forum) செயல்பட வேண்டும். சரக்கு சேவை வரி நடைமுறையில் ஏற்படும், *குறிப்பாக வரையறுக்கப்பட்ட* (*specifically demarcated)* கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டுப் பிணக்குகளுக்கு, இது கால நிர்ணயத்துடன் கூடிய தீர்ப்புகளை வழங்க வேண்டும்:

1. *வருவாய்ப் பிணக்குகள்* : பணம் செலுத்துவதில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் கணக்கீட்டுப் பிழைகளை விசாரித்துத் தீர்ப்பது.

2. *ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி கணக்குத் தீர்வு*: மாநிலங்களுக்கான உரிய சரியான வருவாயைத் தீர்மானிக்க, "விற்பனை நடைபெறும் இடம்" தொடர்பான விதிகளில் (எ.கா: எல்லை தாண்டிய டிஜிட்டல் சேவைகள், மின்னணு – வணிகம் அல்லது இடைத்தரகர் சேவைகள்) எழும் மோதல்களைத் தீர்ப்பது மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி பகிர்வில் உள்ள பிழைகளைச் சரிசெய்வது.

3. *தொழில்நுட்பப் பொறுப்புடைமை*: சரக்கு சேவை வரி வலைப்பின்னலின் செயல்திறன் குறைபாடுகள், மாநிலங்களுக்கு நுணுக்கமான தரவுகள் மறுக்கப்படுதல் மற்றும் தொழில்நுட்பக் கோளாறுகளால் ஏற்படும் வருவாய் இழப்புகள் தொடர்பான குறைகளைக் களைவது.

4. *அதிகார எல்லைகள்*: ஒரே பரிவர்த்தனைக்காக, வரி செலுத்துபவர் ஒருவர் மீது ஒன்றிய மற்றும் மாநில அமைப்புகள் தனித்தனியாக நடவடிக்கை எடுக்கும்போது எழும் 'அதிகார மோதல்களைத்' தீர்த்து வைப்பது.

5. *வகைப்பாடுகளை ஒருங்கிணைத்தல்*: ஒரே பொருளைப் வெவ்வேறு மாநிலங்கள் வெவ்வேறு விதமாக வகைப்படுத்தும் முரண்பட்ட சூழல்களைக் களைந்து, சீரான வரையறைகளை உறுதிசெய்யும் ஒரு மைய அதிகார அமைப்பாகச் செயல்படுவது.

இப்பட்டியல் ஓர் எடுத்துக்காட்டு மட்டுமே.

XIV. சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வரை பெட்ரோலியப் பொருட்கள் சரக்கு சேவை வரி வரம்பிற்கு வெளியிலேயே இருக்க வேண்டும்

கச்சா எண்ணெய், அதிவேக டீசல், பெட்ரோல், இயற்கை எரிவாயு மற்றும் விமான எரிபொருள் ஆகியவற்றின் மீது எந்தத் தேதியிலிருந்து சரக்கு சேவை வரி விதிக்கப்பட வேண்டும் என்பதைப் பரிந்துரைக்க, அரசமைப்புச் சட்டப்பிரிவு 279A(5) இன் கீழ் சரக்கு சேவை வரி அவைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாநிலப் பட்டியலின் 54ஆவது இனத்தின்கீழ் (Entry 54), இந்தப் பொருட்களின் மீது வரி விதிப்பதற்கான அதிகாரம் தற்போது மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவற்றை சரக்கு சேவை வரி வரம்பிற்குள் கொண்டுவருவதற்கு, ஓர் அரசமைப்புச் சட்டத் திருத்தம் அவசியமாகும்.

சரக்கு சேவை வரிக்கு முந்தைய காலத்தில், நிதி நெருக்கடிகளைச் சமாளிக்கப் பரந்த அளவிலான பொருட்களின் வரி விகிதங்களை மாற்றியமைக்கும் உரிமை மாநிலங்களுக்கு இருந்தது; ஆனால், ஒரு ஒருங்கிணைந்த சந்தைக்காக அந்த நெகிழ்வுத்தன்மை விட்டுக்கொடுக்கப்பட்டது. இன்று மாநில அரசுகளின் கையில் எஞ்சியிருக்கும் தன்நிறைவான வருவாய் ஆதாரங்கள் என்று பார்த்தால், அவை பெட்ரோல், மதுபானம் மற்றும் மின்சாரம் ஆகியவை மட்டுமே. மாநிலங்களின் சொந்த வரி வருவாயில் 14 விழுக்காடு பெட்ரோலியப் பொருட்களிலிருந்தே கிடைக்கிறது.[30] சரக்கு சேவை வரி அவையில் ஒன்றிய அரசுக்கு முடிவுகளை தீர்மானிக்கும் மறுப்பதிகாரம் (decisive veto) உள்ளது. எனவே, சரக்கு சேவை வரி அவையிடம் இவற்றையும் தாரைவார்ப்பது, மாநிலங்களிடம் மீதமுள்ள நிதிப் பிடிமானத்தையும்

[30] Internal data analysis of the High–Level Committee.

இழக்கச் செய்து, மாநிலங்களை ஒன்றிய அரசின் நிதியை மட்டுமே நம்பிவாழும் நிலைக்குத் தள்ளிவிடும்.

பொருளாதார இடர்

மாநிலங்களின் தன்னாட்சிக்கு அப்பாற்பட்டு, சரக்கு சேவை வரிக்குள் பெட்ரோலியத்தைக் கொண்டுவருவது கடுமையானதொரு பொருளாதார இடரை முன்னிறுத்துகிறது. தற்போது, ஒன்றியத்தின் கலால் தீர்வை வரியையும் (Union Excise Duty) உள்ளடக்கிய அடிப்படை விலையின் மீதே மாநிலங்கள் 'மதிப்புக் கூட்டு வரியை' (VAT) விதிக்கின்றன. இந்த 'வரிக்கு மேல் வரி' முறையினால், சில்லறை விற்பனை விலையில் நடைமுறை வரி விகிதம் பல நேரங்களில் 50 சதவீதத்தைக் கடந்துவிடுகிறது. பெட்ரோலியப் பொருட்கள் சரக்கு சேவை வரி வரம்பிற்குள் கொண்டுவரப்பட்டால், இந்த வருவாய் மாதிரியானது இரண்டு காரணங்களால் சிதைந்துபோகும்:

1. *உள்ளீட்டு வரி வரவு* (ITC): பெட்ரோலியப் பொருட்களுக்கு உள்ளீட்டு வரி வரவு கோரும் வசதி கிடைப்பதால், வணிக நிறுவனங்கள் தாங்கள் எரிபொருளுக்காகச் செலுத்திய வரியை, தங்களின் இறுதி வரிப் பொறுப்பிலிருந்து கழித்துக்கொள்ள முடியும். இது மாநிலங்களுக்குக் கிடைக்கும் நிகர வருவாயைக் கடுமையாகக் குறைத்துவிடும்.
2. *வரி வீத உச்சவரம்பு*: சரக்கு சேவை வரி சட்டங்களின்படி தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச விகிதமான 40 விழுக்காட்டை (20% CGST + 20% SGST) சரக்கு சேவை வரி அவை விதித்தாலும்கூட, அது தற்போதைய வரி வசூலுக்கு ஈடாக இருக்காது. அதிலிருந்து வெகுவாகக் குறைந்தே இருக்கும்.

ஒரு நிரந்தரமான, சட்டப்படியான இழப்பீட்டு முறை இல்லாத நிலையில், இந்த மாற்றம் மாநிலங்களுக்கு ஒரு நிதிப் பேரழிவையே உருவாக்கும்.

வரிசைப்படியான சீர்திருத்தத்தின் அவசியம்

சரக்கு சேவை வரிக்கு முந்தைய வருவாய் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், சரக்கு சேவை வரி நடைமுறையின் தோல்வி மெய்ப்பிக்கப்பட்ட சூழலில், பெட்ரோலியப் பொருட்களை சரக்கு சேவை வரி வரம்பிற்குள் கொண்டுவருவதில் மாநிலங்கள் எச்சரிக்கையான அணுகுமுறையையே கடைப்பிடிக்க வேண்டும். இந்த நிலைப்பாடு என்பது வெறும் வருவாயைப்

பாதுகாப்பதற்கான நடவடிக்கை மட்டுமல்ல; இது நிதிக்கான அரசுரிமையின் அடிப்படைப் பாதுகாப்பாகும். இத்துறையை முன்கூட்டியே விட்டுக்கொடுப்பது, மாநிலங்களிடம் எஞ்சியிருக்கும் இறுதியான சுயாட்சியுள்ள நிதி ஆதாரக் கருவிகளில் ஒன்றை இழக்கச் செய்துவிடும்.

எனவே, சரக்கு சேவை வரியின் வரம்பை விரிவுபடுத்துவது என்பது நிபந்தனைக்கு உட்பட்டதாகவே இருக்க வேண்டும். சரக்கு சேவை வரி அமைப்பில் தற்போது நிலவும் கட்டமைப்புத் தோல்விகள் வெற்றிகரமாகச் சரிசெய்யப்பட்டு, நிலையான, கணிக்கக்கூடிய கூட்டாட்சி நம்பிக்கை மீட்டெடுக்கப்பட்ட பின்னரே இந்த விரிவாக்கம் நடைபெற வேண்டுமே தவிர, அதற்கு முன்னதாக அல்ல.

பரிந்துரை 12

இந்த இயலில் விவரிக்கப்பட்டுள்ள கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் வரை, சரக்கு சேவை வரியின் கீழ் பெட்ரோலியப் பொருட்களைச் சேர்ப்பதற்கான இசைவு தருவதை மாநிலங்கள் ஒத்திவைக்க வேண்டும். இவ்வமைப்பின் பழுதுபட்ட மையக் கட்டமைப்பைச் சீரமைக்காமலும், அதில் ஆழமாக வேரூன்றிய குறைபாடுகளைக் களையாமலும் வரித் தளத்தை விரிவுபடுத்துவது, மாநிலத் தன்னாட்சியை நிரந்தரமாகப் பலவீனப்படுத்திவிடும்.

XV. முடிவுரை

சரக்கு சேவை வரி என்பது மறுக்க முடியாத ஒரு துணிச்சலான மாற்றத்தை உருவாக்கும் சீர்திருத்தமாகும்; ஆனால், நடைமுறைப்படுத்துவதில் சறுக்கினால், எந்த சிறந்த திட்டமும் வெற்றிபெற முடியாது. தொடங்கப்பட்டு எட்டு ஆண்டுகளுக்கும் மேலாகியும், சரக்கு சேவை வரி இன்னும் முழுமையடையாத நிலையிலேயே உள்ளது. உள்நாட்டு வர்த்தகத் தடைகளை நீக்கியது, குழப்பமான வரி வீதங்களைச் சீரமைத்தது மற்றும் 'உள்ளீட்டு வரி வரவு' வழியாக 'வரிக்கு மேல் வரி' எனும் பிற்போக்கான சுமையை நீக்கியது ஆகியவை சரக்கு சேவை வரியின் சாதனைகளாகும். இருப்பினும், எஞ்சியிருக்கும் பணிகள் மலைக்க வைக்கின்றன. ஒன்றிய அரசின் அதிகாரக் குவிப்பு மனப்பான்மை மற்றும் முழுவடிவிற்கும், நிலைத்தன்மைக்கும் முன்னுரிமை அளிக்காமல் வேகத்திற்கு முக்கியத்துவம் அளித்துச் செயல்படுத்தப்பட்ட இந்த வரி விதிப்பு முறை

"திணிக்கப்பட்ட நிதி கூட்டாட்சி" (coercive fiscal federalism) எனும் குற்றச்சாட்டுக்கு வழிவகுத்துள்ளதோடு, அமைப்பில் பல கட்டமைப்புத் தோல்விகளையும் நிரந்தரமாக்கிவிட்டன.

நிதிநிலை நோக்கில் பார்க்கையில், சரக்கு சேவை வரி அதன் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் பின்தங்கியுள்ளது. மாநிலங்கள் தங்கள் நிதி தன்னாட்சியைத் தாரைவார்த்தும், அதற்குப் பதிலாக உறுதியளிக்கப்பட்ட நிலைத்தன்மை கிடைக்கவில்லை என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது.

அரசமைப்புச் சட்ட ரீதியாக, கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவம் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. சரக்கு சேவை வரி அவையானது, நடைமுறையில் ஒன்றிய நிதியமைச்சகத்தின் ஒரு நீட்சியாகவே செயல்படுகிறது. முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கானச் சுதந்திரமான தீர்வு முறை ஏதுமில்லை.

செயல்பாட்டு ரீதியாக பார்த்தால், சரக்கு சேவை வரி இணையதள வலைப்பின்னலில் முதலில் பின்பற்றப்பட்ட ரசீது ஒப்பிடும் முறை சீர்குலைந்ததால், மாநிலங்கள் ஒரு 'மும்முனைத் தாக்குதலுக்கு' (triple whammy) ஆளாகியுள்ளன: (i) போலி ரசீதுகள் வழியாக ஏற்படும் கணிசமான வருவாய் கசிவு; (ii) சரக்கு சேவை வரி இணையதள வலைப்பின்னலின் சமபங்கு உரிமையாளர்களாக இருந்தும், மாநிலங்களுக்கு நிகழ்நேரத் தரவுகள் மறுக்கப்படுவதால் வரி அமலாக்கப் பணிகள் பாதிக்கப்படுதல்; மற்றும் (iii) பகிர்ந்து அளிக்கப்படாத சரக்கு சேவை வரி நிலுவைத் தொகையை ஒன்றிய அரசு ஒளிவுமறைவாகவும், பிழையாகவும் ஒதுக்கீடு செய்தல்.

இந்த சரக்கு சேவை வரி முறையின் மீதான மற்றுமொரு குற்றச்சாட்டு, *டெஸ்லரின் சிக்கல் மாறா விதியை (Tesler's Law of Conservation of Complexity)* உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. சரக்கு சேவை வரி சிக்கல்களை நீக்கவில்லை; அது அவற்றை மறுவிநியோகம் செய்துள்ளது. 2017–க்கு முந்தைய முறையில் வரிக்கு மேல் வரி மற்றும் மாநிலங்களுக்கு இடையிலான சோதனைச் சாவடிகள் இருந்தன. ஆனால் புதிய முறை அந்தச் சுமைகளை நிறுவனங்கள் மீது, குறிப்பாகக் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் (MSMEs) மீது சுமத்தியுள்ளது. அடிக்கடி மாற்றப்படும் வரி வீதங்கள், நுணுக்கமான வகைப்பாடுகள் மற்றும் நம்பகத்தன்மையற்ற இணையதள எண்ணுரு கட்டமைப்பு ஆகியவை தொடர் நிலையற்ற தன்மையை உருவாக்கியுள்ளன.

இதன் விளைவுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பில் (OECD) உள்ள நாடுகள் மற்றும் பிற வளரும் பொருளாதாரங்களில் உள்ள நிறுவனங்களை ஒப்பிடும்போது, இந்திய நிறுவனங்கள் மறைமுக வரி இணக்கத்திற்காக

மிக அதிக நேரத்தைச் செலவிடுகின்றன என்று உலக வங்கி தனது (2020) குறிப்பிட்டுள்ளது.[31] சரக்கு சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்ட முதல் மூன்று ஆண்டுகளில், சிறு உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கான 'இணக்க நேரம்' ஏறத்தாழ இருமடங்காக உயர்ந்தது என்றும், கணக்காளர்கள், மென்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் இடைத்தரகர்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் 'இணக்கச் செலவுகள்' 30 முதல் 50 விழுக்காடு வரை அதிகரித்தன என்றும் இந்திய எம்.எஸ்.எம்.இ சம்மேளனத்தின் (A Federation of Indian MSMEs survey) (2021) கள ஆய்வு கண்டறிந்துள்ளது. தாமதமாகும் அல்லது சர்ச்சைக்குள்ளாகும் உள்ளீட்டு வரி வரவு காரணமாக, நடைமுறை மூலதனம் முடக்கப்படுவதை சிஐஐ (CII) மற்றும் எஃப்.ஐ.சி.சி.ஐ (FICCI) போன்ற தொழில்துறை அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. இது ஜவுளி, பொறியியல் பொருட்கள் மற்றும் கட்டுமானம் போன்ற குறைவான இலாப வரம்பு கொண்ட துறைகளின் பணப்புழக்கத்தைக் கடுமையாக நெருக்குகிறது என்றும் இத்தொழில்துறை அமைப்புகள் கூறுகின்றன.[32]

பெருநிறுவனங்கள் இந்த மாற்றங்களுக்குச் சுலபமாகத் தங்களை மாற்றிக்கொண்டன. பல சமயங்களில், முறைப்படுத்தப்பட்ட வணிகம் மற்றும் தெளிவான உள்ளீட்டு வரிச்சங்கிலிகளால் அவை பயனடைந்தும் உள்ளன. இது ஒரு 'இணக்கச் சமச்சீரின்மையை' உருவாக்கியுள்ளது: அதாவது, சுமைகள் அனைத்தும் விகிதாச்சார அடிப்படையில் அதிகமாக சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் மீது விழுகின்றன. ஆனால், பலன்களோ பெரும்பாலும் ஒழுங்கமைக்கப்பட்ட விநியோகச் சங்கிலிகளுக்கே போய்ச் சேருகின்றன.

சரக்கு சேவை வரி தற்போது அரசமைப்புச் சட்ட அடிப்படையிலான ஒரு தீர்க்கமான திருப்புமுனையில் நிற்கிறது. சரக்கு சேவை வரி வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது இனியும் கேள்வியல்ல; அந்த விவாதம் முடிந்துவிட்டது. இப்போது நம்முன் உள்ள உண்மையான தேர்வு: வரி இணக்கத்தைக் கட்டாயப்படுத்திப் பெறும் ஒரு மையப்படுத்தப்பட்ட எந்திரமா அல்லது கருத்தொற்றுமையை ஈட்டும் ஒரு கூட்டுறவுக் கட்டமைப்பா? நிர்பந்தக் கூட்டாட்சியா அல்லது உண்மையான கூட்டுறவுக் கூட்டாட்சியா? எளிமையைப் பறைசாற்றிக்கொண்டே அமைப்பின் மிகவும் நலிந்த நிலையில் இருப்பவர்கள் மீது சிக்கல்களைச் சுமத்தும் ஒரு முறையா, அல்லது

---

[31] 'Doing Business 2020: India' (*World Bank* 2020) accessed January 22, 2026.


[32] 'Impact of GST on MSMEs in India' (*CII* 2016) accessed January 22, 2026; 'A Brief Note on Impact of GST on MSMEs' (*FICCI* 2016) accessed January 22, 2026.

நியாயத்துடனும் செயல்திறனுடனும் கையாளக்கூடிய நிறுவனரீதியான இடத்தில் அச்சிக்கல்களை நிறுத்தும் ஒரு முறையா? என்பதேயாகும்.

'சரக்கு சேவை வரி 2.0' எனும் இரண்டாம் தலைமுறைச் சீர்திருத்தங்கள் மிக அவசியம். அவை பின்வருமாறு: சரக்கு சேவை வரி அவையின் வாக்குரிமை அமைப்பைச் சமநிலைப்படுத்துதல்; அவையின் தலைமைப் பொறுப்பைச் சுழற்சி முறையில் அமைத்தல்; ஒரு சுயாட்சியுடைய ஒரு செயலகத்தை நிறுவுதல்; அவையின் பரிந்துரைகள் ஆலோசனைத் தன்மை கொண்டவை என்பதைத் தெளிவுபடுத்துதல்; மாநில சரக்கு சேவை வரியில் (SGST) வரையறுக்கப்பட்ட நெகிழ்வுத்தன்மையை மீட்டெடுத்தல்; ஒரு சுதந்திரமான பிணக்குத் தீர்வு ஆணையத்தை உருவாக்குதல்; சரக்கு சேவை வரி இணையதள வலைப்பின்னலை (GSTN) அதிகாரப் பரவலாக்குதல் மற்றும் சீரமைத்தல்; நாடாளுமன்றம் மற்றும் மாநிலச் சட்டமன்றங்களைக் கொண்ட நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் வழியாக கண்காணிப்பை வலுப்படுத்துதல்; மற்றும் கட்டமைப்புப் பழுதுகள் முழுமையாகச் சரிசெய்யப்படும் வரை பெட்ரோலியத்தைச் சேர்ப்பதைத் தள்ளிவைப்பது உட்பட, விரிவாக்கத்தைத் திட்டமிட்ட வரிசைப்படியான முறையில் மேற்கொள்ளுதல். அரசமைப்புச் சார்ந்த தொலைநோக்குப் பார்வையுடனும், இருதரப்பு கட்டுப்பாட்டுடனும் இவை முன்னெடுக்கப்பட்டால், சரக்கு சேவை வரி, தொடக்கத்தில் எதிர்பார்க்கப்பட்ட அந்த உண்மையான கூட்டாட்சிச் சாதனையாக முழுமை பெற முடியும்.


இணைப்பு I

வரைபடம் 1: ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் சரக்கு சேவை வரிக்கு முந்தைய மற்றும் பிந்தைய வருவாய் ஒப்பீடு (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் %)



குறிப்பு: 2015–16 மற்றும் 2016–17 ஆம் ஆண்டுகளுக்கான தரவுகள், சரக்கு சேவை வரிக்குள் உள்வாங்கப்பட்ட வரிகளையும் (taxes subsumed under GST) உள்ளடக்கியவை. 2017–18 ஆம் ஆண்டில் சரக்கு சேவை வரி பகுதியளவில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டதால், அந்த ஆண்டு இவ்வரைபடத்தில் சேர்க்கப்படவில்லை. வருவாய் இழப்பிற்காக மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட சரக்கு சேவை வரி இழப்பீட்டுத் தொகையையும் இவ்வரைபடம் கணக்கில் கொள்ளவில்லை. ஒன்றிய சரக்கு சேவை வரி (CGST) மற்றும் மாநில சரக்கு சேவை வரி (SGST) ஆகியவை, ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரியின் (IGST) அந்தந்தப் பங்குகளையும் உள்ளடக்கியவை. 'PA' என்பது தற்காலிக உண்மையான மதிப்பீட்டைக் (Provisional Actual) குறிக்கிறது. **தரவு மூலங்கள்:** அந்தந்த ஆண்டுகளுக்கான வரவு வரவு–செலவுத் திட்டம் (Receipts Budget), ஒன்றிய பட்ஜெட்; புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI); சரக்கு சேவை வரி இணையதளம்; மாநிலங்களவை உடுக்குறியிட்ட கேள்வி எண்: 164, நிதியமைச்சகம், டிசம்பர் 3, 2019; தலைமைக் கணக்குக் கட்டுப்பாட்டாளர் (Controller General of Accounts); பி.ஆர்.எஸ் (PRS).

வரைபடம் 2: ஒன்றிணைக்கப்பட்ட வரிகளிலிருந்து பெறப்பட்ட சரக்கு சேவை வரி வருவாய் (மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) சதவீத அடிப்படையில்)



குறிப்பு: சரக்கு சேவை வரிக்கு முந்தைய வருவாய் தரவுகள் கிடைக்கப்பெறாததால், அருணாச்சல பிரதேசம், குஜராத் மற்றும் ஹரியானா ஆகியவை இவ்வரைபடத்தில் சேர்க்கப்படவில்லை. 2014–ல் நடைபெற்ற மாநிலப் பிரிவினையின் காரணமாக, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானாவுக்கான தரவுகள் இதில் சேர்க்கப்படவில்லை. **தரவு மூலங்கள்:** எஸ்டேட்ஸ் தரவுத்தளம் (Estates Database), ஆர்பிஐ (RBI); சரக்கு சேவை வரி இணையதளம்; மாநில வரவு–செலவுத் திட்ட ஆவணங்கள்; பி.ஆர்.எஸ் (PRS).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – II

ஒப்பீட்டு ஆய்வு: சரக்கு சேவை வரி இணையதள வலைப்பின்னல் (GSTN) – தொலைநோக்குப் பார்வையும் தற்போதைய யதார்த்தமும்

அம்சம்	அசல் தொலைநோக்கு (மும்முனை அமைப்பு)	தற்போதைய யதார்த்தம் (சரக்கு சேவை வரி தாக்கல்–3B முறை)
அடிப்படைக் கோட்பாடு	*வடிவமைப்பிலேயே உறுதிசெய்யப்பட்ட வரி இணக்கம் (Compliance by Design):* டிஜிட்டல் கட்டமைப்பிற்குள்ளேயே வரி ஏய்ப்பு செய்வதைக் கணிதரீதியாகவே சாத்தியமற்றதாக மாற்றும் ஒரு 'மூடிய சுழற்சி அமைப்பு'.	*சுய மதிப்பீடு :* 'தாமாகவே அளிக்கும் கணக்குகள்', 'தற்காலிக ஒட்டுவேலைகள்' மற்றும் முன்தேதியிட்ட தணிக்கைகளை மட்டுமே நம்பியுள்ள ஒரு தற்காலிக ஏற்பாடு.
கணக்குத் தாக்கல் கட்டமைப்பு	*வரிசைக்கிரமமான & ஒன்றிணைந்த முறை:* சரக்கு சேவை வரி தாக்கல்–1 (விற்பனை) → சரக்கு சேவை வரி தாக்கல்–2 (கொள்முதல் உறுதிப்படுத்தல்) → சரக்கு சேவை வரி தாக்கல்–3 (தானாக உருவாக்கப்படும் இறுதி அறிக்கை).	*ஒன்றுக்கொன்று தொடர்பற்ற & மனிதத் தலையீடு கொண்ட முறை:* சரக்கு சேவை வரி தாக்கல்–1 (விற்பனை) + சரக்கு சேவை வரி தாக்கல்–3B (சுருக்கமான அறிக்கை). சரக்கு சேவை வரி தாக்கல்–2A/2B ஆகியவை வெறும் 'பார்வைக்கு மட்டுமான' அறிக்கைகளாகவே உள்ளன.
உள்ளீட்டு வரி வரவு முறை	*'இருதரப்பு உறுதிப்படுத்தல்':* இணையதளத்தில் விற்பனையாளர் பதிவேற்றிய ரசீதை, வாங்குபவர் வெளிப்படையாக 'ஏற்றுக்கொண்ட' பிறகே வரி வரவு உறுதி செய்யப்படும்.	*துண்டிக்கப்பட்ட நிலை:* கொள்முதலாளர் தனது வரவுத் தொகையை சரக்கு சேவை வரி தாக்கல்–3B–ல் தாமாகவே அறிவிக்கிறார். சரிபார்ப்புப் பணி மனிதத் தலையீட்டுடன் நடைபெறுகிறது; மேலும் அது விதி 36(4)–ஆல் கட்டுப்படுத்தப்படுகிறது.

அம்சம்	அசல் தொலைநோக்கு (மும்முனை அமைப்பு)	தற்போதைய யதார்த்தம் (சரக்கு சேவை வரி தாக்கல்–3B முறை)
மோசடித் தடுப்பு	*உயர் பாதுகாப்பு:* விற்பனைக்கு இணையான வரிப் பொறுப்பு இல்லாமல் 'வரி வரவு' கிடையாது. 'ஹவாலா' ரசீதுகள் மூலத்திலேயே முடக்கப்படும்.	*அதிகப் பாதிப்புக்குள்ளாகும் நிலை:* கணக்குக் காட்டுவதற்கும் (சரக்கு சேவை வரி தாக்கல்–1) பணம் செலுத்துவதற்கும் (சரக்கு சேவை வரி தாக்கல்–3B) உள்ள இடைவெளியைப் பயன்படுத்தி, மோசடியாளர்கள் போலி ரசீதுகளை வழங்கிவிட்டு மாயமாகி விடுகிறார்கள்.
தானியங்கிமயத்தின் பங்கு	*முழுமையான தானியங்கி முறை:* நிகர வரிப் பொறுப்பைக் கணினி அமைப்பே கணக்கிடும். மனித தலையீடு மிகக்குறைவு.	*பகுதி தானியங்கி முறை:* வரி செலுத்துவோரே தனது நிகர பொறுப்பைக் கணக்கிடுகிறார். கணினி அமைப்பு முதன்மையாக ஒரு 'தாக்கல் செய்யும் தளமாக' மட்டுமே செயல்படுகிறது.
ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி கணக்குத் தீர்வு	*துல்லியமானது:* சரக்கு சென்றடையும் மாநிலத்தை வாங்குபவரே உறுதி செய்வதால், மாநிலங்களுக்கான வருவாய்ப்பங்கீடு துல்லியமாக இருக்கும்.	*குறைபாடுடையது:* விற்பனையாளர் அளிக்கும் சரிபார்க்கப்படாத தரவை நம்பியுள்ளது. இதனால் ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி நிலுவைத் தொகை பெருமளவில் தேங்கி, மாநிலங்களுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது.
சட்ட தகுதிநிலை	*சட்டப்பூர்வமானது:* அசல் சரக்கு சேவை வரி சட்டத்தின் (original GST Act) (பிரிவு 39) முழுமையான அங்கீகாரம் கொண்டது.	*தற்காலிகமானது:* சரக்கு சேவை வரி தாக்கல்–3B என்பது ஒரு 'இடைக்கால ஏற்பாடாகவே' கொண்டுவரப்பட்டது; பின்னர் முன்தேதியிட்ட சட்டத் திருத்தங்கள் வழியாக சட்டபூர்வமாக்கப்பட்டது.

சான்றுகள்

1. *First Discussion Paper on Goods and Services Tax in India* (The Empowered Committee of State Finance Ministers 2009).
2. Arvind Modi and others, *Report of the Task Force on Goods and Services Tax* (Thirteenth Finance Commission 2009).
3. Yashwant Sinha and others, *Standing Committee on Finance: Seventy Third Report: The Constitution (One Hundred Fifteenth Amendment) Bill, 2011* (Lok Sabha 2013).
4. *Report No. 11 of 2019: Report of the Comptroller and Auditor General of India for the year ended March 2018* (Union Government, Department of Revenue 2019).
5. *Report No. 5 of 2022: Report of the Comptroller and Auditor General of India for the year ended March 2021* (Union Government, Department of Revenue 2022).
6. *Report No. 25 of 2025: Report of the Comptroller and Auditor General of India for the year ended March 2023* (Union Government, Department of Revenue 2025).
7. *Report No. 5 of 2025: Report of the Comptroller and Auditor General of India on State Revenues for the period ended March 2023* (Government of Karnataka 2025).
8. Sacchidananda Mukherjee, 'Present State of Goods and Services Tax (GST) Reform in India' (2015) National Institute of Public Finance and Policy Working Paper No. 2015–154, accessed January 25, 2026.
9. Alok Prasanna Kumar, 'For a Mess of Potage: The GST's Promise of Increased Revenue to States Comes at the Cost of the Federal Structure of the Constitution' (2016) 28 National Law School of India Review 97.
10. Ajitesh Kir, 'India's Goods and Services Tax: A Unique Experiment in Cooperative Federalism and a Constitutional Crisis in Waiting' (2021) 69 Canadian Tax Journal 391.
11. Dipayan Datta Chaudhuri and Deepak Sethia, 'The Grand Federal Bargain for Goods and Services Tax (GST) in India' (2022) IIM Indore Working Paper WP/02/2022–23/ECO, accessed January 25, 2026.
12. Tushar Chakrabarty and Tanvi Vipra, 'State of State Finances 2023–2024' (*PRS Legislative Research* 2023) accessed January 25, 2026.

13. Gurmeet Singh, 'Fiscal Centralization through GST: Challenges to Cooperative Federalism and State Autonomy in India' (2025) 3 International Journal of Multidisciplinary Research 289.
14. Srushti Singh, 'State of State Finances 2025–2026' (*PRS Legislative Research* 2025) accessed January 21, 2026.
15. Subhash Chandra Garg, *The $10 Trillion Dream: The State of the Indian Economy and the Policy Reforms Agenda* (Penguin 2022).
16. YV Reddy and GR Reddy, *Indian Fiscal Federalism* (Oxford University Press 2019).

பின்னிணைப்புகள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பின்னிணைப்பு I

ஆய்வு வரையறைகள்

[அரசாணை (நிலை) எண் 281, பொதுத் (சட்டம் மற்றும் ஒழுங்கு–எஃப்) துறை, நாள்: ஏப்ரல் 17, 2025]

1. அனைத்துத்துறைகளிலும்ஒன்றிய-மாநிலஉறவுகளைப்பாதிக்கும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகையங்கள், நடைமுறையில் உள்ள சட்டங்கள், ஆணைகள், கொள்கைகள் மற்றும் ஏற்பாடுகள் ஆகியவற்றை இக்குழு ஆராய்ந்து, சீராய்வு செய்ய வேண்டும்.
2. நடைமுறையிலுள்ள இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகையங்களை ஆராய்ந்து, படிப்படியாக பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்ட அதிகாரங்களை, மாநிலப் பட்டியலுக்கு மீட்டெடுப்பதற்கு,இக்குழுதகுந்தநடவடிக்கைகளைப்பரிந்துரைக்க வேண்டும்.
3. நல்ல நிர்வாகத்தை வழங்குவதில் மாநிலங்கள் எதிர்கொள்ளும் சவால்களைத் தீர்ப்பதற்காக, தகுந்த நடவடிக்கைகளை இக்குழு பரிந்துரைக்க வேண்டும்.
4. நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் பாதகமில்லாமல், ஆட்சித்துறை, சட்டமியற்றுதல், நீதித்துறை ஆகிய துறைகளில் மாநிலங்களுக்கு அதிகபட்ச தன்னாட்சியை உறுதிசெய்வதற்குத் தகுந்த நடவடிக்கைகளை இக்குழு பரிந்துரை செய்ய வேண்டும்.
5. ராஜமன்னார் குழுவின் (1971) பரிந்துரைகளையும் ஒன்றிய-மாநில உறவுகள் தொடர்பான பிற ஆணையங்களின் பரிந்துரைகளையும் மற்றும் 1971ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு அரசியல், சமூக, பொருளாதார மற்றும் சட்ட மாற்றங்களையும் கருத்தில் கொண்டு, இக்குழு ஆய்வு செய்து, அறிக்கைகளை அளிக்க வேண்டும்.

பின்னிணைப்பு II

பங்களித்த வல்லுநர்கள்

I. முதல் தேசிய கருத்தரங்கின் சிறப்புரையாளர்கள் (23 ஆகஸ்ட், 2025)

1. நீதியரசர் திரு. ஜஸ்டி செலமேஸ்வர், முன்னாள் நீதிபதி, இந்திய உச்சநீதிமன்றம்.
2. நீதியரசர் திரு. A.P. ஷா, முன்னாள் தலைமை நீதிபதி, டெல்லி உயர்நீதிமன்றம் மற்றும் முன்னாள் தலைவர், இந்திய சட்ட ஆணையம்.
3. முனைவர் G. மோகன் கோபால், முன்னாள் இயக்குநர், இந்திய தேசிய நீதித்துறைப் பயிலகம், போபால் மற்றும் முன்னாள் இயக்குநர் (துணைவேந்தர்), இந்திய தேசிய சட்டப் பள்ளி பல்கலைக்கழகம், பெங்களூரு.
4. முனைவர் T.M. தாமஸ் ஐசக், முன்னாள் அமைச்சர், நிதி மற்றும் தென்னை நார், கேரளா அரசு.
5. முனைவர் M. கோவிந்த ராவ், முன்னாள் உறுப்பினர், பதினான்காவது நிதி ஆணையம் மற்றும் முன்னாள் இயக்குநர், தேசிய பொது நிதியியல் மற்றும் கொள்கை நிறுவனம், புது தில்லி.
6. திரு. சஞ்சய் R. ஹெக்டே, மூத்த வழக்குரைஞர், இந்திய உச்சநீதிமன்றம்.

II. துறைசார் வல்லுநர்களுடன் கலந்துரையாடல்

1. முனைவர் பழனிவேல் தியாக ராஜன், மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் அமைச்சர், தமிழ்நாடு அரசு.

2. டாக்டர் எழிலன் நாகநாதன், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர். ஆயிரம் விளக்கு தொகுதி.
3. நீதியரசர் முனைவர் A.K. ராஜன், முன்னாள் நீதிபதி, மெட்ராஸ் உயர்நீதிமன்றம்.
4. முனைவர் G.N. தெவி, 2010–இல் "இந்தியாவின் மக்கள் மொழியியல் கணக்கெடுப்பு (PLSI)" என்ற திட்டத்தை இயக்கிய மொழியியலாளர் மற்றும் பண்பாட்டு செயற்பாட்டாளர்.
5. திரு. சுபாஷ் சந்திர கார்க், இ.ஆ.ப (பணி நிறைவு), இந்திய அரசின் முன்னாள் ஒன்றிய நிதிச் செயலாளர், இந்திய அரசு.
6. திரு. K. ஞானதேசிகன், இ.ஆ.ப (பணி நிறைவு), முன்னாள் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு.
7. முனைவர் K. சண்முகம், இ.ஆ.ப (பணி நிறைவு), முன்னாள் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு.
8. திரு. R. பாலகிருஷ்ணன், இ.ஆ.ப (பணி நிறைவு), முன்னாள் கூடுதல் தலைமைச் செயலாளர், ஒடிசா அரசு.
9. டாக்டர் B. சந்திர மோகன், இ.ஆ.ப, கூடுதல் தலைமைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, தமிழ்நாடு அரசு.
10. முனைவர் P. செந்தில்குமார், இ.ஆ.ப, கூடுதல் தலைமைச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, தமிழ்நாடு அரசு.
11. திரு. பிரஜேந்திர நவ்நீத், இ.ஆ.ப, முதன்மைச் செயலாளர், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, தமிழ்நாடு அரசு.
12. திரு. பிரத்திக் தாயள், இ.ஆ.ப, இணைச் செயலாளர் (வரவு–செலவு), நிதித் துறை, தமிழ்நாடு அரசு.
13. முனைவர் D. ஜகந்நாதன், இ.ஆ.ப (பணி நிறைவு), முன்னாள் வணிக வரித்துறை ஆணையர், தமிழ்நாடு அரசு.
14. முனைவர் L. ஜவஹர் நேசன், முன்னாள் துணைவேந்தர், சவீதா பல்கலைக்கழகம், சென்னை மற்றும் JSS அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், மைசூரு.
15. முனைவர் கலையரசன் ஆறுமுகம், இணைப் பேராசிரியர், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் (MIDS), சென்னை.
16. திரு. P.B. பிரின்ஸ் கஜேந்திர பாபு, பொதுச் செயலாளர், பொதுப் பள்ளிக்கான மாநில மேடை–தமிழ்நாடு, சென்னை.

III. அச்சும் பதிப்பும்

1. டாக்டர் தே. சங்கர சரவணன், மதிப்புறு ஆலோசகர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை.
2. திரு. சி. கணேஷ், மொழிபெயர்ப்பு ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை.
3. திரு. R. கோபிநாத், பக்க வடிவமைப்பாளர், பிரான்வதி டிஜிட்டில் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்., பழைய பெருங்களத்தூர், சென்னை – 600063.
4. ப்ளூம்ஸ்பரி பப்ளிஷிங் இந்தியா பிரைவேட் லிமிடெட்., 2வது மாடி, கட்டிடம் எண் 4, C–6 & 7, DDA காம்ப்ளெக்ஸ், பாக்கெட் 6, செக்டார் C, வசந்த் குஞ்ச், புது தில்லி – 110 070
5. ராசி கிராபிக்ஸ் பிரைவேட் லிமிடெட்., 40, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை – 600014.

IV. வலைத்தள உருவாக்கம்

1. டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப, முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, சென்னை.
2. திரு. ஸ்ருதஞ்ஜெய் நாராயணன், இ.ஆ.ப, இணை முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, சென்னை.
3. பிராட்லைன் இன்னோவேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்., காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600006.

V. மொழிபெயர்ப்பு உதவி

1. திரு. R. கோமகன், இணை இயக்குநர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை.

பின்னிணைப்பு III

பரிந்துரைகளின் சுருக்கம்

இயல் 1 – அதிகாரப் பரவலாக்கத்திற்கும் மாநில சுயாட்சிக்குமான வாதம்

பின்வரும் பதினொரு வாதங்களை மொத்தமாக எடுத்துக்கொண்டால், ஏழு வாதங்கள் அதிகாரப் பரவலாக்கம் மற்றும் மாநில சுயாட்சிக்கு உறுதியான அரசமைப்பு ரீதியான தேவையினை முன்வைக்கின்றன; நான்கு வாதங்கள் அதிகப்படியான மையப்படுத்துதலைத் தக்கவைக்கும் பொய்மை வாதங்களை உடைக்கின்றன. இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பினை மறுசமநிலைப்படுத்துவதற்காக, ஒரு சீரான மற்றும் கொள்கை ரீதியான கட்டமைப்பினை உருவாக்குகிறது.

1. தன்னுரிமை சார்ந்த வாதம் (*The Liberty Argument)*: பிரிக்கப்பட்ட அதிகாரம் ஏன் சுதந்திரத்தைப் பாதுகாக்கிறது
2. உத்திசார் கவனம் குறித்த வாதம் *(The Strategic Focus Argument)*: மிதமிஞ்சிய அதிகாரக் குவிப்பு ஆளுகையை ஏன் நலிவடையச் செய்கிறது
3. மக்களாட்சி முறை சார்ந்த வாதம் *(The Democracy Argument)*: துணை அமைப்புக் கொள்கை ஏன் பொறுப்புடைமையை வலுப்படுத்துகிறது
4. மீள்திறன் சார்ந்த வாதம் *(The Resilience Argument)*: அழுத்தத்தின் போது மையப்படுத்தப்பட்ட அமைப்புகள் ஏன் தோல்வியடைகின்றன
5. புத்தாக்கம் சார்ந்த வாதம் *(The Innovation Argument)*: அதிகாரப் பரவலாக்கம் ஏன் பரிசோதனை முயற்சிகளை ஊக்குவிக்கிறது
6. சமூகநீதி சார்ந்த வாதம் *(The Social Justice Argument)*: சமூகச் சீர்திருத்தங்கள் ஏன் மாநிலங்களில் இருந்தே உருவாகின்றன
7. நேர்மை சார்ந்த வாதம் *(The Probity Argument)*: பரவலாக்கப்பட்ட அதிகாரம் ஏன் நேர்மையை ஊக்குவிக்கிறது

8. திறனின்மை எனும் பிழையான வாதம் *(The Incapacity Fallacy)*: ஒன்றியத்தின் அவநம்பிக்கை எவ்வாறு மாநிலங்களின் பலவீனத்தை உருவாக்குகிறது
9. கட்டுப்பாடு எனும் பிழையான வாதம் *(The Control Fallacy)*: கட்டளையைவிட ஒருங்கிணைப்பு ஏன் சிறப்பாகச் செயல்படுகிறது
10. சமன்படுத்தல் எனும் பிழையான வாதம் *(The Equalisation Fallacy)*: மையப்படுத்தல் எவ்வாறு சார்ந்திருக்கும் நிலையை வளர்க்கிறது
11. ஒருமுகத்தன்மை எனும் பிழையான வாதம் *(The Uniformity Fallacy)*: பன்முகத்தன்மை எவ்வாறு கூட்டாட்சி ஒற்றுமையை நிலைநிறுத்துகிறது

அரசமைப்புச் சட்டத் திருத்தம், சட்டமியற்றுதல் மற்றும் கொள்கை வகுத்தல் என அனைத்துக்கும் மேற்கூறியவை வழிகாட்டும் கொள்கைகளாக இருக்கவேண்டும். அதிகாரத்திற்கு ஏற்ப பொறுப்பு, வலுப்படுத்தப்பட்ட மக்களாட்சி பொறுப்புடைமை, ஒன்றியமும் மாநிலங்களும் அதிகாரப் போட்டியாளர்களாக இல்லாமல், நிர்வாகத்தில் பங்காளர்களாகச் செயல்படுதல் ஆகியவற்றின் மூலம் கூட்டாசி சமநிலையினைப் பாதுகாக்க உதவும்.

இயல் 2 – அரசமைப்புச் சட்டத் திருத்தம்

1. நாடாளுமன்றத்தின் எளியபெரும்பான்மையால்திருத்தப்படக்கூடிய அரசமைப்புச் சட்ட விதிவகுப்புகளைக் குறைக்கவேண்டும். மற்ற அனைத்தும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இன் கீழ் திருத்தப்படவேண்டும்.
2. ஒவ்வொரு அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதாவும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 368(2)–இன் கீழ் நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையைப் பெறவேண்டும்.
3. அரசமைப்புச் சட்டப் பிரிவு 368 (2)–ஐ மறுவடிவமைத்து, அனைத்து அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கும் (பரிந்துரைகள் 1 மற்றும் 6–இல் குறிப்பிடப்பட்டவை தவிர), நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மற்றும் இரட்டைப் பெரும்பான்மை விதியின் கீழ் மாநிலச் சட்டமன்றங்களின் பின்னேற்பைப் பெறவேண்டும்.

வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகள், பிரிவு 368(2) உடன் இணைக்கப்படும் புதிய நிபந்தனையில் குறிப்பிடப்பட வேண்டும்.

4. இந்தியாவின் மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாநிலங்களில், மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத மாநிலங்களின் ஒப்புதல் தேவைப்படும் வகையில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–ஐத் திருத்த வேண்டும். ஒவ்வொரு மாநிலத்தின் பின்னேற்பும் அதன் சட்டமன்ற மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

5. இந்தியாவின் மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாநிலச் சட்டமன்றங்களில் மூன்றில் இரண்டு பங்கு அளவால் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டால், அது பரிந்துரை 2–இல் விவரிக்கப்பட்ட நடைமுறையின்படி நாடாளுமன்றத்தால் பரிசீலிக்கப்பட வேண்டும். இந்த நடைமுறையைச் சேர்ப்பதற்காக அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இல் ஒரு புதிய உட்பிரிவு (2A) சேர்க்கப்பட வேண்டும்.

6. குறிப்பிட்ட மாநிலங்களை பாதிக்கும் அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கு, பாதிக்கப்பட்ட மாநிலச் சட்டமன்றங்களின் பின்னேற்பு மட்டுமே தேவைப்பட வேண்டும். அத்தகைய பின்னேற்பு, அந்த மாநிலச் சட்டமன்ற அவைகளின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் அங்கீகரிக்கப்படவேண்டும். இந்த நடைமுறையைச் சேர்ப்பதற்காக, அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இல் ஒரு புதிய உட்பிரிவு (2B)–ஐச் சேர்க்கவேண்டும்.

7. அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இல் ஒரு புதிய உட்பிரிவு (2C)–ஐச் சேர்ப்பதன் வழியாக, அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சங்களைத் தெளிவாக வரையறுத்துச் சட்ட வடிவம் தரவேண்டும். இந்த அடிப்படை அம்சங்களைக் குறைக்கும், நீக்கும் அல்லது அழிக்கும் எந்தத் திருத்தமும் செய்யப்படக் கூடாது.

8. நாடாளுமன்றத்தின் எந்த அவையோ அல்லது மாநிலச் சட்டமன்றமோ, ஒரு அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதாவை, அறிமுகப்படுத்தப்பட்ட அதே கூட்டத்தொடரில் இறுதி வாக்கெடுப்புக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது; நடவடிக்கை எடுக்க வேண்டிய சட்டமியற்றும் மன்றங்கள் முன்னதாகவே செயல்பட்டால் தவிர, அறிமுகப்படுத்தப்பட்ட ஓர் ஆண்டுக்குள்

குடியரசுத்தலைவர் ஏற்பிசைவு அளிக்கக்கூடாது. இந்த நடைமுறையைச் சேர்ப்பதற்கு, அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இல் ஒரு புதிய உட்பிரிவு (2D)–ஐச் சேர்க்கவேண்டும்.

9. நாடாளுமன்றச் சட்டத்தின் வழியாக நிர்ணயிக்கப்பட்ட முறையில், மூன்று மாதங்களுக்கு முன்னதாகப் பொதுமக்களின் கருத்துக்கேட்பு ஆலோசனை நடத்தப்படாமல் எந்த அரசமைப்புச்சட்டத் திருத்த மசோதாவையும் அறிமுகப்படுத்தக் கூடாது. இந்த நடைமுறையைச் சேர்ப்பதற்காக அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இல் ஒரு புதிய உட்பிரிவு (2E) சேர்க்கப்பட வேண்டும்.

10. ஒவ்வொரு 10 அல்லது 15 ஆண்டுகளுக்கும், கட்டாயமாக மறுபரிசீலனை செய்யப்படவேண்டிய, ஏற்கனவே உள்ள அல்லது புதிய அம்சங்களைக் (provisions) கொண்ட ஒரு பட்டியலைச் சேர்க்க வேண்டும். அந்தக் காலத்திற்குள் சட்டம் மீண்டும் இயற்றப்படாவிட்டால் செயலிழந்துவிடும் என்ற நிபந்தனையையும் விதிக்கப்பட வேண்டும். இந்த நடைமுறையைச் சேர்ப்பதற்காக அரசமைப்புச் சட்டப் பிரிவு 368–இல் ஒரு புதிய உட்பிரிவு (2F) சேர்க்கப்பட வேண்டும்.

இயல் 3 – மாநிலங்களின் ஆட்சிநில ஒருமைப்பாடு

1. அரசமைப்புச் சட்டப் பிரிவு 2–ஐத் திருத்தி, புதியபகுதியைச் சேர்த்தல் மற்றும் அத்தகைய பகுதிக்குப் புதிய மாநிலம்/மாநிலங்களை உருவாக்குதல் ஆகியவற்றுடன் அப்பிரிவின் நோக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

2. அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இன் கீழ் செய்யப்படும் அனைத்து ஆட்சிநிலப்பகுதி மறுசீரமைப்புகளும், பாதிக்கப்பட்ட மாநிலங்களின் ஒப்புதல் தேவைப்படுகின்ற, மாநிலம்சார் தனி அரசமைப்புச் சட்டத் திருத்தங்களாகச் செயல்பட வேண்டும். அரசமைப்புச் சட்டப் பிரிவு 4–ஐத் திருத்தி, அதில் உள்ள அரசமைப்புச் சட்டப் பிரிவு 3 பற்றிய குறிப்புகளை நீக்க வேண்டும்.

3. அரசமைப்புச் சட்டப் பிரிவு 3(a)–இன் கீழ் ஒரு புதிய மாநிலத்தை உருவாக்குவதற்கான மசோதாவை அறிமுகப்படுத்திட குடியரசுத் தலைவர் பரிந்துரை செய்வதற்கு, பாதிக்கப்பட்ட சட்டமன்றம் /

சட்டமன்றங்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். ஒரு மாநிலம் ஒப்புதலை நிறுத்திவைத்தால், பாதிக்கப்பட்ட பகுதியில் ஒரு பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்திட குடியரசுத் தலைவர் உத்தரவிடலாம். வாக்காளர்களில் குறைந்தபட்சம் நான்கில் மூன்று பங்கினர் பங்கேற்று அதில் மூன்றில் இரண்டு பங்கினர் அந்த முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்தால் மட்டுமே பொதுமக்கள் வாக்கெடுப்பு வெற்றி பெறும். அத்தகைய மசோதாவிற்கு நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நாடாளுமன்ற ஒப்புதலும் பெறப்பட வேண்டும். இந்தத் தேவைகளை பிரதிபலிக்கும் வகையில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இன் நிபந்தனையைத் திருத்த வேண்டும்.

4. அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இன் நிபந்தனையைத் திருத்தி, தற்போதுள்ள மாநிலங்களின் பகுதிகள் அல்லது எல்லைகளை மாற்றியமைப்பதற்கான அரசமைப்புச் சட்டப் பிரிவு 3(b) முதல் (d) வரையிலான பிரிவுகளின்கீழ் வரும் எந்தவொரு மசோதாவும், பாதிக்கப்பட்ட சட்டமன்றங்களின் ஒப்புதலைப் பெறவேண்டும்; மேலும் நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்குக் குறையாமல் நிறைவேற்றப்பட வேண்டும்; இல்லையெனில் நாடாளுமன்றத்தில் மேற்குறிப்பிட்ட பிரிவுகளின் கீழ் வரும் எந்தவொரு மசோதாவும் அறிமுகப்படுத்தப்படக்கூடாது.

5. அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இன் நிபந்தனையைத் திருத்தி, எந்தவொரு மாநிலத்தின் பெயரையும் மாற்றுவதற்கான பிரிவு 3(e)–இன் கீழ் வரும் மசோதாக்கள், சம்பந்தப்பட்ட மாநிலச் சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் வழியாக மட்டுமே தொடங்கப்பட வேண்டும். மேலும், இது நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு அவையின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்ட அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா வழியாக மட்டுமே நடைமுறைக்கு வரும். கடந்த 25 ஆண்டுகளில் ஒரு மாநிலத்தின் பெயர் மாற்றப்பட்டிருந்தால், அத்தகைய மசோதா எதுவும் முன்மொழியப்படக் கூடாது.

6. அரசமைப்புச் சட்டப் பிரிவு 3–இன் நிபந்தனையைத் திருத்தி, பாதிக்கப்பட்ட ஒரு மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ்

இருக்கும்போது, நாடாளுமன்றத்தில் எந்தவொரு ஆட்சிநிலப்பகுதி மறுசீரமைப்பு மசோதாவும் அறிமுகப்படுத்தப்படுவதைத் தடுக்க வேண்டும்.

7. புதிய ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளை உருவாக்குவதைத் தடை செய்வதற்கும் தற்போதுள்ள ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுக்குப் (டெல்லி தேசிய தலைநகர்ப் பகுதி தவிர) பத்தாண்டுகளுக்கு ஒரு முறை பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்துவதைக் கட்டாயமாக்குவதற்கும் ஒரு புதிய அரசமைப்புச் சட்டப் பிரிவு 3A–ஐ அறிமுகப்படுத்த வேண்டும். அந்த வாக்கெடுப்பில் அண்டை மாநிலத்துடன் இணைவதற்கோ அல்லது ஒரு தனி மாநிலமாக உருவாவதற்கோ வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். பொதுமக்கள் வாக்கெடுப்பு தோல்வியடைந்தால், அது ஒரு ஒன்றிய ஆட்சிநிலப் பகுதியாகவே தொடரும்.

இயல் 4 – மொழி

1. போஜ்புரி, ராஜஸ்தானி, சத்தீஸ்கரி, மகதி போன்ற தனி மொழிகளை இந்தியின் வட்டாரக் கிளைமொழிகள் எனத் தவறாக வகைப்படுத்துவதை முடிவுக்குக் கொண்டு வந்து, மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் உள்ள திரிபுகளை ஒன்றிய அரசு சரிசெய்ய வேண்டும். இந்தி மொழி பேசுபவர்களின் உண்மையான எண்ணிக்கை விழுக்காட்டினை (சுமார் 25 விழுக்காடு, 43.6 விழுக்காடு அல்ல) வெளியிட வேண்டும்.

2. இந்தியாவின் வளமான மொழி மரபைப் பாதுகாக்க, பத்து இலட்சத்திற்கும் அதிகமானோர் தாய்மொழியாகப் பேசும் அனைத்து மொழிகளையும் (இந்தியின் வட்டாரக் கிளைமொழிகள் எனத் தவறாக வகைப்படுத்தப்பட்ட மொழிகள் உட்பட) எட்டாவது அட்டவணையில் சேர்க்க வேண்டும். பாதிக்கப்படக்கூடிய பழங்குடி மொழிகளைச் சேர்ப்பதற்கு ஒரு இலட்சம் பேர் தாய்மொழியாகப் பேசும் மொழிகள் எனக் குறைந்தபட்ச வரம்பை நிர்ணயிக்க வேண்டும். சமஸ்கிருத மொழியுடன் பாலியையும் பிராகிருதத்தையும் எட்டாவது அட்டவணையில் சேர்க்க வேண்டும். ஆங்கிலம் பேசுபவர்கள் குறித்த தரவுகள் எதிர்கால மக்கள்தொகை கணக்கெடுப்புகளில் முறையாகச் சேகரிக்கப்பட்டு, ஆங்கிலமும் எட்டாவது அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டும்.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 350A–இன் வழிகாட்டுதல்படி, குழந்தைகளின் தாய்மொழியில் தொடக்கக்கல்வியினை அதிக எண்ணிக்கையிலான மொழிகளில் வழங்குவதற்கு உள்ளார்ந்த உணர்வுடன் நடைமுறைப்படுத்த வேண்டும்.

3. கடந்த 50 ஆண்டுகளில் ஏறக்குறைய 250 இந்திய மொழிகள் அழிந்துவிட்டன மற்றும் அடுத்த 50 ஆண்டுகளில் மேலும் 400 மொழிகள் அழிந்துபோகும் அபாயத்தில் உள்ளன என்பதைக் கவனத்தில்கொண்டு, ஒன்றிய அரசானது ஒற்றைமொழிக்குச் சிறப்புரிமை அளிப்பதிலிருந்து நகர்ந்து இந்தியாவின் பரந்து விரிந்த மொழி மரபைப் பாதுகாக்க வேண்டும். மொழிச் சிறுபான்மையினருக்கான சிறப்பு அலுவலர் பதவிக்குப் பதிலாக தேசியமொழி ஆணையம் ஒன்றைத் தோற்றுவித்து, மொழிப்பாதுகாப்பு மற்றும் புத்துயிர்ப்புக்கான திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

4. ஒரே நாடு, ஒரே மொழி என்ற மாயையினை இந்தியா கைவிட வேண்டும். உண்மையான ஒற்றுமை ஒரே மொழி என்ற ஒத்ததன்மையிலிருந்து எழுவதல்ல; மாறாக மொழிச் சமத்துவத்திலிருந்து எழுகிறது. ஒரு பொது மொழியானது ஒற்றுமைக்கு உத்தரவாதம் அளிக்காது என உலகளாவிய சான்றுகள் காட்டுகின்றன. ஒரு மொழித் திணிப்பு ஒற்றுமையின்மைக்கு இட்டுச் செல்லும் உறுதியான பாதை ஆகும். மொழி பேசுபவர்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல் இந்தியா, நடுநிலைமை, இயைந்ததன்மை, ஒவ்வொரு மொழிக்கும் மதிப்பளித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் தனது மொழிக்கொள்கையைப் பெற்றிருக்க வேண்டும்.

5. தெளிவான நன்மைகள் இல்லாத, அறிதிறன், நிதி மற்றும் செயல்பாட்டு யதார்த்தங்களைப் புறக்கணிக்கும் மும்மொழித் திட்டத்தினை ஒரு பெரும் கொள்கைத் தோல்வி என்பதை உணர்ந்து, உயர்திறன் வழங்கும் இருமொழி முறைக்கு மாறவேண்டும். பொருளாதார வாய்ப்புக்கும் உலகளாவிய போட்டித்தன்மைக்கும் ஆங்கிலமும், பண்பாட்டுப் பாதுகாப்புக்கும் திறமையான உள்ளூர் நிர்வாகத்துக்கும் வட்டாரமொழி அல்லது தாய்மொழியும் இருக்கவேண்டும். எந்தவொரு கூடுதல் மொழியும் தன்னார்வத் தேர்வாக விருப்பத்தின்பேரில், எண்மக் கருவிகள் (Digital Tools) வழியாக நெகிழ்வுத்தன்மையுடன், கற்றுக் கொள்ளுமாறு இருக்கவேண்டும். நெகிழ்விலாக் கல்விமுறைத் தேவையாக மற்றொரு மொழியைத் திணிக்கக் கூடாது.

6. ஆட்சிமொழிகள் சட்டம்,1963–ஐச் சார்ந்திருக்கும் நிலையைநீக்கி, ஆங்கிலத்தை ஒன்றியத்தின் நிரந்தர ஆட்சி மொழியாக நிலைநிறுத்த அரசமைப்புச் சட்டம் பிரிவு 343–ஐத் திருத்த வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தின் மாதிரியின் அடிப்படையில் மொழிப்பன்மையினை உறுதிப்படுத்திட, எட்டாவாது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளையும் ஆட்சிமொழிகளாக அறிவிக்கவேண்டும். நவீன மொழிபெயர்ப்புக் கருவிகள், இதனை முழுமையாகச் சாத்தியமாக்குகின்றன. புதிதாக எட்டாவது அட்டவணையில் சேர்க்கப்பட்ட மொழிகள் ஒன்றிய அளவில் முழு ஆட்சிமொழித் தகுதியைப் பெறுவதற்குமுன், 15 ஆண்டு இடைமாற்றுக் காலம் வழங்க வேண்டும்.

7. அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 345–ஐத் திருத்தி, 'அல்லது இந்தி' என்ற சொற்களை நீக்கி மாநிலங்கள், தங்கள் மாநிலத்தில் பயன்பாட்டில் உள்ள மொழிகளை மட்டுமே தங்கள் ஆட்சி மொழியாக/மொழிகளாக ஏற்றுக் கொள்ளலாம் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

8. ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்குமிடையேயும், மாநிலங்களுக்கு இடையேயும் நடைபெறும் அனைத்து அலுவல் ரீதியான தகவல்தொடர்புகளுக்கும் ஆங்கிலம் நிரந்தரமான இணைப்பு மொழியாக இருக்கும் என்பதற்கு வெளிப்படையாக உத்தரவாதம் அளிக்க அரசமைப்புச் சட்டப் பிரிவு 346–ஐத் திருத்த வேண்டும். பொருத்தமான இடங்களில் தகவல் பெறுகின்ற மாநிலத்தின் அலுவல் மொழியை ஒரு துணை இணைப்பு மொழியாகப் பயன்படுத்தலாம்

9. அரசமைப்புச் சட்டப் பிரிவு –347ஐ நீக்க வேண்டும். இது இப்போது காலப்பொருத்தமற்றது. மாநில சுயாட்சியை மீறுவது மற்றும் 1950–க்குப் பிந்தைய மொழிச் சூழலில் தேவையற்றது.

10. அனைத்து அரசமைப்புச் சட்ட நீதிமன்றங்களுக்கும் மற்றும் சட்ட வரைவுப் பணிகளின் அனைத்து நோக்கங்களுக்கும் ஆங்கிலத்தை நிரந்தர மொழியாக நிலைநிறுத்த அரசமைப்புச் சட்டப் பிரிவு 348 (1)–ஐத் திருத்த வேண்டும். உயர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும், அதன் தீர்ப்புகள், ஆணைகள், உத்தரவுகள் ஆகியவற்றுக்கும் மாநிலங்கள் தங்கள் ஆட்சி மொழியைப் பயன்படுத்திட அனுமதிக்க, அரசமைப்புச் சட்டப் பிரிவு 348(2)–ஐத் திருத்த வேண்டும். தற்போது ராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ள இந்தச்

சிறப்புரிமையை குடியரசுத்தலைவரின் முன் அனுமதி தேவையின்றி, அனைத்து மாநிலங்களுக்கும் வழங்க வேண்டும். இருப்பினும் அந்த ஆவணங்களுடன் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்பு இணைக்கப்படவேண்டும்.

11. எந்தவொரு ஒன்றிய அரசு அலுவலகமும் ஒரு குடிமகனின் மனுவிற்கான பதிலை அந்த விண்ணப்பத்தின் மொழி, அந்த மாநிலத்தின் அலுவல் மொழி அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அளிக்கவேண்டும். எந்த மொழி குடிமகனுக்குத் தெளிவு, வசதி மற்றும் நியாயத்தை உறுதிப்படுத்துகிறதோ அம்மொழியில் பதிலளிக்க வேண்டும் என்ற வகையில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 350–ஐத் திருத்த வேண்டும்.

12. ஆட்சி மொழி குறித்த ஆணையம் மற்றும் நாடாளுமன்றக்குழு தேவையற்றது என்பதால் அரசமைப்புச் சட்டப் பிரிவு 344–ஐ நீக்க வேண்டும்.

13. இந்தி மொழியை மட்டும் வளர்ப்பதற்கும் பரப்புவதற்கும் பதிலாக, இந்தியாவின் மொழி மரபின் அனைத்து மொழிகளையும் பாதுகாக்கவும், வளர்க்கவும், புத்துயுரளிக்கவும் ஒரு அரசமைப்புச் சட்ட உறுதிப்பாட்டை ஏற்படுத்திட அரசமைப்புச் சட்டப் பிரிவு 351–ஐத் திருத்த வேண்டும்.

14. காலப் பொருத்தமற்ற வகையில் இருக்கும், 'பேசுவதற்கான அனுமதி' என்ற விதியை நீக்கவும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் நாடாளுமன்ற, சட்டமன்ற நடவடிக்கைகளில் எந்தவொரு இந்திய மொழியையும் பயன்படுத்துவதற்கான கட்டுப்பாடற்ற உரிமையை உறுதிப்படுத்தவும், நிகழ்நேர மொழிபெயர்ப்புச் சேவையினைக் கட்டாயமாக்கவும் அரசமைப்புச் சட்டப் பிரிவு 120 மற்றும் 210–ஐத் திருத்த வேண்டும்.

இயல் 5 – ஆளுநர்

1. மாநிலச் சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மூன்று பெயர்களில் ஒருவரை அந்த மாநிலத்தின் ஆளுநராக நியமிக்க, குடியரசுத்தலைவர் செயலாற்றும் வகையில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 155–ஐத் திருத்த வேண்டும்.

2. அரசமைப்புச் சட்டப் பிரிவு 156–ஐத் திருத்தி ஆளுநருக்கு ஒரே ஒரு, நிலையான, புதுப்பிக்க இயலாத ஐந்து ஆண்டு பதவிக் காலத்தை வழங்க, அதன் பிறகு குடியரசுத் தலைவர் அல்லது துணைக் குடியரசுத் தலைவர் பதவி தவிர வேறு எந்த அரசமைப்புச் சட்டப் பதவிக்கும் தகுதியற்றவர் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். பதவிக்காலத்திற்குப் பிறகும் தொடர்வதற்கு அனுமதிக்கும் முறையை நீக்க வேண்டும்; பதவிக்காலம் முடிந்ததும், அடுத்து வருபவர் பதவியேற்கும் வரை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி அப்பொறுப்பை வகிக்க வேண்டும். மாநிலச் சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானத்தின் வழியாக மட்டுமே ஆளுநரை நீக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும்; அத்தகைய தீர்மானத்தின் மீது பதினான்கு நாட்களுக்குள் குடியரசுத் தலைவர் கட்டாயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. தற்போதுள்ளதகுதிகளுடன்கூடுதலாக,ஆளுநர்அந்தமாநிலத்தைச் சாராதவராகவும், பொது வாழ்வில் குறிப்பிட்ட துறையில் சிறந்து விளங்கும் ஆளுமையாக இருக்க வேண்டும்; மேலும் முந்தைய ஐந்து ஆண்டுகளில் எந்தவொரு அரசியல் கட்சியிலும் பதவி வகித்திருக்கவோ அல்லது ஆட்சி நிர்வாகம், சட்டமன்றம் அல்லது நீதித்துறை ஆகியவற்றின்கீழ், எந்த பதவியையும் வகித்திருக்கவோ கூடாது ஆகிய நிபந்தனைகளைச் சேர்க்கும் வகையில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 157–ஐத் திருத்த வேண்டும்.

4. நடுநிலைமையை உறுதிசெய்யவும், அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்துவதைத் தடுக்கவும், கூட்டாட்சி மற்றும் அரசமைப்புச் சட்ட சமநிலையை வலுப்படுத்தவும் ஆளுநர்களின் விருப்புரிமைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் வரம்புகளை ஏற்படுத்தி ஆளுநர்களுக்கான அறிவுறுத்தல்கள் ஆவணம் என்ற புதிய பதின்மூன்றாவது அட்டவணையை அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கவேண்டும்.

5. தேர்தல்கள், அமைச்சரவை பதவி விலகல் அல்லது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆகியவற்றுக்குப் பிறகு ஏற்படும் சூழ்நிலைகளுக்கு, முன்மொழியப்படும் ஆளுநர்களுக்கான வழிகாட்டுதல் ஆவணத்தில் கட்டுப்படுத்தும் கொள்கைகளாகச் சேர்க்கப்பட வேண்டும். ஆளுநர் அரசாங்கத்தை அமைப்பதற்கான ஒரு தலைவரை கீழ்க்காணும் முன்னுரிமை வரிசைப்படி மட்டுமே அழைக்கவேண்டும்: (i) தெளிவான பெரும்பான்மையுடன் கூடிய தேர்தலுக்கு முந்தைய கூட்டணி; (ii) உறுதியான ஆதரவுடன்

கூடிய ஒரு தனிப்பெரும் கட்சி; (iii) அனைத்துக் கூட்டணிக் கட்சிகளும் அமைச்சரவையில் இணையும் தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணி; (iv) வெளியிலிருந்து பெறப்படும் ஆதரவுடன் தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணி. ஆளுநர் தனிப்பட்ட முடிவு அல்லது முறைசாரா மதிப்பீடுகளை நம்பியிருக்கக் கூடாது. ஆட்சி அமைப்பதற்கான அனைத்து உரிமை கோரல்களும் சட்டமன்ற அவையில் மட்டுமே முடிவு செய்ய வேண்டும்; பொதுவாக ஏழு நாட்களுக்குள் சட்டமன்ற அவையில் போட்டியிடும் பலரின் கோரிக்கைகள் மீதான முடிவை எடுக்க வேண்டும். அரிதான நிகழ்வுகளில் மட்டுமே காரணங்களைப் பதிவு செய்துகொண்டு காலம் நீட்டிக்கப்படலாம். நம்பிக்கை வாக்கெடுப்பால் தாமதம் அல்லது மோசடி செய்தல் அனுமதிக்கப்படக் கூடாது.

6. சட்டமன்றத்தைக் கூட்டுதல், ஒத்திவைத்தல் மற்றும் கலைத்தல் தொடர்பாக ஆளுநர்களுக்கான வழிகாட்டுதல் ஆவணத்தில் பின்வரும் கட்டுப்படுத்தும் நெறிமுறைகளைச் சேர்க்க வேண்டும். அரசாங்கம் தெளிவாகப் பெரும்பான்மையினை இழந்தாலன்றி, அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனையின் பேரில் மட்டும் சட்டமன்றத்தைக் கூட்டுதல் அல்லது ஒத்திவைத்தல் நிகழும். நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிலுவையில் இருக்கும்போது அல்லது நம்பகமான, புறநிலைச் சான்றுகள் பெரும்பான்மை இழப்பினை உறுதிசெய்யும்போது மட்டுமே, ஆளுநர் தானாக முன்வந்து நம்பிக்கை வாக்கெடுப்பினை நடத்தலாம். அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் மட்டுமே சட்டமன்றத்தைக் கலைக்க உத்தரவிட வேண்டும். அமைச்சரவை பெரும்பான்மையினை இழந்தால், ஒரு மாற்று அரசாங்கத்தை அமைப்பதற்கான அனைத்துவிதமான சாத்தியக்கூறுகளையும் ஆளுநர் முதலில் ஆராயவேண்டும். சட்டமன்ற நம்பிக்கையினைத் தீர்மானிப்பதற்கு ஒரே வாய்ப்பாக இருக்கும் நம்பிக்கை வாக்கெடுப்பினைத் தவிர்க்கவோ அல்லது முன்கூட்டியே தடுக்கவோ, அவைக் கலைப்பு நடவடிக்கையை ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது.

7. ஆளுநர்களுக்கான வழிகாட்டுதல் ஆவணத்தில் பின்வரும் விதிமுறைகளை இணைக்க வேண்டும். ஆளுநர் அரசமைப்புச் சட்டக் கண்ணியத்தைப் பேண வேண்டும். மாநில அரசாங்கத்தையோ அல்லது சட்டமன்றத்தையோ பொதுவெளியில் விமர்சனம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். எந்தவொரு கருத்தினையும் அரசமைப்புச் சட்ட வழிகள் வாயிலாகத் தனிப்பட்ட

முறையில் தெரிவிக்க வேண்டும். அரசமைப்புச் சட்டப் பிரிவு 176 (ஆளுநரின் சிறப்புரை) நீக்கப்பட வேண்டும்.

8. தமிழ்நாடு மாநிலம் எதிர் தமிழ்நாடு ஆளுநர் வழக்கில் உச்சநீதிமன்றம் வகுத்த வழிமுறைகளின் அடிப்படையில் மாநில மசோதாக்கள் மீது ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவர் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளுக்குக் கட்டாயக் காலக்கெடுவினை விதிக்கவும், குறிப்பிடப்பட்ட காலக்கெடு முடிந்தவுடன் ஒப்புதல் அளித்ததாகக் கருதப்படும் வகையிலும் அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 200 மற்றும் 201–ஐத் திருத்தவும். பிரிவு 200–இன் கீழ் வரையறுக்கப்பட்ட உயர்நீதிமன்றப் பாதுகாப்பு தவிர, ஆளுநர்கள் மாநிலப் பட்டியல் சார்ந்த மசோதாக்களைக் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு ஒதுக்கி வைக்கக் கூடாது. 15 நாட்களுக்குள் செயல்படவேண்டும்; மீண்டும் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு அடுத்த 15 நாட்களுக்குள் ஒப்புதல் அளிக்க வேண்டும். அதே காலக்கெடு பொதுப்பட்டியல் சார்ந்த மசோதாக்களுக்கும் பொருந்தும்; அரசமைப்புச் சட்டப் பிரிவு 254–இன் கீழ் ஒன்றியச் சட்டத்துக்கு முரண்பாடாக இருந்தால் அவற்றை ஒதுக்கி வைக்கலாம். எந்த மசோதாவையும் ஒதுக்கி வைப்பதற்கு முன்பு, எழுத்துப் பூர்வமான சட்ட ஆலோனையினைப் பெற்று, அதற்கான காரணங்களை 60 நாள்களுக்குள் மாநில அரசுக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஒரு அரசமைப்புச் சட்டக் கொள்கையாக, முறையாக இயற்றப்பட்ட மாநிலச் சட்டத்தின் மீது ஆளுநரோ அல்லது குடியரசுத் தலைவரோ நிர்வாகத் தடுப்புரிமை (executive veto) அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது. அரசமைப்புச் சட்டரீதியிலான சந்தேகம் எழும்போது, குடியரசுத் தலைவர் இது தொடர்பான கருத்தினை 30 நாட்களுக்குள் நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். அடுத்துவரும் கூட்டத் தொடரில் அதன்மீது நாடாளுமன்றம் முடிவு செய்ய வேண்டும்; அத்தீர்மானத்திற்கு குடியரசுத் தலைவர் கட்டுப்பட்டவர்.

இயல் 6 – தொகுதி மறுவரையறை

1. 1971 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் அமைந்த மாநிலங்களிடையே தொகுதி ஒதுக்கீட்டிற்கான எண்ணிக்கை முடக்கத்தை 2126–ஆம் ஆண்டு வரையிலோ அல்லது அனைத்து

மாநிலங்களின் மொத்த கருவுறுதல் விகிதங்கள் தேசிய சராசரியின் ஒரு குறுகிய வரம்பிற்குள் (எ.கா ±10 சதவீதம்) ஒருங்கிணையும் வரையிலோ, இவற்றில் எது முன்பாக நடந்தேறுகிறதோ அதுவரை நீட்டிப்பதற்கு அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 81, 82, மற்றும் 170–ஐத் திருத்த வேண்டும். மக்களவைத் தொகுதிகளின் அதிகபட்ச எண்ணிக்கையினை 550 இடங்களையும், சட்டமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையினைத் தற்போதைய அளவிலும் தக்கவைக்க வேண்டும். அதே நேரத்தில் மாநிலத்திற்குள் குறிப்பிட்ட கால இடைவெளியில் தொகுதி மறுவரையறை செய்வதைக் கட்டாயமாக்க வேண்டும். மக்கள்தொகையில் நிலைத்தன்மை அடைந்த மாநிலங்கள் தண்டிக்கப்படாமல் தவிர்க்கப்படவே, 1976–ஆம் ஆண்டின் எண்ணிக்கை முடக்கம் அதே அளவில் நீடிக்க வேண்டும் என்பதற்கான அடிப்படைக் காரணமாகும்.

2. தொகுதி மறுவரையறை ஆணைகள் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களின் குறித்த காலத்திற்குள் முறையாகக் கூர்ந்தாய்வு செய்யப்பட்டபின்பே நடைமுறைக்கு வரவேண்டும் என்றும் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்னரே அரசமைப்புச் சட்ட அதிகார வரம்பு சார்ந்த காரணங்களின் அடிப்படையில் நீதித்துறை சீராய்வுக்கு அனுமதிக்க வேண்டும் என்றும் அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 82, 170 மற்றும் 32(a)–ஐத் திருத்தவேண்டும். அதே சமயத்தில் தேர்தல் நடைமுறைகள் முறையாகத் தொடங்கிய பிறகு நீதிமன்றத் தலையீட்டிற்கான தடை தொடரவேண்டும். இத்தகைய திருத்தங்கள் செய்யப்படும்வரை தொகுதி மறுவரையறை ஆணைகள் வெளியிடப்படுவதற்கு முன்பாக, எந்தவொரு தொகுதி மறுவரையறைச் சட்டமும் நாடாளுமன்ற/சட்டமன்ற கூர்ந்தாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

3. அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 82, 170, 327 மற்றும் ஒன்றியப் பட்டியலின் 72–ஆவது இனம், மாநிலப் பட்டியலின் 37–ஆவது இனம் ஆகியவற்றைத் திருத்தம் செய்து, ஒன்றிய மற்றும் மாநில தொகுதி மறுவரையறை ஆணையங்களை அரசமைப்புச் சட்டரீதியாக தனித்தனியாக ஏற்படுத்த வேண்டும். நாடாளுமன்ற மக்களவைத் தொகுதி மறுவரையறை அதிகாரத்தை ஒன்றிய ஆணையத்திடமும், மாநிலச் சட்டமன்றத் தொகுதி மறுவரையறை

அதிகாரத்தை சுதந்திரமாகச் செயல்படும் மாநில ஆணையங்களிடமும் வழங்க வேண்டும். இந்த ஆணையங்கள் அரசமைப்புச் சட்டரீதியாகக் கட்டாயமாக்கப்பட்ட பல கட்சிப் பிரதிநிதித்துவம் மற்றும் குழு அடிப்படையிலான நியமனங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

4. ஒவ்வொரு மாநிலத்திற்குள்ளும் பட்டியல் இனத்தவருக்கு ஒதுக்கப்பட்ட மக்களவைத் தொகுதிகளையும் அடுத்தடுத்து உள்ள மக்களவைத் தொகுதிகளின் பொருத்தமான தொகுப்புகளுக்குள் பட்டியல் இனத்தவருக்கான சட்டமன்றத் தொகுதிகளையும் பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் மாற்றம் செய்திடும் வகையில் அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 330 மற்றும் 332–ஐத் திருத்த வேண்டும்.

5. வளர்ச்சியடைந்த கூட்டாட்சி நாடுகளை போலவே மாநிலங்களவையில் மாநிலங்களுக்குச் சமமான பிரதிநிதித்துவம் அளிப்பது கூட்டாட்சி சமநிலைக்குத் தவிர்க்க முடியாதது. தற்போதுள்ள ஏற்றத்தாழ்வு – ஒரு மாநிலத்திற்கு ஒன்று முதல் முப்பத்தியொரு இடங்கள் வரை –மாநிலங்களவை, மாநிலங்களின் உண்மையான அவை என்பதை நீர்த்துப் போகச் செய்கிறது. ஒரே சீராக ஒவ்வொரு மாநிலத்திற்கும் நடுநிலை அளவினைப் பிரதிபலிக்கும் வகையில் ஆறு இடங்களை ஒதுக்குவது தர்க்கரீதியிலான சமரசத் தீர்வாகும். தற்போதுள்ள மற்றும் எதிர்காலத்தில் புதிதாக உருவாக்கப்படும் மாநிலங்கள் ஒவ்வொன்றிற்கும் ஆறு இடங்களையும், சட்டமன்றங்களைக் கொண்ட ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுக்கு ஒட்டு மொத்தமாக ஆறு இடங்களையும் ஒதுக்கீடு செய்யும் வகையில், அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 80(1)(b), (2) மற்றும் நான்காவது அட்டவணையினையும் திருத்த வேண்டும். மேலும், நியமன உறுப்பினர்கள் முறையை ஒழித்து, மாநிலங்களவையினை முற்றிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்கள் அவையாக மீட்டெடுத்திட, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 80(1) (a) மற்றும் 80(3)–ஐ நீக்க வேண்டும்.

6. மாநிலங்களவை உறுப்பினர்கள் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மாநிலம் அல்லது ஒன்றிய ஆட்சிநிலப் பகுதியைச் சார்ந்தவர்கள் என்பதை உறுதி செய்திட, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் (4) மற்றும் (5)–ஐத் திருத்த வேண்டும்.

இயல் 7 – தேர்தல்கள்

1. கூட்டாட்சியின் சிறந்த நடைமுறைகளுக்கிணங்க, அபாயத்தைக் குறைக்கவும் நிறுவன மீள்தன்மையினை வலுப்படுத்தவும், ஒன்றிய மற்றும் மாநிலத் தேர்தல் நிர்வாகங்களைத் தனித்தனியே இந்தியா பிரிக்கவேண்டும். மக்களவை, மாநிலங்களவை, குடியரசுத்தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் மற்றும் ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுக்கான தேர்தல்களை மட்டுமே இந்தியத் தேர்தல் ஆணையம் நடத்த வேண்டும். சுயாட்சியுடைய மாநிலத் தேர்தல் ஆணையங்கள் மாநிலச் சட்டமன்றங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்களை நடத்த வேண்டும். மேலும், வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் பராமரிப்பு மீதான முழுக் கட்டுப்பாடும் மாநிலத் தேர்தல் ஆணையங்களிடம் இருக்க வேண்டும். இந்த வாக்காளர் பட்டியலை மேற்பார்வை செய்யும் அதிகாரம் இல்லாமல், இந்தியத் தேர்தல் ஆணையம் ஒன்றியத் தேர்தலுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தச் சீர்திருத்தத்திற்கு அரசமைப்புச் சட்டப்பிரிவுகள் 324, 327, 243K, 243ZA மற்றும் ஏழாவது அட்டவணையினைத் திருத்த வேண்டும் புதிய அரசமைப்புச் சட்டப் பிரிவு 324A–ஐச் சேர்க்க வேண்டும்.

2. அரசமைப்புச்சட்டத்தின்(நூற்றிஇருபத்தியொன்பதாவதுதிருத்தம்) மசோதா, 2024–இல் உள்ள ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற முன்மொழிவு, குறைக்கப்பட்ட பதவிக் காலங்கள், பதவிக் காலம் முடிவுறாத தேர்தல்கள் ஆகியவற்றைக் கட்டாயமாக்குகிறது. மேலும் சட்டமன்றத் தேர்தல்களை ஒத்திவைக்க தேர்தல் ஆணையத்திற்கு வழிகாட்டுதல் இல்லாத விரும்புரிமையினை வழங்குகிறது. இது வாக்குரிமையின் மதிப்பைக் குறைக்கிறது; பொறுப்புடைமையைப் பலவீனப்படுத்துகிறது; கூட்டாட்சி சமநிலையைச் சிதைக்கிறது; நிர்வாகத்தின் தரத்தைக் குறைக்கிறது; மற்றும் ஒன்றிய, மாநில அளவில் அரசமைப்புச் சட்ட முடக்கத்திற்கு வழிவகுக்கும் அபாயத்தை ஏற்படுத்துகிறது. இம்முறையின் நன்மைகள் மிகைப்படுத்தப்பட்டு, கூட்டாட்சி சமநிலைக்கு தீங்கு விளைவிப்பதால், அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பை மீறுகிறது. எனவே, இந்த மசோதா திரும்பப் பெறப்பட வேண்டும்.

3. கட்சிதாவியவர்களைஅமைச்சர்பதவிகளிலிருந்தோஅல்லதுஊதியம் தரும் பதவிகளிலிருந்தோ தடுத்தல் மட்டும் போதுமான தடை

நடவடிக்கையாகாது. ஒரு பயனுள்ள தடை நடவடிக்கையென்பது பதவி இழப்பையும் தாண்டி, அரசியல் வாழ்க்கையில் ஒரு தற்காலிகத் தடையை ஏற்படுத்த வேண்டும். அதன்படி கட்சி மாறியதற்காகத் தகுதி நீக்கம் செய்யப்படும் எந்தவொரு உறுப்பினரும் நாடாளுமன்றம், மாநிலச் சட்டமன்றங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் ஆறு ஆண்டுகள் போட்டியிடத் தகுதியற்றவர்கள் என நிர்ணயித்திட பத்தாவது அட்டவணையின் பத்தி 2– திருத்தப்படவேண்டும். இந்த அணுகுமுறை, தேர்தல் ஊழலுக்காக விதிக்கப்படும் ஆறு ஆண்டு தகுதி நீக்கத்துடன் ஒத்துப்போகிறது; வாக்காளர்களின் நம்பிக்கைகளைக் குலைக்கும் செயலான கட்சி தாவுதலும் அதே அளவு ஒப்பிடத்தக்க வகையில் தீவிரமானதாகும்.

4. உள்கட்சி ஜனநாயகம் மற்றும் தொகுதி பொறுப்புடைமையை வலுப்படுத்திட, கட்சி கொறடாக்களின் கட்டுப்படுத்தும் உத்தரவுகள் நம்பிக்கை மற்றும் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் மற்றும் பண மசோதாக்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட வேண்டும். பத்தி–2 திருத்தப்பட்டு அரசாங்கத்தின் நிலைத்தன்மையினைப் பாதுகாக்கும் அதே வேளையில், கொள்கை மற்றும் சட்டம் குறித்து கட்சிக்குள் நியாயமான கருத்து வேறுபாட்டினை அனுமதிக்க வேண்டும்.

5. மொத்தமாகக் கட்சி தாவுதலைச் சட்டபூர்வமற்றதாக்கிட பத்தாவது அட்டவணையில் பத்தி 4 – 'இணைப்புக்கான விலக்கு' நீக்கப்படவேண்டும்.

6. அரசாங்கங்களைக் கவிழ்ப்பதற்காகப் பயன்படுத்தப்படும் திட்டமிடப்பட்ட பெருமளவிலான பதவி விலகல்களைத் தடுக்க, பத்தாவது அட்டவணையானது அத்தகைய பதவி விலகல்களைக் கட்சி தாவல்கள் என்றே வகைப்படுத்த வேண்டும்; இதன் வழியாக ஆறு ஆண்டுகள் தேர்தல்களில் போட்டியிடத் தடை ஏற்படும். பத்தி 2(1)(a) ஆனது அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் 101(3)(b) மற்றும் 190(3)(b) ஆகியவற்றைவிட மேலோங்கியதாக இருக்கும் வகையில் உரிய விளக்கத்துடன் திருத்தப்பட வேண்டும். இது பத்தாவது அட்டவணையைத் தவிர்க்க அல்லது அரசாங்கத்தை மாற்றியமைக்க முன்கூட்டியே திட்டமிடப்பட்டு ஒருங்கிணைந்து ஏற்படுத்தப்பட்ட செயலின் ஒரு பகுதி ஆகும்; இத்தகைய பதவி விலகல் தாமாக முன்வந்து கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதாகக் கருதப்பட வேண்டும். இந்த சட்டரீதியான புனைவானது, நோக்கத்தினைக் கூர்ந்தாய்வு செய்து,

சாதாரண பதவி விலகல் என்ற முகத்திரையைக் கிழிக்கிறது. மேலும், அர்த்தமுள்ள விளைவுகளுடன் முறையான தகுதிநீக்க வழிமுறையை தூண்டுகிறது.

7. கட்சி சார்பு காலதாமதத்தையும் நடைமுறை முறைகேடுகளையும் தடுத்திட குறிப்பாக சபாநாயகர்களை முடக்கும் செயல்தந்திர உத்திகள், கட்சித்தாவல் வழக்குகளில் தீர்ப்பளிக்கும் அதிகாரம் சபாநாயகரிடமிருந்து பறிக்கப்பட வேண்டும். ஆளும் பெரும்பான்மையினைச் சேர்ந்தவராக இருப்பதால், அந்தப் பெரும்பான்மையின் இருப்பைத் தீர்மானிக்கும் பிரச்சினைகளில் முடிவெடுப்பதற்குப் பொருத்தமற்றவர். அதற்குப் பதிலாக தேர்தல் வழக்குகளுக்காக உருவாக்கப்பட்ட மாதிரியைப் பின்பற்றி, சம்பந்தப்பட்ட மாநில உயர்நீதிமன்றத்திடம் தீர்பளிக்கும் அதிகாரம் ஒப்படைக்கப்பட வேண்டும். கட்சித் தாவல் வழக்குகளில் பல மாநிலங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டிருந்தால், உச்சநீதிமன்றம் அனைத்து வழக்குகளையும் ஒரே உயர்நீதிமன்றத்திற்கு மாற்றி விரைவாகவும் ஒத்த நிலையுடனும் வழக்குகள் விசாரிக்கப்படுவதை உறுதி செய்யலாம். தாமதத்தினை வெறுமனே சட்டமன்றத்திலிருந்து நீதித்துறைக்கு மாற்றுவதைத் தவிர்ப்பதற்காக, இத்தகைய வழக்குகளுக்கு உயர்ந்தபட்ச முன்னுரிமை அளிக்கப்பட்டு, நாள்தோறும் விசாரிக்கப்பட்டு, அறுபது நாட்களுக்குள் தீர்ப்பளிக்கப்பட வேண்டும். தீர்ப்பு நிலுவையில் இருக்கும்போது, ஒரு நடந்து முடிந்த செயலைத் (fait accompli) தடுக்க வேண்டி, குற்றம் சாட்டப்பட்ட கட்சி தாவியவர்கள் தற்காலிக இடைநீக்கம் செய்யப்பட வேண்டும் – அவர்கள் வாக்களிப்பதிலிருந்தும், நம்பிக்கை அல்லது நம்பிக்கையில்லாத் தீர்மானங்களில் பங்கேற்பதிலிருந்தும் அல்லது அமைச்சர் பதவி அல்லது இதர ஊதியம் பெறும் பதவிகளை வகிப்பதிலிருந்தும் தடுக்கப்பட வேண்டும்.உச்சநீதிமன்றத்தில்செய்யப்படும்மேல்முறையீடுகளும் அறுபது நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும். அரசமைப்புச் சட்டத்தின் பத்தாவது அட்டவணையின் பத்தி 6–ஐத் திருத்துவதன் வழியாக இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

8. சட்டமன்ற சிறப்புரிமை இலஞ்சத்திற்குப் பொருந்தாது. கட்சி தாவலைத் தூண்டுகின்ற பணம், ஒப்பந்தங்கள், அமைச்சர் பதவி அல்லது இதர அரசியல் சலுகைகள் ஆகியவற்றைத் தனித்த ஊழல் குற்றங்களாக வரையறுத்து, அரசியல் குதிரை பேரங்களை சட்டம்

வெளிப்படையாகக் குற்றமாக்க வேண்டும். இது தேர்தல் தீர்ப்புகள் சீர்குலைக்கப்படுவதைத் தடுக்கும்.

9. வாக்களிக்கும் உரிமையினை வெளிப்படையாகச் சேர்ப்பதற்கு பகுதி–III திருத்தப்பட வேண்டும். மேலும் வாக்களிப்பதை ஓர் அடிப்படைக் கடமையாகச் சேர்த்திட பகுதி–IV–A திருத்தப்பட வேண்டும்.

10. இந்தியாவின் நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை மற்றும் மாநிலச் சட்டமன்றங்களின் உறுப்பினராவதற்கான வயதினை 25 ஆக ஒரே மாதிரி நிர்ணயித்திட, அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் முறையே 84(b) மற்றும் 173(b) திருத்தப்பட வேண்டும்.

11. விசாரணைக் கைதிகள், காவல்துறை அல்லது நீதிமன்றக் காவலில் உள்ளவர்கள் மற்றும் மேல் முறையீடுகள் நிலுவையிலுள்ள, தண்டனை இறுதி செய்யப்படாத குற்றவாளிகளுக்கும் வாக்குரிமை வழங்குவதற்கு, 1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், பிரிவு 62(5)–ஐத் திருத்த வேண்டும்.

இயல் 8 – கல்வி

1. 1991–ஆம் ஆண்டின் பொருளாதாரச் சீர்திருத்தம்போல (தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல்), கல்வித் துறைக்கும் மிதமிஞ்சிய ஒழுங்குமுறைகளிலிருந்து ஒரு தீர்க்கமான மாற்றம் தேவைப்படுகிறது. தரமான கல்விக்கு, மிதமிஞ்சிய ஒன்றிய ஒழங்குமுறைகளைத் திரும்பப் பெறுவதே ஒரு முன்நிபந்தனை ஆகும். இது மாநிலங்களுக்கும் பொருந்தும். உண்மையான சுயாட்சி இறுதியில் பல்கலைக்கழகங்களிடமே இருக்க வேண்டும். முதல் கட்டமாக, இந்தியாவின் முதல் 100 பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களை பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் இதர ஒழுங்குமுறை அமைப்புகளின் கண்காணிப்புகளிலிருந்து முற்றிலும் விடுவிக்கவேண்டும். இது பத்தாண்டுகளுக்கு ஒரு முறை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு படிப்படியாக மேலும் சில நிறுவனங்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட வேண்டும். இந்தச் சீர்திருத்தத்திற்கு, நிறுவனச் சுதந்திரம், பரிசோதனை மற்றும் புத்தாக்கங்களைச் சாத்தியமாக்கும் வகையில், ஒழுங்குமுறைச் சட்டங்களில் பொருத்தமான திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

2. பொதுப்பட்டியல் தொடர்பான ஐம்பதாண்டு காலப் பரிசோதனை தோல்வியடைந்துவிட்டதால், பொதுப்பட்டியலின் 25–ஆவது இனத்தையும் மாநிலப் பட்டியலின் 11–ஆவது இனத்தையும் திருத்தி, பட்டியல் I–இன் 63, 64, 65, 66 ஆகிய இனங்களின் விதிகளுக்கு உட்பட்டு, தொழில்நுட்பக் கல்வி, மருத்துக் கல்வி, பல்கலைக்கழகங்கள் உட்பட கல்வியைப் பொதுப்பட்டியலிருந்து மீண்டும் மாநிலப்பட்டியலுக்கு மாற்ற வேண்டும். ஒன்றிய அரசு பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் நேரடியாக மேலாண்மை செய்வதை நிறுத்திவிட்டு, அவற்றை மாநிலங்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

3. ஒன்றியப் பட்டியலின் 66–ஆவது இனம் சார்ந்து உச்சநீதிமன்றம் விரிவடைந்த பொருள்விளக்கம் அளித்ததால் ஏற்பட்டுள்ள மாநிலச் சட்டமன்ற அதிகாரத்தின் சிதைவைத் தடுத்து மீண்டும் மாநிலங்கள் அதிகாரம் பெறுவதற்காக ஒரு அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். தரநிலைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்ணயித்தல் என்ற ஒன்றிய அரசின் அதிகாரம் கல்விசார் அளவுகோல்களுக்கு மட்டுமே கண்டிப்பாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் மாணவர் சேர்க்கைகளைக் கட்டுப்படுத்தல், விரிவான பாடத்திட்டத்தை வகுத்தல், சேவை நிலைகளை நிபந்தனைகளை ஒழுங்குபடுத்துதல் அல்லது பல்கலைக்கழங்களின் உள்நிர்வாகத்தில் தலையிடுதல் ஆகியவற்றுக்கு நீட்டிக்கப்படாது என்பதையும் அத்திருத்தம் தெளிவுப்படுத்த வேண்டும்.

4. மாநிலங்களால் நிறுவப்பட்டு நிதியளிக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை முழுவதுமாக மாநிலங்களிடமும் அவற்றின் பல்கலைக்கழகங்களிடமும் மட்டுமே இருக்கவேண்டும். தரங்களைப் பேணுதல் என்ற போர்வையில் இந்த அதிகாரத்தை ஒன்றிய அரசு அபகரிக்கக் கூடாது.

5. தேசியத் தேர்வு முகமை (NTA) கலைக்கப்பட வேண்டும். மேலும், நுழைவுத் தேர்வுகளை நடத்தும் பொறுப்பு, 2018–க்கு முன்னர் அவற்றை நிர்வகித்து வந்த முகமைகளிடமே மீண்டும் ஒப்படைக்க வேண்டும்.

6. துணைவேந்தர் நியமனங்கள் தொடர்பான சர்ச்சையாகத் தோன்றுவது, கூட்டாட்சி மற்றும் மையப்படுத்துதல், மாநிலச் சட்டம் மற்றும் ஒன்றிய ஒழுங்குமுறை அத்துமீறல், கல்வி சுயாட்சி மற்றும்

அதிகாரத்துவக் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு இடையே ஆழ்ந்த அரசமைப்புச் சட்ட மோதலை மறைக்கிறது. பல்கலைக்கழகச் சட்டங்கள் மீதான வழக்குகளில் உச்சநீதிமன்றத்தின் முரண்பாடான தீர்ப்புகளைக் கருத்தில்கொண்டு, ஒரு முழுமையான அரசமைப்புச் சட்ட அமர்வின் முடிவு கட்டாயத் தேவையாகும்.

7. மாநிலப் பல்கலைக்கழகங்களின் வேந்தர் எனும் சட்டப்பூர்வ பொறுப்பிலிருந்து ஆளுநர் விடுவிக்கப்படவேண்டும். மாநிலங்கள் புகழ்பெற்ற, நடுநிலையாளர்களில் ஒருவரை வேந்தராக நியமிக்கச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். உண்மையான அரசமைப்புச் சட்டச் சிக்கல் ஏதும் இல்லாத நிலையில், மசோதாக்களை நிறுத்தி வைப்பதாலோ அல்லது குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதன் வழியாகவோ ஆளுநர்கள் இத்தகைய சீர்திருத்தங்களுக்குத் தடையாக இருக்கக் கூடாது.

இயல் 9 – சுகாதாரம்

1. ஒன்றிய நிதி ஆதரவுத் திட்டங்களுக்கான செலவுகளில் குறைந்தபட்சம் 80 விழுக்காட்டை ஒன்றிய அரசு ஏற்கவேண்டும். மற்ற அனைத்து உதவிகளுக்கும், நிர்வாகக் கட்டுப்பாடற்ற தொகுப்பு மானியங்கள் வழங்கப்பட வேண்டும். இதற்கு மாற்றாக ஒன்றிய அரசு முன்னெடுக்கும் திட்டங்களின் பட்டியலை (ஒன்றிய அரசு பகுதி அளவில் நிதி அளிக்கும்) மாநிலங்களுக்கு வழங்கவேண்டும்; அதிலிருந்து மாநிலங்கள் தங்களுக்குத் தேவையான திட்டங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

2. மாநிலத்தின் அதிகார வரம்பிற்குட்பட்ட சுகாதாரத் துறையில் ஒன்றிய அரசு தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும். ஒன்றிய அரசின் திட்டங்கள் இந்தி மற்றும் ஆங்கிலத்துடன் மாநில மொழிகளிலும் இணைந்து பெயரிடப்பட வேண்டும். தேசிய மருத்துவ நிறுவனங்கள் கற்பித்தல் மற்றும் நிர்வாக மொழியாக ஆங்கிலத்தைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டும். ஆயுஷ் அமைச்சகமானது அனைத்து ஆயுஷ் மருத்துவ முறைகளுக்கும் சமஅளவில் நிதி வழங்கிட வேண்டும்.

3. வளர்ச்சியடைந்த அனைத்து கூட்டாட்சி நாடுகளும் மருத்துவக் கல்வியைப் பொது சுகாதாரத்திற்குப் பொறுப்பான நிர்வாக அடுக்குடன் சீரமைவு செய்துள்ளதுபோல, நமது அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டு தொழில்நுட்பக்கல்வி மருத்துவக்கல்வி, பல்கலைக்கழகங்கள் உட்பட கல்வியைப் பொதுப்பட்டியலின் 25–ஆவது இனத்திலிருந்து மாநிலப்பட்டியலின் 11–ஆவது இனத்திற்கு மாற்றி, 1976–ஆம் ஆண்டிற்கு முந்தைய நிலையை மீட்டெடுக்க வேண்டும். ஒன்றியப்பட்டியல் இனம் 66–இன் கீழ் ஒன்றிய அரசின் பங்கானது, மாநில நிர்வாகம் அல்லது பல்கலைக்கழக சுயாட்சியில் தலையிடாமல், பரந்த நோக்கிலான குறைந்தபட்ச தரநிலைகள் மற்றும் மேம்பட்ட ஆராய்ச்சிக்கு நிதி வழங்குதல் ஆகியவற்றுக்கு மட்டுமே என மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

4. வெற்றிகரமான கூட்டாட்சிநாடுகள் பலவீனங்களை மறைப்பதற்கு முயற்சி செய்து தலை மேற்கொள்ளாமல் மாநிலங்களைப் பலப்படுத்துகின்றன. மாநிலங்கள் உலகளாவிய நாடுகளுடன் ஒப்பிடக்கூடிய வழக்கமான அளவுகோல்களுடன் சுகாதாரச் சேவைகளை வழங்குவதால், ஒன்றிய அரசானது மாநிலங்கள் சுகாதாரச் சேவைகளை வழங்குவதற்கு நிதியினை அதிகரிக்க வேண்டும். ஒன்றிய அரசானது, தேசிய செயல்திறன் தேவைப்படும் முக்கிய துறைகளான ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, மேம்பட்ட ஆய்வகங்கள், கண்காணிப்பு மற்றும் எல்லைப்புற சுகாதாரம் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

5. கூட்டுறவுக் கூட்டாட்சியை மீட்டெடுப்பதற்காக, தேசிய மருத்துவ ஆணையச் சட்டம், 2019 பின்வருமாறு திருத்தப்பட வேண்டும்: (1) சுழற்சிமுறையினை நீக்கிவிட்டு அனைத்து மாநிலங்களுக்கும், சட்டமன்றங்களுடன் கூடிய யூனியன் பிரதேசங்களுக்கும் நிரத்தரப் பிரதிநிதித்துவம் வழங்குதல்; (2) மாநில உள்கட்டமைப்பு, மாணவர் சேர்க்கைகள் மற்றும் மனிதவளத் திட்டமிடல் போன்றவற்றில் மருத்துவ ஆலோசனைக் குழுவுக்குக் கட்டுப்படுத்தும் அதிகாரம் வழங்குதல் – பதிவு செய்யப்பட்ட காரணங்கள் மற்றும் பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் மட்டுமே பிறழ்வுகள் அனுமதிக்கப்படுதல்; மற்றும் (3) நான்கு தன்னாட்சி வாரியங்களின் வட்டாரக் கிளைகளை ஏற்படுத்துவதன் வழியாக ஒழுங்குமுறைகளைப் பரவலாக்குதல்.

6. அனைத்துத் துறைகளிலும், கல்லூரி மற்றும் தொழில்முறை வெற்றியை ஒரே ஒரு முறை எழுதப்படும் நுழைவுத் தேர்வுகளை விட உயர்நிலைப் பள்ளியில் பெறும் சராசரி தரப்புள்ளிகளே (GPA) சிறப்பாகக் கணிக்கின்றன என்பதை ஆராய்ச்சி முடிவுகள் தொடர்ந்து காட்டுகின்றன. மாநில அளவிலான தேர்வு சீர்திருத்தங்கள் மற்றும் புள்ளியியல் முறைப்படுத்துதல் வழியாக, மையப்படுத்தப்பட்ட தேர்வுமுறையின் சமூக, உளவியல் மற்றும் கல்வி ரீதியான பாதிப்புகள் இல்லாமல், தகுதியை நன்றாக மதிப்பிட முடியும். எனவே, ஒன்றிய அரசானது மாநிலங்களில் நடத்தப்படும் நிறுவனங்களுக்கு நீட்–இளநிலை போன்ற தேசிய நுழைவுத் தேர்வுகளைக் கைவிட வேண்டும். தேசிய நுழைவுத் தேர்வுகளின் தீங்குகள் மற்றும் சந்தேகத்திற்குரிய முன்கணிப்பு செல்லத்தகு நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஒன்றிய நிறுவனங்களுக்குக்கூட நெருக்கடியான தேசிய அளவிலான தேர்வுகளைத் தொடர்ந்து நம்பியிருப்பதை அவசரமாக மறு பரிசீலனை செய்வது அவசியமாகிறது.

7. தேசியமருத்துவ ஆணையச் சட்டம் 2019–ஐத் திருத்தி அதன் பிரிவு 14 நீக்கப்பட்டு அனைத்து நிலைகளிலும் (இளநிலை, முதுநிலை, உயர்சிறப்பு) நீட் தேர்வு ஒழிக்கப்பட வேண்டும். பொது சுகாதாரத் தேவைகளுக்கு ஏற்ப மாநிலங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர் சேர்க்கை உரிமையினை மீட்டளிக்க வேண்டும்.

8. தேசிய மருத்துவ ஆணையச் சட்டம், 2019–ஐத் திருத்தி அதன் பிரிவு 15–ஐ நீக்கி NExT தேர்வை ரத்து செய்ய வேண்டும். மருத்துவப் பயிற்சி முறையினைச் சிதைத்தல், பயிற்சிமையக் கலாச்சாரத்தை வேரூன்றச் செய்தல், உரிமம் வழங்குதலை மையப்படுத்துதல் ஆகியவற்றின் வழியாக கூட்டாட்சி மருத்துவக் கல்வியைப் பலவீனப்படுத்துவதால் இத்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

9. மருத்துவ உள்கட்டமைப்பு பற்றாக்குறைகள் உள்ள பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட அகில இந்திய ஒதுகீட்டு முறையினை மாற்றி, மாநிலங்கள் தாமாக முன்வந்து தீர்மானிக்கும் இடஒதுக்கீட்டினைச் செயல்படுத்த வேண்டும். இதற்காக தேசிய மருத்துவ ஆணையச் சட்டம், 2019–ஐத் திருத்தவேண்டும்.

இயல் 10 – சரக்கு மற்றும் சேவை வரி

1. *அரசமைப்புச்சட்டப் பிரிவு 279A–இன்கீழ் குறைவெண் வரம்பு (Quorum) மற்றும் வாக்களிப்பு முறையினை மறுசமநிலைப் படுத்துதல்*

சரக்கு மற்றும் சேவை வரி அவையில் (GST Council) கூட்டாட்சி சமநிலையினை மீட்டெடுக்க, அரசமைப்புச் சட்டப்பிரிவு 279–இன் உட்பிரிவுகள் (7) மற்றும் (9)–இல் குறிப்பிட்ட சில திருத்தங்கள் தேவைப்படுகின்றன. இதன் நோக்கம், முடிவெடுக்கும் செயல்முறையினை முடக்குவது அல்ல; ஒருபக்கச் சார்பினைக் கட்டுப்படுத்துவது, உண்மையான ஒருமித்த கருத்தினை வலியுறுத்துவது மற்றும் கூட்டுறவுக் கூட்டாட்சி குறித்த அரசமைப்பு வாக்குறுதியுடன் அவையை மீண்டும் சீரமைப்பதாகும்.

வாய்ப்பு அ: மேலதிக குறைவெண் வரம்பு மற்றும் நிலையான வாக்களிப்பு அடிப்படை

தற்போதைய 50 விழுக்காடு குறைவெண் வரம்பானது, திட்டமிட்ட வருகையின்மைகளுக்கு வழிவகுக்கிறது: ஒன்றியத்தின் ஆதிக்கத்தை மிகவும் அதிகமாக்குகிறது. ஒரு புறக்கணிப்பை வெறும் கோட்பாட்டியலான 'இறுதி ஆயுதம்' என்பதிலிருந்து, நம்பகமான அரசமைப்புப் பாதுகாப்பாக மாற்றுவதற்கு, குறைவெண் வரம்பானது மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்காக (33 உறுப்பினர்களில் 22 பேர்) உயர்த்தப்பட வேண்டும். இது, அரசியல்ரீதியாக, வாய்ப்புள்ள மாநிலங்களின் குழுவின் வருகையின்மையானது நடவடிக்கைகளை நிறுத்தி, உடன்பாடு காண்பதற்கு வழிவகுப்பதை உறுதி செய்கிறது.

இதேபோல, வாக்களிப்பு முறையானது 'பதிவான வாக்குகள்' என்பதிலிருந்து மொத்த உறுப்பினர்கள் என மாற வேண்டும். இம்முறையானது, உறுப்பினர்களின் வருகையினைப் பொருட்படுத்தாமல், ஒன்றியத்திற்கு 33.33 விழுக்காடு, மாநிலங்களுக்கு ஒட்டுமொத்தமாக 67.33 விழுக்காடு என்ற நிலையான மதிப்பைக் கொண்டிருக்கும். இதன் விளைவாக, ஒவ்வொரு மாநிலமும் 2.15 விழுக்காடு என்ற நிலையான மதிப்பைப் பெறும். மொத்த வாக்குகளில் 75 விழுக்காடு தேவையென்பதால், ஒன்றிய அரசானது குறைந்தபட்சம் 20 மாநிலங்களின் இசைவினைப் பெற வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

அவையின் குறைவெண் வரம்பு மற்றும் ஒருமித்த கருத்துக்கான வரம்பெல்லைகள் நேர்படுத்தப்படுவதால், தன்னிச்சையான நடவடிக்கைகளை அமைப்பு ரீதியாகக் கடினமாக்கும்.

வாய்ப்பு ஆ: வீதாச்சார மறு சமநிலை – கூட்டாண்மை மாதிரி

ஏற்கனவே உள்ள குறைவெண் வரம்பு மற்றும் பதிவான வாக்குகள் என்ற அமைப்புமுறை தக்கவைக்கப்பட்டால், ஒன்றியத்தின் நடைமுறைத் தடையுரிமையை (defacto veto) நீக்கிட, வாக்களிப்பு அமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும். ஒன்றியத்தின் வாக்குப் பங்கினை 33.33 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாகக் குறைக்க வேண்டும்; மாநிலங்களின் கூட்டு மதிப்பினை 80 விழுக்காடாக அதிகரிக்க வேண்டும். ஒரு முடிவைத் தடுப்பதற்கான சிறுபான்மை வரம்பு 25 விழுக்காடாக இருப்பதால், இது ஒன்றியத்திற்கு இருக்கும் ஒருதலைப்பட்சமான தடையுரிமை அதிகாரத்தை நீக்கி, கூட்டணியாகச் செயல்படுவதைக் கட்டாயமாக்குகிறது.

மேலும், தற்போதைய 'ஒரு மாநிலம், ஒரு வாக்கு' என்ற குறைபாட்டினை நீக்கி அதற்குப் பதிலாக மக்கள் தொகை, முந்தைய ஆண்டுகளில் குறைந்தபட்ச GST வருவாய் பங்களிப்பு, அல்லது 50:50 கலவை ஆகியவற்றின் அடிப்படையில் மாநிலங்களின் விலக்கு மதிப்பு ஒதுக்கீடு செய்ய வேண்டும். இந்த மதிப்பானது, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்தச் சீர்திருத்தம் பெரிய மாநிலங்களுக்கும் சிறிய ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளுக்கும் இடையே உள்ள தவறான சமநிலையைச் சரிசெய்கிறது; மேலும், நிதிப் பங்களிப்பிற்கு (வரி வருவாய்) ஏற்றவாறு வாக்களிக்கும் அதிகாரத்தை வழங்குகிறது.

வாய்ப்பு இ: ஒரு உறுப்பினர் ஒரு வாக்கு

சரக்கு சேவை வரி அவை யானது, மிகவும் சமமற்ற அமைப்புகள் சமமாக நடத்தப்படுவதை பொறுத்துக்கொள்ளுமானால், ஒன்றியத்திற்கு மேலான வாக்களிக்கும் உரிமையை வழங்குவதற்கு எந்தக் கொள்கை அடிப்படையிலான காரணமும் இல்லை. இந்த மாதிரியின் கீழ், ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தலா ஒரு வாக்கு இருக்கும்; குறைவெண் வரம்பு 50 விழுக்காடாக நீடிக்கும்; முடிவுகள் எடுப்பதற்கு, கலந்துகொண்டு வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு தேவைப்படும். இந்தச் சீர்திருத்தம் சரக்கு

சேவை வரி அவையை முழுமையாக ஜனநாயகப்படுத்தி, ஒன்றியம் ஒரு சமமான பங்காளர் என்பதை உறுதிசெய்யும்.

வாய்ப்பு ஈ: சிறுபான்மையினரின் பெரும்பான்மை என்கிற பாதுகாப்பு வாய்ப்பு 'இ'–ஐச் செம்மைப்படுத்தும் இந்தமாதிரியானது, ஓர் இரட்டைப் பெரும்பான்மைத் தேவையினை அறிமுகப்படுத்துகிறது.

i. கலந்து கொண்டு வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு ஒப்புதல், மற்றும்

ii. கலந்துகொண்டு வாக்களிக்கும் ஒத்திசைவற்ற மாநிலங்களின் எளிய பெரும்பான்மை ஒப்புதல்

இந்தச் சீர்திருத்தம் ஒரு தலைச்சார்பான ஆதிக்கத்துக்குத் தடையாகச் செயல்படுகிறது. மேலும் சரக்கு சேவை வரிக் கொள்கையானது அரசியல் கட்சிகளைக் கடந்த ஒருமித்த கருத்தினைப் பெறுவதை உறுதி செய்கிறது.

2. சரக்கு சேவை வரி வீதக் கொள்கையினை நிலைப்படுத்துதல்

சரக்கு சேவை வரி அவை வரிவீத நிர்ணயத்தில் கணிக்கக்கூடிய தன்மை, எளிமை மற்றும் ஒழுங்கு ஆகியவற்றை நிறுவனப்படுத்த வேண்டும்.

முதலாவதாக, உலகளவில் பயன்படுத்தப்படும் இணக்கம் செய்யப்பட்ட அமைப்புமுறை (HSN) வகைப்பாட்டின் அடிப்படையில் 'ஒரு பொருளுக்கு ஒரு வரிவீதம்' என்ற கண்டிப்பான கொள்கைகளைச் செயல்படுத்த வேண்டும். இதன் மூலம் சிப்பமிடுதல் (Packaging), வடிவம் ஆகியவற்றின் அடிப்படையிலான செயற்கையாக உருவாக்கப்படும் வேறுபாடுகளை நீக்கி வழக்குகளைக் குறைத்து வரிக் கொள்கையினை வணிக நடப்புக்கேற்ற வகையில் சீரமைக்க இயலும்.

இரண்டாவதாக, அனைத்து வரிவீத மாற்றங்களும் ஒரே ஒரு ஆண்டு வீத அட்டவணையாக ஒருங்கிணைக்கப்பட்டு, ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், ஆண்டுக்கு ஒரு முறை அறிவிக்கப்பட வேண்டும். இது சீர்குலைவை ஏற்படுத்தும் வகையில், அவ்வப்போது செய்யப்படும் தற்காலிக மாற்றங்களை முடிவுக்குக் கொண்டு வந்து, சரக்கு சேவை வரிக்கு முந்தைய 'நிதிநிலை அறிக்கை நாள்' கால நிதி ஒழுங்கை இது மீட்டெடுக்கும். இது விலை நிர்ணயம் மற்றும் ஒப்பந்தங்களுக்கு உறுதியை வழங்கி, மாநிலங்களின் வருவாய் முன்கணிப்பினை மேம்படுத்தும்.

மூன்றாவதாக, ஆண்டு வீத அட்டவணை தயாரிப்பு முறையானது, இரண்டு வழிமுறைகளைக் கொண்ட ஒரு நெறிமுறையினைப் பின்பற்ற வேண்டும்.

i. நடைமுறைச் சீர்திருத்தங்கள் (ITC விலைப்பட்டியல், இணக்கம்) ஒரு வெள்ளை அறிக்கையாக, 90 நாட்கள் ஆலோசனைக் காலத்துடன், டிசம்பர் மாதத்தில் வெளியிடப்பட வேண்டும்.

ii. சந்தை சார்ந்த சூதுகளைத் தவிர்க்க, கட்டண வீத மாற்றங்கள் ஒரு நிரந்தரமான தன்னாட்சி பெற்ற வரி வீத சீராய்வுக் குழுவால் ரகசியமாகச் சரிபார்க்கப்பட வேண்டும். இறுதி வீதங்கள் மார்ச் 31 அன்று அறிவிக்கப்பட வேண்டும்.

இறுதியாக, வரிவீத மாற்றங்கள் ஒரு நிலையான அட்டவணைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதால், சரக்கு சேவை வரி அவையானது, நிர்வாகத்தில் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும்; சரக்கு சேவை வரி கட்டமைப்பினை வலுப்படுத்துதல், வரி ஏய்ப்புத் தடுப்பு உத்திகளை உருவாக்குதல், முரண்பாடுகளுக்குத் தீர்வு காணுதல், விளக்கமாக வழிகாட்டுதல், முறையான செயல்பாட்டினைக் கண்காணித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும். அவ்வப்போது சமாளித்து எதிர்வினையாற்றுதல் என்ற நிலையிலிருந்து நீடித்தக் கட்டமைப்பை உருவாக்குதல் என்ற நிலை நோக்கி நகர வேண்டும்.

3. சரக்கு சேவை வரியில் சட்டமியற்றும் துறையின் மேலாதிக்கத்தை மீட்டெடுத்தல்

மோஹித் மினரல்ஸ் வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பினை நடைமுறைப்படுத்துவதற்கும், அரசமைப்புச் சட்டப்பிரிவு 265–இன் கட்டளையினை மீட்டெடுப்பதற்கும், சரக்கு சேவை வரி அவையின் பரிந்துரைகளின் கட்டுப்படுத்தாத தன்மையினை சந்தேகத்துக்கு இடமின்றி சட்டப்பூர்வமாக்கி வரையறுக்க வேண்டும்.

முதலாவதாக, அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A(4) திருத்தப்பட்டு, சரக்கு சேவை வரி அவையின் முடிவுகள் ஆலோசனைக்குரியவை என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும்; அரசமைப்புச் சட்டப் பிரிவு 246–இன் கீழ் ஒன்றியம் மற்றும் மாநிலங்களின் சட்டமியற்றும் அதிகாரங்களுக்கு இவை உட்பட்டவை என்றும் தெரிவிக்க வேண்டும்.

இரண்டாவதாக, சட்டமியற்றும் அவையின் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் வகையில், விதிகளை உருவாக்குவதற்கு சரக்கு சேவை வரி அவையின் பரிந்துரைகளைச் சார்ந்திருக்கும்படி செய்யும் நிபந்தனைகளை நீக்கிட, ஒருங்கிணைக்கப்பட்ட சரக்கு சேவை வரி (CGST), ஒன்றிய சரக்கு சேவை வரி (UGST), ஒன்றிய ஆட்சிநிலப்பகுதி சரக்கு சேவை வரி (UTGST) மற்றும் மாநில சரக்கு சேவை வரி (SGST) சட்டங்களில் அதற்கேற்ற திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். ஆளுநர்களும், குடியரசுத் தலைவரும் அத்தகைய மாநில சரக்கு சேவை வரி திருத்தங்களுக்கு ஒப்புதல் அளிக்க மறுக்கக் கூடாது. அவ்வாறு செய்வது மோஹித் மினரல்ஸ் வழக்கில் நிலைநிறுத்தப்பட்ட அரசமைப்பு நிலையினைச் சீர்குலைக்கும்.

இறுதியாக, மாநிலங்களுக்குரிய வரிவீத மாறுபாடுகளைத் தொழில்நுட்ப அளவில் ஆதரிக்கும் வகையில் சரக்கு சேவை வரி வலையமைப்பு (GSTN) மறுவடிவமைப்பு செய்யப்பட வேண்டும். மென்பொருள் வடிவமைப்பு அரசமைப்பு அதிகாரத்தை மீறாமல் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

4. மாநிலங்கள் சரக்கு சேவை வரி அவையத்துக்குத் தகவல் தெரிவித்து, மாநில சரக்கு சேவை வரி விகிதங்களை ±2 விழுக்காடு கொண்டிருக்க வேண்டும். அரசமைப்புக் கூட்டாட்சித்துவத்துடன் கூடிய சந்தை ஒத்த தன்மையினை ஒத்திசைவு செய்து, மாநில நிதித் தன்னாட்சியைப் பாதுகாக்க வேண்டும்.

5. சரக்கு சேவை வரி அவையின் தலைமைப் பொறுப்பினை ஒன்றிய மற்றும் மாநில நிதி அமைச்சர்களிடையே ஆண்டுதோறும் சுழற்சி முறையில் அளிக்கும் வகையில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 279 (2)–ஐத் திருத்த வேண்டும். இதன்மூலம் பகிரப்படும் தலைமைத்துவம் மற்றும் கூட்டுறவுக் கூட்டாட்சித்துவம் உறுதி செய்யப்படும்.

6. ஒன்றிய நிதியமைச்சகத்திடமிருந்து நிர்வாகரீதியாகத் தன்னாட்சி பெற்ற, ஒரு சுதந்திரமான, நியாயமான சரக்கு சேவை வரி அவைச் செயலகத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தச் செயலகத்துக்கென ஒரு தனியான பொதுச் செயலாளர் ஒருவரை, ஒன்றிய மாநில அரசு கூட்டுச் செயல்முறை மூலம் ஒரு குறிப்பிட்ட நிலையான காலத்திற்குத் தலைவராக சரக்கு சேவை வரி அவையில் நியமிக்க வேண்டும்; அவர் சரக்கு சேவை வரி அவைக்கு மட்டுமே பதில் அளிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். இந்தச் செயலகத்துக்கான

பணியாளர்கள் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளில் இருந்து சமஅளவில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; துறைசார் வல்லுநர்களும் நியமிக்கப்பட வேண்டும் தரவுப் பகுப்பாய்வு, சட்ட ஆராய்ச்சி, வருவாய் முன்கணிப்பு மற்றும் சம்பந்தப்பட்டவர்களுடனான கலந்தாலோசனை ஆகியவற்றிற்குத் தனித்தனிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். கூட்டு உரிமைப் பொறுப்பினை வலுப்படுத்தும் வகையில், செயல்பாட்டுச் செலவுகள் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் சமமாகப் பகிரப்பட வேண்டும்.

7. சரக்கு சேவை வரி தொழில்நுட்பக் குழுக்களின் செயல்பாடுகளில் உள்ள ஒளிவு மறைவினை நீக்குவதற்கு – பெரும்பாலான குழுக்கள் ஒன்றிய நிதி அமைச்சகத்தின் நடைமுறை நீட்சிகளாகச் (defacto) செயல்படுகின்றன – சரக்கு சேவை வரி அவை தற்காலிக நிர்வாக ஏற்பாடுகளை நீக்கி, அதற்குப் பதிலாக அவற்றின் அமைப்பு மற்றும் செயல்பாடுகளை நிர்வகிப்பதற்கு ஒரு முறையான, விதிகளுடன் கூடிய சாசனத்தை உருவாக்க வேண்டும்.

ஒவ்வொரு குழுவும் 15 மாநிலப் பிரதிநிதிகள் மற்றும் 2 ஒன்றியப் பிரதிநிதிகளுடன் 17 உறுப்பினர்களுக்கு மிகாமல் நிலையான ஒரு அமைப்பைக் கொண்டிருக்க வேண்டும். அவர்களுக்கு மூன்றாண்டுகள் நிலையான பதவிக்காலம் வழங்கப்பட வேண்டும். நிதி நடப்புநிலைமையின் அடிப்படையில் முடிவு எடுத்தலை நிலைப்படுத்த, முந்தைய மூன்றாண்டுகளின் மாநில சரக்கு சேவை வரி வருவாய் வசூலில் முதல் 5 இடங்களைப் பிடித்த மாநிலங்கள் தானாகவே அனைத்து குழுக்களிலும் உறுப்பினர்களாக இடம் பெற வேண்டும். மீதமுள்ள 10 மாநில இடங்கள் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் இதர மாநிலங்களுக்கு மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். வட்டாரச் சமநிலை மற்றும் சட்டமன்றத்துடன் கூடிய ஒன்றிய ஆட்சிநிலப் பகுதிகளில் குறைந்தபட்சம் ஒரு பிரதிநிதித்துவம் ஆகியவை உறுதிப்படுத்த வேண்டும். நிர்வாகத் தொடர்ச்சி மற்றும் நுட்பமான அறிவுக்காக சரக்கு சேவை வரி செயலகத்திலிருந்து, வாக்களிக்கும் உரிமை இல்லாத அதிகபட்சம் 3 வல்லுநர்கள் ஆலோசனைகள் வழங்குவதற்கு மட்டும் இணைத்துக் கொள்ளப்படலாம்.

குழுவின்முடிவுகளுக்கு,கூட்டத்தில்கலந்துகொண்டுவாக்களிக்கும் உறுப்பினர்களில் நான்கில் மூன்று பங்கு பெரும்பான்மை தேவைப்பட வேண்டும். இந்தப் பெரும்பான்மையானது ஒன்றிய

அரசின் பிரதிநிதிகள் மற்றும் வருவாய் ஈட்டுதலில் முதலில் உள்ள 5 பெரிய மாநிலங்கள் ஆகிய இரு தரப்பு இசைவும் இருக்க வேண்டும் என்ற முக்கியமான பாதுகாப்பு அம்சத்திற்கு உட்பட்டது. இவர்களில் எவருக்கேனும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், அந்த கருத்து வேறுபாடானது, பகுப்பாய்வு செய்யப்பட்ட அனைத்து விதமான கொள்கை வாய்ப்புகளுடன், சரக்கு சேவை வரி அவைக்கு முறையாகக் கொண்டுசெல்லப்பட்டு இறுதி அரசியல் முடிவு எடுக்கப்பட வேண்டும்.

8. சரக்கு மற்றும் சேவை வரி வலையமைப்பானது (GSTN) ஒருங்கிணைக்கப்பட்ட கட்டண இடைமுகம் (UPI) அமைப்பின் கொள்கைகளின் அடிப்படையில் கூட்டமைக்கப்பட்ட எண்மக் கட்டமைப்பாக மாற்றுதல்: ஒருங்கிணைக்கப்பட்ட சரக்கு சேவை வரி தீர்வு மற்றும் விலைப்பட்டியல் சரிபார்ப்பிற்காக ஒரு மையப்படுத்தப்பட்ட பின்தளம் (centralised back-end) மற்றும் பகுப்பாய்வு, ஆராய்ச்சி மற்றும் செயலாக்கத்திற்காக மாநிலங்களின் அதிகார வரம்பிற்குட்பட்ட தரவுகளுக்கு முழுமையான நிகழ்நேர அணுகலை வழங்கும், மாநிலங்களால் இயக்கப்படும் முன்தள (front-end) அமைப்புகளை உருவாக்க வேண்டும்.

9. சரக்கு சேவை வரியானது நம்பிக்கை அடிப்படையிலான சுயமதிப்பீட்டு முறையிலிருந்து, "வடிவமைப்பிலேயே உறுதி செய்யப்பட்ட வரி இணக்கம்" (compliance by design) முறைக்கு மாற வேண்டும்: சரக்கு சேவை வரி தாக்கல்-3B-யினை (GSTR-3B) படிப்படியாக நீக்குதல், சரக்கு சேவை வரி தாக்கல் – 1/2/3 கட்டமைப்பினை முழுமையாக மீண்டும் கொண்டு வருதல், உள்ளீட்டுவரிவரவினை (Input Tax Credit) அமைப்புக்குள்ளேயே கொண்டுவருதல் – விற்பனையாளர் வரியைச் செலுத்தி வாங்குபவர் அந்தப் பரிவர்த்தனையை உறுதிசெய்த பின்பே இந்த வரவு அனுமதிக்கப்பட வேண்டும்.

10. சிதறியுள்ள சரக்கு சேவை வரி மேற்பார்வைக் குறைபாட்டைச் சரிசெய்ய நாடாளுமன்ற மற்றும் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கூட்டு நிலைக்குழுவை உருவாக்குவதற்கு அரசமைப்புச் சட்டப் பிரிவு 279-இல் புதிய உட்பிரிவு (12)-ஐச் சேர்க்க வேண்டும். இக்குழு சரக்கு சேவை வரிக் கொள்கையைக் கண்காணிக்கவும், அதன் நிதிசார் மற்றும் சமூக – பொருளாதாரத் தாக்கங்களை மதிப்பீடு செய்யவும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

11. ஒரு சுதந்திரமான, சட்டப்பூர்வமான சரக்கு சேவை வரி பிணக்குத் தீர்வு ஆணையத்தை உருவாக்கும் வகையில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 279A(II)–ஐத் திருத்த வேண்டும். சரக்கு சேவை வரி தொடர்பான பிணக்குகளைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தீர்வு காண்பதற்கு, ஒரு சிறப்பு வாய்ந்த, முதல் நிலை அவையாகச் செயல்படும் வகையில், ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தீர்ப்பாயமாக இந்த ஆணையம் அமைக்கப்பட வேண்டும். இந்த பிணக்குத் தீர்வு ஆணையமானது, பின்வரும் பிணக்குகளை ஆய்ந்து தீர்ப்பளிக்க வேண்டும். வருவாய் தாமதங்கள் மற்றும் கணக்கீட்டுப் பிழைகள், ஒருங்கிணைந்த சேவை வரி கணக்குத் தீர்வு மற்றும் பொருள் வழங்கப்படும் இடம் தொடர்பான பிணக்குகள் சரக்கு சேவை வரி வலையமைப்புக் குறைபாடுகள், தரவுகள் மறுப்பு, தொழில்நுட்பக் கோளாறுகளில் ஏற்படும் வருவாய் இழப்புகள்; ஒரே பரிவர்த்தனையில் ஒன்றிய மாநில அதிகார எல்லைகள் ஒன்றின் மேல் ஒன்று இடையீடு செய்தல், மாநிலங்களிடையே உற்பத்திப் பொருள் வகைப்பாட்டில் முரண்பாடுகள் ஆகியவற்றைத் தீர்க்க வேண்டும். சரக்கு சேவை வரி செயல்பாட்டிற்கு வந்த பிறகு ஏற்பட்டுள்ள கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, வரி செலுத்துதலானது தேவைப்படும் அளவுக்கு விரிவாக்கப்படலாம்.

12. இந்தக் கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் முழுமையாகச் செயல்படுத்தப்படும்வரை, மாநிலங்கள் பெட்ரோலியப் பொருட்களை சரக்கு சேவை வரியின்கீழ் கொண்டுவருவதை ஒத்திவைக்க வேண்டும். சரக்கு சேவை வரியின்கீழ் அதிக பொருட்களைக் கொண்டு வந்து முன்கூட்டியே விரிவுபடுத்துவது, அமைப்பு ரீதியிலான குறைகளை வேரூன்றச் செய்து, மாநில நிதித் தன்னாட்சியினை நிரந்தரமாகப் பலவீனப்படுத்திவிடும்.

"நமது வெளியுறவு விவகாரங்களைக் கூட்டரசும், நமது உள்நாட்டு விவகாரங்களை மாநில அரசுகளும் மிகச் சிறப்பாக நிர்வகிக்க முடியும் என்றும் நான் நம்புகிறேன். எனவே, இவ்விரு அரசுகளையும் வரம்பிற்குள் வைப்பதற்காக, அரசமைப்பால் நிறுவப்பட்ட அந்த ஆரோக்கியமான அதிகாரப் பகிர்வு தொடர்ந்து பேணப்படுவதையே நான் விரும்புகிறேன். அனைத்து அலுவலகங்களும் வாஷிங்டனுக்கு மாற்றப்படுவதை நான் ஒருபோதும் காண விரும்பவில்லை; அவ்வாறு மாற்றப்பட்டால், மக்களின் கண்களிலிருந்து மேலும் விலகிச் சென்று, சந்தையில் நடப்பதைப் போலவே, அங்குப் பதவிகள் மிக ரகசியமாக விலை பேசப்படக்கூடும்."

– தாமஸ் ஜெ.ஃபர்சன், நீதிபதி வில்லியம் ஜான்சனுக்கு எழுதிய கடிதத்திலிருந்து (1823)

"மாகாண மக்களின் நலன் சார்ந்த முதற்கட்டப் பொறுப்பு, அந்தந்த மாகாண அரசுகளிடமே இருக்க வேண்டும். முற்றிலும் அகில இந்தியத் தன்மை வாய்ந்த விவகாரங்களுக்கு மட்டுமே மத்திய அரசு பொறுப்பேற்க வேண்டும்; அதில் மட்டுமே அது செயல்பட வேண்டும். ஆகவே, ஒரு மைய அரசின் வலிமை என்பது, அனைத்திந்திய விவகாரங்களில் போதுமான அதிகாரங்களைப் பெற்றிருப்பதில் மட்டுமல்ல; அனைத்திந்தியத் தன்மைக்குத் தொடர்பில்லாத – உண்மையில் மாகாண வரம்பிற்குள் இருக்க வேண்டிய – விவகாரங்களின் பொறுப்பிலிருந்து விடுபட்டிருப்பதிலும் தான் அடங்கியிருக்கிறது. ... அனைத்து வகையான அதிகாரங்களையும் மையத்திடம் குவிப்பதன் மூலம் மட்டுமே அதை வலிமையாக்கிவிடலாம் என்ற ஒருவித 'மோகமே' இங்கு நிலவுகிறது."

– க. சந்தானம், அரசமைப்பு அவை விவாதங்கள் (1947)

"நமது அரசமைப்புத் திட்டத்தின் கீழ், மாநிலங்களைக் காட்டிலும் மைய அரசிற்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை வைத்து, மாநிலங்கள் என்பவை மைய அரசின் வெறும் துணை உறுப்புகள் என்று பொருள் கொண்டுவிடக் கூடாது. அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட எல்லைக்குள், மாநிலங்களே முழுமுதற் அதிகாரம் கொண்டவை. அவற்றின் அதிகாரங்களை மைய அரசால் சிதைக்க முடியாது. குறிப்பாக, மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை 'சிறுகச் சிறுகக் குறைக்கும்' விளைவையோ அல்லது அத்தகைய போக்கையோ கொண்ட எந்தவொரு அணுகுமுறையையும் அல்லது பொருள் விளக்கத்தையும் நீதிமன்றங்கள் பின்பற்றக்கூடாது. ... இந்திய அரசமைப்பில் உள்ள கூட்டாட்சித் தத்துவம் என்பது வெறும் நிர்வாக வசதிக்கானது அல்ல; மாறாக அது ஒரு அடிப்படைக் கொள்கை. அது நமது சொந்த வரலாற்றுப் போக்கின் விளைவு மற்றும் கள யதார்த்தங்களின் ஓர் அங்கீகாரம்."

– நீதிபதி பி.பி. ஜீவன் ரெட்டி, *எஸ்.ஆர். பொம்மை (எதிர்) இந்திய ஒன்றியம்* (1994)

9 788199 865501

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS